# REPRINTS

## தமிழாக்கம்

தொகுதி 1


**1/6**

Bible Students

*REPRINTS of the ORIGINAL WATCHTOWER*
*and Herald of Christ's Presence*

# மறுபதிப்புகள்

2018 டிசம்பர் வரை தமிழாக்கம்



Charles Taze Russell

1852 - 1916

# REPRINTS PARTS & PAGE NUMBERS

| S.NO | PART NO. | TOP PAGE NO. | BOTTAM PAGE NO |
|---|---|---|---|
| 01. | INDEX | 3 - 53 | - |
| 02. | 1 | 3 - 592 | 1 - 539 |
| 03. | 2 | 593 - 1164 | 540 - 1111 |
| 04. | 3 | 1165 - 1692 | 1112 – 1639 |
| 05. | 4 | 1693 - 2238 | 1640 - 2185 |
| 06. | 5 | 2239 - 2812 | 2186 - 2759 |
| 07. | 6 | 2813 - 3293 | 2760 - 3240 |

# பொருளடக்கம் [INDEX]

## Reprints தமிழாக்கம் 2018 வரை


| S.No. | Reprints .No. | No. Pages | செய்தியின் தலைப்பு | Page No. |
|---|---|---|---|---|
| **வருடம் 1879 #R 03 முதல் R 62 வரை** | | | | |
| 01. | R 09 [Page -3] | 1 | சிங்காசனத்தில் அமர்த்தி விட்டார் [ Poem] He seats Her on Throne | 1 |
| 02. | R 13 ஜீலை 1879 | 3 | கிறிஸ்துவின் இரத்தம் | 2 |
| 03. | R 56 [Page-3] | 1 | ஓர் அழகுமிகு வஸ்திரம் | 5 |
| 04. | R 57[Page-3] | 4 | யோசேப்பு மற்றும் கிறிஸ்து | 6 |
| **வருடம் 1880 #R 63 முதல் R 173 வரை** | | | | |
| 05. | R 65 [Page-3] | 2 | [ Poem]உலத்தார்க்குப் பரிச்சயமற்ற மறு உலகத்தார்க்குமிகபரிச்சயமானவர். | 10 |
| 06. | R74 [Page-3] | 1 | [ Poem]சிற்பாசாரி | 12 |
| 07. | R 81 | 1 | இயேசுவோடு சிறிது நேரம் பேச வேண்டும் | 13 |
| 08. | R 84 [Page -5] | 2 | போஜன பலி | 14 |
| 09. | R 94 ஏப்ரல் 1880 | 2 | நம்முடைய பஸ்காவாகியகிறிஸ்து | 16 |
| 10. | R 114 [Page-3] | 1 | நிறைவானது வரும்பொழுது குறைவானது ஒழிந்து போகும் | 18 |
| 11 | R 125 [Page-3] | 1 | என்னுடைய தியாக பலி | 19 |
| 12 | R 144 [Page-3] | 1 | கர்த்தருடைய பர்வதம் | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| **வருடம் 1881#R 175 முதல்R 310 வரை** | | | | |
| 13. | R 208<br>ஏப்ரல் 1881 | 3 | கர்த்தருடைய இராப்போஜனம் | 21 |
| 14. | R 222<br>[Page -3] | 1 | வேதத்தை எப்படி வாசிக்கிறார்கள் | 24 |
| 15. | R 225<br>மே 1881 | 2 | நம்முடைய பஸ்கா | 25 |
| 16. | R 230<br>[Page -3 &15] | 1 | தேவன் அறிவார், நானறியேனே | 27 |
| 17. | R 239<br>[Page-3] | 1 | அவரது மேலான நாமத்தைத் தரித்துக்கொள்ளுதல் | 28 |
| 18. | R 241 | 1 | (தெரி. பத்திகள்) யார் பிரசங்கிக்கவேண்டும்? | 29 |
| 18A | R 295 | 5 | எக்ளீஷியா | 30 |
| **வருடம் 1882#R 311முதல் R 424 வரை** | | | | |
| 19. | R 325மார்ச்<br>1882 | 1 | பஸ்கா | 35 |
| 20. | R 348<br>[Page 3] | 1 | [Poem] முழு தத்தம் | 36 |
| 21. | R 390<br>[Page -5] | | [Poem] கர்த்தருக்காய் காத்திருப்பாய் | 37 |
| **வருடம் 1883 #R 425முதல் R 568 வரை** | | | | |
| 22. | R 427<br>[Page-3] | 1 | உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக. | 38 |
| 23. | R 440<br>[Page-3] | 1 | ஓர் இலவச மீட்பு | 39 |
| 24. | R 465<br>ஏப்ரல் 1883 | 6 | பஸ்கா | 40 |
| 25. | R 485மே<br>1883 | 3 | பதிலாள் தொடர்புடையகேள்விகள் | 46 |

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | R 490<br>[Page-3] | 1 | கவர்ந்திழுக்கப்பட்டு<br>சோதனைக்குட்பட்டவரே. | 49 |
| 27. | R 509<br>ஜீலை 1883 | 2 | அப்பம் மற்றும் திராட்சரசம் | 50 |
| 28. | R 516<br>[Page -4] | 1 | [ Poem ] வாழ்க்கை எனும் மலை | 52 |
| 29 | R 525<br>[Page -3] | 1 | [ Poem ] எப்படி வாழ்திடலாம்? | 53 |
| 30. | R 536 | 3 | (தெ. பத்திகள்) சபை நிர்வாகம் | 54 |
| **வருடம் 1884#R 571முதல் R 706வரை** | | | | |
| 31 | R 573<br>[Page 2] | 1 | நில் | 57 |
| 32. | R 610<br>[Page-3] | 1 | வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே சற்றே<br>இளைப்பாறிடுவீரே | 58 |
| 33. | R 611 | 3 | மாம்சம் மற்றும் இரத்தம் | 59 |
| 34. | R 664<br>R 295 | 5 | எக்ளீஷியா | 62 |
| 35. | R 664<br>[Page -4&41] | 3 | [ Poem ] உலகத்தோடு நடக்கும் சபை | 67 |
| **வருடம் 1885#R 707முதல் R 814வரை** | | | | |
| 36. | R 721<br>பிப்ரவரி 1885 | 2 | நம்முடை பஸ்காவாகிய கிறிஸ்து | 70 |
| 37. | R 732<br>[Page 3] | 5 | சரீரம் முழுவதும் கண்ணானால் | 72 |
| 38. | R 740<br>ஏப்ரல் 1885 | 4 | பஸ்கா இராப்போஜனம் | 77 |
| 39. | R 741<br>[Page 3] | 1 | கறிஸ்துவின் சீடன் | 81 |
| 40. | R 748 | 3 | காவல் கோபுரத்தின் ஒருகண்ணோட்டம் | 82 |
| 41. | R 761<br>[Page 3] | 1 | உடனுக்குடனே வருகிறதே | 85 |

| | | | | |
|---|---|---|---|---|
| 42. | R 776<br>[Page 3] | 1 | கர்த்தவே பேசும் | 86 |
| 43. | R 786<br>[Page 3] | 1 | அவளை விட்டு வெளியேறி உள்ளே வந்திடு. பேரழிவு நிகழுமுன்பே புறம்பே வந்துவிடு | 88 |
| **வருடம் 1886 #R 817 முதல் R 898வரை** | | | | |
| 44. | R 833<br>[Page 1] | 1 | எங்கள் அனுசரிப்பு | 89 |
| 45. | R 839<br>மார்ச் 1886 | 7 | கர்த்தருடைய இராப்போஜனம் | 90 |
| 46. | R 843<br>ஏப்ரல் 1886 | 3 | பாதம் கழுவுதல் | 97 |
| **வருடம் 1887 #R 899 முதல் R 996வரை** | | | | |
| 47. | R 899<br>பிப்ரவரி1887 | 3 | கர்த்தருடைய இராப்போஜனம் | 100 |
| 48. | R 910 | 1 | [ Poem] முழு தத்தம் செய்திட்ட பரிசுத்தவான்களின் ஜெபம் | 103 |
| 49. | R 916<br>[Page 3] | 1 | நம் வாக்களிக்கப்பட்ட வானவில் | 104 |
| 50. | R 936<br>மே 1887 | 3 | நம்முடைய வருடாந்தர இராப்போஜனம் | 105 |
| 51. | R 943 | 1 | என் தயார் யார்? என் சகோதரர் யார்? | 108 |
| **வருடம் 1888 #R997 முதல் R1088 வரை** | | | | |
| 52. | R 1004<br>[Page 3] | 1 | [ Poem] தந்தை உன்னையே நேசிக்கின்றாரே | 109 |
| 53 | R 1013<br>மார்ச் 1888<br>[Page 3] | 10 | என்னைநினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள | 110 |
| 54. | R 1013<br>[Page 3] | 1 | (தெ. பத்திகள்) யாரைச் சேவிப்பீர்கள்? | 111 |

| | | | | |
|---|---|---|---|---|
| 55 | R 1021<br>ஏப்ரல் 1888 | 1 | அவர் வருமளவும் | 121 |
| 56 | R 1034 &<br>R 1539 | 1 | (தெ.பத்திகள்) யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்? | 122 |
| 57. | R 1075 | 3 | (தெ.பத்திகள்) தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே - பாகம் - 1 | 123 |
| **வருடம் 1889 #R 1089 முதல் R 1170 வரை** | | | | |
| 58. | R 1100<br>மார்ச் 1889 | 6 | நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாள் | 126 |
| 59. | R 1136 | 1 | (தெ.பத்திகள்) இராஜரீகஆசாரியர்கள் மத்தியில் ஒழுங்கு | 132 |
| 60 | R 1159 | 2 | ஓர் உருவகக் கதை | 133 |
| **வருடம் 1890 #R 1171 முதல் R 1276 வரை** | | | | |
| 61. | R 1188 | 4 | கிறிஸ்துவினால் வரும் நிந்தனை / கிறிஸ்துவைக் குறித்த வெட்கம் | 135 |
| 62. | R 1193<br>[Page 3] | 1 | [ Poem] என்னுடைய ஒரு தாலந்து | 139 |
| 63. | R 1217<br>[Page 3] | 2 | நீங்கள் தான் கிறிஸ்துவினுடையவர்கள் | 140 |
| 64. | R 1268 | 1 | இவையெல்லாம் தேவனால் உண்டாயிருக்கிறது (இரண்டு பத்திகள்) | 142 |
| **வருடம் 1891 # R 1279 முதல் R 1346 வரை** | | | | |
| 65. | R1289<br>[R2270 &<br>R5191<br>பார்க்கவும்] | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 143 |

| | | | | |
|---|---|---|---|---|
| 66. | R 1318 | 1 | [ Poem ] கர்த்தரின் பட்டயம், கிதியோனின் பட்டயம் | 158 |
| **வருடம் 1892 # R 1347 முதல் R 1481 வரை** | | | | |
| 67. | R 1374 | 1 | [Poem] திராட்சைஆலையில் தனித்தே இருந்தே | 159 |
| 68. | R 1382 மார்ச் 1892 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 160 |
| 69. | R 1415 | 4 | நமது கர்த்தருடைய இடத்திற்கு | 163 |
| 70. | R 1431 [Page -3] | 1 | [ Poem ] வாரி இறைப்பவனே விருத்தியடைவான் | 167 |
| 71 | R 1448 [Page 3] | 2 | துன்பப்படுதலின் மூலமே பூரணமடையலாம். | 168 |
| 72. | R 1459 | 4 | ஊதாரி மகனுடைய திரும்பி வருதல் | 170 |
| 73 | R 1475 | 2 | நீர் எனக்குப் பந்தியை ஆயத்தப்படுத்தினீர் | 174 |
| **வருடம் 1893 #R 1485முதல் R 1604 வரை** | | | | |
| 74. | R 1504 மார்ச்1893 & R 2436 பிப்ரவரி 1899 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 176 |
| 75. | R 1521 | 22 | பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் | 179 |
| 76 | R 1539 & R 1034 | 1 | (தெ.பத்திகள்) யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்? | 201 |
| 77 | R 1548 | 12 | தேவனுடைய ஒழுங்கில் புருஷனும், ஸ்திரீயும் | 202 |
| 78 | R 1559 [Page 3] | 1 | கர்த்தருக்குள் இளைப்பாருவீர்களாக | 214 |
| 79 | R 1591 & R5882 [Page 105] | 4 | உயிர்த்தெழுந்தகிறிஸ்து | 215 |

| | | | | |
|---|---|---|---|---|
| **வருடம் 1894 # R 1605 முதல் R 1747 வரை** | | | | |
| 80 | R 1611 | 1 | [ Poem] புதிய தாள் வேண்டும் (புத்தாடை வேண்டும்) | 219 |
| 81. | R 1625 மார்ச்1894 | 3 | வருடாந்தர நினைவு கூருதல் இராப்போஜனம் | 220 |
| 82. | R 1635 | 2 | பொறாமை மற்றும் விரோதம் | 223 |
| 83. | R 1636 ஏப்ரல் 1894 | 3 | அடையாளங்களினுடைய முக்கியத்துவம் | 225 |
| 84. | R 1639 | 4 | யோசேப்பு எகிப்தில் விற்கப்பட்டார் | 228 |
| 85. | R 1640 | 2 | யோசேப்பு அதிகாரியாக எகிப்தில் | 232 |
| 86. | R 1645 | 4 | யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல் | 234 |
| 87. | R 1646 | 3 | யோசேப்பின் இறுதி நாட்கள் | 238 |
| 88. | R 1648 | 4 | இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? | 241 |
| 89. | R 1657 ஜீன் 1894 | 1 | பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | 246 |
| 90. | R 1657 ஜீன் 1894 | 1 | செங்கடலின் பாதை | 248 |
| 91. | R 1681 | 2 | எகிப்துக்குத் தப்பி ஓடுதல் | 249 |
| 92. | R 1695 | 2 | இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தல் | 251 |
| 93 | R 1704 [Page 3] | 1 | நான் கூட அவரைத் தெரிந்துகொள்வேன் | 253 |
| 94 | R 1710 | 4 | நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே | 254 |
| 95. | R 1720 | 4 | அறிமுகக் கடிதங்கள் | 258 |
| **வருடம் 1895 # R 1749 முதல் R 1907 வரை** | | | | |
| 96. | R 1761 | 2 | மறுரூபம் | 262 |
| 97 | R 1786 மார்ச்1895 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 264 |

| | | | | |
|---|---|---|---|---|
| 98. | R 1793 | 1 | நினைவுகூருதல் அடையாளங்களின் ஆராதனை ஒழுங்கு | 267 |
| 99 | R 1794 | 3 | நமது கர்த்தருடைய நிழலான வெற்றி | 268 |
| 100 | R 1800 ஏப்ரல்1895 | 2 | கர்த்தருடைய இராப்போஜனம் | 271 |
| 101 | R 1801 ஏப்ரல்1895 | 4 | கெத்செமனேயில் வியாகுலம் | 273 |
| 102 | R 1806 மே 1895 | 8 | உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துதல் | 277 |
| 103 | R 1809 மே 1895 | 1 | பிலாத்துவுக்கு முன்பாக இயேசு | 285 |
| 104 | R 1809 மே 1895 | 2 | பிரதான ஆசாரியனுடைய முன்னிலையில் இயேசு | 286 |
| 105 | R 1810 | 1 | [ Poem] பரிசுத்தமாவதற்கே காலம் இன்னும் வேண்டுமோ? | 288 |
| 106 | R 1815 மே 1895 | 3 | கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் | 289 |
| 107 | R 1832 & R 5284 ஆகஸ்ட்1913 | 11 | தேவசமாதானம் | 292 |
| 108 | R 1836 | 4 | அந்நிய அக்கினியைப் படைத்தல் | 303 |
| 109 | R 1837 | 1 | [ Poem] ஒருநாள்தான் நமக்குண்டு என்றால்? | 307 |
| 110 | R 1847 | 4 | Tract Society -இன் அறிமுகக் கடிதங்கள் | 308 |
| 111 | R 1866 | 9 | பிரயோஜனமான கூட்டங்கள் தொடர்பாக | 312 |
| 112 | R 1883 | 2 | தெரிந்தெடுக்கப்பட்டபத்திகள் | 321 |
| 113 | R 1889 | 23 | நல்லொழுக்கமபயும்,கிரமமாயும் | 323 |
| 114 | R 1898 டிசம்பர்1895 | 7 | கர்த்தருடையபாத்திரம் மற்றும் கர்த்தருடைய போஜனபந்தி | 346 |
| 115 | R 1900 | 2 | வேதாகம ஆராய்ச்சிக்கான டாண் [Dawn] குழுக்கள் | 353 |

| | | | | |
|---|---|---|---|---|
| 116 | R 1900<br>[Page -5] | 2 | [ Poem ] விநோதனமான ஜனங்கள் | 355 |
| 117 | R 1902 | 2 | ( தெ. பத்திகள்) உண்மையுள்ள வேலையாட்களிடமிருந்து வரும் உற்சாகமூட்டும் வார்த்தைகள் | 357 |
| 118 | R 1904<br>[Page -285 & 205] | 1 | [ Poem ] தந்தாய் உந்தன் நாமம் வாழ்க | 359 |
| **வருடம் 1896 # R 1911 முதல் R 2081 வரை** | | | | |
| 119 | R 1915 | 3 | கிறிஸ்துவின் முன்னோடி | 360 |
| 120 | R 1937 | 6 | வார்த்தைகளில் நீதிமான் என்று தீர்க்கப்படுதல் அல்லது வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுதல் | 363 |
| 121 | R 1942<br>மார்ச் 1896 | 4 | நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதல் | 369 |
| 122 | R 1951 | 3 | இடுக்கமானவாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுகள் | 373 |
| 123 | R 1956 | 3 | கைகளை வைத்தல் | 376 |
| 124 | R 1988<br>ஜீன் 1896 | 2 | கிறிஸ்து இயேசு சிலுவையில் அறையப்பட்டார் | 379 |
| 125 | R 2018<br>[Page 3] | 1 | இயேசு என்ன செய்திடுவார்? | 381 |
| 126 | R 2068 | 5 | சாலொமோனுடைய பாவம் | 382 |
| 127 | R 2079 | 3 | (தெ. பத்திகள்) பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள் - எண்.2 | 387 |
| | | | **வருடம் 1897# R 2083முதல் R 2236 வரை** | |
| 128 | R 2099 | 4 | உலகத்திற்கான உப்பும், உலகத்திற்கான வெளிச்சம் | 390 |
| 129 | R 2115 | 4 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 394 |

| | | | | |
|---|---|---|---|---|
| 130 | R 2156 | 3 | உன் நாளைப் பொல்லாப்புக்குவிலக்கிக் காத்துக்கொள் | 398 |
| 131 | R 2168 [Page 3] | 1 | ராஜரீக ஆசாரியர்களின் மன விருப்பங்கள் | 401 |
| 132 | R 2220 | 4 | பரிசுத்தபவுலினுடைய இருதயம் வெளியானது | 402 |
| **வருடம் 1898 # R 2238 முதல் R 2410 வரை** | | | | |
| 133 | R 2264 | 10 | (தெ. பத்திகள்) ஏதோ புதுமையென்று திகையாமல் | 406 |
| 134 | R 2270 [ Page 54] | 1 | [ Poem ] யேசுவின் பாதம் சேரும் என்ன ஆனந்தம்? ஏன்னே பேரின்பம்? | 416 |
| 135 | R 2270 ( R1289 & 5191 பார்க்கவும்) | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 417 |
| 136 | R 2278 மார்ச் 1898 | 3 | பாதம் கழுவுதல் | 432 |
| 137 | R 2278 [ R 3593] | 12 | நாட்கள் பொல்லாதவைகளானதால் | 444 |
| 138 | R 2282 ஏப்ரல் 1898 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 447 |
| 139 | R 2291 ஏப்ரல் 1898 | 6 | நினைவுகூருதலின் ஆசரிப்பு | 449 |
| 140 | R 2291 | 3 | தெரிந்தெடுக்கப்பட்டபத்திகள் | 455 |
| 141. | R 2297 [ Page 128] | 1 | [ Poem ] நமது ராஜா ராஜரீகம் செய்கின்றார் | 458 |
| 142 | R 2312 மே1898 | 4 | பிலாத்துவின் முன்னிலையில் இயேசு - "அவரைநினைத்துக்கொள்ளுங்கள்" | 459 |
| 143 | R 2315 ஜீன் 1898 | 6 | சிலுவையில் அறையப்பட்டவர் மீதுஒருபார்வை | 463 |
| 144 | R 2379 நவம்பர்1898 | 6 | எசேக்கியாவின் மாபெரும் பஸ்கா | 469 |

| | | | | |
|---|---|---|---|---|
| 145 | R 2408 | 6 | ஒவ்வொருமனுஷனையும் பிரகாசிப்பிக்கிறமெய்யானஒளி | 475 |
| **வருடம் 1899 #R 2411 முதல் R 2552** | | | | |
| 146 | R 2417 | 1 | [Poem ]முன்பொருகாலத்தில் | 481 |
| 147 | R2418 | 1 | [Poem] சீசரின் நண்பரா? - கிறிஸ்துவின் நண்பரா? | 482 |
| 148 | R 2424 | 5 | விசுவாசத்திற்கானபலன் அளிக்கப்பட்டது - உன் குமாரன் பிழைத்திருக்கிறான் | 483 |
| 149 | R 2429 பிப்ரவரி1899 | 1 | நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கானதியதி | 488 |
| 150 | R 2433 | 5 | இவைகளைப் பார்க்கிலும் பெரிதானகிரியைகள் | 489 |
| 151 | R 2436 பிப்ரவரி 1899 & R 1504 மார்ச்1893 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 494 |
| 152 | R 2436 [ Page 44] | 1 | [ Poem ] புதிய சிருஷ்டியின் மன விருப்பங்கள் | 497 |
| 153 | R 2437 | 6 | கூடாரப்பண்டிகையின் போது | 498 |
| 154 | R 2438 | 7 | மெய்யாக வேவிடுதலையாவீர்கள் | 504 |
| 155 | R 2441 | 5 | நல்ல மேய்ப்பன் - கிறிஸ்து | 511 |
| 156 | R 2442 | 2 | [தெ. பத்திகள்]தேவனைத் துதித்தலும், மனுஷனைச் சபித்தலும் | 516 |
| 157 | R 2447 ஏப்ரல்1899 | 5 | விலையேறப் பெற்ற நள ததைலமுள்ள வெள்ளைக்கல் பரணி | 518 |
| 158 | R 2449 R 4163 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 523 |
| 159 | R 2449 ஏப்ரல்1889 | 6 | நான் உங்களுக்குமாதிரியைக் காண்பித்தேன் | 524 |
| 160 | R 2453 ஏப்ரல்1899 | 6 | நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் | 530 |

| | | | | |
|---|---|---|---|---|
| 161 | R 2455 ஏப்ரல்1899 | 4 | வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் | 536 |
| 162 | R 2458 | 1 | [ poem] ஒரு குவளைக் குளிர்ந்த நீர் | 540 |
| 163 | R 2464 மே1899 | 8 | நான் திராட்சச்செடி - நீங்கள் கொடிகள் | 541 |
| 164 | R 2467 மே1899 | 8 | கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் | 549 |
| 165 | R 2469 மே1899 | 5 | மாபெரும் பிரதானஆசாரியன் குற்றம் சாட்டப்பட்டார் | 557 |
| 166 | R 2470 மே1899 | 7 | பிலாத்துவின் முன் நல்லஅறிக்கை | 562 |
| 167 | R 2473 மே1899 | 8 | அவர் அக்கிரமக்காரரில் ஒருவராகஎண்ணப்பட்டார் | 569 |
| **வருடம் 1900# R 2553முதல் R 2747வரை** | | | | |
| 168 | R 2555 | 7 | அந்த வார்த்தை மாம்சமாகி | 577 |
| 169 | R 2558 | 5 | இயேசுவானவர் ஞானத்திலும் விருத்தியடைந்தார் | 584 |
| 170 | R 2562 | 9 | யோவான்ஸ்நானனின் பிரசங்கம் | 589 |
| 171 | R 2565 | 11 | அர்ப்பணிப்பைப் பின் தொடர்ந்தசோதனைகள் | 598 |
| 172 | R 2574 | 6 | மொண்டுகொள்ள பாத்திரமில்லையே கிணறும் ஆழமாயிருக்கிறதே | 609 |
| 173 | R 2585 | 13 | நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு | 615 |
| 174 | R 2589 | 7 | இராஜரீகப் பிரமாணம் பொன்னானசட்டம் | 628 |
| 175 | R 2590 | 7 | இயேசு அவனை நோக்கி எனக்குப் பின்சென்று வா என்றார் | 635 |
| 176 | R 2592 மார்ச் 1900 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 642 |
| 177 | R 2606 | 6 | செம்மறியாடு மற்றும் வெள்ளாடு உவமை | 644 |

| | | | | |
|---|---|---|---|---|
| 178 | R 2620 | 5 | நம்பிக்கை குலைந்துபோன தீர்க்கத்தரிசியினுடைய ஞானமானபோக்கு | 650 |
| 179 | R2622<br>மே1900 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 655 |
| 180 | R 2623 | 8 | அறிவு,பொறுப்புகளைஅதிகரிக்கின்றது | 657 |
| 181 | R 2625 | 5 | இரண்டு விதமான பாவிகள் | 665 |
| 182 | R 2630<br>[ Page 134] | 1 | [ Poem ] சில வருடம் மாத்திரமே | 670 |
| 183 | R 2635 | 4 | அறுவடையோ மிகுதி - வேலையாட்களோ குறைவு | 671 |
| 184 | R 2646<br>[ Page 168 & 259] | 1 | [ Poem ] உன்னுடனே பேசுகின்ற நானே அவர் | 675 |
| 185 | R 2651 | 7 | ஜீவஅப்பம் நானே | 676 |
| 186 | R 2654 | 5 | சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இனக்கமுள்ளவர்களுமாயிருங்கள் | 683 |
| 187 | R 2660 | 5 | இராஜ்யத்தில் சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் | 688 |
| 188 | R 2701 | 5 | ஏற்கமறுக்கப்பட்ட இராஜ விருந்து | 693 |
| 189 | R 2706 | 6 | காணாமல் போனவர்களுக்கானதெய்வீகஅக்கறை | 698 |
| 190 | R 2715 | 7 | அநீதியுள்ளஉக்கிராணக்காரன் | 704 |
| 191 | R 2722 | 11 | கிறிஸ்தவர்களின் அன்றாட ஜீவியம் | 711 |
| 192 | R 2743<br>டிசம்பர்1900 | 7 | நறுமணம் வீசியதைலம் | 722 |
| 193 | R 2745<br>டிசம்பர்1900 | 6 | ஓசன்னாவருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவா | 729 |

| வருடம் 1901# R 2751முதல் R 2928வரை | | | | |
|---|---|---|---|---|
| 194 | R 2757 | 7 | கிறிஸ்துவாகியகாந்தம் - நான் எல்லோரையும்இழுத்துக்கொள்ளுவேன். | 735 |
| 195 | R 2764 | 7 | அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக | 742 |
| 196 | R 2771 பிப்ரவரி 1901 | 9 | கர்த்தருடைய இராப்போஜனம் | 749 |
| 197 | R 2773 பிப்ரவரி 1901 | 7 | கெத்செமனே - விழிப்பும், ஜெபமும் | 758 |
| 198 | R 2778மார்ச் 1901 | 6 | இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் கைவிடப்பட்டார் | 765 |
| 199 | R 2780 மார்ச் 1901 | 6 | நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துள்ளீர்கள் | 771 |
| 200 | R 2785 மார்ச்1901 | 6 | இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை | 777 |
| 201 | R 2787 மார்ச்1901 | 8 | பாவநிவாரணபலி நிறைவேற்றப்பட்டது | 783 |
| 202 | R 2793 ஏப்ரல் 1901 | 2 | பஸ்கா காலத்தின்போதான விசேஷித்தச் சோதனைகள் | 791 |
| 203 | R 2794 [Page 121] | 8 | மரித்தேன் ஆனாலும் உயிரோடிருக்கிறேன் | 793 |
| 204 | R 2870 | 1 | [Poem] நீர் பாய்ச்சப்பட்ட லீலி புஷ்பங்கள் | 800 |
| 205 | R 2880 | 5 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 801 |
| 206 | R 2885 | 5 | துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில் | 806 |
| 207 | R 2887 | 6 | ஏனெனில், தேவன் அவனோடே கூட இருந்தார் | 811 |
| 208 | R 2890 [Page 3] | 1 | விலை மதிப்பில்லா முத்து | 817 |
| 209 | R 2893 | 7 | இரக்கமுள்ள யோசேப்பு | 818 |
| 210 | R 2895 | 6 | சிறந்த ஒரு மனுஷனுடைய வாழ்க்கையின் முடிவு | 825 |

| | | | | |
|---|---|---|---|---|
| 211 | R 2909 | 6 | நான் உன்னோடே இருப்பேன் | 831 |
| 212 | R 2917<br>டிசம்பர் 1901 | 4 | நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டார் | 837 |
| 213 | R 2923 | 1 | [ Poem ] எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய் | 841 |
| 214 | R 2924 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 842 |
| **வருடம் 1902# R 2929முதல் R 3124வரை** | | | | |
| 215 | R 2951 | 6 | உதவிக்காரனாகிய ஸ்தேவான், கிறிஸ்தவ இரத்த சாட்சி | 843 |
| 216 | R 2986<br>[R5875] | 8 | ஜனேயாவும், தொற்காளும் | 849 |
| 217 | R 2989<br>[ 5879] | 8 | பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும் | 857 |
| 218 | R 2995 | 2 | (தெ.பத்திகள்) யுக மாற்றங்களைக் கவனித்தல் | 863 |
| 219 | R 3000 | 9 | ஆவிக்குரிய கணக்குகளை - வருடந்தோறும் கணக்குப்பார்த்தல் | 865 |
| 220 | R 3004 | 1 | (தெ.பத்திகள்) ஆதிகாலக் கிறிஸ்தவ சமயம் பரப்புபவர்கள் | 874 |
| 221 | R 3011 | 4 | (தெ.பத்திகள்) நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவித்தல் | 875 |
| 222 | R 3014 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 879 |
| 223 | R 3017<br>[R4374]<br>[R5892] | 6 | எருசலேமில் கூடின ஆலோசனைச் சங்கம் | 880 |
| 224 | R 3033 | 7 | அன்பில் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து | 886 |
| 225 | R 3077 | 1 | (தெ.பத்திகள்) தேவனுடைய தாசனாகிய மோசே மரித்தார் | 893 |
| 226 | R 3089 | 5 | நீங்கள் உறுதிப்பட்டிருந்தும் | 894 |
| 227 | R 3092 | 4 | அடைக்கலத்திற்காக தப்பி ஓடுதல் | 899 |

| | | | | |
|---|---|---|---|---|
| 228 | R 3102 [Page 3] | 2 | தங்கம், சொர்ணம், பங்காரு, கோல்டு, பவுன், சோளா, போன்ற குணமுடையோரே | 903 |
| 229 | R 3135 | 10 | நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் | 905 |
| 230 | R 3142 | 3 | உண்மையான தொழுவமானது ஒரு கூண்டல்ல | 915 |
| 231 | R 3159 & R 5935 | 4 | எபேசுவில் நடந்த கலகம் | 918 |
| 232 | R 3171 | 7 | மூப்பருக்குரிய பொறுப்புகள் | 922 |
| 233 | R 3178 ஏப்ரல்1903 | 3 | நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு | 929 |
| 234 | R 3210 | 2 | (தெ.பத்திகள்) தீமோத்தேயுவுக்கான பவுலினுடைய ஆணை | 932 |
| **வருடம் 1903# R 3125முதல் R 3293வரை** | | | | |
| 235 | R 3225 [Page 221] & R 5656 [Page 88] | 4 | தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா | 934 |
| 236 | R 3243 | 4 | உங்கள் நீதி | 938 |
| **வருடம் 1904# R 3294முதல் R 3478வரை** | | | | |
| 238 | R 3300 | 8 | போதகரும், அவருடைய செய்தியும் புறக்கணிக்கப்பட்டது | 942 |
| 239 | R 3307 | 6 | மனுஷரைப் பிடிக்கிறவர்கள் | 950 |
| 240 | R 3325 | 7 | விலை அதிகமுள்ள பேரம் | 956 |
| 241 | R 3337 | 7 | கிறிஸ்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் | 963 |
| 242 | R 3354 | 7 | எஜமானுக்குக் காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாக இருங்கள் | 970 |
| 243 | R 3363 மே1904 | 6 | கடைசி இராப்போஜனம் | 977 |

| | | | | |
|---|---|---|---|---|
| 244 | R 3369 மே1904 | 10 | கிறிஸ்து எப்படி மற்றும் ஏன் சிலுவையில் அறையப்பட்டார் | 983 |
| 245 | R 3374 | 12 | இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் | 993 |
| 246 | R 3401 | 3 | தேவனுடைய தைரியமுள்ள மற்றும் துணிவற்ற ஊழியக்காரர்கள் | 1005 |
| 247 | R 3431 [Page 3] | 1 | அன்பின் பிரமாணம் | 1008 |
| **வருடம் 1905 # R 3479முதல் R 3687வரை** | | | | |
| 248 | R 3484 | 6 | நிரப்பப்பட்டு மாற்றப்பட்டது | 1009 |
| 249 | R 3500 | 8 | இரக்கத்தின் வீடு | 1015 |
| 250 | R 3508 | 9 | கூடாரப்பண்டிகை | 1023 |
| 251 | R 3517 | 4 | விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள் | 1032 |
| 252 | R 3521 [ Page 77&39] | 1 | [ Poem ] மறைக்கப்பட்ட சிலுவை | 1036 |
| 253 | R 3525 மார்ச் 1905 | 5 | நம்முடைய "பஸ்காவிகன்" நினைவுகூருதல் | 1038 |
| 254 | R 3534 ஏப்ரல் 1905 | 11 | மிகவும் விலையேறப்பெற்ற தைலம் | 1043 |
| 255 | R 3537 ஏப்ரல்1905 | 10 | உன்னதத்திலே ஓசன்னா | 1054 |
| 256 | R 3542 ஏப்ரல்1905 | 6 | ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் | 1064 |
| 257 | R 3544 ஏப்ரல்1905 | 11 | மெய்யான திராட்சச்செடி மற்றும் அதன் கனி | 1070 |
| 258 | R 3548 மே 1905 | 3 | நினைவுகூருதல் ஆசரிப்பு | 1081 |
| 259 | R 3551 மே 1905 | 10 | நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் | 1084 |

| | | | | |
|---|---|---|---|---|
| 260 | R 3553<br>மே 1905 | 8 | எத்தரென்னப்பட்டாலும், நிஜஸதர் | 1094 |
| 261 | R 3556<br>[Page 3] | 1 | இயேசுவுடனே சிறிது நேரம் பேச வேண்டும் | 1102 |
| 262 | R 3560<br>மே 1905 | 9 | சரித்திரத்தில் நிகழ்ந்த மாபெரும் நிகழ்வு | 1103 |
| 263 | R 3593<br>R2278 | 12 | நாட்கள் பொல்லாதவைகளானதால் | 1112 |
| 264 | R 3606 | 2 | ஆண்டவரே, எனக்கான சிலுவையைத் தெரிந்தெடுத்துத் தாரும் | 1124 |
| 265 | R 3613 | 4 | தலையாயிருப்பவரைப் பற்றிப்பிடித்துக் கொள்ளாமை | 1126 |
| 266 | R 3635<br>செப்டம்பர் 1905 | 1 | யார் நினைவுகூருவது ஏற்றது? | 1130 |
| 267 | R 3638 | 2 | (தெ.பத்திகள்) நம் சார்பாய் இருப்பவர் பெரியவராயிருக்கின்றார் | 1131 |
| 268 | R 3655 | 4 | மகிமையின் மேல் மகிமை | 1133 |
| **வருடம் 1906# R 3693முதல் R 3912வரை** | | | | |
| 269 | R 3700 | 6 | மகிமையான அறிவிப்பு | 1137 |
| 270 | R 3702 | 5 | நம்முடைய இராஜாவுக்கு அன்பளிப்புகள் | 1143 |
| 271 | R 3706<br>ஜனவரி 1906 | 2 | பஸ்கா நினைவுகூருதல், ஏப்ரல் 8, 1906 | 1148 |
| 272 | R 3718<br>[Page 3] | 3 | மனதிரும்பி வந்த கெட்டக் குமாரன் | 1150 |
| 273 | R 3726 | 8 | வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூம் | 1153 |
| 274 | R 3728 | 8 | பாவமன்னிப்பு | 1161 |
| 275 | R 3744 | 2 | சக-அங்கத்தினர்களைத் தண்டித்தல் | 1169 |
| 276 | R 3745 | 5 | தவறிழைக்காத் தன்மையும், சபைக்கான மூப்பர்த்துவமும் | 1171 |

| | | | | |
|---|---|---|---|---|
| 277 | R 3746 | 8 | நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்து கவனியுங்கள் | 1176 |
| 278 | R 3749 ஏப்ரல்1906 | 8 | பஸ்காவைப் பலியிட வேண்டிய | 1184 |
| 279 | R 3751 | 4 | ஒருவராலொருவர் பட்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் | 1192 |
| 280 | R 3752 | 9 | ஓய்வுநாளின் கடமைகளும், சிலாக்கியங்களும் | 1196 |
| 281 | R 3754 | 7 | இயேசுவுக்குள் உயிர்தெழுதலின் வல்லமை | 1205 |
| 282 | R 3759 Page [118] | 1 | [Poem] மணவாளனின் புறா | 1212 |
| 283 | R 3759 ஏப்ரல் 1906 | 6 | உனக்காக வேண்டிக்கொண்டேன் | 1213 |
| 284 | R 3769 | 1 | (தெ.பத்திகள்) மே மாதத்திற்கான பெரோயா வேதாகம ஆராய்ச்சி | 1219 |
| 285 | R 3779 | 7 | அவர் பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார் | 1220 |
| 286 | R 3795 | 2 | (தெ.பத்திகள்) பரலோக இராஜ்யத்தில் பெரியவன் | 1227 |
| 287 | R 3800 | 2 | (தெ.பத்திகள்) அன்பின் மீதான பெரோயா வேத ஆராய்ச்சி | 1229 |
| 288 | R 3803 | 8 | எனக்கு பிறன் யார்? | 1231 |
| 289 | R 3820 [R5909] | 4 | அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும் | 1239 |
| 290 | R 3826 | 5 | (தெ.பத்திகள்) ஸ்திரீயானவளின் சரி மற்றும் தவறு | 1243 |
| 291 | R 3831 | 6 | பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும் மாபெரும் போதகரால் பேசப்பட சம்பாஷணைகள் | 1248 |
| 292 | R 3841 | 7 | தாழ்மையுடன் இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் | 1254 |

| | | | | |
|---|---|---|---|---|
| 293 | R 3850 செப்டம்பர் 1906 | 7 | கர்த்தருடைய நாமத்தில் வருகின்றவர் | 1261 |
| 294 | R 3864 | 11 | லேவியின் புத்திரரைச் சுத்திகரித்தல் | 1268 |
| 295 | R 3867 | 8 | புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் | 1279 |
| 296 | R 3877 அக்டோபர் 1906 | 7 | அவளால் இயன்றதை அவள் செய்தாள் | 1287 |
| 297 | R 3879 அக்டோபர் 1906 | 7 | என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் | 1294 |
| 298 | R 3885 நவம்பர்1906 | 10 | பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் | 1301 |
| 299 | R 3887 நவம்பர்1906 | 6 | அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் | 1311 |
| 300 | R 3895 நவம்பர்1906 | 8 | எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தர் | 1317 |
| 301 | R 3900 டிசம்பர்1906 | 11 | கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுவேன் | 1325 |
| 302 | R 3906 | 1 | (தெ.பத்திகள்) பயண சகோதரர்களின் ஊழியங்கள் | 1336 |
| **வருடம் 1907# R 3913முதல் R 4108வரை** | | | | |
| 303 | R 3932 | 5 | சகோதர சிநேகமுள்ளவர்களாய் இருங்கள் | 1337 |
| 304 | R 3938 | 1 | (தெ.பத்திகள்) பொருளாசையின் அபாயம் | 1342 |
| 305 | R 3943 | 2 | உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 1343 |
| 306 | R 3971 | 5 | சகோதரர்களால் பகைக்கப்பட்டவர் | 1345 |
| 307 | R 3972 | 7 | துன்பத்தின் மத்தியில் பொறுமையாய்ச் சகித்தல் | 1350 |
| 308 | R 3978 | 8 | என்னைக் கணம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் | 1357 |

| | | | | |
|---|---|---|---|---|
| 309 | R 3980 | 7 | இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | 1365 |
| 310 | R 4008 | 9 | அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கான புத்திமதி | 1372 |
| 311 | R 4021 [Page 203] | 1 | [Poem] உங்கள் பிதா உங்களுக்கு இன்னதுதேவை என்றறிவார் | 1381 |
| 312 | R 4022 [ Page 203 & 371 ] | 1 | [ Poem ] உன்னுடனே பேசுகின்ற நானே அவர் | 1382 |
| 313 | R 4030 | 7 | அந்நிய அக்கினியைப் படைத்தவர்கள் | 1383 |
| 314 | R 4033 | 3 | தேவனோடே போர்ப்புரிதல் | 1390 |
| 315 | R 4034 [ Page 229] | 1 | [ Poem ] ராஜாவின் பிரசன்னத்திலுள்ளே | 1393 |
| 316 | R 4057 [ Page 281 & 375] | 1 | [ Poem ] இப்போதே வேண்டாம் எனதன்பு மகனே | 1394 |
| **வருடம் 1908 # R 4109முதல் R 4300வரை** | | | | |
| 317 | R 4112 | 7 | கர்த்தருடைய வழியை ஆயத்தம் பண்ணுதல் | 1395 |
| 318 | R 4115 | 9 | கர்த்தருடைய சம்பத்தைக் கண்டுபிடித்தல் | 1402 |
| 319 | R 4121 | 5 | போதித்தல் என்றால் என்ன? (சகோதரிகளுக்காக ஒரு வேண்டுகோள்) | 1411 |
| 320 | R 4124 | 9 | மறுஜென்மகாலமும் இராஜ்யமும் | 1416 |
| 321 | R 4127 பிப்ரவரி 1908 | 7 | முதலாம் மாதத்தில் பஸ்கா | 1425 |
| 322 | R 4130 | 8 | தாகத்துக்குத் தா | 1432 |
| 323 | R 4146 மார்ச்1908 | 8 | ஜீவ அப்பம் நானே | 1440 |
| 324 | R 4148 மார்ச்1908 | 8 | நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன் | 1448 |
| 325 | R 4153 மார்ச்1908 | 2 | நினைவுகூருதல், ஏப்ரல் 14 | 1456 |
| 326 | R 4157 | 8 | மேய்ப்பன், வாசல், மந்தைகள் | 1458 |

| | | | | |
|---|---|---|---|---|
| 327 | R 4160 | 9 | நான் அவனை எழுப்பப்போகிறேன் | 1466 |
| 328 | R 4163 & R 2449 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 1475 |
| 329 | R 4164 மே 1908 | 9 | வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி | 1476 |
| 330 | R 4167 மே 1908 | 8 | நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் மறுதலிக்கப்பட்டார் | 1485 |
| 331 | R 4171 | 12 | ஏன் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார்? | 1493 |
| 332 | R 4180 | 1 | [ Poem ] வரவேற்பு | 1505 |
| 333 | R 4183 | 5 | (தெ.பத்திகள்) இவர்களிலும் நீ என்னில் அன்பாய் இருக்கின்றாயா? | 1506 |
| 334 | R 4197 | 3 | (தெ.பத்திகள்) ஓர் இராஜாவின் - தேர்ந்தெடுத்தல் | 1511 |
| 335 | R 4203 [Page 205] | 2 | [Poem] இவள் தன்னால் இயன்றதை செய்தாள் | 1514 |
| 336 | R 4251 | 4 | சபை என்றால் என்ன? | 1516 |
| 337 | R 4262 [ Page 311] | 1 | [ Poem ] ஓய்வு நாள் தன்னின் இனிமை | 1520 |
| 338 | R 4286 [Page 157] | 5 | சமாதானத்தின் இராஜா பொறுப்பேற்கப்பட்டார் | 1521 |
| 339 | R 4290 [Page 363] | 8 | விரும்பித் தேடுங்கள், பின்னர் நாடி பெற்றுக் கொள்ளுங்கள் | 1526 |
| **வருடம் 1909 # R 4301முதல் R 4538வரை** | | | | |
| 340 | R 4312 | 3 | சொசைட்டியின் தலைமை அலுவலகத்தின் இடமாற்றம் | 1534 |
| 341 | R 4317 | 1 | [ Poem ] களிமண் | 1537 |
| 342 | R 4345 | 1 | (தெ.பத்திகள்) உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 1538 |

| | | | | |
|---|---|---|---|---|
| 343 | R 4346 மார்ச்1909 | 2 | (தெ.பத்திகள்) ஜெபத்திற்கு விடையாக விடுதலை | 1539 |
| 344 | R 4358 | 4 | கிறிஸ்து நமது பஸ்கா | 1541 |
| 345 | R 4359 | 1 | (தெ.பத்திகள்) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கான ஆவி | 1545 |
| 346 | R 4363 [ Page 393] | 1 | [ Poem ] இன்று பெயர் சபைகளில் போதிக்கப்படும் அநேக போதனைகளில் | 1546 |
| 347 | R 4374 [R3017] [R5892] | 6 | எருசலேமில்கூடின ஆலோசனைச் சங்கம் | 1547 |
| 348 | R 4375 ஏப்ரல் 1909 | 3 | நினைவுகூருதல் ஆசரிப்பு | 1553 |
| 349 | R 4380 | 3 | (தெ.பத்திகள்) நன்மைக்கு (அ) தீமைக்கு ஏதுவான நாவின் வல்லமை | 1556 |
| 350 | R 4384 மே1909 | 3 | பஸ்கா மற்றும் பாவநிவாரணநாளின் பலிகள் | 1559 |
| 351 | R 4417 | 5 | (தெ.பத்திகள்) தெசலோனிக்கேயருக்குப் பரிசுத்த பவுலடிகளார் மேய்ப்பரெனக் கொடுத்த ஆலோசனை | 1562 |
| 352 | R 4458 & R5935 | 9 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 1567 |
| 353 | R 4461 | 1 | ( தெ.பத்திகள்) எங்களது மேற்கு மாநாட்டின் சுற்றுப்பயணம் | 1576 |
| 354 | R 4472 | 1 | ( தெ.பத்திகள்) எங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் | 1577 |
| 355 | R 4485 | 1 | [ Poem] தேவசித்தமதிலே இளைப்பாறிடுவேனே | 1578 |
| 356 | R 4501 | 8 | சண்டைக்காரராயிருந்து | 1579 |
| **வருடம் 1910 # R 4539முதல் R 4732வரை** | | | | |
| 357 | R 4556 | 3 | கலிலேயாவின் தீர்க்கத்தரிசி | 1587 |

| | | | | |
|---|---|---|---|---|
| 358 | R 4558 | 4 | உங்கள் பிதா பூரண சற்குராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் | 1590 |
| 359 | R 4566 | 3 | தகுதியான மற்றும் தகுதியில்லாத இலட்சியங்கள் | 1594 |
| 360 | R 4577 | 3 | ஏதிரிாளியானவன் மீது வல்லமை / அதிகராம் | 1597 |
| 361 | R 4587 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பகுதி | 1600 |
| 362 | R 4587 | 3 | பாவமும், வியாதியும் தொடர்புடையவகள் | 1601 |
| 363 | R 4588 | 3 | ஆசீர்வாதத்தின் கால்வாயாகிய விசுவாசம் | 1604 |
| 364 | R 4590<br>ஏப்ரல்1910 | 8 | நினைவுகூருதலான பஸ்கா இராப்போஜனம் | 1607 |
| 365 | R 4593 | 4 | பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது | 1615 |
| 366 | R 4597 | 3 | எந்தளவுக்கு நாம் குற்றங்களை அறிக்கையிட வேண்டும்? | 1619 |
| 367 | R 4602 | 2 | பலிபீடத்திலிருந்து எடுக்கப்படும் அக்கினித்தழலின் முக்கியத்துவம் | 1622 |
| 368 | R 4605<br>மே 1910 | 4 | இரத்தத்தினைச் சதாரணமானதாய் எண்ணுதல் | 1624 |
| 369 | R 4608 | 3 | முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் | 1628 |
| 370 | R 4618 | 3 | ஆண்டவரே என்னை இரட்சியும் பரிசுத்தர் என்று பேதுரு கூப்பிட்டார் | 1631 |
| 371 | R 4634 | 3 | நல்ல நிலத்திற்கான நல்ல விதைகள் | 1634 |
| 372 | R 4635 | 3 | கோதுமை மற்றும் களைகள் | 1637 |
| 373 | R 4636 | 3 | இராஜ்யத்தின் காட்சிகள் | 1640 |
| 374 | R 4637 | 4 | இயேசு பூமிக்குரிய ஜீவனைப் பறிக்கொடுத்திடவில்லை | 1643 |

| | | | | |
|---|---|---|---|---|
| 375 | R 4642 | 1 | ( தெ.பத்திகள்) ஜீவன் கொடுத்துவைக்கப்பட்டது மாறாக செலுத்தித்தீர்க்கப்படவில்லை | 1647 |
| 376 | R 4658 | 1 | [Poem] ஊசியின் காதினிலே | 1648 |
| 377 | R 4658 | 4 | ஒட்டகமும், ஊசியின் காதும் | 1652 |
| 378 | R 4668 | 2 | பெரியவன் ஊழியக்காரன் | 1653 |
| 379 | R 4678 | 3 | தவறாய்ப் பயன்படுத்தப்பட்ட வாய்ப்புகள் எடுக்கப்பட்டன | 1655 |
| 380 | R 4686 | 3 | ஏசாவுடனான யாக்கோபின் நடத்தை இழிவானதா? | 1658 |
| 381 | R 4686 | 3 | சோதிக்கின்ற விதமான மூன்று கேள்விகள் | 1661 |
| 382 | R 4701 | 3 | அக்கினியைக் கட்டகளையிட உமக்குச் சித்தமா? | 1664 |
| 383 | R 4703 அக்டோபர் 1910 | 3 | என்னை நினைகூரும்படி இதைச் செய்யுங்கள் | 1667 |
| 384 | R 4707 நவம்பர் 1910 | 4 | இருளான கெத்செமனே வேளை | 1671 |
| 385 | R 4709 | 1 | ( தெ.பத்திகள்) அவர் அரைக்கட்டிக்கொண்டு அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் | 1675 |
| 386 | R 4710 நவம்பர் 1910 | 5 | தேவனை தூஷிக்கிறவராகக் குற்றஞ்சாட்டப்பட்டார் | 1676 |
| 387 | R 4711 நவம்பர் 1910 | 4 | சுய/தன்நம்பிக்கை ஒரு பெலவீனமாகும் | 1681 |
| 388 | R 4712 நவம்பர் 1910 | 4 | ஜீவாதிபதி சிலுவையில் அறையப்பட்டார் | 1685 |
| 389 | R 4730 | 3 | யோசபாத்தின் ஒரு தவறு | 1689 |
| **வருடம் 1911 # R 4733முதல் R 4942வரை** | | | | |
| 390 | R 4756 பிப்ரவரி 1911 | 3 | 1911 - நினைவுகூருதல் இராப்போஜனம் - 1911 | 1692 |

| | | | | |
|---|---|---|---|---|
| 391 | R 4770 | 1 | (தெ.பத்திகள்) கெட்ட வார்த்தை என்றால் என்ன? | 1695 |
| 392 | R 4771 | 2 | (தெ.பத்திகள்) உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 1696 |
| 393 | R 4794 [Page 104] | 3 | மாம்சத்தில் ஒரு முள் | 1698 |
| 394 | R 4794 [ Page 105] | 4 | திராட்சத் தோட்டத்தின் பாடல் | 1701 |
| 395 | R 4802 | 6 | சோர்ந்துபோகாதபடிக்கு அவரையே நினைத்துக்கொள்ளுங்கள் | 1705 |
| 396 | R 4809 [Page 136] | 6 | சரீரத்தை ஒடுக்குதல் / அடக்குதல் | 1711 |
| 397 | R 4821 | 4 | புதிய வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தும் பணி | 1717 |
| 398 | R 4838 | 4 | உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு | 1721 |
| 399 | R 4851 | 1 | [Poem] சிலுவையில்லையேல் கிரீடமில்லையே | 1725 |
| 400 | R 4892 | 3 | இரவின் கீதங்கள் | 1726 |
| 401 | R 4895 [Page 3] | 1 | கொஞ்சம் நேரமே | 1729 |
| 402 | R 4905 | 4 | (தெ. பத்திகள்) நமது கர்த்தருடைய ஜீவ - உரிமைகள் மீதான கேள்விகள் | 1730 |
| 403 | R 4915 [Page 413] | 2 | [Poem] ஹ! ஆசிக்கிறேன் | 1734 |
| 404 | R 4917 | 6 | அன்பைக் குறித்து சுயபரிசோதனை | 1736 |
| 405 | R 4927 | 3 | மற்றவர்களிடத்திலான நம்முடைய பொறுப்பு | 1742 |
| 406 | R 4929 | 2 | (தெ. பத்திகள்) அறுவடை என்பது விசேஷித்த சோதனை காலமாகும் | 1745 |
| 407 | R 4939 | 3 | இராஜ்யத்திற்குரிய ஆயத்தங்கள் | 1747 |
| 408 | R 4940 | 3 | மகா பெரிய தீர்க்கத்தரிசி | 1750 |

| | | | | |
|---|---|---|---|---|
| 409 | R4942 | 3 | ஆலயத்தில் அர்ப்பணிப்பு | 1753 |
| **வருடம் 1912 # R 4955முதல் R 5152வரை** | | | | |
| 410 | R 4968 | 1 | (தெ. பத்திகள்) வார்த்தைகளல்ல ஜீவியமே உண்மையான.... | 1756 |
| 411 | R 4971 [Page 54] | 1 | [Poem] சிலவேண்டாமே, சில வேண்டுமே | 1757 |
| 412 | R 4977 | 8 | நீதியான கண்டித்தல் மற்றும் தவறை மன்னித்தல் | 1758 |
| 413 | R 4979 | 4 | அவர், அவர்களுடைய வியாதிகளைச் சொஸ்தமாக்கினார் | 1766 |
| 414 | R 4984 | 6 | மனஸ்தாபங்களைச் சரிப்படுத்திடுவதற்கான தேவவாக்கிய விதி | 1770 |
| 415 | R 4994 | 4 | சகோதர சிநேகம், தீர்மானிக்கிற பரீட்சையாகும் | 1776 |
| 416 | R 5020 | 4 | உண்மையுள்ள வார்த்தைகள் - அடக்கமான பேச்சு | 1780 |
| 417 | R 5021 | 5 | ஜெபம் ஒரு மாபெரும் சிலாக்கியமாகும் | 1784 |
| 418 | R 5047 | 4 | இராஜ்யம் ஒரு பரிசு | 1789 |
| 419 | R 5050 ஜீன் 1912 | 1 | (தெ. பத்திகள்) புளித்த மா பற்றின உவமை | 1793 |
| 420 | R 5085 | 6 | கிறிஸ்துவினுடைய பலி | 1794 |
| 421 | R 5096 | 4 | தேவனுடைய வார்த்தைகளே தவிர, மனிதர்களுடையதல்ல | 1800 |
| 422 | R 5103 | 4 | அவர் எல்லாவற்றையும் நன்றாயச் செய்தார் | 1804 |
| 423 | R 5111 | 4 | வானத்திலிருந்து ஓர் அடையாளம் | 1808 |
| 424 | R 5120 | 4 | மாபெரும் கேள்வி | 1812 |
| 425 | R 5122 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 1816 |
| 426 | R 5122 | 2 | (தெ. பத்திகள்)சுவாரசியமான கடிதங்கள் | 1817 |

| | | | | |
|---|---|---|---|---|
| 427 | R 5128 | 3 | மீட்பின் வேலையினுடைய இரண்டு பாகங்கள் | 1819 |
| 428 | R 5128 | 3 | எல்லாம் கூடும் | 1822 |
| 429 | R 5129 | 3 | ஆவியை அவித்துப்போடாதிருங்கள் | 1825 |
| 430 | R 5131 | 1 | அதிகமான மூப்பர்கள் - அதிகமான வேலை | 1828 |
| 431 | R 5134 | 4 | ஏழெழுபது தரம் மன்னித்தல் | 1829 |
| 432 | R 5142 | 3 | பெரோயா வகுப்புகளுக்கான யோசனைகள் | 1833 |
| 433 | R 5147 [Page 387] | 5 | எதிராளியானவனுடைய சூழ்ச்சித்திறன் | 1836 |
| **வருடம் 1913 # R 5153முதல் R 5372வரை** | | | | |
| 434 | R5158 [ Page 10] | 1 | [ Poem ] நீதிமானின் குணம் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது | 1841 |
| 435 | R 5161 | 2 | (தெ. பத்திகள்) சுவாரசியமான சில கடிதங்கள் | 1842 |
| 436 | R 5161 | 1 | (தெ. பத்திகள்) சுவாரசியமான கேள்விகள் | 1844 |
| 437 | R 5185 | 4 | மூப்பர்களுக்கான பரிசுத்த பேதுருவின் அறிவுரை | 1845 |
| 438 | R 5186 & R5809 | 2 | தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம் | 1846 |
| 439 | R 5191 மார்ச் 1913 ( R1289 & R 2270 பார்க்கவும்) | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 1851 |
| 440 | R 5195 [ Page 75] | 1 | [ Poem ] கெத்செமனே | 1866 |
| 441 | R 5195 [Page 3] | 1 | சம்பிரதாய கடமை ஜெபம் | 1867 |
| 442 | R 5208 [Page 3] | 1 | கெத்செமனே | 1868 |
| 443 | R 5214 | 1 | [Poem] கெத்செமனே | 1869 |

| | | | | |
|---|---|---|---|---|
| 444 | R 5214 | 5 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 1870 |
| 445 | R 5216 | 6 | துன்பப்பட்டவர் எனினும் தேற்றுபவர் | 1875 |
| 446 | R 5225 | 6 | விதைத்தலும் அறுத்தலும் | 1881 |
| 447 | R 5231 | 6 | பென்யமீனுக்கு ஐந்து மடங்கான பங்கு | 1887 |
| 448 | R 5232 | 6 | யோசேப்பின் சகோதரர்களால் கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் | 1893 |
| 449 | R 5234 | 6 | பலியைப் பார்க்கிலும் இரக்கம் உத்தமமாயிருக்கிறது | 1899 |
| 450 | R 5241 [Page 3] | 1 | எத்தனை காலம் தேவனே? ஏத்தனை காலமோ? | 1905 |
| 451 | R 5255 | 1 | பெரோயா பாடங்கள் மற்றும் சாட்சிக் கூட்டங்கள் | 1906 |
| 452 | R 5272 ஜீலை 1913 | 4 | இஸ்ரயேல் தப்புவிக்கப்பட்டது (அ) கடந்து போகப்பட்டது | 1907 |
| 453 | R 5284 [Page 227] R 1832 [Page 153] | 11 | தேவசமாதானம் | 1911 |
| 454 | R 5304 | 2 | (தெ.பத்திகள்) உலகத்திலும், சபையிலும் தேவனுடைய மேற்பார்வை | 1922 |
| 455 | R 5315 | 1 | (தெ.பத்திகள்) ஒரு நல்ல மனிதனின் பாவம் | 1924 |
| 456 | R 5321 | 3 | சீஷயத்துவத்தின் ஆவியாய் இருக்கும் ஊழியத்தின் ஆவி | 1925 |
| 457 | R 5323 [Page 3] | 1 | அவர் நம்மைக் கைவிட மாட்டார், நம்மைத் தவறவிட்டார். | 1928 |
| 458 | R 5326 | 1 | [Poem] இடமிருக்குது, இடமிருக்குது | 1929 |
| 459 | R 5336 | 3 | மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் | 1930 |
| 460 | R 5341 நவம்பர் 1913 | 5 | நமது ஆசீர்வாதத்தின் பாத்திரம் | 1933 |

| | | | | |
|---|---|---|---|---|
| 461 | R 5341 (தெ.ப) | 2 | (தெ.பத்திகள்)இரத்தத்தில் ஜீவன் இருக்கிறது | 1938 |
| 462 | R 5342 நவம்பர் 1913 | 3 | நமது கர்த்தருடைய மாம்சத்தைப் புசித்தலுக்கும் மற்றும் அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுதலுக்குமான அர்த்தம் | 1940 |
| 463 | R 5346 | 7 | நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால் | 1943 |
| 464 | R 5350 | 2 | மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல் | 1950 |
| 465 | R 5358 | 3 | கர்த்தருக்கு ஒத்தக்குணலட்சணத்தின் சாயல் | 1952 |
| 466 | R 5362 | 4 | எழுபது ஊழியர்கள் நியமிக்கப்படுதல் | 1955 |
| 467 | R 5368 | 2 | அன்பின் பிரமாணங்கள் மற்றும் பாராளுமன்ற பிரமாணங்கள் | 1959 |
| 468 | R 5370 [Page 377] | 3 | அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள் | 1961 |
| 469 | R 5370 [Page 377] R 5371 [Page 378] | 3 | மார்த்தாள் மற்றும் மரியாள் | 1964 |
| **வருடம் 1914 # R 5373முதல் R 5600வரை** | | | | |
| 470 | R 5374 | 4 | காலம் சமீபித்திருக்கறிது | 1967 |
| 471 | R 5375 | 6 | உண்மை ஊழியத்தின் மாபெரும் சிலாக்கியம் | 1971 |
| 472 | R 5377 [Page 10] | 4 | அந்தகாரத்தின் அதிபதி மற்றும் வெளிச்சத்தின் அதிபதி | 1977 |
| 473 | R 5377 [Page 11] | 2 | ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டோர் | 1981 |
| 474 | R 5378 | 3 | யாரெல்லாம் ஜெபிக்கலாம்? எதற்காக ஜெபிக்கலாம்? | 1983 |

| | | | | |
|---|---|---|---|---|
| 475 | R 5379 | 6 | ஜெபத்தோடும் விண்ணப்பத்தோடும் கூடிய ஸ்தோத்திரம் | 1986 |
| 476 | R 5383 | 3 | நிறைவேற நெருங்கி வருகிற தீர்க்கதரிசனம் | 1992 |
| 477 | R 5384 | 6 | ஜெபம் மற்றும் சாட்சி பகருதலுக்கான மேய்ப்பரது ஆலோசனை | 1995 |
| 478 | R 5388 | 3 | மூப்பர்களுக்கான பரிசுத்த பவுலின் அறிவுரை | 2001 |
| 479 | R 5389 | 4 | பரிசேயர்களே உங்களுக்கு ஐயோ! | 2004 |
| 480 | R 5390 | 4 | நல்ல அறிக்கை மற்றும் மோசமான அறிக்கை | 2008 |
| 481 | R 5391 | 1 | லேவியராகமம் 9 மற்றும் 16ம் அதிகாரங்கள் | 2012 |
| 482 | R 5391 | 8 | மேசியா - கிறிஸ்து - அபிஷேகம் பண்ணப்பட்டவர் | 2013 |
| 483 | R 5394 | 4 | தேவபக்தியாய் நடத்தல் துன்பத்தை வருவிக்கும் | 2021 |
| 484 | R 5396 | 4 | உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ | 2025 |
| 485 | R 5399 | 4 | உண்மையுள்ளோர் எச்சரிப்பாய் இருப்பர் | 2029 |
| 486 | R 5403 | 2 | நல்ல போர்வீரர்களாக தீங்கனுபவித்தல் | 2033 |
| 487 | R 5404 | 2 | தூய்மையற்ற நடத்தையின் ஒரு வடிவம், கவனக்குறைவான வாழ்க்கை | 2035 |
| 488 | R 5405 | 4 | ஓய்வுநாளில் செய்யப்படக்கூடிய நியாயமானவைகள் | 2037 |
| 489 | R 5408 | 3 | சுவாரஸ்யமான கேள்விகள் | 2041 |
| 490 | R 5409 | 3 | (தெ.பத்திகள்) சில சுவாரசியமான கடிதங்கள் | 2044 |
| 491 | R 5420 மார்ச் 1914 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம், ஏப்ரல் 10-ஆம் தேதி | 2047 |
| 492 | R 5421 மார்ச் 1914 | 5 | உங்களால் கூடுமா? | 2050 |

| | | | | |
|---|---|---|---|---|
| 493 | R 5425 | 4 | சீஷத்துவத்திற்கான விலை | 2055 |
| 494 | R 5444 | 6 | ஐசுவாரியவான் நரகத்திற்கும் .... ஏழை பரலோகத்திற்கும் | 2059 |
| 495 | R 5445 | 6 | நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர் | 2065 |
| 496 | R 5453 | 5 | ஒன்பது பேர் எங்கே? | 2071 |
| 497 | R 5455 | 5 | மேசியாவின் இராஜ்யம் கண்ணுக்குப் புலப்படாதது | 2076 |
| 498 | R 5472 [Page 169] | 4 | ஆரோனைப்போல் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய...... | 2081 |
| 499 | R 5473 | 5 | திராட்சத்தோட்டத்தில் வேலைக்காரர்கள் | 2084 |
| 500 | R 5474 | 2 | நல்நோக்கமுடையவர்கள், ஆனால் இடையூறானவர்கள் | 2089 |
| 501 | R 5501 | 2 | கொள்கையின் அடிப்படையிலான கிறிஸ்தவ சுயாதீனம் | 2091 |
| 502 | R 5510 | 5 | கலியாண விருந்து | 2093 |
| 503 | R 5517 | 1 | (தெ.பத்திகள்) நாவை அடக்குவது அவசியமாகும் | 2098 |
| 504 | R 5521 | 4 | பிரதான கற்பனைகள் | 2099 |
| 505 | R 5528 | 6 | தீமைபேசுதல் என்றால் என்ன? | 2103 |
| 506 | R 5532 [Page 269] | 1 | [Poem] சிலுவையில்லாமல் கிரீடமில்லை | 2109 |
| 507 | R 5538 செப்டம்பர் 1914 | 6 | இரட்சிப்பின் பாத்திரத்தினுடைய ஆசீர்வாதம் | 2110 |
| 508 | R 5541 செப்டம்பர் 1914 | 5 | பஸ்காவின் இரண்டு நினைவுகூருதல் சின்னங்கள் | 2116 |
| 509 | R 5550 செப்டம்பர் 1914 | 6 | ஏன் கெத்செமனேயில் வியாகுலம்? | 2121 |

| | | | | |
|---|---|---|---|---|
| 510 | R 5552 செப்டம்பர் 1914 | 5 | உண்மையற்ற ஒரு பொருளாளரின் வீழ்ச்சி | 2127 |
| 511 | R 5560 செப்டம்பர் 1914 | 4 | இயேசுவைக் கேலிக்குள்ளாக்கும் விசாரணைகள் | 2132 |
| 512 | R 5563 செப்டம்பர் 1914 | 3 | பரிசுத்தவானாகிய பேதுரு கோதுமையைப்போல் புடைக்கப்பட்டார் | 2136 |
| 513 | R 5570 செப்டம்பர் 1914 | 6 | இயேசு, பிலாத்துவினால் விசாரணைப் பண்ணப்பட்டார் | 2139 |
| 514 | R 5572 | 1 | [Poem] நன்றி சொல்கிறோம் | 2145 |
| 515 | R 5572 [Page 3] | 1 | நன்றி சொல்கிறோம் | 2145 |
| 516 | R 5572 [Page 3] | 1 | இயேசுவின் காலத்தில் நாம் வாழ்ந்திருந்தால் | 2148 |
| 517 | R 5577 | 1 | [ Poem]என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும் | 2149 |
| 518 | R 5577 நவம்பர்1914 | 5 | தேவனால், வாதிக்கப்பட்டவர், சிறுமைப்பட்டவர் | 2150 |
| 519 | R 5587 | 3 | [ தெ. பத்திகள்]சபையின் ஏற்படுத்துதல் | 2155 |
| 520 | R 5587 | 5 | சபையின் ஏற்படுத்துதல் | 2160 |
| 521 | R 5588 | 5 | அவர் தாம் முன்னிருந்த இடத்திற்கு | 2163 |
| **வருடம் 1915 # R 5601முதல் R 5819வரை** | | | | |
| 522 | R 5603 [Page 3] | 4 | நீதியான கோபமும் அநீதியான கோபமும் | 2168 |
| 523 | R 5604 | 3 | முதலாம் அர்மகெதோன் யுத்தம் | 2172 |
| 524 | R 5605 | 4 | துணிவின் நாயகன் - கிதியோன் | 2175 |

| | | | | |
|---|---|---|---|---|
| 524 | R 5606 | 3 | கிதியோனின் தைரியமுள்ள முந்நூறு வீரர்கள் | 2179 |
| 526 | R 5608 | 4 | சபைக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஜீவன் | 2182 |
| 527 | R 5611 [Page 19] | 5 | கல்லறையிலிருந்து வருவது ஆத்துமா, சரீரமல்ல | 2186 |
| 528 | R 5612 [Page 21] | 4 | சிம்சோனின் சோக முடிவு | 2191 |
| 529 | R 5613 [Page 23] | 4 | தாவீது ராஜாவஜின் கொள்ளுப்பாட்டி - ரூத் 1 | 2194 |
| 530 | R 5615 [Page 24] | 4 | கர்த்தருடைய சத்தம் | 2198 |
| 531 | R 5621 [Page 35] | 6 | நமது ஆண்டவரின் மனித ஜீவிய உரிமைகளை சாட்டுதலும் பிரயோகித்தலும் | 2201 |
| 532 | R 5621 | 8 | [ தெ. பத்திகள் ] நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவ - உரிமைகளின் சாற்றப்டுதல் மற்றும் பயன்படுத்தப்படுதல் | 2207 |
| 533 | R 5623 | 4 | உங்கள் பிதா அறிந்திருக்கிறார் | 2215 |
| 534 | R 5624 [Page 40] | 4 | மிகவும் உறுதியான ஆதாரம் தேவைப்படுகிறது. | 2219 |
| 535 | R 5626 | 3 | பொல்லாதவர்களின் கையில் தேவனுடைய பெட்டி | 2222 |
| 536 | R 5627 [Page 41] | 4 | பாவ அறிக்கை, மன்னிப்பு, வெற்றி | 2225 |
| 537 | R 5628 [Page 45] | 3 | சபை வனாந்தர நிலைமையிலிருந்து திரும்புதல் | 2229 |
| 538 | R 5630 [Page 51] | 9 | பரிசுத்தவான்களின் தற்கால கடமையும் சலுகையும் | 2231 |
| 539 | R 5633 | 4 | தூதர்களின் ஊழியம் | 2239 |

| | | | | |
|---|---|---|---|---|
| 540 | R 5635 [Page 59] | 4 | தக்க தருணம் | 2243 |
| 541 | R 5636 [Page 57] | 4 | குடியரசுக்கு பதிலாக விரும்பப்பட்ட முடியாட்சி | 2247 |
| 542 | R 5638 [Page 61] | 4 | சவுலின் தோல்விகளின் மூலம் கிடைக்கும் பாடம் | 2251 |
| 543 | R 5640 மார்ச் 1915 | 11 | பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | 2255 |
| 544 | R 5640 | 9 | பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | 2266 |
| 545 | R 5643 [Page 72] | 3 | தியாக அன்பும் கடமை அன்பும் | 2275 |
| 546 | R 5644 | 2 | [ தெ. பத்திகள்] தேவனிடத்திலான நம்முடைய தனிப்பட்டப் பொறுப்பு | 2277 |
| 547 | R 5645 | 5 | கீழ்ப்படியாத இஸ்ரயேலர்களிடத்தில் தேவனுடைய இரக்கங்கள் | 2279 |
| 548 | R 5647 [Page 76] | 6 | சவுல் கர்த்தரால் புறக்கணித்து | 2283 |
| 549 | R 5650 [Page 83] | 8 | பொறுமையுடன் சகித்தல் கடைசி சோதனை | 2288 |
| 550 | R 5652 | 2 | தன்னடக்கத்தின் முக்கியத்துவம் | 2295 |
| 551 | R 5653 [Page 90] | 5 | யேகோவா என் மேய்ப்பராயிருக்கிறார் | 2297 |
| 552 | R 5655 [Page 92] | 3 | கவனத்தை ஈர்க்கிற கேள்விகள் | 2301 |
| 553 | R 5656 [Page 88] & R 3225 [Page 221] | 4 | தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா | 2304 |
| 554 | R 5660 [Page 103] | 3 | உலகம் ஏன் இன்னும் இழந்ததை திரும்ப பெறவில்லை | 2308 |
| 555 | R 5662 [Page 104] | 2 | · நவீன இராட்சதர்கள் மீதான வெற்றிகள் | 2310 |

| | | | | |
|---|---|---|---|---|
| 556 | R 5662 [Page 105] | 4 | கொடுமைப்படுத்தப்பட்ட ஒருவரின் விசுவாசம் | 2312 |
| 557 | R 5664 | 3 | ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் | 2316 |
| 558 | R 5665 [Page 108] | 3 | குணலட்சணத்தின் விதைப்பின் காலமும் அறுப்பும் | 2319 |
| 559 | R 5666 [Page 109] | 4 | யாருக்கு ஊழியம் செய்வோம் என்பதை இந்த நாளில் தீர்மானியுங்கள் | 2322 |
| 560 | R 5668 [Page 115] | 2 | எல்லா கிருபைகளின் மொத்தம் | 2325 |
| 561 | R 5668 [Page 1180] | 3 | இராஜ்யத்தின் வெண்வஸ்திரம் | 2327 |
| 562 | R 5670 [Page 120] | 5 | இங்கே இலேசான உபத்திரவம் - பின்வரும் மகிமைகள் | 2330 |
| 563 | R 5672 [Page 122] | 4 | நான் அபிஷேகம் பண்ணினவர்களை தொடாதே | 2334 |
| 564 | R 5673 [Page 123] | 4 | இராஜாவாகிய சவுலின் கடைசி யுத்தம் | 2338 |
| 565 | R 5676 [Page 131] | 3 | யுகங்களின் முடிவு ஒத்த நிலைமைகள் | 2342 |
| 566 | R 5677 [Page 133] | 5 | இவைகளை நாம் செய்ய வேண்டும் | 2345 |
| 567 | R 5678 [Page 135] | 2 | இயேசு அவரது சத்துருக்களை வைதாரா? | 2349 |
| 568 | R 5679 [Page 136] | 5 | தாவீதின் நகரம் - தேவனுடைய நகரம் | 2351 |
| 569 | R 5681 [Page 138] | 3 | நீயே, அந்த மனுஷன்! | 2356 |
| 570 | R 5683 [Page 141] | 2 | ஆவலைத் தூண்டும் கேள்வி | 2359 |

| | | | | |
|---|---|---|---|---|
| 571 | R 5684 [Page 142] | 2 | அவரையே நினைத்துக் கொள்ளுங்கள் - பிறகு பின்பற்றுங்கள் | 2361 |
| 572 | R 5685 [Page 147] | 7 | புது சிருஷ்டி தனது மாம்சத்தை ஜெயங்கொள்ளுதல் | 2362 |
| 573 | R 5688 [Page 150] | 2 | ஜீவகிரீடத்தை பெறுவது யார்? | 2367 |
| 574 | R 5688 [Page 151] | 3 | கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக வளர்ச்சியடைதல் | 2369 |
| 575 | R 5690 [Page 152] | 4 | மன்னிக்கப்பட்டவன் பாக்கியவான் | 2372 |
| 576 | R 5692 [Page 154] | 4 | கேட்கப்படுகிற ஜெபங்கள் | 2376 |
| 577 | R 5693 | 4 | மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்க தரிசனம் | 2380 |
| 578 | R 5695 [Page 163] | 7 | வருகிற கொந்தளிப்பும் அதன் மகிமையான பலனும் | 2384 |
| 579 | R 5698 | 2 | அர்ப்பணத்திற்கு உந்துவிசை விசுவாசம் | 2391 |
| 580 | R 5698 | 3 | சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 2393 |
| 581 | R 5698 | 2 | [ தெ. பத்திகள் ]சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 2395 |
| 582 | R 5699 [Page 168] | 2 | எனக்கு பிறன் யார்? | 2397 |
| 583 | R 5699 | 1 | [ Poem]தேவனின் யுத்தம் | 2399 |
| 584 | R 5700 | 2 | நன்றிகெட்ட கலகக்கார அப்சலோம் | 2400 |
| 585 | R 5701 [Page 170] | 2 | · இஸ்ரயேல் ராஜாவாகிய சாலொமோன் | 2402 |
| 586 | R 5701 [Page 171] | 3 | சோதனை என்ற வார்த்தையின் பல்வேறு அம்சங்கள் | 2404 |
| 587 | R 5702 | 3 | பிதாவின் ஞானமான ஆலோசனை | 2407 |

| | | | | |
|---|---|---|---|---|
| 588 | R 5703 | 1 | [ தெ. பத்திகள் ] பெரோயா வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள் | 2410 |
| 589 | R 5704 [Page 174] | 2 | சுயதேவை பூர்த்தியாகிய பாவம் | 2411 |
| 590 | R 5704 | 3 | [ தெ. பத்திகள் ] சுவாரசியமான கடிதங்கள் | 2413 |
| 591 | R 5705 [Page 179] | 5 | ஆவிக்குரிய கானானியர்கள் மீதான நமது வெற்றி | 2416 |
| 592 | R 5707 | 6 | ஜெயம் - அதன் உபயோகமும் தகாத உபயோகமும் | 2421 |
| 593 | R 5710 [Page 185] | 5 | உண்மையான ஜெபத்தின் பிறப்பிடம் | 2427 |
| 594 | R 5711 [Page 190] | 3 | கர்த்தருக்காக நாம் எப்படி காத்திருக்க வேண்டும் | 2431 |
| 595 | R 5713 [Page 188] | 3 | ஆலயத்தை அர்ப்பணம் செய்தல் | 2434 |
| 596 | R 5714 [Page 187] | 2 | நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் | 2437 |
| 597 | R 5715 | 4 | காவற்கோபுரத்தின் கருத்துக்கள் | 2439 |
| 598 | R 5716 [ Page 197] | 1 | அட்டவணை | 2443 |
| 599 | R 5716 | 4 | விசுவாசத்தின் தற்கால நன்மைகள் | 2444 |
| 600 | R 5718 | 3 | சோதனைக் காலம் | 2448 |
| 601 | R 5718 | 3 | அவருடைய ஊழியர்களாகிய நாம் யாருக்கு ஊழியம் செய்ய வேண்டும் | 2450 |
| 602 | R 5719 | 2 | நாம் நிற்பது கிறிஸ்துவுக்குள்ளாக மட்டுமே | 2453 |
| 603 | R 5720 [ Page 201] | 2 | சத்தியத்தைக் பிரகடனப்படுத்துவது எப்படி? | 2455 |
| 604 | R 5721 [ Page 203] | 2 | இஸ்ரயேலின் ஏழத்தனையான தண்டனை ஓர் ஆசீர்வாதம் | 2457 |

| | | | | |
|---|---|---|---|---|
| 605 | R 5722<br>[ Page 204] | 3 | சோபாவின் ராணி வந்து சாலொமோனை பார்க்கிறாள் | 2459 |
| 606 | R 5722<br>[ Page 205] | 3 | ஞானமுள்ள ராஜா தவறாக வழிநடத்தப்பட்டான் | 2461 |
| 607 | R 5724<br>[ Page 211] | 9 | பிதா மற்றும் குமாரனின் அன்பே நமக்கு உதாரணம் | 2463 |
| 608 | R 5728<br>[ Page 216] | 9 | கேள்வி கூட்டம் - ஓக்லேண்டு கன்வென்ஷன் | 2471 |
| 609 | R 5732<br>[ Page 220] | 4 | அரசியல்வாதிகளும் தவறான மதமும் | 2480 |
| 610 | R 5733<br>[ Page 222] | 3 | ஆசா ராஜாவின் சீர்திருத்த வேலை | 2483 |
| 611 | R 5735<br>[ Page 227] | 3 | துக்கத்தின் ஆரம்பம் | 2486 |
| 612 | R 5736<br>[ Page 228] | 3 | எனது இருதயம் நல்ல நிலமா? | 2488 |
| 613 | R 5737<br>[ Page 230] | 7 | நமது சுத்திகரிப்பு - உள்ளாகவும் புறம்பாகவும் | 2491 |
| 614 | R 5740 | 3 | கொஞ்சத்தில் உண்மையாயிருத்தல் | 2497 |
| 615 | R 5741 | 2 | எலியா ஒரு பெரிய தீர்க்கதரிசி | 2500 |
| 616 | R 5742<br>[ Page 237] | 2 | ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களின் பொறுப்பு | 2502 |
| 617 | R 5744 | 4 | கிருபாசனத்தின் சலுகைகள் | 2504 |
| 618 | R 5746<br>[ Page 245] | 4 | இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | 2508 |
| 619 | R 5747<br>[ Page2417] | 5 | நமது தேவனாகிய யேகோவா ஒருவரே தேவன் | 2512 |
| 620 | R 5749<br>[ Page 250] | 3 | அநீதியான உலகப்பொருளினால் சிநேகிதரை சம்பாதித்தல் | 2517 |
| 621 | R 5750<br>[ Page 251] | 3 | மீறுதல்களும், பாவங்களும் மற்றும் குணலட்சணத்தில் அவைகளின் விளைவும் | 2519 |

| | | | | |
|---|---|---|---|---|
| 622 | R 5751 [ Page 250] | 3 | எலியா திரும்பவருதலும் வெற்றியும் | 2521 |
| 623 | R 5752 [ Page 254] | 3 | எலியாவின் ஓட்டமும் காட்சியும் | 2524 |
| 624 | R 5754 [ Page 259] | 4 | யுத்தமும் கிறிஸ்தவனின் கடமையும் | 2527 |
| 625 | R 5755 | 5 | தேவனுடைய கட்டளையின் முடிவான திட்டம் | 2531 |
| 626 | R 5757 | 2 | தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட முழு விடுதலை | 2536 |
| 627 | R 5758 [ Page 265] | 2 | மனித வேலைகளும் புது சிருஷ்டியின் வேலைகளும் | 2538 |
| 628 | R 5759 | 3 | பரமேறுவதற்கு முன் எலியாவின் வேலை | 2540 |
| 629 | R 5761 | | கீழ்ப்படிதலும் அரசுரிமையும் | 2543 |
| 630 | R 5761 | 2 | அறுவடை வேலையின் இரண்டு பாகங்கள் | 2545 |
| 631 | R 5761 | 1 | [ Poem]கொஞ்சம் நேரம் தான் | 2547 |
| 632 | R 5762 [Page 3] | 1 | கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் | 2548 |
| 633 | R 5767 | 3 | இயேசுவின் அற்புதமான பிறப்பு | 2549 |
| 634 | R 5768 | 5 | அப்போஸ்தல உத்தரவு அந்த அளவுக்கு குறிப்பிடத்தக்கதாக இருந்ததில்லை | 2552 |
| 635 | R 5770 | 2 | ஆகாபின் பாவம் - பொருளாசை, கொலை | 2557 |
| 636 | R 5771 | 3 | எலியாவின் அக்கினிரதம் | 2559 |
| 637 | R 5773 | 2 | எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தர் ( உண்மையுள்ளவர்) | 2562 |
| 638 | R 5774 | 6 | நீதிமானாக்கப்படுதல் - எண்ணப்படுதலும் உண்மையிலும் | 2564 |
| 639 | R 5776 | 2 | இரண்டு பெரிய வேண்டுதல்கள் | 2570 |

| | | | | |
|---|---|---|---|---|
| 640 | R 5777 | 3 | பூமிக்குரியவைகளுக்கான ஆசைகளை மேற்கொள்ளுதல் | 2572 |
| 641 | R 5789 | 1 | ( தெ. பத்திகள்) சுவாரசியமான கடிதங்கள் | 2575 |
| 642 | R 5793 | 5 | சபையில் கனம் பெறுவதற்குரிய தகுதியான அடிப்படை | 2576 |
| 643 | R 5809 & R 5186 | 2 | தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம் | 2581 |
| 644 | R 5815 [Page 3] | 1 | என் உடன்படிக்கைக்கான அடையாளம் | 2583 |
| **வருடம் 1916 # R 5821முதல் R 6024வரை** | | | | |
| 645 | R 5829 [ Page 11] | 6 | அவர் பரத்துக்கு ஏறி சிறைப்பட்டவர்களுக்கு வழிகாட்டினார் | 2584 |
| 646 | R 5830 [ Page 13] | 4 | பெந்தெகொஸ்தே நாளின் ஆவி | 2589 |
| 647 | R 5831 [ Page 14] | 4 | பரிசுத்த பேதுரு போதித்த பெந்தெகொஸ்தே நாளின் பிரசங்கம் | 2593 |
| 648 | R 5832 [ Page 19] | 13 | கர்த்தாவே ஜெபிக்க எங்களுக்கு கற்பித்தருளும் | 2597 |
| 649 | R 5836 [ Page 24] | 7 | ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களுக்கு சுபாவ மாம்சீக இஸ்ரயேலர் சுதந்தரவாளிகள் அல்ல. | 2609 |
| 650 | R 5842 - R 5844 | 8 | உண்மையான மனத்தாழ்மைக்குள் உள்ளடங்கியிருப்பது என்ன | 2615 |
| 651 | R 5846 | 3 | உயர்த்தப்படப்போகின்ற தாழ்மையுள்ளவர்கள் | 2623 |
| | R 5849 | 4 | கிறிஸ்தவ பொதுவுடைமைக் கொள்கை | 2626 |
| 652 | R 5869 மார்ச் 1916 | 10 | நினைவுகூருதல் காலப்பகுதிக்கான சிந்தனைகள் | 2630 |
| 653 | R 5872 [ Page 987] | 8 | மீட்கும் பொருளும், பாவ நிவாரண பலியும் | 2640 |

| | | | | |
|---|---|---|---|---|
| 654 | R 5874<br>[ Page 94] | 2 | காட்டுபுஷ்பங்களிலிருந்து கற்கும் பாடங்கள் | 2648 |
| 655 | R 5875 &<br>R2986 | 8 | ஐனேயாவும், தொற்காளும் | 2650 |
| 656 | R 5875<br>[ Page 94] | 1 | [ Poem] பஸ்காவின்  நிரூபணம் | 2658 |
| 657 | R 5876<br>[ Page 99] | 6 | எப்படி நாம்  பரிசுத்தமாக்கப்படுகிறோம்? | 2659 |
| 658 | R 5878<br>[ Page 101] | 5 | புயலின்மத்தியில்  சமாதானம் | 2664 |
| 659 | R 5879 &<br>R 2989 | 8 | பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும் | 2669 |
| 660 | R 5879<br>[ Page 107] | 7 | மீட்கும் பொருளின் விலையும், அதை நடைமுறைப்படுத்தலும் | 2675 |
| 661 | R 5882<br>[ Page 105]<br>[R 1591] | 4 | உயிர்தெழுந்த கிறிஸ்து | 2682 |
| 661 | R 5885<br>[ Page 117] | 4 | கிறிஸ்துவோடு  நுகத்தடிக்குப்பட்டோர் | 2686 |
| 662 | R 5886<br>[Page 118] | 2 | சிறு  நரிகள் | 2689 |
| 663 | R 5886<br>[ Page 125] | 2 | சகோதரர்களை முறையாகவோ, முறையற்றோ நியாயந்தீர்த்தல் | 2691 |
| 664 | R 5888 | 2 | (தெ. பத்திகள்) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புபவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர் | 2693 |
| 665 | R 5888 | 2 | ( தெ. பத்திகள்)  சுவாரசியமான  கடிதங்கள் | 2695 |
| 666 | R 5889<br>[ Page 131] | 4 | பெருமைக்கெதிரான கிறிஸ்தவரின்  யுத்தம் | 2697 |
| 667 | R 5890<br>[ Page 133] | 3 | இயேசு  மரித்து  எல்லோருக்காகவும் ஈட்டுத்தொகை  செலுத்தினார் | 2701 |

| | | | | |
|---|---|---|---|---|
| 668 | R 5891 [ Page 134] | 6 | லிஸ்தீராவில் இருந்த சப்பாணி | 2703 |
| 669 | R 5892 & R 4374 & R 3017 | 6 | எருசலேமில் கூடின ஆலொசனைச் சங்கம் | 2708 |
| 670 | R 5892 | 3 | விசுவாசம் கிரியைகளினால் மெய்ப்பித்துக் காண்பிக்கப்படும் | 2714 |
| 671 | R 5893 | 3 | சுவிஷேத்தைப் பிரசங்கித்தல் அத்தியாவசியமானது | 2717 |
| 672 | R 5893 | 2 | உங்களைப் பகைக்கும் உங்கள் சகோதரர் | 2719 |
| 673 | R 5896 [ Page 147] | 4 | எப்படி தீயோனின் இரகசிய சதித்திட்டங்களை முறியடிப்பது? | 2720 |
| 674 | R 5897 | 3 | தீமையோடு எதிர்த்து நில்லாமை | 2724 |
| 675 | R 5898 [ Page 150] | 3 | சத்தியத்துக்கு சாட்சிகள் | 2727 |
| 676 | R 5899 [ Page 153] | 4 | நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் | 2729 |
| 677 | R 5900 [ Page 154] | 2 | திருமணம் பற்றிய மேய்ப்பரது சில ஆலொசனைகள் | 2732 |
| 678 | R 5903 | 5 | மக்கெதோனியாவிலிருந்து வேண்டுகோள் | 2734 |
| 679 | R 5905 [ Page 163] | 6 | பரத்துக்குரியவைகளை நேசிக்கும்படி நம் சிந்தையைப் பயிற்றுவித்தல் | 2739 |
| 680 | R 5907 [ Page 166] | 5 | பிலிப்பு பட்டணத்தின் சிறை அதிகாரி | 2745 |
| 681 | R 5907 [ Page 165] | 1 | பூரண அழகு பொருந்திய ராஜா | 2750 |
| 682 | R 5908 | 2 | கடைசியாக, சகோதரரே, சிந்தியுங்கள் | 2751 |
| 683 | R 5909 [R3820] | 4 | அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும் | 2753 |
| 684 | R 5912 | 3 | அவர்கள் பெலத்தின்மேல் பெலனடைந்து | 2757 |

| | | | | |
|---|---|---|---|---|
| 685 | R 5913<br>[ Page 189] | 5 | நம் கர்த்தராகிய இயேசுவின் உத்வேகமளிக்கும் வாக்குத்தத்தம் | 2760 |
| 686 | R 5916 | 4 | ராஜா பிரசன்னமாயிருத்தலின் அடையாளங்கள் | 2762 |
| 687 | R 5917<br>[ Page 197] | 4 | தேவராஜ்யத்தில் அங்கமாவதைத் தேடுதல் | 2766 |
| 688 | R 5918 | 2 | நல்ல மேம்பட்ட, சிறந்த வேதாகம ஆராய்ச்சி | 2769 |
| 689 | R 5919<br>[ Page 203] | 4 | கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுதல் | 2771 |
| 690 | R 5920 | 3 | பட்டுப்போன அத்திமரத்திலிருந்து கற்கவேண்டியவை | 2774 |
| 691 | R 5921 | 4 | சபையில் அன்பு | 2776 |
| 692 | R 5922 | 1 | [ தெ. பத்திகள் ] சில சபையாரின் காரியக்கூட்ட முறைமைகள் தொடர்பாக | 2780 |
| 693 | R 5922 | 1 | [ தெ. பத்திகள் ] சுவாரசியமான கடிதங்கள் | 2781 |
| 694 | R 5923<br>[ Page 211] | 5 | நாம் மறவாதிருக்க நாடுவோம் | 2782 |
| 695 | R 5926 | 5 | கொடுத்தலினால் அடையும் கிருபை | 2787 |
| 696 | R 5928 | 2 | பரிந்து பேசுபவர் மற்றும் மத்தயஸ்தர் பணிகளுக்கிடையே உள்ள வேறுபாடு | 2794 |
| 697 | R 5929<br>[ Page 221] | 2 | உங்களுக்குள் நிலவும் சமாதானம் | 2794 |
| 698 | R 5929 | 2 | உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 2795 |
| 699 | R 5931<br>[ Page 227] | 6 | புது சிருஷ்டிக்குரிய வளர்ச்சியை அடைவது எப்படி? | 2797 |
| 700 | R 5931 | 6 | புது சிருஷ்டிகளாக எப்படி நாம் வளர்ச்சியை எட்டுவது? | 2803 |
| 701 | R 5931 | 1 | [ Poem] தேவனின் யுத்தம் | 2809 |

| | | | | |
|---|---|---|---|---|
| 702 | R 5933 | 3 | தத்தம் செய்வதற்கு முன்பு இருந்த சிறதளவு துணிகரமான பாவங்கள் | 2810 |
| 703 | R 5934 | 3 | மாம்சத்துக்கென்று விதைத்தலின் முடிவு, மரணமே | 2813 |
| 704 | R 5935 & R 4458 | 9 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 2816 |
| 705 | R 5935 [R 3159] | 4 | எபேசுவில் நடந்த கலகம் | 2825 |
| 706 | R 5938 | 5 | மன்னிப்புப்பெற பாத்தை அறிக்கையிடுதல் அத்தியாவசியம் | 2829 |
| 707 | R 5939 | 2 | உண்மையானதும், தவறானதுமான ஊழிய நியமனங்கள் | 2834 |
| 708 | R 5939 | 5 | உண்மையான மற்றும் தவறான - ஏற்படுத்துதல்கள் | 2836 |
| 709 | R 5941 | 3 | பரிசுத்த பவுல் அடைந்த துக்கங்களும் சந்தோஷங்களும் | 2841 |
| 710 | R 5943 | 3 | தெய்வீக புஸ்தகச்சுரளைத் திறந்துபார்க்க பாத்திரவான் யார்? | 2844 |
| 711 | R 5943 | 4 | தெய்வீக சுரள் - அதை காண்பதற்குப் பாத்திரன் யார்? | 2847 |
| 712 | R 5946 | 5 | கர்த்தரின் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் | 2851 |
| 713 | R 5948 | 5 | உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 2856 |
| 714 | R 5950 | 4 | அறுவடை இன்னும் முடிவடையவில்லை | 2861 |
| 715 | R 5951 | 3 | மிகுதியான உபத்திரவங்கள் மேலான வெகுமதி | 2865 |
| 716 | R 5952 | 4 | தோல்வியடைந்த ஒரு சதித்திட்டம் | 2868 |
| 717 | R 5954 | 2 | [ தெ. பத்திகள் ]சுவாரசியமான கடிதங்கள் | 2872 |
| 718 | R 5955 | 12 | ஆவிக்குரிய பெருமையிலுள்ள அபாயம் | 2874 |
| 719 | R 5958 | 3 | முதலிடம் தேவனுக்கு - கடைசி இடம் சுயத்துக்கு | 2886 |

| | | | | |
|---|---|---|---|---|
| 720 | R 5959 | 3 | நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன? எப்போது? எப்படி? | 2889 |
| 721 | R 5962 | 8 | பாவத்தைப் போக்கும் ஞானஸ்நானம் யூதர்க்கு மட்டுமே | 2892 |
| 722 | R 5965 | 4 | புது சிருஷ்டிக்கு உரியதான சோதனைகள் | 2900 |
| 723 | R 5965 | 4 | புது சிருஷ்டிக்கான சோதனைகள் விசித்திரமானவை | 2903 |
| 724 | R 5966 [R 4083] | 5 | சுயகட்டுப்பாடே மனவலிமை | 2907 |
| 725 | R 5967 | 3 | கிறிஸ்துவின் நிருபம் | 2911 |
| 726 | R 5970 | 6 | நாம் உபதேசிப்பதும் போதிப்பதும் | 2914 |
| 727 | R 5972 | 5 | மீட்கும் பொருள் பாவநிவாரணபலி | 2920 |
| 728 | R 5973 | 3 | புத்திமதிக்கு சிரமத்தோடு கீழ்ப்படிதல் | 2925 |
| 729 | R 5974 | 3 | உங்கள் பாதங்களுக்கான செவ்வையான வழிகள் | 2928 |
| 730 | R 5977 | 5 | கிறிஸ்துவுக்குள் நாம் எப்படி வளர்ச்சியடைவது? | 2931 |
| 731 | R 5979 | 5 | இராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரகடனப்படுத்துதல் | 2936 |
| 732 | R 5981 | 12 | சோதனை காலம் | 2941 |
| 733 | R 5981 | 7 | சோதனை நேரம் | 2953 |
| 734 | R 5984 | 12 | [ தெ. பத்திகள்]உலகளாவிய மேய்ப்பரது வேலை | 2960 |
| 735 | R 5989 | 4 | பூமி அதிர்ந்தது - விழுந்தது | 2972 |
| 736 | R 5990 | 4 | நம் போதகரது ஆற்றலுள்ளதும், கருத்தைக் கவர்கின்றதுமான பாடங்களில் ஒன்று | 2976 |
| 737 | R 5992 | 5 | மரணபரியந்தம் உண்மையாயிருத்தல் | 2980 |
| 738 | | 1 | 12. யூதரின் பலி பீடத்தின்மீதே பலியிடப்பட்ட எல்லா உயிர்களின் இரத்தமும் | 2985 |
| 739 | | 1 | 13. அங்கே இருந்தீரோ? | 2986 |

| | | | | |
|---|---|---|---|---|
| 740 | | 1 | 123. கிறிஸ்துவின் சிலுவையிலே நான் மகிமையடைவேனே. | 2987 |
| 741 | | 1 | இனிமையான தருணங்கள் | 2988 |
| 742 | | 2 | 138. பெத்தானியாவின் மரியாள் | 2990 |
| 743 | | 2 | அவரின் மென்மையான கைகள் | 2992 |
| 744 | | 1 | மொட்டவிழ்ந்த தேவனின் திட்டம் | 2994 |
| 745 | | 2 | கடைசி இராப்போஜனம் | 2995 |
| 746 | | 8 | CR 122 பயண ஊழியர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கான விஷே - கூட்டம் | 2997 |
| 747 | | 1 | தேவனுக்கான பகல்நேரக் காணிக்கை | 3005 |
| 748 | | 33 | [ Q232 : 3 ] தேர்ந்தெடுத்தல் மூப்பர்கள் - சபையில் அதிகாரம் | 3006 |
| 749 | | 1 | இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன் | 3039 |
| 750 | | 1 | என்ன அற்புதம் | 3040 |
| 751 | | 2 | சிறந்த பங்கைத் தெரிந்துக்கொள்ளுதல் | 3041 |
| 752 | | 17 | யோசேப்பும், அவரது சகோதரர்களும் | 3043 |
| 753 | | 15 | யோசேப்பின் வெள்ளிப் பாத்திரம் | 3060 |
| 754 | | 1 | கிறிஸ்துவோடு | 3075 |
| 755 | | 20 | கூட்டங்கள் | 3076 |
| 756 | | 9 | சிறுநரிகளும், செம்மறி ஆடுகளும். | 3096 |
| 757 | | 6 | அந்தகாரமும், விடியல் வேளையும் | 3105 |
| 758 | | 1 | 239. நம் சோதனை எத்தனை இலகுவாக இருக்கும் | 3111 |
| 759 | | 1 | அங்கே இருந்தீரோ? | 3112 |
| 760 | | 1 | உனக்கு முன்பாக | 3113 |

| | | | | |
|---|---|---|---|---|
| 761 | | 1 | நம் இரட்சகர் அன்பின் நினைவலைகளினாலே | 3114 |
| 762 | | 1 | கவர்ந்திழுக்கபட்டு சோதனைக்குட்பட்டவரே | 3115 |
| 763 | | 1 | கெத்சமனே | 3116 |
| 764 | | 1 | கெத்சமனே | 3117 |
| 765 | | 1 | என் உடன்படிக்கைக்கான அடையாளம் | 3118 |
| 766 | | 1 | பெலன் தாரும் யேசுவே | 3119 |
| 767 | | 1 | இனிமையான தருணங்கள் | 3120 |
| 768 | | 1 | ஒலிவ மரச்சட்டத்திலான சிலுவை | 3122 |
| 769 | | 4 | மேய்ப்பரது வேலை | 3124 |
| 770 | | 1 | நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் | 3128 |
| 771 | | 9 | முதற்பேறானவர்களின் கடந்து போகுதல் | 3129 |
| 772 | | 1 | நாடிடுவதற்குப் பாத்திரமானவைகள் | 3138 |
| 773 | | 1 | நம்பிக்கையின் ஆசீர்வாதம் | 3139 |
| 774 | | 6 | நிழலிலும், நிஜத்திலும் பஸ்கா | 3140 |
| 775 | | 1 | [ Poem 504] நறுமணத்தின் பெருவெள்ளம் | 3146 |
| 776 | | 1 | [பாடல்] அது ஒரு பூமியின் மட்கலயம் | 3147 |
| 777 | | 1 | [பாடல்] மனம் தளர்ந்த பயணியரே | 3148 |
| 778 | | 2 | [ Poem – p 215]மறைக்கப்பட்டச் சிலுவை | 3149 |
| 779 | | 1 | [ Poem - 11] கெத்செமனேயும், கல்வாரியும் | 3151 |
| 780 | | 1 | [ Poem – p- 15] பதிலாக | 3152 |
| 781 | | 1 | [ Poem – p- 33] மாசற்ற தேவ ஆட்டுக்குட்டி | 3153 |
| 782 | | 1 | [ Poem – p- 91] நமது உயிர்த்தெழுதல் | 3154 |
| 783 | | 1 | உபத்திரவங்களினாலே பூரணப்படுதல் | 3155 |

| | | | | |
|---|---|---|---|---|
| 784 | | 1 | [ Poem – p- 73]நாம் அங்கே இருந்திருப்போமாகில் | 3156 |
| | | 2 | [ Poem – p- 98] பெத்தானியாவின் மரியாள் | 3157 |
| 785 | | 1 | [ Poem – p- 174] நானே திராட்சச்செடி, நீங்கள் அதின் கொடிகள் | 3159 |
| 786 | | 1 | [ Poem – p- 129] அவர்கள் மட்டும் அறிந்திருந்தால் | 3160 |
| 787 | | 1 | [ Poem – p- 164] நான் அவரை அங்குக் காண்கிறேன் | 3161 |
| 788 | | 1 | [ Poem – p- 128] போதகரே, சத்தியமாவது என்ன? | 3162 |
| 789 | | 1 | பரிசுத்தரும் குற்றமற்றவரும், பாவத்திற்கு விலகினவருமான நம் கர்த்தருகே | 3163 |
| 790 | | 9 | பொதுவான கேள்விகள் | 3164 |
| 791 | | 1 | புறங்கூறுதல் | 3173 |
| 792 | | 8 | சபை | 3174 |
| 793 | | 7 | பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள் | 3182 |
| 794 | | 5 | சகோதரிகள் | 3189 |
| 795 | | 1 | சீர்பொருந்தும் பூமி | 3194 |
| 796 | | 1 | ஸ்திரீயின் ஊழியம் | 3195 |
| 797 | | 1 | என்னிடத்தில் வா | 3196 |
| 798 | | 2 | இயேசு கூறுவதை நான் கேட்டேன் [விடியல் துதிப்பாடல்கள்# 108] | 3197 |
| 799 | | 1 | [பாடல்] ஓ! என்னைப் போகவிடாத அன்பே | 3199 |
| 800 | | 1 | [பாடல்]இயேசுவின் சிலுவையின் கீழே | 3200 |
| 801 | | 1 | [பாடல்]நன்றியுடன்கூடிய அர்ப்பணிப்பு | 3201 |
| 802 | | 1 | [பாடல்]என் மீட்பர் | 3202 |

| | | | | |
|---|---|---|---|---|
| 803 | | 1 | [பாடல் 135]சிலுவையின் அருகில் | 3203 |
| 804 | | 1 | [பாடல் 8]அங்கு நீ இருந்தாயா? | 3204 |
| 805 | | 1 | [பாடல் 48]இயேசு, என் கர்த்தர் | 3205 |
| 806 | | 1 | [பாடல் 2] என்னை நினைவுகூருவாயாக | 3206 |
| 807 | | 1 | [பாடல் 65 A]பெலன் தாரும் இயேசுவே | 3207 |
| 808 | | 2 | [பாடல் 122] கிறிஸ்து நமது பஸ்கா | 3208 |
| 809 | | 1 | [பாடல் 172]உமக்கே மிகுதியான அன்பு உரித்தாகுக | 3209 |
| 810 | | 1 | [பாடல் 335]அது சிலுவையாய் இருப்பினும் | 3210 |
| 811 | | 1 | [பாடல் 359]பழைய கரடுமுரடான சிலுவை | 3211 |
| 812 | | 1 | [பாடல் 173]சிலுவையில், இன்னும் இடமுள்ளது | 3212 |
| 813 | | 1 | [பாடல்1] **Abide, sweet, Spirit** | 3213 |
| 814 | | 1 | [பாடல் 2] என்னை நினைவுகூரும் | 3214 |
| 815 | | 1 | [பாடல் 3] என்னிடத்தில் வாருங்கள் | 3215 |
| 816 | | 1 | [பாடல் 4] கிறிஸ்துவே எனது இலக்கு | 3216 |
| 817 | | 1 | [பாடல் 5] ஐயகோ என் மீட்பர் இரத்தம் சிந்தினாரோ | 3217 |
| 818 | | 1 | [பாடல் 125]திருவிருந்து | 3219 |
| 819 | | 1 | [பாடல் 128] | 3220 |
| 820 | | 1 | மணலுக்கு ஏற்பட்டத் தழும்புகள் | 3221 |
| 821 | | 1 | முழங்காலில் தஞ்சம் | 3222 |
| 822 | | 3 | அது ஒரு துன்பத்தின் காலம் | 3223 |
| 823 | | 1 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 3226 |
| 824 | | 1 | பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | 3227 |

| | | | | |
|---|---|---|---|---|
| 825 | | 1 | வாழ்க்கை என்பது மாபெரும் மறைபொருள் | 3228 |
| 826 | | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் - ஏன் நாம் பங்கெடுக்கின்றோம் | 3229 |
| 827 | | 1 | பஸ்கா | 3231 |
| 828 | | 8 | ஏற்படுத்துதல் | 3232 |
| 829 | | 1 | சீயோனின் தேசிய கீதம் | 3240 |

R 9

# சிங்காசனத்தில்அமர்த்தியேவிட்டார்

## HE SEATS HER ON THRONE

சிங்காசனத்தில்அமர்த்தியேவிட்டார், அன்புடனே அழகு

பாவைதனை. தன்நேசரின் மார்பின்மீதே சாய்ந்தே

வந்திறங்கும்இந்த மணப்பெண் பாரீர்.

அவர்கடந்து வந்த பாதைகளோ வனாந்தரப்பயணம்தானே,

வழிநெடுகபெருமூச்சும்பயமும்ஆங்கே

கவ்விக்கொண்டேவந்திட்டாலும், அவருக்காகத்தானே அவள்காத்து

நின்றாள்.

காரிருள்தனில்கூட தடம் பதித்தே சென்றாள்.

மற்றெல்லாரும் துயில்கின்றவேளையிலும்தான்விழித்தே,

தன்னைஅவள்காத்துக்கொண்டாள்,மணாளனுக்காய்.

தான் கற்ற வார்த்தைமீதில் விசுவாசம் கொண்டே,

அவர் சொன்ன வார்த்தைதனில் காலூன்றிநின்றாள்.

அவர் வாக்குதனை மற்றவர்க்கும் ஆர்வத்தோடே சொன்னாள்,

சிலர்க்கு அதுஉயர்வான மகிழ்வினையே தந்ததுவே,

பலர்க்கு  வெறும் சத்தமாகக் காதினிலே ஒலித்ததுவே.

மகிமையின் ராஜனவர் தன் மனைவியாக்கிக் கொண்டாரே,

ஆணியினால் அறையப்பட்ட கரங்களினால் சேர்த்தணைத்தே,

சிங்காசனத்தில் அமர்த்திவிட்டார் அன்புடனே அழகு பாவைதனை.

------------------

--1--

# கிறிஸ்துவின் இரத்தம்

யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டம் குறித்து நாம் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கப்பட்டு வருகையில், இயேசு கிறிஸ்து எனும் ஈவில் வெளிப்படுகின்றதான தேவனுடைய அருமையான அன்பைக் குறித்தும் நாம் அதிகமாய்ப் புரிந்துகொள்வோம். தேவன் எதையும் காரணமில்லாமல் செய்வதில்லை மற்றும் காரணத்தை நாம் புரிந்துகொள்ளும்போதுதான் அவர் செய்கிறவைகளின் மதிப்பினை நம்மால் சரியாய்ப் புரிந்துகொள்ள முடிகின்றது. ஆகையால் கிறிஸ்து ஏன் தமது இரத்தத்தினைச் சிந்தினார் என்பதையும், இதனால் உண்டாகும் விளைவின் தன்மை என்ன என்பதையும் நாம் புரிந்துகொள்ளுகையில், அவரது இரத்தத்தின் உண்மையான மதிப்புக் குறித்த உணர்ந்துகொள்ளுதலுக்கு நெருங்கி வருவோம்.

கீழ்ப்படியாமையின் காரணமாக, மனிதன் பாவியானது மாத்திரமல்லாமல், தனது ஜீவனையும் இழந்துபோனவனானான். "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று." (உரோமர் 5:12) ஒருவேளை மனிதன் இந்நிலையிலேயே இருந்துவிடுவானானால், மனிதன் இறுதியில் தமது சாயலை அடையவேண்டுமென்று மனிதனைச் சிருஷ்டித்ததிலுள்ள தேவனுடைய நோக்கம் தோல்வியில் முடிவதாய் இருந்துவிடும்.

ஜீவனைக்கொடுப்பதற்கு வேறெந்தப் பிரமாணமும் இல்லாததினால், கிறிஸ்துவின் மரணம் மாத்திரமே, மனிதன் மேலான ஜீவனை நாடிடுவதற்குரிய நிலையில் மனிதனைக்கொண்டு நிறுத்திட முடியுமே ஒழிய, வேறு எதினாலும் செய்ய முடியாது.

அவர் தம்மைக் குறித்து, "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" என்று கூறியுள்ளார். இயலாமையில் நாம், காணப்பட்டிருக்க, கிறிஸ்து ஏற்றவேளையில் அக்கிரமக்காரர்களுக்காக மரித்தார். இப்பொழுது நீதிமான் ஒருவனுக்காக மரிப்பது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத்துணிவான். ஆனால் நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால், தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார். இப்படி நாம் அவரது இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. (உரோமர் 5:6-9) ஆகவேதான் பவுல் பின்வருமாறு கூறமுடிந்தது: "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்." (அப்போஸ்தலர் 20:28) இவர்கள் பாவத்திற்குக்கீழ் விற்கப்பட்டிருந்தார்கள், ஆனால் விலைக்கொடுத்து வாங்கப்பட்டுள்ளனர். "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." (1 கொரிந்தியர் 6:19, 20)

கிரயத்துக்குக்கொள்ளப்பட்டீர்கள், மீட்கப்பட்டீர்கள் மற்றும் விடுவிக்கப்பட்டீர்கள் என்ற வார்த்தைகளானது, ஒரே அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது மற்றும் இவ்வார்த்தைகள் பயன்படுத்தப்படும்போது, நாம் நமக்குச் சொந்தமானவர்கள் இல்லை என்றும், நமக்குக் கட்டளையிட உரிமைக்கொண்டிருப்பவர் மற்றும் நம்மிடம் முழுமையான கீழ்ப்படிதலை எதிர்ப்பார்க்கின்றவருமானவருக்கு நாம் சொந்தம் என்பதையும் நமக்கு அடிக்கடி நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது;"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள். உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே." (1 பேதுரு 1:15-19)

"ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு,

எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம்." (வெளிப்படுத்தல் 5:9, 10)

நாம் ஒருவருக்கொருவர் பணிவிடை புரிந்திட கற்பிக்கப்பட்டிருக்கின்றோம். "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்." (மத்தேயு 20:27, 28)

"எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது." (1 தீமோத்தேயு 2:6)

"அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்." (ஓசியா 13:14)

இவை மாத்திரமல்ல. நாம் இந்த விலையேறப்பெற்ற அழைப்பினைப் பெற்றிருக்கின்றோம்: "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்." (ஏசாயா 1:18) "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1 யோவான் 1:9)

"நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியில் இருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." (1 யோவான் 1:6, 7)

வெளிச்சத்தில் சிவப்புநிறக் கண்ணாடி வழியாகப் பார்க்கப்படும் எந்தக் கருஞ்சிவப்பு நிறமுள்ள பொருளும், வெள்ளைநிறப் பொருளாகத் தெரியும் என்பது விந்தையான உண்மையாகும்; இதுபோலவே நம்முடைய பாவங்கள் கருஞ்சிவப்பாய்க் காணப்பட்டாலும், தேவன் அதைக் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் வழியாய்ப் பார்த்திடும் நிலையில் நாம் வருவோமானால், அவை வெண்மையாய்க் கருதப்படும். நமக்கென்று சொந்த நீதி எதுவுமில்லை என்றாலும், நம்முடைய விசுவாசம், நமக்கு நீதியாய் எண்ணப்படுகின்றது. "ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களெனப்பட்ட நீங்கள், அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரயேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்." (எபேசியர் 2:11-13)

"கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" (எபிரெயர் 9:11-14)

"இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக் குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக்

காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார். இப்படியிருக்க, மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத்தினாலே? கிரியாப்பிரமாணத்தினாலேயா? அல்ல; விசுவாசப்பிரமாணத்தினாலேயே.” (உரோமர் 3:20-27)

*****

R 56

# ஓர் அழகுமிகு வஸ்திரம்
## A BEAUTIFUL ROBE

உள்ளபடி ஓர் ஆடையினை அணியவேண்டி ஏங்கி நின்றேன்

என் உடன்பிறந்தோர் பங்காளிகள் எல்லாருக்கும் உரியதொன்றே

பூரணமாய் வெண்மையுமாய் அப்பழுக்கின்றி காண்பதொன்றே

அதன் ஒவ்வோர் மடிப்பிலுமே ஒளிபட்டால் எதிரொளித்திடுமே

எல்லா உருவத்திற்கும் எல்லா அளவிற்கும் எல்லா நிறத்திற்கும் அது ஏற்றதுவே,

ஆச்சர்யமான ஒழுக்கமிகு நல்ஆடை அதுவே,

எல்லா குறைகளையும் மீறுதலையும் தன்னுள்வைத்தே மறைத்துக்கொள்ளும்

அணிந்தோரை மணமகளாய் மாற்றியே வைத்துக்கொள்ளும்

தங்கத்தினால் வாங்கவியலா வஸ்திரமாய் இவ்வாடை,

எங்கேயும் தேடிச்சென்றே அலைந்தாலும்கண்படாது,

பூமிமேலே பெயர்பெற்ற ஞானிகளோ, புகழுடையோர், பெருஞ்செல்வர்,

இவ்வஸ்திரத்தின் சிறுபங்கெதையும் அடைந்திடவே முடியாதன்றோ,

குப்பையிலும் குப்பையாகப் புறக்கணிக்கப் பட்டவரே கண்டடைந்தார்,

மீட்பரவர் குருசின் முன்பே தம்மையவர் தாழ்த்தி நின்றார்,

தம்அழுகையினை அவர் ஒருவர் கேட்டிடுவார் என்றுணர்ந்தார்,

அவர் வாக்குத்தத்தம் மீதினிலே நம்பிக்கை கொண்டார்,

நிலைநின்றே காத்துக்கொண்டார்,

தமக்கெனவே ஓர் மேன்மையினை அளிக்கச் சொல்லிக் கேட்கமாட்டார்,

இயேசு என்ற பெயரில்மட்டும் நம்பிக்கை வைத்துவிட்டார்,

அத்தகையோர் இவ்வாடையாலே மூடப்பட்டார், தேற்றப்பட்டார், ஆசீர்வதிக்கப்பட்டார்,

அதுதான் என்ன ஆடை **?** நம் கிறிஸ்து அளித்த நீதி என்னும் எழில்மிகு பொன்னாடை **!**

------------------

# யோசேப்பு மற்றும் கிறிஸ்து

## JOSEPH AND CHRIST

- சகோதரர் ஜெ. எச். பி.

ஆதியாகமம் புஸ்தகத்தில் பதிவு பண்ணப்பட்டுள்ளதான யாக்கோபினுடைய குமாரனாகிய யோசேப்பின் வரலாறானது, கவனத்தை ஈர்க்கும் ஒன்றாகும். ஓர் உண்மை கதை என்று இதை எடுத்துக்கொண்டு, சிலர் மாத்திரமே இதை விரும்புகின்றவர்களாய் இருக்கின்றனர். கட்டுக்கதைகளைப் பார்க்கிலும், சத்தியமே விநோதமாய்ப் பார்க்கப்படுகின்றது. வாலிபர்களும், முதியவர்களுமாகிய அநேகர் இந்தச் சரித்திரத்தைச் சுவாரசியத்துடன் வாசித்துள்ளனர் என்பதும், அழியாப்பலனைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதும் உறுதியே. யோசேப்பினுடைய முன்மாதிரியான நடத்தையானது, வியந்து பாராட்டப்படுவதற்கும், பின்பற்றுவதற்கும் பாத்திரமானதாய்க் காணப்படுகின்றது.

தேவனுடைய காரணங்கள் தொடர்புடைய விஷயத்திலும், வளர்ச்சியினுடைய ஆரம்பக்கட்டங்களில் காணப்பட்டதான அவரது ஜனங்கள் தொடர்புடைய விஷயத்திலுமான யோசேப்பினுடைய தொடர்பானது முக்கியமானதாகும். மனிதன் மற்றும் ஜனங்களுடைய காரியங்களை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடுகின்றதான தேவனுடைய வழிநடத்துதலுக்கு உதாரணமாய்க் காணப்படும் விஷயத்திலும், எப்படி மனிதன் தனது சுயநலத்திற்காக நாடுகின்றான் மற்றும் அதில் ஓரளவுக்கு அவன் ஜெயம் அடைவதும், எனினும் அவனது திட்டங்கள் முறியடிக்கப்படுவதும், தீமையாய்க் காட்சியளித்த காரியம் நன்மையான காரியமாக மாற்றப்படுவதும் குறித்து எடுத்துக் காட்டப்படுகிற விஷயத்திலும், யோசேப்பினுடைய வரலாறு மிகவும் குறிப்பிடத்தக்கதாய்க் காணப்படுகின்றது. அநேக காரணங்களுக்காக, யோசேப்பினுடைய சரித்திரமானது அநேகரால் நியாயமாய் விலையேறப்பெற்றதாய்ப் பார்க்கப்படுகின்றது; ஆனால் நமக்கோ யோசேப்பினுடைய விஷயத்தில் மிகவும் முக்கியமான அம்சமாகக் காணப்படுவது, அதன் உருவகமான தன்மையே (ஞான அர்த்தங்களே) ஆகும். வேதாகமத்திலுள்ள வரலாற்றினுடைய இந்த அம்சமானது, அநேகரால் பார்க்க தவறப்பட்டதும், சிலரால் மறுக்கப்பட்டதும், அதிகமதிகமாய்த் தெரியவருகின்றது. இச்சம்பவம் உண்மையானதாக இருப்பினும், இதன் ஆவிக்குரிய முக்கியத்துவமானது பார்க்கப்படும்போது, இதனோடு ஒப்பிடுகையில், சொல்லர்த்தமான சம்பவம் முக்கியத்துவம் அற்றதாகத் தோன்றும் என்றே நாங்கள் நம்புகின்றோம். பெரியது, சிறியதை மங்கச் செய்துவிடுகின்றது, மற்றும் மாம்சமானதைக் காட்டிலும் ஆவிக்குரியது பெரியதாகக் காணப்படுகின்றது. மேலும் இது உண்மையாக இருக்கையில், ஆவிக்குரியவைகளுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள், எழுத்துகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை, காரணம் அதன் ஆழமான முக்கியத்துவமாகும், அதுவும் எழுத்துக்களை மாத்திரமே பார்க்கக்கூடியவர்களைக் காட்டிலும் அதிகம் முக்கியத்துவம் கொடுப்பார்கள்; அதாவது (உதாரணத்திற்கு) ஏற்றக்காலத்தில் மாம்ச சரீரத்திலிருந்து, ஆவிக்குரிய சரீரத்திற்கு மாறுவதற்கு எதிர்நோக்கியிருக்கும் மனுஷர்கள், மாம்சீக சரீரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள், ஏனெனில் இந்த மாம்ச சரீரமே, உயர்வானதற்குரிய படிக்கல்லாக இருக்கின்றது; அதுவும் ஆவிக்குரியவற்றைப் புறக்கணித்துக்கொண்டு, "நாளை நாம் மரித்துப்போய்விடுவோம் என்பதினால், புசித்து, குடிப்போம் வாருங்கள்" எனும் இன்பவாத கொள்கையின் அடிப்படையில் செயல்படுபவர்களைக் காட்டிலும் அதிகம் முக்கியத்துவம் கொடுப்பது போலாகும். யோசேப்பின் வரலாற்றினுடைய பொதுவான அம்சங்களானது நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் பணியைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது என்று நாம் கருதுகின்றோம். நிழலைப் பொறுத்த விஷயத்தில், அதன் ஒவ்வொரு "சிறு எழுத்தும், எழுத்தின் உறுப்பும்" நிறைவேறும் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம், ஆனால் உருவகம் விஷயத்தில், நாம் பொதுவான கொள்கைகளின் அடிப்படையில் மாத்திரமான காட்சியைக் காணலாம். இதற்கு, உருவகம் என்று குறிப்பிடப்படும் ஆபிரகாமின் இரண்டு மனைவிகளும், அவர்களுடைய குமாரர்களாகிய ஈசாக்கு மற்றும் இஸ்மயேல் விஷயம் உதாரணமாய்க் காணப்படுகின்றது (கலாத்தியர் 4). இவர்களுடைய ஜீவியத்தின் அம்சங்கள் அனைத்தும் குறிப்பிடப்படவில்லை, ஆனால் இவர்களது சரித்திரத்தின் உண்மைகளுக்கும் மற்றும் இரண்டு எருசலேம்கள் தொடர்புடைய உண்மைகளுக்கும் இடையே மிகவும் குறிப்பிடத்தக்கதான தொடர்புகள்/ஒற்றுமைகள் காணப்படுகின்றன; மற்றும் இவைகள் மீதே பவுல் கவனம் செலுத்துகின்றார். நாம் இணைகளை உருவாக்கிடுவதற்கோ அல்லது

யோசேப்பினுடைய ஜீவியத்தின் ஏதேனும் அம்சங்களை இணையாகப் பயன்படுத்திக்கொண்டு இதற்கு இணையான விஷயம் காணப்பட வேண்டும், அதற்கு இணையான விஷயம் காணப்பட வேண்டும் என்று கூற முயற்சிப்பதற்கோ நாம் நோக்கம் கொண்டிருக்கவில்லை; ஆனால் கிறிஸ்துவைக் குறித்து வெளிப்படுத்தப்பட்டிருப்பவைகளை அடிப்படையாகப் பயன்படுத்தி, நாம் இணைகளைக் கண்டுபிடிக்கின்றோம் மற்றும் இவைகளை விளக்கங்களாகக்கொண்டு, சத்தியத்தை உறுதிப்படுத்துகின்றோம். ஆனால் இந்த ஒற்றுமைகளானது, சுவிசேஷத்தின் திட்டத்தைப் போட்ட அதே தேவனுடைய மனதானது/தேவன், தமது ஏவுதலினால் எழுத்தாளர்களைக் கொண்டு யாருடைய வரலாறுகளை பதிவு பண்ணினாரோ, அவர்களின் ஜீவியங்களைக் கண்காணித்துள்ளார் என்பதற்குப் பலமான சாட்சியமாகக் காணப்படுகின்றது என்றே நாம் கருதுகின்றோம். இந்த ஒற்றுமைகளினுடைய பல அம்சங்களானது, பல காலங்களாகப் பார்க்கப்படவில்லை என்ற உண்மையின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், அந்தச் சாட்சியம் பலமாய்க் காட்சியளிக்கின்றது. துணிந்து, அறைகூவல் விடுகின்றதான அவநம்பிக்கை என்பது நிலவும் இந்தக் காலக்கட்டத்தில், சீஷர்களுடைய விசுவாசமானது உற்சாக மூட்டப்படத்தக்கதாக வெளிக்கொண்டு வரும்படிக்கு, புதைத்துவைக்கப்பட்ட பொக்கிஷங்களாக இந்த ஒற்றுமைகளினுடைய அம்சங்களானது காணப்படுகின்றன. "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (மத்தேயு 11:15). இவைகள் கிறிஸ்தவனுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படும்போது, நமது இரட்சகருடைய வாழ்க்கை மற்றும் பணியின் அநேக அம்சங்களை, யோசேப்பின் ஜீவியத்தில் பார்ப்பதற்குக் கிறிஸ்தவன் சிரமப்படுவதில்லை.

யோசேப்பு யாக்கோபினுடைய மிகுந்த பிரியத்திற்குரிய குமாரனாகக் காணப்பட்டார்; "இஸ்ரயேல் தன் குமாரர் எல்லாரிலும் யோசேப்பை அதிகமாய் நேசித்தார்" (ஆதியாகமம் 37:3). இதனிமித்தமாகவும், யோசேப்பு பாவத்தைக் கண்டனம் பண்ணினதாலும், (தனக்கு) வரவிருக்கிற மகிமையைப் பற்றிச் சொப்பனங்கள் கண்டதினாலும், யோசேப்பை அவரது சகோதரர்கள் பகைத்தார்கள். இதுபோலவே தமது தகப்பனுடைய நேசகுமாரனாகக் காணப்பட்ட இயேசுவும், யூதர்களுடைய பொல்லாப்பைக் கண்டனம் பண்ணினதினாலும், தாம் அவர்களுடைய இராஜாவாய்ப் பிறந்து வந்துள்ளார் என்று அவர் உரிமை பாராட்டிக்கொண்டதினாலும், அவர் தம்முடைய சகோதரர்களாகிய யூதர்களால் பகைக்கப்பட்டார். இரண்டு பேர் விஷயத்திலும் வார்த்தைகள் கிட்டத்தட்ட ஒன்றுபோலவே காணப்பட்டது. யோசேப்பினுடைய சகோதரர்களுடைய அரிக்கட்டுகளானது, யோசேப்பின் கட்டுக்கு முன்பாக வணங்கினது பற்றின தனது சொப்பனத்தை, தனது சகோதரர்களிடம் கூறினபோது, அவர்கள் "நீ எங்கள்மேல் துரைத்தனம் பண்ணுவாயோ?" என்றார்கள். "இவன் எங்கள்மேல் இராஜாவாயிருக்கிறது எங்களுக்கு மனதில்லை;" "இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லை" என்று இயேசுவின் சகோதரர்கள் கூறினார்கள் (ஆதியாகமம் 37:8; லூக்கா 19:14; யோவான் 19:15). இரண்டு பேரின் விஷயத்திலும் (சகோதரர்களின்) தீய எண்ணங்கள் மிகவும் கடுமையானதாகிப்போனதால், மரணத்தீர்ப்புத் தீர்மானிக்கப்பட்டது. இரண்டு பேரும் குழிக்குள் இறங்கினார்கள் மற்றும் இருவரும் மரணத்திலிருந்து மீட்கப்பட்டார்கள். யோசேப்பு உண்மையில் மரிக்கவில்லை என்பது உண்மைதான்; இன்னொரு தருணத்தில் இயேசுவுக்கு அடையாளமாய்க் காணப்பட்ட ஈசாக்கும் உண்மையில் மரிக்கவில்லை மற்றும் "ஆபிரகாம் ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்" என்றும், "மரித்தோரிலிருந்து அவனைப் பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்" என்றும் கூறப்பட்டுள்ளது (எபிரெயர் 11:17, 18). குழி என்பது கிறிஸ்து இறங்கிச் சென்றதான மரணநிலைக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றது. யோசேப்பு மரித்துப்போனவராகக் கருதப்பட்டார் மற்றும் அவரது உயிர்த்தெழுதலும் அடையாள நிலையிலேயே காணப்பட்டது; ஆனால் கிறிஸ்துவின் மரணமும், உயிர்த்தெழுதலும் நிஜமாகவே நிகழ்ந்ததாய் இருந்தது.

இருவருடைய விஷயத்திலும், சம்பவங்கள் ஒரே மாதிரி வரிசையில் நடைபெறவில்லை; ஆனால் இருவரும் கடுமையாய்ச் சோதிக்கப்பட்டனர் மற்றும் (சோதனையை) எதிர்க்கவும் செய்தனர்; இரண்டு பேருமே ஒரு குறிப்பிட்டக் காலம் வரைக்கும், வேலைக்காரனுடைய ஸ்தானத்தில் காணப்பட்டனர் மற்றும் இழிவாய், அவமானமாய் நடத்தப்பட்டனர்; இருவருமே தங்களுடைய பாடுகளின்போது, தேவ தயவு பெற்றார்கள் மற்றும் இருவருடைய வாழ்வின் நோக்கங்கள் அற்புதகரமான நிலையில் நிலைநாட்டப்பட்டுள்ளது. இருவருக்குமே அவர்களது சத்துருக்கள் சில "வெள்ளிக்காசுகளை" விலையாக நிர்ணயித்தனர் மற்றும் இருவருமே மகிமையான

வெற்றியை அடைந்து, வல்லமையின் வலது பாரிசத்தினிடத்திற்கு உயர்த்தப்பட்டார்கள். பார்வோன் தனது இராஜ்யத்தின் வல்லமை அனைத்தையும், யோசேப்பின் கரங்களில் ஒப்படைத்தார்; "நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான். பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொல்லி, பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து, தன்னுடைய இரண்டாம் இரத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்துதேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான்" (ஆதியாகமம் 41:40-43).

அதுமுதல் பார்வோன் எதைச் செய்தாலும், அதை யோசேப்பின் வாயிலாகவே செய்தார் மற்றும் எகிப்தினுடைய ஆசீர்வாதத்தை அடைவதற்கான ஒரே வழி, மத்தியஸ்தராகிய யோசேப்பின் மூலம் ஆகும். கிறிஸ்துவும் தேவனுடைய வலது பாரிசத்தினிடத்திற்கு உயர்த்தப்பட்டார் மற்றும் அவர், "பிதாவோடுகூட அவருடைய சிங்காசனத்தில் அமர்ந்தார்" மற்றும் பரலோகத்திலும், பூமியிலும் அவருக்குச் சகல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தது; "இயேசுவின் நாமத்துக்கு வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்குச் செய்யப்பட்டது;" "தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள்" என்றும், "அவர் அனைவருக்கும் கர்த்தர்" என்றும், "அவர் வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கின்றார்" என்றும், "அவராலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றும் அவரைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது.

யோசேப்பினுடைய வேலையின் மிகவும் பிரம்மாண்டமான ஓர் அம்சம், தேவையான ஆகாரத்தை அளித்ததாகும் மற்றும் ஆகாரத்திற்காக வேறு எங்கும் செல்ல முடியாது; ஆகவே இது கிறிஸ்துவின் வேலையானது, ஜீவன்அளிப்பதாகும் என்பதைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றது. "ஜீவ அப்பம் நானே", "நானே சத்தியம்;" "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது." "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்று பேதுருவோடுகூட நாமும் சொல்லுகின்றோம். எகிப்தியர்கள் எப்படித் தங்கள் மாம்ச ஜீவனுக்கான ஆதரவுக்காக, யோசேப்பைச் சார்ந்திருந்தார்களோ, அப்படியே அழியாமைக்காகவும், நித்தியமான ஜீவனுக்காகவும் நாம் கர்த்தர் இயேசுவை முழுக்க சார்ந்திருக்கின்றோம் என்பதை நமது வாசகர்கள் அனைவரும் உணர்ந்துகொள்வார்களாக. கிறிஸ்துவில் மாத்திரமே நித்திய ஜீவன் என்பதே சுவிசேஷத்தினுடைய சாரமாக இருக்கின்றது. முதல் மனிதன் அதைப் பெற்றிருக்கவில்லை மற்றும் பெற்றிராததால் அதை இழக்கவுமில்லை. அவன் மாம்சமானவன்; மாம்சம் சோதனைக்குள்ளாக்கப்பட்டு, தோல்வியடைந்தது மற்றும் இதனால் இரண்டாம் மனிதனுடைய தேவை உணர்ந்துகொள்ளப்பட்டது. ஆகாரம்/அப்பம் வேண்டுமானால், யோசேப்பிடம் பசியுடையவர்கள் விண்ணப்பம் பண்ணினது/வேண்டிக்கொண்டது போன்று, நாமும் அதற்காக வேண்டிக்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்வோமாக. "அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிப்பார்" (எபிரெயர் 11:6). ஓ! பசியுள்ளவர்களே, அவரது விலையேறப்பெற்ற சத்தியத்தைப் புசித்துத் திருப்தியடையுங்கள். யோசேப்பு தனது இளம் பிரயாயத்தில் கண்ட சொப்பனங்களை நாம் கவனிக்கத்தவறிட வேண்டாம். யோசேப்பை வெறுத்தவர்களும், அவரை ஒதுக்கித்தள்ளினவர்களுமாகிய அவரது சகோதரர்கள் இறுதியில் யோசேப்பிடம் ஆகாரத்திற்காக வந்தார்கள் மற்றும் மகிழ்ச்சியுடன் அவருக்கு முன்பு பணிந்து கொண்டார்கள். அவர்களால் புறக்கணிக்கப்பட்டவரும், மரித்துப்போனவராக எண்ணப்பட்டவருமான யோசேப்பு, அவர்களது இரட்சகராகவும், உபகாரியாகவுமானார். அவர்கள் (அடையாளமாக) தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்த்து, துக்கமடைந்தனர் மற்றும் வெட்கமடைந்தனர், ஆனால் யோசேப்போ அவர்களைப்போஷித்து, அவர்களை மன்னிக்கவும் செய்தார்; "என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை

உங்களுக்கு முன்னே அனுப்பினார். தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும், அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க, உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும், தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்" (ஆதியாகமம் 45:5-8). தேவனுடைய இரக்கம் போற்றப்படுவதாக!

யூதர்களின் வீட்டைக் கிறிஸ்து பாழாகி போகவிட்டபோது, அது நித்தியக் காலத்திற்குமல்ல மாறாக, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று அவர்கள் சொல்லுமளவேயாகும்" (மத்தேயு 23:39). திரும்பக்கொடுத்தலின் வரவிருக்கும் நாட்களில் கர்த்தர் கூறுவதாவது, "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" (சகரியா 12:10). ஆம், யோசேப்பின் சகோதரர்கள் தங்கள் சகோதரனைக் கண்டுபிடித்தபோது துக்கித்து, அவமானம் அடைந்ததுபோன்று, கிறிஸ்துவை இழிவுப்படுத்தின அவரது சகோதரர்கள், அவருக்கு முன்பாக விண்ணப்பிக்க நிற்கும்போது, துக்கிப்பார்கள் மற்றும் தங்களைக் குறித்து வெட்கமடைவார்கள். ஆனால் அது நம்பிக்கையின்மையினால் இல்லாமல், மாறாக செய்த தவறுக்காக வருந்துவதின் நிமித்தமான துக்கித்தலாகும் மற்றும் இது நீண்ட காலமாய்த் தொலைந்து போனவரும், இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டவருமான சகோதரனால் தங்களுக்குக் காண்பிக்கப்படும் தயவின் ஆவியினாலேயே ஏற்பட்டதாகும். அவரை இராஜாவாகவும், ஜீவன் அளிப்பவராகவும் காண்பார்கள் மற்றும் அவர் அவர்களைப் பராமரிப்பார். அவர்கள் தங்களையே அவரிடத்தில் ஒப்புவித்துவிடுவார்கள் மற்றும் அவர் அவர்களுக்கு வீட்டையும், அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் கொடுப்பார். இப்படியாக யோசேப்பு அநேக விதங்களில் கிறிஸ்துவை அடையாளப்படுத்துகின்றார் என்பதையும், இவ்வாறாக யுகங்களைப் பற்றின தேவனுடைய திட்டம் குறித்த நம்முடைய கண்ணோட்டம் உறுதிப்படுத்தப்படுகின்றது என்பதையும் நாம் காண்கின்றோம்.

உண்மையில், தேவன் நல்லவராய் இருக்கின்றார் மற்றும் "அவர் கிருபை என்றுமுள்ளது." "அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்" என்று நாமும் சொல்லுகின்றோம். நம்மால் கண்டுபிடிக்க முடியாதவைகளை, அவரால் வெளிப்படுத்த முடியும் மற்றும் "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்." மற்றும் அவரது திட்டம் மற்றும் அன்பு பற்றி அவர் நமக்குக் கொடுத்துள்ள கண நேரக்கண்ணோட்டத்திற்கும் அவருக்கு ஸ்தோத்திரம். "அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே" நாம் ஒருவரையொருவர் அன்புகூருகின்றோம் (1 யோவான் 4:8). "அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால், நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" (1 யோவான் 4:19).

-----------------------------

**உலகத்தார்க்குப் பரிச்சயமற்ற மறு உலகத்தார்க்கு மிக பரிச்சயமானவர்.**

அன்னியரும் பரதேசியுமங்கே,

பூமிக்கும் இவர்க்கும் சம்பந்தமில்லை,

பாத்திரம் இன்னமும் உடையவுமில்லை,

இவர்க்கென இரங்கற்பாடலுமில்லை, கல்லறையருகேசொற்பொழிவில்லை,

கர்த்தர்கரத்தில் ஒப்புவிக்கவே இங்கே இவரேகாத்துநிற்கின்றார்

,அவருக்காகவே, அவரைப்போலாகவே, அன்னியரும் பரதேசியுமிங்கே.

இவர் இதயமோஒருபுதையல்மேலுள்ளதே,

பூமிக்கானசந்தோஷம்மறுத்ததே,விளக்குகள் தூண்டியேபிரகாசமாய்எரித்தே,

கண்களோ எப்போதும் மேல்நோக்கிப்பார்த்தே, அன்னியரும் பரதேசியுமிங்கே.

பூமியின்சொத்தும் மதிப்புமிங்கில்லை,

உலகக்கட்டுக்கள்,மதிப்புகள் விலக்க,

கிறிஸ்துவுடன் மேலே மகிமையில்கலக்க,

அன்னியரும் பரதேசியுமிங்கே.

எல்லாமும் அங்கே அவருக்குள் பெறவே,

அவருக்குள்ளே இவர் இருதயம் இருக்கும்,

சோதனைகாலத்துள் விசுவாசம் தலை எடுக்கும்,

அவரது ராஜ்ஜிய பிரஜையாய் மாறி,

அவரைப்பின் தொடர்ந்தே, விசுவாசமாய் செல்லும்.

அவருக்குக்கீழ்ப்படிந்தே நடந்திடத் துடிக்கும், அவருக்கோ அது தெளிவாய்த்தெரிந்திடும்

,கிறிஸ்து நம்மை எடுத்திடும் வேளையில் எத்துனை இன்பம், எத்துனை மகிழ்ச்சி,

அண்மையில் தெரியும் தந்தையின் அரண்மனை,

வாயிலில் நின்றே தந்தையோ அன்பாய்வருகவருகவென்றழைப்பார்,

அன்னியரும் பரதேசியும் அங்கே,இனியுமில்லை எந்தன்சோதரா.

**--10--**

ரீ–9,சிங்காசனத்தில்அமர்த்தியேவிட்டார், அன்புடனே அழகு

பாவைதனை. தன்நேசரின் மார்பின்மீதே சாய்ந்தே

வந்திறங்கும்இந்த மணப்பெண் பாரீர்.

அவர்கடந்து வந்த பாதைகளோ வனாந்தரப்பயணம்தானே,

வழிநெடுகபெருமூச்சும்பயமும்ஆங்கே

கவ்விக்கொண்டேவந்திட்டாலும், அவருக்காகத்தானே அவள்காத்து

நின்றாள்.

காரிருள்தனில்கூட தடம் பதித்தே சென்றாள்.

மற்றெல்லாரும் துயில்கின்றவேளையிலும்தான்விழித்தே,

தன்னைஅவள்காத்துக்கொண்டாள்,மணாளனுக்காய்.

தான் கற்ற வார்த்தைமீதில் விசுவாசம் கொண்டே,

அவர் சொன்ன வார்த்தைதனில் காலூன்றிநின்றாள்.

அவர் வாக்குதனை மற்றவர்க்கும் ஆர்வத்தோடே சொன்னாள்,

சிலர்க்கு அதுஉயர்வான மகிழ்வினையே தந்ததுவே,

பலர்க்கு  வெறும் சத்தமாகக் காதினிலே ஒலித்ததுவே.

மகிமையின் ராஜனவர் தன் மனைவியாக்கிக் கொண்டாரே,

ஆணியினால் அறையப்பட்ட கரங்களினால் சேர்த்தணைத்தே,

சிங்காசனத்தில் அமர்த்திவிட்டார் அன்புடனே அழகு பாவைதனை.

------------------

R 74

## சிற்பாசாரி THE SCULPTOR

சிற்பி ஒருவர் ஆழ்ந்த சிந்தனையில்

ஓர் பளிங்கு கல்மீதில் அமர்ந்தே இருக்கக்கண்டேனே

அவர் ஆற்றல் அனைத்தையும் ஒருங்கே குவித்து
சிற்பம் வடிக்கத் துவக்குகிறார்,

இரவுபகலாய் வேலைசெய்தே
சிற்பத்தை செதுக்க முயல்கின்றார்,

தன் மர சுத்தியலால் கடினமாய் அடித்தே
ஆற்றலுடனே உழைக்கின்றார்,

பல அடிகள் பலமாய் விழுகுது,
பாறையோ மிகவும் கடினம்காட்டுது

தேர்ந்த கைகளோ கல்லின்மேலே
தன் திறமையைக் காட்டுது,

குழந்தை ஒன்று குழந்தைத்தனமாய்
கண்களை விரித்தே வியந்து

அதனை உற்றுப்பார்த்தே கூரிய துண்டுகள்
திசைகள் எட்டிலும்

சிதறிப் பறந்து விழுதலைக்கண்டே, தன் சிறிய மூளைக்குள்
முளைத்திட்ட கேள்வியை புரிந்துகொள்ளவே

கஷ்டப்பட்டு அபூர்வமான பொருளினையே
கடற்கரையினிலே கண்டார்போலே

ஒவ்வெர்அடியிலும் சிதறி விழுகின்ற
ஒவ்வோர் பளிங்கு சிதறலைப் பார்த்தே,

சந்தேகம் வெடித்தே கேட்டும்விட்டாள்,

தந்தையே, இந்தபளிங்குக்கல்லை சுக்குநூராய் உடைத்தே
வீணாய் ஆக்குதலும் ஏனோ ?

தந்தையோ மிகவும்அமைதியாகவே புன்னகையுடனே, ஏற்ற
இறக்கம் வைத்தே உரைத்தார் தம் பதிலை,
எனதன்புக் குழந்தாய்,
அடிகளாலும், பெரும் அறைகளாலும் பளிங்கு வீணாய்
ஆவதாய்த் தோன்றினும்,
எத்தனைக் கதிகம்அடிகள் வாங்குதோ,
அத்தனைக்கதிகம் நான் எதிர்பார்க்கும்
அழகிய சிற்பம் உருவாக வேண்டும் என்றாரே.

நாம்கூட அடிகள் வாங்கிடுவோமே,
அழகிய சிற்பமாய் உருமாறிடுவோமே!

―――――――――――――

R 81

# இயேசுவோடு சிறிது நேரம் பேச வேண்டுமே

இயேசுவோடு சிறிது நேரம் பேசும்போதிலே,
என் சிதிலமடைந்த வழிகள் யாவும் வழவழவென
செப்பனிடப்பட்டு நேர்த்தியாகவே காணப்படுகிறதே,
மேற்கொண்டு நான் நடப்பதற்கே எத்தனை உதவி செய்கின்றதே,
என் சுமைகளால் அழுத்தப்பட்டுக் களைப்படைந்தே மயங்கிடும் போதினிலே,
என் இருதயம் துன்பத்தால் நசுக்கப்பட்டே வெடித்து அழும் போதினிலே,
என் கண்களும் அழுததால் கலங்கி குளம் போன்றே தேங்கி மங்கலாய் தெரியும் போதினிலே,
அவருடனே பேசுவது ஒன்றைத் தவிர
வேறொன்றும் என்னை சந்தோஷப்படுத்தக் கூட இயலாதே,
அவரிடம் நான் களைப்படைந்து உள்ளதாகவே கூறிடுவேனே,
நான் இளைப்பாறுதல் அடைந்தே சந்தோஷத்தால் அக்களிப்பேனே,
ஆனாலும் அவர் என் பெயரைச் சொல்லி அழைப்பதற்காய் காத்திருக்கின்றேன்,
ஏனென்றால் அவர் வழி ஒன்றுதான் மிகச்சிறந்த வழி, அதனால்தானே.
உன்னுடைய பாடுகளையும் வருத்தங்களையும் முடித்துவைக்க வெகு சீக்கிரத்தில் வருகிறேன்
என்ற அவர் வாக்குத்தத்தங்கள் என்னை ஊக்குவிக்கின்றதே,
ஆம், அது ஒன்றுதான் எனக்குத் தேவையானதே,
அவர் அன்பு தவழும் அழகு முகத்தைப்பார்ப்பது ஒன்றுதான் எனக்கு மிகத் தேவையானதே,
அவருக்கு நான் தேவைப்படுகிறேன் என்பதை சொல்லிக்கொள்ள நான் பயப்படமாட்டேன்,
என்னை அவருக்குச் சொந்தமாக்கிக்கொள்ளவே
அவரது வாழ்க்கையையே சரிநிகர் சமான விலையாகவே தந்துவிட்டாரே.
அவரால் கிரையத்துக்குக் கொள்ளப்பட்ட எனக்குக்
கொடுத்த வாக்குத்தத்தங்களை அவர் மறந்திடமாட்டார்,
பாதையோ சில நேரங்களில் களைப்படைந்ததாய்த் தோன்றுகின்றதே,
அந்த இடத்தை நெருங்கும்போதில் குறிப்பிட்ட தட்பவெப்பம் நிலவுகின்றதே,
ஆனால் யேசுவோடு பேசும் சிறு பேச்சு மட்டுமே,
பல நேரங்களில் எனக்கு உதவி செய்ததே,
அவரைப்பற்றி அதிகமாகக் கற்றுக்கொண்ட போதினிலே,
அவரது கிருபை எல்லாவற்றையும் கண்டுபிடிக்க முடிந்ததே,
என்னுடைய எல்லா ஏக்கங்களுக்கும் முடிவு காணச் செய்ததே,
அவரைப்பற்றி மென்மேலும் அறிந்துகொள்ளவே.

[R84]

# “போஜன பலி”

[லேவியராகமம் 2-ம் அதிகாரம்]

"நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்த" கிறிஸ்துவின் வேலையின் மதிப்பு பற்றிய பிதாவின் அபிப்பிராயத்தைச் சர்வாங்க தகனபலி அடையாளப்படுத்தும்போது, போஜனபலி கிறிஸ்து அவருடைய பரிபூரண மாம்சீக குணலட்சணங்கள் மற்றும் நடத்தையை அறிவிக்கின்றது. இது அவருடைய சொந்த சாட்சியான "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என்பதோடு தொடர்புபடுத்தலாம். (எபேசியர் 5:3; யோவான் 4:34)

- இது இரத்தம் தோய்ந்த பலியாக இல்லாமல், எந்தக் கரடுமுரடுத்தனமும், ஏற்றத்தாழ்வுகள் (மேடுபள்ளமாக) இல்லாத மெல்லிய மாவினால் உண்டாக்கப்பெற்றது. கர்த்தர் இயேசுவின் மனித சுபாவத்திலும் எந்த மேடுபள்ளங்கள் இல்லை. சபை அல்லது உலகம் தங்களைப் பற்றி பெரிய அளவில் எண்ணிக் கொண்டிருந்தாலும், எல்லா மனுஷர்களிடமும் கவலைக்கிடமான குறைபாடுகள் மற்றும் ஒழுக்கக்கேடுகள் காணப்படும். மேலும் அவர்களிடம் வலிமைமிக்க விஷயங்கள் இருந்தாலும், சில இழிவான பெலவீனங்கள், நிச்சயமாக இவைகளுக்கு சரிசமமாய் காணப்படும். ஆனால், அவரால் (கிறிஸ்து) "அவர் என்னைத் தனித்திருக்க விடவில்லை" என்று சொல்ல முடியும், மேலும் மற்றவர்களால் சொல்ல முடியாத "பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால்" என்ற வார்த்தைகளையும் "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்" என்று அவரால் சொல்ல முடியும். (யோவான் 8:29, 36) ஆகையால்தான், தேவன் இரண்டு முறை வானத்தைத் திறந்து "இவர் என்னுடைய நேசக்குமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்" என்று சொன்னார். (மத்தேயு 3:17, 17:5) மேலும், நம்முடைய மனித சரித்திரத்தில் பரலோகத்தின் அமைதி உடைந்தது இந்த ஒரே ஒரு முறை தான்.

- மெல்லிய மாவானது சூட்டடுப்பில் சுடப்பட்டபடியால் அதனுடைய ஒவ்வொரு துகள்களும் (சிறு துண்டு (அ) அணு) நெருப்பின் செயல்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது/ஆளாக்கப்பட்டுள்ளது "தண்ணீரைப் போல ஊற்றுண்டேன், என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது, என் இருதயம் மெழுகு போலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று. என் பெலன் ஓட்டைப் போல் காய்ந்தது. என் நாவு மேல் வாயோடே ஒட்டிக்கொண்டது. என்னை மரணத்தூளிலே போடுகிறீர் என்று தன்னுடைய தீப்போன்ற கடுந்துயரத்தில் பரிபூரண மனுஷன் உரக்கக்கத்துவதை நாம் கேட்கிறோம். (சங். 22:14,15). அவருடைய பிதாவிற்கு பிரியமானதை செய்து "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்ற தன்னுடைய உடைந்த இருதயத்தின் அழுகுரலை எழுப்பும்போது தீயானது கடுமையாய் எரிந்துகொண்டிருந்தது. (மத்தேயு 27:46)

- மெல்லிய மாவானது எண்ணெயினால் பிசையப்பட்டது. வேதத்தில் எண்ணெய் என்பது பரிசுத்த ஆவிக்கு அடையாளமாய் உள்ளது என்பது நன்கு தெரிந்ததே. தேவதூதன் கன்னிகையிடம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவின் பிறப்பைப் பற்றி அறிவிக்கும் போது "பரிசுத்த ஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" என்று சொன்னார். (லூக்கா 1:35). கர்த்தர் இயேசு ஸ்திரியின் வித்தாய் உள்ளார். தேவதூதன் யோசேப்பிடத்தில், "அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது" என்று சொல்வதிலிருந்து அவர் (கிறிஸ்து) மனுஷனுடைய வித்து அல்ல என்று தெரிகின்றது. (மத்தேயு 1:20) நம்முடைய சுபாவம் "தேவனுக்கு விரோதமான பகையுடனும், தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது" போல அவருடைய சுபாவம் இராமல், முழுமையாக பரிசுத்தம் உடையதாய் உள்ளது. (ரோமர் 8:7)

- புளிப்பில்லா மெல்லிய மாவால் செய்யப்பட்ட அப்பங்கள் எண்ணெயினால் அபிஷேகம் பண்ணப்படுகின்றது. மரியாளின் குமாரன் ஞானஸ்நானத்திற்கு பின்பு தண்ணீரை விட்டு வெளியே வந்தபோது "தேவ ஆவி புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்." (மத்தேயு 3:16) பின் "ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்" பின்பு "கர்த்தராகிய

தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார், சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிஷேசத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்" என்று சொல்லத்தக்கதாக ஆவியின் வல்லமையினால் கலிலேயாவிற்கு வந்தார். (லூக். 4:1,14,18) "நசரயேனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்" என்று பேதுருவும் சாட்சிக் கொடுக்கின்றார். (அப்போஸ். 10:38) பிரமாணத்தின் கீழ் செலுத்தப்பட்ட பலியின் இரத்தமானது குறிப்பிட்ட காலம் வரை பாவத்தைப் போக்கினால் "நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்" (எபிரேயர் 9:14)

- போஜன பலியானது எண்ணெயினால் மாத்திரம் அபிஷேகம் பண்ணப்படாமல் தூபவர்க்கமும் அதன் அர்த்தம்படும் வினைச்சொல்லிலிருந்தே வந்தது. இந்த வினைச்சொல் தான் "என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்" என்று தாவீது உரக்கக் கத்தினவைகளிலும், "உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும், உரைந்த மழையைப்போல் வெண்மையாகும்" என்று தேவன் பேசின வார்த்தைகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. (சங்கீதம் 51:4; ஏசாயா 1:18) தூபவர்க்கம் என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை பழைய ஏற்பாட்டில் 20 முறை வருகின்றது. மேலும் இது பரிசுத்த ஆவிக்கு நிழலாய் காணப்படும், பரிசுத்த அபிஷேக எண்ணையோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. (யாத். 30:34) மேலும் இது தேவனுடைய சமூகத்தில் எப்போதும் இருக்கிற மேஜையின் மீது உள்ள12 அப்பங்கள் மீது போடப்பட்டுள்ளது. (லேவி 24:5-8) பாவ நிவாரண பலியாய் இருக்கும்போது இது (தூபவர்க்கம்) போடப்படக்கூடாது. (லேவி. 5:11; எண். 5:15) இது (தூபவர்க்கம்) மணவாளனுக்கும், மணவாட்டிக்கும் உள்ள உறவையும் கூறுகின்றது. (உன்னதப்பாட்டு 3:6, 4:6,14)

- புளிப்புடையதும், தேனுள்ளதுமான எந்த அப்பமும் பலி செலுத்தப்படக்கூடாது. புளிப்பு என்ற வார்த்தை வெவ்வேறான தோற்றத்திலும், இலக்கண மாறுதலிலும் பழைய ஏற்பாட்டில் 71 முறையும், புதிய ஏற்பாட்டில் 17 முறையும் வருகின்றது. மேலும் இது (புளிப்பு) தீமைக்குச் சரியான மற்றும் ஒருபோதும் மாறாத அடையாளமாய் உள்ளது. இந்த சட்டத்திற்கு விதிவிலக்கு எதுவுமில்லை. இதை மனதில் நிறுத்தி ஏற்றுக் கொள்ளாத வரைக்கும், வேதத்தை நுணுக்கமாக ஆராய்ந்து அறிவதில் வளர்ச்சி காணமுடியாது. தன்னைப் பிரியப்படுத்தாமல் வாழ்ந்த கிறிஸ்துவின் மாதிரியின்படி நாம் நடக்க வேண்டுமானால் சுபாவத்திற்கு/மாம்சத்திற்கு இனிமையாய் இருக்கிற யாவும் ஏற்க மறுக்கப்பட வேண்டும் என்று நமக்கு போதிக்கவே தேன் தடைசெய்யப்பட்டது. (ரோமர் 15:3; மத்தேயு 16:24; லூக் 9:59-62; யோவான் 6:63)

- "நீ படைக்கிற எந்த போஜனபலியும் உப்பினால் சாரமாக்கப்படுவதாக, நீ படைப்பது எல்லாவற்றோடும் உப்பையும் படைப்பாயாக" பதப்படுத்துதல் மற்றும் களங்கம்/மாசு பரப்புவதை நிறுத்துவதே உப்பின் பண்புகள். மேலும் இது (உப்பு) நித்திய உடன்படிக்கைக்கான பொருத்தமான அடையாளமாகும். மேலும் பாவம் மற்றும் தீமைகள் மத்தியில் இருக்கும் உண்மை கிறிஸ்துவர்களுக்கும் இது (உப்பு) முக்கியமான நிழலாயும் உள்ளது. நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள், உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது" என்று இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களுக்குக் கூறியுள்ளார். (மத்தேயு 5:13) "உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக". (கொலேசெயர் 4:6)

-----------------------------------------

# நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து

***"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." 1 கொரிந்தியர் 5:7, 8***

பஸ்கா என்பது இஸ்ரயேல் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட மிக முக்கியமான நிழல்களில் ஒன்றாக இருந்தது மற்றும் அவர்களது மிகப் பரிசுத்தமான பண்டிகைகளில் ஒன்றாகவும் அவர்களால் எப்போதும் அனுசரிக்கப்பட்டும் வந்தது. எகிப்தின் முதற்பேறானவர்கள்மீது பத்தாவது வாதை கடந்து வந்தபோது, தங்களின் முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலை நினைவுகூரும் வண்ணமாக அவர்கள் பஸ்காவை ஆசரித்து வந்தார்கள். ஒவ்வொரு வருடமும் அந்நிகழ்வினுடைய ஆண்டு நிறைவு நாளின்போது, முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியன்று, ஓர் ஆட்டுக்குட்டியை அடித்து அதை நினைவுகூர்ந்தார்கள். அவர்கள் நிழலை மாத்திரமே கண்ணோக்கினார்கள்; அப்போஸ்தலர்கள் வாயிலாக பரிசுத்த ஆவியினால் போதிக்கப்பட்டிருக்கும் நாமோ இதற்கான நிஜம், "தேவனுடைய ஆட்டுக்குட்டியென" – "நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டிருக்கின்றார்" என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடிகின்றது. நமது ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம் நம்மீது தெளிக்கப்படவில்லையெனில், மரணம் நம்மீது கடந்துவருகின்றதாய் இருக்கும், ஆனால் அவருக்குள் நமக்கு ஜீவன் இருக்கின்றது.

நிழலான ஆட்டுக்குட்டியானது, முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியன்று மரணத்திற்குள்ளாக்கப்பட்டதுபோன்று, நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியானவரும் அதே நாளில் மரணத்திற்குள்ளாக்கப்பட்டார். வேறொரு நாளில் சம்பவிப்பது என்பது நிழலின் நிறைவேறுதலாக இராது; ஆனபடியாலே லூக்கா 22:7-ஆம் வசனத்தில் நாம் வாசிக்கிறபடி சம்பவித்தது. அவர்கள் நிழலான ஆட்டுக்குட்டியைப் புசித்ததுபோல, நாமும் நம்முடைய ஆட்டுக்குட்டியைப் புசிக்கின்றோம். அதேநாளில்தானே, இயேசு அப்போஸ்தலர்களுக்கு, தம்முடைய பிட்கப்படுகிற சரீரத்திற்கும் மற்றும் சிந்தப்படுகிற இரத்தத்திற்குமான அடையாளச் சின்னங்களைக்கொடுத்து, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றார், அதாவது இனிமேல் என்னை உங்களது ஆட்டுக்குட்டியாக எண்ணி, இந்தப் பண்டிகையை ஆசரியுங்கள் என்றார்.

இதைச் செய்துவருவது, அதாவது பஸ்காவை நினைவுகூருவதும், நமது கர்த்தருடைய சரீரம் மற்றும் இரத்தத்திற்கான அடையாளங்களைப் புசிப்பதும் பிட்ஸ்பர்காகிய (Pittsburgh) இங்குள்ள நம்மில் அநேகருடைய வழக்கமாக, பல வருடங்கள் காணப்பட்டு வருகின்றது மற்றும் இது பரிசுத்தமான இன்பத்திற்கும், ஐக்கியத்திற்குமுரிய தருணமாகவே எப்போதும் இருந்துள்ளது மற்றும் குறிப்பாக அவ்வாறாகவே இவ்வருடமும் இருந்தது. நாங்கள் மார்ச் 24-ஆம் தேதியன்று இரவில் (தாராளமான இடவசதியின் காரணமாக) எப்போதும்போல் சகோதரர் கான்லீ மற்றும் அவரது துணைவியின் வீட்டில் கூடினோம்; மற்றும் புளிப்பில்லாத அப்பத்தைச் சேர்ந்து புசித்தோம் — அது அடையாளப்படுத்தும் சத்தியத்தையும் புசித்தோம்; அதாவது இயேசு புளிப்பற்றவர் (பாவமில்லாதவர்), பரிசுத்தமானவர், குற்றமற்றவர், மாசில்லாதவர் ஆவார் மற்றும் அப்பமாகிய அவரை ஒரு மனுஷன் புசித்தானானால், என்றென்றைக்கும் மரியாமல் இருப்பான் எனும் சத்தியத்தையும் புசித்தோம். பவுலோடுகூட நாங்களும், "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்று கூறினோம். கிறிஸ்துவை எங்களுக்குள் நாங்கள் பெற்றிருந்தபடியால், "ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்" என்று எழுதப்பட்டிருக்கிறபடியே, முதற்பேறானவர்களின் சபை முழுவதும் (சீக்கிரத்தில்)கடாட்சிக்கப்படுவார்கள் மற்றும் கடந்துபோகப்படுவார்கள் என்பதை நாங்கள் தெளிவாகப்பார்த்தோம் மற்றும் "இனி உலகத்திற்குச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு விழித்திருங்கள்" என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டோம்.

நாம் கிறிஸ்துவினுடையவர்களானால், அவர் பிட்கப்பட்டதுபோல பிட்கப்படவும், அவர் மாம்சத்தை மரிக்கப்பண்ணினதுபோன்று, மாம்சத்தைச் சிலுவையில் அறைந்திட்டதுபோன்று மரிக்கவுந்தக்கதாக நாமும் எவ்வாறு அதே அப்பத்தின் பாகமாகக் காணப்படுகின்றோம் என்பதையும் நாம் வாசிக்கின்றோம். "நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17) இன்னுமாக அந்த அப்பத்தின் பாகமாக நாம் நம்மைக் கருதவும், நாம் பிட்கப்படவும் வேண்டுமானால்,

முதலாவதாகப் பாவமறியாத நம்முடைய ஆண்டவர்போன்று நாம் காணப்படத்தக்கதாக, பாவமென்னும் "பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போட வேண்டும்," என்பதையும் நாங்கள் கண்டோம்.

போஜனம் புசித்தப் பிற்பாடு, நாங்கள் பாத்திரத்தை – திராட்சரசத்தை எடுத்தோம். அதை நாங்கள் பருகினபோது, அது பஸ்கா இராப்போஜன நிழலில் அடையாளப்படுத்தப்படவில்லை என்பதையும், மாறாக அது சந்தோஷம் மற்றும் ஜீவனுக்கான அடையாளமாக இருந்தது என்பதையும் நினைவுகூர்ந்தோம். போஜனத்திற்கு பின்பு, அவர் பாத்திரத்தை எடுத்து, "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்று கூறினார்; மேலும் கசப்பான கீரைகளுடன் (உபத்திரவங்களுடன்) ஆட்டுக்குட்டியைப் புசிக்கும் தற்கால இரவுவேளை கடந்துபோன பிற்பாடு, நமது கர்த்தர் "உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று கூறி புதிய ஜீவனையும், புதிய சந்தோஷங்களையும் கொடுப்பார் என்று நாங்கள் உணர்ந்துகொண்டோம். இப்பொழுதும் மற்றும் இங்கும்கூட, பரதீசின் அந்தச் சந்தோஷங்களுடைய ஒரு முன்னனுபவம் உள்ளதை நாங்கள் உணர்ந்துகொண்டோம். இவ்வாறாக நமது பண்டிகையின் திராட்சரசமானது, இராஜ்யத்தின் சந்தோஷங்களுக்கு நிழலாக இருக்கின்றது; அப்போது — "இராப்போஜனத்திற்குப் பின்பு," நாம் நம்முடைய பிதாவின் இராஜ்யத்தில் கர்த்தரோடுகூட நவமானதாய்ப் பானம்பண்ணுவோம்.

*****

::R114::3::9.

## நிறைவானது வரும்பொழுது குறைவானது ஒழிந்துபோகும்
1 கொரி.13:10.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள கொடைகள் யாவும்

இங்கே எந்த விசுவாசத்திற்காக நாம் ஏங்கி நின்றோமோ,

பரலோகம் நமக்குக் கிடைத்துவிட்டால்,

இவை எல்லாவற்றையும் நாம் இழந்திட வேண்டியிருக்குமே,

கடலினுள் விழுகின்ற மழை நீரைப்போலே,

நம்முடைய காலுக்குக் கீழே தெரியும் வெளிச்சம்,

கோடைக் காலத்தின் சூரிய ஒளியின் வெளிச்சம் போலக் காணப்பட்டாலும்,

அது பின்னர் தேய்ந்து மறைந்து காணாமற்போகுமே,

அந்த நாளில் நட்சத்திரங்கள்கூட பறந்து சென்றுவிட்டாலும்,

நம் இரட்சகரை நாம் இங்கே நேசித்துள்ளோமே,

நம்முடன் பயணம் செய்து வரும் சகோதரரையும் நாம் நேசிக்கின்றோமே,

நம்முடைய வீட்டில் அந்த அன்பும்கூட,

முடிவில்லா வாழ்வினாலே காணாமல்போகுமே.

R125:9.

## என்னுடைய தியாக பலி

உந்தன் பலிபீடத்தின்மீதே படைத்துள்ளேன், பரிசுத்தமுள்ள பரமபிதாவே,
ஏற்றுக்கொள்ளும் இப்பரிசதனை, ஏசுவுக்காய் ஏற்றுக்கொள்ளும்,
உந்தன் ஆலயத்தில் ஒப்புக் கொடுத்திடவே,
என்னிடம் ஏதும் பொன் ஆபரணங்களில்லை,
உலகப்புகழ்பெற்ற பலி ஏறெடுக்கவும் எதுவும் என்னிடம் இல்லை,
என்னுடைய நடுங்கும் கரங்களால் இப்போது இங்கே கொண்டு வந்துள்ளேன்,
என்னுடைய உள்ளத்தின் உறுதியை;
அதுவும் மிகவும் சிறியதாகவே தோன்றுமே,
ஆண்டவரே, உம்மால் மாத்திரமே இதைப் புரிந்துகொள்ளமுடியும்,
நான் உம்முன் படைத்த இந்த பலி எப்படியாயினும்,
என்னுடையதை எல்லாவற்றையும் உம்மிடத்தில் கொடுத்துவிட்டேன்,
நீர் எதிர்பார்த்து உற்றுநோக்கும் பொருளும் அதனுள்ளே மறைந்துள்ளதே,
என் மகிழ்ச்சிக்கான பார்வை முழுவதும்,
என் ஆசைகளுக்கிடையில் எழும் போராட்டங்கள்,
என்னிடம் உள்ளது எல்லாமும்,
அல்லது நானும் என் மகிழ்ச்சியும்,
ஆழ்ந்த அன்பும், விரும்பிய நம்பிக்கைகள், முடிவில்லாத ஏக்கங்கள்,
அவை எல்லாமும் கண்ணீரால் நனைக்கப்பட்டுள்ளனவே,
பெருமூச்சால் மங்கியுள்ளனவே,
என் கரங்களால் இறுகப்பற்றிக் கொண்டிருந்தேன்,
அழகு எதுவுமில்லை என்றாகும் வரையில்,
உமது கால்களின் கீழிருந்து அவை முழுவதும் தோற்கடிக்கப்பட்டபின்பு,
ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டனவே,
"உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக",
எடுத்துக்கொள்ளும் எம்தந்தையே,
நான் என் தைரியத்தை முன்பே இழந்துவிட்டேனே,
உம்முடைய சித்தத்தோடே முழுவதும் கலந்துவிட்டதுவே,
கைவிடப்பட்டதால் மிகவும் துக்கமாக இருக்கும் நேரங்களில்
அவரால் கிரையத்துக்குக் கொள்ளப்பட்ட எனக்குக்
கொடுத்த வாக்குறுதிகளை அவர் மறந்திடமாட்டார்,
அந்த இடத்தை நெருங்குகையில் குறிப்பிட்ட தட்பவெப்பம் நிலவுகின்றதே,
ஆனால் இயேசுவோடு பேசும் சிறு பேச்சு மட்டுமே,
பல நேரங்களில் எனக்கு உதவி செய்ததே,
அவரைப்பற்றி அதிகமாகக் கற்றுக்கொண்ட போதினிலே,
அவரது எல்லாக் கிருபையையும் கண்டுபிடிக்க முடிந்ததே,
என்னுடைய எல்லா ஏக்கங்களுக்கும் முடிவு வந்ததே,
அவரைப்பற்றி மேலும் மேலும் அறிந்துகொள்ளவே.

R144::3::10

## கர்த்தருடைய பர்வதம்

ஆம்! பிரகாசமான காலை ஒன்று வெடித்துப் புலருது,
மேலான நாட்கள் வந்துகொண்டிருக்குது,
உலக முழுமையும் எழுப்புதல் நடக்குது,
பொற்காலைப் பொழுதோன்று விடிந்திடும் பொழுதினிலே,
மகிமையின் நாட்களும் வந்திடும்போதிலே,
மனிதர்கள் யாவரும் சகோதரராகவே கரம்பற்றிக்கொள்வர்,
ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கும்
நடந்தனவற்றைக் கதையாகவே கூறிடுவார்,
தேசத்தின் எல்லா மூலைகளுக்கும் அது சென்று சேரும்வரைக் கூறிடுவார்,
சீயோனின் மலையுச்சியிலே,
தேவன் தமது வீட்டை மீண்டும் ஆயத்தம் செய்கின்றார்,
அதன் நிலைக் கதவின் எல்லையிலே புது ஊற்றொன்று பிறக்கிறதே,
பூமியின் கடையாந்தர நிலையங்கள் வரையினில்
அது மனிதனின் ஆத்துமாக்களில் ஊடுருவிப் பாய்கின்றதே,
தேவனது வார்த்தைதனைக் கேட்டிடவே மனிதர் வந்து ஒன்று கூடிடுவார்,
உலக முழுமையும் உள்ள தேசங்கள் யாவும்
இனி கர்த்தருடைய தேசங்களாகவே மாறிப்போகும்.

# கர்த்தருடைய இராப்போஜனம்

***"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." 1 கொரிந்தியர் 5:7, 8***

எகிப்தின் மீதான 10-வது வாதையின்போது, தங்கள் முதற்பேறானவர்கள் மரணத்திலிருந்து வியக்கத்தக்க விதத்தில் கடந்துபோகப்பட்டதை அல்லது கடாட்சிக்கப்பட்டதை நினைவுகூரத்தக்கதாக வருடந்தோறும் (மற்றும் இன்னமும்) ஆசரிக்கப்பட்டுவரும் யூதருடைய பண்டிகையாகப் பஸ்கா இருந்தது.

யாத்திராகமம் 12-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள காரியங்களாகிய — ஆட்டுக்குட்டி அடிக்கப்படுதலும், அதன் மாம்சம் நெருப்பில் சுடப்பட்டதும், அந்த மாம்சம் கசப்பான கீரைகளுடனும், புளிப்பில்லாத அப்பங்களுடனும் புசிக்கப்பட்டதும், அதைப் புசிக்கின்றவர்கள் நின்ற வண்ணமாகவும், இடைக்கட்டிக்கொண்டவர்களாகவும், பாதரட்சையைத் தொடுத்தவர்களாகவும், தடி பிடித்தவர்களாகவும், வாக்களிக்கப்பட்டுள்ள கானான் தேசத்திற்கு நேராக, எகிப்திலிருந்து வெளியேறி, புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்ததும் — சந்தேகத்திற்கிடமின்றி நம் வாசகர்கள் அநேகருக்கு தெரிந்த விஷயங்களேயாகும். இன்னுமாக இவைகளின் அர்த்தங்கள் நிழல்களாக இருக்கின்றன என்பது தெரிந்த விஷயங்களேயாகும்: அதாவது எப்படி "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகிய" இயேசு வந்தார் என்பதும், "பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கின்றார் என்பதும், எப்படி விசுவாச வீட்டாரின் நிலைக்கால்களும், மேற்சட்டங்களும், மேன்மையானவைகளைப் பேசுகிறதும், வீட்டிலிருப்பவர்களுக்கு மேலான விதத்தில் இரட்சிப்பைக் கொண்டுவருகிறதுமான ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் (அடையாளமாய்) தெளிக்கப்படுகின்றது என்பதும், எப்படி நாம் அந்நியர்களுமாய், பரதேசிகளுமாய் இருந்து, எகிப்தை (உலகத்தை) நமது வீடாகக் கொண்டிராமல் அல்லது அங்குத் தரித்திராமல், மாறாக கையில் தடி பிடித்திருக்க வேண்டும் என்பதும், இந்த ஜீவியத்தின் சோதனைகளையும், கசப்பான அனுபவங்களையும் அடையாளப்படுத்தும் "கசப்பான கீரைகள்" எப்படி நமக்கு அவசியமாய் இருக்கின்றது என்பதும், அது எப்படி (புளிப்பு அசுத்தத்திற்கு அல்லது தப்பறைக்கு நிழலாய் இருக்கின்றபடியால், தூய்மையான சத்தியத்தை அடையாளப்படுத்தும்) புளிப்பில்லாத அப்பத்திற்கான நமது பசியை/விருப்பத்தை அதிகப்படுத்துகின்றது மற்றும் "என்னுடைய மாம்சத்தைப் புசியாமல் இருந்தால், உங்களுக்குள்ளே ஜீவனில்லை" என்று கூறின நமது ஆட்டுக்குட்டியானவரைப் புசிப்பதற்கான நமது விருப்பத்தையும் அதிகப்படுத்துகின்றது என்பதும், தெரிந்த விஷயங்களேயாகும். இவ்வாறாக நாம் நம்முடைய ஆட்டுக்குட்டியைப் புசித்து, மகிமையின் நம்பிக்கையாகிய கிறிஸ்துவானவரை நமக்குள் உருவாக்கப்பெற்றிருக்கிறோம். 1800 - வருடங்களுக்கும் மேலான காலப்பகுதியை உடைய இந்த இரவு வேளையின்போது, நமது ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது முதல், உண்மையான அந்த ஒரே விசுவாச வீட்டாரே புசித்துக்கொண்டு வருகின்றனர் — விடுதலையின் காலைக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனர் — இந்தக் காலையின் விடியலானது ஏற்கெனவே வந்துவிட்டதென நாம் நம்புகின்றோம்.

இயேசு, அதாவது ஆட்டுக்குட்டியானவர் அதே நாளிலும் மற்றும் நிழலின் அந்த அம்சத்தினுடைய நிறைவேறுதலாகவும் மரித்திருப்பதினால், கிறிஸ்தவர்கள் அனைவரும் நமது ஆட்டுக்குட்டியானவர் மரித்தநாளை, நினைவுகூரும்படிக்கு அனுசரிப்பது எவ்வளவு பொருத்தமானதாய்த் தோன்றுகின்றது. நிழலை மாத்திரமே அங்கீகரிக்கின்ற "மாம்சீக இஸ்ரயேலர்களை" காட்டிலும், அந்நாளின்மீது நமக்கு நிச்சயமாய் அதிக கவனமுள்ளது. தினந்தோறும் பண்டிகையை நாம் ஆசரிக்கையில், அதாவது தினந்தோறும் கிறிஸ்துவிலும், அவருடைய சத்திய வார்த்தைகளிலும் நாம்பங்குபெறுகையில், நமது கர்த்தருடைய மரணத்தை, அதன் ஆண்டு நிறைவு நாளில் நினைவுகூரும்படிக்கு அனுசரிப்பது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், அருமையானக் காரியமாகவும் இருக்குமல்லவா?

அந்த நாளானது, தம்மை நினைவுகூரும்படிக்கு வருடந்தோறும் அனுசரிக்கப்பட வேண்டும் என்பது நமது கர்த்தருடைய விருப்பமாக இருந்தது என்றும், நிழலான யூதர்களுடைய அனுசரிப்பிற்குப்பதிலாக, அவருடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்குமான அடையாளச் சின்னங்களாகிய அப்பம் மற்றும் திராட்சரசம் அடங்கிய கர்த்தருடைய இராப்போஜனத்தை, அதாவது நம்முடைய பஸ்கா இராப்போஜனத்தை நிறுவினார் என்றும் நாம் புரிந்துகொள்கின்றோம்.

இதனோடு தொடர்புடைய அனைத்தும், இதுவே அவரது நோக்கம் என்பதைக் காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் ஒவ்வொரு வருடமும் பஸ்காவை முறையாக ஆசரித்துவந்தார் மற்றும் அவரது கடைசி பஸ்காவின்போது, அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று

இரவில், லூக்கா 22:15-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறினார். இயேசு ஆசரித்தது, பஸ்கா (ஆட்டுக்குட்டியின்) அடிக்கப்படுதலேயொழிய, பஸ்காவைப் பின்தொடரும் ஏழு நாட்களுக்குரிய பஸ்கா பண்டிகையல்ல. அக்காலங்களில் யூதர்கள் இரண்டையும் ஆசரித்தனர், அதிலும் குறிப்பாக பஸ்கா பண்டிகையையே ஆசரித்தனர். பஸ்கா ஆட்டுக்குட்டியின் அடிக்கப்படுதலுக்கான நினைவுகூரும் ஆசரிப்பை இப்பொழுது அவர்கள் ஆசரிப்பதுமில்லை மற்றும் நீண்டகாலமாய் ஆசரிக்கவுமில்லை. மாறாக பண்டிகையை மாத்திரமே ஆசரித்திருக்கின்றனர்.

(கடைசி வேளையில்) இயேசு அடிக்கப்படுதலுக்கான நினைவுகூருதலை மாத்திரம் ஆசரித்து, பின்னர் தம்மை உண்மையான பலியாக ஒப்புக்கொடுத்தார். பழைய நிழலுக்குப் (ஆட்டுக்குட்டிக்கு) பதிலாக, (அப்பம் மற்றும் திராட்சரசம் எனும்) நினைவுகூருதலின் சின்னங்களை — புதிய இராப்போஜனத்தை இயேசு நிறுவி, தம்முடைய அப்போஸ்தலர்களுக்குக்கொடுத்து, "என்னை நினைவுகூரும்படிக்கு இதைச் செய்யுங்கள்" என்றார். (இனிமேல் நிழலை ஆசரிக்க வேண்டாம், மாறாக என்னை — நிஜத்தை நினைவுகூர்ந்து ஆசரிக்கத்தக்கதாக, இந்தப் புதிய அடையாளச் சின்னங்களைப் பயன்படுத்துங்கள்). "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் மற்றும் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமளவும்" மற்றும் "ஜெயங்கொண்டவர்களாகிய முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதல் (அ) கடாட்சிப்பதன் மூலமாக நிழல் நிறைவடையுமளவும் மற்றும் முழு விசுவாச வீட்டாரின் இறுதி விடுதலை சம்பவிக்குமளவும்" — (நிழலான ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தையல்ல, மாறாக) அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.

பஸ்காவின் அடிக்கப்படுதல் — கிறிஸ்துவின் மரணமானது, முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியாகிய அதன் ஆண்டு நிறைவு நாளில் வருடந்தோறும் நினைவுகூரப்படுவதே சரியாக இருக்குமேயொழிய மற்றபடியல்ல. இந்த ஆண்டு நிறைவு நாளானது 1881-ஆம் வருடமாகிய இவ்வருடத்தில் ஏப்ரல் 14-ஆம் தேதியன்று (மாலை 6 மணிக்குத் தொடங்கும் நிலையில்) வருகின்றது. பின்வரும் ஏழு நாட்களுக்குரிய புளிப்பில்லாத அப்பம் புசித்தலின் பண்டிகையானது, நமது மீட்கும்பொருளின் காரணமாக, நாம் பிற்பாடு அனுபவிக்கும் தொடர்ச்சியான, பூரணமான மற்றும் நித்தியமான பண்டிகையை அடையாளப்படுத்துகின்றது; (ஏழு என்ற எண்ணானது, பூரணத்திற்கான அடையாளமாக இருக்கின்றது).

சில கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமைதோறும், கர்த்தருடைய இராப்போஜனத்தை அனுசரிப்பதையும், மற்றும் தங்களுடைய இந்த வழக்கமானது, அப்போஸ்தலர் நடபடிகைகள் புஸ்தகத்தில், "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருந்தார்கள்" என்று மீண்டும் மீண்டுமாகக் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களின் அடிப்படையில் காணப்படுவதாகக் கூறிக்கொள்வதையும் நாம் அறிந்திருக்கின்றோம். (அப்போஸ்தலர் 20:7) அப்பம் பிட்குதல் அடிக்கடிக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இப்படியாக (அப்பம் பிட்குதல்) குறிப்பிடப்பட்டிருக்கும் எந்த ஓர் இடத்திலும், அப்பத்தைப்போன்று அக்கட்டளையில் முக்கியமான அம்சமாக இடம்பெறும் திராட்சரசம் குறிப்பிடப்படவில்லை என்பதையோ, இதுவுமல்லாமல் வாரத்தின் முதல்நாளில்கூடின இந்தக் கூடுகைகள் எங்குமே "கர்த்தருடைய இராப்போஜனம்" என்றோ அல்லது நாம் அது இராப்போஜனம் என்று முடிவுசெய்யத்தக்கதாக வேறு ஏதாகிலும் பெயரிலோ அழைக்கப்படவில்லை என்பதையோ மேற்கூறப்பட்டுள்ள கிறிஸ்தவர்கள் பார்க்கத் தவறியுள்ளனர் என்பது உறுதியே.

"கர்த்தருடைய நாளானது (வாரத்தின் முதல் நாளானது) கர்த்தருடைய மரணத்தின் நினைவுகூருதலை ஆசரிப்பதற்கு ஏற்ற நாளாகவே இருக்க முடியாது என்பதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன; அவைகளில் முக்கியமான காரணம், "முதல்நாள்" (அ) "கர்த்தருடைய நாளானது" முற்றிலும் வேறுபட்ட ஒரு சம்பவத்தின் நினைவுகூருவதற்குரிய நாளாக நிறுவப்பட்டது மற்றும் கைக்கொள்ளப்பட்டது, அதாவது நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்குரிய நினைவுகூருதலின் நாளாகவே நிறுவப்பட்டது என்பதேயாகும். ஒன்று "இரவில்" ஆசரிக்கப்பட்டு, இராப்போஜனம் என்று அழைக்கப்பட்டது, மற்றொன்றோ பகற்பொழுதில் ஆசரிக்கப்பட்டது. ஒன்று அழுகையின் மற்றும் துயரத்தின் இரவாய் இருந்தது, மற்றொன்றோ "கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்" என்றுகூறி மகிழ்ச்சியும், களிகூருதலும்கொள்ளும் காலை வேளையாக இருந்தது. ஒன்று சுவிசேஷ யுகமாகிய, பாடுகளுள்ள தற்காலத்து இரவு வேளைக்கு நிழலாய் இருந்தது, மற்றொன்றோ "அதிகாலையில்" சரீரத்தினுடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு, பிரகாசமான ஆயிரவருட இராஜ்யத்தின் பகலில் இடம்பெறும் நம்முடைய ஒன்றுசேர்க்கப்படுதல் மற்றும் ஐக்கியத்திற்கான நிழலாக இருக்கின்றது.

இயேசு மரணத்திலிருந்து எழுந்த பிற்பாடு, அவர் அடிக்கடி, வாரத்தினுடைய முதல்நாளில் சீஷர்களுக்குத் தோன்றிக் காட்சியளித்தார் மற்றும் பல்வேறு தருணங்களில் அவர்கள் சாதாரணமாக உணவு உட்கொள்ளும்போது அப்பம் பிட்கையில் தம்மை அவர்களுக்கு அவர் வெளிப்படுத்தினவராகக் காணப்பட்டார். சபை இந்த வாரத்தின் முதல்நாளை விசேஷமாக ஒருவரோடொருவரும், கர்த்தரோடும் சந்திப்பதற்கான நாளாக ஒதுக்கி வைத்தார்கள் என்றும்,

அவர்கள் நீண்ட தொலைவிலிருந்து வருவதினாலும், மற்றுமாகக் கர்த்தர் தம்மை இப்படியாக (அப்பம் பிட்குதல் மூலம்) வெளிப்படுத்தினதாலும், அந்தநாளில் அவர்கள் தங்கள் போஜனத்தைப் பொதுவாய் உட்கொள்வதற்கென ஒழுங்குப்படுத்தியிருந்திருப்பார்கள் என்றும் எண்ணுவதைக்காட்டிலும் வேறு ஏதேனும் நியாயமான அனுமானங்கள் இருக்கக்கூடுமோ? இந்த நாளானது, எப்போதும் சந்தோஷத்தின் ஒரு நாளாகக் காணப்பட்டது, மற்றநாளோ அனுதாபத்துடன்கூடிய துயரம் நிறைந்த இரவாக இருந்தது.

ஞானஸ்நானத்தைப்போன்று, இந்தக் கட்டளையின் சரியான அனுசரிப்பும்கூட, போப்மார்க்கத்தினுடைய ஆளுகையின்போது மறைந்துபோய்விட்டது; இது முற்றிலும் அகற்றப்பட்டு, இதனிடத்தில் மரிக்கும் நபர் உத்தரிக்கும் ஸ்தலம் முதலானவைகளிலிருந்து காக்கப்படத்தக்கதாக, மரணபடுக்கையின்போது கொடுக்கப்படும் நற்கருணை விருந்து (sacrament) அனுமதிக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. புராட்டஸ்டண்டினரோ (Protestants) இவ்விஷயத்திற்குப் பொதுவாய் அதிகம் கவனம் காட்டாதவர்களாய் இருந்து, "பானம்பண்ணும்போதெல்லாம்" எனும் வார்த்தைகளை, சௌகரியமான வேளைகளிலெல்லாம் செய்வதற்கான அதிகாரமாக எடுத்துக்கொள்கின்றனர் மற்றும் இவ்வசனத்தின் வார்த்தைகளில் இடம்பெறும் "இந்த" எனும் வார்த்தையானது பஸ்காவைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதையும், இந்தச் சம்பவத்திற்கான நினைவுகூருதலை ஆசரிக்கும்போதெல்லாம், நிழலை இல்லாமல், நிஜமாகிய என்னை நினைவுகூரும்படி — இதைச் செய்யுங்கள் என்று அவர் கூறியுள்ளார் என்பதையும் காணத்தவறிவிடுகின்றனர்.

காலந்தவறி ஆசரிப்பதினால் பாவம் செய்யப்படுகின்றது என்றோ, ஆசரியாமல் இருப்பது பாவம் என்றோ நாம் சொல்லுகிறதில்லை; மாறாக அது நிறுவப்பட்டதுபோலவே ஆசரிப்பது என்பது வேறுவிதமாய் ஆசரித்தலைக்காட்டிலும் மிகவும் ஏற்றதாகவும், நல்யோசனையாகவும், நினைவுகூருதலாகவும் காணப்படும் என்றே நாம் சொல்லுகின்றோம்.

*****

# வேதத்தை எப்படி வாசிக்கிறார்கள்?லூக்10:16

வேதத்தை முழுவதும் வாசிப்பது நிதமே,
கற்கவும்,நடக்கவும்,வாசிப்பதே சதமே,
மகிழ்வுடன் அதனை நினைவுகூர்தல்நல்விதமே,
மிகச்சரியாய் மனம்ஏற்க வாசிப்பதே நிறைவுதரும் சுகமே.
நடப்பதற்கும் கற்றுக்கொள்வதற்கும்வேதம் படிக்கலாகுமே,
வசனம் வாசிப்பது வாழ்க்கையின்கடமைஎன வாரத்திற்கொருமுறை தொடுவாருண்டு,
எனக்கு ஒன்றும் தூண்டுதலில்லை என்றே விட்டுவிலகிடுவாருமுண்டு,
கவனமின்றி படிப்பதையே வழக்கமாக்கிக்கொண்டிடுவார்,
மனதில்ஏற்றாமல், எப்படி வாசிப்பதென்றும் தெரியாமல்,
எங்கு படித்தோம், என்ன படித்தோம்,என்றுகூட நினைப்பதில்லை,
3000ஆண்டுக்கு முன் மக்கள்வாழ்க்கை அறிந்துகொள்ள
வரலாறாய்ப்படித்திடவே பலர் முயற்சிசெய்திடுவார்,
மனம் மாறிடவே சிலரும் வேதம் நிதம் படித்தே கற்றிடுவார்,
அருகிலுள்ளோர் படிப்பதனால் தாமும் வேதம் படித்திடுவார்,
அயலானை நியாயந்தீர்க்க,மற்றவர்க்குக் காட்டிக்கொள்ள வேதம்தனை பயின்றிடுவார்,
வேதம் முழுதும்படித்து முடிக்க எவ்வளவு காலம் ஆகிறது என்றறிய படித்திடுவார்,
தாவீது எப்படிசிங்கத்தையும் கரடியையும் கொன்றிருப்பார்?-
அறிந்துகொள்ள சிலர் படிப்பார்,
ஆச்சர்யம் தரும் பக்கத்திற்காய் வாசிப்பாரே சிலபேரு,
வேறுஎதுவும் புத்தகம்இல்லை என்பதால் இதனை வெறுமனே திருப்பிப்பார்ப்பார்,
சிலரோ இந்த ஆசீர்வதிக்கப்பட்டபுத்தகம்தனையே ஏன்,எதற்கு என்றுதெரியாமலே படிப்பாரே,
சிலர்பொதுவான காரணமின்றியே வாசிப்பாரே,
ஆனால் எல்லாருமே, சில எதிர் கருத்துக்காக தேடிடுவார்,
சிலர்அது தன்னுடன்பேசவில்லை என்று கூறிடுவார்,
ஆனால் ஜெருசலேமின் மாந்தரோ,
மர்மம் நிறைந்த விளங்காபக்கங்கள் என்றே எண்ணியே வாசிப்பாரே,
அதில் விசுவசிக்கவேண்டியதை அவர் விசுவாசிப்பதில்லை,
ஒருவர் தன் தந்தையின் கண்ணாடியைதலைமீது அணிந்தேபடி த்திடுவார்,
தந்தைஎன்ன புரிந்துகொண்டாரோ அதே அளவிலே தாமும் புரிவார்,
வேறொருவர்கேம்ப்பெல், ஸ்காட், எச். பலூ போன்றவிளக்கஉரையாளர் வழியினிலே படித்திடுவார்,
அவர்கள் என்ன எழுதினாரோ, அப்படியே புரிந்து கொள்வார்,
தாம் எண்ணுவதை அவர் பிரதிபலித்தால் அதுவும் கூட உண்மையில்லை,
ஏற்கனவே மனதிலுள்ள கருத்தைஒப்பிட்டுப்பார்க்க சிலர் படிப்பார்,
இப்படித்தான் கொஞ்சம்படித்து ஒன்றும் புரியாமல்திகைத்திடுவார்,
புத்தகத்தில் காணும் நிகழ்வுகளைதாம்கொண்ட முடிவுகளுடன் நிறுத்துப்பார்ப்பார்,
சிலர் கற்றுக்கொள்வதற்கின்றி கற்றுக்கொடுக்கப்படித்திடுவார்,
ஆனால் வெகுசிலர் மாத்திரமே சரியானகோணத்தில் படித்திடுவார்,
பலர்தற்காலத்திலேபலவழிகளில் வாசிக்கின்றார்,அதிலும் ஒருசிலரேஎந்தமுறை சிறந்தமுறை என்பதனை
அறிந்து சொல்வார்,மற்றோரெல்லாம் எதிரானகருத்துக்களைப் பரப்பிடுவார்.

# நம்முடைய பஸ்கா

நம்முடைய கடந்த வெளியீட்டில் நாம் குறிப்பிட்டிருந்ததான "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவின் மரணத்தை" அதன் ஆண்டு நிறைவு நாளில் ஏப்ரல் 14-ஆம் தேதியில் நாங்கள் ஆசரித்ததானது எப்போதும் காணப்படுகிறதுபோலவே, "ஆசீர்வாதமான காலப்பகுதியாகவே இருந்தது; அது நம் பாவங்களுக்கான நமது கர்த்தருடைய வியாகுலத்தையும், "அவரது இரத்தத்தினாலான மீட்பையும்" நினைவுகூருவதற்கான காலப்பகுதியாகும். நமக்கான ஈடுபலி ஏற்றுக்கொள்ளப்பட்டதை நாம் பார்க்கையில், நமக்கான மன்னிப்பினுடைய முழுமையினை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகையில், நாமும் பவுலோடுகூடப் பின்வருமாறு கூறுகின்றோம்: "தேவன் நம் பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதியாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். (தேவன் தம்முடைய ஏற்பாட்டினால், நம்மைப் பாவங்களறச் சுத்திகரித்துள்ளார்--இது முழுமையாயும், சரியாயும் செய்யப்படவில்லை என்று யாரால் சொல்லிட முடியும்?); ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர் (நாங்கள் இன்னும் பாவிகள் என்று சொல்லுகிறவன் யார்? அப்படியானவன், யார் எங்களுக்காகக் கடனை அடைத்தார் என்பதை நினைவில்கொள்வானாக – கிறிஸ்துவே எங்கள் கடனை அடைத்தார் மற்றும் நிச்சயமாய் அவரது பலியானது, அங்கீகரிக்கப்படத்தக்கதான பலியாகும்)" (உரோமர் 8:31-34).

நம்முடைய நீதிமானாக்கப்படுதலைக் கண்டு, நீதிமானாக்கப்பட்டுள்ள நபர்கள் அனைவருக்கும் பவுல் சொன்னதானவைகளை நாங்கள் ஆழ்ந்து சிந்தித்தோம்; அது என்னவெனில் . . . "சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு (நாள்தோறுமுள்ள அவரது இரக்கங்கள் மற்றும் விசேஷமாக நமக்கான ஈடுபலியாக இயேசுவைக் கொடுத்ததிலும், இப்படியாய் நம்மை நீதிமானாக்கினதிலுமுள்ள அவரது இரக்கங்களை முன்னிட்டு) உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்." இயேசு தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலுக்கென்று கொடுத்திட்டதான அப்பம் மற்றும் திராட்சரசத்தினுடைய அர்த்தத்தினை நோக்கிப்பார்த்து, அவைகளும் - அர்ப்பணிப்பு மற்றும் பலியென்னும் அதே படிப்பினைகளைக் கற்பிக்கின்றது என்று கண்டோம். முதலாவது நம்முடைய பாவங்களுக்காக — நம்மை நீதிமானாக்கத்தக்கதாக சரீரமானது பிட்கப்பட்டது மற்றும் இரத்தமானது சிந்தப்பட்டது; பின்னர் அப்பமானது (சத்தியம் - "நானே சத்தியம்"), நாம் ஏறெடுக்கும்படிக்குக் கூறப்பட்டுள்ளதான பலிக்கு, நம்மைப் பெலப்படுத்தத்தக்கதாக, நமக்குக் கொடுக்கப்பட்டது. தேவன் முதலாவதாக நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடுகூட, "திவ்விய சுபாவத்திலும்," இராஜ்யத்திலும், உடன்சுதந்தரர்களாகுவதற்கான மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்து மற்றும் அடுத்ததாக நாம் எவ்வாறு அந்த வாக்குத்தத்தங்களை உரிமைப்பாராட்டிக்கொள்ளலாம், அடையலாம் என்று நம்மிடம் கூறுகின்றார்; அதாவது "கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட வேண்டும்" என்று கூறுகின்றார் (உரோமர் 8:17). இவைகள் அனைத்தும்தான் இயேசு முதலாவது கொடுத்ததான "அப்பம் எனும்" மற்றும் பின்னர் கொடுத்ததான "பாத்திரம் எனும்" அடையாளத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த யுகம் முழுவதும் தம்மிடத்தில் சீஷர்களென வருபவர்கள் அனைவருக்கும், அவர் முதலாவதாக சத்தியத்தினுடைய போஷாக்கையும், ஆயத்தப்படுத்துதலையும்கொடுக்கின்றார் மற்றும் அவர்கள் அதைப் புசித்து, தங்களுக்கான பரம அழைப்பினுடைய பரிசினைப் புரிந்து, உணர்ந்துகொண்ட பின்னர், அவர் அவர்களுக்கு மரணத்தின் பாத்திரத்தினை அருளுகின்றார். திராட்ரசமானது இரண்டு விஷயங்களுக்கு அடையாளமாய் இருக்கின்றது; முதலாவதாக அதன் தோற்றத்தில், அது இரத்தத்தைப்போன்று காணப்படுகின்றது மற்றும் "திராட்சப்பழங்களின் இரத்தம்" என்று அழைக்கப்படுகின்றது மற்றும் இதன் காரணமாய், அது மரணத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இரண்டாவதாக அது சந்தோஷப்படுத்துகிற, புத்துணர்வு கொடுக்கின்ற மற்றும் உற்சாகப்படுத்துகின்ற ஆவியையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

நாம் பரலோக உணவினால் வெளிச்ச மூட்டப்பட்டு, பெலப்படுத்தப்பட்ட பிற்பாடு, இயேசு நம் ஒவ்வொருவரிடத்திலும் பாத்திரத்தைக் கொடுத்து கூறுவதாவது: "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்;" "என்னுடைய மரணத்திற்குள்ளாகப் பானம் பண்ணுங்கள் — உங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வாருங்கள் மற்றும் அதே வேளையில் நீங்கள் என்னுடைய ஆவியையும் பானம் பண்ணுகின்றவர்களாய் இருந்து, உலகத்தினால் கொடுக்க முடியாததும், எடுத்துப்போட முடியாததுமான சந்தோஷத்தையும், புத்துணர்வையும் பெற்றுக்கொள்வீர்கள் மற்றும் இறுதியில் என்னோடுகூட அனைத்தையும் சுதந்தரித்துக்கொள்வீர்கள்."

தேவனுடைய வாக்குத்தத்தங்களினால் நாம் இவ்விதமாய்ப் போஷிக்கப்பட்டதையும், பெலப்படுத்தப்பட்டதையும், அவரது பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கும், அவரோடுகூட "நாம் ஆளுகை செய்யத்தக்கதாக" நாம் அவரோடுகூட மரிப்பதற்கும் ஏற்கெனவே உடன்படிக்கைப் பண்ணியிருக்கின்றோம் என்பதையும் நாங்கள் நினைவுகூர்ந்தோம்.

இயேசுவினுடைய சிங்காசனம் தொடர்புடைய விஷயத்தில், தங்களுக்கான ஸ்தானங்கள் குறித்து இயேசுவிடம் இரண்டு சீஷர்கள் வேண்டிக்கொண்டதையும், அவர்களுக்கு அவர் பின்வருமாறு பதிலளித்ததையும் நாங்கள் நினைவுகூர்ந்தோம்; அதென்னவெனில், "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. ("பிதாவே இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" என்று வேண்டிக்கொண்டதான - மரணம் என்ற) நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், (தண்ணீரை அடையாளமாய்க் கொண்டுள்ள - நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்)" நான் பெறும் மரண - ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா? என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள் மற்றும் அவரோ "மெய்யாகவே கூடும்" என்றார். ஆகவே அவருடைய சிங்காசனத்தில் அவரோடுகூட உட்காருவோம் என்ற நம்பிக்கையில் நாம் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கின்றோம் மற்றும் என்னுடைய பாத்திரத்தில் உங்களால் குடிக்கக்கூடுமா? என்ற அவரது வார்த்தைகளானது எவ்வளவாய் நமக்குப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. மகிமையிலும், பாடுகளிலும் நாம் பங்கடைவதற்கு விரும்புகின்றோமா? என்று நாம் நம்மையே கேட்டுக்கொண்டோம். பின்னர் நாம் கூறினதாவது: 'ஆண்டவரே, உம்முடைய வார்த்தைகள் மூலமாக, எங்களுக்கு "ஏற்றசமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபை" கொடுக்கப்படும் என்றும், "உம்முடைய கிருபை எங்களுக்குப் போதுமானது" என்றும் நாங்கள் அறிந்திருக்கின்றோம். எங்களுடைய அனைத்தையும் நாங்கள் உம்மிடத்தில் கொடுத்துவிட்டோம் – உம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் எங்களில் உண்டுபண்ணியருளும்." இப்படியாய் எங்களது பலவீனத்திலே உம் பலம் பூரணமாய் விளங்கினபடியால் – எங்களால் கூடும். ஆமென்.'

நாங்கள் பெற்றுக்கொண்டதான அநேக கடிதங்களானது, இந்நிகழ்வு மிகவும் பரவலாய் இவ்வழியில் அங்கும், இங்குமாகக் காணப்படுகின்ற இரண்டு (அ) மூன்று பேர்கள் மத்தியில் ஆசரிக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டுகின்றது. சுமார் இருபது இடங்களில் இது ஆசரிக்கப்பட்டுள்ளதென நாம் எண்ணுகின்றோம். எழுதியுள்ளவர்கள் அனைவருமே, இந்நிகழ்வை, வேறு நாட்களில் கொண்டாடுவதற்குப்பதிலாக, அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பது பொருத்தமானதாகவும், பயபக்திக்குரியதாகவும் இருந்ததெனத் தெரிவித்துள்ளனர்.

அறிவிக்கப்பட்டிருந்த தேதியைக் குறித்து ஒன்றிரண்டு சகோதரர்கள் கேள்வி எழுப்பியிருந்தார்கள்; அதாவது ஆண்டுக்குறிப்பேடுபடி (almanac/calendar) அந்நாளானது ஏப்ரல் 14-ஆம் தேதிக்குப்பதிலாக, 12-ஆம் தேதி வருமெனக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இவர்களுக்கு நாம் பதிலளிப்பது என்னவெனில், பெரும்பான்மையான ஆண்டுக்குறிப்பேடுகளானது (almanac) வானசாஸ்திரக் கணக்கிடுதலின்படி ஆயத்தம் பண்ணப்படுகின்றன மற்றும் இவை கண்களால் பார்த்த சாட்சியின் அடிப்படையிலான யூத முறைமைகளுக்கு அபூர்வமாக இசைந்து வருகின்றது. சில ஆண்டுக்குறிப்பேடுகளானது, யூத ஆண்டுக்குறிப்பேடுகளை வெளியிடுகின்றன மற்றும் இவைகளைப் பயன்படுத்தியே, யூத கணக்கீட்டின்படி முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதி எப்போது வருமென்று உறுதிச் செய்தோம்.

நியாயப்பிரமாணத்தை (அ) யூத ஜாதியை அடையாளப்படுத்துகின்றதான சந்திரனானது, இயேசு உயிரோடு இருக்கையில் அதன் முழுமை நிலையை அடைந்தது, ஆனால் அவர் கையளித்து, மரித்தபோது, அது தேய்வுற ஆரம்பித்தது. ஏப்ரல் 14-ஆம் தேதியில் சந்திரன் பௌர்ணமி நிலவாய் இருந்தது மற்றும் அது தேய்வுற ஆரம்பித்தது; இக்காரியமானது யூத ஆண்டுக்குறிப்பேட்டிற்கு இசைவாகவே காணப்படுகின்றது மற்றும் இதனால் அந்நாளில் ஆசரித்தோம்.

ஒரு சகோதரி தனது மறுப்பைத் தெரிவிக்கும் வண்ணமாக, பஸ்காவைக் கைக்கொள்ளும் விஷயத்திற்கும், அனைத்து விஷயத்திற்கும் ஏன் நியாயப்பிரமாணத்தினையே பார்த்திடலாமே? என்று கேட்டார்கள். நம்முடைய சகோதரி அவசரப்பட்டுவிட்டார்கள்; நாம் நியாயப்பிரமாணத்தினால் நிறுவப்பட்டதான பஸ்காவை ஆசரிப்பதற்குக் கூறவில்லை, மாறாக இதற்குப்பதிலாக நிறுவப்பட்டதான "கர்த்தருடைய இராப்போஜனத்தையே" ஆசரிப்பதற்குக் கூறினோம். "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" (உரோமர் 10:4) என்று விசுவாசிக்கின்ற நாம், இதை ஒரு நியாயப்பிரமாணம் என்றும் கூறவில்லை (உரோமர் 10:4; 7:6). ஆனால் "இதைப் புசித்து, பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்றிருக்க, யார்தான் நமக்கான ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தினை, அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிக்கமாட்டோம் என்று சொல்லுவார்கள்.

*****

# தேவன் அறிவார்,நானறியேனே

கேடான வழிகளில் நான் தடுமாறி நடப்பதனை,
ஒளியின் நாளுக்கு முன்னே, இக்காரிருள்பாதையைவிட்டே,என் அடிகளைத் திருப்புகின்றாரே,
நான் செல்லும் வழிதனை அவர்அறிவாரே, அவர் கண்காணிக்கின்றாரே,
எனக்கது மறைக்கப்பட்டால்தான் என்ன?
தேவன் அறிவாரே, நானறியேனே,
நீண்டுசெல்லும் பாதையிலே தான் நடத்துவதிலே எத்துணை இன்பம்,
பூமிக்குரியவை அறுபட்டுப்போகுதே,ஆத்துமாவிலும் சிந்தையிலுமேமோதலானதே,
இவை அனைத்தும்அவர் செவிவரை எட்டும்,
இதுவரை ஒத்திருந்ததை உடைத்துவிடும்,
முழுதும் ஆழமாகவும் தெளிவாகவும் சென்றுஉடைக்கும்,
அவர் காட்டிய பாதை வனாந்தரம்,பாலைவனம் வழியேதான்,
இவ்வழி பாதுகாப்பாய் அழைத்துச்செல்லுமே, அவ்வழி தீமைக்கே இட்டுச்செல்லுமே,
அவர் பரிபூரண திட்டமதை நான் முழுதும் அறியாதிருக்கக்கூடும்,
அவரன்போ முடிவற்றது என்றேநான் விசுவாசிக்கின்றேன்,
என் நடுங்கும் வலுவிலா விரல்களை வலுவுள்ள ஓர்கரம் பற்றி நடத்துதே,
ஒளியின் வெளிச்சத்திற்கே என்னையவர் நடத்துகிறார்,
முடிவை நானறியேனே,தேவன் மட்டுமே அறிந்திடுவாரே.

R239::3::14

# அவரது மேலான நாமத்தைத் தரித்துக்கொள்ளுதல்

வாழ்க்கையின் இடுக்கமான பாதையிலே பயணம் செய்யும் யாத்ரீகரே, பொறுமையாயிருங்கள்.
ஜெபிக்கக்கூட பெலனின்றி கவர்ந்திழுக்கப்பட்டு சோகனைக்கு ஆட்பட்டவரே,
மகிழ்ந்து களிகூருங்கள், உங்களுக்கான ஓய்வு உங்கள் அருகினிலே.
கர்த்தர் தம்மை அன்பு செய்கின்றவர்களுக்கு என்ன கொடுக்க இருக்கிறார் என்பதை அறிவீரோ?
அவருடன் வாழவும், அவரது மகிமையைப் பகிர்ந்து கொள்ளவுமே பங்களிக்கின்றாரே,
அவர் மேலான நாமம் தன்னைத் தரித்துக்கொண்டு ஆட்சி செய்யவே
கிறிஸ்து என்ற நாமம் தன்னைத் தருகின்றாரே,
இது முதல் அவள் நமது கர்த்தர் நீதிபரர்-இந்தப் பெயராலே அழைக்கப்படுவாளே,
பாதை மிகவும் செங்குத்தானதாய், நெருக்கமானதாய்,
ஆழமானதாய் இருக்கின்றது என்பதை நானறிவேனே,
சில நேரங்களில் நிழல் கூட நம் நலிந்துபோன விசுவாசம் சோதிக்கப்படும்வரை
அந்நாளின் ஒளியை மறைக்கக் கூடும்,
ஆனால் அவருடனேகூட நாம் சிலுவைதனில் அறையப்பட்டு,
அவருக்காக நஷ்டப்பட்டு, அவருடன் நமது பங்கை நிறைவேற்றும்போதினிலே,
நாம் திருப்தியடைந்து கொள்ளலாகுமே,
இப்போது சிலுவை நம்முடையதாக இருந்தாலும்,
வெளியே வா, உன் எஜமான் அழைக்கின்றார் எனும் குரலொலி கேட்கும் வரை
நாம் அதில் தரித்து நிற்கவேண்டுமே, எத்தனை ஆசீர்வாதமடைந்தவர் நாமே,
அதன் பின்னே நம் சிலுவையை என்றென்றைக்கும் கீழே சாற்றிவிட்டு,
சிலுவை இருந்த இடத்திலே வெற்றிபெற்றவருக்கான
ஜீவ கிரீடத்தைப்பெற்று நித்தியத்திற்கும் அணிந்து
நிலையான பெரு மகிழ்ச்சியான வாழ்வு வாழ்வது எத்தனை ஆசீர்வாதம்?
கர்த்தாவே, வாழ்க்கையில் நாங்கள் ஒவ்வொரு அடியையும் எடுத்துவைக்க
எங்களுக்கு வழிகாட்டும்,
இடுக்கமான பாதையைவிட்டு வழிவிலகி
கண்காணக்கூடாத தேசத்திலே எங்கேயோ அலைந்து திரியாவண்ணம்
எங்களுக்குக் கிருபை தாரும்.
அதன் பின்னே நாங்கள் உமது மகிமை நிறைந்த முகத்தை கூர்ந்து
உற்றுநோக்க உமது அருள்தாரும். அழிந்துபோன இந்த சந்ததியின் இரட்சிப்பின் கர்த்தாநீரே,
நடுவில் தடையாக மூடியுள்ள திரையை விலக்கிக் கிருபை தாரும்.

# யார் பிரசங்கிக்க வேண்டும்

ஆவியினுடைய அபிஷேகித்தலைப் பெற்றுக்கொண்டு மற்றும் இப்படியாய்க் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கத்தினர்களாய் அங்கீகரிக்கப்பட்டவர்கள் அனைவருமே பிரசங்கிக்க வேண்டும் என்று நாம் பதிலளிக்கின்றோம். தலைபோலவே ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் - "சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கென அவர் என்னை அபிஷேகித்துள்ளார்" என்பது உண்மையாகவே இருக்கின்றது. நாம் ஒவ்வொருவருமே மற்றவர்களிடமிருந்து வேறுப்பட்ட விதத்தில் தாலந்துகளையும், வரங்களையும் பெற்றிருக்கின்றோம் மற்றும் நம்மில் எவருமே, நமது தலைப்போன்று பூரணமானவர்கள் அல்ல; ஆனாலும் ஒவ்வொருவனும் தன்னால் முடிந்தமட்டிலும் பிரசங்கிப்பதற்குரிய பொறுப்பினை உடையவனாய் இருக்கின்றான். சிலருக்குத் திரளான ஜனக்கூட்டங்களுக்குப் பிரசங்கிக்க முடியும்; வேறுசிலருக்கு இரண்டு அல்லது மூன்று பேருக்குப் பிரசங்கிக்க முடியும்; சிலருக்கு வீடு வீடாய்ச் சென்று பிரசங்கிக்க முடியும்; சிலருக்கு ஏற்றகாலத்தில் சில வார்த்தைகளைச் சொல்லிட முடியும்; சிலருக்குப் பிரதிகளை விநியோகித்திட முடியும்; சிலருக்கு மற்றவர்கள் பிரசங்கிக்க உதவத்தக்கதாக தங்களது உக்கிராணத்துவத்தின் கீழ்க்காணப்படும் அர்ப்பணிக்கப்பட்ட பணத்தைக்கொடுக்க முடியும். சிலருக்கு இவைகளில் அநேகவற்றைச் செய்ய முடியும் மற்றும் சிலருக்கு இவைகள் அனைத்தையும் செய்திட முடியும், மற்றும் அனைவராலுமே மறுரூபமாகுதலுக்கு ஏதுவான நற்செய்தியின் வல்லமையினைத் தங்கள் வாழ்க்கை மற்றும் வழக்கங்கள் மூலமாகப் பிரசங்கிக்க முடியும்; ஏனெனில் நாம் அனைவரும் மனுஷர் அனைவராலும் அறியப்படும் மற்றும் வாசிக்கப்படும் நிருபங்களாய் இருக்கின்றோம்.

நீங்கள் பிரசங்கித்துக்கொண்டிருக்கின்றீர்களா? பிரசங்கிப்பவர்களே அல்லாமல் வேறு எவரும் சிறுமந்தையில் காணப்படமாட்டார்கள் என்று நாம் நம்புகின்றோம். உங்கள் தாலந்துகள் அனைத்தையும் கொண்டும் மற்றும் உங்கள் முழுப்பெலத்தோடும் நீங்கள் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறீர்களா? பிரசங்கித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்றால் ஏற்றகாலத்தில், "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று சொல்லக்கேட்பீர்கள். ஒருவேளை பிரசங்கிக்கவில்லையெனில் இப்போதே துவங்குங்கள்; நீங்கள் அபிஷேகிக்கப்படுவதற்கு முன்னதாகவே நீங்கள் உங்களுடைய அனைத்தையும் அர்ப்பணித்துவிட்டீர்கள் என்பதை நினைவில்கொள்ளுங்கள் மற்றும் அர்ப்பணித்ததில் ஒரு பகுதியைத் திரும்ப எடுத்து வைத்துக்கொண்டு, உங்களால் ஜெயங்கொண்டவர்கள் ஆகிடமுடியாது.

# எக்ளீஷியா

இந்தக் கிரேக்க வார்த்தையானது, சபை என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இதன் அர்த்தம் ஒரு கூட்டத்தார், சபை அல்லது சேர்ந்து ஒன்றாய்க் காணப்படும் ஜனங்கள், குழு ஆகும்.

இன்று சபை என்று உரிமை பாராட்டிக்காணப்படும் அநேகம் அமைப்புகள் காணப்படுகின்றன மற்றும் இவைகள் வெவ்வேறு ஐக்கியத்தின் கட்டினைப் பெற்றிருக்கின்றன; ஆனால் தேவனுடைய வசனத்தினுடைய ஆதாரத்துடன், எந்த எக்ளீஷியாவை, சரீரத்தை அல்லது சபையை இயேசு ஸ்தாபித்தார் என்றும் மற்றும் அதன் ஐக்கியத்தின் கட்டுகள் என்னவாயிருக்கின்றது என்றும் நாம் அறிய விரும்புகின்றோம்; இரண்டாவதாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் அச்சபைக்குரியவனாகிட வேண்டும் என்பதை நாம் வெளிப்படுத்த விரும்புகின்றோம்; மூன்றாவதாக தவறான எக்ளீஷியா அல்லது சபையில் இணைந்துகொள்வதினால் ஏற்படும் பாதகமான விளைவுகள்; மற்றும் நான்காவதாக, சரியான சபையில் இணைந்துகொண்ட பிற்பாடு, நமது அங்கத்துவத்தினை இழப்பதினால் உண்டாகும் விளைவுகளை நாம் வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

முதலாவதாக, இயேசு தம்முடைய ஊழியத்தின்போது சேர்த்துக்கொள்ள துவக்கினதும் மற்றும் அவர்களுக்கான ஈடுபலி கொடுக்கப்பட்ட பிற்பாடு, பெந்தெகொஸ்தேயின் போது, பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டதுமான சபையானது, பூமிக்குரிய நேரத்தையும், தாலந்துகளையும், ஜீவியத்தையும் தேவனுக்கு ஒரு பலியாக அர்ப்பணித்துக்கொண்ட சீஷர்கள் அடங்கின ஒரு சிறு கூட்டத்தாராக இருந்தனர். இவர்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டு, ஒரு சமுகத்தின் அங்கத்தினர்களென ஒன்றிணைந்து கட்டப்பட்டிருந்தனர் மற்றும் இவர்கள் பிரமாணங்களையும், நடைமுறைகளையும்/நிர்வகிப்புகளையும் பெற்றிருந்தனர் மற்றும் ஒரு தலையை அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆளும் அதிகாரத்தினைப் பெற்றிருந்தனர். கட்டுகளானது, அன்பு மற்றும் பொதுநலனின் கட்டுகளாகக் காணப்பட்டது. அனைவரும் அதிபதியாகிய இயேசுவின் கீழ்ச் சேர்க்கப்பட்டிருந்தபடியால், ஒருவருடைய நம்பிக்கைகள் மற்றும் அச்சங்கள், சந்தோஷங்கள் மற்றும் துக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் போன்றே, மற்றவர்களுடையதும் காணப்படுகின்றது; மற்றும் இதனால் இவர்கள் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட எந்த ஒரு விசுவாச பிரமாணத்தினுடைய அடிப்படையிலான ஒன்றிணைதலினால் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதைக்காட்டிலும், மிகப் பூரணமான இருதயத்தினுடைய ஒன்றிணைதலைப் பெற்றிருந்தனர். இப்படியாக இவர்களது அமைப்பானது, ஆவியினாலானதாய் இருந்தது; ஒவ்வொருவரையும் கட்டுப்படுத்தி ஆளும் அவர்களுக்கான பிரமாணமாய், அன்பானது காணப்பட்டது மற்றும் அனைவருமே, அவர்களது கர்த்தருடைய ஜீவியத்திலும், கிரியைகளிலும் மற்றும் வார்த்தைகளிலும் வெளிப்பட்டதான "ஆவியின் பிரமாணத்தின் கீழ்" கீழ்ப்படியப் பண்ணப்பட்டிருந்தனர். "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று சொன்னவருடைய சித்தமே அவர்களை நிர்வகித்ததாய் இருந்தது.

இப்படியாக ஆதிசபை இயேசுவினுடைய தலைமைத்துவத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு, பூரண ஒருமையிலும் மற்றும் இணக்கத்திலும் காணப்பட்டதை நாம் பார்க்கின்றோம். இந்தச் சபை அமைப்பை, இதைப்போன்று பின்பற்றிவருவதாக இப்பொழுது பாசாங்குப்பண்ணிக்கொண்டிருக்கும், அதாவது பல்வேறு சபைபிரிவு அமைப்புடன் ஒப்பிட்டு வித்தியாசம் அறியுங்கள்; இந்த அமைப்புகள் ஒவ்வொன்றும் அதன் அங்கத்தினர்களை ஏதோ ஒரு விசுவாசப்பிரமாணம் அல்லது அதன் (இன்பகரமாய் உள்ள அநேகவற்றை உள்ளடக்கியுள்ள) சொந்த கொள்கைகளின் தொகுப்பேட்டின் அடிப்படையில் மன ஒற்றுமைக்குள் பிணைத்துவிடுகின்றது மற்றும் இவை ஒவ்வொன்றும் அதன் சொந்த பிரமாணங்களைப் பெற்றிருக்கின்றன.

இந்தப் பிரமாணங்களானது, இவர்களது தலையானவர்களிடமிருந்து மற்றும் அதிகாரிகள் அல்லது நியாயப்பிரமாணிக்கன்களிடமிருந்து தோன்றினவைகளாகும்; ஆகையால் இந்தத் தற்காலத்திலுள்ள சபைகளானது, தங்களது விசுவாசப்பிரமாணங்களை ஆதிகாலத்தில் நிறுவினவர்களை - தங்களுக்கான ஆளும் அதிகாரிகளாக அல்லது தலைகளாகப் பெற்றிருக்கின்றனர் மற்றும் அடையாளம் கண்டுகொள்கின்றனர் என்பது தெளிவாய்த் தெரிகின்றது; பல்வேறு விசுவாசப்பிரமாணங்களை நிறுவினவர்கள் ஒருவரிலிருந்து ஒருவர்

வேறுபட்டிருப்பினும், இவர்களது குருமார்கள்/ஊழியக்காரர்கள் கலந்தாய்வு கூட்டங்களிலும், மேலவைகளிலும், குருமார் பேரவைகளிலும், மூப்பர் சங்கங்களிலும் தேவவசனத்தை அவமாக்கிடும் "முன்னோர்களின் பாரம்பரியங்களை" பலவகையாக விளக்கி அமுல்படுத்துகின்றனர். இவைகள் சபையினுடைய மெய்யான தலையாகிய - இயேசுவின் இடத்தையும், மெய்யாய்ப் போதித்து, சகல சத்தியத்திற்குள்ளாய் வழிநடத்தும் பரிசுத்த ஆவியின் இடத்தையும் எடுத்துக்கொள்கின்றது. இதைக் குறித்துத் தீர்க்கத்தரிசியாகிய ஏசாயா கூறுவதைக் கேளுங்கள். "மூப்பனும் கனம்பொருந்தினவனுமே தலை, பொய்ப்போதகம்பண்ணுகிற தீர்க்கத்தரிசியே வால்" (ஏசாயா 9:15). முழுப்பெயர்ச்சபை அமைப்புமே, வெளிப்படுத்தின விசேஷத்தில் "பாபிலோன்" - குழப்பம் - போப்மார்க்கம் தாய் மற்றும் புராட்டஸ்டண்ட் மகள்கள் என்று சித்தரிக்கப்பட்டுள்ளது.

இதை இவர்கள் ஒத்துக்கொள்வார்களா? இல்லை; ஏனெனில் இன்றுள்ள வெதுவெதுப்பான பெயர்ச்சபையானவள், தான் நிர்ப்பாக்கியமுள்ளவளாகவும், பரிதபிக்கப்படத்தக்கவளாகவும், தரித்திரமானவளாகவும், குருடானவளாகவும், நிர்வாணியானவளாகவும் இருக்கிறதை அறியாமல், தன்னை ஐசுவரியமானவள் என்றும், திரவியசம்பன்னவள் என்றும், தனக்கு ஒரு குறைவுமில்லை என்றும் நம்புகின்றாள் (வெளிப்படுத்தல் 3:17).

இது "கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்?" ஆனால் இது நம்முடைய உபதேசமல்ல; இது "கவனித்திருப்பதற்கு நலமாயிருக்கின்றதான அதிக உறுதியான தீர்க்கத்தரிசனத்தின்" எச்சரிப்புச் சத்தமாய் இருக்கின்றது. அன்பான தொனியில், நமது ஆண்டவர் மறுபடியுமாக, "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்" என்று கூறுகின்றார்.

கிறிஸ்துவின் உண்மை சபையானது, இரண்டு விதங்களில் கருதப்படலாம்: அதாவது ஆதிசபையார் போன்று நமது பிதாவினுடைய சித்தத்தைச் செய்வதற்கென முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களும், அவருடைய சித்தத்திற்கும் மற்றும் அவரது நிர்வகிப்பிற்கும் மாத்திரம் இணங்குபவர்களும், வேறு யாரையும் அங்கீகரியாமலும், யாருக்கும் கீழ்ப்படியாமலும் காணப்படுகின்றதான யாவரும் - சுவிசேஷ யுகத்தினுடைய துவக்கம் முதல் அதன் முடிவு வரையுள்ள இந்தப் பரிசுத்தவான்கள், இந்த வகுப்பாரிலுள்ள யாவரும் முத்திரிக்கப்படும்போது, பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களாகிய "முதற்பேறானவர்களின் சபையாக" காணப்படுவார்கள். இவர்கள் அனைவரும் குறிக்கோளிலும், நம்பிக்கையிலும் மற்றும் பாடுகளிலும் ஒன்றாயிருப்பார்கள் மற்றும் ஏற்றகாலத்தில் மாபெரும் சுதந்தரத்தில் இயேசு கிறிஸ்துவோடுகூட உடன்சுதந்தரர்களாக - தேவனை அன்பு கூருகின்றவர்களுக்கு அவர் வாக்களித்துள்ளதான இராஜ்யத்தில் சுதந்தரர்களாகிடுவார்கள்.

இதே வகுப்பார் அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றதான மற்றொரு விதமானது - ஒரு பகுதியினரை, முழுச்சபையாக கருதுவதாகும்; இப்படியாக இந்த வகுப்பாரில் ஜீவித்துக் கொண்டிருப்பவர்கள் யாவரும் சபையெனக் கூறப்படலாம்; அல்லது இவ்வகுப்பாரிலுள்ள ஜீவனுள்ள அங்கத்தினர்களின் ஏதேனும் பாகம், ஒன்று கூடிடும்போது, சபை என்று அழைக்கப்படலாம்; ஏனெனில் இயேசுவின் வார்த்தைகள் மூலமாக, எங்கே இரண்டு அல்லது மூன்றுபேர் கூடுகிறார்களோ, அவர்கள் நடுவில் அவர் காணப்படுவதாக நாம் அறிந்துகொள்கின்றோம்; ஆகையால் அது சபை கூடுகையாய் இருக்கும் - "முதற்பேறானவர்களுடைய சபை" கூட்டமாய் இருக்கும். சபை முழுவதும் தங்கள் தலையாகிய இயேசுவுக்கு ஒப்பானவர்களாக்கப்பட்டு, அவரோடுகூட மகிமைப்படுத்தப்படும்போதுதான் இவர்களின் சர்வசங்கம் காணப்படும்.

இதுவே கிறிஸ்துவின் சபைக்கான நம்முடைய விளக்கமாகும்; இது பவுல் அடிகளார் சபையை, மனித சரீரத்தோடு ஒப்பிடுகையில் மிகச் சிறப்பாய் விவரிக்கப்பட்டுள்ளது (உரோமர் 12:4, 5). இந்த உருவகத்தில், இயேசு தலையினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர் மற்றும் அவருடையவர்கள் யாவரும், தலையினால் எதன்மேல் மற்றும் எதன் வாயிலாக ஆளுகை செலுத்தப்படுகின்றதோ அந்தச் சரீரத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இயேசு தம்முடைய ஒட்டுமொத்த சபையின் மீது தலையாக இருந்துள்ளார் மற்றும் எப்போதும் இருப்பார்; இதுபோலவே அவர் ஒட்டுமொத்த ஜீவனுள்ள சபையின் தலையாகவும், அதிகாரியாகவும் இருக்கின்றார் மற்றும் அவருடைய நாமத்தில் இரண்டு அல்லது மூன்றுபேர் கூடிடும் ஒவ்வொரு கூடுகையிலும், அவர் தலையாக, அதிகாரியாக மற்றும் போதகராக இருக்கின்றார்.

அவர் எந்தவிதத்தில் போதிக்கின்றார்? என்று கேட்கப்படலாம். தலை அல்லது போதகருடைய தன்மைகளைச் செயல்படுத்துவதன் மூலம், அங்குக் காணப்படும் ஒருவரையோ அல்லது அநேகரையோ சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கும், விசுவாசத்தைப்

பலப்படுத்துவதற்கும், நம்பிக்கையை ஊக்குவிப்பதற்கும், வைராக்கியத்தினை ஊக்குவிப்பதற்கும் தம்முடைய வாய்க்கருவிகளெனப் பயன்படுத்துவதன் மூலம் ஆகும். அதாவது ஓர் அவயம், இன்னொன்றிற்கு ஊழியம்புரிவதற்கென உங்களது சரீரத்தினுடைய தலையானது அழைக்க முடிகிறது போலாகும் என்று நாம் பதிலளிக்கின்றோம். ஆனாலும் எச்சரிப்பின் ஒரு வார்த்தை என்னவெனில்: ஒருவர் வலதுகரமெனப் பயனுள்ள பாத்திரமாகுகின்றாரெனில், அவர் தலையாகிடுவதற்கு விரும்பிடாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும். பெருமிதம் கொள்ளாதீர்கள், பெருமையானது நம்மை செயலற்றுப் போகச் செய்து, நம்மைப் பயனற்றவர்களாக்கிடும். "நீங்களோ ரபீ (போதகர்) என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் (தலையாயிருக்கிறார்) போதகராய் இருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்." சிறிய அங்கத்தினன்கூடத் தனது பணியினை அசட்டையாய் எண்ணாதிருப்பானாக; ஏனெனில், "அவையெல்லாம் ஒரே அவயமாயிருந்தால், சரீரம் எங்கே?" "சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது" - "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (1 கொரிந்தியர் 12:18, 19; மத்தேயு 23:8).

அமைப்பு/organization தொடர்பான தேவனுடைய திட்டமானது எத்துணை எளிமையாயும், அருமையாயும் மற்றும் விரும்பிய பலனைக் கொடுக்கிறதாயும் உள்ளது!

இப்பொழுது நம்முடைய இரண்டாம் ஆய்விற்கு வரலாம்: அதாவது அனைத்துக் கிறிஸ்தவர்களும், இந்த அமைப்புடன் இணைந்துகொள்ள வேண்டும். இயேசுவினால் ஒழுங்குப்படுத்தப்பட்ட சபையாய் இருக்கும் வகுப்பினரைக் குறித்து இதுவரையிலும் சொல்லப்பட்டிருப்பவைகளின் வெளிச்சத்தில், ஒருவேளை நீங்கள் உங்கள் சித்தம், தாலந்து, நேரம் முதலானவைகளை ஒப்புக்கொடுத்துள்ளீர்களானால், நீங்கள் இயேசுவினால் பின்னடியாராக, எக்ளீஷியாவின் அல்லது அவர் தலையாய் இருக்கும் சரீரத்தின் அங்கமாக, பரலோகத்தில் பேரெழுதப்பட்டுள்ளவர்களாக அடையாளம் கண்டுகொள்ளப்படுவீர்கள் என்பது உறுதியே. இப்படியாக நாம் இயேசுவின் சபையில் இணைந்துகொண்டு, அர்ப்பணிப்பின் வாயிலாக அங்கத்தினர்களென நம்முடைய பெயர்களானது பதிவு பண்ணப்படுகின்றது. ஆனால் பூமியிலுள்ள ஏதோ ஓர் அமைப்புடன் நான் இணைந்துகொண்டு, ஏதோ ஒரு விசுவாசப்பிரமாணத்திற்கு ஒப்புதல் அளித்து மற்றும் பூமியில் என் பெயர் எழுதப்பட்டிருக்க வேண்டாமோ? என்று உங்களில் யாரேனும் கேட்கலாம்? இல்லை; இயேசுதான் உங்கள் முன்மாதிரி மற்றும் போதகர் என்றும், இன்னுமாக தேவ வசனத்தை அவமாக்கிப்போடுகின்றதும், கிருபையிலும், அறிவிலும் நீங்கள் வளர்வதைத் தடைப்பண்ணுகிறதாகிய அடிமைத்தனத்திற்குள்ளாக்கும் முன்னோர்களின் பாரம்பரியங்கள் மற்றும் விசுவாசப்பிரமாணங்களுடன் உங்களை இணைத்துக்கொள்ளும்படிக்கான எந்த ஓர் அதிகாரத்தினையும் அவரது வார்த்தைகளிலோ, கிரியைகளிலோ உங்களால் கண்டுபிடிக்க முடியாது என்றும், இன்னுமாக இவைகளுக்கு எதிராகவே "நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" (கலாத்தியர் 5:1) என்று பவுல் அடிகளார் கூறி உங்களை எச்சரிக்கின்றார் என்றும் நினைவில் கொள்ளுங்கள்.

ஆனால் சிலர் பின்வருமாறு சொல்லிடலாம்: இந்தத் தற்கால பெயர்ச்சபைகள் எவற்றுடனும் இணைந்துகொள்வது சரியற்றது என்றால், நாமாகவே கண்களுக்குப் புலப்படுகிற ஓர் அமைப்பினை உருவாக்கிடுவது சரியாய் இருக்குமா? ஆம், அதைத்தான் நாம் பெற்றிருக்கின்றோம் - ஆதிசபை போன்று பின்பற்றி ஓர் organization/அமைப்பினைப் பெற்றிருக்கின்றோம். அந்த ஆதி எளிமைக்கு நாம் வந்துள்ளதாக எண்ணுகின்றோம். கர்த்தர் இயேசு மாத்திரமே நம்முடைய தலையாக அல்லது நியாயப்பிரமாணிக்கனாக இருக்கின்றார்; பரிசுத்த ஆவியானது நமக்கு விளக்கம் அளித்து, சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துகின்றது; நம்முடைய பேர்கள் அனைத்தும் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன; நாம் அன்பினாலும், பொது நலனினாலும் ஒன்றிணைக்கப்பட்டிருக்கின்றோம்.

ஒருவரையொருவர் அறிந்துகொள்வது எப்படி - என்று கேட்கின்றீர்களா? நமது போதகரின் ஆவியானது, வார்த்தையிலும், கிரியையிலும் மற்றும் நடத்தையிலும் மற்றும் பார்வையிலும் வெளிப்படுகையில், நாம் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளலாமல்லவா என்பது நம்முடைய பதிலாய் இருக்கின்றது. ஆம், ஜீவனுள்ள விசுவாசம், மாயமற்ற அன்பு, நீடியபொறுமையுடன்கூடிய சாந்தம், குழந்தைகளிடத்தில் இருப்பது போன்ற எளிமை, இதனோடுகூட உறுதியும், முதிர்ச்சியின் வைராக்கியமும், தேவனுடைய குமாரர்களை வெளிப்படுத்துகின்றது மற்றும் பூமியில் பதிவுபண்ண வேண்டியதின் அவசியம் நமக்கில்லை;

காரணம் இவர்களின் பெயர்கள் அனைத்தும், ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.

வியாதியஸ்தர்கள் சந்திக்கப்பட வேண்டுமா அல்லது உதவி பண்ணப்பட வேண்டுமா? இவர்கள் அர்ப்பணிக்கப்பட்ட நேரத்துடன் ஆயத்தமாய்க் காணப்படுகின்றனர். கர்த்தருடைய ஊழியத்திற்குப் பணம் அவசியமாயுள்ளதா? இவர்கள் அர்ப்பணிக்கப்பட்ட பணவளத்துடன் ஆயத்தமாய்க் காணப்படுகின்றனர். அவரது ஊழியமானது, உலகத்தாரிடமிருந்தும், சீர்க்கெட்டுப்போன பெயர்ச் சபையிடமிருந்தும் நிந்தனைகள் கொண்டுவருகின்றதா? இவர்களும் நற்பெயரை - அனைத்தையும் - தேவனுக்காக அனைத்தையும் பலிசெலுத்தியுள்ளனர்.

ஆனால் நம் மத்தியில் ஒழுங்கற்று நடப்பவர்களை நாம் எப்படிக் கையாளுவது என்றும், நம்மைச் சுற்றிக்காணப்படுகின்றது போன்ற எந்த அமைப்பையும் நாம் பெற்றிருக்கவில்லையெனில், நாம் செய்திடும்படி கர்த்தர் எதிர்ப்பார்ப்பவைகளைச் செய்து, இத்தகையவர்களிடமிருந்து நம்மை எப்படி விடுவித்துக்கொள்ளலாம் என்றும் கேட்கின்றீர்களா? இயேசுவும், பவுலும் கட்டளையிட்டதைச் செய்திடுங்கள் என்று நாம் பதிலளிக்கின்றோம்.

ஆதிசபையில் காணப்பட்டதுபோலவே, இப்பொழுதும் தனிப்பட்ட அங்கத்தினர்கள் மத்தியில் வளர்ச்சி பல்வேறு அளவுகளில் காணப்படுகின்றது. திடனற்றவர்களாய்ச் சிலர் இருப்பார்கள், அவர்களைத் தேற்றுங்கள் என்றும், பலவீனராய்ச் சிலர் காணப்படுவார்கள், அவர்களைத் தாங்குங்கள் என்றும், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாய்/பொறுமையாய் இருக்கும் அதேவேளையில் ஒழுங்கில்லாதவர்களுக்குப் (கிறிஸ்துவின் உண்மையான ஆவியினின்று விலகிப் போகிறவர்களுக்கு) புத்திசொல்லுங்கள் என்றும் பவுல் அடிகளார் கூறுகின்றார் (1 தெசலோனிக்கேயர் 5:14). ஒழுங்கில்லாதவர்களைப் பலவீனர் என்று தவறுதலாய் எடுத்துக்கொண்டு அவர்களைத் தாங்கிவிடாதீர்கள் மற்றும் ஒழுங்கில்லாதவர்களைத் திடனற்றவர்கள் என்று தவறுதலாய் எடுத்துக்கொண்டு அவர்களைத் தேற்றாதீர்கள். அவர் யாரை ஒழுங்கில்லாதவர்களென்று கூறுகின்றார்? சந்தேகத்திற்கிடமின்றி ஒழுங்கில்லாமல் நடப்பதற்கு அநேகம் வழிகள் காணப்படுகின்றன; 2 தெசலோனிக்கேயர் 3:11-ஆம் வசனத்தில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய் இருக்கின்றார்கள் என்றும், இவர்கள் யாராலும் குற்றஞ்சாட்டப்படாதவர்களாகக் காணப்படத்தக்கதாக, தன்னைப்போல் வேலை செய்திட வேண்டும் என்றும், வேலை செய்யவில்லையெனில், சாப்பிடவும் கூடாது என்றும் கூறுகின்றார். மற்றவர்களுக்கு முன்மாதிரியாகக் காணப்படத்தக்கதாக, இப்படியாக அவர் கூறவும், இதைச் செய்யவும் செய்தார். அவர் நல்லொழுக்கமற்ற மற்றும் அநீதியான நபர்களைக் குறித்தும் மற்றும் வேதவாக்கியங்களைப் புரட்டி, இப்படியாய்த் தேவனுடைய சத்தியத்தைப் பொய்யாய்க் காண்பிக்கின்றவர்கள் குறித்தும் நம்மை எச்சரிக்கின்றார். மறுபடியுமாக 14-ஆம் வசனத்தில் அப்படியானவனுக்குப் புத்திமதி கூறின பிற்பாடும், அவன் "கீழ்ப்படியாமற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்" என்று கூறுகின்றார் (2 தெசலோனிக்கேயர் 3:14, 15).

இன்னுமாக இரண்டு சகோதரர்களுக்கு இடையில் மனஸ்தாபம் காணப்படுகிற காரியத்திற்கு, இயேசு தெளிவான கட்டளைகளைக் கொடுக்கின்றார் (மத்தேயு 18:15, 17). "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் (ஒன்றுகூடிடும் சகோதரர் கூட்டத்தாருக்கு) தெரியப்படுத்து; அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக." நமது தலையானவருடைய ஒழுங்கின் கீழ், நாம் அவரை அன்புகூரும் காரணத்தினால், அவரது கட்டளைகளுக்குச் செவிக்கொடுப்போமானால், சகோதரர்கள் மத்தியில் பிரச்சனைகளும் மற்றும் மனஸ்தாபங்களும் எத்தனை சொற்பமாய்க் காணப்படும்.

இந்த ஒழுங்கு முறைமையானது, கர்த்தரினால் நியமிக்கப்பட்ட மற்றும் வழிநடத்தப்படுகின்றதான சுவிசேஷகர்களை, மேய்ப்பர்களை மற்றும் போதகர்களைப் பெற்றிருக்கின்றது. இவர்களுக்கு "அப்போஸ்தல வாரிசுகள்" என்று அழைக்கப்படுபவர்களினால்

கைகள் வைக்கப்படுவது அவசியமல்ல; ஏனெனில் "கர்த்தரின் ஆவியானது" "பிரசங்கம்பண்ணுவதற்கெனச்" சரீரத்தினுடைய அங்கத்தினர்கள் யாவரையும் அபிஷேகித்துள்ளது (ஏசாயா 61:1) மற்றும் சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினனும், சக அங்கத்தினர்களுடைய பக்திவிருத்திக்கெனத் தனது இந்த வேலையினைச் செய்திடுவது கடமையாக இருக்கின்றது. பரலோகத்தில் பேரெழுதப்பட்டுள்ளதும், அன்பினால் கட்டப்பட்டுள்ளதும் மற்றும் ஆவியினால் நடத்தப்படுகிற அங்கத்தினன் உரிமையுமுடைய கிறிஸ்துவினுடைய சபையின் ஒழுங்கு முறையானது, எத்துணை முழுமையானதாய்க் காணப்படுகின்றது மற்றும் பெயர்ச்சபையை மெய்ச்சபை என்று தவறாய்ப் புரிந்துகொண்டது எத்துணை மோசமான தவறாய் இருக்கின்றது!

நம்முடைய நான்காம் ஆய்வுபொருளின் முக்கியத்துவமானது வலியுறுத்தப்படுவதற்கு அவசியமில்லை. கிறிஸ்துவின் சரீரத்தில் அல்லது மெய்சபையிலுள்ள நம்முடைய அங்கத்துவத்தினை இழப்பது என்பது பயங்கரமான துன்பமாக இருக்கும் என்பது உண்மையே. மரித்ததாக கருதப்படும் பழைய சுபாவமானது மறுபடியும் உயிரடைந்து பெருமையின், சுயநலத்தின், பொறாமையின், தீமைபேசுதலின் உருவம் எடுத்துக் காணப்படுகின்றதா அல்லது இல்லையா என்று விழிப்புடன் கவனம் செலுத்தாவிடில், எந்த அங்கத்தினனும் இந்த அபாயத்திற்கு நீங்கலாய் இருப்பதில்லை. ஆனால் ஒருவேளை (பலிச்செலுத்துவதற்கு ஆயத்தமாயிருக்கும்) அன்பினால் நிரம்பிக் காணப்பட்டு, தாழ்மையினைத் தரித்துக்கொண்டு, மீட்கும் இரத்தத்தினுடைய மூடுதலின் கீழ்க் காணப்படுவோமானால், "நமக்கு இராஜ்யத்தைக் கொடுக்க நம் பிதா பிரியமாயிருக்கிறார்" என்ற நிச்சயத்தினைப் பெற்றிருந்து, சபையில் (சரீரத்தில்) பாதுகாப்பாய் இருப்போம்.

ஆம், இராஜ்யமே, மெய்ச்சபையின் - இப்பொழுது அவமானத்தின் பாதையில் நடந்து, மரணத்தினுடைய கசப்பான பாத்திரத்தில் பானம்பண்ணும் சிறுமந்தையினரின் மகிமையான நோக்கமாகக் காணப்படுகின்றது. நம்மில் வெளிப்படப்போவதான மகிமையானது, விசுவாச கண்களுக்குத் தவிர, மற்றப்படி தெரியாது; ஆனாலும் சோதனைகளும், பரீட்சைகளும் எல்லாப் பக்கங்களிலும் மிகவும் பார்க்கக்கூடிய விதத்தில் காணப்படும். "ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" (எபிரெயர் 4:1).

இப்படியாக பவுல் அடிகளார் மற்றவர்களை எச்சரித்தார் மற்றும் மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற அவர் ஆகாதவராய்ப் போகாதபடிக்கு அச்சம் கொண்டிருந்தார் (1 கொரிந்தியர் 9:27). பெயர்ச் சபைகளில் இருப்பவர்களால், நம் நாமங்கள் பொல்லாததென்று தள்ளிவிடப்படலாம்; எனினும் "பரலோகத்தில் நம்முடைய நாமங்கள் எழுதப்பட்டிருப்பதினால் நாம் சந்தோஷப்பட்டுக் களிகூருவோமாக." அவர்கள் உங்களிடத்தில் கோபமுகத்தினைக் காண்பித்து, பலவித தீமையான மொழிகளையும், உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்லிடலாம் அல்லது உங்களது செல்வாக்கினை நாங்கள் இழந்திட விரும்பவில்லை, எங்களோடு தரித்திருப்பதினால் நீங்கள் மிகுந்த நன்மையினைச் செய்திடலாம் என்று கூறி முகஸ்துதி செய்து, உங்கள் மனதை மாற்றிட நாடிடலாம். ஓ! இந்தத் "தீங்கு நாளில்"...

"உலகத்தின் பயமூட்டும் கோபப் பார்வையினால் அசைவுறாத,
அதன் முகஸ்துதி புன்முறுவலுக்குக் கவனம் செலுத்திடாத,
உபத்திரவத்தின் கடல்களினால் மூழ்கடிக்க முடிந்திடாத,
சாத்தானின் தந்திரமான வஞ்சனையினால் மூழ்கடிக்க முடிந்திடாத"
விசுவாசம் ஆம் விசுவாசம் எத்துணை அவசியமாயுள்ளது.

அருமையான அன்புக்குரியவர்களே, "ஆனபடியினாலே, நீங்கள் - கொஞ்சமேனும் - மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" எனும் எச்சரிப்பை மறுபடியுமாக நாம் திரும்பக்கூறுகின்றோம் (கலாத்தியர் 5:1). வேதவாக்கியங்களினால் அங்கீகரிக்கப்படுகின்றதும் மற்றும் "என் ஜனங்களே அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று வேதவாக்கியங்கள் எதிர்த்துப் பேசுகின்றதான பாபிலோன் அமைப்புகள் யாவற்றிலிருந்தும் முற்றிலும் தனித்துச் சுதந்தரமாய்க் காணப்படுகின்றதுமான ஒரே சபையில் நீங்கள் காணப்படுகின்றீர்களாவென உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

---

--34--

# பஸ்கா

**"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் . . . பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." 1 கொரிந்தியர் 5:7, 8.**

மத்தேயு 26:26, 28 மற்றும் லூக்கா 22:7-20 மற்றும் 1 கொரிந்தியர் 11:23-26 ஆகிய வசனங்களில் இடம்பெறும் கர்த்தருடைய இராப்போஜனம் நிறுவப்பட்டது குறித்த பதிவுகளிலிருந்து, இது நமது கர்த்தருடைய மரணத்தை வருடந்தோறும் நினைவுகூரும் வண்ணமாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், இது இதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிக்கப்படுவது ஏற்றதாயிருக்கும் என்றும் பார்க்கின்றோம். இது "நமது பஸ்காவும்," உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவ ஆட்டுக்குட்டியுமான கிறிஸ்து இயேசுவினால், யூதருடைய பஸ்காவிற்குப்பதிலாக நிறுவப்பட்டது என்பது தெளிவாய்த் தெரிகின்றது (யோவான் 1:29).

இதன் காரணமாக, இதை நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாளில், (யூதருடைய முதல் மாதத்தின், 14-ஆம் தேதியன்று) ஆசரிப்பதற்கென நாம் ஒவ்வொரு வருடமும் ஒன்றுகூடுகின்றோம்.

அடிக்கடி ஆசரிக்க விரும்புகிறவர்களோடு நாம் சண்டையிடுகிறதில்லை; இன்னுமாக இதைக் கண்டிப்பான (அ) கட்டாயமான ஆசரிப்பு என்றும் நாம் எண்ணுகிறதில்லை. நமக்கான ஈடுபலி விலைக்கிரயத்தை — "நம்முடைய பாவங்களை நிவிர்த்திச் செய்கிற கிருபாதார பலியை; நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திச் செய்கிற கிருபாதார பலியை"— இப்படியாய் நினைவுகூருவதில் நாம் சந்தோஷம் அடைவதாலேயே, நாம் இதை ஆசரிக்கின்றோம்.

இந்த வருஷம் கர்த்தருடைய மரணத்தை நினைவுகூர்ந்து ஆசரிப்பதற்கான வேளையானது, ஏப்ரல் 2-ஆம் தேதி, மாலை 6 மணிக்குப் பிற்பாடாகும்; இதுவே இயேசுவும், அவரது சீஷர்களும் இதைப் புசித்த வேளைக்கொத்த வேளை என்றும், அடுத்தநாள் பிற்பகல் 3 மணியானது, இயேசு மரித்த வேளைக்கு ஒத்தவேளை என்றும் நாம் நம்புகின்றோம் (மத்தேயு 27:46-50).

ஆகையால் கிறிஸ்துவினுடைய பிட்கப்பட்ட சரீரத்தையும், அவரது சிந்தப்பட்ட இரத்தத்தையும் நினைவுகூரத்தக்கதாக அலிகெனி பட்டணத்திலுள்ள (Allegheny City), செடர் அவன்யூ-வின் (Cedar Avenue) எண்: 80-இல் உள்ள J. L. ரஸல் அவர்களின் இல்லத்தில், ஏப்ரல் 2-ஆம் தேதி ஞாயிறு அன்று மாலை 7:45 மணிக்கு ஒரு கூடுகை நடைபெறும். இப்படியாக இதை (இதன் ஆண்டு நிறைவு நாளில்) பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் — அவரது சரீரத்தின் கடைசி அங்கத்தினன், அவரோடுகூட மரித்து, அவருக்கு ஒப்பாய் மாறி, மகிமையடைந்து, புதிய சிருஷ்டியெனப் பூரணப்படுவது வரையிலும் — அவருடைய மரணத்தைத் தெரிவிக்கின்றவர்களாய் இருப்போம். ஏனெனில், "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய (மரணத்தின்) இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? (நம்முடைய பங்கடைதலாய் இருக்கிறதல்லவா?) நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் (அவருடைய மரணத்தில்) ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (1 கொரிந்தியர் 10:16, 17). ஆகையால் நாம் புசித்து, பானம் பண்ணும்போது, அவரது பலியின்மீதான நமது ஈடுபாட்டை மாத்திரம் நாம் தெரிவியாமல், அவரோடுகூட மரிப்பதற்கும், அவரது பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்குமான நம்முடைய உடன்படிக்கையையும்கூடத் தெரிவிக்கின்றவர்களாய் இருப்போம் (மத்தேயு 20:22, 23 பார்க்கவும்).

இது எப்போதும் இங்கு விலையேறப்பெற்ற தருணங்களாய்க் காணப்படுகின்றன மற்றும் கடந்த வருடத்தில் இரண்டு பேர், மூன்றுபேர், இருபதுபேர், ஐம்பதுபேர் கொண்ட பல்வேறு கூட்டத்தினரிடமிருந்து பெற்றுக்கொண்ட கடிதங்களை வைத்துப்பார்க்கையில், அவர்களும் இதே ஆசீர்வாதங்களை அனுபவித்துள்ளதாகத் தெரிகின்றது. "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆகையால் துர்க்குணம், பொறாமை முதலான புளிப்புகளைக் களைந்து, பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்;" கிறிஸ்துவின் சரீரமாக — புளிப்பில்லாத அப்பமாக இருப்போமாக — ஒவ்வொரு அங்கத்தினனும் பெருமிதம்/பெருமைக்கொள்ளாமல், எளிதில் பிட்கப்படத்தக்கவர்களாய் இருப்போமாக.

(எந்த ஓர் எபிரெய குடும்பத்தாரிடமிருந்தும் வாங்கிக்கொள்ள முடிகின்றதான) புளிப்பில்லாத ரொட்டிகளையும் மற்றும் உலர் திராட்சரசத்தையும் நாம் பொதுவாய்ப் பயன்படுத்துவதுண்டு.

*****

# முழு தத்தம்

## Full Consecration

பரிபூரண சிந்தையில் பரிசுத்த ஐக்கியம்கொண்டே
வானளாவ எல்லை கடந்தே
உவகையுடனே உயர்ந்து எழுவாய்
உன்னால் மட்டுமே இதை நிறைவேற்ற முடியுமே,
இதனைக் கண்டெடுத்திட்ட விலையுயர் முத்துக்கள்
எத்தனை ஆசீர்வாதமானவை ?
பூமிக்கு மரித்து, உம்மில் வாழக் கற்றனரே
மனித நம்பிக்கைகளுக்கு மரித்து,
உனக்கு நீயே காணாமற்போனாய்,
என் ஆத்துமாவே, நீ மரிப்பதற்குக் கற்றால்
மகிழ்வாய் வாழலாம்,
உந்தன் முடிவற்ற வாழ்வினிலே
புதுவாழ்வொன்றைக் கண்டடைந்தோம்,
சிலுவையின் பாடம்தனை
மகிழ்வுடனே கற்றுக்கொண்டோம்
இயேசு சென்ற பாதையிலே கடுமையான பிரயாசங்கள்
எடுப்பதற்கே நேர்ந்துகொண்டோம்,
இம்மை வாழ்வில் நாம் இழந்ததையே கணக்கிட்டால்
நாம் மாம்சத்தின் இறப்பினிலே
தேவனுக்குள் வாழ்வதனைக் கண்டடைவோம்

# கர்த்தருக்காய் காத்திருப்பாய்

# Wait on the Lord

சற்று நேரம் பொறுத்திருப்பாய்களைப்படைந்த என்சோதரனே,
கொஞ்சக்காலம்தான், சில நாட்களில்கூட முடிந்துவிடும்
காத்திருக்கும்பொறுமையே உன்னை வலிமையுள்ளவனாய்மாற்றிவிடும்,
முடிவற்ற நித்திய வாழ்வே இந்த காலதாமதத்தினை சமன்செய்திடுமே,
வருத்தப்பட்டுப்பாரம்சுமக்கிறவர்களே, இந்த வருத்தத்தின்நாட்களே
உங்கள் ஆத்துமாக்களுக்கே பேரிளைப்பாற்றயையே கொண்டுவருமே,
நீவீர் ஓர் கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிப்பவரானால்உம்எல்லா வருத்தங்களுக்குபதிலாய்
பிரகாசமான எதிர்காலம், பதின்மடங்கு ஆசீர்வாதம் கொண்டு வருமே,
தேவனுக்காய் பெருவிருப்பம் கொண்டேகாத்திருப்பவரே,உன் வலிகொண்டதலைமீதே
இருள்கொண்ட கார்மேகங்கள் காரிருளாய்தோன்றிமூடியே மறைத்திடினும்,
தேவன் தம் இரக்கத்தின்பெருக்கத்தினால் அவற்றை உனக்கு
அனுப்புகிறாரே,பரலோகப்பாதுகாப்பால் உன்னை அவர் மூடிடுவார்,
ஒவ்வொரு பேரிடர் நிகழ்ந்திட்டபோதிலும் அடங்கியிருப்பாய்,பொறுமைகொள்வாய்,
நிகழ்கின்ற பேரிடர் ஒவ்வொன்றுமே, உன் அன்புக்குரிய தேவனின் அருகினில்
உமைக்கொண்டு சேர்க்குமன்றோ,
உம் ஆசீர்வதிக்கப்பெற்ற எஜமானைப்போலவே இச்சோதனைகள் உமை மாற்றுமன்றோ,
இவை எல்லாவற்றையும் அறிந்த அவர்
உனக்கு அளவிலா கிருபையை வழங்கிடுவாரே,
அவருக்குள்ளே பொறுமையுடனே அடங்கி இருப்பாய்,
வல்லமை உனக்கே கொடுக்கப்படுமே,
வறண்ட வழியினில் அடியெடுத்து வைத்தே நாம் நடந்திடும் ஒவ்வொரு அடியினிலும்,
அனைத்திற்கும் சேர்த்தே விண்ணகத்தில் புகழ்ச்சிபலி ஏறெடுக்கலாகுமே,
துயர்மிகுந்த நாட்கள்தான் பரிபூரணநாட்களையே கொண்டுவருமே,
ஆம். பரிபூரண நாட்கள்தான்.தேவ தேவனின் முடிவற்ற நிலையான நாட்களையே
தந்துவிடுமே,
துயரத்தின் நிழல்கூடநமக்கு முன்பாய் கண்ணுக்குத்தெரியாமலே பறக்குமன்றோ,
அந்தஓர் ஆசீர்வதிக்கப்பெற்ற பூமியிலே அனைத்தும் பளிச்செனவே இளமையுடனே
மின்னலாகுமே,நாமோ கிறிஸ்துவுடனேகூட வாசம் செய்வோமே,
துயர்மிகுந்த என் ஆத்துமாவே,காத்திரு, உன் உணர்ச்சிகளை அடக்கி ஆள்வாய்,
கோபம் கொண்ட காற்றினையும், அலையினையும் தேவன் அவரே
கீழ்ப்படுத்துவாரே,அடக்கிடுவாரே.
வுாழ்க்கை சாகரத்தின்முடிவின்போதோ() சாகரம் (ஆழமான பெருங்கடல்)
பரலோகில் இனிமையான தேறுதல் கிடைக்கலாகுமே,தேற்றப்பட்டே காக்கப்படுவோமே.

R 427/3/24

## உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக.

ஒரு வேலை இன்னமும் பூமியிலே சாதிக்க வேண்டியுள்ளதே,
இப்பூமி அதனை ஒருபோதும் அறிந்ததில்லையே,
ஆற்றல்மிக்க படைகள் யாவும் ஒன்றுகூடுதே,
அவற்றின் ஆற்றல் விரைவினிலே காணலாகுதே,
அவர் பயன்படுத்தும் ஆயுதம் யாவும் ஆற்றல் மிக்கதே,
எதற்காக உருவாக்கினாரோ, அதனை அவையே செய்து முடிக்குமே,
இவை எல்லாமும் நிறைவேறின பின்பே,
மகிமை நிறைந்த பணிகள் பூமியின்மீதே நிறைவேற்றப்படுமே,
இயேசு இருளின் ஆதிக்கத்தைப் புறமுதுகிட்டே ஓடச்செய்வாரே,
பொய்யாய் பிறந்த இனங்கள் யாவும் மாற்றப்படுமே,
சத்தியத்திற்காகவும் நீதிக்காகவும் அவர்கள் உழைப்பாரே,
மனிதனின் உரிமை தேவைகட்காக அவர்களின் பாடுகள் அமைந்திடுமே,
கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவுகட்டிடுவாரே,
சங்கிலியாலே பிணைக்கப்பட்டே துன்புறுத்தும் வேதனை வீக்கம்
என்றென்றைக்கும் கட்டவிழ்க்கப்படுமே, குணப்படுத்தலாகுமே,
கிறிஸ்து பூமியில் அரசாள்வதாலே அவரால் இவையெல்லாம் நடத்தலாகுமே,
அவரது இராஜ்ஜியமோ முடிவே இல்லாததுதானே,
அது கடந்துபோவதில்லையே, அழிக்கப்படுவதில்லையே,
யுகங்கள் யுகங்களாகவே ஆற்றல் மிகுந்த மனங்கள் பலவும்
இதற்காகவே உழைத்து வருகிறார்,
நிச்சயமாகவே நிறைவேற்றப்படுமே,
பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும்
உண்டாவதாக என்ற வாழ்த்தும் நிறைவேறலாகுமே,
ராஜ்ஜியம் உதிக்கும் நாளை நாமும் காணலாகுமே,
இருளின் படைகள் மூடநம்பிக்கைகள் அழிக்கப்படுமே,
இதுவரை போலிசங்கிலிகளை உருவாக்கி பிணைத்து
மூடநம்பிக்கையில் மூழ்கடித்தவை தம் ஆற்றலை தினம்தினம் இழந்துபோகுமே,
நம் கண்களால் காணவேண்டிய ஆற்றல் மட்டுமே மிகுந்து நிற்குமே.

**சங். 55:22** கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்.

**வெளி. 18:4** பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்.

R 440/3/25

## ஓர் இலவச மீட்பு. ரோமர். 3/24.

இலவசமாய்அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்;

விலைக்கிரையம் ஒன்றும் செலுத்தத் தேவையில்லையோ?
வேண்டாம், இம்மியளவுகூட செலுத்த வேண்டாம்,
எதுவும் செய்ய வேண்டாமோ? வேண்டாம், சிறுதுளியளவு கூடஎதுவும் செய்திட வேண்டாம்.
என்ன கொடுக்க வேண்டுமோ, என்ன செய்திட வேண்டுமோ,
அதை இயேசு ஒருவரே செலுத்திவிட்டாரே, கொடுத்துவிட்டாரே,
அவர் மட்டுமே தம் வழிதனிலே ஆசீர்வாதமகவே செய்துவிட்டாரே.
எதுவும் செய்திட வேண்டாமோ? வேண்டாம், ஒரு சிறுகோடுகூட போடவேண்டாம்,
இயேசு கல்வாரிமீதினில் அந்த நுகத்தை முறித்துப்போட்டுவிட்டாரே,
அவர் விடுதலையாக்கின மனிதன் எவரையும் வேறெவனும் அடிமைப்படுத்திட முடியாதே,
பயப்படுவதற்கு எதுவுமில்லையோ?, இல்லை, அணு அளவுகூட பயம் வேண்டாம்,
ஒரு புள்ளி கூட பயம் இல்லை,
கிறிஸ்துவே எனது சமாதானம், நான் எதையும் எல்லையாகக் கொள்ளவில்லையே.
சாத்தானால் என்னை அலைக்கழிக்கவும் முடியாது, அசைத்துப்பார்க்கவும் முடியாது.
எதுவும் கணக்கு முடித்திட வேண்டுமோ? வேண்டாம்,
அனைத்துக் கணக்கையும் இயேசு ஒருவரே முடித்துவிட்டாரே.
கோபப்பட ஏதேனும் காரணம் உள்ளதோ? கோபம் என்ற சொல்லுக்கே இடமில்லையே,
கிறிஸ்துவினாலே நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்பட்டுவிட்டதே,
பாவிகளுக்குப் புகலிடம் இயேசு ஒருவர் மாத்திரமே. அவர் ஒருவர் மாத்திரமே திறனாளர்.
அவர் சிலுவையினின்றே தம் இரத்தத்தாலே சமாதானத்தை ஏற்படுத்திச் சென்றாரே.
நியாயத்தீர்ப்பு குறித்து என்ன? இயேசு அதனை சந்தித்தாரே,
அதனை முழு வேகத்திலே நடத்திவிட்டாரே, நான் நன்றி கூறுகின்றேனே.
மரத்தில் தூக்கப்பட்ட இயேசு அந்தப் பாத்திரம் முழுவதும் குடித்துத் தீர்த்தாரே.
பேரச்சம் குறித்து என்ன? அதற்கு இடமே கொடுக்கப்படவில்லையே.
என் இருதயம் முழுவதும் அவர் கிருபையால் நிரம்பி வழிகிறதே. உணர்வில் கலந்துவிட்டதே.
என் இருதயம் மகிழ்ச்சியால் மகிழ்க்கிறதே.
பழிபாவத்திற்கேதேனும் இடம் உள்ளதா? இல்லை,
ஒரு சிறு களங்கத்திற்கேதும் இடமில்லையே
அந்த பரிசுத்த இரத்தம் இவற்றை மீதம் வைத்திட முடியாதே.
என் மனச்சான்று களங்கமின்றியே சுத்தமாக்கப்பட்டதே,
என் ஆவியும் இப்போது விடுதலையானதே,
அந்த விலையேறப்பெற்ற இரத்தமே, எனக்கும் தேவனுக்குமானதே,
சட்டங்கள் குறித்து என்ன? ஆ! அங்கேதான் நானே களிகூருகின்றேனே.
அதன் உரிமைகளுக்கு இயேசு பதில்கூறினாரே, மௌனமாக்கிவிட்டாரே.
கிறிஸ்து தம் வேலையை முடித்தவுடனே சட்டங்கள் முழுவதும் நிறைவடைந்ததே,
அது நீதிமானை ஒருபோதும் குற்றப்படுத்துவதில்லையே,
மரணத்தின் கதி என்ன? அதன் எல்லா கொடுக்கும் முறிக்கப்பட்டுவிட்டதே,
மரணத்தின்கூர் இல்லையே.

# பஸ்கா

இது இஸ்ரயேலர்களுடைய மிக முக்கியமான பயபக்திக்குரிய அனுசரிப்புகளில் ஒன்றாக இருந்தது மற்றும் இன்னமும் இருந்து வருகின்றது. இது நிழலான ஜனங்களென அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட "நியாயப்பிரமாணத்தினுடைய" முதலாம் அம்சமாகக் காணப்பட்டது.

இவ்வனுசரிப்பு நிறுவப்பட்ட விவரங்கள் யாத்திராகமம் 12-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. பழுதற்ற ஓர் ஆட்டுக்குட்டி அடிக்கப்பட வேண்டும்; அதன் இரத்தமானது, வீட்டு வாசலினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் தெளிக்கப்படுகின்றது மற்றும் இப்படியாக தெளிக்கப்பட்டுள்ள வீடுகளுக்குள், குடும்பத்தினர்கள் அந்த ஆட்டுக்குட்டியினுடைய மாம்சத்தை, புளிப்பில்லாத அப்பத்துடனும், கசப்பான கீரையுடனும் புசித்தார்கள். (யூதர்களுடைய முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியின்) அந்த இரவில், தெளிக்கப்பட்ட இரத்தத்தின் காரணமாகவும், ஆட்டுக்குட்டி புசிக்கப்பட்டதின் காரணமாகவும், இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்டார்கள் அல்லது எகிப்தியர்களின் முதற்பேறானவர்கள் சந்தித்திட்ட மரணத்தின் வாதையினின்று தப்புவிக்கப்பட்டார்கள். இச்சம்பவத்தின் காரணமாகவும் மற்றும் அடுத்த நாளில் இஸ்ரயேலர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று, சுதந்திரமடைந்து வெளியேறினதின் காரணமாகவும், தேவனுடைய கட்டளையின் பேரில், இஸ்ரயேலர்கள் ஒவ்வொரு வருடமும், அதன் ஆண்டுநிறைவு நாளில் அதை நினைவுகூர்ந்து ஆசரித்தார்கள். (யாத்திராகமம் 12:14)

இஸ்ரயேலர்கள் இந்த அனுசரிப்பினுடைய எழுத்துக்களை மாத்திரமே பார்த்தார்களே ஒழிய, நிழலாகிய அதன் அர்த்தத்தைப் பார்க்கவில்லை. அப்போஸ்தலனை 1 கொரிந்தியர் 5:7-ஆம் வசனத்தினுடைய வார்த்தைகளை எழுதும்படிக்கு ஏவி, அவ்வனுசரிப்பிற்குரிய அர்த்தத்திற்கான திறவுகோலை ஒருவேளை தேவனுடைய பரிசுத்த ஆவியானது, நமக்குக் கொடுக்கவில்லையெனில், நாமும் இஸ்ரயேலர்களைப் போலவே இருளில் காணப்பட்டிருப்போம். *"ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."* (1 கொரிந்தியர் 5:7)

இப்படியாக இக்காரியத்தின் மீது, பரிசுத்த ஆவியானது நமது கவனத்தைக் கொண்டுவந்த பிற்பாடு, மேலும் தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய இயேசுதான், பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நிஜம் என்பதையும், இஸ்ரயேலின் முதற்பேறானவர்களுக்கு, நிழலான ஆட்டுக்குட்டியினுடைய மரணம் அவசியமாய் இருந்ததுபோன்று, இயேசுவினுடைய மரணமானது, முதற்பேறானவர்களாகிய சபை மரணத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கு அவசியமாய் இருக்கின்றது என்பதையும் தெளிவாய்க் காண்பிக்கக்கூடிய மற்ற வேதவாக்கியங்களையும் நாம் கண்டுபிடித்தோம். இப்படியாக பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு, நாம் இப்பொழுது தம்முடைய சீஷர்களுடன், கடைசி பஸ்காவைப் புசித்திட்ட இயேசுவின் வார்த்தைகளினிடத்திற்கும், செயல்பாடுகளினிடத்திற்கும் கடந்துவருகின்றோம்.

தேவன் மிகவும் சரியாய்ச் செயல்படுபவர் ஆவார்; நிழலான ஆட்டுக்குட்டியானது, முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியில் அடிக்கப்பட்டக் காரியமானது, தேவனுடைய திட்டத்தில், இயேசு அதே கால வேளையில் மரிப்பார் என்ற உண்மைக்கான நிழலாக (அ) முன்னடையாளமாக இருந்தது. இயேசு தம்முடைய சீஷர்களுடன் பஸ்காவை அனுசரிக்கவும் மற்றும் அதே நாளில் உண்மையான "ஆட்டுக்குட்டியென" அடிக்கப்படவும்தக்கதாக தேவன் யூதர்கள் மத்தியில் காலக் கணக்கிடுதலை ஒழுங்குப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. (நாளினுடைய கணக்கிடுதல் விஷயத்தில், ஒரு நடுராத்திரியிலிருந்து, மறு நடுராத்திரி வரை என்று இப்பொழுது காணப்படும் வழக்கத்தின்படி யூதருடைய நாள் கணக்கீடு காணப்படாமல், மாறாக மாலை ஆறு மணிக்கு ஆரம்பித்து, அடுத்துவரும் மாலை 6 மணிக்கு நிறைவடைவதாய் இருக்கின்றது). ஆகவே இயேசுவும், சீஷர்களும் பஸ்காவை சுமார் 8 மணியளவு புசித்தார்கள் மற்றும் அதே இரவில் அவர் காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் அதே நாளில்தானே மரித்தார்; இப்படியாகவே அனைத்து எழுத்துக்களும், எழுத்தின் உறுப்புகளும் நிறைவேற வேண்டியிருந்தது மற்றும் நிறைவேறவும் செய்தது.

"இதோ உன் இராஜா வருகிறார்" எனும் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றும் வண்ணமாகவும் மற்றும் அதே வேளையில் பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக அது வீட்டிற்குள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற பஸ்கா நிழலிலுள்ள அம்சத்தினை நிறைவேற்றும் வண்ணமாகவும், இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, கழுதையின்மேல் ஏறி, பட்டணத்திற்கு வந்தபோது, தாம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக அல்லது நிராகரிக்கப்படத்தக்கதாக தம்மை ஜனங்களுக்கு முன்வைத்தார். (மத்தேயு 21:4; யாத்திராகமம் 12:3) "பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார் . . . மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரயேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்" என்று நாம் வாசிக்கிற பிரகாரமாக, பஸ்காவிற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, இயேசு தம்மை இறுதியாக இஸ்ரயேல் ஜாதியாருக்கு (அ) வீட்டாருக்கு முன்வைத்தார் (யோவான் 12:1, 12, 13). அவர்களது இராஜா கழுதைக்குட்டியின் மீது ஏறி, அவர்களிடத்தில்

வந்தார். அவரோ அவர்களுக்காகக் கண்ணீர்விட்டு, "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள்" என்று கூறினார். (மத்தேயு 23:38, 39)

இயேசு பஸ்காவினுடைய உட்கருத்தை அறிந்திருந்தார், ஆனால் சீஷர்களோ அறிந்திருக்கவில்லை. இயேசு தனிமையில் காணப்பட்டார்; எவராலும் அவரைப் புரிந்துகொள்ள முடியாது; எவராலும் அவரை உற்சாக மூட்ட முடியாது. அவர் காரியங்களைச் சீஷர்களுக்கு விவரித்திருந்தாலுங்கூட, அவர்களால் அவரது விளக்கத்தைப் புரிந்து கொள்ளவோ (அ) உணர்ந்துகொள்ளவோ முடியாது, காரணம் அவர்கள் இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. அவர்கள் ஆதாமின் பாவத்திலிருந்து, நீதிக்கு ஏதுவாய்த் தீர்க்கப்படாதது வரையிலும், ஜெநிப்பிக்கப்படவும் முடியாது — அதாவது அவர்களை மரணத்தின் வல்லமையினின்று மீட்டுக்கொள்ளும் இரத்தத்தைச் சிந்தின அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய புண்ணியத்தினால் பாவத்திலிருந்து கடந்துபோகப்படுவது அல்லது விடுவிக்கப்பட்டதாகக் கருதப்படும் நிலைவரும் வரையிலும் அவர்கள் ஜெநிப்பிக்கப்பட முடியாது.

முன்பு ஒருவரும் கடந்து செல்லாத இடுக்கமான வழியில், இயேசு இவ்வாறு தனிமையாகக் கடந்து செல்லுகையில் — நமக்கான முன்னோடியாகவும், தலைவராகவும் அவர் இவ்வழியில் தனிமையாகக் கடந்து செல்லுகையில், அவரது இருதயமானது, சில சமயங்களில், மரணத்திற்கு ஏதுவாக மிகவும் துக்கமடைந்ததில் ஆச்சரியமடைவதற்கு ஒன்றுமில்லை. "வேளை வந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னார்." (லூக்கா 22:14-16) உண்மையான ஆட்டுக்குட்டி அன்றைய தினமே இன்னும் கொஞ்சம் நேரம் கழித்து அடிக்கப்படுவதன் மூலமாக எப்படிப் பஸ்காவின் காரியம் நிறைவேற ஆரம்பிக்கும் என்பதைச் சீஷர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென இயேசு ஆசையாயிருந்தார்.

சீஷர்களால் கிரகித்துக்கொள்ள முடிகிற மட்டும் கிரகித்துக்கொள்ளத்தக்கதாக, இயேசு பஸ்காவின் அர்த்தம் பற்றின சத்தியத்தை வெளிப்படுத்துவதே, அவர் சீஷர்களுடன் இந்தப் பஸ்காவைப் புசிப்பதற்கு விசேஷமாக ஆசைப்பட்டதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். "அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்;" "பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்." (மாற்கு 14:22; லூக்கா 22:17-20)

நிழலான ஆட்டுக்குட்டியிலிருந்து, நிஜமாகிய தம்மிடத்திற்குச் சீஷர்களுடைய மனங்களைத் திருப்பிடுவதும், தாம் நிறைவேற்றவிருக்கும் நியாயப்பிரமாணத்தினுடைய பஸ்காவெனும் அம்சத்தை அனுசரிப்பது இனிச் சரியாய் இருக்காது என்பதைக் காண்பிப்பதும்தான் ஆண்டவருடைய நோக்கமாய் இருந்தது என்பதில் நமக்கு ஐயமில்லை. (பஸ்காவினுடைய) ஆட்டுக்குட்டியினுடைய இடத்தில் வரும் அவரைப்பற்றின நினைவுகூருதலின் அம்சங்களாக சீஷர்களுக்கு இனி அப்பம் மற்றும் இரசம் இடம்பெறப்போகின்றது. இப்படியாகப் பார்க்கப்படும்போது, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகள் ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது நிழலான விடுதலையை நினைவுகூரும் வண்ணமாக, இனிமேல் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியைக் கொல்ல வேண்டாம், மாறாக உண்மையான விடுதலைக்கு, உண்மையான கடந்துபோகுதலுக்கு ஆதாரமாய்க் காணப்படும் என்னுடைய மாம்சத்திற்கும், ஜீவனுக்கும் அடையாளமாய்க் காணப்படும் அப்பத்தையும், இரசத்தையும் பயன்படுத்துங்கள். ஆகவே என்னையும், என்னுடைய வார்த்தைகளையும் ஏற்றுக்கொள்ளுகிற யாவரும், இதுமுதற்கொண்டு, என்னை நினைவுகூரும்படிக்கு இப்படியாகச் செய்யுங்கள்" என்ற விதத்தில் இயேசுவின் வார்த்தைகள் காணப்பட்டது.

இப்படியாக இராப்போஜனத்தை, தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலாகவும், யூதர்களால் அனுசரிக்கப்பட்டு வந்த பஸ்காவிற்கு மாற்றாகவும் நமது கர்த்தர் நிறுவினார். ஏன் முதலில் இயேசு நிழலான ஆட்டுக்குட்டியைப் புசித்தார்? என்று கேட்கப்படலாம். அவர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவராக பிறந்தார் என்றும், அதன் சகல அம்சங்களையும் அவர் அனுசரிக்க வேண்டியவராக இருந்தார் என்றும் நாம் பதிலளிக்கின்றோம். அவர் தம்முடைய சிலுவையில் நியாயப்பிரமாணத்தை அறைந்துபோட்டு, நியாயப்பிரமாணத்தை முடிவிற்குக் கொண்டுவந்துவிட்டதால், பஸ்கா அல்லது இதற்கு மாற்றாக இடம்பெறும் கர்த்தருடைய இராப்போஜனம் தொடர்புடையதான பிரமாணத்திலிருந்து நாம் விடுதலையுடையவர்களாகக் காணப்படுகின்றோம் — ஆனால் ஒவ்வொரு வருடமும் நமது கர்த்தருடைய மரணத்தின் நினைவு நாளை அனுசரிப்பதை சிலாக்கியம் எனக் கருதுபவர்களில் நாம் அடங்கினவர்களாய் இருக்கின்றோம்; "பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." (1 கொரிந்தியர் 5:7-8)

நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குரிய, மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் இந்தத் தருணமானது எப்போது (அ) ஏன் புறக்கணிக்கப்பட்டுப்போனது என்பதைக் கணிப்பது கடினமான காரியமாகும், ஆனால் சூழ்நிலைகளுக்கு ஏற்பவே புறக்கணிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. மாபெரும் போதகர் (இயேசு) நினைவுகூருதலின் விஷயத்தில் ஏதோ தவறு செய்துவிட்டார் என்றும், வருடத்திற்கு ஒருமுறை நினைவுகூருதலை அனுசரிப்பதைக் காட்டிலும், அடிக்கடி அனுசரிப்பது அனுகூலமாய் இருக்கும் என்றும் பக்திவைராக்கியமுள்ள சில போதகர்கள் எண்ணியிருப்பார்கள் என்பதிலும், இவர்கள் "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்ற வார்த்தைகள் மூலம், பவுல் நினைவுகூருதலை அடிக்கடி அனுசரித்தாலும் ஒன்றுமில்லை என்று போதித்துள்ளதாகப் புரிந்துகொண்டுள்ளனர் என்பதிலும் ஐயமில்லை (1 கொரிந்தியர் 11:26). ஆனால் நினைவுகூருதல் குறித்துப் பவுல் பேசியுள்ளவைகள் அனைத்தையும் ஜாக்கிரதையாய் ஆராய்ந்துப் பார்க்கும்போது, காரியங்களை இவர்கள் புரிந்துகொண்டுள்ளது போன்று அவர் சொல்லவில்லை என்பது உறுதியாகும். "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து" (1 கொரிந்தியர் 11:23). இங்கு இயேசுவினால் தெரிந்துகொள்ளப்பட்டதான நேரம், மிகவும் சரியான நேரமாக மாத்திரமாய் இராமல், நினைவுகூருதலானது அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவிலே நிறுவப்பட்டதை விசேஷித்த வெளிப்படுத்தல் மூலம் கர்த்தரிடத்திலிருந்து, பவுல் பெற்றுக்கொள்ளுமளவுக்கு, அந்த நேரம் மிகவும் சரியான நேரமாகக் காணப்பட்டது என்பதையும் கவனிக்கவும்.

கர்த்தருடைய மரணத்திற்குரிய சரியான நினைவுகூருதலை அனுசரிக்கத்தக்கதாக, சபையானது எத்தனை தரம் அந்த அப்பத்தைப் பிட்டு, அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணிட வேண்டும்? ஆண்டுதோறும் அவரது மரணத்தினுடைய நினைவு நாளில் மாத்திரமே செய்ய வேண்டும். எப்படி அமெரிக்காவிற்கான சுதந்திரமானது, வருடந்தோறும் அது சுதந்திரமடைந்த நாளாகிய ஜூலை 4-ஆம் தேதியில் கொண்டாடப்படுகின்றதோ, இப்படியான விதத்திலேயே கர்த்தருடைய நினைவுகூருதலும் அனுசரிக்கப்பட வேண்டும். (அமெரிக்காவின் சுதந்திரத்தை) ஜூலை 4-ஆம் தேதியில் கொண்டாடாமல், பொருத்தமற்ற பல்வேறு தினங்களில் சிலர் கொண்டாடிட முற்பட்டால், அது விநோதமாகவே பார்க்கப்படும். மேலும் ஜூலை 4-ஆம் தேதியைக்குறித்து "இதை நீங்கள் கொண்டாடும் போதெல்லாம், நீங்கள் தேசத்தினுடைய பிறப்பை அறிவிக்கிறவர்களாய் இருப்பீர்கள்" என்று சொல்லப்பட்டால், ஒரு வருடத்தில் அநேகம் தருணங்களில் கொண்டாடப்படுவதைக் குறித்துப் பேசப்பட்டுள்ளதாக யாரேனும் புரிந்துகொள்வார்களா? இப்படியே கர்த்தருடைய இராப்போஜனமும், அதன் ஆண்டுநிறைவு நாளில் மாத்திரமே அனுசரிக்கப்பட வேண்டும்.

ஆதித் திருச்சபையினர் கர்த்தருடைய இராப்போஜனத்தை வாரத்தினுடைய முதல் நாள்தோறும் புசித்து வந்ததைச் சுட்டிக்காட்டும் பதிவுகள், வேதவாக்கியங்களில் காணப்படுவதைத் தாங்கள் காண்பதாக சிலர் எண்ணுகின்றனர். இது ஒருவேளை உண்மையானால், இக்காரியத்தில் இதற்குமேலாக கூறிடுவதற்கு எங்களுக்கு எதுவுமில்லை என்பதே நமது பதிலாக இருந்திருக்கும்; ஆனால் இப்படியான பதிவுகள் எங்கிருக்கின்றது? இவர்கள் நமக்கு "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" என்ற அப்போஸ்தலர் 20:7-ஆம் வசனத்தைக் காட்டுகின்றனர். ஆனால் இங்குக் கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலாகத்தான் அப்பம் பிட்கப்பட்டுள்ளது என்பதற்கான ஏதேனும் சாட்சியம் உள்ளதா? ஏன் இங்கு நடைபெற்ற காரியம் கர்த்தருடைய இராப்போஜனம் என்று குறிப்பிடப்படவில்லை மற்றும் திராட்சரசம் ஏன் தவிர்க்கப்பட்டுள்ளது? அப்பமாகிய அடையாளத்தைப்போன்று பாத்திரம் எனும் அடையாளமும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லையா? எம்மாவு என்னும் கிராமத்தில் "அவர் அப்பத்தைப் பிட்டபோது" இரண்டு சீஷர்கள் இயேசுவை அடையாளம் கண்டுகொண்டார்கள் என்பதாக எழுதப்பட்டுள்ளபடியால், அங்குப் பிட்கப்பட்டது சாதாரணமான போஜனத்திலும் மேலானது என்று யாரேனும் சொல்லக்கூடுமோ? அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தைப் புசித்தார்கள் என்று யாரேனும் சொல்லக்கூடுமோ? யாரும் இப்படியாகச் சொல்லமாட்டார்கள்.

வாரத்தின் முதல் நாளானது (அ) கர்த்தருடைய நாளானது, நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குரிய சரியான நாளாய் இருப்பதற்குப் பதிலாக மிகவும் பொருத்தமற்றதாக இருக்கின்றது. இயேசுவின் மரணத்தையும், கர்த்தருடைய இராப்போஜனம், கெத்செமனே மற்றும் கல்வாரியின் துயரமான காட்சிகளையும் நினைவுகூருவதற்குரிய ஒரு நாளாக, வாரத்தின் முதல் நாளானது ஆதிச் சபையினரால் நியமிக்கப்படுவதற்கு (அ) பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக, வாரத்தின் முதல்நாளானது, அவர்களுக்கு மகிழ்ச்சியின் நாளாகவும், களிகூருதலின் நாளாகவும் மற்றும் "கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்துள்ளார்" என்று கூறி, ஓசன்னா சாற்றுவதற்குரிய நாளாகவும் காணப்பட்டது. இதனாலேயே இந்நாளின் பெயர் இப்படியாகக் காணப்படுகின்றது மற்றும் இதனாலேயே சபையால் இந்நாளானது தொழுதுகொள்வதற்கும், துதிப்பதற்குமுரிய நாளாக பொதுவாய் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

வாரத்தினுடைய முதல்நாளாகிய, கர்த்தருடைய நாள்தோறும், அப்பம் பிட்கும் வழக்கமானது, அநேகமாக சீஷர்கள் சொற்பமானவர்களாய்க் காணப்பட்டப்படியால், கர்த்தருடைய நாளில் ஒன்றுகூடுவதற்கெனச் சில சமயங்களில் நீண்ட தூரம் பிரயாணப்பட்டு வருகையில், ஒன்றுசேர்ந்து போஜனம் பண்ணுவதிலிருந்து ஆரம்பித்தக் காரியமாக இருக்க வேண்டும். இன்னும் அநேகமாக முதல் நாளில் அப்பம் பிட்கப்படும்போது, இயேசு உயிர்த்தெழுந்த பிற்பாடு, எப்படி அடிக்கடி முதல் நாளன்று தங்களுக்குத் தோன்றி

காட்சி அளித்தார் என்பதையும், எப்படித் தாங்கள் புசித்துக்கொண்டிருக்கும்போது, இயேசு இப்படியாகத் தோன்றினார் என்பதையும் அவர்கள் நினைவுகூர்ந்தபோது, எண்ணங்களிலும், சிரத்தையிலும் ஏற்பட்ட ஆசீர்வாதமான ஓர் இணைதலின் காரணமாகவுங்கூட இந்த வழக்கம் ஆரம்பித்திருக்க வேண்டும். (லூக்கா 24:35)

சபையில் கர்த்தருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் கொண்டாடத்தக்கதாக, ஒரு காலத்தில் நிறுவப்பட்டிருந்த இந்த வழக்கத்தினுடைய மங்கின சுவடுகளானது, உரோமன் திருச்சபை மற்றும் ஆயர் திருச்சபைகளால் "புனித வெள்ளி" என்ற நவீன தோற்றத்தில் இன்னமும் அனுசரிக்கப்பட்டு வந்தாலும், மற்றக் கிறிஸ்தவ பிரிவுகளால் கிட்டத்தட்டக் கவனிக்கத் தவறப்பட்டுள்ளது.

காவல் கோபுரத்தின் வாசகர்களில் அநேகர், நமது கர்த்தருடைய மரணத்தின் நினைவுகூருதலை, அதன் ஆண்டு நிறைவுநாளில் அனுசரிப்பதை வழக்கமாய்க் கொண்டிருக்கின்றனர். கர்த்தருடைய மரணமானது, நிழலாகிய பஸ்காவின் இடத்தை எடுத்துக் கொள்கின்றது என்று நம்புகின்ற நாம், அந்த நாளை யூதர்களின் (அ) சந்திரன் நாள்காட்டியின்படி கணக்கிடுகின்றோம்; ஆகவே இந்நாளானது பெரும்பாலும், சூரிய நாள்காட்டியின்படி கணக்கிடப்படும் "புனித வெள்ளியின்" தியதியிலிருந்து முற்றிலும் வேறு தியதியாகவே காணப்படுகின்றது. (1883-ஆம் வருடத்தில்) இந்த வருடத்தில் பஸ்காவானது, வாரத்தின் முதல் நாளில், ஏப்ரல் 22-ஆம் தியதியன்று, மாலை 6 மணிக்கு வருகின்றதாய் இருக்கின்றது; ஆகவே ஏப்ரல் 22-ஆம் தியதியன்று மாலை 3 மணிக்குக் கர்த்தருடைய மரணம் சம்பவித்ததாய் இருக்கும்; மேலும் கர்த்தருடைய இராப்போஜனமானது ஏப்ரல் 21-ஆம் தியதி, சனிக்கிழமை மாலையன்று, 7 முதல் 8 மணிக்குள் புசிக்கப்பட வேண்டும். பஸ்கா பண்டிகை ஆரம்பிப்பதற்கு முந்தின நாளின்போது, ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படுவதை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். எப்போதுமுள்ள வழக்கத்தின்படியே அது அனுசரிக்கப்படும். புளிப்பில்லாத அப்பம்* மற்றும் ரசத்தினுடைய அர்த்தத்தையும், முக்கியத்துவத்தையும் நாம் பேசுகின்ற அதே வேளையில், இவை இரண்டையும் பயன்படுத்திச் செய்யப்பட்ட முதல் நினைவுகூருதலின் ஒழுங்கின் மாதிரியைப் பின்பற்றிடவும் நாம் நாடிட வேண்டும். [ * புளிப்பில்லாத அப்பமானது எந்த ஒரு எபிரெய குடும்பத்திடமிருந்தும் வாங்கப்படலாம்]

## அடையாளங்களினுடைய அர்த்தம்

பிட்கப்பட்ட அப்பம் மற்றும் பாத்திரத்தின் அர்த்தத்தை இங்கு நாம் சுட்டிக்காண்பிப்பது, சிலருக்குப் பயனுள்ளதாய் இருக்கும்.

அப்பத்தைக்குறித்து நமது கர்த்தர் கூறினதாவது: "இது என் மாம்சம்" ஆகும்; அதாவது புளிப்பில்லாத அப்பமானது, நமக்காகப் பிட்கப்பட்ட அல்லது பலிச் செலுத்தப்பட்ட அவரது மாம்சத்தை, அவரது மனுஷீகத்தை அடையாளப் படுத்துகின்றதாய் இருக்கின்றது. அவர் தம்மையே நமக்காகப் பலிச்செலுத்தாதது வரையிலும் நம்மால் நித்தியமான ஜீவனை ஒருபோதும் பெற்றுக் கொள்ளமுடியாது; அவர் சொன்னதுபோல: "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை." (யோவான் 6:53)

இயேசுவின் சரீரம் பிட்கப்பட்டதான காரியமானது, மனிதன் புசித்தால், ஒருபோதும் மரியாமல் இருக்கப்பண்ணுகின்றதான, ஜீவ அப்பத்தை அளிக்கிறதாக மாத்திரம் காணப்படாமல், இன்னுமாக அது ஜீவனுக்கு நேரான "இடுக்கமான வழியையும்" திறந்தது மற்றும் ஜீவனுக்கு நேராய் வழிநடத்துகின்றதான இடுக்கமான வழியில் நடப்பதற்கு உதவியான, ஆவிக்குரிய உணவாகிய சத்தியத்தை நாம் அடையத்தக்கதாக, முத்திரையை உடைத்தது. இப்படியாகப் பிட்கப்பட்ட அப்பமானது, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று தம்மைக்குறித்துக் கூறினவரின் பிட்கப்படுதலை அடையாளப்படுத்துவது பொருத்தமானதே என்று நாம் காண்கின்றோம். (யோவான் 14:6)

ஆகையால் பிட்கப்பட்ட அப்பத்தை நாம் புசிக்கையில் — அவர் மரித்திருக்கவில்லையெனில், அவர் நமக்காகப் பிட்கப்பட்டிருக்கவில்லையெனில், நாம் ஒருபோதும் பிதாவினிடத்திற்கு வந்திருக்க முடியாது என்றும், நாம் என்றென்றும் ஆதாமினுடைய பாவத்தினுடைய சாபத்தின் கீழிலும், மரணத்தினுடைய நுகத்தின் கீழிலும் காணப்பட்டிருந்திருப்போம் என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மற்றுமொரு கருத்து: பயன்படுத்தப்பட்ட அப்பமானது, புளிப்பற்றதாகும். புளிப்பு என்பது கெடுக்கிற ஒன்றாக, சீரழிக்கும் ஒன்றாக இருப்பதினால், பாவத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் பாவம் மனுக்குலத்தில் கொண்டுவந்ததான சீரழிவையும், மரணத்தையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்த அடையாளமானது, நமது கர்த்தர் இயேசு பாவம் இல்லாதவராக இருந்தார் என்பதை, கறைதிறையற்ற ஆட்டுக்குட்டி என்பதை, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாய்" இருந்தார் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் ஆதாமின் சந்ததியில் வந்தவராய் இருந்திருப்பாரானால், வழக்கம்போல் ஏதோ ஒரு பூமிக்குரிய தந்தை வாயிலாக தமது ஜீவனைப் பெற்றவராக இருந்திருப்பாரானால், அவரும்கூட மற்ற மனிதர்களைப்போலவே ஆதாமின் பாவத்தினால், புளிப்பானவராய் இருந்திருப்பார்; ஆனால் அவருடைய ஜீவனானது கறைதிறை இல்லாமல், உயர்ந்த பரலோக நிலையிலிருந்து, பூமிக்குரிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலைமையில் வந்ததாய் இருந்தது; ஆகவே அவர் "வானத்திலிருந்து வந்த அப்பம்" என்று அழைக்கப்பட்டார் (யோவான் 6:41). ஆகவே தேவன் அருளியுள்ளதான தூய்மையான, புளிப்பற்ற, மாசற்ற அப்பத்தினைக்குறித்து உணர்ந்துகொள்வோமாக மற்றும் அவரைப் புசிப்போமாக;

அதாவது சத்தியத்தைப் புசித்து, ஜீரணிப்பதன் வாயிலாக அவரை நாம் புசிப்போமாக; அதிலும் விசேஷமாக — விசுவாசத்தின் வாயிலாக அவரது நீதியை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுதல் எனும் சத்தியத்தைப் புசிப்போமாக; மேலும் அவரை வழியாகவும், ஜீவனாகவும் அடையாளங்கண்டுகொள்வோமாக.

இந்த நினைவுகூருதல் அடையாளங்கள் தொடர்புடையதான இன்னும் ஆழமான ஓர் அர்த்தத்தை, அப்போஸ்தலன் தெய்வீக வெளிப்படுத்துதலின் வாயிலாக தெரிவித்துள்ளார். அப்பமானது நமது கர்த்தர் இயேசுவை மாத்திரம் அடையாளப்படுத்துகின்றதாயிராமல், நாம் அவரைப் புசித்தப் பிற்பாடு (அவரது நீதியை நமக்குரியதாக்கிக்கொள்வதன் வாயிலாக நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு) நாம் அர்ப்பணத்தின் வாயிலாக, உலகத்திற்கான உணவாகிய அந்தப் பிட்கப்பட்ட ஒரே அப்பத்தின் பாகமாக, நாம் அவரோடு இணைந்தவர்களானோம் என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். (1 கொரிந்தியர் 10:16) இது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளாகிய நாம், எதிர்க்கால மகிமைகளில் அவரோடுகூட உடன் சுதந்தரர்களாகுவதற்கும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதும், பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஜீவன் வழங்குவதுமான மாபெரும் வேலையில் பங்காளிகளாகுவதற்குமுரிய நிபந்தனையாய்க் காணப்படுகின்ற கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் இப்பொழுது பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றோம் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இதே கருத்தானது, அப்போஸ்தலனால் மீண்டும் மீண்டுமாகவும், பல்வேறு அடையாளங்களினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அவை அனைத்தைக்காட்டிலும், இவ்வடையாளமே ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது தங்கள் தலையோடுகூட (கிறிஸ்துவின் சரீரமாகிய — கொலோசியர் 1:24 பார்க்கவும்) சபையே இப்பொழுது பிட்கப்படுகின்றதான "ஒரே அப்பமாக" இருக்கின்றனர். இது நமது தலையானவருடனான நமது ஐக்கியத்திற்கும், உறவிற்கும் குறிப்பிடத்தக்கதான விவரிப்பாய்க் காணப்படுகின்றது.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;" "அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 – KJV; திருவிவிலியம்.)

'திராட்சரசமானது' நமது கர்த்தரினால் பலிச்செலுத்தப்பட்ட ஜீவனை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மரணத்தில் கையளிக்கப்பட்ட ஜீவனுக்கான அடையாளம்)" (மத்தேயு 26:27, 28).

பாவத்தின் காரணமாக ஆதாமின் சந்ததி இழந்துபோனதான ஜீவனுக்கான மீட்கும்பொருளாகக் கர்த்தர் தமது ஜீவனைக் கொடுப்பதன் மூலமே, புதிய உடன்படிக்கையின் கீழ் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் வாயிலாக மனிதர்களுக்கு ஜீவனுக்கான உரிமை கடந்துவர முடியும். (உரோமர் 5:18, 19). சிந்தப்பட்ட இரத்தமானது, "அனைவருக்குமான மீட்கும் பொருளாக" (விலையாகக்) காணப்பட்டது; இது அனைவருக்காகவும், நமது மீட்பரினாலே கொடுக்கப்பட்டதாய் இருந்தது; ஆனால் அவர் பாத்திரத்தைச் சீஷர்களிடத்தில் கொடுத்து, அதைப் பருகும்படிக்கு அவர்களிடம் கூறினதாவது, தம்முடைய பாடுகளில் அவர்கள் பங்காளிகளாகுவதற்கான அல்லது பவுல் குறிப்பிட்டுள்ளதுபோன்று "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான" அழைப்பாய்க் காணப்பட்டது (கொலோசெயர் 1:24). விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, நாமாய் முன்வந்து கிறிஸ்துவின் காரணங்களை/நோக்கங்களை ஆதரிப்பதின் வாயிலாக, அவரது பாடுகளில் பங்குகொள்வோமானால், நாம் தேவனால் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும் மற்றும் இயேசுவின் பாடுகளில் பங்கடைபவர்களாகவும் கருதப்படுவோம் என்பதே நம்முன் வைக்கப்பட்ட காரியமாகும். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (சிந்தப்பட்ட இரத்தம் — மரணம்) பங்குகொள்ளுதல் அல்லவா?" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்). "பாத்திரத்தினுடைய" மதிப்பினை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாக, கிறிஸ்துவோடுகூட, அவரது பாடுகள் மற்றும் அவமானத்தின் "பாத்திரத்தில்" பங்குகொள்வதற்கான வாய்ப்பிற்காக, தேவனை ஸ்தோத்திரிப்போமாக; இப்படியானவர்கள் அனைவரும், அவரோடுகூட மகிமைப்படுத்தப்படுவர் என்ற நிச்சயமும் கொண்டிருக்கலாம். (உரோமர் 8:17).

பாத்திரமானது அவரது அவமானத்தில் நமது பங்குகொள்ளுதலையும், அவரது பலியில் நமது பங்குகொள்ளுதலையும், அதாவது நமது மனுஷீகத்தின் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில், நமது கர்த்தரும், பாத்திரத்திற்கு இந்த அர்த்தத்தைச் சாற்றினவராய் இருந்தார். உதாரணத்திற்கு அவரது சிங்காசனத்திலுள்ள எதிர்க்கால மகிமைக் குறித்த வாக்குறுதியை அவரது சீஷர்களில் இருவர், அவரிடத்தில் கேட்டபோது, அவரோ: "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கக்கூடுமோ?" என்றார்.

அவர்களது இருதயப்பூர்வமான உறுதிமொழியின் நிமித்தமாக, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்றார். திராட்சப்பழரசமானது, இரத்தம்/இரசம் வெளியே வருமளவுக்குத் திராட்சையைப் பிழிவதை மாத்திரம் குறிக்காமல், பிற்பாடு கடந்துவரும் புத்துணர்வையும்கூடக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; ஆகையால் "கிறிஸ்துவின் பாடுகளில்" இப்பொழுது பங்குகொள்ளும் நாம், அவரது மகிமைகளிலும், கனங்களிலும் மற்றும் அழியாமையிலும் சீக்கிரத்தில் பங்குகொள்வோம் — அதாவது இராஜ்யத்தில் அவரோடுகூடப் புதிய திராட்சரசத்தைப் பருகும்போது ஆகும்.

ஆகையால் மிகவும் அன்புக்குரியவர்களே, நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குக் கூடுகையில் நாம் செய்கிற காரியத்தினுடைய அர்த்தத்தினை மனதிற்குக் கொண்டுவருவோமாக; அவருடைய ஜீவனால் ஊக்குவிக்கப்பட்டு, ஜீவ அப்பத்தினால் பலப்படுத்தப்பட்டுள்ள நாம், அவருடைய மரணத்திற்குள்ளாக அவரோடுகூடப் பானம்பண்ணுவோமாக மற்றும் மற்றவர்களைப் போஷிக்கத்தக்கதாக அவரோடுகூட நாம் பிட்கப்பட வேண்டும் என்று முன்பில்லாத அளவுக்கு மிகவும் உறுதியுடன் முன்னேறுவோமாக. "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" (2 தீமோத்தேயு 2:11, 12).

## யார் பங்குகொள்ளலாம்?

கிறிஸ்துவின் அங்கங்கள் அனைவரும், ஒருவேளை ஒருவர் தனியாக இருப்பின், அவருங்கூட ஆண்டவரோடு நினைவுகூருதலை அனுசரிக்கலாம்; ஆனால் கூடுமான மட்டும் அந்த ஒரே அப்பத்தின் அங்கங்கள் அனைவரும் ஒன்றுகூடிட வேண்டும். அனுசரிப்பில் சம்பிரதாயங்கள் எதுவும் வேண்டாம் என்றாலும், "சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்பட" வேண்டும்.

மற்றுமொரு கருத்து: இப்படியாக "நம்முடைய பஸ்காவை" (அ) அதன் ஆண்டு நிறைவு நாளில் அதை நினைவுகூருவது ஏற்றக் காரியமாக இருப்பினும், இன்னொரு கோணத்தில் நாம் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும், அவரைப் புசித்துப் பானம்பண்ணுகிறவர்களாக இருந்து, நமது கர்த்தருடன் இந்தப் பரிசுத்தமான ஐக்கியம் கொண்டவர்களாய் இருக்கின்றோம் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இஸ்ரயேலர்கள் தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியினை, "கசப்பான கீரைகளுடன்" புசித்த இரவானது, முழுச் சுவிசேஷ யுகத்திற்கும் நிழலாய் இருக்கின்றது; மேலும் அவர்கள் எகிப்திலிருந்து, அடுத்து வந்த காலை வேளையில் விடுதலையானார்கள். இப்படியாகவே நம்முடைய விஷயத்திலுங்கூடக் காணப்படுகின்றது, அதாவது நாம் நம்முடைய ஆட்டுக்குட்டியை, கசப்பான சோதனைகளுடனும், பொல்லாங்கனுடைய உபத்திரவங்களுடனும் தற்கால யுகத்தில் புசிக்கின்றோம், ஆனால் காலையிலோ களிப்பும் மற்றும் பூமியிலிருந்தும், தீமையின் ஆளுகையிலிருந்தும், கொடுமைகளிலிருந்தும் நமக்கான விடுதலையும் கடந்துவருகின்றது. காலை ஏற்கெனவே விடிந்துகொண்டிருக்கின்றது, ஆகவே "கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றிடுவதற்கு" அதிகம் துரிதப்படுவோமாக. (கொலோசெயர் 1: 24)

(கர்த்தருடைய) இந்தக் கட்டளையின் அர்த்தம் தொடர்பாக, நாம் மேலே முன்வைத்திட்ட கருத்துக்களை, அப்போஸ்தலனாகிய பவுல் வலியுறுத்துபவராக இருந்து, அதன் அர்த்தம் பற்றின சரியான புரிந்துகொள்ளுதலுக்கான அவசியத்தைச் சுட்டிக்காட்டுகின்றார். அவர் பின்வருமாறு எச்சரிக்கின்றார்: "இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, (அதன் அர்த்தம் குறித்த புரிந்துகொள்ளுதலுடனும் மற்றும் உணர்ந்துகொள்ளுதலுடனும்) இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் (அதன் உண்மையான அர்த்தத்தினை — கிறிஸ்துவின் பாடுகளிலும் மற்றும் மரணத்திலும் உள்ள நம்முடைய பங்கெடுத்தலை சரியாய்ப் புரிந்துகொள்ளாத காரணத்தினால்) இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதி உள்ளவர்களுமாயிருக்கிறார்கள் அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்." (1 கொரிந்தியர் 11:27-30)

பவுலினுடைய கருத்துக்களிலுள்ள உண்மைக்கு நாம் ஒவ்வொருவரும் சாட்சிப் பகர முடியும். சபையில், அதாவது பெயர்ச் சபையில் மாத்திரமல்லாமல், உண்மையான சபையின் அங்கத்தினர்களிலும் அநேகர், "பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டுள்ளவர்களில்" அநேகர், பலவீனமடைந்து, வியாதிப்பட்டுள்ளனர் மற்றும் அநேகர் முற்றிலும் நித்திரைக்குள் போய்விட்டனர், அதாவது ஆவிக்குரிய காரியங்களுக்கு மரித்துப் போய்விட்டனர் மற்றும் மரித்துப்போன கிளைகளென, திராட்சச்செடியிலிருந்தும், ஜெயங்கொள்ளும் சபையிலிருந்து வெட்டப்பட்டுப் போய்விட்டனர். (யோவான் 15:2)

ஆகவே நாம் வருடந்தோறும் நம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்திக்கொள்ளும்போது, நாம் பலவான்களாகவும், ஆவிக்குரிய உற்சாகத்தினால் நிரப்பப்பட்டவர்களாகவும் காணப்பட வேண்டுமெனில், "மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காதவர்களாகக்" காணப்பட வேண்டுமெனில், நாம் நம்மைச் சோதித்து அறிந்துகொள்வோமாக மற்றும் நாம் ஏற்றக் காலத்தில் அவருடைய மகிமையில் பங்கடையத்தக்கதாக இப்படியாகப் பாடுகளிலும், அந்தச் சின்னங்களிலும் பங்குகொள்வோமாக!

# பதிலாள் தொடர்புடைய கேள்விகள்

*கேள்வி.* மரணத்தில், இயேசு மனிதனுக்கு பதிலாள் ஆவாரானால், நமக்காக அவர் தமது ஜீவனைப் பதிலாளாக இருந்து கொடுத்தது முதற்கொண்டு, இன்னும் மனிதன் ஏன் மரித்துக்கொண்டே இருக்கின்றான்? மனிதர்கள் தொடர்ந்து மரித்துக்கொண்டிருப்பது, அவரது நோக்கத்திற்கு எதிரான காரியமல்லவா? ஏனெனில் தேவன் நீதியுள்ளவர் என்றால், அவரால் ஒரே ஆதாமின் பாவத்திற்காக பாவியையும், அவனுக்கான பதிலாளையும் விடாது வைத்திருக்கக்கூடாதே.

*பதில்.* இயேசு நம்முடைய பிரதிநிதியென அல்லது பதிலாளாக, "நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்" என்று மாத்திரம் வேதவாக்கியம் கூறாமல், "நாம் கிரயத்துக்குக்கொள்ளப்பட்டோம்" என்றும் கூறுகின்றது மற்றும் இக்காரியத்தினை முழுமையாய்ப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், இதற்கே உரிய முக்கியத்தினை இதற்கு நாம் கொடுத்திடவேண்டும்.

மீறப்பட்டதான தேவனுடைய பிரமாணமானது நமக்கு எதிராய்ச் சாற்றியுள்ளதான தண்டனையை, இயேசுதாமே சந்தித்தார் என்ற விதத்தில், இயேசு மனிதனுக்கான பதிலாளானார். இதன்விளைவாக தேவன் இனி ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பதில்லை; ஏனெனில் கிறிஸ்துவே மரித்திருக்கின்றார். (உரோமர் 8:34-ஆம் வசனத்தைப்பார்க்கவும்) ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படும் காரியமானது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் இப்பொழுது கேள்வி என்னவெனில், நீதி பிரமாணம் திருப்திப்படுத்தப்பட்டாயிற்று என்றால், மரணத்துக்கு அதிகாரியான, மரண தண்டனையை நிறைவேற்றுபவன் (பிசாசானவன் - எபிரெயர் 2:14) உடனடியாக ஏன் தடுத்து நிறுத்தப்படவில்லை? என்பதேயாகும். இந்தக் கேள்விக்கான பதிலைக் கண்டுபிடிக்க, நாம் நினைவுகூர வேண்டியது என்னவெனில்: கிறிஸ்துவினுடைய வேலையும், சித்தமும் பிதாவினுடையதாக இருப்பினும், நாம் பார்த்துக்கொண்டிருக்கும் விஷயத்தினுடைய சட்டரீதியான கோணத்தில் பார்க்கையில், மனிதர்கள் இப்பொழுது பிதாவுக்குக் கட்டுப்பட்டவர்களாய் இல்லாமல், மாறாக அவர்களைக் (கிரயத்துக்குக்) கொண்டவராகிய அவரது குமாரனுக்குக் கட்டுப்பட்டவர்களாய் இருக்கின்றார்கள் என்பதேயாகும். ஆகையால் சத்துருவானவன் இன்னமும் அவனது வேலையில் குறுக்கிடப்படவில்லை என்ற காரியத்தினை எந்தவிதத்திலும் யேகோவா தேவன் அநீதி செய்திட்டார் என்று குற்றமாகச் சாட்டிடமுடியாது மற்றும் (கிரயத்துக்குக்) கொண்டவராகிய இயேசுவுக்கும் எதிராகவும் குற்றமாகச் சாட்டிடமுடியாது; இயேசு தம்முடைய அதிகாரத்தைச் செயல்படுத்துவதற்கும், அனைவரையும் விடுவிப்பதற்குமான தம்முடைய நோக்கத்தினைத் தம்முடைய ஏற்றவேளையில் செய்திடுவார் என்று தெரிவித்துள்ளார்; இன்னுமாக நமக்கு ஜீவிக்கும் உரிமையைப் பெற்றுத்தந்தவர், அதை அவர் உடனடியாக வழங்காததினால், யாராகிலும் அவரைக் குற்றஞ்சாட்டிட கூடுமா? நமக்குக் காரணம் தெரியவில்லை என்றாலும், தாமதத்திற்கு அவர் சில நல் காரணங்களையே கொண்டிருக்க வேண்டும் என்பதில் நமக்கு நிச்சயமே; ஏனெனில் அவர் நம்மேல் அன்புகூர்ந்து, மனதுருகினார் என்பதை நாம் நினைவுகூருகின்றோம்; காரணம், "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." (யோவான் 15:13)

கடந்த காலங்களிளெல்லாம் ஆயிரமாயிரமான நமது சகோதரர்கள் ஏன், எதற்காக என்று தெரியாமலேயே அவரது ஞானத்தையும், அன்பையும் விசுவாசித்ததுபோன்று, நாமும் விசுவாசிக்கக்கூடும் என்றாலும், தேவன் அதிகமதிகமாய்த் தம்முடைய திட்டங்களை நமக்கு வெளிப்படுத்துவதற்குச் சித்தமாய் இருக்கிறதும், இயேசு சட்டப்பூர்வமாக மரணத்தை ஜெயங்கொண்டு, மரணத்திற்கும், பாதாளத்திற்குமான திறவுகோல்களைப் (திறப்பதற்கான அதிகாரத்தினை) பெற்றிருந்தப் பிற்பாடும், இன்னமும் மரணம் ஆளுகை செய்ய அனுமதிக்கப்படுவதற்கான காரணத்தை நமக்கு வெளிப்படுத்துவதற்குமான காலப்பகுதியில் நாம் ஜீவிப்பதினால் நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். (வெளிப்படுத்தல் 1:18)

மரணத்தினாலும், இதற்குக் காரணமுமான பாவத்தினாலும் கெடுக்கப்படுவதற்கு முன்னதாகக் காணப்பட்ட மனிதனுடைய பூரண சுபாவத்தினிடத்திற்கு மனுக்குலத்தைச் சீர்ப்பொருந்தப்பண்ணுவதற்கு மாத்திரம் தேவன் நோக்கம் கொண்டிராமல், இன்னுமாக மனுஷர்கள் மத்தியிலிருந்து "சிறுமந்தையினரை" தெரிந்துகொள்வதற்கும்கூடத் தேவன் நோக்கங்கொண்டிருந்தார்; இந்தச் சிறுமந்தையினர் மனித சுபாவத்திலிருந்து, திவ்விய சுபாவத்திற்கு மறுரூபமடைவது மூலம் "புதுச் சிருஷ்டிகளாகவும்," உயர்த்தப்பட்டுள்ள கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவைப் போன்று காணப்பட்டு, அவரது வேலையிலும், மகிமையிலும், அதிலும் விசேஷமாக

மனுக்குலத்தைச் சீர்ப்பொருத்தும் வேலையில் பங்காளிகளாகக் காணப்பட வேண்டும் என்பதும்கூடத் தேவனுடைய நோக்கமாயிருந்தது.

அவரது சிங்காசனத்திலும், வேலையிலும், பங்கடையும் இந்தச் சிறுமந்தையினர், மணவாட்டி, "திரும்பக்கொடுத்தலின் காலங்கள்" ஆரம்பமாகுவதற்கு முன்னதாக, முதலாவது தெரிந்தெடுக்கப்பட வேண்டும், இல்லையேல் அவளால் பங்கடைய முடியாது என்பதை இப்பொழுது அனைவராலும் காணமுடிகின்றது. ஒருவேளை இயேசு மனிதர்களை மீட்டுக்கொண்ட உடனே, அவருக்குச் "சகல அதிகாரமும் கொடுக்கப்பட்ட" (திறவுகோல்கள் கொடுக்கப்பட்ட) உடனே, அவர் மனிதர்களைச் சீர்ப்பொருந்த ஆரம்பித்திருப்பாரானால், இது அவரது மணவாட்டியாகவும், வேலையில் துணைவியாகவும் இருக்கத்தக்கதாக கற்புள்ள கன்னிகையைத் தெரிந்தெடுக்கும் பணியைத் தடைப்பண்ணியிருந்திருக்கும்.

இயேசு தம்முடைய மகா வல்லமையையும், ஆளுகையையும் கையில் எடுக்கையில் தேவகிருபையினால் நாமும் அவரோடுகூட மகிமையடைந்து, வரவிருக்கும் அனைத்திற்குமான திரும்பக்கொடுத்தலுக்கு நிழலாய் மாத்திரம் காணப்பட்டதான தம்முடைய அற்புதங்கள் தொடர்புடையதாய், "இவைகளைப்பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் செய்வான்" என்று வாக்களித்ததற்கு ஏற்ப, அவர் தம்முடைய வல்லமையைச் செயல்படுத்துவதில் நாமும் பங்கடைவோம் என்று இயேசு விசுவாசித்தவராக, இயேசு தமது மகா வல்லமையைப் பயன்படுத்துவதில் தாமதிக்கும் காரியமானது, தேவனுடைய திட்டத்தில் இடம்பெறுவதினால் நாம் மகிழ்ச்சிக்கொள்கின்றோம், மிகுந்த மகிழ்ச்சிக்கொள்கின்றோம்.

மணவாட்டி தெரிந்தெடுக்கப்பட்டு, திரும்பக்கொடுத்தல் வேலைக்கான காலம் வருவதுவரையிலும், ஏன் இயேசு தமது முதலாம் வருகையைத் தாமதிக்கவில்லை? என்று கேள்வி எழும்பலாம். இதுவும், நமது முந்தின கேள்வியும் தொடர்புடையதாகக் காணப்படுவதினால், நாம் இங்கு அதற்குப் பதிலைப் பதிவு செய்கின்றோம்:

இயேசுவோடுகூடத் திவ்விய சுபாவத்திலும், மகிமையிலும் நாம் பங்கடையத்தக்கதாக, இயேசுவோடுகூட நாம் மனுஷ சுபாவத்தைப் பலிசெலுத்துவது மாத்திரம்போதாது, நமது மனுஷ சுபாவமானது அபூரணமானதாகவும், ஆதாம் மூலமாக ஏற்கெனவே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதாகவும் காணப்படுவதினால், அது கறைதிரையற்றப் பலிசெலுத்தப்படுகின்ற யேகோவா தேவனின் பலிபீடத்தில், அங்கீகரிக்கப்படத்தக்கதான பலியாகுவதற்கு முன்னதாக, ஆக்கினைக்குள்ளான நிலையினின்று விலைக்கொடுத்து வாங்கப்படுவது (அ) மீட்கப்படுவது அவசியமாகும். ஆகையால் இயேசுவினுடைய பலியிலும், மகிமையிலும் பங்கடைவதற்கான அழைப்புச் சபைக்கு வருவதற்கு முன்னதாக, நம்முடைய பாவங்களுக்கான மீட்கும் பொருளென, இயேசுவினுடைய பலி அவசியமாய் உள்ளது என்று உடனடியாகப் புரிந்துகொள்ளப்படலாம்.

ஈடுபலிக்கும், திரும்பக்கொடுத்தலுக்கும் இடையில் சிறுமந்தையினர் அவரது பலியில் பங்கடையத்தக்கதாக காலங்கள் பல கடந்துசெல்ல வேண்டியுள்ளது என்பது மாத்திரமல்லாமல், அந்த ஒரு காலப்பகுதியில்தான் தீமையும் ஆளுகைச் செய்ய வேண்டும். ஒரு கணம் யோசித்துப்பாருங்கள், ஒருவேளை நமது அதிபதி இப்பொழுது ஆளுகை செய்கின்றாரானால் மற்றும் நன்மை செய்தலுக்குப் பலனும், தீமை செய்தலுக்குத் தண்டனை முதலானவை வழங்கப்படுகிறது என்றால், சிறுமந்தையினர் தீமையினால் சோதிக்கப்படுவதற்கும், பரீட்சிக்கப்படுவதற்கும் வாய்ப்பிராது மற்றும் நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும் தங்களையே பலிசெலுத்திடுவதற்கும் வாய்ப்பிராது. இப்படியாகவே இயேசுவினுடைய பலியின் விஷயத்திலும்கூடக் காணப்பட்டிருக்கும்; அப்போது தீமையின் ஆளுகை காணப்படவில்லையெனில், அவர் சத்தியத்திற்குச் சாட்சிபகர்ந்த காரியமானது எந்தப் புறக்கணிப்பையும், நிந்தனைகளையும், முட்களையும் (அ) சிலுவையையும் (அ) மரணத்தையும் கொண்டுவந்திருக்காது.

ஆயிரவருட யுகத்தின்போது, கிறிஸ்துவினுடைய ஆளுகையின்கீழ் "தீமையை நன்மையினாலே வெல்லும்" வாய்ப்பிராது; ஏனெனில் அப்போது தீமையின் ஆளுகையானது முடிவிற்குக்கொண்டுவரப்பட்டு, நீதியின் ஆளுகையானது ஆரம்பிக்கப்பட்டிருக்கும்.

பாவங்களை விட்டுவிடுவதே (அதாவது தீமை செய்வதை, குடிப்பழக்கத்தை, கெட்ட நடத்தை முதலானவற்றைத் தொடராமல் இருப்பதே) பலி என்று கருதுகின்றவர்களால், நம்முடைய நிலைப்பாட்டினைப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் யார் பலியினை - மனுஷீக உரிமைகள், சிலாக்கியங்கள், சௌகரியங்கள் மற்றும் நலன்கள் ஆகியவற்றை ஒப்புக்கொடுத்தல் மற்றும் தியாகம் செய்தல் என்று காண்கின்றார்களோ அவர்களே, இம்மாதிரியான பலியானது, தீமையான சூழ்நிலைகள் நிலவும்போதே சாத்தியமாகுகின்றது என்பதைப் புரிந்துகொள்வார்கள்.

ஆகையால் சுவிசேஷ யுகமானது, "கர்த்தருடைய அநுக்கிரக வருஷமாய்" இருக்கின்றது. இந்தக் காலப்பகுதியிலேயே முறையாய் ஏறெடுக்கப்படுகின்றதான பலிகள் அனைத்தையும் தேவன் ஏற்றுக்கொள்கின்றார். நிழலாகச் செய்வதற்கே ஒழிய, மற்றப்படி இந்த யுகத்திற்கு முன்னதாக இப்படியானதொரு வாய்ப்பு வழங்கப்படவில்லை. ஈடுபலியானது அதுவரையிலும் கொடுக்கப்படாததினாலும், அனைவரும் பாவிகளென மரணம் எனும் ஆக்கினைத்

தீர்ப்பிற்குள்ளாகக் காணப்பட்டதினாலும், பலி செலுத்துவதற்கான வாய்ப்பு இந்த யுகத்திற்கு முன்னதாகக் கூடாததாயிருந்தது உண்மைதான். சிலர் தேவனுடைய கிருபையின் திட்டத்தினை விசுவாசித்தவர்களாக, பாவங்களுக்கான விசேஷித்தப் பலிகளைக் குறித்து உய்த்துணர்ந்தவர்களாக, எதிர்நோக்கினவர்களாகக் காணப்பட்டு, விசுவாசத்தினாலே பலனை ஏற்றுக்கொண்டவர்களானார்கள். இயேசு பாவங்களுக்கான தம்முடைய பலியை நிறைவேற்றி, அதை நம்முடைய பாவங்களுக்கான ஈடுபலி விலைக்கிரயமென முன்வைப்பதற்கு முன்வரையிலும், தேவன் பாவத்தை நிஜமாய் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதவில்லை என்கிற காரியமானது, பெந்தெகொஸ்தே நாள் வருவதற்கு முன்புவரை, இயேசுவின் சீஷர்களைக்கூட யேகோவா தேவன் பலிகளாக ஏற்றுக்கொள்ளவில்லை என்ற உண்மையிலிருந்து உறுதிப்படுகின்றது.

இயேசு அங்கீகரிக்கப்படத்தக்க பலியாய்க் காணப்பட்டார்; ஏனெனில் அவரில் பாவம் ஏதுமில்லை. இந்த யுகத்தில், அவரது ஈடுபலியினை ஏற்றுக்கொண்டு, அவரது பலியின் பலன்களில் இப்பொழுது பங்கடைபவர்கள், பாவம் மற்றும் அதன் ஆக்கினைத் தீர்ப்பினின்றும் விடுவிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர். பாவத்தினின்று விடுவிக்கப்பட்டுள்ளவர்களாகிய இவர்களும் அங்கீகரிக்கப்படத்தக்கதான பலிகளாகக் கூடும், அதாவது "கர்த்தருடைய அநுக்கிரக வருஷம்" நீடிப்பதுவரையிலும் பிரியமானவருக்குள் அங்கீகரிக்கப்படுபவர்களாகக் கூடும். சுத்திகரித்தல் மற்றும் பலிச் செலுத்துதல் (அல்லது நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதல்) எனும் இந்தப் பிரமாணத்திற்கேற்ப "சிறுமந்தை" - மணவாட்டி - ஆட்டுக்குட்டியானவரின் மனைவி தெரிந்தெடுக்கப்பட்ட பிற்பாடு, பலிசெலுத்துவதன்மூலம் சுபாவ மாற்றம் அடைவதற்கான விசேஷித்த அழைப்பானது, அதாவது பரம அழைப்பானது, பரலோக அழைப்பானது நிறைவுபெறும்.

அடுத்த யுகத்தின்போது காணப்படுகின்றதான பரீட்சையின் நிலைமைகளானது, இப்பொழுது இருப்பதைக்காட்டிலும் மிகவும் சுலபமானதாய் இருக்கும் மற்றும் அவர்களுக்கான கிரீடமானது மகிமையானதாய் இருப்பினும், நாம் எந்தக் கிரீடத்திற்காய் ஓடிக்கொண்டிருக்கின்றோமோ அந்தக் கிரீடத்தைக்காட்டிலும் குறைவான மகிமையுடையதாகவே இருக்கும். அவர்களது நோக்கம், மனித சுபாவத்தில் பூரணமடைதல் ஆகும்; நம்முடையதோ திவ்விய சுபாவத்தில் பூரணமடைதலாகும்; ஒன்று பரலோகச் சாயல், மற்றொன்று மகிமையான, பூமிக்குரிய சாயலாகும். பரலோகத்திற்குரிய மகிமை என்பது ஒரு காரியமாகவும், பூமிக்குரிய மகிமை என்பது இன்னொரு காரியமாகவும் காணப்படுகின்றது. முதல் மனிதனுக்கும் (மற்றும் அவரது மனைவிக்கும்) கொடுக்கப்பட்டிருந்த மகிமையும், ஆளுகையும் திரும்பக் கொடுக்கப்படுகையில், மனிதன் மீண்டுமாக, தேவதூதரிலும் சற்று சிறிய நிலையிலேயே வைக்கப்படுவான் என்ற காரியமானது, நமது கர்த்தராகிய இரண்டாம் ஆதாமுக்கான (மற்றும் அவரது மனைவிக்குமான) உன்னதமான மகிமையையும், அவர் தேவதூதர்களுக்கும் மேலானவராக்கப்பட்டிருப்பதையும், முழங்கால்யாவும் அவருக்கு முடங்கவும், நாவுகள்யாவும் அவரை அறிக்கைப்பண்ணவும் செய்யப்பட்டிருப்பதையும் மங்கலாய் விளக்குகின்றதாய் இருக்கின்றது. (சங்கீதம் 8:5; பிலிப்பியர் 2:9, 10; எபிரெயர் 1:4 மற்றும் 1 கொரிந்தியர் 6:3 ஆகிய வசனங்களை ஒப்பிட்டுப்பார்க்கவும்.)

*****

## கவர்ந்திழுக்கப்பட்டு சோதனைக்குட்பட்டவரே.

கவர்ந்திழுக்கப்பட்டு மிதமிஞ்சி சோதிக்கப்பட்டவரே,
ஆக்ரோஷமாயும், கட்டுக்கடங்காமலும், ஆழமாயும் இருக்கின்றதோ?
அதன் ஆக்ரோஷம், கோபம், மூர்க்கம் அனைத்தும் வீணே,
கர்த்தர் தாங்கிக் கரம் பற்றிக் கொள்வார்.
காலா காலத்திற்கும், யுகா யுகத்திற்கும் யாவே தேவனே அரசாள்வார்,
கவர்ச்சிக்காளாகி சோதிக்கப்பட்டவரே,  இருப்பினும் கர்த்தர் உன் பக்கம் உள்ளார்,
உன்னை வழி நடத்திடுவார், உன்னோடு அவர் இருக்கின்றார்,

அவர் அன்பின் பிள்ளைகள் தம்மை நம்பி ஒப்படைத்துள்ளார்,
அவரே காப்பார், அவரே பாதுகாத்திடுவார், முடிவுவரைக்கும் அன்பு செய்வார்,
வணங்குதற்குரிய எஜமானன், மகிமை மிகுந்த நண்பனானார்,

கவர்ச்சிக்காளாகி சோதிக்கப்பட்டவரே,
என்ன தான் சோதனை உச்சிமுகட்டை தொட்டாலும்,
அவர் இரகசிய கூடாரத்திற்குள்ளே
அவர் செட்டைகளின் நிழலின் கீழே மறைத்துக்கொள்வார்,
முடிவில்லா இராஜ்ஜியத்தில் அவர் குழந்தைகள் விசுவாசம் கொள்வார்,
அக்களித்துப் பாடல்கள் பாடிடுவார்,

கவர்ச்சியால்  சோதிக்கப்பட்டவரே, இன்னும் கர்த்தருக்காய் காத்திரு,
உன் நம்பிக்கைக்குரிய விடுதலையாளர், பாதுகாப்பாளர், வழிநடத்துனர்,
அவரே உன் கேடகமும், பட்டயமும் ஆகிடுவார்,
உன் அதிகப்படியான பரிசும் அவரே,
அதுவே அவர் ஊழியருக்குப்போதுமானதே,
அவரே அவர்களுக்குத் தேவனாக இருப்பாரே,

கவர்ச்சிக்காளாகி சோதிக்கப்பட்டவரே,
இறந்த அந்த மீட்பரே, உன்னைப்பாடுபட அழைத்தாரே,
அவருடனே பக்கமமர்ந்து ஆட்சி செய்திட,
அவர் சிலுவைதனை சுமந்து செல்ல,
அவர் கிரீடம்தனை நித்தியத்திற்கும் அணிந்திட,
அவர் மகிமையிலே பங்கு பெற்றிடவே அழைக்கின்றாரே.

# அப்பம் மற்றும் திராட்சரசம்

வாட்ச் டவர் இதழாசிரியர் அவர்களே: "பஸ்கா" சம்பந்தமான ஏப்ரல் மாதத்தினுடைய உங்களுடைய வெளியீட்டினை நான் வாசித்தேன் மற்றும் அதில் நான் நன்கு திருப்தியும் அடைந்தேன். கர்த்தருடைய இராப்போஜனமானது, யூதருடைய பஸ்காவிற்குப்பதிலாக கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்றும், அது வருடந்தோறுமாக ஆசரிக்கப்பட வேண்டும் என்றும் நான் விசுவாசிக்கின்றேன்; ஆனால் நீங்கள் ஒரு காரியத்தைக் குறித்துப் பேசவில்லை. இந்த இராப்போஜனத்திற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய (wine) திராட்சரச வகை குறித்தே நான் குறிப்பிடுகின்றேன். "புளிப்பில்லாத அப்பம்" பயன்படுத்தப்படும்படிக்கு நீங்கள் கருத்துத் தெரிவித்துள்ளீர்கள் மற்றும் இது முற்றிலும் சரியே என்று நான் எண்ணுகின்றேன்; ஆனால் என்ன வகை திராட்சரசம் (wine) பயன்படுத்தப்பட வேண்டும்? என்று நான் கேட்கின்றேன். புளிப்பென்பது பாவத்திற்கு நிழலாய் இருக்கின்றபடியால், இது கிறிஸ்துவினுடைய தூய்மைக்குப் பொருத்தமான நிழலல்ல என்று நீங்கள் சரியாகவே போதிக்கின்றீர்கள் என்று நான் எண்ணுகின்றேன். இப்படியாகவே புளிப்பேற்றப்பட்ட (அ) புளிப்பான திராட்சரசத்தின் (wine) விஷயத்திலும் காணப்படுகின்றது என்று நான் எண்ணுகின்றேன். இது (புளிப்பு) தூய்மையானதல்ல, ஆகையால் கிறிஸ்துவினுடைய இரத்தத்திற்குப் பொருத்தமான அடையாளமாய் இராது! "பாம்பைப்போல் கடிக்கிறதும், விரியனைப்போல் தீண்டுகின்றதுமான" . . . திராட்சரச வகைக்குப்பதிலாக புதிய, சுத்தமான/தூய திராட்சரசத்தை நாம் பயன்படுத்திட வேண்டுமென்று நீங்கள் எங்களுக்குப் போதித்திடவில்லை.

ஒரு பொருளானது புளிக்க வைக்கப்பட்ட பிற்பாடு மற்றும் விஷமானபிற்பாடு, அது கிறிஸ்துவினுடைய தூயதும், விலையேறப்பெற்றதுமான இரத்தத்திற்கு ஏற்ற அடையாளமாய் இருக்க முடியுமோ? கர்த்தருடைய இராப்போஜனத்தைச் சரியாய் ஆசரிக்கும் விஷயத்தில் புளிப்பற்ற அப்பத்தைப்போலவே, நல்ல திராட்சரசமும் பயன்படுத்தப்படுவது முக்கியமானது என்று நான் கூறுகின்றேன். இதை நீங்கள் சிந்தித்து, இதையே கூறுவீர்கள் என்று நம்புகின்றேன்.

உங்கள் உண்மையுள்ள
பி. டி. லேன்.

**எங்கள் பதில்**

பூரண மதுவிலக்கிற்கான நோக்கத்திற்கு — நாமும் ஒத்திசைந்து காணப்படும் இந்த நோக்கத்திற்குத் தடைப்பண்ணிடுவதற்கு ஏதுவாய், நாம் ஏதும் செய்துவிடக்கூடாது என்ற வாஞ்சையில், மேலே குறிப்பிட்டுள்ளதான இக்காரியம் குறித்து விசேஷமாய்க் கருத்துத் தெரிவிப்பதை நாங்கள் தவிர்த்திருந்தோம்; ஆனால் சமீபத்தில் எழுந்துள்ளதான அநேகம் கேள்விகளானது இக்காரியத்திற்கு, பதில் அவசியம் என்பதைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது.

முதலாவதாக நம்முடைய தட்பவெட்பநிலை மற்றும், மனவுளைச்சல் மற்றும் நம்முடைய நாட்களிலுள்ள உணர்ச்சிகளைத் தூண்டும் முறைமைகளானது, போதைத் தரும் மதுபானங்களினுடைய பயன்பாட்டு துவங்கினபோது, மனிதர்களை அதிகமாய் இந்தப் போதையூட்டும் பானங்களைப் பயன்படுத்திடுவதற்குத் தவிர்க்கமுடியாத அளவுக்கு வழிநடத்தினது குறித்து நாம் குறிப்பிட வேண்டும். இதுமாத்திரமல்லாமல், தற்காலத்தில் தயாரிக்கப்படுகின்றதான பெரும்பான்மையான போதையூட்டும் மதுபானங்களானது, இவைகளைப் பயன்படுத்துவதின் காரணமாக உண்டாகும்ஆபத்துகளையும், தீமைகளையும் பெரிதும் அதிகரிக்கும் வகையில் போதையூட்டப்பட்டுள்ளது மற்றும் பொருட்களால் கலப்படம் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காரணங்களினிமித்தமாக மதுபானங்களில் கலப்படம் பண்ணுகிறவர்களுக்கு எதிராக தற்போதைய சட்டங்களை அமுல்படுத்தும் காரியங்களில் அல்லது இதன் உற்பத்தி மற்றும் விற்பனையை முற்றிலும் தடைப்பண்ணிப்போடும் புதிய சட்டங்களைக் கொண்டுவரும் காரியத்தில் (இதைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதில் நமக்கு ஐயமே என்றபோதிலும்) இந்தத் தடையுத்தரவை ஆதரிப்பவர்களுக்கு நாமும் நம்முடைய ஆதரவைத் தெரிவிக்கின்றோம். இப்படி முற்றிலும் தடைப்பண்ணிடுவது என்பது, இந்த உலகத்தின் அதிபதியான சாத்தான் கட்டப்படுவது வரையிலும் நிறைவேறிடாது என்று நாம் எண்ணுகின்றோம்.

நம்முடைய ஆதரவு இருந்தபோதிலும், நம்முடைய பெரும்பான்மையான வாசகர்களின் அனுதாபங்களும், ஆதரவுகளும்கூடப் பூரண மதுவிலக்கின் பக்கமே காணப்படுகின்றது என்ற உண்மையினை நாங்கள் அறிந்திருந்தபோதிலும் - நாங்கள் ஒருவேளை பேசிட்டால் சத்தியம் என்று நாங்கள் கருதுவதையே பேசிடுவோம்; எந்த விக்கிரகம் உடைந்திட்டாலும் சரி, எந்தக் கோட்பாடுகள் கேள்விக்குள்ளானாலும் சரி, சத்தியம் என்று நாங்கள் கருதுவதையே பேசிடுவோம் மற்றும் அவை பின்வருமாறு:

போதையூட்டும் திராட்சரசங்களினுடைய பயன்படுத்துதலைக் குறித்து வேதாகமமானது ஒருபோதும் ஆதரிப்பதில்லை என்று வைராக்கியமிக்க குடியொழிப்பு ஆதரவாளர்கள்

திரும்பத்திரும்பக் கூறுவதுண்டு. இயேசு உண்டுபண்ணின மற்றும் பருகின திராட்சரசமானது, திராட்சபழச்சாறு (grape juice) மாத்திரமேயொழிய, wine/திராட்சரசமல்ல என்றும், இந்தப் பல்வேறு பானங்களைக் குறிப்பிடுகையில் வேறு கிரேக்க வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் இவர்கள் கூறுகின்றனர். இது தவறு என்று நாம் பதிலளிக்கின்றோம். திராட்சப்பழச்சாறு (அ) "புதிய திராட்சரசத்திற்கான" *gleukos* எனும் கிரேக்க வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் ஒருமுறை இடம் பெறுகின்றதாய் இருக்கின்றது (அப்போஸ்தலர் 2:13) மற்றும் இது இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது, ஒருவேளை இது அதிகமாய்ப் பயன்படுத்தப்பட்டால், இது மனதைக் குழப்புகின்றதாய் இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. திராட்சரசம் என்று மொழிப் பெயர்க்கப்பட்டுள்ளதற்கான வார்த்தையானது, அது இடம்பெறும் புதிய ஏற்பாட்டினுடைய மற்ற இடங்களில் எல்லாம் *Oinos* என்பதாகக் காணப்படுகின்றது மற்றும் இது பொதுவான வகை (grape wine) திராட்சரசத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் இது அதிகப்படியாய்ப் பயன்படுத்தும்போதும் எப்போதும் போதையூட்டுகிறதாகவே இருக்கும் என்பதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

*Oinos* என்பது போதையூட்டுமா என்பதை அறிந்துகொள்வதற்குப் பின்வரும் வசனங்களைப் பார்க்கவும்: "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான (Oinos) வெறிக்கொள்ளாமல்" "And be not drunk with wine, Oinos, wherein is excess." எபேசியர் 5:18; 1 பேதுரு 4:3; லூக்கா 1:15 மற்றும் 7:33, 34-ஆம் வசனங்களையும் பார்க்கவும்.

ஒருவேளை திராட்சரசத்தில் புளிப்பின் தன்மைகள் காணப்பட்டால், அது இயேசுவினால் "இராப்போஜனத்தை நிறுவினப்போது" பயன்படுத்தப்பட்டதாகாது என்று கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இப்படியாக இல்லை. மது ஒழிப்பு பேச்சாளர்கள் இப்படியாகப் பேசிடலாம், ஆனால் பெரும்பாலும் அறியாமையிலேயே இப்படிச் செய்கின்றார்கள் என்பதில் ஐயமில்லை; ஆனால் அறிவியலில் அறிவுள்ள மனிதர்களோ alcoholic or vinous fermentation/ மது நொதித்தல் மற்றும் putrefactive fermentation/ புரதச்சிதைவு நொதித்தல் இடையில் இருக்கும் பெரிதான வித்தியாசத்தினை அடையாளங்கண்டுகொள்வார்கள். முதலாம் முறைமையானது மாசுகளை வெளியேற்றி, திராட்சரசமாகிய இனிப்பான மற்றும் இனிமையான பானத்தை உண்டுபண்ணுகின்றதாய் இருக்கின்றது; மற்ற முறைமையோ புளிப்பினை உண்டுபண்ணி, அழுகிவிடச் செய்கின்றதாய் இருக்கின்றது. இந்த இரண்டாம் முறைமையானது, அப்பத்தைப் புளிக்கப்பண்ணுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது; மற்றும் இது ஏற்படுத்தும் அழுகுதல் (அ) பூஞ்சைகளின் வளர்ச்சியானது, ஆரம்பக்கட்டத்திலேயே சுடுவதினால் நிறுத்தப்படுகின்றது.

திராட்சரசத்தில் (wine) புளிப்புத்தன்மை காணப்படுகின்றது என்ற காரியமானது யூதருடைய பாரம்பரியத்தைப் பொறுத்தமட்டில் நிரூபிக்கப்படுவதற்குப்பதிலாக மறுக்கவேபடுகின்றது; ஏனெனில் யூதர்கள் பஸ்காவில் திராட்சரசத்தைப் பயன்படுத்துகின்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் பஸ்காவின்போது, அவர்கள் புளிப்பைக் களைந்துபோடுபவர்கள் ஆவர். இவர்கள் உண்மையான திராட்சரசத்தினைப் பயன்படுத்துகின்றார்கள். கர்த்தர் புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றையே (grape juice) பயன்படுத்தினார் என்று வலியுறுத்தப்படுவது என்பது இன்னொரு விதத்திலும் சரியல்ல என்று நம்மால் பார்க்க முடியும். பாலஸ்தீனியாவில் திராட்சப்பழங்களினுடைய அறுவடைக்காலமானது செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகும் மற்றும் பஸ்காவானது இதற்கு ஆறு மாதங்களுக்குப் பின்னரே வருகின்றது. அக்டோபர் மாதத்தில் தயார் செய்யப்படுகின்றதான திராட்சரசமானது, ஏப்ரலுக்கு முன்னதாகவே நிச்சயமாய்ப் புளிப்பேறியிருக்கும்.

புதிய திராட்சரசத்தைப்பார்க்கிலும், பழைய திராட்சரசம் சிறந்தது என்ற இயேசுவின் சாட்சியும் (லூக்கா 5:39; யோவான் 2:10), அவர்கள் பயன்படுத்தின திராட்சரசமானது புளிப்பேறின ஒன்று என்றுமுள்ள உண்மையும், (alcoholic fermentation/மது நொதித்தல்-இன்னும் நிறைவுபெறாத) புதிய திராட்சரசத்தை — ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டதும், அதன் நீண்டு சுருங்கும் தன்மையானது (elasticity) இழந்துபோயுள்ளதன் காரணமாக, புளிப்பேறுவதினால் உண்டாகும் வாயுக்களினால் ஏற்படும் விரிவினால் வெடித்து, கிழியக்கூடிய வாய்ப்புள்ள பழைய துருத்தியில் (தோல்களில்) வைக்க வேண்டாம் என்பது பற்றின உவமையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஏற்கெனவே குறிப்பிட்டிருப்பதுபோன்று இயேசு மற்றும் அப்போஸ்தலருடைய நாட்களில் இருந்ததைக்காட்டிலும், இங்குள்ள தட்பவெப்ப நிலைகளும், சூழ்நிலைகளும், மதுபானங்களுடைய தூய்மையும் மிகவும் வேறுபட்டதாய் இருக்கின்றது; நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூரும் தருணத்தில் (wine) திராட்சரசத்தைச் சுவைப்பது தனக்கு ஆபத்தானது என்று ஒருவர் எண்ணுவாரானால், அப்படிப்பட்டவர் இதற்குப்பதிலாக உலர் திராட்சரசத்தைப் பயன்படுத்தலாம்; இது திராட்சரசம் (wine) இல்லை என்றாலும், நிச்சயமாய் "திராட்சப்பழரசமேயாகும்" (fruit of the vine). நாங்கள் ஒவ்வொரு வருடமும் உலர் திராட்சரசத்தை ஏற்பாடு பண்ணி வைப்பதுண்டு, ஆனால் கடந்தவருடம் நாங்கள் இராப்போஜனம் ஆசரித்தப்போது ஒருவரால் மாத்திரமே அது பயன்படுத்தப்பட்டது.

*****

# வாழ்க்கை எனும் மலை

வாழ்க்கை என்னும் மலை மீதேறிடவே,அன்பான வார்த்தைகள்பேசிடவே,
அதிகவிலை ஒன்றும் தரவேண்டித் தேவையில்லை,
இளைத்தோரையும் , களைத்தோரையும், சண்டைபோடும் முரட்டாட்டம்கொண்டோரையும்,
உறுதியாக்குவதும் இவைதானே,வாழ்க்கைக்கு இதனை அற்பமாகவே எண்ணிடல்
வேண்டாம், இரக்கமிகுந்த அன்பு வார்த்தைகள்
என்றும் வீணாவதில்லையே,ஒன்றுகூடவீணாய்சொல்லப்படுவதில்லையே.

# எப்படி வாழ்திடலாம்?

வாழ்க்கையை நன்றாய்வாழ்பவருக்கே நீடிய வாழ்வு நிலை நிற்கும்,
நன்றாய் வாழா வாழ்க்கை யாவும் விரைந்து மறைந்தே வீணாய் போகும்,
நீடித்து வாழ்பவர் யாவருமே பரலோக லாபத்திற்காய் வாழ்ந்ததாய் கூறுவார்,
பூலோக லாபத்திற்காய்வாழும் மற்றவர் யாவரும் வெளியினில் வீசப்படுவாரே,
நீடித்துவாழ்பவர் யாவருமேதாம் அன்றாடம் செய்திட்ட செயல்களிலே
உண்மையை மட்டுமே உரைத்திடுவாரே,உங்கள் வாழ்வை வீணாக்க வேண்டாம்,
இலவசமாகவே கொடுத்தவரிடமே மீண்டும் மனம்திரும்பி  வந்திடுவீரே,
பூலோகத்திற்காய்வாழ்பவருக்கே அது கனவாய்த்தோன்றி மறையலாகுமே,
எப்படியும் வாழ்ந்திடலாம் என வாழ்ந்திடல் வேண்டாம், இப்படித்தான்வாழவேண்டும் எனும் வரையறைக்குள்ளே வந்திடுவீரே,
தெய்வீக பந்தமதை ஏந்திப்பிடிப்போம், உலகத்திற்கே பைத்தியமாய்த்தோன்றும் வாழ்க்கை வாழ்வோம், பேரெஜமான்காட்டிய வழியினில் நடப்போம்,
ஒவ்வொரு மணித்துளியினையும் அவர் சொன்னவற்றால் நிரப்பி,ஒவ்வொரு நொடிப்பொழுதினையும் விலைகொடுத்தே வாங்கிவிடு,
இவ்வாழ்க்கைக்கடந்துபோகும்,மேலே ஓர் வாழ்க்கையுண்டு,
உலக வாழ்க்கை பழுத்ததாகி அறுபட்டே போய்விடுமே,
சத்தியத்தை விதைத்தாலே சத்தியவான்களை அறுவடைசெய்திடலாம்,
சமாதானத்தை விதைத்தீரானால் சமாதானத்தை அறுவடை செய்வீர்,
மனசாட்சியை மிகப்பிரகாசமாகவே வைத்துக்கொண்டே நிலை நாட்டவேண்டும்.
புனித செயல்களால் பரிசுத்த வார்த்தையாய் விதைத்திட வேண்டுமே,
தூய அன்பை விதைப்பு செய்வீர், அதன்பலனைத்தானே மிகுதியாய்அறுப்பீர்,
கற்களுக்கிடையே, முட்புதர் நடுவிலேசூரியக்கதிர்களை விதைப்பு செய்வீர்,
பரலோக வாழ்வின்அறுவடைக்கான ஒளியதனை அறுவடைசெய்திடுவீர்.

ஹெரோஷியஸ்போனர்.

# சபை நிர்வாகம்

"எக்ளீஷியா" என்ற தலைப்பில் டவர் வெளியீட்டில் வந்திட்டதான கட்டுரையின் காரியங்களானது, கிறிஸ்துவின் சபை என்றால் என்ன என்றும், சத்தியம் மற்றும் அன்பின் ஆவியானது யுகம் முழுவதிலுமுள்ள பரிசுத்தவான்களைக் கட்டி இணைக்கின்றது என்றும் நம்மைப் புரிந்துகொள்ளச் செய்தது. ஆனால் சபை பிரிவுணர்ச்சியினின்று, ஆதியிலிருந்ததும் மற்றும் ஈடுபலியில் விசுவாசமுள்ள பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசிகள் யாவரையும் உள்ளடக்கும் உண்மையானதுமான ஒரே சபையினிடத்திற்குத் திரும்பி வந்துகொண்டிருக்கின்றதான அநேகம் ஊழியக்காரர்களிடமிருந்தும் மற்றும் இன்னும் பலரிடமிருந்தும், கேள்விகள் நமக்கு வருகின்றன; ஒவ்வொரு பட்டணங்களிலும் மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் பெற்றிருக்கும் உள்ளூர் அமைப்புகளை அப்போஸ்தலர்கள் நிறுவினதை நாங்கள் அங்கீகரிக்கின்றோமா? ஒருவேளை நாங்கள் அப்படியாகப் பெற்றிருக்கவில்லை என்றால், ஏன்? அப்போஸ்தலர்களுடைய நாட்களில் காணப்பட்டிருந்த organization/அமைப்பானது, இப்பொழுது பெற்றிருப்பது சரியாய் இராதா? இப்படியாக எந்த அமைப்புகளும் இல்லையெனில் சுவிசேஷ ஊழியமும், போதித்தல்களும் எப்படி வெற்றிகரமாக நடத்தப்படுகின்றது?" என்றும் நம்மிடம் கேட்கின்றார்கள்.

நம்முடைய நாட்களின் சூழ்நிலைகளிலிருந்து, அப்போஸ்தலருடைய நாட்களின் சூழ்நிலைகள் வேறுபட்டிருக்கின்றது என்று நாங்கள் பதிலளிக்கின்றோம்; எப்படியெனில் அவர்களது வேலையானது அப்போதுதான் துவங்குகின்றதான யுகத்தின் வேலைக்கு ஒழுங்குப்படுத்துவதாகவும், அஸ்திபாரம் போடுவதாகவும் அதிகம் காணப்பட்டது; ஆனால் நம்முடைய வேலையோ இதற்கு நேர்மாறானதாகும்; இப்பொழுது இந்த யுகத்தின் முடிவாக அல்லது அறுவடைகாலமாக இருக்கின்றது; அப்போதும், இப்போதுமுள்ள வழிமுறைகளானது, விவசாயி விதை விதைப்பதற்கும் மற்றும் அறுவடையை அறுப்பதற்கும் பயன்படுத்தும் வழிமுறைகளும், கருவிகளும் வேறுபடுவது போன்று, வேறுபடுகின்றது.

யூதயுக அறுவடையின் போதான இயேசுவின் வழிமுறைகளானது, தற்போதைய வேலைக்கு நல்லதொரு வழிக்காட்டியாய் இருக்கின்றது. அவருக்கு எப்படியோ, அப்படியே நமக்குமாகும். அவரது ஊழியம் சமாதானம் கொண்டுவருவதாய் இராமல், பட்டயத்தை - பிரிவினையைக்கொண்டு வருவதாய் இருந்தது (மத்தேயு 10:34). சிலவிதங்களில் பிரிப்பதும், இடிப்பதுமாகிய வேலைகள் கட்டியெழுப்பும் வேலைப் போன்று மனதுக்குகந்த வேலையாய் இருப்பதில்லை; ஆனால் நாம் எஜமானுடைய சித்தத்தைச் செய்திடுவதற்கு ஆவலுள்ளவர்களாய் இருப்போமானால், இது தவிர நமக்கு வேறு எந்த விருப்பமும் இராது மற்றும் அதிலும் விசேஷமாகப் பரிசுத்தவான்களை மகிமைப்படுத்துவதற்கும் மற்றும் அவர்கள் வாயிலாகப் பொதுவாயிருக்கும் மனுக்குலத்திற்கென ஆசீர்வாதத்தின் யுகத்தினைக் கொண்டுவருவதற்கும் பிரித்தல் அவசியம் என்று அவர் நமக்குக் காண்பித்திருப்பாரெனில், இது தவிர, நமக்கு வேறு எந்த விருப்பமும் இராது. இப்படிப் பார்க்கையில் அறுவடையானது, திராட்சத்தோட்டத்தில் மிகுந்த மகிழ்ச்சிகரமான வேலையாகிடும்.

இயேசு யூத அறுவடையின் போது சீஷர்களோடு காணப்படுகையில், அவர் சபைகளை ஏற்படுத்தவில்லை என்பதினால், நாமும் அப்போஸ்தலர்களினால் நிறுவப்பட்டதான எளிமையான மற்றும் பிரிவற்ற அமைப்புகள் அவசியம் என்றோ அல்லது விரும்பத்தக்கது என்றோ நாம் கருதுகிறதில்லை. நமது கர்த்தர் மறுபடியுமாக வந்திருக்கின்றார்; "அடிமையின் ரூபத்தில் அல்ல," மாம்சத்தில் அல்ல, மாறாக ஆவிக்குரிய ஜீவியாக வந்திருக்கின்றார்; அவர் வந்து காணப்படுகின்றபடியால், அவர் அனைத்திலும் ஒவ்வொரு ஊழியக்காரனுக்கு வழிகாட்டியாகவும், வழிநடத்துபவராகவும் காணப்படுகின்றார்.

ஆனால் எந்தப் பூமிக்குரிய அமைப்பும் உருவாக்கப்பட முற்படவில்லை என்றாலும், நாம் அனைவரும் ஒன்றாய் ஒரே தலையானவருடன் இணைக்கப்பட்டிருக்கின்றோம் மற்றும் அவரது வசனம் மற்றும் ஆவியின் வழிநடத்துதல்களைப் பின்பற்றிக்கொண்டிருக்கின்றோம். நம்மில் எவரேனும் வழிவிலகுவதையும், "சத்தியத்தை விட்டுவிலகி மோசம் போகுவதையும்" நாம் காண்கையில், ஒவ்வொரு அங்கத்தினனும், இப்படியாக விலகிப்போகிறவனைச் சத்தியத்திற்குள்ளாகச் சீர்ப்பொருந்தப் பண்ணுவதற்குத் தன்னால் முடிந்தவற்றைச் செய்திடுவதற்கான அன்பின் கடமையினை உணர்கின்றவனாய் இருப்பான்; எனினும் சீர்ப்படுத்துதல் முதலியவைகளிலுள்ள மேலான பொறுப்பானது, வந்திருக்கும் நமது ஆண்டவருடையது என்றும், அவர் இதைச் செய்யவும் செய்வார் என்றும் நாம் உணர்வோம். அவர் சித்தம் செய்ய நாம் செயல்பட்டு, பலனை அவரிடம் விட்டுவிடுவோம்.

நம்முடைய ஊழியக்காரர்கள் ஒருவேளை கூடிவந்திருந்தால் - எப்படி இயேசுவின் பின்னடியார்கள் முதலாம் வந்திருத்தலின்போது பரிசேயர், வேதபாரகர்களிடமிருந்து வேறுபட்டுக் காணப்பட்டார்களோ, அதுபோலவே இவர்கள், "பெயர்ச்சபையை" சேர்ந்தவர்களிடமிருந்து பலமாய் வேறுபட்டுக் காணப்படுவார்கள்.

பெயர்ச்சபை ஊழியக்காரர்கள் பிரபலத்திற்காக நாடி, அதைப் பெற்றுக்கொள்கின்றனர்; மற்றும் அவர்களது ஊழியங்களுக்குத் திரளாய் ஆதரிக்கப்பட்டு, கனப்படுத்தப்படுவதன் வாயிலாகப் பலன் கிடைக்கின்றது. தாலந்துள்ள ஒரு வாலிபனுக்குப் பெயர்ச்சபை ஊழியத்திற்குள்ளாகப் பிரவேசிப்பதைக் காட்டிலும், வேறெதுவும் கனங்களுக்கும், சுகங்களுக்கும் மற்றும் சௌகரியமான ஜீவியங்களுக்கும் நேரான சுலபமான அல்லது நேர் வழியாய் இருக்காது. ஆனால் சத்தியத்தின் மீதான அன்பின் காரணமாகவும், தேவனுக்கு மகிமை சேர்க்க வேண்டும் என்பதற்காகவும் மனிதர்கள் கேட்கின்றார்களோ இல்லையோ, அவர்களுக்குத் தேவனுடைய ஆலோசனை வழங்குவதற்குச் செல்பவர்களின் விஷயம் முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இவர்களுக்கு எந்த விதத்திலும் தேவனுடைய சுதந்தரத்தின் மீதான இறுமாப்பான ஆளுகையானது சம்பளமாக வழங்கப்படுகிறதில்லை; மாறாக இவர்கள் தங்களது ஆண்டவரைப் போன்று, மனுஷரால் வெறுத்து, புறக்கணிக்கப்படுகின்றனர்; ஆனால் இவர்கள் தேவனுடைய மகிமை வெளிப்படுவதற்காக சந்தோஷத்தோடு எதிர்நோக்கி, தற்காலத்தின் துன்புறுத்தல்கள், கஷ்டங்கள் மற்றும் சோதனைகள் எனும் கூலியினைப் பெற்றுக்கொள்வதைச் சிலாக்கியமெனக் கருதுகின்றனர். இவர்கள் எந்தத் தாலந்துகளைப் பெற்றிருந்தாலும், அவைகள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பினும், அதை நன்மைக்கேதுவாய்ப் பயன்படுத்துகின்றனர். "டவர்" வெளியீட்டுனுடைய பக்கங்கள் வாயிலாக சிலர் தங்களுக்குள் பெற்றிருக்கும் வரங்களைத் தட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றனர் மற்றும் சிலருக்கு வாய்ப்பு இருப்பதற்கேற்ப ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பிரயாணம்பண்ணி வார்த்தைகள் மூலமாகவும், அச்சடிக்கப்பட்ட பக்கங்கள் மூலமாகவும் பிரசங்கிக்கின்றனர்; அவ்வளவுக்குப் பரந்த வாய்ப்புகளற்ற வேறு சிலர் தங்கள் சொந்த இடங்களில் ஊழியத்தில் ஈடுபட்டுக் காணப்படுகின்றனர். சிலருக்குத் தங்களுடைய முழு நேரத்தையும் நேரடியாக சுவிசேஷ பணிக்குக் கொடுத்துவிட முடிகின்றது; பெரும்பான்மையானவர்கள், "எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுவதற்கென" சொந்த கைகளினால் உழைத்திடக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

கிறிஸ்துவின் இந்த ஊழியக்காரர்களில் (வேலைக்காரர்களில்) பெரும்பான்மையானவர்கள் பரிசுத்தவான்களைத் தேடுவதன் மூலம் தங்கள் வேலையைச் செய்கின்றனர்; இந்தப் பரிசுத்தவான்களுக்கே தற்கால சத்தியங்களானது ஏற்றகால சத்தியமாகக் காணப்படுகின்றது மற்றும் இப்பாடங்களைக்குறித்த உரையாடல் மூலமாகவும், குறிப்பிட்ட சில கட்டுரைகளுள்ள காகிதங்களை வாசிக்க இரவலாகக் கொடுப்பதன் மூலமாகவும், இவர்கள் அவர்களை மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றனர்; வேதவசனத்தை அதிகப் பூரணமாய்ப் புரிந்துகொள்வதற்கு உதவுகின்றனர்; அதாவது ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் அப்பொல்லோவுக்குச் செய்ததுபோன்று செய்கின்றனர் (அப்போஸ்தலர் 18:26); மற்றும் ஒவ்வொருவனும் தன் கைக்கு அகப்படுவதை முழுப்பலத்தோடு செய்கின்றான்; தான் பெற்றிருக்கும் தாலந்துகள் எதையும் பயன்படுத்தி, இப்படியாக தேவனுடையதான தனது சரீரத்திலும், ஆவியிலும் தேவனை மகிமைப்படுத்த நாடுகின்றான். தேவபக்திக்கு ஏதுவான கைப்பிரதி அல்லது அச்சிடப்பட்டப் பக்கம் என்று உரிமைப் பாராட்டும் எதையும், பகுத்தறியாமல் விநியோகிக்கும்போது கர்த்தருடைய காரணங்களுக்காக ஊழியம் புரிந்துள்ளதாக எண்ணிக்கொள்வது அநேகம் கிறிஸ்தவர்களின் தவறாய்க் காணப்படுகின்றது மற்றும் இது குறித்து அனைவரும் ஜாக்கிரதையாயும் காணப்பட வேண்டும். இது விஷயத்திலும், தான் செய்திடும் எல்லாவற்றிலும் கவனமுள்ள ஊழியக்காரன் விவேகமாகவும், நல்லது, கெட்டதைப் பகுத்தறிந்து வேற்றுமை காண்கிறவனாகவும் காணப்படுவான். இதுவே பெரும்பான்மையானவர்களின் எளிமையான வழிமுறைகளாகக் காணப்படுகின்றது மற்றும் இவர்களது வேலையானது, தேவனுடைய வழிக்காட்டுதலின் கீழ் அரண்களை நிர்மூலமாக்கக் கூடியதாய்க் காணப்படுகின்றது. இவர்களது சத்தியத்திற்கு முன்பாக, இங்குக் கொஞ்சமாகவும், அங்குக் கொஞ்சமாகவும் பாபிலோனும், அவளது தப்பறை எனும் மதில்களும் உடைந்துகொண்டிருக்கின்றது. இப்பாடம் சம்பந்தப்பட்ட வேறொரு கேள்வி:

## ஊழியத்திற்கான அழைப்பு என்றால் என்ன?

அர்ப்பணிக்கப்பட்டவர்கள் யாவரும் (அவர்கள் பின்பற்றும் பட்சத்தில்) ஆவியினால், தேவனுடைய காருண்யம் மற்றும் அன்பான திட்டங்கள் குறித்த அதிகமதிகமான புரிந்துகொள்ளுதலுக்குள்ளாக வழிநடத்தப்படுவார்கள்; மற்றும் இவர்கள் அன்பின் ஆவியினால் நிரம்பி மற்றும் தாங்கள் இத்தனை இலவசமாய்த் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதும், தங்களை இவ்வளவுக்கு ஆசீர்வதித்ததும், தங்களுக்கு உதவினதுமான விலையேறப்பெற்ற சத்தியத்தினை அறிவதற்குரிய அவசியமுடைய மற்றவர்களைக் காண்கையில் - இதுவே இவர்கள் தங்களது தாலந்துகளைப் பயன்படுத்தி மற்றும் பரலோகத்திலுள்ள தங்களது பிதாவுக்கு மகிமை உண்டாகத்தக்கதாக தங்கள் வெளிச்சத்தைப் பிரகாசிக்கப்பண்ணி, சத்தியத்தினை அறிவித்திடுவதற்குரிய தேவனுடைய அழைப்பாகும்.

தலையைப் போன்றே, அபிஷேகிக்கப்பட்டச் சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்" (ஏசாயா 61:1).

இப்போதும்கூட ஆண்டவர் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரிடம்: "நீங்களும் திராட்சத் தோட்டத்துக்குப் போங்கள் - நீங்கள் சும்மா நிற்கிறதென்ன?" என்கிறார்.

---

**R 573** ***நில்*** **(Stand)**

எல்லாவற்றையும் செய்துமுடித்தபிறகு நில், இனி

உன்னால் செய்ய எதுவுமில்லை என்றாலும், நில்

“விசுவாசத்தில் நிலைத்திரு” ஆனால் எப்படி எங்கே

நிற்கிறாய் - எச்சரிக்கை!

உடன்படிக்கையின் மைதானத்தின்மேல் நில்

எதிரியின் முகத்தை நோக்கி நில்

விழித்திரு, காத்திரு, வெற்றிபெற்றவனாய் நில்

நிலைத்து நின்று, தேவ இரட்சிப்பைப் பார்

உன் சொந்த சபல புத்தியின்மேலோ, மனித

நெறிமுறைப்படியோ நில்லாதே

உன் வழியில் செங்கடல் தடை உண்டாக்கினாலும்.

தாமதிக்காமல் முன்னேறுவதே தேவசித்தம்

நிற்பதைக்காட்டிலும் சீராக முன்னேறுவது எளிது

நிலைத்துநின்று கொடிய தாக்குதலை

எதிர்கொள்வதைக்காட்டிலும் வேகமாக முன்னோக்கிச்

செல்வது எளிது -

நல்ல போர்ச்சேவகன் இரண்டுக்கும் தயாராக

இருக்கவேண்டும்

அவர்களது ராஜாவுக்காக அவர்கள் சீராக முன்னேறி,

போராடி நன்கு ஊழியஞ்செய்வர்,

நின்று காத்திருப்போரும் ஊழியம் செய்வர்

பொறுமையும், தாங்கும் மனவலிமையும்

தேவபார்வையில் விலையேறப்பெற்றது பலியைப்

பார்க்கிலும் கீழ்ப்படிதல் சிறந்தது

பொறுமை அதன் பரிபூரண கிரியையை

பெற்றிருக்கும்போது, வேதனையின் அழுத்தத்திலும்

அதிக சுமையிலும் அல்லது காத்திருக்கும் பரீட்சையிலும்

நன்மை இருக்கும்

-----------------------------

R 610/3/38.

## வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே, சற்றே இளைப்பாறிடுவீரே.

கிறிஸ்துவின் பாதத்தண்டை அமர்ந்து அவர் போதனைகளைக் கேட்பதைவிடவும்
நேரம் போதாத அளவிற்கு கிறிஸ்து நம்மிடம் இடைவிடாத வேலை செய்யக்
கேட்பதில்லையே,
இந்த எதிர்பார்த்துக் காத்திருக்கும் பண்பைத்தானே
அவர் மிகவும் விரும்பி முழுமையான சேவையாகவே கருதி ஏற்றுக்கொள்கின்றாரே,
சிலநேரம் நம் காதுகளையே அவர் கேட்கின்றார்,
வேறொரு நேரம் நம் சிந்தனையில் நமை மறந்து அவர் கூறுதலைக் கேட்பதையே
வாஞ்சிக்கின்றார்,
அந்நேரங்களில் அவர் பல இனிமை மிகுந்த இரகசியங்களை நமக்குப்
பகிர்ந்தளிக்கின்றாரே,
இது பெரும்பாலும் ஆழ்ந்த அமைதலான நேரமாகவும் இருக்கக்கூடுமே,
இதயத்துடனே இதயம் தானும் ஒன்றிப்போகும் நேரமாகவும் இருக்கக் கூடும்,
சிலநேரம் நாமும், "தேவன் நம்மை ஏன் ஒரு இடுக்கமான தடைகள் நிறைந்த இடம்தன்னில்
கொண்டு சென்று இருத்திவிட்டார்" என்றே எண்ணிடவும் கூடும்,
எல்லா வழிகளும் அடைபட்டு எந்தவேலை செய்திடவும் ஓர் ஆரம்பம்கூட
வாய்க்கவில்லையே என்றெண்ணி சோர்ந்துகூட போய்விடலாம்,
ஆனாலும் நீடித்த நிலை வாழ்வதனைப் பெற்றுக்கொள்ள துன்பப்படுதல் ஒன்றிற்கே
இடமிருக்குது அண்ணே,
தேவன் நம்மிடம் நீடித்த பொறுமையை மட்டுமே விரும்புகின்றாரே,
அசைவில்லாத மன நிலையினிலே,
அமைதலுடனே வாழ்கின்ற ஆத்துமாவையே அவர் அதிகம் நேசிக்கின்றாரே,
சிறு சிறு வேலைகள் செய்வதுவோ அல்லது அமைதலாய் இளைப்பாறுதல் கொள்ளுதலோ
பரிபூரணமாகவே அவர் சித்தத்தை முழுமையாகவே செய்வதாகுமே,
தந்தையின் பார்வைக்கே நீதிமானாய்த் தோன்றிவிடு,
சிலர் அரக்கத் தீமையின் கொடுமையான பிடிகளுக்குள்ளே சிக்கி அழிகின்றார்,
எல்லா கண்களும் பார்க்கும் அளவிற்கு ஒரு பங்கு வேலையைச் செய்கின்றார்,
நம் இடைவிடாத கடுமையான சுறுசுறுப்பான தொண்டு புரிதலைக்காட்டிலும், அன்பின்
பணியையே, அது எங்கே செய்யப்படுகிறதோ, அதனை மட்டுமே ஆண்டவர்
விரும்புகின்றாரே,
இதை மறுப்பின்றி ஒப்புக்கொள்ளும் மாண்பதனை நம் இரட்சகர் தாமே விரும்புகின்றாரே,
அன்பினால் நெய்யப்பட்ட ஆடையினால் மூடுதலையே அவர் ஏற்றுக்கொள்கின்றாரே,
அவர் கொடுப்பதை நிச்சயம் கவனம் செலுத்திப் பெற்றுக்கொள்பவர்
கசையடிக்குக் கீழாகச் செய்திடும் பணியையோ அவர் கணக்கில் கொள்வதில்லையே,
அவர் என்ன தான் உன்னிடம் எதிர்பார்த்துக் கட்டளையிடுகின்றாரோ, - பணிசெய்தலோ,
கஷ்டப்படுதலோ, அமைதலுடனே ஓய்வெடுத்தலோ,
அதனைச் செய்து அவரை திருப்திப்படுத்த முயற்சி செய்திடு,
அவர் எந்தப் பாதையில் நம்மை நடத்துகிறார் என்பது ஒன்றும் பெரிதல்ல, அதனுள்ளே நாம்
அவர் சித்தம் செய்திட விழைகின்றோமா என்பதுதானே உயிர்மூச்சு.

# "மாம்சம் மற்றும் இரத்தம்"

"அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது." - **யோவான் 6:53, 54, 63**

சத்தியத்தைப் மறைப்பொருளாக வெளிப்படுத்துவது இயேசுவின் வழக்கமாக இருந்தது. மேலும், அநேகருக்கு நம்முடைய ஆதாரவசனங்களும் மறைப்பொருள்களில் ஒன்றாகவே இருந்தது. இதைக் கேட்ட யூதர்கள், "இவர் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பார்" என்று கூறினார்கள்; மற்றும் சீஷர்களில் அநேகர் முறுமுறுத்து, "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்?" என்று கூறினார்கள். இயேசுவினுடைய சொல்லர்த்தமான மாம்சத்தை அவர்கள் புசிக்கும்படியான அர்த்தத்தில் இயேசு கூறவில்லை என்பது இன்றும் பரவலாகப் புரிந்துக்கொள்ளப்பட்டாலுங்கூட, அவர் கூறின அர்த்தத்தைக்குறித்துத் தெளிவான கருத்தைச் சிலரே கொண்டிருக்கின்றனர்.

ஆண்டவர் தம்முடைய வார்த்தைகள் ஆவியாக அல்லது ஆவிக்குரியதாக இருக்கின்றது எனக் கூறியுள்ளபடியால், இயேசுவின் இங்குள்ள வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்திட, வார்த்தைகளுடைய சொல்லர்த்தமான அர்த்தத்திற்கு நேர் எதிர்மாறான அர்த்தத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமெனச் சிலர் நிதானிக்காமல் அவசரவசரமாய் முடிவிற்கு வந்துள்ளனர்; மேலும் இப்படிப்பட்டவர்கள், "மாம்சம் மற்றும் இரத்தம்" ஆவிக்குரிய சுபாவத்தைக் குறிக்கின்றது என்ற முடிவிற்குள் வந்துள்ளனர். இயேசு தம்முடைய வார்த்தைகள்தான், ஆவிக்குரியதாக இருக்கின்றது எனச் சொல்லியுள்ளாரே ஒழிய, மாம்சம் ஆவிக்குரியதாக இருக்கின்றது எனச் சொல்லவில்லை என்பதை இப்படிப்பட்டவர்கள் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

கர்த்தர், "மாம்சம் மற்றும் இரத்தம்" எனும் வார்த்தைகளைப் பயன்படுத்தின இடங்களில் அவர் ஆவிக்குரிய சுபாவத்தைக் குறிப்பிடவில்லை என்பது, அவர் இந்த "மாம்சம் மற்றும் இரத்தம்" எனும் வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ள இடங்களையெல்லாம் நினைவுப்படுத்திப் பார்க்கும் போது எளிதில் கண்டுக்கொள்ளலாம். "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" என்ற வார்த்தைகளை அவர் கூறவில்லையா? (யோவா 6:51-ஆம் வசனம்). அவர் தமது ஆவிக்குரிய சுபாவத்தைக் கொடுக்கின்ற அர்த்தத்திலா பேசினார்? ஒருவேளை அப்படி அவர் கொடுத்திருந்திருப்பாரானால், இப்பொழுது அவருக்கு ஆவிக்குரிய சுபாவம் இல்லையென்பதாகிவிடும். ஏனெனில், அவர் தமக்கு உண்டான யாவற்றையும் கொடுத்துள்ளதை நாம் நினைவுகூருகின்றோம் (மத்தேயு 13:44). உலகத்தின் ஜீவனுக்காக, அவர் தம்மிடமிருந்த திவ்வியச் சுபாவம் அனைத்தையும் கொடுத்ததாக எடுத்துக்கொள்ளப்பட முடியாது. இதைக்குறித்து பேசுகையில் வேறொரு இடத்தில், "இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என இயேசு கூறுகின்றார். இங்கு அவர் திவ்வியச் சுபாவத்தைக் குறிப்பிட்டுள்ளதாக யார்தான் எண்ணக்கூடும்? ஆவிக்குரியது (அ) ஆவி பிட்கப்பட்டு, சிந்தப்பட்டதா? அல்லது மனுஷீகம் அதாவது, பலிக்கென ஆயத்தம் பண்ணப்பட்ட சரீரம் மரணத்தை அனுபவிக்கும்படி எடுத்துச் செல்லப்பட்டதாக? எது என்று நீங்கள் எண்ணுகின்றீர்கள்? (எபிரெயர் 10:5; 2:9).

இந்த வேதவாக்கியத்தையும், மற்ற வேதவாக்கியங்களையும் வைத்துக் காணும் கண்ணோட்டத்தின்படி, இயேசு தம்முடைய ஆவிக்குரிய சுபாவத்தைப் பிட்கவும், அதை அனைவரும் புசிக்கச் சொன்னதாகவும் எவரும் அர்த்தம் கொள்ளாதிருப்பார்களாக. "அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே" என யூதர்களில் சிலர் ஒப்புக்கொண்டதைப் போல், நாமும் ஒப்புக்கொள்வது நலமாயிருக்கும் (18-ஆம் வசனம்).

ஆனால், சிலர் இங்கு இடம்பெறும் "மாம்சம் மற்றும் இரத்தம்" அநேகமாக இயேசுவினுடைய (ஒழுக்கத்திலுள்ள) நன்நெறியிலுள்ள பூரணத்தையே குறிக்கின்றது என்றும், அனைவரும் இயேசுவிடமிருந்து நன்நெறியில் பூரணத்தைப் (Moral Perfection) பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது புசிக்க வேண்டும், இல்லையேல் ஜீவன் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர். இக்கருத்தும், மற்றக் கருத்துக்களைப் போன்று இயேசுவின் "மாம்சம் மற்றும்

இரத்தம்" எனும் வார்த்தைகளின் அர்த்தத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றது. நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கென அனைவருக்கும் நன்நெறி/ஒழுக்கமாய் இருக்க வேண்டும் என்பது உண்மையாக இருந்தாலுங்கூட, இது இங்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கும் நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கான அர்த்தமல்ல. இவ்வர்த்தம் பொருந்துகின்றதா என நாம் சோதித்து, அறியலாம். இயேசுவின் நன்நெறியிலுள்ள பூரணம் நமக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டதா (அ) பிட்கப்பட்டதா? நிச்சயமாக இல்லை. நன்நெறியிலுள்ள பூரணத்தை ஒப்புக்கொடுப்பது (அ) பிட்கப்படுவது என்பது நன்நெறியில் பூரணக் குறைவு ஆகுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். ஆகவே, நாம் அவருடைய திவ்விய சுபாவத்தையோ, அவரது நன்நெறி பண்புகளையோ புசிக்க வேண்டும் என்பது இயேசுவினுடைய வார்த்தைகளின் சாரமாக (அ) அர்த்தமாக இல்லை என்பது, தெளிவாகியுள்ளது.

அப்படியானால் இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள "மாம்சம் மற்றும் இரத்தம்" எனும் வார்த்தைகளின் சாரம் (அ) அர்த்தம்தான் என்ன? இவ்வார்த்தைகளுக்கு வேறு வேதவாக்கியங்களில், இடம்பெறும் சாரமே (அ) அர்த்தமே பொருந்தும் என்பதே நமது பதிலாகும். அனைத்து வேதவாக்கியங்களும் நிரூபித்துக் காட்டுவது போன்று "மாம்சம் மற்றும் இரத்தம்" என்பது மனித சுபாவத்தைக் குறிக்கின்றது. (மத்தேயு 16:17; யோவான் 1:14; கொலோசெயர் 1:22; பிலமோன் 1:16; 1 கொரிந்தியர் 15:50; 1 பேதுரு 1:24; 3:18; 4:1).

இப்பொழுது நாம் "மாம்சம் மற்றும் இரத்தத்திற்கான" இந்த அர்த்தத்தைச் சோதித்துப் பார்த்து, அது பொருந்துகின்றதா எனப் பார்க்கலாம். இயேசுவின் மனித சுபாவம், உலகத்தின் ஜீவனுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டதா, பிட்கப்பட்டதா? ஆம் மெய்யாகவேதான்; நம் அனைவருக்குமான ஈடுபலி ஆகத்தக்கதாக, தேவதூதரிலும் சற்று சிறியதான நம்முடைய மாம்ச சுபாவத்தை இயேசு எடுத்துக்கொண்டார்; நம்முடைய மனித சுபாவத்திற்கான ஈடுபலியாக, அவர் தம்முடைய மாம்சீக சுபாவத்தைக் கொடுத்து, தம்முடைய சொந்த இரத்தத்தினால் நம்மை வாங்கிக் கொண்டார். நமக்காக தமக்கு உண்டாயிருந்த யாவற்றையும் கொடுத்துவிட்டார் (மத்தேயு 13:44). "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று." (1 கொரிந்தியர் 15:21). நமக்கான ஈடுபலியாக, மனிதனாகிய கிறிஸ்து இயேசு தம்முடைய மனித சுபாவத்தைக் கொடுத்ததின் மூலமாக நமக்குப் பதிலாள் (Substitute) ஆனார்.

ஒருவேளை இந்த அர்த்தம் இவ்வார்த்தைத் தொடர்புடைய அனைத்திற்கும் பொருந்துமானால், இதுவே ஆண்டவரின் போதனையுடைய சரியான அர்த்தம் (அ) சாரமாகக் காணப்படும். ஆனால், எந்தவிதத்தில் நம்மால் இயேசுவின் மனித சுபாவத்தைப் புசிக்க முடியும்? என்ற கேள்வி எழும்புகின்றது. புசிப்பது என்பதும், "மாம்சம் மற்றும் இரத்தம்" போன்றே, அடையாள வார்த்தையே ஆகும். புசிப்பது என்பது புசிக்கப்படும் பொருளின், ஜீவன் கொடுக்கும் தன்மைகளைத் தனக்கெனச் சொந்தமாக்கிக்கொள்வதாகும். இவ்வர்த்தம் எப்படிப் பொருந்துகின்றது என்பதைப் பார்க்கலாம். ஒப்புக்கொடுக்கப்பட்டு, பிட்கப்பட்ட இயேசுவின் மனித சுபவாத்தை நீங்கள், உங்களுக்கெனச் சொந்தமாக்கிக்கொள்ளாதது வரையிலும், உங்களுக்குள் ஜீவன் இல்லை என்பதாகிவிடும். இவ்வர்த்தம் முழு இசைவாய்க் காணப்படுகின்றது. மனுக்குலம், ஆதாமின் மூலமாக, ஜீவிப்பதற்கான அனைத்து உரிமையையும் இழந்துவிட்டனர். ஆகவே, மனுக்குலம் இப்பொழுது மரித்துக் கொண்டே இருக்கின்றது; மற்றும் ஜீவிப்பதற்கான உரிமையைத் தங்களுக்குள் கொண்டிராததால் மரித்துப் போயும் காணப்படுகின்றது; மேலும், ஈடுபலிக் கொடுக்கப்பட்டிருந்தாலும், சரீரம் பிட்கப்பட்டிருந்தாலும், மனுஷன் ஈடுபலிக் கிரயத்தை முழுமையாய் உணர்ந்துக் கொண்டு, மனிதனாகிய கிறிஸ்து இயேசு தம்முடைய மாம்சத்தை (மனித சுபாவத்தை) அனைவருக்காகவும் கொடுத்ததின் மூலம் பாதுகாத்திட்ட அந்த உரிமைகளை, விசுவாசத்தின் மூலமாகச் சொந்தமாக்கிக்கொள்ளாதது வரையிலும், அவன் மீண்டுமாக மனித பூரணத்தை (ஜீவனை) அடையமுடியாது என்பது தேவனுடைய திட்டத்தில் ஒரு பாகமாக உள்ளது. எந்தளவுக்கு வேகமாக சொந்தமாக்கிக்கொள்கின்றோமோ, தேவன் அதை நமக்குத் தரிப்பிக்கின்றவராக இருப்பார்; இப்படியாக கிறிஸ்துவின் நீதியும், நித்தியகாலமாய் ஜீவிப்பதற்கான அதன் உரிமையும் நமக்குத் தரிப்பிக்கப்படும்.

இப்படியாக நமக்கெனப் பலியாக்கப்பட்டதை, விசுவாசத்தின் மூலமாக, நாம் நமக்கென உரிமையாக்கிக் கொள்கின்றோம் அல்லது புசிக்கின்றோம். இப்படியாக, நமக்காகப் பலியாக்கப்பட்ட மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் புண்ணியங்களையும், உரிமைகளையும் நமக்கென நாம் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை அல்லது புசிக்கவில்லை என்றால் நமக்குள் ஜீவனும் இராது, ஜீவனுக்கான உரிமையும் நமக்குள் இராது. இயேசுவுக்குள்ளாகவே அல்லது இவர் மூலமாகவே, முதலாம் ஆதாமினால் நாம் இழந்துபோன ஜீவனை, மீண்டுமாக நாம் பெற்றுக்கொள்ள முடியும். வேறு எவர் மூலமாகவும் இரட்சிப்பு (ஜீவன்) இல்லை; காரணம், "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்போஸ்தலர்

4:12). ஈடுபலியையும், அதன் அவசியத்தையும் மற்றும் முழு மனுக்குலத்திற்கும் ஜீவனைத் திரும்பக் கொடுக்கும் சக்தி என்ற அதன் முக்கியத்துவத்தையும் மறுதலிக்கின்றவர்கள் எத்துணை ஆபத்தான நிலையில் காணப்படுகின்றார்கள். பலியாக்கப்பட்டதைச் சொந்தமாக்கிக்கொள்ளாத (அ) புசிக்காத வரையிலும் எவருக்கும் ஜீவன் இராது. ஆகவேதான், இந்தப் பலியை மதிப்புக் குறைந்ததாக எண்ணி, அதன் முக்கியத்துவத்தை மறுதலிப்பது என்பது மிகக் கடுமையான பாவங்களில் ஒன்று என அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்; "தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை (சாதாரணம்) அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்" (எபிரெயர் 10:29).

ஆகவே, இயேசுவினுடைய மாம்சம் மற்றும் இரத்தத்தை (மனித சுபாவத்தை) நமக்கென சொந்தமாக்குவதன் (அ) புசிப்பதன் மூலமாகப் பாவத்திலிருந்தும், அதன் மரணத் தண்டனையிலிருந்தும் நாம் நீதிக்கு ஏதுவாகத் தீர்க்கப்பட்டோம். அதாவது, மனித ஜீவனுக்கும், அதன் சிலாக்கியங்களுக்கும் நாம் நீதிக்கு ஏதுவாகத் தீர்க்கப்பட்டோம் (ரோமர் 5:18, 19). இது பொதுவான இரட்சிப்பாகும் (யூதா 3). ஆனால், இரட்சிக்கப்பட்ட உலகத்தின் மத்தியிலிருந்து தெரிந்துக்கொள்ளப்பட்ட சிறுமந்தையினருக்கு அதாவது, பரிசுத்தவான்கள் என்றும், இயேசுவின் உடன் சுதந்திரர்கள் என்றும் அழைக்கப்படுகிறவர்களுக்கு, விசேஷமான இரட்சிப்பு உள்ளது என்று அப்போஸ்தலரால் குறிப்பிடப்பட்டுள்ளது (1 தீமோத்தேயு 4:10).

இந்தப் "பரம அழைப்பிற்கு" அழைக்கப்பட்டவர்களும், "திவ்விய சுபாவத்தில் பங்கடையும்படிக்கு" அழைக்கப்பட்டவர்களுமாகிய இவர்கள், இயேசுவினுடைய பலியின் முக்கியத்துவத்தை உணர்வதின் மூலம் ஜீவனைச் சொந்தமாக்கிக்கொள்ளுவதோடு (அ) புசிப்பதோடு மாத்திரமல்லாமல், அதிகமாகவே செய்கின்றனர். மனிதனாக ஜீவிப்பதற்கென நீதிக்கு ஏதுவாக தீர்க்கப்பட்டுள்ள இவர்களுக்கான அதாவது, ஆதாமுக்குள் இழந்திட்ட உரிமைகளை (விசுவாசத்தினால்) மீண்டும் பெற்றுக்கொண்டுள்ள இவர்களுக்கான இந்த யுகத்திற்குரிய அழைப்பு (அ) சிலாக்கியம் என்பது, இயேசு செய்ததுபோல தங்களையே இவர்கள் பலிச் செலுத்தி அல்லது தங்களையே பிட்டு, தங்களுடைய ஜீவனை ஒப்புக்கொடுத்துவிடுவதாகும்; இப்படியாக இவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தத்திற்குப் பாத்திரவான்களாகக் கருதப்படுவார்கள் என்றும், தாங்கள் அவரோடு வாழ்ந்து, மனித சுபாவத்தைப் பலிச் செலுத்துவதற்கான பலனாக அவருக்குக் கொடுக்கப்பட்ட திவ்விய சுபாவத்தில் பங்கடைவோம் என்றுமுள்ள நம்பிக்கையில், "அவரோடு கூட மரித்தவர்கள்" ஆகுகின்றனர்.

இவ்வகுப்பார் இயேசுவின் பலியை, தங்களுக்கெனச் சொந்தமாக்கிக் கொண்டதோடு (அ) புசித்ததோடுகூட, பலியில் அவரோடு கூட இணைந்தும் உள்ளனர் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். "இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்." "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (கொலோசெயர் 1:24; 1 கொரிந்தியர் 10:16, 17).

ஆகவே, ஒரு ஜீவ அப்பமானது மனுக்குலம் முழுவதற்குமெனப் பரலோகத்திலிருந்து அளிக்கப்பட்டது; கிறிஸ்துவின் சரீரத்தில் சேர்வதற்கும், மனித சுபாவத்தைப் பலிச்செலுத்தும் விஷயத்தில் அவருடன் பங்கடைவதற்கும், அவரோடு திவ்விய சுபாவத்தைச் சுதந்தரிப்பதற்கும் என்றுள்ள வாய்ப்பானது சுவிசேஷ யுகத்தில் சிலருக்கு அருளப்பட்டது.

இப்படியாக, இயேசுவின் சொல்லர்த்தமான மாம்சத்தைப் புசிப்பதில் நன்மை இல்லை என்றாலும், அவர் பெற்றிருந்ததும், மனுஷருக்காக ஒப்புக்கொடுத்திட்டதுமான (மனுஷீக ஜீவனுக்கான) உரிமைகளைச் சொந்தமாக்கிக்கொள்வது என்பது, பூரணமான மனித ஜீவனுக்கும், அதன் சகல சிலாக்கியங்களுக்கும் உரிமை பெற்றுக்கொள்வதுமாக இருக்கும் என்பதை நாம் பார்க்கின்றோம். "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவான் 6:53).

---

# எக்ளீஷியா

இந்தக் கிரேக்க வார்த்தையானது, சபை என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இதன் அர்த்தம் ஒரு கூட்டத்தார், சபை அல்லது சேர்ந்து ஒன்றாய்க் காணப்படும் ஜனங்கள், குழு ஆகும்.

இன்று சபை என்று உரிமை பாராட்டிக்காணப்படும் அநேகம் அமைப்புகள் காணப்படுகின்றன மற்றும் இவைகள் வெவ்வேறு ஐக்கியத்தின் கட்டினைப் பெற்றிருக்கின்றன; ஆனால் தேவனுடைய வசனத்தினுடைய ஆதாரத்துடன், எந்த எக்ளீஷியாவை, சரீரத்தை அல்லது சபையை இயேசு ஸ்தாபித்தார் என்றும் மற்றும் அதன் ஐக்கியத்தின் கட்டுகள் என்னவாயிருக்கின்றது என்றும் நாம் அறிய விரும்புகின்றோம்; இரண்டாவதாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் அச்சபைக்குரியவனாகிட வேண்டும் என்பதை நாம் வெளிப்படுத்த விரும்புகின்றோம்; மூன்றாவதாக தவறான எக்ளீஷியா அல்லது சபையில் இணைந்துகொள்வதினால் ஏற்படும் பாதகமான விளைவுகள்; மற்றும் நான்காவதாக, சரியான சபையில் இணைந்துகொண்ட பிற்பாடு, நமது அங்கத்துவத்தினை இழப்பதினால் உண்டாகும் விளைவுகளை நாம் வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

முதலாவதாக, இயேசு தம்முடைய ஊழியத்தின்போது சேர்த்துக்கொள்ள துவக்கினதும் மற்றும் அவர்களுக்கான ஈடுபலி கொடுக்கப்பட்ட பிற்பாடு, பெந்தெகொஸ்தேயின் போது, பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டதுமான சபையானது, பூமிக்குரிய நேரத்தையும், தாலந்துகளையும், ஜீவியத்தையும் தேவனுக்கு ஒரு பலியாக அர்ப்பணித்துக்கொண்ட சீஷர்கள் அடங்கின ஒரு சிறு கூட்டத்தாராக இருந்தனர். இவர்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டு, ஒரு சமுகத்தின் அங்கத்தினர்களௌன ஒன்றிணைந்து கட்டப்பட்டிருந்தனர் மற்றும் இவர்கள் பிரமாணங்களையும், நடைமுறைகளையும்/நிர்வகிப்புகளையும் பெற்றிருந்தனர் மற்றும் ஒரு தலையை அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆளும் அதிகாரத்தினைப் பெற்றிருந்தனர். கட்டுகளானது, அன்பு மற்றும் பொதுநலனின் கட்டுகளாகக் காணப்பட்டது. அனைவரும் அதிபதியாகிய இயேசுவின் கீழ்ச் சேர்க்கப்பட்டிருந்தபடியால், ஒருவருடைய நம்பிக்கைகள் மற்றும் அச்சங்கள், சந்தோஷங்கள் மற்றும் துக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் போன்றே, மற்றவர்களுடையதும் காணப்படுகின்றது; மற்றும் இதனால் இவர்கள் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட எந்த ஒரு விசுவாச பிரமாணத்தினுடைய அடிப்படையிலான ஒன்றிணைதலினால் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதைக்காட்டிலும், மிகப் பூரணமான இருதயத்தினுடைய ஒன்றிணைதலைப் பெற்றிருந்தனர். இப்படியாக இவர்களது அமைப்பானது, ஆவியினாலானதாய் இருந்தது; ஒவ்வொருவரையும் கட்டுப்படுத்தி ஆளும் அவர்களுக்கான பிரமாணமாய், அன்பானது காணப்பட்டது மற்றும் அனைவருமே, அவர்களது கர்த்தருடைய ஜீவியத்திலும், கிரியைகளிலும் மற்றும் வார்த்தைகளிலும் வெளிப்பட்டதான "ஆவியின் பிரமாணத்தின் கீழ்" கீழ்ப்படியப் பண்ணப்பட்டிருந்தனர். "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று சொன்னவருடைய சித்தமே அவர்களை நிர்வகித்ததாய் இருந்தது.

இப்படியாக ஆதிசபை இயேசுவினுடைய தலைமைத்துவத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு, பூரண ஒருமையிலும் மற்றும் இணக்கத்திலும் காணப்பட்டதை நாம் பார்க்கின்றோம். இந்தச் சபை அமைப்பை, இதைப்போன்று பின்பற்றிவருவதாக இப்பொழுது பாசாங்குப்பண்ணிக்கொண்டிருக்கும், அதாவது பல்வேறு சபைபிரிவு அமைப்புடன் ஒப்பிட்டு வித்தியாசம் அறியுங்கள்; இந்த அமைப்புகள் ஒவ்வொன்றும் அதன் அங்கத்தினர்களை ஏதோ ஒரு விசுவாசப்பிரமாணம் அல்லது அதன் (இன்பகரமாய் உள்ள அநேகவற்றை உள்ளடக்கியுள்ள) சொந்த கொள்கைகளின் தொகுப்பேட்டின் அடிப்படையில் மன ஒற்றுமைக்குள் பிணைத்துவிடுகின்றது மற்றும் இவை ஒவ்வொன்றும் அதன் சொந்த பிரமாணங்களைப் பெற்றிருக்கின்றன.

இந்தப் பிரமாணங்களானது, இவர்களது தலையானவர்களிடமிருந்து மற்றும் அதிகாரிகள் அல்லது நியாயப்பிரமாணிக்கன்களிடமிருந்து தோன்றினவைகளாகும்; ஆகையால் இந்தத் தற்காலத்திலுள்ள சபைகளானது, தங்களது விசுவாசப்பிரமாணங்களை ஆதிகாலத்தில் நிறுவினவர்களை - தங்களுக்கான ஆளும் அதிகாரிகளாக அல்லது தலைகளாகப் பெற்றிருக்கின்றனர் மற்றும் அடையாளம் கண்டுகொள்கின்றனர் என்பது தெளிவாய்த் தெரிகின்றது; பல்வேறு விசுவாசப்பிரமாணங்களை நிறுவினவர்கள் ஒருவரிலிருந்து ஒருவர்

வேறுபட்டிருப்பினும், இவர்களது குருமார்கள்/ஊழியக்காரர்கள் கலந்தாய்வு கூட்டங்களிலும், மேலவைகளிலும், குருமார் பேரவைகளிலும், மூப்பர் சங்கங்களிலும் தேவவசனத்தை அவமாக்கிடும் "முன்னோர்களின் பாரம்பரியங்களை" பலவகையாக விளக்கி அமுல்படுத்துகின்றனர். இவைகள் சபையினுடைய மெய்யான தலையாகிய - இயேசுவின் இடத்தையும், மெய்யாய்ப் போதித்து, சகல சத்தியத்திற்குள்ளாய் வழிநடத்தும் பரிசுத்த ஆவியின் இடத்தையும் எடுத்துக்கொள்கின்றது. இதைக் குறித்துத் தீர்க்கதரிசியாகிய ஏசாயா கூறுவதைக் கேளுங்கள். "மூப்பனும் கனம்பொருந்தினவனுமே தலை, பொய்ப்போதகம்பண்ணுகிற தீர்க்கதரிசியே வால்" (ஏசாயா 9:15). முழுப்பெயர்ச்சபை அமைப்புமே, வெளிப்படுத்தின விசேஷத்தில் "பாபிலோன்" - குழப்பம் - போப்மார்க்கம் தாய் மற்றும் புராட்டஸ்டண்ட் மகள்கள் என்று சித்தரிக்கப்பட்டுள்ளது.

இதை இவர்கள் ஒத்துக்கொள்வார்களா? இல்லை; ஏனெனில் இன்றுள்ள வெதுவெதுப்பான பெயர்ச்சபையானவள், தான் நிர்ப்பாக்கியமுள்ளவளாகவும், பரிதபிக்கப்படத்தக்கவளாகவும், தரித்திரமானவளாகவும், குருடானவளாகவும், நிர்வாணியானவளாகவும் இருக்கிறதை அறியாமல், தன்னை ஐசுவரியமானவள் என்றும், திரவியசம்பன்னவள் என்றும், தனக்கு ஒரு குறைவுமில்லை என்றும் நம்புகின்றாள் (வெளிப்படுத்தல் 3:17).

இது "கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்?" ஆனால் இது நம்முடைய உபதேசமல்ல; இது "கவனித்திருப்பதற்கு நலமாயிருக்கின்றதான அதிக உறுதியான தீர்க்கதரிசனத்தின்" எச்சரிப்புச் சத்தமாய் இருக்கின்றது. அன்பான தொனியில், நமது ஆண்டவர் மறுபடியுமாக, "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்" என்று கூறுகின்றார்.

கிறிஸ்துவின் உண்மை சபையானது, இரண்டு விதங்களில் கருதப்படலாம்: அதாவது ஆதிசபையார் போன்று நமது பிதாவினுடைய சித்தத்தைச் செய்வதற்கென முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களும், அவருடைய சித்தத்திற்கும் மற்றும் அவரது நிர்வகிப்பிற்கும் மாத்திரம் இணங்குபவர்களும், வேறு யாரையும் அங்கீகரியாமலும், யாருக்கும் கீழ்ப்படியாமலும் காணப்படுகின்றதான யாவரும் - சுவிசேஷ யுகத்தினுடைய துவக்கம் முதல் அதன் முடிவு வரையுள்ள இந்தப் பரிசுத்தவான்கள், இந்த வகுப்பாரிலுள்ள யாவரும் முத்திரிக்கப்படும்போது, பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களாகிய "முதற்பேறானவர்களின் சபையாக" காணப்படுவார்கள். இவர்கள் அனைவரும் குறிக்கோளிலும், நம்பிக்கையிலும் மற்றும் பாடுகளிலும் ஒன்றாயிருப்பார்கள் மற்றும் ஏற்றகாலத்தில் மாபெரும் சுதந்தரத்தில் இயேசு கிறிஸ்துவோடுகூட உடன்சுதந்தரர்களாக - தேவனை அன்பு கூருகின்றவர்களுக்கு அவர் வாக்களித்துள்ளதான இராஜ்யத்தில் சுதந்தரர்களாகிடுவார்கள்.

இதே வகுப்பார் அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றதான மற்றொரு விதமானது - ஒரு பகுதியினரை, முழுச்சபையாக கருதுவதாகும்; இப்படியாக இந்த வகுப்பாரில் ஜீவித்துக் கொண்டிருப்பவர்கள் யாவரும் சபையெனக் கூறப்படலாம்; அல்லது இவ்வகுப்பாரிலுள்ள ஜீவனுள்ள அங்கத்தினர்களின் ஏதேனும் பாகம், ஒன்று கூடிடும்போது, சபை என்று அழைக்கப்படலாம்; ஏனெனில் இயேசுவின் வார்த்தைகள் மூலமாக, எங்கே இரண்டு அல்லது மூன்றுபேர் கூடுகிறார்களோ, அவர்கள் நடுவில் அவர் காணப்படுவதாக நாம் அறிந்துகொள்கின்றோம்; ஆகையால் அது சபை கூடுகையாய் இருக்கும் - "முதற்பேறானவர்களுடைய சபை" கூட்டமாய் இருக்கும். சபை முழுவதும் தங்கள் தலையாகிய இயேசுவுக்கு ஒப்பானவர்களாக்கப்பட்டு, அவரோடுகூட மகிமைப்படுத்தப்படும்போதுதான் இவர்களின் சர்வசங்கம் காணப்படும்.

இதுவே கிறிஸ்துவின் சபைக்கான நம்முடைய விளக்கமாகும்; இது பவுல் அடிகளார் சபையை, மனித சரீரத்தோடு ஒப்பிடுகையில் மிகச் சிறப்பாய் விவரிக்கப்பட்டுள்ளது (உரோமர் 12:4, 5). இந்த உருவகத்தில், இயேசு தலையினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர் மற்றும் அவருடையவர்கள் யாவரும், தலையினால் எதன்மேல் மற்றும் எதன் வாயிலாக ஆளுகை செலுத்தப்படுகின்றதோ அந்தச் சரீரத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இயேசு தம்முடைய ஒட்டுமொத்த சபையின் மீது தலையாக இருந்துள்ளார் மற்றும் எப்போதும் இருப்பார்; இதுபோலவே அவர் ஒட்டுமொத்த ஜீவனுள்ள சபையின் தலையாகவும், அதிகாரியாகவும் இருக்கின்றார் மற்றும் அவருடைய நாமத்தில் இரண்டு அல்லது மூன்றுபேர் கூடிடும் ஒவ்வொரு கூடுகையிலும், அவர் தலையாக, அதிகாரியாக மற்றும் போதகராக இருக்கின்றார்.

அவர் எந்தவிதத்தில் போதிக்கின்றார்? என்று கேட்கப்படலாம். தலை அல்லது போதகருடைய தன்மைகளைச் செயல்படுத்துவதன் மூலம், அங்குக் காணப்படும் ஒருவரையோ அல்லது அநேகரையோ சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கும், விசுவாசத்தைப்

பலப்படுத்துவதற்கும், நம்பிக்கையை ஊக்குவிப்பதற்கும், வைராக்கியத்தினை ஊக்குவிப்பதற்கும் தம்முடைய வாய்க்கருவிகளெனப் பயன்படுத்துவதன் மூலம் ஆகும். அதாவது ஓர் அவயம், இன்னொன்றிற்கு ஊழியம்புரிவதற்கென உங்களது சரீரத்தினுடைய தலையானது அழைக்க முடிகிறது போலாகும் என்று நாம் பதிலளிக்கின்றோம். ஆனாலும் எச்சரிப்பின் ஒரு வார்த்தை என்னவெனில்: ஒருவர் வலதுகரமெனப் பயனுள்ள பாத்திரமாகுகின்றாரெனில், அவர் தலையாகிடுவதற்கு விரும்பிடாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும். பெருமிதம் கொள்ளாதீர்கள், பெருமையானது நம்மை செயலற்றுப் போகச் செய்து, நம்மைப் பயனற்றவர்களாக்கிடும். "நீங்களோ ரபீ (போதகர்) என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் (தலையாயிருக்கிறார்) போதகராய் இருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்." சிறிய அங்கத்தினன்கூடத் தனது பணியினை அசட்டையாய் எண்ணாதிருப்பானாக; ஏனெனில், "அவையெல்லாம் ஒரே அவயமாயிருந்தால், சரீரம் எங்கே?" "சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது" - "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (1 கொரிந்தியர் 12:18, 19; மத்தேயு 23:8).

அமைப்பு/organization தொடர்பான தேவனுடைய திட்டமானது எத்துணை எளிமையாயும், அருமையாயும் மற்றும் விரும்பிய பலனைக் கொடுக்கிறதாயும் உள்ளது!

இப்பொழுது நம்முடைய இரண்டாம் ஆய்விற்கு வரலாம்: அதாவது அனைத்துக் கிறிஸ்தவர்களும், இந்த அமைப்புடன் இணைந்துகொள்ள வேண்டும். இயேசுவினால் ஒழுங்குப்படுத்தப்பட்ட சபையாய் இருக்கும் வகுப்பினரைக் குறித்து இதுவரையிலும் சொல்லப்பட்டிருப்பவைகளின் வெளிச்சத்தில், ஒருவேளை நீங்கள் உங்கள் சித்தம், தாலந்து, நேரம் முதலானவைகளை ஒப்புக்கொடுத்துள்ளீர்களானால், நீங்கள் இயேசுவினால் பின்னடியாராக, எக்ளீஷியாவின் அல்லது அவர் தலையாய் இருக்கும் சரீரத்தின் அங்கமாக, பரலோகத்தில் பேரெழுதப்பட்டுள்ளவர்களாக அடையாளம் கண்டுகொள்ளப்படுவீர்கள் என்பது உறுதியே. இப்படியாக நாம் இயேசுவின் சபையில் இணைந்துகொண்டு, அர்ப்பணிப்பின் வாயிலாக அங்கத்தினர்களென நம்முடைய பெயர்களானது பதிவு பண்ணப்படுகின்றது. ஆனால் பூமியிலுள்ள ஏதோ ஓர் அமைப்புடன் நான் இணைந்துகொண்டு, ஏதோ ஒரு விசுவாசப்பிரமாணத்திற்கு ஒப்புதல் அளித்து மற்றும் பூமியில் என் பெயர் எழுதப்பட்டிருக்க வேண்டாமோ? என்று உங்களில் யாரேனும் கேட்கலாம்? இல்லை; இயேசுதான் உங்கள் முன்மாதிரி மற்றும் போதகர் என்றும், இன்னுமாக தேவ வசனத்தை அவமாக்கிப்போடுகின்றதும், கிருபையிலும், அறிவிலும் நீங்கள் வளர்வதைத் தடைப்பண்ணுகிறதாகிய அடிமைத்தனத்திற்குள்ளாக்கும் முன்னோர்களின் பாரம்பரியங்கள் மற்றும் விசுவாசப்பிரமாணங்களுடன் உங்களை இணைத்துக்கொள்ளும்படிக்கான எந்த ஓர் அதிகாரத்தினையும் அவரது வார்த்தைகளிலோ, கிரியைகளிலோ உங்களால் கண்டுபிடிக்க முடியாது என்றும், இன்னுமாக இவைகளுக்கு எதிராகவே "நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" (கலாத்தியர் 5:1) என்று பவுல் அடிகளார் கூறி உங்களை எச்சரிக்கின்றார் என்றும் நினைவில் கொள்ளுங்கள்.

ஆனால் சிலர் பின்வருமாறு சொல்லிடலாம்: இந்தத் தற்கால பெயர்ச்சபைகள் எவற்றுடனும் இணைந்துகொள்வது சரியற்றது என்றால், நாமாகவே கண்களுக்குப் புலப்படுகிற ஓர் அமைப்பினை உருவாக்கிடுவது சரியாய் இருக்குமா? ஆம், அதைத்தான் நாம் பெற்றிருக்கின்றோம் - ஆதிசபை போன்று பின்பற்றி ஓர் organization/அமைப்பினைப் பெற்றிருக்கின்றோம். அந்த ஆதி எளிமைக்கு நாம் வந்துள்ளதாக எண்ணுகின்றோம். கர்த்தர் இயேசு மாத்திரமே நம்முடைய தலையாக அல்லது நியாயப்பிரமாணிக்கனாக இருக்கின்றார்; பரிசுத்த ஆவியானது நமக்கு விளக்கம் அளித்து, சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துகின்றது; நம்முடைய பேர்கள் அனைத்தும் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன; நாம் அன்பினாலும், பொது நலனினாலும் ஒன்றிணைக்கப்பட்டிருக்கின்றோம்.

ஒருவரையொருவர் அறிந்துகொள்வது எப்படி - என்று கேட்கின்றீர்களா? நமது போதகரின் ஆவியானது, வார்த்தையிலும், கிரியையிலும் மற்றும் நடத்தையிலும் மற்றும் பார்வையிலும் வெளிப்படுகையில், நாம் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளலாமல்லவா என்பது நம்முடைய பதிலாய் இருக்கின்றது. ஆம், ஜீவனுள்ள விசுவாசம், மாயமற்ற அன்பு, நீடியபொறுமையுடன்கூடிய சாந்தம், குழந்தைகளிடத்தில் இருப்பது போன்ற எளிமை, இதனோடுகூட உறுதியும், முதிர்ச்சியின் வைராக்கியமும், தேவனுடைய குமாரர்களை வெளிப்படுத்துகின்றது மற்றும் பூமியில் பதிவுபண்ண வேண்டியதின் அவசியம் நமக்கில்லை;

காரணம் இவர்களின் பெயர்கள் அனைத்தும், ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.

வியாதியஸ்தர்கள் சந்திக்கப்பட வேண்டுமா அல்லது உதவி பண்ணப்பட வேண்டுமா? இவர்கள் அர்ப்பணிக்கப்பட்ட நேரத்துடன் ஆயத்தமாய்க் காணப்படுகின்றனர். கர்த்தருடைய ஊழியத்திற்குப் பணம் அவசியமாயுள்ளதா? இவர்கள் அர்ப்பணிக்கப்பட்ட பணவளத்துடன் ஆயத்தமாய்க் காணப்படுகின்றனர். அவரது ஊழியமானது, உலகத்தாரிடமிருந்தும், சீர்க்கெட்டுப்போன பெயர்ச் சபையிடமிருந்தும் நிந்தனைகள் கொண்டுவருகின்றதா? இவர்களும் நற்பெயரை - அனைத்தையும் - தேவனுக்காக அனைத்தையும் பலிசெலுத்தியுள்ளனர்.

ஆனால் நம் மத்தியில் ஒழுங்கற்று நடப்பவர்களை நாம் எப்படிக் கையாளுவது என்றும், நம்மைச் சுற்றிக்காணப்படுகின்றது போன்ற எந்த அமைப்பையும் நாம் பெற்றிருக்கவில்லையெனில், நாம் செய்திடும்படி கர்த்தர் எதிர்ப்பார்ப்பவைகளைச் செய்து, இத்தகையவர்களிடமிருந்து நம்மை எப்படி விடுவித்துக்கொள்ளலாம் என்றும் கேட்கின்றீர்களா? இயேசுவும், பவுலும் கட்டளையிட்டதைச் செய்திடுங்கள் என்று நாம் பதிலளிக்கின்றோம்.

ஆதிசபையில் காணப்பட்டதுபோலவே, இப்பொழுதும் தனிப்பட்ட அங்கத்தினர்கள் மத்தியில் வளர்ச்சி பல்வேறு அளவுகளில் காணப்படுகின்றது. திடனற்றவர்களாய்ச் சிலர் இருப்பார்கள், அவர்களைத் தேற்றுங்கள் என்றும், பலவீனராய்ச் சிலர் காணப்படுவார்கள், அவர்களைத் தாங்குங்கள் என்றும், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாய்/பொறுமையாய் இருக்கும் அதேவேளையில் ஒழுங்கில்லாதவர்களுக்குப் (கிறிஸ்துவின் உண்மையான ஆவியினின்று விலகிப் போகிறவர்களுக்கு) புத்திசொல்லுங்கள் என்றும் பவுல் அடிகளார் கூறுகின்றார் (1 தெசலோனிக்கேயர் 5:14). ஒழுங்கில்லாதவர்களைப் பலவீனர் என்று தவறுதலாய் எடுத்துக்கொண்டு அவர்களைத் தாங்கிவிடாதீர்கள் மற்றும் ஒழுங்கில்லாதவர்களைத் திடனற்றவர்கள் என்று தவறுதலாய் எடுத்துக்கொண்டு அவர்களைத் தேற்றாதீர்கள். அவர் யாரை ஒழுங்கில்லாதவர்களென்று கூறுகின்றார்? சந்தேகத்திற்கிடமின்றி ஒழுங்கில்லாமல் நடப்பதற்கு அநேகம் வழிகள் காணப்படுகின்றன; 2 தெசலோனிக்கேயர் 3:11-ஆம் வசனத்தில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய் இருக்கின்றார்கள் என்றும், இவர்கள் யாராலும் குற்றஞ்சாட்டப்படாதவர்களாகக் காணப்படத்தக்கதாக, தன்னைப்போல் வேலை செய்திட வேண்டும் என்றும், வேலை செய்யவில்லையெனில், சாப்பிடவும் கூடாது என்றும் கூறுகின்றார். மற்றவர்களுக்கு முன்மாதிரியாகக் காணப்படத்தக்கதாக, இப்படியாக அவர் கூறவும், இதைச் செய்யவும் செய்தார். அவர் நல்லொழுக்கமற்ற மற்றும் அநீதியான நபர்களைக் குறித்தும் மற்றும் வேதவாக்கியங்களைப் புரட்டி, இப்படியாய்த் தேவனுடைய சத்தியத்தைப் பொய்யாய்க் காண்பிக்கின்றவர்கள் குறித்தும் நம்மை எச்சரிக்கின்றார். மறுபடியுமாக 14-ஆம் வசனத்தில் அப்படியானவனுக்குப் புத்திமதி கூறின பிற்பாடும், அவன் "கீழ்ப்படியாமற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்" என்று கூறுகின்றார் (2 தெசலோனிக்கேயர் 3:14, 15).

இன்னுமாக இரண்டு சகோதரர்களுக்கு இடையில் மனஸ்தாபம் காணப்படுகிற காரியத்திற்கு, இயேசு தெளிவான கட்டளைகளைக் கொடுக்கின்றார் (மத்தேயு 18:15, 17). "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் (ஒன்றுகூடிடும் சகோதரர் கூட்டத்தாருக்கு) தெரியப்படுத்து; அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக." நமது தலையானவருடைய ஒழுங்கின் கீழ், நாம் அவரை அன்புகூரும் காரணத்தினால், அவரது கட்டளைகளுக்குச் செவிக்கொடுப்போமானால், சகோதரர்கள் மத்தியில் பிரச்சனைகளும் மற்றும் மனஸ்தாபங்களும் எத்தனை சொற்பமாய்க் காணப்படும்.

இந்த ஒழுங்கு முறைமையானது, கர்த்தரினால் நியமிக்கப்பட்ட மற்றும் வழிநடத்தப்படுகின்றதான சுவிசேஷகர்களை, மேய்ப்பர்களை மற்றும் போதகர்களைப் பெற்றிருக்கின்றது. இவர்களுக்கு "அப்போஸ்தல வாரிசுகள்" என்று அழைக்கப்படுபவர்களினால்

கைகள் வைக்கப்படுவது அவசியமல்ல; ஏனெனில் "கர்த்தரின் ஆவியானது" "பிரசங்கம்பண்ணுவதற்கெனச்" சரீரத்தினுடைய அங்கத்தினர்கள் யாவரையும் அபிஷேகித்துள்ளது (ஏசாயா 61:1) மற்றும் சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினனும், சக அங்கத்தினர்களுடைய பக்திவிருத்திக்கெனத் தனது இந்த வேலையினைச் செய்திடுவது கடமையாக இருக்கின்றது. பரலோகத்தில் பேரெழுதப்பட்டுள்ளதும், அன்பினால் கட்டப்பட்டுள்ளதும் மற்றும் ஆவியினால் நடத்தப்படுகிற அங்கத்தினன் உரிமையுமுடைய கிறிஸ்துவினுடைய சபையின் ஒழுங்கு முறையானது, எத்துணை முழுமையானதாய்க் காணப்படுகின்றது மற்றும் பெயர்ச்சபையை மெய்ச்சபை என்று தவறாய்ப் புரிந்துகொண்டது எத்துணை மோசமான தவறாய் இருக்கின்றது!

நம்முடைய நான்காம் ஆய்வுபொருளின் முக்கியத்துவமானது வலியுறுத்தப்படுவதற்கு அவசியமில்லை. கிறிஸ்துவின் சரீரத்தில் அல்லது மெய்சபையிலுள்ள நம்முடைய அங்கத்துவத்தினை இழப்பது என்பது பயங்கரமான துன்பமாக இருக்கும் என்பது உண்மையே. மரித்ததாக கருதப்படும் பழைய சுபாவமானது மறுபடியும் உயிரடைந்து பெருமையின், சுயநலத்தின், பொறாமையின், தீமைபேசுதலின் உருவம் எடுத்துக் காணப்படுகின்றதா அல்லது இல்லையா என்று விழிப்புடன் கவனம் செலுத்தாவிடில், எந்த அங்கத்தினனும் இந்த அபாயத்திற்கு நீங்கலாய் இருப்பதில்லை. ஆனால் ஒருவேளை (பலிச்செலுத்துவதற்கு ஆயத்தமாயிருக்கும்) அன்பினால் நிரம்பிக் காணப்பட்டு, தாழ்மையினைத் தரித்துக்கொண்டு, மீட்கும் இரத்தத்தினுடைய மூடுதலின் கீழ்க் காணப்படுவோமானால், "நமக்கு இராஜ்யத்தைக் கொடுக்க நம் பிதா பிரியமாயிருக்கிறார்" என்ற நிச்சயத்தினைப் பெற்றிருந்து, சபையில் (சரீரத்தில்) பாதுகாப்பாய் இருப்போம்.

ஆம், இராஜ்யமே, மெய்ச்சபையின் - இப்பொழுது அவமானத்தின் பாதையில் நடந்து, மரணத்தினுடைய கசப்பான பாத்திரத்தில் பானம்பண்ணும் சிறுமந்தையினரின் மகிமையான நோக்கமாகக் காணப்படுகின்றது. நம்மில் வெளிப்படப்போவதான மகிமையானது, விசுவாச கண்களுக்குத் தவிர, மற்றப்படி தெரியாது; ஆனாலும் சோதனைகளும், பரீட்சைகளும் எல்லாப் பக்கங்களிலும் மிகவும் பார்க்கக்கூடிய விதத்தில் காணப்படும். "ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" (எபிரெயர் 4:1).

இப்படியாக பவுல் அடிகளார் மற்றவர்களை எச்சரித்தார் மற்றும் மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற அவர் ஆகாதவராய்ப் போகாதபடிக்கு அச்சம் கொண்டிருந்தார் (1 கொரிந்தியர் 9:27). பெயர்ச் சபைகளில் இருப்பவர்களால், நம் நாமங்கள் பொல்லாததென்று தள்ளிவிடப்படலாம்; எனினும் "பரலோகத்தில் நம்முடைய நாமங்கள் எழுதப்பட்டிருப்பதினால் நாம் சந்தோஷப்பட்டுக் களிகூருவோமாக." அவர்கள் உங்களிடத்தில் கோபமுகத்தினைக் காண்பித்து, பலவித தீமையான மொழிகளையும், உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்லிடலாம் அல்லது உங்களது செல்வாக்கினை நாங்கள் இழந்திட விரும்பவில்லை, எங்களோடு தரித்திருப்பதினால் நீங்கள் மிகுந்த நன்மையினைச் செய்திடலாம் என்று கூறி முகஸ்துதி செய்து, உங்கள் மனதை மாற்றிட நாடிடலாம். ஓ! இந்தத் "தீங்கு நாளில்"...

"உலகத்தின் பயமூட்டும் கோபப் பார்வையினால் அசைவுறாத,
அதன் முகஸ்துதி புன்முறுவலுக்குக் கவனம் செலுத்திடாத,
உபத்திரவத்தின் கடல்களினால் மூழ்கடிக்க முடிந்திடாத,
சாத்தானின் தந்திரமான வஞ்சனையினால் மூழ்கடிக்க முடிந்திடாத"
விசுவாசம் ஆம் விசுவாசம் எத்துணை அவசியமாயுள்ளது.

அருமையான அன்புக்குரியவர்களே, "ஆனபடியினாலே, நீங்கள் - கொஞ்சமேனும் - மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" எனும் எச்சரிப்பை மறுபடியுமாக நாம் திரும்பக்கூறுகின்றோம் (கலாத்தியர் 5:1). வேதவாக்கியங்களினால் அங்கீகரிக்கப்படுகின்றதும் மற்றும் "என் ஜனங்களே அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று வேதவாக்கியங்கள் எதிர்த்துப் பேசுகின்றதான பாபிலோன் அமைப்புகள் யாவற்றிலிருந்தும் முற்றிலும் தனித்துச் சுதந்தரமாய்க் காணப்படுகின்றதுமான ஒரே சபையில் நீங்கள் காணப்படுகின்றீர்களாவென உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

---

# உலகத்தோடு நடக்கும் சபை

தூர தூரமாகவே சபையும் உலகமும்இடைவெளிவிட்டே நடந்தனவே,
காலங்கள் மாறும் கரைதனிலே, உலகம் தானோர் மயக்கும் கீழ்த்தர வசீகரப்பாடலையே
சபையை நோக்கிப்பாடியதே.சபையும் மிகவும் அமைதலுடனே புனிதமானதோர்
பாடலைப்பாடியதே.உற்சாகமிகுதியால்மிதக்கும் உலகம்தானோ, வா, அருகினில்வா,
கைகோர்த்தே இவ்வழிசென்றிடலாம் என்றே சபையை அழைத்ததுவே.
கறையிலா சபையோ மிகவும்பயந்தே,வேண்டாம்வேண்டாம், நான்வருவதற்கில்லை,
நாம் இணைந்தே நடப்பதற்கில்லை ,நீபோ, என்பாதைவேறு,உன்பாதை வேறு
என்றேதன்வெண்மைக் கரங்களை மடக்கிக்கொண்டதே.
உன்வழி என்னைஅழிவுக்கழைத்துச்செல்லும்,உன் வார்த்தைகள்அனைத்தும்
பொய்யானதாகும்.
இல்லை, இல்லை, நாம் சிறுஇடைவெளிவிட்டே  நடந்து செல்வோம் கெஞ்சிக்கேட்டதே
இப்பாழுலகம்.
நான் நடக்கும்பாதையோ மகிழ்ச்சியின் பாதை,
எப்போதும் அங்கே சூரியவெளிச்சமிருக்கும்,நீ நடக்கும் பாதையோ கரடு முரடாய்,
கல்லும்முள்ளும் பாதையில்கிடக்கும், கால்களில் குத்தும், பாதம் வலிக்கும்.
ஆனால் எந்தன் பாதையோ, பரந்து விரிந்ததே பார்வைக்கழகாய் பூக்கள் சொரிந்தே ,
பனிபடர்ந்துமே, காணலாகுமே, உந்தன்பாதையில் கண்ணீரும்  வலியும் நிரந்தரம் தானே.
எனக்குமேலுள்ள ஆகாயம் எப்போதும் நீலவானம்தானே,
உனக்குமேலுள்ள வானம் என்னவோஎப்போதும் கார்மேகமூட்டம்தானே,(கார்மேகம்-கருப்பு)
உந்தன்ஊழ்வினை கடும்துன்பம் தானே,நாம் இருவரும் ஒன்றாய்இணைந்து செல்லவே,
இடமிருக்குது இங்கேபார்:
அரைமனதோடே சபையும் உலகை திரும்பிப்பார்க்கவே செய்ததே,
சட்டென்றுதானேசபையின் கரங்களை இறுகப்பற்றிக்கொண்டதேபூமி, வெற்றிக்களிப்பில்
விசிலடித்தே பாடிநடந்ததே,
உன் ஆடை என்னவோமிக எளிமையாகவே என் ஆசைக்கிசைவாய்இல்லையே,நான்
உனக்கு முத்தும் பவளமும் அணியத்தருகிறேன்,வெல்வெட்டும் பட்டும் பகட்டாய் உடுத்தியே
வைரங்கள் உன் கூந்தலை அலங்கரிக்கட்டுமே,சபையோதனது
வெண்ணாடைதனையேஉற்றுப்பார்த்தே ஏக்கம்கொண்டதே,மனதைக்குழப்பும் உலகையும்
பார்த்ததே,நமட்டுச்சரிப்புடன் நகைக்கும் இந்த உலகை வெறுப்புடன் பார்த்தே
மறுத்ததே,கெஞ்சும் குரலால்குழப்பமடைந்தே,
நான் ஏன் ஆடம்பர ஆடை அணியலாகாது?விலையுயர்ஆடைஅணிந்தால்தான்தவறென்ன?
என்றே எண்ணியபோதினிலே,சபையின் தூய வெண்ணாடை களையப்பட்டதே.உலகின்
ஆடம்பர ஆடை கொடுக்கப்பட்டதே,பளபளக்கும்
பட்டாடை,ரோஜாப்பூக்கள்,விலையுயர்நவரத்தினங்கள்,
நெற்றிதனையே அலங்காரம்செய்ததே,
உன் வீடு என்ன,வெறுமையாய்உள்ளதே?என்வீட்டினைப்
போலொன்றைக்கட்டித்தருவேன்,காஷ்மீரின்கம்பளங்களும்,கவின்மிகு
சன்னல்மறைப்புகளும்,

**--67--**

சொல்வதற்கரிய மரச்சாமான்களும்,காண்போர்கண்களைக்கவர்ந்து இழுக்கும்தோற்றம்கொண்டதோர் வீட்டினை நேர்த்தியாகவேஅழகுடன் கட்டிக்கொடுத்ததே,அவர் மகன்களும், அவள் மகள்களும்மிகவும் ஆடம்பரமாகவே தங்கத்தினால்ஜொலிஜொலித்தேஆடைஅணிந்தே அந்த இல்லத்தில் ஒன்றாய் வாழ்ந்தார், அடம்பரத்தின் அனைத்து விழாக்கள்,ஹாலின்நடுவே நடந்ததுவே,உலகமும் அவர் மாந்தரும் அங்கே ஒன்றாய்சேர்ந்தே வாழ்ந்தாரே,சிரிப்பும் அக்களிப்பும் பாட்டும் கும்மாளமும் விருந்தும் நடனமும் கேளிக்கையாகவேநடந்ததுவே,

ஜெபத்திற்காகவே ஒதுக்கிய அறையினில் ஒழுக்கம்கெட்ட பணக்காரர் அமர்வதற்கே ஆசனம் அமைத்தே,தற்பெருமையுடனே களிப்புடன் அமர்ந்தேகண்டுகளிக்கசோபாக்கள் அமைத்தேசொகுசாய் வாழ்ந்தனர்,

ஆனால், ஏழைவகுப்பினர்கிழிந்த ஆடை அணிந்தவராய்,எண்ணெய்காணாதலையுடனே, தாழ்மையுடனே வரிசையிலே,வீட்டிற்கு வெளியே காத்திருந்தார்,

நீ கொடுக்கவேண்டுவதற்கு மேலும் ஏழைகளுக்குக் கொடுக்கிறாய்.

அவர்க்கு வாழிடம்,உணவு தேவைஎன்றால், நீ ஏன் அதற்காய் வருந்துகிறாய்?

உலகம் சபையைக்கேட்டதுவே,பணம்கொடுத்தே விலைமிகுஆடைகள்வாங்கி, குதிரைகள், வண்டிகள்,முத்துக்கள், பவழங்கள்,கிடைப்பதற்கரிய ருசி மிகு உணவுகள்,விலை மிகுந்த திராட்சை இரசங்கள்,அனைத்தையும் வாங்கு, என் பிள்ளைகள் இவைமேல் அளவுக்கதிகமாய் பேரார்வம்கொள்ளுவார்,அவரன்பு உன்னை வெல்லுமானால், அவர்கள்செய்வதைப்போல்செய்வாய்,அவர் செல்லும் பாதையில் நீநடப்பாய்,

சபையோவேகமாய்பர்ஸைத்திறந்தே, அடக்கஒடுக்கமாய்தலைகுனிந்தே, அசட்டுச்சிரிப்புடன்,நீர்சொல்வது சரிதான்,சார்,சந்தேகமில்லை,இது முதற்கொண்டுநீர் சொல்வது போன்றே செய்தே வருகிறேன்,என்றே கூறிவிட்டனளே,ஏழைகள் அவளை வெறுப்புடன் பார்த்தே,ஏளனச்சிரிப்புடன்அவள்வீட்டைவிட்டகன்றார்,

அனாதைகள் அழுவதை கேட்கமுடியவில்லை,அவள்வாங்கிய அழகிய ஆடைகளை ஒதுக்கிவைத்தாள், கைம்பெண்கள் அழுதே கண்ணீர் விட்டேகடந்து சென்றனர்/,இப்போ, உலகத்தின் மகன்களும் சபையின் மகள்களும்,நெருங்கி, கைகோர்த்தே, நடந்தே சென்றார், என்எஜமான், அனைத்தும் அறிந்தவர், அவர் ஒருவர் மாத்ரமே,இவர் இருவரையுமே பிரிக்கலாகுமே,சபையோ இப்போதோ, மிக ஓய்வாகவே,விட்டேத்தியாகவே கூறுகிறதே, நான் இப்போமிகவும் பணக்காரன், என் செல்வங்கள் மிகவும் பெருகியதே,எனக்குத்தேவை எதுவுமில்லை, அதற்கு எதுவும் செய்வதற்கில்லை,ஆனால், சிரிக்கவும் நடனம் ஆடவும் பாடல்பாடவும் விருந்து கொண்டாடவும்இருந்தாலே போதும், இதனைக்கேட்ட வஞ்சக உலகம்,வஞ்சகமாகவே சிரித்துக்கொண்டதே,கேலியும் கிண்டலுமாகவேசொன்னதே, சபைவிழுந்ததே,அழகான சபைவிழுந்துவிட்டதே,அவள் பெருமையும் தற்புகழ்ச்சியும் அவமானமாயின.

,தூதன் கிருபாசனத்தண்டையில் சென்றே,பெருமூச்சுடனே அவள்பெயர் கிசுகிசுத்தார்,அப்போதோ,பெருமகிழ்ச்சியின்ஆரவாரம், அந்தரங்கமாகவே, இரகசியமாகவே மறைக்கப்பட்டதே,அடக்கப்பட்டதே,முகங்கள்யாவும் அவமானத்தாலே மூடப்பட்டதே,

--68--

அரியணைமீதினில் அமர்ந்தவரிடமிருந்தேஒருகுரல் சபைக்குக்கேட்கப்பட்டதே, உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்.

Rev 3:16 இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்.

நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதைஅறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்;உன்னை என் சமூகத்தினின்று துரத்திவிடுகிறேன்,உன் இழி செயல்களுக்காக உன்பெயரை ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன்."

இறுதியாக:

"உலகமும் சபையும் இரயில் தண்டவாளம்போன்றே இணையாமல் சென்றால் இரயிலுக்கும்பயணிகளுக்கும் எதுவும் பாதிப்பில்லை.
உலகின்பேச்சினைக்கேட்டே,கைகோர்த்துஒரே தண்டவாளத்தில்சென்றால் அதனால் வரும்தொல்லை.இரயிலுக்கும், பயணிகளுக்கும்தான் நஷ்டம்.

# நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து

***"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." 1 கொரிந்தியர் 5:7, 8***

யூதர்களுடைய ஏழு நாட்களுள்ள பஸ்கா பண்டிகையானது இந்த வருடத்தில் (1885-இல்) மார்ச் 31-ஆம் தேதி துவங்கி, ஏப்ரல் 7-ஆம் தேதி முடிவடைகின்றது மற்றும் இது அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியைப் புசிக்கின்றவர்களுக்கு வரும் பூரணமும், நித்தியமுமான தூய்மைக்கும், சந்தோஷத்திற்குமான நிழலாய் இருக்கின்றது. நமது பஸ்கா (ஆட்டுக்குட்டியாகிய) கிறிஸ்து அடிக்கப்பட்டுள்ளபடியினால், நாம் அனைவரும் அவரால் உண்டான புண்ணியத்தில் விசுவாசத்தினால் பங்கெடுத்துள்ளபடியால், நாம் தேவனுக்கு முன்பு தொடர்ந்து களிகூரவும், சத்தியத்தைப் புசிக்கவும், சகல பாவமாகிய புளிப்பை, அதாவது துர்க்குணம், மாய்மாலம் முதலியவைகளை முற்றிலுமாகக் களைந்துபோடத்தக்கதாக பவுல் போதிக்கின்றார்.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் மரணமும் மற்றும் அதைப் புசித்தலும்தான், இஸ்ரயேலர்களுக்கு ஒருவாரமளவும் நீடிக்கக்கூடிய "பஸ்கா பண்டிகைக்கான" காரணமாக அல்லது அடிப்படையாகக் காணப்பட்டது. பண்டிகை வாரத்திற்குரிய முந்தின நாளில், ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படுகின்றது மற்றும் இது இயேசுவினுடைய மரணத்திற்கு நிழலாய் இருக்கின்றது. ஆகையால் சிலுவை மரணநாளுக்கான ஆண்டு நிறைவு நாளானது இந்த வருடத்தில், மார்ச் மாதம் 30-ஆம் தேதியன்று (யூத நேரத்தின்படி) மதியம் முதல் பிற்பகல் 3 மணிக்குள்ளாக வருகின்றதாக இருக்கின்றது மற்றும் இதற்கு முந்தின சாயங்காலம் (இதுவும் யூத நேரத்தின்படி அதே நாளாக இருக்கின்றது; ஏனெனில் அவர்களுக்கு நாளானது சாயங்காலம் 6 மணிக்குத் துவங்குகின்றதாய் இருக்கின்றது) அதாவது மார்ச் 29-ஆம் தேதியாகிய ஞாயிற்றுக்கிழமையன்று சாயங்காலத்தில், 6 மணிமுதல் 10 மணிவரை ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதற்கும், பஸ்கா போஜனத்தை ஆயத்தம் பண்ணுவதற்கும் மற்றும் புசிப்பதற்கும் செலவிடப்படுகின்றது மற்றும் இதற்குப் பின்னர், நமக்காகப் பிட்கப்பட்டு, சிந்தப்படப்போகின்ற நமது கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்தும் அப்பம் மற்றும் திராட்சரசம் அடங்கின இராப்போஜனமானது, சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியின் இடத்தில் இனிமேல் இடம்பெறப்போவதாக அவரால் தம்முடைய சீஷர்களுக்கு அறிமுகம்பண்ணப்பட்டது; இந்தச் சின்னங்கள் (அப்பம், இரசம்) "நிஜமாகிய அவரை — உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை" அடையாளப்படுத்துகின்றதாய் இருந்தது.

தம்முடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்குமான அடையாளச் சின்னங்களாகிய அப்பத்தையும், திராட்சரசத்தையும் சீஷர்களுக்குக்கொடுத்து, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கூறி, அதைப் புசிக்கும்படிக்குக் கர்த்தர் கூறினபோது, அதுமுதல் பஸ்காவின் ஆண்டு நிறைவு நாளானது, நிழலான ஆட்டுக்குட்டியைப் புசிப்பதன் வாயிலாக நினைவுகூரப்படாமல், மாறாக நிஜமான ஆட்டுக்குட்டியின் இந்தச் சின்னங்களைப் புசிப்பதன் மூலம் நினைவுகூரப்பட வேண்டுமென்று கர்த்தர் போதித்ததாக நாம் புரிந்துகொள்கின்றோம். (லூக்கா 22:19) எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டதை நினைவுகூருவதற்காக இல்லாமல், மாறாக பாவம் மற்றும் மரணத்திலிருந்ததான நம்முடைய விடுதலைப்பற்றி நினைவுகூருவதற்காகவே ஆகும். நிஜமானது ஆரம்பித்துவிட்டதென எல்லாவிதத்திலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும்.

அப்போஸ்தலன், "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப்புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடையமரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26) என்று கூறும்போது, இந்த ஆண்டு நிறைவு நாளானது (ஆண்டுதோறும் அந்நாளில்) ஆசரிக்கப்படும்போதெல்லாம், நாம் கர்த்தருடைய மரணமே நம்முடைய சந்தோஷம், பரிசுத்தம் மற்றும் நம்பிக்கை அனைத்திற்குமான அடிப்படையாக இருக்கின்றது என்பதைத் தெரிவிக்கின்றவர்களாய் இருப்போம் என்று அப்போஸ்தலன் போதிப்பதாகவே நாம் புரிந்துகொள்கின்றோம். "கர்த்தர் வருமளவும்" எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை, நம்மை வரையறுக்கும் விதத்திலும் மற்றும் நம்முடைய தற்போதைய ஆசரிப்பு சரியற்றது எனும் விதத்திலும் நாம் புரிந்துகொள்வதில்லை; ஏனெனில் அவ்வார்த்தைகளுக்கான திட்டவட்டமான அர்த்தமானது — கர்த்தருடைய இராஜ்யம் வந்திருந்து, அந்த இராஜ்யத்தில் அவர் தம்மோடுகூட நீங்கள் (திவ்விய சுபாவத்தின் உரிமைகள், சிலாக்கியங்கள் மற்றும் சந்தோஷங்கள் எனும்) நவமான இரசத்தைப் பருகும்படிக்கு அழைப்பதுவரையாகும். மாற்கு 14:25; லூக்கா 22:16-ஆம் வசனங்களைப்பார்க்கவும்.

நம்முடைய புதிய வாசகர்கள் அநேகரின் நலன் கருதி, நாம் குறிப்பிடுவது என்னவெனில், சில வருடங்களாக "இதை," ஆண்டுதோறும் அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பது நம்முடைய

வழக்கமாக இருந்துவருகின்றது; அதுவும் கூடுமானவரை, நமது கர்த்தரால் இது நிறுவப்பட்ட முதற்தருணத்தின்போதும் மற்றும் ஆதித் திருச்சபையாரிடத்திலும் விளங்கின எளிமையானது பேணப்பட்டும் வருகின்றது. இந்நகரத்தில் இருக்கும் சபையார் வழக்கம்போல், அலிகெனி நகரத்திலுள்ள, பிரடரல் தெருவில், எண்: 101-இல் உள்ள "மேற்வீட்டறையில்" கூடிக்கொள்வார்கள். கர்த்தருடைய சீஷர்களாய் இருப்பவர்கள் அனைவரையும் — பிட்கப்பட்டச் சரீரத்தையும், சிந்தப்பட்ட இரத்தத்தையும் மதிக்கும் அனைவரையும், நமக்கான மீட்கும்பொருளை ஒன்றாய்ச்சேர்ந்து நினைவுகூரும்படி எங்களோடு கூடும்படிக்கு வரவேற்கின்றோம்.

நம் அனைவராலும் இங்குக் கூடிடமுடியாது, ஆனால் நம் அனைவராலும் நமது கர்த்தருடன் கூடிடமுடியும் மற்றும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்று உணர்ந்துகொள்கையில் நமது தலையானவருடனும், நமது பிதாவுடனும், ஒருவரோடொருவரும், இருதயத்தினுடைய ஐக்கியத்தில், ஐக்கியம்கொள்கின்றோம். எங்கே இயேசுவின் நாமத்தில் இரண்டு அல்லது மூன்றுபேர் கூடிக்கொள்கின்றார்களோ, அங்குத் தலையானவர் காணப்படுவார் மற்றும் அதன் காரணமாக ஆசீர்வாதமும் கடந்துவரும்.

நமது கர்த்தருடைய சரீரத்தை அடையாளப்படுத்தும் அப்பத்தைப் பிட்கையில், அவருடைய நியமித்தலினாலேயே நாம் இப்பொழுது அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகக் காணப்படுகின்றோம் மற்றும் அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களெனப் பிட்கப்படவும் போகின்றோமென்பதை நாம் மறந்துவிட வேண்டாம். நாம் நீதிமானாக்கப்படுவதற்குக் காரணமான அவரது பலியாக்கப்பட்ட ஜீவனுக்கான சின்னத்தை நாம் பருகுகையில், நாமும் அவருடைய பாத்திரத்தில் பங்கடைவதற்கும் மற்றும் இப்படியாக அவரது மரணத்தின் அடையாளத்தில் பங்குகொள்வதற்கும் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம். அவருடைய கிருபையினால், நாம் அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணி, பின்னர் அவரது மகிமையில் பங்குகொள்வோம். (மத்தேயு 20:22, 23)

இதையே அப்போஸ்தலர் 1 கொரிந்தியர் 10:16-18 வரையிலான வசனங்களில் குறிப்பிடுகின்றார். பலிகளைப் புசித்த அந்த ஆசாரியர்கள், அந்தப் பலிகளைச் செலுத்தினவர்களாகவும், அந்தப் பலியினால் அடையாளப்படுத்தப் படுகின்றவர்களாகவும் காணப்பட்டனர். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 திருவிவிலியம்) கவனமற்ற விதத்தில் எவரும் இந்த அடையாளங்களில் பங்குகொள்ளாமல், மாறாக ஜாக்கிரதையுள்ள மற்றும் உண்மையுள்ள இருதயங்களுடனும் ஒவ்வொருவனும் இயேசுவினுடைய பலியின் விளைவாகவரும் பலன்களிலுள்ள தனக்கான பங்கினை மாத்திரமல்லாமல், இயேசுவினுடைய பலியின் விளைவாக பின்பு தனக்கு இயேசுவோடு பலியிலிருக்கும் பங்கினையும் உணர்ந்துகொள்வதற்கு முயற்சிப்பானாக.

*****

# சரீரம் முழுவதும் கண்ணானால்

## If the whole body were an Eye

**[1 கொரிந்தியர் 12:12-27]**

உண்மையான சபையின் (பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள்) ஒருமையை விளக்கத்தக்கதாக வேதத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படும் இந்த விளக்கத்தைக் காட்டிலும் வேறு எந்த ஒரு சிறந்த விளக்கமும் உருவாக்கப்பட முடியாது. அதாவது, - மனித சரீரமானது வெவ்வேறான மற்றும் மாறுபட்ட அவயவங்களால் உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், எல்லா அவயவங்களும் சேர்ந்து ஒரே சரீரமாய் உள்ளது. மேலும், ஒவ்வொரு அவயவமும் மற்ற அவயவங்களைச் சார்ந்து உள்ளது.

ஓர் அவயம் இல்லாமல் போனால்கூட மனித சரீரத்திற்கு எவ்வளவு பெரிதான இழப்பாய் உள்ளது. ஒருவேளை ஓர் அவயம் இல்லாத தன்மை என்பது சரீரத்தின் அழிவை குறிக்காமல் இருந்தாலும், அதனுடைய பயனை சரீரம் இழந்து விடுகிறது. இதைபோலதான், சபை கர்த்தருடைய சரீரத்திற்கும் பொருந்தும். ஒவ்வொரு அங்கமும் இன்றியமையாதவர்கள். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் மற்ற அங்கத்தினருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் உண்டு. மேலும் மற்ற அங்கத்தினரோடு வைக்கும் ஐக்கியத்தின் நிமித்தம் வரும் ஆசீர்வாதங்களும் உண்டு. ஆகையால், "சரீரத்திலே பிரிவினை உண்டாயிராமல். . ." என்று அப்போஸ்தலர் வற்புறுத்துகிறார். . . . .அதாவது, கர்த்தருடைய சரீர அங்கங்களாய் இருப்பவர்கள் மத்தியில் சமய உட்பிரிவு காணப்படக்கூடாது.

சரீரம் முழுமையாக நிறைவடைந்து, தலையோடு ஒன்று சேர்ந்து மகிமையடையும்போது, அது முழுமையானதாகவும் அங்க குறைவு இல்லாமலும் காணப்படும். சபை அங்கங்கள் மத்தியில் எந்த ஒரு தனிக்குழு அமைப்போ அல்லது பிரிவுகளோ இருக்காது. இப்படியான ஒரே ஆவியின் கீழும், தலையின் கீழும் இருப்பவர்கள் மாத்திரமே சபையின் அங்கங்கள் ஆவார்கள். ஆனால், தற்போது இப்படி இல்லை. இப்பொழுது சில அங்கத்தினர்கள் தலைக்கு தங்களை முற்றிலும் கீழ்ப்படுத்தவில்லை. சாத்தானின் மாய தோற்றத்தால் இவர்கள் தவறாய் வழிநடத்தப்பட்டு, பிரிந்து காணப்படுகின்றார்கள். இதினிமித்தம் சரீரத்தின் மூலம் வரும் ஆசீர்வாதங்கள் மற்றும் அநுகூலங்களை இவர்கள் இழந்து காணப்படுகின்றனர். மேலும் சரீரமும் இவர்களது உதவி மற்றும் செல்வாக்கை இழந்து காணப்படுகின்றது. மனித சரீரத்தில் ஒரு அவயம் இல்லாமல் இருந்தால், அல்லது அதனுடைய வேலையை செய்ய மறுத்தால், இந்தக் குறைவை நிறைவு செய்யும் விதத்தில் மற்ற அவயங்கள் வந்து முயன்று இழப்பீட்டைச் செய்யும். இதைப்போலவே, கிறிஸ்துவின் சரீரத்திலும், யார் சரீரத்தின் தேவையை உணருகின்றார்களோ, அவர்கள் எல்லோரின் நன்மையின் பொருட்டு வரும் அதிகப்படியான சேவையில் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். சரீரத்தின் எந்த அங்கத்தினர்கள் தங்கள் பங்கினை செய்ய தவறுகின்றார்களோ, அவர்கள் சரீரத்திலிருந்து அறுப்புண்டுபோகும் ஆபத்து உள்ளது. மேலும் அந்த வேலைக்கு தகுதியான வேறு அங்கத்தினர் அந்த வேலைக்கு நியமிக்கப்படுவர். "ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு." (வெளிப்படுத்தல் 3:11) "என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்." (யோவான் 15:2)

மனித சரீரத்திலுள்ள கண், காது, கை மற்றும் பாதம் ஆகிய இவைகளே முக்கிய வேலைச் செய்யும் அவயவங்கள் ஆகும். இவைகள் அனைத்தும் இன்றியமையானவைகள். இவைகள் அனைத்தும் இசைந்து ஒரே நோக்கத்தின் கீழ் வேலை செய்ய வேண்டும். கண்கள் மூலம் நாம் உற்றுப் பார்த்து உணருகிறோம். எனினும், கையின் உதவி இருந்தால் - அது சூடாக அல்லது குளிராக உள்ளதா எனவும், தின்மையானதா அல்லது கடினமானதா எனவும், கரடுமுரடானதா அல்லது வழவழப்பானதா எனவும் உணர்ந்து கொள்ளலாம். கண்களால் ஒன்றை உற்று பார்த்து உணர்ந்து கொள்ளும் தன்மையிருப்பினும், அது கைகள் மூலம்தான் அதிகமாக உதவி அடைகிறது.

கை மிகவும் பயன் உடையது. கண்களால் செய்ய முடியாததை இது செயல்படுத்துகிறது. அதாவது, கண் எது தேவையானது அல்லது எது அநுகூலமானது என சுட்டிக்காட்டுகின்றதோ அதை கை செயல்படுத்துகின்றது. எனினும் கண்களுடைய வழிகாட்டுதல் மற்றும் அறிவுத்திறன் இல்லையென்றால், கையினுடைய வேலை எவ்வளவு மந்தமாக / வேகக்குறைவுடனும் பயனற்றதாகவும் காணப்படும்.

அடுத்துள்ள சூழ்நிலைகளைப் பற்றி செய்திகள். அதாவது, இசைவான அல்லது முரண்பாடான நிலையைப்பற்றி காதுகள் சரீரத்திற்கு அறிவுரை கொடுக்கின்றது. எனினும், கண்ணுடைய உதவியில்லையென்றால், அது தவறாய் நடத்தி சரீரத்தை வஞ்சித்துவிடும். முன் பின் தெரியாத /புதுமையான சத்தத்தின் ஆசீர்வாதம் இருந்தாலும், சரீரத்தை பயத்தினால் நிரப்பும். பழக்கமான சத்தத்தில் ஆபத்து வெளிப்பட்டாலும், அதை கவனியாமலும் போகப் பண்ணும்.

பாதம் என்பது முக்கியமான அவயம். அது சீரத்துக்கு செய்யும் சேவையும் மிக முக்கியமானதாகும். பாதங்கள், கைகள், காதுகள் மற்றும் கைகளின் வேலைகளுக்கு மிகவும் உதவுகின்றது. அது சீரத்தை தூக்கிச் செல்கின்றது. அதாவது, சீரத்தை நடத்திக் கொண்டு செல்கின்றது /வினையாற்றுகின்றது. உண்மைதான், பாதம் இல்லாமல் இருந்தால்கூட சீரத்தினால் பார்க்கவும்,கேட்கவும் முடியும். சீரம் மெதுவாக முன்னேறும். எனினும் பாதம் இல்லை என்றால், முன்னேறுதல் என்பது மிகவும் தாமதமாகவே காணப்படும். வழிநடத்த /வழிகாட்ட கண்கள் இல்லை என்றால், பாதங்கள் தடுமாறி, முழு சீரத்தையும் குழப்பம் மற்றும் பெரும் துயரில் ஆழ்த்திவிடும்.

இப்படியாக நாம் பார்க்கும்போது, ஒவ்வொரு அவயவமும் சீரத்திற்கு மிகவும் தேவை. ஆம் தேவை தான். கண்கள் என்பது முக்கியத்துவம் நிறைந்த பணியாள் ஆகும். எனினும் மற்ற அவயவங்களை சார்ந்து இராத தன்மை இதற்கு இல்லை. மற்ற அவயங்களின் உதவியில்லையெனில், கண்களின் செய்தி என்பது, அதிக முக்கியத்துவம் அற்றதாகக் காணப்படும். கண் என்பது சீரத்தை அடையாளப்படுத்துகிறது. நாம் ஒருவரை நோக்கிப் பேசும்போது, நாம் அவர்களின் கைகளையோ பாதங்களையோ அல்லது காதுகளையோ பார்த்துப் பேசுவதில்லை. மாறாக நாம் அவர்களின் கண்களையே அவர்களின் சீரத்தின் பிரதிநிதிகளாக எண்ணி பேசுகின்றோம். வேதத்தைப் பார்க்கும்போது, கண்கள் என்பது புரிந்து கொள்ளுதல் அல்லது அறிவை அடையாளப்படுத்துகின்றது. உலகம் முழுவதிலும் நாம் பார்க்கும்போது, கண் அறிவு திறனுக்கு ஒரு அடையாளம் ஆகும்.

மனித சீரத்தின் அவயவங்களையும், அவைகள் சீரத்துக்கு செய்யும் வேலைகளையும், அதன் பயன்களையும் விளக்கமாக முன் வைத்து, அப்போஸ்தலர் சபை அதாவது, கிறிஸ்துவின் சீர அங்கத்தினர்களை விரைவு படுத்துகின்றார் - அதாவது, சீரத்திற்கு பயன் உள்ளதாய் தான் இருக்க தன்னுடைய பங்கு என்ன என்று கண்டு பிடித்து அதை நிரப்ப வேண்டும். ஒருவர் மற்ற அங்கத்தினர்கள் மீது பொறாமை கொள்ளக்கூடாது. மாறாக அவனவனின் தகுதிக்கேற்றபடி அவனவனுடைய பங்குகளை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும் - இதன் மூலம் சீரத்தில் பிரிவினைகள் இருப்பதில்லை. மேலும் வெவ்வேறு அங்கத்தினர்கள் தலையாகிய நமது கர்த்தரின் திட்டத்தின்படி தங்களுக்குரிய பங்கை நிறைவேற்றினால் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற முடியும். அதாவது, சீரத்தை ஒருங்கே அமைத்து ஊன்றாக கட்டுதல்.

சீரம் தேவனாலே வழிநடத்தப்பட்டு போதிக்கப்படுகின்றது என சீரத்தின் ஒவ்வொரு அங்கங்களுக்கும் சான்று பகரப்பட்டுள்ளது. விசேஷமான வரங்கள் எல்லா அங்கங்களுக்கும் கொடுக்கப்படாமல் இருந்தாலும், அவைகள் ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும் பயன் உள்ளதாய் உள்ளது. "ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கு என்று அளிக்கப்பட்டிருக்கிறது." (வசனம் - 7) ஆதிசபையில் கர்த்தர் ஏற்படுத்தின ஒழுங்குகளிலிருந்து மீறும் அபாயம் காணப்பட்டது. எல்லோரும் தீர்க்கதரிசி, போதகர்கள் --- ஆகுவதற்கு ஆர்வம் கொண்டிருந்தனர். . . .ஆகையால் அப்போஸ்தலர் இவ்விதமாய் கண்டித்து உரைக்கிறார். "இப்படியிருக்க, முக்கியமான வரங்களை நாடுங்கள் ; இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன்." (1 கொரிந்தியர் 12:31) மேன்மையான வழியைப்பற்றி 13ஆம் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். இதன் வழிமுறை என்னவென்றால், தலையிடமும், ஒவ்வொரு அங்கத்தினர்களிடமும் நாம் காட்டத்தக்கதாக நாம் ஆழமான பரந்த மனப்பான்மை உள்ள அன்பை நாம் விதைக்க வேண்டும். பின்பு சீரத்திற்கு அன்பின் அடிப்படையில் நாம் சேவை செய்யத்தக்கதாக கர்த்தர் நம்மை சில நிலைகளுக்கு உயர்த்தும்படி பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.

தன்னுடைய சீரத்தின் அளவைக் கூட்ட முடியும் என்று எண்ணி யாரும் தங்களையே வரம்பெற்ற அங்கத்தினர் என்று எண்ணக்கூடாது என்பதை மனதில் வைக்க வேண்டும். ஒருவேளை அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வரங்களை இன்னும் வளர்க்க முயற்சிக்கலாம் மற்றபடி அல்ல. இப்பொழுதோ அல்லது மகிமையிலோ இராஜ்யத்தை பெரிதான ஸ்தானத்தில் நிறுத்துவது என்பது தேவன் முடிவு செய்யும் காரியமே அல்லாமல் நம் காரியம் அல்ல. யார் மற்ற அங்கங்களுக்கு அன்பில் ஊழியக்காரனாக இருக்க வாஞ்சை கொள்கிறார்களோ, அவர்களே பெரியவர்களாய் இருப்பார்கள். ஆடுகளுக்காக தங்களது ஜீவனையே கொடுக்கும் சித்தம் உள்ளவர்களாய் இருப்பார்கள். ஆகவே ஆவிக்குரிய வரங்களை சீரத்தின் ஆசீர்வாதத்திற்கும், சீரத்திற்கும் என்று பெரிதான ஊழியம் செய்யத்தக்கதாகவும் விரும்பி நாடுவோம்.

உண்மையான சீரத்தில் தேவனே வரங்களை கொடுப்பதை ஒழுங்கு செய்கிறார். அவரே வெவ்வேறு ஊழியர்களை தகுந்த நிலையில் வைக்கிறார். நாம் அதைக் கண்டு உணர்ந்து அவருடைய ஞானத்திற்கு தலை வணங்க வேண்டும். "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும்,ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்." 1 கொரிந்தியர் 12:28

அப்போஸ்தலர்களைக் குறித்து பார்க்கும்போது, அவர்கள் 12 பேர்கள். (யூதாஸின் இடத்திற்கு தேவன் பவுலை நியமித்தார்) இவர்கள் விசேஷமாக தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக, அஸ்திபாரங்களாக, (வெளிப்படுத்தல் 21:4) தீர்க்கதரிசிகளாக (இதன் பொருளை யங்ஸ் கன்காடன்சைப் பார்க்கவும்) கர்த்தரால் வேதத்திலிருந்து புதிதும் பழையதுமான காரியங்களை சபைக்கு கொண்டுவர பயன்படுத்தப்பட்டனர். இது கண்களுக்குரிய இயல்பைக் குறிக்கின்றது. லூத்தர் அவர்கள் சில காலம் கண்களுக்குரிய பண்பிற்கு அடையாளமாக விளங்கினார். அவரை கருவியாகப் பயன்படுத்தி சீரம் விசுவாசத்தினால்

நீதிமானாகுதலின் உபதேசத்தை கண்டது. சமீப காலமாக அவர்தான் இந்த உபதேசத்திற்கான தீர்க்கதரிசியாகக் காணப்பட்டார். தீர்க்கதரிசி அல்லது உட்பொருளை வெளிப்படுத்துபவர் என்பர் - விசேஷமான போதகர் அல்லது போதகர்களுக்கெல்லாம் போதகர் . . . - இவர் மூலம் மறைவான காரியங்கள் வெளிப்படுத்தப்படும். பெயர் சபையின் தீர்க்கதரிசிகளைக் குறித்து என்ன எழுதியிருக்கிறது என்று ஏசாயா 29:10-14 பார்க்கவும்.

போதகர்களை அப்போஸ்தலர் கற்பிப்பவர்கள் எனக் குறிப்பிடுகின்றார் அல்லது இவர்கள் மந்தையிலுள்ள ஆடுகளுக்கும், ஆட்டுக்குட்டிகளுக்கும் தண்ணீர் மற்றும் அப்பம் சுமந்து சென்று போஷிக்கும் சரீரத்தின் கைகள் எனப்படுவர். இவர்கள் சரீரத்திற்கும் மற்றவர்களுக்கும் வெளியரங்கமாகவோ (அ) தனிப்பட்ட விதத்திலோ போதிப்பவர்கள்.

இந்த வரங்களிலுள்ள அந்நிய பாஷையில் பேசும் வரமானது ஓய்ந்து போய்விட்டது. ஏனெனில், அவைகளின் தேவையும் ஓய்ந்து போய் விட்டது. சபை நிறைவு என்பது முழுமை (பரிபூரணம்) அடையும்போது, அதாவது, ஒவ்வொரு அங்கமும் தான் அறிய வேண்டிய விதமாய் தன்னை அறிந்து கொள்ளும்போது - பரிபூரணமாய் - இந்த வரங்கள் சபையை ஊன்றி நிறுத்த அவசியப்படாது.

சரீரத்தின் பாத அங்கங்கள் என்பவர்கள், கண்கள் பண்புள்ளவர்கள், அதாவது சத்தியத்தைத் தெளிவாக உற்றுப் பார்த்து உணருகிறவர்களையோ, சபையை போஷிக்கவும், சுத்திகரிக்கவும் செய்யும் கைகள் பண்பு உடையவர்களையோ குறிக்காமல், தடைகளைத் தாண்டி சரீரத்தின் முழு பாரத்தைச் சுமந்து, சரீரத்தை முன்னாக தூக்கி செல்பவர்களையே குறிக்கும். இந்த பாத அங்கங்கள் பணம் மற்றும் தாலந்து உள்ளவர்களும், அவைகளை பயன்படுத்துகிறவர்களும் தானே?

சரீரம் முழுவதும் ஒருமைத்தன்மையை உணர்ந்து கொண்டு, தங்களுடைய நன்மைக்கு மாத்திரம் அல்ல, முழுசரீரத்தின் நன்மைக்காகவும் தங்களுக்கு வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்ற சிந்தையில் இந்த வரங்களை ஒவ்வொருவரும் பயன்படுத்துவார்களானால், சரீரத்தின் இக்காலத்தின் செயல்திறன், பலம் மற்றும் திடகாத்திரம் எவ்வளவு அதிகமாக இருக்கும்.

சபை அங்கங்களில் பலர் கண்கள் ஆவதற்கு ஆவல் கொள்கிறதையும், வெகுசிலரே பாதங்கள் ஆக எண்ணம் கொள்கிறார்கள் என்ற விஷயம் எவ்வளவு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது ? சிலர் கண்கள் ஆவதற்கு வருடங்கள், நாட்கள் கணக்காக தங்களையே கட்டாயப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். புதிய சத்தியம் - ஏதாவது, புதிய வெளிச்சம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற முடிவுடன் இவ்வாறு செய்கின்றனர். பலர் இப்படி தங்களையே பலவந்தப்படுத்தி ஏதோ அடைகின்றனர் - ஆனால் இந்த விதமாய் பெற்றுக் கொண்டது இருள் அல்லாமல் தெய்வீக வெளிச்சமாக எப்படி இருக்கும்? நீங்கள் கண்களாய் இருந்தால் பார்க்க வேண்டியதை நீங்கள் பார்ப்பீர்கள். எந்த பலவந்தமும் இல்லாமல், எனினும் பெரும் முயற்சி அல்லது ஆர்வம் காட்டாமல் அல்ல. நீங்கள் எதைத் தெளிவாகப் பார்க்கின்றீர்களோ அதை சரீரத்தின் மற்ற அங்கங்களும் சோதித்து தேவனுடைய வார்த்தைகளுக்கு இசைவாய் இருப்பதை நீரூபிக்க வழிவகுக்கும்.

மேலும் தங்களிடம் இல்லாத சில வரங்களை அடைய முயற்சிக்கும் சிலர், தங்களிடம் இருக்கும் வரங்களை பயன்படுத்தாமல், அதன் மூலம் சரீரத்திற்கு உதவி செய்வது குறைவு படுத்துகிறது அல்லவா? இப்படியே பவுலின் நாட்களிலும் காணப்பட்டது. அவர் தனது கைகளினால் வேலை செய்து உழைத்தார். மறைவான சத்தியங்களை வெளிப்படுத்தவும், போதிக்கவும் செய்தார். மற்ற அங்கத்தினர்கள் தங்கள் வரங்களை உபயோகிக்காததால், சரீரத்தின் மீதும், சத்தியத்தின் மீதும் உள்ள அன்பின் நிமித்தமாக அவற்றின் குறைவுகளை நிறைவு செய்யும் பொருட்டு அதிகமான சேவைகள் செய்ய பவுலை நடத்தியது. பவுல் கூடாரத் தொழில் செய்து தன் தேவைகளை சந்திக்கும் தன்மை இருந்தபோது, பாத அங்கங்கள் தங்கள் வரங்களை பயன்படுத்தாமல், இந்த பெரிதான வாய்ப்பை நழுவவிட்டனர் என்று யாரால் சொல்லக்கூடும்? தங்கள் தாலந்துகளைப் பயன்படுத்தாமல், அவைகளைக் கைவிட்டு உண்மையில்லாதவர்களாய் இருந்தும் சரீரத்திற்கு எந்த ஒரு கெடுதியான பாதிப்பும் ஏற்படவில்லை என்று யாரால் சொல்லக்கூடும்? பாத அங்கங்கள் தங்கள் வேலையை ஒழுங்காக செய்யாததால், சபை எத்தனை விலைமதிக்க முடியாத ஆலோசனைகள் மற்றும் எத்தனை சத்திய வெளிப்பாடுகள் பெறுவதை இழந்ததோ யாருக்குத் தெரியும் ? அப்போஸ்தலர் 18:3; 1 தெசலோனிக்கேயர் 2:8, 9 மற்றும் 1 கொரிந்தியர் 4:12 பார்க்கவும்.

எல்லா அங்கங்களும் கண்களாக இருப்பது தேவனுடைய ஒழுங்குகளே இல்லை என்பதை மாத்திரம் அப்போஸ்தலர் முன் வைக்காமல், அப்படி இருக்கும் பட்சத்தில் அது முன்னுக்குப்பின் முரணானதாய் காணப்படும் விதத்தில் இந்த வார்த்தைகளையும் குறிப்பிடுகின்றார். (இந்த கட்டுரையின் தலைப்பு) - சரீரம் முழுவதும் கண்ணானால். ஓர் அங்கத்தினர் மற்ற அங்கத்தினர் மீது சார்ந்து இருக்கும் தன்மை எங்கே இருக்கும்? மற்ற தேவையான பண்புகள் எங்கே இருக்கும்? இதை உணர்ந்து கொள்ளப்படும்போது, இதுவே சரீரத்தின் எல்லா அங்கத்தினர்களை ஒன்று இணைக்கிறது. இந்த சரீரத்தில் ஒவ்வொரு அங்கங்களும் அவசியம். மற்றும் ஒவ்வொருவரும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

கேள்வி என்னவென்றால், வெவ்வேறு அங்கங்களைப்பற்றி நாம் எப்படி தெரிந்து கொள்வது? நாம் பதில் அளிப்பது என்னவென்றால், வேலைக்குத் தக்கவாறு எந்த கை சீரமைப்புடன் உள்ளதோ, ஒரு குறிப்பிட்ட வேலையில் எந்த கை திறம்பட செய்ய வல்லதாய் உள்ளதோ, அதன் அடிப்படையிலேயே நீங்கள் வலது கை பயன்படுத்துபவரா அல்லது இடது கையாள்பவரா என நிர்ணயித்துக் கொள்ளலாம். (இந்த விதத்தை நாம் தெரிந்து கொள்ளலாம்) ஆகவே, "போதகர்கள்" என்றால், "போதிக்கத்

தகுதியானவர்கள்" அதாவது, சத்தியத்தை எளிமையாக வெளியிலோ அல்லது தனிப்பட்ட விதத்தில் வெளிப்படுத்த தகுதி அல்லது வரம் பெற்றவர்; "தீர்க்கதரிசி" - என்று தெளிவாக உணர்ந்து, சத்தியத்தை விளக்குபவர், கர்த்தருடைய வேதத்திலிருந்து புதிதும் பழையதுமான காரியங்கள் மற்றும் விசுவாச வீட்டாருக்கு ஏற்றக்கால பலமுள்ள ஆகாரத்தை இவர்கள் தெளிவுடனும் வலிமையுடனும் வெளிக்கொணர்வதிலிருந்து கண்டு கொள்ளலாம். ஒருவரிடம் செல்வம் என்னும் தாலந்து இருக்கும்போது, அவர் பாத அங்கம் என்று உணர்ந்து கொள்ளலாம். செல்வம் என்னும் தாலந்து - தேவன் கொடுத்த திறன் ஆகும்.

உரோமாபுரியில் உள்ள சபை அங்கங்களுக்கு இந்த வரங்களைக் குறித்து, (ரோமர் 12:3-8) எழுதும்போது, இன்னும் ஒரு காரியத்தை வலியுறுத்தியுள்ளார். "எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல" (வசனம் 4) "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளானவர்களான படியினால்" (வசனம் 6) - ஆகவே ஒவ்வொருவரும் சபையில் தங்களுக்கு நியமிக்கப்பட்ட பங்கை நிறைவேற்ற வேண்டும். இந்த வரங்களெல்லாம் தேவனால் சரீரத்தின் வெவ்வேறு அங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்றதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

நமக்கு என்ன வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என நிர்ணயிக்க நாம் முயற்சிக்கும்போது, அப்போஸ்தலர் இன்னொன்றையும் நமக்கு கூறுகின்றார். "...உங்களில் எவனாகிலும் தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின் படியே தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும்" வசனம் (ரோமர் 12:3)

இப்படித் தெளிந்த எண்ணத்துடன் தங்கள் தகுதிகள் எவ்விதமாய் கர்த்தர் அங்கீகரிக்கக்கூடியதாகவும், சரீரத்திற்கு சிறப்பாக சேவை செய்யத்தக்கதாக பயன்படுத்த வேண்டும் என்று நிச்சயிப்பது சிலரைப் பாதிக்கின்றது. அந்த சிலர் யாரென்றால், தங்கள் தாலந்துகளைப்பற்றி குறைவாக மதிப்பீடு செய்பவர்கள். மற்றும் தங்கள் நிலையைக் காட்டிலும் மேலாக எண்ணுபவர்கள். சில சரீரத்திற்கு பிரயோஜனமாகவும் தேவையுள்ளதாயும் தங்களிடத்தில் ஒரு தாலந்தும் இல்லை என்று அஞ்சுகின்றனர். மேலும் சிலர் பல தாலந்துகள் இருப்பினும் தங்களிடம் இருக்கும் மேலான தாலந்துகள் மீது கவனம் செலுத்தாமல், தங்களிடம் உள்ள குறைவான தாலந்துகளையே விதைக்க முயற்சிக்கின்றனர்.

நம்முடைய பேராவல் மற்றும் முயற்சிகள் அன்பாக இருக்க வேண்டும் என்று வெளிப்படுத்தப்பட்டப் பின்னர் தலைக்கும் சரீரத்திற்கும் என அன்பை யார் விதைத்திருக்கிறார்களோ, அவர்களுடைய அன்பு மற்றும் ஊழியத்தினிமித்தம் உயர்த்தப்படுவார்கள், இன்னும் பயன்படுத்தப்படுவார்கள். அப்போஸ்தலர் கூறுகின்றார் - "அன்பை நாடுங்கள், ஞான வரங்களையும் விரும்புங்கள் ; விசேஷமாய் தீர்க்கதரிசன வரத்தையும் விரும்புங்கள்" (1கொரிந்தியர் 14:1)

கிறிஸ்துவின் சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினர்களும் தங்களுடைய திறன்களைப் பற்றி உண்மையோடும், தெளிந்த புத்தியுடனும் நிதானித்து முடிவெடுப்பது கடமை மற்றும் சிலாக்கியம் ஆகும். அது பெருமையினால் எண்ணுவதற்கு மிஞ்சியும் செய்யப்படக்கூடாது. மாயமான தாழ்மையினால் தங்களைப் பற்றி மிகவும் கீழாக எண்ணியும் செய்யப்படக்கூடாது. இதன் மூலம் அவன் அவைகளை தளரா உழைப்புடனும், உண்மையுள்ளவனாகவும் பயன்படுத்தலாம். சுய அன்போ அல்லது பகட்டான பெருமையின் நிமித்தமாய் அல்லாமல், தலை மற்றும் சரீரத்தின் மீது உள்ள அன்பின் நிமித்தமாக தம்முடைய ஊழியம் அதிகமான பயனளிக்கக்கூடியதாக உண்மையுடன் ஆர்வம் கொள்ள வேண்டும்.

கீழே கொடுக்கப்படும் சிந்தனைகள் இரண்டு ஊக்கம் இழந்த நிலையில் உள்ளவர்களிடம் இருந்து வந்தது. இந்த இரண்டு பேரும் தாங்கள் சரீரத்தின் அங்கங்கள் இல்லை என அச்சம் கொண்டிருந்தனர் என எழுத்தின் மூலம் தெரிவித்தனர். ஏனென்றால், டவர் பத்திரிக்கையின் வெவ்வேறு எழுத்தாளர்கள் வேதத்தை முன் வைத்து சுட்டிக்காட்டும்போது, சத்தியத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் தாங்களாகவே வேதத்திலிருந்து சத்தியங்களை எடுத்து தெளிவாக உணர்ந்து கொள்ள முடியவில்லை. அதாவது, யாராவது சுட்டிக்காட்டினாலொழிய, மற்றபடி தானாகப் புரிந்து கொள்ள முடியாது. இவர்கள் தாங்கள் கண் வகுப்பினர்கள் இல்லை என்று முடிவு செய்ய வேண்டும். எனினும் கண்களின் உதவியினால் இவர்களால் சத்தியத்தை (தீர்க்கதரிசிகள்) உணர முடிகிறதால் இதுவே இவர்கள் ஒரே சரீரத்தின் மற்ற அங்கத்தினர்கள் என்பதற்கு அத்தாட்சி. நாம் அப்போஸ்தலரின் வார்த்தைகளை நினைவு கூறுவோம் - "சரீரம் முழுவதும் கண்ணானால்......" இப்படி இருந்தால் சரீரம் எப்படி முழுமையானதாகவும் நிறைவுள்ளதாகவும் இருக்க முடியும் ; சரீரம் எப்படி தன்னை அன்பில் ஊன்றிக் கட்ட முடியும் ?

சபையின் ஆரம்பக்காலக்கட்டங்களைப் பார்க்கும்போது, வெவ்வேறு இடங்களில் சிதறி காணப்பட்ட அங்கங்கள் இடையே தொடர்பு என்பது இக்காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் அரிதாக இருந்தது. இப்பொழுது நமக்கு ஒரே சரீரத்தின் அங்கங்கள் வேறு இடங்களில் சிதறப் பட்டு காணப்பட்டாலும், அவர்களோடு தொடர்பு வைக்க நமக்கு அச்சுகளும் அஞ்சல் முறைகளும் உள்ளன. இவ்வாறாக நாம் மற்ற அங்கங்களோடு தொடர்பு வைக்கும்போது, ஒழுக்கப் போதனைகளைக் கொடுக்கவும் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

முழு சரீரம் கடல்களால் பிரிக்கப்பட்டு பல தேசங்களில் காணப்பட்டாலும் இன்று தேவனுடைய பராமரிப்பினால் இன்று ஒரே பந்தியில், ஒரே மேஜையில், மேன்மையான வாக்குத்தத்தங்கள் பிதாவின் வார்த்தைகள் கொடுக்கும் ஆசீர்வாதமான 75

நம்பிக்கைகள் - மீது போஷிக்க மற்றும் கூடி பழையதும் புதியதுமான சத்தியங்கள் விசுவாச வீட்டாருக்கான ஏற்றக் கால பலமுள்ளவரை இன்று வழிவகுத்துள்ளது. இவ்வாறாக எல்லோரும் போஷிக்கப்பட்டு கிருபையிலும் அளவிலும் அன்பிலும் வளர்வது மாத்திரம் அல்லாமல் உலகத்திலுள்ள பல பாகங்களிலிருந்து வரும் கடிதங்கள் மற்றும் கட்டுரைகளிலிருந்து அநேகர் உற்சாகம் மற்றும் பலப்படுத்தப்பட்டுள்ளனர். நமது தலையின் ஆவியின் பகுதிகளான அன்பு ஒற்றுமை மற்றும் பிறர் நிலையை உணரும் தன்மையில் ஒவ்வொரு அங்கமும், மற்ற அங்கத்தினர்களோடு பிணைக்கப்பட்டு காணப்பட வேண்டும்.

இந்த விதமாக அதாவது, ஒவ்வொரு அங்கமும் மற்ற அங்கங்களுடன் ஐக்கியம் வைப்பதும், இதன் மூலம் ஒரே சரீரம் முழுமை அடையவும் தற்காக்க ஆதரிக்கும் செயல்கள் ஒவ்வொன்றும் அங்கத்தினர்களுக்கு இலாபம் ஆகவும் அநுகூலமாகவும் இருக்கும்படி கர்த்தர் நம் தலை ஒழுங்குபடுத்தி உள்ளார். ஒவ்வொரு அங்கமும் ஏதோ விதத்தில் மற்ற அங்கங்களை சார்ந்து இருப்பது அவசியம். இந்த உறவை துண்டித்து மற்றவர்களிடமிருந்து பிரிந்து காணப்பட்டு சந்தர்ப்பங்களைப் புறக்கணிக்கும் யாவரும் தங்களுக்கு கடுமையான இழப்பை உருவாக்காமல் இவைகளைச் செய்ய முடியாது. ஒவ்வொரு அங்கங்களையும் பயன்படுத்தி சரீரத்தை அறிவூட்ட ஊன்றி நிறுத்த மற்றும் மேல் நோக்கி வளர்க்க தேவன் பிரியம் கொண்டுள்ளார். யாரொருவர் இவைகளிலிருந்து பின்வாங்க எண்ணுகிறார்களோ - இவர்கள் அறிந்தோ அல்லது அறியாமலோ தேவனுடைய ஒழுங்குகளை எதிர்ப்பவர்களாகி விடுகின்றனர். ஏனென்றால், தேவன் தாமே இந்த அங்கத்தினர்களை நியமித்துள்ளார். கிறிஸ்துவின் சரீர அங்கங்களை நிலை நிறுத்த/ பக்தி விருத்திப்பண்ண தேவன் பிரியம் கொண்டுள்ளார். இவ்வாறாக, "அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்." (வெளிப்படுத்தல் 19:7)

இந்த வரங்கள் விட்டுக் கொடுக்க முடியாதவைகள் என்று நாம் எண்ணக்கூடாது. இதில் நாம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். இந்த வரங்களை பயன்படுத்துவதை நாம் புறக்கணித்தால் அல்லது தவறாகப் பயன்படுத்தினால் இவைகளை இழக்க நேரிடும். ஓர் அங்கத்தினர் இந்த வரங்களைப் பயன்படுத்தத் தவறினால், கர்த்தருடைய மகிமைக்கென்றும் சரீரத்தின் நன்மைக்கென்றும் பயன்படுத்தத் தவறினால், பெருமையினால் சுயமகிமைக்காக பயன்படுத்த முயற்சித்தால் அவனுடைய இடம் வேறு ஒருவரால் நிரப்பப்படும். வேறு ஒருவர் இந்த இடத்திற்கு உயர்த்தப்படுவார். பயன்படுத்தாதவரிடம் இருந்து உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும். மத்தேயு 25:14-30

"சரீரம் முழுவதும் கண்ணானால் - அவையெல்லாம் ஒரே அவயமாய் இருந்தால், சரீரம் எங்கே?" 1 கொரிந்தியர் 12:17, 19.

---------------------------------

# பஸ்கா இராப்போஜனம்

முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டதற்கேற்ப கர்த்தருடைய இராப்போஜனமானது, அதன் ஆண்டு நிறைவு நாளில், மார்ச் 29-ஆம் தேதி மாலையன்று ஆசரிக்கப்பட்டது. இதுவரையிலும் நாங்கள் பெற்றுக்கொண்ட கடிதங்கள் மற்றும் அஞ்சல் அட்டைகள் மூலம், அந்நிகழ்வானது, பரவலாய் ஆழமான ஈடுபாடு கொண்டுள்ள அனைத்துத் திசைகளிலுமுள்ள நம்முடைய வாசகர்களால் ஆசரிக்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி நாங்கள் இதுவரையிலும் தகவல் பெற்றுக்கொள்ளாதவர்கள் அநேகராலும்கூட ஆசரிக்கப்பட்டிருக்கும் என்றும் நிதானிக்கின்றோம். சில இடங்களில் திரளானவர்களும், சில இடங்களில் இரண்டு (அ) மூன்று பேரும், சில இடங்களில் ஒருவர் தனிமையிலும் ஆசரித்திருக்கின்றனர். நாங்கள் அறிந்துகொண்டதுவரையிலும் இவர்கள் அனைவருக்கும், அலிகெனி பட்டணத்திலுள்ள (Allegheny City) எங்களுக்குக் காணப்பட்டதுபோலவே அது மிகவும் விலையேறப்பெற்ற காலப்பகுதியாய் இருந்துள்ளது.

இங்கு வழக்கமான "மேல்வீட்டறையில்" சுமார் நூறு பேர்கூடி, நமக்கான ஈடுபலியினை, நம்முடைய மீட்பருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்குமான அடையாள சின்னங்களில் பங்கெடுப்பதன் வாயிலாக நினைவுகூர்ந்து, ஆசரித்தோம். நியூயார்க் (New York), மேற்கு வெர்ஜீனியா (West Virginia) மற்றும் பென்சில்வேனியாவின் (Pennsylvania) பல்வேறு பகுதிகளிலிருந்து எட்டுச் சகோதர சகோதரிகள் எங்களோடுகூடக் காணப்பட்டனர் மற்றும் நினைவுகூருதல் ஆசரிப்பதற்கு முன்னதாக நாங்கள் ஒன்றுகூடி ஓர் இனிமையான உரையாடல் கொண்டிருந்தோம்; இதில் எங்களுடைய இருதயங்களானது, நமது பிதாவினுடைய நற்பண்புகள், பராமரிப்பு மற்றும் அன்பு குறித்த நினைவுகூருதல்களால் புத்துணர்வு அடைந்தது. மற்ற விஷயங்களோடுகூட, தேவன் நமக்குத் தம்முடைய திட்டங்களை அதிகமதிகமாய் வெளிப்படுத்திக் கொண்டிருப்பது என்பது தேவனுடனான நம்முடைய உறவிற்கும், நம்முடைய புத்திரத்துவத்திற்குமான சான்றுகளில் ஒன்று என்று (உரையாடலில்) கவனத்தில் கொண்டோம். இது தொடர்பாகவும், இதற்கு ஆதாரமாகவும், "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" என்ற இயேசுவின் வார்த்தைகளானது நினைவுக்கு வந்தது. (யோவான் 15:15)

மணி 8:30 ஆனபோது, அதாவது நமது கர்த்தரினால் பஸ்கா நிறுவப்பட்டதான நேரத்திற்கு மிகவும் ஒத்த நேரம் என்று நாங்கள் கணித்திருந்த நேரம் வந்தபோது, நாங்கள் அடையாளங்களில் பங்குகொண்டோம்; முதலாவதாக அவைகளின் அர்த்தத்தினைச் சுருக்கமாகப் பார்த்தோம். அனைவருடைய நலன் கருதி, நாங்கள் அப்போது பார்த்தவைகளைச் சுருக்கமாய் மறுபடியும் இங்குப் பதிவு செய்கின்றோம்.

அப்பம் தொடர்பான ஆண்டவருடைய வார்த்தைகளை நாங்கள் நினைவுகூர்ந்தோம்; அவை பின்வருமாறு: "இது (அடையாளமாக) உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது." "வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான். நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை." (யோவான் 6:53) அடையாளமான அப்பத்திலிருந்து, இயேசுவின் சரீரத்தைப்பார்த்தபோது, அதுவே உண்மையில் மெய்யான அப்பம் என்று நாங்கள் உணர்ந்துகொண்டோம். அப்பமானது வானத்திலிருந்திறங்கினது என்று சொல்லப்படுவது என்பது, அவர் பூமியிலிருந்து உண்டானவராய் இராமல், பரலோகத்தில் உண்டானவராய் இருந்தார் என்றவிதத்திலேயே ஆகும்; அவர் மாம்ச சித்தத்தினால் ஜெநிப்பிக்கப்படாமல், அவர் இடமாற்றப்பட்ட ஜீவியாக இருந்தார் என்ற விதத்திலேயே ஆகும். நம்முடைய சார்பில் மரணத்தை அனுபவிக்க வேண்டுமென்ற விசேஷித்த நோக்கத்திற்காகவும், நாம் அவரது தரித்திரத்தினாலே (அவர் தாம் பெற்றிருந்த அனைத்தையும், ஜீவனையும் கொடுத்துவிட்டார்) ஐசுவரியவான்களாகும்படிக்கும், நம்முடைய பிரதிநிதியாகிய ஆதாம் முன்பு பெற்றிருந்ததும், அவருக்கும் நமக்கும் தொலைந்து போனதுமான அனைத்தும், நம் அனைவருக்கும் திரும்பக்கொடுக்கப்படும்படிக்கும், ஐசுவரியவானாய்க் காணப்பட்ட அவர், தரித்திரரானார், கீழ்ச் சுபாவமாக்கப்பட்டார், மாம்சமாக்கப்பட்டார்.

அவர் பிட்கப்படுவதற்கான, நமக்காக அடிக்கப்படுவதற்கான அவசியமென்ன என்பதை நாங்கள் மீண்டுமாக எண்ணிப்பார்த்திட்டோம். நம்மில் நாம் ஜீவனற்றுக் காணப்பட்டதே காரணம் என்று நாங்கள் கண்டோம். மரணமானது முழுச்சந்ததியையும் விழுங்கிக்கொண்டிருக்கின்றது மற்றும்

முழுச் சந்ததியிலும் கிரியைப் பண்ணிக்கொண்டிருக்கின்றது. அனைவருமே இந்த ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட சந்ததியிலிருந்து வந்தவர்களானபடியால், எவனாலும் தன்னுடைய ஜீவனையும் காத்துக்கொள்ளவும் முடியவில்லை, தன்னுடைய சகோதரனையும் மீட்டுக்கொள்ளவும் முடியவில்லை, ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு, மரிக்கின்ற அனைவருக்கும் மற்றும் தனக்கும் தேவனிடத்தில் மீட்கும்பொருளினையும் கொடுக்க முடியவில்லை. ஆனால் மனிதனுடைய இயலாமை என்பது, தேவனுக்கான வாய்ப்பாய் இருக்கின்றது; ஒரே சுபாவத்தின் காரணமாக, ஈடுபலியைக் (சரிநிகர்சமான விலையை) கொடுக்க முடிகின்றவரும், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட ஆதாமின் சந்ததியிலிருந்து வராததினால் (பரலோகத்திலிருந்து வந்ததினால்), ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான மீட்பராகக் காணமுடிபவருமான ஒருவரை தேவன் அருளினார். ஆதாமினுடைய பாவத்தின் காரணமாக, ஏதேனிலுள்ள ஜீவ விருட்சத்தினின்று சந்ததி விலக்கப்பட்டிருக்க மற்றும் இதன் காரணமாக ஜீவிக்க முடியாது என்றிருக்க, அவர்களுக்கு இயேசுவின் வாயிலாக பரலோகத்திலிருந்து ஓர் ஈவாக ஜீவ அப்பமானது இப்பொழுது முன்வைக்கப்பட்டது; இதை ஏற்றுக்கொள்வார்களானால், இது இழந்த ஜீவனையும், ஆசீர்வாதங்களையும் அவர்களுக்குத் திரும்பக்கொடுத்திடும்.

இயேசுவே இந்த ஜீவ அப்பமாகக் காணப்பட்டாலும்கூட ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதான நம்முடைய சந்ததியிலிருந்து எவரேனும், அவரது புண்ணியங்களில் பங்கெடுப்பதற்கு முன்னதாக, அவர் பிட்கப்படுவது, பலியாகுவது அவசியமாயிருந்தது என்று நாங்கள் பார்த்தோம். முதலாம் பிரதிநிதியானவருடைய (ஆதாமினுடைய) பாவத்தின் வாயிலாக அனைவர்மேலும் வந்ததான மரணச் சாபத்தினை இரத்துச் செய்யத்தக்கதாகப் பரிபூரணமான மனிதனாகக் காணப்பட்ட அவர் தம்மையே சரிநிகர்சமான விலையாகக் கொடுத்திட்டார். இப்பொழுது செய்யப்பட வேண்டிய ஒரே காரியம் என்னவெனில், ஆதாமின் காரணமாக அழிவுக்குள் கடந்து சென்றதான ஒவ்வொருவரும் நம் சார்பிலான இயேசுவினுடைய பலியின் வாயிலாக, அவர் நமக்குப் பெற்றுவைத்திருக்கின்றதான அந்தப் பரிபூரணங்களிலும், உரிமைகளிலும் வந்து, பங்குகொண்டிட (புசித்திட) வேண்டும். விசுவாசத்தின் வாயிலாகக் கிறிஸ்துவினுடைய பரிபூரணங்களை நாம் புசிக்கின்றோம் (அ) நம்முடையதாக்கிக்கொள்கின்றோம்; அதாவது விசுவாசத்தின் வாயிலாக இயேசு நமக்கான மீட்கும்பொருளென்று உணர்ந்துகொள்கின்றோம் மற்றும் விசுவாசத்தின் வாயிலாக, இயேசு பரிபூரணமான மனிதனெனப் பெற்றிருந்ததும், நமக்காக அவர் பிட்ட (அ) பலிச்செலுத்திட்டதுமான அந்தப் புண்ணியங்களை நம்முடையதாக்கிக்கொள்கின்றோம்.

அந்தப் பலியானது அனைவருக்கும் போதுமானதாக இருப்பினும், பலியாக்கப்பட்டவரே ஜீவனளிப்பவர் என்று ஏற்றுக்கொள்வதின் மற்றும் ஒப்புக்கொள்வதின் மூலமே ஒழிய மற்றப்படி எவரும் ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியாது என்ற தேவ ஏற்பாட்டின் அருமையையும் அப்போது நாங்கள் பார்த்தோம். இக்காலத்தில் மாத்திரமல்லாமல், எதிர்க்காலத்திலும்கூட ஈடுபலியை ஒப்புக்கொள்வது என்பது ஜீவன் பெற்றுக்கொள்வதற்கு அவசியமானதாய்க் காணப்படுகின்றது. "மாம்சத்தைப் புசியாமல் இருந்தால், உங்களுக்குள்ளே ஜீவனில்லை" என்பது எப்போதும் உண்மையாய் இருக்கின்றது. கொடுக்கப்பட்டதான ஈடுபலியே, அனைத்து ஆசீர்வாதங்களுக்குமான அஸ்திபாரமாய் இருக்கின்றது என்பது எப்போதும் அடையாளங்கண்டுகொள்ளப்பட வேண்டும். "தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே, பாவங்களை நீக்குகிறவரும்", உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவ ஆட்டுக்குட்டியினுடைய பிட்கப்பட்ட சரீரத்தின் மூலமாகவும், சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாகவுமேயல்லாமல், மற்றபடி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்; ஒருவனும் அவரோடு ஒன்றாய் இருக்கவும் முடியாது.

நம்முடைய (சபையினுடைய) பாவங்கள் மாத்திரமல்லாமல், சர்வலோகத்தினுடைய பாவங்களையும் நிவிர்த்திச் செய்வதற்காகச் சிந்தப்பட்ட இரத்தத்தைக் குறித்தும் நாங்கள் பார்த்தோம்; இதன் அடையாளத்தை நாங்கள் திராட்சரசத்தில் பார்த்திட்டோம்: "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." (மத்தேயு 26:28) நாங்கள் மூன்று மாபெரும் உடன்படிக்கைகளைக் கணநேரம் பார்த்திட்டோம்; உண்மையாய் ஆசீர்வாதமாய்க் காணப்படுவதற்கும், மரித்துக்கொண்டிருக்கும் சந்ததிக்கு ஜீவன் அளிப்பதற்கும் எப்படி மோசேயின் கீழான நியாயப்பிரமாண உடன்படிக்கையானது தவறிப்போனது என்றும், ஆனால் ஈடுபலியின் காரணமாக, எப்படிப் புது உடன்படிக்கையானது மேலானதாகக் காணப்பட்டு, பூமியின் குடிகள் அனைத்திற்குமான ஆசீர்வதிக்கும் (திரும்பக்கொடுத்தல்) பணியினை நிறைவேற்றிடும் என்றும் நாங்கள் பார்த்தோம். இப்படியாக அவரது இரத்தமானது, பலியாக்கப்பட அவருடைய ஜீவனானது, அனைவரையும் மீட்டுக்கொண்ட ஈடுபலியாய் இருக்கின்றது என்றும், அவர்களுக்கான திரும்பக்கொடுத்தலைச் சாத்தியமாக்கிற்று என்றும், இது புது உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துகின்றதான உடன்படிக்கையின் இரத்தமாய், முத்திரித்தலாய், உறுதிச் செய்கிறதாய்க் காணப்படுகின்றது என்றும் நாங்கள் பார்த்திட்டோம்.

பிதாவிடத்திற்குக் கிட்டிச்சேர்வதற்கு நமக்கு அனுமதி வழங்கிட்ட இவ்வளவு இலவசமாய்ச் சிந்தப்பட்ட இரத்தத்தில் நாங்கள் களிகூர்ந்தோம்; மற்றும் இரத்தத்தினைக் குறித்துப் பெரிதாய் எண்ணிக்கொள்ளாதவர்களிலும், "உடன்படிக்கையின் இரத்தத்தினை" சாதாரணமானது என்று எண்ணுகிறவர்களிலும், அந்த விலையேறப்பெற்ற பலியில் வெளிப்படுகின்றதான தேவனுடைய தயவின் ஆவியை இழிவுப்படுத்துபவர்களிலும் ஒருவராய் ஒருபோதும் காணப்பட்டுவிடாதபடிக்கு நாங்கள் தீர்மானித்துக்கொண்டோம். (எபிரெயர் 10:16-21 மற்றும் 26-31 வரையிலான வசனங்களைப் பார்க்கவும்).

இவைகளையெல்லாம் இயேசுவை அடையாளப்படுத்துகின்றதான அப்பத்திலும், திராட்சரசத்திலும் பார்த்தப் பிற்பாடு, அப்போஸ்தலனுடைய வார்த்தைகள் (1 கொரிந்தியர் 10:16, 17) வாயிலாக இந்த ஏற்பாட்டில் காணப்படுகின்றதான இன்னும் மற்றுமொரு அர்த்தத்தினைப்பார்த்தோம். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா!" (திருவிவிலியம்). அவர் கருத்தென்னவெனில்: கர்த்தர் ஸ்தோத்திரம் செலுத்தி, பிட்டு, அடையாளங்களைப் பரிமாறி இவ்விதமாய்த் தம்முடைய பலியை அடையாளப்படுத்தினபோது, இது கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களென நாம் அர்ப்பணம் பண்ணி, நமது தலையோடுகூடப் பலியில் பிட்கப்படுகின்றோம் என்பதையும் அடையாளப்படுத்துகின்றது என்பது நம்மால் அடையாளங்கண்டுகொள்ள முடிகின்றதா? "அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (திருவிவிலியம்)

இப்படியாக அடையாளங்களைப் புசிப்பது என்பது நம்மை மீட்டுக்கொண்டதான இயேசுவின் பலியையும், அவரோடுகூட உள்ள நம்முடைய பலியையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; அதாவது, இரண்டு அர்த்தங்களை உடையதாய் இருக்கின்றது; புதுஉடன்படிக்கையினை முத்திரித்தலில் இப்பொழுது இயேசுவோடுகூடவே உள்ள நம்முடைய பங்கெடுப்பின் காரணமாக, புது உடன்படிக்கையின் பாக்கியமான ஏற்பாடுகள் யாவற்றையும் "அனைத்தையும் திரும்பக்கொடுக்கும் காலங்களில்," உலகத்திற்குக் கொண்டுவருவதற்கு, நாம் அவரோடுகூட ஏற்றக்காலங்களில் அனுமதிக்கப்படுவோம் என்பதைப் பார்த்திட்டோம். இந்த ஒரு பாடத்தினுடைய காரியங்களினால், நினைவுகளில் உண்டான மறுமலர்ச்சியானது, அவரது மகிமை வெளிப்படுத்தப்படும்போது, நாமும் மகா சந்தோஷத்துடன் மகிழ்ச்சியடையத்தக்கதாக, "கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான" தீர்மானத்தினை எங்கள் அனைவருக்குள்ளும் பெலப்படுத்தினதாய் இருந்தது மற்றும் இயேசுவோடுகூடச் சிங்காசனத்தில் அமருவதற்கான இரண்டு அப்போஸ்தலர்களுடைய வேண்டுகோளை நாங்கள் நினைவுகூர்ந்து, இதற்கான இயேசுவின் பதிலாகிய "பாத்திரத்தில் உங்களால் பானம் பண்ணக்கூடுமா?" என்ற வார்த்தைகளையும் நினைவிற்குக்கொண்டுவந்தோம். நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கின்றதான திராட்சரசம் அடையாளப்படுத்துகின்ற பாடுகள் மற்றும் மரணத்தின் பாத்திரத்தில் பங்கடைவதிலிருந்து நம்மைப் பின் தள்ளுவதற்கு ஏதுவான மாம்சம், உலகம் மற்றும் பிசாசானவனின் பல்வேறு நெருக்கங்கள் மற்றும் கவர்ச்சிகள் குறித்தும், எங்கள் சொந்த பெலவீனங்கள் குறித்தும் நாங்கள் உணர்ந்துகொண்டோம். எனினும் எங்களுடைய தலையானவரின் பெலத்தினால், எங்களால் அனைத்தையும் செய்ய முடியும் என்று நாங்கள் உணர்ந்தவர்களாக, "ஆம் கர்த்தாவே, நாங்கள் பானம் பண்ணுவோம், உம்முடைய பலத்தினால், எங்களால் கூடும்" என்றோம்; பின்னர் கர்த்தருடைய வார்த்தைகளிலிருந்து, எங்கள் ஒவ்வொருக்குமான அவரது பதிலாகிய, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்றும், "பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்," "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, அதைச் செய்வேன்" என்றுமுள்ள வார்த்தைகளைக் கேட்டோம்.

அடையாளங்களில் பங்கெடுத்தப் பிற்பாடு, நாங்கள் ஸ்தோத்திரப்பாட்டு ஒன்றைப் பாடிவிட்டு, 1852-வருடங்களுக்கு முன் நடந்திட்டதான காட்சிகளைத் தியானம் செய்தவர்களாக, அவரவர் இல்லங்களுக்குத் திரும்பினோம்; அதாவது தோட்டத்தில் நிகழ்ந்தவைகள், காட்டிக்கொடுக்கப்படுதல், ஏரோதின் சேவகர்கள், முள்ளினாலான கிரீடம், சிவப்பான இராஜ அங்கி, பிரதான ஆசாரியர்கள் மற்றும் அவர் நாட்களின் மாபெரும் மதத் தலைவர்களிடமிருந்து இயேசுவை விடுவிப்பதற்கான பிலாத்துவின் பிரயாசம், அந்த மதத் தலைவர்களுடைய தவறான கோட்பாடுகளையும், மாய்மாலங்களையும் அவர் வெளிப்படுத்தினதற்காகவும் முகாந்தரமின்றி எப்படி அவரை அவர்கள் பகைத்தார்கள் என்பவைகள் குறித்துத் தியானம் செய்தோம்; அவர் சிலுவையில் தொங்குகையில் "முடிந்தது" என்று கூறி, மரித்ததை நாங்கள் கண்டோம் மற்றும் நினைவுகூர்ந்தோம். விசுவாசத்தின் கண்களானது சூழ்நிலைகளைக் கிரகிக்க, நன்றியுடன்கூடிய அன்பினால் எங்கள் இருதயங்களானது நிரம்பி, விசுவாசத்தில் "முடிந்தது" என்றும், நாம் மீட்கப்பட்டுவிட்டோம் என்றும், நமக்கான ஈடுபலி கொடுக்கப்பட்டாயிற்று என்றும் கூறினோம். நாம் ஜீவன் பெற்றிருக்கின்றோம்,

நாம் அவரைப் புசிக்கின்றோம், நமக்காக அவர் கையளித்ததான ஜீவனையும், உரிமைகளையும் நாம் நம்முடையதாக்கிக்கொள்கின்றோம். "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" என்பதற்காக தேவனுக்கு நன்றி. இறுதியில் நம்முடைய இரட்சகரும், கர்த்தருமானவருக்கு நன்றியோடு, பின்வருமாறு பாடினோம்:

"இயேசுவினுடைய நாமத்திற்கான வல்லமையைக் குறித்து
அனைவரும் வாழ்த்துவார்களாக;
தூதர்கள் பணிந்துகொள்வார்களாக:
இராஜ கிரீடத்தைக்கொண்டு வாருங்கள்,
அனைவருக்கும் ஆண்டவரானவருக்கு முடிச்சூட்டுங்கள்."

*****

R 741/ 3/52.

# கிறிஸ்துவின் சீடன்.

ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு எனனைப்பின்பற்றக்கடவன் லூக். 9:233.

என்னுடைய சீஷனாக வந்திடுவாயா? மீண்டும் ஒருதரம் யோசித்து முடிவெடு.

சோதனைகளிலும், வேதனைகளிலும், என் கால்தடத்தைப்பின்பற்றி வந்திடுவாயா?

புகழ்ச்சியினை மகிமைதனை, சந்தோஷங்களையே எனக்காக நீ துறந்தே வந்திடுவாயா?

எனக்காக வாழ்ந்து என் நாமத்தினிமித்தமே வாழ்ந்திடுவாயா?

உலகப்பகட்டுக்காக வாழ்ந்திடாமல், மகிழ்ச்சியையும் களிப்பையும் துறந்தே வாழ்ந்திடுவாயா?

பூமியின் மேன்மைகள் விட்டே, ஆசீர்வதித்திடவே வாழ்ந்திடுலாயா?

மனிதனின் மன்னிப்புக்காகவே உன் இருதயத்தினுள்ளே கேட்டுக்கொள்ளவே முடிந்திடுமா?

அவர்களின் வாழ்வுதனின் மாற்றத்திற்காகவே நீ ஜெபம் செய்திடுவாயா?

உனக்காகக் கண்ணி வைத்து உன் விழுதலை எதிர்பார்த்துக் காத்திருக்கும்

அவர்களுக்காக நீ ஜெபித்திடுவாயா?

நான் வந்துவிட்டேன், வெளியே வா என்ற எனது குரல் நீ கேட்டிடும் வேளையில் உன்னால் எழும்பி வர இயலுமே?

உன் கண்களின் வழியே உள்ளத்தின் உவகைப் பொங்கச் செய்திடுமோ?

நான் எங்கே இருந்தாலும் உன்னால் தேடி வந்திடக் கூடுமோ?

புயலால் கொந்தளித்த கடலின் அலைகளின் மேலே எதிர்கொண்டு வந்திட உன்னால் ஆகுமோ?

உன் நண்பர்கள், பால்யகால சிநேகிதர்கள், உன் இதயத்திற்கு நெருக்கமானவர்களைவிட்டே நான் கூப்பிடும்போதினில் மகிழ்ச்சியாய் வந்து சேர்ந்திட முடியுமோ?

ஒன்றுமில்லா பூச்சிய நிலைக்கு அழைத்தாலும் என் வாக்குறுதியின்மீதே பற்றுவைத்தே ஒன்றுமில்லாமலே ஆகிடுவாயா?

நீ அன்பு செய்தவர்களைவிட்டேவிலகி எனக்காக மரணத்தை விரும்பிடுவாயா?

எனக்கு பாரமாய்த்தோன்றிய சிலுவையை எனக்காகச் சுமந்து வந்திடுவாயோ?

உன்னை பிறர் ஏற்றுக்கொள்ளாமல் எனக்காக ஒதுக்கிவிட்டாலும், எனக்குச் சீடனாய் இருந்திடுவாயா?

ஆசீர்வதிக்கப்பெற்ற இயேசுவே, மீட்பரே, மனிதனின் பலவீனங்கள் அனைத்தும் அறிந்தவரே,

நீர் பலம் எனக்குத் தந்தால் என்னால் முடியும் என்றே நான் கூறிடுவேனே.

R 748

# "காவல் கோபுரத்தின் ஒரு கண்ணோட்டம்"

## View from the TOWER

## லூக்கா 12:56-59

பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பாக கொஞ்சம் வருவோம். அப்பொழுது இயேசு, பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடன் காணப்பட்டார்; இவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களாகக் காணப்பட்டார்கள்; ஆண்டவர் முப்பது வயதைத் தாண்டினவராக இருந்தார். அப்போஸ்தலர்களுக்குக் கல்வியறிவு இருந்ததில்லை, மற்றும் இவர்களில் பெரும்பாலானோர் சாதாரணமான மீனவர்களாகவே இருந்தனர். இவர்கள், "படிப்பறியாதவர்களாகவும், பேதைமையுள்ளவர்களாகவும்" இருந்தாலுங்கூட, இவர்கள் போதனையின் மீது நம்பிக்கையும், போதிப்பதற்கான ஆற்றலையும் கொண்டிருந்தக் காரியம், இவர்களை மனுஷர்கள் மத்தியில் விசேஷித்தவர்களாய் காட்டியது; மேலும் இவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ, அங்கெல்லாம் இவர்கள், "இயேசுவோடு இருந்தவர்கள் என்று அறியப்பெற்றிருந்தனர்," காரணம் இவர்களுடைய ஆண்டவராகிய இயேசு ஒருபோதும் கல்லாதவராய் இருந்த போதிலும் அவர், "வேத எழுத்துக்களில் புலமை மிக்கவராக" காணப்பட்டார் (அப்போஸ்தலர் 4:13; யோவான் 7:15).

எனினும் இவர்கள் இராணுவ ஆளுநராகிய பிலாத்துவின் கண்களுக்கு முன்பாகவும், பிரதான ஆசாரியனுடைய கண்களுக்கு முன்பாகவும், பரிசேயர், வேதபாரகருடைய கண்களுக்கு முன்பாகவும், அந்நாளில் சட்டப்படியான பரிசுத்தத்திற்கு அப்போஸ்தலர்களெனக் காணப்பட்ட நியாயசாஸ்திரிகளுடைய கண்களுக்கு முன்பாகவும், முக்கியத்துவமற்ற சிறு கூட்டத்தாராகவே காணப்பட்டனர். "காலம் நிறைவேறியுள்ளது, தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளது" என்று கூறி, இயேசுவே, யூதர்களுக்கான இராஜா என்று அறிவிப்பதற்கெனத் தெரிந்துக்கொள்ளப்பட்ட வகுப்பாரானவர்கள், ஈர்க்கக்கூடியவர்களும் அல்ல, இன்னுமாக நீண்டகாலமாய் மேசியாவை எதிர்ப்பார்த்திருந்த வைராக்கியமுள்ள யூதர்களுடைய எதிர்ப்பார்ப்பின்படியும் காணப்படவில்லை. மேலும் யூதர்களுடைய மாபெரும் மதபோதகர்கள் போன்று இல்லாமல், முற்றிலும் மாறானவர்களாக இருந்தபடியால், யூதர்கள், இயேசுவை மேசியா என்று அடையாளம் கண்டுகொள்ளத் தவறிவிட்டனர் (மாற்கு 1:15).

மேசியாவின் வருகை தொடர்புடைய விஷயத்தில், கர்த்தருடைய தீர்க்கத்தரிசிகளினால் நீண்ட காலத்திற்கு முன்பாக உரைக்கப்பட்டிருந்த காரியங்களுக்கும், இயேசுவின் போதனைகள் மற்றும் அற்புதங்களுக்கும் இடையே இருந்த ஒற்றுமையே, இஸ்ரயேலர்களுக்கு இயேசுதான் நீண்டகாலமாய் எதிர்ப்பார்க்கப்பட்டிருந்த இராஜா என்பதற்கான ஒரே நிரூபணமாய் இருந்து; இந்த நிரூபணமானது, "அதிக உறுதியான தீர்க்கத்தரிசனங்களுக்கு" ஜாக்கிரதையாய்க் கவனித்து இருப்பவர்களுக்கும், எதை எதிர்ப்பார்க்கலாம் என்பதை அறிந்திருப்பவர்களுக்கும், இயேசு மறுதலிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்படுவார் என்பது தொடர்பாக உரைக்கப்பட்ட தீர்க்கத்தரிசனங்களைக் கருத்தில் எடுத்துக்கொள்வதற்கு மாத்திரமல்லாமல், தாழ்மையான மீனவர்கள் சூழ, சாந்தமாய் வருபவரை ஏற்றுக்கொள்வதற்கு, மனத்தாழ்மையுடன் ஆயத்தமாய் இருப்பவர்களுக்கும் மாத்திரமே நிரூபணமாய் இருக்கும்.

இயேசுவுக்கு ஞானஸ்நானம் வழங்கினவரும், அவர்மேல் தேவனுடைய பரிசுத்த ஆவி வந்து அபிஷேகிப்பதையும் பார்த்து, சாட்சியளித்தவருமாகிய, இயேசுவினுடைய உறவினனாகிய யோவான் ஸ்நானன் கூட விநோதமாய்க் காரியங்கள் நடந்து கொண்டிருப்பதைக் கண்டு மிகவும் குழப்பமடைந்தார். இயேசு அபிஷேகம் பெற்றுக்கொண்டவுடன், அவர் தம்மை வல்லமையுடனும், அதிகாரத்துடனும் வெளிப்படையாய் அறிவித்து, தம்முடன் இருப்பவர்களுக்குக் கனத்தையும், மதிப்பையும் கொண்டு வருவார் என்று யோவான் ஸ்நானன் எண்ணியிருக்கக் கூடும். ஆனால் இப்படியாகவெல்லாம் இல்லாமல், இயேசு அமைதியாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தார்; இன்னுமாக யோவான் சிறையில் போடப்பட்டிருந்த போது, இயேசு இராஜா போல் தம்முடைய வல்லமையைச் செயல்படுத்த முற்படவுமில்லை. யோவான் எதிர்ப்பார்த்தவைகளிலிருந்து, மிகவும் வேறுபட்ட விதத்தில் காரியங்கள் நடந்து கொண்டிருந்தபடியால், இயேசுதான் மேசியா என்ற யோவானுடைய விசுவாசங்கூடத் தளர ஆரம்பித்தது. இரட்சகராக இஸ்ரயேலை ஆசீர்வதிக்கவும், இஸ்ரயேல் மூலம் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கவுமுள்ள மேசியாவாக . . . "வருகிறவர் நீர்தானா (என்னைப்

போன்று நீர் ஒரு முன்னோடி மாத்திரமா) அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?" என்று யோவான், இயேசுவினிடத்தில் கேட்கும்படிச் செய்தி அனுப்புவித்தார்.

யோவானுக்கு, இயேசு கொடுத்தப் பதிலைக் கவனமாய்க் கவனிக்கவும்; கேள்விப்பட்டுக் கொண்டிருக்கும் காரியங்களை, யோவானுக்கு இயேசு நினைப்பூட்டினார்; சம்பவங்களை வைத்துக் காலங்களை யோவான் அறிந்துக்கொள்ள இயேசு எதிர்ப்பார்த்தார். "வருகிறவர் நீர்தானா அல்லது வேறொருவர் வரக்காத்திருக்க வேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்" (மத்தேயு 11:3-6).

மேசியாவைக்குறித்து வாக்களிக்கப்பட்டுள்ள காரியங்களைக் காட்டிலும், மேசியா அப்போது வந்திருக்கின்றார் என்பதற்கு நிரூபணமாக, கேள்விப்படும் சம்பவங்கள் இருப்பது என்பது ஒன்றும் குறைவானதல்ல. இயேசுவின் அற்புதங்கள் கொஞ்சம் இரகசியமாகவே செய்யப்பட்டது என்பதையும், அதே சமயத்தில் பெரிய பரப்பளவிலான இடங்களில் செய்யப்பட்டதினால், அந்த இடத்தில் காணப்படும் பெரும்பான்மையான யூதர்கள் அநேகமாக சொஸ்தப்படுத்தப்படும் நபர்களை ஒருபோதும் கண்டதில்லை என்பதையும், நாம் மறந்துவிடக் கூடாது. அற்புதங்கள் பற்றின விவரங்களைப் பரப்புவதற்கு, அவர்களுக்கு அன்று அச்சகங்களும், பத்திரிக்கை நிருபர்களும் இருக்கவில்லை.

அங்கிருந்த கல்வியறிவுயடைவர்கள், தானியேல் தீர்க்கத்தரிசனத்தை வைத்து, அந்த வேளை நிறைவேறியுள்ளது என்பதை அறிந்திருப்பார்கள் (தானியேல் 9:24-27; மாற்கு 1:15). ஆனாலும் அநேகமான ஜனங்களுக்கு இந்த நிரூபணங்கள் வேளைகளுக்கான அடையாளங்களாக மாத்திரமே இருந்தன; ஆனால் இவர்கள் மனுஷருடைய பாரம்பரியங்களினால் குருடாக்கப்பட்டபடியால், இவர்கள் உணர்ந்துக்கொள்ளவில்லை. இவர்கள் மனிதர்களைப் பின்பற்றுகிறவர்களாக ஆனபடியினால், தேவனுடைய வார்த்தைகளுக்கு மதிப்பு இல்லாமல் போயிற்று; ஆகையால் ஜனங்களும், தலைவர்களும் குருடர்களாய் இருந்தனர். குருடர்கள், குருடர்களைப் பின்தொடர்ந்து போய், இருவரும் இடறிப்போனார்கள்; இவ்வாறாக இஸ்ரயேல் ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால், "கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாகிய" தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரே ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர்.

இப்பொழுது நாம் என்ன காண்கின்றோம்? மேசியா மீண்டுமாக வந்திருக்கின்றார்; அவருடைய இரண்டாம் வருகைக்கான வேளை நிறைவேறியுள்ளது; ஆவிக்குரிய ஓர் ஜீவியாக, இயேசு வல்லமையில் வந்திருந்து, உலகத்தை அதாவது யாக்கோபின் வீட்டாரையும், பூமியின் குடிகள் அனைத்தையும் நியாயந்தீர்க்கவும், சுத்திகரிக்கவும், சொஸ்தப்படுத்தவும், ஆசீர்வதிக்கவும் எனத் தம்முடைய சரீரத்தைத் தம்முடைய நிலைமைக்கு உயர்த்தவிருக்கின்றார்.

சாட்சிகள்/நிரூபணங்கள் என்ன? நிரூபணங்கள் திரும்பத் திரும்ப, அதிகமாக இப்பத்திரிக்கையில் வெளியிடப்பட்டு வருகின்றது. கர்த்தருடைய நாள் (கிறிஸ்துவின் வந்திருத்தல் வேளை) ஆபத்துக் காலமாய் இருக்கும் என்றும், அந்நாளில் (பூமிக்குரிய அரசாங்கமும், அதிகாரங்களுக்கும் மாற்றப்படும்) வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் என்றும் தீர்க்கத்தரிசிகளின் சாட்சிக் காணப்படுகின்றது என்பதை நாம் காண்பித்தோம் (மத்தேயு 24:29; எபிரெயர் 12:27, 28; தானியேல் 2:44). இப்படியாக நடைபெறும் போது, இப்பொழுது அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டிருப்பவரின் நிமித்தமாக, பூமியின் குடிகள் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்கு வந்திருப்பவர், ஜனங்களுக்குத் தடையாகவும், ஜனங்களை ஒடுக்கியும் (அ) குருடாக்கியும் வைத்துள்ள சகல தீமையான அமைப்புகளை அசைத்துப் போடுபவர் நிமித்தமாக பூமியின் சகல கோத்திரங்களும் துக்கிக்கும். உலகில் மகாபெரியவர்களாய் இருந்தவர்கள், பூமியின் மீது வந்துக்கொண்டிருக்கும் காரியங்களைக் காண்கையில் அஞ்சுவார்கள். இவர்கள் ஜனங்கள் மத்தியில், சுதந்தரத்தின் ஆவி கிரியைச் செய்வதைக் காண்பார்கள்; மேலும் இந்த ஆவியானது ஜனங்களை வெறித்தனத்திற்குள்ளாக்கி, படுகொலைக்கான போராட்டத்திற்கு நேராக வழிநடத்தும் என்பதையும் இவர்கள் காண்கின்றனர். இன்னுமாக வரவிருக்கின்ற உபத்திரவங்களில், உலகத்தின் ஐசுவரியவான்கள் வெகுவாய்ப் பாடுபடுவார்கள் என்பதாக வேதவாக்கியங்களில் காணப்படுகின்றது

(யாக்கோபு 5:1-4). இப்படியாகவே இன்று ஐசுவரியவான்களுக்கு எதிராகவே, மனநிறைவு அடையாதவர்களின் இலட்சியங்களும், அச்சுறுத்தல்களும் காணப்படுகின்றது. இப்படியான காரியங்கள் நம்மைச் சுற்றிலும் நடைபெறுவதை நாம் காண்கின்றோம்; இவைகள் எல்லாம், நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் காலங்களுக்கான அடையாளங்களாய் இருக்கின்றது அல்லவா?

**11 பத்திகள் தவிர்க்கப்பட்டுள்ளன.**

நம்முடைய நாட்களுக்கான அடையாளங்களைக்குறித்து என்ன நினைக்கின்றீர்கள்? வானத்தின் தோற்றத்தை நிதானிக்கத் தெரிந்திருக்கும் உங்களால், எப்படி இந்த வேளையை நிதானிக்க முடியவில்லை? முதலாம் வருகையில் இருந்தவைகளைக் காட்டிலும், இரண்டாம் வந்திருத்தலுக்கான காரியங்கள் மிகத் தெளிவாய் இருக்கின்றதல்லவா? நாம் கர்த்தருடைய பிரசன்னத்தின்/வந்திருத்தலின் நாட்களில் காணப்படுகின்றோம் என்பவைகளுக்கு இவைகள் எல்லாம் திருப்திகரமான சாட்சியங்களாய் இருக்கின்றதல்லவா?

---

R761 : page 3::
R 761/3/55.

## COMING BY-AND-BY. --Sel.
## உடனுக்குடனே வருகிறதே.

மேலான நாள் ஒன்று வருகிறதே,
A better day is coming, a morning promised long,
When truth and right with holy might, shall overthrow
the wrong;

வெகுகாலமுன்பேவாக்களிக்கப்பட்ட காலை வருகிறதே,
சத்தியமும் நீதியும் பரிசுத்தமுடனே வல்லமையாய் எழும்போதினிலே,
குற்றவாளிகள்தூக்கி எறியப்படுவாரே,
யேசுகிறிஸ்து கர்த்தராகவேஒவ்வொரு துன்பத்தின் பெருமூச்சையும்
கவனித்துக்கேட்கையிலே, When Christ the Lord will listen to every plaintive
sigh,
And stretch his hand o'er sea and land, with justice
by and by.

நீதியில் தம் கரங்களையே கடலின் மீதும் நிலத்தின்மீதும் விரித்திடுவாரே,
கொடுங்கோலரின் அவமானப்படுத்தும் தற்பெருமை இனிமேலும் காற்றினில் நிரம்பிடாது,
வாலிபரும், வயோதிகரும் சத்தியம்தன்னை நேசித்தே, உலகமுழுமையும் பரப்பிடுவாரே, The boast of
haughty tyrants no more shall fill
the air,
But aged and youth shall love the truth and speed
it everywhere;

இனிஒருபோதும் தேவையினாலும்,துக்கத்தினாலும், நம்பிக்கையிழந்தோர் கதறி அழ மாட்டாரே,
போர்கள் நிறுத்தப்படுமே, பரிபூரண சமாதானம் மெல்ல மெல்லவே மலரலாகுமே, No more from want
and sorrow shall come the
hopeless cry,
But war shall cease, and perfect peace will flourish
by and by.
The tidal wave is coming, the year of jubilee,

யூபிலி ஆண்டின் வேலை ஒன்று கடலின்மேலே மேகக்கூட்டம்போலவே நடந்து வருகுதே,
கிருபையின் விடியல்நெருங்கி வருகுதே, அது உடனுக்குடனே நெருங்கி வருகுதே.
ஆந்த மகிமையின் விடியலுக்காகவே With shout and song it sweeps along, like billows
of the sea;
The jubilee of nations shall ring through earth
and sky,

நாம் ஆர்வமுடனே விழித்திருந்து காத்து ஜெபம் செய்திடுவோமே, The dawn of grace draws on
apace, 'tis coming
by and by.
Oh, for that glorious dawning we watch and wait
and pray,
Till o'er the height the morning light shall drive
the gloom away,

காலை சூரியன் எழுகையிலே உலகின் இருட்டை விரட்டிடுமே, And when the heavenly glory
shall flood the earth
and sky,
We'll bless the Lord for all his works and praise
him by and by.
பரலோகத்தின் மகிமை வெள்ளமாய் பாய்ந்து வெள்ளமாய்
கர்த்தரை நாம் அவரது எல்லா வேலைகளுக்காகவுமே போற்றித் துதித்திடுவோம், உடனுக்குடனே.

R 776/3/57

## கர்த்தாவே பேசும்

**கர்த்தாவே பேசும், உம் அடியேன் கேட்கிறேன், உம் கிருபைமிகு வார்த்தைகட்காகவே ஏங்கி நிற்கிறேன் தேவனே, இப்போது எனக்குக் கேட்கச் செய்யும்,**

"Master, speak! Thy servant heareth,
Longing for Thy gracious word,
Longing for Thy voice that cheereth;
Master, let it now be heard,

**உமக்காக நான் என் செவிகளைச் சாய்த்திருக்கிறேன்**

I am listening, Lord, for Thee;
What hast thou to say to me?
"Often through my heart is pealing
Many another voice than Thine,
Many an unwilled echo stealing

**என் இதயம் ஏகமாய்த்துடிக்கும் ஒலியினூடேபல்வேறு குரல்கள் ஒலிக்கலாகிறதே,**

From the walls of this Thy shrine.
Let thy longed-for accents fall;
Master, speak! and silence all.
"Master, speak! I cannot doubt Thee,
Thou wilt through life's pathway lead;
Saviour, Shepherd, oh, without Thee

**பல தேவையற்ற குரலொலி எதிரொலித்துத் திருடிக்கொள்கிறதே,**
**என்னுடைய இந்தஉம் ஆலயமாகிய இதயக்கதவுகளுக்குள்ளே**
**எதிர்நோக்கியிருந்திட்ட முக்கியக்குரலொலி மட்டும் விழட்டுமே,**
**தேவனே பேசும் எல்லாம் அடங்கிவிட்டனவே, அமைதி வந்துவிட்டதே,**
**தேவனே பேசும், நான் உம்மை சந்திக்கவில்லையே,**
**உம் சித்தப்படியே எம்மை வாழ்க்கையிலே வழி நடத்திடுமே,**
**இரட்சகரே, என் மேய்ப்பரே, நீர் இல்லையானால் என் வாழ்க்கை வெறுமையாகிடுமே,**
**இன்னும் நான் முழுமையான வெளிச்சததிற்காய் காத்திருக்கின்றேனே,**
**ஆழமான அன்பு, தெளிவான பார்வை,**
**உம் உண்மையான வார்த்தையின் மீதே சார்ந்திருக்க வேண்டுமே,**

Life would be a blank indeed.
Yet I seek still fuller light,
Deeper love, and clearer sight,
"Resting on the 'faithful saying,'
Trusting what Thy gospel saith,
On Thy written promise staying

**உம் சுவிசேஷம் சொல்வதையே விசுவாசிக்கவேண்டுமே,**
**உம் எழுதப்பட்ட வாக்குத்தத்தங்களின்மீதே சார்ந்திட வேண்டுமே,**
**வாழ்க்கை, இறப்பின் மீதினிலேநான் கொண்ட நம்பிக்கைகள்,**

All my hope in life and death;--
Yet I ask for more and more
From Thy love's exhaustless store.
"Master, speak! and make me ready,
As thy voice is daily heard,
With obedience glad and steady

உம் அன்பின் பெட்டகத்தினின்றே நான் இன்னும் அதிக அதிகமாகவே கேட்கிறேன்,
உம் குரலொலி தினம் தினம் கேட்கிறதே,கீழ்ப்படிதலுடனே, நிலையாகவே கேட்கிறேனே,
உம் ஒவ்வொரு வார்த்தையின்படியேயும் நடந்திடவே,
Still to follow every word.
I am listening, Lord, for Thee:
Master, speak, speak on, to me!"

நான் இன்னும் கவனித்துக்கேட்கிறேனே, ஆண்டவரே பேசும், உம் அடியான் கேட்கிறேன்.

R 786/3/58.

## அவளை விட்டு வெளியேறி உள்ளே வந்திடு.
## பேரழிவு நிகழுமுன்பே புறம்பே வந்துவிடு,

முழுமையாகவே அழித்துக்கொண்டு உருமாறிடவே வந்துவிடு,
தத்தளிப்பினின்றே வெளியேறிடு,
வறட்சியான தோல்வியினின்றே வெளிவந்துவிடு,
என்னுடைய துக்கம், எந்தனது பாரம், எந்தன் அவமானம்,
என்றெண்ணுவதினின்றே வெளியேறி வந்துவிடு,
பெயர் சொல்லக்கூட அஞ்சும் பல தீமையான காரியங்களினின்றே வெளியேறி வந்துவிடு,
என்னுடைய பாவச் செயல்கள், எந்தன் கொடுஞ்செயல்களை
கல்லறைக்குள்ளே அடக்கம் செய்தே,
பயம் மிகுந்த இருளான பாதையினின்றே விலகி வந்திடு,
மன்னித்து இளைப்பாறுதலுக்குள்ளே பிரவேசிக்கவே வந்துவிடு,
ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளும் வாரிசுரிமைக்குள்ளே வந்துவிடு,
நிலையான சமாதான நீதிநிறை ஆட்சிக்குள்ளே வந்துவிடு,
மாபெரும் முழுமையான வெளிப்பாட்டிற்குள்ளே சென்றுவிடு,
தேற்றுதலுக்குள்ளே வந்துவிடு, ஆற்றுதலுக்குள்ளே நுழைந்துவிடு,
பரிபூரண நிலையான மகிழ்ச்சிக்குள்ளே கலந்து வந்திடு,
ஆச்சர்யமான அன்பு எனக்காக எல்லாவற்றையும் கொண்டுவந்திடும்,
அதிசயமான வேலை, என்னை விடுதலை ஆக்கிவிட்டதே,
ஆச்சர்யமான நிலைப்பாடு, அதன்மீதே வந்து தங்கி தார்பரிக்கின்றதே,
அதிசயமான பரிதபிக்கும் அன்பு, வீட்டிற்குள்ளே வரவேற்கின்றதே,
தனிமையிலே, பயத்துடனே நிற்பதினின்றே வெளியேறி வந்துவிடு.
உனக்காக, சுயநலமாய் வாழ்வதினின்றே என்றென்றைக்கும் வெளியேறி வந்துவிடு,
இருதயத்தின் முரட்டாட்டத்தினின்றே, முழுமையாகவே வெளியேறிவிடு,
முரட்டுக் குறிக்கோளினின்றே,
எதையுமே நிறைவு செய்யா ஏக்கத்தினின்றே வெளியேறி வந்துவிடு,
பைத்தியக்காரத்தனமான, கசப்பான போராட்டத்தினின்றே வெளியேறி வந்துவிடு,
இதுவரை வாழ்ந்த வாழ்க்கையினின்றே வெளியே வந்திடு,
தன்னலம் என்ற சுயநலத்தினின்றே வெளியே வந்திடு,
தேவனின் மகிமை வெளிச்ச வட்டத்ததிற்குள்ளே விரைந்து வந்திடு,
அவர் சிறகுகளுக்குள்ளே பாதுகாப்பாய் வாழ்ந்திடவே விரைவாய் வந்திடு,
இரத்தத்தால் மீட்டெடுத்து சுத்தம்செய்த பரிசுத்தத்திற்குள்ளே வந்து சேர்ந்திடு,
அவரது அணைப்பிற்குள்ளே, அவர் கொடுக்கும் பரிசுத்த முத்தத்தினை
பெற்றுக்கொள்ளவே வந்து சேர்ந்திடு.
வார்த்தைகளால் வருணிக்க இயலா கழிப்பேருவகை கொள்ள வந்திடு,
முடிவற்ற அமைதிக்குள் இணைந்து வந்திடு.
சங்கீதங்கள் இசைக்கவும் ஞானப்பாட்டுக்கள் பாடவும் வந்து சேர்ந்திடு.

# எங்கள் அனுசரிப்பு
## THE PASSOVER FEAST

யூதர்களால் கைக்கொள்ளப்பட்டப் பண்டிகைக்கு முன்பு நிகழ்ந்த பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலை நாங்கள் ஆசரித்தோம். நீசான் மாதம் 14-ஆம் தேதியின் மதிய வேளையில், இயேசு மரித்தார் (இவ்வருடத்தில் அந்நாளானது ஏப்ரல் 19-ஆம் தேதி, திங்கட்கிழமையன்று, மதிய வேளையாக இருந்தது). பிரமாணத்தின்படி பஸ்கா ஆட்டுக்குட்டியானது, நீசான் மாதம் 14-ஆம் தேதியன்று அடிக்கப்பட வேண்டும்; இவ்வருடத்திலோ இக்காரியமானது ஏப்ரல் 18-ஆம் தேதியாகிய கர்த்தருடைய நாளன்று (ஞாயிற்றுக்கிழமையன்று) மாலை 6 மணிமுதல், ஏப்ரல் 19-ஆம் தேதியாகிய திங்கட்கிழமையன்று மாலை 6 மணிக்குள் ஏதாகிலும் ஒரு நேரத்தில் இடம்பெறுகின்ற காரியமாக இருக்கின்றது.

கடைசியாக கர்த்தரும் மற்றும் அப்போஸ்தலர்களும் பஸ்கா இராப்போஜனத்தை ஆசரித்தப்போது, இதை அவர்கள் "அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே," அதாவது 14-ஆம் தேதியன்று நேரமே புசித்தார்கள். நிழலான போஜனத்தைப் புசித்தப் பிற்பாடு, நினைவு அடையாளங்கள் (அ) கர்த்தருடைய இராப்போஜனமானது நிறுவப்பட்டது மற்றும் பின்னர் அவர்கள் வெளியேறி, கெத்செமனேக்கும், காய்பாவினிடத்திற்கும், ஏரோதினிடத்திற்கும் மற்றும் பிலாத்துவினிடத்திற்கும் மற்றும் கல்வாரியினிடத்திற்கும் போனார்கள்; இந்தக் கல்வாரியில் இயேசு அதே நாளின் பிற்பகலில், சிலுவையில் அறையப்பட்டு மரித்தார் மற்றும் அதே பிற்பகலிலேயே அடக்கமும் பண்ணப்பட்டார், ஏனெனில் இயேசு மரித்த அந்த நாளின், மாலை 6 மணிமுதற்கொண்டு ஆரம்பமாகும் அடுத்தநாளில், மாபெரும் பஸ்கா பண்டிகையானது துவங்கினது. (யோவான் 19:32, 33)

பஸ்கா பண்டிகையை அல்லாமல், பஸ்கா போஜனத்தையே இயேசு ஆசரித்தார் மற்றும் இதற்குப் பிற்பாடு, இந்தப் போஜனத்திற்குப்பதிலாக, அப்பத்தினாலும், திராட்சரசத்தினாலும், தம்முடைய மரணத்திற்குரிய ஒரு நினைவுகூருதலை ஏற்படுத்தி, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்."

ஆகையால் நினைவுகூருவதற்குரிய நம்முடைய அனுசரிப்பானது, இந்த வருடத்தில், ஏப்ரல் 18-ஆம் தேதியாகிய கர்த்தருடைய நாளன்று (ஞாயிற்றுக்கிழமையன்று) மாலை 8 மணியளவில் நடைபெறும். இந்தத் தருணத்தில் இங்கோ (அ) வேறு ஏதாகிலும் இடத்திலோ, கூடுமான பேர்கள் ஒன்று கூடிடுவோமாக மற்றும் தனிமையில் காணப்படுபவர்களும், "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று மீட்பரினால் இறுதி நேரங்களில் கூறப்பட்டுள்ள வார்த்தைகளுக்கு இணங்கிடுவதற்குத் தவறிட வேண்டாம் மற்றும் இதனை கட்டாயமான கடமையாக எண்ணாமல், மாறாக அன்பின் சிலாக்கியமாகக் கருதி இணங்கிடுவார்களாக.

யூதர்களால் ஆசரிக்கப்பட்ட பஸ்காபண்டிகை வாரமானது, நமக்கு உயர்வான விதத்தில் நிறைவேறுகின்றதாய் இருக்கின்றது; அது எகிப்தின் நிஜமாகிய உலகத்திலிருந்து கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையிலும், சமாதானத்திலும் மற்றும் சந்தோஷத்திலும் நிறைவேறுகின்றதாய் இருக்கின்றது. அடிமைத்தனத்திலிருந்துள்ள நம்முடைய விடுதலையானது முற்றிலும் முழுமை அடையும்போது, நாம் இன்னும் பிரம்மாண்டமான சுயாதீன நிலைமையையும் மற்றும் சந்தோஷத்தையும் உணர்ந்துகொள்கின்றவர்களாய் இருப்போம்.

- ரீபிரிண்ட்ஸ், பக்கம் 833

------------------------------

# கர்த்தருடைய இராப்போஜனம்

***"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." 1 கொரிந்தியர் 5:7, 8***

ஒவ்வொரு வருடமும் நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டுநிறைவு நாள் வருகையில், புதிய வாசகர்களுக்காகவும், இந்த விலையேறப்பெற்ற சத்தியங்களைக் கவனத்திற்குக் கொண்டுவருவதன் மூலம் நம் அனைவருடைய ஞாபகங்களைப் புத்துணர்வுபண்ணத்தக்கதாகவும், அவரது மரணத்தை நினைவுகூர்ந்து ஆசரிப்பதினுடைய ஏற்புடைமையை மீண்டும் குறிப்பிடுவது அவசியமெனத் தோன்றுகின்றது.

பஸ்கா இஸ்ரயேலர்களுடைய மிக முக்கியமான பயபக்திக்குரிய அனுசரிப்புகளில் ஒன்றாக இருந்தது மற்றும் இன்னமும் இருந்து வருகின்றது. இது நிழலான ஜனங்களென அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட "நியாயப்பிரமாணத்தினுடைய" முதலாம் அம்சமாகக் காணப்பட்டது.

இவ்வனுசரிப்பு நிறுவப்பட்ட விவரங்கள் யாத்திராகமம் 12-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. பழுதற்ற ஓர் ஆட்டுக்குட்டி அடிக்கப்பட வேண்டும்; அதன் இரத்தமானது, வீட்டு வாசலினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் தெளிக்கப்படுகின்றது மற்றும் இப்படியாக தெளிக்கப்பட்டுள்ள வீடுகளுக்குள், குடும்பத்தினர்கள் அந்த ஆட்டுக்குட்டியினுடைய மாம்சத்தை, புளிப்பில்லாத அப்பத்துடனும், கசப்பான கீரையுடனும் புசித்தார்கள். (யூதர்களுடைய முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியின்) அந்த இரவில், தெளிக்கப்பட்ட இரத்தத்தின் காரணமாகவும், ஆட்டுக்குட்டி புசிக்கப்பட்டதின் காரணமாகவும், இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்டார்கள் அல்லது எகிப்தியர்களின் முதற்பேறானவர்கள் சந்தித்திட்ட மரணத்தின் வாதையினின்று தப்புவிக்கப்பட்டார்கள். இச்சம்பவத்தின் காரணமாகவும் மற்றும் அடுத்த நாளில் இஸ்ரயேலர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று, சுதந்திரமடைந்து வெளியேறினதின் காரணமாகவும், தேவனுடைய கட்டளையின் பேரில், இஸ்ரயேலர்கள் ஒவ்வொரு வருடமும், அதன் ஆண்டு நிறைவு நாளில் அதை நினைவுகூர்ந்து ஆசரித்தார்கள். (யாத்திராகமம் 12:14)

இஸ்ரயேலர்கள் இந்த அனுசரிப்பினுடைய எழுத்துக்களை மாத்திரமே பார்த்தார்களே ஒழிய, நிழலாகிய அதன் அர்த்தத்தைப் பார்க்கவில்லை. அப்போஸ்தலனை 1 கொரிந்தியர் 5:7-ஆம் வசனத்தினுடைய வார்த்தைகளை எழுதும்படிக்கு ஏவி, அவ்வனுசரிப்பிற்குரிய அர்த்தத்திற்கான திறவுகோலை ஒருவேளை தேவனுடைய பரிசுத்த ஆவியானது, நமக்குக் கொடுக்கவில்லையெனில், நாமும் இஸ்ரயேலர்களைப்போலவே இருளில் காணப்பட்டிருப்போம். *"ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."* (1 கொரிந்தியர் 5:7)

இப்படியாக இக்காரியத்தின் மீது, பரிசுத்த ஆவியானது நமது கவனத்தைக் கொண்டுவந்த பிற்பாடு, மேலும் தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய இயேசுதான், பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நிஜம் என்பதையும், இஸ்ரயேலின் முதற்பேறானவர்களுக்கு, நிழலான ஆட்டுக்குட்டியினுடைய மரணம் அவசியமாய் இருந்ததுபோன்று, இயேசுவினுடைய மரணமானது, முதற்பேறானவர்களாகிய சபை மரணத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கு அவசியமாய் இருக்கின்றது என்பதையும் தெளிவாய்க் காண்பிக்கக்கூடிய மற்ற வேதவாக்கியங்களையும் நாம் கண்டுபிடித்தோம். இப்படியாகப் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு, நாம் இப்பொழுது தம்முடைய சீஷர்களுடன், கடைசி பஸ்காவைப் புசித்திட்ட இயேசுவின் வார்த்தைகளினிடத்திற்கும்,செயல்பாடுகளினிடத்திற்கும் கடந்துவருகின்றோம்.

தேவன் மிகவும் சரியாய்ச் செயல்படுபவர் ஆவார்; நிழலான ஆட்டுக்குட்டியானது, முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியில் அடிக்கப்பட்டக் காரியமானது, தேவனுடைய திட்டத்தில், இயேசு அதே கால வேளையில் மரிப்பார் என்ற உண்மைக்கான நிழலாக (அ) முன்னடையாளமாக இருந்தது. இயேசு தம்முடைய சீஷர்களுடன் பஸ்காவை அனுசரிக்கவும் மற்றும் அதே நாளில் உண்மையான "ஆட்டுக்குட்டியென" அடிக்கப்படவும்தக்கதாக தேவன் யூதர்கள் மத்தியில் காலக் கணக்கிடுதலை ஒழுங்குப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. (நாளினுடைய கணக்கிடுதல் விஷயத்தில், ஒரு நடுராத்தியிலிருந்து, மறு நடுராத்திரி வரை என்று இப்பொழுது காணப்படும் வழக்கத்தின்படி யூதருடைய நாள் கணக்கீடு காணப்படாமல், மாறாக மாலை ஆறு மணிக்கு ஆரம்பித்து, அடுத்துவரும் மாலை 6 மணிக்கு நிறைவடைவதாய் இருக்கின்றது). ஆகவே இயேசுவும், சீஷர்களும் பஸ்காவை சுமார் 8 மணியளவு புசித்தார்கள் மற்றும் அதே இரவில் அவர் காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் அதே நாளில்தானே மரித்தார்; இப்படியாகவே அனைத்து எழுத்துக்களும், எழுத்தின் உறுப்புகளும் நிறைவேற வேண்டியிருந்தது மற்றும் நிறைவேறவும் செய்தது.

"இதோ உன் இராஜா வருகிறார்" எனும் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றும் வண்ணமாகவும் மற்றும் அதே வேளையில் பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக அது வீட்டிற்குள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற பஸ்கா நிழலிலுள்ள அம்சத்தினை நிறைவேற்றும் வண்ணமாகவும், இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, கழுதையின்மேல் ஏறி, பட்டணத்திற்கு வந்தபோது, தாம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக அல்லது நிராகரிக்கப்படத்தக்கதாக தம்மை ஜனங்களுக்கு முன்வைத்தார். (மத்தேயு 21:4; யாத்திராகமம் 12:3)

“பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார் . . . . . . மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்” என்று நாம் வாசிக்கிற பிரகாரமாக, பஸ்காவிற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, இயேசு தம்மை இறுதியாக இஸ்ரயேல் ஜாதியாருக்கு (அ) வீட்டாருக்கு முன்வைத்தார் (யோவான் 12:1, 12, 13). அவர்களது இராஜா கழுதைக்குட்டியின் மீது ஏறி, அவர்களிடத்தில் வந்தார். அவரோ அவர்களுக்காகக் கண்ணீர்விட்டு, “இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள்” என்று கூறினார். (மத்தேயு 23:38, 39)

இயேசு பஸ்காவினுடைய உட்கருத்தை அறிந்திருந்தார், ஆனால் சீஷர்களோ அறிந்திருக்கவில்லை. இயேசு தனிமையில் காணப்பட்டார்; எவராலும் அவரைப் புரிந்துகொள்ள முடியாது; எவராலும் அவரை உற்சாக மூட்ட முடியாது. அவர் காரியங்களை சீஷர்களுக்கு விவரித்திருந்தாலுங்கூட, அவர்களால் அவரது விளக்கத்தைப் புரிந்துகொள்ளவோ (அ) உணர்ந்துகொள்ளவோ முடியாது, காரணம் அவர்கள் இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. அவர்கள் ஆதாமின் பாவத்திலிருந்து, நீதிக்கு ஏதுவாய்த் தீர்க்கப்படாதது வரையிலும், ஜெநிப்பிக்கப்படவும் முடியாது — அதாவது அவர்களை மரணத்தின் வல்லமையினின்று மீட்டுக்கொள்ளும் இரத்தத்தைச் சிந்தின அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய புண்ணியத்தினால் பாவத்திலிருந்து கடந்துபோகப்படுவது அல்லது விடுவிக்கப்பட்டதாகக் கருதப்படும் நிலைவரும் வரையிலும் அவர்கள் ஜெநிப்பிக்கப்பட முடியாது.

முன்பு ஒருவரும் கடந்து செல்லாத இடுக்கமான வழியில், இயேசு இவ்வாறு தனிமையாகக் கடந்து செல்லுகையில் — நமக்கான முன்னோடியாகவும், தலைவராகவும் அவர் இவ்வழியில் தனிமையாகக் கடந்து செல்லுகையில், அவரது இருதயமானது, சில சமயங்களில், மரணத்திற்கு ஏதுவாக மிகவும் துக்கமடைந்ததில் ஆச்சரியமடைவதற்கு ஒன்றுமில்லை. “வேளை வந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னார்.” (லூக்கா 22:14-16) உண்மையான ஆட்டுக்குட்டி அன்றைய தினமே இன்னும் கொஞ்சம் நேரம் கழித்து அடிக்கப்படுவதன் மூலமாக எப்படிப் பஸ்காவின் காரியம் நிறைவேற ஆரம்பிக்கும் என்பதைச் சீஷர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென இயேசு ஆசையாயிருந்தார்.

சீஷர்களால் கிரகித்துக்கொள்ள முடிகிற மட்டும் கிரகித்துக்கொள்ளத்தக்கதாக, இயேசு பஸ்காவின் அர்த்தம் பற்றின சத்தியத்தை வெளிப்படுத்துவதே, அவர் சீஷர்களுடன் இந்தப் பஸ்காவைப் புசிப்பதற்கு விசேஷமாக ஆசைப்பட்டதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். “அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதைவாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்;” “பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்.” (மாற்கு 14:22; லூக்கா 22:17-20)

நிழலான ஆட்டுக்குட்டியிலிருந்து, நிஜமாகிய தம்மிடத்திற்கு சீஷர்களுடைய மனங்களைத் திருப்பிடுவதும், தாம் நிறைவேற்றவிருக்கும் நியாயப்பிரமாணத்தினுடைய பஸ்காவெனும் அம்சத்தை அனுசரிப்பது இனிச் சரியாய் இருக்காது என்பதைக் காண்பிப்பதும்தான் ஆண்டவருடைய நோக்கமாய் இருந்தது என்பதில் நமக்கு ஐயமில்லை. (பஸ்காவினுடைய) ஆட்டுக்குட்டியினுடைய இடத்தில் வரும் அவரைப்பற்றின நினைவுகூருதலின் அம்சங்களாக சீஷர்களுக்கு இனி அப்பம் மற்றும் இரசம் இடம்பெறப்போகின்றது. இப்படியாகப் பார்க்கப்படும்போது, “என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்” என்ற இயேசுவின் வார்த்தைகள் ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது நிழலான விடுதலையை நினைவுகூரும் வண்ணமாக, இனிமேல் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியைக் கொல்ல வேண்டாம், மாறாக உண்மையான விடுதலைக்கு, உண்மையான கடந்துபோகுதலுக்கு ஆதாரமாய்க் காணப்படும் என்னுடைய மாம்சத்திற்கும், ஜீவனுக்கும் அடையாளமாய்க் காணப்படும் அப்பத்தையும், இரசத்தையும் பயன்படுத்துங்கள். ஆகவே என்னையும், என்னுடைய வார்த்தைகளையும் ஏற்றுக்கொள்ளுகிற யாவரும், இதுமுதற்கொண்டு, என்னை நினைவுகூரும்படிக்கு இப்படியாகச் செய்யுங்கள்” என்ற விதத்தில் இயேசுவின் வார்த்தைகள் காணப்பட்டது.

இப்படியாக இராப்போஜனத்தை, தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலாகவும், யூதர்களால் அனுசரிக்கப்பட்டு வந்த பஸ்காவிற்கு மாற்றாகவும் நமது கர்த்தர் நிறுவினார். ஏன் முதலில் இயேசு நிழலான ஆட்டுக்குட்டியைப் புசித்தார்? என்று கேட்கப்படலாம். அவர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவராக பிறந்தார் என்றும், அதன் சகல அம்சங்களையும் அவர் அனுசரிக்க வேண்டியவராக இருந்தார் என்றும் நாம்

பதிலளிக்கின்றோம். அவர் தம்முடைய சிலுவையில் நியாயப்பிரமாணத்தை அறைந்துபோட்டு, நியாயப்பிரமாணத்தை முடிவிற்குக் கொண்டுவந்துவிட்டதால், பஸ்கா அல்லது இதற்கு மாற்றாக இடம்பெறும் கர்த்தருடைய இராப்போஜனம் தொடர்புடையதான பிரமாணத்திலிருந்து நாம் விடுதலையுடையவர்களாகக் காணப்படுகின்றோம் — ஆனால் ஒவ்வொரு வருடமும் நமது கர்த்தருடைய மரணத்தின் நினைவு நாளை அனுசரிப்பதை சிலாக்கியம் எனக் கருதுபவர்களில் நாம் அடங்கினவர்களாய் இருக்கின்றோம்; "பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." (1 கொரிந்தியர் 5:7-8)

நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குரிய, மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் இந்தத் தருணமானது எப்போது (அ) ஏன் புறக்கணிக்கப்பட்டுப்போனது என்பதைக் கணிப்பது கடினமான காரியமாகும், ஆனால் சூழ்நிலைகளுக்கு ஏற்பவே புறக்கணிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. மாபெரும் போதகர் (இயேசு) நினைவுகூருதலின் விஷயத்தில் ஏதோ தவறு செய்துவிட்டார் என்றும், வருடத்திற்கு ஒருமுறை நினைவுகூருதலை அனுசரிப்பதைக் காட்டிலும், அடிக்கடி அனுசரிப்பது அனுகூலமாய் இருக்கும் என்றும் பக்திவைராக்கியமுள்ள சில போதகர்கள் எண்ணியிருப்பார்கள் என்பதிலும், இவர்கள் "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்ற வார்த்தைகள் மூலம், பவுல் நினைவுகூருதலை அடிக்கடி அனுசரித்தாலும் ஒன்றுமில்லை என்று போதித்துள்ளதாகப் புரிந்துகொண்டுள்ளனர் என்பதிலும் ஐயமில்லை (1 கொரிந்தியர் 11:26). ஆனால் நினைவுகூருதல் குறித்துப் பவுல் பேசியுள்ளவைகள் அனைத்தையும் ஜாக்கிரதையாய் ஆராய்ந்துப் பார்க்கும்போது, காரியங்களை இவர்கள் புரிந்துகொண்டுள்ளதுபோன்று அவர் சொல்லவில்லை என்பது உறுதியாகும். "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து" (1 கொரிந்தியர் 11:23). இங்கு இயேசுவினால் தெரிந்துகொள்ளப்பட்டதான நேரம், மிகவும் சரியான நேரமாக மாத்திரமாய் இராமல், நினைவுகூருதலானது அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவிலே நிறுவப்பட்டதை விசேஷித்த வெளிப்படுத்தல் மூலம் கர்த்தரிடத்திலிருந்து, பவுல் பெற்றுக்கொள்ளுமளவுக்கு, அந்த நேரம் மிகவும் சரியான நேரமாகக் காணப்பட்டது என்பதையும் கவனிக்கவும்.

கர்த்தருடைய மரணத்திற்குரிய சரியான நினைவுகூருதலை அனுசரிக்கத்தக்கதாக, சபையானது எத்தனை தரம் அந்த அப்பத்தைப் பிட்டு, அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணிட வேண்டும்? ஆண்டுதோறும் அவரது மரணத்தினுடைய நினைவு நாளில் மாத்திரமே செய்ய வேண்டும். எப்படி அமெரிக்காவிற்கான சுதந்திரமானது, வருடந்தோறும் அது சுதந்திரமடைந்த நாளாகிய ஜூலை 4-ஆம் தேதியில் கொண்டாடப்படுகின்றதோ, இப்படியான விதத்திலேயே கர்த்தருடைய நினைவுகூருதலும் அனுசரிக்கப்பட வேண்டும். (அமெரிக்காவின் சுதந்திரத்தை) ஜூலை 4-ஆம் தேதியில் கொண்டாடாமல், பொருத்தமற்ற பல்வேறு தினங்களில் சிலர் கொண்டாடிட முற்பட்டால், அது விநோதமாகவே பார்க்கப்படும். மேலும் ஜூலை 4-ஆம் தேதியைக்குறித்து "இதை நீங்கள் கொண்டாடும் போதெல்லாம், நீங்கள் தேசத்தினுடைய பிறப்பை அறிவிக்கிறவர்களாய் இருப்பீர்கள்" என்று சொல்லப்பட்டால், ஒரு வருடத்தில் அநேகம் தருணங்களில் கொண்டாடப்படுவதைக்குறித்துப் பேசப்பட்டுள்ளதாக யாரேனும் புரிந்துகொள்வார்களா? இப்படியே கர்த்தருடைய இராப்போஜனமும், அதன் ஆண்டுநிறைவு நாளில் மாத்திரமே அனுசரிக்கப்பட வேண்டும்.

ஆதித் திருச்சபையினர் கர்த்தருடைய இராப்போஜனத்தை வாரத்தினுடைய முதல்நாள்தோறும் புசித்து வந்ததைச் சுட்டிக்காட்டும் பதிவுகள், வேதவாக்கியங்களில் காணப்படுவதைத் தாங்கள் காண்பதாக சிலர் எண்ணுகின்றனர். இது ஒருவேளை உண்மையானால், இக்காரியத்தில் இதற்குமேலாக கூறிடுவதற்கு எங்களுக்கு எதுவுமில்லை என்பதே நமது பதிலாக இருந்திருக்கும்; ஆனால் இப்படியான பதிவுகள் எங்கிருக்கின்றது? இவர்கள் நமக்கு "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்" என்ற அப்போஸ்தலர் 20:7-ஆம் வசனத்தைக் காட்டுகின்றனர். ஆனால் இங்குக் கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலாகத்தான் அப்பம் பிட்கப்பட்டுள்ளது என்பதற்கான ஏதேனும் சாட்சியம் உள்ளதா? ஏன் இங்கு நடைபெற்ற காரியம் கர்த்தருடைய இராப்போஜனம் என்று குறிப்பிடப்படவில்லை மற்றும் திராட்சரசம் ஏன் தவிர்க்கப்பட்டுள்ளது? அப்பமாகிய அடையாளத்தைப்போன்று பாத்திரம் எனும் அடையாளமும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லையா? எம்மாவு என்னும் கிராமத்தில் "அவர் அப்பத்தைப் பிட்டபோது" இரண்டு சீஷர்கள் இயேசுவை அடையாளம் கண்டுகொண்டார்கள் என்பதாக எழுதப்பட்டுள்ளபடியால், அங்குப் பிட்கப்பட்டது சாதாரணமான போஜனத்திலும் மேலானது என்று யாரேனும் சொல்லக்கூடுமோ? அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தைப் புசித்தார்கள் என்று யாரேனும் சொல்லக்கூடுமோ? யாரும் இப்படியாகச் சொல்லமாட்டார்கள்.

வாரத்தின் முதல் நாளானது (அ) கர்த்தருடைய நாளானது, நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குரிய சரியான நாளாய் இருப்பதற்குப்பதிலாக மிகவும் பொருத்தமற்றதாக இருக்கின்றது. இயேசுவின் மரணத்தையும், கர்த்தருடைய இராப்போஜனம், கெத்செமனே மற்றும் கல்வாரியின் துயரமான காட்சிகளையும் நினைவுகூருவதற்குரிய ஒரு நாளாக, வாரத்தின் முதல் நாளானது ஆதிச் சபையினரால் நியமிக்கப்படுவதற்கு (அ) பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக, வாரத்தின் முதல்நாளானது, அவர்களுக்கு மகிழ்ச்சியின் நாளாகவும், களிகூருதலின் நாளாகவும் மற்றும் "கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்துள்ளார்" என்று கூறி, ஓசன்னா சாற்றுவதற்குரிய நாளாகவும் காணப்பட்டது. இதனாலேயே

இந்நாளின் பெயர் இப்படியாகக் காணப்படுகின்றது மற்றும் இதனாலேயே சபையால் இந்நாளானது தொழுதுக்கொள்வதற்கும், துதிப்பதற்குமுரிய நாளாக பொதுவாய் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

வாரத்தினுடைய முதல்நாளாகிய, கர்த்தருடைய நாள்தோறும், அப்பம் பிட்கும் வழக்கமானது, அநேகமாக சீஷர்கள் சொற்பமானவர்களாய்க் காணப்பட்டப்படியால், கர்த்தருடைய நாளில் ஒன்றுகூடுவதற்கெனச் சில சமயங்களில் நீண்ட தூரம் பிரயாணப்பட்டு வருகையில், ஒன்றுசேர்ந்து போஜனம் பண்ணுவதிலிருந்து ஆரம்பித்தக் காரியமாக இருக்க வேண்டும். இன்னும் அநேகமாக முதல் நாளில் அப்பம் பிட்கப்படும்போது, இயேசு உயிர்த்தெழுந்தப் பிற்பாடு, எப்படி அடிக்கடி முதல் நாளன்று தங்களுக்குத் தோன்றி காட்சி அளித்தார் என்பதையும், எப்படித் தாங்கள் புசித்துக்கொண்டிருக்கும்போது, இயேசு இப்படியாக தோன்றினார் என்பதையும் அவர்கள் நினைவுகூர்ந்தபோது, எண்ணங்களிலும், சிரத்தையிலும் ஏற்பட்ட ஆசீர்வாதமான ஓர் இணைதலின் காரணமாகவுங்கூட இந்த வழக்கம் ஆரம்பித்திருக்க வேண்டும். (லூக்கா 24:35)

சபையில் கர்த்தருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் கொண்டாடத்தக்கதாக, ஒரு காலத்தில் நிறுவப்பட்டிருந்த இந்த வழக்கத்தினுடைய மங்கின சுவடுகளானது, உரோமன் திருச்சபை மற்றும் ஆயர் திருச்சபைகளால் "புனித வெள்ளி" என்ற நவீன தோற்றத்தில் இன்னமும் அனுசரிக்கப்பட்டு வந்தாலும், மற்றக் கிறிஸ்தவ பிரிவுகளால் கிட்டத்தட்டக் கவனிக்கத் தவறப்பட்டுள்ளது.

காவல் கோபுரத்தின் வாசகர்களில் அநேகர், நமது கர்த்தருடைய மரணத்தின் நினைவுகூருதலை, அதன் ஆண்டு நிறைவுநாளில் அனுசரிப்பதை வழக்கமாய்க் கொண்டிருக்கின்றனர். கர்த்தருடைய மரணமானது, நிழலாகிய பஸ்காவின் இடத்தை எடுத்துக்கொள்கின்றது என்று நம்புகின்ற நாம், அந்த நாளை யூதர்களின் (அ) சந்திரன் நாள்காட்டியின்படி கணக்கிடுகின்றோம்; ஆகவே இந்நாளானது பெரும்பாலும், சூரிய நாள்காட்டியின்படி கணக்கிடப்படும் "புனித வெள்ளியின்" தியதியிலிருந்து முற்றிலும் வேறு தியதியாகவே காணப்படுகின்றது. இது ஒரே கணக்கிடுதலின்படி இருந்தாலும், துல்லியமாய் அல்ல மற்றும் உண்மையான சந்திர தேதிக்கு அருகாமையிலுள்ள வெள்ளி மற்றும் ஞாயிறு நாளினுடைய ஆசரிப்பாயிருக்கின்றது. (1886-ஆம் வருடத்தில்) இந்த வருடத்தில் கர்த்தருடைய இராப்போஜனத்தின் ஆண்டுநிறைவு நாளின் ஆசரிப்பானது, ஏப்ரல் 18-ஆம் தியதியன்று, ஞாயிறு, மாலை 8 மணிக்கு இடம்பெறும்; ஆகவே திங்கள் பிற்பகல் 3 மணியானது சிலுவை மரணத்திற்கான ஆண்டுநிறைவு நாளாய் இருக்கும்; எபிரெயர்களால் ஆசரிக்கப்படுகின்றதான பஸ்கா பண்டிகை வாரமானது அந்த நாளின் மாலை 6 மணியுடன் துவங்குகின்றது.

1 கொரிந்தியர் 11:26-ஆம் வசனத்தில் இடம்பெறும் பவுலினுடைய போதனையானது, நமது பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய மரணத்திற்கு நினைவுகூருதலாகவும் மற்றும் அவருடைய மரணத்திலுள்ள நம்முடைய பங்கடைதலுக்கு அடையாளமாகவும் காணப்படுகின்ற இந்த எளிமையான மற்றும் தாக்கத்தினை ஏற்படுத்தும் ஆசரிப்பை, நாம் கர்த்தருடைய மகிமையான வந்திருத்தலை அறிந்துகொண்ட மாத்திரத்தில், நிறுத்திவிட வேண்டும் என்பதாக காணப்படுகிறதில்லை. இவ்வாசரிப்பானது இந்த உண்மைகளை நமக்கு நினைப்பூட்டுகிறதாகவும், வருடாந்திர நினைப்பூட்டுதலாகவும், அவருடன் பலியினாலான நம்முடைய உடன்படிக்கையின் புதுப்பித்தலாகவும் காணப்படுகின்றபடியால், அவருடைய இந்தப் பிரசன்ன காலத்தில், நாம் அவருக்கு ஒப்பான மகிமையான சாயலுக்கு மறுரூபமடைவது வரையிலும் - இராஜ்யத்தில் அவரோடுகூட நவமான சந்தோஷத்தின் திராட்சரசத்தை நாம் பானம்பண்ணுவது வரையிலும் - இது ஆசரிக்கப்படுவது ஏற்றதேயாகும்.

## அடையாளங்களினுடைய அர்த்தம்

பிட்கப்பட்ட அப்பம் மற்றும் பாத்திரத்தின் அர்த்தத்தை இங்கு நாம் சுட்டிக்காண்பிப்பது, சிலருக்குப் பயனுள்ளதாய் இருக்கும்.

அப்பத்தைக்குறித்து நமது கர்த்தர் கூறினதாவது: "இது என் மாம்சம்" ஆகும்; அதாவது புளிப்பில்லாத அப்பமானது, நமக்காகப் பிட்கப்பட்ட அல்லது பலிச் செலுத்தப்பட்ட அவரது மாம்சத்தை, அவரது மனுஷீகத்தை அடையாளப்படுத்துகிறதாய் இருக்கின்றது. அவர் தம்மையே நமக்காகப் பலிச்செலுத்தாதது வரையிலும் நம்மால் நித்தியமான ஜீவனை ஒருபோதும் பெற்றுக்கொள்ளமுடியாது; அவர் சொன்னதுபோல: "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை" (யோவான் 6:53).

இயேசுவின் சரீரம் பிட்கப்பட்டதான காரியமானது, மனிதன் புசித்தால், ஒருபோதும் மரியாமல் இருக்கப்பண்ணுகின்றதான, ஜீவ அப்பத்தை அளிக்கிறதாக மாத்திரம் காணப்படாமல், இன்னுமாக அது ஜீவனுக்கு நேரான "இடுக்கமான வழியையும்" திறந்தது மற்றும் ஜீவனுக்கு நேராய் வழிநடத்துகின்றதான இடுக்கமான வழியில் நடப்பதற்கு உதவியான, ஆவிக்குரிய உணவாகிய சத்தியத்தை நாம் அடையத்தக்கதாக, முத்திரையை உடைத்தது. இப்படியாகப் பிட்கப்பட்ட அப்பமானது, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று தம்மைக்குறித்துக் கூறினவரின் பிட்கப்படுதலை அடையாளப்படுத்துவது பொருத்தமானதே என்று நாம் காண்கின்றோம் (யோவான் 14:6).

ஆகையால் பிட்கப்பட்ட அப்பத்தை நாம் புசிக்கையில் — அவர் மரித்திருக்கவில்லையெனில், அவர் நமக்காகப் பிட்கப்பட்டிருக்கவில்லையெனில், நாம் ஒருபோதும் பிதாவினிடத்திற்கு வந்திருக்க முடியாது

என்றும், நாம் என்றென்றும் ஆதாமினுடைய பாவத்தினுடைய சாபத்தின் கீழிலும், மரணத்தினுடைய நுகத்தின் கீழிலும் காணப்பட்டிருந்திருப்போம் என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மற்றுமொரு கருத்து: பயன்படுத்தப்பட்ட அப்பமானது, புளிப்பற்றதாகும். புளிப்பு என்பது கெடுக்கிற ஒன்றாக, சீரழிக்கும் ஒன்றாக இருப்பதினால், பாவத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் பாவம் மனுக்குலத்தில் கொண்டுவந்ததான சீரழிவையும், மரணத்தையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்த அடையாளமானது, நமது கர்த்தர் இயேசு பாவம் இல்லாதவராக இருந்தார் என்பதை, கறைதிறையற்ற ஆட்டுக்குட்டி என்பதை, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாய்" இருந்தார் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் ஆதாமின் சந்ததியில் வந்தவராய் இருந்திருப்பாரானால், வழக்கம்போல் ஏதோ ஒரு பூமிக்குரிய தந்தை வாயிலாக தமது ஜீவனைப் பெற்றவராக இருந்திருப்பாரானால், அவரும்கூட மற்ற மனிதர்களைப்போலவே ஆதாமின் பாவத்தினால், புளிப்பானவராய் இருந்திருப்பார்; ஆனால் அவருடைய ஜீவனானது கறைதிறை இல்லாமல், உயர்ந்த பரலோக நிலையிலிருந்து, பூமிக்குரிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலைமையில் வந்ததாய் இருந்தது; ஆகவே அவர் "வானத்திலிருந்து வந்த அப்பம்" என்று அழைக்கப்பட்டார் (யோவான் 6:41). ஆகவே தேவன் அருளியுள்ளதான தூய்மையான, புளிப்பற்ற, மாசற்ற அப்பத்தினைக்குறித்து உணர்ந்துகொள்வோமாக மற்றும் அவரைப் புசிப்போமாக; அதாவது சத்தியத்தைப் புசித்து, ஜீரணிப்பதன் வாயிலாக அவரை நாம் புசிப்போமாக; அதிலும் விசேஷமாக — விசுவாசத்தின் வாயிலாக அவரது நீதியை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுதல் எனும் சத்தியத்தைப் புசிப்போமாக; மேலும் அவரை வழியாகவும், ஜீவனாகவும் அடையாளங்கண்டுகொள்வோமாக.

இந்த நினைவுகூருதல் அடையாளங்கள் தொடர்புடையதான இன்னும் ஆழமான ஓர் அர்த்தத்தை, அப்போஸ்தலன் தெய்வீக வெளிப்படுத்துதலின் வாயிலாக தெரிவித்துள்ளார். அப்பமானது நமது கர்த்தர் இயேசுவை மாத்திரம் அடையாளப்படுத்துகின்றதாயிராமல், நாம் அவரைப் புசித்தப் பிற்பாடு (அவரது நீதியை நமக்குரியதாக்கிக்கொள்வதன் வாயிலாக நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு) நாம் அர்ப்பணத்தின் வாயிலாக, உலகத்திற்கான உணவாகிய அந்தப் பிட்கப்பட்ட ஒரே அப்பத்தின் பாகமாக, நாம் அவரோடு இணைந்தவர்களானோம் என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். (1 கொரிந்தியர் 10:16) இது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளாகிய நாம், எதிர்க்கால மகிமைகளில் அவரோடுகூட உடன் சுதந்தரர்களாகுவதற்கும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதும், பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஜீவன் வழங்குவதுமான மாபெரும் வேலையில் பங்காளிகளாகுவதற்குமுரிய நிபந்தனையாய்க் காணப்படுகின்ற கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் இப்பொழுது பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றோம் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இதே கருத்தானது, அப்போஸ்தலனால் மீண்டும் மீண்டுமாகவும், பல்வேறு அடையாளங்களினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அவை அனைத்தைக்காட்டிலும், இவ்வடையாளமே ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது தங்கள் தலையோடுகூட (கிறிஸ்துவின் சரீரமாகிய — கொலோசியர் 1:24 பார்க்கவும்) சபையே இப்பொழுது பிட்கப்படுகின்றதான "ஒரே அப்பமாக" இருக்கின்றனர். இது நமது தலையானவருடனான நமது ஐக்கியத்திற்கும், உறவிற்கும் குறிப்பிடத்தக்கதான விவரிப்பாய்க் காணப்படுகின்றது.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;" "அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 – KJV ; திருவிவிலியம்.)

'திராட்சரசமானது' நமது கர்த்தரினால் பலிச்செலுத்தப்பட்ட ஜீவனை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மரணத்தில் கையளிக்கப்பட்ட ஜீவனுக்கான அடையாளம்)" (மத்தேயு 26:27, 28).

பாவத்தின் காரணமாக ஆதாமின் சந்ததி இழந்துபோனதான ஜீவனுக்கான மீட்கும்பொருளாகக் கர்த்தர் தமது ஜீவனைக் கொடுப்பதன் மூலமே, புதிய உடன்படிக்கையின் கீழ் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் வாயிலாக மனிதர்களுக்கு ஜீவனுக்கான உரிமை கடந்துவர முடியும். (உரோமர் 5:18, 19). சிந்தப்பட்ட இரத்தமானது, "அனைவருக்குமான மீட்கும் பொருளாக" (விலையாகக்) காணப்பட்டது; இது அனைவருக்காகவும், நமது மீட்பரினாலே கொடுக்கப்பட்டதாய் இருந்தது; ஆனால் அவர் பாத்திரத்தைச் சீஷர்களிடத்தில் கொடுத்து, அதைப் பருகும்படிக்கு அவர்களிடம் கூறினதாவது, தம்முடைய பாடுகளில் அவர்கள் பங்காளிகளாகுவதற்கான அல்லது பவுல் குறிப்பிட்டுள்ளதுபோன்று "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான" அழைப்பாய்க் காணப்பட்டது (கொலோசெயர் 1:24). விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, நாமாய் முன்வந்து கிறிஸ்துவின் காரணங்களை/நோக்கங்களை ஆதரிப்பதின் வாயிலாக, அவரது பாடுகளில் பங்குகொள்வோமானால், நாம்

தேவனால் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும் மற்றும் இயேசுவின் பாடுகளில் பங்கடைபவர்களாகவும் கருதப்படுவோம் என்பதே நம்முன் வைக்கப்பட்ட காரியமாகும். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (சிந்தப்பட்ட இரத்தம் — மரணம்) பங்குகொள்ளுதல் அல்லவா?" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்). "பாத்திரத்தினுடைய" மதிப்பினை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாக, கிறிஸ்துவோடுகூட, அவரது பாடுகள் மற்றும் அவமானத்தின் "பாத்திரத்தில்" பங்குகொள்வதற்கான வாய்ப்பிற்காக, தேவனை ஸ்தோத்திரிப்போமாக; இப்படியானவர்கள் அனைவரும், அவரோடுகூட மகிமைப்படுத்தப்படுவர் என்ற நிச்சயமும் கொண்டிருக்கலாம். (உரோமர் 8:17).

பாத்திரமானது அவரது அவமானத்தில் நமது பங்குகொள்ளுதலையும், அவரது பலியில் நமது பங்குகொள்ளுதலையும், அதாவது நமது மனுஷீகத்தின் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில், நமது கர்த்தரும், பாத்திரத்திற்கு இந்த அர்த்தத்தைச் சாற்றினவராய் இருந்தார். உதாரணத்திற்கு அவரது சிங்காசனத்திலுள்ள எதிர்க்கால மகிமைக்குறித்த வாக்குறுதியை அவரது சீஷர்களில் இருவர், அவரிடத்தில் கேட்டபோது, அவரோ: "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கக்கூடுமோ? என்றார். அவர்களது இருதயப்பூர்வமான உறுதிமொழியின் நிமித்தமாக, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்றார். திராட்சப்பழரசமானது, இரத்தம்/இரசம் வெளியே வருமளவுக்குத் திராட்சையைப் பிழிவதை மாத்திரம் குறிக்காமல், பிற்பாடு கடந்துவரும் புத்துணர்வையும்கூடக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; ஆகையால் "கிறிஸ்துவின் பாடுகளில்" இப்பொழுது பங்குகொள்ளும் நாம், அவரது மகிமைகளிலும், கனங்களிலும் மற்றும் அழியாமையிலும் சீக்கிரத்தில் பங்குகொள்வோம் — அதாவது இராஜ்யத்தில் அவரோடுகூடப் புதிய திராட்சரசத்தைப் பருகும்போது ஆகும்.

ஆகையால் மிகவும் அன்புக்குரியவர்களே, நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்குக் கூடுகையில் நாம் செய்கிற காரியத்தினுடைய அர்த்தத்தினை மனதிற்குக் கொண்டுவருவோமாக; அவருடைய ஜீவனால் ஊக்குவிக்கப்பட்டு, ஜீவ அப்பத்தினால் பலப்படுத்தப்பட்டுள்ள நாம், அவருடைய மரணத்திற்குள்ளாக அவரோடுகூடப் பானம் பண்ணுவோமாக மற்றும் மற்றவர்களைப் போஷிக்கத்தக்கதாக அவரோடுகூட நாம் பிட்கப்பட வேண்டும் என்று முன்பில்லாத அளவுக்கு மிகவும் உறுதியுடன் முன்னேறுவோமாக. "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" (2 தீமோத்தேயு 2:11, 12).

## யார் பங்குகொள்ளலாம்

இந்த அப்பத்திலும், இந்தப் பாத்திரத்திலும் பங்குகொள்வதற்குத் தனக்கு உரிமை இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானித்துக்கொள்ளும் காரியமானது, அவனவனிடத்தில் விடப்பட்டுள்ளது. ஒருவன் பாவங்களுக்கான மன்னிப்பிற்காக, புதிய உடன்படிக்கையின் இரத்தத்தை விசுவாசித்து, தன்னை சீஷன் என்று அறிக்கைப் பண்ணிக்கொண்டு, கர்த்தருடைய ஊழியத்திற்கென அர்ப்பணம் பண்ணினவனாகக் காணப்படுவானானால், அவனது சக சீஷர்கள் அவனது இருதயத்தை நியாயந்தீர்க்காதிருப்பார்களாக. தேவனால் மாத்திரமே இருதயத்தினைத் தெளிவாய் அறிந்துகொள்ள முடியும்.

இந்த அடையாள சின்னங்களானது, கிறிஸ்துவினுடைய மரணத்தை அடையாளப்படுத்துகின்றபடியால், இந்த அடையாளங்களில் அறியாமையிலும், அபாத்திரமான நிலைமையிலும், சரியற்ற விதத்திலும், அதாவது இந்த அடையாளங்களில் "கர்த்தருடைய சரீரம்" நமக்கான மீட்கும் பொருளாக இருப்பதை அடையாளம் கண்டுகொள்ளாத நிலையிலும் பங்குகொள்ளுதல் குறித்து நாம் அனைவரும் ஜாக்கிரதையாய் இருப்போமாக; ஏனெனில் இப்படியான நிலையில் பங்குகொள்பவன், கர்த்தரைக் கொன்றுபோட்டவர்களில் ஒருவனாக இருப்பான் மற்றும் அடையாளத்தில் அவன் "கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாய் இருப்பான்" (1 கொரிந்தியர் 11:27).

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிவானாக;" எந்த மனுஷனும் இந்த அடையாளங்களைப் புசிக்கையில், இவைகள் தனது ஜீவன் மற்றும் சிலாக்கியங்களுக்கான மீட்கும் பொருளென உணர்ந்துகொள்வானாக மற்றும் அதைப் புசிக்கையில் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுப்பதற்கும், மற்றவர்களுக்காகப் பிட்கப்படுவதற்குமெனத் தன்னை அளிக்கப்பெறுகிறவனாகுகின்றான் என்பதையும் உணர்ந்துகொள்வானாக; இல்லையேல் அவன் இப்படிப் போஜனம்பண்ணுவது என்பது அவனது மனசாட்சிக்கு முன்னிலையில், அவனது அன்றாட ஜீவியத்திற்கு — "அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்பு" வரும்படிக்கு ஏதுவாய் இருக்கும். (1 கொரிந்தியர் 11:28, 29)

நமது நீதிமானாக்கப்படுதலை மாத்திரமல்லாமல், கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் பங்குகொள்வதற்கான நமது அர்ப்பணித்தலையும் அடையாளப்படுத்துகின்றதான இந்த நினைவுகூருதலுக்குரிய அடையாள சின்னங்களைச் சரியாய் உணர்ந்துகொள்ளாததின் காரணமாக, "அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். (1 கொரிந்தியர் 11:30) இது உண்மை என்பது உறுதியே ஆகும்; இந்த

இராப்போஜனத்தில் அடையாளப்படுத்தப்படும் உண்மைகளை உணர்ந்துகொள்ளாததும், கவனிக்கத் தவறினதுமே, பெயரளவிலான திருச்சபையானது பெலவீனமாயும், வியாதிப்பட்டும், நித்திரை நிலைமையிலும் இருப்பதற்குமான காரணமாய்க் காணப்படுகின்றது. மீட்கும் பொருள் பலிக்குறித்தும், தங்கள் கர்த்தருடன் உலகத்திற்கான பலியிலும், அவருடைய பாடுகளிலும் தங்களுக்கான பங்கைக் குறித்ததுமான தெளிவான உணர்ந்துகொள்ளுதலே பரிசுத்தவான்களை முழுமையாய் விழிப்படையப் பண்ணுகிறதாகவும், பலப்படுத்துகிறதாகவும் இருக்கின்றதே ஒழிய வேறு எதுவுமில்லை. "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்." (1 கொரிந்தியர் 11:28)

*****

# பாதம் கழுவுதல்

கிழக்கத்திய நாடுகளில் பாதரட்சைகள் பயன்படுத்தப்படுவதினால், பாதங்கள் மண்ணும், புழுதியும் ஒட்டிக்கொள்ளும் விதத்தில் காணப்படுகின்ற காரணமாக, பாதங்கள் கழுவப்படுதல் என்பது வழக்கமாகச் செய்யப்படும் பழக்கமாகவும், தேவையாகவும் காணப்பட்டது. இந்தப் பணிவிடையானது மிகவும் கனமற்ற பணிவிடையாகக் கருதப்பட்டது மற்றும் குடும்பத்திற்காகவும், விருந்தினர்களுக்காகவும் இப்பணிவிடையானது கீழான பணிவிடைக்காரர்களினால் (அ) அடிமைகளினால் செய்யப்படுகின்றது.

இயேசு தம்முடைய சீஷர்கள் மத்தியில் சுயநலத்தின் ஆவி இருப்பதைக் கவனித்தார்; தம்மோடுகூட அவர்கள் பங்கடைவார்கள் என்பதாக தாம் வாக்களித்துள்ளதான இராஜ்யத்தில், தங்களில் யார் ஸ்தானத்திலும், அதிகாரத்திலும் பெரியவர்களாய் இருக்க வேண்டும் என்று அவர்கள் பண்ணின வாக்குவாதத்தின் வார்த்தைகளானது, அவரது காதுகளில் விழுந்தது. இந்த ஆவியானது எந்தளவுக்கு வளர்ந்து, பலப்படுத்தப்படுகின்றதோ, அந்த அளவுக்கு, அது அவர்களுக்கு அபாயமானது என்பதை இயேசு முன்னறிந்தவராக, இந்த ஆவியினைக் கடிந்துகொண்டார். இந்த ஆவியானது 4 முதல் 6-ஆம் நூற்றாண்டுகளின் காலங்களில் போப் மார்க்க அமைப்பில் பூ பூத்து, அதன் கசப்பான கனியைக் கொணர்ந்தது மற்றும் இந்த அசுத்தமான ஊற்றினின்று இன்னமும் பொல்லாப்புகளும், தப்பறைகளும் பாய்ந்துகொண்டே இருக்கின்றது. அவர் ஒரு சிறுபிள்ளையை எடுத்து, சீஷர்களின் நடுவில் நிறுத்தி, "நீங்கள் பிள்ளைகளைப் போல் (சூழ்ச்சியற்றவர்களாக, எளிமையானவர்களாக) ஆகாவிட்டால், நான் உங்களை அழைத்துக்கொண்டிருக்கின்றதான இராஜ்யத்திற்குப் பாத்திரமானவர்களாய் இருக்கமாட்டீர்கள்" என்றார். "அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்" (மாற்கு 10:42); "கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்;" "உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்" (மாற்கு 10:43). "உங்களில் யார் அதிகமாய்ப் பணிவிடைப் புரிகின்றார்களோ, அவரே பெரியவராய் உங்களால் அடையாளங்கண்டுகொள்ளப்பட வேண்டும். நானும் கூடப் பிரதான பணிவிடைக்காரனாய் இருக்கின்றேன், ஏனெனில் மனுஷகுமாரன் ஊழியம் கொள்ளவும் மற்றும் இவ்விதமாய்க் கனம் அடையவும் வராமல், மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். ஆகையால் நான் உங்களுக்காகச் செய்யும் பெரிய ஊழியத்தின் நிமித்தமாக, நான் உங்களுக்கு முதன்மையானவராய் இருக்கின்றேன் மற்றும் இப்படியாகவே உங்கள் மத்தியிலும் காணப்படுவதாக. எந்தளவுக்கு நீங்கள் ஒருவரிலொருவர் சுயநலமற்ற பலியுடன்கூடிய அன்பையும், ஊழியத்தையும் காண்கின்றீர்களோ, அவ்வளவாய் ஒருவரையொருவர் உயர்வாய் எண்ணிக்கொண்டு, கனப்படுத்துங்கள். இப்படியானவர்களை அவர்களது கிரியையின் நிமித்தம் மிகவும் உயர்வாய் எண்ணிக்கொள்ளுங்கள்" எனும் விதத்தில் இயேசு கூறினார். (1 தெசலோனிக்கேயர் 5:13)

ஆனால் இவைகளுக்கும் பிற்பாடு, போதகருடனும் அவரது மாதிரியின் கீழிலும் அவர்கள் மூன்றரை வருடங்கள் செலவழித்திட்ட பிற்பாடும்கூட, பெருமையின் ஆவியும்,மற்றவர்கள் மீது எஜமானாய்க் காணப்படுவதற்கும், முதன்மையானவர்கள் என்று தாங்கள் கனப்படுத்தப்பட/பாராட்டப்பட வேண்டும் என்பதற்குமான ஆசையும் இன்னமும் காணப்பட்டது; மேலும் தாம் அவர்களை விட்டுக் கடந்துபோக இருக்கையில், அவர்களோடு உள்ள கடைசி மாலை வேளையில், இந்த ஒரு பாடத்தினை அவர்களது இருதயங்களில் நிரந்தரமாய்க் காணப்படுமளவுக்குப் பதிய வைத்திட இயேசு நாடினார். ஆகையால் பஸ்கா இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, அவர் பந்தியை விட்டு எழுந்து, தம்முடைய சீஷர்களின் பாதங்களைக் கழுவுவதன் மூலமாக, மிகவும் கனமற்ற பணிவிடையை, அவர்களுக்குச் செய்தார். அவர்கள் அவருக்கோ (அ) ஒருவருக்கொருவரோ இத்தகைய பணிவிடையைச் செய்திடுவதற்கு அநேகமாக எண்ணிக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள் மற்றும் இவ்வளவு தாழ்மையில், அவர் தங்களுக்குப் பணிவிடைப் புரிவதை மறுக்க முடிந்தவர்களாயும் காணப்பட்டனர்.

இயேசு முடித்த பிற்பாடு அவர்களை நோக்கி: "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்றார் (யோவான் 13:12-17). "நான் உங்களுக்குக் கொடுத்துள்ளதான படிப்பினையை நீங்கள் புரிந்துகொள்வீர்களானால் மற்றும் உணர்ந்துகொள்வீர்களானால் மற்றும் அதைக் கைக்கொள்வீர்களானால், அதனால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள் மற்றும் என் ஊழியங்களில் உதவிப் பெற்றுக்கொள்வீர்கள் மற்றும் உங்களுக்கு ஒரு பங்கு உண்டு என்று நான் வாக்களித்துள்ளதான இராஜ்யத்திற்கு ஆயத்தமாக்கப்படுவீர்கள்" என்ற விதத்தில் கூறினார்.

அப்போஸ்தலர்கள் அநேகருடைய வாழ்க்கையை நாம் பார்க்கையிலும் மற்றும் எத்தகைய சுயத்தை வெறுத்தலுடன், தாங்கள் சக அங்கத்தினர்களாகக் காணப்படும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு, தலையாகவும், அனைவருக்கும் முதன்மையானவராகவும் இருந்தவரின் மாதிரியைப் பின்பற்றி ஊழியம் புரிந்திருக்கின்றனர் என்று பார்க்கையிலும், இப்படிப்பினையானது அதற்கே உரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதில் நமக்கு ஐயமில்லை.

"நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13:15) என்று கர்த்தர் கூறினபோது, அவர் என்ன அர்த்தத்தில் கூறினார் என்ற கேள்வி எழும்புகின்றது. கொள்கையிலும், ஒருவருக்கொருவர் ஊழியம் புரிவது தொடர்புடையதான படிப்பினையிலும் மாதிரி காணப்படுகின்றதா? அல்லது பாதங்களைக் கழுவும் சடங்கென்ற ஊழிய முறைமையில் மாதிரி காணப்படுகின்றதா? இரண்டாம் கருத்துச் சரியானது என்று யூகிப்பது என்பது, சடங்காச்சாரத்தின் கீழ், உண்மையான படிப்பினையை மறைத்துப் போடுவதாய் இருக்கும். ஒருவேளை சடங்கில்தான் மாதிரி காணப்படுகின்றதென்றால், பின்னர்ச் சடங்கினுடைய அனைத்து அம்சங்களும் கைக்கொள்ளப்பட வேண்டும்; மேல் வீட்டறை ஒன்று காணப்படவேண்டும் – இராப்போஜனம் காணப்படவேண்டும் – பாதரட்சைகள் அணியப்பட வேண்டும் – அதே விதமான வஸ்திரங்கள் அணியப்பட வேண்டும் – சீலை அரையிலே கட்டிக்கொள்ளப்பட வேண்டும். இல்லை; போதகரினால் தாழ்மையுடன் சீஷர்களுக்குப் பண்ணப்பட்ட விஷயத்திலேயே மாதிரி காணப்படுகின்றது; சடங்கில் அல்ல. உடன் அங்கத்தினர்களுக்கு மிகவும் கனமற்ற பணிவிடையைக்கூட அவர் புரிந்ததிலுள்ள மாதிரியையே நாம் பின்பற்றிட வேண்டும் மற்றும் இதை நாம் எந்தளவுக்குப் பின்பற்றுகின்றோமோ, அவ்வளவாய் ஆசீர்வதிக்கப்பட்டிருப்போம் மற்றும் அவ்வளவாய் நாம் நித்தியமான இராஜ்யத்திற்கும், தேவனுக்கு ஊழியம் புரிவதற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருப்போம்.

பாதரட்சைகள் இன்னமும் அணியப்படுகின்றதான கிழக்கத்திய நாடுகளில் இன்று வாழ்பவர்களுக்கு வேறுவிதங்களிலும், போதகரினால் பயன்படுத்தப்பட்ட விதத்திலும் மாதிரியைப் பின்பற்றிடுவதற்கான வாய்ப்பு இருக்கலாம்; மற்றும் முற்றிலும் வேறான சூழ்நிலைகளில் காணப்படுபவர்கள் "மாதிரியை" பல்லாயிரம் விதங்களில் பின்பற்றிடலாம். உடன் சீஷர்களில் சிலர் உங்கள் பட்டணத்திலும், என்னுடைய பட்டணத்திலும் வாழ்கின்றனர். அவர்களுக்கு நாம் எவ்வாறு ஊழியம் புரிந்திடலாம்? அவர்களை நாம் எப்படிப் புத்துணர்வு அடையப்பண்ணலாம்? கர்த்தருடைய "மாதிரிக்கேற்ப" நாம் அவர்களிடத்தில் எப்படி நம்முடைய அன்பையும், பரிவையும் காண்பிக்கலாம்? இந்தத் தட்பவெட்ப நிலையில் அவர்களது பாதங்களைக் கழுவுதல் ஏற்புடையதாய் இராது; இப்படிச் செய்வது என்பது அசௌகரியமாகவும், இன்பமற்றதாகவும் மற்றும் "மாதிரிக்கு" எதிரான பணிவிடையாகவும் காணப்படும். ஆனால் மற்ற விதங்களில் நம்மால் "சரீரத்திற்கு" ஊழியம் புரிந்திடலாம் மற்றும் இப்படியாய் மாதிரியை உண்மையாய்ப் பின்பற்றிடலாம். பூமிக்குரிய விஷயத்திலும், ஆவிக்குரிய விஷயத்திலும் அவர்களுக்கு ஊழியம் புரிவதற்கான நமக்கான பல்வேறு வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். நாம் வாய்ப்பிற்காகப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் மற்றும் துக்கத்தையோ, சோர்வையோ காணுகையில், நம்முடைய சகோதரனுடைய பாரங்களைத் தூக்கிவிடுவதற்கு (அ) நமது சகோதரிகளுடைய துக்கத்தைத் தேற்றுவதற்கு, நம்முடைய உதவிகரத்தினை நாம் நீட்டிடலாம்; அவர்களுக்கு ஊழியம் புரிந்திடுவதற்கான, அதாவது அடையாளப் பேச்சில் அவர்களது பாதங்களைக் கழுவிடுவதற்கான நம்முடைய வாஞ்சையை, நம்முடைய கிரியைகள் மற்றும் வார்த்தைகள் மூலம் அவர்கள் காணும்படி செய்திடலாம்.

உங்கள் உதவியை அவர்கள் கேட்பது வரையிலும் காத்துக்கொண்டிருக்காதீர்கள்; ஏனெனில் அவர்கள் எந்தளவுக்கு வளர்ந்துள்ள சீஷர்களாய்க் காணப்படுகின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் உங்கள் உதவியினைக் கெஞ்சி கேட்காதவர்களாய்க் காணப்படுவார்கள். அவர்கள் தங்கள் பாரங்களையும், சோதனைகளையும் உங்களிடத்தில் சொல்வது வரையிலும் காத்துக்கொண்டிருக்காதீர்கள், மாறாக முன்னேற்பாடுடன் பார்த்துக்கொண்டிருங்கள்; ஏனெனில் அவர்கள் எந்தளவுக்குப் போதகருடைய ஆவியைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் முறையிடாதவர்களாகக் காணப்படுவார்கள் மற்றும் "எப்போதும் சந்தோஷமாய்" - உபத்திரவத்திலும்கூடச் சந்தோஷமாய் ஜீவிப்பவர்களாய் இருப்பார்கள்.

"சரீரத்திற்கான" இத்தகைய ஊழியங்களை வெட்கப்படாமல் நாடி, சந்தோஷங்கொள்ளுங்கள் - சரீரத்திற்கான ஊழியங்கள் என்பது கர்த்தர் இயேசுவுக்கே புரியப்பட்டதாகும். பூமிக்குரிய தேவைகள் சார்ந்த ஊழியங்களைக் காட்டிலும், புதிய சிருஷ்டிகளென நாம் ஒருவருக்கொருவர் புரியும் ஊழியங்களே மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. சரீரத்தைச் சத்தியத்தினால் கழுவுதலானது - சரீரத்தை வார்த்தையினால் பரிசுத்தம் ஆக்குவதும், சுத்திகரிப்பதும் இப்பொழுது நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது. (எபேசியர் 5:26, 27) உங்கள் சக அங்கத்தினர்களுடைய விசுவாசத்தையும், ஜீவியங்களையும் சுத்திகரிக்கும் மற்றும் தூய்மைப்படுத்தும் விஷயத்தில் நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் சத்தியத்துடன், தாழ்மையாயும், அவர்களுக்கு ஊழியம் புரிய வேண்டும், அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும், ஆறுதல்படுத்த வேண்டும் மற்றும் புத்துணர்வடையச் செய்ய வேண்டும் என்ற உண்மையான வாஞ்சைகொண்டவர்களாயும் அவர்களை அணுகுகின்றீர்களா? இப்படிச் செய்கின்றீர்களானால், தொடருங்கள்; உங்கள் ஊழியத்தைச் செய்யுங்கள்; போதகரும் இப்படியாகவே செய்துள்ளார்; இதுவே அவரது மாதிரியாகும்; தொடர்ந்து செய்யுங்கள். எவ்வளவுக்கு அதிகமாய் இப்படிச் செய்கின்றீர்களோ மற்றும் அதிக நேரம் செலவழித்து, பிரயாசம் எடுத்து, சௌகரியத்தைப் பார்க்காமல், சுயத்தை வெறுத்தலுடன் செய்கின்றீர்களோ, நீங்கள் போதகருடைய பார்வையில் பெரியவர்களாகவும் மற்றும் கர்த்தர் உங்களது அன்பையும், அந்த அன்பின் ஊழியத்தையும் காண்கின்றது மற்றும் அறிந்திருக்கிறது போன்று, சரீரத்தின் அங்கத்தினர்களும் உங்களைக் காணும்போது, அறியும்போது நீங்கள் சரீரத்தில் மிகவும் கனப்படுத்தப்பட்டவர்களாகவும், பிரியத்திற்குரியவர்களாகவும் காணப்படுவீர்கள்.

இயேசுவினுடைய தலைச்சிறந்த "மாதிரியை" தொடர்ந்து பின்பற்றுங்கள்; "உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் சுத்தமாகத்தக்கதாக," கழுவுங்கள் மற்றும் ஒருவர் ஒருவரால் கழுவப்பட்டிருங்கள், மற்றும் உலகத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் தினந்தோறும் தொடர்புக்குள் வருகின்றதான அசுசிகளைச் சுத்திகரித்து, களைந்துபோடுங்கள். அனைவருக்குமான பிரதான ஊழியக்காரனும், கர்த்தருமானவர் அனைவருக்காகவும் கொடுத்திட்டதான விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியத்தினால், நீங்கள் ஏற்கெனவே அனைத்திலுமிருந்து நீதிமானாக்கப்பட்டு, சுத்தமானவர்களாகவும், பரிசுத்தமானவர்களாகவும் கருதப்படுகின்றபடியால், பழைய புளித்த மாவாகிய மாய்மாலம், பொறாமை மற்றும் சுயத்தை உயர்த்துதல் ஆகியவற்றைக் கழித்துப்போடுங்கள்.

*****

# கர்த்தருடைய இராப்போஜனம்

கர்த்தருடைய இராப்போஜனத்தின் ஆண்டு நிறைவு நாளானது, இந்த வருடத்தில் ஏப்ரல் 7-ஆம் தேதி, வியாழக்கிழமையன்று, மாலையில் வருகின்றதாய் இருக்கின்றது; மேலும் ஆதிக் கிறிஸ்தவர்களுடைய வழக்கத்திற்கு இசைவாக, அவர் நாம் ஆசரிக்கத்தக்கதாகக் கேட்டுக்கொண்ட பிரகாரமும் மற்றும் அவரால் ஆசரிக்கப்பட்ட நேரத்திலும், நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவது என்பது பாக்கியமான சிலாக்கியம் என்று ஆதிக் கிறிஸ்தவர்களைப்போன்றே நாமும் மதிக்கின்றோம். நியாயப்பிரமாணத்தின்கீழ்க் காணப்பட்டவர்களாகிய (இஸ்ரயேலர்கள்) அவருக்குள்ளான விசுவாசிகள் அனைவரையும், அவர் நியாயப்பிரமாணத்தினின்று விடுவித்திட்டாலும், அவர் "நியாயப்பிரமாணத்தின்கீழ்" காணப்பட்டார் மற்றும் அதனால் கட்டுப்படுத்தப்பட்டார். ஆகையால் அவர் யூத மாதமாகிய நீசான் 14-ஆம் தேதியன்றே சிலுவையில் அறையப்பட முடியும் (இந்த வருடம் நீசான் 14-ஆம் தேதியானது ஏப்ரல் 7-ஆம் தேதி, வியாழன் மாலை அன்று துவங்கி, 8-ஆம் தேதி, வெள்ளி மாலை 6-மணியுடன் நிறைவடைகின்றது); ஏனெனில் அவரது மரணமானது, இஸ்ரயேலின் முதற்பேறானவர்களைப் பாதுகாத்திட்ட (அ) மூடிட்ட அவர்களது வீட்டுவாசலின் நிலைக்கால்களில் தெளிக்கப்பட்டதான இரத்தத்தினைக் கொடுத்திட்ட ஆட்டுக்குட்டியினுடைய மரணத்துக்கு நிஜமாய்க் காணப்படுகின்றது. இந்த முதற்பேறானவர்களுக்குப் பதிலாக, லேவி கோத்திரமானது எடுத்துக்கொள்ளப்பட்டது (எண்ணாகமம் 3:12, 13); இவர்களிடத்திலிருந்தே வந்த ஆசாரியர்களின் பலிச் செலுத்தும் பணியினால், ஜனங்கள் அனைவரும் நீதிமானாக்கப்பட்டார்கள்.

ஆட்டுக்குட்டியானது, நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அடையாளப்படுத்துகின்றது; அதன் மரணமானது, அவருடைய மரணத்தினை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. நிழலுக்கு முற்றுமுடிய இசைவாக, அவரது தியாக மரணமானது, அதே தேதியில் நிகழ வேண்டும் மற்றும் நிகழ்ந்தது. நிழலான ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தினால் காப்பாற்றப்பட்டவர்களாகிய முதற்பேறானவர்கள், "(இயேசு) தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட, முதற்பேறானவர்களின் சபைக்கு" அடையாளமாய்க் காணப்பட்டனர். அந்த முதற்போறான இஸ்ரயேலர்கள், அதாவது பிற்பாடு ஆசாரியர்கள் ஆனவர்கள், பிரதான ஆசாரியனாகக் கர்த்தர் காணப்படுகின்றதான "இராஜரிக ஆசாரியக்கூட்டத்தினை" அடையாளப்படுத்துகின்றனர்; மேலும் இந்த அபிஷேகிக்கப்பட்ட கூட்டத்தார் தேவனோடு இசைவிற்குள் வருகின்றதான ஜனங்கள் அனைவரையும், ஆசீர்வதிப்பதற்கான தேவனுடைய கருவிகளாக இருக்கப்போகின்றனர்; இந்த ஜனங்களுக்கு, இஸ்ரயேலர்கள் அனைவரும் நிழலாய்க் காணப்படுகின்றனர். இப்படியாகப் பார்க்கும்போது, நிழலான ஆட்டுக்குட்டியினுடைய இரத்தமானது, முதலாவதாகவும், நேரடியாகவும் முதற்பேறானவர்களுக்கு மாத்திரம் செயல்படுத்தப்பட்டாலும், அது இஸ்ரயேலர் அனைவரையும் சுத்திகரித்து, பாதுகாத்தது. ஒருவேளை முதற்பேனானவர்கள் காப்பாற்றப்படவில்லையெனில், எந்த ஆசாரியக்கூட்டமும் இருந்திருக்காது; ஒருவேளை ஆசாரியக்கூட்டம் ஏதும் இல்லையெனில், எந்தப் பாவ நிவிர்த்தியும் இருந்திருக்காது. இப்படியாகவே நிஜத்திலும்கூட உள்ளது; அதாவது உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவ ஆட்டுக்குட்டியினுடைய புண்ணியமானது, சுவிசேஷ யுக இரவில் முதற்பேறானவர்களுக்கு, சபைக்கு, தெரிந்தெடுக்கப்பட்ட சிறுமந்தையினருக்கு இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாருக்கு மாத்திரமே செயல்படுத்தப்படுகின்றது மற்றும் இவர்கள் பிரதான ஆசாரியனுடைய தலைமையின்கீழ், வரவிருக்கிற யுகத்தில்,சீக்கிரத்தில் உத்தம இருதயத்தார் அனைவரையும் (உத்தம இஸ்ரயேலர்கள் அனைவரையும்) தேவனுடன் முழு இசைவிற்குள் கொண்டுவருவார்கள்.

ஆகையால் முதற்பேறான சபையார் அனைவரும், நிழலான ஜனங்கள்போன்று நிழலான ஆட்டுக்குட்டியை நினைவுகூர்ந்து, அதன் மாம்சத்தைப் புசித்ததுபோலல்லாமல், மாறாக பயபக்தியுடனும், புரிந்துகொள்ளுதலுடனும், தேவ ஆட்டுக்குட்டியாகிய, நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தை நினைவுகூர்ந்து ஆசரிப்பார்களாக. அதன் ஆண்டு நிறைவு நாளானது, ஆண்டுதோறும் வருகையில், அவரை நினைவுகூரும் வண்ணமாய் அதை ஆசரிப்போமாக; ஏனெனில் நமது பஸ்காவாகிய (ஆட்டுக்குட்டியாகிய) கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கின்றாரே; ஆகையால் (நாம் அவரது மரணத்தை மாத்திரம் நினைவுகூராமல்) பஸ்கா வார பண்டிகையினுடைய* நிஜத்தையும்கூடச் சந்தோஷமாய் ஆசரிக்கக்கடவோம். [* "பண்டிகை" என்பது, "இராப்போஜனமல்ல," மாறாக பண்டிகையானது, இராப்போஜனத்தைப் பின்தொடர்கின்றது மற்றும் முற்றிலும் வேறுபட்ட அர்த்தம் கொண்டிருக்கின்றது. யூதர்களுக்குப் பண்டிகையானது ஒருவாரமளவும் நீடித்ததாய் இருந்தது மற்றும் ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டு,

புசிக்கப்பட்ட பிற்பாடு துவங்குகின்றதாய் இருக்கின்றது. பண்டிகையின் ஆசரிப்பில், இருதயத்தினுடைய சந்தோஷமும், அனைத்து விதமான சிற்றின்பங்கள் மற்றும் புளிப்பிலிருந்து விலகியிருத்தலும் அடங்குகின்றது. பண்டிகையானது சந்தோஷமுள்ள, தூய்மையுள்ள மற்றும் பாவத்திலிருந்து (புளிப்பிலிருந்து) பிரிந்துள்ள ஜீவியத்தை – ஆட்டுக்குட்டியினுடைய முக்கியத்துவத்தை அடையாளங்கண்டு கொண்டுள்ள அனைவரும் அனுபவிக்கவிருக்கின்ற ஜீவியத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.]

"பண்டிகையானது," "இராப்போஜனமாய்" இராமல், மாறாக அதைப் பின்தொடர்கின்ற ஒன்றாகவும், முற்றிலும் வேறான அர்த்தம் உடையதாகவும் காணப்படுகின்றது. யூதர்களுடைய "பண்டிகையானது" ஒரு வாரக் காலம் நீடித்ததாய் இருந்தது; மற்றும் ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு, புசிக்கப்பட்ட பிற்பாடு துவங்கினதாய் இருந்தது. இதன் ஆசரிப்பில் இருதயத்தின் சந்தோஷமும், அனைத்து வேட்கைகள் மற்றும் புளிப்பிலிருந்து விலகுதலும் அடங்குகின்றது. இது ஆட்டுக்குட்டியினுடைய மதிப்பு முதலானவைகளை அடையாளங்கண்டுகொள்ளும் அனைவரும் அனுபவிக்கப்போகின்றதான சந்தோஷமும், தூய்மையும், பாவத்திலிருந்து (புளிப்பிலிருந்து) விலகியுமுள்ள ஜீவியத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

ஏப்ரல் 7-ஆம் தேதியன்று இரவில், நாம் "பஸ்கா பண்டிகையினை" ஆசரிப்பதில்லை. அது அதன் ஏழு நாட்கள் அடையாளப்படுத்துகின்றதுபோல நம்முடைய ஜீவியம் முழுவதும் ஆசரிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது; ஆனால் நாம் அந்தத் தேதியில் இராப்போஜனத்தை ஆசரிப்போம்; இந்த இராப்போஜனத்தில் இடம்பெறுகின்றதான அப்பமும், திராட்சரசமும், நமது மீட்பருடைய மாம்சத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

எனினும் அப்பமும், திராட்சரசமும் அடையாளங்கள் மாத்திரமே மற்றும் நாம் செய்கிறவைகள் என்னவென்று உணர்ந்துகொள்வதற்கு, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றுகூறி, நமது கர்த்தர் கட்டளையிட்டவைகளுக்கு ஏற்ப இவைகளை நாம் பயன்படுத்துகையில், இன்னும் ஆழமாய் இவைகளை நாம் பார்க்க வேண்டும். அவரது மாம்சத்திற்கு அடையாளமான அப்பத்தில் பங்கெடுப்பது என்பது, ஆதாம் மூலம் நாமும், அனைவரும் தொலைத்திட்டதும், பூரண மனிதனாக அவருக்குள் இருந்ததுமான அந்தப் பூரணங்களில் பங்கெடுத்தலை நமக்குக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. அவரது இரத்தத்திற்கு, அவரது ஜீவனுக்கு அடையாளமான திராட்சரசத்தில் பங்கெடுப்பது என்பது, ஆதாமில் இழந்துபோனதான, ஜீவிப்பதற்கான உரிமையை, மீண்டுமாய் அவர் மூலமாய், தேவனிடமிருந்து ஏற்றுக்கொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இப்படியாக அவரது மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும் அடையாளமான அப்பதையும், திராட்சரசத்தையும் புசிப்பதும், பானம்பண்ணுவதும் என்பது நமது முழுமையான நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நமக்காகக் கொடுக்கப்பட்டதான மீட்பருடைய மனுஷீக பூரணங்களையும், ஜீவனுக்கான அவரது உரிமைகளும், இப்படியாக நம்மால் இந்த அடையாளத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஈடுபலியின் விசுவாசிகள் அனைவரும் இப்படியாய் இதையும், இது கொண்டுவரும் ஆசீர்வாதங்களையும் நினைவுகூர்ந்து ஆசரிப்பதற்கான சிலாக்கியம் பெற்றவர்களாய் இருக்கின்றனர்.

ஆனால் இந்த "விசுவாசிகள்" மத்தியில், "சிறுமந்தையினர்" எனும் வகுப்பார் காணப்படுகின்றனர்; இவர்களுக்கு மேற்கூறியவைகளும், இன்னும் அதிகமாகவும் அர்த்தம் காணப்படுகின்றது. இவர்கள் தங்கள் மாபெரும் பிரதான ஆசாரியன்கீழ் தங்களை உடன் ஆசாரியர்களென அர்ப்பணம் பண்ணினவர்களாய் இருக்கின்றனர். இவர்களுக்கு இந்த அடையாளங்களானது, இவர்களை மனுஷீக ஜீவனுக்கும், அதன் உரிமைகள் அனைத்திற்கும் நீதிமானாக்கிடும் கர்த்தருடைய பலியை மாத்திரம் குறிக்காமல், அவரோடுகூடப் பலிசெலுத்துவதிலும், அவரோடுகூடப்பாடுபடுவதிலும், அவரோடுகூட மரிப்பதிலும், அவரது பலியை ஏற்றுக்கொண்டதன் வாயிலாக தாங்கள் எதற்கு நீதிமானாக்கப்பட்டார்களோ இந்த மனுஷீக உரிமைகள் மற்றும் பூரணங்கள் அனைத்தையும் பலிசெலுத்துவதிலும் தங்களை இணைத்துக்கொண்டதான தங்களது அர்ப்பணிப்பையும்கூடக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

ஆகையால் அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு அடையாளங்களானது (அப்பம் மற்றும் திராட்சரசமானது) கர்த்தருடைய பலிக்கான நினைவுகூருதல்களாக மாத்திரம் காணப்படாமல், அவருடன் பலிசெலுத்துவதற்கான தங்களது உடன்படிக்கைக்கும்; தாங்கள் நிபந்தனைகளை நிறைவேற்றி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகுவதற்கும், நமது கர்த்தரும், மீட்பரானவருடன், உடன் சுதந்தரர்களாகக் காணப்படுவதற்கும், ஜனங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பதில் அவருடன் உடன் வேலையாட்களாகக் காணப்படுவதற்கும் பாத்திரவான்காளகுவதற்கான காரியங்களுக்கும்கூட நினைவுகூருதல்களாகக் காணப்படுகின்றது.

நினைவுகூருதலின் இந்த அம்சத்தைப் பின்வரும் வார்த்தைகளைக்கூறி பவுல் நம் கவனத்திற்குக் கொண்டுவருகிறார்:"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய (அபிஷேகிக்கப்பட்ட வகுப்பார் அனைவருடைய) இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் (நமது கர்த்தரைத் தலையாகப் பெற்றிருக்கும் "சிறுமந்தையாகிய," சபை) ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான (அங்கத்தினர்களான) நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17)

இந்த யுகத்தில் விசுவாசத்தின் மூலமாக (அ) அடுத்த யுகத்தில் நிஜமாகவே அனைவரும் நமது கர்த்தர் இயேசுவின் மாம்சத்தைப் புசிக்க வேண்டும்; அதாவது அவரது பலியினால் அனைவருக்கும் பெற்றுத் தரப்பட்டதான அந்த மனுஷீக உரிமைகள் மற்றும் சிலாக்கியங்களில் பங்கெடுக்க வேண்டும்; இல்லையேல் ஒன்றில் இப்பொழுது பலிச் செலுத்துவதற்கு (அ) ஒன்றில் (பலிச் செலுத்தும் சிலாக்கியம் இல்லாமல் அப்போது) அதை அனுபவிப்பதற்கு என்று ஜீவிப்பதற்கான உரிமைகள் ஏதும் இருக்காது. ஆகையால் "இதைச் செய்வதற்கும்," நிதானித்து, அறிந்து செய்வதற்கும் என்று நாம் விசுவாசிகள் அனைவரையும் வலியுறுத்துகின்றோம். அடையாளத்தைப் பயன்படுத்துகையில், அனைத்துப் பாவங்களிலிருந்துமான நீதிமானாக்கப்படுதலையும், வேறு எந்த நாமத்தின் மூலமாகவோ, வழியின் மூலமாகவோ இல்லாமல், தேவனுடைய ஆட்டுக்குட்டியின் வாயிலாக தேவன் கொடுக்கின்றதான ஜீவிப்பதற்குரிய உரிமையையும் முழுமையாய் ஏற்றுக்கொள்ளுங்கள், சொந்தமாக்கிக்கொள்ளுங்கள், பயன்படுத்திக்கொள்ளுங்கள். விசேஷமாக கிறிஸ்துவோடுகூட அவரது மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்களும் மற்றும் இப்படியாய் அவரது "சரீரத்தின்" அங்கத்துவத்துக்குள், வந்தவர்களுமாகிய விசுவாசிகள் அனைவரும், அவரது இரத்தத்தின் மூலமான நீதிமானாக்கப்படுதலை நினைவுகூர்ந்து, அவரோடுகூட மரிப்பதற்கான தங்களது உடன்படிக்கையினைப் புதிய, திவ்விய சுபாவத்தின் பங்காளிகளெனப் புதுப்பித்துக்கொண்டு, "இதை ஆசரிப்பார்களாக." (உரோமர் 6:3, 4)

ஒரே சரீரத்தின் உடன் அங்கத்தினர்கள் என்று உங்களால் அடையாளங்கண்டுகொள்ள முடிகிறவர்களுடன் கூடிக்கொள்ளுங்கள்; ஈடுபலியில் விசுவாசமற்றவரைத் தவிர்த்துவிடுங்கள். முன்கூட்டியே கூட்டத்திற்கான ஆயத்தங்களைச் செய்துகொள்ளுங்கள். உங்களில் யார் அடையாளச் சின்னங்களைக் கொண்டு ஒவ்வொருவரிடம் பரிமாறுகின்றார்கள் என்பது முக்கியமல்ல; முதலாம் ஆசரிப்பில் யூதாஸ்கூட உதவியிருந்திருக்கலாம்.

கலந்துகொள்ள முடிபவர்கள் அனைவரும், பிட்ஸ்பர்கிலுள்ள (Pittsburgh) சபையோடு கலந்துகொண்டு, ஆசரிக்கும்படி அன்போடு வேண்டிக்கொள்கின்றோம். கர்த்தருடைய நாளாகிய, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான ஆண்டு நிறைவு நாள்வரையிலும் கூடுமானால் தங்கிடத்தக்கதாக, உங்கள் அலுவல்களை ஒழுங்கு செய்திடுங்கள். எல்லாவற்றையும் கொஞ்சம் தள்ளிவைத்துவிட்டு; நமது ஆவிக்குரிய நலன்களுக்கென்று குறிப்பாய்ப் பிரயாசங்கள் எடுக்கத்தக்கதாக நாம் சில நாட்களை ஒதுக்கிச் செலவிடலாம்.

*****

# முழு தத்தம் செய்திட்ட பரிசுத்தவான்களின் ஜெபம்.

## Prayer of the consecrated

தேவனே, தீயின் ஜுவாலையை யாம் தேடவில்லை,

மனித அறிவுக்கடங்கா குணமாக்கும் விசித்திரம் வேண்டவில்லை,

பாவத்தினால் வந்த காயத்திற்குக்களிம்பும்,மருந்துமாய் நும்சுவிசேஷம்சொல்ல சக்திமட்டும்வேண்டுமே,

பரலோகம் பற்றின மறைக்கப்பட்ட பக்கங்களின்மீதில் உம் சுடரொளி வீசும்,

நுண் புலமைகாண எம்மீதே உம் சுடரொளி உமிழும்,(நுண்புலமை= மிகநுண்ணிய புலமை)

அது எங்கள் இளமையை ஆசீர்வதித்தேஎம்மை வழி நடத்தட்டும்,

ஒவ்வொரு சத்தியம் அறிய வேண்டியே திறமையை எமக்கே அங்கீகாரம் செய்யும்,

அன்பான குரலினில், கனன்றெரியும்மொழியினில் உம்இரக்கத்தின் வார்த்தைகள்மீதே

ஆச்சர்யம்கொண்ட மக்கள் பரவசமடைந்தேஅலங்கரிப்பாய்அணிவாரே,

புயலின்ஆழம்கடப்பதற்கான விசுவாசம் வழங்கும்,

செங்குத்தாய்தோன்றும் மலையுச்சிமீதேறவே  மனவுறுதிதாரும்,

அலைந்து திரியும் அபலையைதத்தேடிவிசுவாசவீட்டிற்குள்கொணரவேண்டியே,

வல்லமைமிக்க மீட்பரே, எமக்கே போதுமான பெலன் தந்திடுமே,

எம் இதயம் ஒளி வீசச் செய்யும்,எம்மையும் கூட ஒளிர்ந்திடச்செய்யும்,

உந்தன் சாயலாய் உருமாறிட வேண்டுமே,பிரகாசமாகவே ஒளிர்ந்திட வேண்டுமே,

அன்பு செய்து உம்போல் வாழ்ந்திடவே எமக்குக் கற்றுத்தாருமே.

நீர்பெற்றுக்கொண்ட பரிசதனை நாங்கள் பெற வேண்டியே எங்களுக்காய் பரிந்துரைப்பீர் எம் ஆண்டவரே.

R 916/3/77

## நம் வாக்களிக்கப்பட்ட வானவில்.

வாக்களிக்கப்பட்ட வானவில் நம் தலைக்கு மேலே,
அதன் மாறுபட்ட இழைகளை இப்பூமியின்மீதே அனுப்பிடுதே.
அன்பின் நிறமோ நீலமே,மகிழ்ச்சியின் வர்ணமோ பொன்னிறமே நீதியின் வஸ்திரம் வெண்மையே,
நம்பிக்கையின்ஒளி படிகப்பச்சையாய் ஒளிவீசிடுமே,
கருஞ்சிவப்பில் வலியும்,ஊதாநிறத்தில் துக்கமும்,
இத்தனை ஒளிக்கற்றைகளின்நடுவினிலே,
இவற்றையெல்லாம் எடுத்துப்போட முடியாதா? அவை மறுத்திடுமா?
விசுவாசம்கொள்வாய், உம் அபிஷேகிக்கப்பட்ட கண்கள் அதனைப்பின்தொடர முடிகிறதா?
வானத்திலிருந்தே வரும் ஒலிகள் தேய்ந்திடாமலே, மகிமையில் பிரகாசிக்குமே.
உன் கண்ணுக்குப்புலனாகா இரட்சகர் அதன் இழைகளை பூரண ஒளியாய் பின்னுகிறார்.

# நம்முடைய வருடாந்தர இராப்போஜனம்

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவ ஆட்டுக்குட்டியென, நமது கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்குமான அடையாளங்களாகிய அப்பம் மற்றும் திராட்சரசம் நிறுவப்பட்டதற்கான ஆண்டு நிறைவுநாளை ஏப்ரல் 7-ஆம் தேதி, மாலை அன்று பிட்ஸ்பர்கில் (Pittsburgh) காணப்படும் சபையார் ஆசரித்தார்கள். கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 150 பேர் ஆகும் மற்றும் இதில் அநேகமாக நாற்பது பேர் அருகாமையிலுள்ள பட்டணங்களிலிருந்தும், சிலர் நியூயார்க் (New York), ஓகியோ (Ohio) மற்றும் விஸ்கான்சின் (Wisconsin) போன்ற தொலைத் தூரப்பகுதிகளிலிருந்தும் கலந்துகொண்டனர். அது எப்போதும்போல மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற தருணமாகவே காணப்பட்டது.

நாங்கள் சுருக்கமாக அடையாளங்களாகிய அப்பம் மற்றும் திராட்சரசத்தின் அர்த்தத்தினையும், அது அடையாளப்படுத்துகின்றதான நமது மீட்பருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்குமான முக்கியத்துவத்தையும், மதிப்பையும் மீண்டுமாகச் சிந்தனை செய்து பார்த்தோம். மாம்சத்தைப் புசிப்பது என்பது, ஆதாமுக்காகவும், அவரது சந்ததி அனைவருக்காகவும் நமது கர்த்தரினால் பலி செலுத்தப்பட்டதான பரிபூரண மனுஷீகத்தையும், அதன் உரிமைகள் அனைத்தையும் நாம் ஏற்றுக்கொள்வதையும், நம்முடையதாக்கிக்கொள்வதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்று நாங்கள் பார்த்தோம். நமது கர்த்தர், "உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" என்று கூறினபோது, அவர் "என்னுடைய பலியை ஏற்றுக்கொண்டு மனுக்குலத்தின் சார்பில் இலவசமாய்க் கொடுக்கப்பட்டுள்ள என்னுடைய உரிமைகளையும், பரிபூரணங்களையும் (புசிப்பதன் மூலம்) தங்களுடையதாக்கிக்கொள்வது வாயிலாக, உலகமானது (இழந்துபோய்விட்டதான) பரிபூரண மனுஷீக சுபாவத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, நான் என் பரிபூரண (புளிப்பற்ற) மனுஷ சுபாவத்தைப் பலிசெலுத்துகின்றேன் (அ) கொடுத்துவிடுகின்றேன்" என்ற அர்த்தத்திலேயே கூறினார் என்று நாங்கள் பார்த்தோம். (யோவான் 6:51)

இப்படியாக அப்பமானது, சீர்ப்பொருந்தப்படுகிற யாவருக்குமானது என்றும், சுவிசேஷ யுகத்திலும் சரி, ஆயிரவருட யுகத்திலும் சரி ஒருவன் அப்பத்தினால் நன்மையடைவதற்கும் முன்னதாக அதை ஏற்றுக்கொண்டிட வேண்டும் மற்றும் ஜீரணித்திட வேண்டும் (தன்னுடையதாக்கிட வேண்டும்) என்றும் நாங்கள் பார்த்தோம். இழந்துபோனவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் அனைவரும் ஈடுபலியினை ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் இப்படியாக அதன் பலனாகிய (நிஜமான (அ) கருதப்பட்ட நிலையிலுள்ள) திரும்பக்கொடுக்கப்படுதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆட்டுக்குட்டியினுடைய மாம்சத்தைப் புசிக்கும் அனைவரும், அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுவதில்லை என்று நாங்கள் பார்த்தோம். பஸ்கா நிழலில் வீட்டினுடைய நிலைக்கால்களும், நிலையின் மேற்சட்டங்களும், ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தினால் தெளிக்கப்பட்டன; இப்படியாகவே மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசிக்கிறவர்கள் அனைவரின் (அவரது புண்ணியங்களில் பங்கெடுத்து, நீதிமானாக்கப்படுபவர்களின்) விஷயத்திலும் காணப்படுகின்றது; இவர்கள் அனைவரும் இரத்தத்தினை, அதாவது முழு உலகத்திற்கும் பாவமன்னிப்புண்டாகும்படிக்கு, அனைவருக்குமாக சிந்தப்பட்ட விலையேறப்பெற்ற ஜீவனை அடையாளங்கண்டுகொண்டு, சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும்.

ஆனால் "பாத்திரத்தில்" பானம்பண்ணிடுவதற்காக (ஜீவனைப் பலிச்செலுத்திடுவதில் பங்குகொள்வதற்கான) சிலாக்கியமானது சுவிசேஷ யுகத்தில் மாத்திரமே அருளப்படுகின்றது. (மாற்கு 10:38) இது "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக"நிறைவேற்றிடுவதற்கும், பின்வரும் அவரது மகிமையில் பங்கடைதலாகிய பலனைப் பெற்றுக்கொள்வதற்குமான இந்த யுகத்திற்குரிய சிலாக்கியமாக (அ) வாய்ப்பாக இருக்கின்றது. ஆகையால் மாம்சத்தை (அப்பத்தை) புசிப்பது என்பது, மனுஷீக உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் அனைத்திற்குமான நீதிமானாக்கப்படுதலைக் குறிப்பதுபோல, இரத்தத்தை (திராட்சரசத்தை) பானம்பண்ணுவது என்பது, நமது கர்த்தரோடுகூட அவரது பலியில் நமது பங்கெடுத்தலையும், அவரோடுகூட மரிப்பதையும், அவரது பாடுகளில் நமது பங்கெடுத்தலையும் - அவரோடுகூடச் சிலுவையில் அறையப்படுதலையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

இது உண்மையானால், அப்பம் புசித்தப் பிற்பாடு, திராட்சரசம் கொடுக்கப்படும் காரியமும், அப்பத்தைப் புசித்தவர்களுக்கு மாத்திரமே இரசம் கொடுக்கப்படும் காரியமும் எவ்வளவு பொருத்தமானதாய் இருக்கின்றது. இக்காரியமானது அனைத்து வேதவாக்கியங்களுக்கு இசைவாகப் போதிப்பது என்னவெனில்: (மற்றவர்கள் அல்ல, மாறாக) தேவ ஆட்டுக்குட்டியானவருடைய பலியிலும், புண்ணியத்திலுமுள்ள விசுவாசத்தினால், பாவங்கள் அனைத்திலிருந்தும் நீதிமானாக்கப்பட்டவர்கள் மாத்திரமே, தங்கள் (நீதிமானாக்கப்பட்ட)

மனுஷீகத்தைச் சிலுவையில் அறைந்திடுவதற்கும், இந்த யுகத்தில் கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் பங்கடைவதற்கும், பின்தொடரும் ஆயிரவருட யுகத்திலும், நித்திய காலமும் அவரது மகிமையில் பங்கடைவதற்கும் அழைக்கப்படுகின்றனர் என்பதாகும்.

அவரது மாம்சத்தைப் புசிக்கிறவர்கள் (அவரது புண்ணியங்களைத் தங்களுடையதாக்கிக்கொள்பவர்கள் - நீதிமானாக்கப்பட்டவர்கள்) மற்றும் அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுபவர்கள் (தங்கள் நீதிமானாக்கப்பட்ட மனுஷீகத்தை அவரது ஊழியத்தில் பலியாகக் கொடுப்பதன் வாயிலாக, அவரது பலியில் அவரோடுகூடப் பங்கெடுப்பவர்கள்) மாத்திரமே "கிறிஸ்துவினுடைய ஒரே சரீரத்தின்" அங்கத்தினர்களென, "மெய்யான திராட்சச்செடியின்" அங்கத்தினர்களென, அவரில் நிலைத்திருப்பார்கள் (யோவான் 6:56). இப்படியானவர்கள் மாத்திரமே (வசனம் - 53) தன்னில்தானே ஜீவனுடையவர்களாய் ஆகமுடியும்; அதாவது எதையும் சார்ந்திராத ஜீவனை, அழியாமையைப் பெற்றுக்கொள்ள முடியும் (மிலேனியல் டாண், தொகுதி - I, அத்தியாயம் - 10 பார்க்கவும்).

மீதமான மனுக்குலத்தார் "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவினால்" பலி செலுத்தப்பட்ட உரிமைகளைப் புசிப்பதன்மூலம் (சொந்தமாக்கிக்கொள்வதன்மூலம்) சார்ந்திருக்கும் ஜீவனை அடைவார்கள்; இது விருப்பமுள்ளவர்களுக்கும், கீழ்ப்படிதலுள்ளவர்களுக்கும் நித்திய காலமும் அருளப்படும்.

இவர்கள் அனைவரும் முதலாவதாகக் கர்த்தரைப்பற்றியும், அவர் செலுத்தின பலிபற்றியும், அது அளித்ததான நீதிமானாக்கப்படுதலையும், திரும்பக்கொடுத்தலையும் பற்றியுமான அறிவிற்குள்ளாகக் கொண்டுவரப்பட வேண்டும் மற்றும் பின்னர் அதில் இலவசமாய்ப் பங்கெடுத்து, ஜீவிக்கலாம். இப்படியானவர்களைக் குறித்து ("பாத்திரத்தில்" பங்கெடுக்காமல்) "இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்" என்றும், "என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்," அதாவது ஜீவன் அளிப்பவராகிய கிறிஸ்துவைச் சார்ந்துள்ளவர்கள் அனைவருக்கும் சார்ந்திருக்கும் ஜீவன் அருளப்படும் என்றும் எழுதப்பட்டுள்ளது. வித்தியாசம் என்னவெனில் இப்பொழுது தெரிந்தெடுக்கப்படுகின்றதான சுவிசேஷ சபையானது, கிறிஸ்துவின் சரீரமானது, தலையானவரோடுகூட அழியாமையை உடையவர்களாய் இருப்பார்கள்; தன்னில்தானே ஜீவனுடையவர்களாய் இருப்பார்கள் மற்றும் உலகத்திற்கு ஜீவன் கொடுக்கிற ஆதாரமாய் இருப்பார்கள்; உலகமானது இந்த ஊற்றண்டைக்கு ஜீவனுக்காக வந்து, இதனால் ஜீவிப்பவர்களாய் இருப்பார்கள்.

"இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகளையும் நாம் கவனிக்கின்றோம் (1 கொரிந்தியர் 11:27, 29). இதன் அர்த்தம் என்னவெனில், கிறிஸ்துவின் பலியானது தங்களுடைய பாவங்களுக்கானது என்று அடையாளங்கண்டுகொள்ள தவறும் அனைவரும், இந்த அடையாளங்களைப் புசிப்பது என்பது, "இவரது இரத்தப்பழியானது எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று யூதர்கள் சத்தமிட்டப்போது, பழிக்கு ஆளானதுபோல, இவர்களும் அவரைக் கொன்றவர்கள் என்ற பழிக்கு ஆளானவர்களாய் இருப்பார்கள். யூதர்கள் தங்களைக் குற்றமில்லாத இரத்த (மரணத்திற்கான) பழிக்குள்ளாக்கினதுபோன்று, இப்பொழுது கர்த்தருடைய சரீரமும், இரத்தமும் தங்களுக்கான ஈடுபலியென்று நிதானித்தறியாமல், அடையாளங்களைப் புசிப்பவர்களும், அவரது இரத்தம் எங்கள்மேல் இருப்பதாக என்றும் சொல்லுகிறவர்களாய் இருப்பார்கள். கர்த்தருடைய சரீரமும், இரத்தமும் தங்களுக்கான ஈடுபலி என்று அடையாளம் கண்டுகொள்ளாதவர்கள் அனைவருக்கும், இதில் பங்கெடுப்பது என்பது, அவரது சரீரத்தைப் பிட்டதிலும், அவரது இரத்தத்தைச் சிந்தினதிலுமான குற்றத்தில் பங்குள்ளவர்களாகத் தீர்க்கப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்; இது இவர்களுக்கு மன்னிப்பை - பாவங்களுக்கான மன்னிப்பைப் பேசாது.

பின்வந்த அடுத்த நான்கு நாட்களும், முழுக்க கூட்டங்களுக்காகவே செலவிடப்பட்டது; இந்தக் கூட்டங்களில் பல்வேறு சுவாரசியமான தலைப்புகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன; அவைகளையெல்லாம் நம்மால் இங்கு மீண்டுமாகப் பதிவு செய்திட முடியாது. இந்தக் கூட்டங்களானது, தொலைவிலிருந்து வந்தவர்களுக்கு விசேஷித்ததாகவும், மிகவும் சுவாரசியமானதாகவும் காணப்பட்டது மற்றும் இவர்கள் தேவனுடைய வார்த்தையிலுள்ள பலமான ஆகாரத்தினாலும், ஆராயப்பட்டதான மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தத்திலிருந்து வடிக்கட்டி, எடுக்கப்பட்டதான சந்தோஷம் மற்றும் நம்பிக்கை எனும் நவமான திராட்சரசத்தினாலும் பெலப்படுத்தப்பட்டு, புத்துயிர் அடைந்து, தங்கள் தங்கள் பணிக்குத் திரும்பிச் சென்றனர் என்று நாம் விசுவாசிக்கின்றோம்.

இவர்களது இந்த ஒரு வருகையின்போது, கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றதான ஒன்பது சகோதர சகோதரிகள், "மரணம் வரையிலுமான" (உரோமர் 6:3, 4) தங்களது அர்ப்பணிப்பை அடையாளப்படுத்திடுவதற்கு, நமது கர்த்தர் கேட்டுக்கொண்டதற்கு ஏற்பவும் (மாற்கு 16:16), அப்போஸ்தலர்கள் கட்டளையிட்டதற்கு ஏற்பவும் (அப்போஸ்தலர் 10:48) மரணத்திற்குள்ளான உண்மையான ஸ்நானத்திற்கு ஒப்பாக, தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற்கு, வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்களது பெயர்கள் பின்வருமாறு: சகோதரன் மற்றும் சகோதரி ஏ. பௌவென், சகோ. ஜெ. மேசன், சகோ. தோஸ்.ஆர்.ஜாக்சன், சகோதரி ஜெ. விரோ, சகோதரி எம். ஜெ. வேக்நர், சகோதரி எம். தாம்சன் மற்றும் சகோதரி கார்சன் மற்றும் மிட்செல்.

"இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளை, அனைத்துத் திசைகளிலுமுள்ள சசோதர சகோதரிகள் நினைவுகூர்ந்துள்ளார்கள் என்பதை நாங்கள் பெற்றுக்கொண்டதான அநேக கடிதங்களானது காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. சில இடங்களில், அதிகமான எண்ணிக்கையில் கூடியிருக்கின்றனர், வேறு சில இடங்களில் ஒன்று (அ) இரண்டுபேர் கூடியிருக்கின்றனர். "இதைச் செய்யுங்கள்" என்று கர்த்தர் சொன்னதைக் கர்த்தருடைய சரியான நோக்கத்திலும், கர்த்தருடைய பலியானது தங்களுடைய பாவங்களுக்கானதாகும் என்று உணர்ந்த நிலையிலும், அவரோடுகூட உள்ள தங்களது அர்ப்பணிப்புக் குறித்து உணர்ந்த நிலையிலும் செய்தவர்கள் அனைவரும் நிச்சயமாய் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை நாங்கள் அறிவோம். இதே சாட்சியினை நாங்கள் பெற்றுக்கொண்டதான, அநேக கடிதங்கள் தெரிவிக்கின்றது. நாங்கள் இங்கே கூடினபோது, உங்களை நினைவுகூர்ந்தோம்; மேலும் உங்கள் கடிதங்களும், நீங்கள் எங்களை மறக்காமல், நினைவுகூர்ந்ததைத் தெரியப்படுத்தினது. "சரீரத்தினுடைய" அங்கத்தினர்கள் அனைவரிடத்திலுமான இந்தப் பரஸ்பர அக்கறையானது சரியானதாகும் மற்றும் இது எப்போதும் நம்முடைய இருதயங்களைச் சந்தோஷப்படுத்துகின்றது.

*****

R 943

# "என் தாயார் யார்? என் சகோதரர் யார்?"

தேவனுடைய ஆவிக்குரிய குமாரர்கள் என்பதான புதிய உறவிற்குள் வந்துள்ளவர்கள், அவர்கள் அடைந்துள்ள உறவுகளின் மாற்றத்தை அடிக்கடியும், மற்றும் கவனமாயும் கருத்தில் எடுத்துக் கொண்டும் காணப்படுவது நலம். இனிமேல் நம்முடைய நெருக்கமான உறவுகள், பூமியுடன் காணப்படுவதில்லை. நம்முடைய கவனம், எதிர்ப்பார்ப்புகள்/நம்பிக்கைகள் மற்றும் குறிக்கோள்கள் இப்பொழுது பரலோக குடும்பத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இன்னுமாக, நாம் இதைக்குறித்து முழுமையாக உணர்ந்துக்கொள்ளுகையில், தேவனுடைய குடும்பத்தின் மீது நமது பிரியம் காணப்படும், மற்றும் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள அந்த அன்பை, அகலமும் ஆழமும் படுத்தத்தக்கதாக, பரலோக குடும்பத்துடனான நம்முடைய ஐக்கியம் காணப்பட வேண்டும்.

இதற்கு இசைவான நமது கர்த்தருடைய வார்த்தைகள், அவர் எப்படிப் பரலோக உறவைக் கருதினார் என்பதைக் காட்டுகின்றது. கர்த்தரிடம் ஒருவர், "உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மோடே பேசவேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள்" (மத்தேயு 12:47) என்று கூறினபோது கர்த்தர், "தம்மிடத்தில் இப்படிச் சொன்னவனுக்குப் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி: இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்" (மத்தேயு 12:48-50).

புதிய சிருஷ்டிகளாகிய, தேவனுடைய ஆவிக்குரிய குமாரர்களாகிய நாம், விரைவில் அவருடைய அருமையான குமாரனுடன் உடன்சுதந்திரர்களாக இருக்கப் போகின்றோம். நிச்சயிக்கப்பட்ட கன்னிகைகளாக, சகல பூமிக்குரிய ஈடுபாடுகளைத் துறந்திருக்கும் நாம், நமது பரலோக மணவாளனுடன், திருமணத்தின் மூலம் இணைக்கப்படவிருக்கின்றோம், மற்றும் (திருமணத்தின் மூலம் இணையும்) அந்த மாபெரும் தருணத்திற்காகச் சந்தோஷத்துடன் நம்மால் முடிந்த அனைத்து ஆயத்தங்களையும் செய்து கொண்டிருக்கின்றோம். இந்த ஒரு புதிய நிலைக்குள் நாம் முழுமையாய்ப் பிரவேசித்தப் பிற்பாடு, நாம் பூமிக்குரிய தளத்தில் காணப்படுபவர்களுக்குக் கணவர்களாக, மனைவிகளாக, பெற்றோர்களாக, பிள்ளைகளாக, சகோதரர்களாக மற்றும் சகோதரிகளாக இருப்பதில்லை. ஏனெனில், அக்காலத்தில் பூமியின் சகல குடிகளை ஆளுவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் ஆயத்தமாக நாம், "தேவனுடைய ஆசாரியர்களாகவும், இராஜாக்களாகவும்" இருப்போம். இன்னுமாக, அக்காலத்தில் பூமியின் குடிகளிலுள்ள ஒவ்வொருவரும் தேவனுக்கு அன்பிற்குரியவர்களாக இருப்பது போன்று நமக்கும் இருப்பார்கள். இக்காலத்தில் நமது அன்பிற்குரியவர்கள் மீது நாம் கொண்டிருக்கும் அன்பானது, அக்காலத்தில் எவ்விதத்திலும் குறைவதில்லை. அக்காலத்தில் நமது அன்பு மிகவும் அதிகமாய்க் காணப்படும். அதுவும் இக்காலங்களில் இரத்த உறவுகளுக்குள் மாத்திரம் அன்பு செய்தல் என்றுள்ள குறுகிய வரம்புகளற்ற அன்பாக நமது அன்பு அக்காலத்தில் காணப்படும்.

**ஆமென்!**

---

# தந்தை உன்னையே நேசிக்கின்றாரே

## THE FATHER HIIMSELF LOVETH YOU

யோவான் 16:27

அமைதியடைவாய் என் ஆத்துமாவே,
யேகோவாதேவன் உந்தன் சிநேகமே
அதிகரிக்கும் உன் சோர்வினாலே
பதற்றம் முறுமுறுப்பு சலிப்பும் வேண்டாமே,
உந்தன் பயணம் இருளாய் தனிமையாய்
உணர்ந்திட்டபோதிலும்,
அவரோ உனையே மறப்பதுமிலையே.
எப்போதுமே உனையே அவர்
நினைத்துக்கொண்டே இருக்கின்றாரே,
நம்பிக்கை கொண்டே வாழ்ந்திடுவாயே – அவர்
சித்தம் செய்வதொன்றே உந்தன்
சிரத்தையாக வேண்டுமே.
அவரே உனைக் கரம்பற்றி நடத்துகிறார்
மகிழ்வும் பேராவலும் உள்ள குழந்தையாகவே ,
உன்னை அவரே நடத்திடுவாரே,
நீயும் அவருடன் நடந்திடுவாயே
தந்தையே உன்னை ஒப்புரவாக்கினார்,
ஏற்றவேளை வந்திடும் நாளை,
அழைப்பார் உனையே அப்போதே,
அவரோடேகூட வழிநடந்தாலே
உந்தன் வழியோ பிரகாசமாகுமே,
எதிரி என்னதான் பலவானாய்த் தெரிந்தாலும்,
திடனை மட்டும்இழந்துவிடாதே,
கிறிஸ்துவே உந்தன் பெலனாம்,
போரிடுவாரே உந்தன் அருகிலிருந்தே,
அடையும் இலக்கு அருகினிலுள்ளதே,
நீண்டுகொண்டே போவதுமில்லையே,
பரிசை அவரே தந்திடுவாரே,
பூமிக்குள் உந்தன் போராட்டம் ஓயும் நிரந்தரமே,
மீண்டுமாய் கடும்முயற்சி செய்வதோ,
போராட்டம் பயமோ ஏதுமிராது,
உனக்கான வெகுமதியுடன் வருகிறாரே,
மிகமிக அருகினில் வந்துவிட்டாரே,
வாக்குத்தத்த சிம்மாசனமிருந்தே வெகுமதியோடே
மகிமையிலே வந்துவிட்டாரே,
ஆசீர்வதிக்கப்பட்டவர் நகரத்துள்
நெடுநாள் முன்பே உன்பாதம் நிற்குதே,
உந்தன் ஆபத்தும் கடந்தேவிட்டதே,
பொக்கிஷமனைத்தும் பாதுகாக்கப்பட்டதே,
உந்தன் கண்ணீர் அனைத்தையும்துடைப்பார்,
உன்னிலே மகிழ்ச்சி நிலைத்திடும் என்றுமே

Horatius Bonar

-------------------------

# யாரைச் சேவிப்பீர்கள்?
# WHOM WILL YE SERVE

"இவனை விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்குச்
சிநேகிதனல்ல; தன்னை இராஜாவென்கிறவனெவனோ அவன்
இராயனுக்கு விரோதி என்றே சத்தமிட்டார்கள்.
பிலாத்து இவ்வார்த்தையைக் கேட்டபொழுது,
இயேசுவை வெளியே அழைத்துவந்து" - யோவான் 19:12, 13.

"நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள்
செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" - யோவான் 15:14.

இராயனுக்கு சிநேகிதர்களா? அல்லது இயேசுவுக்கு சிநேகிதர்களா?
இதுவே இன்றைக்குரிய கேள்வியாகும்.
இராயனுடைய சிநேகிதர்களே! இயேசுவினுடைய சிநேகிதர்களே!
தாமதமின்றி உங்கள் முடிவுகளை எடுங்கள்.
நீங்கள் மனுஷருடைய கட்டளைகளுக்குக் காத்திருப்பீர்களேயாகில்,
இராயனின் நட்பைப் பெறுவீர்கள்.
பிதாவின் கட்டளைகளைக் கைகொள்வீர்களேயாகில்
ஏளனத்தையும், நிந்தனையையும் அடைவீர்கள்.

இராயனுடைய சிநேகிதர்களே! இயேசுவினுடைய சிநேகிதர்களே!
நின்று காண்பியுங்கள் உங்கள் தெரிவு எப்பக்கமென்று
யார் இரண்டு எஜமானர்களுக்கு உண்மையாய் ஊழியம் செய்ய முடியும்?
யாரால் இரண்டு எதிரெதிரான கொடிகள்தனை பிடித்திருக்கமுடியும்?
இயேசுவின் நண்பர்கள் அவரை விலைமதிப்பில்லாதவராக எண்ணியே
மற்ற எல்லா இலாபங்களையும் அவருக்காக இழக்கின்றனர்;
உலக மனிதர்களின் புகழை விடவும்,
இயேசுவின் புன்னகையே இனிமையானது என எண்ணுகின்றனர்.

இராயனிடமிருந்து விடுதலையாகி, இயேசுவின் சிநேகிதரானவர்களே!
போர் வீரர்களாய் நில்லுங்கள், பயப்படாதேயுங்கள்.
கடுமையாய் அன்பு பரீட்சைக்குள்ளாகுகின்றது
திடன்கொள்ளுங்கள் சமீபமாயிருக்கிறார் கர்த்தர்.
தொடர்ந்து அவர் நாமத்தை அறிக்கைபண்ணுங்கள்
அவர் தலைக்கு அலங்காரமான கிரீட முடிதனை பின்னிடுங்கள்.
ஆசீர்வாதம் நிறைந்த அவரது கரங்கள் உயர்த்தப்பட்டுள்ளது
உன்னுடைய ஒத்தாசைக்காய் இப்பொழுது.

இராயனின் சிநேகிதர்களாய் இருந்த நம்மை இன்று
அவரது சிநேகிதர்களாய் வென்றுவிட்டார்.
மணவாளன் தொலைவில் இருக்கும்போது
அவருக்குப் போட்டியாக வேறெந்த நட்பு நம்மைப் பிரியப்படுத்தக்கூடும்?
இல்லை! கிருபையின் மூலம் நாம் இராயனுடையதை இராயனிடத்திற்கும்
தேவனுடையதை தேவனிடத்திற்கும் ஒப்படைத்துவிடுகின்றோம்.
துதிகளையும், ஜெபங்களையும், மரியாதையையும்
நாம் தேவனுக்கு ஏறெடுக்கின்றோம்.

# என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

"பஸ்காவைப் பலியிடவேண்டிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள் வந்தது. அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக் கொலைசெய்யும்படி யோசித்து . . . எவ்விதமாய் அப்படிச்செய்யலாமென்று வகைதேடினார்கள். அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானையும் அழைத்து: நாம் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நீங்கள் போய், அதை நமக்கு ஆயத்தம்பண்ணுங்கள் என்றார் . . . வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்" (லூக்கா 22:7, 2, 8-20).

இதுவே கர்த்தருடைய இராப்போஜனமானது நிறுவப்பட்டது குறித்து லூக்கா அவர்களால் பதிவு செய்யப்பட்டதான எளிமையான பதிவாகக் காணப்படுகின்றது; மீண்டுமாக நியமிக்கப்பட்ட வேளை சமீபிக்கையில், "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ற வார்த்தைகளை நாம் நினைவிற்குக்கொண்டுவருகின்றோம். இந்த வேண்டுகோளுக்கு இணங்கி, நாம் நமது கர்த்தரினால் நிறுவப்பட்டதான எளிமையான ஆசரிப்பைத் திரும்பத்திரும்ப ஆசரிப்பதன் மூலம், நமது பஸ்காவினை மீண்டுமாக நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றோம்.

வருடம் 1888-இல், மார்ச் மாதம், 26-ஆம் தேதி திங்கள் பிற்பகல், கல்வாரியில் நிகழ்ந்த நமது கர்த்தருடைய மரணத்தின் ஆண்டுநிறைவு நாளாக இருக்கின்றது — யூதரின் முதலாம் மாதத்தில் 14-ஆம் தேதியாய் இருக்கின்றது; யூதர்களுக்கு ஒரு நாள் மாலை, சூரிய அஸ்தமனத்துடன் ஆரம்பமாகுகின்றது. ஆகையால் மார்ச் 25-ஆம் தேதியாகிய, ஞாயிறு மாலையானது, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியாக," நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியெனத் தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலாக, கர்த்தரால் நிறுவப்பட்டதான நமது கர்த்தருடைய இராப்போஜனத்தின் ஆண்டுநிறைவு நாளாய்க் காணப்படுகின்றது.

அந்த ஒரு தருணத்திற்காக, இங்குள்ள சபையார், வழக்கமாய் நாம் கூடுகிற அலிகெனியின் (Allegheny), பெடெரல் தெருவிலுள்ள (Federal Street) மேல்வீட்டறையில், மாலை 7:30 மணிக்குக் கூடிடுவார்கள்; மற்றும் நமது மீட்பரை அன்புகூருகிறவர்களும், நாம் கூடி ஆசரிக்கின்றதான ஈடுபலியினை மதிக்கிறவர்களுமானவர்கள் அனைவரும், நம்மோடுகூடக் கூடிடுவதற்கு நாம் மிகுந்த அன்போடுகூட அழைக்கின்றோம். தொலை தூரத்திலிருந்து வருபவர்களை வரவேற்று உபசரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். எங்களோடுகூட எத்தனை பேர்களால் வந்து கூடமுடியுமோ, வந்து கூடுங்கள். இதனை தொடர்ந்து பல நாட்களுக்கு, அநேகம் கூடுகைகள் ஏற்பாடு பண்ணப்படும்; இதில் யுகங்களுக்கடுத்த திட்டம் தொடர்புடையதான கேள்விகள் கேட்கப்படுவதற்கான நல்வாய்ப்புகள் கிடைக்கப்பெறும். அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அனைவரும் சத்தியத்திற்குஊழியக்காரர்களாய் இருக்கின்றபடியால், தங்களைப் பயனுள்ளவர்களாக்கிக் கொள்வதற்குத் தங்களை ஆயத்தம் பண்ணிக்கொள்ளும்படிக்கு, இம்மாதிரியான கூடுகைகள் அருளும் வாய்ப்புகளைப் பயன்படுத்த முடிகிறவர்கள் யாவரும் பயன்படுத்திக்கொள்ளுவது இன்றியமையாததாகும்.

ஆனால் சொற்பமானவர்கள் மாத்திரமே இங்கு வந்துகூடிட முடியும் என்பதை நாம் அறிவோம்; அனைத்து இடங்களிலும் காணப்படுகின்ற கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உண்மையுள்ளவர்கள் அனைவரும், தம்மையே பலிச்செலுத்தினதன் வாயிலாக நம்மை மீட்டுக்கொண்டவராகிய தேவ ஆட்டுக்குட்டியானவரை "நினைவுகூரும்படி இதைச் செய்வார்களாக." அனைத்து இடங்களிலும் காணப்படுகின்றதான இப்படிப்பட்டவர்கள், விலையேறப்பெற்ற விசுவாசத்தில் ஒத்த நிலையில் இரண்டு (அ) மூன்று பேர் காணப்பட்டாலும்கூட, ஒன்றுகூடிட வேண்டும். தனிமையில் காணப்படுபவர்கள்கூடக் கர்த்தரோடும், மாம்சத்தில்

ஆங்காங்கே காணப்படுகின்றதான ஒரே சரீரத்தின் உடன் அங்கத்தினர்களோடும், இருதயத்தினுடைய ஐக்கியத்தில், அப்பத்தைப் பிட்டு, திராட்சரசத்தில் பங்கெடுக்கலாம்.

மற்றக் காரியங்களில் காணப்படுவதுபோலவே, இந்தக் காரியத்திலும் கிறிஸ்தவர்கள் வேதவசனங்களினுடைய உபதேசங்களை விட்டுவிட்டவர்களாகவும், ஆதித் திருச்சபையினுடைய மாதிரியை விட்டுவிட்டவர்களாகவும், இது ஆசரிப்பதற்கான காலம் தொடர்புடைய விஷயத்தில் பல்வேறு வழக்கங்களைப் பின்பற்றுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர். வெகு சிலரே, அதை "இராப்போஜனமாக" ஆசரிக்கின்றனர்; புராட்டஸ்டண்டினர்கள் பொதுவாய் மாலைக்குப்பதிலாக, வசதிக்காக மதிய வேளையைத் தெரிவு செய்துள்ளனர். சிலர் கர்த்தருடைய மரணத்தை ஞாயிறுதோறும் நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றனர்; சிலர் மாதத்திற்கு ஒருமுறை என்றும், சிலர் மூன்று மாதத்திற்கு ஒருமுறை என்றும் ஆசரிக்கின்றனர். இவர்கள் நேரத்தின் விஷயத்திலும், அடிக்கடி ஆசரிக்கும் விஷயத்திலும் அக்கறையற்றவர்களாகக் காணப்படுகின்றனர்; இவர்கள் எண்ணுவது என்னவெனில்: "இதை ஆசரிப்பது நல்லது எனில், ஏன் இதை அடிக்கடி, ஆம் தினந்தோறும் ஆசரிக்கக்கூடாது!" என்பதேயாகும். இதற்கு வேறு சிலர் பதிலளிப்பது என்னவெனில்: இப்படிச் செய்வதினால், அவ்வாசரிப்பானது அதற்குரிய பயபக்தியையும், ஆற்றலையும் இழந்துவிடுமே! என்பதேயாகும். இப்படியாகவே, இப்பொழுது இவர்கள் ஆசரிக்கையில் காணப்படுகின்றது. ஞாயிறுதோறும் ஆசரிப்பவர்கள் அப்போஸ்தலர் 2:42, 46 மற்றும் 20:7, 11-ஆகிய வசன பகுதிகளைத் தவறாய்ப் புரிந்துகொண்டவர்களாய்க் காணப்படுகின்றனர். இவைகளெல்லாம் கர்த்தருடைய இராப்போஜனம் ஆசரிக்கப்பட்ட தருணங்கள் என்று இவர்கள் அனுமானித்துத் தவறு செய்துவிட்டனர். இவ்வசனப்பகுதிகளானது, தொலை தூரங்களிலிருந்து ஆதித் திருச்சபையினர் வாரத்தின் முதல்நாள் தோறும் ஒன்றுகூடுகையில், அவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து எளிமையான உணவை உட்கொண்ட வழக்கத்தையே குறிப்பிடுகின்றதாய் இருக்கின்றது; அதாவது இப்பொழுதும் நாட்டுப்புறங்களில் "அன்பின் விருந்து" என்ற பெயரில் ஒன்றாய்ச் சேர்ந்து புசிக்கும் வழக்கம்போன்ற ஆதித் திருச்சபையினரின் வழக்கமே இவ்வசனப்பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த "அன்பின் விருந்துகளானது" யூதாவினால் (12-ஆம் வசனத்தில்) குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் இதில் பங்கெடுக்கும் அனைவரும் உண்மையுள்ள சகோதர சகோதரிகள் அல்ல என்றும் நமக்குச் சுட்டிக்காண்பிக்கின்றார். இந்த அன்பின் விருந்துகளானது நமது கர்த்தருடைய (அ) அப்போஸ்தலர்களுடைய எந்தக் கட்டளையின் பேரிலும் ஏற்படுத்தப்படவில்லை; மாறாக வாரத்தின் முதல்நாள் கொண்டாடுவதுபோன்று, இதுவும் நன்றியுள்ள இருதயங்களால் தானாய்ச் செய்யப்பட்ட செயலாகும். இப்படியாக ஆதித் திருச்சபையினர் வாரந்தோறும் நமது கர்த்தருடைய (மரணத்தையல்ல, மாறாக) உயிர்த்தெழுதலைக் கொண்டாடினார்கள் மற்றும் அவர்களது அன்பின் விருந்துகளில் அப்பம் பிட்கப்பட்டதானது, கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பாக, எம்மாவு எனும் கிராமத்திலும், மற்றத் தருணங்களிலும், அவர்களது சாதாரணமான மதிய உணவின்போது, கர்த்தர் அப்பம்பிட்டுத் தம்மைச் சீஷர்களுக்கு வெளிப்படுத்தின காரியத்தின் இனிமையான ஞாபகப்படுத்துதலாய் இருந்தது (லூக்கா 24:29, 30, 42; யோவான் 21:12, 13). இப்படியாக அவர்கள் அவரது உயிர்த்தெழுதலையும், அவரை அறிந்துகொள்ளத்தக்கதாக தங்களது கண்கள் திறக்கப்பட்டதையும் குறித்துக் கொண்டாடினார்கள். (கர்த்தருடைய இராப்போஜனத்தில் அப்பத்தைப்போன்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டதான) திராட்சரசத்தை அவர்கள் (இந்த அன்பின் விருந்துகளில்) பயன்படுத்தவுமில்லை; இந்த விருந்துகளைக் கர்த்தருடைய இராப்போஜனம் என்றும் அவர்கள் அழைக்கவுமில்லை; கர்த்தருடைய இராப்போஜனத்திற்கே உரிய விசேஷித்த பயபக்தியுடன் இந்த விருந்துகளை அனுசரியாமல், மாறாக நன்றியுடனும், சந்தோஷத்துடனும் அவர்கள் அனுசரித்து வந்துள்ளனர். "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணினார்கள்" (அப்போஸ்தலர் 2:46).

மாதத்திற்கு ஒருமுறை அல்லது காலாண்டிற்கு ஒருமுறை, ஞாயிற்றுக்கிழமை மதிய வேளையில் "இராப்போஜனத்தை" ஆசரிப்பவர்கள், "நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம்" என்ற பரிசுத்த பவுல் அவர்களின் வார்த்தைகளையே, தங்கள் இந்த வழக்கத்திற்குக் கூறுகின்றவர்களாய் இருக்கின்றனர் (1 கொரிந்தியர் 11:23, 25); இவ்வசன வார்த்தைகளானது, அதைத் தாங்கள் விரும்பும்போதெல்லாம் ஆசரிப்பதற்கான சுதந்தரத்தை அளிப்பதாக இவர்கள் எண்ணிக்கொள்கின்றனர். ஆனால் அப்போஸ்தலனோ "போதெல்லாம்" எனும் வார்த்தையை 'எப்போதெல்லாம்' எனும் அர்த்தத்தில் பயன்படுத்துகின்றார். "எப்போதெல்லாம் இதைச் செய்கின்றீர்களோ" என்பதானது, எதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதின் மீது கவனத்தைத் திருப்புகின்றதாய் இருக்கின்றது. இவ்விடத்தில் பவுல், "(நமது கர்த்தர்) தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே" என்று குறிப்பிடுகின்றார் மற்றும் அப்போது, அங்கு நமது கர்த்தரினால் தமக்கான நினைவுகூருதல்களாகவும், யூதர்களால் புசிக்கப்பட்டதான நிழலான பஸ்காவின்

இடத்தில் இடம்பெறுகின்றதாகவும் அப்பத்தையும், திராட்சரசத்தையும் நிறுவினார் என்றும் குறிப்பிடுகின்றார். யூத வழக்கத்தையும் மற்றும் அது மீண்டும் மீண்டுமாக எப்போது ஆசரிக்கப்பட்டது என்பதையும் அறிந்தவர்களுக்கே பவுல் இதை எழுதினார்; ஆகையால் "பானம் பண்ணும்போதெல்லாம்" (அ) எப்போதெல்லாம் என்ற வார்த்தையானது இவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டுநிறைவு நாளைச் சுட்டிக்காட்டுவதாக இருந்தது.

நிழலான ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தின் வாயிலாக, இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் அடைந்த நிழலான கடந்துபோகுதலுக்கான வருடாந்தர நினைவுகூருதலை அகற்றுவதற்காகவே கர்த்தருடைய இராப்போஜனமானது திட்டமிடப்பட்டது. இப்படியான ஒரு நிகழ்வானது, நமது கர்த்தரினாலும், அவரது அப்போஸ்தலர்களினாலும், யூதர்கள் அனைவராலும் ஆசரிக்கப்பட்டபடியே, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கப்படுவதே ஏற்றதாய் இருக்கும். அவர்கள் வேறு ஏதாகிலும் காலப்பகுதியில் ஆசரிப்பதற்கு எண்ணவே இல்லை; அமெரிக்கர்களும் தங்கள் விடுதலைக்கான அறிக்கையானது கையெழுத்திடப்பட்ட நிகழ்வை, ஜூலை 4-ஆம் தேதியன்று கொண்டாடுவதற்குப்பதிலாக வேறு தேதிகளில் கொண்டாடுவதற்கு எண்ணுவதில்லை.

கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளதுபோலவே இராப்போஜனத்தை நம்மைப்போன்று யூதருடைய முதலாம் மாதத்தின் 14-ஆம் தேதியன்று ஆசரிக்கும் வழக்கத்தினை ஆதித்திருச்சபையினர் பெற்றிருந்தனர். ஆதியிலிருந்த தூய்மையான விசுவாசத்தின் விஷயத்தில் மாபெரும் விசுவாச துரோகமானது அப்போஸ்தலர்களின் நாட்களிலேயே ஆரம்பித்தப்போதிலும், மேற்கூறப்பட்டதான இந்த வழக்கமானது, நான்காம் நூற்றாண்டில், நைஸ் குழுவினால் அதிகாரப்பூர்வமாக அழிக்கப்படுவதற்கு முன்புவரை சில கிறிஸ்தவர்களால் தொடர்ந்து கைக்கொள்ளப்பட்டு வந்தது; அதாவது அப்போஸ்தலர்களால் நிகழுமென முன்னறிவிக்கப்பட்டதான மாபெரும் விசுவாச துரோகமானது, பிற்பாடு போப்மார்க்கம் என்று அழைக்கப்பட்டதான மாபெரும் தப்பறையான அமைப்பாகப் பகுதியளவு வளர்ந்து காணப்பட்ட நான்காம் நூற்றாண்டுவரை, இந்த வழக்கமானது சில கிறிஸ்தவர்களால் தொடர்ந்து கைக்கொள்ளப்பட்டு வந்தது.

இந்த ஒரு காரியம் குறித்து, மோஷியம் அவர்கள் எழுதின சபை சரித்திரம் (Mosheim's Church History) எனும் புத்தகத்தின் 523-ஆம் பக்கத்திலிருந்து சிலவற்றை நாம் மேற்கோளிடுகின்றோம்; அவர் கூறுவதாவது: "இந்த (இரண்டாம்) நூற்றாண்டினுடைய முடிவு காலங்களில் ஆசியா மைனரிலுள்ள கிறிஸ்தவர்களுக்கும், மற்றப் பாகங்களிலுள்ள, அதிலும் குறிப்பாய் உரோம சபையிலுள்ள கிறிஸ்தவர்களுக்கும் இடையில் கடுமையான வாதம் உண்டானது . . . ஆசியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் நிறுவப்பட்டதான கர்த்தருடைய இராப்போஜனத்தையும், அடுத்து சம்பவித்த மீட்பருடைய மரணத்தையும் முதல் யூத மாதத்தினுடைய 14-ஆம் தேதியில் நினைவுகூர்ந்து ஆசரிக்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர் . . . இந்த ஒரு வழக்கத்தினை அவர்கள் அப்போஸ்தலர்களாகிய பிலிப்பு மற்றும் யோவான் வழியாய்த் தாங்கள் பெற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டனர்."

ஆனால் அதற்கென்று மீட்பருடைய மரணத்தைப் பொருத்தமற்ற காலங்களில் நினைவுகூர்ந்தவர்கள், இதினிமித்தம் நமது கர்த்தரினால் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவார்கள் என்று நாம் போதிப்பதாக எவரும் தவறாய்ப் புரிந்துகொள்ள வேண்டாம். இல்லவே இல்லை, தேவனுக்கு நன்றி, சுவிசேஷ சபையானது, எல்லா விஷயங்களிலும் நியாயப்பிரமாணத்தின் கீழ் வைக்கப்படாமல், கிருபையின் கீழ் வைக்கப்பட்டிருக்கின்றது. (பொருத்தமற்ற காலங்களில்) இவ்விதமாய், ஆனால் நமது கர்த்தருடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்குமான அடையாளங்களில் உண்மையான இருதயத்தில் பங்கெடுத்தவர்கள் சிலவிதங்களில் இழப்பினை அடைபவர்களாக இருப்பினும், அதாவது இவ்வாசரிப்பானது இருதயத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தின் ஆற்றலானது, அடிக்கடி ஆசரிக்கப்படுவதன் காரணமாகக் குறைந்துபோகின்ற விதத்தில் இழப்பினை அடைபவர்களாக இருப்பினும், அவரே பாவங்களுக்கான பலியாவார் என்று இப்படியாய் அறிக்கைப்பண்ணின இவர்களை அவர் புறக்கணிப்பதில்லை. ஆனால் நமது கர்த்தருடைய வார்த்தைகளின் நோக்கமானது கிரகிக்கப்படும்போது, முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் அனைவரும், அவரது ஏற்பாடுகளானது சிறந்தது மற்றும் மிகவும் ஏற்றது என்றும், யாருக்கு நினைவுகூருதலாய் இருக்கின்றதோ, அவரால் மிகவும் அங்கீகரிக்கப்படும் நிலையில் இருக்கின்றது என்றுமுள்ள உறுதியில் மகிழ்ச்சியுடன் அவரது ஏற்பாடுகளுக்கு இணங்குவார்கள்.

## அடையாளங்களானது கருத்தில் எடுக்கப்பட வேண்டும்

ஏற்றவேளை குறித்தக் காரியம் மாத்திரம் கவனிக்க தவறப்படாமல், அடையாளங்களாகிய திராட்சரசம் மற்றும் புளிப்பற்ற அப்பத்தினுடைய உண்மையான அர்த்தம்கூட "இருண்ட யுகங்களினுடைய" ஆவிக்குரிய இருளின் நிமித்தமாகத் தெளிவற்றதாய்க் காணப்பட்டது. மூன்றாம் நூற்றாண்டில், புறமதத்தினுடைய தத்துவ ஞானங்களிலிருந்து, கிறிஸ்தவத்திற்குள்ளாகக்

கொண்டுவரப்பட்டதான திரித்துவ உபதேசத்தை உடையவர்களின் தப்பறைகளானது, தேவனுடைய பிள்ளைகளுடைய மனங்களைத் திரித்துப்போட்டு, மூடிப்போட்டு, நமது மீட்பர் நமக்கான ஈடுபலி விலைக்கிரயமெனக் கொடுத்திட்டதான பலி குறித்தத் தெளிவான கண்ணோட்டங்களைக் காண தடைப்பண்ணினதாய் இருந்தது.

கிறிஸ்துவையும், வரவிருக்கின்ற விடுதலையையும் முன்னடையாளப்படுத்தின இஸ்ரயேல் ஜனங்களின் நிழலான ஆட்டுக்குட்டியானது, (பாதுகாப்பிற்காக வீட்டின்மீது தெளிக்கப்பட்டதான இரத்தத்தைத் தவிர்த்து) அனைவராலும் புசிக்கப்பட்டது. இப்படியாகவே உண்மையான ஆட்டுக்குட்டிக்கான நினைவுகூருதல் சின்னங்களினுடைய விஷயத்திலுமாகும். அப்பமானது அனைவராலும் புசிக்கப்படும்; திராட்சரசமோ சொற்பமானவர்களால் மாத்திரமே பங்கெடுக்கப்படும். அப்பமும், திராட்சரசமும், நமது கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. நமது கர்த்தர், ஒரு மனிதனாக, உலகத்திற்கு ஜீவன் கொடுக்கத்தக்கதாக, பரலோகத்திலிருந்து இறங்கிவந்த ஜீவனுள்ள அப்பமாவார் (சொல்லர்த்தமாக ஜீவ அப்பமாவார்). அடையாள விளக்கமானது அருமையாய் உள்ளது: மனுக்குலமானது — ஜீவன் இல்லாமையினால் மரித்துக்கொண்டிருக்கின்றது மற்றும் மரணத்தை நிறுத்துவதற்கும், நல்நிலை ஆக்கிடுவதற்கும், ஆதாமில் இழந்துபோனதான ஆதிப் பரிபூரணத்திற்குச் சீர்ப்பொருந்த பண்ணுகிறதற்கும் ஏதுவாக ஜீவன் உண்டாக்கும் தன்மைகளை முழுக்கப்பெற்றுள்ளதான உணவிற்கான தேவையில் காணப்படுகின்றது. மனிதர்கள் சைவ உணவிலும், அசைவ உணவிலும், தாது பொருள்களிலும், வேதியியலிலும், அனைத்துப் பகுதிகளிலும் சஞ்சீவிகளை/அனைத்து நோய்களுக்கான மருந்துகளை, வாழ்நாளை நீட்டிப்பதற்கான மருந்துகளை, ஜீவனைத் திருப்பிக்கொடுக்கிற மருந்துகளைத் தேடிக்கொண்டிருக்கின்றனர்; ஆனால் அனைத்துமே விருதாவாக உள்ளது; இப்படியான எந்த "ஜீவ அப்பமும்" இதுவரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் மனிதர்கள் இப்படியாக விருதாவாய் நான்காயிரம் வருடங்களாகத் தேடிக்கொண்டிருக்கையில், பரலோகத்திலிருந்து மெய்யான ஜீவ அப்பமானது இறங்கிவந்தது; இதை ஒருவன் புசித்தானானால் (அதைத் தனக்கெனப் பயன்படுத்துவது அவனுக்கான சிலாக்கியமாக இருக்க, அதைத் தனக்கெனச் சொந்தமாக்கிக்கொள்வானானால் அல்லது பங்கெடுப்பானானால்) அவன் என்றென்றும் ஜீவிப்பான். அதாவது அவனது மீட்பிற்காக தேவன் அருளியுள்ள வழிவகை மீதான விசுவாசத்தினால், ஜீவனுக்கான தயவை அவன் ஏற்றுக்கொள்கையில், அதற்கான நிபந்தனையின் அடிப்படையில், ஆம் அவைகளின் அடிப்படையில் மாத்திரம், ஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம். இதையே நமது கர்த்தர் அடையாள வார்த்தையில் தமது மாம்சத்தைப் புசித்தல் என்று குறிப்பிட்டார்.

அடையாள விளக்கமானது எவ்வளவு முழுமையாய், அருமையாய் உள்ளது என்பதைக் கவனியுங்கள். தேவனுடைய குமாரன், அவர் முதலில் பரலோக (அ) ஆவிக்குரிய ஜீவியாகக் காணப்பட்டபோது, அவர் மனிதனுக்கான அப்பமாகக் காணப்படவில்லை மற்றும் அவர் தம்முடைய ஆவிக்குரிய சரீரத்தை அப்பமாகக் கொடுத்திருந்தாரானால், வேறுபட்ட சுபாவமுடையவர்களாகிய (மனித சுபாவமுடையவர்களாகிய) நம்மால் அதை நம்முடையதாக்கிக்கொள்ள முடியாது; அதாவது ஒரு மரத்தினைப் போஷிப்பதும், முழுமைப்படுத்துவதுமான விஷயங்களானது (காற்று, ஈரப்பதம், பூமி/நிலம்), வித்தியாசமான சுபாவத்தின் காரணமாக மனிதனை முழுமைப்படுத்த முடியாததுபோலாகும். மனுஷன் மனுஷீக அல்லது மாம்சீக சுபாவம் உடையவனாவான். ஆகையால் தேவனுடைய ஆவிக்குரிய குமாரன், மரித்துக்கொண்டிருக்கும் மனிதர்களுக்கு ஜீவ அப்பத்தைக் கொடுக்கவேண்டுமானால், அந்த அப்பம் ஜீவனளிக்கும் சத்து நிரம்பப் பெற்றுள்ளதான மாம்சமாகக் காணப்பட வேண்டும்.

இதற்கான ஆயத்தத்திற்காகவே தேவனுடைய குமாரன், ஆவியிலிருந்து, மாம்சத்திற்கு மாற்றப்பட்டார். "அவர் மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினபோது" அவர் இவ்வளவாய்த் தம்மைத் தாழ்த்தினவரானார் (யோவான் 1:14). மாம்சமே ஜீவன் கொடுக்கும் அப்பமாகப்போகின்றது; பரலோக அல்லது ஆவிக்குரிய நிலைமையில் காணப்பட்ட அவர் பூமிக்குரியவர் (அ) மனுஷனானதால், மாம்சமானதால், இந்த அப்பமானது பரலோகத்திலிருந்து இறங்கிவந்த அப்பம் என்று, அதாவது ஆவிக்குரிய (அ) பரலோக நிலையிலிருந்து பூமிக்குரிய (அ) மனித சுபாவத்திற்கு இறங்கி வந்த அப்பம் என்று கூறப்படுவது உண்மையே. இதுவே மனுஷன் புசித்தால், மரியாமல் இருக்கப்பண்ணுகிறதான ஜீவ அப்பமாகும் (யோவான் 6:50).

இப்பொழுது நாம் ஜீவ அப்பத்தைக் கண்டுபிடித்துவிட்டோம், ஆனால் அவரை நாம் எவ்வாறு புசிப்பது? ஜீவனுள்ள எதையும் நாம் புசிக்கமுடியாது; நோயின் காரணமாக மரிக்கும் எதுவும்கூட உணவிற்கு ஏற்றதாய் இருக்காது. ஆகையால் ஒருவேளை நமது கர்த்தர் இயற்கையான மரணம்* என்று அழைக்கப்படுகின்றதான மரணத்தை அடைந்தாரானால், இது அவரும், மற்ற மனிதர்களைப்போன்று பாவி என்பதை நிரூபிப்பதாய் இருந்திருக்கும்; ஏனெனில் மரணம் என்பது, பாவத்திற்கான தண்டனையாக இருக்கின்றது; மற்றும் இப்படியாக மரிக்கும் அவரில் பங்கெடுப்பது/

அவரைப் புசிப்பது என்பது, புதிய ஜீவன் எதையும் கொடுக்கிறதாய் இராது. [*உண்மையில் இயல்பான மரணம் என்ற ஒன்று கிடையாது. தேவனுடைய ஏற்பாட்டில் ஜீவன் என்பதுதான் இயல்பான நிலையாகும் மற்றும் இயல்பான ஜீவனுக்கு எதிரான மீறுதல்களின்போதே மரணம் வருகின்றது – மரணம் என்பது கீழ்ப்படியாமைக்கான, பாவத்திற்கான பின்விளைவு (அ) தண்டனையாகும். எனினும் இயல்பான மரணம் எனும் வார்த்தையானது, விழுந்துபோன, ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுள்ளதான சந்ததி தொடர்பாகப் பயன்படுத்தலாம்; ஏனெனில் இயல்பான மரணம் என்பது பாவத்திற்கான இயல்பான விளைவாகவும், அனைத்து மனித பாவிகளுக்கும் பொதுவானதாகும். ஆகையால் நமது கர்த்தர் பாவம் செய்யாததினால் அவரால் வியாதி முதலானவைகளால் மரிக்க முடியாது; ஒருவேளை அவர் பாவம் செய்வாரானால், அவரது மாம்சமானது ஜீவன் அளிக்கிறதாய் இருக்க முடியாது. அவரது மாம்சமானது நமக்கு ஜீவன் அளிக்கத்தக்கதாக அவர் தமது ஜீவனை நமக்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமாகக் கொடுக்க விரும்பினாலேயே தவிர, மற்றபடி அவருடைய ஜீவன் எடுக்கப்பட முடியாது.] ஆகையால் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் பலியின் மூலமாகவே அல்லாமல், நமக்கு இந்த ஜீவனுக்கான உணவை (அ) ஜீவ அப்பத்தை அளிக்கிறதற்கு வேறெந்த வழியும் இல்லை என்று நாம் காண்கின்றோம்; நம்முடைய ஜீவனானது பறிமுதல் பண்ணப்பட்டதுபோல, அவரது ஜீவனும் பறிமுதல் பண்ணப்பட்டதினால், அவர் மரிக்கவில்லை; மாறாக ஆதாமுக்கும், இவர் வாயிலாக ஜீவனை இழந்து போனவர்களாகிய நம் அனைவருக்கும் என்று அவர் தம்மை ஈடுபலியாக, சரிநிகர்சமான விலையாக, மீட்கும்பொருளாக ஒப்புக்கொடுத்தவரானார். மாம்சத்தில் அவரது ஜீவியமானது, அவரது மாதிரியானது, ஆலோசனையானது, போதனைகளானது, எப்படி இசையினால் (பாட்டினால்) பட்டினிக்கிடந்து இறக்கும் மனிதனை ஜீவனோடு வைக்க முடியாததுபோலவே, ஜீவன் கொடுக்கமுடியாது. நாம் அவரது பரிபூரணமான மாதிரியைக் குறித்து ஆராயலாம் மற்றும் பின்பற்றுவதற்கு முயற்சிக்கலாம், ஆனால் அதனை நம்மால் பூரணமாய்ச் செய்ய முடியாது, ஏனெனில் நாமே மரித்துக்கொண்டிருக்கின்றோம் மற்றும் பலத்தில் குறைவுப்பட்டிருக்கின்றோம். நமக்கு ஜீவன், ஜீவனளிக்கும் உணவு தேவை மற்றும் வேறெந்த விதத்திலும் நாம் பெற்றுக்கொள்ள முடியாத இந்த ஜீவனை நமக்கு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காகவே, அவர் மாம்சமானார்.

ஆகையால் இக்காரியம்குறித்து அவர் தம் சீஷர்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கையில், "மனுஷகுமாரன் பாடுகள் பட்டு" என்று கூறினதின் மூலம், அவர்கள் தம்மைப் புசிக்க வேண்டுமானால் ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படுவது அவசியம் என்று அவர்களுக்குக் கூறினார். அவர் மாம்சத்திலேயே, அவர்களது போதகராகவே தொடர்ந்து காணப்பட்டிருந்திருப்பாரானால், அவர்கள் நிச்சயமாய் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள், ஆனால் ஒருபோதும் ஜீவன் பெற்றிருந்திருக்கமாட்டார்கள். ஆகவேதான் "மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்" என்றும், "நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கும்; நான் போகாதிருந்தால் (நான் மாம்சத்திலேயே இருந்துவிட்டால், நான் என்னைப் பலியாக ஒப்புக்கொடுத்து, இவ்விதமாய் உங்கள் மீட்பிற்கான பிதாவின் திட்டத்தினை நடந்தேற்றவில்லை என்றால்) தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்" என்றும் கூறினார். தேவனால் புத்திரர்கள் என்று அடையாளம் கண்டுகொள்ளப்படத்தக்கதாகவும், அப்படியானவர்களுக்கு ஜீவன் அருளப்படத்தக்கதாகவும், நீங்கள் ஆக்கினையிலிருந்து தப்பித்து, தேவனால் அங்கீகரிக்கப்படத்தக்கதான மற்றும் தேவனுக்கு இசைவான நிலைக்கு வருவதற்கு என்னுடைய பலியின் மூலமாகவும், என்னில் பங்கெடுப்பதன் மூலமாகவுமே ஒழிய, உங்களுக்கு வேறு வழியில்லை, என்ற விதத்தில் கூறினார்.

ஆகையால் சத்தியத்தை ஜீவ அப்பம் என்று எண்ணிக்கொள்வதும், சத்தியத்தைப் புசிப்பது என்பது நம்மை நீதிமானாக்கும் என்றோ, ஜீவிப்பதற்கான உரிமையைக் கொடுக்கும் என்றோ எண்ணிக்கொள்வதும் தவறாகும். மலைப் பிரசங்கத்தையும், கர்த்தருடைய மற்றச் சொற்பொழிவுகளையும் விசுவாசிப்பது என்பது ஜீவனைக் கொடுக்கும் என்று எண்ணிக்கொள்வதும் தவறாகும். இவைகளெல்லாம் சத்தியங்கள்தான் மற்றும் இவைகள் ஆட்டுக்குட்டியோடு புசிப்பதற்கும், ஆட்டுக்குட்டியினைப் புசித்தப் பிற்பாடும், புசிப்பதற்கு ஏற்றதாய்க் காணப்படும் நல் உணவுகளாகும்; ஆனால் இவை ஆட்டுக்குட்டி இல்லாமல் ஜீரணமாகாது. இதே சத்தியங்களானது அநேகருக்கு ஜீரணமாகாமல் இருந்துள்ளது மற்றும் ஊட்டச்சத்து உணவாய் இருப்பதற்குப்பதிலாக, வாந்தி உண்டாக்குகிறவைகளாகச் செயல்படுகின்றன மற்றும் "அநேகர் கர்த்தருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்." ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டு, அப்போஸ்தலர்கள் விசுவாசத்தின் வாயிலாக ஜீவனளிக்கும் அந்த உணவில் புசிப்பதற்கு முன்புவரையிலும், பன்னிரண்டு பேரும்கூட, நமது கர்த்தருடைய போதனைகளிலிருந்து குறைவான போஷாக்கையே பெற்றவர்களாய் இருந்தார்கள். பிற்பாடு ஜீவனுடைய பலத்தினாலும், சக்தியினாலும்தான், அவர்களிடத்தில் போதகர் பேசியிருந்ததான அனைத்துக் காரியங்களிலிருந்தும் இனிமையையும், பலத்தையும் அடையமுடிகின்றவர்களாய் இருந்தார்கள். ஆட்டுக்குட்டியைப் புசித்தலானது, அது

கொண்டுவந்ததான புதிய ஜீவனானது, அவர்களை மீண்டுமாகத் தேவனுடனான ஐக்கியத்தில் சீர்ப்பொருத்தியது மற்றும் புத்திர சுவிகாரத்தின் ஆவியை அவர்கள் பெற்றுக்கொண்டபோது, சத்தியங்களை, ஏற்றக்கால உணவுகளென அவர்களால் உணர்ந்துகொள்ள முடிந்தது மற்றும் பலமடையத்தக்கதாகப் பயன்படுத்த முடிந்தது.

நமது ஆட்டுக்குட்டியானவர் நமக்காக, நம் சார்பிலாக அடிக்கப்பட்டார்; ஏனெனில் அவர், ஜீவன் பெறும்படிக்கு அனைவராலும் புசிக்கப்பட வேண்டிய அப்பமாகக் காணப்படுகின்றார் மற்றும் அவர் தம்மை ஒப்புக்கொடுக்காதது வரையிலும் நம்மால் அவரைப் புசிக்க முடியாது. இப்பொழுது அவர் என்ன கொடுத்தார்? மற்றும் நாம் என்ன புசிக்கின்றோம்? என்பதைப் பார்க்கலாம். அவரது மாம்சமே என்பது நம்முடைய பதிலாகும். ஆனால் அவரது மாம்சம் என்கிறபோது, அதன் அர்த்தமென்ன? "அவர் மாம்சமாக்கப்பட்டார்," அதாவது மனுஷனானார் என்று மேலே நாம் காண்பித்தோம் (யோவான் 1:14). ஆகையால் அவரது மாம்சத்தைக் கொடுப்பது என்பது, மனிதனாக அப்போது காணப்பட்ட அவரையே கொடுப்பதாகும்.

தேவனுடைய பிரமாணத்தின் கீழ் அவர் பெற்றிருந்ததான மனித உரிமைகள் மற்றும் சிலாக்கியங்களை, நம்முடைய நன்மைக்காக துறந்திட்டார்; அதாவது பிரதிநிதியாகிய ஆதாமுக்குள் உரிமைகளையும், சிலாக்கியங்களையும் இழந்துபோனதின் காரணமாக, உரிமைகளோ (அ) சிலாக்கியங்களோ இல்லாமல் காணப்படும் மனித குடும்பமானது, இந்த உரிமைகள், சிலாக்கியங்கள் மற்றும் சுயாதீனங்களையும் திரும்பப்பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவர் துறந்திட்டார். ஆதாம் பாவம் செய்து, குமாரத்துவத்திற்குரிய உரிமை மற்றும் சிலாக்கியம் அனைத்தையும் இழந்தபோது, அவரது சந்ததி அனைத்தும் அவருக்குள் காணப்பட்டது; ஆகையால் நாம் அனைவரும் அந்த ஓர் இழப்பில், பங்காளிகளாகக் காணப்படுகின்றோம். ஆகையால் இப்பொழுது முழுமையான மற்றும் போதுமான உரிமைகளானது, புதிய மனிதனாகிய "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவுக்கு" உரியதாக இருக்கின்றது; பரிபூரணரும், ஆக்கினைக்குட்படாதவருமான இவர், ஆதாம் இழந்துபோனதான மனிதனுக்குரிய கீழ் நிலை உரிமைகளுக்காக, தம்முடைய உயர்நிலை உரிமைகளை மாற்றிக்கொண்டவரானார். இவர் தம்மையே கொடுத்துவிட்டு மற்றும் தாம் பெற்றிருந்ததான அனைத்தையும், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருந்ததான சந்ததிக்கான நன்மைக்காகவும், பயன்பாட்டிற்காகவும் ஒப்படைக்கையில், உலகத்தின் ஜீவனுக்காக இவரது மாம்சம் கொடுக்கப்படுகிற காரியமானது, இறந்து கொண்டிருக்கும் மனுஷனிடத்தில் இழந்துபோன சிலாக்கியங்களையும், சுயாதீனங்களையும், ஜீவனையும் திரும்பக்கொடுப்பதைக் குறிக்கின்றதாய் இருக்குமென நாம் காண்கின்றோம் (மத்தேயு 13:44; யோவான் 6:51). ஆகையால் இவரது மாம்சத்தைப் புசிப்பது என்பது, புசிப்பவன் பூரணரும், பாவமில்லாதவருமான "மனிதனாகிய கிறிஸ்து இயேசு" பெற்றிருந்ததான உரிமைகள், சுயாதீனங்கள் மற்றும் ஜீவனைத் தன்னுடைய பயன்பாட்டிற்கெனத் தன்னுடையதாக்கிக்கொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

அவர் மரித்தபோது, கொடுத்ததானவைகளானது, நம்முடையதாகவும், ஆதாமின் அனைத்துப் பிள்ளைகளும் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறதாகவும் காணப்படுகின்றது. ஆனால் அது அதைப் புசிப்பவர்களுக்கு மாத்திரமே, அதாவது கிறிஸ்து இயேசுவுக்குள்ளான மீட்பின் வாயிலாக தேவனால் நமக்கு இலவசமாய் அருளப்பட்டதான அந்த உரிமைகளையும், சிலாக்கியங்களையும் விசுவாசத்தினால் தங்களுடையதாக்கிக்கொள்பவர்களுக்கு மாத்திரமே ஜீவன் முதலானவைகளைக் கொடுக்கின்றதாய் இருக்கும்.

ஒரு மனிதன் குஷ்டரோகியானால், அவன் மாத்திரமல்லாமல், அவனுக்குள் இருக்கும் அனைவரும், அதாவது அவனுக்கு இன்னும் பிறக்காத சந்ததி அனைவரும் அதினால் பாதிக்கப்பட்டிருப்பார்கள். இப்படியாகவே ஆதாம் மற்றும் அவரது பிள்ளைகளின் விஷயத்திலும் காணப்படுகின்றது; நாம் "பாவத்தில் பிறந்தவர்களாய்" இருக்கின்றோம் மற்றும் அதன் தண்டனையாகிய மரணத்தின் கீழ், அதாவது நமக்கான இயல்பான பிரமாணமென மரணத்தின் கீழ்க் காணப்படுகின்றோம். குஷ்டரோகத்தினை நிச்சயமாய்க் குணப்படுத்தும் மருந்து (அ) ஜீவ அப்பம் ஒன்று, நன்மை உண்டாகத்தக்கதாக அளிக்கப்படுகின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள், அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, புசிக்கப்பட/சொந்தமாக்கிக்கொள்ளப்பட வேண்டும்; இல்லையேல் குணமடையாது. இப்படியாக கிறிஸ்துவின் விஷயத்திலும், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு, மரித்துக்கொண்டிருக்கும் பாவியின் விஷயத்திலும்கூடக் காணப்படுகின்றது. அவனுக்கு அவசியமான தன்மைகளை அப்பமானது பெற்றிருப்பது மாத்திரமல்லாமல், அவன் அதை அடையத்தக்கதாகக் காணப்படுவது மாத்திரமல்லாமல், அவன் பாவம் எனும் நோயிலிருந்தும், மரணத்திற்குள்ளாக தீர்க்கும் அதன் சாபத்திலிருந்தும் விடுதலையடைய வேண்டுமெனில், அவன் அதைப் புசிக்க வேண்டும் (அ) விசுவாசத்தினால் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும். குஷ்டரோகியாகப் பிறந்த ஒவ்வொரு பிள்ளையும், தனக்கெனப் புசிப்பது அவசியமாக இருப்பதுபோலவும், குடும்பத்தில் ஒருவர் மருந்தை (அ) ஜீவன் தரும் உணவை உட்கொள்வதன் மூலம், குடும்பத்திலுள்ள அனைவரும் குணமடைவதில்லை என்பதுபோலவும், பாவிகளின்

விஷயத்திலும் காணப்படுகின்றது; பாவிகளில் ஒவ்வொருவரும், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவ ஆட்டுக்குட்டியினுடைய, ஜீவன் அளிக்கும் மாம்சத்தினைத் தனக்காகப் புசித்துக்கொள்ள வேண்டும். அது அனைத்து மனிதர்களுக்கானதாகும்; ஆகையால் ஒவ்வொரு பாவியும், அதைப் புசித்து, ஜீவிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றிட வேண்டும் மற்றும் ஜீவனுக்கான இந்த அப்பத்தினைப் புசியாமல், எவரும் குணமடைந்து, ஜீவனுக்குள் (பூரணத்திற்குள்) கொண்டுவரப்பட முடியாது. (அநேகர் இதன் அடையாள சின்னத்தை அறியாமையில் புசித்தாலும்) எவரும் இதை அறியாமையில் புசிக்க முடியாது; புறமதத்தினர் எவரும் இதைப் புசித்து, ஜீவிப்பதற்கான வாய்ப்பினை இதுவரையிலும் பெற்றுக்கொள்ளவுமில்லை மற்றும் இந்த ஒரு சத்தியத்தினைப் பற்றின அறிவிற்குள்ளாக அனைவரும் வரவேண்டும் என்பதினால், இதுவே மாபெரும் ஆயிரவருட நாளில் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பிற்கான (பரீட்சைக்கான) நிரூபணமாய் இருக்கும்; ஏனெனில் அனைவரும் விரும்பினால், புசித்து என்றென்றும் ஜீவிக்கத்தக்கதாக "இதற்குரிய சாட்சி ஏற்றக்காலங்களில் அனைவருக்கும்" கொடுக்கப்பட வேண்டும் (1 தீமோத்தேயு 2:4-6). இந்த யுகத்தில் சொற்பமானவர்கள் மாத்திரமே சத்தியம் குறித்த குறைவான அறிவிற்குள் வந்திருக்கின்றபடியால், இந்த மாபெரும் விருந்தை உலகத்திற்கு முன்பு வைப்பதற்கான தேவனுடைய "ஏற்றக்காலங்களானது" காலையிலாகும், திரும்பக்கொடுத்தலின் காலங்களிலாகும், கர்த்தரைப்பற்றின அறிவானது பூமியை நிரப்பிக் காணப்படுகின்றதான ஆயிரவருட நாளிலாகும் என்பது உறுதியே (ஆபகூக் 2:14; ஏசாயா 25:6).

ஆயிரவருட யுகத்தின்போதே, மனிதர்கள் கிறிஸ்துவைத் தேவனுடைய ஆட்டுக்குட்டி என்றும், தங்களுக்கான ஈடுபலி விலைக்கிரயம் என்றும் ஏற்றுக்கொள்கையில், சரீர ரீதியிலும், மன ரீதியிலும், ஒழுக்க ரீதியிலுமான அவரது பரிபூரணங்களில் பங்கெடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்; மற்றும் இப்படியாக அவர்கள் செய்து, அவரது போதனைகளுக்கு இணங்கும்போது, அவர்கள் படிப்படியாகப் பரிபூரணத்திற்கு, ஆதாமுக்குள் இழந்த அனைத்திற்கும் திரும்பி, அந்த யுகத்தினுடைய முடிவில் முழுமையான பூரணத்தை அடைவார்கள் (அ) அடையவில்லையெனில் துணிகரமான கீழ்ப்படியாமையின் நிமித்தமாக, எந்தக் குணமாகுதலோ, எந்த ஜீவ அப்பமோ, எந்த மருந்தோ பெற்றிராத இரண்டாம் மரணத்திற்குள் முற்றும், முழுமையாக ஜீவனிலிருந்து அறுப்புண்டு போவார்கள்.

இப்பொழுது இந்த ஜீவ அப்பத்தைப் பெற்றுக்கொண்டு, அதைப் புசிப்பவர்களாகிய (அ) தங்களுடையதாக்கிக்கொள்பவர்களாகிய, சபையாகிய நாம் பரிபூரணத்திற்கு நேராக நமது மனித ஆற்றல்கள் படிப்படியாகச் சீர்ப்பொருந்தப்படுவதையோ, மனித உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் முதலானவைகளுக்கு நாம் சீர்ப்பொருந்தப்படுவதையோ அனுபவிப்பதில்லை. நம்முடைய நிலையானது, எண்ணப்பட்ட நிலையே ஒழிய, உண்மையான நிலையல்ல. விசுவாசத்தினால் மாத்திரமே நமது மீட்பருடைய மாம்சத்தை நம்மால் புசிக்க முடியும் மற்றும் புசிக்கின்றோம்; (தரிசித்து இல்லாமல்) விசுவாசத்தினாலேயே நமது கர்த்தரினால் ஏறெடுக்கப்பட்ட பலியின் மூலமான மனித உரிமைகளையும், சுயாதீனங்களையும், ஜீவனையும் ஏற்றுக்கொள்கின்றோம். அடுத்த யுகத்தில் ஜீவிக்கும் மனுக்குலமானது, தங்கள் விசுவாசத்திற்கு உதவியாகத் தரிசித்தலைப் பெற்றிருப்பார்கள்; ஏனெனில் அவர்கள் விசுவாசத்தின் மற்றும் கீழ்ப்படிதலின் படிகளை எடுத்து வைக்கையில், படிப்படியாக தங்கள் சரீரத்தில் சீர்த்திருந்துதலை உணர்ந்துகொள்வார்கள். ஆனால் இப்பொழுது எவரும் தரிசித்து நடக்க முடியாது; ஆகையால்தான் வரவிருக்கும் யுகத்தில் இராஜரிகத்திலும், ஆசாரியத்துவத்திலும் கிறிஸ்துவோடுகூட மணவாட்டியாகவும் உடன்சுதந்தரர்களாகவும் காணப்படத்தக்கதாக இப்பொழுது உலகத்திலிருந்து தெரிந்தெடுக்கப்படுகின்றதான "சிறுமந்தையினர்," சொற்பமானவர்களாகவும், மிகவும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்கு, அவரது தூய்மையையும், அவரது பரிபூரணத்தையும், அவரது கறையற்ற தன்மையையும், மனிதனுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டதான தேவதயவுகள் அனைத்திற்குமான அவரது உரிமையையும்குறித்து நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இன்னுமாக மனித உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் எனும் ஆசீர்வாதங்களானது — விழுந்துபோன மற்றும் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டுள்ளதான சந்ததிக்குத் திரும்பக்கொடுக்கப்படத்தக்கதாகவும், இப்படியாக ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட சிருஷ்டிகளுக்குத் தேவன் அருளாத நிலைகளுக்கு, அதாவது தேவனுடன் ஐக்கியம் கொள்ளும் நிலைக்கு, தேவனால் அங்கீகரிக்கப்படும் நிலைக்கு அனைவரும் வந்திடுவதற்கு அனுமதிக்கப்படத்தக்கதாகவும், அவர் இந்த மனித உரிமைகளையும், சிலாக்கியங்களையும் பலிச்செலுத்தியுள்ளார், ஒப்புக்கொடுத்துள்ளார் என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

அனைவருக்கும் பொதுவாய் விருந்தானது பரிமாறப்படப் போகின்றதான பொதுவான காலத்திற்கு முன்னதாக, ஏன் இப்படியாகச் சிலர் அவரது மாம்சத்தைப் (அவரது மனித பரிபூரணங்கள், உரிமைகள், முதலானவைகளை) புசிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்? ஆ! இங்கு ஒரு மிகவும் விலையேறப்பெற்றதான சத்தியம் காணப்படுகின்றது; இங்குக் கிறிஸ்து

இயேசுவுக்குள்ளாக நமக்குப் பாராட்டப்பட்டுள்ளதான "அவருடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியமானது" உலகத்தின் பார்வைக்கு மறைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. அதை இப்பொழுது பார்க்கலாம்.

திராட்சரசத்தினால் அடையாளப்படுத்தப்பட்டதான இரத்தமானது, மரணத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; "இரத்தம் ஏதோ ஒன்றின் - உயிர்" ஆகும்; ஆகையால் இரத்தம் சிந்தப்படுவது என்பது அல்லது சிருஷ்டியினின்று எடுக்கப்படுவது என்பது சிருஷ்டியினுடைய மரணத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் கிறிஸ்துவினுடைய சிந்தப்பட்ட இரத்தமானது, கிறிஸ்துவினுடைய மரணத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது உலகத்தின் பாவங்களுக்கு ஜீவன் கொடுக்கப்பட்டதாய் இருக்கின்றது. நிழலான பஸ்காவில் ஆட்டுக்குட்டியானது புசிக்கப்பட்டது, ஆனால் இரத்தம் புசிக்கப்படவில்லை. இரத்தத்தைப் புசிப்பதற்கு எந்த இஸ்ரயேலனும் அனுமதிக்கப்படவில்லை. இக்காரியமானது எப்படி அனைவரும் மனுஷக்குமாரனுடைய மாம்சத்தைப் புசிப்பார்கள், ஆனாலும், அனைவருமே அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ண (அ) அவரது மரணத்தில் பங்கெடுக்கக்கூடாது என்பதற்கு அடையாளமாய் இருக்கின்றது. நமது கர்த்தர் தமது இரத்தத்திற்கு அடையாளமான திராட்சரசத்தை யாருக்குக் கொடுத்தாரோ, அவர்களே அவரது மரணத்தில் பங்கெடுப்பதற்கும், பங்கடைவதற்கும் அழைக்கப்பட்டனர் மற்றும் இது ஏற்றதுமாகும்; ஏனெனில் அவர்கள் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாக இருக்கப்போகின்றனர் மற்றும் ஒவ்வொரு மனுஷனுக்காகவும் தலை மரணத்தை ருசிப்பார்க்க வேண்டியது மாத்திரமல்லாமல், அவரது சரீரமாகிய நாமும்கூட "அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி," "அவருடனேகூட மரிக்க" வேண்டும் (பிலிப்பியர் 3:10; உரோமர் 6:8). ஆகவே "பாத்திரம்" என்பது மரணத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது; இதை நாம் அறிந்த நிலையில், இதில் நாம் பங்கெடுக்கையில், நாம் நமது கர்த்தரும், மீட்பருமானவருக்கான ஊழியத்தில் நமது ஜீவியங்களை மரணம் வரையிலுமாக ஒப்புக்கொடுப்பவர்களாய் இருப்போம். திரும்பக்கொடுத்தலுக்கும், நித்தியமான ஜீவனுக்கும் நாம் பாத்திரவான்களா (அ) இல்லையா என்பது, அவரது மாம்சத்தை நாம் புசிக்கும் (ஏற்றுக்கொள்ளும் மற்றும் சொந்தமாக்கிக்கொள்ளும்) விஷயத்தைச் சார்ந்திருக்கின்றது; ஆனால் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாக, அவரது மணவாட்டியாக, உடன்சுதந்தரர்களாக நாம் அங்கீகரிக்கப்படுவோமா (அ) இல்லையா என்பது, தற்கால யுகத்தில், விசுவாசத்தினால் அவரது மாம்சத்தை நாம் புசித்தப் பிற்பாடு, நாம் அவரது "பாத்திரத்தில்" பானம்பண்ணி, மரணம்வரையிலுமாக, அவரது சேவைக்கென்று நம்மையே முற்றிலும் அர்ப்பணிக்கும் விஷயத்தைச் சார்ந்திருக்கின்றது.

இது உண்மையானால், அப்பம் புசித்தப்பிற்பாடு, திராட்சரசம் கொடுக்கப்படும் காரியமும், அப்பத்தைப் புசித்தவர்களுக்கு மாத்திரமே இரசம் கொடுக்கப்படும் காரியமும் எவ்வளவு பொருத்தமானதாய் இருக்கின்றது. இக்காரியமானது அனைத்து வேதவாக்கியங்களுக்கு இசைவாகப் போதிப்பது என்னவெனில்: (மற்றவர்கள் அல்ல, மாறாக) தேவ ஆட்டுக்குட்டியானவருடைய பலியிலும், புண்ணியத்திலுமுள்ள விசுவாசத்தினால், பாவங்கள் அனைத்திலிருந்தும் நீதிமானாக்கப்பட்டவர்கள் மாத்திரமே, தங்கள் (நீதிமானாக்கப்பட்ட) மனுஷீகத்தைச் சிலுவையில் அறைந்திடுவதற்கும், இந்த யுகத்தில் கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் பங்கடைவதற்கும், பின்தொடரும் ஆயிரவருட யுகத்திலும், நித்திய காலமும் அவரது மகிமையில் பங்கடைவதற்கும் அழைக்கப்படுகின்றனர் என்பதாகும்.

அவரது மாம்சத்தைப் புசிக்கிறவர்கள் (அவரது புண்ணியங்களைத் தங்களுடையதாக்கிக்கொள்பவர்கள் - நீதிமானாக்கப்பட்டவர்கள்) மற்றும் அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுபவர்கள் (தங்கள் நீதிமானாக்கப்பட்ட மனுஷீகத்தை அவரது சேவையில் பலியாகக் கொடுப்பதன் வாயிலாக, அவரது பலியில் அவரோடுகூடப் பங்கெடுப்பவர்கள்) மாத்திரமே "கிறிஸ்துவினுடைய ஒரே சரீரத்தின்" அங்கத்தினர்களென, "மெய்யான திராட்சச்செடியின்" அங்கத்தினர்களென, அவரில் நிலைத்திருப்பார்கள் (யோவான் 6:56). இப்படியானவர்கள் மாத்திரமே (வசனம் - 53) தன்னில்தானே ஜீவனுடையவர்களாய் ஆகமுடியும்; அதாவது எதையும் சார்ந்திராத ஜீவனை, அழியாமையைப் பெற்றுக்கொள்ள முடியும் (மிலேனியல் டாண், தொகுதி - I, அத்தியாயம் - 10 பார்க்கவும்).

மீதமான மனுக்குலத்தார் "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவினால்" பலிச் செலுத்தப்பட்ட உரிமைகளைப் புசிப்பதன் மூலம் (சொந்தமாக்கிக்கொள்வதன் மூலம்) சார்ந்திருக்கும் ஜீவனை அடைவார்கள்; இது விருப்பமுள்ளவர்களுக்கும், கீழ்ப்படிதலுள்ளவர்களுக்கும் நித்திய காலமும் அருளப்படும்.

இவர்கள் அனைவரும் முதலாவதாகக் கர்த்தரைப்பற்றியும், அவர் செலுத்தின பலிபற்றியும், அது அளித்ததான நீதிமானாக்கப்படுதலையும், திரும்பக்கொடுத்தலையும் பற்றியுமான அறிவிற்குள்ளாகக் கொண்டுவரப்பட வேண்டும் மற்றும் பின்னர் அதில் இலவசமாய்ப் பங்கெடுத்து, ஜீவிக்கலாம். இப்படியானவர்களைக்குறித்து ("பாத்திரத்தில்" பங்கெடுக்காமல்) "இந்த அப்பத்தைப்

புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்'' என்றும், ''என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்,'' அதாவது ஜீவன் அளிப்பவராகிய கிறிஸ்துவைச் சார்ந்துள்ளவர்கள் அனைவருக்கும் — சார்ந்திருக்கும் ஜீவன் அருளப்படும் என்றும் எழுதப்பட்டுள்ளது. வித்தியாசம் என்னவெனில் இப்பொழுது தெரிந்தெடுக்கப்படுகின்றதான சுவிசேஷ சபையானது, கிறிஸ்துவின் சரீரமானது, தலையானவரோடுகூட அழியாமையை உடையவர்களாய் இருப்பார்கள்; தன்னில்தானே ஜீவனுடையவர்களாய் இருப்பார்கள் மற்றும் உலகத்திற்கு ஜீவன் கொடுக்கிற ஆதாரமாய் இருப்பார்கள்; உலகமானது இந்த ஊற்றண்டைக்கு ஜீவனுக்காக வந்து, இதனால் ஜீவிப்பவர்களாய் இருப்பார்கள்.

''இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும்குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்'' என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகளையும் நாம் கவனிக்கின்றோம் (1 கொரிந்தியர் 11:27, 29). இதன் அர்த்தம் என்னவெனில், கிறிஸ்துவின் பலியானது தங்களுடைய பாவங்களுக்கானது என்று அடையாளங்கண்டுகொள்ள தவறும் அனைவரும், இந்த அடையாளங்களைப் புசிப்பது என்பது, ''இவரது இரத்தப்பழியானது எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக'' என்று யூதர்கள் சத்தமிட்டப்போது, பழிக்கு ஆளானதுபோல, இவர்களும் அவரைக் கொன்றவர்கள் என்ற பழிக்கு ஆளானவர்களாய் இருப்பார்கள். யூதர்கள் தங்களைக் குற்றமில்லாத இரத்த (மரணத்திற்கான) பழிக்குள்ளாக்கினதுபோன்று, இப்பொழுது கர்த்தருடைய சரீரமும், இரத்தமும் தங்களுக்கான ஈடுபலியென்று நிதானித்தறியாமல், அடையாளங்களைப் புசிப்பவர்களும், அவரது இரத்தம் எங்கள்மேல் இருப்பதாக என்றும் சொல்லுகிறவர்களாய் இருப்பார்கள். கர்த்தருடைய சரீரமும், இரத்தமும் தங்களுக்கான ஈடுபலி என்று அடையாளம் கண்டுகொள்ளாதவர்கள் அனைவருக்கும், இதில் பங்கெடுப்பது என்பது, அவரது சரீரத்தைப் பிட்டதிலும், அவரது இரத்தத்தைச் சிந்தினதிலுமான குற்றத்தில் பங்குள்ளவர்களாக தீர்க்கப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்; இது இவர்களுக்கு மன்னிப்பை - பாவங்களுக்கான மன்னிப்பையும் பேசாது.

பொதுவான (ஆங்கில) மொழியாக்கமானது *(condemnation)* என்று மொழிப்பெயர்ப்பதற்குப் பதிலாக, *damnation* என்று சரியற்ற மொழிப்பெயர்ப்பைக் கொடுத்துள்ளது. இதை அபாத்திரமாய், அறியாமையில் செய்யும் திரளான ஜனங்களுக்கு, அதாவது அடையாளங்களினுடைய அர்த்தத்தினைச் சரியாய் அடையாளம் கண்டுகொள்ளாமலும், அவ்வடையாளங்களானது குறிக்கின்றதான கர்த்தருடைய மரணத்தின் முக்கியத்துவத்தைச் சரியாய் அடையாளங்கண்டுகொள்ளாமலும், இதை அபாத்திரமாய் அறியாமையில் செய்யும் ஜனங்களுக்கு உண்மையான எந்த இரத்தப்பழியும் இல்லை, மாறாக அடையாள பழியே உள்ளது. அடையாளமாக இவர்கள் கர்த்தருடைய சரீரத்தைப்பிட்டு, அவரது இரத்தத்தினைத் தங்கள்மேல் எடுத்துக்கொள்கின்றார்கள். அடையாளமானது சரியாய்ப் புரிந்துகொள்ளப்படுகையில், அது சமாதானத்தையும், பாவங்களுக்கான மன்னிப்பையும், ஆட்டுக்குட்டியுடன் ஐக்கியத்தையும் பேசுகின்றாய் இருக்கும்; ஆனால் புரிந்துகொள்ளப்படவில்லையெனில் அது நியாயப்பிரமாணத்தின் கீழ், கொலைக்கான அடையாளமான ஒப்புக்கொள்ளுதலாக அர்த்தமாகிவிடும். ஆனால் இவை அனைத்தும் அடையாளமாய் இருப்பதினால், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவதும், அடையாளமான ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுதலாகவே இருக்கும். உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவனுடைய ஆட்டுக்குட்டியினால் கொடுக்கப்பட்டதான ஈடுபலி குறித்த அறிவிற்குள் முதலாவது வருபவர்கள் மாத்திரமே, இந்த அடையாளத்தை அபாத்திரமாய்ப் பயன்படுத்துகிறவர்களுக்கு வருகிறதான உண்மையான ஆக்கினைக்குள்ளான தீர்க்கப்படுதலுக்குள் உண்மையாய் வரமுடியும்.

அவர் நிமித்தமாக, பாடுகள் மற்றும் மரணம் எனும் பாத்திரத்தில் பானம் பண்ணுதலானது, பலிச் செலுத்துதலானது, அனைத்துமே தற்கால யுகத்திலேயே செய்து முடிக்கப்பட வேண்டும். மகிமையின் யுகமானது ஆரம்பமாகும்போது, கிறிஸ்துவின் பாடுகள் அனைத்தும், அதாவது தலை மற்றும் அவரது சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினருடைய பாடுகள் அனைத்தும் முடிந்துபோனதாய்க் காணப்படும். தீர்க்கத்தரிசிகள் கிறிஸ்துவின் பாடுகள்குறித்தும், பின்வரும் மகிமைகுறித்தும் பேசியுள்ளபோது, அவர்கள் சிறிய மற்றும் கடைநிலை அங்கத்தினன் அனைவரையும் உள்ளடக்கின முழுக் கிறிஸ்துவைக்குறித்தே பேசியுள்ளனர் (1 பேதுரு 1:11). மகிமை வரும்போது, இரத்தத்தைப் பானம்பண்ணுதலும், கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களென அந்தப் ''பரம அழைப்பில்'' பங்கடைவதற்கான வாய்ப்பு அனைத்தும் முடிவடைந்துவிடும். அப்போது முழுக் கிறிஸ்துவுக்குத் தலையான நமது கர்த்தரும், அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் பிட்கப்பட்டு, பலிச்செலுத்தப்பட்டவர்களாய்க் காணப்படுவார்கள் மற்றும் உலகத்தின் ஜனங்களைப்

போஷித்தலானது உண்மையில் ஆரம்பமாகும். திரும்பக்கொடுத்தலானது, அப்போது மனுக்குலத்தினால் உணர்ந்துகொள்ள ஆரம்பிக்கப்படும். இதை நாம் இப்பொழுது விசுவாசத்தினால் தரிப்பிக்கப் பெற்றிருக்கின்றோம், அதாவது பலிச்செலுத்தக்கூடிய இந்த ஒரு காலப்பகுதியில் நாம் பலிச்செலுத்தத்தக்கதாகத் தரிப்பிக்கப்பெற்றிருக்கின்றோம்; ஏனெனில் ஒப்புக்கொடுப்பதற்கு ஜீவனே இல்லாதபோது, ஜீவனுக்கான உரிமை இல்லாதபோது, எவராலும் கிறிஸ்துவுடனே தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்திட முடியாது. ஆகையால் சரீரம் நிறைவடைந்து பலிச்செலுத்துதல் முடிவடைகையில் வெளிப்படும் மகிமையில் நாமும் உடன் சுதந்தரர்களாகக் காணப்படத்தக்கதாக, கிறிஸ்துவுடன் உடன் பலிச் செலுத்துபவர்களாகுவதற்கும், அவரது பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்குமான அழைப்பாகிய "பரம அழைப்பை" நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, முதலாவது விசுவாசத்தினால் கிறிஸ்துவின் புண்ணியங்களில் பங்கெடுப்பதற்கும், விசுவாசத்தின் மூலம் பிதாவை அணுகுவதற்கும், பிரியமானவருக்குள் அங்கீகரிக்கப்படுவதற்கும் நமக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு அடையாளங்களானது (அப்பம் மற்றும் திராட்சரசமானது) கர்த்தருடைய பலிக்கான நினைவுகூருதல்களாக மாத்திரம் காணப்படாமல், அவருடன் பலிச் செலுத்துவதற்கான தங்களது உடன்படிக்கைக்கும் மற்றும் தாங்கள் நிபந்தனைகளை நிறைவேற்றி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகுவதற்கும், நமது கர்த்தரும், மீட்பரானவருடன் உடன் சுதந்தரர்களாகக் காணப்படுவதற்கும், ஜனங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பதில் அவருடன் உடன் வேலையாட்களாகக் காணப்படுவதற்கும் பாத்திரவான்களாகுவதற்கான காரியங்களுக்கும்கூட நினைவுகூருதல்களாகக் காணப்படுகின்றது.

நினைவுகூருதலின் இந்த அம்சத்தைப் பின்வரும் வார்த்தைகளைக்கூறி பவுல் நம் கவனத்திற்குக் கொண்டுவருகிறார்: "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய (அபிஷேகிக்கப்பட்ட வகுப்பார் அனைவருடைய) இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் (நமது கர்த்தரைத் தலையாகப் பெற்றிருக்கும் "சிறுமந்தையாகிய," சபையின்) ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான (அங்கத்தினர்களான) நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (1 கொரிந்தியர் 10:16, 17).

இந்த யுகத்தில் விசுவாசத்தின் மூலமாக (அ) அடுத்த யுகத்தில் நிஜமாகவே அனைவரும் நமது கர்த்தர் இயேசுவின் மாம்சத்தைப் புசிக்க வேண்டும்; அதாவது அவரது பலியினால் அனைவருக்கும் பெற்றுத்தரப்பட்டதான அந்த மனுஷீக உரிமைகள் மற்றும் சிலாக்கியங்களில் பங்கெடுக்க வேண்டும்; இல்லையேல் ஒன்றில் இப்பொழுது பலிச்செலுத்துவதற்கு (அ) ஒன்றில் (பலிச்செலுத்தும் சிலாக்கியம் இல்லாமல் அடுத்த யுகத்தில்) அதை அனுபவிப்பதற்கு என்று ஜீவிப்பதற்கான உரிமைகள் ஏதும் இருக்காது. ஆகையால் "இதைச் செய்வதற்கும்," நிதானித்து, அறிந்து செய்வதற்கும் என்று நாம் விசுவாசிகள் அனைவரையும் வலியுறுத்துகின்றோம். அடையாளத்தைப் பயன்படுத்துகையில், அனைத்துப் பாவங்களிலிருந்துமான நீதிமானாக்கப்படுதலையும், வேறு எந்த நாமத்தின் மூலமாகவோ, வழியின் மூலமாகவோ இல்லாமல், தேவனுடைய ஆட்டுக்குட்டியின் வாயிலாக தேவன் நீட்டுகின்றதான ஜீவிப்பதற்குரிய உரிமையையும் முழுமையாய் ஏற்றுக்கொள்ளுங்கள், சொந்தமாக்கிக்கொள்ளுங்கள், பயன்படுத்திக்கொள்ளுங்கள். விசேஷமாக கிறிஸ்துவோடுகூட அவரது மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்களும் மற்றும் இப்படியாய் அவரது "சரீரத்தின்" அங்கத்தினர்களுக்குள், வந்தவர்களுமாகிய விசுவாசிகள் அனைவரும், அவரது இரத்தத்தின் மூலமான நீதிமானாக்கப்படுதலை நினைவுகூர்ந்து, அவரோடுகூட மரிப்பதற்கான தங்களது உடன்படிக்கையினைப் புதிய, திவ்விய சுபாவத்தின் பங்காளிகளெனப் புதுப்பித்துக்கொண்டு, "இதை ஆசரிப்பார்களாக" (உரோமர் 6:3, 4).

ஒரே சரீரத்தின் உடன் அங்கத்தினர்கள் என்று உங்களால் அடையாளங்கண்டுகொள்ள முடிகிறவர்களுடன் கூடிக்கொள்ளுங்கள்; ஈடுபலியில் விசுவாசமற்றவரைத் தவிர்த்துவிடுங்கள். முன்கூட்டியே கூட்டத்திற்கான ஆயத்தங்களைச் செய்துகொள்ளுங்கள். உங்களில் யார் அடையாளச் சின்னங்களைப் பரிமாறுகின்றார்கள் என்பது முக்கியமல்ல; முதலாம் ஆசரிப்பில் யூதாஸ்கூட உதவியிருந்திருக்கலாம். "நீங்கள் எல்லாரும் சகோதரராய் இருக்கிறீர்கள்" என்பதையும், உங்களது வாய்ப்பிற்கேற்ப, திறமைக்கேற்ப, எந்தக் காரியத்திலும் ஒருவருக்கொருவர் பணிவிடை புரிந்திடுவதற்கான சிலாக்கியம் உடையவர்களாய் இருக்கின்றீர்கள் என்பதையும் நினைவில்கொள்ளுங்கள். கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்; ஆனால் போலியான தன்னடக்கத்தைப்பார்த்து, உங்கள் மத்தியிலான கோதுமையைக்காட்டிலும் களையைத் கனத்திற்குரியவர்களாக எண்ணாதிருங்கள்.

நமது கர்த்தர் இயேசுவினுடைய கிருபையானது, உங்கள் அனைவரோடும் இருப்பதாக. அந்தத் தருணமானது மிகுந்த ஆசீர்வாதங்களில் ஒன்றாகவும், மிகுந்த நன்மை பயப்பவைகளில் ஒன்றாக இருப்பதாக.

**--120--**

# அவர் வருமளவும்

கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிப்பிடுகையில் பவுல், நாம் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் "கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கின்றீர்கள்" என்று கூறுவதினால், வரையறை இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். கவனியுங்கள், யூத யுகத்தில் நிழலான ஆட்டுக்குட்டியானது, நிஜமான (அ) உண்மையான ஆட்டுக்குட்டியாகிய நமது கர்த்தர் வரும்வரை ஒவ்வொரு வருடமும் அடித்து, புசிக்கப்பட்டு வந்தது. ஆனால் யோவான் ஸ்நானன் நமது கர்த்தர் வந்திருக்கின்றார் என்று அவரை அறிமுகப்படுத்தி, "இதோ தேவ ஆட்டுக்குட்டி" என்று கூறினபோது, நிழலான ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு, புசிக்கப்படுவதானது உடனடியாக ஓய்ந்துவிடவில்லை; ஏனெனில் நமது கர்த்தர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் அவரே அதை அனுசரித்தார் என்று நாம் பார்க்கின்றோம். நிஜமான ஆட்டுக்குட்டியானது கல்வாரியில் அடிக்கப்பட்டபோதுதான், நிழலான ஆட்டுக்குட்டியினுடைய ஆசரிப்பானது ஓய்ந்தது.

ஆகையால் இப்பொழுது, தேவனுடைய உண்மையான ஆட்டுக்குட்டியானவர், நமது கர்த்தரானவர் நமக்காகக் கொடுத்திட்டதான, அதாவது நம்முடைய கடந்துபோகுதலுக்காக (அ) நாம் தப்புவிக்கப்படுவதற்காகக் கொடுத்திட்டதான அவரது மாம்சம் மற்றும் இரத்தத்திற்கான அடையாளங்களாக நமக்கு அப்பத்தையும், திராட்சரசத்தையும் கொடுத்திருக்கின்றார். நாம் அவரது மரணத்தை, இந்த அடையாளங்களினால், அவர் வருமளவும் மற்றும் அவரது சரீரத்தின் கடைசி அங்கத்தினன், அவரோடுகூட மற்றும் அவருக்கு ஒத்த நிலையில் முழுமையான இரட்சிப்புக்குள் கடந்துபோகப்படுவதுவரையிலும், நினைவுகூர்ந்து ஆசரிக்க வேண்டும். பின்னர் நாம் கடந்துபோகப்படுவதில், நிஜமானது முழுமையாய் நிறைவேறுகையில், அடையாளம் ஓய்ந்துவிடும். நம்முடைய நம்பிக்கைகள் நிறைவேறுவதுவரையிலும், இந்த நம்பிக்கைகளை நிறைவேற்றுகிறதான அவரது பிட்கப்பட்ட சரீரத்தையும், சிந்தப்பட்ட இரத்தத்தையும் நினைவுகூர்ந்து ஆசரிப்பதன் மூலமாக, இந்த நம்பிக்கைகளைத் தெரிவிப்பது ஏற்றதாய் இருக்கும்.

*****

# யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்

**வி**சுவாசிகளுக்குத் தண்ணீரினால் யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம் எனும் இந்த அனுசரிப்புச் சம்மந்தப்பட்ட விஷயத்தில், சபை மாத்திரமே போதிப்பதற்கான அல்லது ஞானஸ்நானம் கொடுப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப் பெற்றுள்ளனர் என்பது தவிர மற்றப்படி வேறெந்த வரையறைகளும் வேதவாக்கியங்களில் முன்வைக்கப்படவில்லை. ஞானஸ்நானம் எனும் அனுசரிப்பை நிகழ்த்துபவரின் விசுவாசமும், அறிவும் பொருட்டல்ல, மாறாக ஞானஸ்நானம் எடுப்பவரின் விசுவாசமும், அறிவுந்தான் முக்கியமாய் உள்ளது. சில சமயங்களில் யாருக்காக ஞானஸ்நானம் கொடுக்கப்படுகின்றதோ அவரைக் காட்டிலும், ஞானஸ்நானம் எனும் அனுசரிப்பை நடப்பிப்பவர் எல்லாவிதத்திலும் தகுதியில் குறைந்தவராகக் காணப்படலாம் (யோவான் 3:14) மற்றும் சிலசமயம் இராஜ்யத்தை அல்லது சபை வகுப்பாரைக்குறித்து விசுவாசியாதவராகக்கூட இருக்கலாம் (மத்தேயு 11:11). நிச்சயமாகவே போதிப்பதற்கு அங்கீகாரம் பெற்ற யாவரும், ஞானஸ்நானம் கொடுத்திடுவதற்கும் அங்கீகாரம் சமமாய் உடையவர்களாய் இருக்கின்றனர் மற்றும் இது - ஊழியத்திற்கும், நியமனத்திற்கும் (மத்தேயு 28:19, 20) மற்றும் யோவான் 17:14-18,23-ஆம் வசனங்களின்படியான ஏற்படுத்துதலுக்குமுரிய பொதுவான அழைப்பின்படியான "யுகத்தின் முடிவுபரியந்தமுள்ள" கிறிஸ்துவின் ஒவ்வொரு உண்மையான பின்னடியாரையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. மேலும் இந்த நியமனமானது, "கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள" பெண்களை (ஞானஸ்நானம் கொடுக்கும்) இச்சேவைக்கு நிச்சயமாய்த் தடைப்பண்ணுகிறதில்லை (கலாத்தியர் 3:28); அபூர்வமாய்த் தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் இத்தகைய ஊழியங்களைச் செய்யலாமே ஒழிய, மற்றப்படி இத்தகைய ஊழியங்கள் புரிவதைத் தன்னடக்கம், சௌகரியம் முதலான காரியங்களினால் அவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

# தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே

## பாகம் - 1

புருஷனுடைய தலைமை ஸ்தானம் என்ற அதே கோட்பாட்டைக் கருத்தில் வைத்துக்கொண்டு பவுல் மேலும் இவ்வாறு கூறுகிறார். "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்கவேண்டும்" (1 தீமோத்தேயு 2:12). மிகப்பெரிய சந்தோஷத்திற்குரிய நற்செய்தியை மற்றவர்களுக்குச் சொல்லாதபடிக்கு ஸ்திரீயானவள் தன்னுடைய உதடுகளை எப்போதுமே மூடியே இருக்க வேண்டும் என்று பவுல் நிச்சயமாகச் சொல்லவில்லை. "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:28) என்று அதே அப்போஸ்தலன் சொல்லவில்லையா? அபிஷேகம்பண்ணப்பட்ட எல்லோரும் நற்செய்தியை அறிவிப்பதற்காகவே அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிறார்கள் என்று தீர்க்கதரிசியான ஏசாயா கற்றுக் கொடுக்கவில்லையா? அப்படியானால், இதற்கு இசைவாகவே மேற்சொல்லப்பட்ட அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, அவருடைய சிந்தனை என்னவென்றால், நாம் எடுத்துச்சொல்ல நியமிக்கப்பட்டச் சத்தியம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், புருஷன் மீது அதிகாரம் அல்லது தலைமை ஸ்தானம் என்னும் நிலைப்பாட்டை ஒரு ஸ்திரீ எந்தவிதத்திலும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதே. எந்த இடத்திலும், எல்லா இடத்திலும், எவரிடத்திலும் அவளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் மகா சந்தோஷத்திற்குரிய ஆசீர்வாதமான நற்செய்தியை அவள் சொல்லி, சத்தியத்தினுடைய கோட்பாடுகளைக் கற்றுக்கொடுக்கலாம்; ஆனாலும், அவளது சொந்த தனித்துவம் புலப்படாமல் போகத்தக்கதாக, எப்பொழுதும் தன்னடக்கத்துடனும், சத்தியத்தை மிகத் தெளிவாகவும் சொல்ல வேண்டும். குணலட்சணத்தினுடைய இந்த இவ்வம்சமானது, இயற்கையாகவே ஸ்திரீகளுக்குரியது; ஆனால் பொதுப்படையான ஊழியங்களில் வேலை செய்ய முயற்சிக்கும் ஸ்திரீகளினால் இது பொதுவாக வெகு சீக்கிரத்தில் இழந்துபோகப்படுகின்றது. பெரும்பான்மையான ஸ்திரீகளின் வேலை, தனிப்பட்டதுமாய், அமைதியானதுமாய் இருக்கின்றது; ஆனால், குறைந்த ஆற்றலுள்ள வேலையல்ல. தெய்வீக ஏற்பாட்டினால் அவளுக்கு நியமிக்கப்பட்ட எல்லைக்குள்ளாகவே அவள் ஏறெடுக்கும் முயற்சியே அவளுடைய மிகப்பெரிய செல்வாக்காக இருக்கின்றது. ஒருவேளை பொது இடங்களில் பயன்படுவதற்கு ஏதுவாய் அவசியமும், வாய்ப்பும் மற்றும் திறமையும் காணப்படுமானால், அந்த அவசியமும், வாய்ப்பும் இருக்கும் வரையில் அவள் அதை நிறைவேற்றலாம்; அதுவும் அப்படிச் செய்யும்போது, தேவபக்தியுள்ளவளென்று சொல்லிக்கொள்ளும் ஸ்திரீயானவளுக்குரிய - கிரியையிலும், வார்த்தையிலும் மற்றும் உடையிலும் உள்ள தன்னடக்கத்தையும், அமைதியான அணுகுமுறையையும் அவள் கொண்டிருத்தல் வேண்டும். "அவசியம்" என்று நாம் இங்கு வலியுறுத்தும்போது, நாம் சொல்ல வருவது என்னவென்றால், சத்தியத்திற்காகவும், நீதிக்காகவும் அவளுக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தும் விஷயத்தில், அவள் அழையாமல் தலையிடாத மற்றும் பலனுக்கேதுவான விதத்தினை நாடுவதற்குப்பதிலாக, அவள் தனக்கு விளம்பரத்தைத் தேட ஒருபோதும் நாடக் கூடாது என்பதேயாகும். விளம்பரத்தை நாடுவாளானால் அது அதிகாரத்தையும், சர்வாதிகாரத்தையும் எடுத்துக்கொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கும்; இது தகுதியற்றக் காரியமாகும்.

கணவன் மற்றும் மனைவியின் இந்த உறவில், கிறிஸ்து இயேசுவுக்கும் சபைக்கும் இடையேயுள்ள அருமையான உறவானது, சித்தரிக்கப்பட்டுள்ளது என்று மீண்டுமாக பார்க்கிறோம். நிழலில் இருப்பதுபோல நிஜத்திலும், சபை - கிறிஸ்துவின் மணவாட்டி, அவருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்; எல்லா நேரத்திலும் அவருடைய சித்தத்தை அறியவும், பின்பு அதைச் செய்வதில் மகிழ்ச்சியடையவும் ஆர்வத்தோடு நாட

வேண்டும். ஒரு ஸ்திரீ எப்படி, தன் கணவனிடத்தில் அதிகாரம் செலுத்த எண்ணி அவரை வழிநடத்தக்கூடாதோ, அதுபோலவே சபையும் கர்த்தருடைய வேலையில் அதிகாரம் செலுத்த எண்ணி, அதை வழிநடத்துவதற்கு நாடக்கூடாது. ஆனால், "அமைதியாக" இருந்து அவருடைய திட்டங்களையும், முறைகளையும் விடாமுயற்சியுடன்தேடி, பின்பு அதை உண்மையாக பெருமுயற்சியுடன் செயல்படுத்த நாட வேண்டும்.

தேவனுடைய திட்டம் முழுமையாகச் செயல்பாட்டில் கொண்டுவரப்படும்பொழுது, அன்பான அதிகாரமும், சந்தோஷம் நிறைந்த கீழ்ப்படிதலும் இந்த முழுப்பிரபஞ்சத்தை ஓர் ஆசீர்வாதமான சமாதானத்திலும், நித்தியமான மகிழ்ச்சியினாலும் நிரப்புவதை நாம் காணலாம். மேலும், "தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பார்" - எல்லாருக்கும் தலையாகவும் இருப்பார் - அவருடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படும் (1 கொரிந்தியர் 15:28). தேவனுடைய திட்டம் இதுதான் என்பதை நாம் பார்க்கும்போது, இப்பொழுது அந்த நோக்கத்தை நம்முடைய ஆற்றலுக்கேற்ப நடந்தேற்றுவதும், அதை விளக்கிக்காண்பிப்பதும்தான் நம்முடைய பிரயாசமாகக் காணப்பட வேண்டும். இது - கர்த்தரோடு இணைந்திருப்பவர்களால் மாத்திரமே முழுமையாக விளக்கிக்காட்ட முடியும். ஸ்திரீகள் தலைக்கு முக்காடிட்டுக் கொள்வது (1 கொரிந்தியர் 11:10) அதிகாரத்திற்குக் கீழ்படிவதைக் குறிக்கிறது; தேவனுடைய ஒழுங்கில் இருக்கும் தலைமைத்துவத்தினை அங்கீகரிப்பதைக் குறிக்கிறது. அது சபைக்கும், அவளுடைய தலையாய் இருக்கும் கிறிஸ்து இயேசுவுக்கும் இடையே உள்ள உறவை அடையாளப்படுத்துகிறது. இதே விஷயம் ஆசாரியனுடைய உடையில்கூட விளக்கப்பட்டிருக்கிறது: பிரதான ஆசாரியன் பாகை அல்லது கிரீடத்தை அணிந்திருந்தான், மேலும் உடன் ஆசாரியர்கள் (மணவாட்டி, சபையைக் குறிப்பவர்கள்) தாங்கள் தலை அல்லவென்றும், ஆனால் பிரதான ஆசாரியனின் அதிகாரத்திற்குக் கீழிருப்பவர்கள் என்றும் குறிப்பிடும் விதத்தில் குல்லாக்களை அல்லது தலைக்கு மூடலை அணிந்திருந்தார்கள்.

தங்கள் மத்தியிலிருந்த அநேக உண்மையுள்ள உடன் ஊழியக்காரிகளையும் மற்றும் உதவி செய்த ஸ்திரீகளையும் அப்போஸ்தலன் குறிப்பிட்டிருப்பதிலிருந்து, ஸ்திரீகளுக்காகவும், ஸ்திரீகள் செய்திட்ட வேலைகளுக்காகவும் அவர் கொண்டிருந்த உயர்வான மரியாதை தெரியவருகிறது (உரோமர் 16:1-6, 13 மற்றும் பிலிப்பியர் 4:3 பார்க்கவும்). "அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன்வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது". மேலும் "அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" (அப்போஸ்தலர் 1:14). மேலும், "ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது (உபதேசிக்கிறபோதாவது), தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டதுபோலிருக்குமே" (1 கொரிந்தியர் 11:5).

அப்போஸ்தலர்களுடைய நாட்களில், அவர்களாலும், கர்த்தராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட வேலைகளை ஸ்திரீகள் செய்தார்கள் என்று இந்த வேதவாக்கியங்கள் நமக்குக் காட்டுகிறது. எனினும் சிறியக் கூடுகைகளில் மாத்திரமே பொதுவாக ஸ்திரீகள் பேசினார்கள். மேலும், "சபைகளில் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்" என்று பவுல் சொன்னபோது, ஏறக்குறைய விவாதம் (debating) செய்யும் வழக்கம் இருக்கும் பொதுவானக் கூடுகைகளைத்தான் அநேகமாக அவர் குறிப்பிட்டிருக்கலாம். இப்படிப்பட்டப் பொதுவான விவாதங்களில் (public debating) ஸ்திரீகள் பேசுவது ஏற்றதாக இருக்காது என்று பவுல் நினைத்திருந்தார் மற்றும் சிந்தனை செய்கின்ற அநேக ஆண்கள் மற்றும் பெண்களின் கூற்றும் இன்றைக்கு இதுவாகத்தான் காணப்படுகின்றது. ஆனாலும் அநேகர் இதை அளவிற்கு மீறி கொண்டுபோய் எந்தவொரு சந்தர்ப்பங்களிலும், தனிமறைவான (private) கிறிஸ்தவ கூட்டங்களிலும்கூட ஸ்திரீகள் ஜெபிக்கவோ, உபதேசிக்கவோ கூடாது என்று தடை செய்கிறார்கள்; இது நிச்சயமாகத் தவறான ஒன்றாகும்.

சபைகளில் ஸ்திரீகள் பேசாமல் இருக்கக்கடவர்கள் என்றும், அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷனிடத்தில் விசாரிக்கக்கடவர்கள் என்று பவுல் வலியுறுத்துகிறபோது, நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு கோட்பாடு கைக்கொள்ளப்பட

வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறார் என்றும் - ஒருவேளை அப்போதிருந்த சபையில் தொல்லைக் கொடுத்துக் கொண்டிருந்த ஸ்திரீகளின் தன்மையில்லாத சில ஸ்திரீகளைத் தடைசெய்வதற்காக அவர் சொல்லியிருக்கலாம் என்றும் நாம் அவரைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தக் கோட்பாட்டினைக் கடுமையாய்ச் செயல்முறைப்படுத்துவது என்பது, பவுலின் உபதேசத்திலுள்ள பொதுவான ஆவியை அவமதிப்பதாக இருக்கும். கிறிஸ்துவின் ஆவி எங்கேயோ அங்கே விடுதலை உண்டு - அந்த விடுதலை, இயற்கையிலும், வெளிப்படுத்தப்பட்டவைகளிலும் வெளிப்படும் தேவனுடைய பிரமாணத்தையும், ஒழுங்கையும் அவமதிப்பதற்குரிய சுயாதீனமாய் இராமல், மாறாக தேவன் நிறுவின ஒழுங்கு மற்றும் பிரமாணத்தினுடைய கட்டுப்பாட்டின் கீழ், கிருபையிலும், ஞானத்திலும் வளர்ந்து முன்னேறுவதற்கான சுயாதீனமாக இருக்கிறது.

கிறிஸ்துவையும், அவருடைய மணவாட்டியாக இருக்கிற சபையையும் அடையாளப்படுத்தும்படியாக, புருஷனையும், ஸ்திரீயையும் தேவன் ஏற்படுத்தியிருக்கிறபடியால், இது - புருஷனுக்கு எப்போதும் அதிகப் பிரயாசங்கள் ஏறெடுக்கும் மற்றும் பொது இடங்களில் ஏறெடுக்கும் ஊழியங்கள் கொடுக்கப்பட்டு மற்றும் தேவனால் சரிசமமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற விதத்தில் ஸ்திரீகளுக்குத் தனிப்பட்ட விதத்தில் சந்தித்து போதித்தல் மற்றும் உதவி செய்தல் போன்ற ஊழியங்கள் கொடுக்கப்படுவது, ஒருவேளை ஒரு காரணமாக இருக்கலாம். அதனால் கிறிஸ்துவே தேவனுடைய திட்டங்களை நடத்தேற்றிடும் பிரதிநிதியாக இருக்கின்றார். அவரே எல்லாவற்றிலும் மேலான ஊழியக்காரனாய் இருக்கின்றார். மேலும் நாம் அவருடைய சபையாயிருப்பதினால் அவருடைய பயன்பாட்டிற்காக உதவி செய்யும்படிக்கு நாம் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம், அதாவது மிக எளிமையான பாகத்தையே செய்வதற்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறோம், எனினும் அது தேவனுக்குப் பிரியமும், அவர் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமாக இருக்கின்றது.

திருமதி C. T. R.

---

# நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாள்

புதிய வாசகர்களுடைய நலன்கருதி, நமது கர்த்தருடைய மரணத்தை வருடத்திற்கு ஒருமுறை, அதன் ஆண்டுநிறைவு நாளில் நினைவுகூர்ந்து ஆசரிப்பது நம்முடைய வழக்கமாய் இருக்கின்றது என்று நாம் குறிப்பிடுகின்றோம்.

"பாவத்தின் சம்பளம் மரணம்" என்றும், நமது அருமை மீட்பரினால் அனைவருக்குமாகக் கொடுக்கப்பட்டதான ஈடுபலியானது, அவரது ஜீவனாய் இருக்கின்றது என்றும், உண்மையாய் உணர்ந்துகொள்பவர்கள் அனைவருக்கும் – அவரது மரணம், அவரது சிலுவையானது, எப்போதும் அவர்களது கவனத்தினுடைய மையமாகக் காணப்பட வேண்டும்; மற்றும் இதிலிருந்தே எதிர்க்கால ஜீவன் மற்றும் ஆசீர்வாதங்களுக்கான நமது நம்பிக்கைகள் அனைத்தும் உண்டாகுகின்றதாய் இருக்கின்றது. இப்படியானவர்கள் அனைவரும் கல்வாரியில் வெளிப்பட்டதான நமக்காக மரித்திட்ட அன்பை, மீட்பரின் அன்பை, அனைத்தையும் சகித்த அன்பை, வல்லமையுள்ள அன்பைக்குறித்து நினைவுகூர்ந்து ஆசரிப்பதைச் சிலாக்கியமாகக் கருதிடுவார்கள். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." (யோவான் 15:13) ஆனாலும் தேவனுடைய அன்பானது, விசேஷமானதாகவும், மற்ற அனைத்து அன்பிற்கும்மேலானதாகவும் காணப்படுகின்றது; ஏனெனில் நாம் பாவிகளாகவும், சத்துருக்களாகவும் இருந்தபோதே, நம்மைத் தேவனிடத்தில் கொண்டுசேர்க்கத்தக்கதாகவும், ஆதாமினுடைய மீறுதல் காரணமாக இழந்துபோகப்பட்டதான பரிபூரண நிலைமைக்கும், தேவனுடன் இசைவாய் உள்ள நிலைமைக்கும், மனிதனைச் சீர்ப்பொருந்தப்பண்ணுவதற்கான உரிமையும், வாய்ப்பும் தமக்குக் கிடைக்கத்தக்கதாகவும் கிறிஸ்து அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராய் மரித்தார்.

தம்முடைய உண்மையுள்ள பின்னடியார்களிடத்திலான இந்த விருப்பத்தினை முன்னறிந்தவராகவும், இந்த விருப்பத்திற்கான தமது அங்கீகரிப்பையும், அந்த விருப்பம் ஏற்றது என்பதையும் சுட்டிக்காட்டும் வண்ணமாகவும், நமது கர்த்தர் அந்த எளிமையான, அதே சமயம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும் "கடைசி இராப்போஜனம்" என்று அழைக்கப்படும் நினைவுகூருதலை நிறுவினார். இது அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் மற்றும் அவர் சிலுவையில் அறையப்பட்டதான அதே நாளிலும் — நீசான் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்று — பஸ்கா பண்டிகை ஆரம்பிப்பதற்கு முந்தின நாளில் நிறுவப்பட்டது.

நாம் நாளைக் கணக்கிடும் முறையிலிருந்து, எபிரெயர்களுடைய நாள் கணக்கிடும் முறைமையானது வித்தியாசமானதாகும். அவர்களுக்கு ஒரு நாளானது சூரிய அஸ்தமனத்துடன் (அ) மாலை 6 மணியுடன் துவங்குகின்றதாய் இருக்கின்றது. இதனால்தான் நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் கடைசி இராப்போஜனத்தைச் சுமார் 8 மணிக்குப் புசித்துவிட்டு, பின்னர் கெத்செமனே தோட்டத்திற்கும், பிலாத்துவினிடத்திற்கும், ஏரோதினிடத்திற்கும் சென்று, பின்னர் அதே நாளின் மதிய வேளையில் அவர் சிலுவையில் அறையப்பட முடிந்தது. அநேகமாக நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலான அடையாளமான இராப்போஜனமும், அவரது மரணமும் அதே/ஒரே நாளில் இடம்பெறத்தக்கதாகவே, எபிரெயர்கள் 24 மணி நேரங்கள் கொண்ட ஒரு நாளினை, இரவுடன் துவங்கும் வழக்கத்தினைக் கொண்டிருக்கத்தக்கதாக ஏற்பாடு பண்ணப்பட்டது. மீண்டுமாக இரவு என்பது பாவம் எனும் இருளான வேளையையும், மரணத்தில் நித்திரைப்பண்ணுகிற வேளையையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; மற்றும் இதனைத் தொடர்ந்து உயிர்த்தெழுதலின், பரலோக வெளிச்சத்தின், ஆசீர்வாதத்தின் மகிமையான மற்றும்நித்திய காலமான காலை வருகின்றது; இந்தக் காலையானது ஆயிரவருட யுகத்தில், நீதியின் சூரியன் தனது செட்டைகளில் ஆரோக்கியத்துடன் உதிக்கையில் துவங்குகின்றதாய் இருக்கின்றது.

சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினுடைய பஸ்கா இராப்போஜனத்தின் இடத்தில், கர்த்தரால் நிறுவப்பட்டதான அப்பமும், திராட்சரசமுமுள்ள அவரது நினைவுகூருதல் இராப்போஜனமானது இடம்பெறுகின்றது என்ற உண்மையும், பஸ்கா ஆட்டுக்குட்டியும், அது புசிக்கப்பட்டதைத் தொடர்ந்து உண்டான எகிப்திலிருந்துள்ள விடுதலையும், தேவ ஆட்டுக்குட்டிக்கும், அவரது புண்ணியங்களில் பங்கெடுப்பவர்கள் அனைவருடைய விடுதலைக்கும் நிழலாய்க் காணப்படுகின்றது என்ற உண்மையும், ஆட்டுக்குட்டியின் நிஜமாகிய "உலகின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்ற தேவாட்டுக்குட்டியினுடைய" மரணத்தை, அதன் ஆண்டுநிறைவு நாளில் நினைவுகூர்ந்து ஆசரிப்பதே, இதற்கான ஒரே சரியான மற்றும் ஏற்ற மற்றும் சிறந்த நேரமாக இருக்கும் என்பதின் ஏற்புடைமையை நாம் அடையாளம் கண்டுக்கொள்ளத்தக்கதாக நம்மை வழிநடத்தும். இப்படியாகவே நாம், "நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச்

செய்யுங்கள்" என்ற அவரது வார்த்தைகளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நமது கர்த்தர் நோக்கம் கொண்டிருந்தார் என்று நாமும் நம்புகின்றோம்; அதாவது, "நீங்கள் இந்தப் பஸ்கா இராப்போஜனத்தை ஆசரிக்கும்போதெல்லாம், நீங்கள் நிழலான ஆட்டுக்குட்டியையும், எகிப்திலிருந்துள்ள நிழலான விடுதலையையும் நினைவுகூரும்படி இதைச் செய்யாமல், மாறாக என்னை நிஜமான தேவாட்டுக்குட்டி என்று விசுவாசிக்கின்ற நீங்கள், என்னையும், உயிர்த்தெழுதலின்போதுள்ள உண்மையான கடந்துபோகுதலையும் எண்ணிட வேண்டும்" எனும் விதத்தில் கூறினார்.

ஒவ்வொரு யுகத்திலும் காணப்பட்டக் கிறிஸ்தவர்களானவர்கள் கல்வாரியில் நடந்த இம்மாபெரும் நிகழ்வையும், அங்கு உலகத்தின் ஜீவனானது விலைக்கொடுத்து வாங்கப்பட்டதான காரியத்தையும் ஆசரிக்க வேண்டும் என்பது ஏற்புடையது என்பதை ஏதோ விதத்தில் அடையாளங்கண்டுகொண்டுள்ளனர் மற்றும் சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வுக்கும், உயிர்த்தெழுதலுக்கும் நினைவுகூருதலாக அநேகர் "புனித வெள்ளியையும்," "ஈஸ்டர் ஞாயிறையும்" ஆசரிக்கின்றனர். ஆனால் கர்த்தருடைய மரணத்தை, இராப்போஜனத்தில், அவரால் அங்கீகரிக்கப்படுகின்றதான, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கும் காரியமானது, கிட்டத்தட்ட 16 நூற்றாண்டுகளுக்கும்மேலாக கவனிக்கத்தவறப்பட்டுள்ளது. இது இரண்டு காரணங்களுக்காக தவிர்க்கப்பட்டது. முதலாவது காரணம், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்ளுகிறவர்களுக்கும், யூதர்களுக்கும் இடையில் பகைமை உண்டானதேயாகும்; அதாவது தங்கள் மீது யூதர்களுடைய மற்ற வழக்கங்கள் மற்றும் ஆசரிப்புகளினுடைய செல்வாக்கினைக் குறித்த கிறிஸ்தவர்களின் அச்சத்தினால், புதிய மதத்தை, பழைய மதத்துடன் இணைக்கின்றதான இணைப்புகளைத் துண்டித்துப்போடுவதற்காகும்; மற்றும் இரண்டாவது காரணம் போப்மார்க்கம் கட்டுப்பாட்டினைப் பெற்றிருந்தபோது, உலகத்தின் பாவத்தை எடுத்துப்போடுவதற்கு எப்போதும் போதுமானதாய்க் காணப்பட்ட ஒரே மற்றும் ஓர் உண்மையான மரணத்திற்குப்பதிலாக, "பூசைபலியானது" கொண்டுவரப்பட்டதாகும். (இந்தப் பூசைபலியானது, கிறிஸ்துவை மீண்டும் மீண்டுமாகப் பலியிடுவதைத் தெரிவிக்கின்றதாய் இருந்தது).

போப்மார்க்கத்தினுடைய இருளினின்று வெளியே வந்திட்டவர்களான புராட்டஸ்டண்டினர்கள், பூசை பலியை – அருவருப்பை – நிராகரிக்குமளவுக்கும் மற்றும் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆதியில் காணப்பட்டதான, அதற்கே உரிய எளிமையில் ஆசரிக்குமளவுக்கும், போதுமானவைகளை அடையாளம் கண்டுகொண்டனர். எனினும் அதை எத்தனைதரம் ஆசரிப்பது ஏற்றதாய் இருக்கும் என்பது தொடர்புடைய விஷயத்தில் சந்தேகத்திலேயே காணப்பட்டனர்; சிலர் ஞாயிறுதோறும் என்றும், சிலர் மாதந்தோறும் என்றும், சிலர் காலாண்டுதோறும் என்றும், சிலர் இன்னும் சில விதத்திலும் ஆசரித்துவருகின்றனர்.

இவ்விஷயம் தொடர்புடையதான வேதவாக்கியங்களினுடைய ஆதாரமானது, அனைத்துச் சந்தேகங்களையும், அனுமானங்களையும் தெளிவுபடுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் அதன் ஆதி எளிமையிலும், முழுக்க அர்த்தம் நிரம்பின நிலையிலும் நினைவுகூருதல் குறித்த கட்டளையை முன்வைக்கின்றதாய் இருக்கின்றது. இவ்விஷயம் குறித்து R1013-இல் நாம் விளக்கியிருப்பினும், புதிய வாசகர்களுக்கு அதே ரீபிரிண்ட்ஸ் எண்ணின் கீழான புதிய தலைப்பாகிய, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" எனும் பாடத்தினைப் பரிந்துரைக்கின்றோம். நம்மிடத்தில் அதனுடைய சில பிரதிகள் காணப்படுகின்றது மற்றும் இக்கண்ணோட்டத்திலிருந்து இப்பாடத்தினைப் படிக்க விரும்புகிறவர்களுக்கு, நாம் அந்தப் பிரதிகளை இலவசமாகக் கொடுக்க விரும்புகின்றோம்.

யூதர்களால் கைக்கொள்ளப்படும் விதம்போலவே அப்போஸ்தலர்களால் கைக்கொள்ளப்பட்டதுபோன்றும், ஆதித் திருச்சபையினரால் கைக்கொள்ளப்பட்டது போன்றும், இந்த ஒரு நிகழ்வை, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கும் பழக்கத்தினை நாமும் கொண்டிருக்கின்றோம் – அதாவது சூரியக்காலக் கணக்கிடுதலின்படியாக அல்லாமல் சந்திரக்காலக் கணக்கிடுதலின்படியாகும். ஆதித் திருச்சபையினர் சந்திரக்காலத்தைப் பின்பற்றினதுபோல, நாமும் பின்பற்றுகையில், அந்த நாளானது, வாரத்தினுடைய ஏதோ ஒரு நாளாய் இடம் பெறுகின்றது*. [*புனித வெள்ளியையும், ஈஸ்டர் ஞாயிறு முதலானவைகளை ஆசரிப்பவர்கள், சந்திர காலக்கணக்கிடுதலையே பயன்படுத்துகின்றனர்; எனினும் துல்லியமாய் அல்ல; ஏனெனில் துல்லியமான சந்திர காலக்கணக்கிடுதலின்படியான தேதிக்குப்பதிலாக, அதற்கு அருகாமையில் காணப்படுகின்றதான வெள்ளிக்கிழமையையும், ஞாயிற்றுக்கிழமையையும், ஆண்டுநிறைவு நாட்களுக்காகத் தெரிவு செய்துகொள்கின்றனர்.] இந்த வருடம் அது ஏப்ரல் 14-ஆம் தேதி ஞாயிறு மாலையாக (6 மணிக்குமேல்) இருக்கின்றது. அந்தநாள் மாலையில் 6 மணிக்கு, எபிரெய மாதமாகிய நீசான் மாதத்தின் 14-ஆம் தேதி துவங்குகின்றதாய் இருந்து, திங்கட்கிழமை மாலை 6 மணிவரை நீடிக்கின்றதாய் இருக்கின்றது; இந்தத் திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு பஸ்கா பண்டிகை என்று அழைக்கப்படும் யூதர்களுடைய ஏழுநாள் பண்டிகையினுடைய முதல்நாளாகிய நீசான் 15-ஆம் நாள் துவங்குகின்றதாய் இருக்கின்றது. நாம் அவர்களது பண்டிகையையும் ஆசரிப்பதில்லை மற்றும்

சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியையும் பயன்படுத்துகிறதில்லை. நம்முடைய ஆசரிப்பானது நிஜமான, உண்மையான தேவாட்டுக்குட்டியாய்க் காணப்படுகின்றவர்பற்றியாகும் மற்றும் இவருக்கே அப்பமும், திராட்சரசமும் அடையாளங்களாய்க் காணப்படுகின்றது. எதிர்க்காலத்தில் நாம் யூதர்களுடைய சந்தோஷத்தின் ஏழு நாட்கள் பண்டிகையினுடைய நிஜத்தை – தேவனுடைய ஜனங்கள் அனைவரும் (இஸ்ரயேலர்களால் அடையாளப்படுத்தப்படுபவர்கள் — அவரோடு இசைவிற்குள்ளாக வந்துவிட்டவர்களும், அவரோடு இசைவிற்குள்ளாக வரும் அனைவரும்) — பாவம் மற்றும் அதன் பின்விளைவாகிய மரணத்தைக் கடந்துவந்து, அக்கறையில் வந்து நிற்கும்போதும் மற்றும் இப்பொழுது முதற்பேறான சபையையும், இவர்களைப் பின்தொடர்ந்து வரவும், கர்த்தரைச் சேவிக்கவும் விரும்புகின்றவர்களையும் அடிமைப்படுத்திடுவதற்கு நாடிக்கொண்டிருக்கின்றதான சாத்தானும், ஈட்டிகளும், கவண்களும், பொல்லாப்பான தந்திரமுள்ள இரதங்களும் உள்ள அவனது மனமார்ந்த பின்னடியார்களும் இறுதியில் முற்றிலுமாக ஜெயங்கொள்ளப்படும்போதும், இரண்டாம் அல்லது நித்தியமான மரணத்திற்குள் தள்ளப்படும்போதும் - நாம் கொண்டாடுவோம். இவர்களது இந்த இறுதி அழிவானது, பார்வோனும், அவனது குதிரை வீரர்களும் செங்கடலில் மூழ்கடிக்கப்படுவதில் அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்த அழிவிலிருந்து ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தின் கீழ்க் காணப்பட்டதான அனைவரும் காப்பாற்றப்பட்டனர் – (தற்காலமாகிய சுவிசேஷ யுகமாகிய அந்த இரவில்) முதற்பேறானவர்கள் மாத்திரம் காப்பாற்றப்படாமல் (தப்புவிக்கப்படாமல்), இவர்களால் அடுத்தநாள் காலையில் (ஆயிரவருட யுகத்தில்) வழிநடத்தி வரப்பட்டதான கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும்கூடக் காப்பாற்றப்பட்டனர்.

நமது ஆட்டுக்குட்டியானவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் பலன்பெற்றவர்களாகிய விசுவாசிகளில் இரண்டு (அ) மூன்று பேர் எங்கெல்லாம்கூடி இதை அநுசரிக்க வாய்ப்புள்ளதோ, அவர்கள் ஒன்றுகூடிட மறவாமல், ஒன்றுகூடி நமக்கு மிகவும் விலையேறப்பெற்றவைகளைச் செய்து தந்துள்ளவரான அவரின் நினைவாக "இதைச் செய்வோமாக." முடிந்தமட்டும் கர்த்தருடைய சரீரத்தின் அநேக அங்கத்தினர்கள் இவ்வாறாக ஒன்றுகூடிட விரும்பினாலும், யாரையும் வற்புறுத்தாதீர்கள்; எண்ணிக்கை அவசியம் என்று எண்ணாதீர்கள்; உங்கள் ஐக்கியத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட நபர் உங்களோடுகூடக் கண்டிப்பாய்க் கலந்து கொள்வது அவசியம் என்று எண்ணாதீர்கள்; உங்களோடுகூடச் சேர்ந்து இந்தச் சிலாக்கியத்தினை அனுபவிப்பதற்கு உங்கள் சுற்றுப்புற வட்டாரத்தில் எவருமில்லையெனில், கர்த்தரோடு தனிமையில்கூடி, அவரது இந்த மாபெரும் பலியினை ஆசரியுங்கள்.

இந்த எளிமையான ஏற்பாட்டின் விஷயத்தில் அதை ஆசரிக்கும் காரியமும், அடையாளங்களைக் கையாளும் காரியமும், சிலர் போதிப்பதும் மற்றும் விசுவாசிப்பதும் போன்று, ஒரு விசேஷித்த வகுப்பாருக்கு, அதாவது "குருமார் வகுப்பாருக்கு" உரியது என்று எண்ணிட வேண்டாம். தம் உண்மையான பின்னடியார்கள் மத்தியில் கர்த்தர் இம்மாதிரியான பாகுபாடுகளைப்பார்ப்பதில்லை; மாறாக, "நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்" என்றே கூறியுள்ளார். நீங்கள் எல்லாரும் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாய் (வேலைக்காரர்களாய்) இருக்கின்றீர்கள்; நீங்கள் அனைவரும் நற்செய்தியைப் பிரசங்கிக்கிறவர்களாய் (அறிவிக்கிறவர்களாய்) இருக்கின்றீர்கள்; அந்த நற்செய்தியை உங்கள் மகிழ்ச்சிகரமான வார்த்தைகள் மற்றும் பார்வைகள் மற்றும் கிரியைகள் மூலம் வெளிப்படுத்துகிறவர்களாகவும், உங்கள் நாவுகள், பேனாக்கள் மற்றும் அச்சடிக்கப்பட்ட காகிதங்கள்/பக்கங்கள் மூலம் தெரிவிக்கின்றவர்களாகவும் இருக்கின்றீர்கள்; மனிதனால் ஏற்படுத்தப்படாமல், மாறாக "மெல்கிசெதேக்கின் முறைமையின்படியான" "இராஜரிக ஆசாரியக்கூட்டத்தில்" – நம்முடைய மாபெரும் பிரதான ஆசாரியனுடைய சரீரத்தில் அங்கத்தினர்களாக திவ்விய ஏற்படுத்துதலினால் உண்டான ஆசாரியர்களாய் நீங்கள் இருக்கின்றீர்கள். (மத்தேயு 23:8; வெளிப்படுத்தல் 1:6; எபிரெயர் 3:1; 4:14; 7:21)

மற்றவர்களை இல்லாமல் அர்ப்பணிக்கப்பட்டவர்களின் கூட்டத்தையே நாடுகிறவர்களாக இருப்பினும், உடன்படிக்கைப்பண்ணாத வேறு எவருமே கலந்துகொள்ளக்கூடாது என்று சொல்லுகிறவர்களாக இருக்க வேண்டாம்; கர்த்தருடைய பந்தியிலுள்ள மற்றவர்களுடைய உரிமைகளைக்குறித்துத் தீர்மானம் பண்ணிடுவதற்கும் முயற்சிக்காதீர்கள். உங்களால் நிராகரிக்கப்படும் எவரேனும் கூடிடுவதற்கும், அநுசரிப்பதற்கும் விரும்புவார்களானால், கர்த்தரோடுகூட அன்று வஞ்சகன் பந்தியில் காணப்பட்டான் என்றும், அந்த இரவில் அவன் பணத்திற்காக அவரைக் காட்டிக்கொடுத்தான் என்றும் நினைவில்கொள்ளுங்கள். பிசாசுக்கு ஊழியம் புரிந்திட்ட யூதாசை, பிசாசு வெளியே புறப்பட்டுப்போக வைப்பதுவரையிலும், கர்த்தர் யூதாசை சகித்துக்கொண்டிருந்தாரானால், இப்பொழுதுள்ள அந்த வகுப்பார் சார்பிலான பிரிந்துசெல்லுதலும் அவர்களாலேயே நடைப்பெறத்தக்கதாக நீங்களும் காத்திருக்கலாம்.

அலிகெனியிலுள்ள (Allegheny) சபையாராகிய எங்களோடுகூட இங்குவந்து கூடிடுவதற்கும், ஆசரிப்பதற்கும் வாய்ப்புகள் உள்ள அனைவருக்கும் அழைப்பு விடுப்பதும், தொலைவிலிருந்து வருகின்றவர்கள் அனைவரையும் எங்களால் முடிந்தமட்டும் உபசரிப்பதும் எங்களுடைய வழக்கமாய் இருந்துவருகின்றது; மேலும் நாங்கள் மீண்டுமாக, இந்த வருடத்தில் அன்போடுகூட இந்த அழைப்பை விடுக்கின்றோம். நாம் நம்முடைய மீட்பரின் பலியை நினைவுகூர்ந்து ஆசரிப்பதற்கும், பின்தொடரும் மூன்று தினங்களிலும் அதன் ஐசுவரியத்தையும், பலன்களையும் – இப்பொழுது அர்ப்பணிக்கப்பட்டச் சபைக்கும், எதிர்க்காலத்தில் "பூமியின் குடிகள் அனைத்திற்குமான" பலன்களையும் குறித்துச் சிந்தனைச் செய்வதற்கும், வரமுடிந்தவர்கள் அனைவரும் வாருங்கள். இனியும் அழைப்பு விடுக்கப்படும் என்றோ, தனிப்பட்ட அழைப்பு விடுக்கப்படும் என்றோ காத்திருக்காதீர்கள். வருகின்றவர்கள் அனைவரும் வரவேற்கப்படுகின்றனர் மற்றும் இது உங்களுக்கான விசேஷித்த அழைப்பாகும். ஆனால் எவரும் கசப்பான இருதயத்தோடு (அ) பெருமையோடு (அ) வீணான மேட்டிமையோடு வராமல், மாறாக மீட்பருக்கான அன்பில் நிரம்பிவழியும் இருதயத்தோடும் மற்றும் அவரைக்குறித்தும், அவரது சித்தம்குறித்தும், திட்டம் குறித்தும், நமக்கான சிலாக்கியம்குறித்தும் நன்கு அறிந்துகொள்ள வேண்டுமென்ற வாஞ்சையில் நிரம்பின இருதயத்தோடும் வாருங்கள்; நாம் அனைவரும் ஒன்று கூடிடலாம்.

உங்களால் வரமுடியுமா என்பது குறித்து முடிந்தமட்டும் சீக்கிரமாய் முடிவு செய்யுங்கள். உங்களால் வரமுடியும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களானால், இது குறித்து மாத்திரம் எங்களுக்குக் கடிதமோ (அ) அஞ்சல் அட்டையோ அனுப்பி வையுங்கள். உங்கள் முகவரியைத் தெளிவாய்க் குறிப்பிடுங்கள் மற்றும் உங்களோடுகூட வேறு யாராவது வருகின்றார்கள் என்றால், அவர்களைக்குறித்தும், நீங்கள் எந்த இரயில் பாதை வழியாக வருவீர்கள் என்பதுகுறித்தும், எந்நேரத்தில் வந்துசேருவீர்கள் என்று எதிர்ப்பார்க்கப்படலாம் என்பதுகுறித்தும் தெளிவாய்க் குறிப்பிடுங்கள்.

(கிறிஸ்துவுக்குள்ளாக – அவரது மரணத்திற்குள்ளாக மூழ்குதலை (அ) உண்மையான ஞானஸ்நானத்தை அடையாளப்படுத்துகின்றதான) தண்ணீர் ஞானஸ்நானத்திற்கான வாய்ப்பு அக்கூடுகையின்போது காணப்படுமா என்று கேட்கப்பட்ட அநேக கேள்விகளுக்குப் பதில் – ஆம்! அதற்கான நல்ல வாய்ப்புள்ளதென நாம் கூறுகின்றோம். கிறிஸ்துவுக்குள் தாங்கள் ஏற்கெனவே ஸ்நானம் கொண்டுள்ளதை உணர்ந்தவர்களாக கர்த்தரையும், அப்போஸ்தலர்களையும் தண்ணீர் ஞானஸ்நானத்தில் பின்பற்றிடுவதற்கு விரும்புகின்றவர்கள், ஏப்ரல் 14-ஆம் தேதி ஞாயிறன்று மதியவேளையில், இதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வார்கள். இப்படியாக ஞானஸ்நானம் எடுப்பவர்கள் அனைவரும் இது விஷயம்குறித்துத் தங்கள் வேதாகமத்துடனும், கன்கார்டன்ஸ்சுடனும் (Concordance) ரீபிரிண்ட்ஸ் 1539-ஆம் பக்கத்தையும் கவனமாய்ப் படிப்பதற்குக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடந்த பஸ்கா இராப்போஜனத்தின்போது 23 பேர் இத்தகையதொரு சிலாக்கியத்தினைச் சந்தோஷத்துடன் பயன்படுத்திக்கொண்டனர். ஆனால் எவரையும், இப்படியாகத் தங்கள் அர்ப்பணிப்பை வெளியரங்கமாய் அறிக்கைப்பண்ணிடுவதற்கு நாம் வற்புறுத்துவதில்லை. இன்னுமாக தண்ணீர் ஞானஸ்நானத்தை ஐக்கியத்திற்கான பரீட்சையாகவும் நாம் வைக்கிறதில்லை; எனினும் முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள ஒருவர் தண்ணீர் ஞானஸ்நானத்தினுடைய அருமையையும், ஏற்புடைமையையும் பார்ப்பதற்குச் சீக்கிரமாகவோ (அ) கொஞ்சம் காலம் கழிந்தோ வழிநடத்தப்படுவார் என்றும், அவர் எப்போது பார்க்கின்றாரோ, அதுமுதல் அது அர்ப்பணத்திற்கான ஆழத்திற்கும் மற்றும் உலகத்திற்கும் அதன் கருத்துக்களுக்கும் கிறிஸ்துவோடுகூட மரித்துவிடுவதற்கான உண்மைக்குமான பரீட்சையாக மாறிவிடுகின்றது என்றும் நாம் நம்புகின்றோம்.

கர்த்தரினால் பயன்படுத்தப்பட்ட அப்பமானது, புளிப்பில்லாத அப்பமாகும்; புளிப்பினால் உப்பப்படாமல் உண்டாக்கப்பட்ட அப்பமாகும்; இது கிட்டத்தட்ட மாவு மற்றும் தண்ணீரினால் செய்யப்பட்ட சாதாரணமான ரொட்டி (water crackers) போன்று காணப்படும், ஆனால் பெரிதாகவும், மெல்லியதாகவும் காணப்படும். எபிரெய குடும்பத்தினரிடமிருந்து இத்தகைய அப்பத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்ததானால், பெற்றுக்கொள்ளுங்கள்; இல்லையேல் மாவு மற்றும் தண்ணீரினால் செய்யப்பட்ட சாதாரணமான ரொட்டி பெற்றுக்கொள்வது வசதியாய் இருந்தால், அதையே பயன்படுத்துங்கள். நாம் "நியாயப்பிரமாணத்தின் கீழ்க் காணப்படாததினால்" புளிப்புச் சேர்க்கப்படாத அப்பமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பது அவசியமில்லை என்றாலும், இராப்போஜனம் அநுசரிக்கப்படும் வேளையின் விஷயம்போன்று, இதிலும் நாம் அன்பினாலும், சிலாக்கியத்தினாலும் இயக்கப்படுகின்றவர்களாய்க் காணப்படுகின்றோம். சரியானவேளையில் அநுசரிப்பதிலுள்ள விசேஷித்த ஏற்புடைமையைக் காண்பதினால், இராப்போஜனத்தைச் சரியானவேளையில் ஆசரித்திட நாம் விரும்புவதுபோலவே, அப்பத்தின் விஷயமும் காணப்படுகின்றது; அப்பமானது நமது கர்த்தருடைய சரீரத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது என்று நாம் காண்கையிலும் மற்றும் புளிப்பு என்பது வேதவாக்கியங்களில் சீர்க்கேட்டிற்கும், பாவத்திற்கும் அடையாளமாய்ப் பயன்படுத்தப்பட்டுள்ளதை நாம் காண்கையிலும், நாம் இயல்பாகவே பரிசுத்தமானவரை,

மாசில்லாதவரை, குற்றமற்றவரை, பாவிகளுக்கு விலகினவரை – தூய்மையானவரை அடையாளப்படுத்திடுவதற்கு, எளிமையாகப் பெற்றுக்கொள்ள முடிகின்றதான தூய்மையான (புளிப்பில்லாத) அப்பத்தை அடையாளமாகப் பயன்படுத்திடுவதற்கு விருப்பம்கொள்ள வழிநடத்தப்படுவோம்.

தம்முடைய சிந்தப்பட்ட இரத்தத்தை அடையாளப்படுத்திடுவதற்கு நமது கர்த்தரினால் பயன்படுத்தப்பட்ட திராட்சரசமானது/wine (இன்றும் பாரம்பரியமான யூதர்கள் பஸ்காவுக்கான தங்கள் திராட்சரசத்தைத் தயாரிப்பதுபோன்று) திராட்சப்பழச்சாற்றைத் (grape juice) துரிதமாய்ப் புளிப்பேற்றுவதற்கெனப் புளிப்புச் சேர்க்கப்படாமல் ஆயத்தம் பண்ணப்பட்டதாய் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. எனினும் அது புளிப்பான திராட்சரசமேயாகும் (wine); திராட்சப்பழச்சாற்றிலுள்ள (grape juice) புளிக்க வைக்கும் தன்மங்களானது, இரசத்தை மெதுவாய்ப் புளிப்பாக்குகின்றது மற்றும் அசுத்தங்களை நீக்குகின்றது மற்றும் இப்படியாக திராட்சரசமாக (wine) மாறுகின்றது. இராப்போஜனத்தின்போது நமது கர்த்தரினால் பயன்படுத்தப்பட்ட திராட்சரசமானது (wine) சுத்தமான திராட்சரசம் (pure wine) (வெறும் திராட்சப்பழச் சாறாக/grape juice இருக்க முடியாது, காரணம் திராட்சப்பழச்சாறானது இலையுதிர் காலம் துவங்கி வசந்த/இளவேனிற் காலம்வரையிலும் புளிக்காமல் காணப்பட முடியாது) என்பதுகுறித்து நமக்குத் தெளிவாய் இருப்பினும், மற்றும் இதுபோன்றதான இரசமானது அதிகளவில் பானம்பண்ணுதல் என்பது வேதவாக்கியங்களில் போதைக்கொண்டு வெறிக்கப்பண்ணும் என்பதாகக் குறிப்பிட்டிருப்பினும், கலப்படமான wine/ஒயின்கள் மற்றும் வர்த்தக மதுபானங்கள் உண்டுபண்ணுகிற நாசத்தையும், ஆரோக்கியம் மற்றும் குடும்பத்திற்குச் சீரழிவையும் உண்டுபண்ணியுள்ளதையும், உண்டு பண்ணிக்கொண்டிருக்கிறதையும் நாம் நன்கு உணர்ந்திருப்பதினால், நமது கர்த்தர் விலையேறப்பெற்ற ஜீவன் கொடுக்கின்ற தமது இரத்தத்தை அடையாளப்படுத்துவதற்கென்று, இந்தக் கலப்படமான மற்றும் பாதகமான ஒயின்களையோ/திராட்சரசங்களையோ அல்லது வேறு ஏதாகிலும் வகை திராட்சரசங்களையோ அடையாளமாக தெரிந்தெடுக்கமாட்டார் என்பதில் எங்களுக்கு உறுதியே; சுத்தமான திராட்சரசம்கூட (pure wine) மதுபானம் பருகுவதற்கான ஆசையை விழிக்கப்பண்ணிடுவதாக (அ) ஆசையைப் புத்துயிரடையப் பண்ணுவதாய் இருக்கும் என்று கருதப்படுகின்றது. இது விஷயத்தில் நம்முடைய மரித்துக்கொண்டிருக்கும் சந்ததியில் அதிகரித்து வருகிறதான இப்பெலவீனத்தைக் கர்த்தர் கருத்தில்கொண்டிருப்பார் என்று நாம் நம்புகின்றோம். இது விஷயம் குறித்ததான நமது கர்த்தருடைய எண்ணங்களை நாம் இப்படியாக இருக்குமென நிதானிப்பதினாலும், அடையாளங்களைப் பயன்படுத்தி அவரது மரணத்தை நினைவுகூர்ந்து ஆசரிப்பது என்பது கட்டளையின் பேரில் செய்யப்படாமல், மாறாக ஆசரிப்பது என்பது சிலாக்கியமாக இருக்கின்றபடியாலும், புளிப்பில்லாத அப்பங்களை நாம் பயன்படுத்துவது தவறாய் இருக்காது என்று நாம் காண்கின்றோம் மற்றும் ஒருவரையும் தூண்டிவிடாதபடிக்கு, wine/திராட்சரசத்திற்குப் பதிலாக வேறொன்றைப் பயன்படுத்துவது என்பது தவறாகவோ அல்லது கட்டளையை அலட்சியப்படுத்துவதாகவோ இருக்காது என்று நாம் காண்கின்றோம்; விசேஷமாக இதே ஒரு கொள்கையானது, அப்போஸ்தலனாலும்கூடப் பலமாய் முன்வைக்கப்படுகின்றது; அவர் சொல்லியுள்ளதாவது: "மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது பலகீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்." "ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்." (உரோமர் 14:21; 1 கொரிந்தியர் 8:13)

அப்படியானால் wine/திராட்சரசத்துக்குப் பதிலாக என்ன பயன்படுத்தப்படலாம்? நியாயப்பிரமாணத்தின்படி புளிப்பான அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டியதான பஸ்கா வாரத்தின்போது எபிரெயர்கள் என்ன செய்வார்களோ, அதையே நாமும் செய்யலாம். ஒருவேளை அவர்களுக்குத் திராட்சரசம் (wine) தீர்ந்துபோய்விட்டதென்றால், துரிதமாய்ப் புளிக்கவைக்கப்படுவதற்கெனப் புளிப்புச் சேர்க்கப்பட்ட இரசத்தைத் தவிர்த்து, உலர்ந்த திராட்சைகளினால் உண்டாக்கப்பட்டதும் மற்றும் "திராட்சப்பழ ரசத்திற்கு" (fruit of the vine) சமமானதுமானதை, wine/திராட்சரசத்திற்குப் பதிலாகப் பயன்படுத்துவார்கள். நம்மாலும் அதைச் சுலபமாய்ச் செய்ய முடியும். இனிப்புத் தன்மை அதிகமாய்க் காணப்படுகின்றதான சாதாரணமான உலர் திராட்சைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்; அவைகளைக் கொஞ்சம் நீருடன் வேகவைத்தப் பிற்பாடு, வடிக்கட்டி, ரசத்தை மாத்திரம் எடுத்துக்கொள்ளுங்கள். இது உண்மையான "திராட்சரசமாய்" (wine) இருப்பதுபோல, உண்மையில் "திராட்சப்பழரசமாகவும்" (fruit of the vine) காணப்படுகின்றதல்லவா? நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் உலர் திராட்சரசமோ (அ) திராட்சப்பழச்சாற்றையோதான் பயன்படுத்தினார்கள் என்று நாம் வலியுறுத்தாமல், மாறாக

உண்மையான திராட்சரசத்தைத்தான் (wine) பயன்படுத்தினார்கள் என்று கூறுகிறவர்களாக இருப்பினும், நம்முடைய சீதோஷண நிலைக் காரணமாகவும், நம்முடைய நாட்களிலுள்ள விரைவான வாழ்க்கை நடைமுறை அழுத்தங்கள் காரணமாகவும், ஆண்கள் மத்தியில் சுயகட்டுப்பாட்டின் விஷயத்திலான பெலவீனம் காரணமாகவும், மாறுபட்ட சூழ்நிலைகள் காரணமாகவும் உண்மையான (wine) திராட்சரசத்திற்குப்பதிலாக உலர் திராட்சரசத்தை, திராட்சப்பழரசமாக (fruit of the vine) நாம் பயன்படுத்துவதைக் கர்த்தர் அங்கீகரிப்பார் என்று நாம் நம்புகின்றோம்.

*****

# இராஜரிக ஆசாரியர்கள் மத்தியில் ஒழுங்கு

**வே**தவாக்கியங்களானது தனிப்பட்ட குருமார் வகுப்பாரை அங்கீகரிப்பதில்லை, மாறாகக் கிறிஸ்துவின் முழுச்சபையாருமே ஆசாரியக்கூட்டத்தாராய் இருக்கின்றனர் என்றும், அப்போஸ்தலர்கள் மற்றும் கர்த்தர் கட்டளையிட்ட எதையும் தங்களுக்கு இருக்கும் திறமைக்கேற்ப செய்திடுவதற்கு ஒவ்வொருவருக்கும் மற்றும் அனைவருக்குமே ஒரே மாதிரி அதிகாரம் காணப்படுகின்றது என்றும் நாம் சுட்டிக்காண்பிக்கையில், நாம் ஒழுங்கின்மையை வலியுறுத்துவதாக யாரும் அனுமானித்திட வேண்டாம். ஒவ்வொரு சபையாரும், தங்கள் மத்தியில் நன்கு தகுதியுடையவர்களாய்க் காணப்படுபவர்கள் சிலரை இந்த ஊழியங்களுக்கெனத் தேர்ந்தெடுப்பது தகுதியானதேயாகும். ஆனால் இப்படியாக ஊழியம் புரிகிறவர், அவரை இப்படி ஊழியம்புரியும்படிக்குத் தேர்ந்தெடுத்த அவரது சகோதரரைக் காட்டிலும் உயர்ந்த ஒரு வகுப்பாருக்கு அல்லது ஜாதியாருக்கு உட்பட்டவர்களல்ல என்று எப்போதும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். "கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்." சபையின் இத்தகைய ஊழியக்காரன் மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் பயபக்திக்குரியவரென அல்லது புனிதமானவரெனக் கருதப்படக்கூடாது; ஒருவேளை அவர் மிகவும் உண்மையுள்ள மற்றும் கிறிஸ்துவுக்கொத்த சாயலுடைய ஊழியக்காரனாகக் காணப்பட்டாலுங்கூட, அவர் "அவரது கிரியைகளினிமித்தமாக" மிக உயர்வாய் எண்ணப்பட வேண்டும்; காரணம் அவரது அன்பான மற்றும் உண்மையான ஊழியத்தினாலே ஒழிய, வேறெந்தக் காரணத்தினாலுமல்ல (1 தெசசோனிக்கேயர் 5:13). அவர் தேவனுடைய பார்வையில் "குருவாய்" இருப்பதில்லை; ஏனெனில் இத்தகைய எந்த வகுப்பாரையும் தேவன் அங்கீகரிக்கிறதில்லை மற்றும் அவரது வசனமானது இத்தகைய எந்த வேறுபாட்டையும் அங்கீகரிக்கிறதில்லை.

சபையின் இத்தகைய ஓர் ஊழியக்காரன் அல்லது வேலைக்காரன் பெற்றிருக்கும் எந்த "அதிகாரமும்," அவருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரமாகவே இருக்கின்றது; கர்த்தருடைய சகோதரரில் எளிமையான சகோதரனாய்க் காணப்படுபவர் பெற்றிருப்பதைக்காட்டிலும் அதிகமான எந்த அதிகாரத்தை இந்த ஊழியக்காரர் பெற்றிருப்பதில்லை; சுவிசேஷத்தை அறிவிக்கவும் மற்றும் வேதவசனமானது செய்யும்படிக்குக் கட்டளையிடும் எதையும் அல்லது எல்லாவற்றையும் அவனவனுடைய தாலந்துகள், வாய்ப்புகளுக்கு ஏற்ப செய்திடுவதற்கு மற்றும் ஊழியம் புரியும்படிக்கு சகவிசுவாசி விரும்பிடுவதற்கும் ஏற்ப செய்திடுவதற்கு, முழுச்சபையிலுள்ள யாருக்கும் வேதவசனத்தினுடைய அதிகாரம் காணப்படுகின்றது (மத்தேயு 28:19, 20). பிரசங்கித்திடுவதற்கோ அல்லது வேறுவிதத்தில் ஊழியம்புரிந்திடுவதற்கோ அதிகாரம் என்பது மற்ற ஊழியக்காரர்களாலோ அல்லது குருமார் பேரவைகளாலோ கொடுக்கப்பட முடியாது. ஒவ்வொரு இராஜரிக ஆசாரியன், அதிகாரத்தின் விஷயத்திலும், ஆசாரியத்துவத்திற்குரிய மதிப்பின் விஷயத்திலும் ஒருவருக்கொருவர் இணையானவர்களே; ஆனால் தாலந்துகள், அறிவு முதலானவைகளிலும், திறமை விஷயத்திலும் இவர்கள் ஒருவருக்கொருவர் சமமாய்க் காணப்படுவதில்லை. அனைவருக்கும் ஊழியக்காரர்களாய் ஊழியம்புரிந்திடுவதற்கென ஒருவர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் காரியமானது, இப்படியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் மற்றவர்களுக்கு இப்படியாய் உயர்வான ஊழியம்புரிந்திடுவதற்குரிய ஏதோ தகுதிகளைப் பெற்றிருக்கின்றனர் என்பதையும், அவை அனைவருக்குமான ஊழியத்திற்காகவும், பிரயோஜனத்திற்காகவும் அவர்களால் மனமுவந்து மற்றும் மனப்பூர்வமாய்ப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது அல்லது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்க வேண்டும்.

---

# ஓர் உருவகக் கதை

என்னுடைய வேலையினுடைய களைப்பில், நான் நாற்காலியில் அமர்ந்திருந்தேன்; என்னுடைய உழைப்பானது, கடுமையாகவும், நீண்டகால உழைப்பாயும் இருந்தது. சபை முன்னேற்றத்துடனும், வளமையுடனும் இயங்கிவந்தது; எப்பக்கத்திலிருந்தும் மகிழ்ச்சியும், நம்பிக்கையூட்டுதலும், தைரியப்படுத்துதலுமே காணப்பட்டது. என்னைப் பொறுத்தவரையில், நான் என்னுடைய வேலையில் மகிழ்ச்சியாய் இருந்தேன்; என்னுடைய சகோதர சகோதரிகள் அனைவரும் ஒற்றுமையுடன் காணப்பட்டனர்; என்னுடைய பிரசங்கமும், புத்திமதிகளும், எனக்குச் செவிகொடுத்தவர்கள் மத்தியில் நல்லப் பலனைக்கொடுத்தது; என்னுடைய சபையில் ஜனங்கள் குவிந்து காணப்பட்டனர்; என்னுடைய சபையார் அனைவரும் ஏறக்குறைய எழுப்புதல் உடையவர்களாகவே காணப்பட்டனர்; ஆகவே வேலை இப்படியாக நன்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது. சபையின் முன்னேற்றத்திற்காக நான் என்னுடைய சக்தி முழுவதும் பயன்படுத்தப்படும் அளவுக்கு உழைப்பவரானேன்.

என்னுடைய வேலை களைப்பினால், நான் கொஞ்சம் அரைத் தூக்கம் போன்ற நிலைக்குள் கடந்து போய்விட்டேன், ஆனாலும் நான் இருந்த இடமும், என்னைச் சுற்றியிருந்த அறையின் விஷயங்களும் எனக்குத் தெளிவாகவே தெரிந்தது. கதவைத் தட்டாமல் அல்லது நான் உள்ளே வாருங்கள் என்று சொல்லாமலேயே ஓர் அந்நியர் அறைக்குள் வந்தார். அந்த அந்நியருடைய முகத்தில் நான் அன்பையும், அறிவுத்திறனையும், நற்பண்புகளையும் பார்த்தேன்; ஆனால் அந்த அந்நியர் நல்ல ஆடை அணிந்தவராகவும், சுமாரானவராகவும் இருந்தாலுங்கூட, அவர் அளவுகோல்களையும், இரசாயனப் பொருள்களையும், கருவிகளையும் தூக்கிக்கொண்டு வந்தது, மிகவும் விநோதமாய் இருந்தது.

அந்த அந்நியர் என்னிடத்திற்கு வந்து, தனது கையை நீட்டி, "உம்முடைய பக்திவைராக்கியம் எப்படி இருக்கின்றது?" என்று கேட்டார்.

அவர் பேச ஆரம்பித்தபோது, அவர் ஏதோ என் ஆரோக்கியத்தைக் குறித்துக் கேட்கப் போகிறார் போலும் என்று எண்ணினேன்; ஆனால், அவர் பக்திவைராக்கியம் குறித்துக் கேள்விக் கேட்டது எனக்குச் சந்தோஷமாய் இருந்தது; ஏனெனில் என்னுடைய பக்திவைராக்கியத்தினுடைய விஷயத்தில் எனக்கு நன்கு திருப்தியிருந்தது மற்றும் வந்துள்ள அந்நியர் என்னுடைய பக்திவைராக்கியத்தின் அளவை அறியும்போது புன்னகைப்பார் என்று நான் உறுதியாயிருந்தேன். தானாகவே பக்திவைராக்கியத்தை நான் ஒரு திடப்பொருளாக மாற்றிக்கொண்டு, பக்திவைராக்கியத்தை வெளியே எடுத்து, அந்த அந்நியர் சோதனை செய்யத்தக்கதாகக் கொடுத்தேன்.

அவர் அதை வாங்கிக்கொண்டு, தனது தராசில் வைத்து, கவனமாய் எடைப்பார்த்தார். "நூறு பவுண்ட்ஸ்" என்று அவர் கூறுவதை நான் கேட்டேன்.

நான் திருப்தியடைந்துள்ளதை வெளிப்படுத்தும் சத்தத்தை என்னால் வெளிக்காட்டாமல் அடக்கி வைக்க முடியவில்லை; ஆனால் அவர் எடையைக் குறித்துக்கொண்டபோது, அவரது பார்வையைக் கவனித்தேன் மற்றும் அவர் இன்னமும் இறுதி முடிவிற்கு வரவில்லை என்பதையும், அவர் இன்னமும் தமது சோதனையைத் தொடரவிருக்கின்றார் என்பதையும் உடனடியாய்க் கண்டுகொண்டேன்.

அவர் அந்தத் திடப்பொருளை (பக்திவைராக்கியத்தை) மிகச் சிறு அணுக்களாக உடைத்து, அவைகளைத் தமது மட்பாத்திரத்தில் போட்டு, பின் பாத்திரத்தை நெருப்பின் மீது வைத்தார். திடப்பொருளின் அணுக்களானது முழுமையாக உருகினபோது, அவர் அதை நெருப்பிலிருந்து எடுத்து, குளிரும்படி விட்டார். அது குளிர்ந்தபோது உறைந்துபோனது மற்றும் அது அடுப்பங்கரையினிடத்திற்குக் கொண்டுவரப்பட்டப்போது, அது பார்ப்பதற்கு வரிசை வரிசையான அடுக்குகளை உடையதாகக் காட்சியளித்தது; அது சுத்தியலினால் அடிக்கப்பட்டப்போது, உடைந்தது மற்றும் அவைகள் கடுமையாய்ப் பரிசோதனை செய்யப்பட்டன மற்றும் எடைப் பார்க்கப்பட்டன; இவைகள் நடைபெறுகையில் அந்த நபர் குறிப்புகளையும் குறித்துக்கொண்டார்.

அவர் அனைத்தையும் முடித்த பிற்பாடு, பதிவு செய்திட்டக் குறியீடுகளை என்னிடம் கொடுத்து, கவலையும், அனுதாபமும் கலந்த ஒரு பார்வையுடன் "தேவன் உன்னைக் காப்பாற்றுவாராக!" என்று மட்டும் கூறி, அறையைவிட்டு வெளியேறினார்.

நான் குறியீடுகளுள்ள காகிதத்தைத் திறந்து வாசித்தேன்; அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

"ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்பும் ஜீனியஸ் அவர்களின் பக்திவைராக்கியத்தினுடைய பாகங்கள் பற்றின ஆய்வு: அதன் மொத்த எடை 100 பவுண்ட்ஸ் ஆகும்; அதன் பாகங்கள் பற்றின ஆய்வின்படி, 100 பவுண்ட்ஸ் பக்திவைராக்கியத்தில் . . . .

- 10 - பாகங்கள் - மதவெறி/குருட்டுத்தனமான பிடிவாதம்
- 23 - பாகங்கள் - தனிப்பட்டக் குறிக்கோள்கள்
- 14 - பாகங்கள் - தாலந்துகள் குறித்த பெருமை
- 19 - பாகங்கள் - புகழ், பாராட்டிற்கான ஆசை
- 15 - பாகங்கள் - சபை பிரிவு குறித்த பெருமை
- 12 - பாகங்கள் - அதிகாரத்தின் மீதான ஆசை
- 4 - பாகங்கள் - தேவன் மீதான அன்பு
- 3 - பாகங்கள் - மனிதன் மீதான அன்பு

அந்த அந்நியருடைய விநோதமான நடந்துகொள்ளுதலினாலும், அதிலும் குறிப்பாக அவர் அறையைவிட்டு வெளியேறும்போது கொண்டிருந்த பார்வையும், கூறிச்சென்ற வார்த்தைகளும் என்னைக் கலக்கத்தில் ஆழ்த்தினது; ஆனால் அவர் காகிதத்தில் குறித்துத் தந்திருந்த எண்ணங்களைப் பார்த்தபோது, என்னுடைய இருதயமானது, எனக்குள்ளாக நலிந்துபோனது. ஒருவேளை பதிவு செய்யப்பட்டிருப்பவைகள் சரியாக இருக்குமோவென எதிர்த்து யோசித்திட முயன்றேன்; ஆனால் வெளியேறின அந்த அந்நியர் முகப்பு அறையை (hall) தாண்டிடும்போது, வருத்தத்தால் முனங்கின சத்தத்தினால் நான் திடீரென நேர்மையான உணர்வின் நிலைக்குக்கொண்டுவரப்பட்டேன்; மேலும் திடீரென ஓர் இருள் என்னை மூடிக்கொண்டபோது, என் கையில் இருந்த பதிவுகளின் குறிப்பானது, உடனடியாக மங்கலானது மற்றும் படிக்க முடியாத அளவுக்குத் தெளிவில்லாததாகியது,

"கர்த்தாவே என்னைக் காப்பாற்றும்/இரட்சியும்!" என்று நான் திடீரெனக் கதறினவனானேன்.

காகிதத்தை என்னுடைய கையில்கொண்டவனாகவும், அதன்மேல் என் கண்களைப் பதிய வைத்தவனாகவும், நான் முழங்காற்படியிட்டிருந்தேன். உடனே அந்தக் காகிதம், "ஒரு கண்ணாடியாக மாறினது மற்றும் அதில் நான் என் இருதயத்தைப் பார்க்க முடிந்தது. பதிவு செய்யப்பட்டிருந்தவைகள் உண்மையே! நான் அதைப் பார்த்தேன்; நான் அதை உணர்ந்தேன்; நான் அவைகளை ஒப்புக்கொண்டேன்; அவைகளுக்காக வருத்தப்பட்டேன்; மேலும் என்னிடமிருந்தே என்னைக் காப்பாற்றும்படிக்கு, மிகுந்த கண்ணீர்களோடு நான் தேவனை நாடினேன். பொறுக்கமுடியாத வேதனையினால், அடக்கிக்கொள்ள முடியாத பலத்த அழுகையின் சத்தத்தோடு விழித்தேன்.

-- தெரிந்துகொள்ளப்பட்டவை.

தேவனுடைய அர்ப்பணம்பண்ணப்பட்ட பரிசுத்தவான்கள் அனைவரும் அவரது ஸ்தானாபதிகளாகக் காணப்படுகின்றபடியால், இந்த உருவகக் கதையானது அனைவருக்கும் பிரயோஜனமாக இருக்கும். தேவன் மீதான அன்பும், நம்முடைய சக மனுஷர்கள் மீதான அன்பும் மாத்திரமே உண்மையான பக்திவைராக்கியத்தினுடைய அம்சங்களாக/பாகங்களாகக் கதையில் இடம்பெறும் ஆய்வில் காணப்படுகின்றது. கதையின் ஆய்வில் வரும் மற்றப்பாகங்களானது, தேவனுடைய பார்வையில் வெறுக்கத்தக்க கழிவுகளாகக் காணப்படுகின்றது மற்றும் நாமும் கணிக்கும் விஷயத்தில் தேவனுடைய கண்ணோட்டத்தைக் கொண்டிருப்போமானால், நமக்கும் அந்த மற்றப் பாகங்களானது, வெறுக்கத்தக்கக் கழிவுகளாகவே காணப்படும். தேவனுடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்பிடும் ஒவ்வொரு ஊழியக்காரனும், தன்னுடைய சொந்த இருதயத்தைப் பரிசோதித்து, தன் சொந்த பக்திவைராக்கியத்தையும், தன் சொந்த நோக்கங்களையும் ஆராய்ந்து பார்ப்பானாக.

[R1188]

# கிறிஸ்துவினால் வரும் நிந்தனை/ கிறிஸ்துவைக் குறித்த வெட்கம்

"ஆதலால் விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார்." மாற்கு 8:38

சிறு குழந்தையைவிட அழகானது உலகத்தில் எதுவுமில்லை என தனது இருதயத்திற்கு பிரியமான பேரனிடம் காணப்படும் இனிமையான, மாசற்ற தன்மையையும் அவனுக்குள் விழித்தெழும் மனப்பான்மையும் பிரியமாய்/அன்பாய் கவனித்த ஒருவர் கூறினார். மேற்கூறப்பட்ட இந்த கருத்தை, தேவனும் இவ்விதமாகதான் பார்க்கின்றாரா? என்ற எண்ணங்களைக் கொண்டு வந்தது. இது உண்மைதானா? என்று நாம் பார்க்கலாம். குழந்தைப் பருவத்தில் கவரும் விஷயங்கள் அதன் மாசற்ற தன்மையும், பாவத்தினால் தீட்டுப்படாததினிமித்தம் அதனிடம் காணப்படும் பரிசுத்தமும்/உண்மையும் மனரீதியான மற்றும் ஒழுக்கரீதியான ஆற்றல்கள் அதனிடத்தில் விழித்தெழுவதும் மற்றும் அதன் புதிய சரீரப்பிரகாரமான ஜீவியத்திற்குரிய அழகும், புத்துணர்ச்சியுமேயாகும். ஆனால் இந்த விஷயத்தை தேவனுடைய கண்ணோட்டத்தில் இருந்து காண்கையில் இன்னும் அழகான ஏதோ ஒன்று இருப்பதை நாம் காண்கின்றோம். அதாவது வாலிப வயதிலோ அல்லது நடுத்தர வயதிலோ அல்லது வயோதிப காலத்திலோ எந்த வயதிலும் ஒழுக்கமும் முதிர்ச்சியும் அடைந்த குணலட்சணங்கள் இருக்கும் பட்சத்தில் இதுவே அவருடைய பார்வையில் மிக விலையேறப் பெற்றதாகவும் , அழகாகவும் காணப்படும் தேவன் குணலட்சணங்களையே மிகவும் விரும்புகின்றார், நேசிக்கின்றார்.

தேவன், ஆதாமை தம்முடைய ரூபத்தின்படி பரிசுத்தமாயும், மாசற்றவனாயும் சிருஷ்டித்தார். ஆதாம் அன்பு/நேசிக்கப்படுவதற்கும், பாசம் காட்டப்படுவதற்கும் பாத்திரமாய் இருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் ஆதாம் மற்றும் அவருடைய சந்ததி ஒழுக்கமும், முதிர்ச்சியும் அடைந்த மகா அருமையான குணலட்சணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும், அதிகம் நேசிக்கப்படுவதற்கு இன்னும் பாத்திரமாகவும், தேவன் ஏழாயிரம் ஆண்டுகளாக அவர்களின் குணலட்சணங்களை வளர்ச்சியடைய செய்யவும், பூரணப்படுத்தவும் அவர்களை கண்டிப்பான ஒழுங்குமுறையின் கரங்களின் கீழ் ஒப்புக்கொடுத்துள்ளார்.

குணலட்சணம் என்ற வார்த்தையின் பொருள் கூர்மையாக்குதல், உழுதல், செதுக்குதல் ஆகும். ஆரம்பக்கட்ட மாசற்ற நிலை என்பது, அடிச்சுவட்டை வைத்து வரைந்த முதல் சீரான படமாகும்/வடிவமாகும். ஆனால் காலம் செல்கையில் ஒழுக்கமுறை சரியான விதத்தில் பிரயோகிக்கப்பட்டால், முடிவு மகிமையானதாகவும், அருமையானதாகவும் விளங்கும். சிறிய ரோஜா மொக்கு கூட அழகை உடையதுதான். ஆனால் நம்பிக்கையும், விசுவாசமும் பூரணமடைய வேண்டும். அதாவது, முழுமையாக விரிந்த பூவாக காணப்பட வேண்டும். மொக்கானது தனது அருமையான புத்துணர்வு அளிக்கும் நறுமணத்தை அளிப்பதற்கு முன்பு அது விரிந்து, வளர்ந்து மூடி காணப்படும் நிலையில் உள்ள தனது இதழ்களைத் திறக்க வேண்டும். அதாவது, முழுமையாக திறக்க வேண்டும். இதேபோன்றுதான் குணலட்சணங்களும் காணப்பட வேண்டும். ஆகவே தேவனுடைய பார்வையில் இந்த பூமியிலேயே மிக அழகான ஒன்று பரீட்சிக்கப்பட ஒழுக்கத்திற்குள்

கொண்டுவரப்பட்ட மற்றும் நன்கு வளர்ச்சியடைந்த குணலட்சணங்களே ஆகும். தீமையின் ஆதிக்கத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட குணலட்சணங்கள், அடிச்சுவடுகளை வைத்து எடுத்த அருமையான தடங்களில் ஓவியமாக இராமல், மங்கலான தடங்களாகவும், தீமையினால் உண்டான அவலட்சணமான வடிவங்களின் மாற்றுவடிவங்களாகவும் இருக்கின்றது.

குணலட்சணங்களாகிய உட்புற பூவானது வளர்கையில், மொக்கை மூடியிருந்த வெளி இதழ்கள் வாடி ஜீவனை விட்டுவிடுகின்றது. ஆனால், பூவை கவனிக்க வேண்டுமென்ற நோக்கம் உள்ளவருக்கு பூவின் உள்ளான அழகையும், நறுமணத்தையும் பார்ப்பதற்கென்று காத்திருப்பவருக்கு மொக்கை ஆரம்பத்தில் மூடிக்கொண்டிருந்து, பார்ப்பவரின் கண்களுக்குப் புலப்பட்ட அந்த வெளி இதழ்கள் வாடிப்போவதைக் கவனிப்பதில்லை. இதேபோன்றுதான் முதிர்ச்சியடைந்த குணலட்சணங்களும், நறுமணமும் ஒருவரில் காணப்படும்போது, அவருடைய நரைத்துப்போன தலைமயிரை, தள்ளாடும் கால்களை, சுருங்கின கண்விழிகளை, வாலிபத்தின் அழகும், பலமும் இழந்துபோன நிலையை, முதுகு குனிந்த நிலையை, மெதுவான நடைகள், குரல்களை நாமும் கவனிப்பதில்லை. ஏற்ற காலத்தில் குணலட்சணங்களை பெரிதும் மதிக்கும் தேவன், வெளி இதழ்களை கத்தரித்துப்போட்டு, அது நித்திய அழகில் காணப்படும் ஒத்த தன்மையுள்ள தேசத்திற்கு அதை இடம் பெயர்த்து விடுவார்.

குழந்தைகளிடம் ஆரம்பகாலத்தில் காணப்படும் குணலட்சணத்தின் சுவடுகளை/தடயங்களை கவனித்துப் பாருங்கள். குழந்தைகள் எப்படி யோசிக்கின்றார்கள் எனவும், அறிய ஆவலாய் இருக்கின்றார்கள் எனவும், கற்றுக்கொள்வதற்கு ஆர்வமாய் இருக்கின்றார்கள் எனவும் கவனித்துப் பாருங்கள். அவனுடைய மனசாட்சி முதன்முதலாக செயல்படுகிறதையும், அவன் எவ்வாறு நன்மையையும், தீமையையும் சீர்தூக்கிப் பார்க்கின்றான் எனவும் கவனித்துப் பாருங்கள். அவன் உண்மையை எப்படி எதிர்பார்க்கின்றான் எனவும், எவ்வாறு தவறுகளையும், போலித்தனத்தையும் பார்த்து ஆச்சரியப்படுகின்றான் எனவும் கவனித்துப் பாருங்கள். குழந்தையின் இருதயத்தில் எவ்வாறு அன்பு தோன்றி வழிகின்றது எனவும், பெற்றோர்களின் பாசத்திற்கும், பராமரிப்பிற்கும் அவன் எவ்வாறு நன்றியுணர்வோடு புன்னகைக்கிறான், கொஞ்சுகிறான் என்பதையும் கவனித்துப் பாருங்கள். இந்த ஒவ்வொரு விஷயங்களுக்கு ஒத்த தீமையான பகுதிகள் இருப்பதற்கான வாய்ப்புகளும் உண்டு என்றாலும், இந்த தீமையான பண்புகள் ஆரம்பகால குணலட்சணங்களில் ஒருபகுதியாக இருக்காது. இந்த இனிமையான குழந்தை பண்பு யாவும் ஆரம்பகட்ட குணலட்சணங்களின் சுவடுகள்/தடயங்களே ஆகும். மேலும் கவனமான ஒழுக்க முறையைக் கையாண்டு பயிற்சியளித்து மேலும் சாதகமான சூழ்நிலைகள் தொடர்ந்து காணப்படுமாயின், இந்த ஆரம்பக்கட்ட குணலட்சணத்தின் சுவடு தொடர்ந்து வளரும். ஆனால் தற்கால ஜீவியத்தில் இதற்கான வாய்ப்புகள் இல்லை. தீமை ஆளுகை செய்வதால் நல்ல குணலட்சணங்களே குன்றிப்போக செய்துவிடுகின்றது.

முதிர்ச்சி நிலை அடைந்த குணலட்சணங்களைக் கவனித்துப் பாருங்கள். நீதியின் கொள்கையை கவனமாய்ப் படித்ததால்/கற்றதால் அது எவ்வளவு ஊக்கமூட்டினது என்பதை கவனித்துப் பாருங்கள். எந்த எளிதான, எளிமையான கிருபைகள் தவறுகளை விட்டுவட உதவினது என்பதை கவனியுங்கள். சத்தியம் சந்தோஷத்துடனும், நன்றியுணர்வுடனும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான காரணம், சத்தியத்திற்கான வாஞ்சையும், அதைப் புரிந்துகொள்வதற்கான வாஞ்சையும் கவனமாக இருதயத்தில் விதைக்கப்பட்டதேயாகும் என்பதையும் கவனித்துப் பாருங்கள். மேலும் மனசாட்சியானது, எவ்வாறு நன்மை, தீமை குறித்ததான தீர்வில் கைத்தேர்ந்தது என்பதையும், குழப்பம்/தடுமாற்றம் இல்லாமல் காரியங்களைநடத்துவதில் கைத்தேர்ந்தது எனவும், கவனித்துப் பாருங்கள். தீமை செய்வதற்கான ஒவ்வொரு சோதனையின் போதும், எவ்வாறு சத்தியமும், நியாயமும் மற்றும் அன்பும் பரந்த மனப்பான்மையும் ஆண்டு ஜெயம் கொள்கின்றது எனவும் கவனித்துப் பாருங்கள். சரீர உருவம்

எப்படியிருப்பினும், இப்படியான குணலட்சணம் இருக்குமாயின் அது மகிமையானதாகும். முழுமையாக விரிந்த பூக்கள் போன்ற குணலட்சணம் உடையவர்களின் நறுமணம் தங்களுக்கும், பின்னர் இவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஸ்தானத்திற்கும், அதிகாரத்திற்கும், வல்லமைக்கும் உயர்த்தப்படும்போது, மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாய் இருப்பார்கள்.

உறுதியான குணலட்சணம் என்பது, தொடர்ச்சியான பிரயாசத்தின் மூலமும், தீமையை ஜெயம் கொள்வதன் மூலமும் நீதியின் நிலையில் உறுதியாக வரும் நிலையே ஆகும். அதாவது, நீதி வாழ்க்கையில் சீரான சுபாவமாக மாறிவிட்ட நிலையாகும். சில குணலட்சணங்கள் ஆரம்பக் கட்டத்திலே வளர்ந்து உறுதியடைகின்றது. சில குணலட்சணங்கள் தாமதமாகவே உறுதியடைகின்றது. யார் தங்களிடம் குணலட்சணம் வளர்கின்றது என உணர்கின்றார்களோ, அவர்களே மற்றவர்களிடமும் இதே மாதிரியான குணலட்சணங்கள் வளருவதை உணரமுடியும். ஆகவேதான் குணலட்சணத்தை வளர்த்துவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் ஒவ்வொருவரும் அன்பில் பின்னி பிணைக்கப்பட்டுள்ளனர். உலகத்தின் ஜனங்கள் வெளிப்புறத்தையும் சூழ்நிலைகளையுமே பார்ப்பதால், இவர்களுக்குள் அழகாய் தோன்றாத குணலட்சணங்களை அங்கங்கள் மாத்திரம் ஒருவருக்கொருவர் கண்டு கொள்வார்கள்.

ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் குணலட்சணத்தை வளர்த்துவதில் கொஞ்சமோ, நிறையவோ பிரயாசம் எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். சிலர் சீரான வளர்ச்சியின் மூலம் உறுதியடைகின்றனர். ஆனால் சிலருக்கு அர்ப்பணிப்பில் குறைவான பிரயாசம் இருந்தாலும் அதாவது, முழுமையான இல்லையென்றாலும் உலகம், மாம்சம் மற்றும் சாத்தானின் ஆதிக்கத்தினால் தள்ளாடி பெலவீர்களாய் ஊசலாடிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் முழுமையான பிராயாசம் எடுக்கவில்லையென்றாலும், நீதிக்கு நேரான சில பிரயாசங்கள் எடுக்கின்றார்கள். இத்தகைய பெலவீனர்கள் கிறிஸ்துவின் சரீர அங்கமாக அடையாளம் கண்டுகொள்ளப்பட விரும்பாமல், தூரமாய் அவரைப் பின் தொடர்கின்றனர். இவர்கள் "கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தனைகளில்" பங்கு கொள்ள விரும்பாததினால், இவர்கள் போதுமான அளவு பாதுகாப்பான தொலை தூரத்தில் தங்களை நிறுத்திக் கொள்கின்றனர். இத்தகையவர்கள் தேவன் பார்க்கிற விதமாய் குணலட்சணங்களைப் பார்க்கும்படி (கற்க) தவறினவர்கள். அதை உணர்ந்து கொள்ளவும், அதை வளர்க்கும் சத்தியத்தையும் உணர்ந்து கொள்ளவும் (கற்க) தவறினவர் ஆவர். இத்தகையவர்கள் பெலவீனர்களும் சிலாக்கியங்கள் பெறுவதற்கான தகுதியுமற்றவர்கள் ஆவர். நாம் கர்த்தருடைய கண்ணோட்டத்தின்படி பார்க்கிறவர்கள் என்றால், சத்தியத்தின் முக்கியத்துவத்தையும் அது எவ்வாறு குணலட்சணங்களை செதுக்கி, மெருகூட்டுகின்றது என்பதையும் மதிப்பிடுவதற்கு நாம் கற்றுக்கொண்டிருந்திருப்போம். மேலும் இத்தகைய குணலட்சணங்கள் உடையவர்களாக நாம் அடையாளம் கண்டுகொள்ளப்படவும், இந்த குணலட்சணங்கள் உடையவர்களோடு சேர்ந்து அடையாளம் கண்டுகொள்ளப்படவும், வெட்கப்படாமலும் இருப்போம். இத்தகைய உறுதியான குணலட்சணங்களையே தேவன் நேசிக்கின்றார், கனப்படுத்தவும் செய்வார். ஆனால் பெலவீனமானதும், ஊசலாடுகிறதும், தம்மை தொலைதூரத்தில் நின்று பின்பற்றுகிற குணலட்சணங்களையுடைய பாத்திரங்கள் குறித்து வெட்கப்படுவேன் என்று கூறியுள்ளார். மத்தேயு 8:38 அதாவது, "ஆதலால் விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார்" என்றார் இயேசு.

கிறிஸ்துவினால் நமக்கு வெட்கம் என்று காண்பிப்பதற்கு அநேக வழிகள் உள்ளது. தாழ்மையான அல்லது ஏழையான அல்லது கல்வியறிவு இல்லாத கிறிஸ்துவின் சரீர அங்கத்தைக் குறித்து நமக்கு வெட்கம் ஏற்படுமாயின், அது கிறிஸ்துவைக் குறித்து வெட்கப்படுவதாகும். கிறிஸ்துவின் அங்கங்களுடைய நண்பர்கள் மற்றும் துணையாளிகள் என்று அடையாளம் கண்டு கொள்ளப்படுவதற்கு நமக்கு வெட்கம் ஏற்படுமாயின், அது கிறிஸ்துவைக் குறித்து வெட்கப்படுவதாகும். உலகமும், பெயர் கிறிஸ்தவ மண்டலமும் அவருடைய சரீரத்தைப்

புறக்கணித்து, எல்லாவிடத்திலும் எதிராகப் பேசுவதால், இந்த அவருடைய இழிவாகக் கருதப்படுகின்ற சரீரத்தில் ஓர் அங்கமாக, உலகமோ, பெயர் கிறிஸ்தவ மண்டலமோ கருதிவிடுமோ என வெட்கம் நமக்கு ஏற்பட்டால், அது கிறிஸ்துவைக் குறித்து வெட்கப்படுவதாகும். அவருடைய உபதேசங்களைக் குறித்து நாம் வெட்கப்பட்டால், அது கிறிஸ்துவைக் குறித்து வெட்கப்படுவதாகும்.

இப்படியான ஏதோ ஒன்றிற்கு வெட்கப்படுவது என்பதுதான் பெலவீனமான ஊசலாடும் பாத்திரம் என நரூபிப்பதாகும். மேலும் இத்தகையவர்களிடம் கர்த்தர் எதிர்பார்க்கும் முழு வளர்ச்சியில்லை எனவும் காட்டிவிடுகின்றது. இவைகள் அதாவது, முழு குணலட்சண வளர்ச்சி இருக்கும் பட்சத்திலேயே கர்த்தர் நம்மை அவருடைய மணவாட்டியாக ஏற்றுக்கொண்டு உடன் சுதந்திரர்களாக ஏற்றுக்கொண்டு உயர்த்துவார்கள். குணலட்சணங்களில் கீழான நிலமையில் இருக்கும் ஒருவரை தனது மணவாட்டியாக ஏற்றுக்கொள்வதற்கு அவரும் வெட்கப்படுவார். இந்த பெலவீனங்களை ஜெயம் கொள்ளுகிறவனும் தாழ்மையிலும், கற்றுக்கொள்ளுகிற மனநிலையிலும், சீரான, இசைவான குணலட்சணங்களை விருத்தி செய்வதற்கான சீரான முயற்சிகள் எடுப்பவர்களும் பாக்கியவான்கள் ஆவர்.

இந்த பொல்லாத நாட்களில் மனுஷருடைய பாராட்டுக்கென்று இல்லாமல், அவரை நெருக்கமாக பின்தொடர்ந்த அந்த உறுதியான, அருமையான, இசைவான குணலட்சணங்களையுடைய பாத்திரங்களை கிறிஸ்து விரைவில் ஏற்றுக்கொண்டு பாராட்டு தெரிவித்தது, இவர்கள் அவருடைய மணவாட்டிகளாக உடன் சுதந்தரர்களாக மகிமையில் உயர்த்தப்படும்போது வெளிப்படும். ஆமென்!

திருமதி ரஸல்.

## என்னுடைய ஒரு தாலந்து

## MY ONE TALENT

மென்மையான வெண்மைத் துணியினிலே

மாம்சக் கண்களுக்குத்தெரியா வண்ணமே மறைத்து வைத்தே

எனக்களித்த ஒரு தாலந்து தனையே காத்து வந்தேனே

எந்தனது தாலந்தை மறைத்தும் வைக்கலாம், செலவும் செய்திடலாம்,

அப்படியேகூட வைத்தும்கொள்ளலாம், இழந்தும் போகலாம்,

நான் எதைத் தெரிவு செய்கிறேனோ, அவ்வாறேகூட செய்திடலாம்.

ஆனால் அந்த வரமோ எனக்கு தற்காலிகமாகவே கொடுக்கப்பட்டதே

அதனை நான் அறிவுப்பூர்வமாகவே செலவு செய்யவேண்டுமென்றே.

அவர் மீண்டும் வந்துகேட்பார் என்பதை நானறிவேனே,

என் கரத்தில் அளிக்கப்பட்ட ஒவ்வொரு காசினையும்,

அவர் முன்பாக நான் நிற்கையிலே,

என் பெயர் அழைக்கப்படும் போதினிலே, அவர் முன்பாக நான் நிற்கும்போதினிலே

என்ன நேர்ந்திடுமோ ? என்ன என் சோகமோ ? என்ன என் அவமானமோ ?

அவர் கேட்பதை என்னால் கொடுக்க முடியாதன்றோ,

சிலர் பெற்ற தாலந்து தனை இரட்டிப்பாக்கி வைத்துள்ளாரே,

வேறுசிலர் பதின்மடங்காய் பெருக்கியே வைத்தாரே,

தங்கம் ஜொலிப்பதைப்போலவே திரும்பக் கொடுத்தாரே,

கர்த்தாவே நான் என்ன செய்யவேண்டும் என்றே எனக்குக் கற்பியும்

பரிசுத்தமாகவே நம்பகத்தைப் புதுப்பித்திடல் வேண்டுமன்றோ,

வெகுகாலம் செல்லுமுன்பே எனக்குதவி செய்திடுவீர்.

என எல்லாமும் செய்திட்ட உமக்காக

இப்போது ஏதேனும் செய்திடவே வேண்டுமன்றோ.

——————————

R 1217/3/118

# நீங்கள்தான் கிறிஸ்துவினுடையவர்கள்:

கிறிஸ்துவினுடையவர்கள் நீங்கள்தானே,
ஆம். அது எனக்குத் தெரியும்,
என்னையவர் தம் இரத்தத்தினாலே கிரையம் கொண்டாரே,
அவர் என் இரட்சகரும் கர்த்தருமாவார் என்பதை நான் எப்போதும் மறக்க மாட்டேனே,
அவரது கரத்தினில் ஆணிகள் ஊடுருவிய தழும்புகள் உள்ளனவே,
அவரது திருமுகத்தில் அன்பு வழிந்து தவழ்கின்றதே,
பரத்திலிருக்கும் தந்தையின் இல்லத்தில் அவரைப்போன்றே நான் வாழவேண்டியே
எத்தனை அதிகமாய் வாஞ்சிக்கின்றேன் நானே,

"வாழ்க்கை உன்னுடையது, ஆம், நான்அதைப் பெற்றுக்கொண்டேனே,
அதை தேவனுடைய அன்பு குமாரன் மூலமே அடைந்து விட்டேனே,
எனக்குள் அவரே வாழ்க்கையைத் துவக்கினார், எல்லாம் நிறைவுறும் வரையினில்
அவரே எனக்குள் இருந்து செயலாற்றுகிறார்,
"மரணமும் உன்னுடையது,
ஆகா, ஆமாம், ஆனால் தேவகுமாரன் வென்றடக்கிவிட்டாரே,
எனக்காக சிலுவையிலே அவர் மரித்தும் விட்டாரே,
அவரது நீதியின் வஸ்திரத்தினால் நான் மூடப்பெற்றுள்ளேனே,
அவரது வாழ்க்கையினால் நான் பரிசுத்தமாக்கப்பெற்றேனே,
என்னையவர் அழைத்துச்செல்ல வந்துகொண்டிருக்கிறாரே,
எனவேதான் நான் வழிமேலே விழிவைத்து வாயிலை நோக்கிக்கொண்டே இருக்கின்றேனே,
அவர் பிரசன்னமாகுதலை நான் வாஞ்சிப்பதாலே,
காத்திருக்கும் வேளையிலே, நான் ஊழியம் செய்து கொண்டுள்ளேனே,

"தற்காலப் பொருட்கள்": ஆமாம், நான் கடலின் அலைகளின் நுரைகளிலே
மிதக்கும்போதினில் பயன்படுத்துகின்றேனே,
அவர்தம் வழிகாட்டிப்புத்தகமோ, எந்தனது பொக்கிஷமாகும்,
அவரது வாழ்க்கை உயிர்காக்கும் படகு எப்போதுமே மூழ்கிடாதே,
தலைமை மாலுமியாகிய கிறிஸ்து நான் எண்ண முடியாத அளவிற்கு,
நினைத்தும் பார்க்கமுடியாத அளவிற்கு என்மீது கிருபையைப் பொழிகின்றார்?,

"இனி சம்பவிக்க வேண்டியவை: " ஓ செல்வங்களின் ஆழங்களே,
தேவனின் எல்லா வாக்குத்தத்தங்களும் உண்மையானவையே,
நிறைவேறுமே,இதன் வழியாகத்தானே, வரஇருக்கின்ற முடிவில்லாத வாழ்க்கைக்கு
நானும் ஓர் பங்குதாரர் ஆகிடுவேனே.

திரும்பக் கொடுத்தலின் காலங்களில், இழந்துபோன எல்லா செல்வங்களையும்
அவர் திரும்பக் கொடுத்திடுவார், தேய்ந்துபோகா ஒளியினிலே,
அவரோடு நான் பற்றிக் கொள்வேனே.

இந்த உலகினில் கெட்ட வழியினில் சேர்த்திட்ட செல்வத்தை தெய்வமாக-
தனதேவதையாகக் கொண்டாடி, அதன் பெருமிதத்தோடே வாழ்ந்துவந்தாலும்,
தேவனோடு நடந்து வாழும் ஏனோக்கின் இரகசியத்தை நான் கண்டு கொண்டேனே,
நாளின் பகற்பொழுதில் நான் யேசுவோடே நடந்திடுவேனே,
இராபடபொழுதில் அவர் மாாபின்மீதே சாய்ந்துறங்கிடுவேனே.
என்னுடையமன பாரங்கள் எல்லாவற்றையும் அவரிடம் நான் கூறிடுவேன்,
எனக்கு அவர் பூரணமாய் ஓய்வைத் தந்திடுவாரே.

"நான் மகிமைப்படுத்தப்படுவேனோ?" ஆம். அது எனக்குத் தெரியும்,

அநேகமாய் என்ற வார்த்தை தேவனுடைய அகராதியில் இல்லையே,
இருந்தாலும், ஆனாலும் என்ற வார்த்தைகள்
என்னுடைய பாவங்களுடனே அடக்கம் செய்யப்பட்டனவே,

இரத்தத்தின் கீழாக, கிறிஸ்து உயிர்த்தெழுந்து எனக்குள் வாழ்கின்றாரே,
ஏல்லா அதிகாரங்களும் அவருக்குக்கொடுக்கப்பட்டுவிட்டதுவே,
இவ்வாறாகத்தானே அவர் என்னைப்பயன்படுத்துவாரே,
அவர் மகிமையிலே என்னை பரலோக வீட்டிற்கு எடுத்துக்கொள்ளும் வரை.

**R 1268**

# "இவையெல்லாம் தேவனால் உண்டாயிருக்கிறது"

(இரண்டு பத்திகள் மட்டும்)

## "யோசேப்பினுடைய அனுபவங்கள்"

யோசேப்பின் சகோதரர்கள் அவரை அடிமைத்தனத்திற்குள்ளாக விற்றுப்போட்டார்கள் மற்றும் பிற்பாடு அவரை எகிப்தனைத்திற்கும் அதிகாரியாக அவர்கள் கண்டபோது, தங்கள் குற்றத்திற்குரிய தண்டனைக் குறித்து மிகவும் பயமடைந்தார்கள். ஆனால் அவர்களது பயங்களை அமைதிப்படுத்தும் வண்ணமாக யோசேப்பு, "என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்" என்று கூறினார் (ஆதியாகமம் 45:5). ஆனால் யோசேப்பின் சகோதரர்கள் புரிந்த குற்றத்திற்கான பொறுப்பைச் சர்வவல்லமையுள்ளவர்மேல் சாற்றும் விதத்தில், இவ்வசனத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை என்று நாம் கூறுகின்றோம். பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஸ்தேவான், அவர்கள் செய்த காரியம் தேவனால் ஏவப்படாமல், மாறாக அவர்களது பொறாமையினாலேயே ஏவப்பட்டது என்று குறிப்பிடுகின்றார் (அப்போஸ்தலர் 7:9) மற்றும் இப்படி ஸ்தேவான் குறிப்பிட்டக் காரியமானது, யாக்கோபு 1:13, 16-ஆம் வசனங்களுக்கு முழு இசைவுடனே காணப்படுகின்றது. அப்படியானால் யோசேப்பு பேசினதில் தவறுள்ளது என்ற முடிவிற்கு நாம் வரலாமா? இல்லை; யோசேப்பும், ஸ்தேவானும், இரண்டுபேரும் கூறியவைகள் சரியே. யோசேப்பின் சகோதரர்கள் பொறாமையினால் நிறைந்திருந்தார்கள் மற்றும் யோசேப்பைக் கொன்றுபோடுவதற்கு முன்பே திட்டமிட்டிருந்தனர், ஆனால் அவர்களில் ஒருவருடைய மனதில் பயம் கிரியைப் புரிய தேவன் பண்ணினார், மற்றும் அந்த ஒருவர் கொடுத்திட்ட ஆலோசனையின் பேரில், பொறாமைகொண்டிருந்த அந்தச் சகோதரர்கள் வேறு வழிமுறையைத் தெரிவு செய்து, யோசேப்பை அடிமையாக விற்றுப்போட்டனர். இப்படியாகப் பார்க்கையில் தேவனுடைய பங்கானது எந்த விதத்திலும் யோசேப்பினுடைய சகோதரர்களின் நல்லது, கெட்டதுமான நடத்தைச் சார்ந்த பொறுப்பினை மாற்றிடவில்லை; அதேசமயம் தீமையான எண்ணத்தையும் உருவாக்கிக் கொடுக்கவுமில்லை; அது தீமையான எண்ணத்தை, வேறொரு திசையில் திருப்பி மாத்திரமே விட்டது (அதாவது யோசேப்பைக் கொன்றுபோடுவதற்குப் பதிலாக, அவரை விற்றுப்போடச் செய்தது); இப்படி நிகழ்வது என்பது அவருடைய ஊழியக்காரனாகிய யோசேப்பு தொடர்புடையதான தேவனுடைய திட்டத்திற்கு எதிராகவும் காணப்படப்போவதில்லை. மனிதனுடைய நல்ல மற்றும் கெட்ட குணலட்சணங்களைக் குறுக்கிடாமல், தேவனுடைய வல்லமையானது, காரியங்களை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடுகின்றது என்பதற்கான உதாரணமாகவே இச்சம்பவம் அமைகின்றது. இப்படியாகவே யோசேப்பினுடைய காரியங்கள் அனைத்திலும் நடைபெற்றது. யோசேப்பு சிறையிலிருந்து, பார்வோனுடைய சிங்காசனத்திற்குக் கொண்டுபோகப்பட்ட விஷயத்தில், யோசேப்பு சிறைக்கு அனுப்பப்பட்டதற்குக் காரணமாக இருந்த, போத்திபாருடைய மனைவியினுடைய குற்றமானது, தேவனுடைய ஏவுதலினாலேயே நடந்தது என்று வாக்குவாதம் பண்ணப்படக் கூடாது. மாறாக போத்திபாருடைய மனைவியும், யோசேப்பினுடைய பொறாமை கொண்ட சகோதரர்களும் இல்லாமலேயே, யோசேப்பை எகிப்தினுடைய சிங்காசனத்தினிடத்திற்குத் தேவனால் பல நூறு வழிகளில் கொண்டு வர முடியும். இயல்பாய் நடந்துகொண்டிருந்த சம்பவங்களைத் தேவன் நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போட்டுப் பயன்படுத்தினார்; இப்படியாக யாருடைய சித்தங்களையும் குறுக்கிடாமல், நன்மைக்கு ஏதுவான அவரது சித்தம் நடந்தேற்றப்பட்டது.

ஆகவே "மனிதனுடைய கோபம் (பாவம் செய்த, விழுந்துபோன சந்ததியின் பண்புகளே ஒழிய, மாறாக அவர் ஏவி, மனிதர்மேல் திணிக்கும் பண்புகளல்ல) தேவனுடைய மகிமையை விளங்கப்பண்ணும்; மிஞ்சுங்கோபத்தை அவர் அடக்குவார்" என்று பார்க்கின்றோம். தேவனுக்கும் அவரது பிள்ளைகளுக்கும் எதிரான தீமையான மனிதர்களுடைய முயற்சிகள் அனைத்தும் தேவனால் நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடப்பட்டுள்ளது என்றும், அவரை அன்பு கூர்ந்து, அவருக்கு ஊழியம் புரிகின்றவர்களைச் சில விதங்களில் பரீட்சிப்பதற்கு (அ) வேறு ஆசீர்வாதங்களை வழங்கிடுவதற்குத் தேவனால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் எதிர்க்காலத்தில் அனைவருக்கும் தெளிவாய் வெளிப்படுத்தப்படும் மற்றும் அவரது ஞானம் மற்றும் நற்பண்புகளை வெளிப்படுத்துவதின் மூலம், தற்காலத்தின் மனிதனுடைய கோபமானது, அப்போது தேவனுடைய மகிமையை விளங்கப்பண்ணும்.

---

# வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம்

***"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." 1 கொரிந்தியர் 11:24, 25***

நம்முடைய பாவங்களுக்கான, அதாவது நம்முடையதற்காக மாத்திரமல்லாமல் சர்வலோகத்தினுடைய பாவங்களுக்கான நமது கர்த்தருடைய மாபெரும் பலிக்கான நினைவுகூருதலாக, அவரால் நிறுவப்பட்டதான இராப்போஜனமானது, அதன் எளிமையிலும், அதன் சிறப்பிலும் கவனத்தை ஈர்க்கின்ற ஒன்றாய்க் காணப்படுகின்றது. உலகத்தின் மாமனிதர்கள் தங்களைப்பற்றின நினைவுகளை நீடித்திருக்கப்பண்ணுவதற்கென மிக வித்தியாசமான வழிவகைகளை எப்போதும் நாடினதுண்டு. இவர்கள் தங்கள் மகத்துவங்களையும், தங்கள் சிறப்புகளையும், தங்கள் பின்னடியார்களுக்கு நினைப்பூட்ட முயன்றிட்டாலும், நிச்சயமாய் தங்கள் மரணத்திற்கான - அதிலும் விசேஷமாக நமது கர்த்தருடைய விஷயத்தில் காணப்படுகின்றதுபோல, அவமானமான, நிந்தனையுள்ள, குற்றவாளியாக மரிக்கும் மரணத்தைப்போன்றதொரு மரணத்திற்கான நினைவுகூருதலையும், ஞாபகார்த்தத்தையும் ஏற்படுத்திடவேமாட்டார்கள். இயேசுவின் இடத்தில் இன்னொருவன் காணப்பட்டால், அநேகமாக தனது பராக்கிரமிக்கச் செயல்களுக்கான ஞாபகார்த்தமாகப் பதக்கங்களை ஏற்படுத்திடுவதற்கே அறிவுரை வழங்கியிருப்பான்; உதாரணத்திற்கு லாசருவை உயிர்த்தெழப்பண்ணினதற்கு (அ) சீறும் கடலை அமைதிப்படுத்தினதற்கு (அ) ஜனங்கள் குருத்தோலைகளுடன், இராஜாவுக்கு ஓசன்னா என்று சத்தமிட, எருசலேமுக்கு அவர் மேற்கொண்ட வெற்றி பிரவேசத்திற்கு ஞாபகார்த்தமான பதக்கங்களை ஏற்படுத்திடுவதற்கே அறிவுரை வழங்கியிருப்பான்.

ஆனால் நமது கர்த்தரோ, அவருடைய கணிப்பிலும், தேவனுடைய கணிப்பிலும், அவரது மகத்துவமான வேலையாகக் காணப்பட்ட காரியத்தையே, அதாவது நம் சார்பிலான அவரது பாவநிவாரண பலியையே, தமது பணியிலுள்ள மற்ற அனைத்து அம்சங்களைக் காட்டிலும் அதிகமாய், அவரது உண்மையான பின்னடியார்களால் மற்றும் அவர்களால் மாத்திரமே உணர்ந்துகொள்ளப்படப்போகின்ற காரியத்தையே, தமக்கு நினைவுகூருதலாகத் தெரிந்துகொண்டார். அவரது பின்னடியார்கள் அவரது ஆச்சரியமான வார்த்தைகள் அல்லது கிரியைகளுக்கு ஏதோ ஒன்றினை நினைவுகூருதலாக மதித்திருக்க முடியும் என்பது உண்மைதான்; ஆனால் உலகத்தாரால்கூட இவைகளை உணர்ந்துகொள்ளவும் முடியும். ஆனால் நம்முடைய ஒப்புரவாகுதலுக்கும், பாவநிவிர்த்திக்கும் அடிப்படையாகக் காணப்படும் நமக்கான ஈடுபலியென, அவரது மரணத்திற்கு இருக்கும் மதிப்பின் விஷயம் அப்படியல்ல. இது அர்ப்பணம் பண்ணினவர்களாகிய சிறுமந்தையினரை — தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் தவிர, வேறு எவராலும் இதுவரையிலும் முழுமையாய்ப் புரிந்துகொள்ளப்படவில்லை. மேலும் இவர்களுக்காகவே நினைவுகூரும் சின்னங்களானது ஏற்பாடுபண்ணப்பட்டு, நிறுவப்பட்டது. யூதாஸ் அங்குக் காணப்பட்டாலும், அவனுக்குத் துணிக்கையானது கொடுக்கப்பட்டது மற்றும் போஜனம் நிறைவுபெறுவதற்கு முன்னதாக, அவன் மற்றவர்களை விட்டுவிட்டு வெளியேறினான்; இது இந்த யுகத்தின் முடிவில் சிறுமந்தையினர் தங்கள் கர்த்தரோடுகூட, அவரது பாடுகளில் பங்கெடுப்பதற்கான தங்களது பங்கினை நிறைவேற்றிடுவதற்கு முன்னதாக, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியினால் நிறைவேற்றப்பட்டதான ஈடுபலியினைச் சரியாய் மதிப்பிடாதவர்களும், உணர்ந்துகொள்ளாதவர்களுமாகிய அனைவரும், உண்மையுள்ளவர்களின் கூட்டத்திலிருந்தும், ஐக்கியத்திலிருந்தும் வெளியேற்றப்படுமளவுக்குச் சத்தியம் எனும் துணிக்கையானது மிகவும் பலமிக்கதாகியிருக்கும் என்பதைக் குறிக்கின்றது என்பதில் ஐயமில்லை (1 யோவான் 2:19).

## பஸ்கா இராப்போஜனத்தின் தியதி

எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்ததான தங்களது விடுதலையையும், அக்காலத்தில் தங்களது முதற்பேறானவர்கள் தப்புவிக்கப்பட்டதையும், நினைவுகூரும் வண்ணமாக யூதர்கள் ஆட்டுக்குட்டியைப் புசிக்கின்றதான பஸ்கா இராப்போஜனத்தினுடைய தியதியானது, யூதர்களுடைய காலக்கணக்கீட்டு முறைமையின்படியே, அதாவது சந்திர காலக்கணக்கீட்டு முறைமையின்படியே கணக்கிடப்படுகின்றது (யாத்திரியாகமம் 12:2-14). நாம் மாதங்களைப் பிரிப்பதுபோல் பிரிப்பதற்குப்பதிலாக, அவர்கள் அமாவாசையை, புதிய மாதத்திற்கான ஆரம்பத்தினைக் குறிப்பதற்கு அனுமதித்தனர்; சூரிய காலத்திற்கும், சந்திர காலத்திற்கும் இடையிலான வித்தியாசமானது,

எப்போதும் வசந்த கால/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடரும் அமாவாசையுடன் புதிய வருடத்தை ஆரம்பிப்பதன் மூலம் சரிப்பண்ணப்படுகின்றது. தங்கள் மதம் சார்ந்த விழாக்களை ஆசரிக்கும் விஷயத்தில், யூதர்கள் இன்னமும் இந்தக் கணக்கீட்டு முறைமையையே கைக்கொள்ளுகின்றனர். மேலும் நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் ஆதித் திருச்சபையினரும் இதே ஒரு விதியை, நமது கர்த்தருடைய இறுதி இராப்போஜனத்திற்குரிய வருடாந்தர ஆசரிப்பிற்கான தியதியினை நிர்ணயிக்கும் விஷயத்திற்கும் பயன்படுத்தினதால், நாமும் அதையே பின்பற்றுகின்றோம்.

வசந்த கால/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடரும் முதல் அமாவாசையானது, இந்த வருடத்தில் (1913), ஏப்ரல் 8-ஆம் தேதியில் நிகழ்வதாக எபிரெய ஆண்டு குறிப்பேட்டில் (almanacs/calendar) கணக்கிடப்பட்டுள்ளது . . . அநேகமாக இது எருசலேமின் ஆய்வு கருத்து அறிவிப்பாகும். மாலை 6 மணிக்கு, யூதருடைய புனிதமான வருடத்தினுடைய முதலாம் மாதமாகிய, நீசான் மாதத்தின் முதல் நாள் ஆரம்பமாகுகின்றது. நீசான் முதலாந்தேதி துவங்கி 10-ஆம் தேதியில் பஸ்கா ஆட்டுக்குட்டியானது, மந்தையிலிருந்து தெரிந்தெடுக்கப்படுகின்றது. 14-ஆம் நாளில் (பௌர்ணமி அன்று*) "சாயங்காலங்களுக்கு நடுவில்" (நீசான் 13-ஆம் தேதி மாலை 6 மணி முதல், நீசான் 14-ஆம் தேதி மாலை 6 மணிக்குள் ஏதேனும் ஒரு நேரத்தில்) ஆட்டுக்குட்டியானது அடித்து, புசிக்கப்பட வேண்டும். பதினைந்தாம் தேதி அவர்களது பஸ்கா பண்டிகையானது ஆரம்பித்து, ஏழு நாட்கள் நீடிக்கின்றது; இதன் முதலாம் மற்றும் ஏழாம் நாட்களானது விசேஷித்த விதமாய்ப் பரிசுத்தமானவைகளாக, ஓய்வுநாட்களாக (அ) "பிரதான" நாட்களாக ஆசரிக்கப்படுகின்றன (யாத்திராகமம் 12:16). பதினாறாம் தேதியில் வாற்கோதுமை அறுவடையின் முதற்பலன்கள், ஓமர் அளவு கர்த்தருக்குச் செலுத்தப்பட்டன மற்றும் 50 நாட்கள் கழிந்து (பெந்தெகொஸ்தே நாளில்) அவர்கள் கர்த்தருக்கு இரண்டு அப்பங்களை அசைவாட்டும் காணிக்கைகளாக்கினார்கள் (லேவியராகமம் 23:17). [* சூரியன் கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கான அடையாளமாய்க் காணப்படுவதினால், சந்திரனும் இஸ்ரயேல் ஜாதிக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றது. (வெளிப்படுத்தல் 12:1) பன்னிரண்டு மற்றும் சிலசமயம் இடம்பெறும் பதிமூன்று சந்திர மாதங்களானது, அந்த ஜாதியின் கோத்திரங்களை அடையாளப்படுத்துகின்றது. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது, சந்திரனானது பௌர்ணமி நிலையில் காணப்பட்டது. பின்னர் உடனடியாக தேய்வுற ஆரம்பித்தது மற்றும் பௌர்ணமிக்கு முன்பு சந்திரன் வளர்வதற்குரிய காலத்தைப்போலவே தேய்வதற்கும் காலம் எடுத்துக்கொண்டது. ஆகையால் கிறிஸ்துவின் மரணமானது இஸ்ரயேல் சரித்திரத்தினுடைய இரண்டு சரிசமமான பாகங்களுக்கிடையிலான திருப்புமுனையாகக் காணப்பட்டது. தொகுதி-2, ஆங்கிலத்தில் பக்கம் - 218, தமிழில் பக்கம் - 235 பார்க்கவும்.

அசுசியடைந்த யூதர்கள், இதன் காரணமாக பஸ்காவினை அதற்குரிய காலத்தில் கைக்கொள்ள முடியாமல் போவதால், அப்படியானவர்கள் இரண்டாம் மாதத்தின் 14-ஆம் தேதியில் (அடுத்த பௌர்ணமியில் - எண்ணாகமம் 9:8-13) அதைக் கைக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்; இதன் படிப்பினை என்னவெனில் – (அறியாமையின் காரணமாக) மேசியா தங்களுக்கு முன்வைக்கபட்டபோது, அவரைத் தங்கள் மீட்பர் என்று ஏற்றுக்கொள்வதற்குத் தடைப்பண்ணப்பட்டவர்கள், அனைத்தும் திரும்பிக்கொடுக்கப்படும் காலங்களில், தங்கள் ஜாதியானது (சந்திரன்) மீண்டும் முழுமையான ஆசீர்வாத நிலையில், பின் அறுவடையில் வரும்போது, மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்புப் பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள் என்பதேயாகும்.]

யூதர்களால் ஒவ்வொரு வருடமும் செய்யப்பட்டுவந்ததான இவைகள், நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி, மாபெரும் மற்றும் பிரம்மாண்டமான நிகழ்வுகளுக்கு நிழலாய் இருக்கின்றன. பத்தாம் தேதியில் ஆட்டுக்குட்டியானது தெரிந்துகொள்ளப்படுவது என்பது, இஸ்ரயேலானது நிஜமான கடந்துபோகுதலிலுள்ள முதற்பேறானவர்களுடைய சபையென ஆசீர்வதிக்கப்படவும், அங்கீகரிக்கப்படவும் வேண்டுமெனில், அவர்கள் எவ்வாறு பஸ்கா பண்டிகைக்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னதாக இயேசுவை ஏற்றிருக்க வேண்டும் என்பதை அடையாளப்படுத்திக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. அந்த நாளில்தான் கர்த்தர் அவர்களது இராஜாவென, கழுதையின்மேல் ஏறி, பட்டணத்திற்குள் வந்தபோது, இறுதியாக அந்த ஜாதியாருக்கு தம்மை முன்வைத்தார் (யோவான் 12:12-16 ஒப்பிட்டுப்பார்க்கவும்). ஆனால் தேவ ஆட்டுக்குட்டியை ஏற்றுக்கொள்வதை அலட்சியப்படுத்தினவர்கள், உடனடியாக மறுக்கப்பட்டனர் மற்றும் அவர்கள் நிழலான முதற்பிறப்புகளாக இருப்பதிலிருந்து ஓயப்பண்ணப்பட்டார்கள்.

(இந்த வருடத்தில் [1913] ஏப்ரல் 20-ஆம் தேதி ஞாயிறு அன்று மாலை ஆறு மணிக்கு ஆரம்பித்து, 21-ஆம் தேதி, மாலை ஆறு மணிவரை நீடிக்கின்றதான) 14-ஆம் தேதியில்தான் பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட வேண்டும் மற்றும் புசிக்கப்பட வேண்டும். (அநேகமாக இந்த ஒரு நோக்கத்திற்கான தெய்வீக ஏற்பாட்டின் காரணமாகவே) எபிரெய காலக்கணக்கிடுதலானது, "கடைசி இராப்போஜனத்தினுடைய" புசித்தலானது, கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டதான அதே நாளில் நிகழ்வதற்கு அனுமதித்ததாய் இருக்கின்றது. (சிலுவையில் அறையப்படுவது வரையிலும் முடிவடையாத, நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும் விதமாக ஆசரிக்கப்பட்டதான)

ஆட்டுக்குட்டியும், கசப்பான கீரைகளும், புளிப்பில்லாத அப்பமும் உள்ள பஸ்கா இராப்போஜனமானது, மாலை ஆறு மணிக்குமேல் புசிக்கப்பட்டது. பின்னர்த் தொடர்ந்து நிஜமான ஆட்டுக்குட்டியினுடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றதான அப்பமும், திராட்சரசமும் உள்ள நினைவுகூருதலின் இராப்போஜனத்தினுடைய நிறுவுதல் நடந்தது. ஆகையால் இதுவே வருடந்தோறும், அந்தத் தருணம் வருகையில், அவரது பின்னடியார்களால், சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்குப்பதிலாக, நிஜமான ஆட்டுக்குட்டிக்கும், நிஜமான முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலுக்கும் — அவரது இரத்தத்தின் பயனான மாபெரும் கடந்துபோகுதலுக்கும் நினைவுகூருதலாக ஆசரிக்கப்பட வேண்டும்.

(ஓய்வு நாளுக்கு மறுநாளாகிய அல்லது 15-ஆம் தேதியின் பஸ்கா பண்டிகைக்கு மறுநாளாகிய) நீசான் 16-ஆம் தேதியில் முதல் பலன்களாகிய வாற்கோதுமையினுடைய கதிர்கட்டை அசைவாட்டுதலானது, "நித்திரையடைந்தவர்களில் முதற்பலனாக" நமது கர்த்தராகிய கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (லேவியராகமம் 23: 5, 6, 11, 15-17; 1 கொரிந்தியர் 15:20).

ஐம்பதாம் நாளாகிய பெந்தெகொஸ்தே நாளில் இரண்டு அப்பங்கள் அசைவாட்டுக் காணிக்கையாக்கப்படுவது என்பது, சபையைத் தேவனுக்கு முன்னாக நிறுத்துவதையும், சபை மாபெரும் பிரதான ஆசாரியனுடைய புண்ணியத்தின் வாயிலாக ஏற்றுக்கொள்ளப்படுவதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இந்த ஏற்றுக்கொள்ளுதலானது பெந்தெகொஸ்தே நாளில் நிகழ்ந்த பரிசுத்த ஆவியினாலான அபிஷேகிக்கப்படுதலால் சுட்டிக்காட்டப்படுகின்றது. சபை உண்மையில் "ஒரே அப்பமாகக்" காணப்படுகின்றனர் (1 கொரிந்தியர் 10:17); இரண்டு அப்பங்களானது, பாவநிவாரண நாளில் இடம்பெறும் இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களினால் அடையாளப்படுத்தப்படுகின்ற அதே காரியங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இது முன்னிறுத்தப்படும் அனைவரும், கிறிஸ்து இயேசுவின் மூலமாகத் தேவனுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுபவர்களாய் இருந்தாலும், முன்னிறுத்தப்படும் அனைவரும் முடிவுவரையிலும் உண்மையாய்க் காணப்படும் நிலைக்கு வரமாட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இரண்டு அப்பங்களானது, அர்ப்பணிக்கப்பட்டவர்களிலுள்ள இரண்டு வகுப்பாரை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; அதாவது ஜெயங்கொள்ளுகிற சிறுமந்தையையும் மற்றும் உலகத்தை ஜெயங்கொள்வதின் மூலம், "பரம அழைப்பினை" உறுதிப்படுத்திக்கொள்ளாதவர்களாகிய திரள் கூட்டத்தினர் எனும் அர்ப்பணிக்கப்பட்ட தேவனுடைய பணிவிடைக்காரர்களையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

புனித வெள்ளிக்கும், ஈஸ்டர் ஞாயிறுக்குமான தேதிகளைக் கணக்கிடுவதற்கென எபிஸ்கோப்பலியன்ஸ் (Episcopalians) மற்றும் உரோமன் கத்தோலிக்கர்கள் மத்தியில் நடைமுறையில் காணப்படுகின்ற கணக்கிடும் முறைமையானது, முன்பிருந்த முறைமையிலிருந்து வேறுபடுகின்றது. இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பின்வரும் முதல் பௌர்ணமியைத் தொடர்ந்துவரும் முதல் ஞாயிறை, இவர்கள் ஈஸ்டர் ஞாயிறு என்றும், இதற்கு முன்வரும் வெள்ளியை, புனித வெள்ளி என்றும் கொண்டாடுகின்றனர். இப்படியான கணக்கீட்டுமுறைமையானது, நாம் அங்கீகரிக்கின்றதான யூத முறைமைக்குப்பதிலாக கி. பி. 325-இல், நைஸ் ஆலோசனைக்குழுவினால் நிறுவப்பட்டது. ஆனால் "பஸ்கா" என்ற பெயரானது (ஈஸ்டர்* ஞாயிறு என்றில்லாமல்) நீண்ட காலம் பயன்படுத்தப்பட்டு வந்தது; போப்மார்க்கமானது அரசியல் செல்வாக்கில் உறுதியடைந்தப்பிற்பாடு, அறியாமையிலுள்ள புறமதத்தார், அரசினுடைய சலுகையினை அனுபவித்துக் கொண்டிருந்ததான இந்த அமைப்பிற்குள் குவிய ஆரம்பித்தப்பிற்பாடே "பஸ்கா" என்ற பெயருக்குப்பதிலாக, "ஈஸ்டர்" என்ற பெயர் நிறுவப்பட்டது; ஏனெனில் பஸ்கா ஆசரிக்கப்படுகின்றதான அதே காலப்பகுதியில், புறமதத்தினரும், இளவேனிற் தேவதையாகிய ஈஸ்டெரா (Estera), ஜெர்மனியில் ஓய்ஸ்ட்ரா (Ostara) என்று அழைக்கப்படும், அதாவது தங்கள் ஈஸ்டர் தேவதைக்குப் பண்டிகை கொண்டாடும் வழக்கத்தில் காணப்பட்டனர். இதுவும் அதிக எண்ணிக்கையிலான ஜனங்களைக் கூட்டுவதற்கும், செல்வாக்கினை அதிகரிப்பதற்கும் என்று, பேராசை மிக்க "குருமார் வகுப்பினர்" (clergy) கையாண்ட அநேக முறைமைகளில் ஒன்றாகும். [* அப்போஸ்தலர் 12:4-ஆம் வசனத்தில் இடம்பெறும் ஈஸ்டர் எனும் வார்த்தையானது, தவறான மொழிப்பெயர்ப்பாகும்; அது பஸ்கா என்றே மொழிப்பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். (Revised) ரிவைஸ்ட் மொழியாக்கம் பார்க்கவும்.]

சிலசமயம் யூத கணக்கிடுதல் முறைமையும், உரோம கணக்கிடுதல் முறைமையும், ஒரே நாட்களைச் சுட்டிக்காட்டுகின்றது; ஆனால் எப்போதும் இப்படியாகக் காணப்படுவதில்லை; சிலசமயங்களில் இவைகளின் கணக்கிடுதலானது கிட்டத்தட்ட ஒரு சந்திர (அ) மாத அளவு வித்தியாசப்படுகின்றது.

யூதர்கள் பஸ்கா வாரத்தினை, நீசான் 15-ஆம் தேதியாகிய ஏப்ரல் 22-ஆம் தேதியில் (அதாவது ஏப்ரல் 21-ஆம் தேதி மாலை ஆறு மணிக்கு) ஆரம்பமாகும் "பண்டிகையாக" கொண்டாடுகின்றனர். நினைவுகூருதலினுடைய இராப்போஜனத்தில் நாம் பண்டிகை வாரத்தினை ஆசரியாமல், மாறாக பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டதற்கும், புசிக்கப்பட்டதற்குமான நாளுக்கான ஆண்டுநிறைவு நாளாகிய, அதாவது முதற்பேறானவர்களின் சபையானது மரணத்திலிருந்து முதலாம் உயிர்த்தெழுதலில் முழுமைப்பெறுகின்றதான ஜீவனுக்குள்ளாகக் கடந்துபோவதற்குக் காரணமாய் இருந்த பலியை ஏறெடுத்த தேவனுடைய உண்மையான ஆட்டுக்குட்டியாகிய, நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்தின் ஆண்டுநிறைவு நாளும், நீசான் 15-ஆம் தேதிக்கு முந்தின நாளும், 1913-ஆம் வருஷத்தில் ஏப்ரல் 20-ஆம் தேதி மாலை ஆரம்பமாகும் நீசான் 14-ஆம் நாளையே நாம் ஆசரிக்கின்றோம். பஸ்கா பண்டிகை வாரத்தினுடைய நிஜமானது, உண்மையான இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் அனைவருடைய இருதயத்தின் சந்தோஷத்தில் காணப்படுகின்றது; ஏழு நாட்கள் என்பது சந்தோஷம் மற்றும் இரட்சிப்பினுடைய பூரணத்தை (அ) முழுமையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

கணக்கிடுதல் தொடர்புடையதான அநேகம் கேள்விகளுக்கு நாம் பொதுவான பதிலாக, விவரங்களைக் கொடுத்துவிட்டோம்; இதற்குக் காரணம் இதற்கு ஏதேனும் மிகுந்த முக்கியத்துவம் இருப்பதினாலோ அல்லது துல்லியமான ஆண்டுநிறைவு நாள் ஆசரிப்பில் காணப்படும் அடிமைப்படுத்துதலோ அல்ல. கிறிஸ்துவினால் விடுதலைப் பண்ணப்பட்டவர்கள்மீது இப்படியாக எந்த ஓர் அடிமைத்தனமும் இல்லையென்று நாம் அடையாளம் கண்டுள்ளோம். "என்னை நினைவுகூரும்படி இதைச் (இந்த வருடாந்தர நினைவுகூருதலை நீங்கள் ஆசரிக்கும் ஒவ்வொரு முறையும்) செய்யுங்கள்" என்று நமது கர்த்தர் கூறுகையில், அவர் நோக்கம் கொண்டுள்ளதுபோன்று, நினைவுகூருதலின் இராப்போஜனத்தை அதன் சரியான ஆண்டுநிறைவு நாளில் ஆசரிப்பதற்கு விருப்பங்கொண்டவர்களாக நாம் இருப்பினும், இதை நாங்கள் கடமையாகப் பார்ப்பதைவிட சிலாக்கியமாகவே பார்க்கின்றோம்; ஒருவேளை அறியாமை (அ) தவறானப் புரிந்துகொள்ளுதலின் காரணமாக நாளைத் தெரிந்துகொள்ளும் விஷயத்தில் நாம் தவறு இழைத்தாலும், கர்த்தர் நம் நல் நோக்கங்களை ஏற்றுக்கொள்வார் என்றும், தவறை மன்னிப்பார் என்றும், தமது ஆசீர்வாதத்தை அருளுவார் என்றும் நாம் நம்புகின்றோம். தவறானப் போதனைகள் மற்றும் மனித பாரம்பரியங்களின் காரணமாக, அவரது மரணத்திற்கான இந்த நினைவுகூருதலை ஆசரிப்பதற்கென, அவர் நியமித்துள்ளதான அதன் ஆண்டுநிறைவு நாளை தெரிவு செய்வதற்குப்பதிலாக வேறு காலங்களையும், நேரங்களையும் தெரிவுசெய்யும் அவரது பிள்ளைகளாகிய அநேகருடைய நல் நோக்கங்களைக் கர்த்தர் ஏற்றுக்கொள்கின்றார் என்றும் நாம் நம்புகின்றோம். இதுபோலவே ஐக்கிய நாடுகள் சுதந்திரமடைந்தத் தேதியை மறந்தவராக (அ) ஜூலை 4-ஆம் தேதியே இந்நிகழ்வினுடைய ஆண்டுநிறைவு நாள் என்றும், இந்தத் தியதியே, இதைக் கொண்டாடுவதற்கென நியமிக்கப்பட்டுள்ளதான பொருத்தமான தேதி என்றுமுள்ள உண்மைகளை அறியாதவராக வருடத்திற்கு மூன்று, நான்கு (அ) ஐம்பது முறைகள் சுதந்திரத்தைக் கொண்டாடிடும் ஒரு மனிதனுடைய தேசப்பற்று நோக்கங்களை நாம் ஒத்துக்கொள்கின்றோம்.

மற்றச் சத்தியங்களைப்போலவே, இருண்ட யுகங்களையுடைய குப்பைகளின் கீழ் நீண்டகாலமாய்ப் புதைக்கப்பட்டுக் கிடந்த இதையும் இப்பொழுது தேவன் தம்முடைய ஜனங்களுக்குத் தெளிவுப்படுத்துகின்றார். அவரது ஜனங்களாக உண்மையில் காணப்படுபவர்கள் அனைவரும் சத்தியத்திற்காக ஆவலாய்க் காணப்படுகின்றனர் மற்றும் மற்றப் பாடங்களைப்போலவே இப்பாடத்திலுமுள்ள சத்தியங்களானது, தேவவார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:23-26).

கர்த்தருடைய மரணம் என்ற வார்த்தை எதைக்குறிக்கின்றது மற்றும் எதைக் குறிக்கவில்லை என்பதை நேர்மையான மனமுடையவர்களிடத்தில் விவாதித்திடுவதற்கு எந்த அவசியமும்

இருப்பதில்லை. ஈடுபலிபற்றின உபதேசத்திினின்று அல்லது ஈடுபலி உபதேசத்துடன் சம்பந்தப்பட்டதான நியாயமான ஊகங்களின்று தங்களை விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆவலில் சிலர் வேதவாக்கியங்களுக்கு முரணாக, நமது கர்த்தருக்கு இரண்டு மரணங்கள் சம்பவித்தன என்றும், ஒன்று அவர் உலகத்திற்கு வந்தபோது நிகழ்ந்தது என்றும், மற்றொன்று கல்வாரியில் நிகழ்ந்தது என்றும், முதல் மரணத்திற்கு முன்னதாக, கல்வாரியில் "எல்லோரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவினுடைய" மரணமானது அவ்வளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்றும் வலியுறுத்திக் கூறுகின்றனர். இவர்கள் "அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்" என்று வேதவாக்கியம் தெரிவிக்கும் உண்மையினையும், நமது கர்த்தரினாலோ (அ) அவரது அப்போஸ்தலர்களாலோ குறிப்பிடப்பட்டுள்ளதான ஒரே மரணம், கல்வாரியில் நிகழ்ந்த மரணமே ஆகும் என்ற உண்மையினையும் வேண்டுமென்றே அறியாதவர்களாய்க் காணப்படுகின்றனர்.

எருசலேமில் தாம் அடையப்போகின்றதான மரணத்தைக்குறித்து அவர் பேசினதாக அப்போஸ்தலர்கள் தெரிவிக்கின்றனர். நம்முடைய மீட்பருடைய இந்த ஒரே ஒரு மரணம் மாத்திரமே, இந்த நினைவுகூரும் அடையாளங்களினால் அடையாளப்படுத்தப்படுகின்றது; அவரது சரீரம், அவரது மாம்சம் நமக்காகப் பிட்கப்பட்டுள்ளது மற்றும் நித்திய ஜீவன் அடைய வேண்டுமெனில் இதன் புண்ணியத்திலும், ஜீவனிலும் அனைவரும் பங்கெடுக்க வேண்டும். இந்த முக்கியமான கேள்வி தொடர்புடைய விஷயத்தில், நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்.

எப்படித் தண்ணீர் ஞானஸ்நானமானது, முக்கியமான ஞானஸ்நானமாகக் காணப்படாமல், உண்மையான ஞானஸ்நானத்தை அடையாளப்படுத்தும் அடையாளமாக மாத்திரம் காணப்படுகின்றதோ, அதுபோலவே அடையாளங்களாகிய அப்பத்திலும், திராட்சரசத்திலும் பங்கெடுத்தல் என்பது மிக முக்கியமான விருந்திற்கு/காரியத்திற்கு அடையாளமாக மாத்திரமே காணப்படுகின்றது; அதாவது அவரது பிட்கப்பட்ட சரீரத்தின் மற்றும் சிந்தப்பட்ட இரத்தத்தின் வாயிலாக நமக்கு நித்திய ஜீவனை உறுதிப்படுத்துகின்றதான கிறிஸ்துவினுடைய புண்ணியத்தை நம்முடையதாக்கிக்கொள்ளும் காரியத்திற்கு அடையாளமாக மாத்திரமே காணப்படுகின்றது. அவரால் நிறைவேற்றப்பட்டதான பலியை விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டு, அதே விசுவாசத்தினால், அவரால் போதிக்கப்பட்டுள்ளபடி மனிதனாகிய கிறிஸ்து இயேசு பெற்றிருந்ததும், நமக்காக மரணத்தில் கையளிக்கப்பட்டதுமான புண்ணியங்கள், பரிபூரணங்கள் மற்றும் உரிமைகள் அனைத்தையும் நமதாக்கிக்கொள்வதன் மூலமாக நமது இருதயங்களானது உண்மையில் நித்திய ஜீவனுக்கான அப்பத்தை, பரலோகத்திலிருந்து தேவன் நமக்கு அனுப்பிவைத்ததான அப்பத்தைப் புசிக்கின்றதாய் இருக்கின்றது. இதுதான் உண்மையான அப்பம் மற்றும் இதைப் புசிப்பது என்பது நித்தியமான ஜீவனைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இதுவே சொல்லர்த்தமான அப்பமானது அடையாளப்படுத்துகின்றதான அடிப்படையான அர்த்தமாய் இருக்கின்றது மற்றும் இப்படியான அர்த்தத்திலேயே அதில் சரியாயும், புரிந்த நிலையிலும் பங்கெடுக்கும் அனைவருக்கும் காணப்படுகின்றது. அது பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து ஆதாமையும், அவரது குடும்பத்தையும் மீட்ட ஈடுபலிக்கான நினைவுகூருதலாகும்.

## அப்பம் மற்றும் பாத்திரம்

மற்றுமொரு கருத்து: பயன்படுத்தப்பட்ட அப்பமானது, புளிப்பற்றதாகும். புளிப்பு என்பது கெடுக்கிற ஒன்றாக, சீரழிக்கும் ஒன்றாக இருப்பதினால், பாவத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் பாவம் மனுக்குலத்தில் கொண்டுவந்ததான சீரழிவையும், மரணத்தையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்த அடையாளமானது, நமது கர்த்தர் இயேசு பாவம் இல்லாதவராக இருந்தார் என்பதை, கறைதிரையற்ற ஆட்டுக்குட்டி என்பதை, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாய்" இருந்தார் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் ஆதாமின் சந்ததியில் வந்தவராய் இருந்திருப்பாரானால், வழக்கம்போல் ஏதோ ஒரு பூமிக்குரிய தந்தை வாயிலாக தமது ஜீவனைப் பெற்றவராக இருந்திருப்பாரானால், அவரும்கூட மற்ற மனிதர்களைப்போலவே ஆதாமின் பாவத்தினால், புளிப்பானவராய் இருந்திருப்பார்; ஆனால் அவருடைய ஜீவனானது கறைதிரை இல்லாமல், உயர்ந்த பரலோக நிலையிலிருந்து, பூமிக்குரிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலைமையில் வந்ததாய் இருந்தது; ஆகவே அவர் "வானத்திலிருந்து வந்த அப்பம்" என்று அழைக்கப்பட்டார் (யோவான் 6:41). ஆகவே தேவன் அருளியுள்ளதான தூய்மையான, புளிப்பற்ற, மாசற்ற அப்பத்தினைக்குறித்து உணர்ந்துகொள்வோமாக மற்றும் அவரைப் புசிப்போமாக; அதாவது சத்தியத்தைப் புசித்து, ஜீரணிப்பதன் வாயிலாக அவரை நாம் புசிப்போமாக; அதிலும் விசேஷமாக . . . விசுவாசத்தின் வாயிலாக அவரது நீதியை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுதல் எனும் சத்தியத்தைப் புசிப்போமாக; மேலும் அவரை வழியாகவும், ஜீவனாகவும் அடையாளம் கண்டுகொள்வோமாக.

இந்த நினைவுகூருதல் அடையாளங்கள் தொடர்புடையதான இன்னும் ஆழமான ஓர் அர்த்தத்தை, அப்போஸ்தலன் தெய்வீக வெளிப்படுத்துதலின் வாயிலாக தெரிவித்துள்ளார். அப்பமானது நமது கர்த்தர் இயேசுவை மாத்திரம் அடையாளப்படுத்துகின்றதாயிராமல், நாம் அவரைப் புசித்தப்பிற்பாடு (அவரது நீதியை நமக்குரியதாக்கிக்கொள்வதன் வாயிலாக நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு) நாம் அர்ப்பணத்தின் வாயிலாக, உலகத்திற்கான உணவாகிய அந்தப் பிட்கப்பட்ட ஒரே அப்பத்தின் பாகமாக, நாம் அவரோடு இணைந்தவர்களானோம் என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். (1 கொரிந்தியர் 10:16). இது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளாகிய நாம், எதிர்கால மகிமைகளில் அவரோடுகூட உடன் சுதந்தரர்களாகுவதற்கும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதும், பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஜீவன் வழங்குவதுமான மாபெரும் வேலையில் பங்காளிகளாகுவதற்குமுரிய நிபந்தனையாய்க் காணப்படுகின்ற கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் இப்பொழுது பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றோம் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இதே கருத்தானது, அப்போஸ்தலனால் மீண்டும் மீண்டுமாகவும், பல்வேறு அடையாளங்களினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அவை அனைத்தைக்காட்டிலும், இவ்வடையாளமே ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது தங்கள் தலையோடுகூட (கிறிஸ்துவின் சரீரமாகிய — கொலோசெயர் 1:24 பார்க்கவும்) சபையே இப்பொழுது பிட்கப்படுகின்றதான "ஒரே அப்பமாக" இருக்கின்றனர். இது நமது தலையானவருடனான நமது ஐக்கியத்திற்கும், உறவிற்கும் குறிப்பிடத்தக்கதான விவரிப்பாய்க் காணப்படுகின்றது.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;" "அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 – KJV ; திருவிவிலியம்.)

"'திராட்சப்பழரசமானது' (fruit of the vine) நமது கர்த்தரினால் பலிச்செலுத்தப்பட்ட ஜீவனை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மரணத்தில் கையளிக்கப்பட்ட ஜீவனுக்கான அடையாளம்)" (மத்தேயு 26:27, 28).

பாவத்தின் காரணமாக ஆதாமின் சந்ததி இழந்துபோனதான ஜீவனுக்கான மீட்கும்பொருளாகக் கர்த்தர் தமது ஜீவனைக் கொடுப்பதன் மூலமே, புதிய உடன்படிக்கையின் கீழ் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் வாயிலாக மனிதர்களுக்கு ஜீவனுக்கான உரிமை கடந்துவர முடியும். (உரோமர் 5:18, 19). சிந்தப்பட்ட இரத்தமானது, "அனைவருக்குமான மீட்கும் பொருளாக" (விலையாகக்) காணப்பட்டது; இது அனைவருக்காகவும், நமது மீட்பரினாலே கொடுக்கப்பட்டதாய் இருந்தது; ஆனால் அவர் பாத்திரத்தைச் சீஷர்களிடத்தில் கொடுத்து, அதைப் பருகும்படிக்கு அவர்களிடம் கூறினதாவது, தம்முடைய பாடுகளில் அவர்கள் பங்காளிகளாகுவதற்கான அல்லது பவுல் குறிப்பிட்டுள்ளதுபோன்று "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான" அழைப்பாய்க் காணப்பட்டது (கொலோசெயர் 1:24). விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, நாமாய் முன்வந்து கிறிஸ்துவின் காரணங்களை/நோக்கங்களை ஆதரிப்பதின் வாயிலாக, அவரது பாடுகளில் பங்குகொள்வோமானால், நாம் தேவனால் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும் மற்றும் இயேசுவின் பாடுகளில் பங்கடைபவர்களாகவும் கருதப்படுவோம் என்பதே நம்முன் வைக்கப்பட்ட காரியமாகும். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (சிந்தப்பட்ட இரத்தம் — மரணம்) பங்குகொள்ளுதல் அல்லவா?" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்) "பாத்திரத்தினுடைய" மதிப்பினை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாக, கிறிஸ்துவோடுகூட, அவரது பாடுகள் மற்றும் அவமானத்தின் "பாத்திரத்தில்" பங்குகொள்வதற்கான வாய்ப்பிற்காக, தேவனை ஸ்தோத்திரிப்போமாக; இப்படியானவர்கள் அனைவரும், அவரோடுகூட மகிமைப்படுத்தப்படுவர் என்ற நிச்சயமும் கொண்டிருக்கலாம். (உரோமர் 8:17)

பாத்திரமானது அவரது அவமானத்தில் நமது பங்குகொள்ளுதலையும், அவரது பலியில் நமது பங்குகொள்ளுதலையும், அதாவது நமது மனுஷீகத்தின் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில், நமது கர்த்தரும், பாத்திரத்திற்கு இந்த அர்த்தத்தைச் சாற்றினவராய் இருந்தார். உதாரணத்திற்கு அவரது சிங்காசனத்திலுள்ள எதிர்கால

மகிமைக்குறித்த வாக்குறுதியை அவரது சீஷர்களில் இருவர், அவரிடத்தில் கேட்டபோது, அவரோ: "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கக்கூடுமோ? என்றார். அவர்களது இருதயப்பூர்வமான உறுதிமொழியின் நிமித்தமாக, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்றார். திராட்சப்பழரசமானது, இரத்தம்/ரசம் வெளியே வருமளவுக்குத் திராட்சையைப் பிழிவதுமாத்திரம் குறிக்காமல், பிற்பாடு கடந்துவரும் புத்துணர்வையும்கூடக்குறிக்கின்றதாய் இருக்கின்றது; ஆகையால் "கிறிஸ்துவின் பாடுகளில்" இப்பொழுது பங்குகொள்ளும் நாம், அவரது மகிமைகளிலும், கனங்களிலும் மற்றும் அழியாமையிலும் சீக்கிரத்தில் பங்குகொள்வோம் — அதாவது இராஜ்யத்தில் அவரோடுகூடப் புதிய திராட்சரசத்தைப் பருகும்போது ஆகும்.

## கர்த்தர் வருமளவும்

இவ்வார்த்தைகளினுடைய முழுமையான அர்த்தம் என்ன?

நினைவுகூருதலுக்கான இராப்போஜனத்தை நிறுவின நமது கர்த்தர், அதன் ஆசரிப்பு விஷயத்தில் எவ்விதமான எல்லைகளை வைக்காததினால், நமக்கான ஈடுபலியாக நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்திற்கும், அவரோடுகூடப் பலிச்செலுத்திடுவதற்கான நமது அர்ப்பணிப்பிற்குமான நினைவுகூருதலை — ஒரு குறிப்பிட்டக் காலளவில் ஆசரிப்பது ஏற்றதாய் இருக்கும் என்று அப்போஸ்தலன் கால அளவை எல்லைக்குட்படுத்துவதாக நாம் புரிந்துகொள்ளக் கூடாது. மாறாக அது கால வரம்பிற்குட்பட்ட, அதாவது கொஞ்சம் வருடங்களுக்குரிய ஏற்பாடு என்று கருதப்படாமல், கர்த்தருடைய இரண்டாம் வருகை வரையிலும் தொடர்ந்து ஆசரிக்கப்பட வேண்டும் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையைக்குறித்துப் பேசுகையில், உலகத்தை ஆளுகைச்செய்து, ஆசீர்வதிக்கப்போகின்றதான கிறிஸ்துவின் இராஜ்யம் (அ) சபையினுடைய கூட்டிச் சேர்க்குதலையும், உயர்த்தப்படுதலையும் உள்ளடக்கின விதத்திலேயே, அப்போஸ்தலனுடைய வார்த்தைகள் காணப்படுகின்றன. ஒன்றோடொன்று தொடர்புடைய விஷயங்களை, ஒன்றுக்கொன்று ஒத்திருக்கும் விஷயங்களை இப்படியாய்ப் பேசுவது இன்றும் பொதுவான மற்றும் பொருத்தமான வழக்கமாய் இருக்கின்றது. கிறிஸ்துவாகிய தலையும், சரீரமும் வல்லமையிலும், மகா மகிமையிலும் உலகத்தை ஆளுவதற்கு வந்துகொண்டிருக்கின்றனர். கர்த்தர் (அ) தலையினுடைய பிரசன்னம் முதலாவது அவசியமாகும்; அடுத்து அவரது சரீரத்திலுள்ள நித்திரையடைந்த அங்கத்தினர்களின் மறுரூபமடைதலும், உயிரோடிருக்கும் அங்கத்தினர்களின் சலித்தெடுத்தலும், அவர்கள் படிப்படியாக அவரோடு கூட்டிச்சேர்க்கப்படுதலும் சம்பவிக்கும்.

இராஜா தம்முடைய மாபெரும் வல்லமையை 1878-ஆம் வருடத்தில் செயல்படுத்தத் துவங்கின காலத்திலிருந்து இராஜ்யம் ஆரம்பித்துவிட்டது என்று கருதப்படுகின்றதாய் இருப்பினும் (வெளிப்படுத்தல் 11:17), இராஜ்யத்தினுடைய கடைசி அங்கத்தினன் மறுரூபமடைவது (அ) மகிமைப்படுத்தப்படுவது வரையில், அப்பமாகிய கிறிஸ்து எனும் தலை மற்றும் சரீரத்தினுடைய பிட்கப்படுதல் நிறைவடைவது வரையில், அது முழுமையாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்காது. ஓர் அங்கம் பாடுபடுகையில், சரீரம் பாடுபடுகின்றது; ஓர் அங்கத்தினன் மகிமையடையாமல் இருக்கையில், இராஜ்யமானது வல்லமையிலும், ஆளுகையிலும் முழுமையாய் வரவில்லை என்பதாகும்.

"ஆகையால் நீங்கள் இந்த (பஸ்காவில்) அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும், அவருடைய மரணத்தைத் (உங்கள் நம்பிக்கை மற்றும் உறுதி என்று) தெரிவிக்கின்றீர்கள்" என்று அப்போஸ்தலன் கூறுகையில், கிறிஸ்துவினுடைய சபை (அ) இராஜ்யத்தினுடைய முழுமையான உயர்த்தப்படுதலை உள்ளடக்கின கிறிஸ்துவின் வருகையையே குறிப்பிட்டார் என்பதில் உறுதியே. இராஜ்யத்தின் மகிமையே, அடையாளத்தினுடைய முடிவு என்ற இதே கருத்தானது, நினைவுகூருதலை நிறுவினப்போதான நமது கர்த்தருடைய பின்வரும் வார்த்தைகளிலிருந்தும் எடுத்துக்கொள்ளப்படலாம்: "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 26:29).

நமது கர்த்தருடைய மரணமானது ஈடுபலி விலைக்கிரயமாக இருந்தது என்று நம்புகிறவர்கள் அதை அறிக்கைப்பண்ணுவது, அதைத் தங்கள் நம்பிக்கைகள் அனைத்திற்குமான அடிப்படை என்று தெரியப்படுத்துவது ஏற்றக்காரியமாகவும், நலமளிக்கிற காரியமாகவும் இருக்கும். இதற்கான ஏற்றக்காலமானது, இக்காலத்திலேயே, அதாவது தேவ வார்த்தையினுடைய இந்த அடிப்படையான உபதேசமானது, திரித்துக் கூறப்படுவதும், தவறாய் விவரமளிக்கப்படுகிறதுமான இக்காலத்திலேயே ஆகும்.

## சிலாக்கியத்தினை உணர்ந்துகொள்ளுதல்

எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும், எவரும் இந்த வருடாந்திர சிலாக்கியத்தினைப் புறக்கணித்திட வேண்டாமென்று நாம் வலியுறுத்துகிறோம். இதை ஆசரிக்கும் விஷயத்தில் விசேஷித்த ஆசீர்வாதம் உள்ளது. நீங்கள் சோர்வடைந்திருக்கிறீர்களானால், போய்ப் பிட்கப்பட்ட அப்பத்தில் பங்கெடுத்து, உங்கள் நீதிமானாக்கப்படுதலைக்குறித்தப் புதிதான உணர்ந்துகொள்ளுதலையும், ஒரே அப்பத்தின் - அவரது சபையின், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கான (பலிச்செலுத்தப்படுவதற்கான) உங்களது அர்ப்பணிப்பைக்குறித்த புதிதான உணர்ந்துகொள்ளுதலையும் கர்த்தரிடத்தில் கேளுங்கள்.

இப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, உணர்ந்துகொள்ளப்படவில்லையெனில், நினைவுகூருதலானது அர்த்தமற்றதாக (அ) பாதகமானதாகக் காணப்படும் என்பதை நாம் மறக்காமல் இருப்போமாக. ஆனால் பாவங்களோ, அனலற்றத் தன்மைகளோ, அபாத்திரன் என்ற உணர்வுகளோ, நம்மைத் தடைச் செய்யாதிருப்பதாக. கர்த்தரிடத்தில்போய் உங்கள் குறைவுகள் அனைத்தையும் மறைக்காமல் கூறிவிடுங்கள். உங்கள் சகோதர சகோதரிகளிடத்தில் (அ) நீங்கள் யாருக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தீர்களோ, அவர்களிடத்தில்போய், அவர்கள் உங்களிடத்தில் தவறுகளை ஒப்புக்கொள்கிறார்களோ, இல்லையோ, நீங்கள் முழுமையாய் ஒப்புக்கொண்டுவிடுங்கள். உங்கள் கர்த்தருடன் ஒப்புரவாகிக்கொள்ளுங்கள் மற்றும் கூடுமானமட்டும் அனைத்து மனிதர்களுடனும் ஒப்புரவாகிக்கொண்டு வந்து புசியுங்கள் — ஆம் இப்பொழுது (அ) பின்னர் "ஏற்றக்காலத்தில்" ஏற்றுக்கொள்பவர் அனைவருக்குமான கர்த்தருடைய ஐசவரியமான ஏற்பாட்டில் பங்கெடுங்கள்.

இப்படியானதொரு இருதய ஆராய்தலும், சுத்திகரித்தலும், யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டதான பஸ்கா நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளதை நாம் நினைவுகூருகிறோம். தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்கெனக் கூடிடுவதற்கு முன்னதாக, புளிப்பான அல்லது அழுகிப்போனதான ஏதாகிலும் பொருட்கள், எலும்புகள், ரொட்டித் துண்டுகள் காணப்படுகின்றதா என்று தங்களது குடியிருப்புகளில் எல்லாம் அவர்கள் தேடினார்கள். இவைகளெல்லாம் எரிக்கப்பட்டன - அழிக்கப்பட்டன. ஆகையால் நாமும் நிஜத்தை நிறைவேற்றி, கோபம், பகைமை, சண்டை, துர்க்குணம் எனும் "பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போட" வேண்டும் (1 கொரிந்தியர் 5:7, 8).

இவ்வகை பாவம் எனும் புளிப்பானது, எரிக்கப்படாமல், முற்றிலுமாகப் புறம்பே கழித்துப்போடப்பட முடியாது என்பதையும், அன்பு — பரம அன்பு, தேவ அன்பு மாத்திரமே இதை எரித்துப்போட முடியும் என்பதையும் நினைவில் கொண்டிருக்க வேண்டும். இந்த அன்பானது, நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருந்தால், இது எதிர்ப் பண்புடைய அனைத்தையும், அதாவது பொறாமை, பகைமை, புறங்கூறுதல் முதலானவைகள் அனைத்தையும் பட்சித்துப் போட்டுவிடும். இவைகளையெல்லாம் புறம்பே கழித்துப் போட்டு, கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, அவரது ஆவியில் நிரம்பிடுவதற்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். மனம் தளர்ந்துபோக வேண்டாம். பாடத்தைக் கற்றுக்கொண்டு, புதிய தீர்மானங்களுடனும், ஆண்டவருடைய உதவியில்லாமல், நீங்கள் நீங்களாகவே பரிசை ஒருபோதும் அடையமுடியாது என்ற உண்மையினைப்பற்றின அதிகமானப் புரிந்துகொள்ளுதலுடனும், மீண்டுமாகத் தொடருங்கள். மேற்கூறிய உண்மையினை நம்மைவிட அவர் நன்றாய் அறிவார் மற்றும் "என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ்செய்யக் கூடாது" என்று கூறுகின்றார். நமக்கான தேவையின் காரணமாகவே, பிதா நமக்கு இப்படியாக ஏற்பாடு பண்ணியுள்ளார். "தைரியங்கொண்டிருங்கள்!" என்பதே "ஜெயங்கொள்ளுகிற" வகுப்பாரில் அடங்குவதற்கு நாடுகிற மற்றும் ஏங்குகிற அனைவருக்குமான ஆண்டவருடைய வார்த்தைகளாக இருக்கின்றது.

## உங்கள் எதிராளியான பிசாசு

வருஷத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் சோதனைகளானது, விசேஷமாய் அனுமதிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. எப்போதும் "கசப்பான வேர்களானது முளைத்தெழும்பி," வளர்வது வழக்கமாகும்; ஆனால் இந்த ஒரு காலப்பகுதியிலோ பத்து மடங்கு வலிமையோடு வளர்கின்றது. நம்முடைய சீஷத்துவத்திற்கான இறுதிப் பரீட்சையானது, அறிவின் விஷயத்தில் இல்லாமல் அன்பின் விஷயத்தில்தான் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. "நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள் என்கிற புதிதானக் கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்." அப்போஸ்தலர்கள் ஒருவரிலொருவர் போதுமானளவுக்கு அன்புக்கொண்டிராததாலேயே, இராஜ்யத்தில் யார் பெரியவராய் இருப்பார் என்று வாக்குவாதம்

பண்ணினவர்களாகக் காணப்பட்டனர் மற்றும் அன்புக்கொண்டிராததாலேயே ஒருவருக்கொருவர் தாழ்த்திக்கொள்ளமாட்டோம் என்று மிகவும் தீர்மானமாய்க் காணப்பட்டு, இதனால் ஆண்டவருடைய பாதங்களையும் கழுவும் காரியத்தினைப் புறக்கணித்தவர்களாக, கனம் குறைந்த வேலையிலும், அவரே அனைவருக்கும் பணிவிடைக்காரராக இருக்கத்தக்கதாக, அவருக்கு வாய்ப்பளித்தவர்களாகக் காணப்பட்டனர். இந்தத் தவறான சிந்தையே, அதாவது கர்த்தருடைய சிந்தை இல்லாமையே, அவர்கள் எதிராளியானவனுடைய வல்லமையினால் தாக்கப்படுவதற்கு ஏதுவாயிற்று மற்றும் யூதாசைக் காட்டிக்கொடுப்பதற்கு ஏதுவாய் வழிநடத்திற்று மற்றும் பேதுரு தனது அபிஷேகிக்கப்பட்ட கர்த்தரை மறுதலிப்பதற்கு ஏதுவாயிற்று.

ஆகையால் நாம் சோதனைக்குள் விழுந்துவிடாதபடிக்கு நம்மைக்குறித்து நாம் எச்சரிக்கையாயிருப்போமாக; விழித்திருந்து ஜெபம்பண்ணுவோமாக; மிகுந்த தாழ்மையுடனும், மிகுந்த அன்புடனும் காணப்படுவோமாக. இயேசுவினுடைய பின்னடியார்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதற்கும் (அ) அவர்களைச் சிக்கவைப்பதற்கும் (அ) அவர்களை இடறப்பண்ணுவதற்கும் நமது மாபெரும் எதிராளியானவன் அன்றுமுதல் இன்றுவரையிலும் அதிக உற்சாகத்துடன் காணப்படுகின்றான்.

நம்முடைய பாவங்களை நிவிர்த்திச் (திருப்தி) செய்கிற கிருபாதார பலியாய், அதாவது நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாய், அவரது விலையேறப்பெற்ற இரத்தம் காணப்படுகின்றது என்ற விசுவாசத்தின் நம்பிக்கையை உடையவர்கள் அனைவரும், இந்த உண்மையை அறிக்கைச் செய்வதில் முன்பில்லாதளவுக்கு அதிக வைராக்கியத்துடனும், ஊக்கத்துடனும் காணப்படுவார்களாக; "ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய (பலியாகிய) கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." பெயரளவிலான எந்த முதற்பிறப்புகளும் கடந்து போகப்படுவதுமில்லை, மகிமையிலுள்ள முதற்பேறானவர்களின் சபையினுடைய அங்கத்தினர்களும் ஆகுவதில்லை; அந்த இரவில், நிழலில் நடந்ததுபோலவே இரத்தத்தின் கீழ்க் காணப்படாதவர்களும், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியினுடைய புண்ணியங்களில் பங்கெடுக்காதவர்களுமானவர்கள் எவரும் முதற்பேறானவர்களின் சபையினுடைய அங்கத்தினர்கள் ஆகுவதில்லை.

## யார் பங்குகொள்ளலாம்

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது, உலகத்துக்குரியதாயும், பெயரளவிலான விசுவாசிகளுக்குரியதாயும் இராமல், (1) கிறிஸ்துவை தங்களுடைய மீட்பராகவும், தங்களுடைய பாவத்தைச் சுமந்தவராகவும், ஏற்றுக்கொண்டவர்களும் மற்றும் (2) அவருக்கும், அவருடைய ஊழியத்திற்கும் எனத் தங்களை அர்ப்பணம் பண்ணினவர்களுமாய் இருப்பவர்களுக்கு மாத்திரம் உரியதாகும். ஆனால், இதில் யார் பங்குகொள்ளலாம் அல்லது பங்குகொள்ளக்கூடாது என்று தீர்மானம் பண்ணுவது நமக்குரிய அல்லது எந்த மனுஷனுக்குரிய அல்லது ஒரு கூட்டத்தாருக்குரிய வேலையல்ல. "அப்பத்திலும்," "பாத்திரத்திலும்" பங்குகொள்வதற்கான சரியான தகுதிகள் என்ன என்பதை கர்த்தருடைய வார்த்தையிலிருந்து சுட்டிக்காண்பிப்பதும், "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்" என்று அப்போஸ்தலன்போன்று கூறுவதும் நமக்குரிய கடமையாகும் (1 கொரிந்தியர் 11:28).

இப்பொழுது தேவனுடைய ஜனங்கள் இருண்ட யுகங்களினுடைய தவறான உபதேசங்களிலிருந்து வெளிவந்துகொண்டிருப்பதினாலும், இப்பொழுது இந்த நினைவுகூருதலின் விஷயங்கள் இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளப்படுவதினாலும், ஒருவர் தன்னைச் சுய பரிசோதனைப் பண்ணிக்கொள்ளும் அல்லது நிதானித்துக்கொள்ளும் காரியம்கூட முன்பைக்காட்டிலும் இப்பொழுது மிக முழுமையாகக் காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் பின் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களைத் தன்னிடத்திலேயே கேட்டுக்கொள்ளவார்களாக :

(1) மனித குடும்பத்தில் நான் ஓர் அங்கமாக இருக்கின்றபடியால், ஆதிப்பாவத்தின் காரணமாக எல்லார்மேலும் கடந்துவந்த மரணத்திற்கு ஏதுவான அந்த ஆக்கினைத் தீர்ப்பின் கீழ், நானும் காணப்பட்டேன் என்று வேதவாக்கியங்கள் போதிக்கும் காரியங்களை நான் நம்புகின்றேனா?

(2) இந்தப் பாவம் மற்றும் மரணத் தண்டனையினின்று நான் தப்பித்துக்கொள்வதற்கு எனக்கு இருக்கும் ஒரேவழி, என்னுடைய கர்த்தராகிய மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவினால் கொடுக்கப்பட்ட ஈடுபலியின் வழியாகவே உள்ளது என்று நான் நம்புகின்றேனா?

(3) அவர் நம் பொருட்டு தம்மையே அதாவது, அவருடைய மாம்சத்தையும், இரத்தத்தையும், மனுஷீகத்தையும் ஈடுபலிக்கான கிரயமாகக் கொடுத்தார் என்றும், அவர் தமது ஆத்துமாவை

மரணத்தில் ஊற்றி, தம்முடைய ஆத்துமாவை பாவத்திற்கான பலியாகக் கொடுத்தார் என்றும் நான் நம்புகின்றேனா? (ஏசாயா 53:10-12)

(4) அவர் யோர்தானில் ஞானஸ்நானம் எடுத்தப்போது ஆரம்பமான, மரணம் வரையிலான அவருடைய அர்ப்பணமானது, மனுக்குலத்திற்காக அவர் தம்மையே பலிசெலுத்தினது மூலம், சிலுவையில் அவர் மரித்தபோது, நிறைவேறி முடிந்தது என்று நான் நம்புகின்றேனா?

(5) நியாயப்பிரமாணத்திற்கு அவர் கீழ்ப்படிந்ததின் காரணமாக அவர் சுதந்தரித்துக்கொண்ட (நித்தியஜீவன் மற்றும் உலகத்தின்மீது ஆளுகை எனும்) உரிமைகளை அவர் இப்படியாக, பலியானதின் மூலம் — இறுதியில் புதிய உடன்படிக்கையின் கீழ் ஆசீர்வாதங்களை ஏற்றுக்கொள்ளுகின்ற அனைவருக்கும் — விழுந்துபோன மற்றும் மரித்துக்கொண்டிருக்கும் மனுக்குலத்திற்கு — கொடுத்துவிட்டார் என்பதை நான் புரிந்துள்ளேனா?

(6) இவ்விதமாக பலிச் செலுத்தப்பட்ட அவருடைய மாம்சமும், இரத்தமும் இவைகள் விலைக்கிரயமாகக் கொடுக்கப்பட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட அந்த ஆசீர்வாதங்களுக்கும், கிருபைகளுக்கும் அடையாளமாக இருக்கின்றது என்பதை நான் புரிந்துள்ளேனா?

(7) அவருடைய மாம்சத்திற்கும், அவருடைய இரத்தத்திற்கும் அடையாளச் சின்னங்களாக இருக்கும் அப்பம் மற்றும் திராட்சரசத்தில் பங்குகொள்ளும் காரியமானது, என்னுடைய கர்த்தரின் மாம்சம் மற்றும் இரத்தம் எனக்காகவும், அனைவருக்காகவும் பெற்றுத்தந்த அந்த ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும் நான் ஏற்றுக்கொள்வதைச் சுட்டிக்காட்டுகின்றது என்பதை நான் புரிந்துள்ளேனா?

(8) ஒருவேளை இவ்விதமாய் நினைவுகூரப்பட்டதான ஈடுபலியை நான் இருதயப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு இருப்பேனாகில், இந்த ஈடுபலியின் மீதான விசுவாசத்தின் காரணமாக நீதிமானாக்கப்பட்ட என்னை — என்னுடைய மாம்சத்தையும், இரத்தத்தையும் கர்த்தரோடுகூடப் பிட்கப்படும்படிக்கும், அவரோடுகூடப் பாடுபடும்படிக்கும், அவரோடுகூட மரிப்பதற்கும் கர்த்தருக்கென்று முழுமையாய் நான் அர்ப்பணம் பண்ணியுள்ளேனா?

ஒருவேளை இக்கேள்விகளுக்கு நம்மால் தீர்க்கமான பதில் கொடுக்க முடியுமெனில், நாம் கர்த்தருடைய சரீரத்தைக்குறித்து முழுத் தெளிவுடனும், மற்றும் அவருடைய பலிக்கு மரியாதைக் கொடுக்கிறவர்களாகவும் காணப்படுகின்றோம். மேலும், நாம் அதைப் புசிக்கலாம் — கண்டிப்பாய்ப் புசிக்க வேண்டும் — "நீங்கள் எல்லாரும் இதிலே புசியுங்கள்."

பாவத்திற்கும், பாவிகளுக்கும் ஓர் ஈடுபலி அவசியம் எனும் காரியத்தை *மறுப்பவர்களும்,* கிறிஸ்துவின் புண்ணியத்தில் பங்கடைவது தங்களுக்குத் தேவையில்லை என்றும் *எண்ணுபவர்களும்,* ஒருவருடைய புண்ணியம், மற்றவருக்குத் தரிப்பிக்க முடியும் எனும் காரியத்தை *மறுப்பவர்களும்,* கிறிஸ்துவின் நீதியினால் கிடைத்திட்ட கலியாண வஸ்திரத்தைக் *களைந்து போட்டவர்களும்,* தங்களுடைய சொந்த நீதியாகிய அழுக்கான கந்தைகளை அணிவதில் "சந்தோஷத்துடனும்," "சுதந்திர உணர்வுடனும்" *காணப்படுபவர்களும்,* தங்களைப் பரிசுத்தம்பண்ணின விலையேறப்பெற்ற இரத்தத்தை இப்பொழுது பரிசுத்தமற்றது அல்லது சாதாரணமான ஒன்றாக *எண்ணுபவர்களும்* — தாங்கள் விசுவாசிக்க இனி மறுப்புத் தெரிவிக்கின்ற இந்த நினைவுகூரும் காரியத்திலிருந்து விலகிக்கொள்ளும்படிக்கு நாம் அறிவுரை கூறுகின்றோம். ஏனெனில், ஒருவேளை அவர்கள் பங்குகொள்வது அவர்களது, விசுவாசமற்ற நிலையில் இன்னும் மாய்மாலத்தைக்கூட்டி வழங்கிவிடுவதாகிவிடும். இப்படிப்பட்டவர்கள் பங்குகொள்வது என்பது, தங்கள்மீதும், ஈடுபலி இல்லை என்ற தங்களுடைய கோட்பாடுகளின்மீதும் கண்டனம் சுமத்திக்கொள்வதற்கு ஏதுவாகிவிடும்.

## தேவனுடைய வார்த்தையாகிய சத்தியம்

மாபெரும் எதிராளியானவனுடைய பல்வேறு வழிகள் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட தவறான வாதங்கள் மூலமாக, இந்தத் தப்பறைகளுக்குள் சிக்கினவர்களாக மாத்திரம் காணப்படும் அனைவருக்கும் நாம் அறிவுரை கூறுவது என்னவெனில்: வீணான அனைத்து மனித தத்துவ ஞானங்களை/கோட்பாடுகளை உதறித்தள்ளி, மீண்டுமாக எளிமையான தேவ வார்த்தைகளையும், அதினால் முன்வைக்கப்படும் சத்தியங்களையும் ஏற்றுக்கொள்வதுமாகும்; தேவ வார்த்தைகளினால் முன்வைக்கப்படும் சத்தியங்கள் என்னவெனில்: அனைவரும் விழுந்துள்ளனர் என்பதும், தெய்வீகப் பிரமாணத்திற்கும், தீர்ப்பிற்கும் இசைவாக நம்முடைய ஒப்புரவாகுதலுக்கும், சீர்த்தூக்கப்படுதலுக்குமான ஒரே வழி நம்முடைய பாவங்களுக்கான ஈடுபலியை (அ) முழுமையான மற்றும் துல்லியமான சரிநிகர்சமான விலையைக் கொடுப்பதேயாகும் என்பதும், இதுதவிர வேறெந்த வழியிலும் அவரால் நீதியுள்ளவராகவும், பாவிகளை நீதிமானாக்குகிறவருமாயும் காணப்பட முடியாது என்பதும் ஆகும். மேற்கூறப்பட்டவர்கள் நமது கர்த்தர் இயேசு தேவ ஆட்டுக்குட்டியென, நம்முடைய

பாவங்களுக்கான முழுத் தண்டனையை அவர் மரத்தில், தம்முடைய சரீரத்தில் சுமந்தார் என்றும், அனைவருக்குமான முழுமையான ஈடுபலியை அவர் கொடுத்தார் என்றுமுள்ள உண்மைகளை அடையாளம் கண்டுகொள்வார்களாக.

கொள்கை மிகவும் எளிமையானதாகும்; ஆனால் ஒருவேளை அதைச் சிலரால் கிரகித்துக்கொள்ள முடியவில்லையெனில், இப்படியானவர்கள் தேவன் இப்படியாய்த் தெரிவித்துள்ளார் என்ற உண்மையையாகிலும் கிரகித்துக்கொள்வார்களாக மற்றும் கர்த்தரிடத்தில் திரும்புவார்களாக மற்றும் அவரும் திரளாய் மன்னிப்பார். இப்படியானவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான நமது தேவனுடைய கிருபை அனைத்திற்குமான இந்த அஸ்திபாரத்தை இன்னதென்று சகல பரிசுத்தவான்களோடுங்கூட உணர்ந்துகொள்ளத்தக்கதாகப் பரிசுத்த ஆவியினுடைய வழிகாட்டுதலையும், கண்களின் அபிஷேகிக்கப்படுதலையும் கேட்பார்களாக. இப்படியாகப் பிட்கப்பட்ட அப்பத்தையும், சிந்தப்பட்ட இரத்தத்தையும் உண்மையாய் ஏற்றுக்கொண்டு, அதாவது தங்கள் பாவங்களுக்காகவே பலிச்செலுத்தப்பட்டுள்ளது என்றும், சிந்தப்பட்ட இரத்தமானது (கொடுக்கப்பட்ட ஜீவனானது) அனைவருக்குமான மன்னிப்பை உறுதிப்படுத்துகின்றது என்றும் உணர்ந்து, இப்படிப்பட்டவர்கள் சரித்திரத்தின் மாபெரும் நிகழ்வை, அதாவது நம்முடைய பாவங்களுக்காக தேவனுடைய நேசக்குமாரனின் விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்பட்டதையும், அவரது விலையேறப்பெற்ற ஜீவன் பலிச்செலுத்தப்பட்டதையும் நினைவுகூர்ந்து ஆசரிப்பார்களாக. "தெளிக்கப்பட்ட இரத்தத்தின்" கீழிலிருந்து அறிந்தும், மனப்பூர்வமாகவும் வெளியேறுகிறவர்களை, இந்த வார்த்தைகளும் சரி (அ) வேறெந்த வார்த்தைகளும் சரி — வழியினிடத்திற்கும்/சத்தியத்தினிடத்திற்கும், ஜீவனிடத்திற்கும் திருப்புவது என்பது கூடாதகாரியம் என்று தேவனுடைய வார்த்தைகளிலிருந்து நாம் அறிகின்றோம். அப்படியானவர்களுக்கு எந்தக் கடந்துபோகுதலும் கிடையாது. "மனந்திரும்புவதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" (எபிரெயர் 6:4-10; 10:26-30). நம்மிடமிருந்து வரும் இந்த அன்புடன்கூடிய புத்திமதியும், வேதவாக்கியங்களை உண்மையாய்ச் சுட்டிக்காட்டுதலுங்கூடக் கர்த்தருக்கும் மற்றும் சத்தியத்திற்கும் மற்றும் பகுத்தறிவில்லாமல் இடறுகிற சகோதரர்கள் (அ) சகோதரிகளுக்கும் ஊழியம் புரிந்திடுவதற்கான வாஞ்சை எனும் உண்மையான நம்முடைய நோக்கத்தின் காரணமாய்க் கொடுக்கப்படுகிறது என்று பார்க்கப்படுவதற்குப் பதிலாக, (நம்முடைய) பகைமை, துர்க்குணம், பொறாமை மற்றும் அனைத்து விதமான பொல்லாப்புகளினால் உண்டானது என்று கருதப்படும் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

ஈடுபலியினுடைய கொள்கையினை முழுமையாய் உணர்ந்துகொள்ளாத நிலையில், ஆனால் நமது மீட்பருடைய மரணமானது, நம்மை நம்முடைய குற்றங்களிலிருந்து நிவிர்த்திபண்ணி, குற்றத்திற்கான தண்டனையினின்று நம்மை விடுவித்தது என்ற உண்மைக்குறித்த பயபக்தியுடன்கூடிய உணர்ந்துகொள்ளுதலுடன் கடந்தகாலங்களில் அநேகர் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்தும் அடையாளங்களில் பங்கெடுத்துள்ளனர். இப்படியானவர்கள் நினைவுகூருதலின் உண்மையான அர்த்தத்தினை உய்த்துணர்ந்துள்ளனர்; எனினும் சத்தியத்துடன்கூடக் காணப்படும் மிகுதியான தப்பறைகளின் காரணமாக, இவர்களால், நாம் இப்பொழுது உணர்ந்துள்ளதான அதன் எளிமையான கொள்கையினை உணர்ந்துகொள்ள முடியவில்லை.

## ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டவர்கள் மாத்திரம்

சில பேப்டிஸ்ட் (Baptist) சகோதரர் பின்வருமாறு குறிப்பிடலாம்: நினைவுகூருதல் இராப்போஜனத்தில் பங்கெடுப்பதற்கு, ஞானஸ்நானம் அவசியமான தகுதியாய் இருக்கின்றது என்பதைக் குறிப்பிடுவதற்கு நீங்கள் மறந்துவிட்டீர்கள்.

இல்லை, நாங்கள் ஞானஸ்நானத்தை மறந்துபோகவில்லை. ஞானஸ்நானம் என்பது அவசியம் என்றும், நினைவுகூருதல் இராப்போஜனமானது சபைக்கு மாத்திரமே உரியது என்றும், சபையாகுவதற்கு முன்னதாகவே, ஒருவருக்கு ஞானஸ்நானம் அவசியம் என்றும், நாங்கள் உங்களோடுகூட ஒத்துக்கொள்கின்றோம். ஆனால் சபை என்றால் என்ன என்பது தொடர்புடைய விஷயத்தில், நாங்கள் உங்களிடமிருந்து வேறுபடுகின்றோம். பேப்டிஸ்ட் சபையானது (Baptist Church) சபையல்ல என்று நாங்கள் எண்ணுகின்றோம். மற்றெல்லா சபைகளானது விழுந்துபோன மனிதர்களினால் ஏற்படுத்தப்பட்டு, நடத்தப்படுவதுபோலவே, பேப்டிஸ்ட் சபையும் "கோதுமைகளையும்", "களைகளையும்" கொண்டிருக்கின்றது; ஆனால் சபையானது, கோதுமையை மாத்திரமே பெற்றிருக்கும். கிறிஸ்தவ மண்டலத்தினுடைய எந்த ஒரு பிரிவும், அதினிடத்தில் எந்தக் "களைகளும்" இல்லாமல், அனைத்துமே "கோதுமைகளாக" இருக்கின்றது என்று கூறமுடியாது.

பரலோகத்தில் பெயர்கள் எழுதப்பட்டுள்ளதான சபையானது "கோதுமைகள்" அனைத்தையும் கொண்டிருக்கின்றது மற்றும் "களைகளை" அதன் பட்டியலில் பெற்றிருப்பதில்லை. இந்த ஒரு சபையையே, நமது கர்த்தர் ஸ்தாபித்தார் மற்றும் இதில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அனைவரும் — கடந்துபோகப்பட்டவர்களாகிய சபை — "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபையே" — அங்கத்தினர்களாய் இருப்பார்கள் (எபிரெயர் 12:23).

இதுபோலவே ஞானஸ்நானத்தைக்குறித்த உங்களது வலியுறுத்தலும் எங்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. வேதவாக்கியங்களுடைய கண்ணோட்டமானது, உங்களுடையதைக்காட்டிலும் மிகவும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. "முதற்பேறானவர்களின் சபையினுடைய" அங்கத்தினர்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியாதவர்களை எல்லாம், உங்கள் பேப்டிஸ்ட் சபையில் நீங்கள் அங்கத்தினர்களாகப் பெற்றிருக்கின்றீர்கள். அப்படியானவர்கள் தண்ணீர் ஞானஸ்நானம் என்ற உங்களது பரீட்சையினைக் கடந்துவிட்டனர்; ஆனால் அவர்கள் பரலோகத்தில் தங்கள் பெயர்களை எழுதப்பெற்றவர்களாகிய சபையினுடைய அங்கத்தினர்கள் அனைவருக்கும் அவசியமான மாபெரும் ஞானஸ்நானம் எனும் பரீட்சையினைக் கடக்காதவர்களாகக் காணப்படுகின்றனர். உண்மையான ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளான முழுகுதலின் மூலமும், அவரது சாயலிலான உயிர்த்தெழுதலின் மூலமும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக, சபைக்குள்ளான ஞானஸ்நானமாகும். தண்ணீர் ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளான மனித சித்தத்தினுடைய உண்மையான முழுகுதலுக்கு அருமையான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் மரணம்வரையிலுமான பலிச்செலுத்துதலுக்கு அருமையான விளக்கமாகவும் காணப்படுகின்றது; எனினும் எப்படி இராப்போஜனத்தில் நாம் புசிக்கின்றதான அப்பமும், திராட்சரசமும், நமது கர்த்தருடைய பலியின் உண்மையான ஜீவன் கொடுக்கும் அம்சங்களாக இல்லாமல், மாறாக அவைகளின் அடையாளங்களாக மாத்திரம் காணப்படுவதுபோன்று, தண்ணீர் ஞானஸ்நானமும் வெறும் அடையாளமேயாகும்.

ஆகையால் சபையாகிய, முழுகப்பட்டவர்கள் மாத்திரமே இராப்போஜனத்தில் பங்கெடுக்க வேண்டும் என்பதை நாம் ஒத்துக்கொள்கின்றோம்; இன்னுமாக உண்மையில் முழுகினவர்கள் என்பவர்கள் தங்கள் சித்தங்களை மரிக்கப் பண்ணினவர்களாகவும், கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளாக அடக்கம் பண்ணினவர்களாகவும், அவருக்குள் புதிய சிருஷ்டிகளெனப் புதிதான ஜீவன் உள்ளவர்களாய் நடந்துக்கொள்ளும்படிக்கு எழுந்தவர்களாகவும், தங்களது ஓட்டமானது சொல்லர்த்தமான மரணத்தில் நிறைவுபெறுவதற்கும், முதலாம் உயிர்த்தெழுதலில் உண்மையான புதிய ஜீவன்களாக விழித்தெழுவதற்கும் காத்திருப்பவர்களாகவும் இருப்பவர்கள் என்று நாம் அடையாளம் கண்டுகொள்கின்றோம். இப்படியானவர்கள் அனைவரும் யாராக இருந்தாலும் சரி, எங்குக் காணப்பட்டாலும் சரி, இவர்கள் ஞானஸ்நான அடையாளத்தைப் பண்ணியிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இவர்களே கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையின் உண்மையான அங்கத்தினர்கள் ஆவர். ஆம் இப்படியான அர்ப்பணிக்கப்பட்டவர்கள், தங்கள் சொந்த சித்தத்திற்கு மரித்து, கிறிஸ்துவின் சித்தத்திற்கு மாத்திரமாக ஜீவனுடையவர்களாய் இருப்பவர்கள், நமது கர்த்தருடைய அறிவுரையானது தண்ணீர் ஞானஸ்நானத்தையும் (அ) அடக்கம்பண்ணுதலையும், மற்றும் தங்கள் சித்தங்களை அடக்கம் பண்ணுவதையும் உள்ளடக்குவதைக் காண்கையில், தங்கள் தலையும், கர்த்தருமானவரை அனைத்து விஷயங்களிலும் பின்பற்றிடுவதற்கும், அவருக்குக் கீழ்ப்படிந்திடுவதற்கும் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள்; அதிலும் விசேஷமாகத் தாங்கள் குழந்தைகளாக இருந்தபோது, தாங்கள் "விசுவாசிகளாய்" இருக்கவில்லை" என்பதையும், தண்ணீர் துளிகள் தெளிக்கப்படுவது என்பது எந்த விதத்திலும் அடக்கத்தையும், உயிர்த்தெழுதலையும் அடையாளப்படுத்தாது என்பதையும் இப்பொழுது இவர்கள் உணர்ந்திருக்கையில் கர்த்தரை அனைத்து விஷயங்களிலும் பின்பற்றிடுவதற்கும், அவருக்குக் கீழ்ப்படிந்திடுவதற்கும் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். இவர்கள் நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் பங்கெடுப்பதற்கு முன்னதாக (நமது கர்த்தரினாலும், அப்போஸ்தலர்களினாலும் நமக்குச் சுட்டிக்காட்டப்பட்டதுபோல) கூடுமானால் தண்ணீரிலும் அடக்கம் பண்ணப்பட வேண்டுமென்று தேவனுடைய வார்த்தைகளில் இடம் பெறுகின்றதான இந்தக் கட்டளையின் மதிப்பையும், அருமையையும் கண்டுகொள்வார்கள். வேதாகமப் பாடங்களினுடைய ஆராய்ச்சியின் தொகுதி-VI-இல் (Volume-6), அத்தியாயம் 10-இல், இடம்பெறும் "புதுச் சிருஷ்டியினுடைய ஞானஸ்நானம்" எனும் பாடத்தைப்பார்க்கவும்.

உண்மையான "கோதுமை" மாத்திரமே கர்த்தருடைய பந்தியில் காணப்படுவார்கள் என்று நாம் எதிர்ப்பார்த்திட முடியாது; எப்படி யூதாஸ் முதல் கூடுகையில் கலந்துகொண்டானோ அப்படியே சில "களைகள்" கூட வருவார்கள் என்றே நாம் எதிர்ப்பார்க்கலாம். ஆனால் நம்மால் இருதயத்தைக் கணிக்கமுடியாது என்பதினாலும், "களைகளினின்று," "கோதுமையை" நம்மால் பிரிக்க முடியாது என்பதினாலும், இந்தப் பாடம் தொடர்புடையதாகத் தேவனுடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டதான "தேவனுடைய ஆலோசனைகள் அனைத்தையும் அறிவிப்பதன்" மூலமாக எங்கள் கடமைகள் அனைத்தையும் முடித்துவிட்டு, ஒப்புரவாகுதலின் இரத்தத்தின் மீதான தனது

விசுவாசத்தைக்குறித்தும், மீட்பரிடத்திலான தனது அர்ப்பணிப்புக்குறித்தும் அறிக்கைப் பண்ணிக்கொள்கின்றதான ஒவ்வொருவனும் தான் பங்கெடுக்கலாமா அல்லது வேண்டாமா என்கிறதை முடிவுபண்ணும் விஷயத்தினை அவனவனிடத்திலேயே விட்டுவிடுகின்றோம்.

## எப்படிப் பங்கெடுப்பது?

உங்களைத்தவிர, உங்கள் அயலகத்தார் மத்தியில் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் எவரேனும் இருப்பார்களானால், அதை நீங்கள் அறிவீர்கள். அவர்களுக்காகவும், சத்தியத்திற்காகவுமான உங்களது உண்மையான அன்பானது, நீங்கள் சத்தியத்தைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, அவர்களைச் சத்தியத்தினால் ஆசீர்வதிக்கத்தக்கதாக நீங்கள் நாடிடுவதற்கு உங்களை வழிநடத்தியிருந்திருக்கும். நீங்கள் ஐக்கியமும், உறவும் கொண்டிருக்கும் அப்படியானவர்கள், உங்களோடுகூட நினைவுகூருதலில் கலந்துகொள்வதற்கு நீங்கள் அழைத்திடலாம்; ஆனால் அவர்கள் ஈடுபலியை மறுக்கிறவர்கள் என்று நீங்கள் அறிவீர்களானால், அத்தகையவர்கள்மீது கூடுதல் ஆக்கினைத் தீர்ப்பு வருவதற்கு நீங்கள் உதவுகிறவர்களாக இராதபடிக்கு, அவர்களை அழைக்க வேண்டாம்.

சூழ்நிலைகளுக்கேற்ப கொஞ்சமானவர்களோடு அல்லது அநேகருடன் கூடிக்கொள்ளுங்கள்; ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான உறவின் மற்றும் ஐக்கியத்தின் ஆவி இல்லாத கும்பலோடு கூடிக்கொள்வதற்குப்பதிலாக, உங்களோடுகூட நினைவுகூருதலின் சிந்தையில் காணப்படுபவர்களாகிய கொஞ்சம் பேருடன் கூடிக்கொள்வது சாலச்சிறந்தது.

இந்த ஒரு தருணத்திற்குக் கர்த்தர் பயன்படுத்தினது போன்றதும், இப்பொழுது எபிரெயர்களால் பயன்படுத்தப்படுகின்றதுமான புளிப்பில்லாத அப்பத்தை (ரொட்டி-crackers) ஏற்பாடு பண்ணிக்கொள்ளலாம்; ஏனெனில் தூய்மையான/இனிப்பான, புளிப்பற்ற அப்பமானது (புளிப்பு அடையாளப்படுத்தும்) பாவம் அறியாதவரும், பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான, தேவ ஆட்டுக்குட்டியினுடைய பாவமற்ற மாம்சத்தினை நன்கு அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளதுபோன்று "திராட்சப்பழரச" பானத்தை ஏற்பாடு பண்ணிக்கொள்ளுங்கள். சந்தேகத்திற்கிடமின்றி கர்த்தரும், சீஷரும் லைட் வைன்சை (Light Wines: 12.5%-க்கு குறைவான மதுசாரம் கொண்ட திராட்சரசம்) பயன்படுத்தினார்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி திராட்சரசமானது (wine) மிகப் பொருத்தமான அடையாளம் என்று கருதுகின்றோம். ஆனால் நமது கர்த்தர் திராட்சரசத்தை (wine) நிபந்தனை விதியாமல் திராட்சப்பழரசம் (fruit of the vine) என்று குறிப்பிடுவதால், திராட்சப்பழங்களை உலர வைப்பதன்மூலம் கிடைக்கும் உலர் திராட்சைகளைக் கொதிக்க வைத்து, வடிக்கட்டி எடுக்கும் இரசத்தினைப் பயன்படுத்துவதற்கு, மறுப்புத் தெரிவிப்பதற்கு நம்மிடத்தில் ஒன்றுமில்லை. நிச்சயமாய் இதுவும் (புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசம் (wine) போன்று, திராட்சப்பழரசமே (fruit of the vine) ஆகும்.

(புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசத்தை (wine) பயன்படுத்திடுவதனைக் கடமை உணர்வின் காரணமாக விரும்புகிறவர்களிடத்தில், இந்த உலர் திராட்சப்பானத்தை (Raisin-liquor) நாம் வற்புறுத்துவதில்லை; ஆதித் திருச்சபையினரிடமிருந்து நம்முடைய சூழ்நிலைகள், பழக்கங்கள், தட்பவெட்ப நிலைகள் முதலானவைகள் மிகவும் வேறுபடுகின்றது என்பதை அனைவருக்கும் நாம் நினைப்பூட்டுவதற்கு மாத்திரம் விரும்புகின்றோம்; மற்றும் பரிசுத்தவான்களில் சிலர் மாம்சத்தின் சுதந்தரிக்கப்பட்ட பெலவீனங்களை உடையவர்களாய் இருக்கின்றனர் என்றும், ஒருமுறை சுவைத்தல் என்பது மாபெரும் சோதனைக்கு ஏதுவாய் மீண்டும் தூண்டிவிடுகிறதாய் அமையும் என்றும் விசேஷமாய் அறிந்த நிலையில், நம்முடைய நாட்களிலுள்ள அநேக வெறியூட்டும் திராட்சரசங்களைக் (wines) கர்த்தருடைய இரத்தத்திற்கு அடையாளமாய் நாம் பயன்படுத்திடுவதற்கு அவர் சித்தமாய் இருப்பாரோ என்று நாம் ஐயப்படலாமோ. "ஒவ்வொருவரும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலை போடலாகாது என்று தீர்மானித்துக்கொள்ளுங்கள்" (உரோமர் 14:13). ஒருவேளை (புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசமானது மனமாற விரும்பப்படுகிறதெனில், லைட் வைனை (Light Wines: 12.5%-க்கு குறைவான மதுசாரம் கொண்ட திராட்சரசம்) தெரிவு செய்யுங்கள் அல்லது உலர் திராட்சரசத்துடன் சிறிதளவு திராட்ச ரசத்தை (wine) கலந்துகொள்ளுங்கள்.

நினைவுகூருதலின் ஆராதனையானது, மிகவும் எளிமையாய்க் காணப்பட வேண்டும்; அது பிரதானமாய் ஐக்கியத்திற்கான காலப்பகுதியாகும். அப்பம் மற்றும் திராட்சரசத்திற்கென்று சபையார் நடுவில் ஒரு மேஜையை ஏற்பாடு பண்ணிடுங்கள். ஒரு துதிப்பாடலைப் பாடின பிற்பாடு, சகோதரரில் ஒருவர் ஆராதனையின் நோக்கத்தினை, குறிப்பிட்ட சில வார்த்தைகளில் கூறிவிட்டு, இக்காரியம் தொடர்புடையதாக வேதவாக்கியங்களிலிருந்து சில வசனங்களை வாசித்திட வேண்டும். இன்னொருவர் நமது கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரமாகிய ஜீவ அப்பத்திற்காக ஸ்தோத்திரித்திட வேண்டும்; இதன் பின்னர்ப் புளிப்பில்லாத அப்பமானது (அல்லது வசதியாக இருக்குமானால் சோடா

ரொட்டியானது - soda biscuits) கலந்துகொள்ள வந்திருக்கும் அனைவரிடத்திலும் கொடுக்கப்படுவதாக. ஜீவ அப்பத்தைக்குறித்துக் கருத்துக்கள் குறிப்பிடுவதற்கு (அ) வேதாகம பாடங்களின் ஆராய்ச்சியில், தொகுதி-VI-இல் (Volume-VI), XI-ஆம் அத்தியாயத்தின் சாராம்சம் சொல்லப்படுவதற்கான வாய்ப்பு இப்பொழுது வழங்கப்படலாம். அடுத்ததாக "பாத்திரத்திற்காகவும்," அது அடையாளப்படுத்தும் விலையேறப்பெற்றதான இரத்தத்திற்காகவும் ஸ்தோத்திரத்துடன்கூடிய ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். "திராட்சப்பழரசமுள்ள" பாத்திரமானது பரிமாறப்படுவதாக. இப்பொழுது விலையேறப்பெற்ற இரத்தம்பற்றின கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்படலாம். ஆனால் இந்தக் கூடுகையில், கலந்தாய்வுகளானது தவிர்க்கப்படுவதாக. விசுவாசத்திற்காக உண்மையாய்ப் போராடுவது மற்றத் தருணங்களிலெல்லாம் எவ்வளவுதான் ஏற்றதாய்க் காணப்பட்டாலும், இது அப்படியான ஒரு தருணமல்ல. இது கர்த்தரும், நம்முடைய மீட்பரும், வந்திருக்கும் இராஜாவுமானவரிடத்தில் ஐக்கியம் மற்றும் உறவுக்/அந்நியோனியம் கொள்வதற்கானத் தருணமாகும். எவனாகிலும் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால், அவன் பேசட்டும்; மற்றவர்களோ நம்முடைய ஆசீர்வாதத்திற்கென ஆண்டவர் நியமித்த அவருடனான விசேஷித்த ஐக்கியத்திற்கான பரிசுத்தமான தருணங்களானது கெடாதபடிக்கு விவாதத்திலிருந்து விலகிக்கொள்வார்களாக.

நினைவுகூருதலை உண்மையான, வஞ்சகமற்ற இருதயங்களுடன் ஆசரிப்பவர்கள், மாபெரும் மற்றும் புத்துயிர் அளிக்கின்றதான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் இதற்காகவே ஆராதனையின் நடுவில், யாருமே சத்தமாய்ப் பேசாதபோது, அமைதியான தருணங்களைப் பெற்றிருப்பது நலமாயிருக்கும்; அதாவது ஐக்கியத்தினாலும் கடந்தகாலங்களிலும், தற்போதுமுள்ள அவரது அன்பினை உணர்ந்துகொள்ளுதலினாலும், மரணம்வரையிலுமாக அவரது உண்மையான பின்னடியார்களாக இருப்பதற்கெனப் பண்ணப்பட்டதான வாக்குறுதியினைப் புதுப்பித்துக்கொள்ளுதலினாலும், கடந்த வருடத்தில் எவ்வாறு அந்த வாக்குறுதியானது காப்பாற்றப்பட்டது (அ) மீறப்பட்டது என்று சிந்திப்பதினாலும், நமது கர்த்தரோடுகூட உடன்சுதந்திரர்களெனப் பரிசினைப் பெற்றுக்கொள்வதற்கென நாம் அழைக்கப்பட்டதான ஓட்டத்தில் பொறுமையோடுகூட ஓடிடுவதற்கு மீண்டும் தீர்மானிப்பதினாலும், அனைவருடைய இருதயங்களானது ஆண்டவருடன் மிகவும் நெருங்கிவர முடிகிற அமைதியான தருணங்களைப் பெற்றிருப்பது நலமாயிருக்கும்.

நம்முடைய பாடல் புஸ்தகத்திலுள்ள, 276-ஆம் துதிப்பாடலானது, நினைவுகூருதலை நிறைவு செய்வதற்கு அருமையாய்ப் பொருந்துகின்ற துதிப்பாடலாய்க் காணப்படுகின்றது. நமக்கொத்த விசுவாசத்தில் உலகமெங்கும் காணப்படும் சிலர் இதே மாபெரும் பலியை நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றனர் என்றும், அதே கிருபையான கர்த்தரை நினைவுகூருகின்றனர் என்றும், அதே மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களினால் தேற்றப்படுகின்றனர், ஊக்குவிக்கப்படுகின்றனர் என்றும், அதே கிருபையான இராஜாவினுடைய கிருபையினால், மாபெரும் பணிவிடைகள் புரிந்திடுவதற்கும், அவரது ஊழியத்திலும், அவரது ஜனங்களுக்கான ஊழியத்திலும் மாபெரும் பலிகளை ஏறெடுத்திடுவதற்கும் தீர்மானம் எடுக்கின்றனர் என்றும், அதே துதி, ஆராதனை பாடலினால் நிறைவு செய்கின்றனர் என்றும் நாம் உணர்கையிலும், நமது சந்தோஷம் பெருகுகின்றது.

"சிலுவை முன்தனிலே நாம் செலவழித்த
ஆசீர்வாதம் நிறைந்த தருணங்கள் இனிமையானதே;
பாவிகளுக்காக உயிர்த்தெழுந்த நண்பனிடமிருந்தே
ஜீவனையும், ஆரோக்கியத்தினையும், சமாதானத்தையும் பெற்றிருக்கின்றோமே."

"அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, புறப்பட்டுப்போனார்கள்" என்று முதலாம் இராப்போஜனம் குறித்து எழுதப்பட்டுள்ளது. நாமும் அவ்வாறே செய்வோமாக. ஒவ்வொருவனும் நிறைவான இருதயத்துடன் தனது வீடு திரும்புவானாக. பொதுவாய், வழக்கமாய்க் கூடுகைகளுக்குப்பின் சொல்லப்படும், அதாவது சொல்வது ஏற்றதாய்க் காணப்படுகின்றதான வாழ்த்துதல்களையும், வழக்கமாய் இடம்பெறும் அனைத்து விதமான கருத்துத் தெரிவித்தல்களையும், அபிப்பிராயம் தெரிவித்தல்களையும் இந்தத் தருணங்கள்போது தவிர்த்து விடுங்கள் என்று நாம் யோசனைக் கூறுகின்றோம். இப்படியாக ஆண்டவருடனான நமது ஐக்கியத்தினையும், அந்நியோன்யத்தையும்/உறவையும் நீட்டித்துக்கொள்ளலாம். அடுத்தநாள் முழுவதும் அவரைப் பின்தொடர்ந்துப் பார்த்துக்கொண்டிருங்கள். வஞ்சனையற்றவருக்கு எதிராக ஜனங்களுடைய கூச்சலைக் கவனியுங்கள். ஜனங்கள் எருசலேமின் குருமார் வகுப்பினரால் தூண்டப்படுவதைக் கவனியுங்கள். ஏரோதுக்கு முன்னிலையிலும், அவனது போர்ச்சேவகர்களின் முன்னிலையிலும் அவர் நிற்பதைப் பாருங்கள். அவர் கேலியாய் இராஜ வஸ்திரம் தரிப்பிக்கப்படுவதையும், முள்ளினாலான கிரீடம் தரிப்பிக்கப்படுவதையும், குட்டப்படுவதையும், உமிழப்படுவதையும் பாருங்கள்.

அவர் குற்றவாளியெனச் சிலுவையில் அறையப்படுவதையும், அவர் செய்திட்டதான மிகவும் கிருபையான கிரியைகளினாலேயே, அவர் பழித்துரைக்கப்படுவதையும், அதாவது "மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" என்று கூறிப் பழித்துரைக்கப்படுவதையும் பாருங்கள். அவரால் தம்மை இரட்சித்துக்கொண்டிருக்க முடியும் என்றும், அவர் வேண்டிக்கொண்டிருந்திருப்பாரானால், தம்மை விடுவிப்பதற்கும், தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கும், "பன்னிரண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதரை" பெற்றுக்கொண்டிருக்க முடியும் என்றும், தம்முடைய சத்துருக்களுக்காக, தம்மை பழித் தூற்றுபவர்களாகக் காணப்படுபவர்களுக்காக மரிப்பதற்குப்பதிலாக, அவர்களை அவரால் அழித்துப்போட்டிருக்க முடியும் என்றும், நமக்கான ஈடுபலி கிரயமென அவர் தம்மை மனமுவந்து கொடுத்தக் காரியத்திலேயே உயிர்த்தெழுதல் மற்றும் நித்திய ஜீவனுக்கான நமது நம்பிக்கை சார்ந்துள்ளது என்றும் நினைவுகூருவோமாக. நமக்காகவும், அனைவருக்காகவுமான அவரது அன்பை எண்ணிப்பார்க்கையில், அது சிலுவையின் நல்ல போர்ச் சேவகர்களென அதிகமதிகமாய்ச் சகித்துக்கொள்வதற்கு, அவரது பின்னடியார்களாகிய நம்மை நிச்சயமாய்ப் பலப்படுத்துகின்றதாய் இருக்கும். உண்மையாய்ச் சகிக்கப்படும் பட்சத்தில், மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகின்றதும், நமக்கான சோதனையாக மற்றும் சிட்சையாகக் காணப்படுவதற்கு இப்பொழுது அனுமதிக்கப்பட்டிருக்கின்றதுமான இலேசான உபத்திரவங்களின் கீழ், நாம் இளைப்புள்ளவர்களாய் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே, எப்பொழுதும் நினைத்துகொள்வோமாக.

## புரூக்லினில் நினைவுகூருதல் ஆசரிப்பு

வழக்கம்போல புரூக்லினிலுள்ள சபையார், "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" என்கிறதை ஆசரிப்பார்கள். எப்படி ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் சரி, எந்தச் சபைப் பிரிவில் அவர்கள் காணப்பட்டாலும் சரி அல்லது அனைத்திலிருந்து சுதந்திரமாய்க் காணப்பட்டாலும் சரி, இயேசுவின் மாபெரும் - பாவநிவாரண பலியில் விசுவாசமுள்ள பக்தியுள்ள விசுவாசிகள் அனைவரும் நம்மோடுகூடக் கூடிடுவதற்கும், இந்த நினைவுகூருதலில் பங்கெடுப்பதற்கும் அன்போடு அழைக்கப்படுகின்றனர். கர்த்தருடைய பந்தியானது, அவருடையவர்களாய்க் காணப்படும் அனைவருக்குமானதாகும்.

வியாதிப்பட்டிருக்கின்ற அல்லது முடமான நிலையிலுள்ள சகோதர, சகோதரிகள் புரூக்லின் டேபர்நேக்கலுக்கு (Brooklyn Tabernacle) அஞ்சல் அட்டை மூலம் விண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொண்டு, அடையாளச் சின்னங்களை அவர்களது வீடுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

*****

## கர்த்தரின்பட்டயம், கிதியோனின் பட்டயம்

பட்டயம் எத்தனை வந்தது என்றே பட்டென்றெண்ணியே பதிலுரைத்திடுவாய்.
"ஆயிரம்ஆயிரம்ஆயிரமே, பட்டயம்தயாராயுள்ளனவே."ஆ!இது மிகவும் அதிகமானதே,
தளர்ந்தகரங்கள் தொய்ந்தஇதயம்,பற்றிளரியாமனமும் உள்ளவர் படைதனில்வேண்டாம்,
கூடாரம்தன்னை தூக்கிச்சென்றே பிழைத்துப்போகட்டும்விட்டுவிடு.இப்போதுள்ள
பட்டயம்தன்னை இலக்கம்பார்த்தே கூறிவிடு."நூறு,நூறு,நூறத்தனையாகவேபடைவீரர்
உள்ளார், படைதனிலே."அவைகூட எந்தன்வெற்றிக்கே, மிகவும் அதிகம் தானன்றோ,
நான்ஆயத்தம் செய்யும் வெற்றியைக்காண, ஆற்றங்கரையின் அருகினிலே,
அழைத்துச் செல்வாய்அனைவரையே,தாகம் தீரக்குடிக்கவைப்பாய்,அதிலும் மீந்தோர்
கணக்கெடுப்பாய்.சொற்பமாகவேஆண்டவரே, படைவீரர்உள்ளார் இப்பொழுதே,
எதிரியின்சேனையோ நமை பார்த்தே, அச்சுறுத்துதே, ஆண்டவரே.
நமது வீரர் யாவருமே, அச்சத்தில் உள்ளார் என் ஆண்டவரே.
இவர்களைக் கொண்டே என் செய்வீர்?எண்ணிக்கை மிகவும் குறைவன்றோ?நமக்கு
இரண்டு பட்டயம்போதும், அதனைக்கொண்டே அதிசயம் செய்வோம்,
"எனது குரலொலிகேட்டிடும்போதினில், எக்காளம்தன்னை ஊதிடல் வேண்டும்,
தீபங்களையே ஏற்றிடல்வேண்டும்,மாபெரும் மீதியானியசேனைகள்யாவுமே,
மாயமாய் பார்வையில் மறைந்தோடும் மீதியில்லாமலே

# R 1374

# திராட்சை ஆலையில் தனித்தே இருந்தே

## In the Wine-press alone

துக்கம் நிறைந்த நம் அந்திப்பொழுதின் நேரங்களிலே,
துன்பமும் கண்ணீரும் சோர்வுகளும் நிறைந்திட்ட
நமது வேளைதனிலே,
பூக்களின் இருதயத்தில் உறைபனியாகவே
பாதிப்புக்குள்ளாக்குமே பூத்துக்குலுங்கும் காலம்தனிலே
வேதனைமிகவே தேம்பியழுதே
முனகலின் சத்தம் மிக வருத்திடுதே,
கடுந்துயர் நமையே கசக்கிப் பிழியுதே
அந்தவேளையில் அமைதிப்படுத்துமே,
தாயினது மென்குரல்போல் நம் காதில் ஒலிக்குமே,
திராட்சை ஆலைதனையே

தனியே நானே மிதித்துவிட்டேனென்றே

அவரறிவாரே, அதனிறுதி முடிவுஎல்லைவரை,
அழிவுக்குரியநான் தாங்கும் அளவதனை,
குரு குணமாக்க மறுத்ததாலோ,
எதையும் உடனுக்குடன் பகிராததாலோ
எந்த அழிவுக்குரியவனும் உணரான் வேதனையை,
அபயக்குரல் எழும்பும் நேசரை நோக்கியே,
அவரே அவனை அடித்தார், நாம் ஒப்புரவாக,
ஆனால் அவரே அமைதி அளித்தேவிடுவார்,
தம் தயவின் கண்டனம் கொடுத்தே அவனை
அமைதலாக்கியே ஆறுதலளிப்பார்,
திராட்சைஆலையை நான்தான் தனியே மிதித்தேன் என்றே.

# நினைவுகூருதல் இராப்போஜனம்

நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலை, ஆசரிப்பதற்கான மிகப் பொருத்தமான தருணம், அதன் ஆண்டு நிறைவு நாளேயாகும் என்றே நாம் விசுவாசிக்கின்றோம் மற்றும் போதிக்கின்றோம். இதுவே ஆதித் திருச்சபையினுடைய வழக்கமாய் இருந்தது மற்றும் இது இன்னமும் புதிய பாணியில் சில சபைப்பிரிவினரால் புனித வெள்ளியன்று ஆசரிக்கப்பட்டு வருகின்றது; எனினும் வாரத்தினுடைய அதே நாளில் ஆசரிப்பைக் கொண்டிருக்கத்தக்கதாக, தேதியினுடைய துல்லியமானது பொருட்படுத்தப்படுவதில்லை. ஆதித் திருச்சபையினரைப்போன்று, நினைவுகூருதலை அதன் ஆண்டு நிறைவு நாளில்தானே, அதாவது ஆதித் திருச்சபையினரும், யூதர்களும், சந்திர காலத்தின்படி கணக்கிட்டதுபோல, யூதருடைய பஸ்கா ஆரம்பிப்பதற்கு முந்தின நாளில், ஆசரித்திடுவதற்கே நாமும் விரும்புகின்றோம்.

இன்னுமாக இந்த நினைவுகூருதலை ஆசரிப்பதற்கான ஒரே ஏற்ற விதம், இதை நமது கர்த்தர் அறிமுகப்படுத்தின விதமும், ஆதித் திருச்சபையினர் ஆசரித்த விதமுமாகும் என்றும், இன்று சிலரால் புனித வெள்ளி என்று ஆசரிக்கும் விதத்திலல்ல என்றும் நாம் விசுவாசிக்கின்றோம் மற்றும் போதிக்கின்றோம்.

அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இரவில் — மாலை 6 மணிக்குப் பிற்பாடு; அதாவது எபிரெய மாதமாகிய நீசானின் 13-ஆம் தேதி என்று நம்மால் அழைக்கப்படுகின்றதும், ஆனால் நீசான் மாதத்தினுடைய 14-ஆம் தேதியின் ஆரம்பம் என்று (யூதர்களின் 24 மணி நேரமானது மாலையில் ஆரம்பிப்பதன் காரணமாக) யூதர்களால் அழைக்கப்பட்ட தேதியில்; மற்றும் யூத காலக்கணக்கிடுதலின்படி அவர் சிலுவையில் அறையப்பட்ட அதே நாளில் (அவர்களது பஸ்கா வாரம் ஆரம்பமாகுவதற்கு முந்தின நாளில்) — நமது கர்த்தர், தம்முடைய சீஷர்களோடு பஸ்கா இராப்போஜனத்தை ஆசரித்தார். (பஸ்கா பண்டிகை வாரத்திற்கு முன்பு எப்போதும் இடம்பெறும் ஆட்டுக்குட்டியுடனான இராப்போஜனமானது, யூதர்களால் பஸ்கா பண்டிகை என்று அழைக்கப்படவுமில்லை மற்றும் இப்பொழுதும் இப்படியாக அழைக்கப்படுகிறதுமில்லை). (நமது கர்த்தர் சிலுவையில் மரிப்பதுவரையிலும் ஒவ்வொரு யூதன்மேலும் ஆதிக்கம் கொண்டிருந்ததான) நியாயப்பிரமாணத்தின்படி ஆசரித்தப் பிற்பாடு, இயேசு தம்முடைய சொந்த மரணத்திற்கான நினைவுகூருதலை நிறுவினார் மற்றும் தம்முடைய மாம்சம் மற்றும் இரத்தத்திற்கு, அப்பத்தையும், "திராட்சபழரசத்தையும்" (fruit of the vine) அடையாளங்களாய்ப் பயன்படுத்தினார்.

தம்முடைய பின்னடியார்கள் பாவங்களுக்கான தம்முடைய பலியினை நினைவுகூருவதற்கு அவர்களுக்குக் கற்பிக்கும் வண்ணமாகக் கூறினதாவது,

## என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்

அப்பம் மற்றும் திராட்சப்பழச்சாறுபோன்று, 'வேளையும்', இந்த நிறுவுதலில் ஒரு பாகமாகக் காணப்படுவதாக எங்களுக்குத் தோன்றுகின்றது. அதேசமயத்தில் இந்த விஷயத்தில் நமது கர்த்தர் நுணுக்கமாய்க் காணப்பட்டார். அவர் "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்று கூறியிருந்தபோதிலும், நியாயப்பிரமாணத்தின்படி இது எகிப்தில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதல் காரியத்துக்கு முன்பாக நிகழும் நிழலான ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலுக்குரிய ஆண்டு நிறைவு நாள் வருவதுவரையிலும் புசிக்கப்பட முடியாது; அந்த ஆண்டு நிறைவு நாளே "உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரும், முதற்பேறானவர்களின் சபையை முதலாவது தப்புவிக்கிறவர் (அ) இரட்சிக்கிறவரான உண்மையான தேவ ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலுக்கான ஆண்டு நிறைவு நாளாய் இருக்கப்போகின்றது. ஆகையால் நமது கர்த்தர் காத்திருந்து, "வேளை வந்தபோது (நியாயப்பிரமாணத்தின்படி முடிந்தமட்டும் நேரமே) அவர் பந்தியிருந்தார்" (லூக்கா 22:14-20).

"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26) என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளானது, எந்த ஒரு வேளையிலும், எந்த ஒரு நாளிலும், எந்த ஒரு மாதத்திலும் இதை ஆசரிப்பதற்கான அனுமதியைக் கொடுப்பதாக,

அநேகரால் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 11:26-குறிப்பாய் ரீபிரிண்ட்ஸ் 1289-இல் விவரிக்கப்பட்டுள்ளது); ஆனால் இவ்வசனத்தை ஆராய்ந்துப் பார்ப்பவர்களினால், இப்படியாகப் புரிந்துகொள்ளப்படாது; ஏனெனில் "இதைப் புசித்து, பானம்பண்ணும்" என்ற வார்த்தைகளுக்கு விசேஷித்த முக்கியத்துவம் உள்ளது. வேறொரு வேளையில் செய்வது என்பது, அது "இதைச்" செய்வதாக இருக்காது; அதாவது ஐக்கிய நாடுகளின் சுதந்திர தினமானது, ஜூலை 4-ஆம் தேதி கொண்டாடப்பட வேண்டும் என்று கட்டளைக் கொடுக்கப்பட்டிருக்க, வேறொரு நாள் கொண்டாடப்படுமாயின், அது இக்கட்டளையை நிறைவேற்றினதாகவோ (அ) சுதந்திரதின நிகழ்வைக் கொண்டாடினதாகவோ இராததுபோலாகும்.

தேவனுடைய ஜனங்கள் இந்த விஷயத்திலோ அல்லது வேறு ஏதாகிலும் விஷயத்திலோ, நியாயப்பிரமாணத்தின்கீழ்க் காணப்படுகின்றார்கள் என்று நாங்கள் போதிப்பதாக எவரும் எண்ணிக்கொள்ள வேண்டாம். நம்முடைய புதிதான உடன்படிக்கைக்கான ஒரே பிரமாணம், அன்பின் பிரமாணமாகும். நம்முடைய ஆண்டவரை நாம் அன்புகூருகின்றோம் மற்றும் நம்முடைய பாவங்களுக்கான அவரது மாபெரும் பலியினை ஆசரித்திடுவதற்கு நாம் விரும்புகின்றோம் மற்றும் அவர் நமக்குத் தெரிவித்திருக்கிறபடியே, எங்களால் முடிந்தமட்டும் அப்படியே ஆசரித்திடுவதற்கு நாங்கள் விரும்புகின்றோம்.

கர்த்தருடைய ஜனங்களில் சிலர் அவரது மரணத்தை வாரத்தின் முதல் நாள்தோறும் கொண்டாடுகின்றனர்; இப்படியாய்ச் செய்யும் விஷயத்திற்கு அப்போஸ்தலர் 2:46; 20:7-ஆம் வசனங்களில் பதிவுபண்ணப்பட்டுள்ளதான அப்போஸ்தலர்கள் மற்றும் ஆதித் திருச்சபையினருடைய வழக்கமானது ஆதரவளிப்பதாகவும் இவர்கள் எண்ணிக்கொள்கின்றனர். "அப்பம் பிட்குதல்" எனும் வார்த்தைகளை இவர்கள் தவறாய்ப் பொருத்திப்பார்க்கின்றனர் என்றும், அது நினைவுகூருதலின் இராப்போஜனம் அல்ல என்றும், அது இரண்டு காரணங்களுக்காக, ஆதித் திருச்சபையினர் கொண்டிருந்த சாதாரண உணவு வழக்கம்தான் என்றும் நாம் கூறுகின்றோம்; அந்த இரண்டு காரணங்கள் என்னவெனில்: (1) சொற்பமானவர்களாகவும், இங்குமங்குமாகக் காணப்படுபவர்களாகவும் ஆதித் திருச்சபையினர் காணப்பட்டபடியால், அவர்கள் கூடுகைக்காக ஒன்றுகூடுகிற தருணங்களில், மதிய உணவு கொண்டுவந்தவர்களாய் இருந்தனர் மற்றும் (2) இப்படிக் கூடுகைகளுக்காக, அவர்கள் வாரத்தின் முதல்நாளில் கூடினபோது, அவர்கள் ஒன்றுசேர்ந்து உணவு உட்கொண்டனர்; காரணம் வாரத்தின் முதல்நாளில்தான் நமது கர்த்தர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்; காரணம் அதே நாளில்தான், தம்மைப்பற்றின வேதவாக்கியங்கள் நிறைவேறியுள்ளதை அவர்களுக்கு அவர் வெளிப்படுத்தினார் மற்றும் இரவு உணவு உண்கையில், அப்பத்தைப் பிட்பதன் மூலம் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். பிற்பாடு தங்களுக்கு மிக அதிகமான சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும் கொண்டுவந்ததான நாளையும், உணவையும் கொண்டாடிடுவதற்கு அவர்கள் விரும்பினார்கள் (லூக்கா 24:25-32).

வாரத்தினுடைய முதல்நாளில் உயிர்த்தெழுதலின் கொண்டாடுதலையும், இந்த மதிய உணவுகளையும், நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலோடு குழப்பிக்கொள்பவர்கள் கடுமையான தவறைச் செய்யவில்லை என்றாலும், பெரிதான தவற்றையே செய்துள்ளனர். இந்த உணவுகளின்/அப்பம் பிட்கப்பட்ட நிகழ்வுகளில் திராட்சப்பழரசம் குறிப்பிடப்படவில்லை என்பதையும், அப்பம்போன்ற முக்கியத்துவம் உடையதான திராட்சப்பழரசமானது, நினைவுகூருதல் இராப்போஜனமானது குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களில் ஒருபோதும் குறிப்பிடப்படுவதிலிருந்து தவிர்க்கப்படுவதில்லை என்பதையும் இத்தகையவர்கள் கவனித்திட வேண்டும். ஒரே கிரேக்க வார்த்தையை உடையதான "அப்பம் பிட்குதலானது" அப்போஸ்தலர் 27:35-ஆம் வசனத்திலும் இடம்பெறுகின்றதாய் இருக்கின்றது; இங்கு நினைவுகூருதலுக்காகவோ (அ) அடையாளமாகவோ இல்லாமல், பசிக்கான சாதாரணமான உணவே குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

இந்தப் பாடத்தினைச் சுருக்கமாக இங்குக் கொடுத்திருக்கின்றோம். நினைவுகூருதலை யார் ஆசரிக்க வேண்டும், எப்படி ஆசரிக்க வேண்டும் மற்றும் இன்னும் பல சுவாரசியமான கருத்துகளுக்காக, நமது அன்றாட வாசகர்களுக்கு நாம் ரீபிரிண்ட்ஸ் 1289-யை பரிந்துரைக்கின்றோம்.

தங்களுக்கான ஈடுபலியெனக் கிறிஸ்துவின் மரணத்தினுடைய முக்கியத்துவத்தினை அடையாளம் கண்டுகொண்டுள்ள அனைவரும், கர்த்தரிலுள்ள நம்முடைய தற்போதைய சந்தோஷங்களுக்கு ஆதாரமாகவும், இந்த நினைவுகூருதலின் நிறைவேறுதலில் நாம் பிரவேசிக்க இருக்கின்றவைகளுக்கு ஆதாரமாகவும், அதாவது இராஜ்யத்தில், மகிமையில் நாம் பங்கெடுக்கப்போகும் நம்முடைய கர்த்தருடைய சந்தோஷங்களுக்கு ஆதாரமாகவும் காணப்படுகின்றதான மாபெரும் நிகழ்வினை நினைவுகூரும் வண்ணமாக, போதகர் கட்டளையிட்டதுபோன்று "இதைப் புசித்து, பானம் பண்ணிடுவதற்கு" நாம் வலியுறுத்திக்

கூறுகின்றோம். ஆனால் பாவங்களுக்கான இந்தப் பலியிடமிருந்து இல்லாமல், வேறுபக்கத்திலிருந்து மன்னிப்பு வருமென்று நம்புகின்றவர்களும், தங்கள் சொந்தப் பாவங்களைத் தங்களால் சிலுவையில் அறையமுடியும் என்றும், மற்றும் இப்படியாய்த் தங்களைத் தேவனுக்கு ஏற்புடையவர்களாக்க முடியும் என்றும் நம்புகின்றவர்களும், இந்த நினைவுகூருதலை ஆசரிக்க வேண்டாம்; ஏனெனில் இவர்கள் பாவத்தை எடுத்துப்போடுகிறதும், விசுவாசியைத் தேவனுக்கு முன்பாக ஏற்புடையவனாக்குகிறதுமான ஒரே ஒரு பாவநிவாரண பலியென, கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்கும் இருக்கும் மதிப்பினை உணராதவர்களாய் இருப்பதினால் — இப்படியானவர்கள் போஜனபானம்பண்ணும்போது, தங்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகின்றவர்களாய் இருந்திடுவார்கள்.

*****

R 1415

# "நமது கர்த்தருடைய இடத்திற்கு"

## அப்போஸ்தலர் 1:1-12.

"இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது."—அப்போஸ்தலர் 1:9

**வசனங்கள்** 1, 2. அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தை எழுதினவர் லூக்கா ஆவார்; இதற்கு முன்பு இவர் எழுதின கட்டுரையானது, லூக்கா எழுதின சுவிசேஷம் என்று அழைக்கப்படுகின்றது.

**வசனம்** 3. லூக்கா 24-ஆம் அதிகாரத்தில், நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த நாற்பது நாட்களுடைய சம்பவங்கள், அநேகம் பதிவு செய்யப் பெற்றிருந்தாலும் அனைத்தும் சொல்லப்படவில்லை. அப்போஸ்தலர் 1-ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காரியங்களானது, சுவிசேஷ யுகத்தினுடைய ஆரம்ப வேலையை விவரிக்கிறதாயும் இருந்து, அந்த நாற்பது நாட்களளவும், நமது ஆண்டவரினால் கொடுக்கப்பட்டப் போதனைகள், "தேவனுடைய இராஜ்யத்துக்குரியவைகள்" என்று நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

லூக்கா அவர்கள் விரிவான விவரங்களை நமக்குக் கொடுக்கவில்லை; எனினும் சீஷர்களுக்கு அதிகமான அறிவுரைகள் தேவைப்பட்டிருக்குமென நாம் எண்ணுகின்றோம்; ஏனெனில் மேசியாவின் கீழ் இஸ்ரயேல், பூமியிலேயே பிரதான தேசமாக உயர்த்தப்படும் (இந்தத் தேசத்தை உலகத்திற்குத் தம்முடைய பிரமாணங்களை அறிவிக்கிற கருவியாக பயன்படுத்தி, இவ்விதமாக பூமியின் குடிகள் அனைத்தும், ஆபிரகாமின் சந்தத்திக்குள்ளாக ஆசீர்வதிக்கப்படும்) என்று யூதர்கள் அனைவரும் கொண்டிருந்த பொதுவான நம்பிக்கையை மாத்திரம் சீஷர்கள் கொண்டிராமல், இன்னுமாகக் கர்த்தருடைய மரணத்திற்கு முன்னதாக, கர்த்தர் பண்ணின விசேஷித்த வாக்குத்தத்தங்களையும் மனதில் கொண்டவர்களாய் இருந்தனர்; அதாவது அவர்கள், அவருடைய இராஜ்யத்தில், இஸ்ரயேலின் சிங்காசனங்களில் உட்காருவார்கள் என்று கர்த்தர் கொடுத்திட்ட வாக்குத்தத்தங்களையும் மனதில் கொண்டவர்களாய் இருந்தனர். சீஷர்கள் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவருடன் உடன்சுதந்தரர்களாகக் காணப்படத்தக்கதாக, தங்களுடைய தொழில்களைக் கைவிட்டு, சக மனிதர்களுடைய ஏளனங்களைச் சகிக்கும் அளவுக்கு, இராஜ்யத்தைப் பற்றியதான இந்த வாக்குத்தத்தங்கள், அவர்களுடைய மனதில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியதாய் இருந்தது. ஆண்டவரும் அவர்களுடைய இந்த நம்பிக்கைகளையும், விருப்பங்களையும் உற்சாகமூட்டவே செய்தார். அந்த இராஜ்யத்தில் எவன் பெரியவனாய் இருந்து, அவருடைய வலது, இடது பக்கத்தில் இருப்பான் என்பது தொடர்புடைய அவர்களுடைய வாக்குவாதங்களுக்கு எதிராக மாத்திரமே, அவருடைய கடிந்துக்கொள்ளுதலும் காணப்பட்டது (மத்தேயு 18:1-4; மாற்கு 9:33-37; லூக்கா 22:24-26).

கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டபோது, சீஷர்களுடைய இந்த நம்பிக்கைகளும், எதிர்ப்பார்ப்புகளும் நொறுங்கிபோயின. ஆகவே தங்கள் கர்த்தர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்று அவர்கள் உணர்ந்துக்கொண்ட பிற்பாடு, அவர்களுடைய நினைவுகளும், கேள்விகளும் சரி, அவருடைய போதனைகளும் சரி, தேவனுடைய இராஜ்யத்துக்கடுத்தவைகளாகவே இருந்திருக்கும். இஸ்ரயேல் தேசமானது, அவருடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர் ஆகுவதிலிருந்து, புறக்கணிக்கப்பட்டு விட்டனர் என்று சீஷர்களுக்கு விளக்குவது அவசியமாய் இருந்தது, ஏனெனில் இஸ்ரயேல் தேசத்தார் சுபாவத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாராக இருந்திட்டாலும், அவர்களிடம் ஆபிரகாமுக்கிருந்த விசுவாசம் இல்லை; ஆகையால் அவர்கள் ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தத்தின்படி, கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களாக அங்கீகரிக்கப்பட முடியாது. கொஞ்சமாய் (கிட்டத்தட்ட ஐந்நூறு சகோதர சகோதரிகளாக) இருந்த உண்மையுள்ள சீஷர்களிடம், அவர்கள் இஸ்ரயேல் தேசத்தாரோடு சேர்ந்து புறக்கணிக்கப்படவில்லை என்றும், முன் தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது வரையிலும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான காலம் தாமதிக்க

வேண்டியதாய் இருப்பினும், அவர்கள் இன்னமும் இராஜ்யத்தின் சுதந்தரர்களாகவே காணப்படுகின்றனர் என்றும் தெரிவிப்பது அவசியமாய் இருந்தது. அவர்கள் கனத்திற்கும், இராஜ்யத்தினுடைய வல்லமையின் மகிமைக்கும் உயர்த்தப்படுவது தாமதமாக நடைபெறும் என்றாலும், அவர்கள் வேகமாகவே பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டு, தேவனுடைய குமாரர்களெனவும், வருங்கால கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களெனவுமான ஆவியின் ஆசீர்வாதங்கள் அருளப்படுவார்கள்.

ஆகையால், நாம் 4, 5-**ஆம் வசனங்களை** வாசிக்கிறபடி, அவர்களுக்கு யோவான் ஸ்நானனாலும், தம்மாலும் ஏற்கெனவே கூறப்பட்டவைகளைச் சுட்டிக்காட்டி, அவர்கள் எருசலேமிலேயே தங்கியிருந்து, புத்திரர்களாகவும், சுதந்தரர்களாகவும், தேவனுடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும்படிக்கு எதிர்ப்பார்த்து, காத்திருக்கும்படி, அவர்களுக்கு அறிவுரைக் கூறினார்.

**வசனங்கள் 6-8.** "சில நாளுக்குள்ளாக" அவர்கள் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் கூட, வருங்கால உடன்சுதந்தரர்களாக தெய்வீக அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வார்கள் என்று உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடு, அவர்களுடைய இருதயத்தை அழுத்திக்கொண்டிருந்த கேள்வியைக் கேட்டார்கள்; அதாவது இராஜ்யத்தின் காரியம் என்ன? எங்களுடைய அங்கீகரிக்கப்படுதலோடுகூட, இராஜ்யமும் ஒரே வேளையில் வருமா? இராஜ்யமும் கொஞ்ச நாளுக்குள்ளாக வந்துவிடுமா? என்ற விதத்தில் கேள்வி கேட்டார்கள்.

ஆண்டவருடைய பதில் கடிந்துகொள்ளுதலாகவோ அல்லது அவர்களது எதிர்ப்பார்ப்பிற்கு எதிர்மாறானதாகவோ அல்லது அவர்களது எதிர்ப்பார்ப்பினைத் திருத்தும் வண்ணமாகவோ காணப்படவில்லை. தேவனுடைய இராஜ்யம் முழுமையாய் ஸ்தாபிக்கப்படுவதற்குரிய காலங்களும், வேளைகளும், பிதாவுக்கு அடுத்த காரியம் என்றும், அக்காரியங்களை அவர்கள் அப்போது அறிந்துக்கொள்வது அவர்களுக்கு ஏற்றதாய் இராது என்றும், ஆனால் அவர்கள் மீது பரிசுத்த ஆவி வரும்போது, அதாவது இனி வேலைக்காரர்கள் என்றில்லாமல், அவர்களைக் குமாரர்களென முத்திரிக்கும் புத்திர சுவிகாரத்தின் ஆவியை அவர்கள் பெற்றுக்கெள்ளும்போது, அவர்கள் தேவனுடைய ஆழங்களைப் புரிந்துக்கெள்ளும் பெலனை அடைந்து, (படிப்படியாக) சகல சத்தியத்திற்குள்ளாகவும் நடத்தப்பட்டு, வரப்போகிற காரியங்களைக் குறித்து அறிவிக்கப்பெறுவார்கள் என்று மாத்திரமே கூறினார்; இன்னுமாக அவர்கள் உலகமெங்கும் அவருக்குச் சாட்சிகளாகக் காணப்பட வேண்டும்; அதாவது, அவர் அவர்களுக்குப் போதித்த சத்தியத்திற்குச் சாட்சிகளாகக் காணப்பட வேண்டும் என்றும் கூறினார்; அதாவது இயேசு உலகத்தின் இராஜாவாக இருக்கப் போகின்றார் என்றும், பிதாவாகிய தேவனுடைய அபிஷேகிக்கப்பட்டப் பிரதிநிதியாகக் காணப்படப் போகின்றார் என்றும், அவருடைய இராஜ்யத்தின் கீழ், சகல ஜாதிகளும், இராஜ்யங்களும் பணிவிடை செய்து, அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கும் என்றுமுள்ள சத்தியங்களுக்குச் சாட்சிப் பகருபவர்களாக அவர்கள் காணப்பட வேண்டும். உலகத்தை ஆசீர்வதிப்பதற்கான அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் தொடர்புடைய, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்துமே உண்மை என்று அவர்கள் சாட்சிப் பகர வேண்டும்; இன்னுமாக இம்மாபெரும் காரியங்கள் நிறைவேற்றப்படுவதற்கு, நமது கர்த்தருடைய மரணமே வழிவகையாக இருக்கின்றது என்றும், மனுக்குலத்தின் பாவங்கள் மற்றும் பாவத்திற்கான தண்டனைகள் இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னதாகவும், பாவிகள் ஆசீர்வதிக்கப்பட்டு, தெய்வீகத் தொடர்பிற்கும், தயவிற்கும், சீர்ப்பொருந்தப்படுவதற்கு முன்னதாகவும், மேசியா உலகத்தின் பாவங்களுக்காக மரிப்பது அவசியமானது என்றுமுள்ள சத்தியங்களை அவர்கள் சாட்சிப்பகர வேண்டும். "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோல, பூமியிலும் செய்யப்படுவதாக" என ஆண்டவர் கற்பித்துத் தந்த பிரகாரமாய், தொடர்ந்து ஜெபிப்பதற்கு விசுவாசிகளுக்கு அவர்கள் கூறவேண்டியவர்களாய்க் காணப்பட்டனர். அவருடைய வார்த்தைகளோ (அ) வாக்குத்தத்தங்களோ, எவைகளும் பொய்யானவைகள் அல்ல என்றும், வாக்களிக்கப்பட்டுள்ள காரியங்கள் அனைத்தும் "ஏற்றவேளையில்" நிறைவேற்றப்படும் என்றும் அவர்கள் சாட்சிப்பகர வேண்டும்.

**வசனங்கள் 9-12.** நமது கர்த்தருடைய பரமேறுதலானது, எவரும் பார்க்காமலேயே நடைபெற்றிருக்கலாம்; ஏனெனில் அவர் உயிர்த்தெழுந்தது முதல், அவர் ஓர் ஆவிக்குரிய

ஜீவியாகக் காணப்படுகின்றார்; மற்றும் "ஆவிக்கு மாம்சமும் எலும்பும் கிடையாது." அவர் மாம்சத்தில் கொலையுண்டது உண்மைதான், ஆனால் அவர் ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார். அவர் ஆவியில் பிறந்திட்டார்; மரித்தோரிலிருந்து முதல் பிறந்தவரானார். மேலும் மாம்சத்தில் பிறந்தது மாம்சத்திற்குரியதாகவே காணப்படுவது போலவே, ஆவியில் பிறந்ததும் ஆவிக்குரியதாகவே காணப்படும்; மற்றும் ஆவியில் பிறந்தது, காற்றைப்போல் மனிதனுடைய கண்களுக்குத் தெரியாமலே வரும், போகும் (யோவான் 3:8). ஆனால் ஓர் ஆவிக்குரிய ஜீவியாக உயிர்த்தெழுந்திட்ட நமது கர்த்தர், தம்முடைய உயிர்த்தெழுதலை நிரூபிக்கும்படியாக பல்வேறு சரீரங்களை எடுத்து, பல்வேறு தோற்றங்களில் (சிலசமயம் சிலுவையில் அறையப்பட்டது போன்ற சரீரத் தோற்றத்திலும்) காட்சியளித்துத் தோன்றினார். ஆகவே அவர் தாம் உயிர்த்தெழுந்துள்ளார் என்ற உண்மையைத் தம்முடைய சீஷர்களுக்கு நிரூபிக்கத்தக்கதாக, அவர் பரமேறும் போதும், தம்மை ஒரு மாம்ச சரீரத்தில் அவர்களுக்குக் காண்பித்தார்.

கர்த்தர் பரமேறுவதற்கு முன்னதாக, நாற்பது நாட்களாக சீஷர்களோடு கூடவே காணப்பட்டார்; ஆனாலும் அவர்களுக்கு ஏழுமுறை மாத்திரமே கண்களுக்குப் புலப்பட்டார் என்றும், அதுவும் கொஞ்சம் நேரம்தான் கண்களுக்குப் புலப்பட்டார் என்றும், உலகத்தின் காரியத்தில் அவர் ஏற்கெனவே கூறின பிரகாரம், "இன்னும் கொஞ்சம் காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்பதே நடந்தது என்றுமுள்ளவைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கர்த்தர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு அவர் காட்சியளிக்கத் தோன்றின விதம் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல், "அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார்... பின்பு, அகாலப்பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்" என்று விவரிக்கின்றார் (1 கொரிந்தியர் 15:6, 8). மாம்ச தோற்றத்தில், மரியாளுக்குத் தோட்டக்காரன்போல் தோன்றினவரும் இயேசுதான்; எம்மாவுக்கு இரண்டு சீஷர்கள் போய்க்கொண்டிருக்கையில்கூட அந்நியன்போல் தோன்றி வந்தவரும் இயேசுதான்; கதவுகள் பூட்டப்பட்டிருக்க, சீஷர்கள் நடுவில், ஆணி மற்றும் ஈட்டி ஊடுருவின சரீரத்தை, தம்முடைய உயிர்த்தெழுதலுக்கு நிரூபணமாக எடுத்துக்கொண்டு காட்சியளித்துத் தோன்றினவரும் இயேசுதான்; தாம் இப்பொழுது மிகவும் உயர்த்தப்பட்டுள்ளார் என்பதையும், மாம்சம் மற்றும் எலும்புகளுள்ள சரீரத்திலிருந்து வேறுபட்ட சரீரம் கொண்டுள்ளார் என்பதையும் அவர்களுக்கு காண்பிக்கத்தக்கதாக, அவர்கள் கண்கள் முன்னதாகவே மாம்சத்தையும், எலும்புகளையும் காற்றோடே கலக்கப்பண்ணி, அவர்கள் பார்வையிலிருந்து மறைந்து போனவரும் இயேசுதான். இனி ஒருபோதும் மாம்சமும் எலும்பும் கொண்டிராதவருமான இதே இயேசுதான், உயிர்ப்பிக்கிற ஆவியாக, தர்சு பட்டணத்தானாகிய சவுலுக்குக் காட்சியளித்தார்; ஆனாலும் இத்தருணத்திலோ, அவர் தம்முடைய ஆவிக்குரிய சரீரத்தை, மாம்ச சரீரத்தைக்கொண்டு திரையிடாமல், ஆவிக்குரிய ஜீவியினுடைய மகிமையை, க்ஷண நேரம் காண்பித்தார்; இதனால் சவுல், கீழே விழுந்து, தன்னுடைய பார்வையை இழந்தவனானார் (அப்போஸ்தலர் 26:13, 14; 9:8). இவரே மரித்தோரிலிருந்து, ஓர் ஆவிக்குரிய ஜீவியாக எழுப்பப்பட்ட மகிமையடைந்த இயேசு ஆவார்; இராஜ்யத்திற்கடுத்த காரியங்களை இப்போது சீஷர்களுக்குப் போதிக்கத்தக்கதாக, அந்தத் தம்முடைய ஆவிக்குரிய சரீரத்தினுடைய மகிமைகளை, மாம்ச சரீரத்தின் கீழாக சீஷர்களிடமிருந்து திரையிட்டு மறைத்தார் (1 கொரிந்தியர் 15:40-44). ஆனால் அவர் தேவதூதர்கள் அறிவித்தப் பிரகாரம் மீண்டுமாக வருவார்.

அநேகர் அப்போஸ்தலர் 1:11-ஆம் வசனத்தின் காரியங்களினால் இடறல் அடைகின்றனர்; அதுவும் இரண்டாம் அட்வண்டிஸ்ட் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் நமது அருமையான சகோதரர்களே விசேஷமாய் இடறிப்போய்விடுகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் இவ்வசனம் 'Ye shall see him come in like manner as ye have seen him go" என்று இருப்பதாக எண்ணிக்கொள்கின்றனர். ஆனால் வசனம் இப்படியாக இருப்பதில்லை. அன்று அவரைப் பார்த்திட்ட சீஷர்கள் எப்போதோ இறந்து போய்விட்டனர், அன்று இருந்த மற்றவர்களும் இறந்து போய்விட்டனர், ஆகையால் அவர் திரும்பி வரும்போது, இவர்களால் அவரைப்பார்க்க முடியாது. தேவதூதர்கள் அவர் வருவதை **எவர்கள்** பார்க்கப் போகின்றார்கள் என்று சொல்லவில்லை; மாறாக அவர் **எந்த விதத்தில்** போனதை அவர்கள் கண்டார்களோ, அந்த விதத்திலேயே அவர் திரும்ப வருவார் என்றுதான் தேவதூதர்கள் சொன்னார்கள்.

அவர் போன விதம் என்ன? என்று இப்போது பார்க்கலாம். அவர் பரமேறும் விதத்தில் குறிப்பிடத்தக்கதாய் என்ன இருக்கின்றது? இது எதுவாக இருப்பினும், இந்தக் குறிப்பிடத்தக்கதான விஷயமே, அவர் திரும்பி வரும்போதும் குறிப்பிடத்தக்கதாய்க் காணப்படும். அவர் உலகத்தால் பார்க்கப்படாத விதத்தில், உலகத்தால் அறியப்படாத விதத்தில், உலகத்தால் நம்பப்படாத வண்ணம், அமைதலான விதத்தில் பரமேறிச் சென்றுவிட்டார் என்பதை நாம் கவனிக்கின்றோம். எனினும் அவர் பரமேறின காரியம், சகோதரர்களால் அறியப்பட்ட காரியமே; மேலும் அவர் பரமேறின காரியமானது சகோதர சகோதரிகளால் பார்க்கப்பட்டது மற்றும் நம்பவும்பட்டது. ஆகையால் அவரது இரண்டாம் வருகையும் திருடன் வருகிற விதமாக இரகசியமாக, எவ்விதமான வெளியரங்கமாக வெளிப்படுத்துதல்கள் இல்லாமல், உலகத்தால் அறியப்படாமல், ஆனால் இருளில் இல்லாதவர்களாகவும், வெளிச்சத்தின் பிள்ளைகளென வெளிச்சத்தில் நடக்கிறவர்களாகவும் இருக்கும் சகோதர சகோதரிகளினால் மாத்திரமே அறியப்பட்டும் இருக்கும் (1 தெசலோனிக்கேயர் 5:1-5).

**ஆமென்!**

---

# வாரி இறைப்பவனே விருத்தியடைவான்.
## He That Scattereth

வாழ்க்கைக்கடலில் பயணம் செய்யும்போதினிலே வசதிகள்குறைவுஏற்படினும்,
எழும்பி மற்றவருடனே பகிர்ந்திடல் வேண்டும்,
பஞ்சம் வறட்சி ஏற்பட்ட காலம்முழுதும், அது உனக்கும் உன்சோதரனுக்கும்போதுமானதாகும்,
பரலோக அன்பு உன்வீட்டின் களஞ்சியம் நிரப்பும்,
நீகொண்ட கையளவோ இன்னும் பெருக்கெடுக்கும்,
தேவைக்குப்போதாத வறட்சிநிலை ஏற்படினும்,
ராஜரீக விருந்தொன்றை உன் இருவருக்கும் ஏற்பாடு செய்,
கொடுப்பதில்தானேஇருதயம் நிறையவுறும், அதன் பொக்கிஷம் யாவும் அதிகம் வளர்ந்திடும்,
உன் களஞ்சியத்தில் சேர்த்துவைத்தவைபூஞ்சணம் பிடித்தே பாழாகிப்போயிடினும்,
வாரி இறைப்பவர்க்கே அது தங்கத்தினால் நிரப்பப்படும் என்பதே வெளிப்பாடு,
உங்கள் நுகமோ பாரமாய் கனமாய் தோன்றிடுதோ? உன் நடக்கை மிகவும் களைப்பாய் உள்ளதோ?
தேவன் உன்னையும் உன் நுகத்தையும் தாங்கிக்கொள்வார்,
மலைகளின்மேலே களைப்பும் சோர்வும் உனை உணர்விழக்கச்செய்யுதோ?
உன்னைச்சுற்றிமூடிவிட்ட உறைபனிநடுவினில் உறக்கம் வரவில்லையோ?
சூழ்ந்துள்ள உறைபனியைத்தட்டிவிட்டேஎழுந்துவிடு,
உன் அருகினில் சூழ்ந்திட்ட பனியினை விலக்க அவரே அனலை மூட்டிடுவாரே,
உன் அருகினில் பலரும் வாழ்க்கைப்போரில் காயம்பட்டே நொந்து துயரப்படினும்,
உன் ஆறுதலின் தைலத்தை அவர்கள் காயம்தன்னில்தாராளமாய் பூசி குணமாக்கத்தயங்காதே,
உன் இருதயம் வெறுமையாய் காணப்படினும்,தேவனைத்தவிர வேறெவராலும் நிரப்பிட முடியாது,
நின்றுபோகா நீர்வீழ்ச்சி தொடர்ந்துவந்து நிரப்பிவிடும்,
தீர்க்கவியலா ஏக்கங்களெல்லாம்இருதயம் வாழ ஆற்றல்கொடுக்குமா?
உன் இருதயம் அதனுள் பிணைக்கப்பட்டேவலுவிழந்துபோனாலும்,
அன்பு செய்தால் மட்டுமே வாழ்ந்திட இயலும்,
பரிமாறப்பட்டால்தான் அன்புகூட வளரும்.
பிறனை அன்பு செய்திட்டாலேஅன்பும்கூட விருத்தியாகும், நித்திய ஜீவன் உனக்குக்கிட்டும்.

· திருமதி. சார்லஸ்.

R.1448/288/154

# PERFECT THROUGH SUFFERING.
# துன்பப்படுதலின் மூலமே பூரணமடையலாம்.

தேவன் நமக்கு எப்போதும் இருளை அனுப்பஅனுமதிப்பதில்லை,

God never would send you the darkness,
But you would not cling to his guiding hand
If the way were always bright;

பாதை எப்போதும் பிரகாசமானதாய் இருக்கும்போது,

உன்னால் ஒளியைத் தாங்கிக்கொள்ள முடியும் என்றவர் கருதுவாரானால்,

If he felt you could bear the light;

நீ அவரது கரத்தை எப்போதும் இறுகப்பற்றிக்கொண்டிருக்கவில்லையே,

நீ கண்டுதான் எப்போதும் நடக்கவேண்டும் என்று நினைக்கின்றாயா?

And you would not care to walk by faith,
Could you always walk by sight.

விசுவாசத்தாலே காணாமலேயே நடந்திடஇயலும் என்பதை உணராயோ?

உன்னுடைய துன்பமிகுந்த இருதயம் தாங்கிக்கொள்ள வேண்டுமென்றே

'Tis true he has many an anguish
For your sorrowful heart to bear,
And many a cruel thorn-crown
For your tired head to wear;

அவர் அதிகம் துன்பங்களை வைத்துள்ளாரே,

உன்னுடைய களைப்படைந்த தலையிலே சூட்டிடவேண்டியே,

அதிகம் கொடூரமான முள்கிரீடம் பல வைத்துள்ளாரே,

வலி அவர்களை பரலோகத்திற்கு வழிநடத்தாதமட்டும்

He knows how few would reach heaven at all
If pain did not guide them there.
So he sends you the blinding darkness,

வெகுசிலர்மாத்திரமேஅரிதாகவே பரலோகத்தினுள்ளே நுழைந்திடுவாரே,

**ஏழுமடங்கு அனல்மூட்டிய சூளையையும் அனுமதிக்கின்றாரே,**

**பரலோகம் சேர்ந்திடவே இது ஒன்றுதான் வழிஎன்பதை உணர்ந்துகொள்வாயே,**
**உண்மை,இதை நம்பு,**

And the furnace of seven-fold heat:
'Tis the only way, believe me,
To keep you close to his feet--

**அவர் பாதத்தண்டையில் உனைக்கொண்டுபரலோகம் சேர்த்திடவே,**

For 'tis always so easy to wander
When our lives are glad and sweet.
Then nestle your hand in your Father's
And sing, if you can, as you go;

**நம் வாழ்க்கை மகிழ்ச்சியுடனும் சந்தோஷத்துடனும் காணப்படும்போதினிலே,**

**சுற்றி வருவது எளிதாகுமே,**

**பின்னர் தந்தையின் கரத்துடன் கரம்கோர்த்துக்கொள்ளலாம்,**

**போகும்போது உன்னால் முடிந்தால் பாடல் பாடலாம்,**

Your song may cheer some one behind you
Whose courage is sinking low;
And, well, if your lips do quiver--
God will love you better so.

**உனக்குப்பின்னால் வந்துகொண்டுள்ள தைரியம் இழந்திட்ட ஒருசிலருக்கு**
**உனது பாடல் ஊக்குவிப்பாய் மாறிவிடுமே,**
**உனது உதடுகள் அம்பறாத்துணிபோலக் குவிந்திடும்போதினிலே,**
**உன்தந்தையோ மகிழ்ந்து இன்னும் உன்மேல் அன்பு அதிகம் செலுத்திடுவாரே.**

---

R 1459

# "ஊதாரி மகனுடைய திரும்பி வருதல்"

## லூக்கா 15:11-32

அநேகர் இவ்வுமையில் வரும் ஊதாரியான மகன் புறஜாதிகளுக்கு அடையாளமாக இருக்கின்றான் என்று கருதி, இந்த உவமையை யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் பொருத்துகின்றனர். ஆனால் இப்படியான அர்த்தமானது நம்மைப் பொறுத்தமட்டில் உண்மைகளுக்கும், வேதவாக்கியங்களுக்கும் பொருந்தாததாகக் காணப்படுகின்றது; ஏனெனில் இந்த உவமை பேசப்பட்ட காலத்திலும், பெந்தெகொஸ்தே நாளுக்கு மூன்றரை ஆண்டுகள் ஆகுவது வரையிலும், புறஜாதிகள் தேவனுடைய புத்திரர்களாக அங்கீகரிப்படாமல், அந்நியர்களாகவும், அஞ்ஞானிகளாகவும், "நம்பிக்கையில்லாதவர்களாகவும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களாகவும்" காணப்பட்டார்கள் (எபேசியர் 2:11, 12). விழுகை முதற்கொண்டே, ஆதாமின் பிள்ளைகளிலேயே ஒரு வம்சா வழி மாத்திரமே தெய்வீகக் கிருபை பெற்றவர்களாக இருந்தார்கள்; அந்த வம்சா வழியிலேயே நோவாவும், ஆபிரகாமும், இஸ்ரயேலும், கிறிஸ்துவும் வந்தார்கள்; அது சேத்தின் வழியாக வந்த வம்சா வழியாக இருந்தது (ஆமோஸ் 3:2). இந்த வம்சா வழியில் வந்த அனைவரும் (கிறிஸ்து தவிர) பாவங்களுக்கான நிழலான பலியின் மூலமாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தனர்; கிறிஸ்துவானவர், ஆதாமை அல்லாமல் வேறொரு தந்தையை உடையவராய் இருந்தார்; மேலும் ஆதாமுக்காகவும், அவருக்குள் ஜீவனை இழந்த அனைவருக்காகவும், கிறிஸ்து நிஜமான பாவநிவாரண பலியானார்.

ஆகையால் இவ்வுமையில் வரும் ஊதாரி மகன் புறஜாதிகளுக்கு அடையாளமாய் இருக்க முடியாது, ஏனெனில் புறஜாதிகள் ஒருபோதும் குமாரர்களாக இருந்ததில்லை; மேலும் இவர்கள் ஒருபோதும் பிதாவினுடைய வீட்டில் காணப்படாமல் இருக்க, இவர்கள் பிதாவினுடைய வீட்டை விட்டுப்போனார்கள் என்று சொல்ல முடியாது. ஊதாரி மகன் எந்த வகுப்பாருக்கு அடையாளமாய் இருக்கின்றார் என்று நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்த இரண்டு குமாரர்களில் மூத்தவன் "ஜெயங்கொள்கிறவர்களுக்கு" அடையாளமாக இருக்கின்றான் என்றும், இளையவன் "திரள்கூட்டத்தாருக்கு" அடையாளமாக இருக்கின்றான் என்றும் சிலரால் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது; இன்னுமாக தங்களுடைய உடன்படிக்கையை நிறைவேற்ற தவறுகின்றவர்களாகவும், உலகத்தின் இன்பங்களை/அனுகூலங்களை அனுபவிப்பதன் மூலம் ஆவிக்குரிய சிலாக்கியங்களை வீணடிக்கின்ற வேசிகளாகவும், ஆயக்காரர்களாகவும் இருந்து, உடன்படிக்கைக்கு ஏற்ப வழித்தவறி, (ஆண்டவருடைய ஊழியத்தில், தினந்தோறும் மரித்துக் கொண்டிருப்பவர்களாகிய உடன்படிக்கையை உண்மையாய்க் கைக்கொள்ளுகிறவர்கள் மீது வரும்) எதிர்ப்புகள் இல்லாமல் இருப்பவர்களுக்கு ஊதாரி மகன் அடையாளமாய் இருக்கின்றான் என்றும் சிலரால் கருத்து முன்வைக்கப்படுகின்றது. ஆனால் இந்த ஒரு கருத்தானது, ஊதாரி மகன் உலகத்திலிருந்து வரும் அவமானம், பழி மற்றும் எதிர்ப்புகள் அற்றவன் என்றும், எப்பாடும் அனுபவியாத மூத்த மகன், நீதியின் நிமித்தமாய் கிறிஸ்துவுடன் பாடு அனுபவிக்கிறவனுக்கு அடையாளமாய் இருக்கின்றான் என்றும், தலைக்கீழாகக் காட்டப்படுகின்றது. உவமையில் மூத்தமகனே, நன்மையான காரியங்களையும், திரளான உணவுகளையும், உடைகளையும், அனைத்துச் சௌகரியங்களையும் உடையவனாய் இருக்கின்றான்; மற்றும் ஊதாரி மகனே பசியுடையவனாகவும், கிழிந்த வஸ்திரம் உடுத்தியிருந்தவனாகவும், கால்களில் செருப்பு இல்லாதவனாகவும், கஷ்டப்படுகிறவனாகவும், பன்றிகளுடன் வெளியே தள்ளப்பட்டுக் காணப்பட்டவனாகவும் இருக்கின்றான்.

இந்த உவமையினுடைய அனைத்து அம்சங்களுக்கும் பொருந்தும் நியாயமான விளக்கம் பின்வருமாறு:

உவமையில் மூத்த குமாரன் பரிசேயர்களுக்கும், மற்றும் இளைய குமாரன் பாவிகளுக்கும், ஆயக்காரர்களுக்கும் அடையாளமாய் இருக்கின்றனர். தேவனுடைய பிரமாணங்களையும், தங்களுடைய உடன்படிக்கையையும் பொருட்படுத்தாமல், பாவ ஜீவியத்தை ஜீவிக்கும், யூதர்களுடைய கீழ்மட்ட வகுப்பினரை நமது கர்த்தர் ஏற்றுக்கொள்ள விரும்பின காரியமானது, பரிசேயர்களின் கோபத்தைத் தூண்டினதாக இச்சம்பவம் தெரிவிக்கின்றது. பரிசேயர்களோ, தேவனுடைய நியாப்பிரமாணங்களைக் கண்டிப்புடன் கைக்கொள்கின்றவர்களாய் இருந்தார்கள்; மேலும் இது பாராட்டத்தக்கதான ஒன்றேயாகும்; எனினும் இவர்கள் தங்களுடைய பயபக்தியின் விஷயத்தில்

பெருமையாய் இருந்ததும், தங்களுடைய நல்ல பண்புகளினிமித்தம் பெருமையடித்துக் கொண்டிருந்ததும், குற்றம் சாட்டப்படத்தக்கதாய் இருந்தது; இன்னுமாக இவர்கள் பயபக்தியற்ற வகுப்பாரை மதிக்கவோ, அவர்களோடு கூடப் பேசவோ, அவர்களோடு கூடப் புசிக்கவோ செய்யாமல், அவர்களை இழிவுபடுத்தியதும், அவர்களை வெறுப்புடன் பார்த்ததும், குற்றம் சாட்டப்படுவதற்கு ஏதுவாய் இருந்தது; இன்னுமாக பரிசேயர்கள் தங்களால் இயன்றமட்டும் சிறப்பாகத் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி வந்தாலும், தங்களிடத்தில் பூரணமான கீழ்ப்படிதல் குறைவுபட்டிருக்கின்றது என்ற உண்மையைத் தங்களுடைய பெருமையினால் உணர்ந்துக்கொள்ள தவறிப்போனார்கள்.

நமது கர்த்தர் யூதனாக, நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் பிறந்ததினால், நியாயப்பிரமாண உடன்படிக்கையை முடிவிற்குக் கொண்டு வந்த அவரது மரணம் வரையிலும், அந்த நியாயப்பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டவராக, அனைத்து அம்சங்களையும் நிறைவேற்றி வந்தபடியால், அவர் நியாயப்பிரமாணத்தைக் கடுமையாய்க் கைக்கொண்ட காரியமானது, அவர்மேல் பரிசேயர்களை விருப்பம் கொள்ளப் பண்ணியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை; அதினாலேயே, அவர் சில பரிசேயர்களால் விருந்தாளியாகவும் அழைக்கப்பட்டார் என்று நாம் பார்க்கின்றோம். (லூக்கா 7:36; 5:17; யோவான் 3:1, 2 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்). ஆனால் அவர் பாவிகளையும் ஏற்றுக்கொண்டு, அவர்களோடும் அவர் புசிப்பதைக் கண்டபோது, அவருடைய நீதி, தங்களுடைய நீதியிலிருந்து வித்தியாசமாய் இருப்பதைப் பரிசேயர்கள் உணர ஆரம்பித்தார்கள்; மேலும் இருள், ஒளியை எதிர்க்கின்றபடியால், அவரைப் பகைத்தார்கள். இன்னுமாக அவருடைய போதனைகள், தங்களுக்கு எதிராக தங்களைக் குறித்துத் திரையிட்டு வெளிக்காட்டுபவைகள் என்றும், தங்களால் அறிக்கைப் பண்ணப்பட்டதும், ஆயினும் பூரணமற்றதாய்க் காணப்படுகிறதுமான பரிசுத்தத்தைக் குறித்துக் கடுமையாய்க் கடிந்துக்கொள்ளுகிறதுமாக இருக்கின்றது என்றும் பரிசேயர்கள் உணர ஆரம்பித்தார்கள். ஆகவேதான் இந்த உவமையும், மற்ற சில உவமையும், பரிசேயர்களுக்குக் கடிந்துக்கொள்ளுதலாகப் பேசப்பட்டுள்ளது, காரணம் பாவிகளுடன் இவ்விதமான தொடர்பு வைத்திருந்ததற்கும், பாவிகளுக்காய் அவர் போதித்ததற்கும், பரிசேயர்கள், இயேசுவுக்கு எதிராய் முறுமுறுத்தார்கள். லூக்கா 15:1-3-ஆம் வசனங்களில் பார்க்கவும்.

ஆரம்பத்தில் யூதர்கள் அனைவரும், தேவனுடனான உடன்படிக்கை உறவிற்குள் பிரவேசித்து, இவ்வாறாக நிழலில் அவருடைய குமாரர்கள் ஆனார்கள். புத்திரர் வீட்டார் எனக் கிறிஸ்தவ சபை அழைக்கப்பட்டாலும், இவர்களுக்கு நேர்மாறாக யூதர்கள், பணிவிடை வீட்டார் என்று அழைக்கப்பட்டாலும், இந்த யூதர்கள் ஆவிக்குரிய புத்திரர் வீட்டாருக்கு நிழலாய் இருக்கின்றார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்; இன்னுமாக ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னதாக, அவர் தேவனுடைய மனித குமாரனாக இருந்தார் என்றும், மன்னிப்புப் பெற்று, தேவனுடன் இசைவிற்குள் வரும் அனைவரும் மீண்டுமாக, பூமிக்குரிய அல்லது பரலோகக் குடும்பத்தில் குமாரர்கள் ஆகுகின்றார்கள் என்றும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே இந்த உவமையில், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்ட இஸ்ரயேலர்கள் அனைவரும், தேவனுடைய (மனித) குமாரர்களாக நடத்தப்படுகின்றனர். இந்த உறவானது, சீனாயில், உடன்படிக்கைச் செய்யப்பட்டது முதல் ஆரம்பமாகின்றது.

ஆரம்பத்தில் அனைவரும், கீழ்ப்படிதலுள்ள குமாரர்களுக்கான உறவை நிறைவேற்றுவதன் மூலமாக, வீடாகிய தேவனுடைய கிருபையில் நிலைத்திருக்க நாடினார்கள்; உவமையில் வரும் மூத்த குமாரன், நம்முடைய கர்த்தருடைய நாட்களில் காணப்பட்ட பரிசேயர்களுக்கு அடையாளமாய் இருந்தான். ஆனால் மற்றொரு வகுப்பாரோ, தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, பாவத்தின் பாதையில் திரிந்து, தேவனையும், அவருடைய அன்பையும், பராமரிப்பையும் மறந்துப்போய், சிதறிப்போய்விட்டனர்; இப்படியாக உவமையில் இடம்பெறும் இளையக்குமாரன் நம்முடைய கர்த்தருடைய நாட்களில் காணப்பட்ட பாவிகளுக்கும், ஆயக்காரர்களுக்கும் அடையாளமாக இருக்கின்றான்.

பாவம் எப்பொழுதும், ஏதோ விதத்தில் துன்பத்தைக் கொண்டுவரும்; அது பல்வேறு விதங்களில் துன்பங்களைக் கொண்டு வருகின்றதாகவும் இருக்கும்; இளைய ஊதாரி மகன், தன்னுடைய தவறை உணர ஆரம்பிப்பது பற்றின கதையை, ஆயக்காரர்களும், பாவிகளும் கேட்டபோது, அவர்கள் தங்களுடைய கவலைக்கிடமான நிலைமை உவமையில் சித்தரிக்கப்படுவதை உணர்ந்துக் கொள்வதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது. எவ்வாறு ஊதாரி மகன் தானாக திரும்பி வந்தான் என்றும், எப்படித் தகப்பன் அவனைத் தொலைத் தூரத்திலே வரக்கண்டார் என்றும், எப்படித் தகப்பன் ஓடிச்சென்று, மகனை வரவேற்றார் என்றும் ஆண்டவர் கூறி முடிப்பதற்கு

முன்னதாக, அநேகருடைய கண்கள் கண்ணீரினால் நிரம்பி இருக்கும் என்பதிலும், அநேகருடைய இருதயங்கள் பிசாசுக்கு ஊழியம் செய்வதிலிருந்து, தேவனுடைய அன்பிற்கும், கிருபைக்கும் இளையகுமாரன் போலவே திரும்பிடுவதற்கான ஆசையினாலும், ஏக்கத்தினாலும், உணர்வுகளினாலும் நிரம்பி இருந்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

தேவனுடைய அன்பைக் குறித்தும், பாவிகளை மன்னிப்பதற்கும், மீண்டுமாக வீட்டிற்குள்ளாக வரவேற்பதற்கும், தேவன் விருப்பமுள்ளவராக இருக்கின்றார் என்பது குறித்தும், கர்த்தர் இந்தப் பாவப்பட்ட ஊதாரி மகன்களுக்குச் சொல்வதை, எதிர்த்தவர்களாக, இந்தப் பரிசேயர்கள் நிற்கும் உண்மையானது, அருமையாய் உவமையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. உவமையில் வரும் மூத்த குமாரன் "கோபம் அடைந்தவனாக உள்ளே போக மனதில்லாதிருந்தான்" என்று பார்க்கின்றோம். சுயநீதியுடைய பரிசேயர்கள், கோபம் அடைந்தவர்களாகவும், அப்போது வர சமீபித்திருந்ததும், தெய்வீக வாக்குத்தத்தங்களுக்கு ஏற்ப தங்களுடைய ஜனங்களுக்கு முதலாவதாக அளிக்கப்பட்டதுமான இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க மறுத்தவர்களாகவும் இருந்தார்கள். வேறொரு தருணத்தில், "மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை;" மற்றும் "இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார் அதற்கு அவர்கள்: மூத்தவன்தான் என்றார்கள். அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கர்த்தர் கூறினார் (மத்தேயு 23:13; 21:31). பரிதாபத்திற்குரிய சுயநீதிகளைக் கொண்ட பரியேசர்கள்! இவர்கள் இன்று வரையிலும் பொறாமைக் கொண்டவர்களாகவும், உள்ளே பிரவேசிக்க மறுக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களிடமிருந்து இராஜ்யத்திற்கான அழைப்பும், வாய்ப்பும் எடுக்கப்பட்டு, இவர்களால் ஆயக்காரர்களையும், பாவிகளையும் காட்டிலும் கீழாய் மதிப்பிடப்படும் புறஜாதிகளுக்குக் கொடுக்கப்படுவது வரையிலும், இவர்கள் ஒரு வகுப்பாராக, நிபந்தனைகளின் அடிப்படையிலான இராஜ்யத்தை ஏற்க மறுத்துவிட்டனர்; "ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத்தேயு 21:43); இவர்களால் "நாய்கள்" என்று மதிப்பிடப்பட்டவர்களாகவும், அஞ்ஞானிகளாகவும், அந்நியர்களாகவும், குமாரர்கள் அல்லாதவர்களாகவும் காணப்பட்ட புறஜாதியார் மத்தியிலிருந்து, மணவாட்டி மற்றும் கிறிஸ்தவினுடைய இராஜ்யத்திற்கான அங்கங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

புறஜாதிகள் மத்தியிலிருந்து, தேவனுடைய குமாரர்களாக ஆகும்படிக்கு, அதாவது கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களாகும்படிக்குத் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நம்மாலும், மீட்பருடைய வாயிலிருந்து புறப்பட்டு வந்த இந்தக் கிருபையான வார்த்தைகளை, அன்று முழுமையாய் உணர்வு பூர்வமாய்ப் புரிந்துக்கொண்ட பாவிகள் மற்றும் ஆயக்காரர்கள் போன்று புரிந்துக்கொள்ள முடியும். அஞ்ஞானிகளாகவும், அந்நியர்களாகவும் காணப்பட்டிருந்த நாம், ஆதாமுக்குள் மரணத்தீர்ப்புக்குள்ளாயிருக்கும் அனைவருடைய பாவங்களுக்கு, பிதா மாபெரும் பலி ஒன்றை ஆயத்தப்படுத்தியுள்ளார் என்று அறிந்துக்கொள்கின்றோம். பிதாவினுடைய குடும்பத்தில் அவர் நம்மை அன்புடன் வரவேற்பதை நாம் கேட்டுள்ளோம் மற்றும் ருசித்துள்ளோம்; பாவத்திலும், மீறுதலிலும் மரித்திருந்த நாம், இப்பொழுது கிறிஸ்து இயேசு மூலமாய்த் தேவனுக்குள் பிழைத்தவர்களாய் இருக்கின்றோம். நம்முடைய அநீதியாகிய, அழுக்கான கந்தைகளுக்குப் பதிலாக நாம், கிறிஸ்துவின் நீதி எனும், "உயர்ந்த வஸ்திரத்தைப்" பெற்றிருக்கின்றோம்; நாம் குமாரர்களும், சுதந்திரர்களுமாய் இருக்கின்றோம் என்பதற்கான ஆவியினுடைய சாட்சியை அடையாளப்படுத்தும் மோதிரத்தைப் பெற்றிருக்கின்றோம்; தற்போதைய தீமையான உலகத்தினுடைய கடுமையான அனுபவங்களுக்கு, நம்மை ஆயத்தப்படுத்தும் பாதரட்சைகளைப் பெற்றிருக்கின்றோம்; எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய ஒப்புரவாகுதலுக்கான முத்திரையாக, தெய்வீகக் குடும்பத்திற்குள்ளாக நாம் தத்தெடுக்கப்பட்டுள்ளதற்கான அடையாளமான முத்தத்தை, நாம் பெற்றிருக்கின்றறோம். மற்ற வேதவாக்கியங்களானது ஈடுபலியின் அவசியத்தைச் சுட்டிக்காட்டுவது போன்று, இவ்வுமையில் எந்த அம்சமும் இந்த ஓர் அவசியத்தைக் குறித்து விளக்குவதேயில்லை, எனினும் இது இந்த உவமைக்கான நமது விளக்கத்திற்கு முரண்பாடாக இல்லாமல், இசைவாகவே உள்ளது; ஏனெனில் ஒட்டுமொத்த இஸ்ரயேலர்களும், நிழலான பலிகள் மூலம், நிழலாக ஒப்புரவாக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர், இந்த நிழலான பலிகள் மூலமாகவே இவர்களுடைய உடன்படிக்கை அறிமுகப்படுத்தப்பட்டது, மற்றும் வருடந்தோறும் புதுப்பிக்கவும்பட்டது. இந்த உவமை ஊதாரியாகவும், பின்வாங்கிப் போனவனாகவும் இருந்த குமாரனுடைய திரும்புதல் பற்றின

உவமையாகவே இருக்கின்றதே ஒழிய, குற்றவாளியெனத் தீர்க்கப்பட்ட அந்நியனும், அஞ்ஞானியானவனுடைய மீட்பு பற்றின உவமையல்ல.

பரிசேயர்களுக்கான இந்த உவமையினுடைய பாடமானது, கொள்கைகளில் அடங்குகின்றதாக இருக்கின்றது; அவை பின்வருமாறு: தேவனுடன் இசைவிற்குள் இருக்கும் அனைவரும், பரிசுத்த ஆவியை உடைய அனைவரும், பாவிகள் தெய்வீகக் கிருபையினிடத்திற்குத் திரும்புதலின் நிமித்தம் மகிழ்ச்சிக் கொள்ளவேண்டும். இந்த ஆவி இல்லாமல், வேறே ஆவி கொண்டவர்களுக்கு ஆபத்தே இருக்கும்; அதாவது பரிசேயர்களை, அவர்களுடைய சுயநலத்தின் நிமித்தமாக, தேவன் அளித்த ஆசீர்வாதத்தில் பங்கடைவதற்கு அபாத்திரமாக்கின ஆபத்தானது, வேறே ஆவியைக் கொண்டவர்களுக்கும் ஏற்படும். குருட்டுத்தன்மையை அகற்றுவதற்கான காலம், சீக்கிரத்தில் வரவிருப்பதற்காக தேவனுக்கு நன்றி "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்" (ஏசாயா 35:5). இப்பொழுது சுயநலத்தினால் ஆளப்படுபவர்கள், புதிய நிலைமைகளின் கீழ் அன்பின் ஆவியை அதிகமாய்க் கற்றுக்கொள்ளவும், செயல்படுத்தவும் செய்வார்கள் என்று நம்பிக்கைக் கொள்வோமாக. சுயநலமான மனிதன் இராஜ்யத்தில் பிரவேசிப்பது எத்தனை கடினம்; சுயநலத்தைக் குறித்து எச்சரிக்கையாய் இருந்து, தாழ்மை மற்றும் அன்பு எனும் மலர்களை நம்முடைய கலியாண வஸ்திரத்தில் சித்திரத் தையலிடுவோமாக.

**ஆமென்!**

# நீர் எனக்குப் பந்தியை ஆயத்தப்படுத்தினீர்
## சங்கீதம் 23:5

கர்த்தர் பந்தி ஒன்றினை ஆயத்தப்படுத்துகின்றார் என்றால், அதனை பற்றின பல காரியங்கள் குறித்து நமக்கு உறுதியே; அதென்னவெனில்: முதலாவதாக, அது சுத்தமானதாக இருக்கும்; இரண்டாவதாக, அது நல்லதாக இருக்கும்; மூன்றாவதாக, அது முறையாயும், திரளாயும் மற்றும் அருமையாயும் இருக்கும். சத்தியமானது இவ்வளவு கவனம்செலுத்தி விசுவாச வீட்டாருக்கு அச்சு, பேனா அல்லது மேடை மூலம் முன்வைக்கப்படும் எங்கும், கர்த்தருடைய ஆவியானது கிரியைசெய்து, காரியத்தினை வழிநடத்தி, மேற்பார்வையிடுகின்றது என்பதில் நமக்கு உறுதியே. தீர்க்கதரிசியான ஏசாயா, "போஜனபீடங்களெல்லாம் வாந்தியினாலும், அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது; சுத்தமான இடமில்லை" என்று கூறினபோது, இப்பொழுது பெயர்க்கிறிஸ்தவ ஜனங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள பிரபலமான இறையியல் பந்தியின் தற்போதைய நிலைமையைச் சித்தரித்து விவரித்துள்ளார் (ஏசாயா 28:8). கடந்த பல நூற்றாண்டுகளாக அவர்கள் மனித பாரம்பரியம் எனும் கவலைக்கிடமான உமியை உண்டுவந்திருக்கின்றனர்; இப்போது எதிர்விளைவானது ஏற்பட்டு, அவர்கள் தீட்டானவைகளை வாந்திப்பண்ணுகின்றனர் மற்றும் அவர்களது பந்திகளானது அசுத்தங்களினால் நிரம்பிக் காணப்படுகின்றது.

பழையதும், மாசுள்ளதுமான பந்திகளின் நிமித்தமான வெறுப்பினால், அவைகளினின்று திரும்பிடுபவர்கள் - புதிய பாரம்பரியங்கள் மற்றும் மனித ஊகங்களுடைய அநேகம் பந்திகளினிடத்திற்கு உடனடியாக வரவேற்கப்படுகின்றனர். இவைகள் அனைத்திலும், சபையினுடைய மாபெரும் எதிராளியானவன் - ஜனங்களைச் சென்றடைவதற்கான மிகவும் ஆற்றல்மிக்க இரண்டு பிரதிநிதியாகிய பத்திரிக்கை மற்றும் பிரசங்க மேடை ஆகியவற்றின் மாபெரும் செயல்விளைவினைப் பயன்படுத்தி, தனது கைத்தேர்ந்த சூழ்ச்சிகள் மற்றும் தந்திரங்கள் அனைத்துடன் கடுமையாகவும், உண்மையாயும் வேலை புரிந்துகொண்டிருக்கின்றான்.

இத்தகைய பத்திரிக்கைகளானது, தெய்வீக வெளிப்படுத்தல் சார்ந்த காரியங்கள் விஷயத்தில், மனித அபிப்பிராயங்களை வெளிப்படுத்திடுவதற்கான வழி/ஊடகம் மாத்திரமே என்றும், ஒவ்வொரு தனி மனிதனும் அவற்றிலிருந்து தான் உண்மை என்று பார்க்கக்கூடியதைப் பிரித்தெடுத்து, மற்றவைகளைப் புறந்தள்ளிட வேண்டும் என்றுமுள்ள - பிரபலமான கருத்தானது மதரீதியான இதழாசிரியர்கள் மத்தியில் பெருகிக்கொண்டு வருகின்றது. ஆனால் துல்லியமாய் இதைத்தான் வாசகர்களாலும் மற்றும் பெரும்பாலும் இத்தகைய பத்திரிக்கைகளினுடைய இதழாசிரியர்களாலும்கூடச் செய்யமுடியவில்லை மற்றும் மிகுந்த குருட்டுத்தன்மைக்கும், அடர்த்தியான இருளுக்கும் ஏதுவாய்ப் பரவலான குழப்பம் மாத்திரமே அதிகரித்துள்ளது மற்றும் இப்படியாக எதிராளியானவனுடைய நோக்கமானது நிறைவேறுகின்றது.

பொதுவாக போதகராகும் ஒவ்வொரு மனுஷனும் அவன் உணருகின்றானோ, இல்லையோ, அவன் தேவனிடத்தில் ஆழமான பொறுப்பைக் கொண்டவனாகுகின்றான். "ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்" (மத்தேயு 5:19).

தம்முடைய வார்த்தைகளில் வழிக்காட்டுதல்களைக் கொடுத்துள்ளதான வீட்டின் மாபெரும் தலையானவருக்குக் கீழ்ப்படிதலுள்ள கைகளினால் மற்றும் முழுக்க ஒப்புக்கொடுக்கப்பட்ட கைகளினால் மற்றும் ஜாக்கிரதையுள்ள கைகளினால் - பரிமாறப்படாத எந்தப் பந்தியும், விசுவாச வீட்டார் வரவேற்கப்படுவதற்குப் பொருத்தமானதல்ல. வீட்டாருக்கு ஊழியம் புரிந்திடுவதற்குத் தேவனால் அருளப்பட்டிருப்பவர்களுக்கும், தாங்கள் எதைத் தெரிவிக்கும்படிக்கு அவர் விரும்புகின்றார் என்று அறியும்படிக்கு (அவரது வார்த்தைகளை ஆராய்பவர்களுமானவர்களுக்கும்) காவலிலே தரித்திருப்பவர்களுமானவர்களுக்கும் (ஆபகூக் 2:1) தேவன் கூறுவதாவது: "நீ தரிசனத்தை (திவ்விய சத்தியத்திலிருந்து நீங்கள் கண்டிருப்பவைகளை) எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகைகளிலே

தீர்க்கமாக வரை" (ஆபகூக் 2:2); அதாவது "கடந்தோடுகிறவன்" - பரிசிற்காக ஓடுகிறவன் - "வாசிக்கும்படி," அதை முறையாக, ஒழுங்காக முன்வைத்தலாகும். அனைத்து மனிதர்களும் வந்து, சத்தியத்தைத் தீர்க்கமாக/தெளிவாக வைத்திடுவதற்கு அழைக்கப்படவில்லை என்பதையும், இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் வகுப்பாரில் சிலர், மீதமானவர்கள் யாவருடைய நன்மைக்காக அதைச் செய்யும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதையும் கவனியுங்கள். வேதவாக்கியங்களில் அனைவராலும் பார்க்கவும், புரிந்துகொள்ளவும் முடிகின்ற நிலையிலுள்ள அநேகம் மேற்பரப்புச் சத்தியங்கள் காணப்படுகின்றன; மேலும் வேண்டுமென்றே மறைக்கப்பட்டும், தெளிவற்ற நிலையில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்படும் அநேகவற்றை உள்ளடக்கின தெய்வீகத் திட்டத்தினை முறைப்படி ஒழுங்குப்படுத்தி, அதன் ஆச்சரியமான விவரங்களை வெளிக்கொண்டுவருவது, நியமிக்கப்பட்டுள்ள காலத்திற்கென்று வைக்கப்பட்டுள்ளது. அந்த நியமிக்கப்பட்ட காலம் வருகையில், திவ்விய சத்தியத்தினுடைய முறைப்படியான இசைவினைக் காணத்தக்கதாக, உண்மையாய்க் கவனிப்பவர்கள் வழிநடத்தப்படுகின்றனர் - அதைக்குறித்து அனுமானம் பண்ணுவதற்கோ அல்லது அதைக்குறித்து ஊகம்பண்ணுவதற்கோ அல்ல, மாறாக தெளிவாய்க் காணத்தக்கதாக வழிநடத்தப்படுகின்றான் மற்றும் இதனால் அவன் மற்றவர்களுக்குத் தெளிவாயும், காரணகாரியத்திற்கு உட்பட்ட நிலையிலும், வேதவாக்கியங்களின் அடிப்படையிலும் விளக்க முடிகிறவனாகுகிறான்; பின்னர் இப்படியாகக் காண்கின்றவன், தனக்குக் கர்த்தரால் தெளிவுப்படுத்தப்பட்டவற்றை மற்றவர்களுக்குத் தெளிவுப்படுத்துவதற்குரிய சிலாக்கியமுடையவனாகுகிறான். இப்படிப்பட்டவன் இது விஷயத்தில் தனக்கிருக்கும் திறமையையும் மற்றும் இன்னுமாக தேவனைப் பற்றின முழுமையான அறிவினால் பரிசுத்தவான்களை ஆசீர்வதிப்பதற்கும் மற்றும் அவர்கள் மிகுந்த உண்மையுடன் காணப்படத்தக்கதாக, அவர்களை ஊக்குவிப்பதற்கும் மற்றும் புத்திசொல்லுவதற்கும் ஏங்குகின்றதான வல்லமையுள்ள அன்பையும் மற்றும் கிடைக்கும் வாய்ப்புகளையும் - சத்தியத்தைத் தெளிவாய் முன்வைப்பதற்குரிய, தனக்கான கர்த்தருடைய அழைப்பாய் இருக்கின்றது என்று கருதிடலாம்.

ஆனாலும் இப்படிப்பட்டவன் - சத்தியத்தினை தெளிவற்றதாக்குவதற்கு இல்லை, மாறாக அதைத் தெளிவாய் முன்வைத்திடுவதே பணியாக இருக்கின்றது என்பதை நினைவில்கொள்ள வேண்டும். ஒரு மனுஷனிடத்தில் தெளிவாய் முன்வைத்திடுவதற்குச் சத்தியம் இல்லாமல், இன்னுமாக சத்தியத்திற்காக தேடிக்கொண்டு மாத்திரம் அவன் இருப்பானானால், மற்ற மனங்களைக் குழப்பிடுவதற்கு ஏதுவான தனது முரண்பாடான மற்றும் திருத்தம் பெறாத கருத்துக்களை அவன் வெளிக்கொணர முயற்சிப்பது என்பது, அவன் மாபெரும் தவறைச் செய்வதாகவே இருக்கும். இத்தகையவன் காரியங்களைத் தெளிவாய்ப் பார்த்து மற்றும் இப்படியாய் மற்றவர்களுக்குப் போதிக்க தகுதியுள்ளவனாகுவது வரையிலும், சீஷனுக்குரிய, கற்றுக்கொள்பவனுக்குரிய சரியான நிலையினைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். மேலும் அவன் உண்மையுள்ள மாணவனாகவும், தேவனுக்கு முன்பாக தன்னை உத்தமனாக நிறுத்தும்படிக்கு முயற்சிக்கிறவனாகவும்/கற்கிறவனாகவும் இருப்பானானால், விரைவில் ஏதோ ஒரு வழியில் மற்றவர்களுக்குச் சத்தியத்தினை அறிவிக்கக்கூடிய சிலாக்கியத்தினை அனுபவிப்பவனாகவும், அப்படிச் செய்வதினால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் இருப்பான்.

திருத்தம் பெறாத, சரியாக விவரிக்க முடியாத கருத்துக்களை அர்ப்பணிக்கப்பட்டவர்களில் எவரும் அச்சடிக்கத் துரிதப்பட்டு, மற்றவர்களுடைய பாதையில் தடுக்கலின் கற்களாகாதிருப்பார்களாக. நீங்கள் பெற்றுக்கொண்டதும் மற்றும் உங்களுக்குத் திருப்திகரமாகக் காணப்படுவதுமான சத்தியத்தினை, பசியோடு இருக்கும் மற்றப் பரிசுத்தவான்களுக்கு முன்வைத்திட நாடுங்கள்; பந்தியைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுங்கள்; வீணான ஊகங்களைத் திரளாய்ப் பரப்பிடுவதன் மூலம், உங்களது குறைவான அறிவிற்கு ஈடுசெய்யாதீர்கள். வேறே நிலைமையிலுள்ள திரளானவைகளைப் பார்க்கிலும், சுத்தமான பந்தியிலிருந்துள்ள சிறு துண்டுகள் சிறந்ததாய் இருக்கும். போகப் போக இந்தச் சிறு துண்டுடன், வேறு துண்டுகள் கொடுக்கப்படும் மற்றும் ஏற்றகாலத்தில் தெய்வீகத் தயாளத்தின் ஐசுவரியம் உணர்ந்துகொள்ளப்படும்.

---

# நினைவுகூருதல் இராப்போஜனம்

நமது கர்த்தருடைய மரணத்தின் ஆண்டுநிறைவு நாளில் நினைவுகூரப்படும் நினைவுகள் எவ்வளவு புனிதமானதாய்க் காணப்படுகின்றது! அது இரட்சிப்பினுடைய முழுத்திட்டத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதான பிதாவின் அன்பினை மனதிற்குக் கொண்டுவருகின்றது; இந்த இரட்சிப்பின் திட்டத்தினுடைய மையமாக, அவர் தம்முடைய குமாரனை நம்முடைய மீட்பராகக் கொடுத்த காரியம் காணப்படுகின்றது. அது தம்மையே அனைவருக்குமான மீட்கும்பொருளாக (அ) சரிநிகர்சமான பலியாக ஒப்புக்கொடுத்தவரைப்பற்றி விசேஷமாய் நம்முடைய நினைவுகளுக்குக் கொண்டு வருகின்றது. "அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராய்ப் பாடுபட்டவருடன்" விசுவாசமானது மிகவும் நெருங்குகின்றது மற்றும் நன்றி நிறைந்த, பொங்குகிற இருதயங்களுடனும், கண்களில் கண்ணீருடனும் நாம், "என் இரட்சகர்! என் மீட்பர்! என் கர்த்தர் மற்றும் ஆண்டவர்! அவர் என்னை அன்புகூர்ந்து, தம்மையே எனக்காகத் தந்தார்" என்று மெல்லிய குரலில் கூறுகின்றவர்களாகுகின்றோம். ஆ! ஆம்!

"சிலுவையின் அடிவாரத்தில் செலவிடும் தருணங்களானது
இனிமையான தருணங்களாகவும்,
ஆசீர்வாதத்தில் ஐசுவரியமுள்ளதாகவும் இருக்கின்றன:
ஜீவனும், சந்தோஷமும், சமாதானமும்
என் சிறந்த மற்றும் உண்மை நண்பனிடமிருந்து வருகின்றதே."

"தேவதூதர் அனைவரிலும் பெரியவராகவும்," எல்லா நாமத்துக்கும் மேலானவராகவும், பிதாவுக்கு அடுத்திருப்பவராகவும் அவர் இருக்க மற்றும் நாம் அவருடன் நட்புறவுகொண்டிருக்க மிகவும் முக்கியமற்றவர்களாகவும், மிகவும் அபூரணராகவும், மிகவும் அபாத்திரராகவும் இருக்க, நாம் அவரை நினைக்க வேண்டும் என்பதிலும், நாம் அவரை நம்முடையவர் என்று அழைப்பதிலும் அக்கறையுடன் காணப்படுகின்றார் என்ற கருத்தானது எத்துணை பாக்கியமானதாகும். இன்னுமாக "நம்மைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை என்பதையும், நாம் அவரது மரணத்தினை நினைவுகூருவதில் அவர் பிரியப்படுகின்றார் என்பதையும், தம்முடைய பிட்கப்பட்ட மாம்சத்தை அடையாளப்படுத்துவதற்கென்று அப்பத்தையும், தமது சிந்தப்பட்ட இரத்தத்தை அடையாளப்படுத்துவதற்கென்று திராட்சரசத்தையும் கொடுத்துள்ளார் என்பதையும், அதாவது அனைவருக்குமாக விலைக்கொடுத்து வாங்கப்பட்டதும், அனைவராலும் பங்கெடுக்கப்படப்போகின்றதுமான மனித உரிமைகளையும், சிலாக்கியங்களையும் ஒன்று அடையாளப்படுத்தும் வண்ணமாகவும், மற்றொன்று ஏற்றுக்கொள்ளுகின்ற அனைவருக்கும் நித்திய ஜீவனை உறுதிப்படுத்தும் வண்ணமாக அவர் கொடுத்த ஜீவனை அடையாளப்படுத்தும் வண்ணமாகவும் அவர் கொடுத்துள்ளார் என்பதையும் நினைத்துப்பார்க்கும்போது பாக்கியமானதாய் இருக்கின்றது!

மனமகிழ்ச்சியுடன் அவரும், யூதர்களும் அந்த நாளையும், நாழிகையையும் எண்ணினதுபோன்று நாமும் எண்ணுகின்றோம்; இறுதியில் "வேளை வந்தபோது" நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தைக் கொண்டாடுவதற்கும், எகிப்தின்மீது வந்த மாபெரும் சங்காரத்தினின்று, இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் விடுவிக்கப்பட்டதை நினைத்துப்பார்ப்பதற்கும், பிற்பாடு இந்த முதற்பேறானவர்களின் வாயிலாக உண்டான தேவனுடைய நிழலான இஸ்ரயேல் அனைத்திற்குமான விடுதலையை நினைத்துப்பார்ப்பதற்கும் என்றும் இயேசு, தம்முடைய சீஷர்களோடு பந்தியிருந்தார்.

நிழலினை ஆசரித்து முடித்தப் பிற்பாடு, ஆண்டவர் புதிய அடையாளச் சின்னங்களைக் கையில் எடுத்து, "(இதுமுதல்) என்னை நினைவுகூரும்படி இதைச் (பஸ்காவை ஆசரிப்பதை) செய்யுங்கள்" என்று கூறுவதைக் கேட்பதும் எத்துணை விலையேறப்பெற்றதாய் இருக்கின்றது! ஆ, ஆம்! சிலுவையில் அறையப்பட்டவரில் நம்மால் இப்பொழுது, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை" காணமுடிகின்றது; "நம்முடைய (ஆட்டுக்குட்டி) பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்;" "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்;" (1 கொரிந்தியர் 11:26) அவரது இராஜ்யம் வரும்போது, நாம் அவரோடுகூட இராஜ்யத்தில் புதிய திராட்சரசத்தை (புதிய ஜீவனையும்,

சந்தோஷத்தையும்) பானம் பண்ணிடுவதற்கு அனுமதிக்கப்படுவோம். (மத்தேயு 26:29; 1 கொரிந்தியர் 5:7, 8; 11:26)

(விசுவாசத்தின் வாயிலாக மீட்கப்பட்டவர்களெனக் கர்த்தரின் பலியின் புண்ணியத்திலும் மற்றும் இதன் விளைவான நன்மைகளிலும், அதாவது நீதிமானாக்கப்படுதலிலும், திரும்பக்கொடுத்தலின் உரிமைகளிலும், சிலாக்கியங்களிலும் பங்கெடுப்பதன் மூலமாக) நமது கர்த்தருடைய பலியினாலான தயவுகளை அனுபவிப்பதற்குரிய சிலாக்கியம் மாத்திரம் நம்முடையதாய் இராமல், இதனை காட்டிலும் மேலானதாகவே உள்ளது; நாம் நமது ஆண்டவரோடுகூடப் பலியிலும், அதன் மகிமையான பலன்களிலும் பங்கடைவதற்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். அவர் நம்மிடம் கூறுவதாவது: "எவன் ஒருவன் என்னுடைய வேலையின்மீதும், அதன் விளைவுகள்மீதும் உடன்பாடுள்ளவனாய் இருக்கின்றானோ, எவன் ஒருவன் என்னுடைய இராஜ்யத்தில் பங்கடைந்து, உலகத்தை ஆசீர்வதிக்கும் அதன் வேலையில் இணைந்துகொள்ள விரும்புகின்றானோ, அவனும் என்னோடுகூடப் பிட்கப்படட்டும் மற்றும் மரணம் வரையிலுமான சுயத்தை வெறுத்தல் எனும் பாத்திரத்தில் என்னோடுகூடப் பானம்பண்ணட்டும்" என்பதாகும். இப்படியானவர்கள் அனைவரிடமும் அவர் கூறுவதாவது: "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்பதாகும். இதே கருத்தை அப்போஸ்தலனும் உறுதிப்படுத்தும் வண்ணமாக, "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகின்றோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (மரணத்தில்) பங்குகொள்ளுதல் அல்லவா? (ஐக்கியமாயிருக்கிறதல்லவா?) அப்பத்தைப் பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா? (ஐக்கியமாயிருக்கிறதல்லவா?) அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் (கிறிஸ்துவினுடைய சரீரத்தில் அங்கத்தினர்களாயினும்) ஒரே உடலாய் இருக்கின்றோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்" என்று கூறுகின்றார். (1 கொரிந்தியர் 10:16, 17)

அருமை கர்த்தரே எங்களுக்காக, அதாவது நாங்கள் நீதிமானாக்கப்படத்தக்கதாகப் பலிசெலுத்தப்பட்ட உம்முடைய தூய்மையான மனுஷீக சுபாவத்தின் புண்ணியத்தினை, நாங்கள் மகிழ்ச்சியுடன் புசிக்கின்றோம் (எங்களுடைய தேவைக்கென்று சொந்தமாக்கிக்கொள்கின்றோம்). ஏற்றக்காலத்தில் உம்மோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாக, உம்மோடுகூடப் பாடுபடுவது என்பதும், நித்தியமான எதிர்க்காலத்தில் நாங்கள் உம்மோடுகூட ஜீவிக்கத்தக்கதாகவும், உம்மைப்போன்று காணப்படத்தக்கதாகவும், உமது மணவாட்டியென உமது அன்பிலும், உமது மகிமையிலும் பங்கடையத்தக்கதாகவும், உம்மோடுகூட மரிப்பது என்பதும் பாக்கியமான சிலாக்கியம் என்று நாங்கள் உணர்ந்து, பாடுகளின் பாத்திரத்தில் உம்மோடுகூட நாங்கள் மகிழ்ச்சியுடன் பங்கெடுக்கின்றோம். ஓ! அடையாளத்தை ஆசரிப்பதில் மாத்திரமல்லாமல், உண்மை ஜீவியத்திலும் நாம் உண்மையாய் இருக்க வேண்டும். ஸ்தோத்திரத்திற்குரிய கர்த்தாவே நீர், "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்" என்று கூறும் உம்முடைய வார்த்தைகளை நாங்கள் கேட்கின்றோம். கர்த்தாவே நாங்கள் நாங்களாகவே இப்படிப் பலிசெலுத்திட முடியாது; ஆனால் உம்முடைய கிருபை எங்களுக்குப் போதும்; ஏனெனில் நாங்கள் இப்பொழுதும், எப்பொழுதும் முற்றும் முழுமையாய் உம்முடையவர்களாய் இருக்கின்றோம்.

அவரது பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கும், நமது கர்த்தரோடுகூட, அவரது சரீரமெனப் பிட்கப்படுவதற்குமான தற்கால சிலாக்கியத்தில் நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தோமானால், நாம் சீக்கிரத்தில் அவரோடுகூடப் "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையாகுவோம்;" மற்றும் இவர்களே இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாராய் இருந்து, நமது மாபெரும் பிரதான ஆசாரியன் கீழிருந்து, ஓய்வுநாளுக்கு ஆண்டவராய் இருப்பவருடைய செவிகளுக்கு எட்டின ஜெபங்களையும், பெருமூச்சுகளையும் ஏறெடுத்த பாவத்தின் அடிமைகள் யாவரையும் எகிப்திய சிறைவாசத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் வெளிநடத்துவார்கள்; ஓ! இது எத்துணை அருமையானதொரு சிந்தனையாய் இருக்கின்றது.

இதுபோன்ற சில கருத்துகளே, உலகமெங்கும் காணப்படும் கர்த்தருடைய ஜனங்களை, சிறுசிறு கூட்டத்தாராய் (சிலசமயம் இயேசுவோடு தனிமையிலும்) மார்ச் 26-ஆம் தேதியன்று மாலை, 6 மணிக்குப் பிற்பாடு, தேவனுடைய அண்டசராசரத்தினுடைய வரலாற்றிலேயே மிகக் குறிப்பிடத்தக்க நிகழ்வினை, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கும் வண்ணமாகக் கூடிடுவதற்கு நெருக்கி ஏவுகின்றது. (இந்த நினைவுகூருதலின் ஆண்டுநிறைவு நாளுக்கான துல்லியமான, சரியான தேதியினை முடிந்தமட்டும் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் விரும்புகின்றோம்; நாம் துல்லியமான தேதியைப் பெற்றுக்கொள்ளவில்லையெனில், அது கவலைக்கிடமான காரியமாய் இருக்கும் என்பதாக நாம் புரிந்துகொள்ளவில்லை; நாளை ஆசரியாமல், நிகழ்வையே நாம் நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றோம். எனினும் வேறுபாடற்ற/ஒன்றுபோல் தேதியைப் பெற்றுக்கொள்வதற்கே விரும்புகின்றோம்).

"பிரியமானவர்களே, புசியுங்கள், குடியுங்கள்" என்று மணவாளன், தனது மணவாட்டியினிடத்தில் கூறுகின்றார். (உன்னதப்பாட்டு 5:1) நமது மீட்பருடைய அன்பையும்,

பலியையும் நாம் ஒவ்வொருவரும் எண்ணி, அவரோடுகூட மரிப்பதற்கென நாம் மீண்டுமாக உறுதியளிக்கையில், நாம் பயபக்தியோடும், பக்தியோடும், கருத்தோடும், ஜெபத்தோடும் புசித்து, பானம்பண்ணுவோமாக. அவரைத் தங்கள் மீட்கும் பொருள் என்று, அடையாளங்கண்டுகொண்டுள்ளவர்களும், அவரை நினைவுகூரும்படியாக 'இதைச்' செய்ய விரும்புகின்றவர்களுமானவர்கள் யாரொருவரோடும் கூடிக்கொள்ளுங்கள் (அ) தனிமையில் இதை ஆசரியுங்கள்.

நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படுவதற்கே தவிர மற்றப்படி ஆச்சாரங்களையும், சம்பிரதாயங்களையும் பொதுவாய் மறந்து, உங்கள் இருதயங்கள் நிஜமான நிலையில் காணப்படுவதாக. முன்கூட்டியே ஏதாகிலும் ஒருவகை திராட்சப்பழ ரசத்தை (fruit of the vine) ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். நாம் வேகவைக்கப்பட்டு எடுக்கப்படும் உலர்த் திராட்சரசத்தை (அ) புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றைப் பரிந்துரைக்கின்றோம்; அப்பத்திற்கு ஒன்றில் யூதருடைய புளிப்பில்லாத அப்பத்தை (அ) water crackers எனும் சாதாரணமான ரொட்டியைப் (இதிலும் மாவு, தண்ணீர் மற்றும் உப்பு எனும் ஒரே கலவை இடம்பெறுகின்றது மற்றும் புளிப்பில்லாததாய் இருக்கின்றது) பரிந்துரைக்கின்றோம். புளிப்பு, பாவத்திற்கு (அ) சீர்க்கேட்டிற்கு அடையாளமாய் இருப்பதினால், புளிப்பு/காடிச்சத்து (yeast) சேர்த்துப்பண்ணும் அப்பமானது, "மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான" நமது கர்த்தருக்குப் பொருத்தமான அடையாளமாகக் காணப்படுவதில்லை.

*****

# பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்
## [அவர்களுடைய அழைப்பும், பணியும், அதிகாரமும்]

*"இயேசு அவர்களை நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா?" (யோவான் 6:70)*

**க**ர்த்தராகிய இயேசு, தம்முடைய சரீரமாகிய சபைக்குத் தகுதியான மற்றும் தெய்வீக நியமனத்தினால் ஏற்படுத்தப்பட்ட தலையாக இருக்கின்றபடியினால், சுவிசேஷ யுகம் முடிவு வரையிலும், அதாவது சபையினுடைய தகுதிக்காண் காலம் வரையிலும் (Probation) கர்த்தர் தம்முடைய சபையின் நலனுக்கடுத்த அனைத்து விஷயங்களில் எவ்வளவு ஞானத்துடன், ஆழமாக அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை நாம் பார்க்கலாம்.

நமது கர்த்தர் தமது 40-நாள் தியானம் மற்றும் வனாந்தரத்தில் ஏற்பட்ட விநோதமான சோதனைகளுக்குப் பிற்பாடு, வரவிருக்கும் இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினவராகக் காணப்பட்டார். மேலும், தாம் கூறின காரியங்களை மகிழ்ச்சியுடனும், விசுவாசத்துடனும் கேட்டு, தம்முடைய சீஷர்கள் ஆனவர்கள் மத்தியிலிருந்து புதிய யுகத்திற்கான அப்போஸ்தலர்களாய் இருக்கும்படிக்கு 12-மனிதர்களைத் தேர்ந்தெடுத்தார். இந்த 12-அப்போஸ்தலர்களும், எளிமையான ஜீவியம் கொண்டவர்களாக இருந்தார்கள். இந்த 12-பேரில், நான்கு பேர் மீனவர்களாகவும், ஒருவர் இழிவாய்க் கருதப்பட்ட ஆயக்காரனாகவும் இருந்தார், மீதமானவர்கள் எப்படியாக அழைக்கப்பட்டார்கள் என்பது தொடர்பான பதிவுகள் பதிவு செய்யப்படவில்லை.

பன்னிரண்டு நபர்கள் தெரிந்துகொள்ளப்பட்டது தொடர்பான விஷயத்தில், இவர்கள் அனைத்தையும் துறந்து, தம்மைப் பின்தொடர்ந்து வரும்படிக்கு, இவர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு சூழ்நிலைகளில் கர்த்தரால் அழைக்கப்பட்டிருந்தாலும், இவ்வழைப்பிற்கு இவர்கள் உடனடியாகக் கீழ்ப்படிந்திருந்தாலும், இவர்கள் அப்போஸ்தலர்கள் எனும் ஸ்தானத்திற்குரிய பணிக்குக் கர்த்தரால் அர்ப்பணம் பண்ணப்பட்ட ஒரு விசேஷமான தருணமும் இருந்தது என்று நாம் அறிந்துகொள்கின்றோம். (மத்தேயு 4:17-22; மாற்கு 16:20; 3:13-19; லூக்கா 5:9-11). இது தொடர்பாக லூக்கா அவர்கள் பதிவு செய்துள்ள காரியம் என்னவெனில், இப்படியாக இவர்களைக் கர்த்தர் அப்போஸ்தலர்களாக அர்ப்பணிக்கும் இச்சம்பவம் நிகழ்வதற்கு முன்பு, கர்த்தர் ஜெபம் பண்ணும்படிக்கு அதாவது, வருங்கால சபைக்கடுத்த நலன்கள் தொடர்பான விஷயத்தில், தேவனிடத்தில் ஆலோசனை பெற்றுக்கொள்ளும்படிக்கு இராமுழுவதும் ஜெபத்தில் காணப்பட்டார் என்பதாகும். "அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்" (லூக்கா 6:12, 13). இவ்விதமாக, பன்னிரண்டு பேரும், கர்த்தருடைய சீஷர்கள் மத்தியில் வேறுபட்ட, பிரிக்கப்பட்ட வகுப்பாராய்க் காணப்பட்டார்கள். மேலும் 17-ஆம் வசனமும் கூட இந்தப் பன்னிரண்டு பேருக்கும் மற்றும் மற்றச் சீஷர்களுக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டுகின்றது.

அப்போஸ்தலர்களாக தெரிந்துகொள்ளப்படாத மற்றச் சீஷர்கள் கர்த்தரால் நேசிக்கப்பட்டவர்களாகவும், இந்தப் பன்னிரண்டு பேரின் நியமித்தலுக்கு இணக்கம் கொண்டவர்களாகவும், இந்த அப்போஸ்தலர்களின் நியமித்தல் என்பது நடைபெறவிருக்கும் வேலைகளுக்கான நலனுக்கே என்று உணர்ந்துகொண்டவர்களாகவும் இருந்தார்கள். கர்த்தர் இந்தப் 12-பேருடைய இருதயத்தில் காணப்பட்ட வாஞ்சையைக் கவனத்தில் எடுத்துக் கொண்டதோடுகூட, இவர்களுக்கு முன்பாகக் காணப்படும் புதிய வேலைக்கு இவர்களுடைய தகுதியையும், சூழ்நிலைகளையுங்கூடக் கவனத்தில் எடுத்துக்கொண்டார் என்பதில் ஐயமில்லை. உதாரணத்திற்கு அவர் செபதேயுவின் குமாரர்களை, எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தம்மைப் பின்சென்று வரும்படிக்கு அழைத்தபோது, கர்த்தர் குமாரர்களைத்தான் அழைத்தாரே ஒழிய, அவர்களுடைய தகப்பனை அழைக்கவில்லை என்று பார்க்கின்றோம். பின்சென்று வருவது என்பது மனரீதியில் தம்முடைய உபதேசங்கள் முதலியவைகளை மாத்திரமே பின்செல்லுவதைக் குறிக்காமல், கர்த்தரோடுச் செல்வதற்கு அல்லது அவருடைய வழிநடத்துதலின் கீழ் வேலைக்கு

ஈடுபடுவதில் தொழிலையும், வீட்டையும், நண்பர்களையும், பூமிக்குரிய திட்டங்களையும், பூமிக்குரிய எதிர்க்கால வாய்ப்புகள் முதலியவைகளையும் விட்டு வருதலையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

நமது கர்த்தர் இந்தப் 12-பேரைப் பிரித்தெடுத்த விஷயத்தின் மகா முக்கியத்துவம் குறித்து, பிரித்தெடுத்த சமயத்திலேயே வெளிப்படுத்திவிட்டார் என்று நாம் சொல்ல முடியாது. ஏனெனில், அப்போது அக்காரியங்களை அப்போஸ்தலர்கள் புரிந்துகொள்வது என்பது கூடாத காரியமாய் இருந்தது; ஆனால், எளிமையான வாழ்க்கையிலிருந்து, கர்த்தருடைய விசேஷித்த ஸ்தானாதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அருமையான சகோதரர்கள் தற்காலத்தில் தங்களுக்கான பலனாக இழப்பும், துன்புறுத்தப்படும் நிலையும் காணப்படும் என்பதை அறிந்திருந்த நிலையிலும் மற்றும் அச்சமயத்தில் தங்களுக்கான எதிர்க்காலத்திற்குரிய பலனைத் தங்களால் தெளிவாகப் புரிந்து/உணர்ந்துகொள்ள முடியாத நிலையிலும், தங்களுக்கு அருளப்பட்டுள்ள (ஸ்தானாதிபதிக்குரிய) சிலாக்கியத்தை உணர்ந்து ஏற்றுக்கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள்.

இந்தப் 12-பேரும், தங்களின் எதிர்க்கால அப்போஸ்தலப் பணிக்குத் தகுதியடையும்படிக்கு அவர்களுக்குப் பயிற்சியும், போதனைகளையும், கொடுப்பதை ஆரம்பிப்பதற்கே இவர்களைக் கர்த்தர் அச்சமயத்தில் தேர்ந்தெடுத்ததற்கான நோக்கமாகும். ஏனெனில், இந்தப் 12-பேரும் பெந்தெகொஸ்தே நாள்வரையிலும் அப்போஸ்தலருக்குரிய பணியில் முழுமையாய்ப் பிரவேசிக்கவில்லை. இவர்கள் அப்போஸ்தலர் பணிக்கென அமர்த்தப்பட்டப் பின்னர், இந்தப் பன்னிருவரும், கர்த்தருடைய வழிநடத்துதலின் கீழ் முழுமையாகவும் மற்றும் அவரோடுகூட அதிக நேரமும் காணப்பட்டார்கள். இவர்கள் அவருடைய குணலட்சணங்களையும், அவருடைய சுவிசேஷத்தையும், அவருடைய வழிமுறைகளையும் கவனிக்கும்/கற்கும் கவனமுள்ள மாணவர்களாய்க் காணப்பட்டார்கள்.

## அப்போஸ்தலர்களுக்கான பணி

கர்த்தர் மற்றும் ஒட்டுமொத்த சபையின் பணியைப்போன்றே அப்போஸ்தலர்களுடைய பணியும் இருந்தது. இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே அப்பணியாகும். (ஏசாயா 61:1-2; லூக்கா 4:17-21; மத்தேயு 10:5-8; மாற்கு 3:14-15; லூக்கா 10:1-17 ஆகிய வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும்). மேலும், இந்தப் பணிக்கே, அப்போஸ்தலர்கள், கர்த்தர் தங்களோடு இருந்த காலத்திலும், அதற்குப்பின் உள்ள காலங்களிலும், தங்களை வைராக்கியத்துடன் அர்ப்பணித்தார்கள். எனினும், இப்பணியின் விஷயத்தில், அப்போஸ்தலர்கள் கர்த்தர் தங்களோடு இருந்த காலத்தில், கர்த்தரால் இதே ஊழியத்திற்கென்று நியமிக்கப்பட்ட 70 சீஷர்களைக்காட்டிலும் அதிகமாகச் சாதித்ததாக எவ்விதமான குறிப்புகளும் நமக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால், இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதற்கான இந்தப் பொதுவான பணியுடன் கூட, கர்த்தர் இந்தப் 12-பேரையும், எதிர்க்காலத்தில் அவர்கள் செய்ய வேண்டிய ஒரு விசேஷமான வேலைக்கும் அவர்களை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருப்பதையும், அவர்களுக்குப் படிப்படியாகக் காண்பித்தார். அதாவது, தம்முடைய மரணத்திற்குப் பிற்பாடு, தம்மைக்குறித்த சாட்சியை அறிவிப்பதற்கான தம்முடைய சாட்சியாளர்களாக இந்த 12-பேரும் காணப்படும்படிக்குக் கர்த்தர் இவர்களை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தார். கர்த்தருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில், அவரோடுகூட அப்போஸ்தலர்கள் இருந்தவர்கள் என்றும், மற்றும் அவருடைய உபதேசங்கள் மற்றும் நோக்கங்களை அறிந்தவர்கள் என்றுமுள்ள விதத்தில் அப்போஸ்தலர்கள் சாட்சியாளர்களாகவும், ஜனங்கள் காரியங்களை அறிந்துகொள்வதற்கு, நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாகவும் காணப்பட வேண்டும் (யோவான் 15:27; லூக்கா 24:48). இதுமாத்திரமல்ல, தெய்வீக ஏற்பாட்டின் கீழ் இந்த 12-பேரும், ஏற்றகாலத்தில் உன்னதத்திலிருந்து வரும் பெலத்தினால் தரிப்பிக்கப்பட்ட பின்னர், சுவிசேஷ யுக சபைக்கான நிறுவனர்களாகவும் (Founders) மற்றும் விசேஷித்தப் போதகர்களாகவும் இருக்க வேண்டும்.

வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், இந்த 12-பேரையும் நமது கர்த்தர் தெரிந்துகொண்டதற்கான நோக்கமானது, தேவனுடைய சத்தியம் தொடர்பான விஷயத்தில், இவர்களுடைய சாட்சியை நிலைவரப்படுத்தும் வண்ணமாக, இவர்களுக்கு பயிற்சியும், அதிகாரமும் கொடுத்து, பின்னர் இவர்கள் வாயிலாக நீதியின்மேல் பசித்தாகம் உள்ளவர்களைச் சத்தியத்தினால் திருப்தியடையச் செய்து, பின்னர் இப்படியாகத் திருப்தியடைந்தவர்கள்

மத்தியிலிருந்து, தம்முடைய நாமத்திற்கெனச் சில (கிறிஸ்துவின் மணவாட்டிகள் - சபை) ஜனங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, தம்முடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்களாக உயர்த்தப்படும்படிக்கு, பயிற்சியும், ஆயத்த உதவியும் பண்ணுவதற்குமேயாகும். 12-பேரைத் தெரிந்தெடுத்ததற்கான மேற்கூறப்பட்டுள்ள இந்த நோக்கமானது, கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு ஏறெடுத்த ஜெபத்தில் வெளிப்படுகின்றது. "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு (அப்போஸ்தலர்கள்) உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை (உபசேத்தை) நான் அவர்களுக்குக் கொடுத்தேன் அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே. நான் இவர்களுக்காக (அப்போஸ்தலர்கள்) வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் (முழுச்சுவிசேஷ யுகத்திலும்) என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் (இருதயத்திலும், நோக்கத்திலும், அன்பிலும்) ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் (பாவிகளாக இருந்த போதிலும், தேவனால் அன்புகூரப்பட்ட உலகம்) விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் (ஒன்றாயிருக்கவும் - என்பதே அப்போஸ்தலர்களையும், கிறிஸ்துவின் முழுச்சரீரத்தையும் தெரிந்தெடுப்பதற்கான நோக்கமாகும் என்று இங்குக் கர்த்தர் வெளிப்படுத்துகின்றார்) வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:6-9, 20, 21).

அப்போஸ்தலர்களின் எண்ணிக்கை, யாக்கோபின் புத்திரர்களாகிய இஸ்ரயேல் கோத்திரத்தினுடைய தலைவர்களும், பிரதிநிதியுமாய் இருந்தவர்களுடைய எண்ணிக்கைக்குச் சமமாக இருக்கின்றது. இந்த (மாம்சீக) இஸ்ரயேலின் கோத்திரங்கள் ஒருவிதத்தில் ஒட்டுமொத்த சுவிசேஷ யுகத்தின் சபைக்கும், இன்னொருவிதத்தில் முழு உலகத்திற்கும் நிழலாய் இருக்கின்றார்கள் (ஆசரிப்புக்கூடார நிழல்களைப் பார்க்கவும்). மேலும், வெளிப்படுத்தின விசேஷத்தின் புத்தகத்தில், இந்த 12-அப்போஸ்தலர்கள், மகிமையடைந்த சபையாகிய, புதிய எருசலேமின் பன்னிரெண்டு அஸ்திபாரங்களாகக் குறிப்பிடப்படுகின்றனர் (வெளிப்படுத்தல் 21:14; எபேசியர் 2:20, 21). ஆகவே, சபையைத் தாங்கும்படியாக ஏற்படுத்தப்பட்ட அஸ்திபாரங்கள், இறுதியில் முழு உலகத்தையும் தாங்கும்படியாக ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது. ஆனால், ஒருவேளை இந்த அஸ்திபாரக்கற்கள், மணல்மேல் போடப்பட்டிருந்தால், இதன்மேல் கட்டப்படும் கட்டிடத்திற்குப் பாதுகாப்பும் இராது, அக்கட்டிடம் என்றென்றும் காணப்படவும் முடியாது (மத்தேயு 7:25-27). ஆனால், இந்த அஸ்திபாரக்கற்கள் மணல்மேல் போடப்படாமல், உறுதியும், அசையாததுமாகிய கிறிஸ்து இயேசு என்னும் பாறையின் மீதே போடப்பட்டுள்ளது. (மத்தேயு 16:16-18; 1 பேதுரு 2:4-8).

பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் ஆரம்பத்திலேயே அவரோடு கூடக் காணப்பட்டப்படியால் கர்த்தருடைய சாட்சிகளாக விளங்கும்படிக்கு, அவருடைய ஊழியத்தின் ஆரம்பக் காலங்களிலேயே தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இப்பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வீழ்ச்சிக்குள் கடந்துபோய், நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவனாகப் போனபிற்பாடு, யூதாசின் இடத்தில், கர்த்தர் உயிர்த்தெழுந்து பரத்திற்கேறின பின்னர், காணப்பட்ட மகிமைக்கு சாட்சியாக விளங்கின பவுலைக் கர்த்தர் நியமித்தார். (அப்போஸ்தலர் 26:13; 1 கொரிந்தியர் 15:8). ஆகவே, கர்த்தருடைய ஊழியத்திற்கும், மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் கண்களினாலும், காதுகளினாலும் சாட்சியாளர்களாகிய 11-பேர் மற்றும் கர்த்தருடைய மகிமையான உயர்நிலைக்குச் சாட்சியாக விளங்கின பன்னிரண்டாவது நபர் சேர்ந்து, இந்த யுகத்தின் முடிவு வரையிலுமுள்ள முழுச்சபையாருடைய விசுவாசத்திற்கான உறுதியான அஸ்திபாரமாக விளங்கினார்கள். யூதாசின் இடத்தை நிரப்பும் வண்ணமாக 11-அப்போஸ்தலர்களால் தெரிந்துகொள்ளப்பட்ட மத்தியாவின் காரியம் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், இது மனித தவறாகும். அதாவது, கர்த்தருடைய வேலையை அவருடைய வழிநடத்துதல் இல்லாமல் அநாவசியமாக தலையிடும் செயலாகும். இக்காரியத்தை அப்போஸ்தலர் பரிசுத்த ஆவி இறங்கி

வந்த பெந்தெகொஸ்தே நாளுக்கு முந்தின நாள் செய்தார்கள். இந்த 11-அப்போஸ்தலர்களும், இரண்டு நபர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள இரண்டு பேரில் ஒருவரைத் தெரிந்துகொள்ளும்படியாகவும், மேலும் கர்த்தர் தேர்ந்தெடுக்க விரும்புபவர் பேரில் சீட்டு விழும்விதத்தில் அதைத் தங்களுக்கு வெளிப்படுத்தும்படிக்கு, கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணினார்கள். நிச்சயமாக சீட்டு இரண்டு பேரில், ஒருவர் பேரில்தான் விழும். ஆனால், இதுவே கர்த்தருடைய சித்தமாக இருந்தது என்று எங்கும் சுட்டிக் காண்பிக்கப்படவில்லை. கர்த்தரோ அவர்கள் தெரிந்துகொண்டவரைத் தள்ளி, ஏற்றகாலத்தில் பவுலைத் தெரிந்துகொண்டதன் மூலம் தம்முடைய விருப்பத்தை வெளிப்படுத்தினார். மேலும், வெளிப்படுத்தின விசேஷத்தின் காரியங்களை வெளிப்படுத்தும்போது, புதிய எருசலேமுக்கு 12 அஸ்திபார கற்களே உண்டு என்று வெளிப்படுத்தினாரே ஒழிய 13 என்று வெளிப்படுத்தவில்லை. மத்தியா அநேகமாக மிக நல்ல சகோதரனாகத்தான் இருந்திருக்க வேண்டும் ஆனாலும், அவர் அப்போஸ்தலன் அல்ல.

ஆனால் சபைக்கான அப்போஸ்தலர்கள் எனும் முக்கியமான பணிக்கு இந்தச் சாதாரணமான பன்னிரண்டு மனிதர்கள்தான் நியமிக்கப்பட்டார்கள் என்பதற்கான ஆதாரம் என்ன? என்று நாம் கேட்கலாம். நம்முடைய கர்த்தர் உயிர்த்தெழுந்து, பரத்திற்கு ஏறிப்போன பிற்பாடு, இந்த அப்போஸ்தலர்களே, புதிதாய் உருவாக ஆரம்பித்த சபைக்கு ஆறுதலாகவும், பலமாகவும் இருந்தார்கள் என்பதே ஆதாரமாகும். இவர்கள் கர்த்தருடைய சீஷர்களாகவும், அவரோடுகூடத் தொடர்ந்து காணப்பட்டபடியினாலும், கர்த்தருடைய அற்புதமான வல்லமையைக் கண்களால் கண்ட சாட்சிகளாக இருந்தபடியினாலும், கர்த்தரோடுகூட நிந்தனைகளைச் சுமந்துகொண்டதின் மூலம் இவர்கள் கர்த்தரிடத்தில் கொண்டிருந்த தங்களுடைய நேர்மையையும், உண்மையையும் நிரூபித்தவர்களாகக் காணப்பட்டபடியினாலும், இவர்கள் காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த பரிசுத்தவான்கள், தங்கள் விசுவாசத்திற்கான ஆதார தூண்களை, இவர்களிடத்தில் கண்டார்கள், மேலும், இவர்களுடைய போதனைகள் மீது சார்ந்து நின்று, இவர்களுடைய மாதிரியினால் தைரியம் கொண்டவர்களாகக் காணப்பட்டு, இவர்களுடைய ஆலோசனைகளுக்கு ஞானமாய் செவிச் சாய்த்தார்கள். ஆனால், இப்படிப்பட்ட உதவிகளைக்காட்டிலும் மேலானவைகளையும் அப்போஸ்தலர்கள் செய்யவேண்டும் என்ற நோக்கம் இருந்ததா? மற்றவர்களைக்காட்டிலும் அதிகமாய்த் தெய்வீக மனதை வெளிப்படுத்தக்கூடிய வார்த்தைகளையுடைய அதிகாரப்பூர்வமான போதகர்களாகக் காணப்பட வேண்டும் என்ற நோக்கமும் இருந்ததா?

ஆம் என்பதே நம்முடைய பதிலாகும். மேலும், அப்போஸ்தலர்களைக் குறித்தும், அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய தம்முடைய முழுச்சரீரத்திற்கு இவர்கள் உதவிபுரிய வேண்டும் எனத் தாம் நோக்கம்கொண்டுள்ள உதவிகரமான ஊழியங்களைக் குறித்தும், இவை சபையாரால் அதிகாரப்பூர்வமானது என்று கருத வேண்டும் என்றும் கர்த்தர் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார். நாம் சாட்சிகளைக்குறித்துப் பார்க்கலாம்:-

(1) நாம் ஏற்கெனவே பார்த்த வண்ணமாக, இந்தப் பன்னிரண்டு மனுஷர்களும், விசேஷமாக அழைக்கப்பட்டு, மற்றச் சீஷர்களிடமிருந்து, பிரித்தெடுக்கப்பட்ட வகுப்பாராக, முறையாக அப்போஸ்தலருக்குரிய பணியில் அமர்த்தப்பட்டு, மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கத்தக்கதாக, இவர்களுக்குத் தனிப்பட்ட மற்றும் அர்த்தமுள்ள பெயராகிய அப்போஸ்தலர்கள் என்ற நாமம் சூட்டப்பட்டது.

(2) நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியத்தின் காலப்பகுதியில் அப்போஸ்தலர்களுடைய பணிக்கும், மற்ற 70 சீஷர்களின் பணிக்குமிடையே எவ்விதமான வித்தியாசமும் காணப்படவில்லை என்றும், இவர்களுடைய பிரயாசங்கள் 70 சீஷர்களின் பிரயாசங்களைக்காட்டிலும் குறிப்பிடத்தக்க விதத்தில் ஆசீர்வதிக்கப்படவில்லை என்றும் நாம் ஏற்கெனவே பார்த்திருந்தாலும், இந்த 12-பேரும், கர்த்தர் அளித்த பயிற்சியின் கீழ் நேரடியாகவும், தொடர்ச்சியாகவும் காணப்பட்டார்கள். மேலும், இந்த 12-பேரும் அல்லது இவர்களில் சிலர், கர்த்தருடைய 3½ வருட ஊழியத்தின் காலத்தில், நடந்த ஒவ்வொரு குறிப்பிடத்தக்க அம்சத்திற்கும்/நிகழ்விற்கும் மற்றும் அவர் நடந்துகொண்ட முறைக்கும் சாட்சியாளர்களாக இருப்பதற்குத் தெரிந்தும் கொள்ளப்பட்டார்கள். (லூக்கா 9:6; 10:7). இந்த 12-பேரும்தான் கர்த்தருடைய போதனைகளுக்கும், அவருடைய தனிப்பட்ட குணலட்சணத்திற்கும், அவருடைய ஜீவியத்தின் நடத்தைக்கும், அவருடைய அற்புதத்திற்கும் மற்றும் அவருடையப் போதனைகளும், வேலைகளும் அவர் நாட்களில் ஏற்படுத்தின விளைவுகளுக்கும் சாட்சியாளர்களாகக் காணப்படுகின்றார்கள். இந்த 12-பேர்தான், கடைசி

பஸ்கா போஜனத்தில், அவரோடுகூடப் பங்குகொள்வதற்கும், அந்த வேளைக்கான போதனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், அதாவது பஸ்கா போஜனத்தின் நிழலான முக்கியத்துவம் தொடர்பாகவும், மாற்றப்பட்ட அதன் புதிய அம்சங்கள் தொடர்பாகவும், அதுமுதல் அந்தப் புதிய அனுசரிப்பானது, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்ற தேவனுடைய உண்மையான ஆட்டுக்குட்டியை நினைவுகூருவது தொடர்பாகவும் உள்ள போதனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அழைக்கப்பட்டிருந்தார்கள். மேலும், இவர்கள்தான் அவருடைய கெத்செமனே துயரத்திற்கும், அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட காரியத்திற்கும், அவர் கைதுச் செய்யப்பட்டது குறித்தும், கர்த்தர் தமக்கு வரும் என்று அவர் எதிர்ப்பார்த்த இச்சம்பவங்களின் போது, அவர் தம்மை அமைதலுடன் ஒப்புக்கொடுத்ததற்கும், சாட்சியாளர்களாகவும் இருந்தார்கள். இவர்கள்தான் அவருடைய சிலுவையில் அறையப்படுதல், மரணம், கல்லறையில் அடக்கம் பண்ணினது மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலின் உண்மை ஆகிய சம்பவங்கள் தொடர்பான அனைத்துச் சூழ்நிலைகளுக்குச் சாட்சியாளர்களாகவும் இருந்தார்கள்.

(3) நமது கர்த்தர் உயிர்த்தெழுந்த பிற்பாடு, தமது மரணத்தினால் சற்று நின்றுபோயிருந்த தமது வேலையை உடனடியாக, அது நின்ற நிலையிலிருந்தே தொடங்குவதை நாம் பார்க்கின்றோம். அதாவது, முழுச்சபைக்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமான சாட்சி கொடுப்பதற்குத் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட சாட்சியாளர்களாகிய அப்போஸ்தலர்களை, இன்னும் அதிகம் ஆயத்தப்படுத்தும் வேலையை, உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடும் கர்த்தர் தொடர்ந்தார். கர்த்தர் ஒரேசமயத்தில் 500 சீஷர்களுக்கு முன் தோன்றினாலும், தமது உயிர்த்தெழுதல் தொடர்பான உண்மையை அப்போஸ்தலர்களுக்குத் தெளிவாக உறுதிப்படுத்துவதில், கர்த்தர் விசேஷித்த கவனம் செலுத்தினதையும் நாம் பார்க்கின்றோம். (1 கொரிந்தியர் 15:5-8). பதினொரு அப்போஸ்தலர்களில், ஒவ்வொருவர் மேலும் அவர் அக்கறையுடன் கவனம் செலுத்துவதை நம்மால் பார்க்க முடிகின்றது. கல்லறைக்கு முதலாவதாக வந்த ஸ்திரீகள், தமது உயிர்த்தெழுதல் குறித்த உண்மையை ஒவ்வொரு அப்போஸ்தலருக்கும் தெரிவிக்கும்படியாகவும், மற்றும் பேதுரு சற்றுமுன்பு உண்மையற்ற விதத்தில் நடந்துகொண்டதின் நிமித்தம், அவர் சோர்வினால் மேற்கொள்ளப்படாதபடிக்கும், பேதுருவின் பெயரை விசேஷமாகக் குறிப்பிட்டு அவருக்குத் தெரிவிக்கும் படியாகவும் கர்த்தர் ஸ்திரீகளை அனுப்பி வைத்தார் (மாற்கு 16:7). இன்னுமாக, எம்மாவூருக்குப் போகின்ற வழியில் இரண்டு சீஷர்களின் புரிந்துகொள்ளுதலின் கண்களையும் திறந்துவைத்தார் (லூக்கா 24:27, 32). தோமாவின் சந்தேகத்தையும் தீர்த்து வைத்தார். இன்னுமாக, பேதுருவின் பணியைக்குறித்து அவருக்கு மீண்டும் விசேஷமாக வலியுறுத்தி, அனைத்து அப்போஸ்தலர்களையும் முழுமையாய் நம்பச்செய்து, மீண்டும் அவர்களை வேலைபுரிய அனுப்பி வைத்தார் என்று பார்க்கின்றோம். (யோவான் 20:26-28; 21:15-17; அப்போஸ்தலர் 1:1, 2; லூக்கா 24:52)

(4) இன்னுமாக, இந்த 11-பேர்தான், கர்த்தர் பரத்திற்கு ஏறிப்போன சம்பவத்திற்கும் சாட்சியாளர்களாக இருக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்டும் இருக்கின்றார்கள். கர்த்தர் பரத்திற்கு ஏறிப்போன சம்பவத்தில் அப்போஸ்தலர்கள் தவிர, வேறெவரும் காணப்பட்டார்கள் என்பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை. அப்போஸ்தலர் 1:1-13-வரையிலான வசனங்களை வாசித்துப் பார்க்கவும். "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துப் பார்த்து நிற்கிறீர்கள்?" என்ற வார்த்தை கலிலேயர்களாகக் காணப்பட்ட இந்தப் பதினொரு அப்போஸ்தலர்களைத்தான் குறிக்கின்றது. லூக்கா 24:48-51 மற்றும் மத்தேயு 28:16-19 வரையிலான வசனங்களையும் பார்க்கவும்.

கர்த்தருடைய உயிர்த்தெழுதல் மற்றவர்களால் பார்க்கப்பட்டிருந்தாலும், அப்போஸ்தலர்களே அவருடைய உயிர்த்தெழுதலுக்கு விசேஷித்த சாட்சியாளர்களாகக் காணப்படுகின்றார்கள். இவ்விதமாக, இவர்களுடைய சாட்சியில் நம்முடைய விசுவாசமானது தெளிவாக உறுதிப்படுத்தப்படும்படிக்கு, இவர்களைக் கர்த்தர் பொருத்தமான சாட்சியாளர்களாக ஏற்படுத்தினார். "யூதருடைய தேசத்திலும், எருசலேமிலும் அவர் செய்தவைகள் எல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படிச் செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படிச் செய்தார். அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய

நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்" (அப்போஸ்தலர் 10:39-43). (அப்போஸ்தலர் 13:31; 1 கொரிந்தியர் 15:3-8 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்).

(5) அப்போஸ்தலர்களுடைய சாட்சியானது ஆரம்பத்தில், யூதர்களுக்குள்ளாகவே வரையறுக்கப்பட்டிருந்தபோதிலும், கர்த்தர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு, எருசலேம் துவங்கி, சகல தேசத்தாருக்கும் தம்முடைய நாமத்தில் பாவத்திற்கு மனம் திரும்புதல் மற்றும் பாவ மன்னிப்புகுறித்துப் பிரசங்கம்பண்ண, அப்போஸ்தலர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். இன்னுமாக, "நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்றும், "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றும் கர்த்தர் அப்போஸ்தலர்களிடம் கூறினார் (லூக்கா 24:48, 49; அப்போஸ்தலர் 1:8). "பூமியின் கடைசி பரியந்தம்/கடைசி எல்லைவரைக்கும்" எனச் சொல்லப்படும் விஷயத்தில், உதாரணத்திற்கு அமெரிக்கா பகுதிகளை, அப்போஸ்தலர்கள் தங்கள் ஜீவியகால நாட்களில் அடைந்து, அங்கு ஊழியம் புரிவது முடியாது என்பதினால் அப்போஸ்தலர் 1:8-ஆம் வசனத்தின் மேற்கூறப்பட்டுள்ள வார்த்தைகள், அப்போஸ்தலர்களுடைய மரணத்திற்குப் பிற்பாடு, இவர்கள் சாட்சி பகருவது, பெரும்பான்மையாக இவர்கள் எழுதிவைத்த எழுத்துக்கள் மூலமே நடக்கும் என்பதை வெளிப்படுத்துகின்றது. இவ்விதமாகவே, அப்போஸ்தலர்கள் நமக்கும் சாட்சி பகர்ந்துள்ளார்கள். மேலும், இவ்விதமாக சாட்சி பகரும் பணியை, இவர்கள் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார்கள் என்றும், இவர்கள் கர்த்தரிடத்தில் தனிப்பட்ட விதத்தில் பெற்றுக்கொண்ட பயிற்சியானது, இவர்கள் பகரும் சாட்சிக்குச் சிறப்பான அங்கீகாரமாகவும், இவர்களுடைய சாட்சிகள் நம்பத்தகுந்தவைகளாக இருக்கின்றன என்பதற்கான உத்திரவாதமாகவும் இருக்கின்றது என்றும் நாம் கருதுகின்றோம்.

(6) வாக்களிக்கப்பட்டுள்ள வல்லமை வரும்வரைக் காத்திருக்க வேண்டும் என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாக, அப்போஸ்தலர்களும், மற்றச் சீஷர்களாகிய சுமார் 120 பேர் எருசலேமிலேயே தங்கியிருந்து, பெந்தெகொஸ்தே நாளில் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதமாகிய "உன்னதத்திலுள்ள வல்லமையெனும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது வரையிலும், மாடியறையில் ஒன்றுகூடி, ஒவ்வொருநாளும் ஜெபத்துடன் காத்துக் கொண்டிருந்தார்கள்" (அப்போஸ்தலர் 1:14). அப்போஸ்தலர்களுக்கென விசேஷமாக வாக்களிக்கப்பட்டிருந்த மேற்கூறிய மாபெரும் ஆசீர்வாதத்தில் அவர்கள் கூடக் காணப்பட்ட உண்மையுள்ள ஆத்துமாக்கள் அனைவரும் பங்கடைந்தார்கள். "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" (அப்போஸ்தலர் 2:4). எனினும், அப்போஸ்தலர் 2:7-ஆம் வசனத்தை வைத்துப் பார்க்கும்போது, (கலிலேயர்களாகக் காணப்பட்ட) பதினொரு அப்போஸ்தலர்களும் பொதுப் பேச்சாளர்களாக இருந்ததைக் காணமுடிகின்றது. பரிசுத்த ஆவியானது, இவர்களுடைய மனங்களுக்கு, தெய்வீகச் சத்தியத்தின் தெளிவான சாட்சிகளைக் கொடுத்து, இவர்களுடைய இருதயங்களைச் சந்தோஷத்தினாலும், துதியினாலும் நிரப்பியது. ஆகவே, தங்களுடைய இருதயத்தில் பொங்கிக்கொண்டிருக்கும் காரியங்களினாலும், இவர்கள் அங்குக் கூடியிருந்த ஜனங்களுடைய பல்வேறு பாஷைகளை, பரிசுத்த ஆவியினால் அற்புதத்தினால், பேசமுடிகிற ஆற்றலைப் பெற்றிருந்தபடியினாலும் இவர்கள் அருமையான ஜீவனுக்குரிய வார்த்தைகளைப் பேசினார்கள். இந்த வல்லமையின் விளைவாக, அந்த நாளில்தானே, 3000 ஆத்துமாக்கள், கிறிஸ்தவர்களாக மாறினார்கள். பெந்தெகொஸ்தே நாளில் விசேஷமாகப் பொழியப்பட்ட ஆவியில், அன்று உண்மையுடன் காத்திருந்த அனைத்து நபர்களும் பங்கடைந்திருந்தாலும் மற்றும் அதே ஆவியானது பின்னாட்களில் புறஜாதிகள் மீதும் பொழியப்பட்டிருந்தாலும் மற்றும் இன்றுவரையிலுமுள்ள உண்மையுள்ளவர்களாகிய அர்ப்பணம் பண்ணப்பட்டவர்கள் அனைவர் மீதும் அதே ஆவியானது கடந்து வந்துகொண்டிருந்தாலும், அன்றைய தினத்தில் பதினொரு அப்போஸ்தலர்களும் அங்குக் காணப்பட்டார்கள் என்றும், அவர்களில் ஒருவராகிலும் பரிசுத்த ஆவியின் இந்த வரத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறவில்லை என்றும் நாம் விசேஷமாக உறுதி பெற்றுக்கொள்ளலாம். இவர்கள் இந்த ஆவியைப்

பெற்றுக்கொள்ளவில்லையெனில், இவர்களுடைய அப்போஸ்தலத்துவம் அங்கீகரிக்கப்பட முடியாததாகக் காணப்படும் (அப்போஸ்தலர் 1:13, 14; 2:1).

(7) கர்த்தரோடு கூடவே இருப்பதற்கும், அவரால் அளித்த தனிப்பட்ட விதமான போஷிப்புகள், முதலானவைகளாகிய சிலாக்கியங்கள் அனைத்தும் மற்றும் மற்றவர்கள் அனுபவித்த பெந்தெகொஸ்தே நாளிற்குரிய பரிசுத்த ஆவியின் பொழிவும், கடந்து முடிந்து போவதுவரையிலும், புதிய யுகம் தொடர்பான சத்தியம் குறித்த விஷயங்களில் அறியாமையிலேயே சவுல் இருப்பதற்கும், சவுல் பரிசேயர்கள் மத்தியில் ஒரு பரிசேயனாக இருந்து தேவனுடைய சேவை புரிவதற்கும் அனுமதித்திட்ட காரியமும் மற்றும் யூதாஸ், அப்போஸ்தலர்கள் மத்தியில் ஒருவராகக் காணப்படுவதற்குக் கர்த்தர் அனுமதித்திட்ட காரியமும் குறிப்பிடத்தக்க விஷயமாக இருப்பினும், இதிலும்கூட மற்றொரு ஞானமுள்ள திறமையும் வெளிப்படுகின்றது. ஏனெனில், மகிமையடைந்த கர்த்தருக்கு, சாட்சியாளர்களாக பவுல் ஏற்படுத்தப்பட்டார். அதாவது, சபை மகிமையடைந்து, உயர்த்தப்பட்டு, அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசிப்பதற்கு ஏதுவாக, அவருக்கு ஒப்பாகக் காணப்படுகின்ற காலத்திற்கு முன்பு, அகால பிறவிபோன்று பிறந்தவராக, அதாவது காலத்திற்கு முன்பு மரணத்திலிருந்து பிறந்தவர்போன்று பவுல் காணப்பட்டார் (1 கொரிந்தியர் 15:8; 1 யோவான் 3:2). நமக்கு நம்பத்தகுந்த மற்றும் பொருத்தமான சாட்சியாளராகப் பவுல் இருப்பதற்கு, அவர் குறைவுப்பட்டிருந்த காரியங்களை, தரிசனங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மூலம் கர்த்தர் பவுலுக்குத் தெரியப்படுத்தினார் (2 கொரிந்தியர் 12:1-4, 7; கலாத்தியர் 1:11, 12; 2:2).

மேலும், பவுலைக்குறித்து கர்த்தர் தாமே "அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரயேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்" என்று சாட்சி அளிக்கின்றார் (அப்போஸ்தலர் 9:15). மேலும், கர்த்தருடைய இந்த வார்த்தைகள் யாவும், பவுல் 12-அப்போஸ்தலர்களில் ஒருவர் என்று பவுலுக்குத் தேவையான உத்திரவாதமாகக் காணப்படுகின்றது. சத்தியத்தைச் சாட்சி பகரும் விஷயத்தில் பவுல் கொண்டிருந்த வைராக்கியத்திற்கும், அவரிடத்தில் வெளிப்படும் பரிசுத்த ஆவியின் வல்லமைக்கும் உரிய நமது கர்த்தருடைய சாட்சியுடன்கூட, பவுலுங்கூடத் தன்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கின்றார், "மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின் படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார். விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படிப் பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டதென்று" கூறினார் (கலாத்தியர் 1:11, 12; 2:8).

பவுல், சிறப்பாகப் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலராகவும், மற்றவர்கள் விசேஷமாக யூதர்களுக்கு அப்போஸ்தலர்களாகவும் காணப்பட்டார்கள். ஆகவேதான், பவுல் தன்னுடைய அதிகமான நிரூபங்கள் வாயிலாக அநேக காரியங்களை நமக்குக் கூறுகின்றவராகக் காணப்படுகின்றார். ஆனால், அப்போஸ்தலர்களுடைய நாட்களிலேயே பவுலைக்காட்டிலும் பதினொரு பேரில் பேதுருவும், யாக்கோபும் மற்றும் யோவானும் சபையார் மத்தியில் மிக முக்கியமானவர்களாகக் காணப்பட்டார்கள். மேலும், இந்த 3 அப்போஸ்தலர்களைக்குறித்து இவர்கள் சபையார் மத்தியில் தூண்களாகக் கருதப்படுவதைக்குறித்தும் பவுல் தெரிவிக்கின்றார் (கலாத்தியர் 2:9). பவுலோ முயன்று கொண்டிருக்கும் முன்னோடியாகக் காணப்பட்டார். மேலும், அவர் புறஜாதிகள் மத்தியில் செய்துகொண்டிருந்ததான வேலை, மனுஷர் கணிப்பில் கனமிக்க வேலையாகக் கருதப்படவில்லை. புறஜாதிகளின் மத்தியில் பவுலுடைய வேலையின் நிமித்தம் அவர் அனைத்துவிதமான ஆபத்துக்களுக்கும், உபத்திரவங்களுக்கும், இழிவுகளுக்கும் உள்ளாக்கப்பட்டார். மேலும் சபை ஜனங்கள் மத்தியிலுங்கூடப் பவுலுடைய வைராக்கியமானது முழுமையாகப் புரிந்துகொள்ளப்படவுமில்லை, உணர்ந்துகொள்ளப்படவுமில்லை. ஆகையால்தான் அவர் அடிக்கடி தன்னுடைய அப்போஸ்தலத்துவத்திற்கான ஆதாரங்களை முன்வைத்து, அவைகளைச் சபையாருக்கு நினைப்பூட்டி, மற்ற அப்போஸ்தலர்களைக்காட்டிலும், "தான் ஒன்றும் குறைவுள்ளவனல்ல" என்று நிரூபித்துக் காட்டுகின்றவராகவும் காணப்பட்டார். (1 கொரிந்தியர் 9:1; 2 கொரிந்தியர் 11:5)

அடுத்ததாக, சபையில் அப்போஸ்தலர்களின் பணி என்ன என்று நாம் ஆராயலாம். கர்த்தரையும், அவருடைய போதனைகள் குறித்தும் அப்போஸ்தலர்கள் அளிக்கும் வரலாற்று

ரீதியிலான சான்றின் மீது மாத்திரமே நாம் சார்ந்திருக்க வேண்டுமா? அல்லது இன்னும் அதிகமானவைகளை இவர்களுடைய சாட்சி உள்ளடக்குகின்றதா?

அப்போஸ்தலர்கள் உண்மையில் தாங்கள் அறிந்துள்ள அனைத்து விஷயங்கள் குறித்தும், பரிசுத்த ஆவியின் விசேஷமான வழிநடத்துதலின் கீழ்த் தாங்கள் கற்றுள்ள அனைத்தையும் குறித்தும் சாட்சிப்பகர வேண்டியவர்களாகக் காணப்பட்டார்கள். இப்படியாகச் சாட்சிப்பகரும் பட்சத்தில்தான், இவர்களுக்குப் போதிக்கப்பட்ட காரியங்களுக்கு இவர்கள் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருக்க முடியும். "இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரனென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்" (1 கொரிந்தியர் 4:1). இதே கருத்துதான் "உங்களை நான் மனுஷரை பிடிக்கிறவர்களாக்குவேன்" மற்றும் "என் ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் மேய்ப்பாயாக" என்ற கர்த்தருடைய வார்த்தைகளில் விளங்குகின்றது. "அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை (எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் கிறிஸ்துவின் உடன் சுதந்திரவாளிகள் ஆகலாம் எனும் இரகசியத்தை) அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். இதைக்குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன். அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம்; இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய (நீதிமான்களாக்கப்பட்டு, அர்ப்பணிக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் என்று கருதப்படும்) பரிசுத்த அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை. தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்தச் சுவிசேஷத்திற்கு ஊழியக்காரனானேன். பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." (KJV மொழிப்பெயர்ப்பு). "அந்த மறைபொருள் எனக்கு இறை வெளிப்பாட்டின் வழியாகவே தெரியப்படுத்தப்பட்டது. அதைப்பற்றி நான் ஏற்கெனவே சுருக்கமாக உங்களுக்கு எழுதியிருக்கிறேன்; அதை நீங்கள் வாசிக்கும்போது, கிறிஸ்துவை பற்றிய மறைபொருளை நான் புரிந்துகொண்டேன் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம் என்பதே; அந்த மறைபொருள் மற்றத் தலைமுறைகளில் வாழ்ந்த மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இப்போது தூய ஆவி வழியாகத் தூய திருத்தூதருக்கும், இறைவாக்கினருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; நற்செய்தியின் வழியாக, பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள் என்பதே அம்மறைப்பொருள்; கடவுள் வல்லமையோடு என்னுள் செயல்பட்டு எனக்கு அளித்த அருள்கொடைக்கு ஏற்ப, அந்த நற்செய்தியின் தொண்டன் ஆனேன். கிறிஸ்துவின் அளவற்ற செல்வத்தைப் பற்றிய நற்செய்தியைப் பிற இனத்தாருக்கு அறிவிக்கவும், எல்லா ஊழி காலமாக மறைந்திருந்த இந்த மறைபொருளின் திட்டம் இன்னதென யாவருக்கும் தெளிவுபடுத்தவும், இறைமக்கள் அனைவருள்ளும் மிகவும் கடையவனாகிய எனக்கு இந்த அருள் வழங்கப்பட்டுள்ளது. அதன்மூலம் பலவகையில் விளங்கும் கடவுளின் ஞானத்தை ஆட்சிபுரிவோர், வான்வெளியில் அதிகாரம் செலுத்துவோர் ஆகியோருக்கு இப்போது திருச்சபை வழியாக வெளிப்படுத்த முடிகிறது. இவ்வாறு கடவுள் ஊழி காலமாகக் கொண்டிருந்த திட்டத்தை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாகக் கடவுளை உறுதியான நம்பிக்கையோடு அணுகும் உரிமையும் துணிவும் நமக்குக் கிடைத்துள்ளது" (எபேசியர் 3:3-11; திருவிவிலியம் மொழிப்பெயர்ப்பு). இப்படியாகச் சபை எப்படி அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகளின் அஸ்திபாரத்தின் மேலும், இந்த அஸ்திபாரத்தின் மூலைக் கல்லாகிய இயேசு கிறிஸ்துவின் மேலும் கட்டப்பட வேண்டும் என்று பவுல் கூறின பிற்பாடு, "இதினிமித்தம் (தேவனுடைய ஆலயமாகிய சபையைக் கட்டும் விஷயத்தில்) பவுலாகிய

நான் புறஜாதியாயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்" என்றும் கூறுகின்றார் (எபேசியர் 3:1; 2:20-22).

இவ்விதமாக அப்போஸ்தலர்கள், கிறிஸ்துவைக்குறித்த வரலாற்றுச் சாட்சிகளைக் கொடுப்பவர்களாக மாத்திரம் இல்லாமல், தேவனுடைய ஆழமான காரியங்களைப் புரிந்துகொள்வதற்கும், போதிப்பதற்கும், பரிசுத்த ஆவியினுடைய தாக்கத்தினால் விசேஷித்த விதமாக ஆயத்தம்பண்ணப்பட்டு, அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளனர்; மேலும் இவர்கள் முழுச்சபையினுடைய நன்மைக்காகவும், போஷிப்பிற்காகவும், கட்டியெழுப்புவதற்காகவும், இவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஆசீர்வாதங்களுக்கு இவர்கள் விவேகமும், உண்மையுமுள்ள உக்கிராணக்காரர்களாகவும் காணப்பட்டார்கள். "இலவசமாய் பெற்றுக் கொண்டீர்கள், இலவசமாய் கொடுங்கள்" என்று கர்த்தர் கூறினார், மேலும் இக்கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் இவர்கள் கவனமாகவும் இருந்தார்கள்; இவர்கள் மூலமாக நமக்கு, அதாவது பூமியின் கடைசி எல்லை பரியந்தம் அந்த ஆசீர்வாதங்கள் கடந்து வந்தது.

ஆனால், நாம் இன்னும் ஒருபடி முன்வந்து, இந்த அப்போஸ்தலர்கள் சபையில் எஜமான்களாக /கர்த்தாக்களாகக் கருதப்பட்டார்களா? அல்லது வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால் சபையின் தலையும், கர்த்தருமாய் இருந்த இயேசு போனபிற்பாடு, இவர்களில் எவரும் தலையின் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார்களா? அல்லது அப்போஸ்தலர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, இயேசுவிற்குரிய தலை ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு, அரசாங்கத்தின் ஆளுகைகளை எடுத்துக்கொண்டார்களா? அல்லது ரோமின் போப்மார்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குத் தாங்கள் கிறிஸ்து இயேசுவுக்குப்பதிலாக Vicars-ஆக மற்றும் வாரிசுகள் என்று கூறிக்கொண்டது போன்று அப்போஸ்தலர்கள் ஸ்தானம் எடுத்துக்கொண்டார்களா? என்ற ஆராய்ச்சியைத் தொடர்வதற்கு நாம் பயபக்தியுடன் நாடுகின்றோம்.

இப்படியான கோட்பாடுகளுக்கு எதிராக, நாம் பவுலுடைய எளிமையான வார்த்தைகளைப் பெற்றிருக்கின்றோம்; "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்" (எபேசியர் 4:4, 5). ஆகவே, சபையாகிய சரீரத்தில் பல்வேறு அங்கங்களின் மத்தியில், சிலருடைய முக்கியத்துவம் எவ்வளவுதான் அதிகமாய் இருந்தாலும், ஒருவரே கர்த்தரும், தலையுமாக இருக்கின்றார். இக்காரியத்தைக்குறித்து நமது கர்த்தர் இரண்டு தருணங்களில் தெளிவாகப் போதித்துள்ளார்; "பின்பு இயேசு ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் நோக்கி: வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள். நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்" (மத்தேயு 23:1, 2, 6, 8). "அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்" (மாற்கு 10:42-45).

ஆதிசபை ஜனங்கள், அப்போஸ்தலர்களைக் கர்த்தாக்களாக/பிரபுக்களாகக் கருதினதாகவோ அல்லது இப்படியான அதிகாரத்தையோ, மதிப்பையோ எப்போதாகிலும் அப்போஸ்தலர்கள் எடுத்துக்கொண்டதாகவோ நமக்கு எவ்விதமான ஆதாரங்களும் இல்லை. அப்போஸ்தலர்களுடைய இந்த நடத்தை, கர்த்தத்துவம் குறித்த போப்மார்களின் கருத்திடமிருந்து அதிகம் வேறுபட்டதாகும். உதாரணத்திற்குப் போப் தனக்குப் பெயர்ச் சூட்டிக்கொள்வது போன்று, பேதுரு ஒருபோதும் தன்னை அப்போஸ்தலர்களுக்கு பிரபு என்றோ, அப்போஸ்தலர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பட்டங்கள் சூட்டிக்கொண்டோ அல்லது இத்தகைய மரியாதையைச் சபையாரிடமிருந்து பெற்றுக்கொள்ளவோ இல்லை.

அப்போஸ்தலர்கள் ஒருவரையொருவர் குறிப்பிடும்போது எளிமையாக பேதுரு, யோவான், யாக்கோபு, பவுல் அல்லது சகோதரன் பேதுரு, சகோதரன் யோவான் என்றே அழைத்துக்கொண்டார்கள். மேலும், சபை ஜனங்களும் ஒருவரையொருவர் கிறிஸ்துவுக்குள் சகோதரன், சகோதரி என்றுதான் அன்பின் வாழ்த்துக்களைப் பரிமாறினவர்களாகக் காணப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 9:17; 21:20; ரோமர் 16:23; 1 கொரிந்தியர் 7:15; 8:11; 2 கொரிந்தியர் 8:18; 2 தெசலோனிக்கேயர் 3:6, 15; பிலமோன் 7, 16). இன்னுமாக, இவர்களைச் சகோதரர் என்று அழைப்பதில் கர்த்தரும் வெட்கப்படவில்லை என்று எழுதப்பட்டுள்ளது. (எபிரெயர் 2:11). கர்த்தரும் கூடத் தம்முடைய கர்த்தத்துவத்தை (அ) அதிகாரத்தைச் செயல்படுத்தும் விஷயத்தில் அகந்தையான மனப்பான்மைக்கு அப்பாற்பட்டவராகவே காணப்பட்டார்.

சொந்த ஊரிலும், வெளியூரிலும் அப்போஸ்தலர்களைப்போலவே பொதுவாக மேற்பார்வை பண்ணின கண்காணிகளும் இருந்தது உண்மைதான். சத்தியம் மற்றும் இதரக்காரியங்களில் மிகவும் முதிர்ச்சி அடைந்தவர்கள், மூப்பர்களாக இருந்த அந்தந்தச் சபையின் காரியங்களை மேற்பார்வை பண்ணினதும் உண்மைதான் (அப்போஸ்தலர் 14:23). பல்வேறு இடங்களில் காணப்படும் சபையாருக்கடுத்த பூமிக்குரிய பணிக்கு விசேஷமான பொறுப்பேற்றுப் பண்ணின உதவியாளர்கள் இருந்ததும் உண்மைதான். (அப்போஸ்தலர் 6:1-3) மற்றும் பிரயாணம் மேற்கொண்டு தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கம் பண்ணும் சுவிசேஷகர்கள் இருந்ததும் உண்மைதான். ஆயினும், இவர்களில் எவரும் இந்தப் பெயர்களைக் கனத்திற்குரிய பட்டங்களாக ஒருபோதும் பயன்படுத்தினதில்லை. சபையில் இப்படியாக வேலைகள் புரிவதற்குத் தேவையான தகுதிகள் 1 தீமோத்தேயு 3:1-13; 2 தீமோத்தேயு 4:1-5 ஆகிய வசனங்களில் இடம்பெறுகின்றது.

ஆதிசபை ஜனங்கள் மத்தியில் முன்னிலை வகித்த இந்த ஊழியர்கள் குருமார்களின் உடைகள் தரித்துக்கொண்டு சென்றதாகவோ அல்லது சிலுவையை, ஜெபமாலையை எடுத்துக்கொண்டு வெளியே திரிந்ததாகவோ, ஜனங்களிடமிருந்து பயபக்தியையும், மரியதையையும் எதிர்பார்த்தவர்களாகவோ காணப்படவில்லை. ஏனெனில், இவர்களில் எவர்கள் அதிகமாக பணிவிடைச் செய்கின்றார்களோ, அவர்களே இவர்களின் மத்தியில் பிரதானமானவராகக் காணப்படுவார்கள் என்று கர்த்தர் இவர்களுக்குப் போதித்துள்ளார். உபத்திரவங்கள் சபையைச் சிதறடித்தபோது, சபைஜனங்களை எருசலேமிலிருந்து வெளியே துரத்திவிட்டபோது, பதினொரு அப்போஸ்தலர்களும், எதையும் சந்திக்கத்தக்க தைரியத்துடன் காணப்பட்டார்கள். ஏனெனில், இந்தச் சோதனையான கட்டத்தில் வெளிதேசத்தில் காணப்படும் சபைஜனங்கள் உதவிக்காகவும், உற்சாகத்திற்காகவும் எருசலேமில் காணப்படும் இவர்களைக் (அப்போஸ்தலர்களை) கண்ணோக்குவார்கள். மேலும், ஒருவேளை அப்போஸ்தலர்களும் எருசலேமிலிருந்து பயத்தினிமித்தம், மறைந்து ஓடிப்போயிருப்பார்களானால், முழுச்சபையும் பெரும் அச்சத்தினால் ஆட்கொள்ளப்பட்டு, நடுநடுங்கி போயிருப்பார்கள். யாக்கோபு, ஏரோதின் பட்டயத்தினால் கொல்லப்படுகின்றார், பேதுருவோ சிறைச்சாலையில் இரண்டு போர்ச்சேவர்கள் மத்தியில் சங்கிலிகளில் கட்டப்பட்டவராகக் காணப்பட்டார் (அப்போஸ்தலர் 12:1-6). மேலும், பவுலும் சீலாவும் அநேக அடிகளினால் அடிக்கப்பட்டு, அவர்கள் பாதங்கள் தொழுமரத்தில் கட்டப்பட்ட நிலையில் சிறைச்சாலையில் போடப்பட்டார்கள். மேலும், பவுல் மிகுந்த போராட்டங்களைச் சகித்தவராகக் காணப்பட்டார். (அப்போஸ்தலர் 16:23, 24; 2 கொரிந்தியர் 11:23-33). இவர்கள் கர்த்தாக்கள் போன்று பாவனைச் செய்தார்களா? இல்லை என்றே நாம் எண்ணுகின்றோம்.

பேதுரு இக்காரியங்களைக்குறித்து, தேவனுடைய மந்தையை மேய்க்கும்படி மூப்பர்களுக்கு அறிவுரை கூறினபோது, மிகவும் தெளிவாகக் காணப்பட்டார். இன்றைய காலத்தில் அநேக ஊழியர்கள் கூறுவதுபோன்று பேதுருவும், உங்கள் மந்தை, உங்கள் ஜனங்கள், உங்கள் சபை என்று கூறாமல் மாறாக, தேவனுடைய மந்தை என்றே கூறுகின்றார். மேலும், மூப்பர்கள் அடக்கி இறுமாப்பாய் ஆளுகிறவர்களாய் இராமல், தாழ்மை, உண்மை, வைராக்கியம் மற்றும் தேவபக்திக்குரிய மாதிரிகளாக மந்தைக்கு இருக்கும்படிக்கும் கூறுகின்றார். "எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள்போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும், தூதருக்கும், மனுஷருக்கும் வேடிக்கையானோம். நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர்.... நாங்கள் பலவீனர்.... நாங்கள் கனவீனர்.....இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்;

வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம். தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்; இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவுமானோம்" (1 பேதுரு 5:1-3; 1 கொரிந்தியர் 4:9-13). இவைகளையெல்லாம் பார்க்கும்போது, அப்போஸ்தலர்கள் அடக்கி இறுமாப்பாய் ஆளுகின்றவர்கள்போல் தெரியவில்லை. இன்னுமாக, தேவனுடைய மந்தையை அடக்கி இறுமாப்பாய் ஆள ஆசைப்படும் சில சகோதரர்களின் கருத்துக்களுக்கு எதிராக பவுல், "இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான்களாயிருக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே "என்று பேசுகின்றார் (1 கொரிந்தியர் 4:8). இன்னுமாக, இவ்விஷயத்தில் தாழ்மையாய் இருப்பதே சிறந்த வழி என்று கூறி, அதற்கு மாதிரியாய் இருக்கும் தன்னைப் பின்பற்றுங்கள் என்று கூறுகின்றார். பின்னர், "எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரனென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்" என்றும் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 4:1).

"சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை, பொருளாசையுள்ளவர்களாய் மாயம்பண்ணவுமில்லை; தேவனே சாட்சி. நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை. உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல" என்று கூறினார் (1 தெசலோனிக்கேயர் 2:4-7).

இன்னுமாக, அப்போஸ்தலர்கள் ஒருபோதும் போதனைகள் விஷயத்திலும், சபைக்கான ஊழியங்களில் தங்களுக்கு மாத்திரம் பிரத்தியேக ஆதிக்கமான தனி உரிமை இருக்கின்றது என்று உரிமை பாராட்டிக்கொள்ளவுமில்லை. கர்த்தரும், அவர்கள் இப்படியாகச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லவுமில்லை. "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்ப்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்ப்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்" (எபேசியர் 4:11-15).

தேவன் இவ்விதமாய் பல்வேறு உதவி புரியும் ஊழியர்களை எழுப்பினார். மேலும், ஆதி சபையிலும் சரி, சுவிசேஷ யுகத்திலும் சரி, இந்த ஊழியர்களின் பணிகளை அதிகமாய் ஆசீர்வதித்தும் உள்ளார். ஆனாலும் முன்னிலை ஸ்தானத்தையுடைய அப்போஸ்தலர்களே நமக்கு ஆவிக்குரிய காரியங்களால் ஊழியம் புரிவதற்கென விசேஷமாய் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தார்கள். போதகர்கள் மற்றும் மற்ற உதவிகளைப் புரியும் ஊழியர்களுக்கான பல்வேறு வரிசைகள் அல்லது ஒழுங்குமுறைகள் தொடர்பான கர்த்தருடைய நியமித்தலையும், தனிப்பட்ட மேற்பார்வையையும் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகின்றார்; "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கத்தரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கத்தரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா?" (1 கொரிந்தியர் 12:28, 29). இல்லை, நிச்சயமாக இல்லை, ஒருவேளை நாம் கர்த்தரால் வழிநடத்தப்படுகிறவர்களாய் இருந்தால், சபைக்குப் போதிப்பதற்கும், போஷிப்பதற்குமெனத் தேவன் முன்வைத்துள்ள, அவருடைய நியமனம் தொடர்பான இந்த ஒழுங்குமுறையை ஏற்றுக்கொள்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும். சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் கிறிஸ்துவினுடைய ஐசுவரியங்களை

அறிவிக்கின்றவர்களாய் இருப்பினும், அவர்கள் மத்தியில், அப்போஸ்தலர்களே முதன்மை ஸ்தானத்தில் இருக்கின்றார்கள் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். (எபிரெயர் 5:12).

அப்போஸ்தலர்களுடைய இந்தப் பிரதான ஸ்தானத்தை நாம் ஒத்துக்கொள்கையில், சபை போஷிக்கப்படுவதற்காகக் கர்த்தரால் அருளப்பட்ட மற்ற உதவி புரிகிறவர்களின் ஊழியங்களை நாம் குறைவாக எடை போடுகின்றவர்களாகவோ அல்லது மதிப்புக் குறைத்தோ பேசுகிறதில்லை. உதாரணத்திற்குச் சுவிசேஷகர்களாகிய மாற்கு, லூக்கா மற்றும் ஸ்தேவானின் சாட்சிகள், அப்போஸ்தலர்களுடைய சாட்சிகள்போல் நம்பத் தகுந்ததாகவே இருக்கின்றது. ஏனெனில், "இவர்கள் அனைவரும் ஒரே சிந்தையை உடையவர்களாகக் காணப்பட்டார்கள்." சுவிசேஷ யுகம் முழுவதும் காணப்படும் இத்தகைய உண்மையுள்ள மற்றும் கர்த்தரால் எழுப்பப்பட்ட சாட்சியாளர்களுக்கு, அப்போஸ்தலர்கள் கட்டளைக்கொடுப்பதை 2 தீமோத்தேயு 4:1-6 வரையிலான வசனங்களில் பார்க்கலாம்.

ஆகவே புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாய்க் காணப்பட்ட பவுல் தன்னுடைய ஓட்டத்தை முடிக்கப்போகிற வேளையில், சபையின் மூப்பர்களிடம், நலன்களுக்கடுத்த வேலைகளின் பொறுப்பை அளிக்கின்றவராகக் காணப்படுகின்றார். மேலும், பவுலினுடைய இந்தக் கட்டளை, அன்றைய நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் மூப்பர்களுக்கு மாத்திரம் பொருந்துவதாய் இராமல், நம்முடைய நாட்களில் உள்ளவர்களுக்கும் பொருந்தும். கர்த்தருக்கும், சபைக்கும், தான் ஊழியக்காரனாய் இருந்த விஷயத்தில் தன்னுடைய உண்மையைப்பற்றியும், மாபெரும் வேலையின் மீதான தன்னுடைய அக்கறையைப்பற்றியும் பவுல் கூறின பிற்பாடு, "மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தான். ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்று வருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள். இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன். ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது. இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான்" (அப்போஸ்தலர் 20:17, 28-35).

இதைப் போலவே பேதுருவும் மூப்பர்களுக்குப் புத்திமதிக் கூறுகின்றார்... "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்" (1 பேதுரு 5:1-3).

இத்தகைய போதகர்கள், பரிசுத்த ஆவியினால், சபையில் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று நாம் நிதானித்துக் கொண்டாலும், இவர்களுடைய போதனைகள், சபைக்குத் தலையாக இருக்கும் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களின் போதனைகள் போன்றுதான் காணப்படுகின்றதோ எனப் பார்ப்பது நம்முடைய கடமையாகும்; கர்த்தர் முதலாம் வருகையில் காணப்பட்டபோது, வெளிப்படுத்துவதற்கு ஏற்றதாய் இராதவைகளைப் பின்னர், தம்முடைய பரிசுத்த அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகள் மூலம் வெளிப்படுத்தின தெய்வீகத் திட்டத்தின் ஆழமான காரியங்களை நமக்குப் போதிப்பதற்கு அவர் அப்போஸ்தலர்களுக்கு விசேஷமாக அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்று கர்த்தர் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். (யோவான் 16:12; எபேசியர் 3:5). சத்தியமானது, தெய்வீக ஏவுதலினால், கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட பிரதிநிதிகளாகிய, அப்போஸ்தலர்களால் முதலாவதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஒருவேளை இந்த அப்போஸ்தலர்கள் கூட இடறிப்போனாலும்,

இந்தச் சத்தியமானது தடைப்பண்ணப்பட முடியாது (ஆனால் இந்த 11-அப்போஸ்தலர்கள் மற்றும் பவுலும் இடறிப் போகவில்லை) என்பது வெளிப்படுத்தல் 21:14-ஆம் வசனத்தில் வெளிப்படுகின்றது. இதைக்குறித்து பவுல் தெளிவாக, கலாத்தியர் 1:8-12 வரையிலான வசனங்களில் குறிப்பிடுகின்றார்.

ஆதிசபை ஜனங்கள் அப்போஸ்தலர்களின் மேன்மையான ஆவிக்குரிய அறிவு மற்றும் ஞானத்திற்குச் சரியான மரியாதைக்கொடுத்து, அப்போஸ்தலர்கள் தங்களுக்காக கர்த்தரால் விசேஷமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட ஸ்தானாதிபதிகளாகக் கருதி கற்றுக்கொள்ளும்படி, அப்போஸ்தலர்களின் பாதப்படியினருகே அமர்ந்தார்கள். ஆனாலும், சபைஜனங்கள் வெறுமையான மற்றும் எக்கேள்விகளும் அற்ற மனமுடையவர்களாக இராமல், அப்போஸ்தலர்களின் ஆவியைப் பகுத்தறிந்து, அவர்களுடைய சாட்சிகள் உண்மையுள்ளனவா என்று அறியும் மனப்பான்மையில், அப்போஸ்தலர்கள் பாதமருகே அமர்ந்தார்கள். (1 யோவான் 4:1; 1 தெசலோனிக்கேயர் 5:21; ஏசாயா 8:20). அப்போஸ்தலர்களும் கூட, (ஆதி) சபைஜனங்களுக்குப் போதிக்கும்போது, அவர்களிடம் மேற்கூறப்பட்ட மனப்பான்மை இருப்பதைக்கண்டு மகிழ்ந்து, அம்மனப்பான்மையை உற்சாகப்படுத்தி, அவர்களது இம்மனப்பான்மையைச் சந்திக்க ஆயத்தமாய்க் காணப்பட்டார்கள். அதாவது, (மனித தத்துவம் மற்றும் கூற்றுகளாகிய) மனித ஞானத்தின் மயக்கும் வார்த்தைகளால் அம்மனப்பான்மையைச் சந்திக்க அப்போஸ்தலர்கள் முற்படாமல், ஆவி மற்றும் வல்லமையை வெளிப்படுத்திக்காட்டுவதன் மூலம், சபையினுடைய விசுவாசத்தை மனித ஞானத்தின்மேல் நிற்க செய்யாமல், தேவனுடைய வல்லமையின்மேல் நிற்க செய்யத்தக்கதாக அப்போஸ்தலர்கள் ஆயத்தமாய்க் காணப்பட்டார்கள் (1 கொரிந்தியர் 2:4, 5). அப்போஸ்தலர்கள், தங்களுக்கெனச் சபைஜனங்கள் மத்தியில் கண்மூடித்தனமான, மூடநம்பிக்கையான பக்தியை/மதிப்பை வளர்த்தவில்லை.

பெரோயாவிலுள்ளவர்கள் குறித்து, "அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்" என்று வாசிக்கின்றோம் (அப்போஸ்தலர் 17:11). முற்காலத்து தீர்க்கத்தரிசிகளினால் மறைப்பொருள்களாக அறிவிக்கப்பட்ட அதே சுவிசேஷத்தைத்தான், தாங்களும் பிரகடனம் பண்ணிக்கொண்டிருக்கின்றனர் என்பதைக் காட்டுவதே அப்போஸ்தலர்களுடைய தொடர்ச்சியான பிரயாசமாக இருந்தது. "உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கத்தரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு (அப்போஸ்தலர்கள்), இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்" (1 பேதுரு 1:10-12). ஜீவன் மற்றும் அழியாமைக்கான சுவிசேஷம் கர்த்தரால் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்றும், இது தொடர்பான அதிகமான வெளிச்சம் சபைக்கு, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் மூலம் விசேஷமான வெளிப்படுத்தல்கள் அல்லது ஏதேனும் இயல்பானமுறையில் அப்போஸ்தலர்களாகிய தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு, சபைக்கு வெளிப்படுத்தப்படும் என்றும், தங்கள் மூலம், முழுச்சபைக்கும் வெளிப்படுத்தப்படும் என்றும் காட்டவே அப்போஸ்தலர்களுடைய தொடர்ச்சியான பிரயாசம் காணப்பட்டது. "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் (முதலாவது அப்போஸ்தலர்களையும், பின்னர் அவர்கள் வாயிலாக முழுச்சபையாரை) உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் (தனியாய்) பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி (உங்களுக்கான என்னுடைய செய்தி கொடுப்பவராக பரிசுத்த ஆவி இருந்து) வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை

மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்" (யோவான் 16:12-15).

ஆகவே அப்போஸ்தலர்கள் அளித்த சாட்சியானது, நியாயப்பிரமாணங்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகள் உரைத்தவைகளுக்கும் இசைவாக இருக்கின்றதா என்று பார்க்கவும், அவர்களுடைய சாட்சிகளை, கர்த்தருடைய வார்த்தைகளுக்கு ஒப்பிட்டுப்பார்க்கவும், பெரோயர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தது சரியான காரியமே ஆகும். "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கின்றது" என்று கர்த்தரும் கூடத் தம்முடைய சாட்சியை நிரூபிக்கும்படி, வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்ற அழைப்பை விடுக்கின்றார். நியாயப்பிரமாணம் மூலமாயும் சரி, தீர்க்கத்தரிசிகள் மூலமாயும் சரி, கர்த்தர் அல்லது அப்போஸ்தலர்கள் மூலமாயும் சரி வெளிப்படுத்தப்படும் தெய்வீகச் சாட்சியானது இசைவுடன் காணப்பட வேண்டும். இவர்கள் அனைவரின் சாட்சியில் காணப்படும் இசைவானது, இவர்கள் தெய்வீக ஏவுதலினாலேயே பேசியுள்ளனர் என்பதை நிரூபித்துக் காட்டுகின்றது. இப்படியாக, அனைத்துச் சாட்சிகளும் இசைவுடன் காணப்படுவதினால், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் அடங்கிய முழு வேதவாக்கியங்களும், கர்த்தர் அழைப்பதுபோன்று, "தேவ சுரமண்டலமாகவே" காணப்படுகின்றதினால் தேவனுக்கு நன்றி (வெளிப்படுத்தல் 15:2). இந்தச் சுரமண்டலம்/இசைக்கருவியின் பல்வேறு நரம்புகள், நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகளினால் உரைக்கப்பட்ட பல்வேறு சாட்சிகளாகக் காணப்படுகின்றது. மேலும், இந்த நரம்புகள் நம்முடைய இருதயங்களில் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியினால் தொடப்பட்டு, தெய்வீகச் சத்தியத்தை ஆராயும் பக்தியுள்ள ஆராய்ச்சியாளரின் விரல்களினால் அந்த நரம்புகள் அசைக்கப்படும்போது, மிக அருமையான எழுச்சியூட்டும் இசையை அளிக்கின்றது. கர்த்தர் இயேசு மூலமும், அப்போஸ்தலர்கள் மூலமும், தீர்க்கத்தரிசிகள் மூலமும், வந்த சாட்சியின் வாயிலாக நாம் கற்றுக் கொண்டுள்ள மோசே மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் பாடலிலுள்ள சிறந்த இராகத்திற்காகக் கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றோம்.

கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய சாட்சியானது, நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகள் உரைத்தக் காரியங்களுக்கு இசைவாக இருக்க வேண்டும் என்றாலும், இவர்களது சாட்சிகள் பழையவைகளைக் குறித்துச் சாட்சி கொடுப்பதோடல்லாமல் புதியவைகள் குறித்துச் சாட்சயளிக்க வேண்டுமென நாம் எதிர்ப்பார்க்க வேண்டும். ஏனெனில், இப்படியாக நாம் எதிர்ப்பார்க்கத்தக்கதாகவே தீர்க்கத்தரிசிகள் நம்மை வழிநடத்தியுள்ளனர் (மத்தேயு 13:35; சங்கீதம் 78:2; உபாகமம் 18:15, 18; தானியேல் 12:9). ஆகவே கர்த்தரும், அப்போஸ்தலர்களும் முற்காலத்துத் தீர்க்கத்தரிசனங்களில் மறைந்திருந்த சத்தியத்தை வெளிப்படுத்தியதோடுகூட, சத்தியத்தின் புதிய வெளிப்படுத்தல்களையும் வெளிப்படுத்துகின்றவர்களாகக் காணப்பட்டார்கள் என்று நாம் பார்க்கின்றோம்.

சுவிசேஷ யுகத்தின் சபையானது, பேதுரு எனும் பாறையின் மீது கட்டப்பட்டுள்ளார்கள் என்றும், அந்தப் பேதுருவினிடத்திலும், அவருக்குப் பின் அவர் ஸ்தானத்தில் இருக்கப் போகிறவர்களாகிய போப்புகளுக்குப் பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், திறப்பதற்கும், மூடுவதற்கும், தாங்கள் விரும்பும் எவரையும் அனுமதிப்பதற்கும் அல்லது விரும்பாதவர்களை அனுமதிக்காமல் இருப்பதற்கும் யாரையும் அல்லது எதையும் அவர்கள் விரும்பும்பட்சத்தில் கட்டுவதற்கோ அல்லது கட்டவிழ்ப்பதற்கோ அதிகாரம் உடையவர்கள் என்றும் உள்ள உரோம சபையின் அந்திக்கிறிஸ்தவ அமைப்பின் வாதங்களை நாம் இங்குக் கவனிப்பது நலமாயிருக்கும்.

இவ்வமைப்பு இவ்வாதங்களை, மத்தேயு 16:15-19 வரையிலான வேதவாக்கியங்களின் அடிப்படையில் கூறுகின்றது; "அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் (petros - ஒரு கல்) இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் (petra பாறை, ஒரு பெரிய கல்) என் சபையைக் கட்டுவேன்." ஏசாயா 8:14-ஆம் வசனம் போன்ற பல்வேறு பழைய ஏற்பாடு வசனங்களுக்கு இசைவாகப் பார்க்கும்போது, சபை கட்டப்படும் மாபெரும் பாறையாகக் கர்த்தர் இருக்கின்றார் என்றும், கிறிஸ்துவாகிய நம்முடைய இரட்சிப்பின் கன்மலை/பாறையாகிய அந்தப் பாறையின் மீது கட்டப்படும் தேவனுடைய மகிமையான ஆலயத்தின் ஜீவனுள்ள கற்களில், ஒரு கல்லாக பேதுரு இருக்கின்றார் என்றும் தெரிகின்றது.

தான் உள்ளடங்கிக் காணப்படும் ஜீவனுள்ள கற்களுக்கும் மற்றும் மாபெரும் அஸ்திபாரக் கல்லாகிய, பாறையாகிய/கன்மலையாகிய கிறிஸ்து இயேசுவுக்கும் இடையேயுள்ள உறவினைப் பேதுரு குறிப்பிடுகின்றார்; "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1 பேதுரு 2:4, 5).

நம்முடைய கர்த்தருடைய பல உவமைகளில் காட்டப்பட்டதுபோன்று, சுவிசேஷ யுக சபையானது, ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் பரலோக இராஜ்யமாக இருக்கின்றது (மத்தேயு 13). மேலும், அதன் சிலாக்கியங்களும், வல்லமைகளும், யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் (அப்போது) திறக்கப்படவிருக்கின்றது. உண்மையில் கர்த்தர்தான் தமது சபைக்கான கதவைத் திறந்து வைத்தார். கர்த்தருடைய நாமத்தில், இவ்வேலையைச் செய்யும்படிக்கு, பேதுரு, தெரிந்துகொள்ளப்பட்ட பிரதிநிதியாக மாத்திரமே இருந்தார். அதாவது, பெந்தெகொஸ்தே நாளில் தனது செய்தியின் மூலம் யூதர்களுக்குக் கதவைத் திறந்தவராகவும் (அப்போஸ்தலர் 2:14, 40), மூன்றரை வருடங்களுக்குப் பிற்பாடு, அதே கதவைக் கொர்நேலியு மற்றும் அவருடைய வீட்டாருக்கு, தான் கொடுத்த செய்தியின் மூலம், புறஜாதிகளுக்கும் பேதுரு திறந்து வைத்தார் (அப்போஸ்தலர் 10:33, 46). இந்தக் கனம் பொருந்தின ஊழியமே, அடையாளமான வார்த்தையில், "இராஜ்யத்தின் திறவுகோல்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது (மத்தேயு 16:9). ஆனால், ஒருமுறை திறக்கப்பட்ட அந்தக் கதவைப் பேதுருவானாலும் வேறெந்த மனுஷனாலும் சரி, மூட முடியாது. "தாவீதின் திறவுகோல்" தம்மிடம் இருப்பதாகக் கர்த்தர் உரைக்கின்றார் (வெளிப்படுத்தல் 3:7). மேலும், தெரிந்துகொள்ளப்பட்ட உண்மையுள்ள சபையின் கடைசி அங்கமானது, மகிமைக்குள் பிரவேசித்து முடிவது வரையிலும், அவருடைய இராஜ்யத்தின் இந்தக் கதவு அடைக்கப்படுவதில்லை. பேதுரு பயன்படுத்தின திறவுகோலானது பரிசுத்த ஆவியினால், பேதுருவின் மனதிற்குத் தெளிவுப்படுத்தப்பட்ட யுகத்திற்கடுத்த சத்தியமாகும்.

பூமியிலும், பரலோகத்திலும் எதையாகிலும் கட்டுவதற்கும், கட்டவிழ்ப்பதற்குமான வல்லமையானது பேதுருவுக்கு மாத்திரமல்லாமல், அனைத்து அப்போஸ்தலர்களுக்குமே அருளப்பட்டக் காரியமாகும். மேலும், சபைக்குச் சத்தியத்தை முன்வைக்கும் விஷயத்தில், தேவன் அப்போஸ்தலர்களுக்கு, பேச வேண்டிய வார்த்தைகளில் வழிநடத்துதல் கொடுத்ததினால், அனைத்து உண்மையுள்ளவர்களும், அப்போஸ்தலர்களுடைய போதனைகள் மீது நம்பிக்கைக்கொள்ளலாம். அவர்கள் சபையின் மீது எவைகளையெல்லாம் கடமைகள் எனக் காட்டினார்களோ, அவைகள் பரலோகத்திலும் அங்கீகரிக்கப்பட்டது என்றும், அவர்கள் எவைகளையெல்லாம் கட்டவிழ்த்துவிட்டார்களோ, அவைகளில் அவர்கள் தேவனால் வழிநடத்தப்பட்டபடியால், (உதாரணத்திற்கு: மோசேயின் நியாயப்பிரமாண அநுசரிப்புத் தொடர்புடைய விஷயம்) அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டது அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டது என்றும் நாம் அறிகிறோம்.

## ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள்

சபைக்கு ஊழியம் புரியும்படிக்குக் கர்த்தர் எப்படி 12-அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அதிகாரமும், கட்டளையும் கொடுத்தார் என்பவைகளைப் பார்த்த பிற்பாடு, அவர்களுடைய போதனைகள் வெறும் வாய்மொழிச் சொற்களா அல்லது ஏவப்பட்டுக் கூறின போதனைகளா என்று நாம் பார்க்கலாம். பின்வரும் காரியங்களை நாம் கவனிக்கலாம்:-

(1) அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தின் மூலமாக பரிசுத்த ஆவி குறித்த வாக்குத்தத்தம் முழுச் சபைக்கு வருவதாய் இருந்தாலும், தேற்றரவாளராகிய பரிசுத்த ஆவி குறித்த வாக்குத்தத்தம் விசேஷமாக அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டதை நாம் கவனிக்கின்றோம் (யோவான் 16:13-15). கடைசி இராப்போஜனத்தின் இரவில், யூதாஸ் வெளியே கடந்துபோன பிற்பாடு இந்தப் பரிசுத்த ஆவி குறித்த வாக்குத்தத்தமானது, 11-அப்போஸ்தலர்களுக்கும் கொடுக்கப்பட்டது (யோவான் 13:31). மேலும், 12-ஆம் அப்போஸ்தலனாக பவுல் நியமிக்கப்பட்டபோது, இந்த வாக்குத்தத்தமானது இவருக்கும் சரிசமமாகப் பொருந்தி நிறைவேறினதாகவும் இருந்தது. "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப்

போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவான் 14:26; 16:13).

இப்படியாக, அப்போஸ்தலர்களுக்கான ஏவுதல் மூன்று விதமான தன்மைகளைக்கொண்டது என்று நாம் அறிகின்றோம். அவை, (a) தெய்வீகத் திட்டம் மற்றும் நோக்கங்கள் தொடர்பான அனைத்துச் சத்தியத்தைப் புரிந்துகொள்ளும்படியான ஒரு வழிநடத்துதல், (b) இவர்கள் கர்த்தரோட காணப்பட்டபோது அவர் கொடுத்த அனைத்துப் போதனைகளை இவர்கள் தங்கள் ஞாபகத்தில் கொண்டுவந்து, அனைத்தையும் ஒப்புவிக்கும்படியாக இவர்களுடைய ஞாபகங்கள் புது வலுவூட்டப்படுதல் மற்றும் (c) கர்த்தருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மற்றும் பரிசுத்த ஆவி கடந்துவருவது வரையிலும், கர்த்தர் கூறவேண்டியிருந்ததும், புரிந்துகொள்ள முடியாமல் இருந்ததுமான "அநேக காரியங்களாகிய" வரவிருக்கின்ற காரியங்கள் தொடர்பான விசேஷித்த வெளிப்படுத்தல்கள் ஆகும் (யோவான் 16:12).

## அப்போஸ்தலர்களுடைய ஊக்கம்

உண்மையான சாட்சிகளாகவும், சரித்திர ஆசிரியர்களாகவும் நாம் அப்போஸ்தலர்களில் நம்பிக்கை வைத்திருப்பது நல்லது. அவருடைய சாட்சிகளில் நேர்மை என்ற முத்திரைப் பதிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அதில் அவர்கள் செல்வத்தையோ, மனிதர்களின் புகழ்ச்சியையோ நாடாமல் உயிர்த்தெழுந்து, மகிமையடைந்த ஆண்டவருக்காக, அவர்கள் தங்கள் உலகப்பிரகாரமான நலன்களைத் தியாகம்பண்ணும்படியான அவர்களுடைய வைராக்கியத்தைக் காண்கிறோம். இதைக் காட்டிலும் மேலான காரியங்கள் சொல்லப்படாவிட்டால் அவர்களுடைய சாட்சி பிரயோஜனமற்றதாகிவிடும். ஆனால் அவர்கள் ஆண்டவரால் ஏவப்பட்ட பிரதிநிதிகளாக உபயோகப்படுத்தப்பட்டார்கள் என்று வேதம் போதிப்பதை நாம் காண்கிறோம். மேலும் அவர்கள் சபையில் உண்டான பழக்கங்கள், உபதேசங்கள், சாட்சியைக்குறித்ததான காரியங்கள் போன்றவைகளுக்கு ஆண்டவரால் வழிநடத்தப்பட்டார்கள் என்பதைக் காண்கிறோம். அவர்கள் கேள்விப்பட்ட, கண்ட காரியங்களுக்காக மாத்திரம் சாட்சிகளாக இருக்கவில்லை, அதற்குமேலாகப் பரிசுத்த ஆவியின் மூலம் அவர்கள் பெற்ற போதனைகளுக்கும் சாட்சிகளாயிருந்தார்கள். அதினிமித்தம் அவர்கள் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருந்தார்கள். "எந்த மனுஷனும் எங்களை... தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரன் என்று எண்ணிக்கொள்ளக்கடவன்" என்று பவுல் சொன்னார் (1 கொரிந்தியர் 4:1). ஆண்டவரும், பன்னிருவரைக்குறித்து "நான் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்," என்றும் "என் ஆடுகளை மேய்ப்பாயாக," "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" என்றும் சொல்லும்போது இதே சிந்தையை வெளிப்படுத்தினார். அப்போஸ்தலரும் முற்காலங்களில் மறைக்கப்பட்டிருந்த இரகசியம் (கிறிஸ்துவைக்குறித்துப் புதுச்சிருஷ்டிகளின் உன்னத அழைப்பிற்கான சுவிசேஷத்தின் ஆழமான சத்தியங்கள்) இப்போது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும், தீர்க்கத்தரிசிகளுக்கும் ஆவியினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வெளிப்பாட்டின் நோக்கம் இப்படியாகக் கூறப்பட்டுள்ளது: "தேவனுக்குள்ளே ஆதிக்காலங்கள் முதல் மறைக்கப்பட்டிருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் (புதுச்சிருஷ்டியில் பங்குபெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்) இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு" (எபேசியர் 3:3-11). இயேசு கிறிஸ்துவை மூலைக் கல்லாகவும், அப்போஸ்தலர்களையும், தீர்க்கத்தரிசிகளையும் அஸ்திபாரமாகவும் கொண்டு சபை எப்படிக் கட்டப்பட வேண்டும் என்பதை விளக்கமாகக் கூறும்போது அப்போஸ்தலர் சொல்லுகிறார்: "இதினிமித்தம், (தேவனுடைய ஆலயமாகிய சபையைக் கட்டுவதற்கு) பவுலாகிய நான் புறஜாதியாராயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்" (எபேசியர் 2:20, 22; 3:1).

"எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவதற்காக" தேற்றரவாளன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டார். "அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவான் 14:26; 16:13). சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இது

முழுச்சபைக்கும் உரியதாகும்; ஆனால் விசேஷமாக அது அப்போஸ்தலருக்கு உரியதாக இருந்தது. உண்மையிலேயே மிஞ்சியிருக்கிற சபைக்கு இப்பொழுதும்கூட அது அப்போஸ்தலர் மூலம் கிரியை செய்கிறது. இன்றைக்கும் அவர்களுடைய வார்த்தை நமக்குப் புதியதும், பழையதுமான காரியங்களைக் கற்றுக்கொடுப்பதற்கு வழிகளாக உள்ளன. இந்த வாக்குத்தத்தத்திற்கு இசைவாக அப்போஸ்தலருக்கான ஏவுதல் மூன்று விதமான குணாதிசயங்களைக் கொண்டது என்று நாம் புரிந்துகொள்ளலாம்.

1. ஞாபகத்திலுள்ளவைகள் புத்துணர்வு பெற்றபடியால் ஆண்டவருடைய தனிப்பட்டப் போதனைகளை மறுபடியும் நினைப்பூட்டி மறுபடியும் சொல்ல வைத்தது.

2. யுகங்களின் தெய்வீகத் திட்டத்தைக்குறித்துச் சத்தியங்களைக் கிரகித்துக்கொள்ளும்படியான ஒரு வழிநடத்துதல்.

3. வரவிருக்கிற காரியங்களைக்குறித்து விசேஷ வெளிப்பாடு. ஆண்டவர் இதைக்குறித்து "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்போது தாங்கமாட்டீர்கள்" என்று கூறினார் (யோவான் 16:12).

அப்போஸ்தலர்களுடைய ஞாபகத்தில் உள்ளவைகள் புத்துணர்வு பெற்றன என்பது நம்முடைய ஆண்டவர் சொன்ன அதே சொற்றொடர், அல்லது ஆண்டவருடைய வார்த்தைகள் அவைகள் சொல்லப்பட்ட வரிசையின் பிரகாரம் மறுபடியும் வந்தது என்று நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. அப்போஸ்தல எழுத்துக்களும் இப்படி மறுபடியும் சொல்லப்பட்டதற்கான ஆதாரத்தைக் கொடுக்கவில்லை. ஆண்டவருடைய வாக்குத்தத்தமே எப்படியாயினும், அவர்களுடைய அறிக்கைகளின் உண்மைக்கு உத்திரவாதம் அளிக்கிறது. நான்கு சுவிசேஷங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டவருடைய ஆரம்பக்கால ஜீவியத்தைக்குறித்தும், ஊழியத்தைக்குறித்தும் உள்ள சரித்திரம் நமக்கு இருக்கிறது. இருந்தபோதிலும் ஒவ்வொன்றிலும் எழுதியவரின் தனித்தன்மை வெளிப்படுகிறது. ஒவ்வொருவரும் அவர்களுக்கே உரித்தான நடையில் அவர்களுக்கு மிக முக்கியமாகத் தோன்றுகிறவைகளைக் குறிப்பிடுகிறார்கள். மேலும் ஆண்டவருடைய மேற்பார்வையின் கீழ் இந்தப் பலவித குறிப்புகள் மொத்தமாகச் சபையின் விசுவாசத்தை உறுதிப்படுத்தத் தேவையான ஒரு முழுச்சரித்திரத்தையும், தீர்க்கத்தரிசிகளின் மேசியாவாக இயேசுவை அடையாளம் காட்டவும், அவரைக் குறித்ததான தீர்க்கத்தரிசனங்கள் நிறைவேறுதலைக் காட்டும்படியான, அவரது வாழ்க்கை சரித்திரத்தையும் அவருடைய போதனைகளையும் அளிக்கின்றன. ஏவப்பட்டது வாய் மூலம் வந்திருந்தால் (ஒவ்வொரு வார்த்தை வார்த்தையாகச் சொல்லுதல்) சொல்லப்பட்டவைகளை மறுபடியும் சொற்றொடரில் பல மனிதர்கள் கூறவேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஒவ்வொரு தனி எழுத்தாளரும் அவர் தன்னுடைய தனிப்பட்டத் தெரிவிக்கும் முறையிலுள்ள சுதந்தரத்தை உடையவராயிருந்து, குறிப்பிடும்படியான தகுதியும் மிக முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புகளைத் தெரிந்துகொண்ட விதம் பாராட்டுக்குரியது. ஆண்டவர் தமது பரிசுத்த ஆவியின் மூலமாக அவ்வளவு மேற்பார்வையிட்டதால் முக்கியமானதொன்றும் விடப்படவில்லை, தேவையானவைகள் எல்லாம் தவறாமல் குறிக்கப்பட்டுள்ளன. "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக" அவைகள் அருளப்பட்டுள்ளன. அப்போஸ்தலர் யோவானுடைய குறிப்புகள் மற்ற மூன்று சுவிசேஷகர்களான மத்தேயு, மாற்கு, லூக்காவுக்கு அனுபந்தங்கள் போன்று இருப்பதைப் பார்ப்பது சுவாரசியமாக இருக்கிறது. அவர் முக்கியமாக மற்றவர்களால் விடப்பட்டச் சூழ்நிலைகளையும் முக்கியம் பெற்ற சம்பவங்களையும் எடுத்துரைக்கிறார்.

ஆண்டவருடைய கூற்றுப்படி, அவர் பரிசுத்த ஆவியின் மூலம் அப்போஸ்தலர்களை வழி நடத்துவார் என்றும், அவர்கள் மூலமாகப் புதுச்சிருஷ்டியை "எல்லாச் சத்தியத்திற்குள்ளும்" வழி நடத்துவார் என்றும், வழிநடத்துதல் என்பது பொதுவானது என்றும், தனிப்பட்ட விதத்தில் எல்லாச் சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவது என்றும் அர்த்தப்படும். இப்படியாக நடைபெறுவதைக் குறிப்புகளில் சொல்லப்பட்டதிலிருந்து காணலாம். பவுலைத் தவிர மற்ற அப்போஸ்தலர்கள் சாதாரண கல்வியறிவில்லாத மனிதர்களாக இருந்தபோதிலும் அவர்கள் வேதத்தைப்பற்றிச் சொன்ன காரியங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கதாய் இருந்தது. அவர்களால் "ஞானிகளை வெட்கப்படுத்த முடிந்தது." வேத வல்லுநர்களை அன்றும் இன்றும் வெட்கப்படுத்த முடிந்தது. தவறு எவ்வளவு திறமையுள்ளதாய் இருந்தாலும், அதனால் அவர்கள் பிரமாணத்திலிருந்து, தீர்க்கத்தரிசிகளிலிருந்து, ஆண்டவருடைய போதனைகளிலிருந்து எடுத்துச் சொல்லும்போது முன்னால் நிற்கமுடியவில்லை. பிரமாணத்தில் வல்லுனர்களாயிருந்த யூதர்கள் இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். நாம் வாசிக்கிறோம், "அவர்கள் இயேசுவுடனேகூட

இருந்தவர்கள் என்றும் அறிந்துகொண்டார்கள். "அதாவது அவர்கள் அவருடைய உபதேசத்தைக் கற்று அவருடைய ஆவியைப் பிரதிபலித்தார்கள் (அப்போஸ்தலர் 4:5, 6, 13).

ஆண்டவருடைய வார்த்தைகளையும், பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்டவைகளையும் ஆதாரமாகக் கொண்டுள்ள அப்போஸ்தல நிருபங்கள், இப்படியான நியாயமான வாக்குவாதங்களை உடையனவாக இருக்கின்றன. இந்தச் சுவிசேஷ யுகத்தில் ஆண்டவர் தம்முடைய ஜனங்கள் மூலமாக நமக்கு முன்பாக வைத்திருக்கிற வாக்கைப் பின்பற்றுவதன் மூலம் அதே ஆவியில் பங்குபெற்றவர்கள் எல்லாரும் உண்மையான தீர்மானங்களுக்குள் வழிநடத்தப்படுகிறார்கள். ஆகவே நம்முடைய விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் இருக்கிறது (1 கொரிந்தியர் 2:4, 5). இருந்தபோதிலும், இந்தப் போதனைகளிலும் அவர்கள் சரித்திரப் பிரகாரமாகக் கொடுக்கப்பட்டிருப்பதிலிருந்தும் ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லப்பட்டதற்கு நமக்கு ஆதாரம் கிடையாது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் செய்ததுபோல, இயந்திரம் செயல்படுவது போன்று பேசி, எழுதும்படி ஆண்டவரால் சொல்லப்பட்டவைகள் என்பதற்கும் நமக்கு ஆதாரம் கிடையாது (2 பேதுரு 1:21). இதைக்காட்டிலும் அப்போஸ்தலருடைய மனது பிரகாசிக்கப்பட்டதினால், அவர்களுக்குத் தெளிவான நோக்கம் கிடைத்ததினால் அவர்களால் திவ்விய நோக்கங்களைத் தெளிவாகக் காணவும் அவைகளை அறிந்துகொள்ளவும் உதவியாக இருந்தது. அதனால் அவைகளைத் தெளிவாக எடுத்துரைக்க முடிந்தது. இதன்படி, இக்காலத்திலிருந்து ஆண்டவருடைய ஜனங்கள் எல்லாரும், அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளரும்படியாக உதவி செய்தது. அது மாத்திரமல்ல, "சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறியவும்" உதவிற்று (எபேசியர் 3:18, 19).

இருந்தபோதிலும், அவர்களுடைய மற்றப் போதனைகளும், அவர்களுடைய சரித்திர பிரகாரமான கூற்றுகளும், ஆண்டவரால் அவ்வளவாய் மேற்பார்வையிடப்பட்டதினால் தகுதியற்ற வார்த்தைகள் தவிர்க்கப்பட்டன, மேலும் அந்த நாளிலிருந்து இந்த நாள்வரை விசுவாச வீட்டாருக்கு "ஏற்றகாலத்தில் ஆகாரமாயிருக்கும்படியாக" அமையக்கூடிய விதத்தில் சத்தியம் முன்பாக வைக்கப்பட்டது என்ற நம்பிக்கை வைப்பதில் நாங்கள் முழுமையாக நியாயப்படுத்தப்பட்டுள்ளோம். அப்போஸ்தலர்கள் திவ்விய மேற்பார்வைக்குட்பட்டிருப்பார்கள் என்பதை ஆண்டவருடைய வார்த்தை முன்கூட்டியே பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறது: "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" (மத்தேயு 18:18). இது ஆண்டவர் தம்முடைய உரிமையை விட்டுவிடுவார் என்பதையோ, அப்போஸ்தலர்கள் சொல்லுவதற்கெல்லாம் கீழ்ப்படிவார் என்பதையோ குறிக்கவில்லை என்பதை நாம் புரிந்துகொள்வோம். ஆனால் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு, சபையில் அவர்கள் எடுக்கும் தீர்மானங்களில் எந்தக் காரியங்கள் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டும், எந்தக் காரியங்கள் விருப்பத்தின்படி செய்யப்படலாம் என்பதைக் குறித்ததான தீர்மானங்கள் சரியானவைகளாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. ஆகவே மொத்தத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முடிவெல்லாம் இறுதியாக ஆண்டவருடையதும், அப்போஸ்தலருடையதும் ஆகும் என்று சபையானது அறிந்துகொள்ளும்.

## அப்போஸ்தலர்களின் உறுதி

மேற்கூறியவைகளிலிருந்து அப்போஸ்தலர்கள் எவ்வளவாக பரிசுத்த ஆவியின் மூலமாக ஆண்டவரால் வழிநடத்தப்பட்டார்கள் என்றும், அவர்கள் வெளியரங்கமாய்ப் பேசினவைகளெல்லாம், சபை கண்டித்து உணர்த்தும்படியாக திவ்விய ஏவுதலினால் வந்தவை என்றும், கடந்த காலங்களில் தீர்க்கதரிசிகள் கூறியவைகள் உண்மையில் (பிழையற்ற தன்மையில்) குறைவுபடவில்லை என்றும் நாம் நம்புவது நியாயமானதே என்று உணருகிறோம். ஆனால் அவர்களுடைய சாட்சியைப் பொறுத்தவரை உண்மையானவைகள் என்றும், அவர்கள் சபைக்குக் கூறியவைகள் எல்லாம் திவ்விய ஒப்புதலைப் பெற்றிருந்தவைகளாக இருந்தன என்றும் நாம் நிச்சயத்திருந்தாலும், அப்போஸ்தலர் தங்களுடைய போதனைகளில் பிழை செய்யவில்லை என்ற கருத்துக்குப் பொதுவாக எதிர்மாறாக புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து வித்தியாசமான சூழ்நிலைகளை நாம் கவனமாக ஆராய்ந்து பார்ப்பது நல்லது. நாம் அவைகளைத் தனித்தனியாக ஆராய்ந்து பார்ப்போம்.

(1) நம்முடைய ஆண்டவரை அவருடைய சிலுவை மரணத்துக்கு முன்பாக மறுதலித்தது. இங்கே பேதுரு ஒரு பெரிய தவற்றைச் செய்தார் என்பதை மறுக்க முடியாது, இதைக்குறித்து உண்மையாகவே மனம் வருந்தினார். ஆனாலும் இந்த மறுதலிப்பு அவர் அப்போஸ்தலராகத் தெரிந்துகொள்ளப்பட்டப் பின்னர் ஏற்பட்டது என்றபோதிலும், அவர் பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு முன்பதாக ஏற்பட்டதாகும். மொத்தத்தில் அவர் அப்போஸ்தலராக திவ்விய நியமனம் பெறுவதற்கு முன்பதாக ஏற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மேலும், அப்போஸ்தலர்கள் பிழை செய்யாதவர் என்று நாம் கூறுவது, அவர்கள் வெளிப்படையாகக் கூறிய அவர்களுடைய போதனைகளுக்கும், அவர்கள் எழுதியவைகளுக்கும் உரித்தனதாகும், ஆனால் இவைகள் அவர்கள் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களில் சின்னஞ்சிறிய காரியங்களைக் குறிப்பிடுவதாக இல்லை. ஏனெனில் இவைகள் சந்தேகத்துக்கிடமில்லாமல் மண்பாண்டங்களாக இருந்தபோது ஏற்பட்ட கறைகள் மாத்திரமல்ல, ஆதாமின் பெரிய வீழ்ச்சியால் எல்லாப் பிள்ளைகளுமே பாதிக்கப்பட்டது போல அவர்களுக்கும் நடந்தது. "இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டத்தில் பெற்றிருக்கிறோம்" என்ற அப்போஸ்தலருடைய வார்த்தைகள், அவரையும் மற்ற அப்போஸ்தலர்களையும் குறிப்பது தெரிகிறது; மாத்திரமல்ல பரிசுத்த ஆவியைப் பெற்ற சபை அங்கத்தினர் அனைவரையும் குறிக்கிறது. நம்முடைய பங்கானது, நம்முடைய ஆண்டவரின் பெரிய மீட்பு வேளையில், புதுச்சிருஷ்டியாயிருக்கிற நம்முடைய வாஞ்சைகளுக்கு எதிராயிருக்கிற மாம்சத்தின் கறைகளை மூடுகிறது.

ஆண்டவருக்கும், சபைக்கும் ஊழியஞ்செய்யும்படியான அப்போஸ்தல உத்தியோகம், மாம்சத்தின் பெலவீனங்களிலிருந்து தனித்து இருக்கிறது; அவர்கள் மனுஷீக பிரகாரம் பூரணமானவர்கள் என்பதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்படாமல், அவர்கள் ஆமோதித்தப்படியே, நம்மைப்போல "பாடுள்ள மனுஷர்களாக" இருந்தபடியால் அளிக்கப்பட்டது (அப்போஸ்தலர் 14:15). அவர்களுடைய உத்தியோகம் அவர்களை முன்னிலைக்குக்கொண்டுவரவில்லை, அவர்களுடைய அழிந்துபோகிற சரீரங்களுக்கும் பூரணத்தைக்கொண்டுவரவில்லை; ஆனால் புதிய மனதையும், இவைகளை வழி நடத்தும்படியாக பரிசுத்த ஆவியையும் கொண்டுவந்தது. அது அவர்களுடைய சிந்தைகளையும், செயல்களையும் பூரணமாக்கவில்லை. ஆனால் அதற்குமேலாக பன்னிருவரின் போதனைகள் ஆண்டவருடைய வார்த்தைகளைப் பிழையற்றவைகளாக இருக்கும்படியாகப் பார்த்துக் கொண்டது. போப்பாண்டவர்களுக்கும் இம்மாதிரியான பிழையற்றத் தன்மை உண்டென்று உரிமைப் பாராட்டப்படுகிறது. போப்பாண்டவர் தனது பதவிக்கு அப்பால் அல்லது உத்தியோகப் பூர்வமாகப் பேசும் போது அது தேவனுக்கு மேற்பட்டது என்றும் அவர் பிழை செய்ய அனுமதிக்கப்பட மாட்டார் என்றும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. "ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்" என்ற வேத போதனையை மறுதலித்து ஒதுக்கிவிட்டு, போப்பும் அப்போஸ்தலர் என்று உரிமைப் பாராட்டி, தவறு செய்யாதவர் என்று சொல்லப்படுகிறது.

(2) ஒருமுறை பேதுருவும் மாயம்பண்ணினார், இருபக்கமும் பேசுவது என்ற குற்றம் புரிந்தார் (கலாத்தியர் 2:11-14). இது அப்போஸ்தலர்கள் தங்கள் நடத்தையில் பிழையற்றவர்களாக இருக்கவில்லை என்பதற்கு ஓர் ஆதாரம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இதை அப்போஸ்தலர்களும் ஒத்துக்கொண்டார்கள் என்று நாம் நினைக்கிறோம் (அப்போஸ்தலர் 14:15). ஆனாலும் மறுபடியும் சொல்லுகிறோம், அவர்கள்அப்போஸ்தலர்களாகப் பயன்படுவதற்கோ அல்லது அவர்களுடைய வேலையைத் தடைசெய்யவோ இந்த மாம்ச பலவீனங்கள் அனுமதிக்கும்படியாக விடப்படவில்லை, அவர்கள் "பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே சுவிசேஷத்தை" பிரசங்கித்தார்கள் (1 பேதுரு 1:12; கலாத்தியர் 1:11, 12). அதை அவர்கள் மனுஷீக ஞானத்தினால் பிரசங்கியாமல், தேவ ஞானத்தினால் பிரசங்கித்தார்கள் (1 கொரிந்தியர்; 2:5-16). பேதுருவின் இந்தப் பிழையைத் தேவன் அப்போஸ்தலராகிய பவுல் மூலம் உடனடியாகச் சரிசெய்தார். பவுல் அன்புடன், ஆனால் உறுதியுடன், பேதுருவின்மேல் குற்றம் சுமத்தினதினால் முகமுகமாய் எதிர்த்தார். பேதுருவும் இதை நல்மனதுடன் ஏற்றுக்கொண்டார். அவர் யூதருக்குப் பட்சமாய்க் காணப்பட்ட அவருடைய பலவீனத்தை அவர் நல்ல முறையில் மேற்கொண்டார் என்று அவருடைய இரண்டு நிருபங்கள் மூலமாக வெகுத் தெளிவாகத் தெரிகிறது. எப்படியெனில் இந்த நிருபங்களில் இந்த விஷயத்தைக்குறித்து மனதளவில் எந்தத் தடுமாற்றமும் இல்லை என்பதோடு, ஆண்டவரோடு ஒத்துப்போவதிலும், அறிக்கை செய்வதிலும் எந்தக் குறையும் தென்படவில்லை.

(3) அப்போஸ்தலர்கள் ஆண்டவருடைய வருகை வெகு சீக்கிரத்தில், ஒருவேளை அவர்களுடைய ஜீவிய நாட்களிலேயே இருக்கும் என்று எதிர்ப்பார்த்தார்கள் என்றும்,

இவ்விஷயத்தில் அவர்கள் உபதேச கோணத்தில் பார்க்கும்போது பிழை செய்தார்கள் என்றும், ஆகவே அவர்களுடைய உபதேசங்கள் நம்பப்படத்தக்கவைகள் அல்லவென்றும் கூறப்படுகிறது. ஆண்டவர் தனது இரண்டாம் வருகையைக் குறித்தும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதைக் குறித்தும் நிச்சயமற்ற நிலையில் அவர்களை விட்டதை ஆண்டவர் அறிவித்தார் என்று நாம் பதில் கூறுகிறோம். பொதுவாக உலகம் இந்த விஷயத்தைக்குறித்து இருக்கிற வண்ணமாக, இருளில் இராமல் இது எப்போது நடக்கும் என்று அறியும்படியாக அவர்கள் கவனித்துப்பார்க்க வேண்டும் என்றுதான் ஆண்டவர் கூறினார். ஆண்டவர் உயிர்த்தெழுந்த பின்னர் இந்த விஷயத்தைக்குறித்து அவர்கள் கேட்டபோது, "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்தில் வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" என்ற பதில் வந்தது. ஆகவே, ஒருகாலம் வரும்வரை இது ஒரு திவ்ய இரகசியமாக இருக்கும் என்று ஆண்டவர் அறிவித்ததற்கு அப்போஸ்தலர்களைக் குற்றப்படுத்தலாமா? நிச்சயமாக இல்லை. இருந்தபோதிலும், "வரவிருக்கிற காரியங்களை" குறித்து ஆவியின் வழிநடத்துதலின்படி அப்போஸ்தலர்கள் இரண்டாம் வருகையைக் குறித்து அறிவிப்பதில் மிகவும் ஜாக்கிரதை உள்ளவர்களாக இருந்தார்கள் என்பதைக் காண்கிறோம். அவர்கள், அதைத் தங்களுடைய ஜீவிய காலத்திலேயே எதிர்ப்பார்த்தார்கள் என்பதற்கு எதிர்மாறாக அவர்களுடைய வார்த்தைகள் இருந்தது என்று காண்கிறோம்.

உதாரணமாக, பேதுரு, தான் மரித்தப்பின்பு அவருடைய சாட்சியங்கள் சபையோடுகூட இருக்கும் என்ற எண்ணத்துடன் தன்னுடைய நிருபங்களை எழுதினார் என்று தெளிவாகக் கூறுகிறார். இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரை அவர் ஜீவிக்கும்படி எதிர்ப்பார்க்கவில்லை என்பதற்கு இது ஒரு தெளிவான உதாரணமாய் இருக்கிறது (2 பேதுரு 1:15). அப்போஸ்தலனாகிய பவுல், "காலம் குறுகியதாயிருக்கிறது" என்று அறிவிக்கும்போது எவ்வளவு குறுகியதாயிருக்கிறது என்று கூறுவதைப்போல பாவனை செய்யவில்லை. உண்மையாகவே ஏழாயிரம் வருட நாட்கள் என்ற ஒரு வார கணக்கைப் பார்க்கும்போது - அதில் ஏழாவது பாகம் இராஜ்யத்தைக் கொண்டுவரும் - ஏற்கெனவே ஆறில் நான்கு பங்கான காத்திருப்புக் காலம் கடந்துவிட்டது. இதேமுறையில்தான் பூலோகக் காரியங்கள் சம்பந்தப்பட்டவைகளைப் பற்றிப் பேசினோம். வியாழக்கிழமையன்று வாரம் சீக்கிரமாக முடிந்துவிடும் என்று கூறுகிறோம். பவுலும்கூட அவர் மரிக்கப்போவதைக் குறித்தும், அவருடைய ஜீவியத்தைப் பலிக்கொடுக்க ஆயத்தமாய் இருப்பதைக்குறித்தும், அப்படிச்செய்ய அவர் விரும்புவதைக் குறித்தும் சொன்னார். ஆண்டவருடைய நாள் இரவிலே திருடனைப்போல் வரும் என்று பவுல் சுட்டிக்காட்டினார். இந்த விஷயத்தைக் குறித்த சில தவறான எண்ணங்களைச் சரிப்படுத்தும்படியாக அவர் "ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாக தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாய் இருப்பதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும், கலங்காமலும் இருங்கள்" என்று கூறினார். "மேலும் எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது" என்பது போன்றவைகளைக் கூறினார். மேலும் "நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு இப்பொழுது அவனைத் தடைசெய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே" என்றும் சொன்னார்.

(4) "இதோ நீங்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் ஒரு பிரயோஜனமும் இராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலாத்தியர் 5:2) என்று பவுல் சொன்னதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. அது தீமோத்தேயு விருத்தசேதனம்பண்ணுவதற்கு வழி வகுத்தது (அப்போஸ்தலர் 16:3). ஆகவே, அவர் தவறாக போதிக்கவில்லையா, அவருடைய சொந்த சாட்சியை மறுப்பதுபோல் இல்லையா என்று நாம் கேட்கப்படுகிறோம். நாங்கள் அப்படியில்லை என்று பதில் கூறுகிறோம்; தீமோத்தேயு ஒரு யூதன், அவனுடைய தாயார் யூத பெண்ணாக இருந்தபடியாலும் (அப்போஸ்தலர் 16:1) யூதர்கள் மத்தியில் விருத்தசேதனம் தேசிய அளவிலான சடங்காச்சாரமாக இருந்தபடியினாலும், இது மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு முன்னரே ஆரம்பித்திருந்தபடியாலும், கிறிஸ்து தன் சிலுவையின்மேல் ஆணியடித்து நியாயப்பிரமாணத்திற்கு (உடன்படிக்கைக்கு) முற்றுப்புள்ளி வைத்த பின்னரும் அது வழக்கத்தில் இருந்தது. சீனாய் மலையில் இஸ்ரயேல் தேசத்திற்கென நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு 430 வருடங்களுக்கு முன்னரே விருத்தசேதனம் ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் கொடுக்கப்பட்டது. பேதுரு விருத்தசேதனம் உள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படியானார் (அதாவது - யூதர்களுக்கு) பவுல்

விருத்தசேதனம் இல்லாதவர்களுக்கு (அதாவது புறஜாதியாருக்கு) அப்போஸ்தலனாக்கப்பட்டார் (கலாத்தியர் 2:7, 8).

கலாத்தியர் 5:2-இல் உள்ள அவரது வாக்கு யூதர்களுக்கு அல்ல, அவர் புறஜாதியினருக்குக் கூறினார். ஏனெனில் அவர் விருத்தசேதனத்தைப் பற்றி நினைத்ததற்கு உண்டான ஒரே காரணமே, சில கள்ள போதகர்கள் அவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையைக் கைக்கொள்ள வேண்டும், அதோடுகூடக் கிறிஸ்துவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் குழப்பி, அவர்கள் கிருபையின் உடன்படிக்கையை அலட்சியப்படுத்தும்படியாக வழிநடத்திக்கொண்டிருந்தார்கள். அவர்கள் விருத்தசேதனம்பண்ணப்படுவது (இப்படி எந்தக் காரணத்தினாலும்) கிருபையின் உடன்படிக்கையை மறுப்பதாகும், ஆகவே அது கிறிஸ்துவின் முழுக்கிரியையுமே மறுப்பதாகும் என்று அப்போஸ்தலர் இங்கே காட்டுகிறார். யூதர்கள் தங்கள் தேசிய முறைமைகளின்படியான விருத்தசேதனத்திற்கு மறுப்புத் தெரிவிக்கக் காரணம் காணவில்லை. இது 1 கொரிந்தியர் 7:18, 19-இல் உள்ள அவருடைய வார்த்தைகளிலிருந்தும், தீமோத்தேயுவோடு அவர் தொடர்பு கொண்டதிலிருந்தும் தெரிகிறது. தீமோத்தேயுவோ அல்லது வேறு எந்த யூதனோ விருத்தசேதனம் பண்ணப்படுதல் அவசியம் என்றபடியல்ல, ஆனால் அது முறைமைக்கு மாறானதல்ல, மேலும் ஓரளவுக்கு யூதர்கள் மத்தியிலே அவர் செல்ல வேண்டியிருந்தபடியால், அது அவருக்கு நன்மையாயிருந்தது. யூதர்களின் நம்பிக்கையை அவர் பெற்றார். ஆனால் இதைத் தவறாகப் புரிந்துகொண்ட சிலர் முழுவதும் கிரேக்கனாயிருந்த தீத்துவையும் விருத்தசேதனத்திற்கு வழிநடத்த வேண்டும் என்றபோது பவுல் இந்த விஷயத்தில் முழு எதிர்ப்பைத் தெரிவித்தார் என்று காண்கிறோம் (கலாத்தியர் 2:3-5).

(5) அப்போஸ்தலர் 21:20-26-இல் சொல்லப்பட்டப் பிரகாரமாக பவுல் செய்தது, சத்தியத்தைக் குறித்து அவர் போதித்ததற்கு மாறாகப் பிரதிபலிப்பதுபோல் எடுத்துக்கொள்ளப்படுகிறது; அது உபதேசங்களையும், முறைமைகளையும் குறித்த விஷயங்களில் அவருடைய தவறு எனச் சுட்டிக்காட்டுகிறது என்று எடுத்துக்கொள்ளப்படுகிறது; மாத்திரமல்ல, இந்த இடத்தில் இழைத்த தவறினால் பவுல் கைதியாக அதிகமாக உபத்திரவம் அனுபவிக்க அனுமதிக்கப்பட்டார் என்றும், கடைசியில் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டார் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் வேதாகமத்தில் சொல்லப்பட்டவைகளிலிருந்து இப்படியான கருத்தைக்கொள்ள முடியாது. குறிப்புகள் காட்டுகிறபடி இந்த அனுபவத்தின்போது பவுலுக்கு மற்ற அப்போஸ்தலர்களுடைய அனுதாபமும், ஆதரவும் இருந்தது. ஆனால் இதற்கும் மேலாக, ஆண்டவருடைய சலுகை தொடர்ந்து இருந்தது. அவர் மற்ற அப்போஸ்தலர்கள் சொன்னபடி நடந்தார். அவர் எருசலேமுக்குச் செல்வதற்கு முன்னால் தீர்க்கத்தரிசனமாக உரைக்கப்பட்டது (அப்போஸ்தலர் 21:10-14) என்னவெனில் கட்டுகளும், சிறைவாசமும் அவரை எதிர்நோக்கியிருப்பது என்பதாகும். அவர் தன்னுடைய ஊழியத்தினிமித்தம் கீழ்ப்படிதலோடு முன்கூட்டியே சொல்லப்பட்டத் துன்பங்களைத் தைரியமாக நோக்கினார். இந்தத் துன்பத்தின் நடுவிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று "பவுலே திடன்கொள், நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல உரோமாபுரியிலும் சாட்சிக்கொடுக்க வேண்டும்" என்றார். பின்னர் நாம், ஆண்டவர் மறுபடியும் பவுலுக்குச் சிலாக்கியமாக இப்படியாகக் கூறினார் என்று வாசிக்கிறோம். "என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவர் என்னிடத்தில் வந்து நின்று பவுலே, பயப்படாதே நீ இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும். இதோ உன்னுடனேகூட யாத்திரைப் பண்ணுகின்ற யாவரையும் தேவன் உனக்கு தயவுபண்ணினார்" (அப்போஸ்தலர் 23:11; 27:23, 24).

இந்த விஷயங்களிலிருந்தும், பவுலின் ஒரே மாதிரியான துணிச்சலான நல்நடத்தையிலிருந்தும், ஊழியத்தையும் சாட்சியையும் பெரிதாக எண்ணியதிலிருந்தும், தேவன் ஆட்சேபிக்காமல் ஆதரித்தார் என்று பார்க்கும்போது நாம் இதை நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலர் 21:21-27 வசனங்களை நாம் தியானிக்கும்போது, பவுல் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட யூதர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விருத்தசேதனம் பண்ணக்கூடாது என்று அவர் போதியாமல் இருந்தது மாத்திரமல்ல, மோசேயின் நியாயப்பிரமாணத்தை மறுக்கவுமில்லை, ஆனால் அதற்கு மாறாக அவ்வளவு பலவந்தமாக உன்னதமான உண்மைகளை நிழலாட்டமாய்க் காட்டின மோசேயின் நியாயப்பிரமாணம் சுட்டிக்காட்டுவதைக் காட்டி அதைக் கனப்படுத்தினார் என்பதை நாம் காண்கிறோம். ஆகவே, மோசேக்கு மறுப்புத் தெரிவிக்காமல், அதற்குப் பதிலாக நியாயப்பிரமாணம் நலமானதாயும் பரிசுத்தமுள்ளதுமாயிருக்கிறது என்று கூறி மோசேயைக் கனப்படுத்தினார். மேலும் அதனால் பாவத்தின் கொடிய தன்மையைக் குறித்ததான அறிவு அதிகரித்துள்ளது, நியாயப்பிரமாணம் அவ்வளவு உன்னதமானதாக இருந்தபடியால்

பூரணமில்லாத எந்த மனிதனும் அதற்குக் கீழ்ப்படிய முடியாது என்று சுட்டிக்காட்டியதோடு கிறிஸ்து அதைக் கடைப்பிடித்ததால் அதனால் வரும் பலன்களைப் பெற்றார் என்றும், இப்பொழுது கிருபையின் உடன்படிக்கையின் கீழாக நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க முடியாதவர்களுக்கு நித்திய வாழ்க்கையையும், ஆசீர்வாதங்களையும் இலவசமாகத் தருகின்றார் என்றும், ஆனால் விசுவாசத்தினால் அவருடைய பூரணமான கீழ்ப்படிதலையும், பலியையும் அவர்களுடைய பூரணமற்ற நிலையை மூடுவதாக ஏற்றுக்கொண்டவர்கள், நீதியின் பாதையில் அவரைப் பின்பற்றுகிறவர்கள் ஆனார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

யூத யுகத்தின் சடங்காச்சாரங்களாகிய, உபவாசங்கள், மாதப்பிறப்பு, ஓய்வு நாட்கள், பண்டிகைகளைக் கொண்டாடுவது போன்றவைகள் சுவிசேஷ யுக ஆவிக்குரிய காரியங்களுக்கு நிழலாக இருந்தன. அப்போஸ்தலர் தெளிவாகக் காட்டுகிறது என்னவெனில் புது உடன்படிக்கையின் சுவிசேஷம் இவைகளை கட்டளையிடவோ, தடைசெய்யவோ இல்லை. (ஆண்டவருடைய இராப்போஜனமும், முழுக்கு ஞானஸ்நானமும் மாத்திரமே நமக்கு அடையாளமாயிருக்கும்படி கட்டளையிடப்பட்டது, அவைகள் புதியவைகளாகும்) (கொலோசெயர் 2:16, 17; லூக்கா 22:19; மத்தேயு 28:19).

நாம் இப்பொழுது பார்க்கின்ற யூதர்களுடைய அடையாளமான சடங்காச்சாரங்களில் ஒன்றான "சுத்திகரிப்பு" என்பது பவுலாலும் நான்கு யூதர்களாலும் கடைபிடிக்கப்பட்டது. யூதர்களாக இருந்தபடியால், அவர்கள் தெரிந்துகொண்டால் அவர்களை கிறிஸ்துவுக்குள் தேவனுக்குத் தங்களை அர்ப்பணம் செய்யும் உரிமை மாத்திரம் அல்லாது இந்த அடையாளமாய் இருக்கிற சுத்திகரிப்பையும் செய்ய அவர்களுக்கு உரிமை இருந்தது. இதைத்தான் அவர்கள் செய்தார்கள். பவுலோடு இருந்த மனிதர்கள் ஆண்டவருக்கும், ஜனங்களுக்கும் முன்பாக, தங்கள் தலைகளைச் சவரம்பண்ணிக்கொள்வதன் மூலம் அதிகமாக தாழ்த்தும்படி ஒரு பொருத்தனைச் செய்து கொண்டார்கள். இந்த அடையாளமான சடங்காச்சாரங்களுக்கு பணச்செலவு உண்டு. இதற்கான செலவு ஒருவேளை தேவாலயத்தின் செலவுகளைச் சந்திக்கும்படியாக ஒவ்வொருவருக்கும் என ஏற்படுத்தப்பட்ட காணிக்கைப் பணமாகும்.

அப்போஸ்தலராகிய பவுல் ஒருபோதும் யூதர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டார்கள் என்று கற்றுக்கொடுக்கவில்லை. ஆனால், அதற்கு மாறாக அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவன் ஜீவிக்கும் காலம்வரை அவன்மேல் அதற்கு ஆதிக்கம் உண்டு என்று கற்றுக்கொடுத்தார். இருந்தபோதிலும் ஒரு யூதன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரோடு மரிப்பானாகில், இப்படிப்பட்ட யூதன்மேலுள்ள நியாயப்பிரமாண உடன்படிக்கையின் உரிமை முற்றுபெறும். மேலும் அவனை கிறிஸ்துவுக்குள் தேவனுடைய விடுதலையாக்கப்பட்ட மனிதனாக ஆக்கிற்று (உரோமர் 7:1-4). ஆனாலும் மனமாற்றமடைந்த புறஜாதியினருக்கு, அவர் அவர்கள் ஒருபோதும் யூத நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்ததில்லையாதலால், யூத நியாயப்பிரமாண சடங்காச்சாரங்களையும், பண்டிகைகளையும் கைக்கொள்ள முயற்சி செய்வார்கள் என்றால் அது அவர்கள், தங்களுடைய இரட்சிப்புக்கு அந்த அடையாளங்கள்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றும் கிறிஸ்துவின் பலியினால் வரும் புண்ணியத்தின்மேல் முழுமையாகச் சார்ந்திருக்கவில்லை என்று பொருள்படும் என்றும் அவர் கற்றுக்கொடுத்தார். இதற்கு அப்போஸ்தலர்கள் இசைவு தெரிவித்தார்கள் (அப்போஸ்தலர் 21:25; 15:20, 23-29-யைப்பார்க்கவும்).

நாங்கள் முடிவாகக் கூறுவது என்னவெனில், பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும் தேவன் ஆச்சரியமாக உபயோகப்படுத்தினார். அவர்களை அவர் அவருடைய சத்தியத்திற்காக மிகவும் திறமையுள்ள ஊழியக்காரர்களாக்கி அவர்கள் எழுதிய விஷயங்களில் அவர்களை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் வழிநடத்தினார். ஆகவே, தேவனுடைய மனிதனை தேறியவனாக்கும் எந்த ஒரு காரியமும் விடப்படவில்லை. அவர்களுடைய ஆதிக்கால எழுத்துக்களில் அப்போஸ்தலர்களோடுகூடப் புரிந்துகொள்ள முடியாதளவுக்கு ஒரு கரிசனையும், ஞானமும் இருந்தன. நம்முடைய விசுவாசத்தின் நிச்சயமான இந்த அஸ்திபாரத்திற்காகத் தேவனை ஸ்தோத்திரிப்போம்.

---

# யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்

விசுவாசிகளுக்குத் தண்ணீரினால் யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம் எனும் இந்த அனுசரிப்புச் சம்மந்தப்பட்ட விஷயத்தில், சபை மாத்திரமே போதிப்பதற்கான அல்லது ஞானஸ்நானம் கொடுப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப் பெற்றுள்ளனர் என்பது தவிர மற்றப்படி வேறெந்த வரையறைகளும் வேதவாக்கியங்களில் முன்வைக்கப்படவில்லை. ஞானஸ்நானம் எனும் அனுசரிப்பை நிகழ்த்துபவரின் விசுவாசமும், அறிவும் பொருட்டல்ல, மாறாக ஞானஸ்நானம் எடுப்பவரின் விசுவாசமும், அறிவுந்தான் முக்கியமாய் உள்ளது. சில சமயங்களில் யாருக்காக ஞானஸ்நானம் கொடுக்கப்படுகின்றதோ அவரைக் காட்டிலும், ஞானஸ்நானம் எனும் அனுசரிப்பை நடப்பிப்பவர் எல்லாவிதத்திலும் தகுதியில் குறைந்தவராகக் காணப்படலாம் (யோவான் 3:14) மற்றும் சிலசமயம் இராஜ்யத்தை அல்லது சபை வகுப்பாரைக்குறித்து விசுவாசியாதவராகக்கூட இருக்கலாம் (மத்தேயு 11:11). நிச்சயமாகவே போதிப்பதற்கு அங்கீகாரம் பெற்ற யாவரும், ஞானஸ்நானம் கொடுத்திடுவதற்கும் அங்கீகாரம் சமமாய் உடையவர்களாய் இருக்கின்றனர் மற்றும் இது - ஊழியத்திற்கும், நியமனத்திற்கும் (மத்தேயு 28:19, 20) மற்றும் யோவான் 17:14-18,23-ஆம் வசனங்களின்படியான ஏற்படுத்துதலுக்குமுரிய பொதுவான அழைப்பின்படியான "யுகத்தின் முடிவுபரியந்தமுள்ள" கிறிஸ்துவின் ஒவ்வொரு உண்மையான பின்னடியாரையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. மேலும் இந்த நியமனமானது, "கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள" பெண்களை (ஞானஸ்நானம் கொடுக்கும்) இச்சேவைக்கு நிச்சயமாய்த் தடைப்பண்ணுகிறதில்லை (கலாத்தியர் 3:28); அபூர்வமாய்த் தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் இத்தகைய ஊழியங்களைச் செய்யலாமே ஒழிய, மற்றப்படி இத்தகைய ஊழியங்கள் புரிவதைத் தன்னடக்கம், சௌகரியம் முதலான காரியங்களினால் அவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

---

# தேவனுடைய ஒழுங்கில் புருஷனும், ஸ்திரீயும்

வேதாகமத்தின் கண்ணோட்டத்தின்படி, அதிலும் விசேஷமாக அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுடைய போதனையின் வெளிச்சத்தில், ஸ்திரீயானவளுடைய செயல் எல்லையைக் கவனிப்பதற்கு இந்தப் பிரதியில் நாம் இடம் ஒதுக்குகின்றோம். அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைக்குறித்துப் பொதுவாக நிலவிக்கொண்டிருக்கும் ஒரு தவறான புரிந்துகொள்ளுதலானது, அவர் ஆவியில் ஏவப்பட்ட விஷயம் குறித்துச் சந்தேகத்தின் ஆவியை உருவாக்கியுள்ளது, மேலும் இவ்வாறாக இது அவநம்பிக்கையை உண்டாக்க ஏதுவாயிற்று. இப்படிப்பட்டதான சந்தேகங்கள் மனதை ஆக்கிரமித்துக்கொள்ளும்போது, அது இப்பொழுது பெண்ணின் உரிமைகள் என அழைக்கப்படும், மிதமிஞ்சிய நிலைக்கு வழிநடத்துவதற்கு ஏதுவாய்க் காணப்படுகின்றது -- சிலரை மறுமுனைக்குத் தள்ளிவிடுகின்றது, அதாவது சிலர் புரிந்துகொள்வதுபோல் பெண்களை அடிமைகளாக, கடின வேலைகளைச் செய்பவர்களாக அல்லது ஆண்களை மகிழ்விப்பவர்களாக ஆக்கிவிடும் நிலைக்குத் தள்ளிவிடுகின்றது -- இப்படியாகத்தான் அப்போஸ்தலர்கள் போதித்துள்ளார்கள் எனத் தவறாக எண்ணிக் கொண்டு இப்படியாகச் செய்கின்றனர். R1521-இல் நாம் முன்வைத்துள்ள அப்போஸ்தலருடைய அதிகாரம் மற்றும் தவறிழைக்காத் தன்மையைக்குறித்து அநேகக் கேள்விகள் எழும்பியுள்ளபடியால், அப்போஸ்தலரின் அதிகாரம் மற்றும் தவறிழைக்காத் தன்மைக்கு ஆதரவாக இந்தப் பாடம் பிற்சேர்க்கையாகக் கருதப்படலாம்.

கிறிஸ்து இயேசுவுக்குள் ஆவிக்குரிய புதியச்சிருஷ்டிகளாக இருக்கும் நாம், வம்சாவளியின் அடிப்படையிலோ, ஸ்தானத்தின் அடிப்படையிலோ அல்லது பாலின வேறுபாட்டின் அடிப்படையிலோ தேவனால் மதிப்பிடப்படவில்லை என்றும், வரவிருக்கின்ற இராஜ்யத்தில் சுதந்தரத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதி பற்றின அவருடைய கணிப்பில், "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை, ஏனெனில் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறோம்" மற்றும் "நமக்கு உண்டான அழைப்பினாலே அனைவரும் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம்" என்றுமுள்ள உண்மையை நாம் அறிந்துகொண்டிருந்தாலும், நாம் இன்னமும் மாம்சத்தில் காணப்படுகின்றோம் என்பதும், நமக்குப் பூமிக்குரிய சூழ்நிலைகளுடன் தொடர்பு இருக்கின்றது என்பதும், இன்னுமாக ஜீவியத்தின் பல்வேறு உறவுகள் விஷயத்தில் நம்முடைய சரியான மனோபாவம் மற்றும் இவைகள் தொடர்புடைய வேதவாக்கியங்களின் போதனைகளை நாம் உண்மையாய்க் கடைப்பிடித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் தெய்வீகத் தயவிற்கு நாம் பாத்திரவான்களா (அ) பாத்திரமற்றவர்களா என்பது கணிக்கப்படும் என்பதும் உண்மையே (கலாத்தியர் 3:28; எபேசியர் 4:4). இந்த "ஆயத்தம்பண்ணும் நாளில்" உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்த அனைத்துக் கேள்விகளும் எழும்பிக்கொண்டிருக்க அநேக நாத்திகர்களும், கிறிஸ்தவர்களும்கூடச் சேர்ந்து வேதாகமம் மனித அடிமைத்தனத்தைப் போதிக்கின்றது எனக் கூறிவருகிறபடியால், இக்காரியமும் ஜனங்கள் பரிசீலனைப்பண்ணுவதற்கும், சர்ச்சைப்பண்ணுவதற்கும் ஏதுவாக முன்வைக்கப்பட்டு வருகின்றது (நாகூம் 2:3).

ஆகவே இக்காரியம் தொடர்பான பல்வேறு நபர்களுடைய மனித ரீதியிலான தவறான அபிப்பிராயங்கள் என்னவாக இருப்பினும், சத்தியத்திற்கு வழிநடத்துவதற்குரிய ஒரே பாதுகாப்பான வழிக்காட்டி தேவனுடைய வார்த்தைகளே என்ற நிச்சயத்துடன் இக்காரியம் தொடர்பான வேதவாக்கிய கண்ணோட்டம் என, நாம் விசுவாசிக்கின்றவைகளை முடிந்தமட்டும் சுருக்கமாக முன்வைப்பதே நமது பிரயாசமாகும். இக்காரியம் தொடர்பாக, அவருடைய வார்த்தையானது விடையளிக்காமல் இல்லை; இக்காரியம் தொடர்பான வேதவாக்கியத்தின் அனைத்துச் சாட்சிகளையும் ஆராய்கையில், இது வேதாகமத்திற்கு எதிராக மேற்குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டை முற்றிலும் அமைதிப்படுத்திவிடுவதாக, நியாயமாக சிந்திக்கும் அனைத்துக் கிறிஸ்தவர்களின் கணிப்பில் காணப்படும் என நாம் நம்புகின்றோம்.

மனுஷன் முதலாவதாக உண்டாக்கப்பட்டான் மற்றும் பின்னர்த்தொடர்ந்து ஸ்திரீயானவள் மனுஷனுக்கு ஏற்ற ஆதரவாகவும், பொருத்தமான துணைவியாகவும் உண்டாக்கப்பட்டாள் என்ற குறிப்பிற்கு அப்பால், (நம் பாடத்தின்) இக்காரியம் தொடர்பான வேதாகமத்தின் முதலாவது வாக்குமூலமானது, விலக்கப்பட்டக் கனியைப் புசித்தப் பிற்பாடு,

ஸ்திரீயானவளிடம் தேவன் உரைத்த வார்த்தைகளில் இடம்பெறுகின்றது -- "உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்வான்." ஆண்டுகொள்வதற்கான/ஆளுகைச் செய்வதற்கான அதிகாரம் இயல்பாகவே புருஷனுடைய தலைமை நிலையில் அடங்கியிருக்க, இதைவிட அதிகமான காரியத்தையே கர்த்தர் குறிப்பிட்டுள்ளார் என்பதை எளிதில் காணமுடிகின்றது; ஏனெனில் ஆதிபாவத்திலுள்ள ஸ்திரீயானவளின் பங்கின் காரணமாக அவள்மீது வந்த தண்டனைக்குத் தொடர்புடையதாகவே கர்த்தரால் அவ்வார்த்தைகள் உரைக்கப்படுகின்றது (1 கொரிந்தியர்11; 1 தீமோத்தேயு 2:13). ஸ்திரீயானவளுடைய புருஷனின் ஆண்டுகொள்ளுதல் அடக்குமுறையாக இருக்கும் என்பதும், மற்றும் வேறு விதத்தில் அவளால் அனுபவிக்க முடியாத அநீதியை அவள், புருஷனின் கீழ் அனுபவிப்பாள் என்பதும் குறிப்பாகச் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. பூரண நிலையில் தனது குடும்பத்தின் அனைத்து அங்கங்களினுடைய நலன் மற்றும் பாதுகாப்பிற்காகச் செலுத்தப்படக்கூடியதும், அன்பாகவும், வழிகாட்டுவதற்காகவும் இருக்கக்கூடியதுமான புருஷனுடைய தலைமை நிலை (அ) ஆளுகையானது, பெரும்பாலானவர்களின் விஷயத்தில் விழுகையின் காரணமாகச் சுயநலத்துடன்கூடிய ஆளுகையாகவும், அச்சம் கொடுக்கிறதும், வலுக்கட்டாயப்படுத்துகிறதுமான ஆளுகையாகவும் ஆகியுள்ளது. உண்மையில் சிலர் தங்களுடைய சுயநலமான அடக்குமுறையை நியாயப்படுத்துவதற்கென இந்த வசனத்தையே பயன்படுத்துகின்றவர்களாக இருக்கின்றனர்.

இப்பாடத்தின் காரியம் தொடர்பான கர்த்தருடைய வாக்குமூலத்தினை, சம்பவித்துள்ள மெய்யான சம்பவங்கள் முழுமையாக உறுதிப்படுத்தினாலும், அதற்கென்று தங்களுக்கு இயற்கையாகவே காணப்படும் தலைமைத்துவத்தை இவ்வாறாக தவறாய்ப் பயன்படுத்துபவர்கள் மூலம் தேவனுடைய சித்தம் நிறைவேற்றப்படுகின்றது என அனுமானிப்பதும் பெரிய தவறாகும். மாறாக இவர்களின் செயல்பாடுகளில் மனிதன் தன் ஆதி தேவசாயலினின்று விழுந்ததின் காரணமாக பெண்ணினம் மீது வரும் தீமைக்குறித்ததான தேவனுடைய தீர்க்கதரிசனத்தையே நாம் பார்க்க வேண்டும். மேலும் எந்தளவுக்கு மனுஷன் சீர்கேடு அடைந்திருக்கின்றானோ, அவ்வளவுக்கு அதிகமாய் அவன் தன்னுடைய சொந்த சரீரமாகப் பேணவும், அன்பு செய்ய வேண்டியவளுமானவளை இரக்கமற்ற விதத்தில் நடத்துவதும் கவனிக்கப்படலாம்.

உலகத்தில் புருஷனுடைய செயல்பாட்டு எல்லையானது மிகத் தெளிவாகச் சிருஷ்டிகளுடைய தலை அல்லது பிரதானமானவர் என்று விளக்கப்பட்டிருக்கிறது. புருஷனுக்கு உதவி செய்பவளாக, வாழ்க்கைத் துணைவியாக இருக்கும் ஸ்திரீயானவளின் செயல் எல்லையானது மிகுந்த வாக்குவாதத்திற்குரியதாகவே காணப்படுகின்றது. "எந்தளவுக்கு ஸ்திரீயானவள், புருஷனுக்கு உதவிச் செய்யலாம்?" என்பதே கேள்வி; வேதாகமத்தின் போதனைப்படி ஸ்திரீயானவள் அவளால் முடிந்தமட்டும் மற்றும் வாய்ப்புகள் அனுமதிக்கும் அளவுக்கும் வீட்டிலும், சபையிலும், உலகத்திலும் புருஷனுக்கு உதவி செய்யலாம் என நாம் நம்புகிறவர்களாக இருக்க -- ஒருவேளை வீட்டில் இல்லையென்றாலும், சபையிலும், உலகத்திலுமாகிலும் அவளுடைய செல்வாக்கை அதிகமானளவில் எல்லைக்குட்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் விதத்தில் அநேக வேறுபாடான கருத்துக்களுள்ள குரல்கள் நமக்குக் கேட்கின்றது. ஆகையால் சபையில் ஸ்திரீயினுடைய ஸ்தானத்தைக் குறித்து வேதவாக்கியங்கள் கூறுவது என்ன என்று நாம் முதலாவதாகக் கேட்கலாம்.

## சபையில் ஸ்திரீயினுடைய இடம்

பாலினத்தைப் பொருட்படுத்தாமல் பேதுரு முழுச்சபையை நோக்கி: "நீங்களோ, உங்களை (அனைவரும் - ஆண்கள் மற்றும் பெண்கள்) அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரிகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்றார் (1 பேதுரு 2:9). இன்னுமாக "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்" என்றும் வாசிக்கின்றோம் (ஏசாயா 61:1). லூக்கா 4:18-20 வரையிலான வசனங்களையும்கூடப் பாருங்கள்; "ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது; ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை

அனுப்பியுள்ளார். பின்னர் அந்த ஏட்டைச் சுருட்டி ஏவலரிடம் கொடுத்துவிட்டு அமர்ந்தார். தொழுகைக்கூடத்தில் இருந்தவர்களின் கண்கள் அனைத்தும் அவரையே உற்று நோக்கியிருந்தன" (திருவிவிலியம்). இதில் நமது கர்த்தர் உரைக்கும் தீர்க்கத்தரிசனத்தில் ஒரு பகுதியே அவருக்குப் பொருந்துகின்றதாகவும், மீதி அவருடைய நாட்களுக்குரியதாய் இராமல், கிறிஸ்துவின் சரீரத்தினால் அறிவித்தல் - ஆண்களும், பெண்களும் - அறிவித்தல் பற்றியதாகவும் உள்ளது. இவ்வசனத்தில் இடம்பெறும் "ஏனெனில்" எனும் வார்த்தையானது, இவ்விதமாய் அபிஷேகிக்கப்பட்டவர்கள் ஆண்களோ அல்லது பெண்களோ சரி, அவர்கள் - நற்செய்தியினைப் பிரசங்கிக்க, அவர்களைத் தகுதியாக்கிடுவதே அபிஷேகித்தலுக்கான நோக்கமாய் இருக்கின்றதெனச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் அபிஷேகிக்கப்பட்டவர்கள் அனைவரும் - அவர்கள் ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ, யூதர்களாகவோ அல்லது கிரேக்கர்களாகவோ, அடிமையானவனாகவோ அல்லது சுயாதீனனாகவோ இருப்பினும் - அவர்கள் அனைவரும் பிரசங்கிக்கும்படிக்கு அபிஷேகிக்கப்பட்டவர்கள் ஆவர்.

எபிரெயர் 5:12-ஆம் வசனத்தில் பவுலடிகளார் பாலின வித்தியாசம் ஏதும் குறிப்பிடாமல், ஊழியத்திற்குத் தங்களைத் தகுதிப்படுத்திடும் வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தவறின காரணத்தினால், போதிக்கத் திறமையற்றுக் காணப்படுவதற்காய்ச் சபையைக் கடிந்துகொள்ளும் விதமாய், "(செலவழிக்கப்பட்ட) காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்" என்று கூறுகின்றார். மீண்டுமாக, "அவனவன் (ஆண் அல்லது பெண்) பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்" என்று நாம் வாசிக்கின்றோம் (1 பேதுரு 4:10). "மேலும் உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமாம்" என்றும் பவுலடிகளார் கூறியுள்ளார் (1 கொரிந்தியர் 4:2). இதில் பாலின வேறுபாடுகள் இல்லை; தாலந்தையோ அல்லது வரத்தையோ உடைய ஒவ்வொருவரும் ஆண் அல்லது பெண், அத்தாலந்திற்கு உக்கிராணக்காரர் ஆகுகின்றனர்; மற்றும் கணக்கு ஒப்புவிக்கும் கர்த்தருடைய நாளில், ஒவ்வொரு உக்கிராணக்காரனும் தனது உக்கிராணத்துவத்தைக்குறித்துக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். பெற்றிருக்கும் தாலந்துகளைப் பயன்படுத்துகிற விஷயத்தில் அனைவரிடமும் உண்மை எதிர்ப்பார்க்கப்படும் (மத்தேயு 25:14-30).

இந்த வேதவாக்கியங்கள் போதிப்பவைகளுக்கு இசைவாகப் பார்க்கையில் ஸ்திரீகளும், புருஷர்களும் கொஞ்சமாகவோ அல்லது அதிகமாகவோ காணப்படும் தங்களது தாலந்துகளைச் சபையில் பயன்படுத்துகிற விஷயத்தில் தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்று பார்க்கின்றோம். மற்றும் பவுலடிகளாருடைய போதனைகளை வைத்துப் பார்க்கையில், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தினுடைய செயல்பாடும், முழுச்சரீரத்தினுடைய பொதுவான ஆரோக்கியத்திற்கு அவசியமானதாய் இருக்கின்றது; இதற்கு அநேகம் உதாரணங்களை வேதவாக்கியங்களில் நாம் பெற்றிருக்கின்றோம். (1) கல்லறையில் உயிர்த்தெழுதலின் காலை வேளையில் முதலாவது வந்து காணப்பட்ட ஸ்திரீகள், தம்முடைய உயிர்த்தெழுதலைக்குறித்த முதலாம் செய்தியை அப்போஸ்தலர்களுக்கு எடுத்துச் செல்லுமாறு, கர்த்தரினால் அனுப்பிவைக்கப்பட்டனர். (2) கர்த்தர் உரையாடிக்கொண்டும், தம்மை மேசியாவென வெளிப்படுத்துவதற்குப் பிரியம்கொண்டு வெளிப்படுத்திட்ட சமாரியாவின் ஸ்திரீயானவள், பட்டணத்திற்குள் போய், அநேகருக்குச் செய்தியைத் தெரிவிப்பதற்குத் தடைப்பண்ணப்படவில்லை - இதை அவள் உடனடியாக, தனது தண்ணீர் குடங்களைவிட்டு விட்டு, துரிதமாய்ப் புறப்பட்டுப்போய்ச் செய்தாள். இதன் விளைவாக, அதுவும் அவள் எப்படிச் சாட்சி பகிர்ந்திருப்பினும், அவளது சாட்சி பகிர்தலின் வாயிலாக அநேகர் விசுவாசம் வைத்தார்கள் (யோவான் 4: 28-30,39).

இன்னுமாக ஸ்திரீகளும், புருஷர்களும் தீர்க்கத்தரிசனத்தின் வரத்தினை உடையவர்களாய்க் காணப்பட்டனர் என்று நாம் பார்க்கின்றோம்: இந்தத் தீர்க்கத்தரிசனம் உரைத்தலானது, "பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசப்படுபவைகள்" - அதாவது தேவனுடைய வரத்திற்கேற்ப போதிப்பதாக அல்லது புத்திமதி கூறுவதாக இருக்கும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் விளக்கமளிக்கின்றார் (1 கொரிந்தியர் 14:3, 4). (1 கொரிந்தியர் 12:31-ஆம் வசனத்தையும் பார்க்கவும்). 1 கொரிந்தியர் 11-ஆம்

அதிகாரத்தில் அந்நாட்களில் தன்னடக்கத்திற்கு விசேஷித்த அடையாளமாய் விசேஷமாக கிரேக்கர்கள் மத்தியில் காணப்பட்டதான தலைக்கு முக்காடிட்டுக்கொள்ளுதலோடு, ஸ்திரீகள் பொது இடங்களில் ஜெபம்பண்ணுதல் மற்றும் தீர்க்கத்தரிசனம் உரைத்தல் என்பவற்றின் ஏற்புடைமையைப் பவுல் ஒப்புக்கொள்கின்றார். முக்காடிட்டுக்கொள்ளும் வழக்கத்தினைப் புறக்கணித்தல் என்பது, அதுவும் சுவிசேஷத்தின் சுயாதீனத்தை உணரத் துவங்குகையில், சிலரால் இவ்வழக்கம் புறக்கணிக்கப்படுதல் என்பது, கிறிஸ்துவின் காரணங்கள் மீதும், கிறிஸ்தவ விசுவாசத்தின் "தூதர்கள்," செய்தியாளர்கள் அல்லது ஊழியக்காரர்களாகிய - அப்போஸ்தலர்கள் மற்றும் மற்றவர்களின் மீதும் நிந்தனையைக்கொண்டுவருகின்றதாய் இருக்கும்.

ஸ்திரீகள் தீர்க்கத்தரிசனம் உரைத்ததற்கு நாம் சில உதாரணங்களைப் பெற்றிருக்கின்றோம்; உதாரணம்: அன்னாள் (லூக்கா 2:36-38); பிலிப்பின் நான்கு குமாரத்திகள் (அப்போஸ்தலர் 21:8, 9); மிரியாம் (மீகா 6:1-4); உல்தாள் (2 நாளாகமம் 34:21-28) மற்றும் தெபோராள் (நியாயாதிபதிகள் 4:4-24). இன்னுமாக யோயேல் 2:28, 29-ஆம் வசனங்களின் குறிப்பிடத்தக்கதான தீர்க்கத்தரிசனத்தையும் நாம் பெற்றிருக்கின்றோம்; இது பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்த அனைவரின் மீதும் பரிசுத்த ஆவி இறங்கி வந்தபோது, கொஞ்சமேனும் நிறைவேறினதெனப் பேதுரு குறிப்பிடுகின்றார் (அப்போஸ்தலர் 2:17, 18). ஆதிசபையில் சில குறிப்பிட்ட ஸ்திரீகளின் ஊழியங்களைப் பாராட்டி பவுல் குறிப்பிடவும் செய்கின்றார் - பிரிஸ்கில்லா, திரிபோனாள், திரிபோசாள், ரூபையின் தாயார், நேரேயுவின் சகோதரியாகிய யூலியாள் ஆவார்கள் (உரோமர் 16; பிலிப்பியர் 4:3). 1 கொரிந்தியர் 16:19-ஆம் வசனத்தைத் தவிர மற்றப்படி பிரிஸ்கில்லாவும், அவளது கணவன் ஆக்கில்லாவும் குறிப்பிடப்படும் எல்லா வசனங்களிலும், பிரிஸ்கில்லாவே இருவரிலும் மிக முதன்மையானவள் போலும், இருவரில் சுறுசுறுப்பானவள் போலும் முதலாவதாக குறிப்பிடப்படுகின்றாள் (உரோமர் 16:3; 2 தீமோத்தேயு 4:19; அப்போஸ்தலர் 18:18, 26 Revised Version - பார்க்கவும்). பிரிஸ்கில்லாவும், அவளது கணவனும் கொரிந்துவிலிருந்து எபேசு வரையிலான பவுலினுடைய யாத்திரைகள் ஒன்றில் கூடவே சென்றுமிருக்கின்றனர்; இங்கு இவர்கள் அப்பொல்லோவைக் கண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக்கொண்டிருந்தார்கள் (அப்போஸ்தலர் 18:18-20). வேதவாக்கியங்களானது உலகத்தாருக்காய்ப் பேசப்படவில்லை என்றாலும், ஸ்திரீயின் சுபாவமும், கல்வியறிவும் அவளைத் தகுதிப்படுத்துகின்ற ஜீவியத்தின் நியாயமான பல்வேறு தொழில்களில் பெண்கள் ஈடுபடுவதற்கு முரணாக எந்த வார்த்தைகளையோ, உதாரணங்களையோ முன்வைக்கிறதில்லை. அந்தக் காலங்களிலெல்லாம் பெண்களுக்குக் கல்வி என்பது பின்தங்கியிருந்த போதிலும், வீட்டு வேலைகளைத் தவிர மற்ற வேலைகளில் ஸ்திரீகள் ஈடுபடுவது அபூர்வமாக இருந்தபோதிலும், இஸ்ரயேலில் ஒரு திறமிக்க பெண் நியாயாதிபதியாக, லபிதோத்தின் மனைவியாகிய தெபோராள் காணப்பட்டாள் என்ற சிறந்த உதாரணம் காணப்படுகின்றது (நியாயாதிபதிகள் 4:4-24; 5:1-31). இவள் தீர்க்கத்தரிசியாகவும், மிகுந்த திறமையும், செல்வாக்குமுள்ள ஸ்திரீயாகக் காணப்பட்டாள். சல்லூமின் மனைவியாகிய உல்தாளும் தீர்க்கத்தரிசியாகவும், இஸ்ரயேலின் இராஜாவினால் அழைத்து அனுப்பப்பட்டவளுமாய் இருந்தாள் (2 இராஜாக்கள் 22:14-20).

இவைகள் அனைத்தையும் வைத்துப்பார்க்கையில், நபர்களுக்குப் பாரபட்சம் பார்த்திடாத தேவன் பெண் உக்கிராணக்காரர்களின் சார்பிலும், ஆண் உக்கிராணக்காரர்களின் சார்பிலும் அவர்களது தாலந்துகள் யாவற்றையும் பயன்படுத்துவது தொடர்புடைய விஷயத்தில் - அதுவும் தங்கள் பாலினத்திற்கு விசேஷமாய்த் தேவைப்படும் தன்னடக்கத்துடன் செய்வது தவிர, வேறெந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல், அவர்களது தாலந்துகள் யாவற்றையும் பயன்படுத்துவது தொடர்புடைய விஷயத்தில் உண்மையினை எதிர்ப்பார்க்கின்றார் என்று நாம் புரிந்துகொள்கின்றோம்; இன்னுமாக ஒருவேளை தேவன் கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள எந்தவொரு பெண் அங்கத்தினருக்குப் போதிப்பதற்கோ அல்லது தீர்க்கத்தரிசனம் உரைப்பதற்கோ தாலந்தோ அல்லது விசேஷித்த திறமையோ கொடுத்திருப்பாரானால், அதை ஊக்கமாய்ப் பேணி வளர்ப்பதும், ஞானமுள்ள மற்றும் உண்மையுள்ள உக்கிராணக்காரியென அந்தத் தாலந்தினைப் பயன்படுத்திடுவதும் அவளது சிலாக்கியமாய் மாத்திரம் காணப்படாமல், அவளது கடமையாகவும் காணப்படுகின்றது என்றும் நாம் புரிந்துகொள்கின்றோம். இதை அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 12:28-31-வரையிலான வசனங்களில் தெளிவாய்ப் போதிக்கின்றார்; அதாவது போதிப்பது என்பது முக்கியமான வரங்களில் ஒன்றெனத்

தெரிவித்தப் பிற்பாடு, பாலின வேற்றுமை குறிப்பிடாமல், "முக்கியமான வரங்களை நாடுங்கள்" என்று அனைவருக்கும் வலியுறுத்துகின்றார்.

## மனுஷனிடத்திலுள்ள ஸ்திரீயின் உறவு

மேலே இடம்பெறும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டக் காரியங்களுக்கு நேரடியாய் முரண்பாடாக, அப்போஸ்தலன் பவுலின் வார்த்தைகளில் இடம்பெறுவதாகச் சிலரால் கருதப்படுபவைகளை, அடுத்ததாக நாம் பார்க்கலாம். "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்கவேண்டும்." "But I suffer not a woman to teach, nor to usurp authority over the man, but to be in silence [hesuchia, quietness]." (1 தீமோத்தேயு 2:12) அப்போஸ்தலன் இந்தக் கட்டுப்பாட்டிற்கான தனது காரணத்தைக் கொடுக்கின்றார்; மற்றும் இப்படிக் காரணம் கொடுக்கையில் அவர் ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாளுக்கிருந்த உண்மையான உறவினிடத்திற்கு நம்மைத் திருப்பி, "என்னத்தினாலெனில் முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்" என்று கூறுகின்றார் (1 தீமோத்தேயு 2:13, 14). ஆதியாகமம் 2:16, 17-ஆம் வசனங்களுக்கு வரும்போது, ஏவாள் சிருஷ்டிக்கப்படுகிறதற்கு முன்னதாக, "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" என்று பார்க்கின்றோம்.

ஆகையால் கர்த்தர் ஏவாளிடம் நேரடியாய்ப் பேசாமல் ஆதாமிடமே பேசினார் என்றும், தேவனிடமிருந்து ஆதாம் வாயிலாக ஏவாள் இந்த எச்சரிப்பைப் பெற்றுக்கொண்டாள் என்றும் தெளிவாகுகின்றது. இப்படியாக ஆதாம், தேவனுக்குக்கீழ்ப் போதிப்பவராகவும், ஏவாள் கற்றுக்கொள்பவளாகவும் காணப்பட்டனர். இந்த விதத்தில் பார்க்கையில் அப்போஸ்தலன் 1 தீமோத்தேயு 2:11-ஆம் வசனத்தில் ஆலோசனை கூறுவது போல் ஸ்திரீயானவள் "எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள்" என்பது சரியானதாகவும், தகுதியானதாகவும் காணப்படும். மறுப்பதற்கு அவளுக்கு என்ன உரிமை இருக்கின்றது? தேவன் அவளது கணவனுக்குப் போதித்துள்ளார் மற்றும் அவளை அவனிடம் கொடுத்ததன் மூலம், கணவனுக்கான கடமைகளானது (அவளைக் கவனித்துக்கொள்வதற்கும், அவள் தேவைகளைச் சந்திப்பதற்குமான கடமைகளானது) அவன் மீது சுமத்தப்பட்டுள்ளது மற்றும் இந்தக் கடமையினை நிறைவேற்றிடும் வண்ணமாகவே, அவள் பாதுகாக்கப்படவும், தேவனுக்கு இசைவாய் அவள் காணப்படத்தக்கதாகவும் அவசியமாயிருந்த இந்த அறிவானது ஆதாமினால், ஏவாளுக்குக் கொடுக்கப்பட்டது. இப்படியாக தேவன் மனுஷனுடைய தலைமை ஸ்தானத்தைக்குறித்துக் கற்பித்தார் மற்றும் இதைக் கொரிந்து பட்டணத்து சபையார் தெளிவாய்ப் புரிந்துகொள்ள அப்போஸ்தலன் விரும்பிட்டார் (1 கொரிந்தியர் 11:3).

எதிராளியானவன் ஏவாளிடம் பேசினபோது, அவளது கணவன் வாயிலாக தேவன் கொடுத்திட்ட எச்சரிப்பை அலட்சியப்படுத்துவதற்கு, அவளைச் சோதனைக்குள்ளாக்கினான். இதை அவள் செய்தாள், அதுவும் தேவனுக்கு இசைவற்றுள்ள இந்தப் புதிய மற்றும் விநோதமான போதகருக்குச் செவிச்சாய்ப்பது சரியாய் இருக்குமோ என்று ஆதாமிடம் ஆலோசனை கேட்காமலேயே செய்துவிட்டாள். தேவனைச் சார்ந்திராமலும், தனக்குத் தேவன் அளித்த பாதுகாப்பாளனைச் சார்ந்திராமலும் அவள் செயல்பட்டதினால், அவள் மீறுதல் செய்தாள் மற்றும் இப்படி அவள் தேவனைப் புறக்கணித்தப்படியால், அவள் அவளாய்ச் சிந்தித்துச் செயல்படுத்துவதற்கு முற்றிலும் தனித்துவிடப்பட்டாள் மற்றும் அவளது நடவடிக்கையிலுள்ள அநீதி குறித்த விஷயத்தில் வஞ்சிக்கப்படாமல், அந்த நடவடிக்கையின் பலன் தொடர்புடைய விஷயத்தில் வஞ்சிக்கப்பட்டாள்; அதாவது அவளது இந்த நடவடிக்கையானது மரணத்திற்குப் பதிலாக, மாபெரும் ஆசீர்வாதத்திற்குள்ளாக (அறிவிற்குள்ளாக) நடத்திடும் என்று ஊகித்துக்கொண்டதில் வஞ்சிக்கப்பட்டாள். அவள் ஆதாமையும், ஆதாமின் வாயிலான தேவனுடைய புத்திமதியையும் புறக்கணித்தது மாத்திரமல்லாமல் மற்றும் தனது சொந்த கணிப்பின்படி செயல்பட்டது மாத்திரமல்லாமல், அவள் தனது புதிய உபதேசத்தை ஆதாமுக்குப் போதிக்க அல்லது ஆதாமை வழிநடத்த முற்பட்டு, இவ்விதமாய்த் தலைமைத்துவத்தின் திவ்விய ஒழுங்கினைத் தலைக்கீழாக்கிப்போட்டாள். இந்தத் தலைக்கீழான தலைமைத்துவத்தின்

ஒழுங்கினைப் பின்பற்றினதில், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை என்றாலும், அவரும் மீறுதல் செய்தவரானார்.

இந்தக் காரணத்தின் நிமித்தமாகவே, "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ்செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். ஆனால் இந்தக் கட்டுப்பாட்டினையும், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிற மற்றும் முரணாய் இருப்பதுபோன்று தோற்றமளித்த அந்த வேதவாக்கியங்களையும் எப்படி இசைவுக்குள் கொண்டுவருவது என்பது, அநேகருக்கு இன்னமும் சிரமமான கேள்வியாகவே காணப்படுகின்றது; ஆனால் இதற்கு நிச்சயமாய் ஏதோ ஒரு தீர்வு காணப்பட வேண்டும். ஆனால் முதலாவது நாம் கேட்பதென்னவெனில், தலைமைத்துவத்திற்கான இந்த ஒழுங்கானது பெண் இனத்தினின்று வேறுபட்டுள்ள ஆண் இன வகுப்பாருக்கு இயல்பாய் உள்ள ஒன்றா? அல்லது அது புருஷனுக்கும், மனைவிக்கும் இடையிலான உறவிற்கு மாத்திரமே பொருந்துகின்றதாய் இருக்குமா? முதலாவது காரியம் உண்மை என்றும், இது 1 கொரிந்தியர் 11:3-ஆம் வசனத்தினால் நிரூபணமாகின்றது என்றும் நாம் எண்ணுகின்றோம்; "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்."

அப்படியானால் தலைமைத்துவத்தின் ஸ்தானம் என்பது எதைக் குறிக்கின்றதென நாம் கேட்கலாம்? இந்த அடையாளமானது, மனித சரீரத்தினுடைய அந்த முக்கியமான அவயமாகிய தலை, அதாவது அதன் பிரதான அவயத்தில் - அதாவது அதிகாரத்திற்கும் மற்றும் தலைமைத்துவத்திற்குமுரிய உரிமையினைப் பெற்றுள்ள அவயத்தில் கவனிக்கக்படலாம். இந்த விளக்கமானது, யேகோவா தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் இடையிலான உறவிலுள்ள தலைமைத்துவத்தின் பூரண விளக்கத்தினால் உண்டாகுகின்றதாய்க் காணப்படுகின்றது. ஒருவரில் சட்டத்தை இயற்றும் தன்மையும், மற்றவரில் பிரதிநிதியென நிறைவேற்றிடுவதற்குரிய வல்லமையும் காணப்படுகின்றது. இந்த விளக்கத்திற்கு இசைவாக, கிறிஸ்துவினிடத்திலான மனுஷனுடைய உறவும், மனுஷனிடத்திலான ஸ்திரீயின் உறவும், கீழ்ப்படிந்திருக்கும் ஒன்றாகவே இருக்க வேண்டும்; மேலும் ஒருவேளை புருஷர்களும், ஸ்திரீகளும் பூரணர்களாய் இருந்திருப்பார்களானால், இத்தகைய உறவின் அருமையான இசைவானது, இருவருக்கும் பூரண திருப்தியைக் கொடுத்திருக்கும். புருஷன் கிறிஸ்துவோடு இசைந்து காணப்பட்டிருந்திருப்பார்; ஸ்திரீ புருஷனோடு இசைந்து காணப்பட்டிருந்திருப்பாள் மற்றும் அனைவரும் யேகோவா தேவனோடு இசைந்து காணப்பட்டிருந்திருப்பார்கள். இப்படியாகத் தலைமைத்துவத்தின் திவ்விய ஒழுங்கானது, அனைவரையும் பரஸ்பர அன்பின் மற்றும் சமாதானத்தின் கட்டில் ஒருங்கிணைத்திருக்கும்.

ஆனால் கேள்வி என்னவெனில், தலைமைத்துவம் பற்றின இக்கருத்தானது எப்படித் தனிப்பட்ட சுயாதீனம் - அதாவது தேவனுடைய புத்திரர்களுக்கான மகிமையான சுயாதீனம் குறித்த கருத்திற்கு இணக்கமாய்க் காணப்பட முடியும்? இதற்காக தலை மற்றும் சரீரத்தின் உதாரணமானது அதன் உச்ச எல்லைவரை வலியுறுத்தப்பட வேண்டுமா? ஆரோக்கியமான நிலையில் இருக்கும் சரீரமானது, தலையினுடைய ஒப்புதல் மற்றும் அதிகாரம் அளிக்கப்படாமல், எதையும் செய்வதில்லை; மற்றும் ஆரோக்கியமான நிலைமையில் காணப்படும் கிறிஸ்துவின் மறைபொருளான சரீரமும் (சபையும்) கிறிஸ்துவின் சித்தத்தை அறியவும், செய்யவும் எப்போதும் நாடுகின்றதாய் இருக்கும், மற்றும் கிறிஸ்துவும் பிதாவின் சித்தத்தை அறியவும், செய்யவும் எப்போதும் நாடினார். ஆகையால் மனித குடும்பமானது பாவத்தினால் சீரழிக்கப்படவில்லையெனில், ஸ்திரீயானவள் தன் நிலைமையினை அனுபவித்தவளாகவும், புருஷன் தனது பலத்தை, மனதை அல்லது சரீரத்தைக் கொடுமைப்படுத்துவதற்குத் தவறாய்ப் பயன்படுத்தாதவராகவும் காணப்பட்டிருந்திருப்பார்கள். யேகோவா தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் இடையிலான இந்த உறவின் பூரண விளக்கத்தினை மறுபடியுமாகப் பார்க்கையில், தலைமைத்துவத்தின் ஒழுங்கானது சரியாய்ச் செயல்படுத்தப்படும் பட்சத்தில், அது தேவனுடைய புத்திரர்களுக்கான மகிமையான சுயாதீனத்திற்கு முற்றிலும் இசைந்தே காணப்படும் என்று நாம் காண்கின்றோம். யேகோவா தேவன் கிறிஸ்துவின் தலையாய் இருப்பினும், அவர் தமது குமாரனைக் கனப்படுத்துவதிலும், அவரைச் சகல அதிகாரங்கள் மற்றும் துரைத்தனங்களின் தலையாக்கிடுவதிலும் பிரியப்படுவதையும், "பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல, குமாரனையும் கனம்பண்ணும்படிக்குச்" சகல மனுஷர்களுக்கு அவர் கூறுவதையும் நாம் காண்கின்றோம் [ஏனெனில் அவர் பிதாவின் பிரதிநிதியாகவும், அவரது தற்சொரூபமாகவும் காணப்படுவதினாலேயே ஆகும்] (கொலோசெயர் 2:10; 1:16; எபேசியர் 1:10). அவர்

நியாயந்தீர்ப்பது அனைத்தையும்கூடக் குமாரனிடத்தில் ஒப்படைப்பதைப் பார்க்கின்றோம். அவர் குமாரனை முதலாவதாகச் சோதித்து, நிரூபித்து, அவரை நம்பிக்கைக்குப் பாத்திரவானாய்க் கண்டுகொண்டார்; மற்றும் தம்முடைய திட்டங்களை அவருக்குத் தெரிவித்தப் பிற்பாடு, அவற்றை நிறைவேற்றுவதை அவரிடத்தில் ஒப்புவித்தார். ஆகையாலே, "பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" என்று வாசிக்கின்றோம் (யோவான் 5:22). மறுபடியுமாக, "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றும் நாம் வாசிக்கின்றோம் (மத்தேயு 28:18).

யேகோவா தேவனிடத்தில் இயேசு பெற்றிருக்கும் இந்த உறவில் அடிமைத்தனத்திற்கு ஒத்த எதுவுமில்லை என்பதில் நிச்சயமே; மாறாக யேகோவா தேவனுடைய மேலான தலைமைத்துவத்தின் கீழ் முழுமையான சுயாதீனமும், கிறிஸ்துவின் உயர்ந்த வல்லமைகள் அனைத்தையும் வளர்த்திடுவதற்கும், பயன்படுத்திடுவதற்கும் பரந்த வாய்ப்பும் காணப்பட்டது. கிறிஸ்துவும்கூடத் தம்முடைய தலையாகிய யேகோவா தேவனுக்குக் கீழ்ப்பட்டுக் காணப்பட்டு, தம்முடைய வேலைகள் அனைத்திலும் யேகோவா தேவனுடைய ஞானமும், காருண்யமும் கட்டளையிடுகின்றதான அந்த வேலை திட்டத்திற்கும் மற்றும் செயல்முறை கொள்கைகளுக்கும் கீழ்ப்பட்டுக் காணப்பட்டார். யேகோவா தேவனுடைய தலைமைத்துவத்தின் இந்த எல்லைகளுக்குள்ளாக, தேவனுடைய ஒரே பேறான குமாரனுக்கான மகிமையான சுயாதீனம் காணப்பட்டது. இப்படியாகவே புருஷனும், அவனது தலையாகிய கிறிஸ்துவுக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும்; யேகோவா தேவன் போன்று, கிறிஸ்துவினுடைய மேற்பார்வையும், புருஷனது மனுஷீக வல்லமைகள் அனைத்திற்கும் பரந்த எல்லையை மற்றும் வளர்ச்சியினைத் தாராளமாய் அனுமதிக்கின்றதாய் இருக்கும். இப்படியாகவே புருஷனது தலைமைத்துவமும் ஸ்திரீயானவளுக்குச் செயல்படுகிறதாய் இருக்க வேண்டும் - கொடுமையின் அடிமைத்தனத்தின் கீழ் அவளது வல்லமைகளைக் குறைவுப்படுத்தி, வளர்ச்சியடைவதைத் தடுப்பதாய் இராமல், மாறாக அவளை உயர்த்திடவும், கண்ணியப்படுத்திடவும், தனது தலைமைத்துவத்தின் கீழ், அவளது வல்லமைகள் அனைத்தையும் நியாயமாய்ப் பயன்படுத்துவதற்குரிய முழுமையான சுயாதீனத்தை அருளிடவும், ஊக்குவித்திடவும் வேண்டும்.

"உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை"; "பெண்கள் கற்றுக்கொடுக்கவோ, ஆண்களைக் கட்டுப்படுத்தவோ நான் அனுமதிக்க மாட்டேன். அவர்கள் அமைதியாயிருக்க வேண்டும்" (திருவிவிலியம்). "But I suffer not a woman to teach, nor to usurp authority over the man" என்ற பவுலடிகளாரின் வார்த்தைகளுக்குத் திரும்பி வருகையில், கட்டுப்பாட்டிற்காகக் கொடுக்கப்பட்டக் காரணங்களுக்கு இசைவாகவும் மற்றும் ஸ்திரீகள் அநேகம் தருணங்களில் போதித்துள்ளதாக வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதான உண்மையோடும்கூட, நாம் இவ்வசனத்தின் பிந்தைய பாகத்தினுடைய வெளிச்சத்தில் முந்தின பாகத்திற்கு அர்த்தம் பார்க்கப்போகின்றோம்; அதாவது வழிநடத்துபவரென மற்றும் போதகரெனப் புருஷனுக்குரிய ஸ்தானத்தை ஸ்திரீயானவள் பறித்திடக்கூடாது மற்றும் புருஷனுடைய தலைமைத்துவத்தை அவமதித்து, அந்தப் பொறுப்பை/நிலையை, அதாவது இயல்பிற்கு முரணாக, ஸ்திரீகளுக்குரிய பண்புகளுக்குப் பொருத்தமற்ற மற்றும் சரியாய்ச் சிந்திக்கும் ஜனங்கள் அனைவரின் கண்களுக்கும் அழகற்ற நிலையை/பொறுப்பை எடுத்துக்கொள்ளக்கூடாது. இங்கு இடம்பெறும் அப்போஸ்தலனின் வார்த்தைகளுக்குக் கொடுக்கப்படும் இந்த விளக்கத்துடன், மற்ற இடங்களிலெல்லாம் இடம்பெறும் அவரது போதனைகளானது, உதாரணத்திற்கு 1 கொரிந்தியர் 11:5-ஆம் வசனத்தின் போதனைகளானது முழு இசைவுடனே காணப்படுகின்றது.

ஸ்திரீயானவளை அவளது சிலாக்கியங்களினின்றும், ஞானமுள்ள உக்கிராணக்காரியாகவும் மற்றும் தனது உக்கிராணத்துவத்தைக் குறித்துக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவளாகவும், தனது தாலந்துகள் அனைத்தையும் அவள் நல்ல முறையில் பயன்படுத்துவதிலிருந்தும் தடைப்பண்ணுவது நோக்கமல்ல, மாறாக ஜீவியத்தில் அவளது செல்வாக்கினைப் பயன்படுத்திடுவதற்கான சிறந்த மற்றும் மிகவும் பயனுள்ள வழிகளை அவளுக்குச் சுட்டிக்காட்டுவதே நோக்கமாய் உள்ளது. புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் அவர்களது சுபாவமானது அவர்கள் பயனுள்ள விதத்தில் செயல்படுவதற்குரிய சரியான செயல்பாடு எல்லையைப் பொதுவாய்ச் சுட்டிக்காண்பித்திடும் என்பதில் ஐயமில்லை; ஆனால் யாருமே சுபாவ நிலையில் காணப்படுகிறதில்லை - அனைவருமே மனரீதியிலும், சரீர ரீதியிலும் மற்றும் நன்னெறி விஷயத்திலும் வீழ்ச்சியடைந்துள்ளனர் மற்றும் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாகவும் மற்றும் பல்வேறுவிதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளனர். பெண்

இயல்புகளுள்ள எந்த ஸ்திரியும் சத்தமிட்டு உரத்துப்பேசும் சொற்பொழிவாளராக, பிடிவாதமாய் வலியுறுத்தும் வாதம் செய்பவராக, அனாவசியமாக தலையிட்டுப் பேசும் பேச்சாளராக, பேராசையுள்ள வழிநடத்துனராக தான் ஆகிட வேண்டும் என்று விரும்புகிறதில்லை. எனினும் பொருத்தமான தருணங்களில், சத்தியத்திற்கடுத்த நலன்களின் விஷயத்தில் தேவைப்படும் பட்சத்தில், அவள் ஸ்திரீகளுக்குரிய விதத்திலும், தலைமைத்துவத்திற்கான புருஷனுக்குரிய மேலான உரிமையினைக் கொஞ்சமும் எடுத்துக்கொள்ளாத விதத்திலும், தான் கூறுவதைக் கேட்கின்றவர்கள் எத்தனை பேர்களோ, அவர்கள் ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ இருப்பினும், அவர்கள் யாவருக்கும் மகா சந்தோஷத்தின் நற்செய்தியினை அவள் தெரிவித்திடலாம்; சில தருணங்களில் சத்தியத்திற்கடுத்த விஷயங்களில், அவள் கேள்விக்குறித்த ஒரு விவாதம் பண்ண வேண்டிய அவசியம் ஏற்படுகையில், கேள்வி கேட்டு புரிய வைத்திடலாம் மற்றும் இதைத் தைரியமாயும் செய்திடலாம். மனித சுபாவத்தினை நன்கு அறிந்திருப்பவர்கள், கேள்வி வழிமுறையின் வாயிலாக தவறான அபிப்பிராயங்களை அகற்றிடுவதும், சத்தியத்தை உறுதிப்படுத்துவதும் சிறந்ததாய் இருக்கும் என்று அறிவார்கள்.

இப்படி ஒரு ஸ்திரீ தேவனுடைய பிள்ளையெனத் தனது சுயாதீனத்தை முழுமையுமாகச் செயல்படுத்தி, கேட்க விரும்பும் அனைவருக்கும் முன்பாக தனது பலமான காரணங்கள் அனைத்தையும் கொண்டுவந்து, சத்தியம் குறித்த தனது நம்பிக்கையினைத் தெளிவாய் முன் வைத்திடலாம்; ஆனாலும் எப்போதும் தன்னடக்கத்துடனும், புருஷனுக்குரிய தலைமைத்துவத்தை அங்கீகரிக்கிறதும், அதிகாரத் தோரணையின் அல்லது அதிகாரத்தைப் பறித்தெடுப்பதின் தோற்றமாய் இருக்கும் எதையும் தவிர்த்திட விரும்பும் வெளிப்படையான பேச்சுடனும் அவள் முன்வைத்திடலாம்; மேலும் இத்தகைய மிக முதன்மையான ஸ்தானத்திற்குரிய பொறுப்பினின்று அவளை விடுவிக்க முடிகின்ற மற்றும் விடுவிக்கும் ஒரு மனுஷன் அங்குக் காணப்படுவாரானால், அவளது இயல்பான தன்னடக்கமானது, பொறுப்பை எடுப்பதிலிருந்து அவளை விலகச் செய்திட வேண்டும். "silence" அல்லது quietness - அமைதலாயிருக்க வேண்டும் என்று மேலே பார்க்கப்படும் வசனத்தில் அப்போஸ்தலனால் கட்டளையிடப்பட்டுள்ளதான வார்த்தையானது, முற்றிலுமாய்த் தடைப்பண்ணுகிற விதத்தில் புரிந்துகொள்ளப்படாமல், மாறாக ஸ்திரீகள் ஜெபம்பண்ணிடுவதற்கு அல்லது தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு அல்லது அப்போஸ்தலர்களின் நாட்களில் ஸ்திரீகளுக்கு வாய்ப்பும், திறமையும் இருக்கையில் அவர்கள் சத்தியத்தினை விவரித்ததற்கு அவர் அனுமதித்தது தொடர்புடைய விஷயத்திற்கு இசைவாய்க் காணப்படும் விதத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இதேபோல் 1 தெசலோனிக்கேயர் 4:10-12-வரையிலான வசனங்களில் சகோதரர்கள் அமைதலாய் இருக்கும்படிக்கு அப்போஸ்தலன் புத்திமதி கூறுகின்றார். "அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும்; புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு, நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே, அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும்வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்." இதே வார்த்தையானது 1 தீமோத்தேயு 2:2-ஆம் வசனத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1 கொரிந்தியர் 14:34, 35-ஆம் வசனங்களில் அப்போஸ்தலன் பவுலினால் பேசப்பட்ட வார்த்தைகளானது, கிறிஸ்தவத்திற்கு மதம்மாறின கிரேக்கர்களுக்குப் பேசப்பட்டவை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்; இந்தக் கிரேக்கர்களுடைய பழக்கவழக்கங்களானது இன்றுள்ள சமுதாய பண்பாட்டிலிருந்தும், அந்நாட்களில் காணப்பட்ட எபிரெய மற்றும் உரோம சமுதாய பண்பாட்டிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டதாகும். கிரேக்க நாடு என்பது அதன் நாட்களில் கல்விக்கான மையமாகக் காணப்பட்டப் போதிலும், கிரேக்க நாட்டின் ஸ்திரீகள் மிகவும் அறியாமையில் காணப்பட்டவர்களாகவும், கீழான நிலையில் காணப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர்; ஆகையால் எபிரெய அல்லது உரோம கிறிஸ்தவ ஸ்திரீகளுக்குப் பேசுகையில், ஒருபோதும் பயன்படுத்திடாத அழுத்தத்துடன் கிரேக்கர்களில் சிலரிடம் அப்போஸ்தலன் பேச வேண்டியது அவசியமாய் இருந்தது. இந்த நிருபத்தை வைத்துப் பார்க்கையில், கொரிந்து பட்டணத்திலுள்ள சபையானது மிகவும் ஒழுங்கற்ற நிலைமையில் காணப்பட்டு வந்தது என்றும், அவர்களது கூடுகைகளானது பெரும்பாலும் குழப்பம் நிறைந்ததாகவும், பிரயோஜனமற்றதாகவும் காணப்பட்டு வந்தது என்றும் நாம் பார்க்கின்றோம். அப்போஸ்தலன் இந்த ஓர் அதிகாரத்தில் அனைத்தும் "நல்லொழுக்கமாயும், கிரமமாயும் (வசனம் - 40) செய்யப்படத்தக்கதாக, மிக முக்கியமான சில விதிமுறைகளையும், ஒழுங்குமுறைகளையும் முன்வைத்துள்ளார், மற்றும்

ஒழுங்கற்ற ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும் அவசியமான கண்டித்தலையும் வழங்கினார் (1 கொரிந்தியர் 11:17-22, 31-34; 6:5-11; 5:1-13; 3:1-3). அந்த ஸ்திரீகள் சபையில் பேசுவது அவமானமான காரியமாகும். இதற்கு முதல் காரணம் தங்கள் ஸ்திரீகள் எந்தவொரு விளம்பரத்திற்குள்ளாகுவது என்பது அங்கு அப்போது அவமானமாகக் கருதப்பட்டது; மற்றும் இரண்டாவது காரணம் அவர்கள் தகுந்தார்போல் பேச அறியாதவர்களாயிருந்தனர்; ஆகையால் அவர்கள் சபைகூட்டங்களில் அமைதியாய்க் காணப்பட்டுக் கவனிப்பதும், மேலான விவரங்களை இல்லங்களில் தங்கள் கணவன்மார்களிடம் (சொல்லர்த்தமாய்ப் புருஷர்களிடம்) கேட்டுத் தெரிந்துகொள்வதும் நலமாயிருக்கும். இந்த அறிவுரை செயல்படுத்தப்படுவதை, முழு யுகத்திலுள்ள ஒட்டுமொத்த சபைமீது திணிப்பது என்பது, ஸ்திரீகளின் செயல்படும் எல்லைக் குறித்தும் மற்றும் மனிதனுக்கான தகுதியான மற்றும் பொருத்தமான, கர்த்தரால் சித்தம் கொண்டபடியான துணைவி என்ற விதத்தில் அவளுக்கு இருக்கும் பொறுப்புக் குறித்தும் உள்ள வேதவாக்கியங்களின் போதனைகளுடைய பொதுவான நடைமுறைக்கு ஊறுவிளைவிக்கின்றதாய் இருக்கும். ஒருவர் இன்னொருவருடைய பாதங்களைச் சொல்லர்த்தமாய்க் கழுவுதல் மற்றும் ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துதல் குறித்துத் திரும்பத்திரும்பச் சொல்லப்பட்டிருக்கின்ற கடமைகள் முழுச்சபை மீது காணப்படலாம்; எனினும் நாம் அவற்றை ஆவியில் அடையாளம் கண்டுகொள்கின்றோமே ஒழிய, எழுத்தில் அல்ல; நம்முடைய நாட்களிலுள்ள உபச்சாரங்களும், மரியாதைகளும் அன்றைய நாட்களில் காணப்பட்டவைகளை விடச் சில விதங்களில் வேறுபட்டவையாக இருக்கின்றன; எனினும் இரண்டு காலக்கட்டங்களிலுமுள்ளவைகள் சரிசமமான உபச்சாரங்களாகவே காணப்பட்டன.

கொரிந்து சபையின் ஸ்திரீகளிடம் அப்போஸ்தலன் கடுமையாய்த் தோற்றமளிக்கின்ற வார்த்தைகளைப் பேசிடுவதற்கு அவசியமாக்கின சூழ்நிலைகளை நாம் அனைவரும் தெளிவாய்ப் பார்க்கத்தக்கதாக, கொரிந்து, எபேசு மற்றும் அந்நாட்களில் கிரேக்கப் பண்பாடுகளைக் கொண்டிருந்த பிரதானமான நகரங்களினுடைய சமுதாய அமைப்பை வெளிப்படுத்தும் பிரபலமிக்க எழுத்தாளர்களின் சில சுருக்கமான குறிப்புகளை மேற்கோளிடுகின்றோம்.

"முற்காலத்து ஏதென்சில் ஸ்திரீகளின் ஸ்தானம் மற்றும் செல்வாக்கு" எனும் கட்டுரையில், Scotland-இன், St. Andrews பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் Donaldson கூறுவதாவது:-

> *"ஏதென்சில் அடிமைகள் நிலையில் காணப்படாத இரண்டு ஸ்திரீகள் வகுப்பினர் காணப்படுகின்றனர். ஒரு வகுப்பார் (குடிமகள்கள்) தங்கள் சொந்த அறையைவிட்டு ஒரு அடிகூட வெளியே நடமாட முடியாதவர்கள் ஆவர் மற்றும் இவர்கள் எல்லா விதத்திலும் கண்காணிக்கப்படுகின்றனர் மற்றும் கட்டுப்பாட்டில் வைக்கப்படுகின்றனர். இன்னொரு வகுப்பார் (விலைமகள்கள்/அந்நிய ஸ்திரீகள்) காணப்படுகின்றனர்; இவர்கள் மீது எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை; இவர்கள் எங்கு வேண்டுமானாலும் போய்வரலாம் மற்றும் தங்கள் பார்வைக்கு நலமாய்க் காணப்படுகிற எதையும் செய்திடலாம். குடிமகள்களுக்கு (மனைவிகளுக்கு) வீட்டின் மேலறை பொதுவாகவே ஒதுக்கிக்கொடுக்கப்படுகின்றது. இவர்கள் எந்த விருந்துகளிலும் கலந்துகொள்வதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தனர். ஆண்கள் தங்கள் குடிமகள்கள்/மனைவிகளை அந்நியர்களின் பார்வையில்பட விரும்பாததினால், ஆண்கள் ஆண்களோடுகூடவே பந்தி அமர்ந்துகொள்வர். வெறும் அடிப்படையான காரியங்களே குடிமகள்களுக்கு/பெண்களுக்குக் கற்பிக்கப்பட்டிருந்தது. ஏதென்சின் தாய்மார்கள் கட்டுப்பாட்டில் இப்படி இருக்க, எப்படி ஏதென்சில் - இலக்கியத்திலும், கலையிலும் பெயர்ப் பெற்றிருந்த மிகச்சிறந்த மனிதர்கள் உருவானார்கள்? [ஆனால் ஏதென்சின் தாய்மார்கள் அனைவருமே, சாதாரண வீட்டுப்பெண்மணிகளாக இருக்கவில்லை; இந்தச் சிறந்த மனிதர்களைப் பெற்ற பெரும்பான்மையான ஏதென்சின் தாய்மார்கள், மனைவிகள்/குடிமகள்கள் அல்ல; மாறாக விலைமகள்கள் ஆவர் - இவர்கள் கட்டுப்பாடுகளற்ற வகுப்பாராய் இருப்பினும், கல்வியறிவு உடையவர்களாய் இருந்தனர் மற்றும் அனைத்துச் சுதந்தரத்தையும் அருளப்பெற்றிருந்தனர்.] மாபெரும் சிந்தனையாளர்கள், கவிஞர்கள், சிற்பாசிரியர்கள், ஓவியர்கள் மற்றும் கலைஞர்களின் எண்ணற்ற ஓர் இனம் ஒரே காலக்கட்டத்தில், ஏதென்சில் இருந்ததுபோன்று எங்கும் இருந்ததாகச் சரித்திரம் இல்லை என்றாலும், ஏதென்சில்*

*நல்லொழுக்கமுள்ள ஒரு ஸ்திரீகூட/குடிமகள்கூட இலக்கிய அல்லது கலை அல்லது அறிவியல் துறையில் ஒருபோதும் சிறந்தவர்களாகக் காணப்பட்டதேயில்லை.*

*நாம் ஏதென்சின் குடிமகள்களிடமிருந்து (மனைவிகளிடமிருந்து) சுதந்தரமான மற்ற ஸ்திரீகளிடத்திற்கு - அந்நிய அல்லது விலைமகள்களிடத்திற்கு வரலாம். இந்த அந்நிய ஸ்திரிகளினால் திருமணம் செய்ய முடியாது. இவர்கள் தாங்கள் விரும்பும் எதையும் செய்திடலாம். குடிமகள்கள் வீட்டிற்குள்ளாகவே காணப்பட்டார்கள் மற்றும் புருஷர்களுடன் உண்பதில்லை; ஆனால் புருஷர்களோ வீட்டில் காணப்படும் ஸ்திரீகளுடன்/குடிமகள்களுடன் மட்டும் பழகிடவில்லை. ஆகையால் அவர்கள் இந்த அந்நிய ஸ்திரீகளைத் தங்களது துணையாளிகளாக தேர்ந்தெடுத்துக் கொண்டனர்; மற்றும் இந்த ஸ்திரீகள் வகுப்பினருக்கு 'Hetairai' அல்லது துணையாளிகள் என்ற பெயர் வழங்கப்பட்டிருந்தது. குடிமகள்கள் தாய்மார்களாகவும், மனைவிகளாகவும் காணப்பட வேண்டுமே ஒழிய, இதற்கும் மேலாக எதுவுமில்லை. அந்நிய ஸ்திரீயே துணைவிக்கான கடமைகளைச் செய்திட வேண்டும், ஆனால் இவர்கள் திருமணம் செய்துகொள்ளப்படுவதில்லை. இவர்களே ஏதென்சில் காணப்பட்டக் கல்வியறிவுடைய ஒரே ஸ்திரீகள் வகுப்பார் ஆவார்கள். கிட்டத்தட்ட ஏதென்சிலுள்ள ஒவ்வொரு மாமனிதனும் இத்தகையதொரு துணைவியை உடையவனாய் இருந்தான் மற்றும் இந்த ஸ்திரீகளானவர்கள் இந்த மாமனிதர்களின் உயர்வான கற்பனைகளுக்கும், ஆழ்ந்த தியானங்களுக்கும் உடன்பாடு கொண்டவர்களாய் இருந்தனர்.*

*ஆனால் ஏதென்சின் குடிமகள்களுக்கு ஆட்சி சார்ந்த அந்தஸ்தும் இருந்ததில்லை. அவர்கள் எப்போதுமே சிறுபான்மை சமுகத்தினர்களாகவே இருந்தனர். இந்த 'Hetairai'-இன் குமாரர்கள் (விசேஷித்தக் கட்டளையினால்) குடிமகன்களாக அடையாளம் கண்டுகொள்ளப்படும் அளவிற்கு இந்த 'Hetairai' அந்தஸ்துமிக்க மனுஷர்களிடத்தில் தங்கள் பிடியினைப் பெற்றுக்கொண்டிருந்தனர். ஒழுக்கமுள்ள மனைவிகளின் பெயர்கள் சரித்திரத்தில் எங்கும் இடம் பெறுகிறதில்லை; ஆனாலும் 'Hetairai' அடிக்கடி காட்சிக்கு வருகின்றவர்களாய் இருக்கின்றனர். இந்த 'Hetairai' ஜீவியத்தின் அனைத்து அநுக்கிரகங்களையும் பெற்றுக்கொண்டனர்; கண்கவரும் விதத்தில் வஸ்திரங்களை அணிந்து கொண்டனர்; இவர்கள் நகைச்சுவை உணர்வு கொண்டவர்களாக இருந்தனர். எனினும் பாதுகாப்பற்றுக் காணப்பட்ட நூற்றுக்கணக்கான இத்தகைய ஸ்திரீகள் கீழ்த்தரமான உணர்வுகளுக்கான கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டு இருந்தனர் என்றும், பாசம் என்ற போர்வையின் கீழ் இந்த ஸ்திரீகள் ஆண்களைச் சீரழித்தவர்களாகவும், வறுமைக்குள் அனுப்பிவைத்தவர்களாகவும் இருந்தார்கள் என்றுமுள்ளவைகள் மறக்கப்படக்கூடாது."*

இங்கு பேராசிரியர் Donaldson அவர்களின் படைப்புகளிருந்து மேற்கோள் இடப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியமும், ஜெர்மனியின் பேராசிரியர் Becker அவர்களின் படைப்புகளில் இடம்பெறும், கிரேக்க ஆசிரியர்களின் மேற்கோள்களினால் ஆதரிக்கப்படுகின்றது; பேராசிரியர் Becker-அவர்களினால் மேற்கோளிடப்பட்டிருப்பவைகள் சந்தேகத்திற்கு இடமற்ற மேற்கோள்களாக, அதாவது முற்காலத்துக் கிரேக்க மற்றும் உரோமானிய வாழ்க்கைத் தொடர்புடைய மேற்கோள்களாக, சமீபக்கால எழுத்தாளர்கள் அனைவரினாலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது "Charicles" எனும் படைப்பின் 463-ஆம் பக்கத்தில் அவர் கூறுவதாவது:-

*"இந்த ஒருகாலக்கட்டத்தில் மற்றும் சமுதாயப்பண்பாடு உயர்ந்திருந்தக் காலக்கட்டங்களில் ஸ்திரீகளானவர்கள் கீழ்மட்ட ஜீவராசிகளாகவும், தீமைக்கு ஆளாகுபவர்களாகவும், இனவிருத்திக்கு மாத்திரம் பொருத்தமானவர்களாகவும், புருஷர்களின் உடல் வேட்கைகளைத் திருப்திபடுத்துவதற்கு உரியவர்கள் என்று கருதப்பட்டனர். சிறுமிகளுக்கு என்று எந்தக்கல்வி ஸ்தாபனங்களோ, வீட்டில் வைத்துத் தனிப்பட்ட ஆசரியர்களால் பயிற்றுவிக்கப்படுவதோ இருந்ததில்லை. அவர்கள் அந்நியர்களுடன் மாத்திரம் அல்லாமல், தங்களுடைய மிக நெருக்கமான உறவினர்களிடம் கூடப் பேசுவதற்கு அனுமதிக்கப்படாதவர்களாய் இருந்தனர் மற்றும் தங்கள் தகப்பன்மார்களையும் மற்றும் கணவன்மார்களையும்கூட*

*எப்போதாவது பார்க்க முடிந்தவர்களாய் இருந்தனர். திருமணமாகாத பெண்கள் திருமணம் ஆகுவதுவரையிலும் தனிமைப்படுத்தப்பட்டே வாழ்ந்து வந்தனர். அதாவது சாதாரண வழக்கில் சொல்ல வேண்டுமெனில் பூட்டுப்போட்டுப் பத்திரப்படுத்தப்பட்டவர்களாக இருந்தனர்." பக்கம் 287-இல் - "ஏதேன்சில் குடிமகள் சந்தைக்குப் பொருட்கள் வாங்க வந்ததாகக் கேள்விப்படவே முடியாது."*

"Old Greek Education" எனும் தனது படைப்பில் Dublin-ஐ சார்ந்த திருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் J. P. Mahaffy அவர்கள் 11-ஆம் பக்கத்தில் குழந்தைக் கொலைகள் அல்லது பட்டினியில் சாகப்போடுவது மற்றும் புறக்கணிக்கப்படுவது குறித்துக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறியுள்ளதாவது:-

*"புதிதாய்ப் பிறந்த சிசுக்களைக் கொல்வது என்பது பொது ஜனங்களால் ஒப்புதலளிக்கப்பட்டது மாத்திரமல்லாமல் உண்மையில் கிரேக்க நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட்டும் வந்தது. Plato அவர்கள் தனது கொள்கையின் அடிப்படையில் சிசு கொலைகளைச் செய்திருக்கின்றார். ஒரே முறை தவிர மற்றபடி தாயானவளின் இருதயத்தினுடைய வியாகுலமானது, இவர்களது இலக்கிய படைப்புகளில் எங்குமே குறிப்பிடப்படவேயில்லை. அந்தவொரு சம்பவத்தைச் சாக்ரட்டீஸ் அவர்கள் பதிவு செய்துள்ளார்; ஓர் இளம் தாய் தனது முதல் சிசு கொல்லப்பட்டதின் நிமித்தம் எரிச்சல் அடைந்ததையும், இது விஷயமான சாக்ரட்டீசின் மாணவர்களுடைய கருத்துக்கள் தவறானது என்று மாணவர்களுக்கு நிரூபிக்கப்பட்ட போது மாணவர்கள் அடைந்திட்ட கோபத்தையும் அவர் பதிவு செய்துள்ளார். இதில் கொடுமை என்னவெனில், இந்த ஸ்திரீகள் இப்படியாக நடத்தப்படுவதால் மனம் கடினமடைந்துவிடுகின்றனர். பெண் சிசுக் கொலை என்பது சர்வ சாதாரணமான விஷயமாய் இருந்தது."*

கிரேக்கச் சமுதாயப் பண்பாட்டின் கீழ், இப்படியாக ஸ்திரீகளின் நிலைமைக் காணப்பட்டிருக்க, கிரேக்க ஸ்திரீகள் சிலருக்கு அப்போஸ்தலனாகிய பவுலினால் பேசப்பட்டதான வார்த்தைகள் கிரேக்கப் பட்டணங்களிலேயே மிக மோசமான பட்டணங்களில் ஒன்றாக கொரிந்து பட்டணம் காணப்பட்டது எனப் பார்க்கப்படும்போது தெளிவாய்ப் புரிகின்றதாய் இருக்கும். பேராசிரியர் Becker அவர்கள் கூறுவதாவது:-

*"Hetairai - விலைமாதர்களை எண்ணிக்கையில் அதிகமாய்ப் பெற்றுள்ள மற்றப் பட்டணங்களை எல்லாம் மிஞ்சின நிலையில் கொரிந்து பட்டணம் காணப்பட்டது; இந்த Hetairai ஸ்திரீகளுக்கு இவ்விடத்தினுடைய வளமையும், பெருஞ்சிறப்புகளும் மற்றும் ஐசுவரியமுள்ள வியாபாரிகளின் பெருங் கூட்டமும், ஐசுவரியங்களை ஈட்டிடுவதற்கான வாய்ப்புகளை அருளினதாய் இருந்தது."*

இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, கொரிந்து பட்டணத்துப் புருஷர்கள் கிறிஸ்தவர்களான போது, காணப்பட்ட/நிலவியிருந்த சமுதாய எண்ணங்களைப் புறக்கணித்து; சபை கூட்டங்களுக்குத் தங்கள் மனைவிகளை/குடிமகள்களை அழைத்து வந்தவர்களாய்க் காணப்பட்டனர்; இந்த ஸ்திரீகள் மிகவும் அறியாமையில் காணப்படுபவர்களாகவும் மற்றும் மரியாதையாய் நடந்துக்கொள்வதை அறியாதவர்களாகவும் காணப்பட்டப்படியால், பிரயோஜனமற்றக் கேள்விகளைக் கேட்பதின் மூலம் கூட்டங்களுக்குத் தொந்தரவு கொடுத்தவர்களாய் இருந்தனர்; இந்தப் பிரயோஜனமற்றக் கேள்விகளை இல்லத்தில் வைத்துத் தங்களுடைய புருஷர்களிடத்தில், அதாவது அவர்களுக்கு அவசியமான எளிமையான அறிவுரைகளைக் கொடுப்பதற்கு முடிகின்ற அவர்களது புருஷர்களிடத்தில் கேட்டுக் கொள்ளும்படிக்கு அப்போஸ்தலன் அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்; ஏனெனில் இந்த ஸ்திரீகள் சபையில் பேசி அதன் சரியான, முறையான ஆராதனை முதலியவைகளுக்குத் தொந்தரவு கொடுப்பது என்பது முறையற்றக் காரியமாய் இருக்கும். இன்றுபோல் அன்றும் கிறிஸ்தவத்திற்குள் வந்தவர்கள் - மாமனிதர்கள் மற்றும் தத்துவ ஞானிகள் மத்தியிலிருந்து வந்தவர்களாயிராமல் ஏழை வகுப்பார் - சாதாரணமான ஜனங்கள் மத்தியிலிருந்து வந்தவர்கள் ஆவார்கள் என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கொரிந்து பட்டணத்து ஸ்திரீகளினுடைய இந்த நிலைமையானது தலையில் முக்காடிட்டுக் கொள்ளுதல் தொடர்பான 1 கொரிந்தியர் 11-ஆம் அதிகாரத்தில் இடம்பெறும் அப்போஸ்தலரின் கட்டளைகளுக்கான அவசியத்தினையும் மிகவும் தெளிவுப்படுத்துகின்றது; ஸ்திரீகள் தலையில் முக்காடிட்டுக்கொள்ளுதல் என்பது ஜனங்கள் மத்தியில் விசேஷமாகத் தன்னடக்கத்திற்கான அடையாளமாய்க் காணப்பட்டது. திடீரென - அதாவது சுவிசேஷத்தினால் உண்டாகும்

சுதந்தரத்தை அவர்கள் காணத்துவங்குகையில், முக்காடிட்டுக்கொள்ளும் இவ்வழக்கத்தினை அவர்கள் புறக்கணிப்பது என்பது மற்றவர்களால் தவறாய்ப் புரிந்து கொள்ளப்படும் மற்றும் அவர்களது அறியாமையில் புருஷனுக்குரிய தலைமைத்துவத்தைப் புறக்கணிப்பதுக்குரிய ஒரு மனப்பான்மையை உடையவர்களாகவும், தன்னம்பிக்கையுடையவர்களாகவும், தங்களது கருத்துக்களை நிலைநாட்டுபவர்களாகவும் அவர்கள் மாறிடுவதற்கும் அநேகமாய் வாய்ப்பு இருக்கும்.

உரோமானிய மற்றும் எபிரெய ஸ்திரீகளின் முற்றிலும் வேறுபட்டச் சூழ்நிலைகளைக் கவனிக்கும் போது, உரோமானிய மற்றும் எபிரெய கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட நிருபங்களில் இத்தகைய அறிவுரைகள்/கட்டளைகள் இல்லாதிருப்பதற்கான காரணத்தினை நாம் புரிந்துகொள்ளலாம்.

முனைவர் Smith தனது பழமையான கிரேக்கம் மற்றும் உரோமானியம் குறித்துத் தனது கட்டுரைகளில் கூறுகிறதாவது:-

*"திருமணத்திற்குப் பின்பு ஓர் உரோமானிய ஸ்திரீக்கு இருக்கும் ஸ்தானம் என்பது கிரேக்க ஸ்திரீகளிடமிருந்து முற்றிலும் வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது. உரோமானிய மனைவியானவள் இல்லத்தில் தலைமைத் தாங்குகிறவளாகவும், தனது கணவனுக்குக் காண்பிக்கப்படும் கனத்திலும், மரியாதையிலும் பங்கடைபவளாகவும் இருக்கின்றாள்."*

மேலும் பேராசிரியர் Becker அவர்கள் கூறுவதாவது:-

*"உரோமானிய இல்லத்தரசியானவள் முழுவீட்டின் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் குடும்பத்தலைவியாகவும், குழந்தைகளுக்கு ஆசிரியையாகவும், இல்லத்தின் கனத்தைக் கட்டிக் காக்கிறவளாகவும், வீட்டிலும் சரி, வெளியிலும் சரி தனது கணவனுக்குச் சமமாக மதிக்கப்படுகிறவளாகவும் எப்போதும் காணப்படுகிறாள். ஸ்திரீகளும், புருஷர்களும் நாடக அரங்கங்களுக்கும், பொது விருந்துகளுக்கும் சேர்ந்து சென்று கலந்துகொண்டவர்களாய்க் காணப்பட்டனர்."*

எபிரெய சமுதாயத்தில் காணப்பட்ட ஸ்திரீகளுக்கு இருந்த சுதந்தரம் குறித்து வேதவாக்கியங்களில் மிகவும் வெளிப்படுத்தப்படுகின்றபடியால் கூடுதல் சாட்சிகள் அவசியமில்லை. அவர்கள் கர்த்தரோடும், அப்போஸ்தலர்களோடும், மற்ற ஆண் சீஷர்களோடும் சகஜமாய்ப் பேசினார்கள் மற்றும் சபை கூட்டங்களிலும், ஜெப ஆலயங்களிலும் கலந்து கொண்டனர் மற்றும் முழுச்சுதந்திரத்துடன் போய் வந்தார்கள். ஆகையால் கிறிஸ்தவ மார்க்கத்தில் இந்த ஸ்திரீகள் வந்தபோது எவ்வித பாரம்பரிய கட்டுப்பாட்டு வழக்கங்களினுடைய தடைகள் இல்லாமல், கிறிஸ்தவ வேலைகளில் ஈடுபடுவதற்கு ஆயத்தமாய்க் காணப்பட்டனர்; ஆனால் மற்ற ஜனங்கள் மத்தியில் காணப்பட்டப் பாரம்பரியக் கட்டுப்பாடுகளானது, கிறிஸ்துவின் காரணங்களுக்கு நிந்தையைக் கொண்டுவராத விதத்தில், படிப்படியாய் ஜனங்களின் எண்ணங்கள் புதுப்பிக்கப்படுவது வரையிலும், கொஞ்சம் கடைப்பிடிக்கப்பட வேண்டியதாய் இருந்தது.

---

R1559/199

## கர்த்தருக்குள் இளைப்பாருவீர்களாக.

பிதா என்ன செய்து முடிக்க வேண்டுமென்று விரும்புகின்றாரோ,
அதைச் செய்து முடிக்க அவர் போக்கில் விட்டுவிடு.
அவர் உண்மையுள்ளவர் என்பதை அறிந்துகொண்டே,
நீ அதில் நிலைத்து நிற்பாய்.
அவர் நடத்தும் வண்ணமாகவே, நடத்தும் வழியினில் மணிக்கு மணிநீ நடந்து செல்வாய்.
அந்த கணத்தில் என்ன ஆற்றல் வேண்டுமோ, அதை அவரிடம் கேட்டுப் பெற்றுக் கொள்வாய்,
அவர் மீது நம்பிக்கை வைப்பாய், இதுதான் எல்லாமும்.
அதன் பின் அந்த நாள் முழுவதும் அமைதி நிலைநிற்கும்.
என்னதான் நேரிட்டாலும், ஆசீர்வதிக்கப்பட்டே, பிரகாசமாகவே இருந்துவிடு.
அமைதலாகவே, கட்டுக்களின்றி விடுதலையாய் இருந்துவிடு,
சுற்றிப்போர்த்தப்பட்ட வெளிச்சம்தனைநினைவுகூர்ந்திடு,
அதன் தற்போதைய ஆற்றல் ஊக்கமளிப்பதை ஏற்றுக்கொண்டிடு.
இந்த நாளின் சந்தோஷத்தை எந்த சக்தியாலும்
எடுத்துப்போட முடியாதென்பதை நீயே அறிந்துகொள்வாய்,
கடும்வேதனை உனை அழுத்தும்போது அவர் கொடுக்கும் பாதுகாப்புதனை
எடுத்துபோர்த்திக்கொள்.
இவை எல்லாமும், அவர் நம்மை ஆசீர்வதிப்பதுவேஎன்பதை நாம் உணரவேண்டுமே.
இதுதான் எல்லாமும் அடங்கியதே.

# உயிர்த்தெழுந்த கிறிஸ்து
# The risen christ

(இக்கட்டுரை அக்டோபர் 15, 1893ம் ஆண்டு வெளியிடப்பட்ட உயிர்த்தெழுதல் என்று பெயரிடப்பட்ட கட்டுரையின் மறுபதிப்பு)

ஆதார வசனங்கள் :– 1கொரிந்தியர் 15:12–26

திறவுகோல் வசனம்:– நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் – 1கொரிந்தியர் 15:57

உயிர்த்தெழுதலின் போதனையைக்குறித்த மாபெரும் முக்கியத்துவம், 12–19 வசனங்களில் கூறப்பட்டுள்ளது நம் கவனத்தை ஈர்க்கிறது. அப்போஸ்தலர் எல்லாவற்றிற்கும் முதலாவதாக முன்வைக்கிற, கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார் என்ற மாபெரும் போதனை உயிர்த்தெழுதலின் போதனையோடு இரண்டறக் கலந்திருக்கிறது.

இயேசு மரித்தார் என்ற இந்த அடிப்படை போதனைமேல் நிலைநின்றே மற்ற போதனைகள் கட்டப்படுகின்றன. உணர்வூக்கம் கொண்ட அப்போஸ்தலரது மதிப்பீட்டில் இந்த போதனை மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. இது உண்மையல்ல என்றால், பிறகு என்போமானால், எந்த மனிதனுக்கும் தற்கால வாழ்க்கைக்கு அப்பால், வேற எந்த நம்பிக்கையும் இல்லை என்று வலியுறுத்திக் கூறுகிறார். உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இல்லாவிடில், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது வீணாகும். அதை பிரசங்கிப்பவர்களும் போலி சாட்சிகளாகவே இருப்பர். கிறிஸ்துவின் மரணமும் வீணாகும். கிறிஸ்தவர்களது விசுவாசமும் விருதாவாகும். அவர்களுடைய நம்பிக்கை பைத்தியமாகிவிடும். உயிர்த்தெழுதல் மற்றும் அதன் வெகுமதிகளைப் பற்றிய கண்ணோக்கில் அமைந்த அவர்களது பலியின் ஜீவியம் இவ்வுலக ஜீவியத்தின் அனுகூலங்களையும், சிறு மகிழ்ச்சிகளையும் கொடுத்து, அவர்களை கொள்ளையாடும். இவ்வாறு தற்கால வாழ்க்கையின் எல்லா அனுகூலங்களை மட்டுமே அடைவர். மேலும் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் அழிந்துபோயிருப்பார்கள். உயிர்த்தெழுதல் இல்லாமற்போனால், இப்படிப்பட்ட வீணான துக்கநிலைமையே நம்முடையதாயிருக்கும். அப்படியானால் கிறிஸ்து மரித்து, தமது உடைமையாக்கினதன் பலன்கள் நமக்கு கிடைக்கும் என்ற நிச்சயமிருக்காது. இது ஏற்றவேளையில் உணர்ந்து கொள்ளப்படும். நாம் நம் பாவங்களிலும் அதன் மரண தண்டனையின் கீழும் எவ்வித நம்பிக்கையுமின்றி இருந்திருப்போம். இதற்கும் மேலாக, உயிர்த்தெழுதல் இல்லையென்றால், ஈட்டுத்தொகை செலுத்தப்பட்டு, உயிர்த்தெழுதலை உடைமையாக்கியிருந்தும், ஒப்பந்தப்படி தேவன் தம் பங்கை நிறைவேற்றவில்லை என்றாகிவிடும்.

மீட்கும்பொருள் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய இந்த இரண்டு இணைஜோடியான போதனைகளின் மாபெரும் முக்கியத்துவம் 12 முதல் 19வரையுள்ள வசனங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதன் உண்மைத்தன்மை 20 முதல் 26 வசனங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அநேக, மாறாத, தவறிழைக்காத ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது(வசனங்கள் 5முதல்8; அப்போஸ் 1:3). அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தால் எல்லோரும் மீட்கப்பட்டு, மரணத்திலிருந்து விழிப்பூட்டுவதோடு மட்டுமல்லாமல், விழுகையினால் இழந்துபோன எல்லா ஆசீர்வாதங்களையும் தயவையும், முழுமையான உயிர்த்தெழுதலின் வாய்ப்பையும் பெறுவார்கள். கல்வாரியில் முழு உலகத்தின் பாவத்திற்கென்றும் கொடுக்கப்பட்ட மீட்கும்பொருள் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற நிச்சயத்தையே தேவன் எல்லா மனிதருக்கும் கொடுத்தார்(அப் 17:31). கொடுக்கப்பட்ட மீட்கும்பொருள் நம் சந்ததியினருக்கெதிரான நீதியின் சரிக்கட்டுதலை முழுமையாக நிறைவுசெய்தது. ஆதலால், அவர் தற்போது நீதிபரராயும், அவரை விசுவாசிக்கிற அனைவரையும் நியாயந்தீர்க்கிறவராயும் இருக்கமுடிகிறது– ரோமர் 3:26.

கிறிஸ்தவ மண்டலங்களிலுள்ள பல்வேறு விசுவாசப்பிரமாணங்கள் எதை அலட்சியப்படுத்துகிறது என்பதையும், அவர்களது போதனையில் இருந்த நேரடி முரண்பாடு என்ன என்று கவனிக்கவேண்டுமென்றும் 20ம் வசனம் கூறுகிறது. உயிர்த்தெழுப்பப்பட்ட கிறிஸ்துவே மரித்தோரின் முதற்பலன் என்றும், பரிபூரணத்தை அடையவும், நித்தியஜீவன் பெறவுமான உயிர்த்தெழுதலின் முழுமைத்தன்மையை முதலாவது ருசிபார்த்தவர் என்றும் போதித்த போதனையை கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என பவுல் கூறுகிறார். கிறிஸ்துவுக்கு முன்பாக உயிர்த்தெழுதலடைந்தோர் அனைவரும் தற்காலிகமாகவே எழுப்பப்பட்டனர். மீண்டும் பழைய நிலைமையாகிய மரணத்துக்கு திரும்பினர். இதற்கு உதாரணமாக, லாசரு, யவீருவின் மகள், நயீன் விதவையின் மகன், மற்றும் சூனேமியாளின் மகன் போன்றோரை கூறலாம். இவர்கள்அனைவரும் உயிர்த்தெழுதலின் ஒரு பகுதியை மட்டுமே அடைந்ததற்கு உதாரணமாக விளங்குகின்றனர். தேவன் நியமித்தநாளின் ஏற்றவேளையில் தெய்வீக வல்லமையால் உயிர்த்தெழுதல் நிறைவேறித்தீரும் என்பதனை மனிதர்க்கு நிச்சயப்படுத்தவே இவை நிகழ்த்தப்பட்டன(அப் 17:31). இந்த உண்மையில் மறைந்திருக்கிற காரணத்தை இப்பொழுது கண்டடையவேண்டும். கிறிஸ்து முதலாவதாக உயிர்த்தெழுப்பப்பட்டாரென்றால், அவருக்கு முன்பாக ஒருவரும் உயிர்த்தெழுப்பப்படவில்லை. மேலும் மேற்கண்ட

--215--



வசனங்களில் காண்பிக்கப்பட்டவாறு, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்த்தெழுதலின் மூலம் ஜீவனுக்கு சீர்பொருந்தியிராவிடில், அவர்களும் கெட்டிருப்பார்களே. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரைக்கும் இயேசுவுக்குள் நித்திரையிலிருப்போர், அவர்கள் மரிக்கும்போது ஒருவரும் பரலோகத்திற்கு ஏறிச் செல்லவில்லை என்பது தெளிவான காரியம். அவர்கள் மரித்திருந்தார்கள்,இயேசுவுக்குள் நித்திரையில் இருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கையில் இளைப்பாறுகிறார்கள். அவர்கள் அழிவுக்குள்ளாயினர், அவர்களது உயிர்த்தெழுதலுக்கென்று நியமிக்கப்பட்ட நாள்வரைக்கும் அவர்கள் அதேநிலையில் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இயேசுவுக்குள் நித்திரையடைந்த அனைவரையும் தேவன் அவரோடுகூட கொண்டுவருவார்(1தெச 4:14). தாவீது பரலோகத்துக்கு ஏறிச்செல்லவில்லையே(அப்2:34). தானியேலும் காத்திருக்க வேண்டும். கடைசிநாட்களின் முடிவுவேளையில் அவர் தன் சுதந்திரவீதத்தைப்பெற எழுந்திருப்பார்(தானி12:13). ஆபிரகாம் தன் வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்துக்கொள்ள ஏற்ற சமயத்துக்காக காத்திருக்கவேண்டும். அந்த தேசத்தில் தன் பாதங்களை பதிக்கும் தன் உடைமையாக ஒருபோதும் ஆக்கிக்கொள்ளவில்லை(அப்7:5). யோபு இந்த தீமையின் நாளின் கோபம் கடந்துபோகும் வரைக்கும் காத்திருக்க வேண்டும்(யோபு14:12–15,21). ஸ்தேவான் தான் மரிக்கும்போது கண்ட விசுவாசத்தின் தரிசனம் நிறைவேறுவதற்கு காத்திருக்கவேண்டியிருந்தது(அப் 7:56). பவுலும் அவரோடுகூட கர்த்தரின் பிரசன்னமாகுதலை விரும்பும் எல்லோரும், எல்லாம் நிறைவேறித்தீருங்காலங்கள் வருமளவும் தங்களது விசுவாசத்தின் வெகுமதிக்காக காத்திருக்கவேண்டியிருந்தது– 2தீமோத் 4:8.

மேற்கண்ட வசனங்களின் போதனை பூரண இசைவுள்ளதாய் இருக்கிறது. ஆனால் கிறிஸ்துவ மண்டலங்களின் தற்போதைய இறையியல் கோட்பாடுகளுக்கு இது ஒத்திராமல், முரண்பாட்டை வருவிக்கிறது.. அவர்களது கோட்பாடுகளை பகுத்தறிவின்படி பார்க்கும்போது, உயிர்த்தெழுதலின் கருத்துக்கள் எதுவும் இடம்பெறவில்லை. ஒரு மனிதன் மரித்து பரலோகத்திற்கு செல்வானாகில், அங்கே அவனது சிறையிருப்பிலிருந்து சிலர் அழைக்கும்போது, அங்கு தன் அழிவுக்குரிய சரீரத்தை அடிக்கடி மாற்றிக்கொள்வதில் மகிழ்வானாகில், அதை விரும்பி அதன்மேல் நம்பிக்கையை வளர்த்து எவ்வளவுதூரம் முடியுமோ, அவ்வளவுக்கு நிலைத்துநிற்க பிரயாசப்படுவதும், பகுத்தறிவின்பெயரில் தன் சரீரத்தோடு மீண்டும் இணைவதும் நம்புவதற்கு இடமுண்டா? அந்த நிலைமை பகுத்தறிவற்றதும், வேதவசனங்களின்ஆதாரமில்லாததும்நிலைநிற்காததுமாகும்.

21ம்வசனம் பெயர்சபைகளின் தற்போதைய இறையியல் கொள்கையை சமவலிமையுடன் எதிர்க்கிறது. மனுஷனாலே மரணம் வந்தபடியால், மனுஷனால் – மனிதராகிய கிறிஸ்துஇயேசுவால் , அவர் எல்லோரையும் மீட்கும்பொருளாக தம்மையே கொடுத்ததால், மரித்தோரின் உயிர்த்தெழுதலும் வந்தது என்று அவ்வசனம் அறிக்கையிடுகிறது. அவர்களது இறையியல் கோட்பாட்டின்படி, ஒரு தேவனுடைய பலியினால் மீட்பு உண்டாக்கப்பட்டது, மனிதனாலல்ல என்கிறது. ஆனால் வேத வசனங்களோ, சரிநிகர் சமானவிலை கொடுத்ததாக மிகத் தெளிவாக விளக்குகின்றன. நமது சந்ததியின் தலையாக இருந்த ஒரு மனிதனுக்கு, ஒரு மனிதனே பதிலீடாகிறார். அவரால் உண்டாக்கப்பட்ட மீட்பு, அவரது சந்ததியாரை மீட்டெடுத்ததாகும். துல்லியமாக அதே கொள்கையின்படி, அவரது விழுகை மற்றும் சாபம் நமக்கு பாவம் மற்றும் மரணத்தை சுமத்தியது. கிறிஸ்து இயேசுவாகிய அந்த மனுஷன், தம் முந்தைய மகிமைக்குரிய ஆவியின் ஜீவியத்தை விட்டு, பாவ மாம்ச சாயலாக மாறினார். இதைக்குறித்து கூறுகையில்,

'மரணத்தால் துன்பப்படுகிறவர்களுக்காக ஒரு சரீரத்தை நீர் எனக்காக ஆயத்தம் பண்ணினீர்"

தம்மை – தம் மாம்சத்தை, தம் மனித ஜீவியத்தை பலியாக்கியதன்மூலமாக நமது மீட்பு நிறைவேற்றப்பட்டது. அந்த பலி நிறைவேற்றப்பட்டதன் பலனாக, உன்னதங்களுக்கும் மேலாக தெய்வீக சுபாவத்திற்கு அவர் உயர்த்தப்பட்டார்.

''ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்.. எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்''.

அவர் உயிர்த்தெழுந்தபிறகு கூறியதாவது; பரலோகத்திலும் பூலோகத்திலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் பலிசெலுத்தியதற்கு வெகுமதியாக, தெய்வீக சுபாவத்திற்கு

உயர்த்தப்பட்டு, வல்லமையும் அருளப்பட்டதென்றால், அவர் மனிதனாக இப்பூமிக்கு வருமுன் பெற்றிருந்த ஆவிக்குரிய மகிமை மற்றும் வல்லமை எவ்வளவு ஐஸ்வரியமாயிருந்தாலும், தம் மனித சுபாவத்தை பலிசெலுத்தியபிறகு, உயிர்த்தெழுதலில் இன்னும் அதிக தயாளத்தைப் பெற்றுக்கொண்டார். தெய்வீக சுபாவத்திற்கு பங்காளியாக்கப்பட்டதோடு, பிதாவின் மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமானார்(எபி 1:3). மனிதனாகிய கிறிஸ்துஇயேசு உலகத்தின் ஜீவனுக்காக தம் மாம்சத்தை(மனித சுபாவத்தை) கொடுத்தபோது (யோவான் 6:51), அதை மீண்டும் எடுக்காதபடிக்கு ஒரேவிசை ஒப்புக்கொடுத்தார். ஏனெனில் அது நமது மீட்புக்காக செலுத்தப்பட்ட விலைக் கிரயமாயிருந்தது. இதன் தொடர்ச்சியாக, அவர் மீண்டும் எழுப்பப்பட்டபோது, ஒரு புதிய சுபாவத்தில் அவரது ஜீவியம் நிலைபெற்றது, இதனால் நமக்கு கிடைக்கும் ஆதாயங்களுக்கு எவ்வித குறுக்கீடும் நேரிடவில்லை. மேலும், அவரது மரணத்தின் மூலம் அடிமைத்தனமாகிய பாவம் மற்றும் மரணத்திலிருந்து சட்டப்பூர்வமாக விடுவித்தார். இவ்வாறு மனுக்குலம் இழந்ததை மீண்டும் அடையச்செய்வதற்குத் தேவையான அபரிதமான வல்லமையை, தெய்வீக சுபாவம் கொடுக்கப்பட்டதன் வாயிலாக அடைந்தார்.

கிறிஸ்துவினுடையவர்கள் அனைவரும், அவரது பலியின்மேல் வைக்கும் விசுவாசத்தினால், அவரது மரணத்தின் ஆதாயங்களை பெற்று, ஏதேனில் தண்டனையாக இழந்துபோன நித்தியஜீவன் மற்றும் பரிபூரணத்தை முழு உயிர்த்தெழுதல் மூலம் மீண்டும் அடைகிறோம். உயிர்த்தெழுதலின் வரிசையில் கிறிஸ்து முதற்பலனாக இருக்கிறார். கிறிஸ்துஇயேசு மட்டும் அல்ல, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற,தலையாகிய கிறிஸ்துஇயேசுவோடு–கூட, அவரது சரீரத்தின் எல்லா அங்கங்களும் உள்ளனர். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்கள்பரிசுத்தரும் பாக்கியவான்களுமாவர். இந்த மகிமையான சரீரம் உயிர்த்தெழுதல் அடைந்தபிறகு, அவருடையவர்கள் எல்லாரும் அவரது பிரசன்னக்காலத்தில் (கிரேக்க மொழியில் – பரோசியா– பிரசன்னம், வருகைஅல்ல). ஜீவிக்கின்ற அவருடையவர்கள் அனைவரும் மகிமையடைவர். அவர் ஆளுகைசெய்யும் ஆயிரவருடம் முழுவதும் அவரது பிரசன்னத்தின் காலமாக இருக்கும். அக்காலப்பகுதியில், பிரேதக்குழிகளிலுள்ள (நல்லோர் மற்றும் தீயோர், நீதிமான்கள் மற்றும் அநீதர்) அனைவரும் அவரது சத்தம் கேட்டு, எழுந்துவருவார்கள். நன்மைசெய்தோர் ஜீவன்பெற உயிர்த்தெழுந்தும், தீமைசெய்தோர் நியாயத்தீர்ப்படைய உயிர்த்தெழுந்தும் வருவர் – கிரேக்கமொழியில் – கிரைசிஸ் – நியாயத்தீர்ப்பு – நித்தியதண்டனையல்ல(யோவான் 5:28–29). முந்தைய வகுப்பார் முழு உயிர்த்தெழுதலை – மனித பரிபூரணத்தை வெகுமதியாக உடனடியாக பெற்றுக்கொள்வர். பிந்தைய வகுப்பாரோ நியாயத்தீர்ப்படைய அல்லது நித்தியஜீவன் பெறும் பரீட்சைக்கு விழித்தெழுப்பப்படுவார்கள். அது அவர்கள் அனுகூலமடையும்படிக்கு சிறப்புரிமையாக இருந்து, அவரது ஒழுக்கங்களையும் கட்டுப்பாடுகளையும் கற்றுக்கொள்ள தங்களையே முழுமையாக அர்ப்பணித்து, கிறிஸ்துவுடையவர்களாக மாற வழிவகுக்கும். அவ்வாறு தங்களை அர்ப்பணிக்காதவர்களது பரீட்சை, 100 வருட தவணைக் காலத்தோடு முடிவடைந்து, இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள், அதிலிருந்து மீள வேறுவழியில்லை(ஏசாயா 65:20). மரணத்திலிருந்து விழித்தெழுப்பப்பட்ட அனுபவத்தை எல்லோரும் அடைந்திருந்தாலும், கிறிஸ்துவையல்லாமல் ஒருவரும் பிழைத்திருக்கவோ, முழுமையாக உயிர்த்தெழவோ முடியாது. விழித்தெழுப்பப்படுவதே உயிர்த்தெழுதல் வழிமுறையின் முதல்படியாகும். மேலும், அவர்கள் முழுமையான உயிர்த்தெழுதலுக்கு தகுதியானவர்களா அல்லது தகுதியற்றவர்களா என்பதை நிரூபிக்கும். முழுமையான உயிர்த்தெழுதல் என்பது உண்மையான பரிபூரணம் மற்றும் நித்திய ஜீவன் ஆகும்.

“குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்” – 1யோவா5:12

“குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்” – யோவா 3:36.

கிறிஸ்து அடைந்த வெற்றியை 24 மற்றும் 25ம் வசனங்கள் நிச்சயப்படுத்துகிறது. அந்த வெற்றி எதை உள்ளடக்கினதெனில், எதிர்க்கும் ஒவ்வொரு வல்லமை மற்றும் அதிகாரத்தை முற்றிலுமாக கீழ்ப்படுத்தினதையும், அவரது தீர்மானத்தின்படி எல்லா எதிரிகளையும் அழிக்கிறார். அந்த எதிரிகள் தீமையானவைகளாய் இருந்தாலும், துரைத்தனங்கள் அதிகாரங்கள் வல்லமைகள் மற்றும் தனிப்பட்ட நபர்களாயிருந்தாலும் தம் பாதத்துக்கு கீழ்ப்படுத்துகிறார். மாபெரும் உபத்திரவக்காலத்தில், முதலாவது, எல்லாத் தீமைநிலைமைகளையும் நீக்குகிறார்(தானி 12:1). மேலும் அத்தீமை நிலையை நீக்கினதற்கு பதிலாக, நீதியின் நிலைமை மற்றும் சமாதானம் ஏற்படப் பண்ணுகிறார். உலகத்திற்கு தம் வெளிச்சம் மற்றும் சத்தியத்தைக்கொண்டு உலகத்தை நிரப்பி, தீமையின் நோக்கங்களையும் கொள்கைகளையும் நீக்கி, மனப்பூர்வமாய் கீழ்ப்படிகிற அனைவரது இருதயங்களையும் முறையான ஆவியால் புதுப்பிக்கப்படச் செய்கிறார். தம் சொந்த பரலோக வல்லமையை இயக்கி, எதிர்க்கிற ஒவ்வொரு வல்லமையையும் முழுமையாக ஜெயங்கொள்வதோடு, முழுமையாகவும் இறுதியாகவும் முடிவுக்குக் கொண்டு வருகிறார். எதிர்க்கிற ஒவ்வொரு தனிப்பட்ட நபரையும் கீழ்ப்படுத்தி, இரண்டாம் மரணத்தில் அழிக்கிறார். அதிலிருந்து அவர்கள் மீண்டுவர வழியில்லை.

“எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும் அவர் ஆளுகைசெய்ய வேண்டியது”.

அந்த ஆளுகையின் காலம் ஆயிரம் ஆண்டுகளாக வரம்பு விதிக்கப்பட்டுள்ளது(வெளி20:6–10). அக்காலம் முடிவடையும்போது எதிர்க்கும் தனிப்பட்ட ஒவ்வொருவரும், அவர்களை வஞ்சிக்கும்படி வழிநடத்திச்சென்ற சாத்தானும், அக்கினிக்கடலில் அழிக்கப்படுவர். இதுவே இரண்டாம் மரணம்(வெளி 20:7–15). கடைசியாக அழிக்கப்படும் சத்துரு மரணம். இது, எதிர்ப்பாளர்கள் அழிக்கப்பட்ட இரண்டாம்

--217--

மரணமல்ல, இதற்குமாறாக, ஆதாமுக்குள்ளான மரணம். இங்கு உபயோகிக்கப்பட்ட மொழிநடை, முரண்பாட்டை வருவிக்கக்கூடும். இரண்டாம் மரணத்தை அழிக்கஅல்ல, ஆதாமுக்குள்ளான மரணத்தை அழிக்கவும், அம்மரணத்தின் பிடியில் அகப்பட்டிருந்தவர்களை விடுவிக்கவுமே இயேசு வந்தார். இவ்வாறு எல்லோரையும் விடுவிக்க ஆயிரவருட அரசாட்சி முழுவதும் தேவைப்படும். நமது திறவுவசனத்தின் வார்த்தைகளை மீண்டும் நினைவுகூர்வோமாக – நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்குஸ்தோத்திரம்.

------------------

**R 1611** *A New Leaf*

## புதிய தாள் வேண்டும்
## (புத்தாடை வேண்டும்)

*பாடம் நடத்தி முடித்தபின்னே*
*சிறுவன் ஒருவன் வந்தான் முன்னே.*

*சார், சார் எனக்கோர் வெள்ளைத்தாள் ஒன்று,*
*புதிதாய் வாங்கிக் கொடுப்பீரே,*

*கொடுத்தத் தாளோ பாழாகி, கறைதிரை படிந்தே கிழிந்ததுவே.*

*அப்பழுக்கில்லா புதுத்தாளை அளித்தேன்*
*அவனுக்கிலவசமாய்,*

*துக்கமிகுந்தே இருந்தாலும்*
*துள்ளிக்குதித்தே பெற்றுக்கொண்டான்*

*நேர்த்தியாய் இனிமேல் வாழ்ந்திடு,*
*கிழிந்தால் மீண்டும் கிடைக்காது,*

*நடுக்கத்துடனே நான்கூட,*
*அரியணை அருகினில் நடந்துசென்றே,*

*அன்புத்தந்தாய், அன்புத்தந்தாய், பழையஆண்டு கடந்ததுவே,*

*புதியஆண்டும் பிறந்ததுவே, எனக்கும்கூட*
*ஓர்புத்தாடை மீண்டும் தந்தால் ஆகாதோ?*

*கடந்த ஆண்டைக் கறைபடுத்தி, கழித்தேவிட்டேன்*
*வீணாளாய், அவரோ அந்தக் கறைபடிந்த*
*ஆடையை மீண்டும் பெற்றுக்கொண்டே,*
*அளித்தார் எனக்கோர் புத்தாடை,*

*அப்பழுக்கில்லா ஆடையது,*
*என் மனதில் மீண்டும் புன்னகைத்தேன்,*

*“ நேர்த்தியாய் மீண்டும் வாழ்ந்துவிடு,*
*கிழித்தால் மீண்டும் கிடைக்காது” ,*

*அன்புடன் உரைத்தார் ஆண்டவரே.*

---------------

# வருடாந்தர நினைவுகூருதல் இராப்போஜனம்

இந்த வருடம், ஏப்ரல் 19-ஆம் தேதி, வியாழக்கிழமை, மாலை 6 மணிக்குப் பின்னர், நமது கர்த்தருடைய "கடைசி இராப்போஜனத்திற்கான" ஆண்டு நிறைவு நாளாய்க் காணப்படுகின்றது; இந்தக் "கடைசி இராப்போஜனத்தை" நமக்கான அவரது மரணத்திற்கான நினைவுகூருதலாக அவர் கொடுத்து, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றார் (லூக்கா 22:19).

இந்தப் பத்திரிக்கையினுடைய கழிந்த வெளியீட்டில், கடைசி இராப்போஜனமானது, யூதருடைய பஸ்கா இராப்போஜனத்திற்குப்பதிலாக இடம்பெறத்தக்கதாகக் கொடுக்கப்பட்டது என்பதற்கும், அது பொருத்தமான வேளையில், வருடந்தோறும் ஆசரிக்கப்பட வேண்டும் என்பதற்குமான ஆதாரங்களைக் கொடுத்திருந்தோம். பஸ்கா ஆட்டுக்குட்டியானது, தேவ ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவுக்கு நிழலாய் இருப்பதுபோன்று, அதன் மரணமும், அவருடைய மரணத்திற்கு நிழலாய் இருக்கின்றது மற்றும் இதனால் அவருடைய மரணமும் அதே நாளில்தான் நிகழ்கின்றது. நமது கர்த்தர் மரித்த அதே நாளிலும், காட்டிக்கொடுக்கப்பட்டதான அதே இரவிலும், அவரால் கடைசி இராப்போஜனமானது நிறுவப்படத்தக்கதாக, நாளினுடைய துவக்கத்தினை மாலை 6 மணியிலிருந்து கணக்கிடும் விதத்தில் யூதருடைய காலக்கணக்கீடு முறைமை ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது என்றும் நாம் காண்பித்திருந்தோம் (1 கொரிந்தியர் 11:23).

புதிய உடன்படிக்கையானது இன்னமும் அகற்றிப்போடாத நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் யூதனாகக் காணப்பட்டப்படியால், நிழலான ஆட்டுக்குட்டியினை முதலாவது புசிப்பது நமது கர்த்தருடைய கடமையாய் இருந்தது; இந்த இராப்போஜனம் முடிந்த பிற்பாடே அவர் தம்முடைய மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும் அடையாளங்களாக அப்பத்தையும், திராட்சரசத்தையும் எடுத்துக்கொண்டு, இன்று வரையிலும் நாமும், அவரது ஜனங்கள் அனைவரும் ஆசரிப்பதில் மகிழ்ச்சியடையும் நினைவுகூருதலுக்கான இராப்போஜனத்தை நிறுவினார்.

நிழலான ஆட்டுக்குட்டியினுடைய இடத்தை நமது கர்த்தர் எடுக்கையில், அவரால் நீசான் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்று சிலுவையில் அறையப்பட முடியும்; நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய நினைவுகூருதல் மற்றும் அதனால் உண்டான நிழலான கடந்துபோகுதலின் இடத்தில், அவரது மரணத்திற்கான நினைவுகூருதலும், இதனால் உண்டாகும் கடந்துபோகுதலும் இடம்பெறுவதினால், நிழலானது நினைவுகூர்ந்து ஆசரிக்கப்பட்டதுபோலவே, நிஜத்தினுடைய ஆசரிப்பும் வருடாந்தர ஆசரிப்பாகவே இருக்க வேண்டும்.

இது ஆதிக்கால திருச்சபையினருடைய வழக்கமாக இருந்துள்ளது என்று நாம் பார்த்திருக்கின்றோம்; அவர்கள் பல நூற்றாண்டு காலமாக நாம் பின்பற்றுகிற யூத காலக்கணக்கீடு முறைமையையே கைக்கொண்டு வந்தனர்; அதாவது நீசான் மாதம் 13-ஆம் தேதியின் மாலையாகிய 14-ஆம் தேதியின் துவக்கம் எனும் காலக்கணக்கிடுதலாகும். இப்படியான காலக்கணக்கீடு முறைமையானது பிற்பாடு உரோம சபையால் மாற்றப்பட்டது; எனினும் நமது கர்த்தருடைய மரணத்தை வருடந்தோறும் ஆசரிக்கும் கருத்தும், வழக்கமும் இன்னமும் உரோம சபையாலும், கிரேக்க சபையாலும், சிரியன் சபையாலும் இங்கிலீஷ் சபையாலும் "புனித வெள்ளியன்று" கைக்கொள்ளப்பட்டு வருகின்றது.

புராட்டஸ்டண்ட் சபைகளானது, *(திருப்பலி) பூசை பலியெனும்* உரோம சபை உபதேசத்தை, கர்த்தருடைய இராப்போஜனத்துடன் குழப்பிக்கொண்டனர்; ஆனால் இவைகள் இரண்டிற்கு இடையில் எந்தத் தொடர்புமே இல்லை; (மிலேனியல் டாண் புத்தகத்தின் தொகுதி-III, பக்கம்-98 முதல் 101 வரை, பூசைபலிக் குறித்துப் பார்க்கவும்); மேலும் இதன் காரணமாக இவர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட தேதிக்கும் எந்த ஒரு காரணத்தையும் காணாததினாலும், "இதைப் பானம்பண்ணும்போதெல்லாம்" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளானது, எப்போது வேண்டுமானாலும் ஆசரிப்பதற்கான முழு அனுமதியைக் கொடுக்கின்றது என்று எண்ணிக்கொண்டதாலும், பல்வேறு காலங்களையும், வேளைகளையும், காலை, மதியம், இரவு மற்றும் மாதந்தோறும், மாதத்திற்கு இருமுறை, காலாண்டுதோறும் என்று தெரிவு செய்துகொண்டனர். ஆனால் அப்போஸ்தலனோ இதைப் பானம்பண்ணும் ஒவ்வொரு முறையும் (வருடந்தோறும்) என்ற அர்த்தத்திலேயே குறிப்பிட்டுள்ளார் என்று நாம் புரிந்துகொள்கின்றோம்.

சில அருமையான கிறிஸ்தவ ஜனங்கள் இந்த இராப்போஜனத்தை வாரத்தின் முதல் நாள்தோறும் நினைவுகூர்ந்து ஆசரிக்கும் தப்பறைக்குள்கூட விழுந்துள்ளனர்; காரணம் இவர்கள் நிஜம் நீக்கிப்போட்டதான நிழல் தொடர்புடைய விஷயத்தில், இராப்போஜனத்தின் அர்த்தம் என்னவென்று கவனிக்கத் தவறியுள்ளனர்; காரணம் இவர்கள் தங்களுடைய இந்த நடவடிக்கைக்கு, புதிய ஏற்பாட்டில் இடம்பெறும், "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில்" என்ற வசனப்பகுதியினை எடுத்துக்காட்டாகத் தவறுதலாய் எண்ணிக்கொள்கின்றனர். இவ்வசனப்பகுதியானது, வாரத்தின் முதல்நாள்தோறும் அப்பம் பிட்குதலானது ஆதிக்கால சீஷர்களின் வழக்கமாய் இருந்தது என்பதை உண்மையில் சுட்டிக்காட்டுகின்றது; ஆனால் இது இங்கு நினைவுகூருதல் இராப்போஜனமே குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதை நிரூபிப்பதில்லை. திராட்சப்பழ ரசமானது, நினைவுகூருதலில் அப்பத்தைப்போன்று முக்கியமானதாகும்; ஆனால் இது, அப்பம் பிட்குதலுக்கும், ஜெபித்தலுக்குமெனக் கூடின இந்த வாரந்தோறுமான கூடுகைகளில், ஒருபோதும் குறிப்பிடப்படவில்லை. இவர்கள் நமது கர்த்தருடைய மரணத்தை அல்ல, அவரது உயிர்த்தெழுதலையே கொண்டாடினார்கள். இவர்கள் கடைசி இராப்போஜனத்திற்கான நினைவுகூருதலுக்காக அல்ல, மாறாக நமது கர்த்தர் உயிர்த்தெழுந்த நாளில் அப்பம் பிட்கையில் தங்கள் கண்கள் திறக்கப்பட்டதையும், தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும், தங்கள் பார்வையினின்று அவர் மறைந்து போனதையும் நினைவுகூரும் வண்ணமாகவே அப்பம் பிட்டுக்கொண்டார்கள்.

இங்கு நினைவுகூருதல் இராப்போஜனம்தான் நடைப்பெற்றதென்றால், அது அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்திருக்கும். நம்மைப்போன்று ஆதிக்கால சீஷர்களும், தினந்தோறும் அப்பம் பிட்டனர் (அ) அப்பம் புசித்தனர்; ஆனால் நமது கர்த்தருடைய மரணத்தை அல்ல, மாறாக அவரது உயிர்த்தெழுதலை நினைவுகூருவதற்காக வாரத்தினுடைய முதல்நாளில் ஒன்றுகூடினார்களே ஒழிய, மற்றபடி அப்பம் பிட்பதற்கு என்று அவர்கள் ஒன்றுகூடி வருவதில்லை.

இந்த வாரக்கூடுகைகளானது, யூதர்கள் அனைவருக்குமான வழக்கம் என்பதை சிறு ஆய்வுகள் பண்ணினாலே புரிந்துவிடும்; வாரத்தினுடைய முதல் நாளுக்குப்பதிலாக, யூதர்கள் வாரத்தின் கடைசி (அ) 7-ஆம் நாளிலும், பண்டிகை நாட்களிலும், (Social Meals) "விருந்து உணவு உண்பதற்கென" ஒன்று கூடுவார்கள். இது குறித்து Mc Clintock மற்றும் Strong's Religious Cyclopedia-வின், தொகுதி 8-இல், பக்கம் 68-இல் இடம்பெறும் வரிகளை, நாம் மேற்கூறிய காரியங்களை உறுதிப்படுத்துவதற்கு என்று மாத்திரம் மேற்கோள் இடுகின்றோம்; அது பின்வருமாறு:

"ஓய்வுநாள் தொடர்பான கடுமையான சட்டங்களின் காரணமாக, எந்த இஸ்ரயேலனும், "ஓய்வு நாள் பிரயாணம்" என்ற ஒரு குறிப்பிட்ட தொலைவுக்குமேல் நடக்கக்கூடாது என்றும், ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு எதையும் எடுத்துச் செல்லக்கூடாது என்றும் கட்டளையிடப்பட்டிருந்தது. ஓய்வுநாளில் தங்களுடைய விருந்தினைப் பல்வேறு இடங்களில் ஆசரிப்பவர்களாகக் காணப்பட்ட சதுசேயர்கள் (அ) ஆசாரிய குழுவினரால், ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லலாம் மற்றும் தாங்கள் விரும்பும் எதையும் இங்கும், அங்குமாய் எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்; ஏனெனில் இந்த விருந்துகளை இவர்கள் ஓய்வுநாளின் புனித ஆசரிப்புகளுக்கு உட்படாத தங்களது ஆசாரிய மற்றும் பலியின் வேலைகளின் ஒரு பாகமாகக் கருதினர். ஆனால் ஆசாரிய விருந்துகளைப்போன்று, தங்கள் ஓய்வுநாள் உணவுகளைப் பெற்றிருந்ததான பரிசேயர்களோ, கடுமையான ஓய்வுநாள் சட்டங்களினால் உண்டாகும் சிரமங்களை எதிர்க்கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர்."

## ஆசரிப்பு

நம்முடைய ஆராதனை அனைத்திலும், பயபக்தியோடுகூட எளிமையும் கலந்திருக்க வேண்டும்; மற்றும் இந்த நினைவுகூருதலின் விஷயத்திலுள்ள நமது கர்த்தருடைய முன்மாதிரியானது, எளிமை மற்றும் பயபக்தியுடன், பரிசுத்தத்தையும் குறிப்பிடுகின்றாய் இருக்கின்றது.

ஏப்ரல் 19-ஆம் தேதி, வியாழன் மாலை 6 மணிக்குமேல், மீட்பரை அன்புகூருகிறவர்களும், விசுவாசத்திலும், நடக்கையிலும் அவரது பின்னடியார்களாகக் காணப்படுவதற்கு வாக்குறுதிக் கொடுத்துள்ளவர்களும், "நம்முடைய பாவங்களுக்கான; நம்முடைய பாவங்களுக்கு மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களுக்குமான" அவரது மரணத்தினை ஆசரிப்பார்களாக. உங்கள் வசதிக்கேற்ப விலையேறப்பெற்ற விசுவாசத்தில் ஒத்திருப்பவர்களுடன், ஒன்றுகூடிடுவதற்கும், சரித்திரத்தின் இந்த மாபெரும் நிகழ்வை ஆசரிப்பதற்கும் விரும்புகிறவர்களுடன்

கூடிக்கொள்ளுங்கள். மீட்பரில் விசுவாசமுள்ள அர்ப்பணிக்கப்பட்டவர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்பவர்களுடைய கூடுகையாக அது காணப்பட வேண்டும்; ஆனால் இப்படியாக அறிக்கைப் பண்ணிக்கொண்டு மற்றவர்கள் எவரேனும் வருவார்களானால், அவர்களைப் புறக்கணிக்க வேண்டாம்; யூதாஸ் கர்த்தருடனும், மீதி பதினொரு பேருடனும் கூடிக்கொண்டான் என்பதை நினைவில்கொள்ளுங்கள். இன்னுமாக உங்களில் பெரியவனாய் இருக்க விரும்புகிறவன், பாதங்களைக் கழுவுபவனாக இருப்பான்; அதாவது தேவனுடைய ஜனங்களைப் பூமிக்குரிய அசுசிகளிலிருந்து சுத்திகரிக்கும் எளிமையான பணிவிடையைக்கூடச் செய்பவனாவான் என்பதையும் நினைவில்கொள்ளுங்கள்.

நமது கர்த்தரினால் பயன்படுத்தப்பட்ட அடையாளங்கள் புளிப்பில்லாத அப்பம் மற்றும் திராட்சப்பழரசமுமாகும் (fruit of the vine). யூத அயலார்களிடமிருந்து சில பணத்திற்குப் புளிப்பற்ற ரொட்டிகள் பெற்றுக்கொள்ளப்படலாம்; இல்லையேல் இதற்கொத்த மாவு மற்றும் தண்ணீரினால் செய்யப்பட்ட ரொட்டிகளும்/water crackers பயன்படுத்தப்படலாம். நமது கர்த்தர் அநேகமாக "லைட்" ஒயின் (Light Wine:12.5%-க்கு குறைவான மதுசாரம் கொண்டுள்ள திராட்சரசம்) பயன்படுத்தியிருக்க வேண்டும்; ஆனால் அவர் "திராட்சப்பழரசம்" (fruit of the vine) என்று மாத்திரம் குறிப்பிட்டார்; ஆகையால் நாம் புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றை (grape juice) அல்லது உலர்த் திராட்சையைத் தண்ணீருடன் வேகவைத்து, உண்டுபண்ணும் உலர் திராட்சரசத்தை/சாற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எப்படிப் போதையூட்டும் திராட்சரசமானது/wine, திராட்சப்பழரசமாக இருக்குமோ, அதுபோலவே இதுவும் திராட்சப்பழரசமாக இருக்கும். எப்படி அநேகர் இன்று மதுபானத்திற்கு அடிமையாகியுள்ளனர் என்பதினாலும், எப்படி எளிதில் கிடைக்கப்பெறும் திராட்சரசத்தினைச் சுவைத்துப்பார்ப்பது என்பதே தவறாய் வழிநடத்திவிடும் என்பதினாலும் நமது கர்த்தர் நாம் கூறுவதை அங்கீகரிப்பார் என்று நாம் நம்புகின்றோம்.

ஏப்ரல் 1-ஆம் தேதியினுடைய நம்முடைய வெளியீட்டில், இந்த அடையாளங்களுடைய அர்த்தம் தொடர்பாக நாம் சில கருத்துக்களைக் குறிப்பிடுவோம்.

## அலிகெனியில் (Allegheny) நினைவுகூருதல் ஆராதனை

வழக்கம்போல் ஆராதனையானது இங்குப் பைபிள் ஹவுஸ் சேப்பலில் (Bible House Chapel), எண்: 58, ஆர்க் தெருவில், மாலை 7:30 மணிக்கு நடைபெறும். தங்களுக்கான ஈடுபலியென நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்தை விசுவாசிப்பவர்களும், அவருக்கு முழுமையாய் அர்ப்பணித்துள்ளவர்களுமானவர்கள் அனைவரும் வரவேற்கப்படுகின்றனர். ஆனால் இந்த வருடத்தில், தொலைவில் உள்ளவர்கள் எவருக்கும் நாம் விசேஷித்த அழைப்பு விடுப்பதில்லை; மற்றும் வேறு கூடுகைகள் எதற்கும் ஏற்பாடு பண்ணப்படவில்லை. அருகாமையிலுள்ள பட்டணங்களில், யாரேனும் தனியாகக் காணப்படுகின்றார்களானால், அத்தகையவர்கள் எங்களோடுகூடக் கலந்துகொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியாயிருப்போம்; ஆனால் இந்த நினைவுகூருதலுக்கெனக் கூடிடுவதற்கு இரண்டு (அ) மூன்று பேர்கள் காணப்படுவார்களானால், அத்தகையவர்கள் உள்ளூர்களிலேயே ஒன்றுக்கூடிடும்படிக்கு நாம் யோசனைக் கூறுகின்றோம்.

கடந்தமுறை இங்கு மாநாடுகள் நடைப்பெற்றபோது, உள்ளூர்களில் மிகவும் அவசியமாய்க் காணப்படவேண்டியவர்கள், அங்கு இராததினால், உள்ளூர்களிலுள்ள விசுவாசிகளினுடைய பல்வேறு கூடுகைகள் தடைப்பட்டன மற்றும் சிரமத்திற்குள்ளாயின என்பதை நாங்கள் வேதனையுடன் அறிந்துகொண்டோம். இந்த வருஷம் இக்காரியத்தினை மாற்றிடுவதற்கு நாம் விரும்பி, அறிவுறுத்துவது என்னவெனில்: எங்கெல்லாம் இரண்டு (அ) மூன்று பேர்தான் கூடமுடிகின்ற நிலையிருக்கின்றதோ, அவர்கள் அவ்வாறே கூடிடுவார்களாக; பெரியளவிலான விசுவாசிகளின் எண்ணிக்கையையுடைய கூட்டத்தாருக்கும், சிறிய அளவிலான விசுவாசிகளின் எண்ணிக்கையையுடைய கூட்டத்தாருக்கும் அருகாமையிலுள்ள இடங்களில் தனித்திருப்பவர்கள் காணப்படுவார்களானால், இவர்கள் பெரிய கூடுகையில் கலந்துகொள்வதைக்காட்டிலும், சிறிய கூடுகையில் கலந்துகொள்வதற்கு முன்னுரிமைக் கொடுத்து, இப்படியாக இவர்களது வந்திருத்தலின் அவசியத்தை அதிகமாய் நாடுகின்ற சிறிய கூட்டத்தாருக்கு உதவிசெய்து, உற்சாகப்படுத்திடுவார்களாக. மற்றவர்களுக்கு நன்மைசெய்ய நாடுபவர்கள், தாங்களும் அதிகமாய் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

*****

R 1635

# "பொறாமை மற்றும் விரோதம்"

## ஆதியாகமம் 37:1-11

"நீங்கள் போகும் வழியிலே சண்டைபண்ணிக்கொள்ளாதிருங்கள்."
—ஆதியாகமம் 45:24

திரளான சந்ததி குறித்து ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் பண்ணப்பட்ட வாக்குத்தத்தமானது, மெதுவான விகிதத்தில் நிறைவேறி வருவது இங்குக் குறிப்பிடத்தக்க விதத்தில் கவனிக்கப்படலாம். ஆபிரகாம் அழைக்கப்பட்டது முதல் இத்தருணம் வரை இரண்டு நூற்றாண்டுகள் ஆகியுள்ளது; எனினும் அவரது சந்ததியினர் குறைவானவர்களாகவே காணப்பட்டனர். யாக்கோபிற்கு இப்பொழுது 109-வயதாக இருந்தது; அவருக்கு 12-குமாரர்களும், ஒரு குமாரத்தியும் காணப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் நற்குடிப்பிறப்பை உடையவர்களாகவும், ஆசையாய் எதிர்பார்க்கப்பட்டவர்களாகவும், மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும், தேவனிடமிருந்து வந்த அன்பளிப்புகளாகக் கருதப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர் (ஆதியாகமம் 29:32-35; 30:6-13, 17-24); மேலும் இவர்கள் தேவனையும், அவரது வாக்குத்தத்தங்களையும் பயபக்தியுடன் கருதுவதற்குக் கற்பிக்கப்பட்டிருந்தனர். இப்படிப்பட்ட நல்ல தாக்கங்களுக்கும் மேலாக, சில அநுகூலமற்ற தாக்கங்களும் கூடக் காணப்பட்டது; அவை பின்வருமாறு--(1) குடும்பத்தில் சமாதானத்திற்கும், ஒருமைபாட்டிற்கும் மற்றும் அன்பிற்கும் வழிவகுக்காத பல மனைவிகள் கொண்ட குடும்பம் மற்றும் நான்கு மனைவிகளின் பிள்ளைகள், இப்படியான ஒரு குடும்ப ஏற்பாடானது, தேவனுடைய ஏற்பாட்டின்படியாக இருக்கவில்லை, ஆனாலும் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளதுபோன்று, "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்" (அப்போஸ்தலர் 17:30). (தேவனுடைய பிரமாணம் பற்றின நவம்பர் 1, '92-இன் நமது பாடத்தைப் பார்க்கவும்). (2) இவர்கள் ஒழுக்கமற்ற அஞ்ஞானி ஜனங்களுடன், ஆரானிலும், சீகேமிலும் பழக்கம் கொண்டிருந்தார்கள். (3) இவர்களது மேய்ப்பன் வாழ்க்கையும் மற்றும் பெரிதான மந்தைகளைப் பராமரிப்பதுமான விஷயங்களும் இவர்களை வீட்டிலிருந்து தூர விலகியிருக்க வேண்டியதின் அவசியத்தை ஏற்படுத்திற்று மற்றும் இதன் காரணமாக நன்மைக்கு (அ) தீமைக்கு ஏதுவாய்ச் செலவிடுவதற்கு அதிகளவில் ஓய்வு வேளை கிடைத்தது.

இங்கு நமக்கு அறிமுகப்படுத்தப்படும் யோசேப்பின் அனுபவமானது, அப்போதுள்ள உயர்ந்த பட்ச நாகரிகம் மற்றும் உலகம் கற்றுக்கொண்டுள்ள விஷயங்கள் தொடர்பாக, இஸ்ரயேல் ஜனங்களுக்கு அவசியமான அனுபவங்களை, எகிப்தில் கொடுத்த தெய்வச் செயலின் காரணமான ஏற்பாட்டிற்கான துவக்கமாகக் காணப்பட்டது. எகிப்தில் அவர்கள் 400 ஆண்டுகளாக, பயிற்சியளிக்கும் விசேஷித்த சூழ்நிலையின் கீழ்க் காணப்பட்டனர்; மற்றும் அங்கிருந்து அவர்கள் தாழ்மை பற்றியும், தேவனுடைய அன்பு மற்றும் வல்லமையின் மீதான விசுவாசம் பற்றியுமான முக்கியமான பாடங்களைக் கொஞ்சம் கற்றுக்கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

பதினேழு வயதானவரும், அறிவுக்கூர்மையுள்ளவரும், யாக்கோபினுடைய முதிர்வயதின் குமாரனாக இருந்தபடியாலும், மிகவும் மாதிரியான குமாரனாகக் காணப்பட்டபடியாலும், யாக்கோபின் விசேஷித்த அபிமானத்தைப் பெற்றுக்கொண்டவருமான யோசேப்பு, அவரது சகோதரர்களுடைய பொறாமையின் காரணமாகவும், தனது வஞ்சனையற்ற தன்மையின் காரணமாகவும், தனது சகோதரர்களுடைய கோபத்திற்கு/வெறுப்பிற்கு ஆளானார். யோசேப்பின் மூத்த சகோதரர்களோ, தங்கள் இளைய சகோதரனும், சிறந்த எதிர்காலமுள்ள சகோதரனுமாகிய யோசேப்பின் மீது தங்கள் தகப்பன் கொண்டிருக்கும் அன்பில் பங்குகொள்வதற்குப் பதிலாக, யோசேப்பின் மீது பொறாமைகொண்டு, யோசேப்போடு சமாதானமாய்ப் பேசக்கூடாதவர்களாய்ப் போனார்கள். அவர்களது பொறாமையானது, துரிதமாய் உண்டுபண்ணிக்கொண்டிருந்த துர்க்குணத்தைக் குறித்து அறியாதவராகவும், கபடமற்றவராகவும் யோசேப்பு காணப்பட்டார் மற்றும் அவர்கள் செய்தவைகளைக் கண்டு ஆச்சரியமடைந்தவராகவும், அவர்களது தவறான நடக்கைகளை அறிந்தவராகவும், அவர் காரியங்களை வீடு திரும்பும்போது, தனது தகப்பனிடத்தில் தெரிவிப்பவராகவும் காணப்பட்டார்.

யோசேப்பு கபடற்றவராகவே தனது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சொப்பனங்களைக் குறித்து அவர்களிடத்தில் கூறினார்; அநேகமாக அதன் அர்த்தத்தை யோசேப்பு புரிந்துகொள்ளாதவராகவே காணப்பட்டிருந்திருக்க வேண்டும், ஆனால் யோசேப்பு எதிர்காலத்தில்

உயர்ந்த ஸ்தானத்தில் காணப்படப்போவதையே அச்சொப்பனங்கள் குறிக்கின்றன என்று அவர்கள் புரிந்துகொண்டார்கள்; இந்தச் சொப்பனத்தின் காரியமும் மற்றும் யோசேப்பின் மீதான தகப்பனின் விசேஷித்த கடாட்சம் பற்றி அவர்கள் அறிந்திருந்த காரியமும், யோசேப்பு எதிர்காலத்தில் உயர் ஸ்தானத்தில் காணப்பட்டுவிடுவார் என்று அவர்களை அச்சங்கொள்ளச் செய்தது மற்றும் அப்படியொரு காரியத்தை/கருத்தை அவர்களால் ஜீரணிக்கவும் முடியவில்லை. ஆகவே யோசேப்பை அப்புறப்படுத்துவதற்கான திட்டம் போடப்பட்டது. பொறாமையும், பகைமையுமானது, கொலைப்பாதகத்தின் சிந்தை மற்றும் நோக்கம் சார்ந்த அவர்களது கசப்பான கனியை வேகவேகமாய் முழுவளர்ச்சியடையச் செய்தது. யாக்கோபின் புத்திரர் அனைவரும் இப்படியாக தங்கள் இயல்புகளை வெளிப்படுத்துவதற்குத் தேவன் அனுமதித்தப்போதும், தம்முடைய நோக்கங்களுக்கு உதவியாக அவர்களது நடக்கையை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடுவதற்கும் ஆயத்தத்துடன் தேவன் காணப்பட்டார். இப்படியாகவே நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடுகின்ற தேவனுடைய செயல்பாடானது, எப்போதும் மனிதனுடைய சுயாதீனத்துடன் இசைந்தே செல்லுகின்றதாய் இருக்கின்றது.

யாக்கோபினுடைய முதல் மனைவியின், முதல் குமாரனாகிய ரூபன் ஏற்கெனவே பிரதான ஆசீர்வாதத்தை இழந்துபோயிருப்பதினால், யாக்கோபு யோசேப்பிற்குக் கொடுத்த பலவருண அங்கியானது, அவரது இரண்டாம் மனைவியின் மூத்த குமாரனாகிய யோசேப்பிற்கு, அவர் பிரதான ஆசீர்வாதத்தை அருளச் சித்தமாய் இருப்பதைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றது என்றும் அந்தச் சகோதரர்களானவர்கள் உணர்ந்துகொண்டார்கள் (ஆதியாகமம் 49:4).

பஞ்சத்தினுடைய உச்ச நிலையின்போது, யோசேப்பின் தந்தையும், சகோதரர்கள் அனைவரும், அவருக்குக் கனம் செலுத்திடுவதற்கும், அவரது தயாளத்தை அனுபவிப்பதற்குமென எகிப்துக்கு வரும்போது, அவர் காணப்படப் போகின்றதான உயர் ஸ்தானம் பற்றின தீர்க்கத்தரிசனமானவைகளாகவே யோசேப்பினுடைய சொப்பனங்கள் காணப்பட்டன. இந்தச் சொப்பனங்களானது, யோசேப்பினுடைய மனதில் ஏற்படுத்தின தாக்கமானது, அவர் வல்லமை மற்றும் செல்வாக்கின் அரியணைக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு முன்னதாக, அவர் எகிப்தில் கடுமையான சோதனைகள் மற்றும் பரீட்சைகளின் மத்தியில் காணப்பட்டபோது, அவருக்கு ஆறுதலையும், மகிழ்ச்சியையும் கொடுத்ததாகக் காணப்பட்டது.

யோசேப்பினுடைய சகோதரர்கள் கொண்டிருந்த பொறாமையானது, ஆபிரகாமுக்குத் தேவனால் பண்ணப்பட்ட வாக்குத்தத்தத்திற்கு இசைவாக இறுதியில் நன்மைக்கு ஏதுவாய் மாற்றப்பட்டாலும், அது அவர்கள் மீது கடுமையான அனுபவங்களையும் மற்றும் கசப்புகளையும் கொண்டுவந்ததாயிருந்தது. பொறாமை என்பது விழுந்துபோன சுபாவத்திற்கே உரிய கனிகளில் ஒன்றாகும்; பொறாமை மோசமானதும், சகல துர்ச்செய்கைகளுக்கும் நேராய் நிச்சயமாய் வழி நடத்துகின்றதுமாய் இருக்கின்றது; இது சரிசெய்யப்படவில்லையெனில் இறுதியில் மரணத்திற்கும் வழிநடத்திவிடும்.

---

# அடையாளங்களினுடைய முக்கியத்துவம்

அப்பத்தைக் குறித்து நமது கர்த்தர் கூறினதாவது: "இது என் மாம்சம்" ஆகும்; அதாவது புளிப்பில்லாத அப்பமானது, நமக்காகப் பிட்கப்பட்ட அல்லது பலி செலுத்தப்பட்ட அவரது மாம்சத்தை, அவரது மனுஷீகத்தை அடையாளப்படுத்துகிறதாய் இருக்கின்றது. அவர் தம்மையே நமக்காகப் பலிசெலுத்தாதது வரையிலும் நம்மால் நித்தியமான ஜீவனை ஒருபோதும் பெற்றுக்கொள்ளமுடியாது; அவர் சொன்னதுபோல: "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை" (யோவான் 6:53).

இயேசுவின் சரீரம் பிட்கப்பட்டதான காரியமானது, மனிதன் புசித்தால், ஒருபோதும் மரியாமல் இருக்கப்பண்ணுகின்றதான, ஜீவ அப்பத்தை அளிக்கிறதாக மாத்திரம் காணப்படாமல், இன்னுமாக அது ஜீவனுக்கு நேரான "இடுக்கமான வழியையும்" திறந்தது மற்றும் ஜீவனுக்கு நேராய் வழிநடத்துகின்றதான இடுக்கமான வழியில் நடப்பதற்கு உதவியான, ஆவிக்குரிய உணவாகிய சத்தியத்தை நாம் அடையத்தக்கதாக, முத்திரையை உடைத்தது. இப்படியாகப் பிட்கப்பட்ட அப்பமானது, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று தம்மைக் குறித்துக் கூறினவரின் பிட்கப்படுதலை அடையாளப்படுத்துவது பொருத்தமானதே என்று நாம் காண்கின்றோம் (யோவான் 14:6).

ஆகையால் பிட்கப்பட்ட அப்பத்தை நாம் புசிக்கையில் — அவர் மரித்திருக்கவில்லையெனில், அவர் நமக்காகப் பிட்கப்பட்டிருக்கவில்லையெனில், நாம் ஒருபோதும் பிதாவினிடத்திற்கு வந்திருக்க முடியாது என்றும், நாம் என்றென்றும் ஆதாமினுடைய பாவத்தினுடைய சாபத்தின் கீழிலும், மரணத்தினுடைய நுகத்தின் கீழிலும் காணப்பட்டிருந்திருப்போம் என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மற்றுமொரு கருத்து: பயன்படுத்தப்பட்ட அப்பமானது, புளிப்பற்றதாகும். புளிப்பு என்பது கெடுக்கிற ஒன்றாக, சீரழிக்கும் ஒன்றாக இருப்பதினால், பாவத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் பாவம் மனுக்குலத்தில் கொண்டுவந்ததான சீரழிவையும், மரணத்தையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்த அடையாளமானது, நமது கர்த்தர் இயேசு பாவம் இல்லாதவராக இருந்தார் என்பதை, கறைதிறையற்ற ஆட்டுக்குட்டி என்பதை, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாய்" இருந்தார் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் ஆதாமின் சந்ததியில் வந்தவராய் இருந்திருப்பாரானால், வழக்கம்போல் ஏதோ ஒரு பூமிக்குரிய தந்தை வாயிலாக தமது ஜீவனைப் பெற்றவராக இருந்திருப்பாரானால், அவரும்கூட மற்ற மனிதர்களைப்போலவே ஆதாமின் பாவத்தினால், புளிப்பானவராய் இருந்திருப்பார்; ஆனால் அவருடைய ஜீவனானது கறைதிறை இல்லாமல், உயர்ந்த பரலோக நிலையிலிருந்து, பூமிக்குரிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலைமையில் வந்ததாய் இருந்தது; ஆகவே அவர் "வானத்திலிருந்து வந்த அப்பம்" என்று அழைக்கப்பட்டார் (யோவான் 6:41). ஆகவே தேவன் அருளியுள்ளதான தூய்மையான, புளிப்பற்ற, மாசற்ற அப்பத்தினைக் குறித்து உணர்ந்துகொள்வோமாக மற்றும் அவரைப் புசிப்போமாக; அதாவது சத்தியத்தைப் புசித்து, ஜீரணிப்பதன் வாயிலாக அவரை நாம் புசிப்போமாக; அதிலும் விசேஷமாக — விசுவாசத்தின் வாயிலாக அவரது நீதியை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுதல் எனும் சத்தியத்தைப் புசிப்போமாக; மேலும் அவரை வழியாகவும், ஜீவனாகவும் அடையாளங்கண்டு கொள்வோமாக.

இந்த நினைவுகூருதல் அடையாளங்கள் தொடர்புடையதான இன்னும் ஆழமான ஓர் அர்த்தத்தை, அப்போஸ்தலன் தெய்வீக வெளிப்படுத்துதலின் வாயிலாக தெரிவித்துள்ளார். அப்பமானது நமது கர்த்தர் இயேசுவை மாத்திரம்அடையாளப்படுத்துகின்றதாயிராமல், நாம் அவரைப் புசித்தப் பிற்பாடு (அவரது நீதியை நமக்குரியதாக்கிக் கொள்வதன் வாயிலாக நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு) நாம் அர்ப்பணத்தின் வாயிலாக, உலகத்திற்கான உணவாகிய அந்தப் பிட்கப்பட்ட ஒரே அப்பத்தின் பாகமாக, நாம் அவரோடு இணைந்தவர்களானோம் என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். (1 கொரிந்தியர் 10:16). இது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளாகிய நாம், எதிர்கால மகிமைகளில் அவரோடுகூட உடன் சுதந்தரர்களாகுவதற்கும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதும், பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஜீவன் வழங்குவதுமான மாபெரும் வேலையில் பங்காளிகளாகுவதற்குமுரிய நிபந்தனையாய்க் காணப்படுகின்ற கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் இப்பொழுது பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றோம் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இதே கருத்தானது, அப்போஸ்தலனால் மீண்டும் மீண்டுமாகவும், பல்வேறு அடையாளங்களினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அவை அனைத்தைக்காட்டிலும், இவ்வடையாளமே ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது தங்கள் தலையோடுகூட (கிறிஸ்துவின் சரீரமாகிய — கொலோசியர் 1:24 பார்க்கவும்) சபையே இப்பொழுது பிட்கப்படுகின்றதான "ஒரே அப்பமாக" இருக்கின்றனர். இது நமது தலையானவருடனான நமது ஐக்கியத்திற்கும், உறவிற்கும் குறிப்பிடத்தக்கதான விவரிப்பாய்க் காணப்படுகின்றது.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;" "அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 – KJV ; திருவிவிலியம்.)

'திராட்சப்பழரசமானது' (fruit of the vine) நமது கர்த்தரினால் பலிச்செலுத்தப்பட்ட ஜீவனை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மரணத்தில் கையளிக்கப்பட்ட ஜீவனுக்கான அடையாளம்)" (மத்தேயு 26:27, 28).

பாவத்தின் காரணமாக ஆதாமின் சந்ததி இழந்துபோனதான ஜீவனுக்கான மீட்கும்பொருளாகக் கர்த்தர் தமது ஜீவனைக் கொடுப்பதன் மூலமே, புதிய உடன்படிக்கையின்கீழ் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் வாயிலாக மனிதர்களுக்கு ஜீவனுக்கான உரிமை கடந்துவர முடியும். (உரோமர் 5:18, 19). சிந்தப்பட்ட இரத்தமானது, "அனைவருக்குமான மீட்கும்பொருளாக" (விலையாகக்) காணப்பட்டது; இது அனைவருக்காகவும், நமது மீட்பரினாலே கொடுக்கப்பட்டதாய் இருந்தது; ஆனால் அவர் பாத்திரத்தைச் சீஷர்களிடத்தில் கொடுத்து, அதைப் பருகும்படிக்கு அவர்களிடம் கூறினதாவது, தம்முடைய பாடுகளில் அவர்கள் பங்காளிகளாகுவதற்கான அல்லது பவுல் குறிப்பிட்டுள்ளதுபோன்று "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான" அழைப்பாய்க் காணப்பட்டது (கொலோசெயர் 1:24). விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, நாமாய் முன்வந்து கிறிஸ்துவின் காரணங்களை/நோக்கங்களை ஆதரிப்பதின் வாயிலாக, அவரது பாடுகளில் பங்குகொள்வோமானால், நாம் தேவனால் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும் மற்றும் இயேசுவின் பாடுகளில் பங்கடைபவர்களாகவும் கருதப்படுவோம் என்பதே நம்முன் வைக்கப்பட்ட காரியமாகும். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (சிந்தப்பட்ட இரத்தம் — மரணம்) பங்குகொள்ளுதல் அல்லவா?" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்). "பாத்திரத்தினுடைய" மதிப்பினை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாக, கிறிஸ்துவோடுகூட, அவரது பாடுகள் மற்றும் அவமானத்தின் "பாத்திரத்தில்" பங்குகொள்வதற்கான வாய்ப்பிற்காக, தேவனை ஸ்தோத்திரிப்போமாக; இப்படியானவர்கள் அனைவரும், அவரோடுகூட மகிமைப்படுத்தப்படுவர் என்ற நிச்சயமும் கொண்டிருக்கலாம். (உரோமர் 8:17).

பாத்திரமானது அவரது அவமானத்தில் நமது பங்குகொள்ளுதலையும், அவரது பலியில் நமது பங்குகொள்ளுதலையும், அதாவது நமது மனுஷீகத்தின் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில், நமது கர்த்தரும், பாத்திரத்திற்கு இந்த அர்த்தத்தைச் சாற்றினவராய் இருந்தார். உதாரணத்திற்கு அவரது சிங்காசனத்திலுள்ள எதிர்க்கால மகிமைக் குறித்த வாக்குறுதியை அவரது சீஷர்களில் இருவர், அவரிடத்தில் கேட்டபோது, அவரோ: "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கக்கூடுமோ? என்றார். அவர்களது இருதயப்பூர்வமான உறுதிமொழியின் நிமித்தமாக, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்றார். திராட்சப்பழரசமானது, இரத்தம்/இரசம் வெளியே வருமளவுக்குத் திராட்சையைப் பிழிவதை மாத்திரம் குறிக்காமல், பிற்பாடு கடந்துவரும் புத்துணர்வையும்கூடக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; ஆகையால் "கிறிஸ்துவின் பாடுகளில்" இப்பொழுது பங்குகொள்ளும் நாம், அவரது மகிமைகளிலும், கனங்களிலும் மற்றும் அழியாமையிலும் சீக்கிரத்தில் பங்குகொள்வோம் — அதாவது இராஜ்யத்தில் அவரோடுகூடப் புதிய திராட்சரசத்தைப் பருகும்போது ஆகும்.

ஆகையால் மிகவும் அன்புக்குரியவர்களே, 19-ஆம் தேதி அன்று மாலையில், நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருகையில் நாம் செய்கிற காரியத்தினுடைய அர்த்தத்தினை மனதிற்குக் கொண்டுவருவோமாக; அவருடைய ஜீவனால் ஊக்குவிக்கப்பட்டு, ஜீவ அப்பத்தினால்

பலப்படுத்தப்பட்டுள்ள நாம், அவருடைய மரணத்திற்குள்ளாக அவரோடுகூடப் பானம்பண்ணுவோமாக மற்றும் மற்றவர்களைப் போஷிக்கத்தக்கதாக அவரோடுகூட நாம் பிட்கப்பட வேண்டும் என்று முன்பில்லாத அளவுக்கு மிகவும் உறுதியுடன் முன்னேறுவோமாக."நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" (2 தீமோத்தேயு 2:11, 12).

## யார் பங்குகொள்ளலாம்

இந்த அப்பத்திலும், இந்தப் பாத்திரத்திலும் பங்குகொள்வதற்குத் தனக்கு உரிமை இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானித்துக்கொள்ளும் காரியமானது, அவனவனிடத்தில் விடப்பட்டுள்ளது. ஒருவன் பாவங்களுக்கான மன்னிப்பிற்காக, புதிய உடன்படிக்கையின் இரத்தத்தை விசுவாசித்து, தன்னை சீஷன் என்று அறிக்கைப் பண்ணிக்கொண்டு, கர்த்தருடைய ஊழியத்திற்கென அர்ப்பணம் பண்ணினவனாகக் காணப்படுவானானால், அவனது சக சீஷர்கள் அவனது இருதயத்தை நியாயந்தீர்க்காதிருப்பார்களாக. தேவனால் மாத்திரமே இருதயத்தினைத் தெளிவாய் அறிந்துகொள்ள முடியும்.

இந்த அடையாள சின்னங்களானது, கிறிஸ்துவினுடைய மரணத்தை அடையாளப்படுத்துகின்றபடியால், இந்த அடையாளங்களில் அறியாமையிலும், அபாத்திரமான நிலைமையிலும், சரியற்ற விதத்திலும், அதாவது இந்த அடையாளங்களில் "கர்த்தருடைய சரீரம்" நமக்கான மீட்கும்பொருளாக இருப்பதை அடையாளம் கண்டுகொள்ளாத நிலையிலும் பங்குகொள்ளுதல் குறித்து நாம் அனைவரும் ஜாக்கிரதையாய் இருப்போமாக; ஏனெனில் இப்படியான நிலையில் பங்குகொள்பவன், கர்த்தரைக் கொன்றுபோட்டவர்களில் ஒருவனாக இருப்பான் மற்றும் அடையாளத்தில் அவன் "கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாய் இருப்பான்" (1 கொரிந்தியர் 11:27).

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிவானாக;" எந்த மனுஷனும் இந்த அடையாளங்களைப் புசிக்கையில், இவைகள் தனது ஜீவன் மற்றும் சிலாக்கியங்களுக்கான மீட்கும்பொருளென உணர்ந்துகொள்வானாக மற்றும் அதைப் புசிக்கையில் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுப்பதற்கும், மற்றவர்களுக்காகப் பிட்கப்படுவதற்குமெனத் தன்னை அளிக்கப்பெறுகிறவனாகுகின்றான் என்பதையும் உணர்ந்துகொள்வானாக; இல்லையேல் அவன் இப்படிப் போஜனம்பண்ணுவது என்பது அவனது மனசாட்சிக்கு முன்னிலையில், அவனது அன்றாட ஜீவியத்திற்கு — "அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்பு" வரும்படிக்கு ஏதுவாய் இருக்கும். (1 கொரிந்தியர் 11:28, 29).

நமது நீதிமானாக்கப்படுதலை மாத்திரமல்லாமல், கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் பங்குகொள்வதற்கான நமது அர்ப்பணித்தலையும் அடையாளப்படுத்துகின்றதான இந்த நினைவுகூருதலுக்குரிய அடையாள சின்னங்களைச் சரியாய் உணர்ந்துகொள்ளாததின் காரணமாக, "அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். (1 கொரிந்தியர் 11:30). இது உண்மை என்பது உறுதியே ஆகும்; இந்த இராப்போஜனத்தில் அடையாளப்படுத்தப்படும் உண்மைகளை உணர்ந்துகொள்ளாததும், கவனிக்கத் தவறினதுமே, பெயரளவிலான திருச்சபையானது பெலவீனமாயும், வியாதிப்பட்டும், நித்திரை நிலைமையிலும் இருப்பதற்குமான காரணமாய்க் காணப்படுகின்றது. மீட்கும்பொருள் பலிக் குறித்தும், தங்கள் கர்த்தருடன் உலகத்திற்கான பலியிலும், அவருடைய பாடுகளிலும் தங்களுக்கான பங்கைக் குறித்ததுமான தெளிவான உணர்ந்துகொள்ளுதலே பரிசுத்தவான்களை முழுமையாய் விழிப்படையப் பண்ணுகிறதாகவும், பலப்படுத்துகிறதாகவும் இருக்கின்றதே ஒழிய வேறு எதுவுமில்லை. "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்" (1 கொரிந்தியர் 11:28).

*****

R 1639

# "யோசேப்பு எகிப்தில் விற்கப்பட்டார்"

## ஆதியாகமம் 37:23-36

"நீங்களோ எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள், தேவனோ அதை நன்மையாக முடியப்பண்ணினார்."—ஆதியாகமம் 50:20

முற்காலத்திலுள்ள தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களில் சிலருடைய ஜீவியங்களில் நடைபெற்ற, நன்மைக்கு ஏதுவாய்க் காரியங்களை மாற்றியமைக்கும் தேவனுடைய வழிநடத்துதல்களைக் காணும்போது, அவர்களில் நம்முடைய விசுவாசத்திற்கான மாபெரும் தூண்டுதலைக் கண்டடைய முடிகின்றது; முற்பிதாக்களின் மாதிரியான ஜீவியங்களில், தேவனுக்கான நமது பக்திவைராக்கியத்திற்கும் மற்றும் அவரது ஊழியங்களுக்கான நமது உண்மைக்கும் தூண்டுதலைக் கண்டடைகின்றோம். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு . . . இவர்கள் எத்துணை அருமையாய்த் தேவனோடு சஞ்சரித்திருக்கின்றனர்! இருளான வேளைகளிலும் மற்றும் பிரகாசமான வேளைகளிலும் எவ்வளவுக்கு எளிமையாகவும் மற்றும் குழந்தைகள் வைத்திருப்பதுபோன்றதாகவும் இவர்களது விசுவாசம் காணப்பட்டிருந்தது! இவர்களது பக்தி எத்துணை உள்ளார்வத்துடனும், உண்மையுடனும் காணப்பட்டிருந்தது!

முந்தின பாடத்தில், யாக்கோபினுடைய முதிர்வயதில், அவரது பிரியமான குமாரனாகக் காணப்பட்ட (கடமை உணர்வுமிக்க, 17-வயது வாலிபனான) யோசேப்பைப்பற்றியும், அவரது தீர்க்கத்தரிசனமான சொப்பனங்கள் பற்றியும், அவரது சகோதரர்கள் அவரிடத்தில் கொண்ட பொறாமைப் பற்றியும் நாம் பார்த்தோம். இந்தப் பாடத்தில், எவ்வாறு அந்தப் பொறாமையும், பகைமையும், அதனதின் கனிகளைக் கொண்டு வந்தது என்று நாம் பார்க்கப்போகின்றோம். ரூபன் மற்றும் யூதா தவிர, மற்றபடி அனைவரும் யோசேப்பினுடைய ஜீவனைக் கொன்று போடுவதற்கு விருப்பமாய் இருந்தார்கள்; ஆனாலும் இந்த இருவர் நேரடியாக மீதியானவர்களை எதிர்ப்பதற்குத் துணியவில்லை, ஆகவே வெவ்வேறு ஆலோசனைகளைப் பரிந்துரைத்தவர்களாகக் காணப்பட்டார்கள். யோசேப்பை ரூபன் குழிக்குள் போடப்பண்ணினார் மற்றும் இந்தக் குழியினின்று யோசேப்பை இரகசியமாய்க் காப்பாற்றிவிடுவதற்கு ரூபன் நோக்கம் கொண்டிருந்தார், ஆனால் மற்றவர்களோ இந்தக் குழியில் யோசேப்பு பட்டினிக் கிடந்து சாக வேண்டும் என்ற முடிவில் காணப்பட்டார்கள். ஆனால் காப்பாற்ற வேண்டுமென்ற தனது நோக்கத்தை ரூபன் நிறைவேற்றுவதற்கு முன்னதாக, எகிப்துக்குப் போய்க் கொண்டிருக்கிற வாணிகர் கூட்டத்தினரிடம் யோசேப்பை விற்றுவிடலாம் என்ற யோசனையை யூதா முன் வைத்துவிட்டார் மற்றும் இந்த ஆலோசனைக்கு அவர்களும் ஒப்புக்கொள்ள, அவர்கள் தங்கள் இளைய சகோதரனை விற்றுத் தள்ளிவிட்டு, கிடைத்த பணத்தைத் தங்களுக்குள்ளாகப் பங்குபோட்டுக் கொண்டார்கள். இப்படியாக விற்றுப்போட்டது குறித்து ரூபனுக்குத் தெரிவிக்கப்படவில்லை மற்றும் இவரும், யோசேப்பு மரித்துப்போய்விட்டார் என்றெண்ணி, தன்னுடைய தகப்பனாருடைய துக்கத்தில் பங்கடைந்தார்.

யூதாவினுடைய நோக்கம், இரண்டு நோக்கமாகக் காணப்படுகின்றது; முதலாவதாக யூதா தன்னுடைய மனசாட்சியைச் சாந்தப்படுத்தத்தக்கதாக, இரண்டு தீமைகளிலேயே குறைவான தீமையைத் தேர்ந்தெடுத்து, தன்னுடைய சகோதரனுடைய இரத்தப்பழிக்கு ஆளாகுவதைத் தவிர்த்துக்கொண்டார், எனினும் யோசேப்பைத் துரத்தித் தள்ளிவிடும் நோக்கத்தினை, அதுவும் தங்களுக்குக் கொஞ்சம் (பணம்) இலாபம் கிடைக்கும் விதத்தில் துரத்தித் தள்ளிவிடும் நோக்கத்தினை நிறைவேற்றிவிடுவதற்கு ஆவலுள்ளவராய்க் காணப்பட்டார். பின்னர் மீதி எட்டுப் பேரோடுங்கூடத் தன்னுடைய தகப்பனாரிடத்தில் பொய்ச் சொல்வதற்கும் மற்றும் யோசேப்பு மரித்து விட்டார் என்று நம்பப்பண்ணுவதற்கும் விருப்பமுள்ளவராய் இருந்தார். இரண்டு தீமைகளிலுமே, குறைவான தீமையைத் தேர்ந்தெடுத்த யூதா இப்படித் தேர்ந்தெடுப்பது நன்மையானது/நல்லது என்று கருதியிருக்கலாம், ஏனெனில், "நம்முடைய சகோதரனைக் கொன்றுபோடுவோம்" என்பதும், "நம்முடைய சகோதரனை விற்றுப் போடலாம்" என்பதுமான கருத்துக்கள்/ஆலோசனைகள் மிகவும் வேறுபட்ட வித்தியாசம் கொண்டவையாக இருக்கின்றது. இப்படியாகவே பெரிய தீமைகளை, சிறிய தீமைகளுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதன் மூலம் அல்லது தங்களை மற்றவர்களுடன், அதாவது வேதவாக்கியங்களில் முன்வைக்கப்பட்டுள்ள உண்மையான பரிசுத்தத்துடனும், நற்பண்புகளின் பூரண அளவுகளுடனும் ஒப்பிடுவதற்குப் பதிலாக, இழிவான பண்புகளுடைய மற்றவர்களுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதன் மூலம் மனிதர்கள் பெரும்பாலும் வஞ்சிக்கப்படுகின்றனர்.

தனது பிரியமான குமாரன் மரித்துப்போய்விட்டான் என்பதாக எண்ணப்பட்ட இந்த இழப்பு என்பது, யாக்கோபுக்கு மற்றும் ஒரு கடினமான சோதனையாக இருந்தது. யோசேப்பின் சந்ததி வழியில்தான் தெய்வீக உடன்படிக்கையின் நிறைவேறுதலானது எதிர்பார்க்கப்பட்டது. யோசேப்பு யாக்கோபினுடைய பிரியமான மனைவியாகிய ராகேலின் மூத்த குமாரனாகவும், யாக்கோபினுடைய இருதயத்திற்கு ஏற்றவராகவும், தேவனுக்கான பயபக்தியையும் மற்றும் நீதியின் மீதான அன்பையும் கொண்டவராகவும் காணப்பட்டார். பலவருண அங்கியானது, யாக்கோபினுடைய யோசேப்பின் விஷயத்திலான அந்த நம்பிக்கையின் வெளிப்படுத்துதலாய் இருந்தது மற்றும் இந்தத் தனது நம்பிக்கையைத் தனது குடும்பத்தாரும் பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலும் மற்றும் குடும்பத்தாரும் கொண்டிருக்க வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாகவும், யாக்கோபு இந்தத் தனது நம்பிக்கையை, தனது குடும்பத்தாரிடமிருந்து மறைப்பதற்கு நாடவில்லை. ரூபன் யாக்கோபினுடைய முதல் மனைவியாகிய லேயாளின் மூத்த குமாரனாக இருந்தபடியால், சகோதரர்கள் அனைவரின் மத்தியிலும், ரூபனே யோசேப்புக்கு எதிராகப் பொறாமைக்கொள்வதற்கு அநேகம் காரணங்களை உடையவராக இருக்கின்றார். "யோசேப்பு உயிரோடிருக்கிறான்" எனும் நற்செய்தியை யாக்கோபு பெற்றுக்கொள்வதற்கு முன்பு வரையிலும், யாக்கோபு 23-வருடங்களாகிய நீண்ட காலம், தனது பிரியமான குமாரனுடைய இழப்பை அனுபவித்தவராகக் காணப்பட்டார். எனினும் யாக்கோபு தேவனுடைய வாக்குத்தத்தங்களை உண்மையுடன்/விசுவாசத்துடன் பற்றிக்கொண்டவராகவும், இஸ்ரயேலின் ஆறுதலுக்காகக் காத்துக்கொண்டிருந்தவராகவும் மற்றும் தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதாகக் காணப்படுகின்ற சாந்தம் மற்றும் பொறுமை எனும் பண்புகளைத் தாழ்மையுடன் வளர்த்துக்கொண்டவராகவும் காணப்பட்டார்.

யோசேப்பின் விஷயத்திலுங்கூடச் சோதனையானது மிகவும் கடுமையானதாகவே காணப்பட்டது. பிரியமுள்ள குமாரனாகவும், அபிமான குமாரனாகவும், தன்னுடைய தகப்பனாருடைய வீட்டில் அன்பாய் வளர்க்கப்பட்ட குமாரனாகவும் இருந்த அவர், திடீரென அந்நிய மற்றும் புறஜாதியான தேசம் ஒன்றில், அடிமை ஸ்தானத்திற்கு மாற்றப்பட்டார். இதனோடுகூட அவரது சகோதரர்களிடத்திலிருந்து அவர் அடைந்திட்ட இரக்கமற்ற கொடூரம் மற்றும் கொலைப்பாதகத்திற்கு ஏதுவான பகைமை அடங்கின கசப்பான அனுபவங்களும் அவருக்கு இருந்தது; இன்னுமாக அவரது தகப்பன் அடையப்போகின்ற வேதனைகள் பற்றின எண்ணங்களும், தனிமையும் இருந்தது; இன்னுமாக அக்காலத்தில் அந்நிய தேசங்களுக்கிடையே சாலைகளோ, தந்தியோ, அஞ்சல் ஏற்பாடுகளாகிய தொடர்புக்கான ஏற்பாடுகளோ இல்லாதிருந்ததினால் மற்றும் அடிமையாகிய தனக்கு நேரமோ (அ) பணமோ இல்லாமல் இருப்பதினால், தன்னால் மீண்டுமாக தன்னுடைய தகப்பனுடைய முகத்தைக் காணவோ (அ) தகப்பனிடமிருந்து ஏதாகிலும் செய்தி கேட்கவோ முடியும் என்ற எவ்விதமான நம்பிக்கையும் இல்லாதவராகக் காணப்பட்டார்.

இது நிச்சயமாகவே 17-வயதுள்ள ஓர் இளம் வாலிபனுக்குக் கடினமான அனுபவமாக இருந்திருக்கும்; யோசேப்பு தனது குழந்தைப் பருவத்தின் இடத்தையும், பூமியில் தனக்குப் பிரியமானவர்கள் என்றிருந்தவர்கள் அனைவரையும் அவர் விட்டுப்பிரிந்தபோது, இம்மாதிரியான வேதனையுள்ள சந்தர்ப்பத்தில் இருக்கையில், தனது தகப்பனார் அனைத்தையும் விட்டு ஏசாவிடமிருந்து ஓடினபோது, தெய்வீக வாக்குத்தத்தங்கள், சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகள் எனும் கோலைத் தன்னுடன் எடுத்துக்கொண்டது போன்று, இத்தகைய தகப்பனுடைய செல்வாக்கின் கீழ் வளர்ந்த யோசேப்பும் செய்தார் மற்றும் தான் தேவனுக்கு உண்மையாயும், நேர்மையாயும் காணப்பட வேண்டுமென்றும், தான் என்னென்ன சூழ்நிலைகளிலெல்லாம் வைக்கப்பட்டாலும் தன்னுடைய நேர்மையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் யோசேப்பு முடிவெடுத்தார். அந்தோ பரிதாபம்! இந்த நாட்களிலும் சரி, அந்த நாட்களிலும் சரி எத்தனை வாலிபர்கள்தான் இப்படிப்பட்டதான நல்ல தீர்மானங்களை, மிகவும் சாதகமான சூழ்நிலைகளின் கீழ் இருந்தபோதாகிலும் கூட எடுத்துக்கொள்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர்? இந்த வயதில்தான் இளமைப் பருவத்திற்கே உரிய ஏளனச் செயல்களில், மனம்போன போக்கில் ஈடுபட வேண்டும் என்று பொதுவாக எண்ணிக்கொள்கின்றனர், ஆனால் இப்பொழுது விதைத்துள்ளவைகளுக்கு, தாங்கள் கசப்பான ஓர் அறுவடையைப் பின்னர் அறுக்க வேண்டியிருக்கும் என்பதையும் பொதுவாக மறந்துவிடுகின்றனர்.

தேவனால் இந்தத் துன்பமான சூழ்நிலைகளின் எப்பாகத்தையாகிலும் தடைப்பண்ணி இருக்கவும் மற்றும் குறுக்கிட்டிருக்கவும் முடிந்திருக்கும் என்றபோதிலும், அவர் அப்படிச் செய்யாமல், மாறாக ஒவ்வொருவரும் தீமைக்கு அல்லது நன்மைக்கு ஏதுவான தங்கள் தங்கள் பண்புகளை வெளிப்படுத்துவதற்கு அனுமதித்தார் என்று நாம் பார்க்கின்றோம்; எனினும் இவைகள்

அனைத்திற்கும் மேலாக, தேவனுடைய பரந்த மனப்பான்மையுடன் கூடிய திட்டங்களுக்கு உதவியாகவும் மற்றும் அவரது உண்மையுள்ள ஊழியக்காரர்களுக்கான விசேஷித்த ஆசீர்வாதங்களுக்காகவும், இந்தச் சூழ்நிலைகள் அனைத்தையும் மிகவும் ஆச்சரியமான விதத்தில், மாற்றிப்போட்டக் காரியத்தில், நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடும் அவரது வழி நடத்துதலை நம்மால் காணமுடிகின்றது. உதாரணத்திற்கு யோசேப்பு தன்னுடைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காணத்தக்கதாக தனியே விடப்பட்டபோதும், புதியதும், அக்காலகட்டத்தில் மிகுந்த முன்னேற்றமும், நாகரிகமும் அடைந்ததாகக் காணப்பட்டதுமான தேசத்துடன் தொடர்புக்குள் வந்தபோதும், அவர் புதியதும், விலையேறப்பெற்றதும், வேறு எவ்விதத்திலும் பெற்றுக்கொள்ள முடியாததுமான படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டார் மற்றும் புருஷனுக்குரிய பலத்தையும், தைரியத்தையும், சாமர்த்தியத்தையும், உறுதியான குணலட்சணத்தையும், வளர்த்தியப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார்; இன்னுமாக குடும்ப அங்கத்தினர்கள் அனைவரிடமிருந்து அவர் தனிமைப்படுத்தப்பட்ட காரியமானது, தேவனுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வதற்கும், தேவனுடைய வல்லமையின் மீது சார்ந்திருப்பதற்கும் அவரை வழிநடத்தினது.

தேவனுடைய வழிநடத்துதலின்படி, யோசேப்பு எகிப்து தேசத்தில், இஸ்ரயேலர்கள் அனைவருக்குமான முன்னோடியானார்; இந்த எகிப்து தேசத்தில்தான், தேவன் இஸ்ரயேல் தேசம் முழுவதற்கும் அவசியமானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான அனுபவங்களை, நானூறு ஆண்டுகளுக்கு, அந்தக் காலக்கட்டத்தின் உயர்ந்தபட்ச நாகரிக நிலையுடன் தொடர்புக்குள் கொண்டுவந்து கொடுப்பதற்கு, அதுவும் அடிமை நிலையின் தாழ்மையான சூழ்நிலைகளின் கீழ்க் கொடுப்பதற்குத் திட்டம் பண்ணியிருந்தார்; இப்படியான தாழ்மையான சூழ்நிலைகளின் கீழ் அனுபவங்களைக் கொடுப்பது என்பது அவர்களைத் தாழ்மையாக்கிவிடும் மற்றும் தேவன்மீது சார்ந்திடுவதற்கு அவர்களுக்குக் கற்றுக்கொடுத்திடும். இந்த எகிப்து தேசத்தில் இஸ்ரயேல் ஜனங்களின் சந்ததியினர் தூய்மையாகவும், மற்றவர்களிடம் இருந்து வேறுபட்டவர்களாகவும் காக்கப்பட்டனர், ஏனெனில் அவர்கள் அடிமைகளாக இருந்தபடியினால், அவர்களால் எகிப்தியர்களுடன் கலப்புத் திருமணம் செய்துகொள்ள முடியாது. எகிப்து தேசத்தில் காணப்பட்ட இஸ்ரயேலர்கள் மூலமாக, எகிப்தியர்கள் மாத்திரமல்லாமல், இவர்கள் மூலமாக மற்றத் தேசத்தார்களும், உண்மை தேவனுடைய குணாதிசயம் மற்றும் வல்லமைக் குறித்துக் கொஞ்சம் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

இந்த முற்பிதாக்களின் விஷயத்திலான தெய்வீக வழிநடத்துதல்களை நாம் கவனிக்கையில், குணலட்சணத்தை வளர்த்துவது மற்றும் எதிர்கால நன்மைக்கென்று சந்தர்ப்ப சூழ்நிலைகள் வனையப்படும் விஷயத்திலுமான முற்பிதாக்களினுடைய அனுபவங்களின் முக்கியத்துவமானது, அவர்களது இறுதி/முடிவு பலன்களை நாம் பார்க்கும் பொழுதுதான், நமக்கு நன்கு வெளிப்படுகின்றது என்ற உண்மைகளிலிருந்து, நமக்கு முக்கியத்துவம் வாய்ந்த மிகவும் விசேஷமான பாடம் கிடைக்கப்பெறுகின்றது; ஆனால் அவர்களோ இந்த அனுபவங்கள் வாயிலாக கடந்துபோகுகையில், அவர்களால் தேவனது அன்பான நோக்கங்களைப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்த போதும், அவர்கள் தேவனுடைய வழிநடத்தும் கரங்களை நம்பி, விசுவாசத்துடன் நடக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

ஈசாக்குக்குப் பதிலாக தேவன் ஆட்டுக்குட்டியை ஏற்பாடு பண்ணுவார் என்று ஆபிரகாமினால் அறிந்துகொள்ள முடியாது; ஆகையால் அவர் தனது குமாரனைக் கொன்று போடத்தக்கதாகக் கத்தியைத் தூக்குமளவுக்குத் தெய்வீகக் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியது ஆபிரகாமின் பங்காக இருந்தது. ஏசா தன்னைச் சமாதானத்துடன் சந்திப்பார் என்றும், தேசத்தின் நன்மையை அனுபவிக்க தன்னையும் அனுமதிப்பார் என்றும் யாக்போபினால் அறிந்துகொள்ள முடியாது; கர்த்தர் கட்டளையிட்டபோது, அவர் எழுந்து, தன்னுடைய வீட்டாரையும் கூட்டிக்கொண்டு, தன்னுடைய உடைமைகளையும் எடுத்துக்கொண்டு, ஏசாவைச் சந்திக்கப்போக வேண்டியது யாக்கோபினுடைய பாகமாக இருந்தது. தன்னுடைய சகோதரர்களைத் தேடும்படிக்குத் தனது தகப்பன் வீட்டைவிட்டு வந்தபோது, தன் மீது கடந்துவந்திட்ட வேதனையான சூழ்நிலைகள் அனைத்தும், எவ்வாறு தனக்கும், தன்னுடைய தகப்பன் வீட்டார் அனைவருக்கும் மற்றும் எகிப்துக்கும் மாபெரும் நன்மைக்கு ஏதுவாக மாறும் என்று யோசேப்பினால் அறிந்துகொள்ள முடியாது; ஆனால் தெய்வீகச் சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளைத் தன்னுடன்கூட எகிப்துக்குக் கொண்டு செல்வதும், தேவனுக்கேற்ற குணங்களுக்கான சிறந்த மாதிரியாகக் காணப்படுவதும், போத்திபாரின் வேலைக்காரனாக, தன்னால் முடிந்தமட்டும் தன்னுடைய வேலைகளை உண்மையாய்ச் செய்ய வேண்டியதும் யோசேப்பினுடைய பங்காக இருந்தது. தனது தந்தையாகிய யாக்கோபு போன்று, யோசேப்பும் விசுவாசம் மற்றும் கடமையின் பாதையில்

நடந்தபோது, தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களை அருள முடிந்தது; மேலும் அவர்களுடைய உண்மையின், விசுவாசத்தின் மற்றும் தாழ்மையின் ஆசீர்வாதமான பலனை நம்மால் இறுதியில் காணமுடிகின்றது.

அவர்களைப்போலவே நாமும் ஒருவேளை அனைத்துச் சூழ்நிலைகளிலும், அதாவது இருளான நேரங்களிலும், வெளிச்சமான நேரங்களிலும், அமைதியான நேரங்களிலும், புயலான நேரங்களிலும் நமது உண்மையை நிரூபிப்போமானால், நம்முடைய ஜீவியத்தின் கடந்தகால அனுபவங்களுங்கூட மேற்கூறியபடி, நித்திய காலங்களினுடைய வெளிச்சத்தில் பார்க்கப்படும்/ காட்சியளிக்கும். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அனைவரும் அனுபவங்களினால் பயிற்றுவிக்கப்பட வேண்டும்; ஆகையால் முற்பிதாக்களினுடைய சிறந்த மாதிரிகளினாலும் மற்றும் அனைத்தையும் நன்மைக்கேதுவாய் நடந்தேற்றினதில் வெளிப்பட்ட தேவனது அன்பு, பராமரிப்பு மற்றும் ஞானத்தினாலும் மற்றும் இப்படியாகவே நமக்கும் நடைபெறும் என்று அவர் வாக்களித்துள்ளதாலும் நாம் தைரியம் கொண்டு, நாம் நம்மைப் பொறுமையுடனும், சாந்தத்துடனும் தேவனிடம் ஒப்புக்கொடுப்போமாக!

---

# "யோசேப்பு அதிகாரியாக எகிப்தில்"
## ஆதியாகமம் 41:38-48

"என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன்."
1 சாமுயேல் 2:30

எகிப்தில் யோசேப்பு தனது புதியதும், சோதனை நிரம்பியதுமான சூழ்நிலைகளில் நல் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருப்பதாகக் காண்கிறோம். அனைத்திலும் நீதியானவைகள் எவை என்று பார்ப்பதற்கும், நீதியின்படி கிரியைப் புரிவதற்கும் முடிவெடுத்திருந்த யோசேப்பு, தேவனில் விசுவாசம் கொண்டு, தனது அனைத்துப் பொறுப்புகளிலும், அவைகள் பிடித்தமான/இன்பமான (அ) பிடித்தமில்லாத/இன்பமில்லாத பொறுப்புகளாக இருப்பினும், அவைகளில் மகிழ்ச்சிக் கொண்டவராகவும், உண்மையுள்ளவராகவும் காணப்பட்டார். இப்படியாக அவர் நடந்திட்டபோது, அவர் அறிவு நுட்பத்தின்படி இப்படிச் செய்யாமல், மாறாகக் கொள்கையின் அடிப்படையிலேயே செய்தார், ஏனெனில் அவர் நீதியை விரும்பினவராகவும், நீதியுள்ள தேவனுடைய அங்கீகரிப்பை விரும்பினவராகவும் காணப்பட்டார்.

அவரது உண்மைத்தன்மையானது, வெகு சீக்கிரத்தில் அவரது எஜமானுடைய நம்பிக்கையை வென்று தந்தது; "கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு; யோசேப்பினிடத்தில் தயவுவைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும், தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்" (ஆதியாகமம் 39:3, 4). இப்படியாக யோசேப்பு பத்து வருடங்களாக உண்மையுடன் ஊழியஞ்செய்து வந்த பிற்பாடு, அவர் தவறாய்க் குற்றஞ்சாட்டப்பட்டு, சிறையில் போடப்பட்டார்; "அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது." (சங்கீதம் 105: 17, 18); தெளிந்த மனசாட்சியுடனும் மற்றும் தெய்வீக அங்கீகரிப்புப் பற்றின உணர்வுடனும், யோசேப்பு இந்தச் சூழ்நிலையின் மத்தியிலும் தன்னாலான நல் முயற்சிகளை ஏறெடுப்பதற்குத் தீர்மானம் பண்ணினார்; சிறையிலுங்கூட, "கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபைவைத்து, சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார் " (ஆதியாகமம் 39:21); அந்தக் கிடங்கிலுங்கூட விடுதலைப் பெறுவதற்குரிய எவ்விதமான நம்பிக்கையும் இல்லாதிருந்தபோதும், அவர் தேவனுக்கும், மூன்று வருடங்கள் அங்குள்ள பொறுப்புகளுக்கும் உண்மையுள்ளவராகக் காணப்பட்டார்; ஆனால் இந்தப் பயிற்சியின் மற்றும் பரீட்சையின் மூலம் நிரூபிக்கப்படுதலின் நோக்கங்கள் நிறைவேறினவுடன், தேவன் யோசேப்பிற்கு முன்னதாக திறந்த கதவுகளை முன் வைத்தார். தேவன் யோசேப்பைச் சிறையிலிருந்து வெளியே எடுக்கவில்லை, மாறாக மற்றவர்களுக்கு யோசேப்பு இரக்கத்துடன் உதவிபுரியும் வழியின் வாயிலாகவே, தேவன் அவரை வெளியே நடத்தினார்.

யோசேப்பு எங்கே இருந்திட்டாலும், எவ்விதமான சூழ்நிலைகளில் காணப்பட்டாலும், அவர் நீதியானவைகளையே/சரியானவைகளையே செய்தார் மற்றும் சூழ்நிலையைச் சிறந்த விதத்தில் பயன்படுத்திக்கொண்டார் மற்றும் சிறு விஷயங்கள் அனைத்திலும் அவர் கொண்டிருந்த உண்மையானது, அவர் பெரிய விதங்களில் பயன்படுத்தப்படுவதற்கு ஏதுவாக அவரை ஆயத்தப்படுத்தினது. அவர் ஜீவியத்தின் அனுபவங்களினால் சரியான விதங்களில் பயிற்றுவிக்கப்பட்டார். நன்றியுடையவர்களிடத்திலும், நன்றியற்றவர்களிடத்திலும் இரக்கமாயிருந்தார் மற்றும் அற்பமானவர்களிடத்திலும், மதிப்புமிக்கவர்களிடத்திலும் பெருந்தன்மையுடன் யோசேப்பு காணப்பட்டார்; தான் மற்றவர்களிடத்தில் அனுபவித்த அநியாயமும், கொடூரமான நடத்துதலும், தன்னுடைய இருதயத்தினைக் கடினப்படுத்துவதற்கு யோசேப்பு அனுமதித்திடவில்லை. மேலும் இந்த அனைத்து நடத்தைகளிலும், அவர் தேவனிடத்தில் அவிவிசுவாசம் கொண்டதாகவோ (அ) முறையிட்டதாகவோ எவ்விதமான அறிகுறிகளையும் நம்மால் காண இயலவில்லை. அவருடைய சோதனையின்போது, அவர் தேவனுடன் நெருங்கிக் காணப்பட்டவராகவும், தேவனை அவரால் தடயம் காணமுடியாதபோது அவரில் விசுவாசம் வைத்து, தேவனுடைய கிருபைகளின் வெளிப்படுத்துதல்களில் ஆறுதல் அடைந்தவராகவும் மாத்திரம் காணப்பட்டார்.

சிறையில் காணப்பட்ட பானபாத்திரக்காரன் மற்றும் சுயம்பாகியின் சொப்பனங்களுக்கான அர்த்தத்தைத் தேவன் யோசேப்பிற்குக் காண்பித்தபோது, இந்தக் கிருபை தேவனிடத்திலிருந்து வந்தது என்று யோசேப்பு அடையாளங்கண்டுகொண்டார் மற்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் மீண்டுமாகச்

சுதந்தரத்திற்கான திறந்த கதவினைத் தன்னால் காண முடிவதாக யோசேப்பு எண்ணினார். ஆனால் நன்றிமறந்த பானபாத்திரக்காரனோ தனக்கு நன்மை செய்த இந்த உபகாரியை மறந்துபோனான் மற்றும் யோசேப்பு இரண்டு வருடங்களாகக் கைதியாகவே காணப்பட்டார். பின்னர்க் கதவு திறந்தது, இம்முறை சுதந்திரத்திற்காக மாத்திரமல்லாமல், கனத்திற்கும், முன்னேறுவதற்குமாய்க் கதவு திறந்தது மற்றும் யோசேப்பும் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாயிருந்தார். வருவதாக உரைக்கப்பட்டதான பஞ்சம் தொடர்புடைய விஷயத்தில் பார்வோனுக்கு, யோசேப்பு கொடுத்த ஞானமான வழிமுறை பற்றின ஆலோசனையானது, தேவனிடத்திலான அவரது விசுவாசத்திற்கான சாட்சியமாக மாத்திரம் இல்லாமல், இன்னுமாகக் கூர்மையான, சுறுசுறுப்பான வியாபார சிந்தைக்குமான சாட்சியமாகவும் காணப்படுகின்றது. இப்படியாக மனிதர்கள் தங்கள் விசுவாசத்தின்படி உடனடியாகவும், தயக்கமில்லாமலும் செயல்பட வேண்டுமென்று யோசேப்பு கற்றுக்கொடுக்கின்றவராய் இருக்கின்றார்; மேலும் எகிப்தின் எதிர்க்காலத்தை அச்சுறுத்தும் அபாயங்கள் ஊடாக, அத்தேசத்திற்கு வழிகாட்டும்படிக்கு யோசேப்பு தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவர் தனது மகா செயலாற்றல் திறமையை வெளிப்படுத்தினார் மற்றும் இங்கும் தனது உண்மையைக் காண்பித்தார். இந்த விஷயத்தில் அவர் இவைகளில் (இத்திறமைகளில்) கொஞ்சத்தைத் தன்னுடைய தகப்பனாரிடமிருந்து சுதந்தரித்துக்கொண்டவராய் இருந்தார்; ஆனால் பெரும்பான்மையானது இவரது சொந்த ஆற்றலாகவும், குணலட்சணத்தின் வலிமையாகவும் காணப்பட்டது. கனத்திற்கும், பயனாகுவதற்கும் வழிநடத்தக்கூடிய திறந்த கதவுகள் அனைத்துமே, ஒருவேளை அக்கதவுகளுக்குள் பிரவேசிப்பதற்கும் மற்றும் அக்கதவுகளானது வழிநடத்தும் வேலைகளை வெற்றிகரமாய் நடத்துவதற்குமான ஆற்றலையும், குணலட்சணத்தினுடைய வலிமையையும் நாம் பெற்றிராவிட்டால், பிரயோஜனமற்றதாகவே இருக்கும். தேவனுடைய கண்ணோட்டத்திலான வெற்றிகரமான ஜீவியம் ஒன்றை ஜீவிப்பதற்கு, உண்மைத்தன்மையும், குணலட்சணத்தில் தூய்மையும், பெருந்தன்மையுடன் கூடிய நோக்கம், ஆற்றல், துணிவு, திறமைகள், பயபக்தி மற்றும் சுயக்கட்டுப்பாடு அனைத்தும் அவசியமாய் இருக்கின்றது.

யோசேப்பு இராஜாவுக்கு அடுத்ததாக, எகிப்தினுடைய சிங்காசனத்தில் இரண்டாம் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டக் காரியமானது, அவரது உண்மைக்கான முழுப்பலனாகச் சிலரால் கருதப்படலாம். ஆனால் யோசேப்பு அப்படியாக நிச்சயமாய்க் கருதிக்கொள்ளவில்லை. அவர் இன்னமும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை மதிப்பவராய் இருந்தார்; அவர் அடிமையின் நிலையினின்றும், சிறைச்சாலையிலிருந்தும், இராஜ அரியணைக்கு உயர்த்தப்பட்டதின் நிமித்தமாக அவரது தலை பெருமையினால் உப்பிக்கொள்ளவில்லை/பெருமிதங்கொள்ளவில்லை, மாறாக உண்மையான மனிதனுக்குரிய அம்சமாகிய அதே சீரான பெருந்தன்மையுடனும், அடிமையாகவும், தகப்பன் வீட்டில் சகோதரனாகவும் காணப்பட்டபோது கொண்டிருந்த அதே ஆற்றலுடனும், உண்மையுடனும் மற்றும் திறமையுடனும், தனது புதிய வேலையை அமைதியாய் யோசேப்பு நடத்திக்கொண்டிருந்தார். துன்பம் என்னும் பயிற்சியின் கீழ் நீண்ட காலமாக தேவனுடன் யோசேப்பு பழகிவந்த காரியமானது, அவரைத் தாழ்மையுள்ளவராய் ஆக்கிற்று மற்றும் அவரது ஆயத்தமாய் இருந்த இருதயத்தில், குணலட்சணங்கள் அருமையாய் வளர்ந்தன. ஆனால் எகிப்தினுடைய சிங்காசனத்தை அடைவது என்பது ஒருபோதும் யோசேப்பினுடைய குறிக்கோளின் இலக்காக இருக்கவில்லை; ஏனெனில் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு போன்று யோசேப்பும் பரம தேசத்தை, தேவனுடைய இராஜ்யத்தை எதிர்நோக்கியிருந்தார். அங்கேதான் அவருடைய பொக்கிஷம் இருந்தது மற்றும் அங்கேதானே அவருடைய இருதயம் இருந்தது மற்றும் அங்கிருந்தே அவர் தனது சிறந்த ஜீவியத்திற்கான தூண்டுதலைப் பெற்றுக் கொண்டார் மற்றும் எகிப்தினுடைய சிங்காசனமானது, மற்றவர்களுக்கு உதவியாய் இருப்பதற்குரிய சிலாக்கியங்களுக்காக மாத்திரமே யோசேப்பினால் மதிக்கப்பட்டது.

---

# “யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல்”

## ஆதியாகமம் 45:1-15

“உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள் அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக.”
—லூக்கா 17:3

யோசேப்பிற்குத் தீமை செய்திட்ட அவரது சகோதரர்களை அவர் கையாண்ட விதத்தில் யோசேப்பினுடைய ஞானம் மற்றும் பெருந்தன்மையான குணலட்சணங்கள் மிகவும் பிரகாசமாய் மீண்டுமாகப் பிரகாசிக்கின்றது. எங்கும் நிலவியிருந்த பஞ்சத்தினிமித்தம் அந்தச் சகோதரர்கள் தானியம் வாங்கும்படிக்கு எகிப்துக்கு வந்திருந்தபோது, யோசேப்பு அவர்களை அடையாளங்கண்டுகொண்டார், ஆனால் யோசேப்பினுடைய புதிய ஸ்தானத்திற்குரிய மாற்றம் அடைந்துள்ள சூழ்நிலையின் காரணமாக, அவரை அவர்களால் அடையாளங்கண்டுகொள்ள முடியவில்லை. யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டு, அவர்களை விட்டுப் பிரிந்தபோது தாடியில்லாதவராகவும், 17-வயதானவராகவும் காணப்பட்டார்; ஆனால் இப்பொழுதோ அவர்கள் அவரை 40 வயதுள்ள மனிதனாகவும், இராஜரிக வஸ்திரங்கள் தரித்தவராகவும், தங்களால் புரிந்துகொள்ள முடியாத அந்நிய மொழியைப் பேசுபவராகவும் கண்டார்கள்.

ஒருவேளை யோசேப்பு பழிவாங்கும் சிந்தை உடையவராக இருந்திருப்பாரானால், இதுவே பழிவாங்குவதற்குரிய அவருக்கான வாய்ப்பாகும். இப்பொழுது யோசேப்பு அதிகாரத்தில் காணப்படுகின்றார் மற்றும் அவர்களோ அவரது இரக்கத்தைச் சார்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஒருவேளை யோசேப்பினுடைய கணிப்பை, அவரது தாராள மனப்பான்மையானது மேற்கொண்டிருக்குமானால், அவர் தனது தயவுக்குள்ளாக ஒரு சத்துருக்களின் கூட்டத்தாரையே பெற்றவராக இருப்பார் மற்றும் இதனால் சமாதான குலைச்சலும், தனது வாழ்க்கை, பிரயோஜனப்படுவதற்கு இடைஞ்சலும் ஏற்பட்டிருக்கும் மற்றும் அவர்களது தீமையான பண்புகளை இன்னும் தூண்டிவிடுவதாகவும், வளர்த்திவிடுவதாகவும் இருந்திருக்கும். ஆனால் யோசேப்பு உணர்வுகளில் சீரான நிலைக்கொண்ட மனிதனாகக் காணப்பட்டார், ஆகையால் அவர் இந்த எல்லைக்கோ (அ) அந்த எல்லைக்கோ மிஞ்சிப்போகவில்லை. அவரது நடவடிக்கையானது, அவர் மன்னிக்கும் சிந்தையை மாத்திரமல்லாமல், ஜாக்கிரதையாயிருக்கும் சிந்தையைப் பெற்றிருந்ததையும் மற்றும் சரியான சூழ்நிலைகளின் கீழ் அவர் மன்னிப்பைக் காட்டுவதற்கு ஆயத்தமாய் இருந்தார் என்பதையும் காண்பிக்கிறது.

ஆகையால் அவர்களது தற்போதைய மனப்பாங்கு எப்படியிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளும்படிக்கும் மற்றும் கடந்த காலங்களின் அனுபவங்களானது, அவர்களில் எந்த விதமான மாற்றத்தையாவது கொண்டுவந்திருக்கிறதா என்பதை உறுதிபடுத்தும்படிக்கும் மற்றும் தனது தகப்பன் பற்றியும், தன்னுடைய சொந்த ஒரே சகோதரனாகிய பென்யமீன் பற்றியும் தகவல்கள் அறிந்துகொள்ளும்படிக்கும் யோசேப்பு முதலாவதாகக் கடுமையாய் நடந்துகொள்வதன் மூலமாக ஞானமாய் அவர்களைக் கையாண்டார். தனது தந்தையும், பென்யமீனும் இன்னும் உயிரோடிருப்பதை யோசேப்பு சீக்கிரமாய் அறிந்துகொண்டார் (ஆதியாகமம் 42:13); ஆனால் தன்னை யார் என்று மறைத்துக்கொண்டு, அவர்களிடம் கடுமையாய் நடந்துகொள்வதன் மூலமாக, அவர்கள் தங்கள் வயதான தகப்பனிடத்திலும், பென்யமீனிடத்திலும், ஒருவரோடொருவர் எத்தகைய மனப்பான்மையைத் தற்போது கொண்டிருக்கின்றனர் என்பதைப் பரீட்சிக்கும்படிக்கு யோசேப்பு வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டார்; மேலும் அவர்களை யோசேப்பு பரீட்சித்தப் பிற்பாடு, அவர்களிடத்தில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் கண்டுகொண்டார்; யோசேப்பினை இழந்துபோனதன் காரணமாக, தங்கள் தந்தை பென்யமீனுக்காகக் கொண்டிருக்கும் உணர்வுகளின் நிமித்தமாக, தங்கள் தகப்பனுக்காக அவர்கள் மன்றாடிக் கேட்டுக்கொண்டதிலும் மற்றும் யோசேப்பினுடைய இடத்தில் இப்பொழுது தகப்பனின் பிரியமான குமாரனாகக் காணப்படும் பென்யமீனிடத்தில் அவர்கள் பாசத்துடன் இருந்ததிலும், அவர்கள் தங்கள் இளமைபிராயத்தில் கொண்டிருந்த கசப்பான பகைமையையும், பொறாமையையும் மேற்கொண்டுவிட்டனர் என்பதைக் காண்பித்தவர்களாய் இருந்தனர்.

யோசேப்பின் விஷயத்தில் தாங்கள் முன்பு நடந்துகொண்டதைக் குறித்து, தங்கள் குற்றத்தினை ஒருவரோடொருவர் தங்கள் சொந்த மொழியில் ஒப்புக்கொண்டதையும் யோசேப்பு கேட்டார் மற்றும் ரூபனுடைய வார்த்தைகளையும் அறிந்துகொண்டார் (ஆதியாகமம் 42:21, 22). பின்னர்ச் சூழ்நிலைகளானது, பென்யமீனை அவரது தகப்பனிடத்திற்கு மீண்டும் கொண்டு சேர்க்க

வேண்டும் என்பதற்காக பரிதாபத்துடன் யூதா மன்றாடுவதற்கும், பென்யமீனுக்குப் பதிலாக யோசேப்பினுடைய அடிமையாக இருக்கும்படிக்குத் தன்னை யூதா கையளிக்கும் காரியத்திற்கும் வழிநடத்தினது (ஆதியாகமம் 44:18-34); இன்னுமாக தங்களது முந்தைய பாவங்களைத் தாழ்மையுடன் ஒப்புக்கொண்டவர்களாகவும், தங்கள் மீது தற்போது வந்திருக்கிற இன்னலானது, தங்களுக்குரிய தண்டனையாக தேவனிடமிருந்து வந்துள்ளதாக உணர்ந்தவர்களாகவும் காணப்பட்டார்கள். தங்கள் தந்தையாகிய யாக்கோபு குறித்தும், யோசேப்பு குறித்தும் அவர்கள் கூறிய அனைத்தும், அவர்கள் பாவத்தை நினைத்து மனம் வருந்தியுள்ளதையும், இருதயம் மாற்றம் அடைந்துள்ளதையும் நிரூபிப்பதாய் இருந்தது.

இது யோசேப்பிற்குப் போதுமானதாய் இருந்தது; தவறுகளுக்காக வருத்தம் கொள்ளுதலையும், உண்மையான இருதய மாற்றத்தையுந்தான் யோசேப்பு எதிர்பார்த்தார் மற்றும் இவைகள் வெற்றிகரமாகவும், ஞானமாகவும் நிரூபிக்கப்பட்டபோது, அதற்குமேல் அவரால் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை (ஆதியாகமம் 45:1); உண்மையாய் மன்னிக்கும் அவரது இருதயமானது, இப்பொழுது இரக்கத்தினால் பொங்கி வழிந்தது மற்றும் அவர் சத்தமாய் அழுது, தனது சகோதரர்களை அணைத்து, முத்தம் கொடுத்தார் மற்றும் அவர்கள் மீது தனது திரளான தயவை அளவில்லாமல் பொழிந்தார் மற்றும் அவர்கள் தங்களைத் தாங்களே மன்னித்துக்கொள்ளும்படிக்கும் மற்றும் மிகவும் இலவசமாகவும், முழுமையாகவும் மன்னிக்கப்பட்டுள்ள தங்களது கடந்தகால பாவங்களை மறப்பதற்கு அவர்கள் நாடும்படிக்கும் வேண்டிக்கொண்டார். யோசேப்பின் பிரியத்திற்குரிய சொந்த சகோதரனும், மற்றச் சகோதரர்களின் குற்றத்தில் எந்தப் பங்கும் கொண்டிராதவருமான பென்யமீன், அன்பின் விசேஷித்த சில அன்பளிப்புகளைப் பெற்றிருக்க வேண்டும்; இவ்விஷயம் இப்பொழுது சீர்ப்பொருந்தியுள்ள சகோதரர்களிடத்தில் எவ்விதமான பொறாமையையும் தூண்டவுமில்லை. அவர்கள் இந்த நற்செய்தியை அறிவிப்பதற்காக மாத்திரமல்லாமல், தெரியப்படுத்த வேண்டிய சூழ்நிலையின் காரணமாக, யோசேப்பிற்கு எதிராக தாங்கள் செய்த பாவத்தை யாக்கோபினிடத்தில் தெரிவிப்பதற்குமென, அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பியிருக்க வேண்டும்.

மீதி சம்பவம் மிகவும் சுவாரசியமானதாகும்; யாக்கோபிற்கு இந்த நற்செய்தி அறிவிக்கப்பட்ட போது, அவர் யோசேப்பினால் அனுப்பப்பட்ட அன்பளிப்புகளையும், எகிப்திலிருந்து வந்த வண்டிகளையும் பார்ப்பது வரையிலும், அவரால் நம்பமுடியவில்லை; அன்பளிப்புகளையும், வண்டிகளையும் பார்த்த பிற்பாடு, யாக்கோபு, "என் குமாரனாகிய யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறானே, இது போதும்; நான் மரணமடையுமுன்னே போய் அவனைப் பார்ப்பேன் என்றான்" (ஆதியாகமம் 45:28). பின்னர் இரவில், "நான் தேவன், நான் உன் தகப்பனுடைய தேவன்; நீ எகிப்து தேசத்துக்குப்போகப் பயப்பட வேண்டாம்; அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன். நான் உன்னுடனே எகிப்துக்கு வருவேன்; நான் உன்னைத் திரும்பவும் வரப்பண்ணுவேன்; யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவான்" என்று சொல்லி கொடுக்கப்பட்ட தரிசனத்தின்படியான தேவனுடைய விசேஷித்த கட்டளையின் பேரில், நீண்ட அந்தப் பிரயாணம் மகிழ்ச்சியுடன் ஆரம்பமானது; (ஆதியாகமம் 46:3, 4). பின்னர் அவர்களின் சந்தோஷமான சந்தித்தல் நடைபெற்றது மற்றும் யோசேப்பினுடைய மகிமை மற்றும் வல்லமையை யாக்கோபு கண்டுகொண்டார் மற்றும் இவைகள் அனைத்திற்கும் மேலாக யாக்கோபிற்கும், யோசேப்பிற்கும் மற்றும் சகோதரர்களுக்கு இடையிலான அன்பு பரிமாற்றங்கள் நிகழ்ந்தன; பின்னர்ப் பார்வோனைச் சந்தித்தலும், அவரின் தயவைப் பெற்றுக்கொள்ளுதலும் நிகழ்ந்தன; பின்னர் யோசேப்பு மற்றும் பார்வோனின் அன்பான பராமரிப்பின் கீழ், அவர்கள் எகிப்து தேசத்தில் குடியேறினர்; இங்கு யாக்கோபு தன்னுடைய குடும்பத்தாருடன், தன்னுடைய மரணம் வரையிலும், தனது வயோதிப நாட்களை 17- வருடங்களாக மகிழ்ச்சியாய்க் கழித்தார்.

கர்த்தருக்குப் பிரியமானவர்களில் ஒருவருடைய ஜீவியத்திலுள்ள கர்த்தருடைய வழிநடத்துதல் பற்றின இந்த அருமையான கதையிலிருந்து, தேவன் மீது நம்பிக்கையாய் இருத்தல் மற்றும் அவருக்கு ஊழியம் புரிவதில் வைராக்கியமாயும், உண்மையாயும் இருத்தல் எனும் விலையேறப்பெற்றப் படிப்பினைகளை நம்மால் காணமுடிகின்ற மற்றும் எடுத்துக்கொள்ள முடிகின்ற அதேவேளையில், ஆழ்ந்து சிந்திக்கின்ற வாசகர்களால், இக்கதையானது தமது ஜனங்களின் மற்றும் உலகத்தின் இரட்சகராக இருக்கும் கிறிஸ்துவுக்கு நிழலாய் இருப்பதைக் கவனிக்க தவறப்படுவதில்லை.

பிரதான ஆசீர்வாதமானது, விசேஷமாய் இளைய குமாரனுக்கு வரும் காரியத்திற்கு, யாக்கோபைப்போன்று, யோசேப்பும் மற்றுமொரு உதாரணமாய்க் காணப்படுகின்றார்; இதுபோலவே பிரதானமான தெய்வீக ஆசீர்வாதமும், கிறிஸ்துவுக்கு, அதாவது மூத்தவர்களாகிய யூதர்களுக்கென்று இல்லாமல், சுவிசேஷ சபையாகிய சரீரத்திற்கும், தலைக்கும் வரப்போகின்றது.

ஆபிரகாமின் ஆசீர்வாதத்தில் பங்கடைவது தொடர்புடைய விஷயத்தில், யாக்கோபின் புத்திரர்கள் அனைவரும் தெரிந்துகொள்ளப்பட்டாலும், யோசேப்பு தலை மற்றும் சரீரம் அடங்கின கிறிஸ்துவுக்கு நிழலாய் விசேஷமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டார்; இந்தக் கிறிஸ்து மூலமாகவே, ஆபிரகாமின் மாம்சீக சந்ததியினருக்கு ஆசீர்வாதம் கடந்துவரும் மற்றும் இவர்கள் பின்னர்ப் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பார்கள்.

மாம்சீக இஸ்ரயேலர்களாகிய தனது சகோதரர்களால் பகைக்கப்பட்டு அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு, கிறிஸ்து, தம்முடைய சத்துருக்களால், அதாவது யூத தேசத்தின் தமது சகோதரர்களால் பகைக்கப்பட்டு, விற்கப்பட்டதற்கு முன்சித்தரிப்பாகக் காணப்படுகின்றார்; இந்த யூதர்களிடத்திலேயே கிறிஸ்து யோசேப்பைப் போன்று வந்தார், ஆனால் அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை; (30-வெள்ளிக்காசுகள் என்பது அடிமைக்கான விலையாக இருந்தது (அ) 20-வெள்ளிக்காசுகள் என்பது இருபது வயதிற்குக் கீழான அடிமைக்கான விலையாக இருந்தது). யோசேப்பு மூன்று வருடங்கள் சிறையில் காணப்பட்டது என்பது, நமது கர்த்தருடைய 3-வருட ஊழிய காலத்தினைச் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது அவரது ஞானஸ்நானத்தைப் பின்தொடர்ந்த வருடங்களாக இருந்தது; அந்தக் காலங்களில் கர்த்தர் தினமும் மரித்துக்கொண்டிருந்தவராகவும், தம்முடைய ஜீவனை மற்றவர்களுக்காக ஒப்புக்கொடுத்து வந்தவராகவும் காணப்பட்டார்; யோசேப்பு மூன்று வருடங்கள் சிறையில் காணப்பட்ட காரியமானது, கர்த்தர் கல்லறையில் காவல் வைக்கப்பட்ட மூன்று நாட்களுக்குக் கூட இணையாக எடுத்துக்கொள்ளலாம்; சிறைச் சாலையினின்று வெளியே வந்த யோசேப்பு, இராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் மிகவும் உயர்த்தப்பட்டதுபோலவே, கல்லறையினின்று வந்த கர்த்தரும், உன்னதமானவரின் வலது பாரிசத்தினிடத்திற்கு உயர்த்தப்பட்டார் மற்றும் இராஜ்யத்தின் சகல அதிகாரங்களும்/வல்லமைகளும் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

யோசேப்பிற்கு முழுப்பொறுப்பும் கையளிக்கப்பட்டது மற்றும் மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கும், அனைவருக்குமென்று உணவைச் சேர்த்து வைப்பதற்குமென்று அவர் தனது வல்லமையைப் பயன்படுத்திக் கொண்டார். இதுபோலவே கிறிஸ்துவிடமும் முழுப்பொறுப்பும் கையளிக்கப்பட்டது; அவர் அனைவருக்கும் கர்த்தர் ஆவார் மற்றும் அனைவருக்கும் நித்திய ஜீவனை அளிப்பதற்குப் போதுமான அனைத்துக் கிருபைகளையும் அவர் வைத்து வைத்திருக்கின்றார். கிறிஸ்துவினுடைய தயவைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரமான தாழ்மையும், பாவத்திற்கு மனம் வருந்துதலையும் கொண்டுள்ள இருதயத்தை உடையவர்களைக் கிறிஸ்து தம்முடைய சகோதரர்கள் என்று, உரிமையாக்கிக்கொள்வதற்கு வெட்கப்படவில்லை. அவர்களைத் தமக்குச் சொந்தமானவர்கள் என்று தம்முடைய பிதாவின் முன்னிலையிலும், பரிசுத்த தூதர்கள் அனைவரின் முன்னிலையிலும் உரிமைப்பாராட்டிக்கொள்வதற்குக் கிறிஸ்து வெட்கப்படுவதுமில்லை. இக்காரியமும் யோசேப்பு தனது தகப்பனையும், சகோதரர்களையும் கையாண்ட விஷயத்தில் அருமையாய் முன் சித்தரிக்கப்பட்டுள்ளது. மேய்ப்பர்கள் என்பவர்கள் எகிப்தியர்களுக்கு அருவருப்பானவர்கள் என்பதை யோசேப்பு அறிந்திருந்தபோதிலும், தன்னுடைய தகப்பனையும், சகோதரர்களையும் இராஜாவின் முன்னிலையில் கொண்டு செல்வது குறித்து யோசேப்பு வெட்கம் கொள்ளவில்லை. பின்னர்ப் பஞ்சக் காலத்தில் யோசேப்பு தானியங்களை (ஜீவனை) பயன்படுத்தி, பார்வோனுக்கு நிலங்களையும், ஜனங்களையும், அவர்கள் பெற்றிருந்த அனைத்தையும் வாங்கிக்கொண்டார் (ஆதியாகமம் 47:14-25).

விளைவில் ஐந்தில் ஒரு பங்கு மத்திய அரசாங்கத்தின் வலிமையூட்டுதலுக்காகக் கொடுக்கப்படத்தக்கதாக நிலங்களை வாங்கினதும், இப்படியாக மற்றச் சீமான்களின் சிறிய செல்வாக்கினைத் தகர்ப்பதற்கும் மற்றும் எகிப்து தேசத்தை, பலமான தேசமாக திடமாக்குவதற்குமான இந்த அரசியல் திட்டமானது, கிறிஸ்துவின் வேலைக்கான, சிறந்த நிழலாய்க் காணப்படுகின்றது. ஆயிர வருட யுகத்தின்போது விரும்புகின்றவர்கள் அனைவருக்கும் கிறிஸ்து (தம்மை, தம்முடைய புண்ணியத்தை) நித்திய ஜீவனுக்கான அப்பத்தைக் கொடுப்பார், ஆனால் இச்சந்தர்ப்பத்தில் பார்வோன் நிழல்படுத்தும் தேவனுக்கு, அனைவரும் தங்களுடைய அனைத்தையும் மாற்றாகக் கொடுத்தாக வேண்டும். பார்வோனால் உயர்த்தப்பட்ட ஊழியக்காரனும், பிரதிநிதியுமான யோசேப்பு அநேகருக்கு ஜீவன் கொடுத்தது (அ) அநேகருடைய ஜீவனைக் காப்பாற்றினது போன்று, தேவனுடைய பிரதான ஊழியக்காரனாகிய கிறிஸ்துவும் அனைவருக்காகவும் ஜீவனளித்துள்ளார் மற்றும் அந்த ஜீவனை, இராஜாவுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசம் காட்டுதல் எனும் அதே நிபந்தனைகளின் பேரில் அனைவருக்கும் முன்வைக்கின்றார்.

யோசேப்பு தவறிழைத்த தனது சகோதரர்களைப் பெருந்தன்மையுடனும், பரந்த மனப்பான்மையுடனும் நடத்தின விஷயத்தில், நமது உயர்த்தப்பட்டுள்ள கர்த்தர் இயேசு, தமது முந்தைய சத்துருக்களைக் கையாளும் விதம், எத்துணை அருமையாய் மீண்டுமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. எப்போதுமே தலைச்சிறந்த பண்பாகக் காணப்படும் அன்பானது,

இம்மாதிரியான ஒரு சூழ்நிலையில் வெளிப்படுகையில் அது வியப்பாய்ப் பார்க்கப்பட்டு, பாராட்டப்படுகின்றது. தனக்கு 23-வருடங்களுக்கு முன்னதாக அவர்கள் செய்திட்ட பாவங்களுக்கு எதிராக, அவர்களை நியாயமாய்த் தண்டிக்கும் விதத்தில், தான் என்ன செய்திருக்க முடியும் என்று கூட யோசேப்பு பேசவில்லை. தன்னுடைய சகோதரர்களைப் பரீட்சித்துப்பார்த்து, அவர்கள் தங்கள் இருதயத்தில் மாற்றம் அடைந்துள்ளனர் என்றும், பாவத்தை நினைத்து மனம் வருந்துகின்றனர் என்றும் கண்டுகொண்ட பின்னர், யோசேப்பு தன்னை உண்மையுள்ள, அன்புள்ள மன்னிக்கும் நண்பனாகவும், சகோதரனாகவும் வெளிப்படுத்தினார். தான் இப்படி உயர்த்தப்பட்டதற்கான காரணம், தன்னுடைய ஞானம் (அ) ஒழுக்கம்/நற்பண்புகள் என்றோ பெருமையடித்துக்கொள்ளாமல், மாறாக அனைத்துக் கனத்தையும், தேவனுடைய நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போடும் வழிநடத்துதலுக்கே சாற்றினார். தனக்கு முன் அவர்கள் அனைவரும் வணங்கினதில் நிறைவேறின, தனது தீர்க்கத்தரிசனமான சொப்பனங்களைக்கூட யோசேப்பு தனது சகோதரர்களுக்கு நினைப்பூட்டவில்லை.

அவர் அவர்களை மன்னித்து, பஞ்சத்திலிருந்ததான தற்போதைய விடுதலைக்கான அனைத்து மகிமையையும் தேவனுக்குச் செலுத்தும் வண்ணமாக, "என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும், அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்" என்று கூறினார் (ஆதியாகமம் 45:5-8). எத்துணை எளிமையாகவும், அருமையாகவும் காணப்படுகின்றது! இப்படியே கிறிஸ்துவும் பாவத்திற்கான மனம்வருந்தும் தமது சத்துருக்களை மன்னிப்பார். தேவனே அவர்களைத் தவறுசெய்ய வைத்தார் என்று யோசேப்பு கூறவில்லை; யோசேப்பு அவர்களது பாவத்தைத் தெளிவாய்க் குறிப்பிட்டார் அதாவது, "நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்" (ஆதியாகமம் 50:20, 21).

கிறிஸ்துவும் மனிதர்களுடைய பாவங்களை அவர்களுக்கு முன்பாக வரிசைப்படுத்துவார் என்றும், யோசேப்பின் சகோதரர்கள் போன்றே மனிதர்களும் தங்கள் பாவங்களை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும், அவர்கள் நிந்தனையைச் சுமக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (சங்கீதம் 50:21, 22; எசேக்கியேல் 16:61-63; 1 யோவான் 1:9). ஆனால் கிறிஸ்துவினுடைய மன்னிக்கும் அன்பிலுள்ள சந்தோஷங்களினாலும், அவரது தயவுகளிலுள்ள ஆசீர்வாதங்களினாலும், நிந்தனையின் வலி மாற்றப்படும் மற்றும் நீதியின் கனிகளைக் கொணர்வதும், நம்பத்தகுந்த குணலட்சணங்கள் உருவாகும்போதும், உண்மையான மனிதனுக்குரிய சிறப்புகளும்/உயர்ந்த குணங்களும், உண்மையான மதிப்பும் மீண்டும் சீர்ப்பொருத்தப்படும்/காணப்படும்.

யோசேப்பினுடைய விஷயத்தில் தேவனுடைய ஜனங்கள் அனைவருக்குமான அவரது வாக்குத்தத்தமாகிய, "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்பது வலியுறுத்திக் காண்பிக்கப்படுகிறது (ரோமர் 8:28; சங்கீதம் 1:1-3, 6). தேவனுடைய ஜனங்கள் இந்தத் தெய்வாதீனமான மேற்பார்வையை உணர்கையில், மிகவும் தாழ்மையுள்ளவர்களாகவும், விசுவாசமுள்ளவர்களாகவும் ஆக்கப்படுவதோடு, ஜீவியத்தின் திடீர் மாற்றமான சூழ்நிலைகளின் நிமித்தமும், மற்றவர்களின் தவறான நடத்தைகளின் நிமித்தமும், தங்களைத் தாங்களே நடத்திக் கொண்டு, ஜீவியத்தின் போராட்டங்களில் போராடிக்கொண்டிருக்கும் (சாதாரண) ஜனங்கள் போன்று மன வேதனையோ, எரிச்சலோ அடைவதில்லை. குணலட்சணத்திலும், விசுவாசத்திலும் மற்றும் தேவனுக்கான அர்ப்பணிப்பிலும் நேர்மை கொண்டிருத்தலும், ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலுமான தேவனுடைய பராமரிப்பையும், வழிகாட்டுதலையும் உணர்ந்துகொள்ளுதலும் மற்றும் எவர்களுடைய தவறுகள் மூலம் நமக்கான சோதனைகளும், அனுபவங்களும் கடந்துவருகின்றதோ, அவர்களிடத்தில் அன்பைக்கொண்டிருத்தலுந்தான், தேவனுடைய உண்மையான பிள்ளைகள் அனைவரிடத்திலும் எதிர்பார்க்கப்படும் சரியான மனப்பான்மையாகக் காணப்படுகின்றது.

---

**R 1646**

# "யோசேப்பின் இறுதி நாட்கள்"

## ஆதியாகமம் 50:14-26

"நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்."—நீதிமொழிகள் 4:18

யோசேப்பினுடைய ஜீவியத்தின் இறுதிகாலமானது, பல கடுமையான சோதனைகளில் நிலைநின்றதும், நீதியினுடைய ஆசீர்வாதமான கனிகள் அநேகவற்றை வெளிப்படுத்தினதுமாகிய உண்மையான உயர்ப்பண்புகளை உடையவரென அவரை நமக்கு வெளிப்படுத்துகின்றது. அவரது வாழ்க்கை நிறைவு பெறுவது என்பது, பிரகாசமாய்ப் பிரகாசித்தப் பிற்பாடு, ஓய்வெடுப்பதற்கென மறையும் சூரியன் போன்று காணப்படுகின்றது. அவர் உண்மையுள்ள ஊழியக்காரனாகவும், நேர்மையான நண்பனாகவும், இரக்கமும், அனுதாபமுள்ள சகோதரனாகவும், கடமையுணர்வும், அன்புமுள்ள குமாரனாகவும், இறுதியில் தன்னடக்கமும், நிதானமும் உள்ள பிரபுவாகவும் இருந்திருக்கின்றார்.

யோசேப்பிற்கும், பெரும்பான்மையான முற்பிதாக்களுக்கும் கடுமையான சோதனைகளும், பயிற்சிக்கான அனுபவங்களும் வாழ்க்கையினுடைய ஆரம்பம் மற்றும் இடைப்பட்ட காலப்பகுதிகளிலே வந்துள்ளது மற்றும் இவர்கள் அமைதியான முதிர்வயதின் காலங்களைப் பலனாக அருளப்பெற்றனர்; ஆனால் மற்ற அநேகருக்கோ, அப்போஸ்தலன் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் பட்டியலிட்டிருப்பது போன்று, இறுதி நாட்களோ பயங்கரமான துன்பங்கள் நிறைந்ததாகக் காணப்பட்டது மற்றும் இவர்கள் இரத்த சாட்சியின் மரணம் மரித்தவர்களுமானார்கள். உபத்திரவம் எனும் சூளையில் கர்த்தருடைய ஜனங்கள் சோதிக்கப்படுகிறதும், பயிற்றுவிக்கப்படுகிறதுமான காரியமானது, அநேகரால் கர்த்தருடைய வெறுப்பிற்கான சாட்சியாகவும், பூமிக்குரிய வளமையானது கர்த்தருடைய கடாட்சத்திற்கான சாட்சியாகவும் கருதப்படுகிறது. ஆனால் இது பெரிய தவறாகும்; ஏனெனில் இரண்டு வகையான அனுபவங்களுமே சோதனை மற்றும் பரீட்சையின் பாகங்களாக இருக்கின்றன. ஒரு பக்கத்தில் நாம் துன்பத்தின் புயல்களினால் சோதிக்கப்படுகின்றோம் மற்றும் மற்றவர்களோ பூமிக்குரிய வளமைகளினால் உண்டாகும் அமைதியான நிலைமையினால் சோதிக்கப்படுகின்றனர்; துன்பத்தில் துவண்டு போகாதவனும் அல்லது வளமையினால் வஞ்சிக்கப்பட்டுப் போகாதவனுமாய் இருக்கிற மனுஷன் பாக்கியவானாய் இருக்கின்றான். இப்படிப்பட்ட நன்கு வனையப்பட்ட, சீரான மற்றும் பலமான பாத்திரங்கள் உண்மையில் கர்த்தருடைய பார்வையில் விலையேறப்பெற்றவர்களாய்க் காணப்படுகின்றனர்.

இப்படிப்பட்ட ஒரு மனிதனாகவே யோசேப்பு காணப்பட்டார்; இவர் ஜீவியத்தின் ஆரம்பக் காலங்களில் துன்பமெனும் பள்ளிக்கூடத்தில் பயிற்றுவிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டவர் ஆவார் மற்றும் இவரது ஜீவியத்தின் இறுதி காலங்களிலோ பூமிக்குரிய வளமையின் மிக உயர்ந்த அலைகளானது, இவரை ஒருபோதும் இறுமாப்பிற்கு நேராக அழைத்துச் செல்லவுமில்லை, தன் நிலைமையை இவர் மறந்துபோகவும் பண்ணவில்லை. இந்தப் பூமிக்குரிய வளமைகளுக்கு அப்பால் இவர் இன்னமும், "தேவன் தாமே கட்டி, உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கே" காத்திருந்தார். தேவன் மீதான இவரது நம்பிக்கையும், ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறும் என்ற இவரது விசுவாசமும், இவரை ஒருபோதும் கைவிட்டுவிடவில்லை. இவர் ஐசுவரியத்தினாலும், சௌகரியங்களாலும் சூழப்பட்டிருந்தாலும், எகிப்து வாக்களிக்கப்பட்ட தேசமல்ல என்று இவர் நினைவில் கொண்டவராய்க் காணப்பட்டார்; இவர் மரிக்கும்போது தனது தகப்பனாகிய யாக்கோபு போன்று, தன்னுடைய சரீரம் கானான் தேசத்தில் அடக்கம் பண்ணப்பட வேண்டுமென்று கட்டளையிடுவதின் மூலம், உயிர்த்தெழுதல் மற்றும் தெய்வீக வாக்குத்தத்தத்தினுடைய நிறைவேறுதல் தொடர்பான தனது நம்பிக்கையைச் சுட்டிக்காட்டினவராகக் காணப்பட்டார் (ஆதியாகமம் 50:24, 25); "விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரயேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்திய காலத்தில் பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான்" (எபிரெயர் 11:22).

யோசேப்பை உயர்த்தின பார்வோனுக்கு, அவர் மிகவும் பயனுள்ள ஊழியக்காரனாய் இருந்தபடியால், அரியணையில் பின்வந்த பார்வோனும், அவரைப் பணியில் தொடரப்பண்ணினான்; அநேகமாக யோசேப்பு தன்னுடைய ஜீவியத்தின் முடிவுவரையிலும் பணியில் தொடர

பண்ணப்பட்டிருக்க வேண்டும். யோசேப்பினால் எகிப்திற்கு வந்த நன்மைகளானது, மகா விலையேறப்பெற்றதாய் இருந்தது மற்றும் இந்த நன்மைகளானது மிகவும் நன்றியுணர்வோடு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், நினைவுகூரப்பட்டதாகவும் தெரிகின்றது.

ஆதார வசனத்தில் இடம்பெறும், "நீதிமான்களுடைய பாதையானது," தனிப்பட்ட நபர்களுடைய பாதையல்ல, மாறாக அனைத்து நீதிமான்களும் நடக்கும் ஒரு பாதையாகும்; அது நீதியின் பாதையாகும் (சங்கீதம் 23:3); அது சாந்தத்தின், பொறுமையின், விசுவாசத்தின், அன்பின் பாதையெனக் கர்த்தருடைய வார்த்தையானது சுட்டிக்காட்டும் பாதையாகும்; மேலும் இப்பாதையில் நடப்பவர்கள், தேவனால் அனைத்துச் சத்தியங்களுக்கு நேராக, அதனதன் ஏற்றக்காலங்களில் வழிநடத்தப்படுகின்றார்கள். இந்தப் பாதையானது நடுப்பகலை நெருங்குகையில், தெய்வீகச் சத்தியத்தினுடைய மகிமையான ஒளியினால் மிகவும், மிகவும் பிரகாசிக்கின்றதாய் இருக்கும்; நடுப்பகலில் நீதியின் சூரியனானது உதித்திருக்கும் மற்றும் கர்த்தரைப் பற்றின அறிவானது, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல பூமியை நிரப்பியிருக்கும்; அது பூமியின் மீதான கிறிஸ்துவினுடைய ஆளுகையின் ஆயிரவருட நாளாகும்.

முற்காலத்தின் அனைத்துத் தீர்க்கதரிசிகளும், முற்பிதாக்களும், பரிசுத்தவான்களும் இந்தப் பாதையில் நடந்துசென்றுள்ளனர் மற்றும் அவர்கள் அனைவரின் மீதும் அந்தந்த ஏற்றவேளைகளில் தேவனுடைய ஒளியானது பிரகாசித்தது; ஆனால் அவர்களில் எவருக்கும், இன்று பிரகாசிக்குமளவுக்கு ஒருபோதும் மிகவும் தெளிவாய்ப் பிரகாசிக்கவில்லை; ஏனெனில் நாம் இப்பொழுது கிறிஸ்துவினுடைய மகிமையான நாளினுடைய விடியலில் காணப்படுகின்றோம் மற்றும் சீக்கிரத்தில் இந்த வெளிச்சமானது அனைவர் மீதும் பிரகாசித்திடும்.

ஆமென்!!

## திடன்கொள்! தொடர்ந்து செல்...

**சோர்வுக்குள்ளானாயோ!** சரி, அதற்கென்ன?

தென்றல் காற்று வீசிட, அது ரோஜா இலைகளை மெல்ல பரப்பிட,
இப்படிச் சௌகரியமாய் வாழ்க்கையைக் கடத்தலாமெனக் கற்பனை செய்திட்டாயோ?
வா, எழுந்திரு! பகற்காலமாயிருக்கும் மட்டும் கிரியையைச் செய்திடு;
திடன்கொள்! எழுந்திரு! உன் வழியிலேயே தொடர்ந்து நட...

**தனிமைக்குள்ளானாயோ!** சரி, அதற்கென்ன?

சிலர் தனிமையில்தான் இருந்திட வேண்டும்;
எழுச்சியிலும், வீழ்ச்சியிலும் தன்பால் இசைந்திருக்கும் இருதயம் ஒன்றினை பெறுவதும்,
தன் ஜீவியத்திற்குள் மற்றொருவரை இணைக்கப்பெறுவதும்,
எல்லாருக்கும் அருளப்பட்டதல்லவே;
தனிமையிலும் நீ வேலை செய்திடலாம். தொடர்ந்து செய்...

**இருளாய் இருக்கின்றதோ!** சரி, அதற்கென்ன?

சூரியன் ஒருபோதும் அஸ்தமிப்பதில்லை என்ற கனவில் இருக்கின்றாயோ?
உன் வழிதனில் பயம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதோ?
எனினும் திடன்கொள்!
தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடப்பதற்குக் கற்றுக்கொள்;
உன் பாதங்களுக்கு வழிக்காட்டப்படும், ஆம் சரியாய் வழிகாட்டப்படும்.

**கஷ்டமாய் இருக்கின்றதோ!** சரி, அதற்கென்ன?

வாழ்க்கை முழுவதும் கோடைக்கால விடுமுறையாகவும்,
படிப்பதற்கு ஏதுமில்லாமல், விளையாடிக்கொண்டே இருக்கலாமெனவும்
கற்பனையில் மிதந்திட்டாயோ?
போ--உன் வேலையைப் போய்த் தொடர்ந்து செய்!
ஒன்றில் ஜெயங்கொள் அல்லது மரித்துவிடு!
இதனையே கற்றுக்கொள்ள வேண்டும்; ஆம் பொறுமையோடே கற்றுக்கொள்.

---

[R1648]

# "இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்?"

"பிரசவவேதனைப்படுமுன் பெற்றாள், கர்ப்பவேதனை வருமுன் ஆண்பிள்ளையைப் பெற்றாள். இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? இப்படிப்பட்டவைகளைக் கண்டது யார்? ஒரு தேசத்திற்கு ஒரே நாளில் பிள்ளை பேறு வருமோ? ஒரு ஜாதி ஒருமிக்கப் பிறக்குமோ? சீயோனோவெனில் ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரனைப் பெற்றும் இருக்கிறது." ஏசாயா 66:7, 8.

"சீயோன்" என்ற பெயர், எருசலேமின் பிரதானமான மலைக்குக் கொடுக்கப்பட்ட பெயராகும். எருசலேம் பட்டணம் கட்டப்பட்ட மலைகளிலேயே இது உயரமானதும், தென்மேற்கு பகுதியுமாயிருக்கின்றது. இந்த மலை அப்பட்டணத்தின் பெரும்பாலான பழமை வாய்ந்த பகுதிகளையும், தேவாலயத்தையும் தன்னிடத்தில் கொண்டுள்ளது. மேலும் இதிலே அரமணை காணப்பட்டதால், இது "தாவீதின் நகரம்" என்றும் அழைக்கப்பட்டது. (2 நாளாகமம் 5:2) மேலும் உடன்படிக்கைப் பெட்டியை வைக்கும்படி தாவீது இங்கு கூடாரம் போட்டப்படியால், இது "பரிசுத்த பர்வதம்" என்றும் அழைக்கப்பட்டது. (சங்கீதம் 2:6)

தீர்க்கதரிசிகள் சீயோன் என்ற பெயரை எருசலேமைக் குறிப்பதற்கும், அதன் குடிகளைக் குறிப்பதற்கும் பயன்படுத்துவார்கள். சிலசமயம் சீயோனின் குமாரர் (அல்லது) குமாரத்திகள் என்று பயன்படுத்துவதுண்டு. இது இஸ்ரயேலின் முழு தேசத்தையும் அடையாளப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டது. மேலும், மாம்சீக இஸ்ரயேலர்கள் சுவிசேஷ யுகத்தின் சபையாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு நிழலாய் இருப்பதினால் இந்த அடையாளம் (சீயோன்) சுவிசேஷ யுகத்தின் சபைக்கு ஆழமான அர்த்தம் உடையதாகும்.

அடையாளத்தில் பயன்படுத்தப்பட்ட பிரசவ வேதனை என்ற வார்த்தையானது, மகா உபத்திரவக்காலத்தைக் குறிக்கின்றது. அதாவது, மகா பாபிலோனாகிய சுவிசேஷ யுகத்தின் பெயர் கிறிஸ்தவ அமைப்பின் மீது வரப்போகும் மகா உபத்திரவக் காலமாகும். இதிலிருந்து தப்பித்துக் கொள்ளப் பாத்திரவான்கள் மட்டுமே தப்பித்துக் கொள்வார்கள். (லூக்கா 21:36) "நகரத்திலிருந்து (பாபிலோன்) அமளியின் இரைச்சலும் (குழப்பம்) தேவாலயத்திலிருந்து (அர்ப்பணிக்கப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாகிய, தெரிந்து கொள்ளப்பட்ட சிறுமந்தை) சுத்தமும் (சத்தியமும், எச்சரிப்பும்) கேட்கப்படும். அது தமது சத்துருக்களுக்குச் சரிக்குச் சரிக்கட்டுகிற கர்த்தருடைய சத்தந்தானே." (ஏசாயா 66:6)

பெயரளவிலான சீயோனாகிய கிறிஸ்தவ மண்டலத்தின் மீது வரவிருக்கிற, வரவிருக்கும் பிரசவ வேதனையானது மாபெரும் உபத்திரவமாகவும், "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்து காலமாகவும் இருக்கும்." (தானியேல் 12:1) ஆனால், "பிரசவ வேதனைப்படுமுன் பெற்றாள், கர்ப்ப வேதனை வருமுன் ஆண்பிள்ளையைப் பெற்றாள்" என்று தீர்க்கதரிசி இங்கு பதிவு செய்தது விசேஷமான காரியமாகும். இதேமாதிரியான கருத்தை வேறு ஒரு இடத்திலும் காணலாம். அதாவது, சுவிசேஷ யுக சபையின் முதிர்ச்சியடைந்த கோதுமையானது களைகள் சுட்டெரிக்கப்படுவதற்கு முன்னதாகவே களைகளிடமிருந்து பிரிக்கப்பட்டு, உயர்த்தப்பட்டு, மகிமை கொடுக்கப்படுவார்கள். இந்த ஆண்பிள்ளை உண்மையான சீயோனாகிய சிறுமந்தை அதாவது, கிறிஸ்துவின் சரீரமாகும். ஏனெனில் ரோமர் 11:26-ஆம் வசனத்தில் இப்படியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, "இந்த பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் (தலையும், சரீரமுமாகிய கிறிஸ்து) சீயோனிலிருந்து (சுவிசேஷ

யுகத்தின் பெயரளவிலான சபை) வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு (மாம்சீக இஸ்ரயேலர்கள் அல்லது சீயோன்) விலக்குவார்."

இந்த ஆண்பிள்ளையே பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கும். (ஆதியாகமம் 28:14; கலாத்தியர் 8:16, 29) இந்த ஆண்பிள்ளையின் பிறப்பு முதலாம் உயிர்த்தெழுதலாகும். முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்கள் பாக்கியவான்கள் ஆவார்கள். இத்தகையவர்கள் இப்பொழுது சத்திய வார்த்தையினால் ஜெநிப்பிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளனர். (யாக்கோபு 1:18; எபேசியர் 2:1; ரோமர் 8:11) மேலும் ஏற்ற தருணத்தில் அதாவது, பிரசவ வேதனைக்கு முன்பு இவர்கள் கிறிஸ்துவை ஒத்த மகிமையில் பிறப்பார்கள். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் அதாவது, பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்த ஆண்பிள்ளையின் பிறப்பு ஆரம்பித்தது. பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு கிறிஸ்து என்பதின் தலைபாகம் பிறந்தது. தலை போன்று சரீர பாகமும் நிச்சயமாய் வெளிப்படும்/பிறக்கும். இந்த நிச்சயத்தைத்தான் ஏசாயா 66:9-இல் பார்க்கின்றோம். அதாவது, "பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச்செய்யாமல் இருப்பேனோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; பிரசவிக்கப்பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தைத் தடுப்பேனோ என்று உன் தேவன் சொல்லுகிறார்." இல்லை, "ஆண்பிள்ளையாகிய" நிறைவடைந்த கிறிஸ்து, மாபெரும் மீட்பர் நிச்சயமாய் வெளிப்படுவார்கள்.

"இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? இப்படிப்பட்டவைகளைக் கண்டது யார்? ஏனெனில் கிறிஸ்துவின் சரீரமாகிய, முற்றிலும் ஜெயம் கொள்ளுகிற சீயோன், பரிசுத்த ஜாதி பெயரளவிலான சீயோனிலிருந்து பிரசவ வேதனைக்கு முன்னதாக விடுவிக்கப்படுவதோடு, பெயரளவிலான சீயோன் பிரசவ வேதனைப்படுகையில் திரள்கூட்டத்தினர் என்னும் வேறு பிள்ளைகளும் பிறக்கின்றனர். இந்த திரள்கூட்டத்தினர் மகா உபத்திரவத்தில் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்களுடைய வஸ்திரத்தைத் தோய்த்து வெளுத்தவர்கள் என்று வெளிப்படுத்தல் 7:14-ஆம் வசனத்தில் நாம் வாசிக்கின்றோம். பிரசவ வேதனைக்கு முன்பு பிறக்கும் ஆண்பிள்ளையாகிய கிறிஸ்துவின் சரீர அங்கங்கள், "என் ஜனங்களே அவளை விட்டு வெளியே வாருங்கள்" (வெளிப்படுத்தல் 18:4) என்ற அழைப்பைக் கேட்டு அதற்கு கீழ்ப்படிந்தவர்கள் ஆவார்கள். மேலும் இவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலைப் பெற்றுக் கொள்வதற்குப் பாத்திரவான்களாகவும் இருக்கின்றனர். ஆனால் மகா உபத்திரவத்தில் பிறக்கும் அநேக பிள்ளைகள் விசுவாசிகளில் இருந்தும், கொஞ்சம் பாபிலோனின் ஆவியினாலும், உலகத்தின் ஆவியினாலும் பிடிக்கப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் முற்றிலும் உலக சிந்ததையுடையவர்களாய் இல்லாமல் இருந்தும், இவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கும், திட்டத்திற்கும் முழுமையாய் ஒப்புக்கொடுப்பதில் தவறுபவர்கள்.

"இதோ, இடறுதற்கான கல்லையும் தவறுதற்கான கன்மயலயம், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாய் இருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை" என்று தீர்க்கதரிசி உரைத்துள்ளார். (ரோமர் 9:33; ஏசாயா 8:14, 15; 28:16) கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் வரும் மீட்பைப் பற்றின உபதேசமே இடறுதற்கான கல்லாகும். இந்த கல்லின் மேல்தான் மாம்சீக சீயோன் (மாம்சீக இஸ்ரயேலர்கள்) இடறினார்கள். மேலும் இப்பொழுது இதே கல்லில் தான் பெயரளவிலான சீயோனும் இடறுகின்றனர். ஜெயம் கொள்ளுகிறவர்களாகிய தெரிந்துகொள்ளப்பட்ட சிறுமந்தை இதில் இடறாமல், தீர்க்கதரிசியின் வார்த்தைகளை நினைவுகூர்ந்து, இந்த கல்லே உண்மையான சீயோனின் பிரதானமான மூலைக்கல் என்று அடையாளம் கண்டுகொள்வார்கள். "அந்தப்படியே இதோ, தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாய் இருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின் மேல் (உங்களை கிறிஸ்து தம்முடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினால் வாங்கிக் கொண்டபடியால் அவரை உங்கள் மீட்பர் என்று) விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை... விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப் பெற்றது; கீழ்ப்படியாமல் இருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்த கல் இடறுதற்கேதுவான கல்லும்

விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று. அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாய் இருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்." (1 பேதுரு 2:6-8); ஏனெனில் கீழ்ப்படியாமை உள்ள எவரிடமும் தம்முடைய இராஜ்யத்தைக் கொடுப்பதில்லை. இவர்கள் தேவனுக்கு முன்பு சரியான மனநிலையில் வருவதற்கு மகா உபத்திரவத்தின் கடுமையான சோதனைகள் தேவைப்படுவதால் இவர்கள் மகா உபத்திரவத்தின் வாயிலாகவே வருவார்கள்.

தேவனால் உண்மையாய் ஜெநிப்பிக்கப்பட்டவர்களும், புதிய ஆவிக்குரிய ஜீவியத்திற்குள் அவருடைய ஆவியினால் உயிர்ப்பிக்கப்பட்டவர்களும், தேவனுக்கு தங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்த/அர்ப்பணித்த தங்களின் உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர்களும், தங்களின் முதலாம் உயிர்த்தெழுதலைப் பற்றின நம்பிக்கையினாலும், பெயரளவிலான சீயோன் மீது வரும் பிரசவ வேதனைக்கு முன்னதாகவே பிறந்துவிடுவோம் என்ற நம்பிக்கையினாலும் களிக்கூறுவார்கள். மேலும் பெயரளவிலான சீயோனோடுகூட இப்போது இடறிக்கொண்டிருக்கிற தேவனுடைய பெலவீனமான பிள்ளைகளும் கூட மகாஉபத்திரவத்தின் அக்கினி மூலமாக இரட்சிக்கப்படுவார்கள் என்ற விஷயமும், அவர்களுக்குச் சந்தோஷமாய் இருக்கும். இந்த மகா (பிரசவ வேதனை) உபத்திரவத்தில் பெயரளவிலான சீயோன் அழிக்கப்பட்டாலும், அதிலிருந்து திரள்கூட்டத்தினர் வெளிப்படுவார்கள் (பிறப்பார்கள்).

## *(உண்மை சபையோடு/சீயோனோடு/எருசலேமோடு சந்தோஷப்படுங்கள்)*

## *"எருசலேமோடு சந்தோஷப்படுங்கள்"*

"எருசலேமை நேசிக்கிற நீங்கள் எல்லாரும் அவளோடே கூட சந்தோஷப்பட்டு அவளைக் குறித்துக் களிக்கூறுங்கள்; அவள் நிமித்தம் துக்கித்திருந்த நீங்கள் எல்லாரும் அவளோடே கூட மிகவும் மகிழுங்கள்." "இதோ, எருசலேமைக் களிக்கூறுதலாகவும், அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன். நான் எருசலேமின் மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின் மேல் மகிழ்ச்சியாயிருப்பேன்; அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் அதில் இனி கேட்கப்படுவதில்லை." ஏசாயா 66:10; 65:18, 19.

எருசலேமோடு களிக்கூறும்படியான இந்த அழைப்பு சீயோனின் பிறப்பை தொடர்புடைய தீர்க்கதரிசன அறிவிப்பைத் தொடர்ந்து வருகின்றது. சீயோனின் (சபை) பிறப்பு, அதாவது, கிறிஸ்துவின் சரீரம் இராஜ்யத்தின் வல்லமைக்கும், மகிமைக்கும் உயர்த்தப்படுவதே சகல ஜனங்களின் களிக்கூறுதலுக்கான காரணமாய் இருக்கும். மேலும் தேவனுடைய புத்திரர்களுக்கான இந்த உயர்த்தப்படுதலுக்கும், வெளிப்படுதலுக்குமே சர்வ சிருஷ்டியும் பிரசவ வேதனைப்பட்டு தவிக்கின்றது. (ரோமர் 8:22, 23)

உண்மை சீயோன் (சபை) உயர்த்தப்பட்ட பின்னர், இராஜ்யத்தின் மாபெரும் வேலை ஆரம்பம் ஆகும். பெயரளவிலான சீயோன் மீதான பிரசவ வேதனை தனக்குள் இன்னமும் இருக்கும். தேவனுடைய உண்மையான ஜனங்களை விடுவித்து விடும். மேலும் இவர்கள் படிப்படியாக அருமையான உயரிய குணலட்சணங்களுக்குள் வளருவார்கள். இருப்புக்கோல் ஆட்சியானது எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தி தற்போதைய சமுதாய அமைப்புகள் அனைத்தையும் முற்றிலும் நிர்மூலமாக்கி நீதியின் சமாதான ஆளுகைக்கான ஆயத்தங்களைச் செய்யும்.

பின்னர் நீதியின் ஆயிரவருட அரசாட்சி ஆரம்பிக்கும். அப்பொழுது ஒவ்வொரு மனுஷரும் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலமாக நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கான முழுமையான நியாயமான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வார்கள். நூறு வருடத்திற்கு குறைவாக வாய்ப்பு யாருக்கும் இருக்காது. ஆனால் காலத்தைப் பிரயோஜனப்படுத்தாமல் சீர்த்திருத்துவதற்கான எவ்வித முயற்சிகளையும் எடுக்காமல் இருந்தால், அவன் ஜீவன் பெறுவதற்கு அபாத்திரமாக கருதப்பட்டு இரண்டாம் மரணத்தில் சங்கரிக்கப்படுவான்.

“அங்கே இனி அற்ப ஆயுசுள்ளபாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்; நூறு வயதுசென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான், நூறு வயதுள்ளவனாகிய பாவியோசபிக்கப்படுவான்.” **ஏசாயா** 65:20

“நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.” **ஏசாயா** 1:19

“கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.” **ஏசாயா** 40:31

“வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள். அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை; அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளைகளைப் பெறுவதுமில்லை; அவர்களும், அவர்களோடேகூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள். அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன். ஓனாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப்போல வைக்கோலைத் தின்னும்; புழுதிசர்ப்பத்துக்கு இரையாகும்; என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.” **ஏசாயா** 65:21-25

**இவ்வாறாக உண்மையான சீயோனின் (எருசலேமின்) பிறப்பானது நீதியை விரும்பும் அனைவருக்கும் களிகூறும் விஷயமாக இருக்கும். உண்மையான சீயோன் முதலாவது உலகத்தின் சகல நம்பிக்கைகளையும் தவிடுபொடியாக்கிவிடும். மேலும் இதுவே உண்மையான நம்பிக்கைக்கான விடியமாக இருக்கும். அதாவது, இந்த தவிடுபொடியாக்குவதே உண்மையான நம்பிக்கைக்கான விடியலாகும். உண்மை சீயோன் உலகத்தின் சகல பெருமையையும் தாழ்த்தி அவர்களின் அனைத்து ஆஸ்திகளையும் அவர்களின் சகல பெருமையான அமைப்புகளையும் அதாவது, அரசியல் சமுதாயம் மற்றும் மதத்தையும் சகல ஒழுங்குகளையும், சகல நம்பிக்கைகளையும் உலகமானது தேவனுடைய இராஜ்யத்தில் புதிய ஒழுங்குகளின் கீழ் உள்ள நம்பிக்கைகளை காணும் வரைக்கும் தவிடுபொடியாக்கிவிடும்.**

**ஆம், எருசலேமாகிய உண்மை சீயோனோடு களிகூறுங்கள். அவளை நேசிக்கிற நீங்கள் எல்லாரும் அவளோடே கூடச் சந்தோஷப்படுங்கள். மேலும் அவள் நிமித்தம் இப்பொழுது துக்கித்து, அவளுடைய சுயத்தை அவள் உண்மையாய் பலி செலுத்தியதினிமித்தம் அவள் வாழ்க்கையின் இறுதியில் அவள் பெறப்போகும் பரிசை அறியாமல் அவளுடைய ஓட்டத்தை தடைப்பண்ண முயற்சித்தவர்களும் அவளோடு களிகூறுங்கள். அவளுடைய மகிமை சீக்கிரத்தில் வெளிப்படப் போகின்றது. அவளுடைய சந்தோஷத்திற்குமாக மட்டும் அல்லாமல், பூமியின் சகல குடிகளுக்கான ஆசீர்வாதங்களுக்கும் சந்தோஷத்திற்கும் கூட அது விரைவில் வெளிப்படும். ஆமென்**!!

-----------------------------

PASSAGE OF THE RED SEA.

----------

II. QUAR., LESSON XI., JUNE 10, EXOD. 14:19-29.

Golden Text--"By faith they passed through the Red Sea."--Heb. 11:29.

This chapter in the history of God's ancient people is an illustration of the power and wisdom and love of God. And it is a warning to all who are disposed to heed it, to beware of undertaking to contend with the Almighty. No matter how weak or insignificant or poor or despised among men may be the subjects of his care, the hand that is lifted against them defies the power of Jehovah, and shall surely come to grief. This deliverance of typical Israel from Egypt illustrates the deliverance from sin and its bondage of all who desire to be God's servants and to have the promised blessing as it shall be fulfilled after the plagues (Rev. 16), in the utter destruction of all the systems born of sin and selfishness which would hinder human prosperity and advancement toward God. The overthrow of Pharaoh's army by the sea, corresponds to the fact that many of the present enslaving agencies will be overthrown by anarchy in the great "time of trouble," now so near at hand. Already the storm is approaching which will eventually overthrow all evil-doers; but a way of escape is provided for all who seek God and put their trust in him, following the course which his wisdom has marked out.

It is important to note in this connection that the terms "borrowed" and "lent" in Exod. 11:2; 12:35,36 are improper and misleading translations of the Hebrew word shaal, giving the impression of a command to dishonesty on the part of God and a dishonest transaction on the part of the Israelites. The Israelites did not borrow, but asked for (as in R.V.) jewels of silver and jewels of gold and garments. And the Egyptians did not lend, but allowed their request. Thus the Israelites had some reward for their long service, though it was only granted by their oppressors under fear to refuse them.

# செங்கடலின் பாதை

## யாத்திராகமம் 14:19-29

*"விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்துபோனார்கள்."*
*எபிரெயர் 11:29*

தேவனுடைய முற்காலத்து ஜனங்களுடைய சரித்திரத்தின், இவ்வதிகாரமானது தேவனுடைய வல்லமை மற்றும் ஞானம் மற்றும் அன்பிற்கான உதாரணமாக விளங்குகின்றது. இதன்பால் கவனம் காட்டுகின்ற அனைவருக்கும் இது, சர்வ வல்லமையுள்ளவருடன் எதிர்த்துப்போராடுவதற்கான பிரயாசம் எடுத்தலைக் குறித்து ஜாக்கிரதையாய் இருக்கத்தக்கதாக எச்சரிப்பாய்க் காணப்படுகின்றது. அவருடைய பராமரிப்பின்கீழ்க் காணப்படுபவர்கள் எவ்வளவு வலுவற்றவர்களாகவும் (அ) முக்கியத்துவமற்றவர்களாகவும் (அ) ஏழைகளாகவும் (அ) மனுஷருக்குள்ளே அசட்டைப்பண்ணப்பட்டவர்களாகவும் காணப்பட்டாலுங்கூட அவர்களுக்கு எதிராய் ஓங்கியெழும்பும் கரமானது, தேவனுடைய வல்லமைக்கு எதிராக எதிர்த்து நிற்கிறதாய் இருந்து மற்றும் நிச்சயம் கெடுதலுக்கு ஆளாகுகின்றதாய்க் காணப்படும்.

எகிப்திலிருந்து நிழலான இஸ்ரயேலின் இந்த விடுதலையானது, தேவனுடைய ஊழியக்காரர்களாய் இருப்பதற்கும் மற்றும் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் வாஞ்சிப்பவர்கள் அனைவரும் பாவத்திலிருந்தும், அதன் அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிக்கப்படுவதைச் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது; இந்த வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களானது, வாதைகளுக்குப் பிற்பாடு, மனிதனுடைய முன்னேற்றத்திற்கும், தேவனிடத்தில் நெருங்குவதற்கும் தடையாய் இருக்கின்ற பாவம் மற்றும் சுயநலத்தினால் உண்டான அமைப்புகள் அனைத்தும் முற்றிலுமாய் அழிகையில் நிறைவேறும். (வெளிப்படுத்தல் 16) பார்வோனின் சேனையானது, கடலினால் கவிழ்க்கப்பட்டக் காரியமானது, அண்மையில் சம்பவிக்க இருக்கிற மகா "உபத்திரவ காலத்தில்," அடிமைப்படுத்தி வைத்திருக்கும் தற்காலத்து அமைப்புகளில் அநேகமானவைகள் ஒழுங்கின்மையினால் கவிழ்க்கப்படும் எனும் உண்மைக்கு ஒத்ததாக இருக்கின்றது. பொல்லாதவர்கள் அனைவரையும் இறுதியில் கவிழ்த்துப்போடுகின்றதான புயலானது ஏற்கெனவே கிட்ட நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது; ஆனால் தேவனை நாடுகின்றவர்களும், அவரில் தங்களது விசுவாசத்தைவைத்து, அவரது ஞானமானது சுட்டிக்காட்டும் பாதையில் தொடருகின்றவர்களுமானவர்கள் அனைவருக்கும் தப்பித்துக்கொள்வதற்குமான போக்கு அருளப்பட்டிருக்கும்.

யாத்திராகமம் 11:2; 12:35, 36-ஆம் வசனங்களில் ஆங்கிலத்தில் இடம்பெறும் "borrowed" மற்றும் "lent" என்பதான வார்த்தைகளானது, *shaal* என்ற எபிரெய வார்த்தையினுடைய சரியற்ற மற்றும் தவறாய்ப் பொருள் கொடுக்கும் மொழிபெயர்ப்புகளாகக் காணப்படுகின்றது என்பதையும், தேவன் சார்பிலான ஒரு நேர்மையற்றக் கட்டளையாகவும், இஸ்ரயேலர்கள் சார்பிலான ஒரு நேர்மையற்ற நடக்கையாகவும் தோன்றும் அர்த்தத்தைக் கொடுக்கின்றது என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டியது முக்கியமானதாய்க் காணப்படுகின்றது (தமிழ் மொழியாக்கம் சரியாக உள்ளது). இஸ்ரயேலர்கள் கடனாய் வாங்கவில்லை, மாறாக வெள்ளியுடைமைகளையும், பொன்னுடமைகளையும், வஸ்திரங்களையும் கேட்டுக்கொண்டார்கள். எகிப்தியர்களும் கடனாகக் கொடுக்கவில்லை, மாறாக இஸ்ரயேலர்கள் கேட்டுக்கொண்டதை, அவர்களுக்குக் கொடுத்தார்கள். இப்படியாக இஸ்ரயேலர்கள் தங்களது நீண்டகாலப் பணிகளுக்காக சில வெகுமானங்களைப்பெற்றுக்கொண்டார்கள்; அதுவும் இவைகளை அவர்களின் வேண்டுகோளை மறுப்பதற்குரிய பயத்தினால் மாத்திரமே அவர்களை ஒடுக்குபவர்கள் கொடுத்தார்கள்.

*****

# THE PASSOVER INSTITUTED.

----------

II. QUAR., LESSON X., JUNE 3, EXOD. 12:1-14.

Golden Text--"Christ our Passover is sacrificed for us." --1 Cor. 5:7.

The term Passover signifies to pass by or spare from an affliction. When the last plague was visited upon Egypt, the houses of the Israelites were all marked with the blood of a slain lamb, that the destroying angel might not cut off the first born of Israel with the first born of Egypt. These first born ones were afterward represented in the priestly tribe of Levi, to which Moses belonged (Exod. 13:2; Num. 3:11-13), and through this priesthood all Israel was brought into covenant relationship with God. The Gospel Church, is the antitype. These alone of all people are now in danger of everlasting death--the second death--because these only have the knowledge sufficient--if rejected or abused—to bring condemnation to the second death.

The first born of Israel represented those who now by faith abide in Christ, under "the blood of sprinkling"--the precious blood of Christ, our passover lamb, slain for us. And these shall be delivered, spared, passed over, being counted worthy of life through the merit of the precious blood of Christ. But if any abide not under this covering, he must surely perish, as any of the first born of Israel would have perished had they ventured out, beyond the protection of the blood of the typical lamb. How forcibly does the type thus illustrate the value of the precious blood of Christ, our Passover Lamb!

The typical feast, commemorative of the typical Passover, was celebrated ever after by Israel. Our Lord and his disciples observed it, as all Jews were required to do, yearly on the fourteenth of Nisan. The Lord's Supper was instituted just after this Passover supper, and to take its place, on the last night of our Lord's earthly life--the same night in which he was betrayed, the same day on which he was crucified, the Jewish day beginning the evening preceding at sunset. This annual remembrance was to be to Christ's followers what the Passover had been to the Jews. They were to see Christ Jesus as their lamb, and rejoice in their justification through his precious blood. And they were to celebrate it yearly--as the Israelites had done--but now in remembrance of the reality and not of the type. "Christ, our passover, is sacrificed for us; therefore, let us keep the feast"--as often as the season returns, until fully delivered from death to life in his likeness.

R 1657 / ஜூன் 1894

# பஸ்கா ஏற்படுத்தப்பட்டது

## யாத்திராகமம் 12:1-14

***"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே."***
**1 கொரிந்தியர் 5:7**

பஸ்கா என்ற வார்த்தையானது, கடந்துபோகப்படுதலை அல்லது உபத்திரவத்திலிருந்து கடாட்சிக்கப்படுதலைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது. கடைசி வாதை எகிப்தின்மீது கடந்துவந்தபோது, சங்காரத்தூதன் எகிப்தின் முதற்பேறானவர்களோடுகூட, இஸ்ரயேலின் முதற்பேறானவர்களும் சேர்ந்து சங்காரம் பண்ணப்படாதபடிக்கு, இஸ்ரயேலர்களின் வீடுகள் அனைத்தும் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் அடையாளம் போடப்பட்டிருந்தது. இந்த முதற்பேறானவர்கள் பிற்பாடு, மோசேயினுடைய லேவியெனும் ஆசாரிய கோத்திரத்தினால் அடையாளப்படுத்தப்பட்டனர் மற்றும் இந்த ஆசாரியத்துவத்தின் மூலமாகவே இஸ்ரயேல் முழுவதும், தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள் கொண்டுவரப்பட்டார்கள். (யாத்திராகமம் 13:2; எண்ணாகமம் 3:11-13) சுவிசேஷ யுக சபையானது, இதற்கான நிஜமாகக் காணப்படுகின்றது. இவர்கள் மாத்திரமே ஜனங்கள் அனைவரிலும், இப்பொழுது நித்தியமான மரணத்திற்குரிய — இரண்டாம் மரணத்திற்குரிய அபாயத்தில் காணப்படுகின்றனர்; ஏனெனில் இவர்களே போதுமானஅளவுக்கு அறிவைப்பெற்றவர்களாய் இருக்கின்றனர்; அதாவது இவ்வறிவை இவர்கள் ஒருவேளை புறக்கணித்தாலோ (அ) தவறாய்ப் பயன்படுத்தினாலோ, இரண்டாம் மரணத்திற்குள்ளாகத் தீர்க்கப்படுமளவுக்குப்போதுமான அறிவைப் பெற்றவர்களாய் இருக்கின்றனர்.

இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள், இப்பொழுது விசுவாசத்தினால் கிறிஸ்துவில், "தெளிக்கப்பட்ட இரத்தத்தின்" கீழ் — நமக்காக அடிக்கப்பட்ட நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவினுடைய இரத்தத்தின்கீழ் நிலைத்திருப்பவர்களை அடையாளப்படுத்துகின்றனர். இவர்கள் கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியத்தினால், ஜீவனுக்குப் பாத்திரமானவர்களாகக் கருதப்படுவதினால், இவர்கள் விடுவிக்கப்படுவார்கள், கடாட்சிக்கப்படுவார்கள், கடந்துபோகப்படுவார்கள். ஆனால் எவரேனும் ஒருவேளை இந்த மறைவிடத்தின் கீழ் நிலைத்திராவிட்டால், நிழலான ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினுடைய பாதுகாப்பைவிட்டு, இஸ்ரயேலின் முதற்பேறானவர்களில் யாரேனும் ஒருவர் துணிந்து வெளியேறும் பட்சத்தில் மரித்துப்போவதுபோலவே, நிச்சயமாய் மரிக்க வேண்டியிருக்கும். நிழலானது நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் முக்கியத்துவத்தை இப்படியாக எத்துணை அழுத்தத்துடன் தெளிவாய்க் காட்டுகின்றது!

நிழலான பஸ்காவை நினைவுகூர்ந்து ஆசரிப்பதற்குரிய நிழலான ஆசரிப்பானது, இதன்பின் தொடர்ந்து இஸ்ரயேலால் ஆசரிக்கப்பட்டது. இதை நமது கர்த்தரும், அவருடைய சீஷர்களும், அனைத்து யூதர்களும் செய்ய வேண்டியதுபோன்று, நீசான் மாதம், 14-ஆம் தேதியில் ஆசரித்தார்கள். இந்தப் பஸ்கா போஜனத்திற்குப் பிற்பாடு, இதனிடத்தில் கர்த்தருடைய இராப்போஜனமானது ஏற்படுத்தப்பட்டது; அதுவும், நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஜீவியத்தின் கடைசி இரவன்று — அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இரவன்று — அவர் சிலுவையில் அறையப்பட்ட அதே நாளன்று ஏற்படுத்தப்பட்டது; யூதர்களுடைய நாளானது, சூரியன் மறைவிற்குப் பின்னான மாலைவேளையில் துவங்குகின்றதாய் இருக்கின்றது. பஸ்காவானது யூதர்களுக்கு எப்படியாகக் காணப்பட்டதோ, அப்படியே இந்த வருடாந்தரநினைவுகூருதலும்கூட கிறிஸ்துவின் பின்னடியார்களுக்குக் காணப்பட வேண்டும். இவர்கள் கிறிஸ்து இயேசுவை, தங்களது ஆட்டுக்குட்டியெனப் பார்க்கவேண்டும் மற்றும் அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமான தங்களது நீதிமானாக்கப்படுதலில் களிகூர வேண்டும். இஸ்ரயேலர்கள் செய்ததுபோன்று — இவர்களும் அதை வருடந்தோறும் ஆசரித்திட வேண்டும், ஆனாலும் நிழலின் காரியமாக இராமல், மாறாக நிஜத்தினுடைய நினைவுகூருதலாக இப்பொழுது இவர்கள் ஆசரித்திட வேண்டும். அவருக்கு ஒப்பான சாயலில், மரணத்திலிருந்து முழுமையாக விடுவிக்கப்படுவது வரையிலும், பஸ்கா காலங்கள் வரும்போதெல்லாம் "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கின்றபடியால் — பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."

*****

R 1681

# "எகிப்துக்குத் தப்பி ஓடுதல்"

## மத்தேயு 2:13-23

"கர்த்தர் உன் போக்கையும் உன்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்." சங்கீதம் 121:8

இப்பாடத்தில் கவனிக்க தகுந்த ஐந்து விசேஷமான கருத்துக்கள் உள்ளது. அவை,

1) தேவனுடைய தொலைநோக்குப் பார்வை மற்றும் முன்னேற்பாடு. தேவனிடம் காணப்படும் எதிர்க்காலத்தைப் பற்றின அறிவு, நம்முடைய புரிந்துக்கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாகும். எல்லைகளுடைய மனங்களுக்கு, எல்லைகளே இல்லாத மனதின் ஆழத்தை கற்பனை செய்து பார்க்க முடியாது. பிதாவாகிய தேவனுடைய ஞானம் மற்றும் அறிவு, அவருடைய அரசாட்சியில் உள்ள நெருக்கடிகளைத் தீர்க்க மிக வல்லமையுள்ளது என்று அறிந்துக்கொள்ளும் சிலாக்கியம் ஆறுதலாய் இருக்கின்றது. மேலும், மனுஷனுடைய கோபமோ, இருளின் அனைத்து அதிகாரங்களோ, கொஞ்சம் கூடத் தெய்வீகத் திட்டத்தைக் குலைத்துப் போட முடியாது என்பதை அறிவதும் ஆறுதலாய் உள்ளது. மேலும், இதே வல்லமைதான் அவருடைய ஆவிக்குரிய குமாரனை மாம்ச சுபாவத்தில் மாற்றினது; அதனோடு கூட இயேசு தம்மைக் காத்துக்கொள்ள முடியாத குழந்தைப் பருவம் முதல் உலகதிற்கான மீட்பிற்காக அவர் தம்மைப் பலிச் செலுத்த நியமிக்கப்பட்ட காலம்வரை அனைத்து எதிராளிகளிடமிருந்து அவரைப் பாதுகாக்கவும் செய்தது.

2) தேவதூதர்களின் ஊழியத்தை நாம் மறுபடியும் கவனிக்கிறோம். "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" (எபிரெயர் 1:14) "தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்" (1 பேதுரு 1:12). ஆம், உண்மையில் அவர்கள் எந்த வேலையையும் செய்ய ஆயத்தமாய் இருக்கின்றார்கள்.

3) கர்த்தருடைய தூதனின் ஆலோசனைக்கும், எச்சரிப்புக்கும் யோசேப்பு மற்றும் மரியாள் காண்பித்த விசுவாசம் மற்றும் உடனடிக் கீழ்ப்படிதல் கவனிக்கப்படத்தக்கது. அவர்கள் கேள்வி கேட்கவோ அல்லது தயக்கமோ காண்பியாமல், கர்த்தருடைய கட்டளைக்கு உடனடியாக கீழ்ப்படிந்தார்கள். எகிப்துக்கு அவர்கள் புறப்பட்ட போதும், பாலஸ்தீனியாவுக்கு அவர்கள் திரும்பிய போதும் கர்த்தருடைய ஆசீர்வாதமும், பாதுகாப்பும் அவர்களோடு இருந்தது. மேலும் புதிய இராஜாவாகிய அர்கெலாயுவின் அதிகாரத்தினிடமிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சிக்கும் போதும், எருசலேமுக்கு அருகாமையில் உள்ள பெத்லகேமுக்குச் செல்வதற்குப் பதிலாக, நாசரேத்துக்குப் போகும் போதும், யோசேப்பு மற்றும் மரியாள் தாங்கள் இஸ்ரயேல் தேசத்தில் எங்குக் குடியிருக்க வேண்டும் என்பதைக் குறித்த தேவனுடைய வழிநடத்துதலை அலட்சியப்படுத்தவில்லை.

4) இந்தச் சூழ்நிலையில், அநேக தீர்க்கத்தரிசனங்களின் நிறைவேறுதலை நாம் காணலாம், அதாவது, அ) எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" என்பதாகும். இந்தத் தீர்க்கத்தரிசனம் இரண்டு அர்த்தங்களை உடையதாகும். இந்தத் தீர்க்கத்தரிசனம் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட இஸ்ரயேலையும், ஏரோதின் மரணத்திற்குப் பின்பு தேவனுடைய குழந்தையாகிய இயேசு, எகிப்திலிருந்து புறப்பட்டு வருவதையும் குறிக்கின்றது (யாத்திராகமம் 4:22, 23; மத்தேயு 2:15). மேலும், எகிப்து உலகத்தையும் அடையாளப்படுத்துகின்றது. கிறிஸ்துவும் தேவனுடைய முழுச் சபையும் அழைக்கப்பட்ட, வாக்களிக்கப்பட்ட சந்ததியாய் இருக்கின்றார்கள். ஆ) நாசரேத்துக்கு வந்து குடியேறின சம்பவம், மற்றொரு தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதலாக இருந்தது, "நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினான். நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கத்தரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது"

(மத்தேயு 2:23). பெத்லகேமில் குழந்தைகள் கொல்லப்பட்ட சம்பவமும், தீர்க்கத்தரிசனமாக உரைக்கப்பட்டிருந்தது (எரேமியா 31:15; மத்தேயு 2:17, 18). இந்தத் தீர்க்கத்தரிசனங்கள் அனைத்தும் சகலத்தையும் அறிந்திருக்கும் தேவனுடைய அறிவைச் சுட்டிக்காட்டுகின்றது.

5) குழந்தையாய் இருந்த மீட்பரைப் பாதுகாக்க தேவன் எடுத்துக்கொண்ட பாதையும், முறையும், எவ்வித ஒழுங்குகளையும் மீறவில்லை என்பதும் கவனிக்கப்படத்தக்கது. தேவனுடைய கரத்தில் அனைத்து வல்லமைகள் இருந்தபோதிலும், அவர் ஏரோதைக் கொன்று போடவோ, அவனது அதிகாரத்தில் இடைபடவோ முற்படவில்லை. இத்தகைய அதிகாரங்களைத் தடைபண்ணுவதற்கான காலம், இன்னும் வரவில்லை. உலகத்தின் இராஜ்யங்களுக்கான காலமானது, புறஜாதியாரின் காலம் நிறைவேறும் அளவு நீடிக்கப்பட்டுள்ளது. இவைகள் தெய்வீகத் திட்டத்தை இடையூறு பண்ணாத வரையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் இடையூறு பண்ணும் பட்சத்தில், தேவன் அதற்குத் தடை விதிக்கின்றார் அல்லது நன்மைக்கு ஏதுவாக மாற்றுகின்றார்.

ஆனால், இங்குத் தேவன், இரட்சிப்பின் திட்டத்திற்கு மையமாக இருக்கும் தம்முடைய குமாரனைப் பாதுகாப்பதற்காகத் தலையிட்டார். ஆனால் இந்தக் குமாரன், உலகத்தின் மீட்பிற்காக தம்மைப் பலிச் செலுத்தும் காலம் வந்தபோது, இவ்வுலகத்தின், இருளின் அதிகாரிகளுடைய வழித் திறக்கப்பட்டது. பின்னர், அவர்கள் தேவனுடைய குமாரனைச் சிலுவையில் அறையும்படி அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். ஏனெனில், அநேகருக்கான ஈடுபலியாக தம்மை ஒப்புக்கொடுக்கவே அவர் உலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தார். அவருடைய வேளை வந்தபோது, அதிகாரிகள் அனுமதிக்கப்பட்டார்கள் (மத்தேயு 20:28; யோவான் 2:4, 7:6; லூக்கா 22:53). இராஜாவுடைய கோபத்துக்கு தப்பித்துக்கொள்ள முடியாத குழந்தைகள் குறித்த அழுகையும், புலம்பலும், தவிக்கும் சிருஷ்டிகளுக்கு அடையாளமாக இருக்கின்றது. இது, "திரும்பக் கொடுத்தலின் காலங்கள்" வரும் வரையிலும் நன்மைக்கென்று அனுமதிக்கப்படும் விஷயங்களுக்கு அடையாளமாக இருக்கின்றது.

நம்முடைய ஆதார வசனம், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய, கர்த்தருடைய ஜனங்களுக்குரிய விசேஷித்த வார்த்தையாகும். புதுச் சிருஷ்டிகளாகிய அவர்கள், கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் வரையிலும், அவர்கள் தேவனால் பாதுகாக்கப்படுவார்கள்.

**ஆமென்!**

---

# "இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தல்"

## யோவான் 2:13-25

"என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள்" - யோவான் 2:16.

நமது கர்த்தர் செய்த இந்தக் காரியத்தைக் குறித்துப் பதிவு செய்த மற்றச் சுவிசேஷகர்கள், இந்தச் செயல்பாட்டின் பல்வேறு பதிவுகளை அவருடைய ஊழியத்தின் முடிவு காலத்தில் நிகழ்ந்ததாக தெளிவாகப் பொருத்தியுள்ளனர். அதேசமயம் யோவான் இங்கு இதை அவருடைய பொது வேலையின் (public work) துவக்க காலத்தில் நடந்த சம்பவங்களோடு தொடர்புபடுத்திக் கூறியுள்ளார்; இருந்தபோதிலும் அந்த ஒரு சம்பவம் அனைவராலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றச் சுவிசேஷங்களைப் போலவே, யோவான் சுவிசேஷ புஸ்தகத்தின் கடைசி வசனம், அவரைத் தேடிக்கொண்டிருந்த பகைமை உணர்வுகொண்ட ஏராளமான எதிரிகளைக் காண்பித்து, இப்படிப்பட்ட மனநிலை அவருடைய ஊழியத்தின் துவக்க காலத்தில் காணப்படவில்லை என்பதாகக் காட்சியளிக்கிறது.

இயேசுவின் அதிகாரப்பூர்வமான இந்தச் செயல்பாடு, அவருடைய ஊழியத்தின் இறுதியில் நிழல் போன்ற ஒரு புதுமையான பொருத்தத்தைக் கொண்டிருந்தது. இச்சம்பவமானது, "இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்..." என்ற தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக, அவர் எருசலேமுக்குள் வெற்றி ஆரவாரத்தோடு நுழைந்ததைத் தொடர்ந்து உடனடியாக நிகழ்ந்தது (சகரியா 9:9). மேலும், தேவாலயத்தில் நிகழ்ந்த இந்தச் சம்பவம், இஸ்ரயேலின் இராஜா என்ற நியாயமான உரிமையின் அடிப்படையிலான அதிகாரத்தின் விளைவாகவே நிகழ்ந்தது என்பது ஓர் ஊகமாக இருந்தது; ஆயினும், அந்த உரிமை யூதர்களால் நிராகரிக்கப்பட்டது. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11). பின்பு, அவர்கள் தங்களிடத்திலிருந்த தேவனுடைய கிருபையைப் புறக்கணித்து, அதற்குத் தங்களைத் தகுதியற்றவர்களாக்கினதைப் பார்த்த அவர், புறஜாதிகளிடமாகத் திரும்பி, தம்முடைய நாமத்திற்கென்று ஒரு ஜனத்தை அவர்கள் மத்தியிலிருந்து தெரிந்தெடுத்தார். இந்தத் தெரிந்தெடுத்தலுக்குச் சுவிசேஷ யுகத்தின் பதினெட்டு நூற்றாண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது. மேலும், அந்த மாம்சீக இஸ்ரயேல் வீட்டாரும், இந்த ஆவிக்குரிய இஸ்ரயேல் வீட்டாருமாகிய சுவிசேஷ சபை ஒன்றுக்கொன்று நிழலும், பொருளுமாகக் காணப்படுகின்றனர்; அதாவது, சூழ்நிலைகள் மற்றும் காலம் விஷயத்தில், தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள். அவருடைய சிலுவை மரணத்திற்குச் சற்றுமுன் நடந்த சம்பவமாகிய இந்த ஆலயத்தைச் சுத்திகரித்தல், நிஜத்தில் அதற்குச் சரிநிகரான சுவிசேஷ யுகத்தில் 1878-ஆம் வருஷம் துவங்கியதாக ஆராய்ந்துக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது (ஆங்கிலத்தில் பார்க்கவும் vol 2, பக்கம் 239). அதாவது, சரீரத்தின் அங்கங்களாவதற்குத் தகுதியற்றவர்கள் ஆவிக்குரிய ஆலயத்திலிருந்து, அதாவது, அவருடைய சரீரமாகிய அர்ப்பணிக்கப்பட்ட சபையிலிருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளனர். மேலும், தகுதியும், உத்தம இருதயமும் உள்ளவர்கள் இதற்கு ஏற்றவர்களாக ஆசீர்வதிக்கப்பட்டனர்.

சிறு கயிறுகளினால் உண்டாக்கப்பட்ட சாட்டையானது, இங்குச் சுத்திகரிப்பின் வேலையை நிறைவேற்றக்கூடிய கிறிஸ்துவின் இசைவான போதனைகளைக் குறிக்கும் பொருத்தமான சின்னமாக இருக்கின்றது.

எந்த அதிகாரத்தினாலே அவர் இவைகளைச் செய்தார் என்பதற்கான அடையாளம் என்ன என்று கேட்கப்பட்டபோது, இயேசு தம்முடைய எதிர்க்கால வல்லமையை அதாவது அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின்னான அதிகாரத்தைச் சுட்டிக்காண்பித்தார் (வசனங்கள் 18-21). அத்தருணத்திலேயே அந்த வேலையின் நிஜத்தை ஆரம்பிக்க, அவருக்கு அதிகாரம் இல்லாதிருந்தது. அவர் செய்த காரியம் வெறும் நிழலானதே. அது சபையுடைய பிரயோஜனத்திற்கே அல்லாமல் மற்றவர்களுடைய பிரயோஜனத்திற்காக அல்ல.

வசனங்கள் 23-25 (Diaglott). இந்தச் சமயத்தில் ஜனங்கள் அவருடைய அற்புதங்களினால் பெருமளவில் கவரப்பட்டவர்களாகக் காணப்பட்டு, அவருக்கு முன்பாக ஓசன்னா! என்று

ஆர்ப்பரித்து, அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்வதற்கும், உடனடியாக அவரை இராஜாவாக அறிக்கை செய்வதற்கும் தயாராக இருந்ததாகக் காணப்பட்டாலும், இயேசு அவர்களை நம்பவில்லை (மத்தேயு 21:9-11). காரணம், அவர் அவர்களுடைய இருதயத்தின் நிலையில்லா தன்மையை அறிந்திருந்தார். மேலும், அவர் ஆவிகளைப் பகுத்தறியும் திறன் பெற்றிருந்தபடியால், எந்த மனுஷனும், தன்னை அவருக்கு நிரூபித்துக் காண்பிக்க வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. காரணம், அவர்களுக்குள் இருந்ததை அவர் அறிந்திருந்தார் (லூக்கா 20:41-47).

"என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள்" என்ற இந்தப் பொன்னான வசனமானது, உண்மை ஆலயமாக, அதாவது அவருடைய அர்ப்பணிக்கப்பட்ட வீட்டாராக இருப்பதாக அறிக்கையிடுகிற அனைவராலும் அதிக கவனம் கொடுக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. தேவனுடைய ஆலயம் சுத்திகரிக்கப்பட்டு, புடைக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்படக்கூடிய இக்காலத்தில், தேவனுடைய பரிசுத்த காரியங்களை எவ்விதத்திலாவது வியாபாரமாக்கும்படி நோக்கங்கொண்டிருக்கும் எவரும் தேவனுடைய ஆலயத்தில் தரித்திருக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**ஆமென்!**

---

## நான்கூட அவரைத் தெரிந்துகொள்வேன்.

கர்த்தாவே, எனக்கு ஆலோசனை தேவைப்படும்பொழுதினிலே,
உம்மிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளக் கிருபை தாரும்,
என்னுடைய குழப்பங்கள் எதுவாயினும்,
அதை உம்மிடத்தில் கொண்டுவர எந்தத் தயக்கமும் காட்டமாட்டேனே,
ஒரு அடைக்கலான் குருவியின் செட்டை விழுதலைக்கூட
வெகுகவனமாளய் கவனித்துக்கொண்டிருக்கும் ஒருவரிடம்
பூமியில் நடைபெறும் ஒவ்வொரு செயலும், தாங்கள் சொன்னபடி,
எங்கள் தலைமுடி ஒவ்வொன்றும் எண்ணப்பட்டுள்ளதுவே,
ஏதாவதொரு சந்தர்ப்பம் கிடைத்துவிடாதோ என்ற குறிக்கோளுடனே
எதிராளியானவன் சுற்றித்திரிந்து கொண்டுள்ளானே,

# "நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே"

அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின் வாங்கிப்போனார்கள். அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே."

**- யோவான் 6:66-68**

இங்குப் பதிவு பண்ணப்பட்டுள்ள நமது ஆண்டவருடைய வார்த்தைகளில் சிறிதளவு ஏமாற்றமடைந்த உணர்வுகள் வெளிப்படுகின்றது. "அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார்" (யோவான் 6:67). ஒவ்வொரு செய்கைக்கும், வார்த்தைக்குமான காரணம் என்ன என்று பார்ப்பதில் நாம் பழக்கப்பட்டிருப்பதினிமித்தம், பின்னடியார்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட குறைவு ஏன் நமது கர்த்தரைத் துக்கங்கொள்ளச் செய்தது? என்று நமக்குள் கேள்விகள் எழும்புகின்றது; இன்னுமாக, அநேகர் அவரைப் பின்பற்ற வேண்டும் என்று ஆசை கொண்டிருந்தாரா? எண்ணிக்கையின் மீது அவரது நம்பிக்கை இருந்ததா? நான் மூன்று வருடங்கள் போதித்தப் பிற்பாடு, என்னுடைய பின்னடியார்களில் அநேகர் என்னை விட்டு விலகிப் போவதைக் கண்டு, இப்பொழுது பரிசேயர்கள் என்ன சொல்வார்களோ?" எனத் தமக்குள்ளாகக் கூறிக்கொண்டாரோ? பின்னடியார்கள் தம்மிடமிருந்து விலகி செல்வதென்பது, அவருடைய வருமானங்களைக் குறைத்துவிடும் என்று அஞ்சினாரா? இவைகள் எதற்காகவும் அவர் துக்கம் அடையவில்லை; ஏனெனில், அவர் ஏற்கெனவே தமக்கெனப் புகழ்ச்சியைச் சேர்த்துக்கொள்ளவில்லை; அவர் முன்னதாகவே/ஏற்கெனவே தம்முடைய சீஷர்களிடம் "எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்" (லூக்கா 6:26) என்று கூறியிருக்கின்றார். ஐயாயிரம் மக்களுக்கு மூன்று வாற்கோதுமை அப்பங்களையும், இரண்டு சிறு மீன்களையும் கொண்டு போதுமானளவுக்குப் போஷிக்கும் வல்லமையும் அவரிடம் இருந்தது. இன்னுமாக, தம்முடைய உண்மையுள்ள பின்னடியார்கள், "சிறு மந்தையினராகத்தான்" இருக்கப் போகின்றார்கள் என்றும், திரளானவர்கள் அவரை விசுவாசிப்பதில்லை என்றும் அவர் முன்னதாகவே அறிந்திருந்தார்.

பின்னர் ஏன், தம்முடைய பின்னடியார்களின் எண்ணிக்கை குறைந்ததினிமித்தம், அவருடைய வார்த்தைகளில் துக்கம் வெளிப்பட்டது? அவர் உண்மையுள்ளவராகவும், பரந்த மனப்பான்மையுள்ளவராகவும், அனுதாபம் உள்ளவராகவும், தம்முடைய நண்பர்களை நேசித்தவராகவும் இருந்தபடியால், மேய்ப்பன் வெட்டப்பட்டு, ஆடுகள்/மந்தைகள் சிதறிப்போவதற்கான வேளை நெருங்குவதை அவர் கண்டபோது, **தனிமையின் துயரம்** அவரைச் சூழ்ந்துக்கொள்ள, "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?" என்று கேட்டார் என்பதே காரணமாகும். அனுதாபத்தை விரும்புதல், நண்பர்களின் ஐக்கியத்தை விரும்புதல் முதலானவைகள் பெலவீனங்களல்ல. மாறாக, இவை உண்மையான குணலட்சணத்தினுடைய அம்சங்களேயாகும். ஆனால், ஒருவேளை நமது கர்த்தருடைய சீஷர்கள் அவரை விட்டு விலகிச் சென்ற காரியமானது, பிதாவின் திட்டத்தில் அவருக்கெனக் குறிக்கப்பட்டுள்ள பலியின் பாதையினின்று, அவரது போக்கைத் திசை மாற்றியிருக்குமாயின், அது பெலவீனமாயிருந்திருக்கும். இப்படிப்பட்டதான பெலவீனங்கள் கர்த்தரிடத்தில் ஒருபோதும் வெளிப்படவில்லை. மாறாக, சில நாட்களுக்குப் பிற்பாடு, பலிச் செலுத்துவதிலிருந்து, நமது கர்த்தருடைய மனதை மாற்றுவதற்கெனப் பேதுரு பேசினபோது, கர்த்தர் உடனடியாக "எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்" (மத்தேயு 16:23).

"ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்ற அப்போஸ்தலனாகிய பேதுருவின் வார்த்தைகள், பிரம்மாண்டமான அர்த்தம் கொண்டவைகள் ஆகும் (யோவான் 6:68). நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதன் மூலமாகத் தேவனுடைய கிருபையை நாடுவதும், நித்தியஜீவனை நாடுவதும் என்பது என்ன என்றும், தாழ்மையுள்ள யூதர்கள் பெரும்பான்மையானவர்களைப் போன்று பரிசேயர்களின் உபதேசங்களினாலும், தங்களுடைய சொந்த மனசாட்சியினாலும் குற்றவாளியாக்கப்பட்டுச் சோர்ந்துப் போவது என்ன என்றும், பேதுரு நன்கு அறிந்திருந்தார். எதிர்க்கால வாழ்க்கை குறித்த அந்நிய ஜாதிகளின் பல்வேறு தத்துவ

ஞானங்கள் பற்றியும் கொஞ்சம் பேதுரு அறிந்திருக்க வேண்டும்; ஒருவேளை இதை அறிந்திருப்பாரானால், இவைகள் மனித யூகங்கள் மாத்திரமே என்றும் அறிந்திருந்திருப்பார்.

ஆனால், மூன்று வருடங்களாகப் பேதுரு இயேசுவை அறிந்திருந்தார். இன்னுமாக, நித்தியஜீவன் தொடர்பான இந்தப் பாடத்தைக்குறித்த இயேசுவின் வார்த்தைகளையும் பேதுரு கேட்டிருந்தார். இயேசுவின் போதனைகள், யூகங்கள் அல்ல. "அவர் வேதபாரகரைப் போல் போதியாமல், அதிகாரமுடைவராய் அவர்களுக்குப் போதித்தார்" என்று பார்க்கின்றோம் (மாற்கு 1:22). நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதன் மூலமாக, நித்தியஜீவனை எதிர்ப்பார்க்கலாம் என்று இயேசு அவர்களுக்குப் போதிக்கவில்லை. (நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதும், அதினால் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதும் கூடாத காரியம் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்). மாறாக, இயேசுவினுடைய போதனைகள், மற்றப் போதனையாளர்களின் போதனையிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. தாம் உலகத்திற்கு வந்ததற்கான காரணம், ஊழியம் கொள்வதற்கும் (அ) கனம் பெற்றுக்கொள்வதற்கும், மதிப்புப் பெற்றுக்கொள்வதற்கும் அல்லாமல், ஊழியம் செய்வதற்கும், இறுதியில் ஆதாமின் பரீட்சை காரணமாகவும், கீழ்ப்படியாமையின் காரணமாகவும் ஜீவனுக்கான உரிமைகளை இழந்துள்ள அனைவருக்கும், ஈடுபலிக் கிரயமாக தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பதற்கும் என்று சீஷர்களுக்கு அவர் கற்றுக்கொடுத்தார் (மத்தேயு 20:28). தெய்வீக அன்பு மற்றும் ஏற்பாட்டின் மூலமான இந்த ஈடுபலியின் காரணமாக, புதிய உடன்படிக்கையினுடைய கிருபையான இரக்கங்களின் கீழ்க் காண்பிக்கும் கீழ்ப்படிதல் வாயிலாக, நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை, அனைவரும் பெற்றுக்கொள்வார்கள் என்று இயேசு போதித்தார். அதோடு கூட, "பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்டு (கீழ்ப்படிந்து), பிழைப்பார்கள் (பூரண ஜீவனை அடைவார்கள்)" என்றும் கூறினார் (யோவான் 5:25, 28, 29). இந்த எளிமையான மற்றும் அருமையான சுவிசேஷத்தை, அதாவது நித்தியஜீவன் பற்றின ஒரே உண்மையான நற்செய்தியைப் பேதுரு கேட்டிருந்தார்; இயேசுதான், உலகத்திற்கு ஜீவன் கொடுக்கும்படிக்குத் தேவனால் அனுப்பப்பட்ட மேசியா என்றும், உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி என்றும் பேதுரு அடையாளம் கண்டுக் கொண்டார் (யோவான் 1:9).

இந்தக் கண்ணோட்டத்தின் காரணமாகவே, "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம்? நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்று பேதுரு பதிலளித்தார். வேறெங்கும் பெற்றுக்கொள்ள முடியாத, அஸ்திபாரத்தையும், நங்கூரத்தையும் பேதுருவின் விசுவாசமும், நம்பிக்கையும், கிறிஸ்துவின் உபதேசத்தில் கண்டடைந்தது.

இன்றுள்ள புத்தியுள்ள விசுவாசிகள் அனைவரின் விஷயத்திலும் இப்படியாகவே உள்ளது; கிறிஸ்துவின் மரணத்தையும் மற்றும் தேவனுடைய அன்பையும், தயவையும், அவருடைய மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களையும் உள்ளடக்கியுள்ள ஜீவனுக்கான அருமையான வார்த்தைகளை எந்தளவுக்கு இன்றுள்ள புத்தியுள்ள விசுவாசிகள், கேட்டு,புரிந்துக்கொள்கின்றார்களோ, அவ்வளவாய் அவர்களது விசுவாசமும், நம்பிக்கையுங்கூட, பேதுரு விஷயம் போன்று அஸ்திபாரத்தையும், நங்கூரத்தையும் அடைகின்றது. சத்தியத்தை ஒருமுறை உணர்ந்த பிற்பாடு, நற்செய்தியை ஒருமுறை கேட்ட பிற்பாடு, நித்தியஜீவனுக்கான வார்த்தைகளைக் கேட்ட பிற்பாடு, இதற்காக புத்தியுள்ள இந்த விசுவாசிகள் எதைக் கொடுப்பார்கள்? (exchange)

நாம் ஏறெடுத்துப் பார்க்கையில் புத்தா, பிரம்மா, சொராஸ்டர், கன்பூசியஸ் (confucious) என்பவர்களின் தத்துவங்கள் இன்னமும் காணப்படுகின்றது. ஆனால், அவைகள் நம்மைத் திருப்திப்படுத்துவதில்லை. இந்த உலகத்தின் ஞானமானது, ஒரு பரிணாமம் பற்றின யூகத்தைத் தெரிவிப்பதை நாம் கேட்டுள்ளோம்; இந்த யூகமானது ஓர் உயிரணு, தலைப்பிரட்டையாக வளர்ச்சி அடைந்தது என்றும், தலைப்பிரட்டையிலிருந்து குரங்கு வந்தது என்றும், குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்றும், காணப்படுகின்றது. பின்னர் மனிதனிலிருந்து, மனிதனைக் காட்டிலும் உயர் தளத்திற்கு வளர்ச்சி காணப்படும் என்ற பரிணாமம்பற்றின இந்த யூகமானது அதனையே தொடர்ந்து உறுதிப்படுத்திக் கொண்டும் இருக்கின்றது. ஆரம்பத்தில் தேவன் என்ற ஒருவர் இருந்திருந்தாலும், இல்லாமல் இருந்திருந்தாலும், போகப்போக ஞானமுள்ள மற்றும் வல்லமையுள்ள தேவர்கள் படிப்படியாகத் தோன்றும்போது, மில்லியன் கணக்கான வல்லமையும், ஞானமுமுள்ள தேவர்கள் இருப்பார்கள் என்று இந்தப் பரிணாம யூகம் நமக்கு உறுதியளிக்கின்றது. ஆனால், இத்தகைய பயங்கரமான யூகங்களிலிருந்து, நம்முடைய இருதயங்கள், எந்த மனிதனும் பேசினது போல்

அல்லாமல் இயேசுவினால் பேசப்பட்ட ஜீவனுக்கான அருமையான வார்த்தைகளை நோக்கித் திரும்புகின்றது. அந்த வார்த்தைகளில்தான் உலகத்தால் தரமுடியாததும், எடுத்துப்போட முடியாததுமான இளைப்பாறுதலும், சமாதானமும் காணப்படுகின்றது.

இந்த மாபெரும் போதகரின் அறிவுரைகளைப் பின்பற்றுகையில், இவர் அனைவருக்குமென அளித்துள்ள இந்த நித்தியஜீவனை அதிகமதிகமாக நாம் கற்றுக்கொண்டு வருகின்றோம். நித்தியஜீவனாகிய இந்த ஈவு, அவரை அன்புகூருகின்றவர்களுக்கு மாத்திரமே என்றும், ஈடுபலிச் செலுத்தப்பட்ட உலகத்திலிருந்து, சுவிசேஷ யுகத்தில் ஒரு சிறு மந்தையினர், அழைக்கப்பட்டு, அவர்களுடைய அன்புடன்கூடிய கீழ்ப்படிதல் காரணமாகப் பாத்திரவான்களென நிரூபிக்கப்பட்டு, திவ்வியச் சுபாவத்தின் மகிமை, கனம் மற்றும் அழியாமையில் அவரோடுக் கூட உடன் சுதந்தரர்களாக இருக்கப்போகின்றார்கள் என்றும் நமக்கு இந்தப் போதகர் கற்றுக்கொடுத்துள்ளார்; இன்னுமாக ஈடுபலியின் இரத்தத்தினால், முத்திரிக்கப்படும் புதிய உடன்படிக்கையின் இருதயப்பூர்வமான கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசம் எனும் நிபந்தனைகளின் கீழ், மனித பூரணத்தை, நித்தியஜீவனோடு திரும்பப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பைக்கொண்டும், அறிவைக் கொண்டும், இவர்கள் கர்த்தருடன்கூட அடுத்த யுகமாகிய ஆயிரம் வருஷ அரசாட்சியில், பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பார்கள் என்றும் நமக்கு இந்தப் போதகர் கற்றுக்கொடுத்துள்ளார். நாம் இங்கு விவரித்துள்ளது, முற்காலத்தில் உரைக்கப்பட்ட அதே சுவிசேஷம், நித்தியஜீவனுக்கான அதே வார்த்தைகள்தான்; ஆனால், இவைகளின் பிரம்மாண்டமான நிறைவேறுதலின் அண்மையில் நாம் காணப்படுவதினால், அதே சுவிசேஷத்தை விரிவாக உரைத்துள்ளோம்.

யூத யுகத்தினுடைய அறுவடையில் "நித்தியஜீவனுக்கான வார்த்தைகளை" நமது கர்த்தர், தம்முடைய பின்னடியார்களிடம் பேசின பிற்பாடுதான், "இடறல்கள் வருவது அவசியம்" என்று கூறி, அவர்களைக் கோதுமையைப்போல் புடைக்கிறதற்கென "இடறல்களை" அனுமதித்தார். "இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!" (மத்தேயு 18:7). இந்தப் பரீட்சைகளானது, யார் யார் முதிர்ந்த கோதுமை மற்றும் வளர்ச்சியுறாத கோதுமை மற்றும் பதர் என்று நிரூபிக்கப்படுவதற்கேயாகும். இரண்டு வகுப்பார்கள் விசேஷமாகப் புடைக்கப்படுகின்றனர். அதாவது, அரும்பொருள்களை அறிந்துக்கொள்ள வேண்டும் என்றிருப்பவர்களும் (curious), அதிகம் விருப்பம் இல்லாதவர்களும் அடங்கிய ஒரு வகுப்பார் மற்றும், அர்ப்பணம் பண்ணியும் ஆழமான குணலட்சணம் கொண்டிராதவர்கள் அதாவது, நமது கர்த்தருடைய உவமையில் வசனத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டிருந்தும், இருதயம் எனும் நிலம் ஆழமாக இல்லாமலும், உண்மையான அன்பு மற்றும் சத்தியத்திற்கான அர்ப்பணம் இல்லாமலும் இருக்கும் கற்பாறை நிலம் போன்ற மற்றொரு வகுப்பார்; இந்த இரண்டாம் வகுப்பார் உபத்திரவங்கள் (அ) துன்பங்கள் வரும்போது, இவர்கள் உடனடியாக இடறல் அடைந்து, பின்னிட்டுத் திரும்பி, கர்த்தரிடமும், அவருடைய உண்மையுள்ளவர்களிடமும் இருந்து விலகிப் போய்விடுவார்கள்.

சுவிசேஷ யுகத்தினுடைய தற்போதைய அறுவடையாகிய இப்பொழுதும் இப்படியாகவே இருக்கின்றது. யுகங்களைக் குறித்ததான தெய்வீகத் திட்டத்தின் "ஆழமான காரியங்கள்" அநேகவற்றைக் கண்டுள்ளதால், நமது கண்கள் பாக்கியமுள்ளவைகள்; மாபெரும் போதகரின் பாடங்களையும், மகிமை, கனம் மற்றும் அழியாமையின் வார்த்தைகளையும், நித்தியஜீவனுக்கான வார்த்தைகளையும், ஆச்சரியத்திற்குரிய தெளிவுடன் கேட்டுள்ளதால், நமது காதுகள் பாக்கியமுள்ளவைகள். கர்த்தருடைய ஏற்பாட்டின்படி இப்பொழுது நாம் பரீட்சைகளுக்காகவும், புடைக்கப்படுவதற்காகவும் ஆயத்தத்துடன் காணப்பட வேண்டும். இப்பொழுதும், மீண்டுமாக அனைவரையும் நிரூபித்துக் காட்டுவதற்கும், அர்ப்பணம் பண்ணாதவர்களையும், குணலட்சணங்களை ஆழமாகப் பெற்றிராதவர்களையும், கிறிஸ்துவின் நிமித்தமான நிந்தைகளையும், அவமானங்களையும் சகிப்பதற்கு விருப்பம் இல்லாதவர்களையும் விலகச் செய்வதற்கும் என இடறல்கள் அவசியமாய் உள்ளது. இப்படியாகவே, நிழலான கிதியோனின் சேனை விஷயத்திலும் நடந்தது. கிறிஸ்துவின் உடன் சுதந்தரர்களாக, தேவனுக்குச் சொந்தமாய் உள்ளவர்கள் அனைவரும், வைராக்கியத்தில் விசேஷமாய் இருக்கும் ஜனங்களாக, ஒரு தெரிந்துக்கொள்ளப்பட்ட வகுப்பாராய்க் காணப்பட வேண்டும். "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்;" "உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்கவேண்டியதே" (1 பேதுரு 4:12; 1 கொரிந்தியர் 11:18, 19).

இங்குப் பரீட்சையில் நிலைநிற்கின்றவர்கள், முந்தின அறுவடையின் பரீட்சையில், பேதுரு பேசினது போன்றுக் காணப்படுவார்கள். இவர்களைச் சோர்வு மேற்கொள்ளும் போது, இவர்களும், "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம்?" என்றே கேட்பார்கள். இவர்கள் தங்களைச் சுற்றிலும் பிசாசுகளின் பல்வேறு உபதேசங்களும், ஆவியுலகக் கோட்பாட்டின் வஞ்சனைகளும், நாத்திகர்களும், கிறிஸ்தவ மண்டலத்தின் பல்வேறு பிரிவுகளும், வேதவாக்கியம் மற்றும் பகுத்தறிவிற்கு எதிரானவைகளும், குருட்டுத்தன்மைகளும் இருப்பதைக் காண்கின்றனர். இந்தக் கணநேர கண்ணோட்டம் என்பது, கர்த்தர் தெரிந்துக்கொள்ள விரும்பும் வகுப்பாருக்குப் போதும். இதற்கு மேல் இவர்களால் விலகிப் போக முடியாது; கர்த்தருடைய சேனையை விட்டு விலகிப் போகும்படிக்கு இவர்களைக் கட்டாயமும் படுத்த முடியாது. உண்மைதான், நாம் எங்கே போவோம்? நம்முடைய தலைவரிடம், ஆம் அவரிடம் மாத்திரமே, நித்தியஜீவனுக்கான வார்த்தைகள் இருக்கின்றது. நாம் அவருடைய வார்த்தைகளைக் கேட்டுள்ளபடியினால், மற்ற விசேஷ செய்திகள் அனைத்தின் மீதுமான ஈர்ப்புப் போய்விட்டது. நம்முடைய மாபெரும் இரட்சிப்பின் அதிபதியில் நாம் நிலைத்திருந்து, அவரைப் பின்தொடர்வோம்; அவருடைய வார்த்தைகளிலும், அவருடைய அன்பிலும், அவருக்கான ஊழியத்திலும் நாம் ஜீவித்து, இயங்கி, தேவனுடைய தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாக நிலைத்திருப்போம்.

**ஆமென்!**

"கர்த்தருடைய பரிசுத்தவானே!
அவருடைய சிறப்பான வார்த்தைகள் மீதுள்ள
உன் விசுவாசத்தின் அஸ்திபாரம் எவ்வளவு உறுதியாய் உள்ளது?
அடைக்கலத்திற்காக நீ புகுந்துள்ள இயேசு கூறியுள்ளதைக் காட்டிலும்
அதிகமாய் வேறென்ன உனக்குக் கூறிடுவார்."

---

# அறிமுகக் கடிதங்கள்

பயணம்பண்ணி போதிக்கும் சகோதரருக்கான அறிமுகக் கடிதத்திற்கு வேறொரு வார்த்தைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நம்முடைய கடந்த வெளியீட்டில் நாம் தெரிவித்திருந்தோம்; மற்றும் அதை நாங்கள் கீழே கொடுத்திருக்கின்றோம். தவறான புரிந்து கொள்ளுதலுக்கு இடமளிக்காமல் இருக்கத்தக்கதாக விளக்கமளிப்பது சரியாய் இருக்கும்:-

(1) இந்தக் கடிதங்களானது பிரசங்கித்திடுவதற்கான அங்கீகாரமல்ல. இந்த அங்கீகாரமானது எந்த மனுஷனாலும் கொடுக்கப்படமுடியாது. விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசங்கொண்டு, கர்த்தருக்கான ஊழியத்தில் முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களாகிய உண்மையான சீஷர்கள் அனைவருமே, தங்களால் முடிந்த எந்த மற்றும் அனைத்து விதத்திலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குத் தேவனுடைய வசனத்தினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளனர்; இவர்கள் தங்களுடைய தாலந்துகள் மற்றும் வாய்ப்புகளுக்கேற்ப தங்களால் முடிந்த பிரசங்கித்தல் அனைத்தையும் பொதுப்படையாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ வார்த்தைகள் அல்லது பேனா அல்லது அச்சடிக்கப்பட்ட பக்கங்கள் வாயிலாகச் செய்திடுவதில் மகிழ்ச்சியாய்க் காணப்பட வேண்டும் (மத்தேயு 28:9). அப்போஸ்தலனாகிய பவுல் ஊழியக்காரன் என்றுள்ள தனக்கான அங்கீகாரம் அல்லது ஏற்படுத்துதலானது, மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, தேவனாலே மாத்திரமேயாகும் என்று நமக்கு உறுதியளிக்கின்ற அதே வேளையில், அவர் கர்த்தருடைய பிரதிநிதியெனவும், அந்தியோகியாவிலுள்ள சபையின் பிரதிநிதியெனவும் அந்தியோகியாவிலுள்ள சபையினுடைய ஆதரவின் கீழ் பர்னபாவுடனான தனது ஊழியத்திற்குப் புறப்பட்டுப்போனார் (கலாத்தியர் 1:1; அப்போஸ்தலர் 13:3; 14:26, 27). அவர் நிச்சயமாகவே இப்படியான ஒரு கடிதத்தைக் கொண்டுபோனார்; ஏனெனில் இத்தகைய நிருபங்களை/கடிதங்களைக் கொடுப்பதும், கொண்டு செல்வதும் வழக்கமாய் இருந்தது (பிலிப்பியர் 2:28-30; உரோமர் 16:1-15, 17; 1 கொரிந்தியர் 16:3; அப்போஸ்தலர் 18:27). இது குறித்துக் கொரிந்தியருக்கு அவரால் எழுதப்பட்டுள்ள நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. "மீண்டும் நாங்கள் எங்களைப்பற்றி நற்சான்று அளிக்கத் தொடங்குகிறோமா? சிலரைப் போல நற்சான்றுக் கடிதங்களை உங்களுக்குக் காட்டவோ அல்லது உங்களிடமிருந்து பெறவோ எங்களுக்குத் தேவை உண்டா?" (2 கொரிந்தியர் 3:1 திருவிவிலியம்). பவுலுக்குக் கொரிந்துவிலுள்ள சபையிடம் செல்வதற்கு இத்தகைய கடிதம் தேவைப்படவில்லை; காரணம் அவர் அங்கு விவரிப்பதுபோன்று, அவர் அச்சபையை நிறுவி ஸ்தாபித்துள்ளபடியால், அவர்களைப்போன்று அவரைக்குறித்து அறிந்திருந்தவர்களும் அல்லது அவரைப்போன்று அவர்களைக்குறித்து அறிந்திருந்தவர்களும் சொற்பமானவர்களே ஆவர். ஆனால் அவர் முதல்முறை எருசலேமிலுள்ள சபையைச் சந்திக்கச் சென்றபோது, அவருக்குக் கடிதங்கள் அல்லது அவரைக்குறித்த அறிமுகம் தேவைப்பட்டது (அப்போஸ்தலர் 9:26, 27-ஆம் வசனங்களைப் பார்க்கவும்). இந்த அப்போஸ்தலருடைய வழக்கத்தையும், மந்தையைப் பாதுகாக்கும் வழக்கத்தையும்தான் நாம் இப்பொழுது - அனைவருடைய நலன் கருதி பின்பற்றிட நாடுகின்றோம். எங்குத் தனிப்பட்ட நபர்கள் அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அங்குத் தனிப்பட்ட நபர்களின் கடிதங்கள் போதுமாயிருக்கும் அல்லது எங்குச் சபைகள் அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அங்குச் சபையின் கடிதங்கள் போதுமாயிருக்கும்; ஆனால் நம் விஷயத்தில் Tract Society/டிராக்ட் சொசைட்டி குறித்து உங்கள் அனைவருக்கும் தெரியும் மற்றும் சொசைட்டியின் அறிமுகப்படுத்துதலானது, சிதறிக் காணப்படும் அனைவராலும் மதிக்கப்படும் என்பதில் நமக்கு நம்பிக்கை இருக்கின்றது.

(2) Zions Watch Tower Tract Society என்பது அதற்கு இன்று நிலவும் சாதாரண அர்த்தத்தின் படியாக ஒரு மத சொசைட்டி அல்ல; ஏனெனில் அதற்கு எந்த விசுவாசப் பிரமாணங்களோ அல்லது விசுவாச அறிக்கைகளோ காணப்படுகிறதில்லை. அது முற்றிலுமாக ஓர் association/அலுவலகமாகக் காணப்படுகின்றது; அதன் வேலை அலுவல் விதத்தில் காணப்படுகின்றது. அது எவ்வளவு உண்மையாய் அதற்கான நோக்கத்தை நிறைவேற்றியுள்ளது என்பதற்கு அதன் நண்பர்களும், அதன் சத்துருக்களும் சாட்சிப் பகருகின்றனர்.

டிராக்ட் சொசைட்டியினுடைய அமைப்புத் தன்மையானது, அதன் பணக்காரியங்களை, அதன் நிர்வாகிகளுடைய தனிப்பட்ட காரியங்களிலிருந்து முற்றிலுமாய்ப் பிரித்து வைப்பதேயாகும். இந்த ஒரு சௌகரியத்தினாலான பலன் இப்பொழுதைக்காட்டிலும், எதிர்க்காலத்திலேயே தெரிகின்றதாயிருக்கும்; ஏனெனில் இது நிதிகளை நிர்வகிக்கும் எவராவது அல்லது அனைவருடைய மரணமானது, சொசைட்டியைச் சீர்க்குலைத்துப்போடாமலும், விசுவாச வீட்டாருக்கான பிரதிநிதியென, விசுவாச வீட்டாரின் பயன்பாட்டிற்கும், நன்மைக்கும், சமயம் பரப்பும் ஊழியத்திற்கு ஆதரிக்கும் வண்ணமாகக் கைப்பிரதிகள் முதலானவைகளுக்குப் பொருளாதார உதவியளித்தல் எனும் சொசைட்டியின் வேலை முற்றிலும், தடைப்பட்டுப் போகாதப்படிக்குப் பார்த்துக்கொள்ளும் என்று நம்பப்படுகின்றது.

(3) நீங்கள் அல்லது வேறு எவரேனும் இத்தகைய கடிதங்களைக் கொடுத்து அனுப்புவது என்பது குறிப்பது போலவே, இந்த அறிமுகக் கடிதங்கள் கொடுக்கப்படுவது என்பது, அறிமுகப்படுத்தப்படுபவரின் குணலட்சணம், திறமை முதலானவைக் குறித்து நன்கு அறிந்திருக்கும் அனுபவமிக்க சகோதரரின் கணிப்பைக் குறிக்கின்றதாய் இருக்கும் (அப்போஸ்தலர் 16:2-ஆம் வசனத்தைப் பார்க்கவும்).

இப்படியாக "வஞ்சிக்கிறவர்கள்" காணப்படுகின்ற இந்த நாட்களில், நாங்கள் கடமை உணர்வோடு அக்கறைகொண்டிருக்கிறோம் என்று நீங்கள் அறிந்து, நாங்கள் யாருக்குச் சாட்சிப் பகருகின்றோமோ, அத்தகையவர்களை நீங்கள் மிகவும் தாமதமின்றி ஏற்றுக்கொள்ளலாம் (2 தீமோத்தேயு 3:1-13; உரோமர் 16:18; மத்தேயு 24:24; எபேசியர் 4:11-14).

(4) இந்த அறிமுகக் கடிதத்தில் இடம்பெறும் 8 தகுதிகளில் அஸ்திபாரமாகிய ஈடுபலியைத் தவிர, வேறு எதுவும் உபதேசம் சம்பந்தப்பட்டவையல்ல என்று கவனிக்கப்படலாம்; இந்த அடிப்படை உபதேசத்தை விசுவாசியாதவர் எவரும் கிறிஸ்தவர்களே அல்ல என்று நாம் கருதுகின்றோம். மற்றத் தகுதிகள், குணலட்சணம் சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றது மற்றும் இவைகள் நியாயமான தகுதிகளென நாம் நம்புகின்றோம் மற்றும் தேவனுடைய கிருபையினால் தன்னை உண்மையுள்ளவனாக அறிக்கைப்பண்ணிடாத எவரையும், ஜீவனுள்ள தேவனுடைய சபையில், போதகனாகவோ அல்லது தகுதியுள்ள ஊழியக்காரனாகவோ காணப்படுவதற்குரிய, தகுந்த நபர் என்று நாம் அறிமுகம் பண்ணிட விரும்புகிறதில்லை.

இத்தகுதிகளைப் பெற்றிருப்பதாகத் தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணுபவர்கள், அந்தக் கிறிஸ்தவ கிருபைகளிலும், தகுதிகளிலும் பூரணப்பட்டிருப்பதாய் வலியுறுத்துவதாகப் புரிந்துகொள்ளப்படக்கூடாது; மாறாக பரிசுத்தமானவைகளில் சபையின் ஊழியக்காரனாய்க் காணப்படத்தக்கதாக, கிறிஸ்துவின் பிரதிநிதி ஒருவர் இக்கிருபைகளைப் பெற்றிருக்க வேண்டுமெனத் தாங்கள் ஒப்புக்கொள்ளும் ஒரு அளவுக்குத்தக்கதாகத் தாங்கள் அக்கிருபைகளைப் பெற்றிருப்பதாக, அவர்கள் நம்புவதாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும். சரியான ஆவியை உடையவர்கள் அனைவரும், கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் மற்றும் சகல நற்கிரியைகளிலும் தொடர்ந்து வளர்த்திடுவதற்கு விரும்பி நாடிடுவார்கள் மற்றும் தாங்கள் கர்த்தருக்கு ஒத்த சாயலில் உயிர்த்தெழுதலில் எழும்போதுதான் தாங்கள் பூரணமடைய முடியும் என்றும் எதிர்ப்பார்க்கின்றவர்களாய் இருப்பார்கள் (1 கொரிந்தியர் 15:42, 43).

இந்த அறிமுகக் கடிதமானது டிசம்பர் 31-ஆம் தேதியோடு காலாவதியாகிடும் மற்றும் புதியது விரும்பப்படும் பட்சத்தில், புதுப்பிக்கப்படுவதற்கான வேண்டுதலுடன், அந்தத் தேதியிலேயே திருப்பி அளிக்கப்பட வேண்டும். சொசைட்டியானது எப்போதேனும் அதன் இயக்குநர்களின் குழு வாயிலாக கடிதத்தைத் திரும்பிக் கேட்கையில், கடிதத்தின் உரிமையாளர் அதைச் சொசைட்டிக்குத் திருப்பி அளித்திட ஒப்புக்கொள்கின்றார்.

## <u>அறிமுகக் கடிதத்தின் பிரதி</u>:-

அலிகெனி, P. A., U. S. A-இன் Zions Watch Tower Tract Society-இன் அறிமுகக் கடிதம்.

பரலோகத்தில் பெயரெழுதப்பட்டுள்ள ஜீவனுள்ள தேவனுடைய சபைக்கு வாழ்த்துக்கள்! (1 தீமோத்தேயு 3:15; எபிரெயர் 12:23).

உங்களது கிறிஸ்துவ ஐக்கியத்திற்குள்ளாக, உங்களுக்கு உதவுபவராக மற்றும் ஆலோசனை வழங்குபவராக நீங்கள் ஏற்றுக்கொள்ளும்படிக்கும் எங்களது அருமையான

சகோதரனும், உடன் வேலையாளுமான -------------------------------------- அவர்களை நாங்கள் பரிந்துரைக்கின்றோம்.

இவர் கர்த்தருக்குள்ளான பிரியமான சகோதரனாகவும், இவரை அறிந்திருக்கும் சகோதரரால் நற்சாட்சி அளிக்கப்பெற்றவராகவும், நம்மால் தேவனுடைய பிள்ளை என்றும், கிறிஸ்துவின் பின்னடியார் என்றும் அடையாளம் கண்டுகொள்ளப்படுபவராகவும் காணப்படுகின்றார் (இது அவர்கள் நல்லொழுக்க குணலட்சணங்களையும் உள்ளடக்குகின்றது) மற்றும் விசுவாச வீட்டாருக்கு விசேஷித்த ஊழியம் புரிந்திடுவதற்குரிய, கீழ் இடம்பெறும் தகுதிகளை இவர் பெற்றிருப்பதாக நாம் நம்புகின்றோம்:

(1) குறைக் காணமுடியாதளவுக்கு, சத்தியத்தினால் மெருகூட்டப்பட்ட நல்லொழுக்க குணலட்சணங்கள் பெற்றிருக்கின்றார்.

(2) சாந்தம் - அதாவது இறுமாப்படைந்து, உங்களுக்கு உதவிசெய்ய நாடுகையில் தனக்குத் தீங்குவிளைவித்துக்கொள்ள முடியாத அளவுக்குச் சாந்தத்தை உடையவராய் இருக்கின்றார்.

(3) கர்த்தருடைய மாபெரும் திட்டத்தைக்குறித்து தெளிவாகப் புரிந்துகொண்டவராகவும், அதன் ஆவியில் பெரிதும் பங்கெடுத்தவராகவும் இருக்கின்றார்.

(4) சத்தியத்தை, அதற்கேயுரிய வல்லமையிலும், எளிமையிலும் (நாவன்மை உடையவராய் இல்லாவிட்டாலும்) மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்குரிய திறமையுடையவர்.

(5) ஆதாமினாலும், அவர் வாயிலாக மரணத்தைச் சுதந்தரித்துக்கொண்ட அவரது சந்ததியாலும் இழந்துபோகப்பட்ட ஜீவனுக்கான சரிநிகர்சமான விலை அல்லது பதிலாள் எனும் ஒரே உண்மையான அர்த்தமுள்ள ஈடுபலி உபதேசத்திற்கு விசுவாசமானவராக அறியப்பட்டிருக்கிறார்.

(6) தன்னைக்குறித்துப் பிரசங்கம்பண்ணாமல், கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கம் பண்ணிடுவதற்கும் - தன்னுடைய அறிவைக்குறித்துச் சத்தமிட்டுக்கொண்டிராமல், மாறாக தேவனுடைய வார்த்தையினை அதற்கேயுரிய தூய்மையிலும், எளிமையிலும் முன்வைத்திடுவதற்கும் நாடிடும் தாழ்மையான மனதினைப் பெற்றவராவார்.

(7) வசனத்தினுடைய மற்றும் சீர்ப்படுத்தப்பட்ட எண்ணமுடைய மற்றும் நன்கு ஸ்திரமும், உறுதியடைந்துமுள்ள மாணவன் ஆவார்; நூதன சீஷனல்ல; மனித ஊகங்களின், கற்பனைகளின், ஆங்கில இஸ்ரயேலிய வாதத்தின், பொதுவுடைமைக் கோட்பாட்டின், அரசியலின், வானசாஸ்திர கூற்றுகளின் அல்லது ஆவிக்குரிய பிரயோஜனத்திற்கு ஏதுவாயிராமல், கேட்பவர்களைக் கவிழ்த்துப்போடும் ஏதோ ஒன்றின் போதகன் அல்ல (2 தீமோத்தேயு 2:15-17; 1 தீமோத்தேயு 4:7; 6:20, 21); மாறாக

(8) அவர் ஒரே கர்த்தரை, ஒரே விசுவாசத்தை, ஒரே ஞானஸ்நானத்தை, அனைவருக்குமாகக் கொடுக்கப்பட்டுள்ளதான ஒரே பலியின் அடிப்படையின்படியானதும், அங்கீகரிப்பின்படியானதுமான ஒரே சுவிசேஷத்தை முன்வைத்து, சபையாருடைய விசுவாசத்தையும், குணலட்சணத்தையும் ஸ்திரப்படுத்திட வேண்டுமென்ற நாட்டத்துடன் உங்களிடத்தில் வருகின்றார்.

எங்களுக்கு அவர் எழுதினபோது, தேவனுடைய கிருபையினால் ஏற்கெனவே தான் இத்தகுதிகளைப் பெற்றிருப்பதாகவும், அவைகளைத் தனது கிரியைகளிலும், வார்த்தைகளிலும் மற்றும் எண்ணங்களிலும் பூரணப்படுத்துவதற்குத் தினந்தோறும் தான் முயற்சித்துக்கொண்டிருப்பதாகவும் அவர் எங்களுக்கு உறுதிப்படுத்தினார் மற்றும் இந்தக் கடிதத்தை மற்றவர்களுக்குக் காண்பிப்பதன் வாயிலாக, அதே அறிக்கையினை அவர் மற்றவர்களுக்கும் அறிவிக்கின்றவராய் இருப்பார்.

விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசமாயிருக்கும் முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள விசுவாசிகள் அனைவருக்கும் பொருந்துகின்ற நமது கர்த்தருடைய வசனத்தினால் உண்டான பொதுவான ordination/ஏற்படுத்துதல் மற்றும் commission/பொறுப்பு ஒப்படைக்கப்படுதலின் கீழாக அவர் உங்களிடத்தில் கடந்து வருகின்றார் (மத்தேயு 28:19, 20; ஏசாயா 61:1-3); மேலும் மேலே இடம்பெறும் 8 விசேஷித்த தகுதிகளின் காரணமாக - நீங்கள் சத்தியத்தின் அறிவிலும், அதை நடைமுறைப்படுத்துவதிலும் கட்டியெழுப்பப்படத்தக்கதாகவும், உங்களது சிரமங்களில் நீங்கள் உதவப்படத்தக்கதாகவும், இந்தத் தீங்குநாளில், சாத்தானுடைய தந்திரங்களுக்கும், அவனது திரளான வஞ்சனைக்குரிய தப்பறைகளுக்கு எதிராய் எதிர்த்து நீங்கள் நிற்பதற்கு உதவப்படத்தக்கதாகவும், நாங்கள் அவரைக் குறிப்பாய் உங்களுக்குப் பரிந்துரைக்கின்றோம். வாயின் வார்த்தைகள் வாயிலாகவும், அச்சடிக்கப்பட்ட பக்கங்கள்

வாயிலாகவும் நீண்டகாலங்களாக உங்கள் அயலகத்தார் மத்தியில் நீங்கள் பொறுமையாய் விதைத்துக்கொண்டு வந்ததான சத்தியத்தின் நல்விதைகள் சிலவற்றை - அவர் வந்து மீதி கேள்விகளுக்கு விடையளிப்பதன் வாயிலாகவும், அயலகத்தாரில் உள்ளவர்களைச் சத்திய அறிவில் திருப்தியும், உறுதிப்படுத்துவதன் வாயிலாகவும், தண்ணீர் பாய்ச்சி அவ்விதைகளில் சிலவற்றை வளர்ச்சியடையப்பண்ணிடுவார் என்றும், "பரிசுத்தமாக்குதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தும்" ஜீவியம் முழுவதுமான மாபெரிய வேலையனைத்திலும் உங்களை ஆதரித்திடுவார் என்றும் நாங்கள் நம்புகின்றோம்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளது போன்று அவர் பரிசுத்த வேதவாக்கியங்களுடைய போதனைகள் மற்றும் கட்டளைகளுக்கு இசைவாக, அடையாளமான ஞானஸ்நானத்தைக் கொடுத்திடுவதற்கும் மற்றும் நமது கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதில் அல்லது ஆராதனையில் அல்லது வேதாகம ஆராய்ச்சியில் - "விசுவாச வீட்டாருடைய" கூடுகையில் வழிநடத்திடும் பங்கைச் செய்திடுவதற்கும் முழு அங்கீகாரமுடையவராய் இருக்கின்றார்; ஆனாலும் இந்த ஊழியத்திற்கான விசேஷித்தத் தகுதிகளானது கொடுக்கின்ற அங்கீகாரம் தவிர மற்றபடி, அர்ப்பணிக்கப்பட்ட எந்தவொரு விசுவாசியைப் போலவே இவருக்கும், மேல் பத்தியில் குறிப்பிடப்படும் commission/பொறுப்பின் கீழ், எந்த மேலான அதிகாரமும் காணப்படுகிறதில்லை. எங்களது அறிமுகக் கடிதத்துடனும், பரிந்துரையுடனும் உங்களிடத்தில் வரும் அவர் - உள்ளூர் வழிநடத்துனர் இதே மாதிரியான பரிந்துரையின் கடிதத்தைப் பெற்றிருப்பினும் - வந்திருக்கும் அவர் அங்குத் தங்கிக் காணப்படுவது வரையிலும் எந்தவொரு கூட்டங்களிலும் அவர் தலைமைத் தாங்கிடலாம் என்பதில் ஐயமில்லை. அவரை அன்பின் ஆவியிலும், கிறிஸ்தவ ஐக்கியத்திலும் ஏற்றுக்கொண்டு, உங்கள் ஜெபம் மற்றும் ஒத்துழைப்பின் வாயிலாக அவருக்கு ஆதரவாயிருங்கள் (கொலோசெயர் 1:7; 4:7-9; பிலிப்பியர் 4:3). எனினும் அவரால் முன்வைக்கப்படும் ஒவ்வொரு காரியங்களையும் கவனமாய்க் கர்த்தருடைய வார்த்தையைக்கொண்டு சோதித்தறிந்துகொள்ளுங்கள். நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் (1 தெசலோனிக்கேயர் 5:21).

இராஜாதி இராஜனுக்கும், கர்த்தரும், மீட்பரும், சபையின் தலையானவருமான கிறிஸ்துவுக்குமான அன்பிலும், ஊழியத்திலும்

உங்களது அன்புக்குரிய ஊழியக்காரர்கள்,
Zions Watch Tower Tract Society.

{Corporate} ----------------------------------------------------------------------------------------------------
President.
{seal} ------------------------------------------------------------------------------------------------------------
Secretary.

---

# "மறுரூபம்"

## லூக்கா 9:28-36.

## இணையான பதிவுகள் ...... மத்தேயு 17:1-13; மாற்கு 9: 2-13

"இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்." - மத்தேயு 17:5

நம்முடைய இந்தப் பாடம் லூக்கா 9:22-ஆம் வசனத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. 22 முதல் 26 வரையிலான வசனங்களில், விரைவில் சம்பவிக்கப் போகும், தம்முடைய ஜீவியத்தின் அவலமான முடிவைக்குறித்து கர்த்தர் எப்படிச் சீஷர்களுக்கு வெளிப்படுத்தினார் என்பது குறித்தும், மூன்றாம் நாளின் தம்முடைய உயிர்த்தெழுதல் பற்றி எப்படி அவர்களுக்கு நிச்சயம் அளித்தார் என்பது குறித்தும் நமக்குத் தெரிவிக்கின்றது. பின்னர் தம்முடைய சீஷர்களும் இதே மாதிரியான உபத்திரவங்களுக்குள் கடந்துப் போவார்கள் என்றும், இம்மாதிரியான சோதனைகளின் கீழ் அவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு ஆலோசனை வழங்கி, இப்படி உண்மையாய் இருப்பதின் விளைவாக, தாம் இரண்டாம் வருகையில் வரும்போது, தம்முடைய இராஜ்யத்தின் மகிமையில் திரளான பலனைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் அவர்களுக்கு நிச்சயமும் அளித்தார்.

27-ஆம் வசனமானது ஒரு தீர்க்கத்தரிசனமாகும். இப்பாடம் காட்டுவதுபோன்று இந்தத் தீர்க்கத்தரிசனம் உடனடியாக நிறைவேறவும் செய்தது.

28 முதல் 36 வரையிலான வசனங்கள். இங்குப் பதிவு செய்யப்பட்டுள்ள சம்பவம் ஒரு தரிசனமே ஒழிய, உண்மையாய் நடந்தது அல்ல என்று கர்த்தருடைய வார்த்தைகளே நிரூபிக்கின்றது; "அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது, இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒரு வருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார் " (மத்தேயு 17:9).

இந்தத் தரிசனத்தின் பொருளானது, அப்போஸ்தலனாகிய பேதுருவினால் தெளிவாகச் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. இதனை வரவிருக்கின்ற கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் மகிமைக்கான "தரிசனமாகப்" பேதுரு குறிப்பிடுகின்றார். "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும், மகிமையையும் பெற்றபோது, அவரோடே கூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக்கேட்டோம்" (2 பேதுரு 1:16-18).

"தரிசனம்" என்கிற போது, அது கிறிஸ்துவினுடைய ஆயிரம் வருஷம் இராஜ்யத்தின் மகிமைக்கான அடையாளமான காரியமாக இருக்கின்றது. கர்த்தரும், அவருடைய வஸ்திரமும் மாறுவது என்பது, வரவிருக்கின்ற அவருடைய தனிப்பட்ட மகிமைக்கான அடையாளமாக இருக்கின்றது. மோசே மற்றும் எலியாவின் மகிமையான தோற்றம் என்பது, கர்த்தருடன்கூட அவருடைய இராஜ்யத்தின் மகிமையில் காணப்படும் மனுஷர் மத்தியிலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு கூட்டத்தாருக்கு அடையாளமாக இருக்கின்றது; இந்த இரண்டு வகுப்பரில், ஒரு வகுப்பார் இராஜ்யத்தின் பூமிக்குரிய பாகமாகவும், இன்னொரு வகுப்பார் பரலோகத்திற்குரிய பாகமாகவும் காணப்படுவார்கள். மோசே பூமிக்குரிய பாகத்திற்கு அடையாளமாக இருக்கின்றார் மற்றும் எலியா ஆவிக்குரிய அல்லது பரலோகத்திற்குரிய பாகத்திற்கு அடையாளமாக இருக்கின்றார். அடையாளத்தில் இங்குக் குறிப்பிடப்படும் "தரிசனமானது," 27-ஆம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஸ்தாபிக்கப்பட்டுள்ள இராஜ்யத்தை அடையாளப்படுத்துகின்றது. "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்யத்தைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்கா 9:27). இது உண்மையான மோசேயும், எலியாவும் அல்ல. ஏனெனில், இது "தரிசனமே" ஒழிய, உண்மையாய் நடந்தது அல்ல (யூதா 1:9; ரோமர் 5:12;

பிரசங்கி 9:5; சங்கீதம் 146:4; யோபு 14:21; யோவான் 3:13; அப்போஸ்தலர் 2:34; சங்கீதம் 90:3). இவர்கள் உயிர்த்தெழுவதற்கான ஏற்றவேளை இன்னமும் வரவில்லை. "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (எபிரெயர் 11:40). கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் இராஜ்யத்தின் ஆவிக்குரிய பாகமாகிய, சுவிசேஷ யுக சபையின் முழுமையான ஸ்தாபித்தல் வரையிலும், முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் சம்பவிக்கக் காத்துக் கொண்டிருக்கின்றது.

31-ஆம் வசனமானது இந்த மூன்று மகிமையானவர்களின் சம்பாஷணையின் பொருளைக் குறித்துப் பதிவு செய்கின்றது. அதாவது, சீக்கிரத்தில் எருசலேமில் நிறைவேற்றப்பட போகின்ற கர்த்தர் சிலுவையில் அறையப்படுதல் அதாவது, நமக்கான ஈடுபலிச் செலுத்தப்படுதல் எனும் மாபெரும் செயலைக் குறித்த இவர்களுடைய சம்பாஷணையின் பொருளைக்குறித்துப் பதிவு செய்கின்றது.

இந்தத் "தரிசனத்திற்கான" நோக்கம் அநேகமாக இரண்டு விஷயங்களுக்காக இருக்க வேண்டும். ஒன்று கர்த்தரை ஆறுதல்படுத்துவதற்காகவும், பெலப்படுத்துவதற்காகவும், மற்றொன்று அவரால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகிய சாட்சிகளை வெளிச்சமூட்டுவதற்குமாகும். கர்த்தருடைய மரணம் குறித்துக் கர்த்தருடன் பண்ணப்பட்ட சம்பாஷணையானது, அநேகமாக சீஷர்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது நடைபெற்றப்படியால் (32-ஆம் வசனம்), இது விசேஷமாக அவருடைய ஆறுதலுக்காகவே நடந்தது. கர்த்தருடைய ஜெபத்திற்குப் பதிலளிக்கும் வண்ணமாகவே "தரிசனம்" வந்தது. மேலும், சீஷர்கள் இதனை அப்பொழுது புரிந்துக்கொள்ளவில்லை என்றாலும் பிற்பாடு, இது அவர்களுக்கு ஆசீர்வாதமான தூண்டுதலாக/உற்சாகமாகக் காணப்பட்டது, இது நமக்கும் இப்படியாகவே காணப்பட வேண்டும். எனினும், (உலகம் உண்டானது முதல் சகல பரிசுத்த தீர்க்கத்தரிசிகள் வாயிலாக உரைக்கப்பட்ட இராஜ்யம் மற்றும் அதன் மகிமை தொடர்பான) "அதிக உறுதியான தீர்க்கத்தரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (2 பேதுரு 1:19; அப்போ. 3:19-21). "தரிசனம்" இராஜ்யம் தொடர்பான தெளிவான மற்றும் புத்துணர்வுள்ள அடையாளப் பார்வையாக இருப்பினும், "அதிக உறுதியான தீர்க்கதரிசனம்" இல்லையெனில், இத்தரிசனம் புரிந்துக்கொள்ளப்படாததாய் இருக்கும்.

34, 35-ஆம் வசனங்களில், நமது கர்த்தர், தேவனுடைய குமாரன் என்றும், கர்த்தர் தேவனுக்குப் பிரியமாய் இருக்கின்றார் என்றும் வானத்திலிருந்து ஒரு குரல் சான்று பகர்ந்ததைப் பார்க்கலாம். இவருடைய பிறப்பின்போது, வானதூதர்கள் இவரைக்குறித்து அறிவித்தார்கள்; இவருடைய ஞானஸ்நானத்தின்போது, இவர் தேவனால் அங்கீகரிக்கப்பட்டுள்ள குமாரன் என்று இவரைக்குறித்து வானத்திலிருந்து ஒரு சத்தம் அறிவித்தது; மேலும், இப்பொழுது இவருடைய பூமிக்குரிய ஜீவியம் முடிவை நோக்கி நெருங்குகையில், இவர் மீண்டுமாக தேவனுக்குப் பிரியமாகவும், அங்கீகரிக்கத்தக்கதாகவுமுள்ள குமாரனாக இருப்பது அறிவிக்கப்பட்டது.

36-ஆம் வசனத்தில், "அந்தச் சத்தம் உண்டாகையில் இயேசு ஒருவரே காணப்பட்டார்" என்று காணப்படுகின்றது. "தரிசனமும்" சத்தமும், மேகமும் கடந்துப்போனது; மற்றும் எல்லாம் இயல்பான நிலைக்குத் திரும்பினாலும், இந்தக் குறிப்பிடத்தக்க சம்பவத்தின் அர்த்தமானது, சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு, அவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டு, புரிந்துக்கொள்ளப்படுவதுவரையிலும், விரிவடைவதற்குக் காத்திருக்க வேண்டியிருந்தது.

இப்படியாக, தேவனுடைய மகிமையாயுள்ள இரக்கத்தின் திட்டம் பற்றின ஆசீர்வாதமான சத்தியங்கள், கற்பனையின் மேல் கற்பனையினாலும், பிரமாணத்தின்மேல் பிரமாணத்தினாலும், அவருடைய சீஷர்களின் மனங்கள் மற்றும் இருதயங்கள் மீது ஆழமாகப் பதியவைக்கப்படுகின்றது. மேலும், நாம் அவருடைய வார்த்தைகளுடன் நம்மை அதிகமதிகமாக ஐக்கியத்திற்குள் கொண்டு வரும்போது, நம்மிடத்திலுங்கூட இது ஆழமாகப் பதியக்கூடியதாயிருக்கும்.

**ஆமென்!**

---

# நினைவுகூருதல் இராப்போஜனம்

கிறிஸ்தவர்கள் மத்தியில் புனித வெள்ளியை, நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலாகவும், ஈஸ்டர் ஞாயிறை, அவரது உயிர்த்தெழுதலுக்கான நினைவுகூருதலாகவும் ஆசரிப்பது வழக்கமாய்க் காணப்படுகின்றது. ஆனால் ஆதித் திருச்சபையாரைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு ஞாயிறும் நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான நினைவுகூருதலாக அவர்களுக்குக் காணப்பட்டது; அவர் சிலுவையில் அறையப்பட்ட அதே நாளின் முந்தின மாலையில், கடைசி இராப்போஜனம் புசிக்கப்பட்டதில் அடையாளப்படுத்தப்பட்டதான அவரது மரணமானது, வருடந்தோறும், யூதருடைய பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டதற்கான நிஜமாக, எபிரெயர்களினுடைய சந்திர காலக்கணக்கிடுதலின்படியான முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்று ஆசரிக்கப்பட்டு வந்தது. "பூர்வப்பாதைகளினிடத்திற்குத்" திரும்பிடுவதற்கான விருப்பத்தில், உலகத்தின் ஒவ்வொரு திசைகளிலும் காணப்படுகின்றதான அநேக வாட்ச் டவர் வாசகர்கள், ஆதித் திருச்சபையினுடைய இந்த வழக்கத்தின்படி கைக்கொள்கின்றனர். இந்த வழக்கத்தின் ஏற்புடைமை குறித்து, இதை மனித கணிப்பின்படி, மனித சபல புத்திபடி (அ) கொள்கையின்படி காலாண்டுதோறும் (அ) மாதந்தோறும் (அ) வாரந்தோறும் (அ) தினந்தோறும் ஆசரிப்பதற்கு நவீன வழக்கங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு ஒன்றிரண்டு காரணங்களை வைத்திருப்பவர்களால்கூடக் கேள்விகேட்க முடியாது.

அந்தக் கொள்கைகளில் இரண்டு மாத்திரமே, வேதவாக்கியங்களின்படியானது என்று வலியுறுத்திக் கூறப்படுகின்றது மற்றும் அவைகளுக்கு மாத்திரமே பதில் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாய் உள்ளது.

(1) கர்த்தருடைய மரணமானது தினந்தோறும் நினைவுகூர்ந்து ஆசரிக்கப்பட வேண்டும் என்கிறவர்கள், "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26) எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை மாத்திரமே சுட்டிக்காட்டுவார்களே ஒழிய, வேறு எதையும் இல்லை. இவர்கள் "போதெல்லாம்" எனும் இந்த வார்த்தைக்குக் கொடுக்கும் அர்த்தத்திற்கு, ஒருநாளில் மூன்று (அ) நான்குமுறை அல்லது ஒவ்வொரு மணி நேரமும்கூடப் பொருந்தும் என்பதை மறந்துவிடுகின்றனர். "என்னை நினைவுகூரும்படி இதைச் (வருடந்தோறும்) செய்யுங்கள்" என்று நமது கர்த்தர் கூறினபோது, "இதைச் செய்யுங்கள்" என்பதற்கே அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 11:25). கர்த்தருடைய சீஷர்கள் யூதர்களாய் இருந்தபடியால், அவர்கள் வருடந்தோறும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பஸ்கா ஆட்டுக்குட்டியினை அடித்து, புசிக்கும் வழக்கம் கொண்டிருந்தனர் மற்றும் இதுமுதல் தம்மை, ஆட்டுக்குட்டியினுடைய நிஜம் என்றும், தம்முடைய மரணமானது, ஆட்டுக்குட்டியினுடைய மரணத்திற்கான நிஜம் என்றும், முதற்பேறானவர்களின் சபையைக் கடந்துபோகுதல் என்பது (அ) மரணத்தினின்று, ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்க்கப்படுதலானது இஸ்ரயேலுடைய முதற்பேறானவர்களின் தப்புவிக்கப்படுதலுக்கு நிஜம் என்றும் அவர்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டுமென்று நமது கர்த்தர் விரும்பினார் (எபிரெயர் 12:23).

"இதைச் செய்யுங்கள்;" அதாவது பஸ்காவினை ஆசரியுங்கள் என்பது, யூதர்களுக்கான நியாயப்பிரமாணத்தினுடைய கட்டளையாக இருக்கின்றது; ஆனால் தம்முடைய பின்னடியார்களை நியாயப்பிரமாண உடன்படிக்கையினின்று விடுவித்து,புதியதான உடன்படிக்கையின் கீழ் அவர்களை ஏற்றுக்கொண்டபோது, அவர் "இதைச் செய்யுங்கள்" என்றும், வேறு எதையாகிலும் செய்யுங்கள் என்றும் கட்டளையிடவில்லை, மாறாக அன்பு செய்யவே சொன்னார்; இது புதியதான உடன்படிக்கையினுடைய நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது என்று கர்த்தர் தெரிவித்துள்ளார். ஆனால் அவர் பின்வருமாறு கூறினார்: "நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் (வருடந்தோறுமே ஒழிய, அடிக்கடியல்ல, மற்றும் யூதர்கள் தங்கள் பஸ்காவினை ஆசரிக்கும் எண்ணிக்கைக்குக் குறைவாயுமல்ல, அதிகமாகவுமல்ல) (நிழலான பஸ்காவையும் மற்றும் அடித்து, புசிக்கப்பட்டதான நிழலான ஆட்டுக்குட்டியையும் நினைவுகூரும்படியாய் இல்லாமல், மாறாக) என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்;" அதாவது யாருடைய மரணத்தினாலும், இரத்தத்தினுடைய தெளிக்கப்படுதலினாலும், நீங்கள் மரணத்தினின்று, ஜீவனுக்குள் கடந்து போயுள்ளீர்களோ மற்றும் யாருடைய மாம்சத்தை (அடையாளமான) விதத்தில் புசித்ததன் வாயிலாக, நீங்கள் இருளின், பாவத்தின், ஒடுக்குதலின்

இராஜ்யத்தினின்றும், (பார்வோன் நிழலாய்க் காணப்படுகின்றதான) சாத்தானுடைய ஆளுகையினின்றும், மோசே மற்றும் யோசுவா அடையாளப்படுத்தும் தேவனுடைய அபிஷேகிக்கப்பட்டவருடைய வழிநடத்துதலின் கீழ் பரமகானானுக்குப் பிரயாணிப்பதற்கான பலத்தைப் பெற்றுக்கொள்கின்றீர்களோ அவரை — "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதான தேவ ஆட்டுக்குட்டியினை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்."

(2) கர்த்தருடைய மரணத்தை ஞாயிறுதோறும் ஆசரிப்பவர்கள், அந்த நாளானது, முற்றிலும் இன்னொரு காரியத்தினை — மரணத்திலிருந்தான நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலை நினைவுகூரும் நாளாக இருக்கின்றது என்பதை நன்கு அறிவார்கள்; எனினும் இவர்கள் ஆதித் திருச்சபையாரால் வாரத்தின் முதல்நாள்தோறும் செய்யப்பட்டு வந்த "அப்பம் பிட்கும்" காரியத்தினால், தங்களது வழக்கத்தினை (ஞாயிறுதோறும் கர்த்தருடைய மரணத்தை நினைவுகூரும் வழக்கத்தினை) நியாயப்படுத்துகிறவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் அவசரப்பட்டு, தவறுதலாய் அர்த்தம் கொண்டுள்ளனர்; அந்த "அப்பம் பிட்குதலானது" சாதாரணமான உணவுகளாக (அ) அன்பின் விருந்துகளாகக் காணப்பட்டு, இரண்டு காரணங்களுக்காகப் புசிக்கப்பட்டன; பசிக்காகப் புசிக்கப்பட்டது மற்றும் இன்னும் விசேஷமாக அவர்கள் கர்த்தருடைய உயிர்த்தெழுதலை நினைவுகூரும்படிக்கு அந்நாளில் ஒன்றுகூடினபடியாலும் புசித்தார்கள்; ஏனெனில் இரண்டு தருணங்களின் போது, அவரது சம்பாஷணையும், வேதவாக்கியங்களை அவர் விளக்கினதும், அவர்களது பயங்களைப் புறம்பாக்கிப்போட்டு, நம்பிக்கையைத் தூண்டிவிட்டு, வெட்கப்படுத்தாத நம்பிக்கையினால் அவர்களது இருதயங்களை, அவர்களுக்குள்ளே கொழுந்துவிட்டு எரியப்பண்ணினபோது, அவர் அப்பம் பிட்குதல் மூலம் தம்மை, அந்தக் குறிப்பிட்ட நாளில் (ஞாயிறு) அவர்களுக்கு வெளிப்படுத்தினார் (லூக்கா 24:32; உரோமர் 5:5). கர்த்தர் பரமேறிப்போவதற்கு முன்னதாக, மீண்டுமாக இரண்டு தருணங்களில், சாதாரணமான உணவு உட்கொண்டிருக்கையில், தம்மைச் சீஷர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்களுக்குப் போதித்து, அவர்களை ஊக்குவித்தார்; மற்றும் அநேகமாக இந்த இரண்டு தருணங்களும், வாரத்தினுடைய முதல்நாளில்தான் நடந்திருக்கும் (யோவான் 20:26; 21:13).

ஆகையால் ஆதித் திருச்சபையினர் கர்த்தரோடுகூட ஆவியில் ஐக்கியம் கொள்ளத்தக்கதாக, வாரத்தின் முதல்நாள்தோறும் ஒன்று கூடிடும் வழக்கத்தினை ஏற்படுத்தினதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; மற்றும் தங்களுக்குக் கிடைத்த முதலாம் அனுபவத்தையும், இருதயம் கொழுந்துவிட்டெரிந்ததையும் குறித்த நிகழ்வுகளையும், நினைவுகளையும் தங்கள் மனங்களுக்கு முன்பாக உற்சாகமூட்டும் விதத்தில் நிறுத்தி, நினைவூட்டுகிறதான "அப்பம் பிட்குதலையும்" மற்றும் வேறே அம்சங்கள் எதையேனும் அவர்கள் தொடர்ந்து செய்யும் காரியத்திலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் இந்த வழக்கத்திற்கும், "நமது பஸ்காவாகிய கிறிஸ்து" அடிக்கப்பட்டபடியால் ஆதிக் கிறிஸ்தவர்கள் முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கருதின வருடந்தோறுமான பஸ்காவிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை (1 கொரிந்தியர் 5:7, 8). நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து, தம்முடைய பலியை, தம்முடைய மாம்சம் மற்றும் தம்முடைய இரத்தத்திற்கான அடையாளங்களாகிய அப்பம் மற்றும் திராட்சரசத்தினால் அடையாளப்படுத்துகின்றார்; ஆனால் அன்பின் விருந்துகள் (அ) "அப்பம் பிட்கப்படுதல்" குறித்துப் பதிவு செய்யப்பட்டுள்ள பகுதிகளில், திராட்சரசம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை; இன்னுமாக இந்த அப்பம் பிட்குதல்களானது, தலையாகிய நமது கர்த்தருடைய மற்றும் அவரது சரீரமாகிய சபையினுடைய பாடுகள் மற்றும் மரணத்திற்கான நினைவுகூருதல்களாக ஆசரிக்கப்பட்டன என்று எந்தவொரு குறிப்புக்கூட இடம் பெறுவதுமில்லை.

கிறிஸ்தவர்களாகிய நாம், யூதருடைய பஸ்காவையும், யூதர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டதையும் ஆசரித்துக்கொண்டாடுவதில்லை; நாம் நிழலான ஆட்டுக்குட்டியை அடித்து, புசிப்பதுமில்லை. யூதர்கள் விஷயத்தில் (நீசான்) மாதத்தின் 10-ஆம் தேதியன்று ஆட்டுக்குட்டி தெரிந்தெடுக்கப்படுவதும், 14-ஆம் தேதியன்று ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதுமானவைகள், 15-ஆம் தேதி துவங்கி, ஒருவாரமளவும் நீடிக்கும் பஸ்கா பண்டிகையினின்று வேறானதாகும். யூதர்கள் விசேஷமாகப் பண்டிகையை ஆசரித்தனர்; நாம் தேவனுடைய மாபெரும் ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தை நினைவுகூருகின்றோம் மற்றும் ஆயிரவருட காலையின் விடுதலைக்காகக் காத்திருப்பவர்களாக, இந்தச் சுவிசேஷ யுக இரவில், நாம் நம்முடைய ஆட்டுக்குட்டியினை, துன்பங்கள் எனும் கசப்பான கீரைகளுடன், தற்போது புசிப்பதன் விளைவாக வரும் முழுமையான மற்றும் நித்தியமான சந்தோஷத்திற்கு நிழலாக மாத்திரமே யூதர்களுடைய ஏழு நாட்கள் கொண்ட பண்டிகைக் காணப்படுகின்றது என்று நாம் புரிந்திருக்கின்றோம். மாம்சீக இஸ்ரயேலினுடைய குருட்டுத்தன்மையானது விலக ஆரம்பிக்கும்போது, கிறிஸ்துவே பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய

நிஜம் என்றும், அவரது மரணத்தின் வாயிலாக கடந்துவருகின்றதான ஆசீர்வாதங்களானது, பஸ்கா ஆசீர்வாதங்களுக்கான நிஜங்கள் என்றும், புரிந்துகொள்வார்கள்.

தேதியைக் கணக்கிடுதலில், யூதருடைய முறைமையையே, அதாவது நமது கர்த்தரும், ஆதிச் சபையும் பின்பற்றினதுமான முறைமையை நாம் பின்பற்றுகின்றோம் மற்றும் அது எளிமையானதும்கூட. யூதருடைய (மதச்சார்புடைய) வருடமானது இளவேனில் — இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பின்னரான அமாவாசை அன்று துவங்குகின்றது. இதிலிருந்து யூதர்கள் தங்கள் மாதத்தினை எண்ணத் துவங்குவார்கள். இந்த வருடம் இளவேனிற் அமாவாசையானது, மார்ச் 26-ஆம் தேதியில் காணப்படுகின்றது மற்றும் இந்த முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியானது, ஏப்ரல் 8-ஆம் தேதியாகும். ஆனால் எபிரெய கணக்கிடுதலின்படி ஒருநாளானது, முந்தின நாளின் மாலை 6 மணியிலிருந்து துவங்குவதினால், நீசான் மாதம் 14-ஆம் தேதியானது, ஏப்ரல் 7-ஆம் தேதி, ஞாயிறு, மாலை 6 மணிக்குத் துவங்குகின்றதாய் இருக்கிறது. ஆகையால் அந்த நாள் மாலை 8 மணியளவானது கர்த்தருடைய இராப்போஜனத்தினுடைய ஆண்டு நிறைவு நாளாய்க் காணப்படுகின்றது.

அந்த வேளையில், நம்முடைய வழக்கத்தின்படியே அலிகெனியிலுள்ள (Allegheny) சபையானது, சரித்திரத்தின் பக்கங்களில் பதிவுபண்ணப்பட்டுள்ளதான மாபெரும் நிகழ்வின் நினைவுகூருதலை ஆசரிப்பார்கள்; அதாவது மற்றவர்களுக்குப் பெரிதாய்த் தோன்றாததும், ஆனால் அனைவருக்குமாய்க் கொடுக்கப்பட்டதான மீட்கும்பொருளில் விசுவாசம் உள்ளவர்களுக்கு மிகவும் பெரிதாய்த் தோன்றுகிறதுமான மாபெரும் நிகழ்வின் நினைவுகூருதலை ஆசரிப்பார்கள். அந்த வேளையில் மாநாட்டிற்கோ (அ) பொதுவான கூடுகைகளுக்கோ எந்த ஏற்பாடுகளும் நாங்கள் செய்யவில்லை; ஆனால் அலிகெனி (Allegheny) பட்டணத்தைக் கடந்துபோகிறவர்கள் எப்போதும் வரவேற்கப்படுவார்கள். இதேமாதிரி சிதறி பல இடங்களில் காணப்படும் ஒரே மனமுடையவர்கள் செய்திடுவதற்கு நாம் பரிந்துரைக்கின்றோம்; அதாவது தங்கள் அருகே குடிக்கொண்டிருக்கும் சகோதர சகோதரிகளுடன் ஒன்றுகூடிடுவதற்கும், 18 நூற்றாண்டுகளுக்கு முன்னதாக நமது கர்த்தரினால், நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதான மாதிரியினுடைய எளிமைக்கு முடிந்தமட்டும் ஒப்பாக ஆசரித்திடுவதற்கும் நாம் பரிந்துரைக்கின்றோம்.

அப்பம் மற்றும் திராட்சரசமானது, நம் நிமித்தமான நமது கர்த்தருடைய பலியினை அடையாளப்படுத்துகிறதாக மாத்திரம் இராமல், அவரது சரீரமாகிய (அ) சபையாகிய நாம் ஒரே அப்பத்தின் அங்கத்தினர்களென இப்பொழுது மற்றவர்களுக்காகப் பிட்கப்படுவதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இப்படியாய் நாம் கர்த்தரோடு பலியில் பங்கடைபவர்களாகவும், பின்னர் அவரது மகிமையில் பங்கடைபவர்களாகவும் இருப்போம் — "கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (உரோமர் 8:17).

*****

R 1793

# நினைவுகூருதல் அடையாளங்களின் ஆராதனை ஒழுங்கு

நினைவுகூருதல் இராப்போஜனம் ஆசரிப்புத் தொடர்புடைய விஷயத்தில் ஆராதனை ஒழுங்குமுறை என்னவென்று சகோதரன் ஒருவர் கேட்டு எழுதியுள்ளார் மற்றும் இது அநேகர் அறியவிரும்பும் காரியமாய் இருப்பதினால், நம்முடைய பதிலின் ஒரு பகுதியை இங்குப் பின்வருமாறு வெளியிட்டுள்ளோம்:

ஆராதனை/கூட்டம் துவங்கின பின்பு, அங்கிருக்கும் தகுதி வாய்ந்த ஒருவர் இக்கட்டளையினுடைய முக்கியத்துவம் குறித்துச் சிறுபிரசங்கம் பண்ணுவாராக. அடுத்து அடையாளங்களினுடைய முக்கியத்துவம் குறித்துப் பிரசங்கம் பண்ணும்விதமாக அப்பத்தைப்பற்றி துவங்கி, அது எதை அடையாளப்படுத்துகின்றது என்று தெரிவித்து, சூழ்நிலைக்கேற்ப விரிவாக அல்லது சுருக்கமாக, அங்குச் செய்யப்படுகிறவைகளின் உண்மையான அர்த்தத்தினை முன் வைத்திடுவதற்கு முயல்வாராக. கர்த்தர் நினைவுகூருதலை நிறுவினபோது, அவர் முதலாவதாக ஸ்தோத்திரித்தார் என்று குறிப்பிடுங்கள். பின்னர் ஒன்றில் நீங்களே ஸ்தோத்திரம் செலுத்துங்கள் அல்லது அங்கிருக்கும் வேறு யாரையாகிலும் ஸ்தோத்திரம் செலுத்த சொல்லுங்கள்; பின்னர்ப் பின்வரும் வார்த்தைகள் சிலவற்றைச் சொல்லுங்கள்:- பஸ்கா இராப்போஜனத்தை, நிழலான ஆட்டுக்குட்டியினைப் புசித்தப் பிற்பாடு, நமது கர்த்தர் "அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக்கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்றார். வார்த்தைக்குப் பொருத்தமாக, அப்பத்தைப் [எபிரெயர்களிடமிருந்து வாங்கின புளிப்பற்ற அப்பத்தை (அ) புளிப்பற்றவைகளான சோடா ரொட்டி/பிஸ்கோத்து (Soda Biscuits)] பிட்டுக்கொள்ளுங்கள் மற்றும் கூட்டத்தினுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப அதைப் பரிமாறுகிறவர்களின் கைகளில் கொடுங்கள் (அ) நீங்களே பரிமாறுங்கள்.

தியானத்திற்கென்று கொஞ்சம் நேரம், அமைதியாக விடப்படுவது ஏற்றது என்று நாம் எண்ணுகின்றோம். பின்னர்ப் "பாத்திரமானது" அடையாளப்படுத்துகின்ற காரியத்திற்காக யாரேனும் ஒருவர் ஸ்தோத்திரம் செலுத்துவாராக. அடுத்துச் சொல்ல வேண்டியதாவது, "அவர் அந்தப்படியே, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள். இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார்." [ஒன்றில் grape juice/திராட்சப்பழச்சாற்றை அல்லது திராட்சப்பழச்சாற்றுடன் மிகக் கொஞ்சமான (wine) திராட்சரசம் மற்றும் சர்க்கரைக் கலவையைப் பயன்படுத்துவது சிறந்தது என்று நாம் அறிவுறுத்துகின்றோம்; திராட்சரசம்/wine சேர்க்கையில், அதன்/alcohol வாசனையோ/சுவையோ கண்டுபிடிக்கமுடியாத அளவுக்கு மிகவும் சிறிய அளவில் பயன்படுத்தப்பட வேண்டும். இப்படிச் செய்வது என்பது கடந்த காலங்களில் மதுபானங்கள்மீது பிரியம் கொண்டிருந்தவர்களுக்குப் பாதுகாப்பாய்க் காணப்படும்]. இந்த அடையாளச் சின்னத்தைப் பரிமாறின பிற்பாடு, மீண்டுமாக அமைதியாய்ச் சிந்தனை செய்யத்தக்கதாகக் கொஞ்சம்நேரம் விடுங்கள் மற்றும் அடுத்துக் கூறவேண்டியதாவது: "அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பிற்பாடு, புறப்பட்டுப்போனார்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. நாமும் இப்படியாகவே செய்வோமாக. அந்த முக்கியமான இரவில், கர்த்தரைக் கெத்செமனே தோட்டத்தினிடத்திற்கும், சீஷர்களோடு அவர் ஜெபம் பண்ணினதையும், விழித்திருந்து ஜெபம்பண்ணும்படிக்கு எச்சரித்ததையும், அவர் காட்டிக் கொடுக்கப்பட்டதையும், கைது செய்யப்பட்டதையும், விசாரிக்கப்பட்டதையும், சிலுவையில் அறையப்பட்டதையும் குறித்துச் சிந்தையில் பின்தொடர்ந்திடுவோமாக.

பிரசங்கம் பண்ணிடுவதற்கு/செய்தி கொடுப்பதற்குப்பதிலாக, ரீபிரிண்ட்ஸ் 1289 மற்றும் 1786-லிருந்து வாசிப்பது சில சமயங்களில் நலம் பயக்கின்றதாய்க் காணப்படும்.

---

R 1794

# "நமது கர்த்தருடைய நிழலான வெற்றி"

## மத்தேயு 21:1-17; லூக்கா 19:29-48; யோவான் 12:12-19; மாற்கு 11:1-11.

"ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்."—மாற்கு 11:9.

இப்பாகத்தில் நம்முடைய மனங்களை, நமது கர்த்தருடைய மாம்ச ஜீவியத்தின் கடைசி நாட்களில் நடந்திட்ட வேதனையான சம்பவங்களுக்கும், அவருடைய மனுஷீக ஜீவன் அவர் சிலுவையில் அறையப்படுவதன் மூலமாய் முடிவடைந்ததற்கும், பின்னர் மரணம் மற்றும் பாதாளத்தின் திறவுகோல்களை உடையவராகவும், இரட்சிப்பதற்கும் வல்லமையுள்ளவராகவும் காணப்பட்ட உயிர்த்தெழுந்த கர்த்தரிடத்திற்கும் படிப்படியாகக் கொண்டுச் செல்கின்றது. முந்தின பாகத்தில் ஜனங்கள் மத்தியில் அவருடைய அற்புதங்களினால் ஈர்க்கப்பட்டு அவருடைய போதனைகளைக் குறித்து ஆச்சரியமடைந்து, அவருடைய போதனைகளினால் கவரப்பட்டு காணப்பட்ட ஜனங்கள் மத்தியில் அவர் பிரபலமடைந்து வருவது அதிகரித்து வருவதைப் பார்த்தோம். ஜனங்களோடுகூட, அவருடைய வாயினின்று புறப்பட்டு வந்த கிருபையான வார்த்தைகளினிமித்தம் நாமும் ஆச்சரியமடைந்து இருந்தோம், மற்றும் அவருடைய வார்த்தைகளை நாம் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தோம், மேலும் தேவனுடைய ஆவியானது, நமக்கு அவருடைய ஆலோசனையாகிய தைலத்தை அளித்தபோது, நம்முடைய இருதயங்கள் நமக்குள்ளாக் கொழுந்து விட்டு எரிந்தன. இப்பொழுது நாம் அவருடைய மனுஷீக கடைசி சில நாட்களுக்குள்ளாக, அவரோடுகூட மனதளவில் பிரவேசிக்கையில் அந்த வேதனையான சம்பவங்கள் நம்முடைய இருதயங்களை, நமக்காக அனைத்தையும் இலவசமாய்ப் பலியாக்கின. அவருடைய ஐசுவரியமான அன்போடும், பரிவோடும் நெருங்கின உறவிற்குள்ளாகவும், புரிந்துகொள்ளுதலுக்குள்ளாகவும் கொண்டு வருவதாக.

அவர், தாம் மேசியா என்று உரிமைப்பாராட்டின விஷயத்தின் உண்மைக்குச் சாட்சி பகர்ந்திட்ட அவருடைய 3½ வருடக் காலப்பகுதிக்கொண்டதும், லாசருவை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பினதோடு நிறைவடைந்ததுமான, அவருடைய பொதுப்படையான போதனைகளும், வேலைகளும், வெற்றிகரமாய் முடிந்தது போன்று காணப்பட்ட தோற்றமானது, அவருடைய சீஷர்கள் மற்றும் இஸ்ரயேலர்களில் பலரின் நம்பிக்கைகளை உயிரோட்டம் அடையச் செய்தது; அதாவது இப்பொழுது தங்கள் இராஜா, தங்கள் மேசியாவாக உண்மையாய் வந்துள்ளார் என்றும், தீர்க்கத்தரிசிகளால் முன்னுரைக்கப்பட்டிருந்த இஸ்ரயேலின் மகிமை சீக்கிரத்தில் காணப்படும் என்றும் எண்ணினார்கள். இப்படியாகப் பொது ஜனங்களுடைய மனநிலை இருக்கையில், கர்த்தர், இராஜா ஸ்தானத்தை எடுக்க பொதுப்படையாக முயற்சிப்பதன் மூலம், சகரியா 9:9-ஆம் வசனத்தின் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றுவதற்காக தமக்கு வாய்ப்பு இருப்பதைக் கண்டார். சூழ்நிலைகள் சாதகமாய் இருந்தது மாத்திரமல்லாமல் வேளையும் வந்திருந்தது.

தேவன் அவர்களுடைய பிதாக்களுடன் பண்ணின உடன்படிக்கையின்படி, இராஜ்யத்தின் சுவிசேஷமானது முதலாவதாக யூதர்களுக்கே கொடுக்கப்பட்டது. எனினும் அவர்கள் தேசமாகவே சுவிசேஷத்தை உணர்ந்துகொள்ளவோ, ஏற்றுக்கொள்ளவோ மாட்டார்கள் என்பதை முன்னமே தேவன் அறிந்திருந்தார்; மற்றும் ஜனங்களில் கொஞ்சமானவர்கள் மாத்திரமே கிருபயின் உடன்படிக்கைக்குத் தகுதியானவர்களாக இருப்பார்கள் என்றும், மீதமானவர்கள் (அவர்களுடைய தவறானக் கருத்துக்களினாலும், இருதயக் கடினத்தினாலும்) குருடாக்கப்பட்டவர்களாய் இருப்பார்கள் என்றும், மாபெரும் உடன்படிக்கையின் ஆசீர்வாதமானது புறஜாதியார்களில் சிலரால் உணர்ந்துகொள்ளப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆபிரகாமின் சந்ததியாராகக் கருதப்படுவார்கள் என்றும், தேவன் தம்முடைய தீர்க்கத்தரிசி மூலமாய் முன்னறிவித்துள்ளார். இந்தப் புறஜாதியிலிருந்து வந்தவர்கள், மாம்சத்தின்படி ஆபிரகாமின் பிள்ளைகளாய் இராமல், மாறாக ஆவியின்படி, ஆபிரகாமின் விசுவாசத்தைப் பெற்றிருப்பதினால் ஆபிரகாமின் பிள்ளைகளாய் இருப்பார்கள்; ஏனெனில் தேவன் கல்லிலிருந்து கூட ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை எழுப்ப வல்லவராக இருக்கின்றார் என்று இயேசு கூறினார். ரோமர் 9:27; ஏசாயா 10:22,23; ரோமர் 11:7, 11, 12; அப்போஸ்தலர் 13:46; கலாத்தியர் 3:9, 16, 28, 29; மத்தேயு 3:8, 9-ஆம் வசனங்களைப்பார்க்கவும்.

தேவன் இஸ்ரயேல் ஜனங்களுடைய பிதாக்களுடன் பண்ணின இந்த உடன்படிக்கையின் காரணமாகவும், மற்றும் மற்றத் தீர்க்கத்தரிசனங்களுடைய அறிவுறுத்தலின் காரணமாகவும், இயேசு தம்மை மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு முன்னதாக, அவர்களுடைய இராஜாவெனக்

கையளித்தார்/முன்வைத்தார்; ஆயினும் ஜனக்கூட்டத்தார் அவருக்கு இராஜரிகமான வரவேற்புக் கொடுத்து, ஓசன்னாக்கள் கூறி, வந்தனம் சொல்லி வரவேற்றாலும், அவர்களுடைய தவறான போதகர்களால், அவர்களுடைய நிலையற்ற மனங்கள் தடுமாறும் என்றும், எதிர்ப்பு வரும்போது, ஜனங்கள் தாங்கள் கூறின வந்தனங்களுக்கு ஏற்ப நடக்க விருப்பமற்று இருப்பார்கள் என்றும், இன்னும் சில நாட்களுக்குள்ளாக, "இவரைச் சிலுவையில் அறையும்! இவரைச் சிலுவையில் அறையும்!" என்று கூக்குரலிடுவார்கள் என்றும் இயேசு அறிந்திருந்த போதிலும், தம்மை அவர்களுக்கு முன்பாக இராஜாவெனக் கையளித்தார்/ முன்வைத்தார். (யோவான் 12:1, 12, 13; 19:6, 7, 14, 15).

விளைவு/முடிவு என்னவாக இருக்கும் என்று அறிந்திருந்த போதிலும், ஏன் இப்படி இயேசு இராஜரிக அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும், இந்தச் செயல்பாட்டைச் செய்தார்? என்று கேள்வி கேட்கப்படலாம்; வரவிருக்கிற நன்மையான காரியங்களுக்கான மாபெரும் நிழல்களின் ஒரு பாகமாகவே, இச்செய்கை செய்யப்பட்டது என்று நாம் அப்போஸ்தலர்களுடைய போதனைகளை வைத்துக்கொண்டு பதில் தெரிவிக்கின்றோம்.

இப்படியாக இயேசு எருசலேமுக்குள் வெற்றி விஜயம் கொடுத்ததும், அதன் காலக்கணக்குக் காரியமும், யூத யுகத்திற்கான நிஜமாய்க் காணப்படும் இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவில், கிறிஸ்து இராஜாவாக வருவதைச் சித்தரித்துக் காண்பிக்கின்றது; யூத யுகமும், சுவிசேஷ யுகமும், காலங்கள் மற்றும் சம்பவங்கள் விஷயத்திலும் இணையானவைகளாக இருக்கின்றன. இந்த இணையின்படி கி.பி. 1878 எனும் வருடமானது, இந்த யுகத்தின் இராஜாவாகிய நம்முடைய உயிர்த்தெழுந்த கர்த்தர், தம்முடைய மாபெரும் வல்லமையை எடுத்துக்கொள்வதற்கும், தம்முடைய ஆளுகையை ஆரம்பிப்பதற்குமான காலமாக இருக்கின்றது.

இது நிறைவேறியுள்ள உண்மையாக இருக்கின்றபடியினால் இதை நாம் தயக்கம் இல்லாமல், தெரிவிக்கின்றோம். தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர் மற்றும் சபையின் கீழ், பூமியில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான காலம் சமீபித்துள்ளது என்பதற்கு, அதிக உறுதியான தீர்க்கத்தரிசனங்களில், நமக்கு மிகுதியான நிரூபணங்கள் காணப்படுகின்றன. இந்த உண்மைக்கு கிறிஸ்தவர்கள் மாத்திரமல்லாமல், முழு உலகத்தாரும் கூட, கேட்பதற்கும், செவிசாய்க்கும் அளவுக்கும் ஞானமுள்ளவர்களாய்க் காணப்படுவார்களானால், இன்னும் திரளான சத்தியங்களுக்கு வழி நடத்தப்படுவார்கள்.

அநேகர் அவரது வருகை பற்றின தவறான கருத்துக்கள் கொண்டிருப்பதினால், கர்த்தருடைய பிரசன்னம் பற்றின உண்மைக்குக் குருடர்களாய் இருக்கின்றார்கள் என்பது வேதவாக்கியங்களில் தெளிவாய்ச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. அவரை மாம்சத்தில் பார்க்கலாம் என்றும், மாம்ச கண்களுக்குப் புலப்படும் விதத்தில் சொல்லர்த்தமான மேகங்களில், சொல்லர்த்தமான எக்காளத்தின் சத்தத்தினால் அவரது வருகை அறிவிக்கப்பட்டு, அவர் வருவார் என்றும் அநேகர் எதிர்ப்பார்த்திருப்பதினால், அவர் மாம்சத்தில் இல்லாமல், மாறாக மாம்ச கண்களுக்குப் புலப்படாத ஆவியின் ஜீவியாகவும், அதே வேளையில் அதிக உறுதியான தீர்க்கத்தரிசன வார்த்தைகள் மூலமாக, விசுவாசக் கண்களுக்குத் தெளிவாய்ப் புரிந்துக்கொள்ளத்தக்கதாகவும், வந்து இப்போது இருக்கின்றார் என்பதையும் அவர்களால் உணர்ந்துக்கொள்ள முடியவில்லை; மற்றும் முழு உலகத்தின் மீது இருளை இப்பொழுது மிக விரைவாக அளித்துக்கொண்டிருக்கும் உபத்திரவமாகிய மேகங்கள் மத்தியில், அவரது வந்திருத்தலையும், வல்லமையையும் உணர்ந்துக்கொள்ள முடியாமலும் காணப்படுகின்றனர். எனினும் இவைகள் அனைத்தும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்கள் யாவருக்கும், மிக முக்கியமான உண்மைகளாக இருக்கின்றது. "உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்" என்ற வார்த்தைகள் உண்மையுள்ளவர்களாகிய உங்களுக்கே சொல்லப்பட்டுள்ளது (லூக்கா 21:28). அனலுமின்றி, குளிருமின்றிப் போயுள்ள, கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்பவர்களுக்கும், மற்றும் ஒடுக்கப்படுபவர்களின் கூக்குரல்களையும், துன்பப்படுபவர்களின் துயரத்தையும் பொருட்படுத்தாமல், உலக இன்பங்களினால் தங்கள் ஆத்துமாக்களுடைய ஆசைகளைத் திருப்திப் பண்ண நாடுபவர்களாகிய உலகத்தாருக்கும், "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" என்ற வார்த்தைகள் சொல்லப்பட்டுள்ளது (தானியேல் 12:1).

“என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்” (மத்தேயு 21:13) என்று சொல்லி, ஆலயத்தில் காசுக்காரர்களுடைய பலகைகளைக் கவிழ்த்துப்போட்டதான கர்த்தருடைய அதிகாரப் பூர்வமான செய்கையானது, நிழலான செய்கையாகும்; இது இந்த யுகத்தினுடைய முடிவில், தேவனுடைய விசுவாச வீட்டார் என்று அறிக்கைப் பண்ணுகிறவர்களிடத்தில் ஆரம்பிக்கும் நியாயத்தீர்ப்பையும், சத்தியத்தை வியாபாரம் பண்ணுபவர்களுக்கு எதிரான அவருடைய மாபெரும் கோபத்தையும், சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. (மத்தேயு 21:12, 13; 1 பேதுரு 4:17).

பின்னர் ஆலயத்திற்கு அவரோடு வந்திருந்த குருடர்களையும், சப்பாணிகளையும் அவர் சொஸ்தப்படுத்துகின்ற காரியமானது, எவ்வாறு சபையில் ஆவிக்குரியவற்றில் குருடர்களாயும், சப்பாணிகளாயும் இருந்திட்டவர்கள், அவருடைய சுகமாக்கும் தொடுதலினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. “குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்திற்கு வந்தார்கள், அவர்களைச் சொஸ்தமாக்கினார்” (மத்தேயு 21:14; வெளிப்படுத்தல் 3:18, 19).

(இன்றும் கர்த்தரினால் சொஸ்தப்படுத்தப்பட்ட குருடர்களுக்கும், சப்பாணிகளுக்கும் எதிராக பிரதான ஆசாரியர்கள் போன்றதான தலைமை குருக்கள் இருப்பது போன்று) பிரதான ஆசாரியர்கள், புதிய இராஜாவை மகிமைப்படுத்தினவர்களுக்கு எதிராக, தங்களது எரிச்சலை வெளிப்படுத்தினபோது, இயேசு, லூக்கா 19:40-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறினார். ஏன்? காரணம், சகரியா தீர்க்கதரிசியானவர் இந்தக் கெம்பீரிப்பையும், களிகூருதல்களையும் பற்றி முன்னமே கூறியுள்ளார் (சகரியா 9:9). மற்றும் இப்பொழுது வேளை வந்துள்ளது, மற்றும் தீர்க்கத்தரிசனமும் நிறைவேறினது; “சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்;” இது அப்போது நிழலாய் இருந்தது மற்றும் இப்பொழுது நிஜமாய் இருக்கின்றது. கெம்பீரிப்பும், களிக்கூருதலும் அப்போது இருப்பது அவசியமாய் இருந்ததானால், இப்போதும் அவசியமானதேயாகும். இராஜாவை இப்பொழுது தங்கள் மத்தியில் காணப்படுபவராக, அடையாளம் கண்டுகொள்பவர்களாகிய பரிசுத்தவான்கள் மத்தியில் இப்பொழுது காணப்படும் சந்தோஷம் மாபெரியதேயாகும்; மற்றும் அவருடைய வந்திருத்தலையும், இராஜ்யத்தையும் குறித்ததான அவர்களது பறைச்சாற்றுதலானது கெம்பீரிப்பாக இருக்கின்றது; ஆண்டவர், “குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா” (மத்தேயு 21:16) என்று கூறினார். இதன் நிஜமும் இப்படியாகவே இப்பொழுது காணப்படுகின்றது. ஏனெனில் இராஜாவின் வந்திருத்தல் குறித்தும், அவருடைய வல்லமை குறித்துமான அடையாளம் கண்டுக்கொள்ளுதலினால் எழும்பும் ஓசன்னா, இன்றுள்ள பிரதான ஆசாரியர்கள் மற்றும் மத குருமார் வகுப்பாரிடமிருந்து எழும்பாமல், மாறாக சாதாரணமான ஜனங்களாகிய குழந்தைகள் மற்றும் பாலகருடைய வாயிலிருந்தே துதி கேட்கப்படுகின்றது; “தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! ஆளுகை செய்வதற்கும், இப்பொழுது தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டிருப்பவருமாகிய தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!” என்று துதிக் கேட்கப்படுகின்றது.

**ஆமென்!**

---

# கர்த்தருடைய இராப்போஜனம்

## மாற்கு 14:12-26 – மத்தேயு 26:17-30; லூக்கா 22:7-30; 1 கொரிந்தியர் 11:23-25.

## "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்"

வசனங்கள் 12-16; பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்ட, புளிப்பில்லாத அப்பத்தினுடைய முதலாம்நாள், நீசான் 14-ஆம் தேதியாகும் (R1786 -பார்க்கவும்). பஸ்கா பண்டிகையானது 15-ஆம் தேதி துவங்கி, 7 நாட்கள் நீடித்ததாய் இருந்தது; ஒரு நாளானது முந்தினநாளின் சூரிய அஸ்தமனத்தோடு – மாலை 6 மணியோடு துவங்குகின்றது. (யாத்திராகமம் 12:18-20) இந்த ஒரு தருணத்தின்போது புளிப்புப் பயன்படுத்துவதற்குத் தடைப்பண்ணப்பட்டிருந்தது, காரணம் நினைப்பூட்டுதலாய் இருந்திடுவதற்கேயாகும்; அதாவது (1) அப்பம் புளிப்பதற்குக் காத்திருக்க முடியாத அளவுக்கு அவர்கள் எகிப்தினின்று அவசரமாய்ப் புறப்பட்டதற்கு நினைப்பூட்டுதலாகும் (யாத்திராகமம் 12:34, 39) மற்றும் (2) எகிப்தில் அவர்கள் அடைந்த பாடுகளுக்கு நினைப்பூட்டுதலாகும்; இந்த அவர்களின் பாடுகளினிமித்தம் அது சிறுமையின் அப்பம் என்று அழைக்கப்பட்டது. (உபாகமம் 16:3); ஆனால் (3) அதன் பிரதான அர்த்தமாவது, பாவத்தைக் களைந்துபோடுவதாகும்; ஏனெனில் புளிப்பு என்பது கெட்டுப்போகச் செய்கின்றபடியால், அது தூய்மையின்மைக்கு அடையாளமாய் இருக்கின்றது. (1 கொரிந்தியர் 5:6-8; மத்தேயு 16:6) இஸ்ரயேலும் மற்றும் அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று அடைந்த விடுதலையும், பாவம் மற்றும் மரணம் எனும் அடிமைத்தனத்தினின்றுள்ள உலகத்தினுடைய விடுதலைக்கு நிழலாய் இருக்கின்றது என்று பார்க்கும்போது, இந்தப் பண்டிகையானது, ஆயிரவருட யுகத்தின்போதான உலகத்தினுடைய சரியான நிலைமைக்கு நிழலாய் இருக்கின்றது. கிறிஸ்து மூலமாய்ப் பாவம் மற்றும் மரணத்திலிருந்துள்ள மாபெரும் விடுதலையையும், மற்றும் மகா உபத்திரவக் காலத்தையும் அனுபவித்திருக்கும் உலகமானது, அவர்கள் தங்களிடமிருந்து பாவம் எனும் புளிப்பைக் களைந்துபோடுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுவார்கள் மற்றும் தங்கள் விடுதலையைக் குறித்த நன்றியுடன்கூடிய நினைவுகூருதலில், சுயநலம் எனும் புளிப்போடும் இல்லாமல், துர்க்குணம், பொல்லாப்பு எனும் புளிப்போடும் இல்லாமல், மாறாக துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே (தேவனுடைய நன்மைகளில் களிகூருகின்றவர்களாகவும், பங்கெடுக்கின்றவர்களாகவும் இருந்து) பண்டிகையை ஆசரிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுவார்கள்.

கிறிஸ்துவினுடைய பலிக்கு முன்னடையாளமான பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலானது எப்போதும் நீசான் 14-ஆம் தேதியன்று செய்யப்படுகின்றது (யாத்திராகமம் 12:6); ஆகையால் கிறிஸ்துவினுடைய பலியும், அதே நாளில் நடைபெற்று, இவ்விதமாய் நிழல் முன்னுரைத்திருந்தபடி நிறைவேறினது. ஆட்டுக்குட்டியினுடைய பலியானது, "முதற்பேறான சபையினுடைய" இரட்சிப்பிற்கென்றும், இஸ்ரயேல் ஜாதி நிழலாய்க் காணப்படுகின்றதான சர்வ சிருஷ்டிக்குமான அடுத்து சம்பவிக்கயிருக்கும் விடுதலைக்குமான கிறிஸ்துவினுடைய பலிக்கு நிழலாய்க் காணப்பட்டது.

பஸ்கா வாரத்தின்போது, விருந்தோம்பலானது எருசலேமில் கடமையாகக் கருதப்படுகின்றது; ஆகையால்தான் கர்த்தர் மேல்வீட்டறையைக் கேட்டுக்கொண்டபோது, அவ்வறையை அவருக்குக் கொடுத்திடுவதற்கு உரிமையாளர் ஆயத்தத்துடன் காணப்பட்டார். அநேகமாக 14-ஆம் வசனம் தெரிவிப்பது போல அம்மனுஷன் விசுவாசியாக இருந்திருக்க வேண்டும் அல்லது 15-ஆம் வசனம்காண்பிகின்றதுபோன்று, முன்கூட்டியேகூட ஏதேனும் ஏற்பாடுகள் பண்ணப்பட்டிருக்கலாம்.

வசனங்கள் 17-21; யார் பெரியவராய் இருக்க வேண்டும் என்பதற்கான வாக்குவாதம்பற்றி லூக்கா அவர்களால் மாத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ள (லூக்கா 22:24) காரியமானது அநேகமாக அவர்கள் பந்தி அமர்ந்தபோது துவங்கியிருந்திருக்க வேண்டும்; ஒவ்வொருவரும் கர்த்தருக்கு அருகாமையில் காணப்பட வேண்டும் என்று விரும்பினவர்களாகக் காணப்பட்டனர் மற்றும் இப்படியாகக் கொஞ்சம் சுயநலத்திற்கு ஒத்த ஆவியை வெளிப்படுத்துகின்றவர்களாய் இருந்தனர். இந்த ஒரு தருணத்தின்போதுதான் கர்த்தர் மிகவும் நெஞ்சைத்தொடும் வண்ணமாக தாழ்மைக்கான விளக்கம் கொடுத்தார் மற்றும் இந்த மிக அவசியமான பண்பு இல்லையெனில், அவர்களால் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசித்திட முடியாது எனும் உண்மையானது சீஷர்களுடைய மனங்களில் வலியுறுத்தி, பதியவைக்கப்பட்டது. (யோவான் 13:5)

சீஷர்களில் ஒருவன் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்று கர்த்தர் அறிவித்ததின் நிமித்தமாக சீஷர்களுடைய மனோநிலையானது, உடனடியாக தாழ்மை பற்றிக் கொடுக்கப்பட்ட

பாடத்தினுடைய பலனை வெளிப்படுத்தினதாய் இருந்தது. அவர்கள் அதிக தன்நம்பிக்கை உடையவர்களாய் இருக்கவில்லை, மாறாக ஒவ்வொருவரும் தங்கள் உறுதியைக் குறித்துப் பயமடைந்தவர்களாக, ஆண்டவரே அவரா? (அ) இவரா? என்று கேட்காமல், மாறாக ஆண்டவரே நானோ? என்று விசாரித்தார்கள். அவர்கள் சுயப்பரிசோதனை செய்யும் ஆவியை உடையவர்களாய் இருந்தனர்.

ஆண்டவருடைய எச்சரிப்பை யூதாஸ் ஆர்வமற்றுக் கேட்டுக்கொண்டிருந்த காரியம் மற்றும் நிதானமாய்த் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தது மற்றும் தீமையில் பொல்லாப்பான பிடிவாதம் ஆகியவை, வெளிப்படுத்தின அவரது இருதயத்தின் கடினமும், மாய்மாலத்தினுடைய ஆழமும், பதினொரு பேரிடம் காணப்பட்ட தாழ்மை மற்றும் அன்பின் ஆவிக்கு எதிரிடையாய்க் காணப்பட்டது. இது சாத்தானின் வல்லமைக்கு மனமுவந்து ஒப்புக்கொடுக்கும்/அடிப்பணியும் ஆத்துமாவிற்கான நம்பிக்கை ஏதேனும் இல்லாத நிலைக்கு உதாரணமாய்க் காணப்படுகின்றது. வசனம் 21, யூதாஸ் சீர்ப்பொருந்திடுவதற்கான எந்த நம்பிக்கையின் வெளிச்சத்தையும் வீசிடவில்லை. யோவான் 17:12-ஆம் வசனத்தையும் பார்க்கவும். தேவனுடைய காருண்யமானது, யூதாசினுடைய இருதயத்தைக் கடினப்படுத்த மாத்திரமே செய்தது; ஆகையால் அவரைக் குணப்படுத்த எதுவும் இல்லை.

வசனங்கள் 22-24; அப்பம் மற்றும் திராட்சரசமாகிய அடையாளங்களினுடைய வெளிப்படையான அர்த்தத்தினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. பிட்கப்பட்ட அப்பமானது, நம்முடைய மீட்பிற்கென்று கிறிஸ்துவினுடைய மனுஷீகம் பலிச் செலுத்தப்பட்டதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இந்தப் பலியினுடைய பயன்களானது விசுவாசத்தின் மூலமாக தனித்தனியே சொந்தமாக்கிக்கொள்ளப்பட வேண்டும்; இப்படிச் சொந்தமாக்கிக்கொள்ளும் காரியமானது, அதைப் புசிக்கும் காரியத்தினால் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய, அவரது சிந்தப்பட்ட இரத்தத்திற்கு அடையாளமான திராட்சரச பாத்திரமானது, பிட்கப்பட்ட அப்பத்திற்குரிய அதே அர்த்தத்தினை உடையதாய் இருக்கின்றது; இதில் நாம் பங்கெடுத்தல் என்பதும்கூட, அவரது பலியினுடைய பயன்களை நம்முடையதாக்கிக் கொள்வதையும், இப்படியாய் நீதிமானாக்கப்படுவதையும் குறிக்கின்றதாக இருக்கின்றது. ஆகையால்தான் கர்த்தர், "நீங்கள் (விசுவாசத்தினால்) மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். (யோவான் 6:53) இந்த அர்த்தத்தோடுகூட அப்போஸ்தலனாகிய பவுல், இன்னொரு அர்த்தத்தையும் காண்பிக்கின்றார் (1 கொரிந்தியர் 10:16, 17); அதாவது அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரது பலியில், அவரோடுகூட நம்முடைய பங்கெடுத்தலைக் காண்பிக்கின்றார் – "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 திருவிவிலியம்)

இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, யோவானால் பதிவுசெய்யப்பட்டுள்ள அந்த அனைத்து அறிவுரைகளின், தேற்றுதல்களின், ஆறுதலின், நம்பிக்கையின் வார்த்தைகள் கொடுக்கப்பட்டன மற்றும் மனதைத்தொடும் அந்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. (யோவான் 13:33-38; 14-17 வரையிலான அதிகாரங்கள்) இந்தக் காலப்பகுதியானது சீஷர்களால் ஒருபோதும் மறக்கப்படவில்லை மற்றும் இதன் தாக்கமானது, அவர்களது பிந்தைய நடத்தைகளில் மிகவும் வெளிப்பட்டதாய் இருந்தது.

வசனம் 25; தற்காலத்தினுடைய பாடுகள் அனைத்தும் முடிவடைகையில் கிறிஸ்து மற்றும் சபையினுடைய இறுதி ஜெயத்தை முன்னறிவிக்கின்றதாய் இருக்கின்றது. அப்பொழுது அவர்கள் ஒன்றாய்க் கூடிக்கொண்டாடிடும் விருந்திற்கு, புதிய மற்றும் பாக்கியமான அர்த்தமிருக்கும்; அது அவர்களது விசுவாசத்தினுடைய வீரத்திற்கும், மிகுந்த கடுமையான பரீட்சைகளின்கீழ்த் தெய்வீக நோக்கத்திற்கான அவர்களது உண்மைக்குமான ஞாபகார்த்தமான கொண்டாட்டமாயும் மற்றும் அந்த விசுவாசம் மற்றும் உண்மையினுடைய வெற்றியில், ஒன்றாய்ச் சேர்ந்து களிகூருவதாயும் இருக்கும்.

வசனம் 26; "அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்." (மாற்கு 14:26) அவர்கள் கலைந்துபோவதற்குப்பதிலாக, சேர்ந்துபோனார்கள். யூதாஸ் தனது மிகக் கொடூரமானத் திட்டத்தை நிறைவேற்றிட போனபோது, கர்த்தருடைய துக்கத்தையும், எச்சரிப்புகளையும் கவனித்தவர்களாகப் பதினொருபேரும் தங்கள் அன்பினாலும், அனுதாபத்தினாலும் அவரைத் தேற்றிடுவதற்கும், அவருக்கு உதவிபுரிந்திடுவதற்கும் நாடினார்கள்.

*****

# கெத்செமனேயில் வியாகுலம்

### மாற்கு 14:32-42; மத்தேயு 26:36-46; லூக்கா 22:39-46; யோவான் 18:1

*"பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?"*

இந்தப் பாடத்தினுடைய துயரம் நிறைந்த காட்சிகளை நாம் பார்க்கையில், பயபக்தியுடனும், ஆழ்ந்த நன்றியுடனும், நம்முடைய பாரத்தையே அவர் சுமந்திட்டார் என்றும், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது என்றும், அவரது தழும்புகளினாலே நாம் சுகமானோம் என்றும் நினைவுகூருவோமாக.

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நன்கு பரீட்சயமான இச்சம்பவப் பதிவானது, விலையேறப்பெற்ற படிப்பினைகளுள்ள ஒன்றாகும், அதிலும் விசேஷமாக அவரது கிருபையினால் கர்த்தருடைய அடிச்சுவடுகளில் பின்தொடர்வதற்குப் பிரயாசம் எடுக்கின்றவர்களாக இருப்பவர்களுக்கு விலையேறப்பெற்ற படிப்பினைகள் முழுக்க நிரம்பப் பெற்ற ஒன்றாகும். நாம் புரிந்துகொள்வது என்னவெனில்: (1) போதகர் தாம் காட்டிக்கொடுக்கப்படுவதற்கும் மற்றும் தமக்குக் கடுமையான சோதனைகள் வருவதற்குமான தம்முடைய வேளை சமீபித்துள்ளது என்பதை உணர்ந்தபோது, அவர் முதலாவதாக சீஷர்களைத் தேற்றி, அவர்களுக்கு ஆலோசனைக் கொடுத்து, அவர்களுக்காக, அவர்களோடுகூட ஜெபம் ஏறெடுத்துப் பிற்பாடு தேவனிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கும், அவரோடு ஐக்கியம் கொள்வதற்கும், தேவையான வேளையில் கிருபைப் பெற்றுக்கொள்வதற்கும் வேண்டி தனியான ஓர் இடத்தைத் தேடுவதே அவரது அடுத்தக்கட்ட உறுதியான உணர்வாய்க் காணப்பட்டது. (2) தம்முடைய சீஷர்களுக்கான அவரது அன்பையும் மற்றும் அவர்களது அன்பையும், அனுதாபத்தையும் திரும்பப்பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற அவரது விருப்பத்தையும் நாம் கவனிக்கின்றோம். "தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்." மேலும் அவர் அவர்களை அன்புகூர்ந்ததினாலும், அவர்களும் தம்மை அன்புகூருகிறார்கள் என்று அவர் அறிந்திருந்ததினாலும் தாம் ஜெபம் பண்ணப்போகிற இடத்தில், அவர்களும் தம்மோடுகூட விழித்திருந்து, ஜெபம் பண்ணத்தக்கதாக, அவர்கள் வருவதற்கு அனுமதித்தார். தம்முடைய இறுதி ஜெபவேளையானது காட்டிக்கொடுப்பவனால் சடுதியாய்க் குறுக்கிடப்படாமல் காணப்படத்தக்கதாக, வெளிக்காவல் புரியும் வண்ணமாக பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானைத் தவிர மற்ற அனைவரையும் தோட்டத்தின் நுழைவாயிலில் நிறுத்தி வந்தார்; இந்த மூவருடன்கூட அவர் தோட்டத்திற்குள் வந்தார்; அனலாய் இருக்கும் சுபாவமுள்ள இந்த மூவரிடத்தில் தேறுதலான அனுதாபத்தை, அவர் கண்டதாகத் தெரிகின்றது மற்றும் விழித்திருந்து, ஜெபம் பண்ணுவதற்கான உண்மையான வேண்டுகோளை விடுத்தவராக, அவர் அவர்களைவிட்டு, கல்லெறியும் தொலைவுக்குப் போயுள்ளார். ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில் அவர் மூன்று தரம் எழுந்து "என் ஆத்துமா மரணத்திற்கு ஏதுவான துக்கம் கொண்டிருக்கிறது" என்று கூறி மனித அனுதாபத்தின் தொடுதலைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, வியாகுலமான ஆத்துமாவுடன் அவர்களிடத்தில் திரும்பி வந்தார். அவரைக் கொஞ்சம் நேரம் சோர்வுபடுத்தினதும், இரத்தத்தின் மாதுளிகள் வியர்வையாக வருமளவுக்குக் கடுமையான அளவில் மனதிற்கும், நரம்பிற்கும் அழுத்தம் ஏற்படுத்தினதுமான துக்கமாக, வியாகுலமாக அது காணப்பட்டது.

போதகர் இப்படி மனித அனுதாபத்தை விரும்பினது என்பது, அவர் சார்பிலான பெலவீனத்திற்கான அறிகுறியாகாது. அவருடைய சுபாவமானது கரடுமுரடானதாகவோ, விருப்பு வெறுப்பு அற்றதாகவோ, வலி, இழப்பு மற்றும் நிந்தனை தொடர்புடைய விஷயத்தில் உணர்வற்றதாகவோ இல்லை; அவர் தொடர்பு வைத்திருக்கும் நபர்கள், அவரது மகிமையான பூரணத்திற்கு வெகுக் கீழானவர்களாகக் காணப்பட்டபோதிலும், அவரது சுபாவமானது பெருமையானதாகவோ, தம்மையே சார்ந்துள்ளதாகவோ, மனித உறவினின்று தம்மைப் பிரித்து விலகுகின்றதாகவோ இல்லை. கிருபையாக அவர் கீழ் நிலையிலுள்ள மனித சாயலுக்குத் தம்மைத் தாழ்த்திக்கொண்டார் மற்றும் அவர்களைப் பிரியத்திற்குரிய சகோதரர் என்று கருதினார் மற்றும் அவர்களைக் குறித்து அவர் வெட்கப்படவில்லை. அவரது சுபாவமானது நுட்பமானதாகவும், அன்புள்ளவைகளை, நல்லவைகளை, உண்மையுள்ளவைகளைக் கூர்மையாய் உணர்ந்து கொள்ளுகிறதாகவும், இவைகள் அனைத்திற்கும், எதிர்மாறான வலியையும்கூட அதே அளவுக்கு

உணர்ந்துகொள்ள முடிகிறதாகவும் காணப்பட்டது. மனிதனுடைய சீர்க்கேடும், மனிதனுடைய துயரங்களும், அவரது பூமிக்குரிய ஜீவியக் காலம் முழுவதும், அவரைத் தொடர்ந்து வெகு பாரமாய் அழுத்தி இருந்திருக்க வேண்டும். ஆனால் இந்தப் பயங்கரமான வேளையிலோ, ஒட்டுமொத்த உலகத்தினுடைய பாரங்களும், துயரங்களும் அவரது தோள்கள் மீது குவிக்கப்பட்டது மற்றும் அவர் பாவிபோன்று பாடுபட வேண்டும், மரிக்க வேண்டும்; அதாவது உயிர்த்தெழுதலுக்காகப் பிதாவின் கிருபையை மாத்திரம் விசுவாசித்தவராக மரித்துப்போக வேண்டும். இந்த ஒரு வேளையில் அவரது மரணம், சரீர வியாகுலம், அவமானம், கொடுமை மற்றும் கோர மரணத்திற்கேதுவான சித்திரவதை முதலானவைகள் பற்றின உணர்ந்துகொள்ளுதல் மாத்திரம் அவருக்குள் காணப்படாமல், இன்னுமாகத் தம்முடைய பிரியமான சீஷர்கள் பயத்தினாலும், திகிலினாலும் மேற்கொள்ளப்பட்டு, தம்மை தனிமையில் விட்டுவிடும்போது தாம் அனுபவிக்கப்போகும் தனிமைக் குறித்த உணர்வும் அவருக்குள் குவிந்தன; மற்றும் திரும்பிட முடியாத அளவுக்கான யூதாசினுடைய இழப்பும், யூத ஜாதியாருடைய நடவடிக்கைக் குறித்துமான கவலைகரமான நினைவுகளும் அவருக்குள் குவிந்தன - அவரது சொந்த ஜனங்கள் அவரை அசட்டைப்பண்ணி, "இவர் இரத்தப்பழி எங்கள் மீதும் எங்கள் பிள்ளைகள் மீதும் வருவதாக" என்று கூறினதன் மூலம் அவரது இரத்தப்பழியைத் தங்கள் தலைகள் மீது பெற்றுக்கொண்டனர். இதன் விளைவாக அவர்கள் மீது சீக்கிரத்தில் வரும் பயங்கரமான பெருந்துன்பத்தை அவர் முன்னறிந்தவராய் இருந்தார். தம்முடைய பலியின் மூலமாக, உலகத்திற்குப் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுதலையைத் தாம் பெற்றுக்கொள்வது வரையிலும், குற்றவாளியாய்க் காணப்பட்ட உலகமானது தொடர்ந்து தவித்து, பிரசவ வேதனைப்பட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்பதானது, அவரைப் பொறுப்பினுடைய பாரம் குறித்து உணரச் செய்தது; இதை ஓரளவுக்கு நம்மால் கணிக்க மாத்திரமே முடிகின்றதேயொழிய, முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடியாது. இவைகள் அனைத்துடன்கூட பாவநிவாரண நாளினுடைய நிழலான பலியின் மாதிரிக்கேற்ப, தாம் ஏறெடுக்க வேண்டிய பலி தொடர்புடையதான நியாயப்பிரமாணத்தினுடைய ஒவ்வொரு எழுத்தும், எழுத்தின் உறுப்பும் பூரணமாய் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற உண்மைப் பற்றின அறிவும் அவருக்கு இருந்தது [ * ஆசரிப்புக்கூடார நிழல்கள், ஆங்கில பக்கம் - 39; தமிழ் பக்கம் - 43 பார்க்கவும்]. பணியில் ஏதாகிலும் ஒரு பாகத்தில் அவர் தவறி விட்டாரானால், தமக்கும், மனுஷர்களுக்குமான அனைத்தும் இழந்துபோய்விட வேண்டியிருக்கும். அவர் பரிபூரண மனிதராகக் காணப்பட்டாலுங்கூட, மாம்சமானது எவ்வளவுதான் பூரணமாய் இருப்பினும், அது அவ்வேலையைச் சமாளிப்பதற்குப் பொருத்தமானதல்ல.

அந்தப் பயங்கரமான வேளையில், அவர் தனித்துக் காணப்படும்பொழுது, திணறவைக்கும் இரவினுடைய இருளில் தற்காப்பில்லாமல், தம்மைக் காட்டிக்கொடுப்பவனுக்காகக் காத்திருக்கையில் தம்மைத் துன்புறுத்தப் போகிறவர்களின் சித்தமானது பகைமையினால் வெறியூட்டப்பட்டு, சாத்தானுடைய ஆற்றலினால் நிறைந்திருக்க, நமது கர்த்தர் எத்தகைய மன வலிமையுடன் காணப்பட வேண்டும்! ஓ! உலகம் மற்றும் அவருடைய எதிர்க்காலமானது தராசில் எவ்வளவாய் நடுங்கினது! தெய்வீக உதவியில்லாமல், பரிபூரணமான மனித சுபாவம்கூட, இத்தகைய ஒரு நெருக்கடியான நிலையைச் சமாளிக்க முடியாது; ஆகையால் உயிர்த்தெழுதலின் வாயிலாகத் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லவரை நோக்கி, அவர் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி ஜெபம் பண்ணினார். தேவையான ஆறுதலானது ஏசாயா தீர்க்கத்தரிசியின் (42:1, 7) வாயிலாகக் கொடுக்கப்பட்டது; இவர் மூலம் யேகோவா தேவன், "இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்; அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார். . . . .அவர் இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை. . . . . கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப் பிடித்து, (விழுந்துபோய்விடாதபடிக்கு அல்லது தவறிடாதபடிக்கு) உம்மைத் தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

கெத்செமனேயின் பயம் கலந்த நெருக்கடியானது, சகிப்புத்தன்மையின் ஆற்றல்களை, அவைகளின் உச்சக்கட்ட அளவு வரையிலும் ஈடுபடுத்தின பிற்பாடு, அவரது ஜெபமானது, "இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (மத்தேயு 26:39) என்பதாக மாத்திரம் காணப்பட்டது. பாத்திரம் அவரைவிட்டு நீங்கக்கூடாததாய் இருந்ததினால், தேவதூதன் வந்து, அவருக்கு ஊழியம் புரிந்திட்டார். எப்படி ஊழியம்புரிந்திட்டார் என்பது எங்களுக்குத் தெரியாது, எனினும் அநேகமாக வரவிருக்கும் மகிமைத் தொடர்புடையதான தீர்க்கத்தரிசன நிழல்களினாலும், விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களினாலும் அவரது மனதினைப் புத்துணர்வடையப் பண்ணியிருந்திருக்க வேண்டும்; இந்த நிழல்களையும், வாக்குத்தத்தங்களையும் கொண்டு, அடர்த்தியான இருளின் இருட்டானது

அவரது ஆத்துமாவை மூடி, அவரது நம்பிக்கையை நெருக்கி, "மரணத்திற்கு ஏதுவான" துக்கத்தை அவருக்குக் கொண்டுவந்திட்டதான அந்த வேளையில், அவரை தேற்றிடுவதற்கு, சீஷர்கள் அவைகளைப் போதுமான அளவுக்குப் புரிந்துகொள்ளவில்லை. ஆ! யேகோவா தேவனே அவரை ஆதரித்தார், அவரது பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்! அவரது வாக்குத்தத்தத்திற்கேற்ப அவரது தாசன் இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை.

அந்தப் பாக்கியமான ஊழியத்தின் காரணமாக தைரியமானது வலுவூட்டப்பட்டது மற்றும் அதைக் கண்டு நாம் மிகவும் வியப்படைகின்றோம். அது வலி, அவமானம் மற்றும் இழப்புக் குறித்த விருப்பு வெறுப்பு இல்லாத தன்மையின் காரணமாக உண்டான தைரியமாய் இராமல், தெய்வீக வாக்குத்தத்தம் மற்றும் வல்லமையெனும் திரைக்குள்ளாக நங்கூரமிடப்பட்டுள்ளதான விசுவாசத்தினால் உண்டான தைரியமாகும். அவர் தமது விசுவாசக் கண்களினால் சத்தியம் மற்றும் நீதியினுடைய மகிமையான வெற்றியைக் கண்டபோது – தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு, திருப்தியடைந்த போது – மீட்கப்பட்ட உலகத்தினுடைய நித்தியமான சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும், பிதாவினுடைய ஆசீர்வாதங்களின் ஐசுவரியத்தையும், வரவேற்பையும் பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள உண்மையுள்ள சிருஷ்டிகள் யாவருடைய நன்றியறிதலையும், அன்பையும் கண்டு, திருப்தியடைந்தபோது – ஆம் விசுவாசம் மற்றும் முடிவு பரியந்தமும் உண்மையாய்ச் சகித்தலின் பலன்களை உணர்ந்தபோது, அவர் தேற்றப்பட்டார் மற்றும் உற்சாகமூட்டப்பட்டார்; இப்பொழுது அவரால் அமைதலுடனும், தைரியத்துடனும்கூட சத்துருக்களைச் சந்திக்க சென்றிடமுடியும். ஆம் இந்த வெற்றியினாலே, இந்த விசுவாசத்தினாலேயே அவர் ஜெயங்கொண்டார் மற்றும் நாமும் இப்படியாகவே ஜெயங்கொள்ள வேண்டும்.

இப்பொழுது கெத்செமனேயில் வரப்போகின்றதான நிகழ்வுகள் குறித்த பயம் கலந்த உணர்ந்துகொள்ளுதல்கள் முடிவுக்கு வந்தது. யூதாசுக்கும், உரோம சேவகர்களுக்கும் அவர் பதில் கொடுத்தபோதும், அப்பதிலினால் அவர்களுக்கு ஏற்பட்ட தாக்கத்தின்போதும், அவரது அமைதியான, உன்னதமான மனோதிடத்தைக் கவனியுங்கள். இந்த வியத்தகு மனிதனுடைய (இயேசுவினுடைய) கம்பீரமும், வீராந்த தோற்றமும் அவர்களை மிகவும் அடக்கினதால், ஒருவேளை அவர் தம்மை அவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கவில்லையெனில், அவர்களால் அவரைப் பிடித்திருக்க முடியாது. திகைப்படைந்த மற்றும் களைப்புற்றிருந்த சீஷர்களுக்கான அவரது இரக்கத்துடன் கூடிய அக்கறையையும், அவர்களுக்கான அவரது, "ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" என்ற அன்புடன் கூடிய காரணங்கள் காட்டுதலையும், தாம் கைது செய்யப்படும்போது, தம்முடைய சீஷர்கள் தமக்கு ஏற்படப்போகும் துன்புறுத்துதலிலிருந்து தப்பித்துக் கொள்ளத்தக்கதாக, அவர்கள் வழியில் போவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று சேவகர்களிடம் அவர் வேண்டிக்கொண்டதையும் (யோவான் 18:8) கவனியுங்கள். அவருடைய சோதனைகள், கேலிக்குள்ளாக்கும் நிகழ்வுகள் அனைத்தின் மத்தியிலும் மற்றும் இறுதியில் சிலுவையில் அறையப்படுதலின்போதும், மற்றவர்களுடைய நலனுக்கடுத்த விஷயங்களிலுள்ள அவரது தைரியமும், அக்கறையும் ஒருபோதும் நலிந்து போய்விடவில்லை.

ஆகையால் இப்படி நமது கர்த்தரை மிகவும் கடுமையான சோதனையின் கீழ்க் கண்டு, எப்படி யேகோவா தேவனின் கரம் அவரை ஆதரித்தது என்று காண்கையில், அது அவரது அடிச்சுவடுகளில் நடப்பதற்குப் பிரயாசம் எடுத்துக்கொண்டிருக்கும் அனைவருடைய விசுவாசத்தையும் பெலப்படுத்திடுவதாக மற்றும் இவர்களிடமே கர்த்தர், "திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்; இந்த விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" என்று கூறினார் (யோவான் 16:33; 1 யோவான் 5:4). கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பாதமானது கல்லில் இடறாதபடிக்கு (ஏதோ சில அமிழ்த்துகிற சோதனைகளானது அவர்களுக்கு மிகவும் பாரமானதாய்ப் போகாதபடிக்கு), அவர்களை ஏந்திக்கொண்டு போகும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு யேகோவா தேவன் கட்டளையிட்டிருக்கின்றார் அல்லவா? (சங்கீதம் 91:11, 12). ஆம், அவரது கரமானது தலையாகிய நமது கர்த்தர் இயேசுவை ஆதரித்தது போலவே, பாதங்களையும் நிச்சயமாய் ஆதரித்திடும். அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்றாலும், "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கின்றார்" என்கிறார் (லூக்கா 12:32). இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு பணிவிடை ஆவிகள் அனுப்பப்பட்டு இருக்கின்றனர். இவர்களது பணிவிடைகளானது நம்மால் பார்க்க முடியாது என்றாலும், இவைகள் உண்மைதான். கிறிஸ்துவினுடைய சரீரத்தின் சக அங்கத்தினர்கள் கூட, ஒருவருக்கொருவர் கர்த்தருடைய தூதுவர்களாய்க் காணப்படுகின்றனர் மற்றும் இவர்களும் பாதங்களை ஏந்திடுவதற்கான சிலாக்கியத்தில் பங்கடைபவர்களாய்க் காணப்படுகின்றனர்.

ஆனால் தேவையின் போதான இந்த உதவியை நாம் பெற்றுக்கொள்வதற்கு, நாம் அதற்காக வேண்டிக்கொள்வது அவசியமாகும். உண்மையில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வேளையும் தேவையின் வேளையாகவே காணப்படுகின்றது; ஆகையால் ஜெப நிலையிலேயே நாம் ஜீவிப்பது, அதாவது இடைவிடாமல் ஜெபம் பண்ணுவது நமக்கு அவசியமாய் உள்ளது. நமது கர்த்தருக்கே தம்முடைய ஜீவியத்தின் விறுவிறுப்பான சூழ்நிலைகளினின்று அடிக்கடி விலகி, தேவனிடத்திற்குத் தனியே சென்று, அன்பின் நெருக்கமான ஐக்கியத்தினை உறுதியாய் வைத்துக்கொள்வது அவசியமாய் இருந்ததானால், நமக்கும் நிச்சயமாகவே அவசியமாய் இருக்கும்; மற்றும் இப்படியாகச் செய்யும்போது, நாமும் தேவையின் போதான கிருபையை எப்போதும் பெற்றுக்கொள்கின்றவர்களாய் இருப்போம். கடுமையான சோதனைகளின் வேளைகளில், நமது கர்த்தருடைய விஷயத்தில் காணப்பட்டதுபோலவே, இருளானது ஆத்துமாவை ஆழமாய் சூழ்ந்து கொள்ளுகிறதாய்க் காணப்படும், நம்பிக்கையின் நட்சத்திரங்கள் அனைத்தையும் மறைத்துப் போடுகிறதாய்க் காணப்படும்; எனினும் நாமும் கர்த்தரைப் போன்றே யேகோவா தேவனுடைய சர்வ வல்லமையுள்ள கரத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டு, "ஆகிலும் என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று கூறுவோமானால், அவரது கிருபை எப்போதும் போதுமானதாய் இருக்கும்; மற்றும் சங்கீதக்காரனோடுகூட நாமும் "என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்" என்று கூறமுடியும் (சங்கீதம் 73:26); மற்றும் கர்த்தரோடுகூட நம்முடைய இருதயங்களும், "பிதா எனக்கு ஊற்றின பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்று கூறும்.

*****

# உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துதல்

***"அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்." எபிரெயர் 5:7-10***

இந்த வசனத்தை ஐந்து தலைப்புகளின் கீழ் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளுகிறோம்: (1) அவர் மாம்சத்திலிருந்த நாட்களில்; (2) எதற்காகப் பயந்தார்; மற்றும் எதிலிருந்து அவர் இரட்சிக்கப்பட்டார்? (3) அவர் குமாரனாயிருந்தும்; (4) அவர் எந்தவிதத்தில் பூரணமாக்கப்பட்டார் மற்றும் (5) யாருக்கு அவர் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்.

அப்போஸ்தலருடைய இந்த வார்த்தைகள், நம்முடைய அருமையான ஆண்டவரின் அனுபவங்களின் உள்ளார்ந்தப் பார்வையைத் தருகிறது. இவைகள் அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் நமக்காகச் சுமந்த சுமைகளைப் புரிந்துகொள்வதற்கு உதவி செய்கிறது. கீழ்க்காணும் வாக்கியத்தைக் குறிப்பாகக் காணலாம்.

## அவர் மாம்சத்திலிருந்த நாட்களில்

நம்முடைய ஆண்டவர் மாம்சத்திலிருந்த நாட்களிலும், மாம்சத்தில் இல்லாத நாட்களிலும் எந்த விதமான வித்தியாசமும் இல்லை என்று சிலர் கூறுகிறார்கள். அவர் மனித இயல்பில் உயிர்த்து, எழுப்பப்பட்டார் என்றும், அவருடைய மாம்சம் மகிமையடைந்ததாகவும் கூறுகிறார்கள். மற்றும் சிலர் அவர் மனிதனாக வாழ்வதற்கு முன் அவர் இருக்கவில்லை என்றும் கூறுகிறார்கள். ஆனால் இந்தக் கருத்துக்களுக்கு மாறானவைகளே அப்போஸ்தலனுடைய இந்த வாக்கியங்களில் குறிப்பாகச் சுட்டிக்காட்டுவது மட்டுமல்ல, மற்ற வசனங்களிலும் உறுதியாகச் சொல்லப்படுகிறது. "ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்" (எபிரெயர் 2:14). "அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1:14). "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்கள் ஆகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரிந்தியர் 8:9). "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்" (யோவான் 6:51). ஆம், அவருடைய மனுஷ சரீரமே, அவரது தாழ்மையின் சரீரமாக, பலி செலுத்துவதற்காக, "ஆயத்தம் பண்ணப்பட்ட சரீரமாக இருந்தது" (எபிரெயர் 10:4-5). மேலும் அந்தச் சரீரம் பலி செலுத்தப்பட்டது; பலி செலுத்தப்பட்ட அந்தச் சரீரம் திரும்ப எடுத்துக்கொள்ளப்படவில்லை; நம்முடைய மீட்பிற்காக அது விலைக்கிரயமாகக் கொடுக்கப்பட்டது. ஆகவே அவர் மாம்சத்தில் இனி மனுஷனாக ஜீவிப்பதில்லை; அதை அவர் பலி செலுத்தினதினால் இப்பொழுது அவர் மிக உன்னதமான நிலைக்கு உயர்த்தப்பட்டு, நம்முடைய தெய்வீக பிரதான ஆசாரியனாக என்றென்றும் ஜீவிப்பவரானார். "ஆகையால், இதுமுதற்கொண்டு,நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்" (2 கொரிந்தியர் 5:16).

அவருடைய தாழ்த்தப்படுதலானது, நித்தியமான தாழ்த்தப்படுதல் அல்ல, மாறாக அதைத் தொடர்ந்து மகிமையான ஓர் உயர்த்தப்படுதலை அடைந்தார் — திவ்விய சுபாவத்திற்கும் மற்றும் அச்சுபாவத்திற்கே உரிய மகிமையான சரீரத்திற்கும் உயர்த்தப்பட்டார் – "பிதாவினுடைய தன்மையின் சாயலானார்" (எபிரெயர் 1:3); அவர் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவராக இருந்தாலும், கிறிஸ்துவின் விசுவாசமுள்ள சீஷர்கள் ஒரு நாளில் அவரைக் காண்பார்கள், ஏனெனில், "அவர் இருந்த வண்ணமாக இல்லாமல் – இருக்கிற வண்ணமாக நாம் அவரைத்

தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம்" என்று எழுதியிருக்கிறது (1 யோவான் 3:2). இதற்காக, அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில், "பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன் என்று ஜெபித்தார்" (யோவான் 17:24).

ஆயினும் அவர் மாற்றம் அடைந்திருந்தாலும், நம்முடைய ஆண்டவர் அதே இயேசுதான். "ஏனெனில், இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார் (எபேசியர் 4:10). அவர் ஆவியின் தன்மையிலிருந்து மனித உருவம் எடுத்தபொழுது அவரில் எந்த மாற்றமும் இல்லாததுபோல, மனித இயல்பிலிருந்து தெய்வீக நிலைக்கு மாறும்பொழுதும் அவருடைய தனித்துவம் அழிக்கப்படவில்லை. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின் அவர் தாமே, "மரித்தேன் ஆனாலும் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" என்று கூறினார்.

தேவனுடைய குமாரன் உண்மையில் மாம்சமானார் என்ற வசனத்தை நாம் ஆழ்ந்த நன்றியுள்ள இருதயங்களோடு ஏற்றுக்கொண்டோம். மேலும் மாம்சத்திலுள்ள அவருடைய நாட்கள் எண்ணப்பட்டதாகவும், குறைவாக இருந்ததினால் நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். நம்மைப்போல அவருக்கும், "குறைவான நாட்களும் முழு உபத்திரவத்தோடு காணப்பட்டது." விசேஷமாக பலியின் வேலையைச் செய்வதற்காக அவர் உடன்படிக்கைப் பண்ணின பின் வந்த நாட்களானது வேதனைகளும், ஏமாற்றங்களும், துயரங்களும் உள்ள நாட்களாகக் காணப்பட்டது. இந்நாட்களானது தேவைப்படும் நேரங்களிலெல்லாம் கிருபையைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக பரலோக கிருபாசனத்தண்டைக்கு அவரை வழி நடத்தியது. ஊழியத்தின் விறுவிறுப்பான பகல்பொழுது நிறைவடைந்தவுடன், ஜெபத்திற்கான இடத்தைத் தேடிடுவது நம்முடைய ஆண்டவரின் வழக்கமாக இருந்தது. மலைகளும், வனாந்தரங்களும் அவருக்கு மறைவிடமாய் இருந்தது மற்றும் அடிக்கடி அவர் முழு இரவும் ஜெபித்தவராய் இருந்தார்.

தேவனோடு அவர் கொண்டிருந்த இரகசியமான ஐக்கியத்தினால் ஆவிக்குரிய பலத்தையும், ஆறுதலையும், தேறுதலையும் பெற்றார். விலையேறப்பெற்ற தொடர்பு கொள்ளக்கூடிய இப்படிப்பட்டத் தருணங்களில், அவர் வேறுயாரிடமும் திறக்கமுடியாத தம்முடைய இருதயத்தை தந்தையிடம் முழுமையாக திறந்தார்; அத்தருணங்களில் அவருடைய சகலவிதமான வேதனைகளையும், பாரங்களையும், பயங்களையும் அவரிடம் கூறினார் மற்றும் அத்தருணங்களில் பிதாவாகிய தேவன் அவருடைய அன்பான அங்கீகரிப்பையும், ஆதரிக்கும் தம் கிருபையையும் கொடுத்து தம்மை அவருக்கு வெளிப்படுத்தினார்.

## எதற்காகப் பயந்தார்; எதிலிருந்து இரட்சிக்கப்பட்டார்?

என்ன! நம்முடைய ஆண்டவர் பயந்தாரா? என்று சிலர் ஆச்சரியப்பட்டுக் கேட்கலாம். ஆம்! மேற்கூறப்பட்ட அப்போஸ்தலரின் வார்த்தைகள், நம்முடைய ஆண்டவர், "மாம்சத்தில் இருந்த நாட்களில்" நமக்காக அவர் அனுபவித்த மிகப்பெரிய மனரீதியான போராட்டத்தைக் குறிப்பிடுகிறது. இந்த மனப்போராட்டம் அவருடைய ஞானஸ்நானத்துக்குப் பின் வனாந்தரத்தில் அவர் சோதிக்கப்படும்போதே உடனடியாக துவங்கி, கெத்செமனே தோட்டத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தது. அநேகமாக கெத்செமனேயில்தான் இதுவரையிலும் இல்லாத அளவுக்கு, "பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்" (எபிரெயர் 5:7).

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அல்லது அவருடைய அன்பு தோல்வியடைந்துவிடும் என்று எண்ணி நம்முடைய ஆண்டவர் பயப்படவில்லை. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" என்று அவர் அறிந்திருந்தார். தேவன் உடன்படிக்கையைக் கடைப்பிடிப்பவர் என்றும், அவருடைய சகலவிதமான நடத்தைகளும், நடவடிக்கைகளும் சத்தியம் மற்றும் நீதி என்ற நித்தியமான கோட்பாடுகளின்மேல் அஸ்திபாரம் கொண்டிருக்கின்றது என்றும், அதிலிருந்து சிறிதேனும் மாறுபடுதல் என்பது அவருடைய நெறிமுறையில் இயலாத ஒன்று என்றும் அவர் அறிந்திருந்தார். ஆனாலும் மனுக்குலத்தின் இரட்சிப்பின் திட்டமானது, ஆசரிப்புக்கூடாரத்தின் நிழலான ஊழியங்களில் பிரதான ஆசாரியன் குறித்துக் கூறப்படும் ஒவ்வொரு சிறு எழுத்திற்கும்,

எழுத்தின் உறுப்பிற்குமான, பிரதான ஆசாரியனுடைய கீழ்ப்படிதலைச் சார்ந்ததாய் இருக்கும் விதத்தில் ஏற்பாடுபண்ணப்பட்டிருந்தது என்பதையும் அவர் அறிந்திருந்தார்.[*ஆசரிப்புக்கூடார நிழல்கள், பக்கம் (ஆங்கிலம்) - 78; தமிழ் பக்கம் - 85 பார்க்கவும்]. அந்தப் பலிகள் செலுத்தப்படுவதுமட்டுமல்ல, துல்லியமாய்க் குறிப்பிட்டுள்ளபடியே பலிகள் ஏறெடுக்கப்பட வேண்டும். நிழலான பிரதான ஆசாரியனாகிய ஆரோன் பலி செலுத்துவதற்கான கட்டளைகளுக்கு ஏற்ப செய்யத் தவறியிருந்தால் (லேவியராகமம் 9:16) அல்லது கட்டளையின் ஏதேனும் அம்சத்தை அவர் மறந்து அல்லது தவிர்த்திருந்தால் அல்லது அவருடைய சொந்தக் கருத்துக்களை அதில் பொருத்தியிருந்தால், அவர் கிருபாசனத்தின்மேல் இத்தகைய அபூரணமான பலியின் இரத்தத்தைத் தெளிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்; அவருடைய பலி அங்கீகரிக்கப்பட்டிருந்திருக்காது; அவர் மரித்திருப்பார் மற்றும் ஜனங்களை ஆசீர்வதிப்பதற்கு அவர் ஒருபோதும் வெளியே வந்திருக்கவும் முடியாது (லேவியராகமம் 16:2-3).

இப்படியாக மீட்பின் மிகப்பெரிய வேலையை மேற்கொள்ளுவதினால் பிரதான ஆசாரியர் இம் முழுமனுக்குலத்தின் ஜீவன் மற்றும் மரணத்தின் பிரச்சனைகளை மட்டும் தம்மேல் சுமந்து கொள்ளாமல், தம் விஷயத்தைக்கூட அவர் பொறுப்பேற்றிருந்தார். அடையாளமாக பேசவேண்டுமெனில் அவருடைய சொந்த வாழ்க்கையையும், அவருடைய கரங்களில் எடுத்துக்கொண்டார். இப்படிப்பட்ட கனமான பொறுப்புகளைச் சுமந்த நம்முடைய ஆண்டவர் பயந்ததில் எந்த விதமான ஆச்சரியமுமில்லையே! தெய்வீகக் கிருபை இல்லாமல் பரிபூரண மனித சுபாத்தினால்கூடத் தாங்கிகொள்ள முடியாதளவுக்கு அவர் காணப்பட்டதான சோதனைகளினால் உண்டான மன அழுத்தம், மிகப்பெரிதாக இருந்தது. ஆகவே அவர் அடிக்கடி ஜெபம் செய்வதற்கு இடம் தேடினார். அவர் கடந்துச்சென்ற உபத்திரவங்களின் மாபெரும் போராட்டத்தினை கவனியுங்கள் - வனாந்தரத்தில் தந்திரமான மற்றும் வஞ்சகமான சோதனைகள்; [* R1688 - பார்க்கவும்] பாவிகளால் தமக்கு விரோதமாகச் செய்யப்பட்ட விபரீதங்கள்; அவர் இரட்சிக்கும்படி வந்தவர்கள் வெளிப்படுத்தின கீழ்த்தரமான நன்றியின்மையைச் சிந்தித்துப் பாருங்கள். மேலும் அவருடைய வறுமையையும், நண்பர்களின் இழப்பையும், அவருடைய சோர்வுகளையும், களைப்புகளையும், உழைப்புகளையும், வீடற்ற நிலையையும், அவருக்கான கசப்புள்ள மற்றும் கடுமை தணியாத உபத்திரவங்களையும், இறுதியாக அவர் காட்டிக் கொடுக்கப்பட்டதையும், அவரது மரண வேதனையையும் சிந்தியுங்கள். கண்டிப்பாக, இந்தச் சூழ்நிலைகளின்கீழ்த் துன்பத்தைத் தாங்கி சகிப்பதற்கான சோதனைகளும் மற்றும் பலியின் பிரமாணத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிவதற்குமான சோதனைகளுமே, அவர் அனுபவித்த உச்சக்கட்ட சோதனைகளாய் இருந்தது. ஆண்டவருக்குள் எப்படிப்பட்ட ஜாக்கிரதையை இது ஏற்படுத்தியது; ஏனெனில் ஆசாரியனாக அங்கீகரிக்கப்படத்தக்கதான பலிகளைச் செலுத்துவதற்குரிய தம் பணி முழுவதின் விஷயத்திலும் குறைவு ஏற்பட்டால், இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதற்கு அவருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் மற்றும் ஒப்புரவாகுதலின் நாளைத் தொடர்ந்துவரும் மகிமை நிகழாமல் போய்விடுமோ என்று அவர் பயந்திருந்தார். ஆகையால்,"அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின் வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" (எபிரெயர் 4:1) என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

நம்முடைய ஆண்டவர் அவருடைய பூமிக்குரிய வாழ்க்கையின் கடைசி இரவுக்குள் பிரவேசித்தபோது, அவருடைய சிந்தையில் பின்வரும் கேள்விகள் அவருக்குள் அழுத்தத்தை அதிகரித்தது: தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றவாறு, அனைத்தையும் துல்லியமாக இதுவரையில் நான் நிறைவேற்றியுள்ளேனா? மேலும் இப்பொழுது நான் படப்போகும் துன்பம் பற்றி முழுக்க அறிந்த நிலையில், என்னால் கசப்பான பாத்திரத்தின் அடிவண்டல் வரையிலும் பானம்பண்ணிட முடியுமா? சரீர ரீதியான துன்பங்களை மாத்திரமல்லாமல் அவமானங்களையும், நிந்தனைகளையும் மற்றும் கொடூரமான ஏளனங்களையும் என்னால் சகித்திட முடியுமா? என்னுடைய சொந்த நீதியில், சகலத்தையும் தேவன் அங்கீகரிக்கும் விதத்தில், பூரணமாக அனைத்தையும் என்னால் செய்து முடிக்க முடியுமா? என்னுடைய சீஷர்கள் சிதறடிக்கப்படுகிறதையும், திகலடைவதையும், என் முழு வாழ்க்கையின் வேலைகள் அழிக்கப்படுவதையும், என் நாமமும் மற்றும் தேவனுடைய காரணங்களும்/நோக்கங்களும் பழிக்கப்படுவதையும், என்னுடைய சத்துருக்கள் வெற்றிக்கொள்வதையும், பெருமையில் முழக்கமிடுவதையும் என்னால் சகிக்க முடியுமா?

நம்முடைய ஆண்டவருடைய இறுதியானப் போராட்டம் இவ்வாறாக இருந்தது. சந்தேகத்திற்கு இடமின்றி, அவருடைய நம்பிக்கையைத் தளர்ந்துபோகச் செய்வதற்கும், அவர் தவற

போகின்றார் (அ) அங்கீகரிக்கப்படும் விதத்தில் பணி புரிவதில் தவறிப்போய்விட்டார் என்றுமுள்ள பயங்களினால் அவரது மனதை நிரப்பிடுவதற்கும் மற்றும் இப்படியாக உயிர்த்தெழுதல் என்பது நிச்சயமில்லை என்று அவரை எண்ண செய்வதற்கும் ஏதுவாக, சூழ்நிலைகளையும், அவரது தளர்வையும், சோர்வையும் பயன்படுத்திப் பார்ப்பதற்கு அந்த பயங்கரமான நேரத்தில், இருளின் வல்லமைகள் விறுவிறுப்பாய்ச் செயல்பட்டிருக்கும். இத்தகைய நேரங்களில் ஒரு பரிபூரணமான மனித இருதயத்தில், இத்தகைய எண்ணங்கள் முன் வந்து நிற்க, பின் அவர் அமிழ்ந்துபோவதில் ஆச்சரியம் இல்லை மற்றும் உணர்வுகளின் கடுந்துயரமானது, வேர்வையின் துளிகளை இரத்தத்தின் துளிகளாக வெளியேற்றியது. ஆனால் சோர்வுக்கு அவர் இணங்கி, அவர்மேல் வந்த இறுதியான கடுஞ்சோதனையின்போது போராட்டத்தைக் கைவிட்டாரா? இல்லை; முன்னேறிச் சென்று, தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பலியை முழுமையாகச் செலுத்தும்படிக்கும் – அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஓர் ஆட்டுக்குட்டியைப்போல தாம் செல்லத்தக்கதாகவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருக்கத்தக்கதாகவும் – அவருடைய மனித சித்தம் தெய்வீகக் கிருபையினால் வலுப்படுத்தப்படுவதற்காக, இந்த மனித பயங்களை அவர் தமது பரலோக தந்தையிடம் – தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரிடம் – எடுத்துச் சென்றார்.

மேலும் அவர் பிதாவினிடம் வேண்டிக்கொண்ட ஜெபங்கள் வீணாகவில்லை. "தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்." அவருடைய ஆத்துமாவின் உணர்ச்சிகளை எந்த வார்த்தைகளும் வெளிப்படுத்த முடியாது என்பதினால், அவருடைய ஜெபங்கள் சுருக்கமாக இருந்தப் போதிலும், அந்த நேரம் முழுவதும் அவரது ஆவியானது, வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்துகொண்டிருந்தது (ரோமர் 8:26). அவருக்கு ஆறுதல் அளித்து ஊழியம் செய்யவும், தெய்வீகத் தயவு அவரோடு இன்னும் உள்ளது என்று உறுதியளிக்கவும், மரணம்வரை எல்லாவற்றையும் சகிக்க புதிய தைரியத்தையும், மன வலிமையையும், உறுதியான பலத்தையும் கொடுக்கவும் தேவன் அவருக்கு ஒரு தூதனை அனுப்பினார். இந்த ஒரு தெய்வீகக் கிருபையின் உதவியோடு நம்முடைய ஆண்டவர் அந்த நொடிப்பொழுதிலிருந்து, அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலையை முடிப்பதற்கு தளரா உறுதிகொண்ட தைரியத்தோடு முன் சென்றார். அதற்குப் பின் மனம் குழப்பமடைந்து, சோர்ந்துப்போன சீஷர்களிடம் வந்து, "இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்" என்று அவரால் அமைதியாகக் கூறமுடிந்தது. இப்பொழுது கசப்பான மனப்போராட்டம் நிறைவடைந்தது; பிணத்தின்மேல் போர்த்தப்பட்ட சீலையைப்போல, அவரை மரணத்திற்கேதுவான துக்கம் கொள்ள செய்யத்தக்கதாக அவர் முன் காணப்பட்டதான ஆழமான இருளை, பரத்திலிருந்து பிரகாசித்த ஒளியானது விரட்டியது. ஆம், தமக்கு உண்டான பயத்தின் விஷயத்தில் அவர் கேட்கப்பட்டார்; பயம் விரட்டப்பட்டது மற்றும் தேவன் தந்த பலத்தில் பலமடைந்தவராக, நியாயப்பிரமாணத்தின் எழுத்தையும், எழுத்தின் உறுப்பையும் தம்மால் நிறைவேற்ற முடியும் என்றும், அங்கீகரிக்கப்படத்தக்கதான பலியைச் செலுத்த முடியும் என்றும் இயேசு உணர்ந்தார் மற்றும் இதனால் மரணத்திலிருந்து தமக்கான இரட்சிப்பையும், உயிர்த்தெழுதலையும் குறித்து உறுதியடைந்தார்.

ஆண்டவரின் சார்பில் இந்த ஒரு பயம் பாவமாக இருக்கவில்லை; இது அவருடைய அடிச்சுவடிகளில் நடக்க முயற்சிக்கிறவர்களாகிய, நாம் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிற பயமேயாகும்; நமக்கருளப்பட்ட விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களானது மாறாததும், உறுதியானதுமான நிபந்தனைகளின் அடிப்படையிலேயே உள்ளது என்று உணரத் தவறாதிருப்போமாக (எபிரெயர் 4:1). இது தம்முடைய வாக்குத்தத்தங்களை பிதா நிறைவேற்றுவதற்குரிய அவரது வல்லமை மற்றும் விருப்பம் குறித்த சந்தேகங்களினால் ஏற்பட்ட பயமல்ல; மாறாக பிதாவின் நடவடிக்கைகளை இயக்கும் நீதியான கொள்கைகள் பற்றிய அறிவின் காரணமாகவும், இன்னுமாக குமாரன் தமது பலியின் உடன்படிக்கையை நிறைவேற்றும் பட்சத்தில் அதற்குப் பலனாக, நித்திய ஜீவனையும், மகிமையையும் நீதியாய் நிர்ணயித்திட்ட, வளைந்துக் கொடுக்காத பிரமாணம் பற்றிய அறிவின் காரணமுமான பயமாகும்; மற்றும் அதே நேரத்தில் தாம் ஒரு மனுஷனாக இருக்கின்றார் என்பதையும், இருதயமும், சரீரமும் பரிபூரணமாய் இருப்பினும், தெய்வீகக் கிருபையினால் வலிமையூட்டப்படவில்லையெனில் தாம் தவறிடுவார் என்பதையும் அவர் உணரத் துவங்கினபோது பயம் ஏற்பட்டது. "என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்" என்று ஆண்டவரின் இந்த ஒரு பயத்தையும், அவருக்குச் சகாயம் வந்த பிறப்பிடத்தையும் பற்றி சங்கீதக்காரன் கூறினார் (சங்கீதம் 73:26). இது பிள்ளைகள் கொண்டிருக்கும் அச்சமாகும்.

அங்கீகரிக்கப்பட்ட குமாரனாக அவர் தேவனிடத்தில் கொண்டிருக்கும் உறவுக்கு ஏற்றதான ஒரு பயமாகும்.

## அவர் குமாரனாய் இருந்தும்

அவர் குமாரனாய் இருந்தும், அவர் பட்ட பாடுகளினால் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். யேகோவா தேவனால் அவர் தொடர்ந்து குமாரன் என்று அங்கீகரிக்கப்பட்டது, அவருடைய பூரணநிலையை உறுதிப்படுத்துகின்றது; எந்த நேரத்தில் பாவம் செய்திருந்தாலும் அந்த உறவு பறிபோயிருக்கும். இதே கோட்பாட்டின் கீழ், தேவனுடைய புத்திரர்களாக நாம் அங்கீகரிக்கப்படுகிறோம், ஏனெனில் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவின் நீதியானது நமக்குத் தரிப்பிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் அவர் அங்கீகரிக்கப்பட்ட ஒரு குமாரனாகவும், பாவமில்லாமல் பரிபூரணமாகவும் இருந்தாலும், அவர் பூரணரானார் என்று அப்போஸ்தலர் அவரைக்குறித்து கூறுகிறார் — அவர் அனுபவங்களின் வழிமுறையாக – அவமானங்கள் மற்றும் உபத்திரவமான அனுபவங்கள் வழிமுறையாக – ஏதோ விதத்தில் பூரணராக்கப்பட்டார். அவர் எந்த விதத்தில் பூரணராக்கப்பட்டார் என்று நாம் கேள்விக்கேட்கலாம்; இதற்கான பதிலை தலைப்பிலுள்ள வேதப்பகுதியில் காணலாம்– "அவர் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். தாம் (இந்தப் படிப்பினையில்) பூரணரானபின்பு". தேவனுடைய குமாரன் என்று அவர் அங்கீகாரம் பெற்றிருந்தாலும்; எப்போதும் தேவன் அவர்மேல் பிரியமாக இருந்தாலும்; நீதியுள்ள தகப்பனுடைய பிரியத்திற்குரிய நம்பிக்கைகளைக் கொஞ்சமேனும் குலைத்துப்போடாதவராக இருந்தாலும்; அவர் வாழ்வதற்கு ஆதாரமே, அவருடைய தந்தை என்பதையும், சகல ஞானம், நன்மை மற்றும் கிருபைக்கும் தந்தையே ஊற்றும், காரணரும் ஆவார் என்பதையும் அவர் எப்போதும் அடையாளங்கண்டு கொண்டிருந்தபோதிலும்; தம்முடைய ஜீவனுக்காகவும் மற்றும் அதன் ஆசீர்வாதங்களுக்காகவும், உன்னத தேவனுக்கு தாம் ஆழமான நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருப்பதையும் அவர் எப்போதும் அடையாளங்கண்டு கொண்டிருந்தபோதிலும்; எல்லா ஞானத்திற்கும், கனத்திற்கும், மகிமைக்கும், வல்லமைக்கும் இருப்பிடமாக பிதா இருப்பதினால், அவருடைய பரிபூரண சித்தமே உன்னதமான பிரமாணமாகவும், பரிபூரண நீதிக்கும், சத்தியத்திற்கும், ஆழமான அன்பிற்கும், கிருபைக்கும், ஆழ்ந்த ஞானத்திற்குமான மிகுந்த பூரணமான வெளிப்படுத்துதல் என்றும் அவர் எப்போதும் அடையாளங்கண்டு கொண்டிருந்தபோதிலும்; பிதாவுக்கே எல்லா சூழ்நிலைகளிலும் எல்லா நேரங்களிலும் மிகுந்த அன்பான கீழ்ப்படிதலும், உண்மையும் உரித்தாகும் என்று அவர் எப்போதும் அடையாளங்கண்டு கொண்டிருந்தபோதிலும்; பிதாவின் சித்தத்தை அங்கீகரிப்பதிலும், அதைச் செய்வதிலும் எப்போதும் அகமகிழும் குமாரனாக அவர் இருந்தபோதிலும்; அவர் அழைக்கப்பட்டதான ஆசாரியத்துவப் பொறுப்புகளுக்கு அவசியமாய்க் காணப்படும் உறுதியான மற்றும் நிரூபிக்கப்பட்டக் குணங்களின் விஷயத்தில், அவர் இன்னும் பூரணரானவராக எண்ணப்படவில்லை. அனைவரும் தங்களுடைய நம்பிக்கைகளை எந்த உறுதியான அஸ்திபாரத்தின்மீது கட்ட வேண்டும் என்று அறிந்து கொள்ளும்படியாக, இந்த ஆசாரிய பொறுப்பின் விஷயத்தில், அவர் கடுமையானச் சோதனைகளினால் நிரூபிக்க வேண்டியது அவசியமாக இருந்தது. இந்த நோக்கத்திற்காகவே அவருடைய உண்மையானது கெத்செமனேயில் கடுமையாய்ச் சோதனைக்குள்ளாக்கப்பட்டது. அநேகமாக இறுதிச் சோதனையை முகமுகமாகச் சந்திக்கும்வரையிலும் நம்முடைய ஆண்டவரும்கூட அவரது நீதியான குணத்தினுடைய பலத்தை உணராதிருந்திருக்கலாம். அங்கு அவர் உச்சக்கட்டமான அளவுக்குச் சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டார் மற்றும் அந்தக் கடும்சோதனையின்கீழ் முழு அளவில் பூரணமாய் விளங்கின அவரது குணங்களானது, தெய்வீகக் கிருபையினால் மகிமையான பூரணமுள்ள அதன் முழுமையை அடைந்தது.

இப்படியாக பாடுபட்டதின் மூலம், சுயத்தை மிகவும் ஆழமாய் வெறுத்தவராக தேவனுடைய பூரண சித்தத்திற்குக் கீழ்ப்படிய கற்றுக்கொண்டார்; தேவனும் இப்படியாகக் காணப்படுவதற்கு அனுமதித்தார், ஏனெனில் இப்படி நிரூபிப்பது என்பது, அவர் அழைக்கப்பட்ட அந்த உன்னதமான நிலைக்குப் பாத்திரவானாக்கும் குணத்தினுடைய அந்தப் பூரண வளர்ச்சிக்கும், வெளிப்படுத்துதலுக்கும் தேவையாயிருந்து.

குணலட்சணத்தில் பூரணம் மற்றும் சரீரத்தில் பூரணம் ஆகிய இவ்விரண்டும் வேறுபட்ட காரியங்கள் என்பதை நாம் மனதில்கொள்ள வேண்டும். சரீரத்தில் பூரணம் என்பது தேவனுடைய வேலையாகும்; ஆனால் குணலட்சணத்தில் பூரணமாகுதல் என்பது, தெய்வீக வழிநடத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ், தெய்வீகப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதலின் மூலமான, அறிவுள்ள

சிருஷ்டிகளின் வேலையாக இருக்கிறது. ஆதாம் பூரணமான மனுஷனாகவும், குற்றம் இல்லாதவரும் அடிமைப்படாதவரும், அவருடைய ஆதி அழகில் மகிமையுள்ளவராக இருந்தார்; ஆனால் அவருடைய குணங்களை வளர்ச்சியடையப்பண்ணும் விஷயத்தில், அவர் வெகு சீக்கிரத்தில் தவறிவிட்டார்; ஆகவே பரிபூரண நிலையை இழந்தார். சோதனையின்றி குணங்கள் முற்றிலும் வளர்ச்சியடைய முடியாது. இது ஒரு செடியைப்போல: முதலில் மென்மையாக இருக்கும்; இதற்குத் தேவனுடைய அன்பின் பிரகாசம் அதிகமாய்த் தேவைப்படுகிறது; அவருடைய கிருபையாகிய தண்ணீரை அடிக்கடி இதற்குப் பொழிய வேண்டியதாய் இருக்கிறது; விசுவாசத்திற்கும், கீழ்ப்படிதலைத் தூண்டுவதற்கும், அவருடைய குணங்களைப் பற்றின அறிவை அஸ்திபாரமாகக்கொண்டு இது வளர்க்கப்படவேண்டும்; இப்படிப்பட்ட சாதகமான சூழ்நிலைகளின் கீழ் வளர்க்கப்பட்ட பின் இது பயிற்சிக்கொடுக்கும் கிள்ளிவிடுதலின் கரங்களுக்கு ஆயத்தமாகுகின்றது மற்றும் சில கடினமானவைகளைச் சகிப்பதற்கும் ஆற்றல் பெறுகிறது. மேலும் கொஞ்சம் கொஞ்சமாக குணங்களின் வலிமை வளர்ச்சியடையும்போது, அதற்குக் கொடுக்கப்படும் சோதனையானது, குணலட்சணத்தை அதிக வலிமையும், அழகும் மற்றும் கிருபையும் அடையச்செய்கின்றது; இறுதியில் குணலட்சணம் – உபத்திரவத்தின் வாயிலாக – உறுதியடைகின்றது, ஸ்திரப்படுகின்றது, பூரணப்படுகின்றது.

நம்முடைய ஆண்டவருடைய குணத்தின் விஷயத்தில், அதாவது அதன் ஆரம்பப் பருவத்தில் பூரணமாக காணப்பட்ட விலையேறப்பெற்ற இந்தக் குணமானது, இறுதியில் அது முழுமை அடைந்ததில் பூரணப்படுத்தப்பட்டு, உறுதிபடுத்தப்பட்டு, நிலை நிறுத்தப்பட்டதற்கு முன்பு வரையிலும்கூட, அதற்கு வைக்கப்பட்டதான சகலவிதமானச் சோதனைகளின் வழியாக அதன் பூரண நிலையைத் தக்க வைத்துக்கொண்டது. இது நம்முடைய பாடத்தின் இறுதி தலைப்புக்கு வழி நடத்துகிறது; அதாவது —

## யாருக்குக் கிறிஸ்து நித்திய இரட்சிப்புக்குரிய காரணராக இருக்கின்றார்?

"தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்."

"தாம் பூரணரான பின்பு" என்ற இந்தத் துவக்க வார்த்தைகளில் நம்முடைய சிந்தையை அதிகமாகச் செலுத்த வேண்டும். அதுவும் முன்னதாக காண்பிக்கப்பட்டபடி, உபத்திரவம் எனும் வலியுடன்கூடிய பயிற்சியின் வழியாக அவர் பூரணரானார். இப்படியாகப் பூரணப்பட்ட அவர், தேவனுக்கும், மனுஷனுக்கும் மத்தியஸ்தராகவும், பிரதான ஆசாரியராகவும் பொறுப்பை ஏற்பதற்குப் பொருத்தமானவர் ஆனார். அவருக்குக் கீழ்ப்படியும் யாவரின் சார்பாகவும் அவர் அந்த ஆசாரியப் பொறுப்பை நிறைவேற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆண்டவருடைய நியாயமான வழியை நேசிக்காத கீழ்ப்படியாதோர், அதில் நடப்பதற்கான எந்த விருப்பமும் இல்லாததினால், ஆண்டவரின் — மத்தியஸ்தரின் வேலையினாலான எந்தப் பலனையும் அடையமாட்டார்கள். ஆனால் அவருக்குக் கீழ்ப்படியக்கூடியவர்களுக்கு, "அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு (ஆறுதல் அளித்திட, விடுவித்திட) உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்."

ஆகவே உபத்திரவங்கள் வழியாக அவர் முதலில் பூரணராக்கப்பட்டார். சுவிசேஷ யுகத்திலுள்ள அனைத்து அன்பான சீஷர்களும் எப்படிப்பட்ட பாடுகள், அவமானங்கள், துக்கங்கள், நிந்தனைகளுக்குள் கடந்துபோக வேண்டும் என்பதைப் பரலோக தந்தை அறிந்திருக்கின்றார். இந்த வனாந்தரத்திலிருந்து வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அந்த தேசத்திற்கு பயணம் செய்வதற்குள், சபைக்கு எதிராக விறகுகட்டைகள், சித்திரவதைக்குரிய கருவிகள் மற்றும் நாகரிகமான சித்திரவதை முறைகளைக்கொண்டும், மத தலைவர்களைக்கொண்டும் சாத்தான் போராடுவான் என்று எல்லாவற்றையும் நோக்கும் நம் தேவன் அறிவார். துன்மார்க்கனுடைய அக்கினியாஸ்திரங்கள் போன்ற கசப்பான வார்த்தைகள் அவர்களை காயப்படுத்தும் என்று அவர் முன்னறிந்திருந்தார் (சங்கீதம் 64:2-3). ஆகவே, "தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது" (எபிரெயர் 2:10). "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே

நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபிரெயர் 4:15-16). ஆ! எவ்வளவு கவனமாக நம்முடைய ஞானமுள்ள பரலோக பிதா தம்முடைய சகல ஜனங்களுக்கான நலன்களை முன்னதாகவே கவனத்தில் கொண்டிருந்திருக்கின்றார். அவரது குணலட்சணங்கள் மற்றும் கையாளுதல்களின் இந்தக் கணநேர கண்ணோட்டங்களின் ஊடாக, "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" — என்று சீஷர்களிடம் நம்முடைய ஆண்டவர் சொன்ன வார்த்தைகள் எவ்வளவு உண்மையாக உள்ளது என்பதை நாம் காணலாம்.

ஆனால் உபத்திரவங்களின் வழியாக ஆசாரியத்துவத்தின் பொறுப்புக்காகப் பூரணப்படுத்தும் செயல்முறை ஒருபக்கம் இருக்க, நம்முடைய ஆறுதல், திருப்தி மற்றும் தேறுதலுக்காக நம்முடைய பிரதான ஆசாரியன் பூரணப்படுத்தப்பட்டது பற்றிய உண்மையும் கவனிக்கப்பட வேண்டும். பாவத்தினால் சூழப்பட்டிருந்தபோதிலும், பாவஞ்செய்யத்தக்கதாக, அனைத்துக் கட்டங்களிலும் சோதிக்கப்பட்டிருந்தபோதிலும் இவர் ஒருவரே, "பாவமே அறியாதவரும், வாயில் வஞ்சனை காணப்படாதவருமாக" இருந்தவர். "அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக" இருந்தபோதிலும், நம்முடைய துயரத்திற்கும், துக்கத்திற்கும் பழக்கப்பட்டவராய் இருந்தார். கசப்பான அனுபவங்கள் மூலம் அவர் நமக்குப் பின்வருமாறு பரிந்துபேசுபவராகத்தக்கதாக, நம்முடைய பிரதான ஆசாரியரெனப் பூரணப்படுத்தப்பட்டார் — அதாவது (1) நம்முடைய இரட்சிப்பைச் சட்டப்பூர்வமாக சாத்தியமாக்குவதற்குத் தேவன் அங்கீகரிக்கக் கூடிய பலியை அவர் செலுத்துவதின் மூலமும், (2) மகிமையான சபையாக, கறைதிரை அற்றவர்களாகக், குற்றமற்றவர்களாக தேவனுக்கு முன் நம்மை நிறுத்தும்வரையில், நம்மைச் சுத்திகரித்துத் துப்புரவாக்கித் தூய்மைப்படுத்துவதின் மூலமும் அவர் நமக்குப் பரிந்து பேசுபவராகத்தக்கதாக, நம்முடைய பிரதான ஆசாரியரெனப் பூரணப்படுத்தப்பட்டார்.

பரலோக பிதாவின் பூரணம் மற்றும் ஸ்தானம்/பொறுப்புகள் அனைத்தும், நம்முடைய ஆண்டவர் அவருடைய தந்தைக்குக் கீழ்ப்படிவதற்கானக் காரணமாக இருந்ததுபோலவே, நம்முடைய மாபெரும் பிரதான ஆசாரியனுக்குரிய தனிப்பட்ட மற்றும் பொறுப்பின் விஷயத்திலான முழுமையானப் பூரணமும், மற்றும் இந்தப் பொறுப்பில் தேவனால் அவர் அமர்த்தப்பட்டார் என்ற உண்மையும், சபையும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்ற காரியத்திற்கு பலமான ஊக்கமாகவும், பலமான கோரிக்கையாகவும் காணப்படுகிறது. தேவன் நமக்கு ஒரு கற்றுக்குட்டியானவரை நியமிக்கவில்லை அல்லது சுயநலத்தினாலோ, இழிவான ஆதாயத்தினாலோ இயக்கப்படும் ஒருவரை நியமிக்கவில்லை; மாறாக ஞானமுள்ள மற்றும் நன்மையான ஒவ்வொரு கட்டளையைக் கொடுப்பவரும், அவரைப்போல நாமும் உறுதிபெற்று, பலப்படுத்தப்பட்டு, ஸ்திரப்படும் வரையில், அன்பினால் நமக்குக் கிருபையின்மேல் கிருபையளிக்கக்கூடிய மிகப்பெரிய பிரதான ஆசாரியரை தேவன் நமக்கு ஏற்படுத்தினார்.

இந்த மகிமைக்கு நம்மை நடத்தக்கூடிய இந்தப் பயிற்சியானது, நம்முடைய ஆண்டவர்தாமே அனுபவித்த, பயிற்றுவிக்கும் விதத்திலான பாடுகளின், அளவான பாடுகளாக இருப்பது அவசியமாயுள்ளது. சபை நீதியில் பூரணமடைவதற்கு மட்டுமே அழைக்கப்படாமல், இயேசுவின் சரீர அங்கத்தினர்களெனக் கிறிஸ்துவோடு ஆசாரிய பொறுப்புகளில் பங்கெடுப்பதற்காகவும் அழைக்கப்பட்டுள்ளார்கள் என்பதினால், அவர்களும் அவமானங்களிலும், பலியிலும், மரணபரியந்தமும் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். இப்பொழுது இந்த யுகத்தில், அவருக்குக் கீழ்ப்படிவதே மேற்கூறியவைகள் அனைத்தையும் குறிப்பதாய் இருக்கும்; ஏனெனில் நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. 1 தெசலோனிக்கேயர் 4:3.

இந்த மகாபெரிய பிரதான ஆசாரியரிடம் நம்மை முழுமையாக ஒப்புக்கொடுக்கையில், அவருடைய அன்பையும், அவருடைய குணம் மற்றும் நோக்கத்தின் பூரண வாய்மையையும், உன்னதமான அவருடைய ஞானமும் மற்றும் கிருபையும் முழுமையாகப் பெறக்கூடிய உறுதியைச் சபை பெறுகிறது மற்றும் சகல காரியங்களிலும் நற்குணம், அன்பு மற்றும் பரந்தமனப்பான்மையின் மேன்மையான மற்றும் பரிசுத்தமான கோட்பாடுகளினால் அவர் இயக்கப்படுகின்றார் என்ற உறுதியைச் சபை பெறுகிறது. அவர் மூர்க்கமானச் சோதனைகளினால் தாக்கப்பட்டபோதிலும், அவர் பூரணத்தினின்று கொஞ்சமும் விலகிடவில்லை. அவருடைய குணத்தின் ஒவ்வொரு காட்சியும் மற்றும் சாட்சியும் முழுமையான நம்பிக்கையை நமக்குள் தூண்டுகின்றபடியால், அவருக்குக்

கீழ்ப்படிவது என்பது ஒவ்வொரு அடியெடுத்து வைத்தலிலும், பூரணத்திற்கு நேரான நம்முடைய முன்னேறுதலைக் குறிக்கின்றதாய் இருக்கும். இப்படிப் பின்பற்றக்கூடிய ஒவ்வொருவருக்கும் அவர் "நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராயிருக்கின்றார்". பாவம் இல்லாதவரும், எந்தக் குறைப்பாடுகள் இல்லாதவரும், பலவீனங்களை உணரக்கூடியவரும், தம்முடைய பூரணத்தில் மகிமையானவரும், தாம் பெற்ற பொறுப்புகளில் மகிமையானவராகவும் இருக்கக்கூடிய இப்படிப்பட்ட பிரதான ஆசாரியருக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக. ஒருவேளை அவர் அபூரணமான மனுஷராக, சில மேன்மையான தகுதிகளை மட்டுமே கொண்டவராக, நம்மைப்போல தவறுகள் செய்வதற்கு உட்பட்டவராக, கணிப்பில் குறைவுள்ளவராக, சுயநலத்தோடு அல்லது கீழ்த்தரமான செயல்முறை கொள்கைகளோடு செயல்படுபவராக அல்லது அவருடைய கண்களிலிருக்கும் உத்திரத்தை உணராமல் மற்றவரின் கண்களிலிருக்கும் துரும்பை அகற்றும் முயற்சிகளை ஏறெடுக்கக்கூடியவராக இருந்தால், அவர் காட்டும் வழியில் நம்மை நாம் ஒப்படைப்பதற்கு நிச்சயமாகப் பயப்பட்டிருந்திருப்போம் மற்றும் இப்படிப்பட்ட பிரதான ஆசாரியரை சர்வ வல்லமையுள்ள தேவன் ஏன் கொடுத்தார் என்றும் ஆச்சரியபட்டிருந்திருப்போம்! ஆனால் நம்முடைய பிரதான ஆசாரியர் அப்படிப்பட்டவரல்ல. அவருடைய பூரணத்தைக்குறித்து யேகோவா தேவன்தாமே சாட்சிகொடுத்திருக்கிறார் மற்றும் நமக்கான அவருடைய மாபெரும் அன்பானது, ஆயிரக்கணக்கான வழிகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; அதில் பிரதானமாக அவர் தம்மையே நமக்காகக் கொடுத்ததிலாகும்.

அவர் மாம்சத்தில் வருவதற்கு முன், எப்பொழுதும் நீதியின் பிரமாணமாகவே காணப்பட்ட – தேவனுடைய சித்தம் செய்வதில் நம் ஆண்டவர் கொண்டிருந்த உண்மைக்கு ஆதாரமானது, சிருஷ்டிப்பின் வேலைகளிலும் மற்றும் அதைச் சார்ந்த வேலைகளிலும் தேவனோடு இணைந்து செயல்படும் ஒவ்வொரு பணியிலும் மனமகிழ்ச்சியோடு அவர் கிரியைச் செய்தார் என்பதில் விளங்குகின்றது. மனித நிலைக்கு தம்மைத் தாழ்த்துவது, இப்படிப்பட்ட உன்னதமான பணியிலிருந்து கீழே இறங்குவதாகும்; ஆயினும் இதை மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் செய்தார். அதற்குப் பின் பூமிக்குரிய அவருடைய சோதனைகள் வந்தது. இறுதியாக கெத்செமனே மற்றும் கல்வாரியின் கடுமையான சோதனைகள் வந்தது. இங்கு தேவனிடத்திலான அவரது உண்மைக்கான ஒரு சோதனை, அதாவது அவருக்கு உண்டான யாவையும் தியாகம்பண்ணி உண்மையை நிரூபிப்பதற்கான ஒரு சோதனை வந்தது. இதைக் கடந்த பிற்பாடு, ஞானமுள்ளவரும், அன்புள்ளவரும், வல்லமையுள்ளருமான தேவனிடம் ஆண்டவர் தம்முடைய ஆவியை ஒப்புக்கொடுத்து, தேவனுடைய அன்பு மற்றும் இரக்கத்தினால் தாம் இரட்சிக்கப்படுவதற்கு எதிர்பார்த்தவரானார் (லூக்கா 23:46). இது உண்மையில் ஒரு கடுஞ்சோதனையாக இருந்தபோதிலும், அந்த நேரத்தில் இந்தச் சோதனையின் ஒவ்வொரு அம்சத்தினுடைய தேவையைக் குறித்து அவரால் காண முடியாதபோதிலும், (மத்தேயு 28:39, 42, 44) தம்முடைய நேசகுமாரனைத் துன்பப்படுத்தும் தேவையற்ற வலியை அனுமதியாதளவுக்குத் தேவனுடைய அன்பு மிகவும் பெரிது என்பதை அவர் அறிந்திருந்தார் மற்றும் இதனால் தேவனுடைய வழிகளை அவ்வேளையில் அவரால் புரிய முடியாதபோதிலும், இயேசு தேவன்மேல் முழு நம்பிக்கைக்கொண்டார்.

*****

# பிலாத்துவுக்கு முன்பாக இயேசு

## மாற்கு 15:1-15; மத்தேயு 27:1-30; லூக்கா 23:1-25; யோவான் 18:28-40; 19:1-16.

*"இயேசுவோ, அப்பொழுது உத்தரவு ஒன்றும் சொல்லவில்லை; அதினால் பிலாத்து ஆச்சரியப்பட்டான்." மாற்கு 15:5*

ஆலோசனைச் சங்கத்தாருடைய வழக்கமான முறைகளை மீறி கூட்டம் கூடின காரியமானது, சூரியன் விடிவதற்கு முன்னதாகச் சட்டப்பூர்வமான தீர்ப்பை வழங்கிட முடியாது; ஆகையால் அவர்கள் காலையில் கூட்டம் கூடினதும், கலந்து ஆலோசனை பண்ணினதும், இரவில் அவர்கள் எடுத்திட்ட முடிவுகளுக்கு அதிகாரப் பூர்வமாய் உறுதிப்படுத்தும் நோக்கத்திற்கு மாத்திரமாகவே கூடிய கூட்டமாகும். அவர்கள் இயேசுவைக் கட்டி, பிலாத்துவினிடத்திற்கு வந்தார்கள்; மேலும், தங்களுடைய நோக்கம் நிறைவேற்றப்படத்தக்கதாக முழுக் கூட்டத்தினரும் இயேசுவோடுகூட பிலாத்துவினிடத்திற்கு வந்தார்கள் (லூக்கா 23:1).

வசனங்கள் 2-5. ஆலோசனைச் சங்கத்தார், தாங்கள் நியாயப்பிரமாணத்திற்காக மிகவும் வைராக்கியம் பாராட்டுபவர்களெனத் தங்களைக் குறித்துக் காண்பித்திட விரும்பின ஜனங்களிடம், தாக்கத்தை ஏற்படுத்தத்தக்கதாக தேவதூஷணம் எனும் குற்றத்தை முன்வைத்ததிலும், மற்றும் தங்களுடைய மதக் கருத்துகளையெல்லாம் பொருட்படுத்தாத உரோம ஆளுநராகிய பிலாத்துவின் முன்னதாக முற்றும் வேறானதும், பொய்யானதுமான குற்றச்சாட்டுகளை முன்வைத்ததிலும் ஆலோசனை சங்கத்தாருடைய பொல்லாப்பான நுண்ணறிவு மிகவும் தெளிவாய் வெளிப்படுகின்றது. பிலாத்துவுக்கு முன்னதாகக்கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டானது, இராஜ துரோகம் பற்றின குற்றச்சாட்டாகும்; இது உரோம அதிகாரிகளுக்குக் கோபத்தையும், எரிச்சலையும் தூண்டக்கூடிய ஒரு குற்றச்சாட்டாகும். இயேசு கலகத்தைத் தூண்டிவிடுவதாகவும், வரிப்பணம் செலுத்துவதைத் தடைப்பண்ணுவதாகவும், யூதர்களுடைய இராஜா எனும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டதாகவும், இப்படியாக இராயனுக்கும் மற்றும் உரோம அரசாங்கத்திற்கும் எதிராக சதித்திட்டம் பண்ணுவதாகவும் குற்றஞ்சாட்டினார்கள்.

இதிலுள்ள இரண்டாம் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானதாக இருப்பினும் (மத்தேயு 22:21), மற்ற இரண்டும் கொஞ்சம் உண்மையானது போன்று இருந்தது; மற்றும், இவைகளுடன் அநேகம் முக்கியமற்றத் தனித்தனி குற்றச்சாட்டுகளும் சேர்த்துக்கூறப்பட்டது. ஆனால் இவைகளில் எவற்றிற்கும் கர்த்தர் உத்தரவு சொல்லவில்லை; இப்படியான அபாயமான சூழ்நிலையில், கர்த்தர் தம்மைத் தற்காத்துக்கொள்ள எந்த முயற்சியும் எடுக்காதது குறித்துப் பிலாத்து ஆச்சரியமடைந்தார்.

லூக்கா 23:6-14 வரையிலான வசனங்கள். பொறாமையின் காரணமாகவே தன்னுடைய இந்தக் குற்றமற்றக் கைதிக் கையளிக்கப்பட்டுள்ளார் என்பதைப் பிலாத்துக் கண்டுபிடித்து, தன்னுடைய இந்தக் குற்றமற்றக் கைதியை விடுவிப்பதற்கு எடுத்திட்ட பல்வேறு பிரயாசங்களானது, மதத்தலைவர்களினால் தூண்டிவிடப்பட்டு, இயேசு மரிக்க வேண்டுமெனக் கூக்குரலிடும் மூர்க்கத்தனமான மக்கள் கூட்டத்திற்கு முன்பாக பயனற்றதாகக் காணப்பட்டது; இயேசுவைப் பற்றின நினைவுகள் அவமானத்தினால் மூடப்படத்தக்கதாக/புதைந்துப்போகத்தக்கதாக, மிகவும் அவமானமான மற்றும் கொடூரமான முறையாகிய சிலுவையில் அறையப்படுதல் மூலமாக இயேசு மரிக்க வேண்டுமென, மதத்தலைவர்களால் தூண்டிவிடப்பட்ட ஜனக்கூட்டத்தார் கூக்குரலிட்டனர்.

லூக்கா 23:15-ஆம் வசனம். பின்னர் பிலாத்து, கொள்கைகளைக்காட்டிலும் விவேகமான நடத்தைக்குக் கொடுக்கிற முக்கியத்துவத்தினால் தாக்கத்திற்குள்ளாக்கப்பட்டு, ஜனங்களைத் திருப்திப்படுத்த வேண்டுமென்று விரும்பி, இயேசு கசையடி அடிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்படும்படிக்கு ஒப்புக்கொடுத்தார்; எனினும் அதே வேளையில் தனது கைதிக் குற்றமற்றவர் என்பதைத் தெரிவித்து, இந்த நீதிமானை அவர்களுக்குக் கையளித்த விஷயத்தில், தன்னுடைய குற்றமற்ற நிலையைத் தெரிவிக்கும் வண்ணமாக, தனது கைகளைத் தண்ணீரினால் கழுவினார். பிலாத்து உரோம அரசாங்கத்திற்கு எதிராக செயல்படுகின்றார் என்றும், உரோம அரசாங்கத்திற்கு எதிரான கலகங்களுக்கும், சதித் திட்டங்களுக்கும் ஆதரவு தெரிவிப்பதன் மூலம், இராயனுடைய நம்பிக்கைக்குத் துரோகம் புரிகின்றார் என்றும் இராயனுக்குத் தெரிவிக்கப்படுமெனக் கலக ஜனக்கூட்டத்தார், பிலாத்துவை மிரட்டுவது வரையிலும், பிலாத்து இயேசுவைக் காப்பாற்றும் தன்னுடைய பிரயாசங்களைக் கைவிடவில்லை. யோவான் 19:12-16; மத்தேயு 27:24, 25.

*****

# பிரதான ஆசாரியனுடைய முன்னிலையில் இயேசு

### மாற்கு 14:53-64; மத்தேயு 26:47-75; லூக்கா 22:47-65; யோவான் 18:2-27

***"அவர் அசட்டைப்பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார்." ஏசாயா 53:3***

மாற்கு 14:53. இயேசு முதலாவதாக அன்னாவிடம் கொண்டு செல்லப்பட்டார் (யோவான் 18:13); அன்னா என்பவர் உரோமர்களால் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும், பிரதான ஆசாரியனுக்குரிய ஸ்தானமானது, வாழ்நாள் முழுவதுமுள்ள ஸ்தானமானபடியால், இவர்தான் நியாயப்பிரமாணத்தின்படி நியாயமாய்ப் பிரதான ஆசாரியனாய்க் காணப்பட வேண்டியவர் ஆவார் மற்றும் அன்னா இவ்வாறாகவே யூதர்களால் அநேகமாகக் கருதப்பட்டிருந்தபடியாலே, அவரிடத்தில் ஆலோசனைக்காக முதலாவது நாடப்பட்டது. இவரது மருமகன் (அதாவது ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று தீர்க்கத்தரிசனம் உரைத்தவருமாகிய - யோவான் 18:14) காய்பா, உரோமர்களால் நியமிக்கப்பட்டுத் தற்போது பணியாற்றிக்கொண்டிருந்த பிரதான ஆசாரியனாய்க் காணப்பட்டார். (மத) அதிகாரிகள் கொண்டிருந்த உணர்வுகளோடு அன்னா ஒருமனப்பட்டிருந்தது தெளிவாகத் தெரிகின்றது மற்றும் இயேசுவிடம் அவரது போதகங்கள் குறித்தும், அவரது சீஷர்கள் குறித்தும் சில கேள்விகள் கேட்ட பிற்பாடு, அவரைக் காய்பாவிடம் கட்டுண்டவராக அனுப்பிவைத்தார் (யோவான் 18:19-24).

இரவு நேரத்தில் மரணத்தண்டனைக்கு ஏதுவான குற்றங்களுக்கான விசாரணையை நடத்துவதற்கு, யூதருடைய நியாயப்பிரமாணமானது அனுமதி வழங்காததினாலும், அதுவும் அன்று பஸ்கா இராப்போஜனத்தினுடைய இரவாக இருந்தபடியால், அப்படியானதொரு விசாரணை மேற்கொள்ளப்படுவது என்பது, இன்னும் மறுப்பிற்கிடமானதாக இருந்தபடியால், அத்தேசத்தின் பிரதிநிதிகள் தேவனால் அபிஷேகிக்கப்பட்ட தங்கள் மேசியாவை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கும் குற்றத்தில் பங்கெடுக்கத்தக்கதாக, சம்மதத்தோடு ஒன்றுகூடி வந்த இந்தக் கூடுகையானது, சட்டத்திற்கு எதிரான கூடுகை என்பது தெளிவாய்த் தெரிகின்றது. இந்தக் கூடுகையிலிருந்து அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு, நிக்கொதேமு போன்ற சில மனிதர்கள் நிச்சயம் கவனமாய்த் தள்ளிவைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும் மற்றும் புதிய போதகருக்கு (இயேசுவுக்கு) ஆதரவானவர்கள் என்று அறியப்பட்டிருந்த இன்னும் சிலரும் அநேகமாக தள்ளிவைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். இவர்கள் இக்காரியங்கள் குறித்து அநேகமாய் எதுவும் அறியாமல் காணப்பட்டிருக்க வேண்டும் (யோவான் 19:38, 39; 7:50, 51).

வசனங்கள் 55-59. எத்துணை ஆச்சரியப்படத்தக்கதான உண்மை இங்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது: அதாவது பூமியிலேயே மிகவும் கடாட்சிக்கப்பட்ட/தயவு பாராட்டப்பட்டதான ஜாதியினுடைய மாமனிதர்கள், கல்வியறிவுள்ள மனிதர்கள், ஞானவான்கள், அதிகாரிகள், வயதானவர்களும், அனுபவசாலிகளுமான மனிதர்கள், மதப் போதகர்கள், உலகம் கண்டதிலேயே தூய்மையானவராகவும், மிகச் சிறந்த பண்புகள் உடையவராகவும் காணப்படுகின்ற ஒருவருக்கு எதிராக இப்படியாய் வேண்டுமென்றும், நீண்டகாலமாய் முன்கூட்டியே திட்டமிட்டும், பொல்லாப்பாய்க் கூட்டுச் சதி ஆலோசனை பண்ணினது தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் பொதுவிடங்களில் உபதேசிக்கையில், அவரது வார்த்தைகளினாலேயே, அவரை அகப்படுத்தும்படிக்கு இரகசிய பிரதிநிதிகளை அவர்கள் அடிக்கடி அனுப்பிவைத்தது மாத்திரமல்லாமல், இயேசுவைக் காட்டிக்கொடுக்கத்தக்கதாக, உண்மையற்ற ஓர் அப்போஸ்தலனுக்கும் மற்றுமாக அவருக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டுகளும் இல்லாமல் இருந்தபோதிலும், அவரைக் கைதுபண்ணத்தக்கதாக ஓர் உரோமப் போர்ச்சேவகக் குழுவினருக்கும் இறுதியில் இலஞ்சம் கொடுத்தார்கள். அடுத்ததாக, இந்த மரியாதைக்குரிய, கல்வியறிவுள்ள, மேன்மைமிக்கக் கூட்டத்தார், தாங்கள் பகைத்திட்டதான கைதியைக் கைதுசெய்த பிற்பாடு, அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கத்தக்கதாக, நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்க்கின்ற பிரகாரமாய் ஒன்றுக்கொன்று இசைவாய்க் காணப்படுகின்றதான இரு சில சாட்சிகளைக் கண்டுபிடிப்பதில் விறுவிறுப்பாய்க் காணப்பட்டார்கள் (உபாகமம் 19:15). அவருக்கு எதிராய் விருப்பத்தோடு பொய்ச்சாட்சிச் சொன்னவர்கள் அநேகரைக் கண்டுபிடித்தார்கள், ஆனால், எவருடைய சாட்சியும் ஒன்றோடொன்று இசைவாய்க் காணப்படவில்லை.

வசனங்கள் 60-62. நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்க்கும் இக்காரியத்தினை அவர்கள் திருப்திபண்ணிட முடியாதபோது, பிரதான ஆசாரியன் இயேசு தம்மையே குற்றவாளியென்று காண்பிக்கத்தக்கதாக, அவரை வற்புறுத்துதலுக்குள்ளாக்கும் வண்ணமாக, "இவர்கள் உமக்கு விரோதமாய்ச் சாட்சிச் சொல்லுகிறதைக்குறித்து, நீர் ஒன்றும் சொல்லுகிறதில்லையா?" என்று கேட்டார். ஆனால் இயேசுவோ உண்மையானது அத்தருணத்தில் விரும்பப்படவில்லை என்றும், தங்களுடைய இருதயத்தில் கொலைப்பாதகத்தை நன்கு சீராட்டி வைத்திருக்கும் இந்த மனுஷர்களுக்கு, தாம் பேசும் உண்மை பொருட்டாய் இராது என்றும் அறிந்தவராக, (ஞானத்துடன்) அமைதி காத்து, எதுவும் பேசாமலிருந்தார். இன்னுமாகத் தம்முடைய ஜீவனைப் பலிச்செலுத்துவதற்கான தமது வேளை வந்துள்ளது என அவர் அறிந்திருந்தபடியால், அவர் தம்மைத் தற்காத்துக்கொள்ள வேண்டும் என்ற மனநிலையிலும் இல்லை. ஆனால் "நீர் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? என்று கேட்கப்பட்டதன் வாயிலாக, அவர் தம்மை வெளிப்படுத்துவதற்கு வலியுறுத்தப்பட்டபோது, தமது பதிலானது, தம்முடைய மரணத்தை உத்தரவாதமாக்கிடும் என்பதை அறிந்தவராக, அவர் நிதானமாய் "நான் அவர்தான்" என்று கூறி, "மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள்" என்ற தீர்க்கத்தரிசனத்தையும் கூறினார்.

இந்தத் தீர்க்கத்தரிசனமானது அவரது மரணம் மற்றும், உயிர்த்தெழுதலின் நிச்சயத்தைச் சுட்டிக்காட்டினது மற்றும் இன்னுமாக சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில் அவர் வல்லமையிலும், மகா மகிமையிலும், அதாவது அவரது இராஜ்யத்தினுடைய வல்லமையிலும் மற்றும் மகிமையிலும் திரும்பி வருதலைச் சுட்டிக்காட்டுகின்றதாகவும் இருந்தது; இந்த இராஜ்யத்தைக் குறித்து, அது இவ்வுலகத்தினுடையதாகவோ (அ) சாத்தான் பிரபுவாகக் காணப்படுகின்றதான இந்த யுகத்தினுடையதாகவோ இராமல், நீதி வாசம் பண்ணுகின்ற இனிவரும் உலகத்தினுடையதாய் இருக்குமென அவர் முன்னமே வலியுறுத்திக் கூறியுள்ளார் (யோவான் 14:30; எபிரெயர் 2:5; 2 பேதுரு 3:13).

தாம் தேவனால் பிறந்தவர் என்றும், தாம்தான் நீண்டகாலமாய் முன்னுரைக்கப்பட்டு வந்த மேசியாவாக, இஸ்ரயேல் மற்றும் உலகத்தினுடைய இரட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றுமுள்ள அவரது இந்த வெளிப்படையான மற்றும் பயமற்ற ஒப்புக்கொள்ளுதலானது, தேவதூஷணமாக எடுத்துக்கொள்ளப்பட்டது மற்றும் மாய்மாலமான பிரதான ஆசாரியனோ, தீர்க்கத்தரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டதான எழுத்துக்களை நிறைவேற்றுகிறவராக, தங்கள் மத்தியில் நின்றுகொண்டிருக்கின்றதான ஸ்தோத்திரிக்கப்பட்டவருக்கு அடையாளமான தனது வஸ்திரத்தை, இப்படியானதொரு தேவதூஷணத்தைக்கேட்டு அதிர்ச்சியும், நடுக்கமும் அடைந்ததாகக் காண்பிக்கும் வண்ணமாகக் கிழித்தார் மற்றும் "இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? தேவ தூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்றார். அதற்கு அவர்களெல்லாரும் இவர் (லேவியராகமம் 24:16; உபாகமம் 18:20-இல் பரிந்துரைக்கப்பட்டபடி தேவதூஷணத்திற்குரிய தண்டனையாகிய) மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறார் என்று தீர்மானம் பண்ணினார்கள்."

இப்படியாக யூத அமைப்பானது, அவிசுவாசம் மற்றும் குற்றம் எனும் குழிக்குள்/சாக்கடைக்குள் விழுந்தார்கள் மற்றும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் விஷயத்திலும், அவரை நிராகரிக்கும் விஷயத்திலும் ஜனங்கள் — பரிசேயர்களில் அல்லது அதிகாரிகளில், எவரேனும் அவரை விசுவாசிக்கின்றார்களா எனக் கருதி பார்த்ததினால் — ஜனங்கள் தங்கள்மேல் பொறுப்பினை ஏற்றுக்கொண்டவர்களாய்க் காணப்பட்டு, அதிகாரிகளோடுகூட குழிக்குள் விழுந்து, "இவரது இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று சத்தமிட்டார்கள். "மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் (அவரது சத்திய வார்த்தைகளின் பேரில்) பற்றுதலாயிருப்பதே நலம். பிரபுக்களை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்" என்று சங்கீதக்காரன் நன்றாய்ச் சொல்லியிருக்கின்றார் (சங்கீதம் 118:8, 9). இதற்கு (யூத யுகத்திற்கு ஒத்த) சுவிசேஷ யுகத்தில், தற்காலத்தில் காணப்படுகின்றதான கிறிஸ்தவர்கள் கவனம் செலுத்துவார்களாக; சத்தியமானது அதன் ஏற்றக்காலத்தில் மீண்டுமாக வெளிப்படுகையில், இது தேவனுடைய ஜனங்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணியுள்ளவர்களை நெருக்கடிக்குள்ளாகக் கொண்டுவந்து, "அவனவனுடைய (விசுவாசத்தின்) வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று பரிசோதிக்கின்றதாய்" இருக்கின்றது. நாம் மனித ஆதரவுகளின் மீது சாய்வோமானால், நாம் நிச்சயமாய் விழுந்துபோவோம்; ஆனால் கர்த்தருடைய வார்த்தையோ என்றென்றும் தாங்கும் தன்மையுள்ளதாகும்.

*****

**R 1810**

## பரிசுத்தமாவதற்கே காலம் இன்னும் வேண்டுமோ?

**பரிசுத்தமாவதற்கே காலம் இன்னும் வேண்டுமோ ?**
தேவனோடே அதிகம் நேரம் இன்னும் பேச வேண்டுமே,
அவருக்குள்ளே எப்போதுமே அடங்கியிருத்தல் வேண்டுமே,
அவர் வாயின் வார்த்தைகளாலே போஷிக்கப்படல் வேண்டுமே,

தேவபிள்ளையோடே கூடிவாழ்தல் மிகவும்வேண்டுமே,
ஆவியிலே எளிமையான சோதரர்க்குதவ வேண்டுமே,
அவர் ஆசீர்வாதம் அன்பையுமே தேட மறக்கவேண்டாமே,
பரிசுத்தமாவதற்கே காலம் இன்னும் வேண்டுமோ ?

இப்பாருலகம் வேகமாக ஓடுகின்றபோதினிலே,
நாம் பரிசுத்தமாதலுக்கே காலம் எடுத்துக்கொள்ளுமே,
இயேசுவோடே அதிகமாக அந்தரங்கமாய் பேசவே –
நேரம் இன்னும் ஒதுக்கவேண்டுமே,
இயேசுவையே நோக்கும்போதில் அவரைப்போல மாறவே.
உன் நண்பர்கூட இயேசுவின் பண்பை உன்னில் காண்பாரே.

பரிசுத்தமாதலுக்கே காலம் எடுத்துக்கொள்ளுமே,
இயேசுவையே வழியாய்க் கொண்டு மாறிடவே வேண்டுமே.
இயேசுவைவிட முந்தியோட உன்னால் முடிந்திடாதே,
என்னதான் வாழ்க்கையிலே மேடுபள்ளம் வந்திட்டாலும்,
இயேசுவையே முந்திச்செல்ல முயற்சிசெய்யவேண்டாமே,
இன்ப துக்கநேரமெல்லாம் கர்த்தரையே பின்தொடர்வாய்,
அவர் வார்த்தைதனில் விசுவாசம்கொண்டவரை நோக்கிப் பார்த்திடுவாய்.

பரிசுத்தமாதலுக்கே நேரம் இன்னும் ஒதுக்கவேண்டுமே,
உன் ஆத்துமாவில் அமைதி காத்தல் இங்கு மிகவும்வேண்டுமே
ஒவ்வொரு சிந்தையிலும் ஒவ்வொரு குறிக்கோளினிலும்
அவரன்பு ஆளுகையில் நடக்கிறதே நீ அறிவாய்,
அவரன்பு நீர்வீழ்ச்சியிலே உன் ஆவியிலே மூழ்கியே நீ அறிவாய்,
இவ்வாறே வாழ்ந்திட்டாலே பரலோக சேவையிலே நீயும் இடம் பிடித்திடுவாய்.

––––––––––––––––––––

# கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்

## மாற்கு 15:22-37;
## மத்தேயு 27:31-66; லூக்கா 23:26-56; யோவான் 19:16-42.

***"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்." ரோமர் 5:8***

மாற்கு 15:22-ஆம் வசனம். சிலுவையில் அறையப்படுவதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டவுடன், சைத்தான்தனமான வைராக்கியத்தினால் காணப்பட்டிருந்த ஜனக்கூட்டத்தார் உற்சாகமடைந்து, சிலுவையில் அறையப்படும் இடத்தினிடத்திற்குக் கைதியுடன் விரைந்து, வெள்ளிக்கிழமைக் காலை ஒன்பது மணியளவில் வந்து சேர்ந்தனர். எத்துணை பயங்கரமானதொரு இரவைக் கர்த்தர் கடந்து வந்துள்ளார்; கவலைக்கிடமான நிகழ்வுகள் அவருடைய சீஷர்களுடன் அவர் கடைசி இராப்போஜனத்தை அநுசரித்த போது ஆரம்பித்தது; பின்னர் கெத்செமனேயில், அவர் மனவேதனை அடைந்திட்டார்; பின்னர் அன்னாவிடம் அவர் வேகவேகமாய் அழைத்துக்கொண்டு போகப்பட்டார், பின்னர் காய்பாவினிடத்திற்கும், பிலாத்துவினிடத்திற்கும், ஏரோதினிடத்திற்கும், மீண்டும் பிலாத்துவினிடத்திற்கும் கொண்டுபோகப்பட்டார்; அவர் இரவு முழுவதும் மிகவும் அவமானமாய் நடத்தப்பட்டார், பரியாசம் பண்ணப்பட்டார், முகத்தில் துப்பப்பட்டார், குட்டப்பட்டார், தூஷிக்கப்பட்டார், ஏளனப்படுத்தப்பட்டார், தவறாய்க் குற்றஞ்சாட்டப்பட்டார், இறுதியில் கூர்மையான முட்களினால் முடிச் சூட்டப்பட்டு, வாரினால் அடிக்கப்பட்டார்.

இப்படியான அனுபவங்களுக்குப் பிற்பாடும், சிலுவையில் அறையப்படுவதற்கு அவருக்குள் இன்னமும் ஜீவன் இருந்தது ஆச்சரியமாய்த் தோன்றலாம். கடுமையானதாகவும், நீண்ட நேரமும் காணப்பட்ட, சரீரப்பிரகாரமான பாடுகளும், களைப்பும், அசதியும், அனைத்து உடல்சக்தியையும் செலவாக்கி முடித்திருக்குமே என்று நமக்குத் தோன்றலாம்; ஆனால், நமது கர்த்தர் தம்முடைய ஊழியத்தின் வேலைகளுக்காக தம்முடைய சரீரப் பலத்தைப் பெருமளவில் விரும்பி பலிச் செலுத்தியிருந்தாலுங்கூட, அவர் ஒரு பரிபூரண மனிதனாகக் காணப்பட்டப்படியினால், அவர் அசாதாரணமான சகிக்கும் திறனை/வல்லமையைக் கொண்டிருந்தார். சிலுவையில் அறையப்படுவதற்குரிய இடத்திற்கு, இயேசு தம்முடைய சிலுவையைச் சுமந்துச் செல்லும் விஷயத்தில், சிலுவையைச் சுமக்கும் காரியமானது இன்னொருவர்மேல் சுமத்தப்படுவதை வைத்துப்பார்க்கும்போது, இயேசு மிகவும் களைப்படைந்துள்ளார் என்பது தெரிகின்றது (லூக்கா 23:36).

மாற்கு 15:23-ஆம் வசனம். திராட்சரசமானது, வெள்ளைப்போளத்துடன் கலக்கப்பெற்று, வலி தெரியாமல் இருக்கத்தக்கதாக மயக்க மருந்தாகக் கொடுக்கப்பட்டது. உரோமர்களுடைய இந்தக் கொடூரமான முறையினால் தண்டனை தீர்ப்பை அடையும் குற்றவாளிகளுக்காக, இப்படிப்பட்டதான இரக்கத்தின் பணியானது, எருசலேமிலுள்ள சில ஸ்தீரிகளினால் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வழங்கப்பட்ட இரசத்தை ருசி பார்த்ததின் மூலமாக, இயேசு அவர்களது இரக்கத்தை அங்கீகரித்தார்; எனினும், இறுதி வரையிலும் தம்முடைய மனம் தெளிவுடனும், விழிப்புடனும் காணப்பட வேண்டுமென இயேசு விரும்பினபடியால், ருசிப்பார்ப்பதற்கு மேலாக, ரசத்தைப் பருகவில்லை. ஒருவேளை இயேசு அந்த ரசத்தைப் பருகியிருந்திருப்பாரானால், இயேசு தமது தாயை யோவானின் பராமரிப்பில் விட்டபோது வெளிப்படுத்தின அன்பையும்/பரிவையும் மற்றும் நமக்கு மிகவும் அர்த்தமுள்ளவைகளாக இருக்கும் அந்தக் கடைசி வார்த்தைகளாகிய, "எல்லாம் முடிந்தது" என்பதையும் நம்மால் உணர முடியாமலும், கேட்க முடியாமலும் போயிருந்திருக்கும். இன்னுமாகப் பேதுருவை உடனடியாக மனம் வருந்துவதற்கு நேராக வழிநடத்தத்தக்கதாக, பேதுருவுக்குக் கர்த்தருடைய அன்பையும், பேதுருவிடத்தில் அவர் அடைந்திட்ட ஏமாற்றத்தையும், வெளிப்படுத்தின கர்த்தருடைய கவலை நிறைந்த பார்வையையும், பேதுரு இழந்திருக்கக்கூடும்; இன்னுமாக, இப்படிப்பட்டதான கொடூரமான மரணத்தினுடைய துயரங்கள் மத்தியிலும், கர்த்தருடைய எண்ணங்கள் மற்றவர்கள் மீது எவ்வளவாய்க் காணப்பட்டது என்பதை நம்மால் உணர முடியாமலும் போயிருந்திருக்கும்.

மாற்கு 15:25-28 வரையிலான வசனங்கள். சிலுவையில் அறையப்படுதலானது, காலையில் ஒன்பது மணியளவுக்கு நடந்தது; மற்றும் மரணம் மாலை மூன்று மணியளவுக்குச் சம்பவித்தது. "அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்" எனும் வாக்கியம் நிறைவேறத்தக்கதாக, அவர் இரண்டு கள்வர்களுக்கு இடையே சிலுவையில் அறையப்பட்டார் (ஏசாயா 53:12).

பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், "மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" என்று பரியாசம் பண்ணின வார்த்தைகளின் விஷயத்தில், அவர்கள் உணர்ந்து பேசினவைகளுக்கும் மேலாக, ஆழமான அர்த்தம் காணப்படுகின்றது. அவரால் மற்றவர்களையும் இரட்சித்து, தம்மையும் இரட்சித்துக் கொள்ளமுடியாது, ஏனெனில் அவர் தம்மைப் பலியாகக் கொடுக்கும்போது மாத்திரமே, அவரால் மற்றவர்களை இரட்சித்துக்கொள்ள முடியும்; ஆகையால், அவரே நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை, சிலுவை மரத்தில் தொங்கின அவருடைய சொந்த சரீரத்தில் ஏற்றுக்கொண்டார்; அவர் அனுமதித்ததாலேயே ஒழிய மற்றபடி எந்த மனுஷனாலும் அவரிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள முடியாத தம்முடைய ஜீவனை, அவரே விரும்பி ஒப்புக்கொடுத்தார்; மேலும், அவர் தாமே விரும்பி வந்து தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார் என்பது, அவரது நடக்கையிலேயே வெளிப்படுகின்றது; அதாவது அவர் எல்லாவற்றையும் அறிந்தவராகவே கெத்செமனேயில் காட்டிக்கொடுப்பதற்கெனக் கொடுக்கப்பட்ட முத்தத்தை ஏற்றுக்கொண்டதிலும், தம்மை உரோம சேவகர்களிடம் எளிமையாகக் கையளித்ததிலும், தம்மைக் குற்றம் சாட்டுபவர்கள் முன்னிலையில் அமைதிக் காத்துக்கொண்டதிலும், தாம் மேசியா என்பதை ஒளிவுமறைவில்லாமல் அறிக்கைப் பண்ணிக்கொண்டதிலும் (இதை அவர்கள் தேவதூஷணமாய்க் கருதிக்கொண்டார்கள்), தம்மைத் தற்காத்துக்கொள்ள முற்படாமல், சிலுவையில் அறையப்படுதல் எனும் தண்டனை தீர்ப்பை ஏற்றுக்கொண்டதிலும் வெளிப்படுகின்றது. உண்மைதான் அவர், "மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்." ஏன்? ஏனெனில், அவர் மற்றவர்களை இரட்சிக்க விரும்பினார்; மற்றும், மற்றவர்களை இரட்சிப்பதற்கு தாம் பலியாக வேண்டும் என்பதையும் அறிந்தவராக இருந்தார்.

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5). "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டார்" (ஏசாயா 53:12). ஓ, எத்துணை அன்பும், சகிப்புத்தன்மையும் இங்கு வெளிக்காட்டப்பட்டுள்ளது! எனினும் மனிதர்களோ, "அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்படுத்தப்பட்டவரென்று" எண்ணினார்கள். மேலும் இது, நமது கர்த்தருக்கு இருந்த கடுமையான பரீட்சைகளில் ஒன்றாக இருந்தது; அதாவது அவர் தேவனுக்கு எதிராகக் குற்றம் புரிந்தவர் என்றும், அவர் தெய்வீகக் கோபாக்கினையின் கீழ்க் காணப்படுகின்றார் என்றும் கருதப்படுவதுதான் கர்த்தருக்கு இருந்த கடுமையான பரீட்சைகளில் ஒன்றாகக் காணப்பட்டது.

இதுபோலவே கர்த்தருடைய ஜனங்களுக்கு வரும் சிறுமைப்படுத்துதல்களானது, உலகத்தாராலும் மற்றும் தங்களைக் கிறிஸ்தவர்களாக அறிக்கைப் பண்ணிக்கொண்டும், ஆழ்ந்து சிந்திக்கிறவர்களாய் இல்லாதவர்களினாலும் தவறாய்க் கருதப்படுகின்றது. ஆனால் கர்த்தருடைய ஜனங்கள் சிறுமைப்படுத்தப்படும்போது, அவர்கள் "சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல" (மத்தேயு 10:24) என்ற வசனத்தின் வார்த்தைகளையும், தேவபக்தியாய் நடப்பவர்கள் அனைவரும் துன்பப்படுவார்கள் என்பதையும், இந்த யுகத்தில் தீமை மோலோங்குவதினால், நீதிமான்கள் துன்புறுவார்கள் என்பதையும், சாத்தானே இவ்வுலகத்தின் அதிபதியாய் இருக்கின்றான் என்பதையும், அவன் கட்டப்படுவது வரையிலும், நீதிமான் உயர்த்தப்படான் என்பதையும் நினைவில் கொள்வார்களாக. நீதிமான்கள் அதாவது, கரு நிலையிலுள்ள பரலோக இராஜ்யமானது, கொடுமையை அனுபவிப்பதற்கான காலம் இதுவே; மேலும், பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்தக்கொள்ளுகிற காலமும் இதுவே. நமது கர்த்தரும், தலையுமானவராகிய கிறிஸ்துவே பாடுப்பட்டாரானல், அவருக்காவும், நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும் பாடுபடுபவர்கள் அனைவரும் அவரை ஆறுதல்படுத்தின அதே தெய்வீக வாக்குத்தத்தத்தினால் ஆறுதல்படுத்தப்படுவார்களாக. "உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார். கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு" (சங்கீதம் 37:6, 7) .

தங்கள் அன்பையும், அனுதாபத்தையும் தெரிவித்த நமது கர்த்தருடைய சில நண்பர்களுங்கூட இத்தருணத்தில் காணப்பட்டனர்; இயேசுவின் தாயாகிய மரியாளும், மகதலேனா மரியாளும், கிலெயேப்பாவின் மனைவியாகிய மரியாளும், மற்ற ஸ்திரீகளும், இயேசுவுக்கு வெள்ளைப்போளமும், திராட்சரசமும் அளித்திட்ட ஸ்தீரிகளும் காணப்பட்டார்கள். "எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். . . பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள் என்றார்;" தம்மீது காணபிக்கப்பட்ட இதே பொல்லாத ஆவியானது, இஸ்ரயேல் தேசத்தைக் கவிழ்த்துப் போட்டு, எருசலேமை அழித்துப் போடும் கொடூரமானவர்களிடத்திலும் விளங்கும் என்பதையே லூக்கா 23:27-31 வரையிலான வசனங்களின் வார்த்தைகள் மூலம் கர்த்தர் குறிப்பிட்டார். அப்படியாகவே நடக்கவும் செய்தது; ஏனெனில், இஸ்ரயேல் ஜனங்களுக்கு, அவர்களுடைய வெளிச் சத்துருக்கள் மூலமாய் மாத்திரம் உபத்திரவம் ஏற்படாமல், அரசியல் கலகத்தினாலும் ஏற்பட்டது; ஏனெனில் ஒவ்வொரு மனுஷனுடைய கரமும், அவனுடைய அயலானுக்கு விரோதமாக இருந்தது. எருசலேம் கைப்பற்றப்பட்டபோது, பல நூற்றுக்கணக்கான யூதர்கள் உடனடியாகச் சிலுவையில் அறையப்பட்டு, பட்டணத்தின் சுவர்களில் தொங்கவிடப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாற்கு 15:33, 34-ஆம் வசனங்கள். ஆறாம் மணி வேளையிலிருந்து, ஒன்பதாம் மணி வேளை வரையிலும், தேசத்தை மூடியிருந்த இருளானது, இயற்கைக்கு அப்பாற்பட்ட இருளாகும்; ஏனெனில் பஸ்கா காலங்களில் காணப்படும் பௌர்ணமி அன்று, சூரியக் கிரகணம் ஏற்படுவது சாத்தியமற்ற ஒன்றாகும். இது சந்தேகத்திற்கு இடமின்றி, தெய்வீகக் கோபத்திற்கான வெளிப்பாடாக இருந்தது; அதாவது, இப்படியான கிரியைகளை நடப்பிப்பதன் மூலமாக, நீண்ட காலமாக தயவு பெற்றிருந்த தேசமானது, தேவனிடமிருந்து அந்நியராய்த் தள்ளுண்டுபோகும் காரியத்திற்கு இந்த இருளானது நிழலாய்க் காணப்பட்டது.

மாற்கு 15:34-ஆம் வசனமானது, நேரிட போகிற மரணத்தைக் குறித்த அச்சத்துடன்கூடிய உணர்ந்துக்கொள்ளுதலை வெளிப்படுத்துகின்றது. பலியை நிறைவேற்றி முடிப்பதற்குப் பிதாவினுடைய தாங்கிப்பிடிக்கும்/ஆதரிக்கும் வல்லமையானது (இயேசுவிடமிருந்து) பின்வாங்க வேண்டுவதும், பாடுகளின் பாத்திரத்திலுள்ள கடைசி கசப்பான வண்டல்களும்/அடிமண்டியும் (இயேசுவினால்) குடித்துக் காலியாக்கப்படுவதும் அவசியமானதாகும். ஆனால் இதன் முக்கியத்துவமோ, இருதயமும், மாம்சமும் தளர்வடையும் போது, உணர்ந்துக்கொள்ள சிரமப்படுகின்றது; ஆகையால்தான் திகைப்படைந்து இருதயமானது, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கேட்டது. அவருடைய பாடுகள் அனைத்திலும், அதுவரைக்கும் தெய்வீகக் கிருபையானது அவரைத் தாங்கி ஆதரித்து வந்தது; ஆனால் அவருடைய தழும்புகளினால் நாம் குணம் அடையத்தக்கதாக, அவர் இப்பொழுது கோலின் கீழ் மூழ்கவும், ஜீவனை உடைய பிதாவின் கிருபையினின்று துண்டிக்கப்படவும் வேண்டியிருந்தது.

மாற்கு 15:37-ஆம் வசனம். மீதி இருந்த பலத்தையும், பயன்படுத்தி முடித்திட்ட இந்தக் கடைசிக் கூக்குரலானது, ஜெயங்கொள்ளும் விசுவாசத்தினுடைய இறுதி ஜெயமாகும். தம்மை எப்போதும் மற்றும் இதுவரையிலும் தாங்கி வந்ததான தெய்வீகக் கிருபையானது, தாம் பாவியின் ஸ்தானத்தில் பாவத்திற்கான ஈடுபலியாக நிற்கத்தக்கதாக, தம்மைவிட்டு அகல வேண்டுமென்று அவர் உணர்ந்தபோதிலும், திரைக்கு அப்பால் உணரப்படக்கூடிய தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது அவரது விசுவாசமானது உறுதியாய் நின்று, பிதாவிடம் தம்முடைய ஜீவனை நம்பிக்கையுடனும், விருப்பத்துடனும் கையளித்தது. இதை அப்போஸ்தலனாகிய பேதுரு நீதியின் நிமித்தம் பாடுபடுபவர்கள் அனைவரும் செய்யும்படிக்குக் கூறுகின்றார். "ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்" (1 பேதுரு 4:19).

*****

# தேவசமாதானம்

***"அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." பிலிப்பியர் 4:7***

சமாதானம் என்பதின் அர்த்தம், அமைதியான அல்லது மனம் கலக்கமற்ற நிலைமையாகவும், அமைதிக் குலைவிலிருந்து (அ) கலகத்திலிருந்து விடுதலைபெற்ற நிலைமையாகவும் – சாந்தமான நிலைமையாகவும், மன அமைதியுடன் இருக்கும் நிலைமையாகவும் உள்ளது. இப்படியான மன நிலைமையில்தான் தேவன் காணப்படுவதாக, நம்முடைய ஆதார வசனம் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. தேவன் மனக்கலக்கமுறாதவராகவும், அமைதல் உள்ளவராகவும், அமைதி குலைவு பெறாதவராகவும், தம்முடைய பரந்த ஆட்சிப்பகுதி பற்றின எந்த அக்கறைகளினாலும் ஒருபோதும் கலக்கம் அடையாதவராகவும், சோர்வடையாதவராகவும், திகைப்புறாதவராகவும் காணப்படுகின்றார். எனினும் வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்ற தேவனுடைய இந்தப் பூரணமான சமாதானத்திற்கான காரணம், அவரது பரந்துவிரிந்து காணப்படும் ஆட்சி பகுதியில் எவ்விதமான ஒழுங்கீனங்களும் இல்லை என்பதாகவோ அல்லது அவர் விருப்பு வெறுப்பு அற்றவர் என்பதாகவோ இல்லாமல், மாறாக அவரது மகிமையான பண்புகள் பூரண சமநிலையில் காணப்படுவதினால், அவர் ஒட்டுமொத்த அண்டசராசரத்தின் இராஜாவாக, தமது சூழ்நிலைகளை அடக்கி ஆளுபவராகக் காணப்படுகின்றார் என்பதேயாகும்.

குழப்பமும், போரினுடைய புகை மேகத்தின் மத்தியிலும் மாபெரும் தளபதிகளாகிய கிராண்ட் மற்றும் நெப்போலியன் போன்றவர்கள் கொண்டிருந்த அமைதியையும், சாந்தத்தையும், தங்கள் உணர்வுகளைத் தாங்களே அமைதியுடன் கட்டுப்படுத்துவதையும் கண்டு நாம் வியந்திருக்கின்றோமா? அல்லது தேசிய குழப்பங்கள் மற்றும் ஆபத்துக்கள் மத்தியில் மாபெரும் ஆட்சி வல்லுநர்களாகிய கிலாட்ஸ்டோன் (அ) பிஸ்மார்க் போன்றவர்களும் அல்லது ஆபத்தான நேரங்களிலும், இடங்களிலும் திறமிக்க மருத்துவர்களும், இன்னும் மற்றவர்களும் தங்கள் உணர்வுகளைத் தாங்களே அமைதியுடன் கட்டுப்படுத்துவதையும், சாந்தத்தையும், அமைதலையும் கொண்டிருப்பதைக் கண்டு நாம் வியந்திருக்கின்றோமா? இவர்கள் அனைவரும், தேவனுடைய மனதை ஆண்டிடும் தன்னம்பிக்கை மற்றும் தமது உணர்வுகளைத் தாமே கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் விளைவான சமாதானத்திற்கான இலேசான உதாரணங்களே ஆவார்கள். தேவன் ஒருபோதும் குழப்பம் அடைவதில்லை, திகைப்பதில்லை, தடுமாறிவிடுவதில்லை, கவலைப்படுகிறதில்லை அல்லது தமது திட்டங்கள் தோல்வியடைந்து விடுமோ என்றோ அல்லது தமது நோக்கங்கள் தோல்வியடைந்துவிடுமோ என்றோ பயப்படுவதும் இல்லை; காரணம் அவரிடம் அனைத்து வல்லமையும், ஞானமும் காணப்படுகின்றது.

எந்த ஒரு காரியத்தின் விஷயத்திலும், அது நிகழ்வதற்கான சாத்தியக்கூறுகளின் உச்சக்கட்டங்கள்வரை, நோக்கிப்பார்க்கும் அளவுக்கு, அவரது திறமிக்க அறிவு/ஞானம் காணப்படுகின்றது. மேலும் அவரது அறிவானது, அனைத்துக் காரணங்களையும் புரிந்து கொள்கின்றது மற்றும் சகல விளைவுகளையும் துல்லியமாய் உய்த்துணர்கின்றது; இதன் காரணமாக அவர் ஆதிமுதல் அந்தம் வரையிலுமானவைகளை, ஞானக்கொள்கைகளின் அடிப்படையில் மாத்திரமல்லாமல் உள்ளுணர்வினால் அறிந்தவராகவும் காணப்படுகின்றார். சகலவற்றின் சிருஷ்டிகராக மற்றும் சகல பிரமாணங்களைத் தோற்றுவித்தவராக அவர், சரீரம் மற்றும் மனம் அறிவு சார்ந்த பிரமாணங்களையுடைய சிக்கலான நுட்பங்களுக்கு முழுமையாய்ப் பழக்கப்பட்டவராகக் காணப்பட்டபடியினால், அவரது மனதிற்குத் தெரிந்திராத தீர்வையுடைய எந்தப் பிரச்சனையும் எழும்புவதில்லை. "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை" (1 யோவான் 1:5).

சகலவற்றின் சிருஷ்டிகராகிய தேவன் அனைத்தையும் தாங்கிடுவதற்கும்/அழியாமல் தடுத்து நிறுத்துவதற்கும் ஆற்றல்மிக்கவராய்க் காணப்படுகின்றார். ஆபத்தின் (அ) குழப்பத்தின் எவ்விதமான ஐயமில்லாமல், கடந்த யுகங்களிலெல்லாம் ஒட்டுமொத்த அண்டசராசரமும் அவருடைய சித்தத்தை

அமைதலான கம்பீரத்துடன் நிறைவேற்றிக்கொண்டு வருகின்றது; மற்றும் அவர் வல்லமையானது சதாகாலங்களிலும் அண்டசராசரத்தினைத் தாங்கிடுவதற்கு வாக்குறுதியும் அளித்துள்ளது.

ஆகவே திரளாகவும் மற்றும் தமக்குள்ளாகவும் காணப்படுகின்ற வல்லமை மற்றும் ஞானம் என்னும் ஆதாரத்திலிருந்தே, தேவனுடைய சமாதானம் தோன்றியுள்ளது. ஆனால் இந்த ஆதாரங்களிலிருந்து மாத்திரமே தெய்வீகச் சமாதானம் தோன்றிடவில்லை; ஏனெனில் சமாதானம் என்பது உள்ளான நற்பண்புகளுடன் இணைந்துவரும் ஒன்றாகும். தேவனே சகல பண்புகளுக்கும், சகல கிருபைகளுக்குமான உருவமாக இருக்கின்றார்; இதன் காரணமாக அவர் தம்முடைய உள்ளான ஞானம் மற்றும் வல்லமையினாலும் மற்றும் நன்மைத் தீமை பற்றின பூரண உணர்வினாலும் , பாக்கியமான சமாதானத்தையும், திருப்தியையும் கொண்டிருக்கின்றார்.

## உணர்வு பூர்வமான தேவன்

அதிகமான குழப்பங்களும், பிரச்சனைகளும் இருந்தபோதிலும், தேவனுடைய சமாதானமும் காணப்பட்டே வருகின்றதை நாம் பார்க்கின்றோம். ஒரு தகப்பனாக, அவர் தமது அறிவுள்ள சிருஷ்டிகள் அனைத்தின் மீதிலும், அதாவது "பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள முழுக் குடும்பத்தின்" மீதிலும் தகப்பனுக்குரிய அன்பைக்கொண்டிருப்பதாகவும், மற்றும் "சிருஷ்டிக்கப்பட்டவைகள் அனைத்தும் அவருடைய சித்தத்தினாலேயே உண்டாக்கப்பட்டவைகளும், சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாக" இருக்கின்றது என்பதாகவும் நமக்குக் காட்டித்தருகின்றார் (எபேசியர் 3:14; வெளிப்படுத்தல் 4:11). அவர்களை அவர் தமது சாயலில் சிருஷ்டித்தார், அதாவது புத்திரர்கள் என அவர்களிடம் தாம் ஐக்கியமும், உறவும் கொண்டிருக்கவும் மற்றும் பிதாவென தம்மிடம் அவர்கள் ஐக்கியமும், உறவும் கொண்டிருக்கத்தக்கதாகவும், மற்றும் இப்படியான பரஸ்பர உறவு மற்றும் ஐக்கியத்தின் காரணமாக சிருஷ்டிகரும், சிருஷ்டிகளும், மகிழ்ச்சியும், சந்தோஷமும் இன்பமும் அடையத்தக்கதாகவும் அவர்களைத் தம்முடைய சாயலில், அதாவது அதே மனம் மற்றும் நன்னெறித் தன்மைகளில் சிருஷ்டித்தார்.

தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட காரியமானது, ஒரே மனதின் தன்மைகளை மாத்திரம் உள்ளடக்குவதாக இராமல், இன்னுமாகக் குணலட்சணம் உருவாகுவது தொடர்புடைய விஷயத்தில், ஒரேமாதிரி சுயமாய்ச் செயல்படும் விஷயத்தையும் உள்ளடக்குவதாக இருக்கின்றது. குணலட்சணத்தை வளர்த்துக்கொள்ளும் விஷயத்தில் சுயமாய்ச் செயல்பட முடியாத சிருஷ்டி, தேவனுடைய சாயலில் காணப்படாத சிருஷ்டியாக இருக்கும். குணலட்சணத்தை வளர்த்துக்கொள்ளும் நோக்கத்திற்காக, நன்மையும், தீமையும், இரண்டுமே சிருஷ்டியின் முன் வைக்கப்பட வேண்டும். சிருஷ்டியானவன் நடவடிக்கைகள் சார்ந்த சரியான மற்றும் தவறான கொள்கைகளை உய்த்துணர வேண்டும்; மேலும் நீதியானவைகளைச் சிருஷ்டியானவன் சுயமாய்த் தேர்ந்துகொள்வதன் விளைவாக உண்டாகும் நற்பண்புகளில் தேவன் பிரியமாய் இருப்பதை உணர்ந்துகொள்ளத்தக்கதாக, சிருஷ்டியானவன் சுயமாய்ச் செயல்படுவதற்கு/தெரிந்துகொள்ளும்படிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளான்.

கபடற்ற குழந்தையினிடத்தில்/சிசுவினிடத்தில் பூமிக்குரிய பெற்றோர் கொண்டிருக்கும் அன்பைப்போன்று, இதனிலும் பலமானதுமாக புதிதாய்ச் சிருஷ்டிக்கப்பட்டு, கபடற்ற சிருஷ்டிகளாய் இருப்பவர்களிடத்தில் தேவனுடைய அன்பு காணப்படுவதினாலும், மற்றும் சிருஷ்டி வயதில் வளருகையில், அச்சிருஷ்டியின் மீதான அந்த அவருடைய அன்புடன்கூடிய அக்கறையும், கவனமும் குறைந்துபோகாமல், மாறாக கொள்கைகளினுடைய மற்றும் நீதியின் கனிகளினுடைய வளர்ச்சியினை ஆர்வமாய்க் கவனிப்பதாலும், பூமிக்குரிய பெற்றோர்களைப் போலவே, தேவனும் சுயாதீனமுள்ள, அறிவுடைய தமது சிருஷ்டிகள் சரியானப் போக்கையோ அல்லது தவறான போக்கையோ தெரிந்துகொள்ளும்போது மிகிழ்ச்சியையோ அல்லது வேதனையையோ அனுபவிக்கின்றார். இது தொடர்புடைய விஷயத்தில் அவரது தகப்பன்துவம் பற்றின உண்மையை வைத்து நாம் நியாயமாக கணித்த விஷயங்களினால் மாத்திரம் முழுமையாய் உறுதிபடுத்தப்படாமல், இன்னுமாக அவருக்கு வெறுப்பாகவும், விசனமாகவும், அருவருப்பாகவும் சில விஷயங்கள் இருப்பதாகவும், அவைகள் அவருக்குப் பிரியமாய் இருப்பதில்லை என்பதாகவும், அவைகளுக்கு எதிராக அவருடைய கோபம் தீவிரமாய்க் காணப்படுகின்றது என்பதாகவும், அவைகளை

உடையவர்களை அழித்துப்போடுமளவுக்கு, அவரது சினமும், கோபமும் தீவரமாய்க் காணப்படுகின்றது என்பதாகவும் கூறும் வேத வாக்கியங்களினாலும் நாம் மேற்கூறிய காரியங்களில் முழுமையாய் உறுதியடைகின்றோம். இன்னும் மற்றச் சில வேதவாக்கியங்களானது அவர் நீதியின் கொள்கைகளிலும், அவைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களிடத்திலும் பிரியமும், மகிழ்ச்சியும், சந்தோஷமும் கொள்வதாகத் தெரிவிக்கின்றது; அதாவது வேதனைக்கு எதிரான இன்ப உணர்வுகளையும் அவர் கொண்டிருப்பதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன; வலியும், மகிழ்ச்சியும் ஒரே உணர்வுகளின் இறக்கமும், ஏற்றமுமாக இருக்கின்றது என்று கருதப்படலாம்.

தெய்வீக மனம் பற்றின இந்த வெளிப்பாடுகள் அனைத்தும், தெய்வீகமானவர் உணர்வுகள் உடையவர் என்பதை தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது மற்றும் மனிதன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளபடியால் நாம் உணர்வுகளுடைய சுபாவமுடையவர்கள் என்பதை வைத்தே, தெய்வீகமானவரும் உணர்வுகள் உடையவர் என்பதை நிதானித்துக்கொள்ளலாம். அன்புக்குரியவர்களே தேவன் உணர்வுகள் அற்றவர் அல்ல; அவர் வேதனை மற்றும் மகிழ்ச்சி எனும் உணர்வுகளின் விஷயத்தில் உணர்விழந்தவர் அல்ல; மாறாக அவரது குணாதிசயங்கள்/இயல்புகள் முழுமையாய்ச் சமநிலையில் காணப்படுவதின் காரணமாக, வேதனையான (அ) ஆனந்தமான சூழ்நிலைகளிலும், அனைத்துச் சூழ்நிலைகளிலும் சீரான சமாதானம் தக்கவைக்கப்படுகின்றது.

## கண்களுக்குப் புலப்படுகின்ற பிரச்சனைகள் தேவனுடைய சமாதானத்தைக் குலைத்துப்போடுவதில்லை

இந்த ஒரு கருத்தை மனதில்கொண்டவர்களாக, பிரம்மிக்கத்தக்கதான தேவனுடைய சமாதானமானது, நிரந்தரமாய்த் தக்கவைக்கப்படுகின்ற சூழ்நிலைகளைக் குறித்துப் பார்க்கலாம். தேவனுடைய சகல சிருஷ்டிப்பின் கிரியைகளில் காணப்படும் ஆழமான அவரது திட்டங்கள் நிறைவேறுவதற்கு நீண்ட யுகங்கள் (aions) தேவையாய் இருக்கின்றது. யுகங்களின் ஊடே அவரால் தம்முடைய மகிமையின் திட்டத்தின் வாயிலாக, நீதியில் ஸ்திரப்படுத்தப்பட்டு மற்றும் தமது ஈவாகிய நித்திய ஜீவனுக்குப் பாத்திரமான நிலையிலும், தம்முடைய சாயலிலும் (இறுதியில்) அறிவுள்ள சிருஷ்டிகள் காணப்படுவதைப் பார்த்திட முடிந்தது. இன்னுமாகச் சிருஷ்டிகருக்கும், சிருஷ்டிகளுக்கும் இடையிலான பரஸ்பர மகிழ்ச்சியுங்கூட தமது திட்டத்தின் வாயிலாக ஏற்படப்போவதை யுகங்களின் ஊடே அவரால் பார்க்கமுடிந்தது; ஆகவே அந்த மகிமையான நிறைவேறுதலுக்காகக் காத்திருப்பதற்கென, அவர் சமாதானத்துடன்கூடிய பொறுமையுடன் உறுதி கொண்டு காணப்பட்டார்.

திட்டங்கள் நடைப்பெற்றுக்கொண்டிருக்கையில் மற்றும் காலங்கள் கடந்துபோய்க் கொண்டிருக்கையில் அவருடைய சிருஷ்டிகளுக்குக் கொடுக்கப்பட்டதான சுயாதீனம் சிலரால் தவறாய்ப் பயன்பட்டதினிமித்தம், அந்தச் சிலர் பொல்லாப்பான குணலட்சணங்களை வளர்த்திக் கொண்டவர்களானார்கள். இதன் காரணமாக அவருடைய குடும்பத்திற்குள், அதாவது "பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழுகுடும்பத்திற்குள்," அதாவது அவரது சகல சிருஷ்டிகளாகிய மனிதர்கள் மற்றும் தூதர்களாகிய அவரது குடும்பத்திற்குள் பிரச்சனைகள் வந்தது; குடும்பமே பிரிந்தது; சிலர் நீதியின் பக்கமாய் நின்றார்கள் மற்றும் சிலரோ தீமை செய்வதையே தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். ஆனால் இந்த எதிர்பாராத நிகழ்வானது நடைப்பெற்றுவரும் திட்டத்திற்கு அவசியமான ஒன்றாக முன்கூட்டியே தேவனால் அறியப்பட்டதாகும்; தெய்வீகக் கணிப்பின்படி தெய்வீகத் திட்டத்தின் மகிமையான பலனுக்கு, இந்த அனைத்துப் பிரச்சனைகளும், இழப்புகளும் அவசியம் என்பதைத் தேவன் முன்கூட்டியே அறிந்திருந்தார்.

குடும்பத்தில் பிரச்சனை என்பது எத்துணைப் பயங்கரமானதொரு காரியமாகும்! கெட்டக் குமாரனும் அல்லது சிறுபிள்ளைத்தனமாய் நடந்துகொள்ளும் பெண் பிள்ளைகளும் எவ்வளவாய் மனுஷீக பெற்றோர்களின் நரைமயிரைச் சஞ்சலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுகிறார்கள்! ஆ! இப்படிப்பட்டதான ஒரு துயரத்தைப் பற்றிப் பரமபிதாவும் அறிந்திருக்கின்றார்; ஏனெனில் அவரது குமாரர்களில் ஒருவனும், ஒளியின் ஒரு தூதனுமாய் இருந்த சாத்தான், மின்னலைப்போல் பரலோகத்திலிருந்து விழுந்ததைப் பிதா பார்த்தார். ஆறாயிரம் ஆண்டுகளாக அந்தக் குமாரன், தேவனுக்கு எதிராக பகிரங்கமாய் எதிர்த்து நின்று, கலகம் புரிந்துகொண்டு வருகின்றான் மற்றும்

இன்னும் கலகத்தையும், பொல்லாப்பையும் தூண்டிவிடுவதில் மிகவும் சுறுசுறுப்புடனும், மோசமான சூழ்ச்சியுடனும் ஈடுபட்டிருக்கின்றான் (ஏசாயா 14:12; லூக்கா 10:18). தேவதூதர்களில் அநேகர் தங்களது ஆதிமேன்மையை விட்டுவிட்டுச் சென்றதையும், சாத்தானுடன் கூட்டாளிகளானதையும், பிதா பார்த்தார் (யூதா 6); பின்னர் முழு மனுக்குலமும் பாவத்திற்குள் விழுந்ததையும் பிதா பார்த்தார். எந்த ஒரு மனுஷீக பெற்றோராகிலும் தனது குடும்பத்திற்குள் இவ்வளவுக்கு வெறுக்கத்தக்கதான மற்றும் கடுமையான சதி எழும்பியுள்ளதைக் கண்டதுண்டோ/எதிர்கொண்டதுண்டோ? நிச்சயமாய் எந்த மனுஷனும் இல்லை.

பிற்பாடு சிட்சித்தல் எனும் இனிமையற்ற கடமையைச் செயல்படுத்துவதற்குரிய அவசியத்தைத் தேவன் கண்டார். அவருடைய நீதியின்படி, அவர் உண்மையற்ற குமாரர்களை, தம்முடையவர்கள் அல்லவென்று மறுக்க வேண்டும் மற்றும் அவர்களைச் சத்துருக்கள்போல் கையாள வேண்டும். இவ்வளவு காலமும் தேவனுடைய தகப்பனுக்குரிய அன்பானது, வஞ்சிக்கப்பட்டவர்களையும், விழுந்துபோனவர்களையும், ஆசீர்வதிப்பதற்கென ஆயத்தங்களைப் பண்ணிக்கொண்டிருந்தபோதிலும், மீட்பினுடைய நோக்கமானது, மனம் திரும்புகிறவர்களை அவருடைய கிருபையினிடத்திற்குச் சீர்ப்பொருந்தப் பண்ணுவதாக இருந்தபோதிலும், அன்பு திரையிட்டு மூடப்பட்டிருக்க வேண்டும், மற்றும் இரக்கமற்ற, கண்டிப்பான/கடுமையான நீதி மாத்திரமே வெளிக்காட்டப்பட வேண்டும். இது ஓர் இனிமையான கடமையும் அல்ல, இதினிமித்தம் பாவியும் அவரிடத்தில் பிரியப்படுவதும் இல்லை.

இந்தத் துரோகிகள் எத்தகைய அன்பிற்கு எதிர்த்துப் பாவம் புரிந்திட்டார்கள் என்பது குறித்துச் சிந்தித்துப்பாருங்கள். தேவனிடத்திலிருந்து நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் வந்திட்டாலுங்கூட, அவரது கிருபைகள் இழிவாகப் பார்க்கப்படுகின்றது; அவரது அன்பு வெறுப்புடன் உதைத்துத் தள்ளப்படுகின்றது; அவரது நீதியான அதிகாரத்திற்கு எதிராக சதித்திட்டம் போடப்படுகின்றது மற்றும் எதிர்த்து நிற்கப்படுகின்றது; அவரது குணாதிசயங்கள் தவறாய்க் காட்டப்படுகின்றது, அவதூறாய்ப் பேசப்படுகின்றது மற்றும் வெறுக்கத்தக்கதாயும், அநீதியானதாயும், இழிவானதாயும் காண்பிக்கப்படுகின்றது. எனினும் இவைகள் அனைத்தின் மத்தியிலுங்கூட, தேவனுடைய சமாதானம் தொடர்ந்து காணப்பட்டுக் கொண்டிருக்கின்றது மற்றும் ஆறாயிரம் ஆண்டுகளாக தேவன் தமக்கு விரோதமாகப் பாவிகளால் செய்யப்பட்டுவரும் இந்த விபரீதங்களைச் சகித்தவராகவே காணப்படுகின்றார். ஆனால் இன்னமும் அவரது ஆச்சரியமான கிருபையும், அவரது அன்பும் பெருகிக்கொண்டே இருக்கின்றது; மேலும் அவர் உலகத்தை மிகவும் அன்புகூர்ந்தபடியால், உலகம் பாவிகளாக இருந்தபோதிலும் அவர்களுக்காக மரிப்பதற்கெனத் தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருளினார் என்றும், இந்த ஒரே பேறான குமாரன் வாயிலாக, நியாயத்தீர்ப்பானது (பரீட்சை/தேர்வாய்வு) பொய்க்குப் பிதாவும், ஒட்டுமொத்த சதிதிட்டத்திற்குத் தலைவனும், பின்னிருந்து தூண்டிவிடுபவனுமான சாத்தானைத் தவிர, மற்றப்படி விழுந்துபோன தூதர்களுக்கும் அருளப்படும் என்றும் வேத வாக்கியங்களில் எழுதப்பட்டுள்ளது (யோவான் 3:16; 1 கொரிந்தியர் 6:3; யூதா 6; எபிரெயர் 2:14; வெளிப்படுத்தல் 20:10, 14).

## துயரத்துடன் இசைந்து செல்லும் தேவனுடைய சமாதானம்

தெய்வீக அன்பினுடைய இந்த அன்பளிப்பானது, நமது பரம பிதா, தம்முடைய மாபெரும் மற்றும் ஆச்சரியமான திட்டத்தைச் செயல்படுத்தும் விஷயத்தில் கொடுக்க வேண்டிய விலைக்கான மற்றுமொரு அடையாளமாகும். தம்முடைய குடும்பத்தில் ஒரு பெரும்பகுதி பாவத்திற்குள் விழுந்ததை மாத்திரமாக அவர் பார்க்க வேண்டியதாய் இராமல், இன்னுமாக அவர்களை மீட்பதற்கு, அவர் தமது இருதயத்திற்கு அருமையான பொக்கிஷமானவராய்க் காணப்பட்டவரைப் பலிச் செலுத்தவும், இந்தப் பிரியமான குமாரனை மிகவும் கீழாக அவமானத்திற்கும், நிந்தனைக்கும், பாடுகளுக்கும், மரணத்திற்கும் கீழ்ப்படுத்தவும் வேண்டியிருந்தது. மீண்டுமாக மனுஷீக பெற்றோரின் அன்பானது, தேவனுடைய அன்பின் இந்த வெளிப்பாட்டிற்கான விலையினைப் பற்றிப் புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவியாய் இருக்கின்றது. தமக்குப் பிரியமாய் இருந்த குமாரனை, அவரது நேசக்குமாரனை அன்பின் எத்துணை மென்மையான மற்றும் ஆழமான உணர்வுகளுடன் இப்படியாகப் பலிச் செலுத்தியிருக்க வேண்டும்! லோகோஸ் சிருஷ்டிக்கப்பட்டது முதற்கொண்டு வெளிப்பட்டிருந்த குணலட்சணங்களோடுகூட, அவருக்கு அவமானம் மற்றும் வலியின் பாதை சுட்டிக்காட்டப்பட்ட போது, அவர் தெய்வீகச் சித்தத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்படித்தி, ஒப்புக்கொடுத்ததினால் வந்த குணலட்சணமும் இப்பொழுது சேர்ந்தது/வெளிப்பட்டது.

ஆ! இரக்கத்தைச் சுமந்துசென்ற இயேசுவை, பிதாவானவர் கொஞ்சமேனும் வேதனையான உணர்வுகள் இல்லாமலா அனுப்பி வைத்தார்? மரணத்தின் அம்புகளானது, தமது நேசக் குமாரனுடைய இருதயத்தை ஊடுருவினபோது, தகப்பனுக்குரிய அன்பின் நோவு/வலி தேவனுக்கு இல்லாமலிருந்ததா? "என் ஆத்துமா மரணத்திற்கு ஏதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்றும், "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படிச் செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது" என்றும் நமது அருமை கர்த்தர் கூறினபோது இவ்வார்த்தைகளானது, நித்தியமானவருடைய இருதயத்தின் அனுதாபம் என்னும் நரம்பை தொடவில்லையா? பிதாவினுடைய உண்மையான அன்பானது, கர்த்தருடைய வேதனையில், பரிவிரக்கத்துடன் பங்குகொண்டது (மத்தேயு 26:38, 39).

உண்மையான அன்பானது, அழுவாரோடு அழும் என்றும், சந்தோஷப்படுவாரோடு சந்தோஷப்படும் என்றும் திவ்விய வார்த்தைகளில் போதிக்கப்பட்டக் கொள்கையானது, தெய்வீகமானவரிடத்திலும் உதாரணமாய்க் காட்டப்படுகின்றது. அழிவில்லாத தேவனால், நமக்காக மரிக்க முடியாது; அவரது திவ்விய சுபாவமானது, மரணம் அவருக்குச் சம்பவிப்பதற்கு இடம் கொடுப்பதில்லை. ஒருவேளை தேவன் மரிப்பாரென்றால், அவரை மரணத்திலிருந்து எழுப்புவதற்கு அவரைக் காட்டிலும் வல்லவர் எவருமில்லை; ஆகவே அனைத்துச் சிருஷ்டிகளும் அதிகாரி இல்லாமல் விடப்பட்டிருக்கும் மற்றும் அழிவும், சீர்க்குலைவுமே தொடர்ந்திருக்கும். ஆனால் தேவனால் தம்முடைய அன்புக்குரிய, தகப்பனுக்குரிய சுபாவத்தில் மிகுந்த வலியுடன், தம்முடைய இருதயத்திற்கு அருமையான பொக்கிஷத்தைப் பலிச் செலுத்திட முடியும் மற்றும் செலுத்தவும் செய்தார்; இவ்வாறாக வஞ்சிக்கப்பட்ட மற்றும் விழுந்துபோன தம்முடைய சிருஷ்டிகள் மீது வைத்த அன்பின் மூலமாக, தேவன் மாபெரும் அன்பை வெளிப்படுத்திட்டார் (1 யோவான் 4:9). ஒருவேளை இந்தப் பலியானது, அவருக்கு எந்த வலியையும்/இழப்பையும் கொடுக்கவில்லையெனில், ஒருவேளை இம்மாதிரியான பலியின் ஒரு சந்தர்ப்பத்தில் அவருடைய மனதில் எவ்விதமான வலியின் உணர்வு ஏற்படுவது சாத்தியமற்றதெனில், அப்போது அவரது குமாரனை அவர் தந்திட்டதானது, அவரது அன்பின் வெளிப்படுத்துதலாக இருக்காது; ஏனெனில் இழப்புகள் இல்லாத எதுவும், எதையும் வெளிப்படுத்துகிறது இல்லை.

பிதா பல யுகங்களாக மிகவும் பொறுமையுடன் தம்முடைய குணலட்சணம் தவறாய்க் காட்டப்பட்டதைச் சகித்து வந்த காரியத்திற்காக, நமது கர்த்தர் இயேசுவும் தமது மாபெரும் அனுதாபத்தை வெளிப்படுத்தினார். பிதாவை மகிமைப்படுத்துவதும், மனுஷர் மத்தியில் பிதாவின் மகிமையான குணலட்சணம் பற்றின தவறான கருத்துகளைச் சரிசெய்வதும், மனுஷர்களுக்கு அவரது நற்பண்புகளையும், பரிவையும், அன்பையும் கிருபைகளையும் காட்டுவதும், தாங்கள் பாவிகளாக இருந்தபோதிலும், தங்களைப் பாவத்திலிருந்து வெளிக் கொண்டுவருவதற்கும், தங்களுக்கான நித்திய இரட்சிப்பைத் திட்டமிடுவதற்கும் நாடினதன் மூலம், தங்களை அன்புகூர்ந்த இரக்கமுள்ள தேவனை, மனிதர்களும் அன்புகூரத்தக்கதாக, வழிநடத்துவதுமே இயேசுவின் ஜீவியத்தினுடைய ஒரே பிரயாசமாகும்.

## தேவனுடைய சமாதானம்

## அவருக்குள் மையம் கொண்டிருக்கின்றது

உடைந்துபோன தேவனுடைய குடும்பத்தில் மாபெரும் குழப்பம்/அமைதியின்மை ஏற்பட்டது; இந்தக் குழப்பத்தில் தமக்குப் பிரியமில்லையென்று தேவன் தெரிவித்துள்ளார் (சங்கீதம் 5:4); எனினும் தேவனுடைய சமாதானம் ஒருபோதும் குலைக்கப்படவில்லை. தமது பூரணமான நன்னெறி பற்றியும், தவறிழைக்காத தமது ஞானம் பற்றியும், தமது ஆற்றல்மிக்க வல்லமைப்பற்றியுமான உணர்வுடனும் மற்றும் நீதி பற்றின முழுமையான உணர்ந்துகொள்ளுதலும், பரிசுத்த அலங்காரமுடைய மிகுந்த தீவிரமான அன்புடனும், பொறுமையுடனும், சமாதானத்துடனும், உபத்திரவத்தின் மத்தியிலான மகிழ்ச்சியுடனுங்கூடப் பாவிகளால் தமக்கு விரோதமாகச் செய்யப்பட்ட விபரீதங்களை ஆறாயிரம் வருடங்களாகத் தேவன் சகித்திருக்கின்றார்.

ஆனால் ஏழாம் ஆயிரவருடத்திலோ, தெய்வீக நோக்கங்களின்படியே, பிதாவின் மகிமையான குணலட்சணங்களை, பரலோகத்திலும், பூமியிலும் உள்ள சகல சிருஷ்டிகளுக்கு முழுமையாய்

வெளிப்படுத்துவது, நமது கர்த்தர் இயேசுவுக்கான சந்தோஷகரமான சிலாக்கியமாகக் காணப்படும். பிற்பாடு நிறைவடைந்துள்ள தம்முடைய வேலையினுடைய மகிமையிலும், "ஒரே தலையின்கீழ் மீண்டும் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ள, பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள" அவரது குடும்பத்தின் நித்தியமான சமாதானத்திலும், மகிழ்ச்சியிலும், பிதாவானவர் களிக்கூருவார் (எபேசியர் 1:10; Diaglott).

இந்த ஆசீர்வாதமான நிறைவேறுதலானது, தேவனுடைய விழுந்துபோன குமாரர்களில், திருத்தப்பட முடியாதவர்கள், அநீதியை விரும்பினதின் காரணமாக தேவனால் ஏற்க மறுக்கப்பட்டவர்களும், தீமையினின்று மீண்டுவராதவர்களும், அறுப்புண்டு போகாதது வரையிலும் நடைப்பெறுவதில்லை. இதுவே சிருஷ்டிகரும், அனைவருக்கும் பிதாவுமானவரால் செய்யப்படும், இனிமையற்ற கடைசி கடமையாகும்; இது ஒரு வேதனையான கடமை எனினும், உலகளாவிய நீதி மற்றும் சமாதானத்தின் நலன் கருதி, இதனால் உண்டாகுபவைகளைச் சகித்துப் பொறுமையுடன் தம்மால் இக்கடமையை நிறைவேற்ற முடியும் என்று தேவனே தெளிவாய்க் கூறியுள்ளார். "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும் என்கிறார் என்று அவர்களோடே சொல்லு" (எசேக்கியேல் 33:11).

இப்படியாகத் தேவனுடைய சமாதானமானது, மாபெரும் குழப்பங்களுடனும், எல்லா விதமான துக்கம் மற்றும் துயரங்களுடனும் இசைந்து செல்கின்றதை நாம் பார்க்கின்றோம்; ஏனெனில் தேவனுடைய சமாதானமானது வெளிப்புறமான சூழ்நிலைகளைச் சார்ந்ததாய் இராமல், மாறாக மனதை சரியாய்ச் சமநிலையில் கொண்டிருப்பதையும், பூரணமான இருதயத்தினுடைய நிலைமையையும் சார்ந்ததாய் இருக்கின்றது. இத்தகைய சமாதானத்தை, அதாவது தேவனுடைய சமாதானத்தை நமது கர்த்தர் இயேசுவும்கூட, அவருடைய பூமிக்குரிய ஜீவியத்தில் ஏற்பட்ட அனைத்துக் குழப்பங்கள் மற்றும் கொந்தளிப்புகள் மத்தியில் அனுபவித்தார். இக்காரியமானது, நமது கர்த்தர் உலகைவிட்டுப் பிரிவதற்கு முன்னால், தம்முடைய சீஷர்களுக்கு விட்டுச் சென்ற சொத்தைக்குறித்து நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றது:

"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன் (குறைவான அளவிலோ அல்லது நீடித்திராத விதத்திலோ இல்லை) , என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27).

## நமது கர்த்தருடைய இறுதி உயிலும்,
## மரணச் சாதனமும்/விருப்ப ஆவணமும்.

நமது கர்த்தர் தம்முடைய பூமிக்குரிய ஜீவியத்தின் கடைசி இரவில் மிகுந்த பரிவுடனும், கருணையுடனும் தம்முடைய பிரியமான சீஷர்களுக்கு, தம்முடைய இறுதி ஆசியாக, தமது சொத்தாக/சாதனமாக, சமாதானத்தை அருளினார். இது அவர் சீஷர்களுக்குக் கொடுத்திட்ட ஐசுவரியமான சொத்தாகவும், விலையேறப்பெற்ற ஒன்றாகவும் காணப்பட்டது. இது இயேசுதாமே பெற்றிருந்த அந்த ஆத்தும அமைதி, அந்த மன அமைதி, அதாவது தேவ சமாதானம் பற்றின வாக்குத்தத்தமாகும். இந்த ஒரு சமாதானமானது, தீமையின் அனுமதியினால் வந்திட்ட குழப்பங்கள் அனைத்தின் மத்தியிலுங்கூட தேவனால் எப்போதும் அனுபவிக்கப்பட்ட அதே சமாதானமாகும்; ஆனால் இந்தச் சமாதானமானது அதே ஆதாரத்திலிருந்து வரவில்லை. தேவனுடைய விஷயத்தில் இந்தச் சமாதானம், அவரிலேயே மையம் கொண்டிருந்தது; தேவன் தம்மிலே சர்வ வல்லமையுள்ள ஞானமும், வல்லமையும் இருப்பதை உணர்ந்தவராய் இருந்தார்; ஆனால் கிறிஸ்துவின் சமாதானமோ, அவரில் மையம் கொண்டிராமல் மாறாக தேவனுடைய ஞானத்தின் மீதும், வல்லமையின் மீதும், கிருபையின் மீதுமான விசுவாசத்தின் மூலமாக, தேவனிலேயே மையம் கொண்டதாய் இருக்கின்றது. ஆகவே நாமும் தேவனுடைய சமாதானத்தை, கிறிஸ்துவின் சமாதானத்தைக்

கொண்டிருப்போமானால், "இந்த நம்முடைய சமாதானமும்," விசுவாசத்தின் மூலமாய்த் தேவனில் மையம் கொண்டிருக்கவேண்டும்.

ஆம், கிறிஸ்துவின் சமாதானம் என்பது பெரும் மதிப்புள்ள சொத்தாகும். எனினும் இயேசு இவ்வார்த்தைகளை அப்போஸ்தலர்களிடத்தில் நேரடியாய்க் கூறின பிற்பாடு, எத்தனை சீக்கிரமாய், அதுவரை கருமையாகிக்கொண்டே வந்த உபத்திரவத்தின் புயலுக்குரிய மேகம், அப்போஸ்தலர்கள்மேல் சீறி வெடித்தது. கிருபையான இந்தச் சொத்துக்குரிய உயில் கொடுக்கப்பட்டவுடனே, இந்த உபத்திரவத்தின் புயலுக்குரிய மேகமானது, திகைப்பையும், தடுமாற்றத்தையும், குழப்பத்தையும் அப்போஸ்தலர்களுடைய இருதயத்தில் ஏற்படுத்தி, அவர்களது விசுவாசத்தை வேர் வரையிலும் உலுக்கிப்போட்டது. எங்கே போயிற்று இந்தச் சமாதானம்? கர்த்தர் இந்தச் சமாதானம் குறித்த வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தபோது, வெறுக்கத்தக்க துரோகியான யூதாஸ், தன்னுடைய கொலைப்பாதகத் திட்டத்தை நிறைவேற்றிட போயிருந்தான்; பின்னர் கெத்செமனேயின் வியாகுலம் தொடர்ந்தது; தங்கள் அருமை கர்த்தரின் வாழ்க்கையினுடைய முடிவை அப்போஸ்தலர்கள் உணர ஆரம்பித்தபோதோ, திகைப்பும், பீதியும் அவர்கள் மத்தியில் ஏற்பட்டது. இன்னுமாக பிலாத்துவின் அரண்மனையிலும், ஏரோதின் அரண்மனையிலும் கர்த்தர் தம்மேல் இரக்கமற்ற நிலையில் குற்றஞ்சாட்டுகிறவர்களின் முன்னிலையிலும், தம்மைத் துன்பப்படுத்துகிறவர்களின் முன்னிலையிலும் தனிமையில் நின்றபோது, கர்த்தரைப் பாதுகாத்திட அப்போஸ்தலர்களும் வல்லமையற்றுக் காணப்பட்டபோது, அப்போஸ்தலர்களை அதுவரையிலும் திணறவைத்திட்டக் கவலையுடன்கூடிய நிச்சயமின்மையானது, இப்பொழுது வரப்போகும் தீமையை நடுக்கத்தோடு ஆழமாய் அறிந்துகொள்ளும் உணர்ந்துகொள்ளுதலாயிற்று; பிற்பாடு சோகமான முடிவாகிய, சிலுவையில் அறையப்படுதல் எனும் பேரச்சங்களுக்குரிய நிகழ்வுகள் வந்தன.

## எங்கே போயிற்று அந்தச் சமாதானம்?

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில், வாக்களிக்கப்பட்டச் சமாதானம் எங்கே போயிற்று, அப்போஸ்தலர்கள் பயத்தினாலும், திகிலினாலும் மேற்கொள்ளப்பட்டுக் கர்த்தரைத் தனிமையில் கைவிட்டுவிட்டு, ஓடிப்போனப்போதும் மற்றும் பேதுரு கர்த்தரைக் காப்பாற்ற ஆவல் கொண்டிருந்தபோதிலும், பயத்தினால் நிரம்பியிருந்ததின் காரணமாக இயேசுவை மூன்றுதரம் மறுதலித்தப்போதும், கர்த்தரைத் தெரியாது என்று கூறி, சபித்தப்போதும், எங்கேபோனது அந்த வாக்களிக்கப்பட்டச் சமாதானம்? சமாதானம் இன்னும் வரவில்லை என்பதே பதிலாகும்; ஏனெனில் அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுகின்றதுபோல், "ஏனென்றால், எங்கே மரணசாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாகவேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாதனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே" (எபிரெயர் 9:16, 17). ஆனால் சோகமான சம்பவம் முடிவடைந்து, "எல்லாம் முடிந்தது" என்னும் கூக்குரல், அப்போஸ்தலர்களுடைய ஆவலுள்ள காதுகளில் விழுந்திருக்கும்போது, அது விநோதமாய் இருப்பினும் அவர்களுடைய துயரப்பட்டுக்கொண்டிருக்கும் இருதயத்திற்குள், சமாதானம் புகுந்திருக்க வேண்டுமென்பது உறுதியே. இருண்ட வானங்களும், அதிரும் பூமியும், பிளந்த கன்மலைகளும், கிழிந்துபோன ஆலயத்தின் திரைச்சீலையும், இவைகளனைத்தும், உலகத்தினால் அடையமுடியாத ஆறுதலின் ஒரு செய்தியை அப்போஸ்தலர்களுக்கு, சீஷர்களுக்குத் தெரிவித்ததாய் இருக்கின்றது.

(இயேசுவின் கொலைக்குற்றத்தில் பங்குகொள்ளும் யூதர்களும், புறஜாதியாருமான) உலகத்திற்கு, இச்சம்பவங்களின் பொருளானது, அவர்களுக்கு எதிரான தெய்வீகக் கோபாக்கினையும், கோபமுமாகும். ஜனங்களைப் பயம் ஆட்கொண்டபோது, மற்றும் அந்தப் பயங்கரமான நாளினுடைய கூச்சல்களும், கிளர்ச்சிகளும் தணிந்தபோது, அவர்கள் தங்கள் மார்பிலே அடித்துக்கொண்டு, தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள். உரோம நூற்றுக்கதிபதியும், இவரோடுகூடக் காணப்பட்டவர்களும் மிகவும் பயமடைந்து, "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" என்றார்கள் (மத்தேயு 27:54).

ஆனால் கர்த்தருடைய சீஷர்களுக்கோ, இச்சம்பவங்கள் மிகவும் வேறான பொருளைக் கொண்டதாய் இருந்தது. இவர்களுடைய ஆண்டவருடைய நோக்கங்கள்/காரணங்கள், இவர்களுடைய நோக்கங்களாகவும், தேவனுடைய நோக்கங்களாகவும் இருந்தது. இயற்கைக்கு

அப்பாற்பட்ட வல்லமையினால் நிகழ்த்தப்பட்ட இச்சம்பவங்களானது, தேவன் இக்காரியங்களை அலட்சியமாகக் கருதவில்லை என்பதற்கான சாட்சியமாக சீஷர்களுக்குக் காணப்பட்டது; இருளின் திரைஊடாய் அவர்களால் தேவனுடைய பிரகாசமான திட்டங்களைப் பார்க்கமுடியவில்லை என்றாலும், (இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் நிகழ்த்தப்பட்ட) இச்சம்பவங்களில் நம்பிக்கைக்கான மெல்லிய சத்தம் காணப்பட்டது.

மூன்று நாட்களுக்குப் பிற்பாடு, அந்த நம்பிக்கையானது, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலினாலும், அவருடைய உயிர்த்தெழுதலானது, சீஷர்கள் நடுவில் அவர் தோன்றி காட்சியளித்து உறுதிப்படுத்தப்பட்டதாலும் மீண்டும் புத்துயிர் பெற்றது. மீண்டுமாக நாற்பது நாட்களுக்குப் பிற்பாடு, அந்த நம்பிக்கையானது, அவர் இறுதி ஆலோசனையை வழங்கி மற்றும் ஆசீர்வாதம் அருளி மற்றும் திரும்பிவருதல் குறித்து வாக்குத்தத்தம் பண்ணி மற்றும் பிதாவினால் வாக்களிக்கப்பட்டுள்ள தேற்றரவாளனாகிய, புத்திரசுவிகாரத்தின் பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றுக்கொள்ளுவது வரையிலும், அவர்கள் எருசலேமிலேயே தங்கி இருக்கும்படியான அறிவுரைகளை வழங்கினப் பிற்பாடு, அவர் பரமேறினது காரணமாகப் பலப்படுத்தப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளின்போது, தேவனால் வாக்களிக்கப்பட்டிருந்த பரிசுத்த ஆவி வந்தது. பிறகே கிறிஸ்துவினுடைய ஐசவரியமான சொத்தாகிய, கிறிஸ்துவின் சமாதானமானது உணர்ந்துகொள்ள ஆரம்பிக்கப்பட்டது மற்றும் அவர்கள் ஜெபத்துடனும், எதிர்பார்ப்புகளுடனும் காத்துக்கொண்டிருந்த நாட்களானது, நிரந்தரமான சமாதானமுடைய நாட்களாகும்; அதாவது நதிபோல் பாயும் சமாதானமாய்க் காணப்பட்டது. ஆனால் பெந்தெகொஸ்தே நாளின்போது, வாக்களிக்கப்பட்டத் தேற்றரவாளன் வந்தபோது, அவர்களுடைய சமாதானம் என்னும் நதியானது, ஆழமான நதிப்படுகையை/ஆற்றின் அடித்தரையைக் கண்டடைந்தது; மேலும் அவர்களுடைய சந்தோஷத்திற்கும் எல்லையில்லாமல் போயிற்று.

"மகிமையான நதிபோன்றுள்ளதே தேவனுடைய பூரண சமாதானமே,
ஜெயம்கொண்டவர்கள் அனைவரிடத்திலும், அதன் ஆனந்தம் பெருகுகின்றதே.
பூரணமாய் உள்ளதே; எனினும் அது ஒவ்வொரு நாளும் பொங்கிப் பொங்கி வழிந்திடுதே
பூரணமாய் உள்ளதே; எனினும் ஆழமாய் ஆழமாய் வளருதே."

## சமாதானம் எனும் நம்முடைய ஐசுவரியமான சொத்து

ஆதித் திருச்சபையாருக்கு மாத்திரமாக, சமாதானம் எனும் இந்தச் சொத்து, உயிலாக்கப்படவில்லை. இது யுகத்தின் முடிவுவரையிலுமான முழுச் சபையாருக்கும் உரியதான ஆசீர்வாதமான சுதந்திரமாகும். நம் அனைவருக்குமான கர்த்தருடைய எண்ணத்தை அவர், "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று ஜெபம் பண்ணினதின் மூலமாய் வெளிப்படுத்தியுள்ளார் (யோவான் 17:20).

வாக்களிக்கப்பட்டுள்ள சமாதானமானது, உலகத்தின் குறுகிய கால சமாதானமாக இல்லையென்பதைக் கவனிக்கவும்; உலகத்தினுடைய இந்தக் குறுகிய கால சமாதானமானது, அதிர்ஷ்டம்/நல்ல காலம் இருக்கும்போதும், திரளான நண்பர்கள் காணப்படும்போதும், ஆரோக்கியம் நீடித்திருக்கும்போதும் காணப்படும், ஆனால் தரித்திரம் உள்ளே வரும்போதும், நண்பர்கள் கைவிட்டுச் செல்லும்போதும், ஆரோக்கியம் பாதிக்கும்போதும், மரணமானது நம் இருதயத்திற்கு அருமையானவர்களைத் திருடிச்செல்லும்போதும், இந்தக் குறுகிய கால சமாதானம் மறைந்துபோய்விடும். கிறிஸ்து ஐசுவரியவானாக இருந்தபோதிலும், நம் நிமித்தம் தரித்திரரானார்; அவர் தம்முடைய நண்பர்களை ஒன்றன் பின் ஒன்றாக இழந்தார்; அவரது இறுதிவேளையில், அவருக்கு இருந்த கொஞ்சமானவர்களும், அவரை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்; விசுவாசத்தின் காரணமாகக் கிறிஸ்துதாமே அனுபவித்திட்டச் சமாதானமானது, இழப்புகளின் மத்தியிலும், துன்புறுத்துதல்களின் மத்தியிலும், ஏளனங்களின் மத்தியிலும், இகழ்ச்சிகளின் மத்தியிலும், சிலுவையினுடைய பலிகளின் மத்தியிலும் சகித்துக்காணப்பட்டது. இந்தவொரு சமாதானத்தைத் தற்கால ஜீவியத்தின் எந்தக் காரியங்களினாலும்/சூழ்நிலைகளினாலும் அழித்திடமுடியாது. மற்ற எந்தச் சத்துருவும் இந்தச் சமாதானத்தை நம்மிடமிருந்து திருடவும் முடியாது.

எத்துணை ஐசவரியமான சொத்தினைக் கர்த்தர் தம்முடைய பிரியமான ஜனங்களுக்கு விட்டுச் சென்றிருக்கிறார்? ஒருவேளை கர்த்தர் இயேசு, தமது பூமிக்குரிய ஜீவியத்தின்போது, பணத்தைச் சம்பாதித்து, சேர்த்துக்கொள்ளத்தக்கதாக தம்முடைய சக்தியையெல்லாம் பிரயோகித்தார் என்று வைத்துக்கொள்ளுங்கள்; ஒருவேளை இப்படியாக அவர் செயல்பட்டு, தாம் சீஷர்களை விட்டுப் பிரியும்போது சுவிசேஷ யுகத்திற்குரிய மாபெரும் வேலையினை நடத்தும்படிக்கு, திரளான பணங்களை, சீஷர்கள் வசத்தில் விட்டுச்சென்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அப்போஸ்தலர்களுடைய போக்குவரத்துச் செலவிற்கும், பல்வேறு இடங்களில் (அறுவடை) வேலை தொடங்குவதற்குரிய அதிகளவிலான செலவுகளாகிய பிரசங்கம் பண்ணுவதற்குரிய அறைகளுக்கான வாடகை, பயணம் மேற்கொள்ளும் சகோதரர்களுக்கு ஊதியம் வழங்குதல் மற்றும் இதுபோன்ற பல தேவைகளுக்குப் பணம் தேவையாய் இருக்கும். ஒருவேளை கர்த்தர் சீஷர்களைப்பிரியும்போது தாம் சேர்த்து வைத்தப் பணத்தைச் சீஷர்கள் வசத்தில் கொடுத்திருந்திருப்பாரானால், இத்தனை தேவைகள் இருக்க, அந்தப் பணங்கள் எத்தனை சீக்கிரமாய்க் குறைந்துபோயிருக்கும், மற்றும் இன்றுள்ள நமக்கு அச்சொத்தில் மிகக் கொஞ்சமே கிடைத்திருக்கும். "பாவ மனுஷனும்" ஏதாவது விதத்தில் இந்தச் சொத்தில் (பணத்தில்) கொஞ்சத்தைக் கைவசப்படுத்தியிருப்பான் (2 தெசலோனிக்கேயர் 2:3); மேலும் இந்த யுகத்தின் முடிவில் உள்ளவர்களால், அச்சொத்தின் தடயத்தைக் கூடப்பார்த்திருந்திருக்க முடியாது. ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாகுவதாக, சமாதானம் எனும் அவரது ஐசவரியமான சொத்தானது, இன்னமும், அவருடைய ஜனங்களுக்கு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது!

வாக்களிக்கப்பட்டுள்ள சமாதானமானது, உலகத்தினால் அடையாளம் கண்டு கொள்ளவோ, உணர்ந்துகொள்ளவோ முடியாத ஒன்றாகும்; ஏனெனில் இச்சமாதானத்தை உடையவர், கர்த்தரைப்போன்றும், பரமபிதாவைப்போன்றும், புயல் நிறைந்த பாதைகளையே பெற்றிருப்பார்கள். உண்மைதான், தீமையை அனுமதிப்பதிலுள்ள தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறி முடிவதுவரையிலும், உண்மையுள்ளவர்கள் அனைவரின் விஷயத்திலும் இப்படிப் புயல் நிறைந்த பாதைகளே காணப்பட வேண்டும்; எனினும் அனைத்துப் புயல்களின் மத்தியிலும், இந்தச் சமாதானம் காணப்படும் என்ற வாக்குறுதியுடன்கூட முன்னெச்சரிப்பு வழங்கப்பட்டிருக்கிறோம்; "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவான் 16:33).

## சமாதானத்திற்கு அஸ்திபாரமாகிய விசுவாசம்

ஜீவியத்தின் கடுமையான புயல்களின் மத்தியிலும், தொடர்ந்து காணப்படுகின்ற இந்த நிரந்தரமான சமாதானத்திற்கான அஸ்திபாரத்தையும், பாதுகாப்பு ஏற்பாட்டினையும் நாம் ஒருவேளை அறிய வேண்டுமெனில், நாம் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய போதனைகளையும், மாதிரியையும் மாத்திரமே நோக்க வேண்டும். இவர்கள் பாடுகள் படும்போது, இவர்களை உறுதியாய் வைத்திட்டதும், இவர்களுக்கு அத்தகைய ஒரு மன அமைதியையும் கொடுத்ததும் எது? அது இவர்களுடைய விசுவாசமாகும், அதாவது தேவனுடைய அன்பிலும், வல்லமையிலும், ஞானத்திலுமான இவர்களுடைய விசுவாசமாகும். தேவன் வாக்களித்துள்ளவைகளை, தேவனால் நிறைவேற்ற முடியுமென்றும், தேவனுடைய நீதியான மற்றும் கிருபையான திட்டமானது தோல்வியடைவதில்லை என்றும் இவர்கள் நம்பினார்கள். "முந்திப் பூர்வகாலத்தில் நடந்தவைகளை நினையுங்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை. அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்று சொல்லி, உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக்கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனைத் தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன்; அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம்பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன். சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்?" ஆகிய வசனங்களைத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளுடைய வாயின் மூலம் அறிவித்துள்ளார். (ஏசாயா 46:9-11; 14:27) தேவனுடைய வாக்குத்தத்தங்களில் இவர்கள் இளைப்பாறினார்கள். அவருக்குள் இவர்களுடைய விசுவாசம் நங்கூரமிடப்பட்டிருந்தது; இவர்களுடைய நங்கூரமானது, தேவனுடைய சிங்காசனத்தில்

நங்கூரமிடப்பட்டிருக்கையில், இவர்கள் மீது புயல்கள் எத்தனை சீற்றத்துடன் வீசினாலும் சரி அல்லது ஜீவயத்தின் சூறாவளிகளினால் இவர்கள் எவ்வளவாய்த் தூக்கி, தூக்கி எறியப்பட்டாலும், இவைகள் இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.

நமது கர்த்தருடைய விசுவாசத்தின் பாஷையானது . . . "நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்" என்பதேயாகும் (யோவான் 17:25). கர்த்தர் ஆரம்பம் துவங்கி பிதாவுடன் காணப்பட்டிருந்திருக்கிறார் மற்றும் பிதாவின் அன்பையும், அவரது கருணையையும் கர்த்தர் உணர்ந்திருக்கிறார் மற்றும் பிதாவின் வல்லமையைக் கண்டிருக்கின்றார் மற்றும் பிதாவின்அனைத்துக் கிரியைகளிலும், பிதாவின் நீதியையும், அவரது அன்புடன்கூடிய இரக்கத்தையும், தகப்பனுக்குரிய பராமரிப்பையும் கர்த்தர் அடையாளம் கண்டிருக்கின்றார். ஆகவேதான், "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்" என்று எழுதப்பட்டுள்ளது (ஏசாயா 53:11). பிதாவைக் குறித்துக் குமாரன் கொண்டிருந்த அறிவானது, எதிர்க்காலம் குறித்த தேவனுடைய நோக்கங்கள்/திட்டங்கள் அனைத்தின் விஷயத்திலும் விசுவாசம் வைப்பதற்குக் குமாரனுக்கு உதவினது/ஆதாரமாய் இருந்தது. ஆகையால் குமாரனால் விசுவாசத்தினால் நடக்கமுடியும் மற்றும் நடக்கவும் செய்தார். இந்த விசுவாசமானது அனைத்துத் தடைகளை/இடற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கும், மரணத்தின் மீது ஜெயங்கொள்ளுவதற்கும் குமாரனுக்கு உதவியாய் இருந்தது.

ஆகவேதான் நமக்கு அறிவுரையாக, "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" என்றும் எழுதப்பட்டுள்ளது (1 யோவான் 5:4); அதாவது தேவன் மீதுள்ள விசுவாசம், அதாவது நமது கர்த்தரால் பிதாவைக்குறித்துக் கொடுக்கப்பட்ட சாட்சியின் மீதான விசுவாசமே ஜெயிக்கும்; மீண்டுமாக "விசுவாசமில்லாமல், தேவனைப் பிரியப்படுத்துவது கூடாத காரியம்" என்றும் எழுதப்பட்டுள்ளது. உறுதியான, அசைவுறாத விசுவாசத்தின் மூலமாய் மாத்திரமே, தேவ சமாதானமானது, கிறிஸ்துவின் சமாதானமானது அவருடைய ஜனங்களில் நிலைத்திருக்கும். கர்த்தர் சீஷருடன் காணப்பட்டப்போது, கர்த்தரில் பிதாவின் வெளிப்படுத்தலைச் சீஷர்கள் கண்டபோது, அவர்களுடைய விசுவாசம் பலமாய் இருந்தது மற்றும் அவருக்குள் அவர்கள் சமாதானம் கொண்டிருந்தனர் மற்றும் இதனாலேயே, "நான் அவர்களுடனேகூட உலகத்தில் இருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்" என்று கர்த்தர் கூறினார் (யோவான் 17:12). ஆனால் அவர்களை விட்டுக் கர்த்தர் பிரிந்துபோனப் பின்னரே, அவர்களுடைய விசுவாசமானது, தேவனில் நங்கூரமடைந்தது. பெந்தெகொஸ்தேவிற்குப் பிறகு, அவர்கள் கிறிஸ்து அனுபவித்த அதே சமாதானத்தை அனுபவித்தார்கள்; அதாவது தாங்கள் ஒருவேளை மீட்பருடைய அடிச்சுவடுகளைப் பின்தொடருவதில் உண்மையாய்க் காணப்பட்டார்களானால், தங்களைத் தேவன் குமாரர்களென, சுதந்திரர்களென, கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களென அங்கீகரிப்பார் என்ற உண்மைப்பற்றின அறிவின் காரணமாக, ஆசீர்வாதமான சமாதானம் அவர்களுக்குக் கடந்துவந்தது.

## அசைவுறா விசுவாசத்தை வளர்த்துதல்

இதுவும் நம்முடைய சமாதானத்திற்கான அஸ்திபாரமாகும். ஜீவியத்தின் சூறாவளிகள் எவ்வளவுதான் நம்மைத் தாக்கினாலும், நம்முடைய நங்கூரத்தை நாம் ஒருபோதும் கைவிடக் கூடாது; நாம் காற்றுப்போக்கில் இழுத்துச் செல்லப்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது; மாறாக "தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது" என்றும், "அவருடைய சத்தியம் நமக்குப் பரிசையும், கேடகமுமாயிருக்கிறது" என்றும், நமக்கு மனுஷீக பூரணமின்மைகளும், வலுவின்மைகளும் காணப்பட்டாலுங்கூட, தேவன் வாக்களித்துள்ளவைகளை, அவர் நிறைவேற்றிட வல்லவராய் இருக்கின்றார் என்றும், நம்முடைய மனுஷீக பூரணமின்மைகளை மூடுவதற்கு நமக்குப் பரிந்துபேசுபவரும், நமக்கு மீட்கும்பொருளாகவும் இருக்கும் கிறிஸ்துவினால் தரிப்பிக்கப்படும் நீதி காணப்படுகின்றது என்றும், "பிதா தாமே நம்மைச் சிநேகிக்கிறார்" என்றும், "அவர் நம்முடைய உருவம் இன்னதென்று அறிந்துள்ளபடியால்" அவர் தம்முடைய குமாரர்களிடத்தில் இரக்கமும், அன்பும் கொண்டிருக்கின்றார் மற்றும் மிகுந்த அனுதாபமும், மிகுந்த இரக்கமும் கொண்டிருக்கின்றார் என்றும் நாம் எப்போதும் நினைவுகூர வேண்டும் (சங்கீதம் 103:14; 2 தீமோத்தேயு 2:19; யோவான் 16:27; சங்கீதம் 91:4). பலியினுடைய இடுக்கமான பாதையின் சோதனைகள் மற்றும் போராட்டங்கள் மத்தியில் பொறுமையாய்ச் சகிக்கத்தக்கதாக நம்முடைய இருதயங்களைப் பெலப்படுத்திடவும், உறுதிபடுத்திடவும் மற்றும் நம்முடைய விசுவாசத்தை

உறுதிபடுத்திடவும், தேவனால் நமக்குக் கூறப்பட்டவைகளிலும் அதிகமாய் வேறு என்ன தேவனால் சொல்லக் கூடும்.

கிறிஸ்தவன் தனது விசுவாசத்தின் நங்கூரத்தை விட்டுவிடுவது, அதாவது தற்காலிகமாகக் கூட அதன் பிடியை விட்டுவிடுவது என்பது, அவனது சத்துருக்களின் முன்னிலையில், அவனுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும். இப்படியாக அவன் கணநேரம் விட்டுவிடுவானானால் இருள் அவனைச் சூழ்ந்துகொள்ளும். அவனால் பிதாவின் முகத்தினுடைய பிரகாசத்தைப் பார்க்க முடியாது; ஏனெனில், "விசுவாசமில்லாமல் தேவனை பிரியப்படுத்துவது கூடாத காரியமாகும்;" மேலும் அவன் நங்கூரத்தை மீண்டும் பிடித்திட போராடுகையில், இருளின் வல்லமைகளானது, பயங்களினாலும், சந்தேகங்களினாலும், அவனைக் கடுமையாய்த் தாக்குகின்றன. இந்தத் தாக்குதல்களானது அவனது மனுஷீகப் பூரணமின்மைகள் பற்றிய பயங்கள்/சந்தேகங்களாகவே பொதுவாக காணப்படுகின்றது; ஆனால் இந்த மனுஷீக பூரணமின்மைகளானது, கிறிஸ்துவின் நீதி எனும் வஸ்திரத்தினால் மூடப்பட்டுள்ளது என்பதை அவன் எப்போதும் மனதில் கொண்டிருக்க வேண்டும்.

தேவ சமாதானம் நம்முடைய இருதயங்களை ஆள வேண்டுமெனில், நாம் நம்முடைய நங்கூரத்தின் பிடியை ஒருபோதும் விட்டுவிடக்கூடாது மற்றும் சாத்தானுடைய கடுமையான தாக்குதல்களானது, நம்முடைய தைரியத்தை நலிந்துபோகப் பண்ணுவதற்கு நாம் அனுமதித்திடவும் கூடாது. "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" என்பதே நம்முடைய இருதயங்களுடைய வார்த்தைகளாக இருக்க வேண்டும். இந்த ஒரு விசுவாசம் காணப்படும்போது, தேவசமாதானம், அதாவது ஆண்டவரால், நமக்குச் சொத்தாகக் கொடுக்கப்பட்டச் சமாதானமானது, என்றென்றும் நிலைத்திருக்கும். இவ்வாறாகவே "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானமானது, நமது இருதயங்களையும், நமது சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்;" ஏனெனில் "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரணசமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" என்று எழுதப்பட்டுள்ளது (ஏசாயா 26:3; பிலிப்பியர் 4:7; யோபு 13:15).

கிறிஸ்தவ போராட்டங்கள் மத்தியில், நம்முடைய இருதயங்களானது, தெய்வீக நோக்கங்கள் அனைத்தும் நிறைவேறும் என்ற உறுதியினால் மாத்திரமல்லாமல், தனிப்பட்டத் தயவுகள் பற்றின வாக்குத்தத்தங்களினாலும் களிக்கூர்ந்து, நம்முடைய மனங்கள் உறுதியடைந்து காணப்படுவதாக.

தனிப்பட்டத் தயவுகள் தொடர்புடைய வாக்குத்தத்தங்களானது பின்வருமாறு:- "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்." "ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது" (சங்கீதம் 103:13, 14; ஏசாயா 49:15, 16); "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" (யோவான் 16:27); "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக்கா 12:32); "உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்" (நீதிமொழிகள் 11:20); "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்" (சங்கீதம் 37:4). ஆம் புயல் மற்றும் சூறாவளியின் மத்தியிலுங்கூட தேவசமாதானத்தை அருள்செய்வார்.

*****

R1836

# அந்நிய அக்கினியைப் படைத்தல்

**லேவியராகமம் 10:1-10**

"நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் சாகாதிருக்கவேண்டுமானால், ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கிறபோது, திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்கவேண்டாம்." (லேவியராகமம் 10:9)

தேவன், இஸ்ரயேல் ஜனங்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுத்து, அவரால் வனாந்தரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தின் நிழலான அநுசரிப்புகள் குறித்தே இப்பாடத்தில் நாம் பார்க்கப் போகின்றோம்.

ஆசரிப்புக் கூடாரமும், அதன் சகல நியமனங்களும், பணிகளும் கிறிஸ்தவர்களின் விசேஷித்த கவனத்தைப் பெறுகின்றது. இதற்கான காரணம், இவைகள் யூதர்களின் வரலாற்றில் இடம் பெறுவதினால் மாத்திரமல்லாமல், இவைகளின் கட்டமைப்பும், பணிகளும், சுவிசேஷ யுக சபைக்குரிய ஆவிக்குரிய விஷயங்களுக்கு நிழலாய் இருக்கின்றது. அதன் கட்டமைப்பிற்கான திட்டமும், பொருட்களும், ஒவ்வொரு பலகையும், தொங்கு திரையும், அதன் ஒவ்வொரு பணிமுட்டுகளும், வண்ணங்களும், வடிவங்களும், அதன் ஆசாரியத்துவமும், அதன் பலிகளும், அதன் சகல முறைகளும், பண்டிகைகளும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்தவைகள் ஆகும். மேலும், இவைகள் கிறிஸ்துவின் முதலாம் வருகையில் ஆரம்பித்து, பின்னர் படிப்படியாக சுவிசேஷ யுகம் முழுவதும் நடைப்பெற்று ஆயிரவருட யுகத்தில் நிறைவடையப் போகும் கிறிஸ்துவின் மூலமாக மீட்பு மற்றும் ஒப்புரவாக்குதல் குறித்த தெய்வீக திட்டத்திற்கு அதாவது, பரலோகத்தில் உள்ளவைகளுக்கு நிழலாய் இருக்கின்றது.

இப்பாடத்தில் நாம் விசேஷித்த கவனம் செலுத்த வேண்டிய மூன்று காரியங்கள் உள்ளன. அவையாவன:- (1) ஆரோனும் அவருடைய நான்கு குமாரர்களும் ஆசாரியர்களாகப் பிரித்தெடுக்கப்படுதல் அல்லது பரிசுத்தமாக்கப்படுதல், (2) இரண்டு குமாரர்கள் அந்த பணியில் செய்த தவறு, (3) மற்றும் அவர்கள் மீது வந்த தண்டனையுமாகும். இவைகள் வரலாற்றில் நடந்த விஷயங்களும் கவனிக்கத்தக்க பெரிய விஷயங்களும் இல்லை என்பது போன்று நமக்கு தோன்றலாம். ஆனாலும், அவைகளின் நிழலான விஷயங்கள் ஆராயப்படும்போது, அவைகள் சகல கிறிஸ்தவர்களுக்கும் மிக முக்கியமானவைகள் ஆகிவிடுகின்றன.

பிரதான ஆசாரியனாகிய ஆரோனும், அவருக்கு கீழாக காணப்படும் உடன் ஆசாரியர்களாகிய அவருடைய குமாரர்களும், கிறிஸ்து இயேசுவையும் சுவிசேஷ யுகத்தில் உள்ள அவருடைய சபையையும் அடையாளப்படுத்துகின்றார்கள். இந்த சுவிசேஷயுக சபையானது, நிழலில் காட்டப்பட்டது போன்று இந்த நிஜமான பாவநிவாரண நாளுக்குரிய அங்கீகரிக்கத்தக்கதான பலிகளைச் செலுத்துவதையே அவர்களுக்குரிய பிரதானமான கடமையாகப் பெற்றிருக்கின்றார்கள் (எபிரெயர் 9:22, 23). உலகத்தை அடையாளப்படுத்தும் இஸ்ரயேலர்களின் எண்ணிக்கையோடு இந்த ஐந்து ஆசாரியர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கையில், இவர்கள் மிக சொற்பமானவர்களே. நிஜத்தில் கூட இவர்கள் சிறுமந்தையினராகவே காணப்படுகின்றனர் (லூக்கா 12:32). நிழலில் காணப்படுகின்ற பிரகாரமாகவும், ஆசாரியத்துவம் எனும் வார்த்தை சுட்டிக்காட்டுகின்ற பிரகாரமாகவும், சிறுமந்தையினர் உலகத்தைக் குற்றப்படுத்துவதற்கு அல்லாமல், உலகத்திற்கான ஊழியம் புரிவதற்கும், அவர்களை ஆசீர்வதிப்பதற்குமே தெரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

நிழலில் காணப்பட்டது போன்று, கிறிஸ்துவாகிய நமது கர்த்தரும், தலையுமானவரோடு ஊழியம் புரியும் உன்னத ஸ்தானத்திற்கும் அவரோடு இராஜரீக ஆசாரியக் கூட்டமாகவும், பரிசுத்த ஜாதியாயும், விசேஷித்த ஜனங்களாகவும் இருப்பதற்கும் அழைக்கப்படுவது இன்றும் மிகுந்த கனத்திற்குரிய விஷயமாகும். ஆனாலும், நாம் நற்கிரியைகளைச் செய்ய வைராக்கியம் உள்ளவர்களாகவும், நிழலான ஆசாரியர்கள் சுத்திகரிக்கப்பட்டு, வெண்மையான சணல்நூல் வஸ்திரம் தரித்ததுப்போல, நாமும் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட ஜனங்களாக இருக்க வேண்டும் என்பதையும் நாம் மறந்துவிட வேண்டாம். நாம் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும், நிழலான ஆசாரியர்கள், பரிசுத்த அபிஷேக எண்ணெயினால் அபிஷேகிக்கப்பட வேண்டும். பின்னர் தேவனுடைய வார்த்தைகளின் மூலமாய்

பேசும் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்கு நாம் நம்மை முற்றிலுமாக ஒப்புக் கொடுத்திட வேண்டும்.

ஆசாரியர்களாக அழைக்கப்படுவதும், அதன் ஊழியத்திற்கான வஸ்திரம் தரிப்பிக்கப்படுவதும், அபிஷேகிக்கப்படுவதும் மிகப் பெரிய சிலாக்கியமாகவும், கனம் வாய்ந்ததாக இருப்பினும் இப்பாடத்தில் பார்க்கப்படும் நிழலான சம்பவமானது, நம்முடைய பொறுப்புகள் தொடர்பான விஷயங்களில் எச்சரிப்பும் கொடுக்கின்றது. ஆரோனுடைய இரண்டு மூத்த குமாரர்களாகிய நாதாப் மற்றும் அபியு அதிகாரம் கொடுக்கப்படாமலேயே கர்த்தருக்கு முன்பு தூபவர்க்கம் செலுத்தப்போனார்கள். இந்த பணி ஆரோனுக்கு மாத்திரமே நியமிக்கப்பட்டிருந்தது. இது செய்யப்பட சில குறிப்பிட்ட முறைகள் உண்டு. மேலும், இது பாவநிவாரண நாள் அன்று மாத்திரமே செய்யப்பட வேண்டும். மேலும் பலிபீடத்திலிருந்து மாத்திரமே அக்கினி எடுத்து செல்லப்படவும் வேண்டும். (லேவியராகமம் 16:2; 11-13) ஆசாரியத்துவத்தின் கீழிருந்த இந்த இரண்டு ஆசாரியர்களும், தூபவர்க்கம் செலுத்த முற்பட்டபோது, இவர்கள் கட்டளையிடப்படாத ஒன்றை செய்யப்போனார்கள். மேலும், கட்டளையிடப்படாத நேரத்திலும், விதத்திலும் இவர்கள் செய்யப்போனார்கள். மேலும், இவர்கள் பலிபீடத்திலிருந்த அக்கினியை எடுக்காமல், வேறு இடத்திலிருந்து எடுத்தும் வந்தார்கள். இவர்களுடைய செலுத்தப்பட்ட தூபவர்க்கமானது, "அந்நிய அக்கினி" அதாவது, அங்கீகரிக்கப்படாத ஒன்று என அழைக்கப்பட்டது. அவர்களுடைய பாவம் மிகவும் துணிச்சலான பாவமாக இருந்தது. மேலும், அவர்களுக்கு தண்டனையாக மரணம் கொடுக்கப்பட்டது. இச்சம்பவம் நடந்த பிறகு, ஆசரிப்புக் கூடாரத்தில் பணிப்புரியும் ஆசாரியர்கள், திராட்சரசத்தையோ, மதுவையோ பருகக்கூடாது என்ற கட்டளை கொடுக்கப்பட்டது (9-11) என்று நாம் பார்க்கின்றோம். மேலும், இவ்வசனங்களின் மூலம், "அந்நிய அக்கினி" அதாவது, அந்நிய அல்லது அங்கீகரிக்கப்படாத தூபவர்க்கத்தைச் செலுத்த இவ்விரண்டு குற்றவாளிகளும் முற்பட்டபோது, இவர்கள் திராட்சரசம் அல்லது மதுவின் தாக்கத்தின் கீழ் இருந்திருக்கின்றார்கள் என்று தோன்றுகின்றது.

நிஜமான ஆசாரியர்களுக்கு உண்மையாய் அர்ப்பணித்தவர்களுக்கு அபிஷேகிக்கப்பட்ட கிறிஸ்துவின் சபைக்கு இந்த நிழலில் என்ன படிப்பினைக் காணப்படுகின்றது? துணிகரமான பாவங்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்! என்பதை நம் அனைவருக்குமான விசேஷித்த பாடமாக இருக்கின்றது. நிழலான பிரதான ஆசாரியனாகிய ஆரோன், பலிபீடத்திலிருந்து அக்கினியை எடுத்துக் கொண்டு தூபவர்க்கம் செலுத்தும் விஷயமானது, நம்முடைய மாபெரும் பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்து, பலிபீடத்தின் அக்கினியினால் பரீட்சிக்கப்பட்ட போதும், அவர் காட்டின முழுமையான கீழ்ப்படிதல், தேவனுக்கு சுகந்த வாசனையாக இருப்பதை அடையாளப்படுத்துகின்றது. பாவநிவாரணநாள் அன்று, பாவநிவாரண பலிகள் செலுத்தப்பட்ட பின்னர், ஆரோன் கர்த்தருக்கு முன்பாக பரிசுத்த ஸ்தலத்தில் தூபவர்க்கத்தைச் செலுத்தினார். இதுபோலவே, கிறிஸ்துவும் நமக்காக அவருடைய மாபெரும் பலியை செலுத்தின பின்பு, தனது முழுமையான கீழ்ப்படிதல் எனும் சுகந்த வாசைன உள்ள தூபவர்க்கத்தோடு பரலோகத்தில் பிரவேசித்தார். மேலும், நம் பொருட்டாக அவருடைய பலி தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (எபிரெயர் 9:24; வெளிப்படுத்தல் 8:3) உடன் ஆசாரியர்கள் மற்றும் சகல இஸ்ரயேலர்களின் சார்பாக பலியும், தூபவர்க்கமும் செலுத்தப்பட்டது போன்று, கிறிஸ்துவின் பலியும் ஆசாரியர்களாகிய சபைக்கும் முழு உலகத்திற்குமாய் செலுத்தப்பட்டதாகும். (1 யோவான் 2:2) உண்மையில் நாமும் கூட அவரோடு பலிபீடத்தின் மேல் ஒப்புக் கொடுக்கப்பட வேண்டும். ஆனாலும், அவருடைய பலியும், அவருடைய புண்ணியத்தினால் மறைக்கப்படுவதற்கென்று நம்முடைய ஜெபங்களோடு அவருடைய புண்ணியத்தின் சுகந்தவாசனை தேவனிடத்திற்கு எழும்பவில்லையெனில், நம்முடைய பலி ஒன்றுமில்லாததாய் காணப்படும். (வெளிப்படுத்தல் 8:3)

நிஜமான உடன் ஆசாரியர்களாகிய நாம், கர்த்தருக்கு முன்பாக அந்நிய அக்கினியை, அந்நிய தூபவர்க்கத்தை செலுத்தும் துணிகரமுள்ள பாவத்தைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அதாவது, நம்முடைய சொந்த நீதியினால், தேவனை நெருங்கும் துணிகரத்தைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் இரத்தத்தின் மீதான விசுவாசம் மூலமாக நமக்கு கிறிஸ்துவினிமித்தம் கிடைக்கும் நீதியின் சுகந்த வாசனையை நாம் பெற்றிருந்தால் மாத்திரமே நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவோம். இங்குள்ள மற்றொரு பாடம் என்னவெனில், உன்னதமானவருக்கு நாம் பண்ணின வாக்குறுதிகளை மிகுந்த விழிப்புடன்... செலுத்த வேண்டும். மேலும், உலகத்தின் ஆவியினால் நிரப்பப்படாமல், நம்மை நாம் கீழ்ப்படிதலுடன் விலக்கிக் காத்து, நமது இருதயத்தை நேர்த்தியாகவும், மனதை தெளிவோடும் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், கீழ்ப்படிதல் மற்றும் தெளிந்த புத்தியுள்ள ஆவியினால் நாம் நம்மை நிரப்பிக் கொள்ள வேண்டும்.

(சங்கீதம் 19:18; எபேசியர் 5:17, 13; 2 தீமோத்தேயு 1:7) இப்படியாக நாம் காணப்படும்போது, நாம் கர்த்தருக்கு முன்பாக அந்நிய அக்கினியை செலுத்த எண்ணம் கொள்ள மாட்டோம். மாறாக, நம்முடைய மீட்பராகிய கிறிஸ்துவின் அங்கீகரிக்கப்பட்ட தூபவர்க்கத்தின் மீது, தாழ்மையுடன் நம்பிக்கை வைப்போம். மேலும், பரிசுத்தம் மற்றும் அசுத்தத்திற்கும் இடையேயும், தூய்மை மற்றும் அசுத்தத்திற்கும் இடையேயும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து என்றென்றும் செயல்படுகிறவர்களாகவும் இருப்போம். (லேவியராகமம் 10:9-11)

துணிகரமாக கர்த்தருக்கு முன்பாக அந்நிய அக்கினியைக் கொண்டுவந்தவர்கள், கர்த்தர் நியமித்த விதத்தில் செயல்படவில்லை என்று அறிந்த கர்த்தர், தமது விசனத்தை வெளிப்படுத்தினார். இவ்விஷயம் ஆரோனின் இரண்டு குமாரர்களுக்குக் கிடைத்த தண்டனையில் வெளிப்படுகின்றது. (வசனம் - 2) "அப்பொழுது மோசே ஆரோனை நோக்கி: என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு, சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன் என்று கர்த்தர் சொன்னது இதுதான் என்றான்; ஆரோன் பேசாதிருந்தான்." (வசனம் - 3)

கர்த்தர் நியமிக்காத வழியில் கர்த்தருக்கு முன்பாக துணிகரமாக வந்த இரண்டு ஆசாரியர்களுடைய அழிவின் சம்பவமானது, நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் இரண்டாம் மரணத்தை ஒரு "கடுமையான தண்டனை" என போதித்தவைகளுக்கு விளக்கமாக அமைகின்றது. கர்த்தர் அங்கீகரிக்காத, அங்கீகரிக்கமுடியாத அந்நிய தூபவர்க்கமாகிய அந்நிய அக்கினியை கர்த்தருக்கு முன்பாக செலுத்த முற்படும் நிஜமான ஆசாரியர்களும், இரண்டாம் மரணமாகிய கடுமையான தண்டனையைப் பெற்றுக் கொள்வார்கள். கிறிஸ்துவின் நீதி மாத்திரமே அங்கீகரிக்கப்படும் தூபவர்க்கமாக இருக்கின்றது. நாம் நம்முடைய சுயநீதியை வைத்துக் கொண்டு, கர்த்தருக்கு முன்பாகப்போக துணியக்கூடாது. நாம் ஆசாரியர்களாக அழைக்கப்பட்டிருந்தாலும், பரிசுத்த அபிஷேக எண்ணெயினால் (பரிசுத்த ஆவியினால்) நாம் அபிஷேகிக்கப்பட்டிருந்தாலும் இவைகள் நாம் ஒருவேளை கிருபையின் ஆவிக்கு எதிராகவோ, தேவனுடைய நியமிக்கப்பட்ட வழிக்கு எதிராகவோ செயல்பட்டு, அவருடைய அங்கீகரிப்பை இழந்து போனாலும் நாம் தொடர்ந்து ஆசாரியத்துவ பணியில் தொடர்ந்து காணப்படலாம் என்ற எவ்வித உத்தரவாதத்தையும் அளிக்கமுடியாது. (எபிரெயர் 10:29, 30) இத்தகையவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை பணியின் கனத்தை இழந்து போவதாக மாத்திரமல்லாமல், மீண்டும் விழித்தெழ முடியாத இரண்டாம் மரணமாகவும் காணப்படுகின்றது. கர்த்தர் தாம் பரிசுத்தமுள்ளவர்கள் என்றும், அவருடையவர்களான அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஆசாரியர்களாகிய ஜனங்களிடமும் நமது நாமம் கனப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளதை நாம் மறந்து போக வேண்டாம். ஆசாரியர்களாக இருப்போம் என்ற வாக்குறுதியைக் கொடுத்து, தெய்வீக அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டு, பிற்பாடு கர்த்தருடைய நியமனங்களை இருதயத்தில் இழிவாகக் கருதி, அவரோடு தாங்கள் கொண்டிருக்கும் உடன்படிக்கையிலான உறவை புறக்கணிப்பவர்களுக்கு, அந்நிய அக்கினியை செலுத்தின அந்த இரண்டு நிழலான ஆசாரியர்களுக்குக் கிடைத்த மரணமே கிடைக்கும்.

"ஆரோன் பேசாதிருந்தான்" பிரதான ஆசாரியனாகிய ஆரோன், கிறிஸ்துவுக்கு நிழலாய் இருக்கின்றார். நம்முடைய பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்துவும் மரணத்திற்கு ஏதுவான பாவம் புரிந்தவர்கள் மீண்டு வருவதற்கான எவ்வித பரிந்து பேசுதலும் பண்ணமாட்டார். அவருடைய அமைதி அவர் தேவனுடைய நியாத்தீர்ப்பை ஒத்துக் கொள்வதைக் காட்டுகின்றது.

"பின்பு மோசே ஆரோனின் சிறிய தகப்பனான ஊசியேலின் குமாரனாகிய மீசவேலையும் எல்சாபானையும் அழைத்து: நீங்கள் கிட்டவந்து, உங்கள் சகோதரரைப் பரிசுத்த ஸ்தலத்துக்கு முன்னின்று எடுத்து, பாளையத்துக்குப் புறம்பே கொண்டுபோங்கள் என்றான். மோசே சொன்னபடி அவர்கள் கிட்டவந்து, அவர்களை அவர்கள் உடுத்தியிருந்த சட்டைகளோடும் எடுத்துப் பாளையத்துக்குப் புறம்பே கொண்டுபோனார்கள். மோசே ஆரோனையும் எலெயாசார் இத்தாமார் என்னும் அவன் குமாரரையும் நோக்கி: நீங்கள் சாகாதபடிக்கும், சபையனைத்தின்மேலும் கடுங்கோபம் வராதபடிக்கும், நீங்கள் உங்கள் தலைப்பாகையை எடுத்துப்போடாமலும், உங்கள் வஸ்திரங்களைக் கிழிக்காமலும் இருப்பீர்களாக; உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் கர்த்தர் கொளுத்தின இந்த அக்கினிக்ககாகப் புலம்புவார்களாக. நீங்கள் சாகாதபடிக்கு ஆசரிப்புக்கூடார வாசலிலிருந்து புறப்படாதிருங்கள்; கர்த்தருடைய அபிஷேகதைலம் உங்கள்மேல் இருக்கிறதே என்றான்; அவர்கள் மோசேயினுடைய வார்த்தையின்படியே செய்தார்கள்." (4-7) ஆகவே, தேவனுக்கு உண்மையாக இருக்கும் யாவரும் அவருடைய நீதியான நியாயத்தீர்ப்புகளை ஒத்துக் கொள்வார்கள்/அங்கீகரிப்பார்கள். மேலும் இவர்கள் இருளுக்குள் போய் கொண்டிருக்கும்

ஆவிக்குரியவைகளில் மரித்துப் போனவர்களைப் பின் தொடர்வதற்கென தேவனுடைய ஐக்கியம் மற்றும் உறவுக்குள்ளும் பரிசுத்த ஸ்தலத்தை விட்டு புறப்பட்டுச் செல்லவும் மாட்டார்கள். மேலும், தேவனுடைய ஆவியைப் பெற்றிருப்பவர்கள், தேவனுடைய நீதியான தீர்ப்பை அங்கீகரித்தாலும் தங்களுடைய நடத்தையின் மூலம், "நான் மரிக்கிறவனுடைய மரணத்தை விரும்பவில்லை... என்று ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" என்று தேவன் எண்ணுவது போன்று எண்ணுவார்கள். (எசேக்கியேல் 33:11)

நிழலான ஆசாரியர்களாக அழைக்கப்பட்டு தங்களை அர்ப்பணித்தவர்களில் பாதி பேர்கள் அந்நிய அக்கினியை செலுத்தினதின் மூலம், தங்கள் ஜீவனை இழந்து போனார்கள் என்ற விஷயத்தைக் கண்ணோக்குவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். நிழலான ஆசாரியர்கள் இந்த யுகத்தின் அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு அடையாளமாய் இருக்கின்றார்கள். மேற்கூறப்பட்ட விகித அளவு இந்த யுகத்தில் அழைக்கப்பட்டு தங்களை அர்ப்பணித்துக் கொண்டு இழந்து போகிறவர்களின் எண்ணிக்கைக்கு நிழலாய் இருக்குமாயின் நாம் அனைவரும் நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ள விழிப்பாய் இருக்க வேண்டும்.

தவறு செய்த இந்த நிழலான ஆசாரியர்கள் மீது, மரணதண்டனை வந்தாலும், இவர்களுடைய விஷயத்தில் அம்மரணமானது உடன்படிக்கையின் கடமைகளை மீறும் நிஜமான ஆசாரியர்கள் மேல் வரும் இரண்டாம் மரணம் இல்லை என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இவர்களுடைய விஷயத்தில் இம்மரணமானது, "கடுமையான தண்டனையாகிய" இரண்டாம் மரணம் அல்ல. இந்த நிழலான ஆசாரியர்கள் தற்கால ஜீவியத்தைத்தான் இழந்து போனார்கள். அதாவது, அவர்கள் உயிரோடு ஜீவித்திருந்தால், அவர்கள் ஜீவித்திருக்கும் சில வருடங்களையே இழந்து போனார்கள். உயிர்த்தெழுதலின் நாளில், ...கிறிஸ்துவின் மகிமையான ஆளுகையின் கீழ் காணப்படும் சாதகமான சூழ்நிலைகளில் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்குள்/பரீட்சைக்குள் இவர்களும் வருவார்கள். ஆமென்!

**R 1837**

## ஒரு நாள்தான் நமக்குண்டு என்றால்

### IF WE HAD BUT A DAY

ஒரு நாள் மட்டுமே நமக்குண்டு என்றால்,
நாம் என்ன செய்யவேண்டும் ? நீ என்ன செய்வாய் ?
இனிமையான செயல்களை செய்வதிலே
மணிகளையே நிரப்பவேண்டும்,
ஓர் நாள் தான் நமக்குண்டு என்றால்;
தூய்மை மிகுந்த நீரூற்றினின்றே
ஓடிவரும் ஓடைதனிலே
சுத்தமான நீரினை அள்ளிப்பருகிட வேண்டும்,
நம் பரலோகப்பயணம் தனிலே;
வாழ்நாள் முழுதும் நாம் செலுத்தவேண்டிய அன்பினை
ஒரு மணிநேரத்தில் காட்டிடவேண்டும்,
ஒருசிலமணிநேரம்தான் நமக்குண்டு என்றால்
நாம் தூங்கவேண்டும், கனவுகாண அல்ல;
வாழ்வதற்கும்செய்வதற்கும் புது ஆற்றல்வேண்டி;
களைப்படைந்த முரட்டாட்டம்கொண்ட
கீழ்ப்படியா நம் மனங்களையே
தெளிவான ஒளிபக்கம் திருப்பிடல்வேண்டும்
பரலோக மலைகள்மீது நம்
பார்வைதன்னை நாட்டவேண்டும்,
அவை நமது பார்வைக்குத் தென்படுமானால்,
வாழ்க்கைத் தோல்வியினால் ஏற்பட்ட முணுமுணுப்பை
மறைத்தே வைத்திடல்வேண்டும்,
நம் நல்ல தேவன் நமக்கனுப்பிய எதுவாயினும்
முழு நம்பிக்கையோடே ஏற்றுக்கொண்டே
வாழக் கற்றல்வேண்டும்
ஒருநொடிப்பொழுதேனும் வீணான செயல்செய்தே
காலத்தை விரயமாக்காது
வீணாக்கி வருந்தாமல்
ஓர்நாளை செலவழித்தல்வேண்டும்.
நம் ஞாபத்தில் உள்ளதுவும்,
நினைவினின்று மறைந்ததுவும்
சூரியனுடனே மேற்கில் சென்றே மறைந்ததுவே,
ஆரவாரமாய் கூச்சல்எழுப்பியே
வேலைகள் செய்வதினின்றே
நமை விடுவித்துக்கொள்ளல் வேண்டும்
அவ்வோர் நாள்தனிலே
தந்தை நம்மை எப்படித்தான் இருக்க விருப்பம்கொண்டாரோ,
அப்படித்தான் இருக்கவேண்டும், அந்த ஓர் நாள்தனிலே

---------------

# Tract Society-இன் அறிமுகக் கடிதங்கள்

Zion Watch Tower Tract Society/சீயோன் வாட்ச் டவர் டிராக்ட் சொசைட்டி சார்பாக வெளியிடப்பட்டுள்ள அறிமுக கடிதங்கள் அனைத்தையும் திரும்பப்பெற்றுக்கொள்வது நலமாயிருக்கும் என்றும், இனிமேலும் அவைகளை வெளியிட வேண்டாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Zion Watch Tower Society/சீயோன் வாட்ச் டவர் சொசைட்டி என்பது ஓர் அலுவல் சமுதாயமேயாகும் (இது எந்த விசுவாசப் பிரமாணங்களையோ அல்லது அறிக்கைகளையோ பெற்றிருப்பதில்லை). இது இதன் அலுவலர்களிடம் சத்தியத்தினைப் பரப்பும் விஷயத்திற்கு, அவர்களது சிறந்த கணிப்பின்படி பயன்படுத்திடுவதற்கு ஒப்புவிக்கப்பட்டுள்ளதான வைப்பு நிதி சம்பந்தப்பட்டதாகும்; அதிலும் விசேஷமாகத் தேவனுடைய இரக்கத்தினால் நன்கொடையாளிகளில் அநேகரை இருளினின்று, அவரது ஆச்சரியமான வெளிச்சத்திற்குக் கொண்டுவந்திட்டதான மில்லினியல் டாண் வெளியீடுகளிலும், சீயோன் வாட்ச் டவர் வெளியீடுகளிலும் முன்வைக்கப்படுகின்றதான சத்தியத்தினைப் பரப்பிடும் விஷயத்திற்காகும். நன்கொடையாக அளிக்கப்படும் நிதிகளானது இதழாசிரியரின் வழிகாட்டுதலுக்கு இணங்க எப்படி இந்தச் சொசைட்டி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகப் பயன்படுத்தப்பட்டதோ, அப்படியே இப்பொழுதும் பயன்படுத்தப்படுகின்றது (இவர் Tract Society/டிராக்ட் சொசைட்டியின் தலைவராவார்). இது "அறுவடை" முடிவடைவதற்கு முன்னதாக ஒருவேளை இதழாசிரியர் மரித்துப்போகும் பட்சத்தில், "அறுவடை" வேலையின் தொடர்ச்சிக்குறித்த கண்ணோட்டத்தில் நண்பர்கள் மற்றும் நன்கொடையாளர்களில் சிலருடைய வேண்டுகோளுக்கு இணங்க ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆகையால் வேறெந்த அலுவலகங்களுக்கு இருப்பதுபோலவே இந்தச் சொசைட்டிக்கும், இது பாத்திரமாய்க் கருதிடும் எவருக்கும் அறிமுக கடிதத்தினைக் கொடுத்திடுவதற்கு அதே உரிமையினைப் பெற்றிருக்கும். எனினும் "சொசைட்டி" என்ற வார்த்தையானது சிலரால் சபை என்று தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதற்கு வாய்ப்புள்ளது என்றும், இந்தச் சொசைட்டியின் அறிமுகக் கடிதங்களை, ஆணைகளென, அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதென அல்லது நியமனப் பத்திரங்களெனச் சிலரால் கருதப்படுவதற்குமான அபாயம் காணப்படுகின்றது என்றும் நாம் கண்டுபிடித்தோம். வசனம் போதிக்கிறபடி, "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும்" தவிர்த்துவிட நாம் விரும்பும் காரணத்தினால், இந்தக் கடிதங்களை நாம் நிறுத்தப்போகின்றோம்.

கர்த்தருடைய நாமத்தில் பிரசங்கிப்பதற்கான அதிகாரத்தை ஒரு மனிதானலோ அல்லது பல மனிதர்கள் சேர்ந்தோ ஒருவருக்குக் கொடுக்கவோ அல்லது எடுத்துப்போடவோ முடியாது. தேவனால் மாத்திரமே இத்தகைய அதிகாரத்தினைக் கொடுக்க முடியும்; மற்றும் அவரால் மாத்திரமே அதை நீக்கிப் போடவும் முடியும். அவர் இந்த அதிகாரத்தினைத் தம்முடைய ஜனங்கள் அனைவருக்கும், "என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையைச் சொல்வானாக," என்று கூறிக் கொடுத்திருக்கின்றார் (எரேமியா 23:28). அறிமுக கடிதங்களானது அதிகாரமளிக்கும் கடிதங்கள் ஆகும் - என்றுள்ள கருத்துக்கள் எழும்பாதபடிக்கு நாம் விசேஷமாய் நாடினோம் மற்றும் இதை மிகத் தெளிவாக அக்கடிதங்களே தெரிவிக்கின்றன; ஆனாலும் அவைகள் சிலரால் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டிருப்பதினால், பிற்பாடு அவைகள் அநேகராலும் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படலாம். ஆகையால் அவைகள் தீங்கு உண்டு பண்ணுவதற்கு முன்பாக, அவைகள் திரும்பப்பெற்றுக்கொள்ளப்படுகின்றது. தேவன் மாத்திரமே அங்கீகாரம் வழங்கிடுவதற்குத் தகுதியான ஒருவர் என்று, இப்படி அழுத்தம் கொடுத்துக் கவனத்திற்குக் கொண்டுவருவதினாலும், Zion's Watch Tower Tract Society என்பது மத அமைப்பாக இராமல், மாறாக அலுவல் சமுதாயமாகக் காணப்படுகின்றது என்று மறுபடியுமாகச் சுட்டிக்காட்டுவதினாலும், நன்மையே உண்டாகும். இந்தச் சொசைட்டியானது எவ்வித விசுவாசப்பிரமாணங்களையும் கொண்டிருப்பதில்லை; (சொசைட்டி) அது - பெற்றுக்கொள்ளப்பட்டதும், செலவிடப்பட்டதுமான பணங்கள் குறித்தக் கணக்குகளை வைத்துக் கொள்ள மாத்திரமே செய்கின்றது; அதாவது எப்படி வங்கியானது போடப்பட்ட பணங்களைப் பெற்றுக் கொண்டு, பணம் என்ன செய்யப்பட்டிருக்கின்றது என்பதைக் காண்பிப்பதற்கு இரசீதுகளைக் கொடுப்பது போலாகும். (சொசைட்டி) அது கோரிக்கைகளை வைப்பதில்லை, வரி

விதிப்பதில்லை, பணத்திற்காகக் கெஞ்சவோ அல்லது வற்புறுத்துகிறதோ இல்லை. சாத்தானின் இருளினின்று, தேவனுடைய அன்பான திட்டத்தின் சூரிய வெளிச்சத்திற்குள்ளாக வருவதற்கு உதவப்பட்டவர்களால் அனுப்பப்படும் பணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், முடிந்தமட்டிலும் ஞானமாய்ப் பயன்படுத்திடுவதற்கும் (சொசைட்டி) அது ஆயத்தமாய் இருக்கின்றது என்று மாத்திரமே அது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

ஆனால் ஈடுபலியினை அஸ்திபாரமாகக் கொண்டிருக்கும் சத்தியத்தினை விட்டுச்சென்ற ஒருவரிடமிருந்து மந்தையினைப் பாதுகாத்திடுவதற்கு என்ன செய்யப்படலாம்? "ஆட்டுத் தோலைப் போர்த்திக்கொண்டு காணப்படுபவர்களுக்கு"- "செம்மறியாடுகள்" எச்சரிக்கையாய் இருப்பதற்கு நன்கு கற்றுக்கொண்டு வருகின்றனர் மற்றும் அவர்கள் அதிக ஜாக்கிரதையாய்க் காணப்பட்டு, அதன் ஆவியினை ஏற்றுக்கொள்ளாமலும் இருக்க வேண்டும். பிசாசின் தந்திரங்களுக்கு அவர்கள் மிகவும் ஜாக்கிரதையாய் விழித்திருக்க வேண்டும். உண்மையான ஆவியானது பின்வருமாறு காணப்படும் என்பதை நினைவில்கொள்வார்களாக; உண்மையான ஆவியானது:-

(1) "முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமுமாக" இருக்கும். வார்த்தையிலும், கிரியையிலும் அல்லது தனிப்பட்ட தோற்றத்திலும் முரட்டுத்தனம், இழிவு அல்லது ஏதேனும் அசுசி அல்லது அசுத்தம் ஆகிய எதற்கும் மற்றும் எல்லாவற்றிற்கும் அவர்கள் எச்சரிக்கையாயிருப்பார்களாக.

(2) அவர்கள் கிறிஸ்துவின் ஆவியானது, சாந்தமும், தயவும் இல்லாமல் இராது என்பதை நினைவில் கொள்வார்களாக. எதிர்த்துப்போராடுகிற, சண்டையிடுகிற, முரட்டுத்தனமான, சுயநலமான ஆவி என்பது, இதைப் பெற்றிருப்பர் போதகனாய் இருப்பதற்கோ அல்லது "கிறிஸ்துவில் குழந்தைகளாய்" இருப்பதற்கோ தகுதியற்றவர் என்பதைத் திட்டவட்டமாய்ச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆனால் மாய்மாலமாய் மென்மையானவர்களாகவும், சாந்தமானவர்களாகவும் காணப்பட்டு, சந்தேகங்களையும், அவநம்பிக்கைகளையும், பயங்களையும் தோற்றுவித்து, போலியான அன்பினாலும், கண்ணீர்களாலும் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் அழித்துப் போடுகிறவர்களுமான சிலரைக்குறித்து விசேஷமாய் எச்சரிக்கையாயிருங்கள். இந்த ஆட்டுத்தோலைப் போர்த்தியுள்ள ஓநாய்களைக்காட்டிலும், வெளிப்படையாய் எதிர்ப்பவர்கள் கொஞ்சம் ஆபத்துக் குறைவானவர்களே.

(3) நமக்கான ஈடுபலி விலைக்கிரயமெனக் கிறிஸ்துவினால் செய்யப்பட்டுள்ளதான பணியின் புண்ணியத்தினை வெளிப்படையாய் மறுக்கிறவர்களை அல்லது ஈடுபலியினைப் பற்றிக் கொண்டிருப்பதாக அறிக்கையிட்டும், அதற்குத் தவறான அர்த்தங்களைச் சாற்றி மற்றும் ஈடுபலி எனும் வார்த்தைக்கு, *antilutron* எனும் அதன் கிரேக்க வார்த்தைக்குமான, சரிநிகர்சமான விலை எனும் அதன் உண்மையான அர்த்தத்தைத் தங்கள் சாதுரியமானப் போலி வாதத்தினால் புறக்கணிப்பவர்களை - உடனே மறுத்து, அவர்களோடு அந்நியோனியமோ அல்லது ஐக்கியமோ கொள்ள வேண்டாம். இத்தகைய தப்பறைகளானது மோசமானவைகளாகவும் மற்றும் மிகுந்த சீர்க்குலைவிற்கேதுவானவைகளாகவும் இருப்பினும், எளிமையாகத் தவறானவை என்று நிரூபிக்கப்படலாம் - ஒன்று அல்லது இரண்டு கணங்கள் போதும்; பிற்பாடு உண்மையான கொள்கையின் அடிப்படையில் செயல்பட்டு மற்றும் அவர்களோடு ஐக்கியம் கொள்ளாதிருங்கள் மற்றும் இதற்கு மேலாக ஆராயச் செல்லாதீர்கள்.

(4) குணலட்சணத்திற்கான வெளிப்படையான நிரூபணங்களானது திருப்திகரமாய்க் காணப்படலாம் மற்றும் ஈடுபலி மூலமாக பாவம் மற்றும் அதன் தண்டனையினின்று மீட்டு கிறிஸ்து நமக்கு இரட்சகராகக் காணப்படுகின்றார் என்ற விசுவாச - உபதேச சோதனை முதலாவதாக மேற்கொள்ளப்படுகிறதிலும் வெற்றிகரமாய்க் கடந்துசென்றிடலாம்; ஆனால் இப்பொழுது வருகின்றது அடுத்த ஆய்வு. ஏனெனில் குறைவான முக்கியத்துவமுடைய போதனைகளுங்கூட அவைகள் தேவ வசனத்திற்கு இசைவாய்க் காணப்படுகின்றது என்று கண்டுகொள்ளப்படாத பட்சத்தில், அவைகளை நாம் விழுங்கிவிடக்கூடாது. அவைகளைக்குறித்து நீங்கள் முழுமையாய் நிச்சயமடைவது வரையிலும், எந்த ஒரு புதுக்கருத்தையும் நிரூபிக்கின்றவிதமாய் ஏதேனும் வேத வாக்கியங்கள் காணப்படுகின்றதா என்று பாருங்கள். தியானிக்கும் கருப்பொருளோடு நன்றாய் இசைந்து வருகிற வசன பகுதிகளின் கருத்துகளை மாத்திரம் எடுத்துக்கொள்ளவும். இந்த விதியினைப் புறக்கணிப்பதன் மூலம் அநேகர் தவறு செய்திடுவதற்கு ஏதுவாய்க் காணப்படுகின்றனர்.

(5) Preaching/"பிரசங்கித்தல்" என்பது அறிவுரைகளைக் கொடுப்பதற்கும், பெற்றுக்கொள்வதற்குமுரிய மிகச் சிறந்த வழிமுறைகளில் ஒன்றாய் இருப்பினும், இது விஷயத்தில் சில திறமை உடைவர்களுக்கு மாத்திரமே இது தகுதியானதாய் இருக்கும்.

மற்றவர்கள் "அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக" மற்ற விதங்களில் ஊழியம் செய்திடுவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும் (மத்தேயு 25:15). பொது மேடைகளில் செய்திக்கொடுக்கும் பேச்சாளர்களாய் இராத சிலர், மற்றப்படி சிறந்த "போதகசமர்த்தனாய்" காணப்படுகின்றனர் மற்றும் இது உணர்ந்துகொள்ளப்பட்டு, வேதாகம வகுப்புகளில்/Bible class talk-இல் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் நல்வசனிப்பைக் கொண்டிருந்தும், தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களைக் குழப்புகிற சிலரைப் போன்றில்லாமல், ஒருவர் போதகசமர்த்தனாய் - காரியங்களைத் தெளிவுப்படுத்துவதற்குரிய திறமையுடையவராய் ஆகிடுவது வரையிலும் இத்தகைய நாவன்மை உடையவர்கூட ஊக்குவிக்கப்படக்கூடாது. சிறு கூடுகைகளைப் பொறுத்தமட்டில் sermons/பிரசங்கங்களைக் காட்டிலும் "வேதாகம வகுப்பு" ஆராய்ச்சிகளும், வீடுகளின் வரவேற்பறைகளில் கூட்டங்கள் நடத்துவதும் சிறந்ததாய் இருக்கும் என்பது எங்களது கணிப்பாய் இருக்கின்றது.

(6) சபையில் அடையாளங்கண்டுகொள்ளப்பட்ட பிரசங்கிக்கிறவர்/Preacher இருப்பினும், கூடுமானால், மேலே இடம்பெறும் 1, 2, 3 மற்றும் 4-இன் கருத்துகளுடைய அடிப்படையில், அனைவரும் பேசுவதற்குரிய கூட்டம் ஒன்று - அதாவது ஒரு வேதாகம ஆராய்ச்சி வகுப்பானது நடத்தப்பட வேண்டும்.

(7) கூடுமானமட்டும் வாரத்திற்கு ஒருமுறை ஜெபிப்பதற்கும், துதிப்பதற்கும் மற்றும் சாட்சியைப் பகருவதற்குமான கூடுகைக் காணப்பட வேண்டும் - இது உபதேச ரீதியாகக் கலந்துரையாடுவதற்குரிய கூட்டமாய் இராமல், மாறாக ஆவிக்குரிய பயிற்சிக்கும், சந்தோஷத்திற்கும் மற்றும் தன்னைப் பரிசோதித்துக்கொள்வதற்கும், பரிசுத்தத்திற்கடுத்த காரியங்களில் ஒருவருக்கொருவர் உதவிடுவதற்குமான கூட்டமாய்க் காணப்பட வேண்டும்.

(8) அப்போஸ்தலர்களால் நிறுவப்பட்டதான சபைகளானது, சபையார் சார்ந்த அம்சங்களையும் மற்றும் கண்காணிகள் சார்ந்த அம்சங்களையும், இரண்டையும் பெற்றிருப்பதாகத் தெரிகின்றது. சபையார் சார்ந்த அம்சமானது, ஒவ்வொரு சபையாரும், அதன் தலையாகிய கர்த்தரின் கீழ் அதன் காரியங்களுக்கடுத்த அதிகாரத்தைப் பெற்றிருப்பதில் தெரிகின்றது; இந்தத் தலையானவருக்கு மாத்திரமே சபையார் கடமைப்பட்டிருக்கின்றனர் மற்றும் ஒவ்வொரு சபையாரும், அதன் ஊழியங்களை நிர்வகித்துக்கொள்கின்றனர்.

கண்காணிகள் சார்ந்த அம்சமானது, தம்முடைய ஆடுகளுக்கு மாபெரும் மேய்ப்பனாய்க் காணப்படும் கர்த்தர் சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகப் பரிசுத்தவான்கள் சீர்ப்பொருந்தும் பொருட்டு அவர் மேய்ப்பர்கள், போதகர்கள் முதலானவர்களை அருளுவார் என்று புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றது மற்றும் இப்படியாக எதிர்ப்பார்க்கப்பட்டிருக்கின்றது என்ற உண்மையில் விளங்குகின்றது (எபேசியர் 4:11-13). சபையார் இது விஷயத்தில் கர்த்தருடைய வழிநடத்துதலுக்காகப் பார்க்கின்றனர் மற்றும் அதேவேளையில் எதிராளியானவனால் உருவாக்கப்பட்டுள்ள அநேக கள்ளப் போதகர்கள் காணப்படுகின்றார்கள் என்றும், தங்களுக்கான போதகர்களைத் தாங்கள் சோதித்தறிய வேண்டும் என்றுமுள்ள காரியங்களைக்குறித்து அவர்கள் அக்கறையற்றும் காணப்படக்கூடாது.

போதகர்கள் தேவனால் அருளப்பட்டிருப்பதாக அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு இருக்கும்போதும் மற்றும் இருப்பதுவரையிலும் மற்றும் அவர்களது நடக்கையின் மூலமாகவும், தேவ வசனத்தின் மூலமாகவும், அவர்கள் சபையாரால் அங்கீகரிக்கப்படத்தக்கவர்களாகக் காணப்படும்போதும் மற்றும் காணப்படுவது வரையிலும், அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் கனத்திற்குரியவர்களாய் இருப்பார்கள்; மற்றும் அவர்களது கருத்துக்களுக்கு அதிகம் மதிப்பும் கொடுக்கப்படும் (1 தீமோத்தேயு 5:17; எபிரெயர் 13:17; உரோமர் 12:10; 13:7). ஆனால் தேவனுடைய வார்த்தை மற்றும் சித்தம் தொடர்புடைய விஷயத்தில் தங்களது பகுத்துணர்தலுக்கு ஏற்ப, எந்தப் போதகரையும், மறுத்திடவும் சபையாருக்கு அதிகாரம் காணவேபடுகின்றது.

(9) அன்பே பூரண சற்குணத்தின் - பூரணத்தின் - ஒரே கட்டாக இருக்கின்றது. உங்களையோ, மற்றவர்களையோ வேறேதாவது கட்டோடு கட்டிக்கொள்ளாதிருங்கள். தேவனைப் பிரதானமாய் அன்பு கூருவது என்பது, மற்றவைகள் எல்லாவற்றையும்விட அவரது வார்த்தைகளுக்கு உண்மையாய் இருப்பதைக் குறிக்கின்றதாயிருக்கும்; சகோதரருக்கான அன்பு என்பது முடிந்தமட்டும் ஒருவர் இன்னொருவருடைய நற்பண்புகள் மற்றும் தாலந்துகளைப் பார்த்திடுவதற்கும் மற்றும் ஒருவர் இன்னொருவருடைய மேலான ஆவிக்குரிய நலன்களை எப்படியாகிலும் நாடுவதற்கும் பெருந்தன்மையுடன் ஆயத்தமாய் இருப்பதைக்குறிக்கின்றதாய் இருக்கும்.

(10)“அமைப்புகள்” யாவற்றையும் தவிர்த்துக்கொள்ளுங்கள்; தேவனுடைய குடும்பமெனக் கூடிக்கொள்ளுங்கள்; விலையேறப்பெற்ற இரத்தத்தின்மீதான விசுவாசத்தினால் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக்கொண்டதாக அறிக்கைப்பண்ணுகிறவர்களும், “பாவத்திற்கு எதிராய்த் தாங்கள் போராடுவதைத்” தங்களது அன்றாட ஜீவியத்தின் வாயிலாகக் காண்பித்துக்கொள்பவர்களுமான யாவரையும் “சகோதரரென” அடையாளங்கண்டுகொள்ளுங்கள்; உங்கள் மத்தியிலிருந்து கனத்திற்குரிய உங்களது ஊழியர்களைத் தெரிந்தெடுத்துக்கொள்ளுங்கள். தெரிந்துகொள்கையில் உங்கள் சொந்த சித்தத்தையோ அல்லது உங்களுக்கு மகிமை சேர்க்கவோ, உங்களது சகோதரருடைய சித்தத்தையோ, அவர்களுக்கு மகிமை சேர்க்கவோ நாடாமல், இது தொடர்பாக வேதவாக்கியங்களில் இடம்பெறுபவைகளை நினைவில்கொண்டு, தேவனுடைய சித்தத்தையும், அவருக்கு மகிமை சேர்க்கவும் மாத்திரம் நாடுங்கள்.

ஒருவேளை இதழாசிரியர் உங்களிடத்தில் ஏதேனும் விசேஷித்த தூதுவரை அனுப்ப வேண்டிய தருணங்கள் ஏற்படுகையில், தனது பரிந்துரையின் கடிதத்தினை, இதழாசிரியர் அநேகமாக அவரிடம் கொடுத்தனுப்புவார் (இப்படிக் கடிதங்கள் கொடுத்தனுப்புவது என்பது கிறிஸ்தவ அல்லது உலக நண்பர்கள் மத்தியில் வழக்கமான காரியமேயாகும். மேலும் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் தான் யாரை நண்பர்கள் என்று அங்கீகரிக்கின்றார் அல்லது யாரை தேவ ஜனங்களுக்குப் போதகர்களென அறிமுகப்படுத்தி வைக்கின்றார் என்பது தொடர்புடைய விஷயத்தில் விசேஷித்த பொறுப்பினைக் கொண்டிருக்க வேண்டும்). இதழாசிரியரினால் கையெழுத்திடப்பட்டக் கடிதம் ஒன்றினைப் பெற்றிருக்கும் சகோதரன் ஒருவர் உங்களிடத்திற்கு வருவாரானால், அவரை இதழாசிரியருக்கு நன்குத் தெரியும் என்றும், உங்களுக்கு ஜீவ அப்பத்தினைப் பரிமாறிடுவதற்குரிய சில விசேஷித்தத் தாலந்துகளை அவர் பெற்றிருப்பதாக இதழாசிரியர் நம்புகின்றார் என்றும் நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

---

R 1866

# பிரயோஜனமான கூட்டங்கள் தொடர்பாக...

கூட்டங்களை நடத்திடுவதற்கான மிகப் பிரயோஜனமான வழிமுறைகள் தொடர்பான அறிவுரை வேண்டி, சத்தியத்தில் காணப்படும் நண்பர்களிடமிருந்து அநேகம் வேண்டுகோள்களை நாம் பெற்றுக்கொண்டோம். ஒரு சகோதரன் பின்வருமாறு எழுதுகின்றார்:

"டாணை வாசித்துக்கொண்டிருக்கும் சில சகோதரர்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஆராயத்தக்கதாக ஏதோ ஓர் இடத்தில் கூடிடலாம் என்ற தங்கள் விருப்பத்தினைத் தெரிவித்துள்ளனர் மற்றும் புதிதாய்த் துவங்கியுள்ளவர்களுக்குப் பொருத்தமான ஒரு திட்டத்திற்காக தங்களது ஆலோசனையை நான் கேட்கின்றேன். நாங்கள் இந்த ஆராய்ச்சியைச் சரியான விதத்தில் துவங்கி, அநேகம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக எங்களுக்காய் ஜெபம்பண்ணுங்கள்."

- உங்கள் J. W. Mclane.

புதிய இடத்திற்குச் சமீபத்தில் இடமாறியுள்ள வேறொரு சகோதரன் கூறுகிறதாவது:

"இந்த இடத்தை வேலை பண்ணிடுவதற்கான நல்ல நிலமாக நான் காண்கின்றேன். நான் இங்குக் கைப்பிரதிகளைக் கொடுத்துள்ளவர்களில் அநேகர் ஆர்வத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களிடத்தில் நான் வேதப்பாடங்களைக் குறித்துத் தாராளமாய்ப் பேசியுள்ளேன் மற்றும் என் இல்லத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான அவர்களது வாக்கையும் பெற்றுள்ளேன். ஆகையால் தாங்கள் எனக்கு அறிவுரையளித்து உதவினால், நான் மிகவும் நன்றியுள்ளவனாய் இருப்பேன்."

ஆண்டவருடைய ஊழியத்தில் தங்கள்
அருமை சகோதரன்,
JOSHUA L. GREEN.

வேறொரு சகோதரன் எழுதினதாவது:-

"ஆராதனைக்கெனக் கூடிடுவதற்கென்று விரும்பும் அநேகர் இங்குக் காணப்படுகின்றனர். அதை எப்படிச் செய்வது என்பது தொடர்பான சில அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள நாங்கள் பிரியப்படுகின்றோம்.

எங்களுக்குத் திருப்திகரமாயிருக்கும் சில வழிமுறைகளை நீங்கள் எங்களுக்குச் சொல்லிடுவீர்கள் என்று நம்புகின்றோம். எங்களில் சிலர் (பெயர்) சபைகளை விட்டு வந்தவர்களாகவும், மனித கட்டளைகள் யாவற்றிடமிருந்தும் சுதந்தரமடைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். நானும் Presbyterian சபையைவிட்டு வந்தவனாவேன்.

கிறிஸ்துவுக்குள் உங்கள்,
C. C. FLEMING.

யுகங்களுக்கடுத்த தேவனுடைய திட்டத்தைக் கற்றுக்கொள்வதற்கான விருப்பம் பெருகி வருவதையும் மற்றும் இதில் வழிமுறைகளின் மற்றும் ஒழுங்குமுறைகளின் முக்கியத்துவமும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ளதையும் கவனிக்கையில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எங்களது அறிவுரை பின்வருமாறு:-

(1) இது தொடர்பாக மே 1, '93; பக்கம்-131; செப்டம்பர் '93; பக்கம்-259; அக்டோபர் 15, '93; பக்கம்-307; மார்ச் 1, '94; பக்கம்-73; ஏப்ரல் 1, '95; பக்கம்-78; மே 1, '95; பக்கம்-109 ஆகிய நம்முடைய வெளியீட்டுகளில் ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள சில காரியங்களை முதலாவதாக மறுபடியும் வாசியுங்கள்.

(2) "அமைப்பை" குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அது முற்றிலும் அவசியமற்றதாகும். வேதாகம விதிமுறைகளே, உங்களுக்கு அவசியப்படும் ஒரே விதிமுறைகளாகக் காணப்படுகின்றன. மற்றவர்களுடைய மனசாட்சியினைக் கட்டிப்போடுவதற்கு நாடாதிருங்கள் மற்றும் மற்றவர்களும் உங்களுடைய மனசாட்சியினைக் கட்டிப்போடுவதற்கு

அனுமதித்துவிடாதீர்கள். இன்றையதினம் தேவனுடைய வார்த்தைகளை உங்களால் புரியமுடிந்த அளவுக்கேற்ப அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படியுங்கள் மற்றும் இப்படியாக நாளுக்கு நாள் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்வதற்குத் தொடருங்கள்.

(3) வேதாகமமானது நீங்கள் யாரிடம் "சகோதரரென" ஐக்கியங்கொள்ளலாம் என்று உங்களுக்குத் தெரிவிக்கின்றது - மாம்சத்தின்படி நடக்காமல், ஆவியின்படி நடப்பதற்கு நாடுகின்ற விசுவாசிகளுடன் மாத்திரமேயாகும். எதையாவது மற்றும் எல்லாவற்றையும் விசுவாசிக்கும் விசுவாசிகளல்ல, மாறாக மனுக்குலம் பாவத்திற்குள் விழுந்தது மற்றும் அதற்கான தண்டனை மரணம் என்றும், "அனைவருக்குமான (சரிநிகர் சமமான விலையென) ஈடுபலியென," "பாவமன்னிப்புண்டாகும்படிக்குச் சிந்தப்பட்ட," "அவரது இரத்தத்தின் மீதான விசுவாசத்தின்" வாயிலாகவே கிறிஸ்துவுக்குள்ளாக மாத்திரம் இரட்சிப்பு இருக்கின்றது என்றுமுள்ள சுவிசேஷத்தினுடைய பதிவுகளை விசுவாசிக்கும் விசுவாசிகளே ஆவர். கிறிஸ்துவைச் சிறந்த மற்றும் நல்ல நபர் என்றும், நீதியான வாழ்க்கைக்குரிய சிறந்த உதாரணம் என்றும் மாத்திரம் விசுவாசிப்பவர்கள் என்பவர்கள் அயலகர் அல்லது அறிமுகமானவர்கள் என்று கருதப்படலாம்; ஆனால் அவர்கள் "விசுவாசிகளல்ல" மற்றும் இதனால் அவர்களைப் போன்றே யூதர்கள், முகமதியர்கள், நாத்திகர்கள், ஆயக்காரர்கள் மற்றும் பாவிகள் இயேசுவைக் கருதுவதினால், இவர்களும், அவர்களும் "சகோதரர்களாய்" இருப்பதில்லை.

(4) பாவம் மற்றும் மரணத்திலிருந்து மிகவும் விலைக்கொடுத்து வாங்கப்பட்டுள்ளதினால், நீங்கள் தேவனுடைய பிள்ளைகளென ஒன்றுகூடிவந்து, இனிமேல் உங்களுக்காக இல்லாமல், உங்களுக்காக மரித்தவருக்காக ஜீவித்திடுவதற்கு முடிவெடுத்துள்ளீர்கள் (2 கொரிந்தியர் 5:15). உங்களது கூட்டங்களானது சில குறிப்பிட்ட நோக்கங்களைப் பெற்றிருக்க வேண்டும். அவை:-

(a) ஆராதனை, துதி மற்றும் ஜெபம்

(b) உலகம், மாம்சம் மற்றும் உள்ளிலும், வெளியிலுமுள்ள பிசாசுக்கு எதிராக வெற்றிகரமாய் போர்ப்புரியத்தக்கதாக ஒருவருக்கொருவர் உதவுதல்.

(c) மேலும் இவைகளுக்காக, நமக்கு அறிவுரையாகவும் மற்றும் தேவனை அன்புகூருகிறவர்களுக்கும், அவருக்கு ஊழியஞ்செய்ய, அவரைக் கனப்படுத்த மற்றும் அவருக்குக் கீழ்ப்படியத்தக்கதாக தங்களது பிரயாசங்களின் வாயிலாக தங்களது அன்பினை ரூபகாரப்படுத்துகிறவர்களுக்கும் அவரால் ஆயத்தம் பண்ணப்பட்டதான அந்த ஆசீர்வாதங்களிடத்திற்கு நடத்துகின்றதான இடுக்கமான வழியில் நமக்கு உதவுவதற்காகவும் - அவர் அருளியுள்ளதான அவரது வார்த்தைகளை ஆராய்வதற்கும்கூட நீங்கள் ஒன்றுகூடிட வேண்டும்.

(5) இப்படியாக உபதேசங்களைப் பற்றின அறிவானது நாம் கூடிடுவதில் அடைந்தாக வேண்டிய நோக்கமாயிராமல், மாறாக குணலட்சணத்தைக் கட்டியெழுப்புவதற்கேயாகும்; இந்தக் குணலட்சணங்களானது, தேவனுடைய அருமையான குமாரனின் சாயலை அடைவதற்கான முயற்சிகளாக, "பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்படும்." ஆனால் தேவனுடைய கிருபையில் வளருவதற்குரிய நம்முடைய பிரயாசங்களுக்கு, அவரது வார்த்தையில் அவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளதான உபதேசங்கள் குறித்த அறிவானது மிகவும் விலையேறப்பெற்றதாய் இருக்குமெனத் தேவன் தெரிவிக்கின்றார்.

ஆகையால் ஆராதனை, துதி மற்றும் ஜெபத்திற்குப் பிற்பாடு வேதாகம ஆராய்ச்சியானது, அதன் இரண்டு பாகங்களில் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும், அவை: (a) தேவனுடைய திட்டம் குறித்து ஆராய்ச்சி -- அவர் நமக்கும், உலகத்திற்கும் என்ன செய்துகொண்டிருக்கிறாரென அவர் நமக்குச் சொல்வது என்ன என்பது குறித்தும், அவர் என்ன செய்திருக்கின்றார் மற்றும் என்ன இனிமேல் செய்யவிருக்கின்றார் என்பது குறித்தும் நாம் ஆராய்வதினால் நாம் புத்திரர்களெனத் தேவனுடைய மாபெரும் வேலைக்குரிய ஆவியை அடையவும் மற்றும் அவரோடு அறிவுள்ள உடன் வேலையாட்களாகக் காணப்படவும் உதவப்படுவோம். (b) இப்பொழுதும், இனிவரும் யுகங்களிலும் தேவனுக்குப் பிரியமாயும், அவர் அங்கீகரிக்கத்தக்கதாயுமுள்ள அப்படியான குணலட்சணங்களை நாம் வளர்க்கத்தக்கதாக, தேவனுடைய ஊழியங்களில் ஒருவர் இன்னொருவரிடத்திலும் மற்றும் நம்மில் ஒருவராய் இல்லாதவர்களாய் இருப்பவரிடத்திலும் கொண்டிருக்கும் நமது கடமைகள் மற்றும் சிலாக்கியங்கள் குறித்து ஆராய்வதாகும்.

பொதுவான சௌகரியத்தின் நிமித்தமாக இந்தக் கூட்டங்களானது ஒன்றரை முதல் இரண்டு மணி நேரங்களுக்கு மேலாக நடத்தக்கூடாது என்றபோதிலும், வாரந்தோறும் இரண்டு கூட்டங்களாகிலும், ஒன்று கிறிஸ்தவ கிருபைகள் மற்றும் சாட்சி மற்றும் ஒருவருக்கொருவர் உதவுதல் ஆகியவற்றிற்கான கூட்டமாகவும், மற்றொன்று வேதாகம ஆராய்ச்சிக்காகவும்

இருப்பது பொதுவாக நலமாயிருக்கும். ஒவ்வொரு கூட்டத்திலும் நன்றியோடு தொழுதுகொள்வதற்கான நமது பாடல்கள், ஜெபங்கள் தேவனுக்கு முன்பு சுகந்தவாசனையாய் எழும்பிட வேண்டும் மற்றும் இந்த ஆராதனையில் அனைவரும் பங்கெடுக்க வேண்டும்.

ஆதிசபையில் இருந்தது போலவே, நம் மத்தியிலும் முறையாய் உரையாற்றும் பிரசங்கித்தல் என்பது அரிதாக வாய்ப்புகள் இருப்பதற்கேற்ப காணப்படுகின்றன. தேவையான தகுதிகளை - அதாவது சத்தியத்தைக் குறித்த தெளிவான புரிந்துகொள்ளுதல் மற்றும் அதைக் கர்த்தருடைய மந்தைக்கு உதவியாகக் காணப்படத்தக்கதாக முன்வைத்திடுவதற்கான திறமை, குரல், கல்வியறிவு போன்ற தகுதிகளையும் கூடப் பெற்றிருக்கும் ஏதோ சகோதரன் காணப்படும்போதே அந்த அரிதான வாய்ப்புகள் காணப்படுகின்றது மற்றும் இத்தகுதிகளோடுகூட, அவர் சாந்தமுள்ளவராகவும், இறுமாப்பு அடைவதற்கு ஏதுவாக இல்லாதவராகவும் அல்லது தன்னைக்குறித்துப் பிரசங்கியாமல், கிறிஸ்துவின் சிலுவையினைப் பிரசங்கிக்கிறவராகவும் காணப்பட வேண்டும்.

ஆனால் பிரசங்கித்தல் இருக்கின்றதோ அல்லது இல்லையோ, அனைவராலும் (சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் இருவராலும்) பங்குகொள்ள முடிகின்ற மற்றும் அனைவரும் பங்குகொள்ள வேண்டிய மற்றக் கூட்டங்களானது தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்; மேலும் பரிசுத்தவான்களில் (அர்ப்பணம்பண்ணியுள்ள "விசுவாசிகளில்") ஒவ்வொருவரும் நன்மை செய்யவும், நன்மையை அடையவும் நாடிட வேண்டும் (உரோமர் 14:19; எபேசியர் 4:11-32; 1 தெசலோனிக்கேயர் 5:11 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்).

(6) நாம் எந்த அளவுகோலைக் கொண்டு சத்தியத்தை அறிந்துகொள்ளலாம் மற்றும் நிரூபித்துக்கொள்ளலாம்? வேதவார்த்தைகளானது, "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்று நாம் பதிலளிக்கின்றோம் (2 தீமோத்தேயு 3:16, 17).

ஆனால் வேதாகமத்தைப் புரிந்துகொள்வது எப்படி? நூற்றாண்டுகளாக நல்ல மனுஷர்களும், கெட்ட மனுஷர்களும் அதன் பக்கங்களில் தேடியிருந்திருக்கின்றனர். இதில் ஆசீர்வாதங்களை நல்ல மனிதர்கள் கண்டடைந்துள்ளனர்; எனினும் உபதேசங்களைப் பொறுத்தமட்டில் குழப்பமே அடைந்துள்ளனர்; திருப்திகரமானத் திட்டம், ஒழுங்கு, நீதி மற்றும் ஞானம் குறித்தும் அவ்வளவு காலங்களாக எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. தேவ திட்டத்தின் இரகசியத்தினுடைய நிறைவேறுதலுக்குரிய ஏற்றவேளை வராமல் இருந்தது மற்றும் அது அந்த ஏற்றகாலம் வரையிலும் "முத்திரிக்கப்பட்டிருந்தது," "மறைத்துவைக்கப்பட்டிருந்தது." ஆனால் இப்பொழுது "பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும்" காலங்களில் ஜீவித்துக்கொண்டிருக்கும் நாம் மற்றும் குறிப்பாக 1335-நாட்களின் முடிவிலுள்ள பாக்கியமான காலங்களிலும், தற்கால அறுவடையிலும் மற்றும் ஏழாம் எக்காளம் தொனிக்கத் துவங்கும் காலத்திலும் காணப்படும் நாம், கடந்த காலங்களிலுள்ள பரிசுத்தவான்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட அனுபவத்தைக் கொண்டிருக்கின்றோம். கடந்த காலங்களிலும் அநேகம் நீதியான மனுஷர்களும், அநேகம் தீர்க்கத்தரிசிகளும் காண்பதற்கு சிலாக்கியமடையாத, தேவனுடைய இராஜ்யங்களுக்கடுத்த இரகசியங்களை நாம் காணும்படிக்கு அருளப்பட்டிருக்கின்றது. தற்கால சத்தியத்தின் வெளிச்சத்திற்காக தேவனுக்கு நன்றி! இப்பொழுது நம்மால் தேவனுடைய ஒரு திட்டத்தினைக் காணமுடிகின்றது - கடந்தகால சரித்திரத்தின், எதிர்க்கால வெளிப்படுத்துதலின் ஒவ்வொரு அம்சங்களையும் உள்ளடக்கியுள்ள ஒரு திட்டமாகும்; முழுமையான ஒரு திட்டமாகும்; எப்பாகத்திலும் தொடர்பற்ற நிலைமையும், குறைப்பாடும் இல்லாத ஒரு திட்டமாகும்; தெய்வீக நீதி, ஞானம், வல்லமை மற்றும் அன்பிற்கும் மற்றும் திவ்விய வார்த்தைகள் ஒவ்வொன்றிற்கும் முற்றிலும் இசைவான ஒரு திட்டமாகும் மற்றும் இப்படியாக இது ஒரு நியாயமானத் திட்டமாக இருக்கின்றது என்று மாத்திரமல்லாமல், தேவனுடைய திட்டத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கையில், மற்ற அனைத்துக் கூற்றுகளும், திட்டங்களும் குறையுள்ளவைகளாகவும், நிச்சயமாய்த் தப்பறையானவைகளாகவும், திவ்விய குணாதிசயங்கள் மற்றும் திவ்விய வார்த்தைகளுக்கு முரணாகவும் காணப்படுகின்றது என்றும் நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது.

யுகங்களுக்கடுத்தத் திட்டம் குறித்த புரிந்துகொள்ளுதலுக்குள்ளாக வருபவர்கள், அது தேவனால் உண்டானது என்றும், மனிதனால் உண்டானதல்ல என்றும் அடையாளம் கண்டுகொள்கின்றனர். அது தேவனுடைய இரகசியங்களுக்குத் தேவன் தாமே அருளியுள்ளதான திறவுகோலாய்க் காணப்படுகின்றது மற்றும் இதற்காக அவருக்குத்

துதியனைத்தையும் சாற்றிடும்படியாக நாம் அனைவரும் ஒன்றிணைந்துவிடுவோமாக. அதன் ஒளியானது, மில்லேனியேல் டாணுடையதாய் இருந்து, ஆயிரமாயிரமானவர்களுக்குச் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் இறங்கி வருகின்றதான திவ்விய காரணக்கர்த்தாவிற்கு அனைத்துத் துதியையும், கனத்தையும் உரித்தாக்குவோமாக மற்றும் இவர் தம்முடைய வாக்குத்தத்தத்திற்கேற்ப (லூக்கா 12:37) ஆவிக்குரிய "ஏற்றகால சத்தியத்தினை" கொண்டு தமது சபையைத் தொடர்ந்து போஷிக்கின்றார். தேவன் நம்முடைய போதகராகத் தொடர்ந்து காணப்பட்டு, இதுவரையிலும் அவருடைய ஜனங்களுக்கு தம்முடைய அறிவுரை வழங்கப்படத்தக்கதாகக் கருவிகளைப் பயன்படுத்தி வந்தார் மற்றும் மில்லேனியேல் டாணில் (volumes) முறையாய் முன்வைக்கப்பட்டவைகளைப் பயன்படுத்தி யுகங்களுக்கடுத்த தம்முடைய திட்டத்தைக்குறித்தும், இந்த அறுவடைகாலத்தின் போதான கடமைகள் மற்றும் சிலாக்கியங்கள் குறித்தும் அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகின்றார்; காரணம் "தேவரகசியம் நிறைவேறுவதற்கான" ஏற்றகாலம் வந்துள்ளது (வெளிப்படுத்தல் 10:7). தேவனால் அனுப்பப்பட்ட போதகராகிய மில்லேனியேல் டாண் வாயிலாகத் தனிப்பட்ட விதத்தில், வசனத்தில் கற்பிக்கப்பட்டவர்கள், அதைத் தங்களது தனிப்பட்ட ஆராய்ச்சியிலும், ஒன்றுகூடிப் பண்ணிடும் ஆராய்ச்சியிலும் தேவனுடைய வாய்க்கருவி இல்லையென்று புறக்கணிப்பதற்கு எக்காரணமும் அறியாதிருப்பார்கள்; அதாவது உயிருள்ள போதகர் ஒருவரை வாய்க்கருவி இல்லையென்று புறக்கணிப்பதற்கு எக்காரணமும் அறியாதிருப்பது போலவேயாகும்.

தற்கால சத்தியமென்னும் இந்த ஆசீர்வாதம் கடந்துவருவதற்கான கால்வாயாக தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட எளிய மனித பாத்திரங்களைத் தொழுதுகொள்ள முற்படுபவர்களுக்கு நாம் சொல்வதாவது: "நீ இப்படிச் செய்யாதப்படிக்குப் பார்; உன்னோடும், உன் சகோதரரோடும், தீர்க்கத்தரிசிகளோடும் (அனைத்து உண்மையான போதகர்கள் அல்லது தேவனுடைய வாய்க்கருவிகளோடு) . . . நானும் ஒரு ஊழியக்காரன் (நான் கர்த்தரல்ல); தேவனைத் தொழுதுகொள்" (வெளிப்படுத்தல் 22:9). ஜீவத்தண்ணீரும் மற்றும் அதைக் கொடுப்பவருமேதான் ஒழிய, அது அனுப்பப்படும் பூமிக்குரிய பாத்திரமானது தொழுதுகொள்ளப்படக்கூடாது. பூமிக்குரிய பாத்திரங்களானது மகிமைப்படுத்தப்படக்கூடாது. "அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?" (1 கொரிந்தியர் 4:6, 7).

இந்தக் கொடிய அறுவடைகாலங்களில், ஊழியம் புரிவதற்கான பெலம் மற்றும் கிருபை மற்றும் ஞானத்தின் பொக்கிஷங்கள் வேண்டுமெனில், தேவனால் கொடுக்கப்பட்டதான யுகங்களுக்கடுத்த திட்டத்தையே நாம் அனைவரும் வேதாகமத்தின் ஆராய்ச்சியில் பயன்படுத்திட வேண்டும்; மற்றும் இதற்காகவே அது தேவனால் அருளப்பட்டுமுள்ளது. அதைத் தேவனால் அருளப்பட்ட வெளிச்சமென அடையாளம் கண்டுகொள்ளும் ஒவ்வொருவரும் அதை வசனத்தினுடைய ஆராய்ச்சியின்போது பயன்படுத்திட வேண்டும். தேவன் சித்தம்கொண்டுள்ளது போன்று ஒவ்வொருவரும் அதைத் தனது சொந்த ஒளியாக ஆக்கிக்கொள்ள வேண்டும். தேவனுடைய பொதுவானத் திட்டம் குறித்துக் கேட்கப்படுவதற்கு வாய்ப்புள்ளதான ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிக்க முடிகிற அளவுக்கு, ஒவ்வொருவரும் அதைப் பயன்படுத்துவதில் கைத்தேர்ந்தவர்களாகக் காணப்பட வேண்டும். ஆனால் அந்தோ! அது சகோதரர் ரசலின் திட்டம் என்று சிலர் எண்ணி, தாங்களும் தங்கள் சொந்தத் திட்டத்தை உண்டுபண்ணிட வேண்டும் என்று எண்ணுகின்றனர். இது மாபெரும் தவறாகும். அது எங்களுடைய திட்டமல்ல, மாறாக தேவனுடைய திட்டமாகும். ஒருவேளை அது தேவனுடைய திட்டமில்லையெனில், அதற்கு எந்த முக்கியத்துவமும் இருப்பதில்லை. நமக்கு மனித திட்டங்கள் எதுவும் அவசியமில்லை. நிச்சயமாகவே தேவன் அங்கீகரிக்கத்தக்கதான திட்டங்களை, அவருக்காக மனுஷர்கள் ஏற்படுத்திட முடியாது; ஏனெனில் "உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே" அவரது திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. தேவன் ஒரே ஒரு திட்டத்தினை வைத்திருக்கின்றார் மற்றும் அது மாற்றியமைக்கப்பட முடியாது மற்றும் இப்பொழுது அதை அவர் வெளிப்படுத்தியுள்ளார்; அது அருமையாகவும், அதேசமயம் எளிமையாகவும், அழகாகவும் காணப்படுகின்றது என்று நாம் அறிக்கையிடுகின்றோம். அது மனிதனால் எண்ணிப் பார்க்கவோ அல்லது திட்டமிடவோ முடியாத ஒரு திட்டமாகும். அதன் சிந்தைகளானது, மனிதனுடைய சிந்தைக்கு அப்பாற்பட்டதாய் இருக்கின்றது மற்றும் இதனால்தான் கடந்த நூற்றாண்டுகளில் மனிதர்கள் யுகங்களுக்கடுத்த இந்தத் தெய்வீகத் திட்டத்தினை ஊகித்துக்கூடப் பார்த்ததில்லை.

ஆகையால் வேதாகமம் எனும் அளவுகோல் தரமானது, ஒவ்வொருவரும் அதில் திறமிக்கவர்களாக - அதில் திறமிக்க போதகனாகுவது வரையிலும், தேவனால் கொடுக்கப்பட்டுள்ள இந்தப் போதித்தல்களின் வெளிச்சத்தில் கற்றுக்கொள்ளப்பட வேண்டும். பின்னர் ஒவ்வொருவரும் தனது வெளிச்சத்தினைப் பிரகாசிக்கப்பண்ணிட வேண்டும் - தாழ்மையாய் அதை மற்றவர்களுக்குப் பரிமாறிட வேண்டும்.

அந்தோ பரிதாபம்! யுகங்களுக்கடுத்த தேவனுடைய அன்பான திட்டத்தினைக் காணத்தக்கதாக தங்கள் கண்கள் திறக்கப்பட்டச் சிலர், ஆச்சரியமடைந்து, தற்கால சத்தியத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிற போதிலும், அதிகமான ஆசைக்கொள்கின்றனர். தேவன் தம்முடைய ஜனங்களென நமக்கு ஏற்கெனவே கொடுத்துள்ளவைகளை நன்றாய்ப் பயன்படுத்துவதே, இத்தகையவர்கள் செய்ய வேண்டிய காரியமாய் இருக்கின்றது. தேசத்தில் பஞ்சம் காணப்படுகின்றது; அது ஆகாரத்திற்கான பஞ்சமல்ல, ஜலத்திற்கான பஞ்சமல்ல, கர்த்தருடைய வசனத்திற்கான பஞ்சமாகும் (ஆமோஸ் 8:11). காத்துக்கொண்டிருக்கும் தம்முடைய ஜனங்களுக்காக நமது கர்த்தரும், ஆண்டவருமானவர் வந்துள்ளார் மற்றும் புதியதும், பழையதுமான சத்தியங்களை முறையாகப் பந்தியில் வைத்துள்ளார் (மத்தேயு 13:52). நமக்கு முன்வைக்கப்பட்டுள்ளவற்றை முழுமையாய்ப் புசியாதது வரையிலும், அதிகமான அல்லது வேறே ஆசீர்வாதங்களைக் கேட்பதற்கு நிச்சயமாய் நமக்கு அதிகாரமில்லை. புசித்தப் பிற்பாடு, பெற்றுக்கொண்டு பலத்தினால் மற்றவர்களுக்குப் போஜனத்தைப் பரிமாறுவதன் வாயிலாக நாம் பயிற்சி செய்ய வேண்டும். இதைச் செய்யத்தவறி, இன்னமும் திறக்கப்படாத பண்டகச் சாலையிலுள்ள மற்றப் பாகங்கள் எதையேனும் திறக்க முற்படுபவர் நிச்சயமாய் மோசமான நிலைமையிலேயே காணப்படுவார். யாரும் உள்ளே புகமுடியாத விதத்திலும் மற்றும் நியமிக்கப்பட்ட வேளையில் சுலபமாய்த் திறந்திடும் விதத்திலுள்ள, குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் திறக்கும் பூட்டின்/Time lock-இன் உதாரணத்தை நினைவில்கொள்ளுங்கள் (மில்லேனியேல் டாண், volume 2, தமிழ் பக்கம்-12; ஆங்கில பக்கம்-23).

"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே (மனித சாமார்த்தியத்தினாலோ அல்லது பிரயாசத்தினாலோ உண்டுபண்ணப்படவில்லை அல்லது அடையப்பெறவில்லை), அவைகளை உட்கொண்டேன்" (எரேமியா 15:16; வெளிப்படுத்தல் 10:10). நமது கர்த்தர் தம்முடைய சபையின் நலனுக்குத் தேவையான உணவினை எப்போதுமே கொடுத்துள்ளார் மற்றும் சம்பூரணமாகவே எப்போதும் கொடுத்துள்ளார். ஏற்கெனவே பெற்றுக்கொண்டதான உணவைப் புசிப்பதிலும் மற்றும் அதனிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதான பலத்தைப் பயன்படுத்துவதிலும் சுறுசுறுப்பாய் இருப்பதே சபைக்கான சரியான மனப்பான்மையாய் இருக்க வேண்டும். அவள் திரளானவைகளைப் பெற்றிருக்கும் பந்தியை விட்டுவிட்டு, அதிகமானவைகளுக்காக ஜெபம் ஏறெடுக்கக் கூடாது. அதிகமானவை பிரயோஜனமாய் இருக்குமானால், அதிகமானவை, தேவன் மற்றும் சபையின் சில "ஊழியக்காரரின்" கரங்கள் வாயிலாக அனுப்பிவைக்கப்படும். உண்மையான "ஊழியக்காரன்" உணவைத் தயாரிக்க வேண்டிய அவசியத்தினைக் காண்பதில்லை; ஏனெனில் உணவானது மாபெரும் வீட்டெஜமானால் அவனுக்குக் கொடுக்கப்படும். அவ்வுணவானது அவனுக்குக் "கிடைத்திடும்" மற்றும் அவன் அதைக் கர்த்தருடைய குடும்பத்திற்கு முன்னதாக முன்வைக்கையில், அவர்கள் அதில் திவ்விய சத்தியத்தின் அடையாளங்களைக் கண்டுகொள்வார்கள். அதில் அவர்கள் சம்பூரணமாய்ப் பங்குகொண்ட பிற்பாடு, அதை அவர்கள் மற்றவர்களுக்குப் பரிமாறிடுவார்கள்.

நமக்குச் சத்தியம் "கிடைக்கும்" போது, அதிகமான வேலையும் கடந்துவருகின்றது - அதைப் புசிப்பதற்கும், ஆராய்வதற்கும் மற்றும் அதை உள்வாங்கிக்கொள்வதற்குமான வேலையும் மற்றும் மற்றவர்களுக்கு அதைப் பரிமாறிடும் வேலையும் கடந்துவருகின்றது. சத்தியம் கிடைக்கையிலும், அதை முதலாவது சுவைக்கையிலும் - வேலை மற்றும் கசப்பான அனுபவங்கள் வருகிறதில்லை; மாறாக இவை நம்முடைய மற்றும் மற்ற ஜனங்களுடைய தவறான அபிப்பிராயங்களுக்குச் சத்தியமானது முரண்படுகையிலேயே வருகின்றதாய் இருக்கின்றது. பின்னரே மற்றவர்களுக்கும் சத்தியமானது சுலபமாய்க் கிடைத்து, அதை அவர்கள் புசிக்கத்தக்கதாக, மற்றவர்களுக்கும் பரிமாறிடும் இன்பகரமாய், ஆனால் பெரும்பாலும் வலியுள்ளதாய்க் காணப்படும் வேலையானது கடந்துவருகின்றது. சத்தியத்தைப் புசித்தல் (அதை மெய்யென்று கண்டுகொள்ளுதலும் மற்றும் பின்னர்ப் பலமடையத்தக்கதாக அதை உள்வாங்கிக் கொள்ளுதல்) என்பது சிறு வேலையல்ல. ஒரு புதிய ஆகாரம் நம்முன் வருகையில், நம்முடைய கண்களானது முதலாவது அதை விமர்சிக்கின்றது. ஒருவேளை அது நல்லதாய்க் காணப்படுகிறதென்றால், அதை நாம் எடுத்து, அதை முகர்கின்றோம்; நம்முடைய பற்களினால்

அதைக் கடிப்பதன் மூலம், அதை இன்னுமாய்ப் பகுத்துணர்கின்றோம்; பின்னர் நம்முடைய சுவைப்புலனானது, சுவையை வைத்துப் பகுத்துணர்கின்றது மற்றும் நமது பற்களானது போஷாக்கைப் பெறுவதற்கு ஆயத்தமாய்க் காணப்படுகின்றது. ஆகையால் ஒவ்வொரு தேவபிள்ளைக்கும் கர்த்தர் அவனுக்கான ஆவிக்குரிய ஆகாரத்தினை அளித்தப் பிற்பாடு மற்றும் அவனுக்கு அது "கிடைத்த" பிற்பாடு, அதை மெய்யானது என்று கண்டுகொள்வதிலும் மற்றும் அதைப் புசிப்பதிலும், அவனுக்கு நிறைய வேலை காணப்படுகின்றது. மெய்யானது என்று நிரூபித்துக்கொள்ளுதல்/கண்டுகொள்ளுதல் அவசியமாய் இருக்கின்றது, காரணம் சாத்தான் தனது பிரதிநிதிகள் வாயிலாக நமக்கு விஷமான ஆகாரங்களைக் கொடுத்திடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றான். நாம் நமது ஆவிக்குரிய புலன்களைப் பயன்படுத்தி, நாம் புசிக்கும் அனைத்தையும் அளவுகோல் தரத்தினால் பகுத்தறிய அல்லது மெய்ப்பித்துக்கொள்ள வேண்டும் என்றும் மற்றும் இப்படியாக தீமையினின்று நன்மையை வேறுபடுத்தி அறிய கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தேவன் விரும்புகின்றார். இந்த ஆராய்தலுக்கும், மெய்ப்பித்துக்கொள்ளுதல்களுக்கும் மற்றும் உள்வாங்கிக்கொள்ளுதல்களுக்கும் உலகம், மாம்சம் மற்றும் பிசாசிடமிருந்து எதிர்ப்புக் காணப்படுகின்றபடியால், இதற்கே அதிகமான சக்தியும், ஜெயங்கொள்ளும் தன்மையும் தேவையாய் இருக்கின்றது மற்றும் இதனால் மற்றவர்களுக்கு உதவுவதற்குக் கொஞ்சமே நேரமும், சக்தியும் காணப்படுகின்றது.

"ஏற்றகால சத்தியமாய்" இராதபடியினால், பொருத்தமானதாய் இராது என்று தேவன் மறைத்துவைக்க விரும்பும் எந்த இரகசியங்களையும் நம்மால் உடைத்திட முடியாது மற்றும் இப்படிச் செய்ய நாம் விரும்பவும் கூடாது என்றும் நாம் நினைவில்கொள்வோமாக. கீழே விழும்வரை காய் பருவத்தில் காணப்படும் ஆப்பிளை அடிக்கிற சிறுவன், அது விழுகையில் தனக்கு ஆரோக்கிய கேட்டை உண்டுபண்ணும் ஆகாரத்தையே பெற்றுக்கொள்கின்றவனாய் இருப்பான். கனிந்த ஆப்பிளானது சுலபமாய் மரத்திலிருந்து பறிக்கப்படலாம். காய் பருவத்தில் காணப்படும் chestnut/செஸ்நட் கொட்டையானது, பறிப்பதற்கு மிகவும் சிரமமாய் இருக்கும் மற்றும் அதை உடைப்பதற்கும் மிகச் சிரமமே காணப்படும் மற்றும் அதை உடைத்தாலும், அதன் பருப்பு ஆரோக்கிய கேட்டையே கொண்டுவரும்; ஆனால் கனிந்த கொட்டையோ கீழே விழுந்து, தானாகவே உடைந்திடும் மற்றும் அதன் பருப்பு சுவையாய் இருக்கும். ஆகையால் நமது ஆண்டவர் நமக்கு என்ன தேவை என்பதை அறிந்திருக்கின்றார் என்றும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதை நமக்கு ஏற்றவேளையில் அளித்திடுவார் என்றும் நிச்சயம்கொண்டு, தெய்வீக வழிநடத்துதலினுடைய கனியும்பருவத்தினைக் கவனிப்பதிலும் மற்றும் வரும் காலங்களுக்கான ஐசுவரியமான பலன்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நமது மனங்களையும், இருதயங்களையும் தாழ்மையுடன்கூடிய ஆயத்தத்துடன் காணப்பட வைப்பதிலுமே நாம் விழிப்பாய்க் காணப்பட வேண்டும்.

டாணினுடைய (volumes) வெளிச்சத்தில் வேதவசனங்களை ஆராய்கையில், ஒவ்வொருவரும் சொல்விளக்கப்பட்டியல் தொகுதியையும் (concordance) மற்றும் ஓரக்குறிப்புகளையும் (marginal references) மற்றும் வாய்ப்பிற்கேற்ப வேதவாக்கியங்களினுடைய பல்வேறு மொழிப்பெயர்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள் மற்றும் வேதவசனத்தின் எழுத்திற்கும், ஆவிக்கும் இசைவாய்க் காணப்படாத எதுவும் சத்தியமாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது என்பதை நினைவில்கொள்ளுங்கள். தேவனுடைய வசனமே புசிக்கப்பட வேண்டும்; டாண்களும் (volumes) மற்றும் டவர்களும் (ரீபிரிண்ட்ஸ்) ஆகாரத்தினைப் போஷிக்கத்தக்கதாக - அதாவது "சத்தியவசனத்தை" நிதானமாய்ப் பகுத்திடுவதற்கும் மற்றும் இப்படியாய் அதைப் புசிப்பதற்கு எளிமையாக்குவதற்கும் நமக்கு உதவுவதற்குத் தேவனால் அளிக்கப்பட்ட உதவிகளாய்க் காணப்படுகின்றது.

யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டம் குறித்து இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ள வெளிச்சத்தில், வசனத்தை ஆராயும் இத்தகைய கூட்டங்களானது, "டாண் குழுக்கள்" என்று அழைக்கப்படுகின்றது. இத்திட்டமானது பல வருடங்களுக்கு முன்னதாக Baltimore-இன் சகோதரர் ரான் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது மற்றும் இதனால் அவரும், அவரது சபையின் அங்கத்தினர்களும் பலன் அடைந்ததாகத் தகவல் அறிவித்தனர். இதே திட்டமுறையானது மற்றப் பட்டணங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் சரியாய் நடத்தப்படும் பட்சத்தில் வெற்றியே அடைந்தும் இருக்கிறது. உதாரணத்திற்கு டிசம்பர் 15, '94-ஆம் வெளியீட்டில் இடம்பெறும் சகோதரர் Townsend அவர்களின் கடிதத்தையும், ஜனவரி 1, '95-ஆம் வெளியீட்டில் இடம்பெறும் சகோதரர் Jeffery அவர்களின் கடிதத்தையும் பார்க்கவும். "டாண் குழுக்களின்" பலன் குறித்துச் சோதித்துப்பார்க்க வேண்டியதில்லை என்பதினாலும் மற்றும் அவைகளின் முக்கியத்துவமானது நடைமுறையில் நிரூபிக்கப்பட்டுள்ளபடியாலும், சத்தியத்தின்

மாணவர்கள் அனைவரும் மற்றவர்களுடைய அனுபவங்களினால் பலனடையத்தக்கதாக, இக்காரியத்தினை அறிவிப்பது நலமாயிருக்கும். இந்த டாண் குழுக்களை எங்கும் நடத்தும்படிக்கு நாம் அறிவுரை கூறுகின்றோம் மற்றும் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் பலனில் விசுவாசமுள்ளவர்களையும், உண்மையான கிறிஸ்தவ குணலட்சணமுடையவர்களையும் மாத்திரம் இக்குழுக்களுக்கு வரவேற்றுக்கொள்ளும்படிக்கு நாங்கள் உங்களுக்கு யோசனை கூறுகின்றோம். ஆனால் தேவனுடைய வழியை மிகவும் பூரணமாய்க் கற்றுக்கொள்வதற்கு வாஞ்சிக்கும் யாரும் மனப்பூர்வமாய் அனுமதிக்கப்படலாம். அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று, "விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் (கிறிஸ்துவுக்கு முழுமையாய் ஒப்புக்கொடுக்காதவனை) சேர்த்துக்கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள்" - அவிசுவாசியின் சந்தேகங்களைக் குறித்துக் கலந்தாராய்வதற்கு நீங்கள் கூடிடாமல், விசுவாசியின் விசுவாசத்தினை உறுதிப்படுத்திட கூடிடுங்கள் (உரோமர் 14:1; 1 கொரிந்தியர் 14:24, 25).

வழிநடத்துபவர் நல்லதொரு வாசகனாய் இருப்பதும் மற்றும் அவர் volume-1-இன் துவக்கத்துடன் துவங்குவதும் தகுதியானதாய் இருக்கும். அவர் ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் சற்று நிறுத்திட வேண்டும் மற்றும் தேவைப்படும் பட்சத்தில் (கலந்துகொள்பவர்கள்) கேள்விகள் கேட்கப்படுவதற்கோ அல்லது கருத்துரைப்பதற்கோ முழு வாய்ப்பினை அளித்திடலாம் மற்றும் ஒவ்வொரு பத்தியினுடைய முடிவிலும், அதன் பொருளடக்கம் குறித்தும் பொதுவாய்க் கலந்தாயவும் மற்றும் இதனோடுகூட அப்பத்தியில் இடம்பெறும் வசனங்களையும், அவ்விஷயம் சம்பந்தப்பட்ட மற்ற வசனங்களையும் ஆராயவும் கலந்துகொள்பவர்கள் ஊக்கமூட்டப்பட வேண்டும். அனைவருடைய கருத்துக்களை வெளிக்கொண்டு வருவதும், கலந்தாயப்படும் அக்காரியம் குறித்து அங்குக் காணப்படும் ஒவ்வொரு நபரும் புரிந்திருக்கின்றார்களா என்று பார்ப்பதும் வழிநடத்துபவரின் நோக்கமாய்க் காணப்பட வேண்டும். சிலசமயங்களில் ஒன்று அல்லது இரண்டு பக்கங்களில் அல்லது சிலசமயம் ஒன்று அல்லது இரண்டு பத்திகளில் பிரயோஜனமான கலந்தாய்வு பண்ணிடுவதற்கு ஒரு முழுக்கூட்டமே தேவைப்படுகின்றது. டாண் குழுவில் காணப்படும் ஒவ்வொருவரும் சில வேதாகம மொழியாக்கங்களை அல்லது ஒரு "டாணை" (volume) கையில் பெற்றிருக்க வேண்டும்.

ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும், குழுவிலுள்ள ஒவ்வொருவரும், பாடம் குறித்த தனது சிந்தனையைச் சுருக்கமாய்ச் சொல்லிட முயற்சித்திட வேண்டும்; இதினிமித்தம் அவன் எவ்வளவு தெளிவாய்க் கிரகித்துள்ளான் என்று பார்க்கப்படலாம் மற்றும் பாடத்தினை அவனுக்கு மிக ஆழப் பதியவைப்பதற்கும் ஏதுவாயிருக்கும். அனைவருமே சத்தியத்தினை மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொடுக்கத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கின்றனர் என்ற கண்ணோட்டத்தில், ஒவ்வொருவரும் கலந்தாயப்பட்ட பாடத்தினைக் குறித்துத் தனது சொந்த வார்த்தைகளில் கூறிடுவதற்கும், அதுவும் "டாணில்" முன்வைக்கப்பட்டுள்ள முறையில் கூறிடுவதற்கும் முயற்சிக்கும்படிக்கு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

இவ்வகையான வேதாகம ஆராய்ச்சி வழிமுறையினைப் பார்க்கையில், volume-1-இன் முதல் அத்தியாயத்தில் எத்தனை சுவாரசியமான மற்றும் பிரயோஜனமான கலந்துரையாடல் பண்ணப்படலாம் என்பதைக் கவனியுங்கள். Volume-1-இன் முதலாம் அத்தியாயத்தின் முதல் பத்தியானது சங்கீதம் 30:5-ஆம் வசனத்தை: "அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்." கவனத்திற்குக் கொண்டுவந்து கையாளுகின்றதாய் இருக்கின்றது. இது எத்தனை கருத்துக்களை, கலந்துகொள்ளும் ஒவ்வொரு தேவபிள்ளைக்குள் கொண்டுவருகின்றதாய் இருக்கும்! (1) பாவம் மற்றும் மரணம் ஆளுகை செய்யும் நீண்ட, இருண்ட இரவினை ஒவ்வொருவரும், இப்பொழுது விடிந்துகொண்டிருக்கின்றதும், கிறிஸ்துவின் மாபெரும் வேலையினால் நீதியும், ஜீவனும் ஆளுகை செய்யப்போகின்றதுமான நீண்ட மகிமையான நாளுடன் வேறுபடுத்திக் காண்பித்திடலாம். (2) இரவிற்கும், தெய்வீகத் தயவு மறுக்கப்பட்டதற்குமான காரணமாகிய கீழ்ப்படியாமையானது, காலைக்கான காரணமாகிய - நாம் தேவனுடைய குமாரனின் மரணத்தினால் அவருடன் ஒப்புரவாகிடும் காரியத்துடன் வேறுபடுத்திக் காண்பிக்கப்படலாம். (3) கண்ணீர் மற்றும் வேதனைக்கான காரணமாகிய - சாபமாகிய அல்லது நீதியான தீர்ப்பாகிய - "நீ சாகவே சாவாய்" என்பதானது, விடியலின் சந்தோஷம் மற்றும் களிப்பிற்கான காரணமாகிய - தேவன் அறிவித்துள்ளதான திரும்பக்கொடுத்தலின் காலங்களின், இளைப்பாறுதலின் காலங்களின்போதான "மரித்த உம்முடையவர்கள் எழுந்திருப்பார்கள்" எனும் காரியத்துடன் வேறுபடுத்திக் காண்பிக்கப்படலாம்

(அப்போஸ்தலர் 3:19-21). பாவம் ஆளுகை செய்கின்றதான இருளான இரவு குறித்தும், இப்பொழுது பிரகாசித்துக்கொண்டிருக்கும் நீதியின் சூரியனுடைய கதிர்களின் வெளிச்சம் பற்றி, தான் உணர்ந்துள்ளவைகள் குறித்தும் மற்றும் தனது விசுவாசத்தின் கண்களுக்கு இப்படியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதான மகிமையான நம்பிக்கைகள் குறித்தும், தான் அறிந்திருப்பவைகளைச் சொல்லிடுவதற்கு ஒவ்வொருவரும் ஊக்கமூட்டப்பட வேண்டும்.

இரண்டாம் பத்தியானது ஏசாயா 55:8, 9-ஆம் வசனங்களின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் சிந்திப்பதற்கும், பிரயோஜனமாய் உரையாடுவதற்கும் அதில் அநேகம் காரியங்கள் உள்ளன. இந்த இரண்டு பத்திகளுமே கூட்டத்திற்கான முழு நேரத்தையும் எடுத்துக்கொள்ளும்; மற்றும் ஒருவேளை குழுவானது அதிக எண்ணிக்கையானவர்களைப் பெற்றிருக்குமானால், இவைகளை முழுமையாய் ஜீரணிக்க இரண்டு கூட்டத்தொடர் அவசியப்படலாம்.

மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் பத்திகளானது சத்தியத்தைத் தேடுபவர்களென நாம் கொண்டிருக்க வேண்டிய நோக்கங்களையும், நாம் எதை நாட வேண்டும் என்பதையும், நாம் எதைக் கண்டடைவோமெனத் தேவன் வாக்களிக்கின்றார் என்பதையும் கையாளுகின்றதாய் இருக்கின்றது (யோவான் 16:13) மற்றும் வேறு வேதவாக்கியங்களும் நினைவுக்கு வருகின்றது. அடுத்ததாக ஆறாம் பத்தியானது வேதாகம ஆராய்ச்சிக்கான சரியான வழிமுறைகளைக் கையாளுகின்றது மற்றும் எபேசியர் 4:11-16-ஆம் வசனப்பகுதியைக் குறிப்பிடுகின்றது; இதுதவிர குழுவினருக்கு நினைவுக்கு வரும் மற்ற அநேகம் வேதவாக்கியங்களானது குறிப்பிடப்படலாம். எட்டு மற்றும் ஒன்பதாம் பத்தியானது ஆராய்ச்சிக்கான சரியான மற்றும் சரியற்ற வழிமுறைகளை வேறுபடுத்திக் காண்பிக்கின்றது மற்றும் புதிய சுவாரசியமான வேதவாக்கியங்களை முன்வைத்திட அழைக்கப்படலாம். மூன்று முதல் ஒன்பது வரையிலான பத்திகளானது, டாண் குழுக்கான இரண்டாம் கூட்டத் தொடருக்குப் பிரம்மாண்டமான மற்றும் உதவிகரமான வேதாகம மற்றும் திட்டம் குறித்த ஆராய்ச்சியினைக் கொடுக்கின்றதாய் இருக்கும்.

அடுத்த ஏழு - அதாவது 10 முதல் 16 வரையிலான பத்திகளானது, உலகத்தினுடைய தற்போதைய மத நிலவரத்தைக் கையாண்டு, சரியாய்ப் பயன்படுத்தும் பட்சத்தில் அருமையான மூன்றாம் பாடமாக அமையும். ஆராயப்படும் பாடம் சம்பந்தமான ஒரு டவர் கட்டுரையானது (ரீபிரிண்ட்ஸ்) (பிப்ரவரி '90, பக்கம்-3) பிரயோஜனமாய்க் காணப்படத்தக்கதாக உள்ளே கொண்டும் வரப்படலாம். எத்தனை சுவாரசியமான கேள்விகளும், சில சரியான மற்றும் சில சரியற்ற கருத்துக்களும் அனைவருடைய மனங்களில் கடந்துவருகிறதாய் இருக்கும் மற்றும் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்புவதில் எத்துணை உதவிகரமாய்க் காணப்படுவார்கள் மற்றும் வீடுகளுக்குத் திரும்புகையில், எத்தனைபேர் முன்பில்லாத அளவுக்கு உலகத்தின் பொதுவான இருளையும், வெளிச்சத்தின் மற்றும் அதற்குக் கண்கள் திறக்கப்படுவதின் முக்கியத்துவத்தையும் முழுமையாய் உணர்ந்துகொண்டவர்களாய்த் திரும்பிடுவார்கள். இப்படியாக நாம் தொடர்ந்து செய்வோமானால், ஒவ்வொரு பாடமும் படிப்பினைகள் நிறைந்ததாகவும், வேதவாக்கியங்கள் சரியாய்ப் பொருத்திப் பார்க்கப்பட்டதாகவும் காணப்படும். டாண் குழுக்களானது, புதிதான "விசுவாசிகள்" சிலர் கலந்துகொள்கையில் மிகவும் சுவாரசியமாய்க் காணப்படும். டாண் குழுக்களில் ஆராயப்படும் சத்தியத்தில் சிறு ஆர்வம் காண்பிக்கும் உங்களது கிறிஸ்தவ நண்பர்களுக்குக்கூட இது குறித்துத் தெரிவிக்கப்பட்டு, முதலிலிருந்தே வந்து, கலந்துகொள்ளும்படிக்கு அழைக்கப்படலாம். ஆனால் குழுவில் அதிகம் பாடங்கள் கடந்துபோயுள்ள நிலையில், யாரேனும் புதிதாய் வந்து இணைந்துகொள்வார்களானால், அவர்களுக்காகத் திரும்பி முதலிலிருந்து வர அவசியமில்லை; ஏனெனில் அவைகளை (கலந்துகொள்ளாதப்போதுள்ள பாடங்களை) அவர்கள் இல்லங்களிலிருந்து வாசித்துக்கொள்ளலாம் மற்றும் பொருத்தமாய் இருக்குமென வழிநடத்துபவர் கருதுவாரானால் அவர் சுருக்கமான விளக்கங்களைக் கொடுத்திடலாம்.

ஆனால் சிலர் சொல்லிடலாம் . . . இந்த வேகத்தில் சென்றால் மில்லேனியேல் டாணின் முதலாம் தொகுதிக்கு (volume - 1) ஒரு வருடம் முழுக்க எடுத்துக்கொள்ளும் என்றும், மூன்று தொகுதிகளுக்கு, மூன்று வருடங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் சொல்லிடலாம். வருஷம் முழுவதும் ஆவிக்குரிய புத்துணர்வு அடையப்பெறுகின்றதானால், அது ஒரு நாளுக்கு மாத்திரமே காணப்படுவதைக் காட்டிலும், வருஷம் முழுவதும் காணப்படுவது நலமானதே; கடமைக்காக அல்ல, மாறாக நாமும் நமக்கெனத் தெளிவாய்ப் பார்த்துக்கொள்ளத்தக்கதாகவும், நம்மில் காணப்படும் நம்பிக்கைக்கான காரணத்தைக் குறித்துக் கேள்வி எழுப்பும் எவனுக்கும் நாம்

பதிலளிக்க முடியத்தக்கதாகவும், வேதவசனத்தின் ஆராய்ச்சியில் ஆவிக்குரிய புத்துணர்வை அடைவதே நமது நோக்கமாகும். நீங்கள் ஆராய்ந்த தொகுதியினுடைய ஆராய்ச்சியின் முடிவில், யுகங்களுக்கடுத்தத் தெய்வீகத் திட்டத்தின் - திவ்விய வெளிப்பாட்டின் பல்வேறு அம்சங்களைப் பிரகாசிப்பிக்கும் - கர்த்தருடைய ஏவுதலின்பேரில் பேசப்பட்டதான எண்ணற்ற வேதவாக்கியங்களை ஆராய்ந்தவர்களாய் இருப்பீர்கள். வேதாகமத்தினை ஆயத்தம் பண்ணிடுவதற்குக் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதானால், அதை நாம் பயபக்தியுடன் ஆராய்ந்திட வேண்டும்; சாதாரணமாய்ப் பார்த்து, எண்ணி செல்லக்கூடாது. இதுவுமல்லாமல், இப்படியாகப் பாடத்தினை நீங்கள் முற்றும்முடிய ஆராய்ந்திருப்பதினால், அது தொடர்பான எக்கேள்விக்கும் உடனடியாகப் பதிலளிப்பதற்கும் மற்றும் உங்கள் வார்த்தைகளை ஆதரிக்கும் வேதவாக்கியங்களை மேற்கோளிட்டுக் கூறிடவும் ஆயத்தமாய்க் காணப்படுவதற்கும் நீங்கள் மிகத்திறமிக்கவர்களாகிடுவீர்கள். "சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக" தங்களை ஆயத்தப்படுத்துவதற்காக மாத்திரமாக அனைவருக்கும் இத்தகைய ஆராய்ச்சிகளானது தேவையாய் இராமல், இன்னுமாக இந்தப் பொல்லாத நாட்களில் அதிகரித்துக்கொண்டுவரும் மோசங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் ஒவ்வொருவருக்கும் இத்தகைய ஆராய்ச்சிகளானது அவசியமாய்க் காணப்படுகின்றது.

டாண்களை வெறுமனே வாசிப்பது என்பது பரிந்துரைக்கப்பட்ட வழிமுறையாக இருப்பதில்லை; ஏனெனில் ஒவ்வொருவராலும் வீட்டிலேயே, தனிமையில் இருக்கையில் நன்கு வாசித்துக்கொள்ள முடியும். நம்மால் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறையானது, தேவனுடைய மகாபெரும் இரட்சிப்பின் திட்டத்திற்கான ஒரு பொது ஆராய்ச்சியாகும் - அதாவது தெய்வத்தன்மைக்குறித்த விசாலமான ஆராய்ச்சியாகும் - டாண்களைப் பயன்படுத்துகையில், அவை அனைவருடைய மனங்களையும் ஒரே ஆவிக்குரிய கால்வாய்க்குள்ளாகச் செலுத்தவும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்தறிய உதவவும் மாத்திரம் செய்கின்றது. இந்த ஆராய்ச்சிகளுக்குள்ளாகக் கொண்டுவரப்பட முடியாத நிலையில் எந்த வேதவாக்கியங்களும் இருப்பதில்லை; ஏனெனில் வேதவாக்கியங்கள் அனைத்துமே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேவனுடைய திட்டத்துடன் தொடர்புடையதாய் இருக்கின்றன. வேதாகமம் முழுவதையும், முழுமையான விதத்தில் ஆராய்வதும் மற்றும் ஆராயப்படும் பாடத்தின் மீது ஒளிக் கொடுக்கும் ஒவ்வொரு வசனத்தையும், கருத்துக்களையும் முன்னுக்குக் கொண்டுவருவதில் அனைவருடைய ஒத்துழைப்புக் காணப்படுவதும்தான் இவ்வாராய்ச்சியின் வடிவமைப்பாய் இருக்கின்றது.

நம்முடைய இனத்திலுள்ள அனைவரையும் பாதித்துள்ளதான இழிவு தன்மைக்குறித்து அறிந்தவர்களாக, நாம் ஒன்றுகூடி வரும்போதெல்லாம், ஒருவருக்கொருவர் பக்திவிருத்தியடையப் பண்ணும் மற்றும் ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்புகின்றதானவைகளையும் தவிர மற்ற ஏதும் நம்முடைய வாயினின்று புறப்படாதபடிக்கு நாம் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் மற்றும் நாம் தீர்மானம் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாராய்ச்சியானது, பிறரைக்குறித்துப் பேசுதலையும், வீணான பேச்சுகளையும் தடுத்துப்போட்டு, "நீதியானவைகளை மற்றும் உண்மையானவைகளை மற்றும் தூய்மையானவைகளை மற்றும் நற்கீர்த்தியுள்ளவைகளையே" நாம் சிந்திக்கவும், பேசவும்பண்ணுகின்றது. தன் மீதும், கர்த்தருடைய சரீரத்தின் மற்றவர்கள் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் வரவேண்டுமென ஜெபித்து, ஒவ்வொருவரும் கூட்டத்திற்கும் கடந்துவருவார்களானால், அதை உதவிகரமாய்க் காண்பார்கள். வழியையும், சத்தியத்தையும், ஜீவனையும் அதிகமதிகமாய் நாடுகின்ற நம் அனைவரோடும் நமது பிதாவாகிய தேவன் மற்றும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், இரக்கமும், சமாதானமும் காணப்படுவதாக.

---

கிறிஸ்துவின் சபையானது மற்றக் காரணங்களினால் என்பதைவிட, வழிநடத்துபவராக ஆகிடுவதற்கான பதவி ஆசை மற்றும் பெருமையின் காரணங்களினாலே அநேகமாக மிகவும் பாடுபட்டுள்ளது. தங்களில் யார் பெரியவனாய்க் கருதப்பட வேண்டுமென்று வாக்குவாதம் பண்ணினதற்காகச் சீஷர்கள் அவ்வப்போது கடிந்துகொள்ளப்பட்டார்கள் மற்றும் தங்களைத் தாங்களே உயர்த்திக்கொள்ளும் இத்தகைய ஆவியானது, இதைப் பெற்றிருக்கும் அனைவரையும் வாக்களிக்கப்பட்ட இராஜ்யத்திற்குப் புறம்பாக்கிடும் என்று நமது கர்த்தர் அவர்களுக்குக் கூறினார். அவர்: "புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ்செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்" (மத்தேயு 20:25-28).

கிறிஸ்துவின் சபையில் உயர்ந்த ஸ்தானம் என்பது, "ஊழியக்காரனாய்" இருப்பதாகும் மற்றும் தாம் சபையின் பிரதான ஊழியக்காரராய் அல்லது பணிவிடைக்காரராய் இருப்பதை அவர்தாமே கூறியுள்ளார். மேலும் "நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்" என்றால் - அப்படியானால் கூட்டங்களை வழிநடத்துபவர்கள் தொடர்புடைய மற்றும் கர்த்தருடைய காரணங்களுக்கடுத்த நலன்கள் பற்றின மற்ற அனைத்துக் காரியங்கள் தொடர்புடைய கர்த்தருடைய சித்தம் குறித்த தங்களது பகுத்துணர்தலை வெளிப்படுத்திடுவதற்கு சகோதரர்கள் அனைவரும் சமமான உரிமைப்பெற்றிருக்க வேண்டும். ஒரே போதகரான கிறிஸ்துவினால் சமமான நிலையில் வைக்கப்பட்டவர்கள் மத்தியில் ஆளுகைகளோ, தலைமைத்துவங்களோ, ஆதிக்கங்களோ காணப்படக்கூடாது. இருண்ட காலங்களில் சபையில் "குருமார் வகுப்பார்" மற்றும் "சாதாரண வகுப்பார்" என்று காணப்பட்ட பிரிவானது, கர்த்தரிடமிருந்தும், அப்போஸ்தலர்களிடமிருந்தும் உண்டாகாமல், மாறாக மாபெரும் சத்துருவாகிய சாத்தானால் வளர்க்கப்பட்ட பதவி ஆசையினால் உண்டானவையாகும்.

தற்கால சத்தியத்தில் களிகூரும் சகோதரர்களும், சகோதரிகளும், கடந்தகாலங்களில் கர்த்தருடைய காரணங்களுக்கு அதிகளவில் ஊறுவிளைவித்த அந்த நிலைமைகளுக்கு எதிராய் விழிப்பாய் இருப்பார்கள் என்று நாம் விசுவாசிக்கின்றோம்; கடந்தகாலங்களில் கர்த்தருடைய காரணங்களுக்கு அதிகளவில் ஊறுவிளைவித்த அந்தக் காரியங்களானது, கண்ணுக்குப் புலப்படாமல் துவங்கி, பின் வழக்கமாக மாறி, பின் வழக்கமானது அடிமைத்தனமாகுவது வரையிலும் வளர்ந்தது; இந்த அடிமைத்தனமானது தேவனுடைய ஒழுங்குமுறையை மாறுபடுத்தி, அவருடைய பிள்ளைகள் அநேகருடைய தாலந்துகள் வளர்வதைத் தடைப்பண்ணி, சபையாரில் ஒன்று அல்லது இரண்டுபேர் தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆண்டிடுவதற்கு அனுமதிக்கின்றது, அதாவது (பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதலின் கீழ்) சபையார், தேவவசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான ஊழியத்திற்கான தகுதிகளை உடையவர்களாய் யார் காணப்படுகின்றனர் என்று தங்களுக்கெனத் தீர்மானித்துக்கொள்வதற்கான உரிமையினைப் பெற்றிருக்கின்றனர் எனும் காரியத்தினை அடையாளம் கண்டுகொள்ளாமல் - இறுமாப்பாய் ஆண்டிடுவதற்கு அனுமதிக்கின்றது.

தேவனுடைய மந்தைக்கு ஊழியம்புரிவதற்குரிய தகுதியும், வைராக்கியமும் பெற்று, அனைத்து இடங்களிலும் காணப்படுகின்றதான சகோதரர் யாவரும், கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு உண்டாக்கின சுயாதீனங்களில் தலையிடுவதைக் கவனமாய்த் தவிர்த்துக்கொள்ளும்படிக்கு வலியுறுத்துகின்றோம். கனம்பண்ணுவதிலே ஒருவருக்கொருவர் முந்திகொள்கின்றதான தன்னடக்கத்தை மற்றும் தேவையான தாலந்துகள் காணப்படுவதற்கேற்ப, மற்றவர்கள் ஒவ்வொருவரையும் ஊழியத்தில் ஈடுபட வைக்க உதவுவதற்கு நாடுகின்றதான தன்னடக்கத்தைப் பெற்றிருக்க நாம் பரிந்துரைக்கின்றோம் மற்றும் ஈடுபலியின் மீது விசுவாசம் கொண்டிருப்பதாகவும், கர்த்தருடைய ஊழியத்திற்கென முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளதாகவும் அறிக்கைப் பண்ணுகிறவர்களில் பெரும்பான்மையானவர்களாகிலும், ஒருவரால் வழிநடத்தப்படும்படிக்கான விருப்பத்தினை வெளிப்படுத்தினால் தவிர, மற்றப்படி யாரும் ஒரு சிறு கூட்டத்தாரைக்கூட வழிநடத்திடுவதற்கு

மறுத்திடும் தன்னடக்கத்தைக் கொண்டிருக்க நாம் பரிந்துரைக்கின்றோம். மேலும் இந்தத் தெரிந்தெடுத்தலானது, நிரந்தரமான ஒன்றாய்க் காணப்படக்கூடாது; தேவனுடைய ஜனங்களின் மனம் குறித்து அறிந்திடுவதற்குக் குறைந்த பட்சமாக வருடந்தோறுமாகிலும் நாடப்பட வேண்டும் மற்றும் பெரும்பான்மையானவர்கள் மாற்றத்தினை விரும்புகின்றனர் என்று எண்ணிடுவதற்குக் காரணங்கள் இருக்குமானால் (அதை அறிந்திடுவதற்கு) அடிக்கடி நாடப்பட வேண்டும். மந்தையினுடைய சுயாதீனங்களைப் பாதுகாத்திடுங்கள்; ஏனெனில் அவை உங்களுடையதாய் இராமல், கிறிஸ்துவின் காரணங்களுக்கான சுயாதீனங்களாகும். "கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்; நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்" (மத்தேயு 23:8).

---

R 1889

# நல்லொழுக்கமாயும், கிரமமாயும்

*"சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது." (1 கொரிந்தியர் 14:40)*

சமீபக்காலங்களில் பரிசுத்தவான்களுடைய கூடுகைகளின் மத்தியிலுள்ள பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக, நம்முடைய கவனமானது, சபையில் ஒழுங்கு குறித்த பாடத்தின்மீது கடந்துவந்துள்ளது. அறுவடை சத்தியம் எனும் அரிவாளினால், "பாபிலோனிடமிருந்து" பிரித்தெடுக்கப்படுபவர்களின் எண்ணிக்கையானது பெருகிவருகையிலும் மற்றும் பெரிய (அ) சிறிய கூட்டங்களாகக் கர்த்தர் கட்டளையிட்டப் பிரகாரம் கூடிவருகையிலும் (எபிரெயர் 10:25), எப்போதும் விழிப்பாயுள்ள எதிராளியானவனுடைய மிகுதியான செயல்பாடுகளின் காரணமாகக் குறிப்பாய்ப் புதிய பிரச்சனைகள் எழும்புவதைக் கண்டுபிடிக்கின்றோம் மற்றும் புதிய அபாயங்கள் எழும்புவதைக் காண்கின்றோம். இவைகள் அப்பாடத்தை வேதவாக்கியங்களினுடைய வெளிச்சத்தில் மிகக் கவனமாய் ஆராய்வதற்கு நம்மை மீண்டுமாய் வழிநடத்தியுள்ளது.

பரிசுத்தவான்கள் கூடிவருதலிலுள்ள ஒழுங்கு தொடர்புடைய விஷயத்தில், ஆதி திருச்சபையினரிடம் அப்போஸ்தலர்கள் கூறுவதற்கு அநேக காரியங்கள் இருந்தது; நாமோ இந்த ஞானமிக்க ஆலோசனையானது குறைந்த முக்கியத்துவமுடையது என்று எண்ணி, இதில் கவனக்குறைவாக இருந்தோம்; காரணம் சபையானவள் தனது ஓட்டத்தின் நிறைவுபகுதியில் காணப்படுகின்றாள் மற்றும் அறுவடையானது பிரித்தெடுத்தலுக்கான வேளையாக இருக்கின்றது என்பதேயாகும். ஆனால் "நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி முன்பு எழுதப்பட்டவைகளுக்கு" மிகவும் கவனமாய்ச் செவிக்கொடுக்கத் தொடர்வது என்பது பாதுகாப்பானதேயாகும். நம்முடைய பூமிக்குரிய ஓட்டத்தை முடிப்பதற்கான காலம் குறைவாய் இருப்பினும், அந்தகாரத்தின் அதிகாரிகள் மற்றும் துரைத்தனங்களுடனான யுத்தத்தில் பிரச்சனைகளானது மிகமிக ஆபத்தானவைகளாகிக் கொண்டிருக்கின்றது மற்றும் ஒவ்வொரு தனிப்பட்ட நபரிடத்திலும், போராட்டங்களின் விஷயமானது மிகவும் கடுமையாகிக்கொண்டும், தீர்மானம் எடுக்க வேண்டிய கட்டத்திற்குக் கொண்டு வருகின்றதாகவும் இருக்கின்றது.

அறுவடை என்பது பிரித்தெடுத்தலுக்கான காலம் என்பது உண்மையாயினும், அது சேர்க்கப்படுதலின் காலமும்கூட. விவசாயியானவன் தனது தானியங்களைக் கதிரடித்துப் பிரித்தெடுத்த பின்பு, தரையிலேயே சிந்திக்கிடக்கட்டும் என்று விட்டுச்செல்வதில் மனநிறைவுடன் காணப்படுவானோ? இல்லை; தான் தானியங்களைக் கூட்டிச்சேர்த்து, சேகரித்து வைக்கவில்லையெனில், தனது பிரயாசங்கள் வீணாகிவிடும் என்பதை அவன் அறிவான்; தானியங்கள் தரையிலேயே கிடந்து அழுகிப்போய்விடும் அல்லது பறவைகள் வந்து, அவைகளைத் தின்றுவிடும். கர்த்தர் ஞானமுள்ள பயிரிடுகிறவர் ஆவார் மற்றும் பிரித்தலும், சேர்த்தலுமாகிய இரண்டுமே அறுவடை வேலையின் பாகங்கள் என்பதைச் சுட்டிக்காட்டும் வண்ணமாக, "என் ஜனங்களே நீங்கள் அவளைவிட்டு வெளியே வாருங்கள் (பாபிலோனிடமிருந்து உங்களைப் பிரித்துக்கொள்ளுங்கள்)" என்றும், மீண்டுமாக "பலியினாலே என்னோடே உடன்படிக்கைப்பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" என்றும் கூறுகின்றார்.

ஆகையால் பாபிலோனினின்று பிரித்தெடுக்கப்பட்டவர்களாகிய நாம், ஒருவரிடமிருந்து இன்னொருவர் பிரிந்து, தனித்துக் காணப்படக்கூடாது; நமக்கு முன்பாய் ஐசுவரியமாயும், திரளாயும் காணப்படுகின்றதான அறுவடையின் பந்தியை - கர்த்தருடைய பந்தியைச் சூழக் கிறிஸ்தவ உறவிலும், ஐக்கியத்திலும் நாம் ஒன்றுகூடிட வேண்டும். "பிணம் (உணவு) எங்கேயோ, அங்கே (பசியுள்ள மற்றும் தொலைவிலிருந்தே உணவை அடையாளங்கண்டு கொள்ளக்கூடியவர்களாகிய தொலைப் பார்வையுள்ள கழுகு வகுப்பார்) கழுகுகள் வந்து கூடும் (மத்தேயு 24:27, 28). நாம் ஒன்றுகூடி, அன்பு மற்றும் ஐக்கியத்தின் பிணைப்புகளைப் பெலப்படுத்திட வேண்டும் மற்றும் இதை "நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறோமோ, அவ்வளவாய்ச் செய்திடுவோமாக." மேலும் இப்படியாகச் செய்யும் விஷயத்தில், இவ்விதமாய்க் கூடிக்கொள்ளும் பரிசுத்தவான்களுடைய பல்வேறு கூட்டத்தாரின் நன்மைக்காக வேதவாக்கியங்கள் எவற்றை முன்வைக்கின்றது என்று நாம் கவனமாய்க் கவனிப்பதும் விசேஷித்த முக்கியத்துவம் உடையதாய் இருக்கின்றது.

# ஆதி சபையில் காணப்பட்ட ஒழுங்குமுறை

ஆதி சபையின் நாட்களில், சத்தியத்தினுடைய ஊழியங்களின் விஷயத்தில் அச்சிடும் அச்சகம் இருக்கவில்லை மற்றும் ஜனங்களுடைய கரங்களில் தேவனுடைய வார்த்தைகளுள்ள மூலப்பிரதிகள்கூட இருக்கவில்லை; ஜனங்கள் வாசிக்கும் திறன்கூட இல்லாமலேயே இருந்தனர். புதிய ஏற்பாட்டினுடைய வேதவாக்கியங்கள்கூட உருவாகிக்கொண்டு மாத்திரமே காணப்பட்டது. காலப்போக்கில் அப்போஸ்தலரின் கடிதங்களானது சபையார்களுக்கிடையே கொடுத்து வாங்கப்பட்டது மற்றும் மறுபரிசீலனைக்காகவும், அறிவுரைக்காகவும் பார்த்து எழுதி எடுக்கப்பட்டது (copied).

நாம் இப்போது பெற்றிருக்கின்றதும், ஆதி சபையினர் பெற்றிராததுமானவைகள், அவர்களுடைய தேவைக்கேற்ப, சபையின் மாபெரும் தலையானவரால் பல்வேறு வரங்கள் - அந்நிய பாஷை, வியாக்கியானம் சொல்லுதல், தீர்க்கத்தரிசனம் சொல்லுதல் முதலான வரங்கள் மூலம் ஈடுசெய்யப்பட்டன; இந்த வரங்களில் அநேகமானவைகள் பவுலினால் சொல்லப்பட்டது போல (1 கொரிந்தியர் 13:8) இப்பொழுது ஒழிந்துபோய்விட்டது மற்றும் இதற்குப் பதிலாகப் பிற்காலங்களின் ஐசுவரியமான ஆசீர்வாதங்கள் காணப்படுகின்றது - அதாவது கல்வியறிவு என்பது பொதுவானதாகியுள்ள ஜனங்களின் கரங்களில் சுருக்கமான மற்றும் முழுமையான தேவனுடைய வார்த்தைகள் காணப்படுகின்றது மற்றும் இதனை புரிந்துகொள்வதற்கு வியக்கத்தக்க அனைத்து உதவிகளாகிய சொல் விளக்கப்பட்டியல் தொகுதிகள் (concordances), வேதாகம அகராதிகள் முதலானவைகள் காணப்படுகின்றது.

அந்த ஆரம்பக்காலங்களில் சபைகூட்டங்களானது, நன்மைப் பயக்கின்றதாய்க் காணப்படத்தக்கதாக, அவர்களது காரியங்களுக்காக அப்போஸ்தலர்களினால் முறையான ஏற்பாடானது கட்டளையிடப்பட்டு, விசுவாசிகளுள்ள பல்வேறு கூட்டத்தாரால் நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்நிய பாஷை அல்லது அந்நிய பாஷைக்கு அர்த்தஞ்சொல்லுதல் எனும் வரமுடையவர்கள் அல்லது தீர்க்கத்தரிசன வரமுடையவர்கள் ஒரே நேரத்தில் பேசுவதற்கு அனுமதித்திடவில்லை; அந்நாட்களிலுள்ள (விசேஷமாக கொரிந்து பட்டணத்திலுள்ள இது தொடர்பான ஜூலை 93, பக்கம் - 201-இல் இடம்பெறும் கட்டுரையைப் பார்க்கவும்) படிப்பறிவில்லாத மற்றும் கல்லாத ஸ்திரீகள் கூட்டங்களில் குறுக்கிடவோ, குழப்பவோ கூடாது; இதுபோல் இன்னும் முழு ஆராதனையுமே மேன்மையுடனும், தெளிந்த புத்தியுடனும், பயபக்தியுடனும் காணப்பட வேண்டும்; அதே வேளையில் மிகவும் எளிமையாயும், ஒழுங்காயும் காணப்பட வேண்டும் மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் பக்திவிருத்தி அடையப்பண்ணும் பணியில் அவரவருடைய பல்வேறு திறமைகளுக்கேற்ப அவ்வப்போது பங்கெடுத்திட வேண்டும். சிலர் சபைக்குத் தெளிந்த உபதேசத்தினை உபதேசிக்கும் திறமை உடையவர்களாய் இருப்பார்கள்; சிலர் அந்நிய பாஷை பேசிடுவதற்கும் மற்றும் அதற்கு அர்த்தம் சொல்லும் வரம் உடையவர்களாய் இருப்பார்கள்; சிலர் புத்திமதி கூறிடுவதற்கும், உற்சாகமூட்டுவதற்கும் முடிகின்றவர்களாய் இருப்பார்கள்; மற்றும் அனைவருமே தங்களுடைய இருதயங்களை ஜெபத்தில் இணைக்க முடிகிறவர்களாகவும், துதிப்பதிலும், சங்கீதங்களிலும், கீர்த்தனைகளிலும், ஞானப்பாட்டுகளிலும் தங்களது சத்தத்தினை உயர்த்த முடிகின்றவர்களாய் இருப்பார்கள் (1 கொரிந்தியர் 14:15; எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16). இப்படியாக ஒருவரோடொருவர் பழக்கம் கொண்டிடும்போது, அவர்கள் ஒருவர் இன்னொருவருடைய பாரங்களைச் சுமக்க முடிகின்றவர்களாகுவார்கள் மற்றும் அவர்கள் ஒன்று சேர்ந்து - கர்த்தர் மூலமாயுமுள்ள பக்திவிருத்தி அடைவதற்குரிய வழிவகைகளினால் மற்றும் அப்போஸ்தலர்களுடைய அறிவுரை மூலமாயுமுள்ள சபைக்குரிய முறையான முறைமைகளினால் - கிறிஸ்தவ வளர்ச்சி மற்றும் விருத்தியில் அபிவிருத்தி அடைவார்கள்.

சபைக்கான கூட்டங்கள் நடத்துவது தொடர்புடையதான இந்த ஒழுங்குமுறையானது, இப்படியாகச் சுட்டிக்காண்பிக்கப்பட்டு, சபையால் பின்பற்றிவரப்பட்டிருக்க, சபைக்கான வழிநடத்துனர்கள் மற்றும் சபைக்கான பல்வேறு கடமைகள் தொடர்புடைய விஷயத்திலும் ஓர் ஒழுங்குமுறை காணப்படுகின்றது. உதாரணத்திற்குப் பவுலும், பர்னபாவும் லீஸ்திரா, இக்கோனியா மற்றும் அந்தியோகியாவில் விசுவாசிகள் அடங்கின கூட்டத்தாரைக் கூட்டிச்சேர்த்திட்டப் பின்பு, அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி, அவர்களைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, பின்பு புறப்பட்டுச் சென்றார்கள் என்று பார்க்கின்றோம் (அப்போஸ்தலர் 14:21-23). பட்டணங்கள்தோறும் சென்று, ஒவ்வொரு இடத்திலும் மூப்பர்களை

ஏற்படுத்தும்படிக்கு (நியமிக்கும்படிக்கு) தீத்துவுக்குப் பவுல் கட்டளையிட்டு அனுப்பினார்; இந்த மூப்பர்கள் என்பவர்களுக்குத் தாங்கள் இருக்கும் இடத்திலுள்ள கர்த்தருடைய மந்தையினை மேற்பார்வையிடுவதும், அவர்களைச் சத்தியத்தினால் போஷிப்பதும், ஆட்டுத்தோலைப் போர்த்திக் காணப்படும் ஓநாய்களினின்று அவர்களைக் காத்துக்கொள்வதும், பொதுவான விதத்தில் அவர்களது பிரதிநிதியாகச் செயல்படுவதும் கடமையாகக் காணப்பட்டது (தீத்து 1:5; அப்போஸ்தலர் 14:23; 20:17, 28; 1 பேதுரு 5:1, 2; அப்போஸ்தலர் 15:6, 23-28). இந்த மூப்பர்களுக்கான தகுதிகளுங்கூட, அப்போஸ்தலர்களினால் மிகத் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது (1 தீமோத்தேயு 3:1-13; தீத்து 1:5-11).

## ஒழுங்கு இன்றும் அவசியமாய் இருக்கின்றது

இந்த ஒழுங்குமுறையானது, ஆதிசபையினருடைய ஆவிக்குரிய வளமைக்குத் தேவையாய் இருந்ததுண்டானால் மற்றும் எந்த இடத்திலும் இந்த ஒழுங்கிற்கு மறுப்புத் தெரிவிக்கப்படாத அளவுக்கு அத்தேவையானது கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்வளவுக்கு அதிகாரப் பூர்வமாய்க் கட்டளையிடப்பட்டு மற்றும் இவ்வளவுக்கு எங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் காரணத்தினால், இன்றுள்ள விசுவாசிகள் அடங்கின கூட்டத்தார்களில் அதே தேவை காணப்படுகின்றதா என்ற கேள்வியானது, நிச்சயமாகவே கருத்தில் எடுத்துக்கொள்வதற்குப் பாத்திரமான கேள்வியாகவே காணப்படுகின்றது.

அந்த ஒழுங்குமுறைக்கும், மூப்பர்களை நியமிப்பதற்குமான அதே அவசியம் இன்றும் காணப்படுகின்றது என்றும், அன்று நிலவினதான அதே நற்காரணங்கள் இன்றும் காணப்படுகின்றது என்றும் நாம் நம்புகின்றோம்; அக்காரணங்கள் பின்வருமாறு:

(1) காரணம் குடும்பத்தில் காணப்படுவதுபோலவே, சபையிலும் பல்வேறு அளவிலான ஆவிக்குரிய வளர்ச்சி நிலைகள் காணப்படுகின்றது. சிலர் குழந்தைகளாகக் காணப்பட்டு, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பால் வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்; மற்றவர்களுக்கோ பலமான ஆகாரம் வேண்டியதாயிருக்கின்றது; ஆகையால் இதைச் செய்திடுவதற்குரிய நிலையில் "போதகசமர்த்தனாய்" இருக்கும் ஒருவர் அவசியப்படுகின்றார். எல்லோரும் சந்தித்திடுவதற்கு ஒரே மாதிரியான ஆயத்த நிலைமையில் இல்லாத அளவுக்குள்ள பல்வேறு சோதனைகளும், பரீட்சைகளும், பிரச்சனைகளும் மற்றும் அபாயங்களும்கூட உண்டு. ஆகையால்தான் ஞானமுள்ள மற்றும் விவேகமுள்ள மேற்பார்வையாளர்களின், சில அனுபவமும், திறமையுமுள்ள மனிதர்களின், அனைவருடைய ஆவிக்குரிய நலனுக்கடுத்த காரியங்களில் ஆழ்ந்த அக்கறைகொண்டுள்ளவர்களின் மற்றும் சத்தியத்தில் உபதேசிக்க திறமையுடையவர்களின் அவசியம் காணப்படுகின்றது.

(2) காரணம் இப்பொழுதும், அன்று போன்று ஆதிசபை மத்தியில் "கேட்டுக்கேதுவான வேதப் புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணுகின்ற" ஆட்டுத்தோல் போர்த்தின ஓநாய்கள் காணப்படுகின்றனர்; இந்த வேதப்புரட்டுகளை எதிர்த்து, மந்தையைப் பாதுகாக்க முடிகின்றவர்களாகத் தெரிந்தெடுக்கப்படும் மூப்பர்கள் காணப்பட வேண்டும் மற்றும் முற்றும் முழுமையான சத்திய அறிவிற்குள் மந்தையை நடத்திடுவதன் மூலம் மந்தையை வேதப்புரட்டுகளுக்கு எதிராக ஆயுதம் தரித்துக்கொள்ள செய்ய முடிகிறவர்களாகக் காணப்பட வேண்டும். அன்றுபோல் இன்றும் அப்போஸ்தலன், "உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று" முன்னெச்சரித்தது போலவே காணப்படுகின்றது (அப்போஸ்தலர் 20:30); மற்றும் உண்மையுள்ள மூப்பர்கள் இவைகளைத் தாமதமின்றி கண்டுகொள்ளுகிறவர்களாய் இருந்து, உடனே எச்சரிக்கைக் கொடுப்பவர்களாய் இருந்து, மந்தையை இம்மாதிரியான ஆதிக்கங்கள் யாவற்றிடமிருந்தும் எதிர்த்துப் பாதுகாத்திடுவார்கள் (அப்போஸ்தலர் 20:28-30; தீத்து 1:10, 11; 2 பேதுரு 2:1-3).

(3) காரணம் அப்போஸ்தலர்களினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள முறையான வழிமுறையில் ஒருவேளை இத்தகைய ஏற்பாடுகளும், நியமனங்களும் செய்யப்படவில்லையெனில், யாரோ ஒருவர் வழிநடத்தும் ஸ்தானத்தினை எடுத்துக்கொண்டு, அதைக் கால வரைமுறையின்றி வைத்திருக்கக்கூடும்; மற்றும் முழுச்சபையாருமே, பெரும்பாலும் அவர்களையும் அறியாமல் அந்நபரின் கீழ் ஏறக்குறைய அடிமைத்தனத்திற்குள்ளாகுவார்கள். இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்பட்டுள்ளது மற்றும் வழிநடத்தும் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டுள்ளதான சகோதரனைக் காயப்படுத்தாமல் அல்லது

கோபப்படுத்தாமல்/அவமதியாமல் எவ்வாறு தாங்கள் விடுவிக்கப்படலாம் என்பதற்காகச் சில யோசனைகளைக் கேட்டுச் சகோதரர்கள் எங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கின்றனர்.

இப்படி வழிநடத்தும் ஸ்தானத்தை எடுத்துக்கொள்வது என்பது அநேக சந்தர்ப்பங்களில் உண்மையில் அவசியமானதாகவே இருந்துள்ளது மற்றும் பொதுவாய்த் தூய்மையான நோக்கத்தின் பேரில்தான் மேற்கொள்ளப்படுகின்றது மற்றும் ஒரு குறிப்பிட்டக் கட்டம் வரையிலும் நன்மையான பலன்களையே கொணர்ந்தும் உள்ளது; உதாரணத்திற்குப் பின்வருமாறு நடக்கலாம்: கர்த்தருடைய காரணங்களுக்காக வைராக்கியமும், சத்தியத்திற்கான அன்பும் நிறைந்த சகோதரன் ஒருவர், சத்தியத்தினை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்ட சிலரைத் தன்னோடுகூடச் சேர்த்துக்கொள்கின்றார். அவர்கள் இன்னும் உபதேசிக்கப்படுவதற்கான வாஞ்சையுடனும், தேவையுடனும் இருந்து, இதை அச்சகோதரன் மிகவும் வளர்ந்துள்ளபடியால் கொடுக்க முடிகின்றவராய் இருக்கின்றார் மற்றும் அவர்கள் ஒன்று சேர்ந்து சத்திய அறிவில் வளர்ந்துக்கொண்டிருக்கின்றனர் மற்றும் அவர்களது ஒருங்கிணைந்த வைராக்கியத்தின் காரணமாக, கூட்டத்தின் எண்ணிக்கையும் பெருகுகின்றது. இறுதியில் வீட்டு அறையினின்று, பெரிய அறைக்கு/ஹாலுக்குக் கூடுகையினை மாற்றிடுவதற்கு ஆலோசித்து முடிவெடுக்கப்படுகின்றது. இச்சமயத்தில் சபையாரிலுள்ள வேறொரு சகோதரன் பெரிய மற்றும் அதிக அளவிலான பொது ஊழியங்களுக்கு மிகவும் திறமிக்கவராக இருப்பது தெரியவர, மிகவும் திறமிக்கவராய்க் காணப்படும் இச்சகோதரன் வழிநடத்தும் பொறுப்பிற்கு வருவதற்குப் பரிந்துரைக்க அனைவருமே அஞ்சுகின்றனர்; காரணம் குறைவான திறனைக்கொண்டவராக இருப்பினும், நீண்ட காலமாய்த் தங்களால் அங்கீகரிக்கப்பட்டவராகவும் மற்றும் இன்னமும் தங்களுக்கு அன்புக்குரியவராகவும் காணப்படும் சகோதரனைச் சினமூட்டிவிடுவோமோ என்ற அச்சத்தினாலேயே ஆகும். சிலருடைய விஷயங்களில் வேறு சகோதரரைப் பரிந்துரைத்து குறிப்பிடுதல்கூட, கோபத்தை வெளிப்படுத்துவதற்கு ஏதுவாய் இருக்கிறது மற்றும் அச்சகோதரன் சபையாரின் மத்தியில் உரிமைக்காரர் போன்று எண்ணும் நிலையில் காணப்படுகின்றார் என்பது தெளிவாகுகின்றது மற்றும் அவர் அவர்களைக் கர்த்தருடைய ஜனங்கள் என்று கூறிடுவதற்குப் பதிலாக, தன்னுடைய ஜனங்கள் என்று அவர்களைக் குறித்துப் பேசுகின்றார் மற்றும் எண்ணுகின்றார். ஆனால் எல்லாச் சம்பவங்களும் இப்படியாக இருப்பதில்லை என்பதை மகிழ்ச்சியுடன் கூறுகின்றோம்; ஏனெனில் சிலசமயங்களில் சாந்தம் என்னும் கிருபையானது தொடர்ந்து வளர்ந்துகொண்டிருக்கின்றது மற்றும் கர்த்தருக்கான ஊழியத்திற்குரிய வைராக்கியத்தில், சுயமானது தொலைந்து போய்விடுகின்றது.

இன்னுமாகச் சிலசமயங்களில் பின்வருமாறும் நடக்கின்றது: தாழ்மை எனும் கிருபையில் மிகக் குறைவுபட்டிருப்பவர், இதன் காரணமாக சூழ்நிலைக்குப் பொருத்தமற்றவராய் இருப்பவர் அந்த ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள முன்னேறிடுவார் மற்றும் அதைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென மன அமைதியற்றிருப்பார்; ஒருவேளை அவர் விசுவாசத்தில் தெளிவற்றவராய் இருப்பாரெனில், சபையார் சீக்கிரத்தில் தவறான உபதேசத்தினால் அல்லது ஊகங்களினால் தொல்லைக்குட்படுத்தப்படுவார்கள், அநேகர் இடறிப்போயிடலாம்.

(4) சபையில் ஒருவேளை எவ்விதமான முறையான ஏற்பாடு இல்லாமலிருந்தால், சபையினுடைய நலனுக்கடுத்த காரியங்களில் மிகவும் அக்கறை உடையவர்கள் மற்றும் சபைக்கான ஊழியங்களில் ஈடுபடத்தக்கதாகவும், ஈடுபட்டிருப்பதற்காகவும் ஆவல்கொண்டிருப்பவர்கள் மிகவும் தர்மசங்கடமான நிலைக்குள்ளாவார்கள். சத்தியத்திற்கு உண்மையாய் இருத்தல் என்பது, அடிக்கடி பிரிவினைகளை உண்டுபண்ணுகின்றது. மேலும் உண்மையுள்ளவர்களின் ஊழியமானது விரும்பப்படுகிறதில்லை என்று அனைவருடைய அல்லது சபையாரில் பெரும்பான்மையானவர்களின் உணர்வுகளானது இல்லை என்றபோதிலும் - இந்த உண்மைத் தன்மையை விரும்பிடாத சிலர், உண்மையுள்ளவர்களின் ஊழியமானது விரும்பப்படுகிறதில்லை என்று கடுமையாய்த் தெரிவித்திடலாம். இப்படியானவர் ஆதரவு இல்லாதவராகக் காணப்பட்டு, கிட்டத்தட்ட யார் உதவியும் இல்லாமல், தனியே மந்தையைப் பாதுகாத்திடுவதற்கான போராட்டத்தில் போராடிட வேண்டும் அல்லது மந்தையை எதிராளியின் தயவிற்கு விட்டுவிட வேண்டும்.

எவ்விதமான முறையான ஒழுங்குமுறை இல்லாமல் அருகில் காணப்படும் எந்தச் சபையார் மத்தியிலோ காரியங்கள் அமைதியாய் நடந்துகொண்டிருக்கின்றது என்ற உண்மையோ அல்லது சபையாருடைய சுயாதீனங்கள், உரிமைகள், கடமைகள் குறித்து அக்கறைகொள்ளப்படுகின்றது என்ற காரியமோ, இப்படியாகவே எப்போதும் நடந்துகொண்டிருக்கும் என்பதற்கு உத்தரவாதமாய் இராது. எப்போதும் விழிப்பாய் இருக்கும் நம்முடைய எதிராளியானவன் நிச்சயமாகவே ஏதோ ஒரு தருணத்தில் ஒட்டுமொத்த சபையிலும்,

அதன் தனிப்பட்ட அங்கத்தினர்களிடத்திலும் பாதுகாப்பற்றுக் காணப்படும் ஒவ்வொரு இடத்தை அல்லது கொள்கையைப் பயன்படுத்திடுவான். ஆகையால் சபையாகவும் சரி, தனிப்பட்ட நபர்கள் விஷயத்திலும் சரி, நாம் . . ."பாதுகாப்பற்ற எவ்விடத்தையும், ஆத்துமாவின் எந்தப் பெலவீனத்தையும் விட்டுவிடாமல், ஒவ்வொரு ஒழுங்கையும், ஒவ்வொரு கிருபையையும் கொண்டு முழுவதும் வலுப்படுத்திடுவோமாக."

சமாதானமும், அமைதியும் உள்ள காலங்களானது, நாம் சபையாக ஒட்டுமொத்தமாகவும் மற்றும் தனிப்பட்ட விதத்திலும் சந்திக்க வேண்டிய புயல் மற்றும் சூறாவளியினால் ஏற்படும் நெருக்கடிக்கு ஆயத்தமாகிக்கொள்ளும் காலங்களாக இருக்கின்றது. சாதகமான வானிலைக்கு மாத்திரமே ஆயத்தமாயுள்ள கப்பல் ஒன்றைக் கடலில் ஓட்டிச்செல்லும் கப்பல் தலைவனும், சிப்பந்திகளும் தொலை நோக்கும் பார்வையில் மிகவும் குறைவுபட்டவர்களாக இருப்பார்கள். எவ்வளவுதான் வானிலை சாதகமாய்க் காணப்பட்டாலும், எவ்வளவுதான் கடல் அமைதியாகக் காணப்பட்டாலும், எவ்வளவுதான் பிரயாணத்தின் துவக்கத்தில் காற்றுத் தென்றலாய்க் காணப்பட்டாலும், புயலை எதிர்க்கொள்வதற்கான ஏற்பாடுகள் கப்பல் தளத்தில் காணப்பட வேண்டும் - ஜீவனுக்கான முன்னேற்பாடுகள் - படகுகள், ஜீவனைக் காத்துக்கொள்ளும் உபகரணங்கள், கப்பல்தளபுழை வாயிலை (Hatch/emergency door) மரச்சட்டத்தால் இறுக்கமாக அடைத்து வைப்பதற்கான உபகரணங்கள், கப்பல் தளத்தில் காணப்பட வேண்டும் என்று ஞானமானது ஆலோசனை வழங்கிடும். இம்மாதிரியான சோதனை வேளைகளில், சாத்தான் விசேஷமாய் தன்னுடைய எதிர்ப்பில் மிகவும் விறுவிறுப்பாயும், தந்திரமாயும் காணப்படுகையில், நம்முடைய பாதுகாப்பிற்கெனக் கர்த்தரால் அப்போஸ்தலர்கள் வாயிலாக ஆலோசனையாக அருளப்பட்டுள்ளதான முன் எச்சரிக்கையான ஏற்பாடுகள் யாவையும், நாம் கண்நோக்கிப் பார்ப்பது அவசியமாகும்.

## அப்போஸ்தலர்களின் ஆலோசனையைப் பரிந்துரைக்கிறோம்

சம்பவிப்பதற்கு வாய்ப்புள்ளதான இவைகள் அனைத்தையும் வைத்துப்பார்க்கையில், மந்தையைப் "போஷிப்பதற்கும்" மற்றும் "அவர்களை மேற்பார்வையிடுவதற்கும்" ஒவ்வொரு சபையாரும் தங்கள் மத்தியிலிருந்து மூப்பர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்வார்களாக எனும் அப்போஸ்தலரின் ஆலோசனையை, எல்லா இடங்களிலுமுள்ள சிறிய அல்லது பெரிய எண்ணிக்கையில் காணப்படும் சபைகளுக்குப் பரிந்துரைப்பதற்கு நாங்கள் எந்தத் தயக்கமும் கொள்ளவில்லை. தேவன் சபையில் சிலரை விசேஷித்த உதவியாளர்களாக, போதகர்களாக இருக்கும்படிக்கு ஏற்படுத்தியுள்ளார் என்றும், அனைவருமே இப்படியாய்த் தகுதியுடையவர்களாக இருப்பதில்லை என்றுமுள்ள அப்போஸ்தலரின் போதனைக்கு இசைவாக, இப்படிப்பட்டவர்களைக் கர்த்தர் ஒவ்வொரு சபையாரிலும் அருளிடுவாரென எதிர்ப்பார்த்து ஆதிசபையில் செய்யப்பட்டதுபோன்று, தங்கள் மத்தியில் தேடப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 12:28, 29). வெளியிடங்களிலுள்ள சபையாரிடமிருந்து வரும் சகோதரர்கள் பணியினைத் துவங்கிட உதவிடலாம் மற்றும் அவர்களுடைய அவ்வப்போதான வருகையினால், ஒரு சபையார் உற்சாக மூட்டப்படலாம், எனினும் ஒவ்வொரு சபையாரும் தங்கள் சொந்த மூப்பர்களைப் பெற்றிருந்து, தங்களுக்கு முன்பாக வழித் திறக்கப்படுகையில், கர்த்தருடைய வேலையிலுள்ள தங்களுக்கான பங்கினை நிறைவேற்றிட வேண்டும். ஒவ்வொரு சபையாருக்கும் ஊழியம் புரிந்திடுவதற்கான விசேஷித்த களம், அவர்களது சொந்த இடமேயாகும்; இங்கு அவர்களால் இயன்றமட்டும் தங்கள் செல்வாக்கினைச் செயல்படுத்தி ஊழியம் புரிந்திடலாம்; மேலும் அவர்கள் மத்தியில் அனலுள்ள தேவபக்தியும், கொழுந்துவிட்டு எரிகிற பக்திவைராக்கியமும் பலன்கொடாமல் இராது. ஒருவேளை கொஞ்சமே கோதுமை மணிகள் சேர்க்க முடிந்ததானால், சத்தியத்திற்கான சாட்சியாகிலும் மிகுதியாய்ச் சுமந்து செல்லப்படுகிறதாய் இருக்கும். இராஜ்யத்தின் இந்தச் சுவிசேஷமானது, "சாட்சியாகவும்" பிரசங்கிக்கப்பட வேண்டும் மற்றும் "அவரது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படிக்கும்" பிரசங்கிக்கப்பட வேண்டும். தொழிற்கூடங்களிலும், கடைகளிலும், தெருக்களிலும் மற்றும் அடுப்படியின் அருகிலும் கைப்பிரதிகளை விநியோகித்தல், தனிப்பட்ட விதத்தில் சந்தித்தல், தனிப்பட்ட விதத்தில் கடிதம் எழுதுதல் மற்றும் (ஞானமாயும், விவேகமாயும்) தனிப்பட்ட விதத்தில் உரையாடுதல் என்பவைகள் சிறந்த மற்றும் நிலையான கிறிஸ்தவ குணலட்சணங்களோடுகூட, அயலாருக்கு அன்பாய் உதவுவதோடுகூடச் செய்யப்படுவது என்பது சத்தியத்திற்கடுத்த காரியங்களுக்கான ஆற்றல்மிக்க வழிவகைகளாக இருக்கின்றது மற்றும் இவற்றை அனலுள்ள பக்திவைராக்கியமானது கவனிக்க தவறுவதுமில்லை. இந்தப் பல்வேறு விதங்களில்

அனைவருமே சுவிசேஷத்தினைப் பிரசங்கித்திடலாம்; ஏனெனில் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் யாவரும் பிரசங்கிப்பதற்கென அபிஷேகம்பண்ணப்பட்டுள்ளனர் மற்றும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியினால் அவர்களை அபிஷேகிக்கையில் கொடுத்திடும் அதிகாரத்தைவிட வேறெந்த அதிகாரமும் அவர்கள் பிரசங்கம்பண்ணிடுவதற்கு அவசியமில்லை. இந்த நோக்கத்திற்காக நமது கர்த்தரும், தலையுமானவர் அபிஷேகிக்கப்பட்டார்; மற்றும் அதே அபிஷேகமானது, அவரது சரீரமாகிய சபையின் அங்கத்தினர்கள் யாவருக்கும் கடந்து வருகின்றது (ஏசாயா 61:1-3; லூக்கா 4:16-21; 1 யோவான் 2:27).

## மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் தருணம்

மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில், கர்த்தருடைய மனமானது, அவரது அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் வாயிலாக நன்கு உறுதிசெய்யப்படலாம் என்று நாம் கருத்துத் தெரிவிக்கின்றோம். சபை (அதாவது மீட்பருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலான இரட்சிப்பை விசுவாசிப்பவர்கள் மற்றும் அவருக்கு உண்மையாய் அர்ப்பணம்பண்ணினவர்கள் மாத்திரமே) கர்த்தருடைய சித்தம் குறித்த தங்களது பகுத்துணர்தலை, வாக்கு (vote) மூலம் வெளிப்படுத்துவார்களாக; மற்றும் இது குறிப்பிட்ட இடைவெளியில் திரும்பத்திரும்ப நிகழ்த்தப்படுமானால் - அதாவது வருடந்தோறுமாகச் செய்யப்படுமானால் - சபையாருடைய சுயாதீனங்களானது பாதுகாக்கப்படும் மற்றும் மூப்பர்களும் தேவையில்லாமல் தர்மசங்கடமான நிலைக்குள்ளாவதிலிருந்து தப்புவார்கள். ஒருவேளை தொடர்ந்து விரும்பப்படுகிறதெனில் மற்றும் கர்த்தருடைய சித்தமும் மிகவும் தெளிவாய்த் தெரிகிறதெனில், அதே மூப்பர்களை வருடாவருடம் மீண்டும் தேர்ந்தெடுப்பதற்கு எந்தத் தடையும் இல்லை; மேலும் ஒருவேளை மாற்றம் வேண்டுமென விரும்பப்படுகிறதெனில், எவர் சார்பிலும் பிணக்குகள் அல்லது வேதனையான உணர்வுகள் வெளிப்படுத்தப்படாமல் மாற்றமானது கொண்டு வரப்படலாம்.

சபையின் வாக்கு (vote) என்பது, ஒவ்வொரு நீதிமானாக்கப்பட்ட மற்றும் முழுமையாய் அர்ப்பணித்துள்ள விசுவாசிக்கு, ஒரு காரியம் தொடர்புடையதான தனது சொந்த சித்தத்தையல்ல - மாறாக கர்த்தருடைய சித்தம் குறித்த தனது நம்பிக்கையினை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினை மாத்திரமே அளிக்கின்றதாய் இருக்கின்றது. ஏனெனில் அவன் கர்த்தருடையவனாய் முழுமையாக இருப்பானானால், அவன் தன் சொந்த சித்தம் மரித்துப்போனதாக எண்ணுவான் மற்றும் தான் என்ன செய்ய வேண்டுமெனக் கர்த்தர் விரும்புவாரோ, அதையே தான் செய்திடவும், பேசிடவும் வேண்டுமென உணர்ந்துகொள்வான். இம்முறைமையானது அனைவருக்கும் சமமான உரிமைகளையும், சிலாக்கியங்களையும் உரியதாக்குகின்றது. இது அநேகமாக ஆதிசபையில் இக்காரியத்தைப் பார்த்துக் கொண்டதான தீத்து மற்றும் மற்றவர்களின் முறைமையாகவே இருக்கின்றது; ஏனெனில் (சபையாரின் அங்கத்தினர்கள் குறித்து) அதிகம் பரிச்சயம் இல்லாதவர்களாய் இருக்கும் இவர்கள் தங்களைக் காட்டிலும் நன்கு அறிமுகப்பட்டிருக்கும் சபையாரிடம் எவ்விதமான ஆலோசனையும் செய்யாமல், மூப்பர்களைத் தன்னிச்சையாக நியமித்திருந்திருப்பார்கள் என்று நாம் எண்ணிட முடியாது. இதே முறைமைதான் அப்போஸ்தலர் 6:3-5-ஆகிய வசனப்பகுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்களும் வேலைக்காரர்களையே (ஊழியக்காரர்களையே) தேர்ந்தெடுக்கின்றீர்களே ஒழிய, எஜமான்களையோ அல்லது அதிபதிகளையோ அல்ல என்பதை நினைவில்கொள்ளுங்கள். இம்முறைமையானது பல்வேறு சபைபிரிவுகளில் நடைமுறையில் காணப்படும் முறைமைகளினின்று முற்றிலும் வேறுபட்டதாகும்; இந்தச் சபை பிரிவுகளிலுள்ள முறைமைகளானது, பெரும்பான்மையான சிலாக்கியங்களை, ஜனங்களை இறுமாப்பாய் ஆளும் "குருமார் வகுப்பாரின்" கட்டுப்பாட்டிற்குள்ளாக்குகின்றது மற்றும் சபையாருக்கு வாக்குரிமைக் காணப்படும் காரியங்களிலும்கூடக் காரியமானது, முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ள, அடிமையாயிராத, ஆவியினால் வழிநடத்தப்படுகின்றதான தேவனுடைய பிள்ளைகளின் கரங்களில் காணப்படாமல், மாறாக உபதேசங்கள் மற்றும் ஒழுங்குமுறை தொடர்புடைய விஷயத்தில் சபை பிரிவுணர்ச்சியின் அடிமைத்தனத்திற்குக் கட்டுப்பட்டவர்களுடைய கரங்களிலேயே காணப்படுகின்றது; இவர்களில் மூன்றில் ஒரு பங்கு பேர்க்கூடத் தேவனுக்கு முழுமையாய் அர்ப்பணிப்புள்ளதாகக் கூறுபவர்களாக இருப்பதில்லை. ஆனால் நாம் கர்த்தருடைய மனதை அறியத்தக்கதாக, (vote) வாக்கு விஷயத்தில், கிறிஸ்துவினுடைய ஈடுபலியின் மீதான விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டுள்ளதாகவும், அவருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளதாகவும் தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணிக் கொள்பவர்களை

மாத்திரமே அங்கீகரித்திடுவதில் நாம் உறுதியாய் இருத்தல் வேண்டும். ஆகையால் வாக்கு எடுக்கப்படுவதற்கு முன்னதாக இந்த வகுப்பாரைத் தங்கள் கைகளை உயர்த்தச் சொல்லுவதன் மூலமாகவோ அல்லது அறையில் இன்னொரு பக்கத்தில் இருக்கைகளில் அமரும்படியாகக் கேட்டுக் கொள்வதன் மூலமாகவோ அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். விசுவாசமும், அர்ப்பணிப்பும் இல்லாமல், எவராலும் ஜெயங்கொள்ளும் சபையாராகுவதற்கு எதிர்ப்பார்த்திட முடியாது எனும் விஷயத்தினை யாவருடைய மனங்களுக்கு முன்பாய்ப் பிரத்தியேகமாக முன்வைத்திடுவது, சிலருக்கு உதவியாய்க் காணப்படும் மற்றும் இந்த நல்ல அறிக்கையினைச் சாட்சி பகருதல் என்பது அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு எப்போதும் ஆசீர்வாதத்தினைக் கொண்டுவருகின்றதாய் இருக்கும்.

உண்மைதான் ஒருவர் அல்லது சிலர் தங்கள் அறிக்கைக்கு முரணாக இருப்பார்கள்; எனினும் பெரும்பான்மையான வாக்கானது, சந்தேகத்திற்கிடமின்றி கர்த்தருடைய வழிகாட்டுதலின் பேரிலும், அவருடைய சித்தத்தினுடைய வெளிப்பாடாகவும் காணப்படும்; மற்றும் முழுமையான விசுவாசத்துடன், அது இப்படியானதாகக் கருதப்பட வேண்டும். எனினும் சபையுடைய வாக்கை மாத்திரமே பெற்றிருக்கத்தக்கதாக தாங்கள் ஜாக்கிரதையுடன் காணப்பட்டபோதிலும், சபையில் பெரும்பான்மையானவர்களின் வாக்கானது, தவறாய்க் காணப்படுவதற்கும், கர்த்தருடைய மனதை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கும் வாய்ப்புள்ளது என்று சிலரால் வலியுறுத்தப்படலாம்; யூதாசின் இடத்தினை நிரப்பத்தக்கதாகப் பதினொரு அப்போஸ்தலர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியாவின் விஷயமும் மற்றும் அவர்களது தேர்ந்தெடுத்தலைக் கர்த்தர் வெறுமனே புறக்கணித்துச் சென்று, பவுலைத் தெரிந்துகொண்டார் என்ற உண்மையும், தோல்விக்கான உதாரணமாகச் சுட்டிக்காண்பிக்கப்படலாம்.

அது பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதலின் கீழான சபையினுடைய தெரிந்தெடுத்தலாக இருக்கவில்லை; ஏனெனில் இது பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக, பரிசுத்த ஆவி வழங்கப்படாமல் இருந்தபோது சம்பவித்ததாகும் (யோவான் 7:39); மற்றும் சீஷர்களும் தேவனால் சபையாக இன்னமும் அங்கீகரிக்கப்படவில்லை. இதுமாத்திரமல்லாமல் அப்போஸ்தலர்களில் எவருமே, பல்வேறு சபையாரின் மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அதே முறைமையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை மற்றும் தேர்ந்தெடுக்கப்படவும் முடியாது; கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது அப்போது இன்னும் உருவாகிடவில்லை. சபையின் தலையானவர் மாத்திரமே அப்போது அங்கீகரிக்கப்பட்டிருந்தார் மற்றும் அவர் இன்னமும் அப்போது மகிமையடையவில்லை. பன்னிரண்டு பேரும் கர்த்தரினால் நேரடியாக தெரிந்துகொள்ளப்பட்டார்கள் மற்றும் அவர்கள் ஏற்றவேளையில் முழுச்சரீரத்திற்குமாக தங்களது விசேஷித்த ஊழியத்திற்காக தகுதியடைந்தார்கள். அப்போஸ்தலர்களினால் கட்டளையிடப்பட்டபடியே "அந்தந்த இடத்திற்கு மூப்பர்களை" நியமித்தலானது, கர்த்தரினால் நேரடியாய்ப் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் நியமிக்கப்பட்ட காரியத்திலிருந்து முற்றும் வேறுபட்ட மற்றும் வேறான காரியமாய் இருக்கின்றது; அப்போஸ்தலர்களைக் கர்த்தர் நேரடியாய் நியமித்த விஷயத்தில், சபைக்கு எந்தவிதமான வாக்குரிமையும் இல்லை மற்றும் வாக்குரிமைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது.

ஒவ்வொரு சபையிலும் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய மூப்பர்களின் எண்ணிக்கைத் தொடர்புடைய விஷயத்தைப் பார்க்கையில், இது அக்கூட்டத்தாரில் ஊழியத்திற்குத் தகுதியுடையவர்களாய் இருக்கும் சகோதரர்களின் எண்ணிக்கையினைச் சார்ந்துள்ளது. ஒருவேளை இரண்டு அல்லது மூன்று பேர் திறமிக்கவர்களாய் இருப்பார்களானால், சபையாருக்கான ஊழியங்களானது அவர்களுக்குள்ளாக மாறி மாறி செய்யப்படுகையில், இது அவர்கள் ஒவ்வொருவரின் தாலந்துகள் வளர்வதற்கு உதவுகின்றதாய் இருக்கும் மற்றும் வாய்ப்பிருக்கும் பட்சத்தில் உள்ளூர் சபையாரைத் தாண்டியும் ஊழியங்கள் விரிவாகிடலாம் மற்றும் இப்படியாகச் சபையாரும், அனைவருடைய பல்வேறு தாலந்துகளினால் பயனடைவார்கள். இல்லையேல் ஒருவேளை ஒன்று அல்லது இரண்டு பேரின் தகுதிகளானது, ஒப்புயர்வற்றதாக அடையாளம் கண்டுகொள்ளப்படுமாயின், அவர்கள் சிறந்த விதத்தில் தகுதிப் பெற்றிருக்கும், ஊழியத்தினுடைய அந்தப் பாகங்களானது, அவர்களுக்குக் கொடுக்கப்படலாம்.

மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் தருணமானது, எப்போதுமே பயபக்தியுடன் செய்யப்படுகிறதாய் இருத்தல் வேண்டும். அது கர்த்தருடைய காரியமாகும் மற்றும் அது ஆழ்ந்து சிந்தித்துச் செயல்படுத்தப்பட வேண்டும். இக்கருத்தினை, கூட்டத்தினைத் தலைமை தாங்கி நடத்துபவராக (chairman) செயல்படப்போகும் சகோதரன் அனைவருடைய மனதிலும் பதியவைத்திட முயற்சித்திட வேண்டும். சபையாரிலுள்ள ஒவ்வொருவனும் தேவனுடைய சித்தத்தினை அறிவதற்கும், செய்திடுவதற்கும் நாடிடுவானாகில் மற்றும் இக்காரியத்தில்

கர்த்தருடைய சித்தம் என்னவாக இருக்கின்றதெனத் தன்னால் நம்பப்படுகிறதை தன்னுடைய அர்ப்பணிப்பிற்கு இசைவாக வெளிப்படுத்தினால், பிற்பாடு "சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்துவார்" எனும் வாக்குத்தத்தத்தின் பெலத்தில், இப்படியான ஆழ்ந்து சிந்தித்தல்களின் முடிவானது, யாவராலும் கர்த்தருடைய மனம் என்றும், அவரது அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் வாயிலாக இவ்விதமாய் பரிசுத்த ஆவியானது பேசுகின்றது என்றும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் (சங்கீதம் 25:9). இப்படியான ஆழ்ந்து சிந்தித்தல்களின் முடிவானது, ஏகமனதான ஒப்புதலாகவே பொதுவாய்க் காணப்படும்.

## மூப்பர்களுக்கான தகுதிகள்

1 தீமோத்தேயு 3:1-7-வரையிலான வசனங்களில் (Diaglott மொழியாக்கம் பார்க்கவும்) அப்போஸ்தலன் மூப்பருக்கான அல்லது மேற்பார்வையாளருக்கான தகுதிகளை விவரிக்கின்றார் மற்றும் 8 முதல் 13-வரையிலான வசனங்களில் உதவிக்காரரின் தகுதிகளானது விவரிக்கப்பட்டுள்ளது. இந்த வசனங்களானது, வாக்கு எடுக்கப்படுவதற்கு முன்னதாக வாசிக்கப்பட வேண்டும் மற்றும் பிரதான ஊழியத்திற்குரிய மூப்பர் அல்லது மூப்பர்கள் முதலாவது தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் மற்றும் உதவியாளர்கள் தேவைப்படுவார்களானால், அவர்கள் பிற்பாடு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்த உதவிக்காரர்கள் மத்தியில், சகோதரிகள் சிலர் காணப்படுவதும் தகுதியானதே; ஏனெனில் சில ஊழியங்களானது, விசேஷமாக நோயுற்றிருக்கும் சகோதரிகளைச் சந்திக்கும் ஊழியங்களானது, சகோதரிகளால் சிறப்பாய்ச் செய்யப்பட முடியும். இதன் 11-ஆம் வசனமும், உரோமர் 16:1-ஆம் வசனமும் இந்தப் பெண் உதவியாளர்களைக் குறிப்பதாகவே அநேகர் எண்ணுகின்றனர் மற்றும் ஆதிசபையில் அநேகம் சகோதரிகள் ஊழியம் புரிந்ததாக மிகவும் தெளிவாகவே தெரிகின்றது. தெரிந்தெடுத்தலானது அல்லது (vote) வாக்குக் கொடுக்கப்படுவது, கர்த்தருடைய சித்தம் குறித்த ஒவ்வொருவரின் பகுத்துணர்தலுக்கு ஏற்ப வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான தகுதிகள் குறித்து முழுவதும் தெரிந்த நிலையில் செய்யப்பட வேண்டும்.

"கண்காணிப்பை (கண்காணிக்கும் ஊழியத்தினை) விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான். (கிறிஸ்துவின் சரீரத்திற்கு நம்மால் ஏறெடுக்க முடிந்த எந்த ஊழியமும், ஆசீர்வாதமான ஊழியமேயாகும்). ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும் (நற்குணமுள்ளவனும்), ஒரே மனைவியை உடைய புருஷனும் [திருமணமான மனுஷராக இருக்க வேண்டிய கட்டாயமில்லை; ஏனெனில் கர்த்தரும், அப்போஸ்தலனும், அதாவது இருவருமே திருமணமாகாத நிலையினையே சிறந்ததெனப் பரிந்துரைக்கின்றனர் (மத்தேயு 19:12; 1 கொரிந்தியர் 7:32, 33); ஒன்றிற்குமேல் மனைவியை அவன் பெற்றிருக்கக்கூடாது; இக்கட்டளையானது, தற்காலத்தைக் காட்டிலும், அந்த நாட்களுக்கே மிகவும் பொருத்தமானதாய்க் காணப்படும்], ஜாக்கிரதையுள்ளவனும் தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும். அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பணஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" (1 தீமோத்தேயு 3:1-5). "For if a man know not how to rule his own house, how shall he take care of the church of God?" (KJV) "but if any one knows not how to preside over his own Family, how can he take care of a Congregation of God?" (Diaglott). (1 தீமோத்தேயு 3:5). சபையின் இந்த ஊழியக்காரர்கள் சபையை ஆண்டிட வேண்டும் - அதாவது சபைக்காகச் சட்டங்களை இயற்றி, தங்கள் சித்தத்திற்குச் சபையினைக் கீழ்ப்பட்டிருக்கும் நிலையில் வைத்துக்கொள்ளுதல் என்று ஆங்கில common மொழியாக்கத்தில் இடம்பெறும் rule எனும் வார்த்தைத் தெரிவிக்கும் அர்த்தமாக, உண்மையான அர்த்தம் காணப்படாமல் மாறாக அன்புடன்கூடிய அக்கறையில், இந்த ஊழியக்காரர்கள் சபையைத் தலைமைத் தாங்கி நடத்தி (preside), அதன் நலன்கள் மற்றும் காரியங்களைப் பார்த்துக்கொண்டு, தேவனுடைய உண்மையுள்ள உக்கிராணக்காரர்களென ஆலோசனை வழங்கியும், உதவிபுரிந்தும் காணப்பட வேண்டும் என்பது அர்த்தமாகும்/கருத்தாகும். (Emphatic Diaglott மொழியாக்கத்தினைப் பார்க்கவும்). கர்த்தராகிய

இயேசுவே, சபைக்கு அவசியமான ஒரே கர்த்தராய் இருக்கின்றார்; ஒரே கர்த்தரும், தலையுமானவருடைய ஆளும் உரிமையினை எந்தக் குருமார் குழுக்களோ அல்லது மேலவைகளோ அல்லது குருமார்களோ அல்லது மூப்பர்களோ எடுத்திடுவதற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. சபையிலுள்ள சகோதரர்கள் அறிவுரையும், புத்திமதியும் கூறிடலாம்; ஆனாலும் இதைச் செய்கையில், அவர்கள் தங்கள் சொந்த அபிப்பிராயங்களின்படி இல்லாமல், தேவனுடைய வாக்கியங்களின்படி பேசிடுவதற்கு எப்போதும் முயற்சித்திட வேண்டும் - "அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக" (1 பேதுரு 4:10, 11). அவர்களது புத்திமதியானது, கர்த்தருடைய ஆவியின்படி மற்றும் வசனத்தின்படி இருக்கும் பட்சத்தில் மாத்திரமே, சபைக்கு அது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட வேண்டும் மற்றும் அது கர்த்தருடைய ஆவி மற்றும் வசனத்தின்படி காணப்படுகின்றதாவென அனைவருமே தனிப்பட்ட விதத்தில் பகுத்துணர்ந்திட வேண்டும். ஆனால் அவர்களது புத்திமதியானது தேவ வசனத்தின் அடிப்படையில் காணப்படுகிறதென்றால், தேவ வசனத்தினுடைய கட்டளைகள் மற்றும் கற்பனைகளிடத்தில் கவனத்தைத் திருப்புகிறதென்றால், அது சாந்தமான ஆவியில், அனைவராலும் கவனமாய்க் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். மேலும் எவரேனும் இருதயத்தினுடைய பெருமையின் நிமித்தம் அத்தகைய அறிவுரையினை அவமதிப்பதன் மூலமாகவோ அல்லது கவனத்திற்குக் கொண்டுவருவதற்கெனத் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டுள்ளதான மனித பாத்திரங்களைப் பொருட்படுத்தாததன் மூலமாகவோ அசட்டைப் பண்ணுவார்களானால், இது - கர்த்தருக்கும், அவரது வழிகளுக்கும் எதிராக எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றதாய் இருக்கும்.

இதன் காரணமாகவே, "ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும், யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால், அநேகர் தீட்டுப்படாதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" என்று அப்போஸ்தலன் நமக்கு வலியுறுத்துகின்றார் (எபிரெயர் 12:15); ஏனெனில் தேவனுடைய சித்தத்தினை அவருடைய வசனத்தில் தெளிவுப்படுத்தி, வெளிப்படுத்துகின்ற தேவகிருபையானது, தேவதயவானது, முக்கியமாக அவரது தெரிந்தெடுக்கப்பட்ட மனித கருவிகள் வாயிலாகவே சபைக்குக் கடந்துவருகின்றது. மேலும் ஒருவன் வாதினாலாவது/ கட்சிமனப்பான்மையினாலாவது அல்லது வீண் பெருமையினாலாவது அல்லது வேறு ஏதேனும் நோக்கத்தின் காரணமாகவோ, கர்த்தருடைய மந்தையின் நம்பிக்கையினைத் தெளிவற்றதாக்கிடுவதற்கு நாடுவானானால், இன்னுமாக சத்தியத்தினை முன்வைக்கும்படிக்கும் மற்றும் சத்தியத்திற்காகப் போராடும்படிக்கும் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட இத்தகைய ஊழியக்காரர்களுக்கு எதிராக மந்தையினுடைய இருதயங்களில் கசப்பின் வேரை நடுவதற்கு நாடுவானானால், அவன் மந்தைக்கான தேவகிருபையினைத் தடைப்பண்ணுகிறவனாய் இருப்பான் மற்றும் இதன் விளைவாகக் கிட்டத்தட்ட அநேகர் தீட்டுப்படுத்தப்படுவார்கள் என்பது நிச்சயமே. இப்படியாய் நடந்துகொள்பவன் நியாயத்தீர்ப்பு அடைவதற்காகக் கர்த்தருடைய கரத்தில் இருப்பான்; மற்றும் இத்தகையவர்களுடைய அறிக்கைகள் என்னவாக இருப்பினும், இவர்கள் சீக்கிரமாய், இவர்களுடைய கேடான வழிகளைப் பின்பற்றின யாவரோடும்கூடத் தோல்விக்குள்ளாகுவார்கள். கர்த்தருக்கும் மற்றும் ஒருவருக்கொருவரும் மற்றும் மந்தையினுடைய நலனுக்கடுத்தவைகளுக்கும் உண்மையாய் இருக்கும் சகோதரர்கள், கர்த்தருடைய சித்தம் தொடர்பான தங்களது பகுத்துணர்தல்களில் வேறுபடுவார்களானால், இவர்கள் அன்பில் வேற்றுமைக்காட்டவும் வாய்ப்புண்டு; ஆனால் இவர்கள் ஜெபத்தின் வாயிலாகவும், கவனமான வேத ஆராய்ச்சி மூலமாகவும் மற்றும் உள்ளப்பூர்வமான பிரயாசம் மூலமாகவும் சத்தியத்திற்குத் தங்களை அபாத்திரமாக்கிடும் எத்தன்மைகளினின்றும் தங்களது இருதயங்களை மிகவும் தூய்மைப்படுத்திடுவதற்கும், விசுவாசத்தினுடைய ஐக்கியத்தில் துரிதமாய் வந்திடுவதற்கும் பிரயாசம் எடுத்திட வேண்டும் - "ஆகையால் நம்மில் (இருதயத்தில், சித்தத்தில்) தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக" (பிலிப்பியர் 3:15, 16).

“அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு [அனுபவமற்ற] நூதன சீஷனாயிருக்கக்கூடாது” [அதாவது அவன் தாழ்த்தப்படுவதற்கு அவசியமாகுமளவுக்கு, சாத்தான் போன்று மாபெரியவராகிடுவதற்குப் பேராசைக்கொள்வான். ஏனெனில் அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமையாய்” இருக்கின்றது - ஏசாயா 14:13, 14; பிலிப்பியர் 2:5-9 Diaglott]

அவன் நிந்தனையிலும் (மாய்மாலத்தினுடைய நிந்தனையிலும்), பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் (உலகத்தால்) (நேர்மைக்கும் மற்றும் பொதுவான நீதியான குணலட்சணத்திற்கும்) நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும்.”

“அந்தப்படியே, உதவிக்காரரும் இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும், விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும். மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்படவேண்டும்; குற்றஞ்சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறுபண்ணாதவர்களும், தெளிந்தபுத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கவேண்டும். மேலும் உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும்சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும்” (1 தீமோத்தேயு 3:8-12).

பவுல் தீத்துவுக்கு எழுதின தன்னுடைய கடிதத்தில் இந்தத் தகுதிகளோடுகூடப் பின்வருபவற்றையும் சேர்க்கின்றார் - அதாவது, “ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும். அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடைக்க வேண்டும்” (தீத்து 1:9-11). மந்தையினுடைய வளமைக்கு அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் மூப்பர்களிடத்தில் இந்தத் தகுதிகளானது காணப்படுவது எவ்வளவு அவசியமாய் இருக்கின்றது! இவை அனைத்திற்கும் மேலாக அவர்கள், “உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவர்களும்,” “விசுவாசத்தில் ஆரோக்கியமுள்ளவர்களுமானவர்களை” தேர்ந்தெடுக்க வேண்டும் மற்றும் மனித ஊகங்களையும், வீணான தத்துவ ஞானங்களையும் கொண்டிருப்பவர்களையும் மிகவும் கவனமாய்த் தவிர்த்திட வேண்டும். இந்த எச்சரிக்கையானது, சபை தனது விசுவாசம் யாது என்று திட்டவட்டமாய்த் தெரிந்திருக்க வேண்டும் என்றும், அதன் மூப்பர்களுடைய விசுவாசத்தின் ஆரோக்கியத்தினையும் பகுத்துணர முடிகிறதாய் இருத்தல் வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. (“கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்” என்று) பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டதான விசுவாசமானது, பின்தொடர்ந்து வரும் முற்போக்கான சத்தியங்களுடைய ஒவ்வொரு அம்சத்தினையும் பரீட்சித்திட வேண்டும். அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று, கற்பனையான ஊகங்களும், தத்துவ ஞானங்களும் இழிவானதாய்ப் பார்க்கப்பட்டு, ஆதரிக்கப்படக்கூடாது (1 தீமோத்தேயு 6:20).

## மூப்பர்களுக்குரிய அப்போஸ்தலரின் கட்டளைகள்

மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஊழியத்தினை அவர்கள் ஏற்றுக்கொள்ளும்போது, தீமோத்தேயுவுக்கான (2 தீமோத்தேயு 3:16, 17; 4:1-5) மற்றும் தீத்துவுக்கான (தீத்து 2:1, 7, 8, 11-15) பவுல் அடிகளாரின் கட்டளைகளும் மற்றும் பேதுரு அடிகளால் அவருடைய பொதுவான நிருபத்தில் (1 பேதுரு 5:1-11) எழுதப்பட்டுள்ள கட்டளைகளும், சபையார் முன்னிலையில் அவர்களுக்கு வாசிக்கப்பட்டு; பின்னர்த் தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களும், சபையாரும் சேர்ந்து கர்த்தருடைய ஊழியத்தில் ஒத்துழைக்கையில், தேவன் தங்களையும், தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களையும் ஆசீர்வதிக்கும்படியாக ஜெபம்பண்ணிடலாம்.

அப்போஸ்தலர்களுடைய இந்த வார்த்தைகளானது, மிகவும் மனதில் ஆழப்பதியக்கூடிய பயபக்திக்குரிய வார்த்தைகளாகும். பவுல் அடிகளார் பேசுவதைக் கேளுங்கள்:- “வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன்

தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோத்தேயு 3:16, 17).

"நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய இராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் (தீமோத்தேயுவாகிய உனக்கு) கட்டளையிடுகிறதாவது: (உனக்குச் சௌகரியமாய் இருந்தாலும், இல்லாவிட்டாலும்) சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், (புதிதான, விநோதமான ஏதோ ஒன்றிற்காக - மனித ஊகங்கள் மற்றும் தத்துவ ஞானங்களுக்காக) செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும். (இந்தத் தீமையான தாக்கங்கள் மற்றும் மனவிருப்பங்களுக்கு எதிராக) நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி (காரணம், இது ஊழியத்தில் உண்மையுள்ளவர்கள் அனைவருக்கும் வரும் மற்றும் விழிப்பாய் எதிராளியானவனை எதிர்ப்பவர்கள், எதிராளியானவனுடைய கோபத்திற்கு ஆளாகுவார்கள்); சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று" (2 தீமோத்தேயு 4:1-5).

தீத்துவிடம் அவர் கூறுவதாவது: "நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு. நீயோ எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து எதிரியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக. ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் (சொந்த அதிகாரத்தோடு அல்ல, தேவ வசனத்தின் அதிகாரத்தோடு) கடிந்துகொள்" (தீத்து 2:1, 7, 8, 11-13, 15).

பேதுரு கூறுவதையும் கேளுங்கள்: "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல (வற்புறுத்துதலினால் அல்ல), மனப்பூர்வமாயும் (ஊழியத்தினுடைய பிரயாசங்கள் மற்றும் பொறுப்புகளை மனப்பூர்வமாய் எடுத்துக்கொண்டு) அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, (கர்த்தருக்கும், ஆடுகளுக்கும் மற்றும் சத்தியத்திற்கும் ஊழியம் புரிந்திட விரும்பும்) உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (1 பேதுரு 5:1-5).

"ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி,

நிலைநிறுத்துவராக அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (1 பேதுரு 5:6-11).

## சுயாதீனத்தைச் செயல்படுத்துவதே, அடிமைத்தனத்திற்குள்ளாகுதலுக்கு எதிரான பாதுகாப்பாகும்

பாபிலோனின் அடிமைத்தனத்தினின்று விடுதலையடைவதினால் மிகவும் மகிழ்ச்சிக்கொள்ளும் சிலர், ஒழுங்குமுறையே இல்லாத - எதிர்மறையான மிதமிஞ்சின நிலைக்குப் போவதற்கு எதிராக எச்சரிக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர். சபை பிரிவுணர்ச்சியின் அடிப்படையிலான பூமிக்குரிய அமைப்புகளின் அடிமைத்தனத்திற்குச் சிலர் மிகவும் அச்சமடைகிறபடியால், குறிப்பிட்ட ஊழியங்களுக்கெனக் கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலாய் இருக்குமெனத் தங்களால் நம்பப்படுகிற, தங்கள் மத்தியில் காணப்படுபவர்களை நியமிப்பதற்கென்றுள்ள தங்களது தனிப்பட்ட சுயாதீனத்தினைப் பயன்படுத்திடுவதற்கு அஞ்சுகின்றனர். இப்படியாக அவர்கள் தவிர்க்க விரும்பிட்ட அதே அடிமைத்தனத்திற்குள், அடிமைப்படுகிறார்கள். ஊசல்குண்டு/Pendulam போன்று மிதமிஞ்சின ஒரு நிலைப்பாட்டினின்று, மிதமிஞ்சின மறுநிலைப்பாட்டிற்குச் செல்வதே யாவருடைய மனப்பாங்காய் இருக்கின்றது; ஆனால் திருவசனம் மற்றும் சத்தியத்தினுடைய ஆவியானது, உங்களை "ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவதற்கு" ஏதுவானதாகும். எந்த இடத்திலும் காணப்படும் கர்த்தருடைய மந்தைக்கான ஆவிக்குரிய நலனுக்கடுத்த காரியங்களானது, மனம்போன போக்கில், ஒழுங்கில்லாமல் செய்யப்படுவதற்கு விட்டுவிட முடியாத அளவுக்கு மிகவும் கருத்தூன்றி கவனிக்க வேண்டிய மற்றும் முக்கியமான காரியங்களாய் இருக்கின்றது; ஒருவேளை ஒழுங்கில்லாமல் செய்யப்படுவதற்கு விட்டுவிடப்பட்டால், நிச்சயமாகவே சாத்தான் ஒரு கட்டத்தில் அதைச் சாதகமாகப் பயன்படுத்திடுவான்.

பாபிலோனின் அடிமைத்தனத்தினின்று நாம் தப்பித்துள்ளதான காரியமானது, நம்முடைய காரியங்களிலுள்ள அனைத்து ஒழுங்கையும், ஒழுங்குமுறைமையையும் விலக்கிட வேண்டுமல்லவா என்பதற்குக் காரணம் ஆகாது; ஆதிசபையாருக்கும் இதே பயங்கள் இருந்திருக்கலாம்; ஏனெனில் அவர்களும் அப்போதுதான் யூத மார்க்கத்தின் அடிமைத்தனத்தினின்று தப்பினவர்களாய்க் காணப்பட்டனர் மற்றும் அவர்களும் அடிமைத்தனத்தின் நுகத்திற்குள்ளாக மீண்டும் அடிமைப்படாதபடிக்கு இருக்கத்தக்கதாக அறிவுறுத்தப்பட்டனர் (கலாத்தியர் 5:1). அடிமைத்தனத்தின் நுகம் என்பது ஒழுங்கு மற்றும் ஒழுங்குமுறை பற்றியதாக இல்லாமல், மாறாக பழைய யூத விசுவாசம் - அதாவது நியாயப்பிரமாண உடன்படிக்கைப் பற்றியதாகவே இருந்தது. இதிலிருந்தே அவர்கள் சுதந்தரமடைந்து நிலைத்திருக்க வேண்டும்; ஏனெனில் கிறிஸ்து தம்முடைய பலியின் வாயிலாக, அவர்களை விடுதலைப்பண்ணினார். சபைகளுக்குக் கட்டளையிடப்பட்டதும், அவர்கள் யாவராலும் கைக்கொள்ளப்பட்டு வந்ததுமான ஒழுங்குமுறையானது, அடிமைத்தனமாக கருதப்படவேயில்லை; ஒழுங்குமுறையானது ஏற்படுத்தப்பட்டது மற்றும் ஒவ்வொரு இடத்திலும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள்; மற்றும் இதற்கேற்ப கர்த்தருடைய வேலையும் செழித்தோங்கியது.

ஒழுங்குமுறையின் கொள்கையும் மற்றும் முறையாய் நியமிக்கப்பட்ட மற்றும் கர்த்தருடைய ஆவியினால் தகுதியடைந்துள்ள மூப்பர்களை அங்கீகரித்தல் (இப்படியாக கடவுளியல் கல்லூரிகளில் செய்யப்படுகிறதில்லை) மற்றும் அவர்கள் ஊழியம்புரிகின்றதான சபையாரின் அங்கீகாரம் மற்றும் ஒத்துழைப்பின் வாயிலாக அவர்களை, அவர்களது ஊழியங்களில் ஆதரித்தல் எனும் கொள்கையும் சரியானதே; இல்லையேல் அப்போஸ்தலர்கள் இதை ஆதிசபையாருக்குக் கட்டளையிட்டதில் தவறு செய்தவர்களாய் இருப்பார்கள்; மற்றும் இந்த ஏற்பாட்டினை எதிர்க்காததில் ஆதிகிறிஸ்தவர்களும் தவறு செய்தவர்களாய் இருப்பார்கள். ஆனால் நிச்சயமாகவே அப்போஸ்தலர்களும், ஆதிசபையினரும் தவறு செய்யவில்லை. தங்கள் காரியங்களுக்கான இந்த எளிமையான ஒழுங்குமுறையும், ஏற்பாடுகளும் ஆசீர்வாதமாய் அமைந்தது; கர்த்தரும்கூட இந்த ஏற்பாட்டினை அங்கீகரிப்பதைத் தெரிவிக்கும் வண்ணமாக உதாரணத்தினை, ஆசியாவிலுள்ள ஏழுச் சபைகளுக்குமான தம்முடைய வெளிப்படுத்துதலைத் தெரிவிக்கையில், தம்முடைய செய்தியை, அச்சபைகளின் பிரதிநிதிகளான மூப்பர்கள், "தூதர்கள்," தூதுவர்கள் அல்லது ஊழியக்காரர்கள் வாயிலாக தெரிவித்ததில் வழங்கினார் (வெளிப்படுத்தல் 2:1, 8, 12, 18; 3:1, 7, 14).

ஒழுங்கு விஷயத்தில், பெயர்ச் சபைகளானது கிறிஸ்துவுக்குள்ளாக அந்த எளிமையையும் மற்றும் அவர் தம்முடைய பரிசுத்த அப்போஸ்தலர்கள் வாயிலாக கட்டளையிட்டதான ஒழுங்குமுறையையும் அவர்கள் எல்லை மீறி தாண்டிச் சென்று, தேவபக்தியே இல்லாமல் போகுமளவுக்கு, தேவபக்திக்கான வேஷங்களை அதிகமாய்ப் பெருக்கிக்கொண்டதிலும்தான் தவிர, மற்றபடி ஒழுங்கு விஷயத்தில், பெயர்ச் சபைகளுடன் எங்களுக்கு எந்தக் கருத்துவேறுபாடும் இல்லை. ஒரு விஷயத்தினைப் பெயர்ச்சபைகள் பெற்றிருக்கின்றார்கள் என்ற காரணத்திற்காக நாம் எதையும் உதறித் தள்ளிடக்கூடாது; ஆனால் தவறாய்க் காணப்படும் யாவற்றையும், தேவனுடைய ஆவிக்கும், வசனத்திற்கும் முரண்பாடான யாவற்றையும் நாம் மறுத்திட வேண்டும். பல்வேறு சபை பிரிவுகள் மீதான கண்மூடித்தனமான பகைமையினால் மாத்திரமே நாம் வழிநடத்தப்படுவோமானால், பெயர்க் கிறிஸ்தவ அமைப்புகளினால் இப்பொழுது மிகக் குறைவான பற்றினால் பற்றிக்கொள்ளப்பட்டிருப்பினும், இன்னமும் அவர்களால் பற்றிக்கொள்ளப்பட்டிருக்கும் சில பழைய மற்றும் விலையேறப்பெற்ற சத்தியங்களைத் தூக்கி எறிந்துவிடும்/ஒதுக்கிவிடும் மிதமிஞ்சின நிலைக்குள் நாம் கடந்துபோக நேரிடும்; உதாரணத்திற்குப் பாவநிவாரணத்தின் அல்லது ஞானஸ்நானத்தின் அல்லது கர்த்தருடைய இராப்போஜனத்தின் உபதேசத்தை, பெயர்ச்சபையினர் பெற்றிருந்தார்கள் என்ற காரணத்திற்காக மாத்திரம், இவ்வுபதேசங்களை நாம் ஒதுக்கித் தள்ளிவிடுபவர்களாகிடுவோம். ஆனால் தேவ வசனத்தினால் கற்பிக்கப்பட்டவர்களாகிய நாம், நலமானவற்றைப் பற்றிக்கொண்டிருக்க கற்றுக்கொண்டிருக்கின்றோம் மற்றும் கர்த்தருடைய நோக்கங்களுக்காக நாம் செய்திடும் யாவையும், "நல்லொழுக்கமாயும், கிரமமாயும்" செய்திடுவது என்பது நலமானவைகளில் ஒன்றாகும்; ஆனால் அது ஆவிக்குரிய ஒழுங்காய் இருப்பதாக; தேவனுடைய மந்தையின்மேல் ஒரு வகுப்பாரை உயர்த்தி, சபையின் மீது உரிமையான அதிகாரமுடைய ஒரே ஒருவராகிய உண்மையான தலையானவரைப் புறக்கணிக்கும் பாபிலோன் ஒழுங்கின்படியாக இருக்கக்கூடாது. "கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்; உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" என்பதை மறந்துவிடாதீர்கள். கிறிஸ்துவின் சரீரம் பக்திவிருத்தி அடைவதற்கான கண்ணோட்டத்தில், "சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது" (1 கொரிந்தியர் 14:40, 26).

## சபையின் தலையானவருடைய சிறப்புரிமைகள்

உண்மை சபையானது எந்தப் பொறுப்புகளுக்கும் கடமைப்பட்டவர்கள் அல்ல என்றும், நாம் விரும்பியவற்றைச் செய்திடுவதற்கு - அதாவது நாம் விரும்பினால் சபை கூடிவருதலை விட்டுவிடுவதற்கு அல்லது நாம் விரும்பினால் மற்றவர்களோடு நாம் ஐக்கியங்கொள்ளுவதற்கு அல்லது இங்கும் அங்குமாகச் சென்று நல்ல, கெட்ட மற்றும் புறக்கணிக்கப்பட்ட போஜன பந்திகளிலிருந்து சிறு உணவு துண்டுகளைக் கொண்டுவந்திடுவதற்கு நமக்குச் சுதந்தரம் இருக்கின்றது என்றும் ஊகிப்பது தவறாகும். நாம் உண்மையிலேயே கிறிஸ்துவுக்கு உரியவர்களாய் இருப்போமானால், பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் மற்றும் சாத்தான் நம்மீது சுமத்தும் நுகங்கள் யாவற்றிலிருந்தும் விடுதலை அடைவது, நாம் அனுபவிக்கும் ஒரே சுதந்தரமாக இருக்கும். கிறிஸ்து இயேசுவுக்குள் காணப்படுகிறவர்களுக்கு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுதல் இல்லை என்பதே நம்முடைய விடுதலையாய் இருக்கின்றது; நாம் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் மற்றும் பாவம் எனும் ஆளோட்டிகளுக்கு இனிமேல் நாம் அடிமைகள் அல்ல. அந்த அடிமைத்தனத்திற்குட்பட்டிருந்த பழையவைகள் யாவும் ஒழிந்துபோயின மற்றும் எல்லாம் புதிதாயின. இதுவே தேவனுடைய புத்திரர்களுக்குரிய ஆசீர்வாதமான சுயாதீனமாகும். இது இப்பொழுது விசுவாசத்தினால் உணர்ந்து கொள்ளப்பட்டுள்ளது மற்றும் கொஞ்சம் நிஜமாகவும் உணர்ந்து கொள்ளப்பட்டுள்ளது; ஆனால் விரைவில் (விழுகையின் நிமித்தம் கறைப்படிந்ததும், அபூரணமானதுமான) சாவுக்கேதுவாகிய இது சாவாமையைத் தரித்துக்கொள்ளும்போது முழுமையாய் உணர்ந்துகொள்ளப்படும்.

இப்படியாகப் பாவத்தின் அடிமைத்தனத்தினின்று கிறிஸ்துவினால் விடுவிக்கப்பட்டுள்ளபடியால், நமது பரம பிதாவினுடைய சித்தமாய் இருக்கின்ற கிறிஸ்துவின் சித்தத்தினைச் செய்திடுவதற்கென, அவரோடுகூட ஓர் உடன்படிக்கை உறவிற்குள்ளாகக் கடந்து வந்திருக்கின்றோம்; கிறிஸ்துவும்: "தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ

வருகிறேன்; என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே வந்தேன்" என்று கூறி, தேவனோடு உடன்படிக்கைப் பண்ணினார். ஆகையால் நமது கர்த்தர் கூறினதுபோல, சாத்தானுடைய பாரமான நுகத்தினின்று அவரால் விடுவிக்கப்பட்டுள்ள நாம், மகிழ்ச்சியான பணியாகிய கிறிஸ்துவின் நுகம் மற்றும் சுமையினை நம்மீது ஏற்றுக்கொண்டிருக்கின்றோம் (மத்தேயு 11:29, 30). ஆகையால் இதுவே நாம் நம்முடைய உடன்படிக்கைக்கு உண்மையாய் இருக்கும்பட்சத்தில் நம்முடைய சுயாதீனத்திற்கான பரப்பளவாகும் மற்றும் நம்முடைய அடிமைத்தனத்திற்கான பரப்பளவாக இருக்கும். அவருடைய அருமையான நாமத்திற்குத் துதி ஏறெடுப்போமாக! நமது கர்த்தரும், மீட்பருமானவருடைய நுகம் மெதுவாயும், அவரது சுமை இலகுவானதாகவும் இருக்கின்றதை நாம் காண்கின்றோம்; காரணம் நமக்கான அவரது அன்பும் மற்றும் அவருக்கான நமது அன்பும் ஆகும்.

"பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிறவர்களாகிய" உண்மை சபையானது, அநேக சூழ்நிலை மாற்றங்களுக்குள்ளானாலும் - அதன் அங்கத்துவமானது தொடர்ந்து மாறிக்கொண்டிருந்தாலும், அது தற்காலத்திலும் சந்தேகத்திற்கிடமின்றி ஓர் organization/அமைப்பேயாகும்; ஆனால் அது ஒரு பரலோக அமைப்பே ஒழிய, பூமிக்குரிய அமைப்பல்ல. இரண்டு விதத்தில் கிறிஸ்துவின் உண்மை சபையானது கருதப்படலாம்: (1) சுவிசேஷ யுகத்தினுடைய துவக்கம் முதல் முடிவுவரையிலுமுள்ள அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளின் முழுக்கூட்டத்தாருமே ஒரே சரீரமாக, ஒரே சபையாகக் காணப்படுகின்றனரே ஒழிய, அநேகம் அல்ல; ஏனெனில் கர்த்தர் ஒரு சபையையே ஸ்தாபித்தார். மேலும் அந்த ஒரு சபைக்கு, அவரே ஒரே "கர்த்தராகவும்" மற்றும் "தலையானவராகவும்," மாபெரும் "பிரதான மேய்ப்பராகவும்" மற்றும் "போதகராகவும்" மற்றும் ஒரே அதிகாரியாகவும் காணப்படுகின்றார். இதுவே "பரலோகத்தில் பேரெழுதப்பட்டவர்களாகிய" "முதற்பேறானவர்களின் சபையாக" இருக்கின்றது (எபிரெயர் 12:23); மற்றும் தங்களது ஓட்டத்தின் முடிவு வரையிலும் தங்கள் பெயர்களை அங்கே எழுதப் பெற்றிருந்து, உண்மையின்மையின் காரணமாக (வெளிப்படுத்தல் 3:5) கிறுக்கிப்போடப்படாமல் தங்கள் பெயர்களை அங்கே எழுதப் பெற்றிருப்பவர்கள், நமது கர்த்தரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்து வெளிப்படும்போதும் மற்றும் இராஜ்யத்திலும் காணப்படும் ஜெயங்கொள்ளும் சபையில் முழுமையான அங்கத்தினத்திற்குள்ளாக அனுமதிக்கப்படுவார்கள் (2 தீமோத்தேயு 4:8; தீத்து 2:13; 1 பேதுரு 1:7; 5:4).

கர்த்தர்தாமே சபைக்கான புஸ்தகத்தினை - நம்முடைய பெயர்களின் பதிவுகள் மற்றும் ஒவ்வொரு அங்கத்தினன் குறித்த தனித்தனி பதிவுகள் - ஆகியவற்றைப் பார்த்துக்கொள்கின்றார்; அதற்கும் நமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. உண்மையாய் அர்ப்பணம்பண்ணியுள்ள விசுவாசிகள் யாவருடைய பெயர்களையும் அவர் பதிவு செய்துகொள்கின்றார் மற்றும் பூமியிலுள்ள எந்த வல்லமையினாலும், அவர்களை அவர் கையிலிருந்து பறித்துக்கொள்ளவோ அல்லது பரலோகத்தில் பதிவுபண்ணினதிலிருந்து, அவர்களது பெயர்களைக் கிறுக்கிப்போடவோ முடியாது (யோவான் 10:28, 29; உரோமர் 8:35-39; வெளிப்படுத்தல் 3:5). இதற்கும் மற்றும் தலைக்குரிய கடமைகள் யாவற்றிற்கும், அவரது தவறிழைக்காத ஞானம் மாத்திரமே போதுமானதாகும். ஆகையால் கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள எந்த ஓர் அங்கத்தினனும் இறுமாப்படைவது என்பது - சபையின் தலையானவரின் அதிகாரத்தினை எடுத்துக்கொள்வது என்பது, மிகவும் கண்ணியமற்றதாக மற்றும் கண்டனத்திற்குரியதாக இருக்கும். மேலும் அத்தகையவன் கர்த்தருடைய சிட்சையினால் சீக்கிரமாய்க் குணமடையவில்லையெனில், அவன் அறுப்புண்டுபோய், அவரது சரீரத்தில் இடம்பெறுவதற்கு அபாத்திரனாகப் புறந்தள்ளப்படுவான் (2 தெசலோனிக்கேயர் 2:11).

(2) சபை கருதப்படுவதற்கான மற்றொரு விதம் - அதாவது ஆவிக்குரிய விதமாகக் காணப்படுகிற இந்த விதம் - ஒரு பங்கானவர்களை முழுமையானவர்களைப் போன்று கருதுவதாகும் (பிலேமோன் 2; வெளிப்படுத்தல் 2:1). இப்படியாக ஜீவித்துக்கொண்டிருக்கும் பரிசுத்தவான்கள் அனைவரும் இன்றிருக்கும் சபையெனப் பேசப்படலாம் அல்லது ஜீவித்துக்கொண்டிருக்கும் சபையில் எத்தனை பேர்கள் ஓரிடத்தில் கூடினாலும், அவர்கள் அவ்விடத்திலுள்ள சபை என்று அழைக்கப்படலாம் (உதாரணத்திற்கு: பிலேமோன் 2; வெளிப்படுத்தல் 1:4; 2:1; 2 கொரிந்தியர் 11:28). ஏனெனில் எங்கே இரண்டு அல்லது மூன்றுபேர் கூடுகின்றார்களோ, அவர்கள் நடுவில் தாம் காணப்படுவாரெனக் கர்த்தரும், தலையுமானவர் வாக்களித்துள்ளார் (மத்தேயு 18:20). அங்கத்தினர்கள் யாவரும் கர்த்தரோடுகூட ஒன்றுசேரும்போதும் மற்றும் மகிமையடையும் போதுதான், சர்வசங்க சபை காணப்படும்.

உண்மை சபையினுடைய அங்கத்தினர்களை எப்படி நாம் அறிந்துகொள்வது என்று யாரேனும் கேட்பார்களானால், அதற்கு நம்முடைய பதில்: கிறிஸ்துவுக்குள்ளான தங்களது விசுவாசத்தினைக் குறித்த அவர்களது அறிக்கையின் மூலமாகவும் மற்றும் அவர்களில் வெளிப்படும் கிறிஸ்துவின் ஆவியின் மூலமாகவும் நாம் அவர்களை அறிந்துகொள்ளலாம் என்பதேயாகும். அவர்கள் நடுவில் வெளிப்படுகிறதான அவரது சத்தியமும், அவரது ஆவியும் மற்றும் அவரது பிரசன்னமும்தான் - அவர்களை ஒன்றுகூடத் தூண்டுகின்றது மற்றும் கிறிஸ்தவ அன்பு மற்றும் ஐக்கியத்தின் கட்டுகளில் அவர்களது இருதயங்களை ஒருங்கிணைக்கின்றது மற்றும் அவர்களை அதே நம்பிக்கையினாலே ஏவி, அதே சந்தோஷத்தினால் அவர்களை உயிரூட்டி, கர்த்தருடைய வேலையில் ஒன்றுசேர்ந்து ஒத்துழைப்பதற்கு, அவர்களை நடத்துகின்றதாய் இருக்கின்றது. நம் மத்தியில் ஒழுங்கற்று நடக்கிறவரின் பெயரினை அங்கத்தினர்களின் பட்டியலிலிருந்து நாம் விலக்கிட முடியாததினால், அத்தகையவரை நாம் எப்படிக் கையாளுவது? என்று கேள்வி எழுப்பப்படுகிறதென்றால்; இதற்கு நம் பதில் என்னவெனில்: இவ்விஷயத்திற்கு நமக்கு மிகவும் தெளிவான கட்டளைகளைப் பெற்றிருக்கின்றோம். ஆதிசபையில் இருந்ததுபோல இப்பொழுதும் அங்கத்தினர்கள் மத்தியில் பல்வேறு அளவிலான வளர்ச்சி நிலைகள் காணப்படுகின்றது; மற்றும் பவுல் அடிகளாரோ: சிலர் திடனற்றவர்களாய் இருப்பார்கள், அவர்களைத் தேற்றுங்கள்; சிலர் பலவீனர்களாய் இருப்பார்கள், அவர்களைத் தாங்குங்கள்; எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாய்/பொறுமையாய் இருக்கும் போதிலும், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள் என்று கூறுகின்றார் (1 தெசலோனிக்கேயர் 5:14). ஒழுங்கில்லாதவர்களைப் பலவீனர்களென்று தவறாய் எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேற்றிக்கொண்டிராதேயுங்கள்; மாறாக நீடிய சாந்தத்துடனும், பொறுமையுடனும், அன்புடனும் ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள். ஆனால் நீங்கள் அத்தகைய ஒருவருக்கு உண்மையாய்ப் புத்திசொன்ன பிற்பாடு, அவர் தொடர்ந்து சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் இருப்பாரானால், "அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி புத்தி சொல்லுங்கள்." கர்த்தர் அவனை அறுப்புண்டுபோகப்பண்ணியிருக்கிறார் என்பது வெளிப்பட்ட பிற்பாடே, நாம் அவனிடத்தில் சகோதர அக்கறைக்கொள்வதை நிறுத்திடலாம் (2 தெசலோனிக்கேயர் 3:14, 15).

சகோதரர்களுக்கிடையே பிரச்சனைகள் ஏற்படும் சூழ்நிலைகளுக்கும்கூடக் கர்த்தர் தெளிவான கட்டளைகளைக் கொடுத்துள்ளார் (மத்தேயு 18:15-17).

சபையின் மாபெரும் தலையானவர், தம்முடைய ஜனங்களைப் பக்திவிருத்தியடையப் பண்ணுவதற்கு - அவர்களை மகா பரிசுத்த விசுவாசத்தில் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் கிறிஸ்தவ குணலட்சணத்தில் அவர்களது வளர்ச்சிக்குமாக திரளான வழிவகைகளையும் அருளியுள்ளார். பூமியில் நம்முடைய ஓட்டம் முழுவதிலும், அவரது ஓயாத மேற்பார்வையினையும் மற்றும் வழிநடத்துதலையும் நாம் பெற்றிருக்கின்றோம். அவர் நம்முடைய தலையாக இருக்கின்றார், நாம் அவரது சரீரமாக இருக்கின்றோம்; அவர் நம்முடைய மேய்ப்பனாக இருக்கின்றார், நாம் அவரது ஆடுகளாக இருக்கின்றோம்; அவர் நமது தளபதியாய் இருக்கின்றார், நாம் அவரது போர்ச் சேவகர்களாய் இருக்கின்றோம். இப்பொழுது நாம் தகுதிக்கான தேர்வின்கீழ், பரீட்சையின்கீழ் உள்ள சபையாக இருக்கின்றோம்; விரைவில் உண்மையுள்ள போர்ச் சேவகர்கள் என்று அங்கீகரிக்கப்படுவோம் என்றும், வல்லமையிலும், மகா மகிமையில் காணப்படும் ஜெயங்கொள்ளும் சபையின் முழு அங்கத்துவத்திற்குள் அனுமதிக்கப்படுவதற்குப் பாத்திரவான்களாகிடுவோம் என்றுமுள்ள நம்பிக்கையில் நமக்கான போர்களின் மத்தியில், இப்பொழுது நாம் போர்புரியும் சபையாகக் காணப்படுகின்றோம்.

இப்படியாக, நமக்காக வாக்களிக்கப்பட்டுள்ள கானானை நோக்கி, வனாந்தரம் வழியாய் நாம் பிரயாணிக்கையில், தகுதிக்காணும் இந்நிலையிலும்கூட எப்படி முற்றிலுமாகக் கிறிஸ்துவின் உண்மை சபையானது, அதன் தலையாகிய கிறிஸ்துவின் கீழ் நிர்வகிக்கப்படுவதை நாம் காண்கின்றோம். நாம் அனைவரும் நம்முடைய மாபெரும் அதிபதியினுடைய கட்டளைகளின் கீழ்க் காணப்படுகின்றோம்; தேவனுடைய ஜனங்களுக்கு வைக்கப்பட்டுள்ளதான இளைப்பாறுதலை அடைய விரும்பும் யாவரும் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரைப் பின்பற்றிட வேண்டும். ஓ! நாம் சொந்தமாய்ச் செயல்படக்கூடாது மற்றும் எவ்விஷயத்திலும் நம்முடைய சொந்த சித்தத்தின்படி செய்திடுவதற்கு எந்த உரிமையும் நமக்கு நிச்சயமாகவே இல்லை. அனைத்தும், நம்முடைய சிந்தனைகளும்கூடக் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கின்றது; மற்றும் இதை அடையாளம் கண்டுகொள்வதிலும் மற்றும்

மகிழ்ச்சியுடன், அன்புடன் கீழ்ப்படிவதிலுமுள்ள நம்முடைய உண்மையின் மீதே - அவரது சபையிலுள்ளதான நம்முடைய அங்கத்துவமானது சார்ந்திருக்கப்பண்ணப்பட்டுள்ளது. எவ்விஷயத்திலும் நம்முடைய விருப்பத்தின்படி நம்மால் செய்திட முடியாது; நாம் கிறிஸ்துவுக்குள்ளான பிரமாணத்திற்கு விதிவிலக்கற்ற விதத்தில் கட்டுப்பட்டிருக்கின்றோம்; அவரது பரிசுத்த ஆவியானது நம்முடைய ஒவ்வொரு கிரியையும், வார்த்தையையும் மற்றும் சிந்தையையும் ஆண்டிட வேண்டும்; மற்றும் இப்படியாக நம்முடைய ஒவ்வொரு வல்லமையையும், தாலந்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்துவதே தொடர்ந்து நம்முடைய பிரயாசமாகக் காணப்பட வேண்டும்.

கிறிஸ்துவுக்கு அடிமைப்பட்டிருக்கும் இந்த ஆசீர்வாதமான அடிமைத்தனத்தில், அன்பிற்கு அடிமைப்பட்டிருக்கும் அடிமைத்தனத்தில் ஒன்றன்பின் ஒன்றாகப் பாவத்தின் சங்கிலிகள் நம்மிடமிருந்து கீழே விழும்போது, உயர்ந்த பட்ச சுயாதீனம் காணப்படுகின்றது. உலகமும், அதன் கருத்துகளும், வீணான குறிக்கோள்களும், அறிவீனங்களும், பெருமையும் மற்றும் மூடநம்பிக்கைகளும், பயங்களும் நம்மை இனியும் விலங்கிடுகிறதில்லை மற்றும் தெய்வீகக் கிருபையின் மகிமையான வெளிச்சம் உள்ளே வருமளவுக்கு நம்முடைய மனங்கள் மற்றும் இருதயங்களின் ஜன்னல்கள் அகலமாக திறக்கின்றன மற்றும் நம்முடைய இருதயங்களானது களிகூர்ந்து, பாடுகின்றன.

## அப்போஸ்தலரின் கட்டளை, கர்த்தருடைய கட்டளையாக இருக்கின்றது

இப்படியாகச் சபையின் மாபெரும் தலையானவர், நமக்கான வழியினை நமக்கு வகுத்துள்ளார். "வழி இதுவே, இதிலே நடவுங்கள்" என்று அவர் கூறியுள்ளார். அவர் அனைத்து வரையறைகள் மற்றும் ஏற்பாடுகள் முதலானவைகளை வகுத்தமைத்துள்ளார் மற்றும் அவரது கட்டளைகளை உண்மையாய்க் கைக்கொள்வதே நம்முடைய பங்காய் இருக்கின்றது. சபை காரியங்களுக்கடுத்த ஒழுங்குமுறை ஏற்பாடுகளைக் கர்த்தரே கொடுத்ததாகக் குறிப்பிடும் வகையில் அப்போஸ்தலனாகிய பவுல் பின்வருமாறு கூறுகின்றார்:-

"மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்" (எபேசியர் 4:11-13). இங்கு, 1 கொரிந்தியர் 12:12-20-வரையிலான வசனங்களைப் போலவே மனித சரீரத்தின் அவயங்களைக்கொண்டு அப்போஸ்தலன், சபை ஒருவரோடொருவரும் மற்றும் கர்த்தரோடும் கொண்டிருக்கும் உறவினைச் சித்தரிக்கின்றார்; சரீரமானது சீரான அமைப்படையத்தக்கதாகவும், பூரணமடையத்தக்கதாகவும் ஒவ்வொரு அவயமும்/அங்கத்தினனும் போஷிக்கப்பட வேண்டும் மற்றும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மறுபடியுமாக அதே அப்போஸ்தலன் நம்மிடம்: "தேவன் தமது சித்தத்தின்படி, அவயங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். [தன்னுடைய விஷயத்திலும், மற்றவர்கள் விஷயத்திலும் கர்த்தருடைய நியமனங்களை அடையாளம் கண்டுகொள்வதற்கு ஒவ்வொருவரும் நாடிட வேண்டும்; மற்றும் கர்த்தரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளின்படி மாத்திரமே ஊழியம் புரிந்திட ஒவ்வொருவரும் நாடிட வேண்டும்]. ஏனெனில் சரீரமானது ஓர் அவயவமாயிராமல், அநேகம் அவயங்களாய் இருக்கின்றது . . . தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கத்தரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு இன்னும் பலரையும் ஏற்படுத்தினார்" என்று கூறுகின்றார். சுவிசேஷ யுகம் முழுவதிலும் தம்முடைய சபைக்கு ஊழியர்களை அருளி, தம்முடைய பங்கினைக் கர்த்தர் உண்மையாய்ச் செய்திருக்கின்றார்; ஆனால் அவருடைய ஜனங்கள் - அவரது தகுதியுள்ள மற்றும் நியமனத்தின்படியானவர்களுக்காகக் கவனித்துப் பார்த்தவர்களாக எல்லாத் தருணங்களிலும் இருந்ததில்லை என்பது நிச்சயமே மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி, இப்படித் தவறிப்போவதன் காரணமாகவும், அத்தகையவர்களுக்குப் பதிலாக தன்னைத்தானே நியமித்துக்கொண்ட, தன்னைத்தானே உயர்த்திக்கொண்ட, தன்னைத்தானே போதித்துக்கொண்ட மற்றும் தன்னைத்தானே என்றென்றுமாக நியமித்துக்கொண்ட "குருமாரை" ஏற்றுக்கொண்டதன் காரணமாகவும் அநேகவற்றை அவரது ஜனங்கள் இழந்தும்போனார்கள்.

பன்னிரண்டு அப்போஸ்தலர்களே இருந்தனர் மற்றும் தேவ ஏவுதலின் பேரிலான இவர்களது ஊழியமானது, முழுச்சபைக்கும், யுகத்தின் முடிவுவரையிலும் காணப்படுகின்றது. இவர்களுக்கு வாரிசுகள் இருந்ததில்லை; மாறாக மந்தைக்கு உபதேசிக்கவும், மந்தையினுடைய நலனுக்கடுத்த காரியங்களைப் பார்த்துக்கொள்ளவும் முடிகின்ற வெவ்வேறு அளவிலான திறமைகளுடைய போதகர்களையும் மற்றும் மேய்ப்பர்களையும் கர்த்தர் அவ்வப்போது எழுப்பிக்கொண்டிருந்தார்.

"மூப்பர்" எனும் வார்த்தையானது, சபை பக்திவிருத்தியடையத்தக்கதாகக் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட யாவருக்கும் அல்லது இந்த ஊழியக்காரர்கள் அனைவருக்கும் பொருந்துகின்றதாய் இருக்கும்; இந்த ஊழியர்களில் சிலர் பிரதான ஊழியத்தினைப் பெற்றவர்களாகவும், மற்றவர்கள் உதவியாளர்களாகவும் காணப்படுகின்றனர். ஆகவேதான் அப்போஸ்தலர்கள் தங்களை மூப்பர்களெனத் தெரிவிக்கின்றனர் (1 பேதுரு 5:1). "மூப்பர்" என்ற வார்த்தையானது, மூத்த சகோதரனைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; வயதில் மூத்தவராக இருப்பது அவசியமல்ல, மாறாக கிறிஸ்தவ குணலட்சணத்தில் முதிர்ச்சியடைந்தவராக இருத்தலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. தீமோத்தேயுவும், தீத்துவும் அநேகமாக வாலிபர்களாகக் காணப்பட்டனர் (1 தீமோத்தேயு 4:11, 12; தீத்து 1:4; 2:15).

ஒரு சபையில், சத்தியத்தினைப் பொதுவிடங்களில் முன்வைத்திடுவதற்கான தாலந்தினைக் குறிப்பிடத்தக்க விதத்தில் ஒருவரோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்களோ பெற்றிருப்பதாக தென்படுகையில், அது சபையார் யாவராலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, அதைப் பயன்படுத்திக் கொள்ளும் விஷயத்தில் அனைவருமே ஒத்துழைத்திட வேண்டும்; மேலும் இதற்காக விசேஷித்த கூட்டங்கள் ஏற்படுத்தப்படலாம். இம்மாதிரியான கூட்டங்கள் ஆதிசபையில் அரிதாய் இருந்தது; காரணம் பவுல் அல்லது அப்பல்லோ அல்லது பேதுரு போன்ற வரம்பெற்ற பேச்சாளர்கள் போன்று அநேகர் அப்போது இருக்கவில்லை. ஆனால் அத்தகைய தாலந்துகள் கண்டுபிடிக்கப்பட்டபோது, அவைகள் பயன்படுத்தப்பட்டன மற்றும் பிரயோஜனமாயும் இருந்தன. இப்படியாகவே நம் மத்தியிலும் காணப்பட வேண்டும். பொது ஊழியங்களுக்குரிய பேச்சாற்றலானது சாதாரணமானதாகவோ அல்லது அசாதாரணமானதாக இருக்கலாம்; எனினும் இரண்டுமே பக்திவிருத்திக்கு ஏதுவானதாய் இருக்க வேண்டும். இதைப் பகுத்துணர்கிறவர்கள் சபையார்களே ஆவார்கள் மற்றும் ஒருவேளை பொதுப் பிரசங்கித்தல் ஊழியங்களுக்கான தாலந்துகள் இல்லையெனில், அவ்வூழியங்கள் மேற்கொள்ளப்படாமல் இருப்பது நல்லது மற்றும் இதற்குப் பதிலாக அதிக பக்திவிருத்தியடையப்பண்ணும் மற்ற ஊழியங்கள் - அதாவது இதற்குப் பொருத்தமான தாலந்துகள் சபையார் மத்தியில் காணப்படுகையில் - இந்த மற்ற ஊழியங்கள் செய்யப்படலாம்.

## பரிசுத்தவான்களின் கூடுகைகளில் அடையப்பட வேண்டிய நோக்கங்கள்

பரிசுத்தவான்களின் கூடுகைகள் மற்றும் மூப்பர்களுடைய ஊழியங்கள் முதலியவைகளில் அடையப்பட வேண்டிய நோக்கங்களையும் கவனியுங்கள் - இதன் நோக்கமானது கூடி உரையாடி மகிழ்வதோ அல்லது வழக்கமான ஊழியங்களைத் தொடர்வதோ அல்ல; மாறாக அதன் நோக்கமானது (1) "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டுச் சுவிசேஷ ஊழிய வேலைக்காக" வரும் இந்தச் சபை கூடிவருதல்களானது - கர்த்தருடைய ஊழியத்திற்கு, அதாவது எதிர்க்கால மகிமையான ஊழியத்திற்கு மாத்திரமல்லாமல், இந்த யுகத்திலும், அதாவது மணவாட்டி எதிர்க்கால ஊழியத்திற்கெனத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு உதவுகிற - சபைக்கான அவசியமான ஊழியத்திற்காகவும்கூட, பரிசுத்தவான்கள் யாவரும் மிக முழுமையாய்த் தயார்படுத்தப்படுவதற்கு ஏதுவான பயிற்சி - பள்ளிக்கூடங்களாகக் காணப்பட வேண்டும். இந்நோக்கத்திற்காகப் பரிசுத்தவான்கள் யாவரும் கடும்முயற்சி எடுக்கும் மாணவர்களாய் இருக்க வேண்டும் மற்றும் வழங்கப்படும் அறிவுரைகளும் முடிந்தமட்டும் முறையாயும், ஒழுங்காயும், சந்தோஷப்படுத்துவதற்காக இல்லாமல் முழுமையான வளர்ச்சிக்கு ஏதுவாய் இருக்கும் கண்ணோட்டத்தில் வழங்கப்பட வேண்டும். "காலத்தைப் பார்த்தால் (உங்களுக்கு இந்தச் சிலாக்கியங்கள் கிடைத்திட்டதான காலத்தைப் பார்த்தால்) போதகராயிருக்க வேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்" என்று கூறி, தங்கள் வாய்ப்புகளைப் போதுமானவளவுக்குப்

பயன்படுத்தி வளர்ச்சியடைந்து, உறுதிப்பெறாத சிலரை பவுல் அடிகளார் கடிந்துகொண்டது நமக்கு நினைவிருக்கிறது (எபிரெயர் 5:12).

(2) அதன் நோக்கமானது - கிறிஸ்துவினுடைய சரீரம் பக்திவிருத்தியடைவதற்காக - அனைவரும் ஒரே சரீரமாகக் கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சிக்கு நேராக கிறிஸ்தவக் குணலட்சணத்திலும், கிருபையிலும் மற்றும் அறிவிலும் வளர்வதில் முன்னேறத்தக்கதாக, அனைவரும் விசுவாசத்திலும், ஆவியிலும், அன்பிலும், தேவனுக்கான அர்ப்பணிப்பிலும் ஒருமைப்பட்டு இணைவதற்காக ஆகும்.

நாம் ஒன்றாய்க் கூடிவருதலுக்கான நோக்கத்தினைப்பற்றின இக்கண்ணோட்டத்தின்படி, நாம் நிறைவேற்றிடுவதற்கு மிக முக்கியமான வேலையைப் பெற்றிருக்கின்றோம் என்று காண்கின்றோம். ஆகையால் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும், ஊழியக்காரனாயும் நம்மைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிருப்போமாக. இப்பாடம் தொடர்புடையதான இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில்தான், ஊழியத்திற்கு நம்மை ஆயத்தமாக்குவதில் முழுமைக்கும், பூரணத்திற்கும் உதவியாக மற்றும் கிருபைக்கான வழிவகைகளில் ஒன்றாக [ஒரே வழிவகை என்று இல்லாமல் மாறாக காணப்படும் பல்வேறு வழிவகைகளில் ஒன்றாக] செப்டம்பர் மாத நம்முடைய வெளியீட்டில் நாங்கள் குறிப்பிட்டுள்ளதான "வேத ஆராய்ச்சிக்கான டாண் குழுக்கள்" (Dawn Circles for Bible Study) திட்டத்தினைப் பரிந்துரைத்திருந்தோம்.

இதற்காக ஒவ்வொரு வாரமும், ஒரு கூட்டம் கர்த்தருடைய நாளிலோ அல்லது வாரத்தினுடைய வேறேதாகிலும் நாளினுடைய மாலைப்பொழுதிலோ நடத்தப்படுவதாக என்று நாங்கள் அறிவுரையாகக் கூறுகின்றோம். யுகங்களுக்கடுத்த திட்டம்தான் - தெய்வீகத் திட்டம் என்றும், இந்த அறுவடை காலத்திற்கான ஏற்றகால சத்தியமாய் இருக்கின்றது என்றும், அதன் காலங்களும், வேளைகளும் தெய்வீக, நியமனத்தின்படியானது என்றும் நாம் உண்மையாய் நம்புவோமானால், நம்மிடத்திலிருக்கும் நம்பிக்கைக்கான விளக்கத்தினைக் கொடுக்க முடிகிறவர்களாய் நாம் இருக்கத்தக்கதாக, அதை/யுகங்களுக்கடுத்த திட்டத்தினை முழுமையாய்க் கற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தினை நாம் புரிந்திருப்போம். அதுதான் இந்தப் "பொல்லாத நாட்களின்" - கொடிய காலங்களின் போராட்டங்களுக்காக ஆயுதம் தரித்துக்கொள்வதற்கு, அனைவருக்கும் அவசியமானதாய் இருக்கின்றது மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி இந்த ஒரு நோக்கத்திற்காகவே அது நமக்குத் தேவனால் கொடுக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான கூட்டங்களில், பெலவீனர்கள் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தினைத் தரித்துக்கொள்ள உதவிடுவதற்கும் மற்றும் ஒரே பிரம்மாண்டமான, சீராய் இணக்கமுள்ளதான தெய்வீகத் திட்டத்தில், எப்படி முன்வைக்கப்படும் ஒவ்வொரு வேதவாக்கியமும், அத்திட்டத்தில் அதனதன் இடத்தில் பொருந்துகின்றது என்று காண்பித்துக்கொடுப்பதற்கும், பலவான்கள் பெரியளவில் ஊழியம் புரிந்திடலாம். இக்கூட்டமும் மற்றும் அனைத்துக் கூட்டங்களும் எப்போதும் துதி ஆராதனையோடு துவங்கி முடிக்கப்பட வேண்டும்.

ஜெபமும், துதித்தலும், சாட்சியும் உள்ளடக்கின இடைவாரக் கூடுகையினையும் (உபதேச ரீதியில் இல்லாமல், பக்தி மற்றும் உரையாடல் ரீதியிலான கூடுகையினையும்) நாங்கள் பரிந்துரைக்கின்றோம்; இக்கூட்டங்களினுடைய விசேஷித்த நோக்கம் பக்தியின் ஆவியினையும் மற்றும் கிறிஸ்தவ நட்புறவை/அந்நியோனியத்தை, அன்பை மற்றும் ஐக்கியத்தை வளர்த்தி உருவாக்கிடுவதற்காகும். இப்படியாக நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி மற்றும் ஒருவருக்கொருவர் நற்கிரியைகளுக்கு ஏவிடுவோம். இந்தக் கூட்டங்கள் இரண்டினுடைய நல்அம்சம் என்னவெனில், இவை சுதந்தரமாய்ப் பங்கெடுப்பதற்கும் மற்றும் ஒருவரையொருவர் பக்திவிருத்தி அடையப்பண்ணுவதற்குமென யாவருக்கும் வாய்ப்புகள் அளிக்கும் காரியமேயாகும்.

## அலிகெனி சபையில் காணப்படும் ஒழுங்குமுறை

அலிகெனியில், இங்குள்ள சபையில் காணப்படும் ஒழுங்குமுறையினை அறிந்துகொள்வதற்கு அநேகர் விரும்புவார்கள் மற்றும் அது அநேகருக்குப் பிரயோஜனமாய் இருக்கும். அங்கத்தினர்களின் பட்டியலை நாங்கள் வைத்திருப்பதில்லை; ஏனெனில் அந்தப் புஸ்தகத்தின் காரியத்தினைக் கர்த்தரிடமே முழுமையாய் விட்டுவிட்டோம்; தம்முடையவர்கள் யாவரையும் அவர் அறிவார்; மற்றும் அவர்களிடத்தில் வெளிப்படும் அவரது ஆவியின் மூலம்

நாம் அவர்களை அடையாளம் கண்டுகொள்கின்றோம். பிரசங்கமும், ஜெபமும், துதித்தலும் 1.30 முதல் 2.30 pm-வரை ஜெர்மானிய மொழியில் நடைபெறும் மற்றும் ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் 3pm-கு ஆங்கில மொழியில் நடைபெறும் மற்றும் மாலையில் 7.30 மணிக்கு ஒரு பொதுவான வேத ஆராய்ச்சி நடைபெறும் மற்றும் இது தொடங்குவதற்கு முன்னதாக அரைமணி நேரம் துதி ஆராதனை நடைபெறும்.

நாங்கள் மிகவும் தொலைத்தூரமாகச் சிதறிக்காணப்படுவதினால், பொதுவான இடைவாரக் கூட்டங்களுக்காகப் புதன்கிழமை மாலையில், இரண்டு பட்டணங்களினுடைய பல்வேறு பகுதிகளில் 7-வீட்டுக் கூட்டங்களைப் பெற்றிருக்கின்றோம் மற்றும் வெள்ளிக்கிழமை மாலைப்பொழுதன்று அநேகம் "டாண் குழுக்கள்" துவங்கப்பட்டு வருகின்றது. இந்தக் கூட்டங்களைப் பொறுப்பேற்று நடத்திடுவதற்கு அநேகம் திறமிக்கச் சகோதரர்கள் சபையாருடைய வாக்கின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்; மற்றும் ஒவ்வொரு காலாண்டுதோறும், இவர்கள் மாற்றிக்கொள்ளப்படுகின்றனர் (exchange); இதனால் ஒவ்வொரு கூட்டத்திற்கும் பலவகையினைக் கொடுக்க முடிகின்றது மற்றும் இவ்விடத்திலுள்ள முழுச்சபையினுடைய ஆவிக்குரிய நிலைமையினை வழிநடத்துபவர்கள் நன்கு தெரிந்துகொள்ள முடிகின்றது. சில சமயங்களில் அருகாமையிலுள்ள பட்டணங்களிலுள்ள, மற்றச் சிறு சபையார்களுக்கு உதவிக்கரம் அளிக்கும்படிக்குச் சிலர் செல்வதுமுண்டு. சபையில் முடிந்தமட்டும் அதிகமான தாலந்தினை வெளிக்கொணர்வதும், வளர்த்திடுவதும், எங்களுடைய பிரயாசமாகக் காணப்படுகின்றது; சிலசமயங்களில் காலாண்டினுடைய முடிவில் (ஊழியத்தின் விஷயத்தில்) ஒன்று அல்லது இரண்டு பேரின் பெயர்களைப் பட்டியலிலிருந்து விலக்கிக்கொண்டு, புதியவர்கள் கொண்டுவரப்படுகின்றார்கள் மற்றும் பின்னர் அந்த நபர்களின் பெயர்கள் மறுபடியுமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, ஊழியத்திற்கென வாக்கெடுப்புப் பண்ணி (vote) கொண்டுவரப்படுகின்றன.

இந்த வழிநடத்துபவர்களோடுகூட, வீடு சந்திப்பதிலும், மேய்ப்பரின் கீழாக உதவிபுரியும் ஊழியத்திலும் சகோதரரோடு ஒத்துழைக்கின்ற அநேகம் (பத்து) சகோதரிகளையும் சபையார் நியமித்துள்ளனர். இந்தச் சகோதரிகள் விசேஷமாக ஊழியத்திற்குரிய தகுதி, நேரம் முதலானவைகளைப் பெற்றிருப்பதின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். மாலை நேர கூட்டங்களை வழிநடத்தும் சகோதரர்கள், சகோதரரைப் பிரதானமாய்ப் பார்த்துக்கொள்கையில், இச்சகோதரிகளுடைய வேலை பிரதானமாய்ச் சகோதரிகள் மத்தியிலேயே காணப்படுகின்றது.

இவ்வேற்பாடானது, ஒருவரையொருவர் கவனித்துக்கொள்வதற்கான அனைவருக்குமுரிய கடமை மற்றும் சிலாக்கியத்தினைக் குறுக்கிடுகிறதில்லை; மாறாக அது அனைவர் மீதுமான ஓர் ஒழுங்கான பராமரிப்பிற்கு உறுதியாய் வழிவகுக்கின்றதாய் இருக்கின்றது; இவ்வேற்பாடு இல்லையெனில், இக்கடமையானது கொஞ்சம் கவனிக்கத் தவறப்படும், ஏனெனில் அனைவருக்குமே நேரம் முதலானவைகளில் சாதகமான நிலைமை இல்லாமல் இருப்பதாகும் மற்றும் நம்முடைய நேரமானது பல்வேறு வழிகளில் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதினால், இம்மாதிரியான உதவிகள் இல்லாமல் இந்த மேய்ப்பரது கடமைகளைச் சரியாய் நிறைவேற்றிடுவது கூடாத காரியமாய் இருக்கும்.

ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் இந்தப் பிரதிநிதியாகிய சகோதரர்களோடும், சகோதரிகளோடும் நாம் கூடி, இங்குள்ள சபையின் ஆவிக்குரிய நிலைமைகள் மற்றும் தேவைகள் குறித்துத் தகவல் கேட்டுக்கொள்வோம். இந்த உடன்வேலையாட்களிடத்தில் எவ்விதமான சண்டையோ அல்லது பூசல்களோ அல்லது வீண்புகழ்ச்சியோ எப்போதும் வெளிப்பட்டதில்லை என்பதைக் கூறிடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வேலையானது அன்பின், சாந்தத்தின் ஆவியிலும், நன்மை செய்திடுவதற்கான விருப்பத்திலும் மேற்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படுகின்றது மற்றும் இவ்விடத்திலுள்ள அருமையான மந்தை பக்திவிருத்தியடைவதற்கு மிகவும் ஆசீர்வாதமாயும் இருக்கின்றது.

## சபையாருக்கும், மூப்பர்களுக்குமான உறவு

சபையில் மூப்பர்கள் ஸ்தானத்தில் காணப்படுபவர்களுக்குக் கர்த்தர்: "நீங்களோ ரபீ [மாபெரும் மனுஷர், குருக்கள்] என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள் (மத்தேயு 23:8) என்று கூறுகின்றார்; தம்முடைய ஜனங்களடங்கிய சபையாரிடத்திலும் அவர்: "பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப்

பிதாவாயிருக்கிறார். நீங்கள் (உங்களில் யாரையாகிலும்) குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள் (இவ்வகையான பட்டங்களைக் கொடுக்காதீர்கள், பெற்றுக்கொள்ளவும் செய்யாதிருங்கள்); கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்" என்று கூறுகின்றார் (மத்தேயு 23:9, 10).

கிறிஸ்துவின் சரீரத்தில் வேறுபடுத்திக் காண்பிப்பதற்கான எந்த அடையாளங்களோ அல்லது சின்னங்களோ அல்லது எவ்வகையான முகஸ்துதி மரியாதையோ பொறுத்துக்கொள்ளப்பட மாட்டாது. முகஸ்துதியினை எந்தச் சகோதரனும், அவர் எவ்வளவுதான் திறமிக்கவராக அல்லது பயனுள்ளவராக இருப்பினும் விரும்பிடக்கூடாது அல்லது மறுப்பும், கடிந்துகொள்ளுதலும் பண்ணாமல் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படக்கூடாது; மற்றும் அதை அளிப்பது தொடர்புடைய விஷயத்திலும் எவரும் கர்த்தருடைய எச்சரிப்பை மறந்துவிடக் கூடாது. நீங்கள் எல்லாரும் சகோதரராய் இருக்கிறீர்கள் - பாடுள்ள சகோதரர்களாகவும், அனைவரும் பலவீனத்திற்கு ஆளானவர்களாகவும் இருக்கின்றனர்; ஆகையால் "ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாக (பெருமை அல்லது இறுமாப்பு அல்லது வேறு ஏதேனும் தீமைக்கு ஏதுவான) தடுக்கலையும், இடறலையும் போடலாகதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள்" என்ற வார்த்தைகளுக்கு ஒவ்வொருவரும் செவிக்கொடுப்போமாக (உரோமர் 14:13). ஆவிக்குரிய காரியங்களில் தங்களுக்கு ஊழியம் புரிகின்றதான மூப்பராயிருக்கின்ற சகோதரர் சோதனைக்குள்ளாக மாட்டார்கள் அல்லது இடறுவதற்கான வாய்ப்பற்றவர்கள் என்று மந்தையின் சார்பில் காணப்படுகின்றதான ஆதாரமற்ற ஊகங்களின் காரணமாய் எழும்பும் அளவுக்கு மீறின பாராட்டு, தொழுதுகொள்ளும் விதமான மரியாதையாகிய - முகஸ்துதியினால்/இச்சக வார்த்தைகளினால் மேற்கொள்ளப்படுகிறவர்களில் அநேகர், சபையிலுள்ள முதன்மையானவர்களாகவே காணப்படுகின்றனர். கர்த்தருடைய கட்டளையைக் கவனிக்கத் தவறின இக்காரியமே, வழிநடத்தும் சகோதரருக்கான ஸ்தானத்தினை அடிக்கடி, விசேஷித்த ஆபத்தான ஒன்றாக்குகின்றது. மாபெரும் சீர்த்திருத்தத்தின் தலைவர்களுக்கு இச்சக வார்த்தைகள் பேசப்பட்டதே, அந்த நல்ல வேலை தொடர்வதைத் தடைப்பண்ணினது மற்றும் அவர்களிலுள்ள அறிவாளிகளில் அநேகரைத் தங்கள் உறுதியினின்று விழுந்துபோகப்பண்ணிற்று (தானியேல் 11:34, 35). ஆனால் இப்படியாக நம்மத்தியில் காணப்படாமல் இருப்பதாக; மற்றவர்களைச் சோதனையிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் மற்றும் நீதியின், சத்தியத்தின் ஒவ்வொரு கொள்கையிலும், உலகத்தின் ஆவியினுடைய மயக்கும் வண்ணமான தாக்கங்கள் யாவற்றிற்கும் எதிரான விழிப்பிலும், தெளிந்த மனதிலும் மற்றவர்களைக் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் பக்திவிருத்தியடையப்பண்ணுவதற்கும் நாம் ஒவ்வொருவரும் நாடிடுவோமாக.

உண்மையான ஊழியம் குறித்த உளங்கனிந்த நன்றியுடன்கூடிய பாராட்டுதல், ஆரோக்கியமான உள்ளன்போடுகூடிய சகோதர அன்பு, பரிவிரக்கம் ஆகியவற்றிற்கும் மற்றும் உலகத்தின் ஆவியினுடைய சுவைக்கொண்டதும், பொய்யாயிருப்பதினால் எப்போதும் நிலையில்லாததுமான பாதகமான உணர்ச்சிவயப்படும் தன்மைக்கும் இடையில் பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது. இச்சகப்பேச்சின் மற்றும் தொழுதுகொள்ளும் விதமான மரியாதையின் சுவையினைப் பெற்றிருக்கின்றதான அனைத்தையும், முதிர்ச்சியடைந்துள்ள புருஷனாய்க் காணப்படும் கிறிஸ்தவன் எப்போதும் ஆதரிப்பதில்லை/ஊக்குவிப்பதில்லை மற்றும் இச்சக வார்த்தைகளும், தொழுதுகொள்ளும்வண்ணமாக மரியாதையும் வழங்கப்படுகையில், அவன்: "நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார், நானும் ஓர் ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள்" என்று வார்த்தையில் சொல்லாவிட்டாலும், இப்படியாக நடந்துகொள்வான் (வெளிப்படுத்தல் 22:9); ஆனால் குறைவாய் முதிர்ச்சியடைந்திருப்பவர்கள் தங்களுக்கும் பாதகமாய் அமையும் வகையில் இச்சக வார்த்தைகளை வேண்டி அணுகி, பெற்றுக்கொள்வார்கள். இதன் காரணமாகவே வழிநடத்தும் ஸ்தானத்திற்கு "நூதன சீஷனுக்குப் பதிலாக," உறுதியான குணலட்சணமுடைய மூத்த சகோதரரைத் தேர்ந்தெடுப்பதற்கு அப்போஸ்தலன் அறிவுறுத்துகின்றார். சபை சில அப்போஸ்தலர்களை, மூப்பர்களை, மேய்ப்பர்களை, போதகர்களை, சுவிசேஷகர்களை இன்னும் சிலரைப் பெற்றிருக்கும்படிக்குக் கர்த்தர் ஏற்பாடுபண்ணியிருந்தபோதிலும், இந்தப் பெயர்களில் எதையேனும் கனத்திற்குரிய பட்டங்களாக நாம் பயன்படுத்துவதற்கு அவர் விரும்புகிறதில்லை; ஆகையால் சபையில் இந்த ஊழிய ஸ்தானங்களை நாம் அங்கீகரித்தாலும், இந்தச் சகோதரர்களை நாம் வெறுமனே சகோதரர்களென - கர்த்தருக்குள்ளான அருமை சகோதரர்களெனத்தான் எப்போதும் அழைத்திட வேண்டும் மற்றும் இவர்களைக் குறித்துக் குறிப்பிட வேண்டும்.

உலகப்பிரகாரமான வீண் புகழ்ச்சிக்கு எதிராய்ச் சபையானவள் ஒருபக்கத்தில் இப்படியாகப் பாதுகாக்கப்பட்டாலும், இன்னொரு பக்கத்தில், பொறாமையுள்ள பரிசேய ஆவியில், "நீ தேவனை மகிமைப்படுத்து, இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம்" என்று கூறுகின்றதான உணர்ச்சியற்ற, புரிந்துகொள்ளாத, குற்றம் கண்டுபிடிக்கிற மனப்பான்மைக்கும் எதிராக அவள் பாதுகாக்கப்படுகின்றாள். "அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார் (1 தெசலோனிக்கேயர் 5:12, 13).

மீண்டுமாக அவர், "தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் (அதாவது கர்த்தருடைய வழிமுறைகளின்படி நீங்கள் சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளீர்களெனில், அல்லது கர்த்தர் சுட்டிக்காண்பித்துள்ளதான வழியில் அவர் உங்களுக்காக தேர்ந்தெடுத்திடும்படி அவரை அனுமதித்துள்ளீர்களானால்) பின்பற்றுங்கள்" (எபிரெயர் 13:7).

## கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒருமைப்பாடு

ஆகையால் தேவனுடைய சுதந்தரத்தை, இறுமாப்பாய் ஆளுவதற்கு எதிராக மூப்பர்கள் எச்சரிக்கைப்பண்ணப்பட்டிருக்கிற அதே வேளையில், மூப்பர்களை எதிர்ப்பதற்கு அல்லது அவர்களது போதனைகளைத் தேவவசனத்தைக்கொண்டு நிரூபித்ததை அறியாமல், கண்மூடித்தனமாயும், தொழுதுகொள்ளும் விதமாயும் அவர்களைப் பின்பற்றிடுவதற்கு எதிராக மந்தையும் எச்சரிக்கப்படுகின்றனர்; அனைவரும் தாழ்மையிலும், சாந்தத்திலும் ஒரே சரீரமென, சரீரத்தை அன்பிலும், சகல கிறிஸ்தவ கிருபைகளிலும் கட்டியெழுப்பிடுவதற்கும் மற்றும் கர்த்தருடைய வேலையின் பொதுவான முன்னேற்றத்திற்கும் என்று ஒன்றாய் இசைந்து ஒத்துழைத்திட வேண்டும் (1 பேதுரு 5:1-11).

சபைக்கான ஒழுங்குமுறை குறித்த அநேகம் அம்சங்களுள்ள இப்பாடத்தினை முடிப்பதற்கு முன்னதாக, முழுச் (ஜீவனுள்ள) சபையானது, எப்படித்தான் உலகெங்கும் சிதறிக் காணப்பட்டாலும், அவர்கள் ஒன்றாய் ஒன்றுபட்டு இருத்தல் வேண்டும் என்ற கர்த்தருடைய நோக்கத்தினைச் சுருக்கமாய்க் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். இப்படியாகத்தான் அப்போஸ்தலர்களின் நாட்களில் காணப்பட்டது மற்றும் இப்பொழுதும் இப்படியாகவே காணப்பட வேண்டும். தொலைத் தொடர்புக்கான வழிவகைகள் அவர்களுக்கு மிகவும் வரையறைக்குட்பட்டதாக இருந்தபோதிலும், வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் உடனடியாக, ஓர் இடத்தில் காணப்படும் சபைகள், மற்ற இடங்களிலுள்ள சபையாருக்குக் கிறிஸ்தவ வாழ்த்துதல்களையும் மற்றும் உபகாரங்களையும் அனுப்பிவைப்பதைக் கவனிப்பதற்கு இன்பமாயுள்ளது (அப்போஸ்தலர் 15:23; 1 கொரிந்தியர் 16:19; 2 கொரிந்தியர் 13:13; பிலிப்பியர் 4:21-23; கொலோசெயர் 4:14-15; 1 பேதுரு 5:13; தீத்து 3:15; 3 யோவான் 14); மேலும் அப்போஸ்தலர்களினால் நிறுவப்பட்டதான அதே ஒழுங்குகளுக்குக் கீழ்ப்படிந்து, "ஒரே கர்த்தரையும், ஒரே விசுவாசத்தையும் மற்றும் ஒரே ஞானஸ்நானத்தையும்" கொண்டிருந்தார்கள். "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கும்" மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தில் பிரிவினையைத் தவிர்த்திடுவதற்குமே அவர்களது ஊக்கமான பிரயாசம் காணப்பட்டது (எபேசியர் 4:3-13; 1 கொரிந்தியர் 12:25).

அப்போஸ்தலர்கள் மற்றும் ஆதிசபையின் மூப்பர்கள் மத்தியில் எத்தகையதொரு அருமையான ஆவியின் ஒருமையும் மற்றும் விசுவாசத்தின் ஒருமையும் மற்றும் எத்தகையதொரு உறுதியான ஒத்துழைப்பும் இருந்ததெனவும் கவனிக்க முடிகின்றது. அவர்கள் அனைவரும் "ஒரே காரியத்தினை, தங்களால் முழுமையாய் நம்பப்பட்டுள்ளதான சத்தியத்தின் "ஆரோக்கியமான உபதேசத்தினை" பிரசங்கித்திடுவதற்கு வைராக்கியத்துடன் பிரயாசம் எடுத்தார்கள். அவர்களில் ஒருவரும் தன்னுடைய சொந்த புதிய ஏதோ சில கூற்றுகளை உண்டுபண்ணி, அதினால் மற்றவரை ஒளியிழக்கச் செய்திட முயற்சிக்கவில்லை. அப்பல்லோ, பவுலினுடைய போதனைகளைக் குறைவாய் மதித்திட முயற்சிக்கவில்லை; ஊகங்கள் மற்றும் வீணான தத்துவ ஞானங்கள் எனும் குறுக்குப் பாதைக்குள்ளாக, மந்தையைத் தங்கள் பராமரிப்பின் கீழ் வழிநடத்திடுவதற்குப் பல்வேறு சிறுசிறு கூட்டத்தார்களின் மூப்பர்கள் முயற்சித்திடவில்லை.

இல்லை, இப்படியாகச் செய்திடவில்லை; அவ்வப்போது சீஷர்களைத் தங்களுக்குப் பின்னாக இழுத்துக்கொள்ளத்தக்கதாக, இவைகளைச் செய்திட முயற்சித்த வீண்புகழ்ச்சி எனும் தீய ஆவியுடைய கள்ளப்போதகர்கள் அவர்கள் மத்தியில் எழும்பினார்கள்; ஆனால் உண்மையுள்ளவர்களோ, கர்த்தருக்கு உண்மையுள்ளவராக இருந்ததுபோல, ஒருவருக்கொருவர்கூட உண்மையுள்ளவர்களாய் இருந்தனர். பவுல் நட்டார், அப்பல்லோ நீர் பாய்ச்சினார் மற்றும் தேவன் விளையப்பண்ணினார்.

இந்த ஆவியானது, இன்றும் அதிக அளவில் நிலவிவருகின்றது என்பதைத் தெரிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம் மற்றும் இது நாம் அனைவரும் விசுவாசத்தில் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியினை - கர்த்தருடைய வேலையாகிய மாபெரும் அறுவடை வேலைக்கான அன்பிலும், வைராக்கியத்திலும் ஒன்றாய் இணைக்கப்பட்டிருந்து, அவரது கட்டளையின் கீழ், அவரது சித்தத்தினைச் செய்வதில் இசைந்து ஒன்றாய் ஒத்துழைக்கும், ஒரே தலையாகிய கிறிஸ்து இயேசுவின் கீழான ஒரே சரீரமென ஆகிடுவது வரைக்கும் - அதிகமதிகமாய் நிலவிடும் என்று நாம் விசுவாசிக்கின்றோம்.

## பரலோகத்திற்குரிய சபை அமைப்பும், பூமிக்குரிய சபை அமைப்பும்

இதுவரையிலும் நாம் "பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருப்பவர்களாகிய" சபையினுடைய அமைப்பின் அருமையையும், எளிமையையும் மற்றும் முழுமையையும் பார்த்திருக்கின்றோம். அதன் ஒரே அதிகாரியும், தலையுமானவராகிய கர்த்தர் இயேசு தவறிழைக்காதவராவார்; தேவன் இவரது கரத்தில் அதிகாரத்தினை வைத்துள்ளார் மற்றும் சபை அங்கத்தினர்கள் அனைவரும் தங்கள் வார்த்தைகளிலும், நடத்தையிலும் மாத்திரமல்லாமல், தங்கள் சிந்தனைகளிலும்கூட, அவருக்கு அன்பாய், நேர்மையாய் மற்றும் உடனடியாய்க் கீழ்ப்படிய எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். அவரே அங்கத்தினராகுவதற்கு அனுமதிக்கின்றார் மற்றும் தேவைப்படும்போது, நேர்மையற்றவர்களை நீக்கிப்போட்டு, அவர்களது பெயர்களைக் "கிறுக்கிப்போடுகின்றார்."

அதன்/சபை அங்கத்தினர்கள் - ஆண்டவருடைய அன்பின் ஆவியிலுள்ள தங்களது வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக, அதன் தலையோடு உறுதியாய் ஒன்றுபட்டிருப்பார்கள் மற்றும் இப்படியாக ஒருவரோடு ஒருவர் ஒன்றுபட்டிருப்பவர்கள் - கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்றும், நமக்காக வேண்டிக்கொள்ளும்படியாக சதாகாலங்களும் உயிரோடிருக்கின்றார் என்றும் "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ள விசுவாசத்தோடுகூட," இந்த அன்பின் ஆவியினையும், அர்ப்பணிப்பினையும் கொண்டிருப்பவர்கள் யாவரையும் "சகோதரரென" அடையாளம் கண்டுகொள்வதற்கு ஒன்றுபட்டிருப்பவர்கள் எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். இவர்கள் ஒன்றுகூடிடவும் மற்றும் ஒருவரையொருவர் பக்திவிருத்தியடையப்பண்ணவும் மற்றும் ஒழுங்காயும், முறையாயும் தங்களது கூட்டங்களை நடத்திடவும் மற்றும் கர்த்தருடைய வார்த்தைகளும், ஏற்பாடுகளும் சுட்டிக்காட்டுகின்ற தகுதியான மூப்பர்களுக்காக தங்கள் மத்தியில் நாடி, (வாக்கு மூலமாய்) அவர்களுக்குத் தங்களது வெளியரங்கமான அங்கீகரிப்பையும், ஊழியத்தில் தங்களது ஒத்துழைப்பையும் கொடுத்திடவும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இச்சபையானது ஒழுங்குப்படுத்தப்படுவதற்கு அவசியமில்லை; ஏனெனில் அது பெந்தெகொஸ்தேயின்போதே ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் ஒருவேளை ஒரு புதிய கூடுகைத் துவங்கப்படுகிறபோது, இத்தகையவர்கள் ஒழுங்கையும், அதன் தலையையும், அவரது பிரமாணங்களையும் அடையாளம் கண்டு, அவற்றிற்குக் கீழ்ப்படிய மாத்திரமே செய்திட வேண்டும்.

ஆனால் இதற்கும் மற்றும் பல்வேறு மனித பாரம்பரியங்களின்படியாக ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ள பூமிக்குரிய சபைக்கும் எத்தனை பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது; இந்தப் பூமிக்குரிய சபையில் "சாதாரணமான வகுப்பார்" மீது இறுமாப்பாய் ஆளும் தங்களைத் தாங்களாகவே ஏற்படுத்திக்கொண்ட "குருமார் வகுப்பார்" சாதாரணமான வகுப்பாரிடமிருந்து எடுத்துக் கொள்கின்ற - இழிவான ஆதாயங்கள், கனங்கள், மரியாதைகள், பட்டங்கள் முதலான கொள்கைகளைத் (spoils) தங்களுக்குள்ளாக பங்கிட்டுக்கொள்கின்றனர் மற்றும் தவறிழைக்காதவர் என்று உரிமைப் பாராட்டிக்கொள்ளுகின்ற போப் முதற்கொண்டு "கீழ்நிலை ஊழியர்கள்" வரையிலும் - இவர்களில் அபூர்வமானவர்கள் மாத்திரமே உண்மையுள்ள ஊழியக்காரர்களாக (தேவனுடைய மந்தைக்கான வேலையாட்களாகக் காணப்படுகின்றனர்; பெரும்பான்மையானவர்கள் தங்களது மந்தை அனுமதிக்கும் அளவுக்கு, தேவனுடைய

சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகின்றவர்களாய் இருக்கின்றனர். எரேமியா 23:1-4; எசேக்கியேல் 34:1-16-வரையிலான வேதவாக்கியங்களைக் கவனமாய் வாசியுங்கள்).

பரலோகத்திற்குரிய சபையிலுள்ள அன்பின் கட்டிற்குப் பதிலாக, பூமிக்குரிய சபை அமைப்பில், சபை பிரிவுணர்ச்சியின் பெருமை எனும் சுயநலமான கட்டும், பூமிக்குரிய சபைக்கு வெளியே மரிப்பது என்பது நித்திய கேடாய் இருக்கும் என்ற அச்சமும் காணப்படுகின்றது. பரலோகத்திற்குரிய சபையின் எளிமையான மற்றும் ஆற்றல் மிக்க விசுவாசத்தினுடைய அறிக்கைக்குப் பதிலாக, இவர்கள் பிரிவினையை உண்டுபண்ணும் விரிவான அறிக்கைகளையும், பரீட்சைகளையும் கொண்டு வந்துவிட்டனர். பூமிக்குரிய சபைகளின் பலமானது, அவர்களது மாம்சத்திலும் மற்றும் கர்த்தருடைய வசனம் குறித்தும், தங்களது தனிப்பட்ட சுயாதீனங்கள் குறித்துமான அறியாமையிலுள்ள அவர்களது சாதாரணமான வகுப்பாரின் அறியாமையிலுந்தான் காணப்படுகின்றது. அவர்களது அங்கத்தினர்கள் தங்களைச் சபை பிரிவு பெயர்களுடனும், அதன் கடமை பொறுப்புகளுடனும், அதன் விசுவாச அறிக்கைகளுடனும் இணைந்துகொண்டபோதே, தங்களது தனிப்பட்ட விசுவாசம், பகுத்துணர்தல் மற்றும் சுயாதீனத்தைச் சபையாருக்குக் கையளித்துவிடுகின்றனர்; மற்றும் சபையாருடைய விசுவாசமும், பகுத்துணர்தல்களும் மற்றும் சுயாதீனங்களும் மூப்பராகிய சங்கத்தாரிடம் மற்றும் மேலவைக் குழுக்களிடம் அல்லது பூமிக்குரிய போப்பிடம் கையளிக்கப்படுகின்றது. பரலோகத்திற்குரிய சபை organization/அமைப்பில், எவர் வேண்டுமானாலும் கர்த்தருடைய வசனத்தினைச் சுட்டிக்காண்பித்திடலாம் மற்றும் அறிவுரை கூறிடலாம்; எனினும் இதைக்காட்டிலும் அதிகமாய்ச் செய்கையில், பிரமாணங்களை மீறி, இச்சபையின் மாபெரிய மற்றும் தவறிழைக்காத தலையானவரால் நீக்கப்படும் அபாயத்திற்குள்ளாகியே, எவராலும் செய்திட முடியும்.

பரலோகத்திற்குரிய சபையின் ஒவ்வொரு அங்கத்தினனுக்கும், அவர்களுக்குள் ஒருவர் இன்னொருவரிடத்தில் பெற்றிருக்கும் தனிப்பட்டச் சுயாதீனமும், கர்த்தருக்கு ஒவ்வொருவரும் முழுமையாய் அடிமைப்பட்டிருக்கும் காரியமும் மாத்திரம்தான், மனித சபை அமைப்புகளினின்று முற்றிலும் வேறுபடுகின்றதான கர்த்தருடைய அமைப்பின்/organization அம்சங்களாய் இருக்கின்றன.

---

# கர்த்தருடைய பாத்திரம் மற்றும் கர்த்தருடைய போஜனபந்தி

***"நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே . நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா?" 1 கொரிந்தியர் 10:21, 22***

எச்சரிப்பான இந்த வார்த்தைகளானது, "கொரிந்து பட்டணத்திலுள்ள தேவனுடைய சபைக்கு" மாத்திரமாகப் பேசப்படாமல், "கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும்" என்று பேசப்பட்டுள்ளது. (1 கொரிந்தியர் 1:2) யுகம் முடிவுவரையிலுமான சுவிசேஷ சபையினுடைய, தகுதியாகிக்கொண்டிருக்கிற அங்கத்தினர்கள் அனைவருக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

தேவனுக்கு இருதயத்தில் உண்மையாயும், நேர்மையாயும் காணப்படுகின்றவர்கள், இத்தகையதொரு எச்சரிப்பைக் குறித்து விநோதமாய் எண்ணி, பவுலை நோக்கி: "பவுலே, பவுலே, பேய்களினுடைய உடைமைகளைத் தொடுவதற்கோ (அ) ருசித்துப்பார்ப்பதற்கோ (அ) கையாளுவதற்கோ நாங்கள் எவ்விதமான விருப்பமும் கொண்டிராமலிருக்க, ஏன் இப்படியானதொரு ஆலோசனையை எங்களுக்கு வழங்குகின்றீர்?" என்று கூறியிருக்கலாம். பவுல் கொடுத்துள்ளதான ஆலோசனையானது, கர்த்தருக்கான நமது நேர்மையின் விஷயத்தில் கொஞ்சம் அவருக்கு நம்பிக்கையின்மை ஏற்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆனால் பவுலோ: "தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" என்று பதிலளிக்கின்றார். எச்சரிப்பானது இங்கு நலம் தருகின்ற ஒன்றாய் இருக்கின்றது; அதென்னவெனில்: நமக்கான சோதனைகளும், பரீட்சைகளும் இன்னும் நிறைவடைந்துவிடவில்லை; கர்த்தருடைய பாத்திரமானது நம்முன் வைக்கப்பட்டிருக்கையில், பிசாசு, ஒளியின் தூதனுடைய வேஷத்தில், மிகவும் சூழ்ச்சிகரமாக/தந்திரமாய் தனது பாத்திரத்தையும், நம்முன் வைக்கின்றான்; மேலும் கர்த்தர் தம்முடைய போஜனபந்தியை நம்முன் வைத்திருக்கையில், பிசாசும் தனது போஜப்பந்தியை நம்முன் வைக்கின்றான்.

கர்த்தருடைய பாத்திரம் எது? அதைக் குறித்துக் கர்த்தர் குறிப்பிட்டுள்ளவைகளை நினைவில் கொண்டுவாருங்கள் — "பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?" மேலும் அதன் கசப்பான அடிமண்டிகள் பானம்பண்ணப்பட வேண்டியிருந்தபோது, அவர் பண்ணின ஜெபத்தைக் கவனியுங்கள் . . . "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது;" "என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது." அது மரணம்வரையிலான பலியின் பாத்திரமாக இருக்கின்றது. அது ஜீவனை மாத்திரம் பலி செலுத்துதலாகக் காணப்படாமல், நற்கீர்த்தியையும், மனுஷீகத்திற்கு அருமையான அனைத்தையும் பலிசெலுத்துதலாகக் காணப்பட்டது. ஜீவனானது, நிந்தனைகள், உபத்திரவங்கள் மற்றும் விசுவாசம், பொறுமைக்கான உச்சக்கட்டமான பரீட்சைகள் மத்தியில் பலிசெலுத்தப்பட்டது. தம்முடைய சீஷர்களுடனான கடைசிஇராப்போஜனத்தின்போது, இயேசு அடையாளமான பாத்திரத்தை எடுத்து, "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்றார். (மத்தேயு 26:27, 28) இதே பாத்திரத்தையே அப்போஸ்தலன், "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." என்று குறிப்பிடும்போது குறிப்பிட்டுள்ளார். (1 கொரிந்தியர் 10:16)

இப்படியாகக் கிறிஸ்துவின் சரீரமானது, தலையானவருடன் அதே பாத்திரத்தில் — பலியின், அவமானத்தின் மற்றும் நிந்தனையின் பாத்திரத்தில் பங்குகொள்வதற்கு அழைக்கப்பட்டுள்ளதை

நாம் காண்கின்றோம். "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்." கர்த்தருடைய பாத்திரத்தில் உண்மையாய் இதுவரையிலும் பங்குகொண்டுள்ளவன் பாக்கியவானாய்க் காணப்பட்டு, "உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது" என்று கூறமுடிகிறவனாய் இருப்பான்.

கர்த்தருடைய பாத்திரம் என்பது என்ன என்று நாம் பார்த்துள்ளோம்; இப்பொழுது பேய்களின் பாத்திரம் என்பது என்ன? இதுவும்கூடப் பலியின் பாத்திரமாகவே காணப்படுகின்றது; இதில் பானம்பண்ணுகிறவர்கள் தற்கால ஜீவியத்தினுடைய தங்களது உண்மையான சந்தோஷங்களையும், எதிர்க்கால ஜீவியம் பற்றியதான தங்களது நம்பிக்கைகளையும் பலி செலுத்திவிடுபவர்களாக/தியாகம் பண்ணுபவர்களாகக் காணப்படுவார்கள். எனினும் இவைகள் சாத்தானுடைய பாத்திரத்தின் அடிமண்டிகளாகவே காணப்படுகின்றது; இவைகள் மேற்புறத்தில் காணப்படுவதில்லை. பாத்திரத்தினுடைய பானத்தின்மேற்புறமானது பூமிக்குரிய நற்பேறுகளுக்கான, பெருமைக்கான, சுயமேன்மை அடைதலுக்கான, மற்றவர்கள் மத்தியிலான கனத்திற்கான நம்பிக்கையூட்டுதல்களினால் பளப்பளவென்று காணப்படுகின்றது மற்றும் இந்த நம்பிக்கைகளை அடையப்பெறுவதற்கென நேரம், தாலந்து மற்றும் செல்வாக்குகள் பலியாக்கப்படுகின்றன; இது கசப்பான மற்றும் ஏமாற்றமான முடிவில் முடிவடைகின்றது.

இது உண்மையில் மயக்க வைக்கும் பாத்திரமாக, ஏமாற்றுகிறதும், வஞ்சிக்கிறதுமான பாத்திரமாக, இறுதியில் நித்திய மரணத்திற்கு வழிநடத்தும் அளவுக்குப் பயங்கரமான ஆற்றலுடையதான பாத்திரமாகக் காணப்படுகின்றது. "(விசுவாசமற்ற உலகத்தார்) அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்கள் என்று சொல்லுகிறேன்; நீங்கள் (விசுவாசிகள், கிறிஸ்தவர்கள்) பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை . . . நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாய் இருக்கக்கூடாதே" என்று அப்போஸ்தலன் நன்றாய்க் கூறியிருக்கின்றார். (1 கொரிந்தியர் 10:20, 21) வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் நாம் உலகத்தின் ஆவியிலும், சுயநலத்தின், பேராசையின், பெருமையின் ஆவியிலும் பங்குகொண்டு, இந்த இழிவான இலட்சியங்களுக்காக நம்முடைய ஜீவியங்களைப் பலிசெலுத்துபவர்களாகவும், அதேவேளையில் சுயநலமற்றதும், தாழ்மையானதும், சுயத்தை வெறுக்கிறதுமான கிறிஸ்துவின் ஆவியிலும் பங்குகொண்டவர்களாகவும், நம்மை தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே வாங்கினவருக்கு ஊழியம் புரிவதில் பூமிக்குரிய இலட்சியங்களைப் பலியாக்குவதில்/தியாகம் செய்வதில் விருப்பமுள்ளவர்களாகவும் இருத்தல் முடியாது. நாம் இரண்டு ஆவியிலும் பங்குகொண்டவர்களாய் இருத்தல் முடியாது; ஏனெனில் இந்த இரண்டு ஆவியும், ஒன்றுக்கொன்று முரண்பட்டதாய்க் காணப்படுகின்றது. "தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது." "நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்." "இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாய் இருக்கிறான்;" "அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாம் என்று நினையாதிருப்பானாக." (யாக்கோபு 1:8; 1:7)

இந்த எச்சரிப்பானது, உலகத்திற்கு வழங்கப்படாமல், கர்த்தருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவதாக, ஏற்கெனவே வாக்குறுதி அளித்துள்ளவர்களுக்காக வழங்கப்பட்டுள்ளபடியால், இப்படிப்பட்டவர்கள் இப்பொழுது பேய்களுடைய பாத்திரத்தில் பங்கெடுத்தல் என்பது, இவர்கள் கர்த்தருடைய பாத்திரத்தினின்று விலகிப்போவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். மேலும் கர்த்தருடைய பாத்திரத்திலிருந்து கொஞ்சமும் மற்றும் பேய்களுடைய பாத்திரத்திலிருந்து கொஞ்சமும் என்று, அதாவது இரண்டிலும் கொஞ்சம் பானம்பண்ணலாம் என்று தன் மனதில் முடிவுபண்ணுமளவுக்கு மதியீனமாய் ஒருவன் காணப்படுவானானால் . . . அதாவது கர்த்தருடைய ஆவியிலும், உலகம் மற்றும் பேய்களின் ஆவிகளிலும், இன்னுமாக கர்த்தருடைய உபதேசங்களிலும், பேய்களினுடைய உபதேசங்களிலும் பங்குகொண்டிருப்பதற்கு ஒருவன் மதியீனமாய்த் தன் மனதில் முடிவுபண்ணினவனாய் இருப்பானானால், அவன் தன் உடன்படிக்கையை மனப்பூர்வமாய் அசட்டைப்பண்ணுகிறவனாயும், கிருபையின் ஆவியை அசட்டைப் பண்ணுகிறவனாயும் இருப்பான்.

"கர்த்தருடைய போஜனபந்தி" என்பது என்னவென்று இப்பொழுது நாம் பார்க்கலாம். அது திரளான அளவிலான தெய்வீகச் சத்தியங்கள் திரளாய்ப் பரப்பப்பட்டுள்ள பந்தியாகும் — ஜீவ அப்பம், ஏற்றக்கால சத்தியங்கள், தேன்கூட்டில் தேன், உச்சிதமான பால் மற்றும் திராட்சரசம் மற்றும் பளிங்கைப்போல் தெளிவான ஜீவத் தண்ணீர் வைக்கப்பட்டுள்ள பந்தியாகும். (யோவான் 6:32-35; மத்தேயு 24:45; சங்கீதம் 19:10; ஏசாயா 55:1; வெளிப்படுத்தல் 21:6; 22:1). நீதியின்மேல் பசிதாகமுள்ள அனைவருக்காகவும் அது பரப்பிவைக்கப்பட்டுள்ளது மற்றும் அதினிடத்திற்கு வருபவர்கள் பாக்கியவான்களாய் இருப்பார்கள்; ஏனெனில் அவர்கள் திருப்தி அடைவார்கள்; அவர்கள் திரளாய்ப் போஷிக்கப்பட்டு, மிகுதியாய்த் திருப்திப்படுத்தப்பட்டிருப்பார்கள் மற்றும்

அவர்களது ஆத்துமாக்கள் கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். (ஏசாயா 55:1, 2; மத்தேயு 5:6; சங்கீதம் 22:26)

கர்த்தருடைய இந்தப் போஜனபந்தியானது, அவரது பரிசுத்தவான்களுக்காக, அவரது சபைக்காக, சுவிசேஷ யுகத்தினுடைய ஆரம்பம் முதற்கொண்டு பரப்பிவைக்கப்பட்டுள்ளது; அந்தப் போஜனபந்தியில் எப்போதும், ஏற்றக்கால சத்தியங்கள் காணப்பட்டது; மற்றும் கர்த்தருடைய ஜனங்களில் சிலர், பரிமாறி வழங்குவதற்கென நியமிக்கப்பட்டிருந்தனர். உதாரணத்திற்கு யுகத்தினுடைய ஆரம்பத்தில் அப்போஸ்தலர்கள் பரிமாறி வழங்கினார்கள்; இவர்கள் கர்த்தருடைய ஜனங்களுக்கு முன்பாக ஏற்றக்கால சத்தியங்களை வைத்தது மாத்திரமல்லாமல், எதிர்க்காலத்திற்கெனச் சபைக்கு உணவைச் சேமித்தும் வைத்தார்கள். (2 பேதுரு 1:15, 19) இவர்களது ஊழியமானது முழுச் சபைக்கும், இன்றைய நாள்வரையிலும் விலையேறப்பெற்றதாய் இருந்துள்ளது. மேலும் யுகம் முழுவதிலும் அர்ப்பணிப்புமிக்க தேவமனிதர்கள், கர்த்தருடைய ஜனங்களை, அவரது போஜனபந்திக்கு அழைத்து, அந்தப் பந்தியிலுள்ள திரளானவைகளை அவர்களுக்கு வழங்கினார்கள்; மற்றும் பசியாய் இருந்தவர்கள் போஷிக்கப்பட்டனர் மற்றும் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

ஆனால் இப்பொழுதோ முடிவு, அதாவது யுகத்தினுடைய அறுவடைப் பகுதி வந்துள்ளது; அதாவது வருடத்தினுடைய செழிப்பான காலப்பகுதி வந்துள்ளது; இக்காலத்திலேயே தீர்க்கதரிசனம் மற்றும் வாக்குத்தத்தம் எனும் மொக்குகள் வளர்ந்து, தங்கள் பொன்னான கனியைக் கொணர்ந்துகொண்டிருக்கின்றன மற்றும் கர்த்தருடைய போஜனபந்தியானது, அதன் திரளானவைகளால் தத்தளிக்கின்றது. இது மாத்திரமல்லாமல் இப்பொழுது பிரசன்னமாகியுள்ள அறுவடையின் கர்த்தர், தமது வாக்குத்தத்தத்தின்படி வந்து, தம்முடைய ஜனங்களுக்குப் பரிமாறிக்கொண்டிருக்கின்றார். (லூக்கா 12:37) முற்காலங்களில் இல்லாத அளவுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மற்றும் நோக்கங்களுடைய ஐசுவரியங்களும், கொழுமையும், முழுமையாய் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முன்பு ஒருபோதும் அறிந்திராத அளவுக்குத் தெய்வ காரியங்கள் முழு நிறைவுடன் சபைக்கு வெளிப்பட்டுள்ளது. இரட்சிப்பின் திட்டமானது, நமது பிரகாசமான நம்பிக்கைகளை/எதிர்ப்பார்ப்புகளை மிஞ்சும் அளவுக்கு, அப்படியானதொரு வசீகரத்திலும், முறைப்படியும் நம்முன் வைக்கப்பட்டுள்ளது; அது எல்லா விதத்திலும் முரண்பாடில்லாமலும், இசைவாயுமுள்ளதான ஒரு திட்டமாகும்; அது – திட்டமிடுகின்றவரும், நடந்தேற்றுகின்றவரும், வெளிப்படுத்துகின்றவருமான மாபெரியவரால், மிக மேன்மையான கொள்கைகளின் அடிப்படையிலும், துல்லியமான கணக்குடனும் மற்றும் ஒழுங்குடனும் யுகங்களினூடே இரகசியமாய்த் தீட்டப்பட்டுள்ளது; அதன் முழுமையிலும், அதன் சீரான அமைப்பிலும், அழகிலும் அது மிகவும் மகிமையானதாய் இருப்பதினால், திருப்தியடைந்த ஆத்துமாவானது, அதனோடு எதையாகிலும் கூடச்சேர்ப்பது என்பது அதன் சிறப்பினைக் கெடுப்பதாகவே இருக்குமென உணர்ந்து, சந்தோஷத்தோடே பின்வருமாறு கூறுவார்கள்: "இது கர்த்தருடைய செய்கையாகும் மற்றும் இதைக் கர்த்தர் வெளிப்படுத்தியுள்ளார் மற்றும் இது நம்முடைய கண்களுக்குப் பிரம்மிப்பாயுள்ளது;" தம்முடைய ஞானத்தையும், அன்பையும், கிருபையையும் குறித்து, "கர்த்தர் கூறியுள்ளவைகளைக்காட்டிலும், இன்னும் அதிகமாய்ச் சொல்லுவதற்குண்டோ?" தேவனுடைய புத்திரர்களும், சுதந்தரர்களுமானவர்களிடத்தில் தம்முடைய கிருபையின் ஐசுவரியங்களையும், தம்முடைய அன்புடன் கூடிய இரக்கத்தின் ஐசுவரியங்களையும் சித்தரிப்பதற்கும் மற்றும் பிரகடனம் பண்ணுவதற்கும் கர்த்தர் மனித பிரதிநிதிகளைப் பயன்படுத்தியிருந்தபோதிலும், இன்னுமாகப் போஜனபந்தியிலுள்ள அனைவரும் அவரோடுகூட, பந்தியிலுள்ளவர்களுக்கு ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வதற்கென உடன்வேலையாட்களாகக் காணப்படுவதற்குக் கர்த்தர் அனுமதித்திருந்தபோதிலும், திட்டத்தின் விஷயத்திலும், அதை நிறைவேற்றும் விஷயத்திலும் தேவனுக்கே அனைத்து மகிமைகளும் சேருகின்றதாய் இருக்கும் மற்றும் திட்டத்தினை வெளிப்படுத்தின விஷயத்திற்காகவும், அதை நமது இருதயங்கள் ஏற்றுக்கொள்வதற்கும், அதை நமது கண்கள் காண்பதற்கும், அதை நமது காதுகள் கேட்பதற்கும் மற்றும் அதை நமது நாவுகள் அறிக்கைப்பண்ணுவதற்குமென அபிஷேகித்த விஷயத்திற்காகவும், நமது கர்த்தரும், தலையுமானவருக்கே ஸ்தோத்திரம் உரித்தாகுகின்றதாயிருக்கும். உன்னதத்திலுள்ள தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் என்றென்றும், சதாகாலங்களுக்கும் மகிமை உண்டாவதாக! முழுப்பூமியும் அவரது மகிமையினால் நிரம்பியிருப்பதாக!

தேவனை அறிந்துகொள்வது என்பது ஜீவனும், சமாதானமுமாய்க் காணப்படுவதினால், தேவனை அறிந்துகொள்வதற்கும் மற்றும் நீதியின் மீதும் பசிதாகம் உள்ளவர்கள் அனைவருக்கும் திருப்திகரமான பங்கினால் திரளாய் நிறைந்து பரப்பப்பட்ட நிலையில் கர்த்தருடைய போஜனபந்தி காணப்படுகையில், தேவனுடைய ஜனங்களை வரவேற்கும் வேறு அநேக போஜனபந்திகளும்கூடப் பரப்பப்பட்டுள்ளன. போப்மார்க்கமானது, அதன் போஜனபந்தியைக் கொண்டுள்ளது மற்றும் அதில் கொஞ்சம் அரைகுறை சத்தியங்களும், பூசைபலி, நித்தியமான சித்திரவதை, உத்தரிக்கும் ஸ்தலம்

மற்றும் மரியாளின் சிலை வணக்கம், பரிசுத்தவான்களாகப் பாவிக்கப்பட்டுள்ள சிலரின் சிலை வணக்கம், குருமார்களின் காதுகளில் பாவங்களை அறிக்கையிடுதல், குருக்களின் திட்டங்களுக்கு உடனடியாய்க் கீழ்ப்படிதல் முதலான தீட்டான உபதேசங்கள் திரளாயும் காணப்படுகின்றன. புராட்டஸ்டண்டினர்களும் தங்களின் பல்வேறு விதமான போஜனபந்தியைப் பெற்றிருக்கின்றனர்; அதில் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாக மீட்பு, ஞானஸ்நானம், தேவனிடத்திலும், அவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டுள்ள வார்த்தைகளிலும் விசுவாசம் முதலான சில சத்தியங்கள் காணப்படுகின்றன; ஆனால், அந்தோ பரிதாபம்! அவர்கள் பெற்றிருப்பதான அரைகுறையான சத்தியங்கள் அனைத்தும் அசுசிப்பண்ணப்பட்டுள்ளவைகளாக இருக்கின்றன; ஏனெனில் "(அவர்களது) போஜன பீடங்களெல்லாம் வாந்தியினாலும், அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது; சுத்தமான இடமில்லை" என்று தீர்க்கதரிசி கூறுகின்றார் (மற்றும் அவரது வார்த்தைகள் உண்மையாகவும் உள்ளது; ஏசாயா 28:8). இந்தப் போஜன பீடங்களானது, புறக்கணிக்கப்பட்டக் காரியங்களினால் — சிந்தித்துப்பார்க்காமலேயே திருப்தியடைந்த நிலையில் முற்காலங்களில் புசித்து விழுங்கப்பட்ட பழைய தப்பறைகளினால் நிரம்பியுள்ளது. ஆனால் இந்த நியாயத்தீர்ப்பின் காலங்களினுடைய (எபிரேயர் 12:26, 27) அசைக்கப்படுதல்களானது, ஜனங்களை நலிவடையச் செய்கின்றது; மற்றும் இதனால் அவர்களால் நித்திய சித்திரவதை மற்றும் மனிதர்கள் பிறப்பதற்கு முன்னதாகவே, மனுக்குலத்தில் பெரும்பாலானவர்கள் நித்தியமான வேதனைக்கே முன்குறிக்கப்பட்டிருக்கின்றனர் போன்றதான பயங்கரமான உபதேசங்களைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எனினும் வெளிப்படையாய் மறுப்புத் தெரிவிப்பதற்கும், புறக்கணிப்பதற்கும் தைரியம் இல்லாமையின் காரணமாக, அவர்களது போஜனபீடங்களானது, புறக்கணிக்கப்பட்ட, நலம்கெடுக்கும் காரியங்களினால் அசுசிப்பண்ணப்பட்டுள்ளது; அவர்களது போஜனபீடங்கள் அனைத்தும் அசுத்தமாயிருக்கிறது.

இந்தத் தற்காலத்தின் "அசைவுகளானது", இந்தப் போஜனபீடங்களை அசுசிப்பண்ணத்தக்கதாக, குமட்டலை/வெறுப்புணர்வை உண்டுப்பண்ணுவதற்கு முன்னதாக, அருமையான கர்த்தருடைய ஜனங்களில் அநேகர், அங்கு உட்காருவதற்கும், நல்ல உணவை அதிலிருந்து தெரிந்தெடுப்பதற்கும், தேவனுடைய வார்த்தையாகிய ஊற்றிலிருந்ததான திரளான ஜீவத்தண்ணீரைக்கொண்டு, தப்பறையான விஷயங்களை முறிப்பதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இப்பொழுது அறுவடைக் காலம் வந்துள்ளப்படியாலும், பிரிக்கும் வேலை நடைப்பெறுகின்றபடியாலும் (மத்தேயு 13:30), தேவனுடைய உண்மையான ஜனங்கள் அனைவரும் இந்தப் போஜனபீடங்களிலிருந்து, கர்த்தர் இப்பொழுது பரிமாறிக்கொண்டிருக்கின்றதான, திரளான அறுவடையுள்ள போஜனபீடத்தினிடத்திற்கு அழைக்கப்படுகின்றனர். கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்ததின் காரணமாகவும், அசுத்தமான போஜனபீடங்களைப் புறக்கணித்ததாலும், அநேக சத்துருக்கள் உருவாகியுள்ளனர்; விசுவாச காதுகளை உடையவர்களும், கர்த்தருடைய போஜனபீடத்திற்கு வரும்படியான அழைப்பிற்குக் கீழ்ப்படிபவர்களும் பாக்கியவான்களாய் இருக்கின்றனர். இதைக் குறித்தே சங்கீதக்காரன் . . . "என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் (ஆசீர்வாதத்தின்) பாத்திரம் நிரம்பி வழிகிறது" என்று பாடியுள்ளார். (சங்கீதம் 23:5)

பாபிலோனுடைய அசுத்தமான போஜனபீடங்களைத் தவிர, இன்னும் வேறே போஜனபீடங்கள் உள்ளன. அவைகள் பேய்களினுடைய போஜனபீடங்களாக இருக்கின்றன; இந்தப் போஜனபீடங்களில், சகலவிதமான சூழ்ச்சிகரமானதும், வெளிப்படையானதுமான தீமையான உபதேசங்கள் காணப்படுகின்றன; இது தங்களை விலைக்கொடுத்து வாங்கின கர்த்தரையும்கூட மறுதலித்து மற்றும் வேதவாக்கியங்களைப் புரட்டி, வேதவாக்கியங்களுக்குத் தவறாய் அர்த்தம் கொடுத்து, அவைகளின் போதனைகளை நாசப்படுத்தி, மனிதத் தத்துவங்களை உட்புகுத்தும், மதத்திற்கு எதிரான நரகலான கொள்கைவாதிகளை உள்ளே கொண்டுவருகின்றது. "சாத்தானுடைய தலைச்சிறந்த படைப்பாகிய" போப்மார்க்கம்போன்றதான இந்தப் போஜனபீடங்களில் (பிரம்ம ஞானம்) தியோசோபி/theosophy, (ஆவியுலகக் கோட்பாடு) ஸ்பிரிட்டிசம் (spiritism), கிறிஸ்டியன் சைன்ஸ்/Christian science, (பரிணாமக்கொள்கை) எவலூஷன்/Evolution மற்றும் தேவனால் அனுப்பி வைக்கப்பட்டவரின் பலியினாலான மீட்புபற்றின உபதேசத்தை மறுதலிக்கிறதும், வேறு ஏதாகிலும் வழியின்மூலம் எப்படி நித்திய ஜீவனை அடைந்திடலாம் என்று மனிதனுக்குப் போதிக்க முற்படுகின்றதுமான மனித தத்துவத்தின் பல்வேறு பாகங்கள் அனைத்தும் அடங்குகின்றன. இவைகள் அனைத்தும்தான் பேய்களினுடைய போஜனபீடங்களாக இருக்கின்றன மற்றும் இவைகளுக்கு எதிராகவே, "நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும், பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாய் இருக்கக்கூடாதே" என்று கூறி அப்போஸ்தலன் நம்மை எச்சரிக்கின்றார்.

அந்தோ பரிதாபம்! சிலர் கர்த்தருடைய போஜனபந்திக்கான அழைப்பை ஏற்றுக்கொண்டு, அதில் புசித்து, கர்த்தர் நல்லவர் என்று கண்டுகொண்ட பிற்பாடு, கர்த்தருடைய போஜனபந்தியிலிருந்து, பேய்களுடைய போஜனபந்தியினிடத்திற்குத் திரும்புகின்றனர், அதுவும் தாங்கள் இப்படி விரும்பும்போது போனாலும், பின்னர் வந்து, மீண்டுமாக தாங்கள் கர்த்தருடைய போஜனபந்தியினிடத்திற்கு வரவேற்கப்படுவார்கள் என்றும், இப்படியாய்ப் போய்வந்து காணப்பட்டு, இரண்டிலும் பங்குகொண்டிருக்கலாம் என்றுமுள்ள எண்ணங்களில் காணப்படுகின்றனர். இவர்கள் கூறுவது என்னவெனில்... ஓ! ஆம் நாங்கள் குறுகின மனமுடையவர்களும், பலவீனமுடையவர்களுமல்ல; ஒரு பந்தியில் காணப்படுபவைகளைத்தவிர, மற்றவைகள் எதையும் ருசித்துப் பார்க்கமாட்டோம் என்று சொல்லுவதற்கு நாங்கள் பயமுடையவர்கள் அல்ல. கர்த்தருடைய போஜனபந்தி என்பது உண்மையில் மிகவும் நல்லதுதான்; எனினும் மற்றப் போஜனபந்திகளிலும்கூட நல்லவைகள் காணப்படுகின்றன மற்றும் நாங்கள் அனைத்தையும் ருசித்துப்பார்ப்போம்; ஆம், "எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்வோம்;" நலமானவை எந்தப் போஜனபீடத்தில் காணப்பட்டாலும் பரவாயில்லை, அதை நாங்கள் பிடித்துக்கொள்வோம்.

அந்தோ பரிதாபம்! இப்படிப்பட்ட மனப்பான்மையே அநேகரிடம் காணப்படுகின்றது மற்றும் இப்படிப்பட்டவர்கள், "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" என்பதை மறந்துபோனவர்களாகக் காணப்படுகின்றனர்; (நீதிமொழிகள் 16:18) மேலும் இப்படிப்பட்டவர்களின் வழியிலுள்ள தவற்றினை, இவர்களுக்கு உணர்த்துவதற்கென உண்மையுள்ள சகோதரர்கள் ஏறெடுக்கும் பிரயாசங்கள் விருதாவாய்ப்போகையில், இவர்கள் கர்த்தருடைய போஜனபந்தியில் பரிமாறப்பட்டுள்ளதான உணவின்மீதான விருப்பமின்மையை வெளிப்படுத்துகிறதற்கு ஆரம்பிப்பார்கள் மற்றும் கர்த்தருடைய போஜனபந்தியினிடமிருந்து இவர்கள் முழுவதும் சீக்கிரத்தில் விலகிபோய்விடுவார்கள் என்பதும் அதிகமதிகமாய் உறுதியாகிறது. பேய்களுடைய போஜனபந்தியிலுள்ள பாதகமான, விஷத்தன்மையுள்ள பதார்த்தங்களானது, சீக்கரத்தில் சுவையைக் கெடுத்து, ஆவிக்குரிய ஆரோக்கியத்தை வலுவற்றதாக்கி, நலமல்லாதவைகள்மீது விநோதமான விருப்பங்களை உண்டுபண்ணிவிடுகின்றது; மேலும் ஆவிக்குரியதில் நோயுற்ற ஆத்துமாவானது, கர்த்தருடைய போஜனபீடத்தில் புசிப்பதற்கான மனநிலையினைக் கொண்டிருப்பதில்லை. இப்படிப்பட்டவர்கள் புசிக்க வேண்டுமெனக் கர்த்தரும் விரும்புவதில்லை; ஏனெனில் கர்த்தருடைய போஜனபந்தியினிடத்திலிருந்து இப்படிப்பட்டவர்கள் விலகுகையில், இவர்கள் கிருபையின் ஆவியை இகழ்ந்தவர்களாக இருக்கின்றனர் மற்றும் இப்படியான போக்கைக்கொண்டிருக்கையில், இவர்கள் முற்றிலுமாய் விலகிப்போய்விட வேண்டும்; ஏனெனில் "நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும், பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாய் இருக்கக்கூடாதே." "இரண்டு எஜமான்களை உங்களால் திருப்திபண்ணக்கூடாது."

கர்த்தருடைய போஜனபந்தியினிடத்திலிருந்து, பேய்களினுடைய போஜனபந்தியினிடத்திற்குப் போகும் காரியத்தினை வெளிப்படையாய்ச் செய்கிறவன், தெய்வீக ஏற்பாட்டினுடைய தாராளத்தில், தான் திருப்திகொள்ளவில்லை என்றும், தேவனுடைய மாபெரும் எதிராளியாகிய பிசாசின்மேல் தனக்கு இன்னும் கொஞ்சம் மதிப்புக் காணப்படுகின்றது என்றும் சொல்லுகிறவனாய் இருப்பான். இப்படியாக அவன் அநீதியுடன் ஐக்கியம் வைத்திருப்பதன் மூலமாக தேவனுக்கு, தான் உண்மையற்றிருப்பதை நிரூபிப்பவனாய் இருப்பான். "எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்" எனும் வேதவாக்கியத்தினை மேற்கோளிடுகையில், இதோடுகூடத் தொடர்ந்து இடம்பெறும் வார்த்தைகளான, "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகுங்கள்" என்பதை மறந்துபோய்விடுகிறான். (1 தெசலோனிக்கேயர் 5:19-22) நாம் செய்வதற்கு அநேகம் காரியங்கள் உள்ளன மற்றும் கர்த்தருடைய போஜனபந்தியிலுள்ள உணவினுடைய திரளான பலன்கள் நலமானவை என்று சோதித்து அறிந்துகொள்வதும், அவற்றை நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கும், ஆரோக்கியத்திற்குமெனச் சொந்தமாக்கிக்கொள்வதும், அவற்றை மற்றவர்களுக்கும் பரிமாறுவதும்தான் நாம் செய்ய வேண்டியவையாகும். கர்த்தர் நல்லவர் என்று நாம் ருசித்துப்பார்க்கின்றோம் மற்றும் அவரது உபதேசங்கள் ஆரோக்கியமானவைகள் என்று சோதித்து அறிந்துகொள்கின்றோம். ஆனால் பேய்களின் உபதேசங்களை விட்டுவிலகுவதைத் தவிர, மற்றப்படி அதை வைத்துக்கொண்டு செய்கிறதற்கு எதுவுமில்லை மற்றும் அந்த உபதேசங்களினால் வசப்படுத்தப்பட்டுக் கெட்டுப்போனவர்களில் உதாரணமாய் விளங்கின அவ்வுபதேசங்களின் மோசமான விளைவுகளைக் குறித்து நாம் மற்றவர்களுக்கு எச்சரிப்பு வழங்கமுடியும்.

எந்தத் தேவனுடைய பிள்ளையும், கர்த்தருடைய போஜனபந்தியில் புசித்தப் பிற்பாடு, பார்வையிலேயே/உடனடியாகக் கர்த்தருடைய பந்தியிலிருந்து வேறுபட்டதான பேய்களினுடைய பந்தியினை அடையாளங்கண்டு கூறமுடிகின்றவனாகக் காணப்பட வேண்டும். எந்த ஓர் அமைப்பினுடைய அஸ்திபாரமும் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளப்படலாம் மற்றும்

உண்மையான அஸ்திபாரமென ஒன்று மாத்திரமே உள்ளது, அது கிறிஸ்துவாகிய ஈடுபலியாகும். "வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும்கூடாது." (1 கொரிந்தியர் 3:11; 15:3) சத்தியத்தினால் திருப்தியடைந்துள்ளதான எந்த ஓர் ஆன்மாவும், உடனடியாகத் தப்பறையின் அவலட்சணத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டும். இசை கவிஞனின் செவியானது, இசையின் இனிமையான ஸ்வரங்களுக்குப் பழக்கப்பட்டிருப்பதின் காரணமாக, உடனடியாக முரண்பாடான ஸ்வரங்களை அடையாளம் கண்டுகொள்வதுபோன்று அல்லது கலைஞனின் கண்களானது நுட்பமான வடிவங்களுக்கும், நிறங்களுக்கும், ஒழுங்கிற்கும் பழக்கப்பட்டிருப்பதினால், வேலைப்பாட்டிலுள்ள குறைப்பாட்டினை உடனடியாக அடையாளங்கண்டுகொள்வதுபோன்று, தெய்வீகத் திட்டத்தினுடைய அருமையான இசைவினாலும், பூரணமான மற்றும் நுட்பமான ஒழுங்கினாலும், முறைமையினாலும் பயிற்றுவிக்கப்பட்டதான மனமும், இருதயமுங்கூட, உடனடியாகத் தப்பறையினுடைய முரண்பாட்டினையும் அடையாளங்கண்டுகொள்கின்றது மற்றும் வேறெதிலும் திருப்திகொள்கிறதில்லை மற்றும் வேறெதிலும் மிகுதியாய் மகிழ்வுறுவதுமில்லை; இந்தத் "தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தினை" பெற்றிருக்கின்றதான ஆன்மாவானது, தப்பறையினுடைய தாக்குதல்களையும், வெட்கம்கெட்ட தாக்குதல்களையும் அல்லது சூழ்ச்சிகளையும் சமாளித்து, நிலைநிற்பதற்கென்று, வேறெந்த ஆயத்தங்களையும் செய்ய வேண்டியதில்லை. "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்;" கர்த்தருக்குள் இளைப்பாறி, திருப்தியடையுங்கள்; இந்தப் பொல்லாத நாளினுடைய கொள்ளைநோய்கள் அனைத்திற்கும் எதிரான பாதுகாப்பாய்க் காணப்படும் ஆவிக்குரிய ஆரோக்கியமும், வலிமையும் வேண்டுமெனில், கர்த்தருடைய போஜனபந்தியில் மாத்திரம் போஷிக்கிறவர்களாய் இருங்கள்.

கர்த்தருடைய போஜனபந்தியிலிருந்து புசித்தப் பிற்பாடும், அதில் திருப்தியடையாதவர்களுக்குத் தீர்க்கதரிசியின் மூலமான கர்த்தருடைய வார்த்தைகள் பொருந்துகின்றதாய் இருக்கின்றது: "வானங்களே, கேளுங்கள்; பூமியே, செவிகொடு; கர்த்தர் பேசுகிறார்; நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன்; அவர்களோ எனக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள். மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்; இஸ்ரயேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது என்கிறார்." (ஏசாயா 1:1-6) மாடும், கழுதையும் எங்குப் போய்ப் போஷிக்கப்பட்டாலும், மீண்டும், மீண்டுமாக தன் எஜமானிடத்திற்கும், முன்னணையினிடத்திற்கும் திரும்புவதற்கு அறிந்திருக்கின்றது. இப்படியாக மாடும், கழுதையும் காணப்படுவதின் வாயிலாக அவைகள், கர்த்தருடைய போஜனபந்தியை விட்டுவிட்டுப் பேய்களுடைய போஜனபந்தியில் வைக்கப்பட்டுள்ளதான உணவுகளைச் சோதித்துப்பார்ப்பதற்கென அல்லது நலமானவைகள் அசுத்தமானவைகளுடன் தொடர்புக்குள் வந்தபடியால், அந்த நலமானவைகள் அசுத்தமானதாகிப்போய், அவைகள் வைக்கப்பட்டிருக்கின்றதான அசுத்தமான போஜனபந்தியினிடத்திற்குத் திரும்புகின்றதான சில கர்த்தருடைய ஜனங்களைக்காட்டிலும் பகுத்தறிவு உடையவைகளாக இருக்கின்றன என்பதை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இப்படிப்பட்டவர்கள் தம்முடைய போஜனபந்தியினிடத்திற்குத் திரும்புவதற்குக் கர்த்தர் அனுமதிப்பதில்லை என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; "நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும், பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாய் இருக்கக்கூடாதே." ஏன்? ஏனெனில் சம்பூரணமாய்ப் போஷிக்கப்படுகின்றதும், கர்த்தர்தாமே இடைக்கட்டிக்கொண்டு பரிமாறிக்கொண்டிருக்கின்றதான கர்த்தருடைய போஜனபந்தியினிடத்திலிருந்து விலகிப்போவதன்மூலமாக, இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்குத் தாங்கள் உண்மையற்றிருப்பதை வெளிப்படுத்துகின்றவர்களாகவும், அவரது கிருபையின் ஐசுவரியங்களை இழிவாகப் பார்ப்பவர்களாகவும், கிருபையின் ஆவியை நிந்திப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். ஒருமுறை பிரகாசிக்கப்பட்டப் பிற்பாடு, இப்படியாய்த் துணிகரமாய்ச் செய்கின்றவர்கள், கலகக்காரர்களாகிய இஸ்ரயேலரால் அடையாளப்படுத்தப்படுகின்றதான பாவமுள்ள வகுப்பாராய் இருக்கின்றனர். இவர்களைத் தீர்க்கத்தரிசி குறிப்பாய்ப் பின்வருமாறு விவரிக்கின்றார்: "ஐயோ, பாவமுள்ள ஜாதியும், அக்கிரமத்தால் பாரஞ்சுமந்த ஜனமும், பொல்லாதவர்களின் சந்ததியும், கேடு உண்டாக்குகிற புத்திரருமாயிருக்கிறார்கள்; கர்த்தரைவிட்டு இஸ்ரயேலின் பரிசுத்தருக்குக் கோபமுண்டாக்கி, பின்வாங்கிப்போனார்கள். தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமுமாய் இருக்கிறது. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமேயில்லை; அது காயமும், வீக்கமும்,

நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது." (ஏசாயா 1:4, 5, 6)

வீணான தத்துவ ஞானங்கள், மனித பாரம்பரியங்கள் மற்றும் கற்பனைகள் அனைத்தையும் தவிர்த்துவிட்டு, தெய்வீகத் திட்டத்தினை மாத்திரமாக நாம் ஆராய்வது என நமது ஆராய்ச்சியினை எல்லைக்குட்படுத்துவதினால் நாம் குறுகிய மனமுடையவர்களல்ல; ஏனெனில் தெய்வீகத் திட்டத்தினுடைய எல்லையானது மீட்பைப்போன்று பரந்ததாகவும், அதன் ஞானம் மிகவும் துல்லியமானதாகவும், அதன் கோட்பாடு மிகவும் ஆழமானதாகவும் காணப்படுகின்றது. வேதவாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதான தெய்வீகத் திட்டத்தினை கற்றுக்கொண்டுள்ளபடியால், அதன் ஆவியினால் ஊக்குவிக்கப்படுகிறவர்கள் யாவரும் அதன் காரியங்களை, முழுத்தெய்வீக வெளிப்படுத்தல்களினிடத்துக்குப் பொருத்திப்பார்க்கும் சிலாக்கியமுடையவர்களாய் இருக்கின்றனர் மற்றும் அதன் உதவியினாலும், தேவனிடத்தினாலான ஜெபம் மற்றும் ஐக்கியத்தினுடைய பரிசுத்தமான தாக்கத்தினாலும், ஆவிக்குரிய காரியங்களில் பயிற்றுவிக்கப்படுகின்றனர் மற்றும் இதன் காரணமாக நாம் இசைக்கவிஞனின் செவிகளுடன் பரலோக இசையின், இனிமையான ஸ்வரங்களையும், அதன் துல்லியமான தாளத்தையும் உணர்ந்துகொள்ள முடிகின்றது மற்றும் கலைஞனுக்குரிய கண்களுடன் தெய்வீக ஞானம் மற்றும் கிருபையின் அருமையான மற்றும் நேர்த்தியான வண்ணத்தோற்றத்தினைக் காணமுடிகின்றது.

தேவனால் ஏற்றக்காலங்களில் வெளிப்படுத்தப்பட்டதும், "உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருந்ததும்," பரிசுத்தவான்களுக்கு எப்போதும் பிரியமானவைகளாகக் காணப்படுவதுமான, "தேவனுடைய ஆழங்களுக்கு" நேரான கர்த்தருடைய வழிகாட்டுதலைப் பின்பற்றுவதினால், ஓ! நாம் குறுகின மனமுடையவர்களாகக் காணப்படுவதில்லை, இல்லை! நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? பேய்களும், அவனுடைய போஜனபந்திகள் அனைத்தும் அழிக்கப்படுகையில், பரிசுத்தவான்களும், தேவதூதர்களும் குறுகின மனமுடையவர்களாகக் காணப்படுவார்களா? பொல்லாங்கான அனைத்தையும் நாம் விட்டுவிலகுவோமாக மற்றும் தேவனில் பிரியம்கொள்வோமாக மற்றும் அவரது திரளான கிருபைகளினாலான ஆறுதலில் திருப்திக்கொள்வோமாக. நமது இருதயங்களினுடைய வார்த்தைகளானது எப்போதும் பின்வருமாறு காணப்படுவதாக:

"இளைப்பாறுதலிலிருந்து விலகிப்போய், இனியும் நான் சுற்றித் திரியேன்,
பேரின்பத்திற்காக நான் விருதாவாய்த் தேடித்திரியேன்;
என் ஆத்துமா இல்லத்தில் திருப்திக்கொண்டுள்ளது;
கர்த்தரே என் பங்காய் இருக்கின்றார்."

*****

# வேதாகம ஆராய்ச்சிக்கான டாண் குழுக்கள்

செப்டம்பர் 15-இன் நமது வெளியீட்டில், வேதாகம ஆராய்ச்சிக்கான டாண் குழுக்களானது - வேதாகம வாக்கியங்களை நிதானமாய்ப் பகுப்பதற்கும், புரிந்துகொள்வதற்கும் ஒரே சாத்தியக்கூறாய் உள்ள யுகங்களுக்கடுத்த ஒட்டுமொத்த திட்டங்களின் பொதுவான அம்சங்களில், ஒவ்வொருவரையும் உறுதிபடுத்துவதன் வாயிலாகச் சபையைக் கட்டியெழுப்புவதற்குப் பிரயோஜனமானவைகள் என்று நாங்கள் பரிந்துரைத்திருந்தோம். இந்த வழிமுறைக்கு நான்கு வரவேற்கத்தக்க விசேஷித்த அம்சங்கள் காணப்படுகின்றன; அவை: (1) இது ஓர் அதிகாரத்திலுள்ள ஒரு சில வசனங்கள் மீது கவனத்தை எல்லைக்குட்படுத்துவதற்குப்பதிலாக, ஆதியாகமம் முதற்கொண்டு வெளிப்படுத்தல் விசேஷம் வரையிலுமான வேதவாக்கியங்கள் மொத்தத்தையும் ஆராய்வதற்கும், பயன்படுத்திடுவதற்கும் வழி வகுக்கின்றது. இது வேதாகமத்தினுடைய ஒரு வசனம் மற்றும் அதிகாரத்தின் ஆராய்ச்சியாக இராமல், தலைப்பின் கீழான ஆராய்ச்சியாக இருக்கும். (2) இது ஆண்டவருடைய பண்டகசாலையிலிருந்துள்ள ஐசுவரியமான மற்றும் சத்தான ஆகாரமென நாம் கண்டுகொண்டுள்ளதானவைகளில் மனங்களையும், இருதயங்களையும் புத்துணர்வடையத்தக்கதாக வழிநடத்திடும் மற்றும் இருதயத்தைத் திருப்தியோ அல்லது பலப்படுத்திடவோ செய்திடாத வீணான மனித கற்பனைகளிலிருந்து தூர வழிநடத்திடும். (3) இது ஒவ்வொருவரும் சிந்திப்பதற்கும், ஆராயப்படும் விஷயம் குறித்து வேதவாக்கியங்கள் கூறும் அனைத்திற்கும் இசைவாய்ச் சத்தியம் பற்றின தனது கருத்தினைத் தொகுத்திட கற்றுக்கொள்வதற்கும் மற்றும் தான் காண்கின்றதான சத்தியங்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்திடுவதற்கும்கூடப் பழக்குவிக்கின்றது. (4) இவைகளே சபையிலுள்ள சகல போதித்தல்களுக்குமான நோக்கங்களாகும், அதாவது அப்போஸ்தலன் குறிப்பிடுவது போன்று, "பரிசுத்தவான்கள் பக்திவிருத்தி அடைவதற்காகவும், சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும்" ஆகும் (எபேசியர் 4:12).

எனினும் இவ்வகைக் கூட்டங்கள் தொடர்பான யோசனைகளைச் சிலர், வெகு சிலர் முற்றிலும் தவறாய்ப் புரிந்துகொண்டுள்ளனர் மற்றும் வேதாகமம் வாசிப்பதைக் கைவிடவும், அதற்குப் பதிலாக மில்லேனியல் டாண் வெளியீட்டை வாசிக்கவும் நாம் அறிவுரை வழங்கினதாகப் புரிந்து கொண்டிருக்கின்றனர் என்பதை நாங்கள் கவனித்தோம்; அவர்கள் வெகு சொற்பமானவர்கள்தான் என்று சொல்வதற்கு நாம் மகிழ்கின்றோம். அவர்கள் புரிந்திருப்பதுபோல் எங்கள் கருத்துகள் இருந்ததில்லை. வேதாகமத்தையோ, டாண் வெளியீட்டினையோ வெறுமனே வாசித்தல் என்பது, ஒவ்வொருவனாலும் தனக்கென்று தனிப்பட்ட விதத்தில் வாசித்துக்கொள்ளப்படலாம்.

இதற்கு மாறாக வேத ஆராய்ச்சிகளை வரையறையற்றதாக்கிடுவதே யோசனையாகும்; மற்றும் டாணில் முன்வைக்கப்பட்டுள்ளதான தேவனுடைய ஒழுங்கின்படியான திட்டத்தைப் படிக்கையில், வெளிச்சம் நமக்குக் கடந்து வந்திருக்கிறதென்றால், நாம் அதே கண்ணோட்டத்தில் தொடர்ந்து ஆராய்கையில் அத்திட்டமானது, அதன் நுட்பமான விவரங்கள் அனைத்திலும் அதிகமதிகமாய்த் தெளிவாகிடும். ஒருவேளை யுகங்களுக்கடுத்த திட்டமானது மாத்திரமே, தெய்வீகத் திட்டத்தினுடைய மெய்யான முக்கிய பொதுவான அம்சங்களைத் (out line) தெரிவிக்கிறதென்றால் மற்றும் அந்த முக்கிய பொதுவான அம்சங்களை (out line) நாம் முழுமையாகக் கற்றுக்கொண்டுள்ளோமானால், யுகங்களுக்கடுத்த தேவத்திட்டத்தினுடைய நுட்பமான விவரங்களைத் தொடர்ந்து ஆராய்வதிலும் அதே உதவிக்கரங்களை நாம் பயன்படுத்திடுவோமாக, அதே தெய்வீகத் திட்டத்தினைக் கவனிப்போமாக.

இந்த நோக்கத்திற்காகத்தான் நாம் "வேதாகம ஆராய்ச்சிக்கான டாண் குழுக்களை" ஆலோசனையாகத் தெரிவித்தோம் மற்றும் பரிந்துரைத்திட்டதான இம்முறைமைக்கு உதாரணமாக, டாண்- ஒன்றாம் தொகுதியின் முதல் பத்தியினுடைய மாதிரி ஆராய்ச்சியினை வழங்கியுள்ளோம்:

❖ திவ்விய வெளிப்படுத்தல் என்றால் என்ன? - 2 பேதுரு 1:21; 2 தீமோத்தேயு 3:16, 17.

❖ எப்போது மற்றும் எப்படிப் பாவம் உலகத்திற்குள் வந்தது? - உரோமர் 5:12; etc.

❖ "நீதியின் சூரியன்" யார்? - மல்கியா 4:1, 2; மத்தேயு 13:43; தானியேல் 12:3.

- ❖ இந்தச் "சூரியன்" எப்போது உதிப்பார்? - அப்போஸ்தலர் 3:19-21; கொலோசெயர் 3:4.

- ❖ அதன் பிரகாசத்தின் விளைவு என்ன? - மல்கியா 4:1, 2; ஏசாயா 60:18, 19; 25:7-9; அப்போஸ்தலர் 3:23.

- ❖ அதன் குணமாக்குதல் என்னவாக இருக்கும் மற்றும் அது எப்படி நிகழ்த்தப்படும்? - உரோமர் 5:18, 19.

- ❖ பாவமும், மரணமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தற்காலத்தின் அழுகையையும், உபத்திரவத்தையும் உண்டுபண்ணினதா? எப்படி? எதன் அடிப்படையில் "விடியலையும் மற்றும் அதன் சந்தோஷங்களையும்" நாம் எதிர்ப்பார்த்திடலாம்? - உரோமர் 5:6-8; 14:9; 1 கொரிந்தியர் 15:3, 21; 2 பேதுரு 1:16, 19; நீதிமொழிகள் 4:18; யோபு 14:13-15; சங்கீதம் 49:14, 15.

- ❖ இரவைத் தொடர்ந்து அந்த "மகிமையான நாள்" வருமா? -வெளிப்படுத்தல் 21:21-25; ஏசாயா 60:20, 21.

பிரயோஜனம் உண்டாகத்தக்கதாக, வேறு வேதவாக்கியங்கள் முன்கொண்டுவரப்படலாம்; எனினும் மிக அதிகளவிலான சுதந்தரமானது அனுமதிக்கப்படக்கூடாது என்பதின் அவசியத்தினை அனைவரும் பார்த்துக்கொள்ள வேண்டும் மற்றும் கூட்டத்தை வழிநடத்துபவர் தனது பகுத்துணர்தலைப் பிரயோகித்து, ஒருவர் அதிகமாய் வேறொன்றை விவரித்துக்கொண்டிருக்கையில் அவருக்கு அன்போடு அதைக் குறித்து நினைப்பூட்டிட வேண்டும். சபையார் பல்வேறு வேதாகமங்களைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் இந்தக் கூட்டங்கள் யாவும் துதித்தலோடும், ஜெபத்தோடும் துவங்கி, முடிக்கும்படிக்கு நாம் பரிந்துரைக்கின்றோம். எழுதுகோலை/பென்சிலைப் பெற்றிருந்து, தங்கள் டாண் புத்தகத்தின் ஓரத்தில் (margin) ஓரக்குறிப்புகளைக் குறித்துக்கொள்ளலாம் எனும் சிலருடைய திட்டமிடுதல்கூட வரவேற்கத்தக்கது. சத்தியத்தினைச் சந்தேகமுடையவர்களுக்கு மெய்ப்பித்துக் காண்பிப்பதற்கு மீண்டுமாகப் பிரயாசம் எடுப்பது என்பது, அனைவருக்குமே மிக உதவியாகக் காணப்படும்.

இந்த ஒரு பத்தியிலுள்ள காரியங்களிலிருந்து, மூன்றுபேர் கொண்ட ஒரு வகுப்பிற்குத் திரளான மற்றும் ஐசுவரியமான வேதாகம உணவினை ஒரு மணி நேரம் பெற்றுக்கொள்ளலாம்; மற்றும் பன்னிரண்டு பேருள்ள ஒரு பெரிய கூட்டத்தார் ஒரு கூடுகையில் அனைத்தையும் பார்த்து முடிக்க முடியாது. கர்த்தருடைய மந்தையின் இந்தச் சிறு சிறு கூட்டத்தார்கள், வாரத்தில், ஒருமுறை இந்த "வேத ஆராய்ச்சிக்கான டாண் குழுக்களை" பெற்றிருக்க நாம் பரிந்துரைக்கின்றோம். இது "சுவிசேஷ வேலையினை" மற்றவர்களுக்குச் செய்திடுவதற்கு நிபந்தனையாகக் காணப்படும் வேதவசனத்தினுடைய புரிந்துகொள்ளுதலில் அனைவரையும் தேர்ச்சிப் பெற்றவர்களாக்கிடும் (எபேசியர் 4:12). இது - ஒன்றுகூடி, ஊகங்கள் செய்திடுவதற்கும், வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான ஒவ்வொரு நபரைக்குறித்தும் மற்றும் ஒவ்வொரு காரியத்தைக்குறித்தும் நிழல்களை உருவாக்கிடுவதற்கு முயற்சிப்பதற்கும் - அதாவது புதுக் கருத்துக்களை உண்டுபண்ணும் திறமையின் காரணமாகப் பெருமைக்குள்ளாக (மற்றும்) "புறம்பான இருளுக்குள்ளாக" அநேகரை வழிநடத்திட்டதான ஒரு திட்டத்தை முயற்சிப்பதற்கும் பதிலாக, இது - மிகவும் பாதுகாப்பான ஒரு வழிமுறையாகும். இது - தற்செயலாக ஏதோ ஒரு தலைப்பை அல்லது முன்கூட்டியே நியமிக்கப்படாத எந்த ஒரு தலைப்பை எடுத்துக்கொள்வதைப்பார்க்கிலும், மிகவும் பிரயோஜனமாகக் காணப்படும். ஒவ்வொரு பாடமும் அனைவராலும், அதிலும் விசேஷமாக வழிநடத்துபவரால் அல்லது மூப்பரால் நன்கு சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டும். கலந்துகொள்பவர் யார் ஒருவராலும் யோசனையாகத் தெரிவிக்கப்படும் வேறு எந்த ஒரு வேதாகம தலைப்பையும், கருத்தில் எடுத்துக்கொள்வதற்கு ஒவ்வொரு கூட்டத்தாரும் விருப்பத்துடன் காணப்பட வேண்டும் மற்றும் பிரயோஜனமான தலைப்பாக இருக்குமென அக்கூட்டத்தாரில் பெரும்பான்மையானவர்களால் கருதப்பட வேண்டும். இந்தக் காரணத்தின் நிமித்தம் (வேறு வேதாகம தலைப்புகள் ஆராயப்படுவதற்காக) டாண் பாடங்களானது தற்காலிகமாக நிறுத்தப்படலாம் அல்லது கூடுதலாக ஒரு கூடுகை நியமிக்கப்படலாம்.

---

# விநோதனமான ஜனங்கள்

ஒரு விநோதமான ஜனம்தம்கொடிதனை அவிழ்த்தே பறக்கவிட்டே,
உலகமுழுமையும் கவர்ந்திழுக்கின்றாரே,
இவ் வாச்சர்யமூட்டும் மனிதரை நாமும் பேட்டி காண்போம் வருவீரே
அது உமக்கும்எமக்கும் ஒரு புத்துணர்வைத்தருமே.
அவர்கள்பெயர்கூட விநோதமாய் உள்ளதே,
பவலுக்குப்பின்னாகப்பெயரிடப்படவில்லை,
லூதத்தருமில்லை,கால்வினுமில்லை,
வெஸ்லியுமில்லை, மற்றெவருமில்லை,கிறிஸ்துவைச்சார்ந்தவர்கள்,
அவர்பெயரைத்தாங்கியே நிற்கின்றாரே,
சகோதரன்சகோதரி என்றே பெயரிட்டே அழைத்துக்கொள்வாரே,
அவர்கள் பேச்சும்கூட விநோதம்தானே,
அவர் பாடத்திலொன்று, விலைமதிப்புமிக்க இரட்சிப்பு, யுகங்களைக்குறித்த தேவனின்திட்டம்,
உலக மாந்தர் அனைவர்க்கும் ஈடுபலி,யூபிலி வருடத்தின் ஓய்வு,
மனித வீழ்ச்சியிலிருந்தே பாடம் கற்கின்றாரே,

அவர் உணவும்கூட விநோதமானதே,
தேவனின்நல்வார்த்தைதாமே அவர்க்குணவாமே,
சரியாகப்பகுத்தே அளிக்கப்படுதே, ஏற்றகால போஜனமாகவே
எளிமையாகவே வெளிப்படையாகவே கொடுக்கப்படுதே,

அவர் உடை கூட வித்தியாசம் காட்டலாகுதே,அது அவர்க்கு சொந்தமில்லை,
பெருந்தன்மையாளர்இயேசுவி டம் கடனாகப்பெற்றே அணிந்துகொண்டாரே,
வெண்மையாய், கறைதிரையின்றி கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் பெற்றுக்கொண்டாரே.

அவர் வேலைகூட ஆச்சர்யம்தானே,விளைந்த நிலத்தில் அறுவடை செய்கிறார்
விளைபொருட்கள் எங்கோ, அரிவாளை நீட்டி அறுக்கின்றார்,
கோதுமையை களஞ்சியத்தில் சேர்க்கின்றார்,
எதிரியோ தன்வலையினில்விழவைத்தபதரை கட்டுக்களாகக்கட்டுகிறார், எரிப்பதற்கே.

அவர் ஓய்வும்கூட புதுமையானதே,தேவனின் ஓய்வுநாளில் நுழைந்துவிட்டாரே,
மரியாள்தெரிந்துகொண்ட நற் பாத்திரம்தன்னை தாமும் தெரிந்துகொண்டாரே,
அவர்வெற்றிக்காய்இனியும்கவலைகொள்ளத்தேவையில்லை,
கிறிஸ்துவுடனே எதிர்காலத்தில்ஒவ்வொரு குடும்பமாய்ஆசீர்வதிக்கும்வேலையைச்செய்வாரே,

அவர் இனம்கூட ஓர் தனித்தன்மை வாய்ந்ததே,
மிகவும்குறுகிய பெயராகும்,
இவை அனைத்துமே ஒரு சிறுவார்த்தையிலே புரிந்துகொள்ளலாகுமே,
அது மனிதனால் உணடானதல்ல,பரத்திலிருந்தே தரப்பட்டதே,
அந்தப் பெருமைக்குரிய வார்த்தையோ "அன்பு".

அவர் விசுவாசம்கூட வித்தியாசமானதே,
தேவனின்வார்த்தை உண்மையானதென்றே
மனதினில்விசுவாசம்கொள்கின்றார்,
மனிதனின் வார்த்தையோ ஏமாற்றும்,வார்த்தைதவறா
தேவனின் வார்த்தைதன்னை விசுவாசிக்கிறார்,
அவர் நம்பிக்கையும்வித்தியாசமானதே,அவர் இயேசுவுடனேகூட அரசாட்சிதனிலே பங்காளராகவே
பங்குபெறவே விழைகின்றார்,
தேர்ந்தெடுக்கப்பட்டு சபையோராய் தேவனின் கிருபை இலவசமாகவே
முழுமனுக்குலத்திற்கும் அளிப்பதை அறிவார்,

அவரன்பும்கூட தனிச்சிறப்புவாய்ந்ததே, அவர் பிதாவாகிய தேவனை மேலாய் நேசிக்கின்றாரே, அவரது சித்தமே இவரது சிததமாம், இவர் வாழ்க்கையைப்பற்றிக்கவலையே இல்லை,அதை மகிழ்வுடனேமுழு மனதுடனே ஒவ்வொருதாலந்தையும் செலவுசெய்யக்கொடுக்கின்றார், தம்மைமுழுதும் ஒப்பளிக்கின்றார்.

அவர் மகிழ்ச்சியும்கூட தனிச்சிறப்புபெற்றதே,
ஆழ்ந்த மாறாத சந்தோஷம்,
எல்லைமீறிதொல்லைகொடுக்கும்செயல்கள் அவர்க்கே நேரிட்டாலும்,
கிறிஸ்துவுக்காய், அவர் நாமத்துக்காய்பாடுபடுவதிலே,
அவரடைந்த இழிவைஇவர்அடைய, தாங்க விழைகிறார்.

அவர் வீடும் கூட விநோதமானதாம்,பரலோக வீடு,
பரலோக வாசிகளாய் மாறிவருகிறார்,
பூமிக்குரிய ஆசீர்வாதம்யாவும் கைவிட்டே,வீடு,நிலம், சொத்து
சுகம்,விட்டுவிட்டே,கர்த்தரோடேகைகோர்த்து அவர் மாளிகையில்
ஆடம்பரமாய்வாழ்ந்திடவே ஆசிக்கிறார்.
விநோதமான ஜனனங்கள் இவர்கள்.

--356--

# உண்மையுள்ள வேலையாட்களிடமிருந்து வரும் உற்சாகமூட்டும் வார்த்தைகள்

## *நியூயார்க்*

அன்புக்குரிய சகோதரர் மற்றும் சகோதரி ரசல் அவர்களே:-

எங்களது "வேத ஆராய்ச்சிக்கான டாண் குழு" பற்றிய ஒரு சிறு தகவலை உங்களுக்கு எழுதுகின்றேன். ஞாயிற்றுக்கிழமை மதிய வேளை கூட்டம் ஒன்றிற்காக நாங்கள் ஏங்கித் தவித்துக் காணப்பட்டோம் மற்றும் இத்தகைய ஒரு கூட்டத்தினைப் பொறுப்பேற்று நடத்தத்தக்கதாக எங்கள் மத்தியில் ஒரு சகோதரன் சத்தியத்தின் ஆவியினால் தொடப்படுவதற்காக நாங்கள் ஜெபம் ஏறெடுத்து வந்தோம். ஒரு கட்டத்தில் எங்கள் வேண்டுகோளானது அருளப்படுவதாக இருந்தது; ஆனால் ஆர்வமிக்கவர்கள் என்று நாங்கள் கருதிட்டதான நல்ல மனுஷர்கள் அனைவரின் மத்தியிலும் நாங்கள், விருப்பமின்மையை அல்லது பயத்தைக் கண்டபோது எங்கள் விண்ணப்பத்திற்குக் கிடைத்த பதிலில் எல்லா நம்பிக்கையும் எங்களுக்கு போய்விட்டது. ஆகையால் கூட்டமானது கைவிடப்பட வேண்டும் அல்லது நான் சில முயற்சிகளை எடுக்க வேண்டியிருந்தது மற்றும் நான் கர்த்தருடைய பெலத்தினால் அதைச் செய்யவும் செய்தேன் மற்றும் யுகங்களுக்கடுத்த திட்டத்தின் மீதான வரைபடம் விளக்கங்களுடன் கூடிய தொடர் வேதாகம ஆராய்ச்சிகளைக்குறித்து அறிவித்திட்டேன். கடந்த ஞாயிற்றுக்கிழமை, அங்குக் காணப்பட்ட பத்துப் பேருடன் நாங்கள் அதைத் துவங்கினோம்; வெற்றிடங்கள் யாவையும் நிரப்பக் கர்த்தர் அங்குக் காணப்பட்டார் மற்றும் நாங்கள் ஆசீர்வாதமாய் அந்த நேரத்தைச் செலவிட்டோம். அனைவரும் தங்களுக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டுள்ளதாகவும், நன்கு வெளிச்சமூட்டப்பட்டதாகவும், தவறாமல் கலந்துகொள்வதாகவும், மற்றவர்களையும் அழைத்து வருவதாகவும் தெரிவித்தனர். எல்லாமே கர்த்தரால் நடைபெற்றது.

துவங்கும்போது, வேத ஆராய்ச்சி தொடர்பான எனது கடந்தகால மற்றும் தற்கால அனுபவத்தினைப் பகிர்ந்துகொள்ள ஏவப்பட்டேன் மற்றும் அருமையான நண்பர்கள் அதினால் மிகவும் தொடப்பட்டதாகத் தெரிகின்றது.

கூட்டம் நடத்தப்படுகிற இடத்தில் துண்டுபிரதிகள் மற்றும் புத்தகங்கள் மற்றும் டவர் வெளியீடுகள் காணப்படும் மேஜை ஒன்றினை நாங்கள் பெற்றிருக்கின்றோம்; இவைகளை எடுத்துக் கொள்ளுமாறு நாம் கலந்துகொள்பவர்களுக்கு வலியுறுத்தினோம் மற்றும் கடந்த வாரத்தில் அவர்கள் மிகவும் சகஜமாய் நடந்துகொண்டார்கள்; ஆகையால் சத்தியத்தைப் பரப்பிடும் இவ்வழிமுறையின் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். நீங்கள் இப்பொழுது எங்களை உண்மையிலேயே ஒரு சிறு சபையாகக் கருதிக்கொண்டு, எங்களுக்காகத் தினந்தோறும் ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தருக்கு மகிமை உண்டாகத்தக்கதாக அவர் பயன்படுத்த வேண்டிய பாவப்பட்ட மனித பாத்திரத்தை விசேஷமாய் ஜெபத்தில் நினைவுகூருங்கள். இப்படிக்கு அவரது ஊழியத்தில் உங்கள் சகோதரி,

F. G. BURROUGHS.

[**பதில்**:- உங்களது "தேவ ஆராய்ச்சிக்கான டாண் முழு" பற்றின தகவலை அறிந்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். அங்கு நிலவிய சூழ்நிலைகளில், நீங்கள் முயற்சி எடுத்துத் துவங்க முற்பட்டது சரியே மற்றும் பொது ஊழியங்களில் பொதுவாய்ச் சகோதரரைத் தெரிந்துகொள்ளும் கர்த்தருடைய சித்தத்திற்குச் சகல மரியாதையுடன், சாந்தமான ஆவியிலேயே இவற்றை நீங்கள் செய்துள்ளீர்கள் என்று நாங்கள் உணர்ந்துகொள்கின்றோம். ஆனால் ஒரு கூட்டத்தில் வழிநடத்துவதற்குப் போதுமான திறமையுடன் சகோதரர் இல்லை என்பதற்காக, அதுவும் தேவையானத் தகுதிகளையுடைய சகோதரி அர்ப்பணிக்கப்பட்டத் தாலந்துகளுடன், சாந்தத்துடன் மந்தைக்கு உண்மையாய் ஊழியம் புரியத்தக்கதாக ஆயத்தமாய் இருக்கையில், திறமையுள்ள சகோதரன் இல்லை என்பதற்காக மந்தையினுடைய நலனுக்கடுத்த காரியங்கள் கவனிக்கப்படாமல் விடப்படக்கூடாது. இஸ்ரயேலில் தேவன் ஒரு காலத்தில் ஒரு பெண் நியாயாதிபதியை எழுப்பினார் என்பது ஞாபகத்திற்கு வருகின்றது; ஒருவேளை பரவலாய்க் கல்வியறிவும், அறிவும் காணப்படுகின்றதான இந்த நாட்களில், மற்றவர்களைக் காட்டிலும்

கொஞ்சம் முதன்மையான நிலையில், தமது மந்தைக்கு ஊழியம் புரியத்தக்கதாக அவர் குறிப்பிடத்தக்க சாந்தமும், உண்மையும், தெளிவும், திறமையுமுடைய ஏதோ சில சகோதரிகளை முன்னுக்குக்கொண்டு வருவாரானால், கர்த்தருடைய சித்தத்திற்கான இந்த அடையாளங்களை நாம் அசட்டைப்பண்ணாமல் இருப்போமாக. சத்திய அறிவில் நூதன சீஷனாகவோ அல்லது கிறிஸ்தவ அனுபவத்தில் வெறும் குழந்தையாகவோ காணப்படும் ஒரு சகோதரன், அவர் சகோதரனாய் இருக்கின்றார் என்பதற்காக, வழிநடத்தும் காரியத்தைப் பொறுப்பேற்க கேட்டுக்கொள்ளப்படக்கூடாது. ஒரு சகோதரிக்கு அதிகமான தாலந்துகள் இருக்குமானால், அவர்களைப் பயன்படுத்துங்கள். வரைப்பட விளக்கத்துடன் வகுப்பினைத் துவங்கினதில், நீங்கள் சரியாகவே செயல்பட்டிருக்கின்றீர்கள்.]

---

**தந்தாய் உந்தன் நாமம் வாழ்க.**

எங்களின்தந்தாய், எங்களின்தந்தாய், உமதுநாமத்தையாம் அறியுமுன்னமே,
ஜாதிகள் அதனைக் களங்கப்படுத்தியே, வீணாக்கினாரே,
சீற்றத்தினால் எழும் ஒளிக்கதிரால் அன்றி,விசுவாசத்தின் அணையா சுடர்களினாலே
நாங்கள் பொருத்தனை செய்திட்ட
எம்இருதயமென்னும்புனிதமான பலி பீடங்கள் எரியட்டுமே,
கடுமையான களங்கம் எம்மில் இருந்திட்டபோதிலும்,
அவை உம்திருமுகம் தனையே மறைத்திட்டபோதிலும்,எங்களின் ஆத்துமாக்கள், உம்
திருமுகம்தனையே மீண்டும்நோக்கிப்பார்க்கவேண்டுமே, அன்பின் சக்தியே எம் பாதைக்கு
ஒளி வீசட்டுமே,
எம் எஜமானின்தெய்வீகத்திட்டம்தன்னை மனம்விரும்பிக்கற்றுக்கொள்ள மனம்தந்திடுமே,
உம்மிடமும் பரலோகத்திற்கும் அது எம்மை வழிநடத்திச்செல்லட்டுமே,
மனிதனின்ஆழ்ந்த துன்பத்திற்காய் தேம்பியழும் பரிதாபமானஎம்சகோதரர்கள்,
அவர்களின்விம்மியழும்தாழ்மையின் குரல்கள்,எதிரிகளின்சீற்றமிகுந்த ஒலிகளில்
கலந்தே,சந்தேகப்புயல்களின் ஒருங்கிணைந்த நடுவினிலே,
எங்களின் இதயம் மயக்கமடைந்தே,மேகங்கள் சூழந்தே காணலாகிறதே,
உமதன்பு என்னைப்பற்றிக்கொள்ளாவிட்டால், எமக்கு,
இவ்வுலகினில் வாழும் பெலனிருக்காதே, எம்வாலிபத்தில் நாம் கொண்ட
வைராக்கியம்தன்னைபுதுப்பித்துத்தாருமே, எங்களின்ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுமே,
எமது பாவம் பொறுத்திடல்வேண்டுமே,உம் சிறப்புமிகு செயல்களையே செய்வதற்கும்,
பரிசுத்த வாழ்வுதனை வாழ்வதற்கும், எம்மையுமே செதுக்கிவிடும் எம்தேவதேவனே.

-------------------------------------------

**--359--**

# "கிறிஸ்துவின் முன்னோடி"

## லூக்கா : 1: 5-17

"நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கத்தரிசி எனப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம் பண்ணு... அவருக்கு முன்னாக நடந்து போவாய்."-லூக்கா 1:76,7

இந்தப் பரிஜயமான சம்பவத்தைக் கவனிக்கையில், கர்த்தர் தம்முடைய மாபெரும் வேலையிலுள்ள பல்வேறு பாகங்களுக்கென்று, தாம் தெரிந்துக்கொண்ட பாத்திரங்களை ஆயத்தமாக்குவதில் காட்டும் மாபெரும் அக்கறையைக் குறித்து நாம் நினைப்பூட்டப்படுகின்றோம். ஆபிரகாமின் வாழ்க்கையானது விசுவாசத்திற்கும், பொறுமைக்குமான நீண்ட கால பயிற்சியாக இருந்தது; காரணம் அவர் விசுவாசத்தின் தகப்பனாக வேண்டும் என்பதேயாகும். மேலும், அவர் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இருப்பவர்களுக்கும், புதிய உடன்படிக்கையின் கீழ் வருபவர்களுமான அவருடைய சகல ஜனங்களுக்கும் பொருத்தமான மாதிரியாய் இருப்பதற்கும், தேவனுக்கேயுரிய தகப்பன் ஸ்தானத்திற்கு நிழலாய் இருப்பதற்கும், ஆபிரகாமின் வாழ்க்கையானது விசுவாசத்திற்கும், பொறுமைக்குமான நீண்டகால பயிற்சியாக இருந்தது (ரோமர் 4:11-17).

மோசே, இஸ்ரயேலை வழிநடத்தும் தலைவனாக இருப்பதற்கும், இஸ்ரயேலுக்கு நியாயப்பிரமாணத்தை வழங்குவதற்கும், இஸ்ரயேலை நியாயம் விசாரிப்பதற்கும் விசேஷமாக ஆயத்தம் பண்ணப்பட்டார். மோசே இழிவான அடிமைத்தனத்தின் கீழும், மரணத்தீர்ப்பின் கீழும் பிறந்திருந்தாலும், இவர் தேவ வழிநடத்துதல் மூலம் பாதுகாக்கப்பட்டு, பதுக்கி மறைத்து வைக்கப்பட்டு இராஜ குடும்பத்தில் தத்தெடுக்கப்பட்டார். அங்கு இவருடைய எதிர்க்கால வேலைகளுக்குப் போதுமான கல்வியறிவு வழங்கப்பட்டது. பின்னர், இவர் 40 ஆண்டுகள் மந்தைகளை மேய்க்கும்படி அனுமதிக்கப்பட்டார். இக்காலக்கட்டத்தில் தெய்வீகக் கிருபையினால் இவருடைய குணநலன்கள் பக்குவப்படுத்தப்பட்டது. மேலும் இவருடைய உணர்ச்சிவசப்படும் மனப்பான்மையும் பக்குவம் அடைந்தது. இவ்வாறாக தேவன் இஸ்ரயேலுக்குப் பயிற்சியளிக்கப்பட்டவரும், அனுபவசாலியுமான ஒருவரையே வழி நடத்தும் தலைவனாகக் கொடுத்தார். இதைப் போன்ற, ஆயத்தமாக்குதல்கள் மற்றவர்களின் விஷயத்திலும் கூட நடைப்பெற்றுள்ளது என்பதை, நம்மால் வேதாகம பதிவுகளிலும், வரலாறுகளிலும் பார்க்கக்கூடும். சாமுயேலின் விஷயத்தைப் பாருங்கள்; ஜெபத்தினால் பிறந்த இவர், குழந்தை பருவம் முதல் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட்டு, ஏலியின் பராமரிப்பின் கீழ்க் கர்த்தருக்கான ஊழியத்தில் பயிற்றுவிக்கப்பட்டார். சிறு பருவத்திலே அழைக்கப்பட்ட பவுல், நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் போதிக்கப்பட்டுத் தேவன் பேரில் வைராக்கியம் உள்ளவராக இருந்தார். பக்தி வைராக்கியத்தில் தேவனுக்கு ஊழியம் செய்வதாக எண்ணிக் கொண்டு, பவுல் அறியாமையில் பரிசுத்தவான்களைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்தார்.

யோவான் ஸ்நானன் கூட ஓர் உதாரணமாவார். மற்றவர்களின் வாழ்க்கையில் நடந்தது போன்று, இவருடைய வாழ்க்கையிலும் ஆயத்தமாக்கும் விஷயங்கள், இவர் பிறப்பதற்கு முன்னதாகவே இவருடைய பெற்றோர்களின் இருதயத்தில் ஆரம்பித்தது. "அவர்கள் இருவரும் கர்த்தர் இட்ட சகல கற்பனைகளின் படியேயும், நியமங்களின் படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாய் இருந்தார்கள்" (வசனம்-6). வரலாற்றின் பக்கங்களில் இடம்பெறும் சீர்த்திருத்தவாதிகளைக் கவனித்துப் பாருங்கள். மேலும், அவர்களுக்குரிய அல்லது அவர்களுக்கு முன்பு உள்ள வேலைகளைக் குறித்து, அவர்கள் அறியாதிருக்கையிலேயே அவர்களை ஆயத்தமாக்கப்படுவதில் உள்ள வழிநடத்துதல்களையும் கவனித்துப் பாருங்கள். சுவிசேஷ யுகத்தின் சபையை, அவர்களின் ஆயிரவருட யுகத்திற்குரிய வேலைக்கென்று கர்த்தர் எவ்வாறு ஆயத்தப்படுத்துகின்றார் என்பதையும் கவனித்துப் பாருங்கள். மேலும், வரவிருக்கின்ற இராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்தினுடைய வேலைகளுக்கென்று முற்பிதாக்களை எவ்வாறு கர்த்தர் ஆயத்தப்படுத்தினார் என்பதையும் கவனித்துப் பாருங்கள். மேலும், அவரால் "தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரங்கள்" அனைத்தையும் கவனித்துப் பாருங்கள். "தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரங்கள் அனைத்தும் நியமிக்கப்பட்டுள்ள வேலைக்கென்று ஆயத்தமாக்கப்பட்ட பாத்திரங்களாகவே எப்போதும் இருக்கின்றனர். மேலும், பாத்திரம் தன்னைத்தானே ஆயத்தம் பண்ணாமல், தேவனே ஆயத்தம் பண்ணுகின்றார் என்கிற

உண்மையானது, தெரிந்துக்கொள்ளப்பட்டவர் தான் செய்ய வேண்டிய வேலையை அறிந்துக்கொள்வதற்கு முன்னதாகவே, அவரில் ஆயத்தம் பண்ணும் விஷயங்கள் ஆரம்பித்து விடுகின்றதிலிருந்து விளங்குகின்றது.

தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரத்திற்கான, கனத்திற்குரிய ஊழியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தேவன் ஆயத்தப்படுத்த விரும்பும் முக்கியமான விஷயம் இருதயத்தில் பரிசுத்தமாகும். அதாவது, தேவன் பேரிலும் அவருடைய நீதியின் பேரிலும், சத்தியத்தின் பேரிலும் பயபக்தி கொள்ளச் செய்வதும், மற்றும் பரிசுத்த மற்றதும், அசுத்தமானதுமான யாவற்றின் பேரிலும் வெறுப்புக் கொள்ளச் செய்வதுமாகும். "கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, அதன் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்" (ஏசாயா 52:11). கர்த்தருடைய வேலைகளில்............ சில பாகங்கள் தேவனுடைய ஞானத்திற்கும், வல்லமைக்கும் கனம் சேர்த்திட்டாலும், அவைகளில் ஈடுபடுபவர்களுக்கு எவ்வித கனமும் சேர்ப்பதில்லை. சத்துருக்களுடைய கோபத்தைக்கூடத் தேவனை மகிமைப்படுத்தும்படிக்குத் தேவன் மாற்ற வல்லவராக இருக்கின்றார். மேலும், தம்முடைய நோக்கத்திற்காக தீமையை, நன்மையாக மாற்றவும் தேவன் வல்லவராக இருக்கின்றார். உதாரணமாக, சாத்தான் மற்றும் தீமை செய்கிறவர்களுடைய தீமையான உபாதிகள் தெய்வீக வல்லமையினால் தேவனுடைய நன்மைக்கு ஏதுவாக மாற்றப்பட்டு, தேவனுடைய சில நோக்கங்களுக்காக ஊழியம் செய்கின்றனவாக ஆகிவிடுகின்றன. மேலும், சில சமயம் தேவனுடைய பிள்ளைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், சிலசமயம் உலகத்தின் விஷயங்களில் சீர்த்திருத்தம் கொண்டுவரவும் உதவுகின்றன.

யோவான் ஸ்நானனுடைய பிறப்பு முதல், அவருடைய இருதயமானது தேவனுக்கும், பரிசுத்தத்திற்கும் இசைவாகக் காணப்படத்தக்கதாக, அவர் பிறப்பதற்கு முன்பாக அவரிடத்தில் செயல்பட்ட தெய்வீக ஆதிக்கமானது அவரை நடத்தினது. மேலும், அவர் வயது வந்த போது, நீண்ட நாட்களாய் இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட மேசியாவை, அவர்களுக்கு அறிமுகப்படுத்தும் வேலைக்கு ஆயத்தமாகத்தக்கதாக, அவரது வாழ்க்கையின் பயிற்சியானது அவரை வழிநடத்தினது (வசனம்-15). அவரைக் குறித்து, "அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாய் இருப்பான்" என்று கூறப்பட்டுள்ளது. ஆம், யோவான் ஸ்நானன் மாபெரும் மனுஷனாகவும், ஒரு மாபெரும் பிரசங்கியாகவும், ஒரு மாபெரும் தீர்க்கத்தரிசியாகவும் இருந்தார். இவர் தீர்க்கத்தரிசிகள் எல்லோரிலும் பெரியவர் என்று இயேசு, மத்தேயு 11:11-ஆம் வசனத்தில் குறிப்பிடுகின்றார் என்றாலும், இவர் மனுஷருடைய பார்வையில் மகா பெரியவராகத் தென்படவில்லை. இவர், ஒருபோதும் ஏரோதின் அரண்மனையில் விருந்தினராக அழைக்கப்பட்டதில்லை என்றாலும், ஏரோதின் சிறைச்சாலைகளில் இவர் ஒரு கைதியாகக் காணப்பட்டார். இவர் யூதமத ஆலயங்களில் புகழ்மிக்க பேச்சாளராக இருக்கவில்லை என்றாலும், இவர் வனாந்தரத்திலே எழும்பும் கூக்குரலாகக் காணப்பட்டார். இவர் இரத்தாம்பரத்தினாலும், மெல்லிய பஞ்சு நூலினாலும், வஸ்திரத்தினாலும் தன்னைச் சிங்காரிக்கவும் இல்லை, தினந்தோறும் ஆடம்பரமாகச் செலவழிப்பவராகவும் இவர் இருக்கவில்லை. மாறாக, இவர் ஒட்டகத்தின் மயிரினாலான வஸ்திரத்தையும், தோல் கச்சையையும் தரித்தவராகவும், காட்டுத் தேனையும், வெட்டுக்கிளியையும் புசித்தவராகவுமே காணப்பட்டார். ஒரு சில காலங்கள் திரளான ஜனங்கள் இவருடைய பிரசங்கத்தினால் கவரப்பட்டு இருந்தாலும் கூட, வெகு சீக்கிரத்தில் இவர் ஜனங்களால் புறக்கணிக்கப்பட்டு, இராஜாவினால் சிறை வைக்கப்பட்டு, இறுதியில் சிறைக்குள் சிரச்சேதம் பண்ணப்பட்டார்.

எனினும், யோவான் உண்மையிலேயே ஒரு மாபெரும் மனுஷனாக இருந்தார்; காரணம் அவர், "கர்த்தருடைய பார்வையில் மகா பெரியவராக இருந்தார்." பட்டணத்தைக் கைப்பற்றுகிறவனைப் பார்க்கிலும் தன்னுடைய சொந்த ஆவியை தெய்வீக வார்த்தையின் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகளுக்கு இசைவாக ஆளுபவனே பெரியவன் என்ற விதத்தில்தான், யோவான் ஸ்நானனும் பெரியவராக இருக்கின்றார் (நீதிமொழிகள் 16:32). பிறப்பிலும், சூழ்நிலைகளிலும் எளிமையான மனுஷனாகக் காணப்பட்டவரும், தன்னுடைய பெற்றோரின் உடன்பிறந்தோரின் மகனாகக் காணப்பட்டவருமான **நாசரேத்தூரின் இயேசுவை**, மேசியாவாக ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தும் ஒரே வேலைக்கு என்று, தனது சகல மாம்சீக விருப்பங்களையும், நோக்கங்களையும்/இலட்சியங்களையும் அடக்கிவிட்டார். இயேசுவை அறிமுகப்படுத்தும் தனது வேலையை, தான் நிறைவேற்றின பின்னரே ஜனங்கள் சேர்க்கப்படுவார்கள் என்று யோவான் அறிந்திருந்தார் (ஆதியாகமம் 49:10). இப்படிச் செய்வதில் யோவான் பிரியமாக இருந்தார். மேலும், மாம்சத்தின்படி தனது உறவினனான இயேசுவுக்கு இவ்வேலையைச் செய்ததினிமித்தமும் தெய்வீக நோக்கத்தில், தீர்க்கத்தரிசனத்தில் தனக்கு உள்ள பங்கை நிறைவேற்றினபோதும் இவருடைய

சந்தோஷம் சம்பூரணமாயிற்று என்று தெரிவித்தார் (யோவான் 3:29). எளிமையான நாசரேத் ஊரானாகிய இயேசுவில், யோவான் தன்னுடைய விசுவாசக் கண்களினால், தேவனுடைய குமாரனைக் கண்டபடியால் யோவான் ஜனங்களை நோக்கி, "என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல" என்றும், "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்றும், "அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்" என்றார் (லூக்கா 3:16; யோவான் 1:29, 3:30).

இந்த எளிமையும் (சாந்தமும்), முழுமையான சுயத்தின் தியாகமும் மற்றும் தேவனுடைய நீதியான சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற இவருடைய ஒரே நோக்கமுமே/தெளிவான நோக்கமுமே யோவானைப் பெரியவராக்கிற்று. கர்த்தர் இவரைப் பயன்படுத்தத்தக்கதான இம்மாதிரியான இருதயத்தின் மனப்பான்மை இவரிடம் இருந்தபடியால், தீர்க்கத்தரிசிகள் எல்லோரிலும் இவர் பெரியவராகவும், மிகவும் கனம் பொருந்தினவராகவும் இருக்கும் சிலாக்கியம் இவருக்குக் கிடைத்தது. மேலும், இஸ்ரயேலுக்கும், உலகத்திற்கும் தேவனுடைய அபிஷேகம் பெற்ற குமாரனை, மீட்பரை, முழு உலகத்தின் எதிர்கால இராஜாவை அறிமுகப்படுத்துவதற்குத் தெரிந்துக்கொள்ளப்பட்ட சிலாக்கியம் இவருக்குக் கிடைத்தது. இவ்வாறாக, யோவான் ஸ்நானன் மாபெரும் மனுஷனாகவும், நீதி மற்றும் சத்தியத்தின் மாபெரும் பிரசங்கியாகவும், தீர்க்கத்தரிசிகள் எல்லோரிலும் பெரியவராகவும், தேவனுடைய இராஜ்யத்தில் பூமிக்குரிய பாகத்தின் சுதந்தரவாளிகளில் ஒருவராகவும் ஆனார்.

"கர்த்தருடைய பார்வையில் பெரியவனாக" இருக்க நாடும் ஒவ்வொருவருக்கும் இங்கு எவ்வளவு நன்மைக்கு ஏதுவான பாடங்கள் காணப்படுகின்றது. இது அப்போஸ்தலரின் ஞானமான எச்சரிப்பை நமக்கு நினைப்பூட்டுகின்றது. அதாவது, "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6). சிலுவையின் பாதையும், தாழ்மையின் பாதையும், அவமானத்தின் பாதையும், சுயத்தைத் தாழ்த்தும் பாதையுமே கிரீடத்திற்குரிய பாதையாகவும், தேவனிடத்திலிருந்து மாத்திரமே வரும் உண்மையான கனத்திற்கு நேரான பாதையாகவும் இருக்கின்றது. பூமியிலிருந்து கடந்துபோய்விட்ட சீசர்கள், ஏரோதுகள், அலெக்ஸ்சாண்டர்கள், நெப்போலியன்கள், யூதமத பரிசேயர்கள், வேதபாரகர்கள், வேத பண்டிதர்கள், ரபீகள் ஆகிய பூமியின் மகா பெரியவர்களின் கனம் இப்பொழுது எங்கே போயிற்று? போப்புகள், கண்காணிகள், போப்பின் மன்ற உறுப்பினர்கள் மற்றும் இவர்களுடைய நாட்களில் பொருமையாய்ச் செழித்தோங்கின பாதிரிகளின் கனம் எங்கே? இவர்கள் அனைவரும் வெறுமையான நிலைக்கு வந்துள்ளனர். மேலும், இவர்கள் ஆயிரம் வருடத்தில் நியாயத்தீர்ப்பின் நாளில் வெட்கமடைந்து, இவர்களின் கனம் உரிந்து போடப்படும் நிலமைக்கு வருவார்கள். ஆனால், "கர்த்தருடைய பார்வைக்கு முன்பாக மகா பெரியவர்களாகக் காணப்படுகிறவர்களாகிய" அந்த உண்மையுள்ளவர்கள், இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத்தில் வல்லமையிலும், மகிமையிலும், கனத்திலும் உயர்த்தப்படுவார்கள்.

"உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்" என்ற பாடம் நம்முடைய இருதயத்திற்குள் நிலைத்து நிற்பதாக (லூக்கா 22:26). இப்போது தாழ்த்தப்படுவதற்குப் பொறுமையோடு ஒப்புக்கொடுப்போமாக மற்றும் உண்மையுள்ள யாவருக்குள்ளும் வெளிப்படப்போகும் மகிமைக்காகச் சந்தோஷத்துடனும், நம்பிக்கையுடனும் காத்திருப்போமாக. இது பலன்கள் கொடுக்கப்படுவதற்கான காலமாகவோ, இடமாகவோ இராமல், ஒழுங்குகள் கற்றுக்கொள்வதற்கும், ஊழியம் செய்வதற்கும், குணலட்சணங்களை வளர்த்துக்கொள்வதற்கும் எதிர்க்காலத்தில் உயர்த்தப்படுவதற்கு ஏதுவான ஆயத்தமாக்குதல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், கறைதிரையற்றவர்களாக நம்மை நிறுத்துவதற்கு ஆயத்தமாக்குவதற்கும், நம்முடைய மீட்பரோடு உடன்சுதந்தரர்களாகும்படிக்கு ஆயத்தமாக்குவதற்குமே இது இடமாகவும், காலமாகவும் உள்ளது.

16 மற்றும் 17-ஆம் வசனத்திற்குரிய விளக்கங்களை அறிந்துக்கொள்வதற்கு வேதாகம பாடங்கள் (Volume) இரண்டாம் தொகுதி, 8-ம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

**ஆமென்!**

---

R 1937

# "வார்த்தைகளில் நீதிமான் என்று தீர்க்கப்படுதல் அல்லது வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுதல்"

"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" (மத்தேயு 12:34-37).

தற்காலத்தில் தம்முடைய இராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்ப்பதற்கும் மற்றும் தம்முடைய சம்பத்தாகிய தம்முடைய மணவாட்டியைத் தம்மிடத்தில் கூட்டிச் சேர்ப்பதற்கும் என்று இப்பொழுது வந்துள்ள இராஜரிக மணவாளனுடைய கண்காணிப்பின் கீழ், தற்காலத்தில் சபை காணப்படுகின்றது என்பதை நாம் உணருகையில், இந்த நியாயத்தீர்ப்பு மற்றும் தேர்ந்தெடுத்தலின் கொள்கைகளைக் கவனிப்பதில் நாம் ஜாக்கிரதையற்றவர்களாக இருக்கமுடியாது (மத்தேயு 22:11; 13:41; மல்கியா 3:17).

மேற்கூறப்பட்டுள்ள நமது கர்த்தருடைய வார்த்தைகளானது, இருதயமும், வாயும் விசேஷமான கவனிப்பின் கீழ் இருப்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றது. இருதயம் என்பது தனித்தனியான குணலட்சணங்களையும், வாய் என்பது, குணலட்ணத்தினுடைய அட்டவணையையும் குறிக்கின்றது. இதே கண்ணோட்டத்தில்தான் ஞானியுடைய வார்த்தைகளும் எழுதப்பட்டுள்ளது; "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும். வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து" (நீதிமொழிகள் 4:23-24). சரியான வார்த்தைகள் வாயிலிருந்து வெளிவருவதற்கு, சரியான இருதய நிலைமை அவசியமாய் உள்ளது தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஏனெனில், இருதயத்தின் நிறைவினால் வாய் பேசுகின்றது. மேலும், இதை ஒவ்வொரு மனுஷனும் அனுபவத்தில் புரிந்திருக்கின்றான். ஆகவே, கர்த்தர் சொல்லியிருப்பது போன்று, நமது வார்த்தைகளே கர்த்தருடைய கணிப்பில் நியாயத்தீர்ப்பதற்கான அடிப்படைக் காரியமாக இருக்கின்றது. தேன் போன்ற வார்த்தைகள், சில சமயம் பயங்கரமான மாய்மாலத்தை மறைப்பதற்கான முகமூடியாக இருப்பதும் உண்மையே. ஆனாலும், சுயநலமான காரியங்கள் நிறைவேறுவதற்குக் கையாளும் திறமையை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும்போது, சில காலத்திற்குப் பின்னர் நிச்சயமாக, தேன் போன்ற இனிமையான வார்த்தைகள் எனும் முகமூடி விலக்கப்படும். ஆகவே, வார்த்தைகள், சம்பாஷணைகள் மற்றும் நடத்தைகள் இருதயத்தின் அட்டவணையாக இருக்கின்றது.

ஆகவே, நமது முதல் கவனம் இருதயத்திற்காகக் காணப்பட வேண்டும்; அதாவது, அதன் ஆசைகள் மற்றும் பண்புகள், தெய்வீகக் கிருபையினுடைய முழுமையான கட்டுப்பாட்டிற்குள் இருக்கத்தக்கதாகவும், சத்தியம் மற்றும் நீதியின் ஒவ்வொரு கொள்கையும் இருதயத்தில் குடிக்கொண்டிருக்கத்தக்கதாகவும், நீதி, இரக்கம், சகோதர சிநேகம், அன்பு, சாந்தம், இச்சை அடக்கம், கிறிஸ்து மற்றும் தேவனுக்கு உன்னதமான பயபக்தி மற்றும் பரிசுத்த சகல அலங்காரத்திற்கும் உரிய தீராத அன்பும் ஜீவியத்தை ஆளும் கொள்கைகளாக உறுதியாக இருக்கத்தக்கதாகவும் கவனிக்கப்பட வேண்டும். ஒருவேளை இந்தக் கொள்கைகள் இருதயத்தில் நிலைநிறுத்தப்பட்டு, ஸ்திரப்படுத்தப்பட்டால், அப்பொழுது இருதயமாகிய நல்ல பொக்கிஷ சாலையிலிருந்து, வாயானது சத்தியம், ஞானம், கிருபை மற்றும் தெளிவான வார்த்தைகளைப் பேசுகின்றதாய் இருக்கும்.

பூரணமான இருதயமும், பாவம் மற்றும் வஞ்சனை இல்லாத வாயையுடைய நமது கர்த்தர் இயேசுவைக்குறித்து, "உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது;" "எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு; இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள்" (சங்கீதம் 45:2; லூக்கா 4:22)

ஆகிய வசனங்களில் பேசப்படுகின்றது. கர்த்தருடைய வார்த்தைகளின் ஆசீர்வாதமான செல்வாக்குக்குறித்து, மோசே கிறிஸ்துவை அடையாளப்படுத்தும் விதத்தில், "மழையானது இளம்பயிரின்மேல் பொழிவது போல, என் உபதேசம் பொழியும்; பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல, என் வசனம் இறங்கும்" என்று கூறியுள்ளார் (உபாகமம் 32:2). இயேசுவும், "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" (யோவான் 6:63) என்ற வார்த்தைகளைக் கூறுகின்றார். கர்த்தருடைய வார்த்தைகள் ஞானமுள்ளவைகளாகவும், நியாயமானவைகளாகவும், உண்மையுள்ளவைகளாகவும் இருந்தது. மேலும், அவருடைய சத்துருக்கள் அவரிடத்தில் ஏதாகிலும் குற்றம் கண்டுபிடிப்பதற்குத் தொடர்ந்து நாடினாலும், அவரைக்குறித்து, "அவர்கள் அவரை ஜனங்களுக்கு முன்பாகப் பேச்சிலே குற்றம்பிடிக்கக்கூடாமல், அவர் சொன்ன உத்தரவைக்குறித்து ஆச்சரியப்பட்டு, மவுனமாயிருந்தார்கள்" (லூக்கா 20:26). "சேவகர் பிரதியுத்தரமாக: அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்" என்று வாசிக்கின்றோம் (யோவான் 7:46).

இவ்விதமாக, கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு மாதிரியை விட்டுச்சென்றார். மேலும், இதை நாம் பின்பற்றும்படிக்கு அப்போஸ்தலர், அனைவருக்கும் வலியுறுத்துகின்றார். "உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக;" "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்;" "உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்;" "தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்;" "ஞானியினுடைய வாய்மொழிகள் தயையுள்ளவைகள்; மூடனுடைய உதடுகளோ அவனையே விழுங்கும்;" "அவன் வாய்மொழிகளின் துவக்கம் மதியீனமும், அவன் வாக்கின் முடிவு கொடிய பைத்தியமுமாம்;" "தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக" (கொலோசெயர் 4:6; 1 பேதுரு 4:11; சங்கீதம் 34:13; நீதிமொழிகள் 21:23; பிரசங்கி 10:12-13; 5:2).

யோபு தன்னுடைய கஷ்டமான சூழ்நிலைகள் அனைத்தின் மத்தியிலும், தன் உதடுகளினால் பாவம் செய்யாதபடிக்கு மிகவும் ஜாக்கிரதையுடன் காணப்பட்டார் (யோபு 2:10; 31:30; 1:21-22). கர்த்தர் தன்னுடைய வார்த்தைகளை, தனது இருதயத்தின் அட்டவணையாக எடுத்துக்கொள்வார் என்பதை யோபு அறிந்திருந்தார்; மற்றும், "தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் (புடமிடப்படுவதற்காக (அ) சிட்சிக்கப்படுவதற்காக உபத்திரவங்களும், பிரச்சனைகளும்) பெற வேண்டாமோ?" "கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என்று கூறி இருதயத்தையும், வார்த்தைகளையும் சரியானவிதத்தில் தக்க வைத்துக்கொள்வதில் ஜாக்கிரதையாகவும் காணப்பட்டார். கடுமையான சோதனைகளின் கீழ், அதிலும் எதற்காக தெய்வீக ஞானம் இந்தப் பிரச்சனைகளை அனுமதித்ததற்கான காரணத்தைத் தெளிவாகப் புரிந்துக்கொள்ள முடியாத நிலையில், எந்த இருதயத்தின் நிறைவினால், வாயானது கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்துள்ளதற்குரிய, பொறுமைக்குரிய, விசுவாசத்திற்குரிய வார்த்தைகளைப் பேசுகின்றதோ, அந்த இருதயத்தில் கலகத்தின்/எதிர்ப்பின் ஆவி இருக்கவில்லை என்பதாகும்.

"என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் (நீதிமானைச் சோதிக்கிறவன்) எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன்" என்ற உறுதியான தீர்மானத்தின் வார்த்தைகளைச் சங்கீதக்காரன், தேவனுக்கென்று அர்ப்பணம் பண்ணி, பரீட்சிக்கப்பட்ட ஜனங்களின் வாயில் வைக்கின்றார் (சங்கீதம் 39:1).

இந்தத் தீர்மானம் மற்றும் இந்தத் தீர்மானத்தினால் வளர்ச்சியடையும் சுயகட்டுப்பாடு, கிறிஸ்தவனுடைய குணலட்சணம் உறுதியாய்க் காணப்படுவதற்கு எவ்வளவு அவசியமாய் இருக்கின்றது. அன்பற்ற உலகத்திடமிருந்து, கர்த்தரைப் போன்று நிந்தனைகளையே நாம் எதிர்ப்பார்க்க முடியும், ஏனெனில் ஊழியக்காரன் தன்னுடைய எஜமானினும் பெரியவன் அல்ல. உலகம், மாம்சம் மற்றும் சாத்தான் நம்முடைய வழியை எதிர்க்கின்றனர்; நம் உள்ளுக்குள்ளே யுத்தங்களும் நடக்கின்றன மற்றும் அநேக அம்புகளும், அக்கினியாஸ்திரங்களும் நீதிமான் மீது எய்யப்படுகின்றன. ஆனால், இத்தகைய பிரச்சனைகள் மற்றும் கடுமையான பரீட்சைகளின் கீழ் ஆத்துமாவிடம் காணப்பட வேண்டிய பாதுகாப்பான மனநிலை என்ன? ஆத்துமாவானது, அதிகமான பிரச்சனைகளைக் கொண்டுள்ள ஒன்றில் இறங்குவதற்குத் துணியும் முன்பு, தேவனுக்கு முன்பு அமைதியுடன் காணப்பட்டு, காத்திருந்து, அவருடைய வழிநடத்துதலையும் அவருடைய

சித்தத்தையும் பார்ப்பதற்கென முதலாவது கவனிப்பதும்தான் பாதுகாப்பான மனநிலை அல்லவா. ஆகவேதான் சங்கீதக்காரன், "நான் மவுனமாகி, ஊமையனாயிருந்தேன், நலமானதையும் (என்னுடைய சொந்த பார்வைக்கு நலமானதாக தோன்றினதைப் பேசுவதிலிருந்து (அ) செய்வதிலிருந்தும்) பேசாமல் அமர்ந்திருந்தேன்; ஆனாலும் என் துக்கம் அதிகரித்தது; என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது (தாவீது இவ்விதமாய் கடுமையான சோதனையை விவரிக்கின்றார்); அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் (திட்டுகின்றவர்களிடத்திலோ, மற்ற எவரிடத்திலோ ஏறெடுக்காமல் மாறாக கர்த்தரிடத்தில்) செய்தேன்" என்று கூறுகின்றார் (சங்கீதம் 39:2-3). நம்முடைய துக்கங்களையும், ஏமாற்றங்களையும், கர்த்தரிடத்தில் எடுத்துச்செல்வது என்பது எப்பொழுதும் நமக்கான பாக்கியமான சிலாக்கியமாக இருக்கின்றது.

சங்கீதம் 39:4-6 வரையிலான வசனங்களிலுள்ள கருத்தின் வாயிலாக, ஆத்துமாவின் விருப்பங்களைத் திருப்திச் செய்வதற்கோ அல்லது காயப்பட்ட மனதை/ஆவியை ஆறுதல்படுத்துவதற்கோ பூமிக்குரிய விஷயங்கள் முற்றிலும் ஆற்றல் அற்றவைகள் என்றும், அவைகள் பயனற்றவைகள் என்றும் தேவன் நமக்குக் காட்டித் தருகின்றார். அடுத்ததாக தற்கால ஜீவியமும், அதன் கவலைகள், ஏமாற்றங்கள் மற்றும் துக்கங்கள் கடந்து போகக்கூடியவைகள் என்றும், நம்முடைய நாட்கள் நாலுவிரற்கடையளவுதான் என்றும், நம்முடைய அனுபவங்கள் எவ்வளவு வேதனையானவைகளாக இருப்பினும், அவைகள் சீக்கிரம் முடிந்துவிடும் என்றும், நாம் கஷ்டமான அனுபவங்களைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளும் பட்சத்தில், அவைகள் நம்மிடத்தில் நீதிக்கு ஏதுவான சமாதான கனிகளையே உண்டுபண்ணி நமக்குள் பலமான, அருமையான குணலட்சணங்களையும் வளர்க்கும் மற்றும், முழுமையான சுயக்கட்டுப்பாடு கொள்ளத்தக்கதாகவும், ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகவும், துன்பங்களைப் பொறுமையாய்ச் சகிக்கத்தக்கதாகவும், அன்புடன் நேர்மையாக இருக்கத்தக்கதாகவும், உண்மையாய் இருக்கத்தக்கதாகவும், தேவனிடத்தில் விசுவாசமாய் இருக்கத்தக்கதாகவும் நெறிமுறைப்படுத்துகின்றது என்றுமுள்ள விஷயத்தையும் தேவன் காட்டித்தருகின்றார். அடுத்ததாக, வரவிருக்கின்ற ஜீவியத்தில் நீதிமான்களுக்குரிய பாக்கியமான பலன்கள் குறித்த வாக்குத்தத்தங்களை ஆழமான மற்றும் புதிய முக்கியத்துடன் நமக்குத் தேவன் தோன்றச் செய்கின்றார். மேலும், இது நமக்கு நிரந்தரமான பட்டணம் இல்லை என்றும் மாறாக, வரவிருக்கின்ற ஒன்றையே நாடுகின்றோம் என்றும், நாம் தேவனால் உணர வைக்கப்படுகின்றோம். இவ்விதமாக இருதயமானது, பூமிக்குரிய காரியங்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, பரம காரியங்களுடைய உன்னதமான மதிப்பை உணர வைக்கப்படுகின்றது. மாறிமாறி புரட்டப்பட்டு, சோதிக்கப்பட்டு வரும் ஆத்துமாவின் ஏக்கங்களைக் கர்த்தரைத் தவிர வேறு எதுவாலும் திருப்திச் செய்ய முடியாது.

இப்படியாகத் தண்டிக்கப்பட்டு, ஆறுதல்படுத்தப்பட்டு நாம் விசுவாசம் உள்ளவர்களுக்கு மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டுள்ள பரிசை நாடி, மாறுபாடுள்ள சந்ததி மத்தியில் பொறுமையுடன் தொடர்ந்து நற்கிரியை நடப்பிக்கிறவர்களாகிய, உண்மையாய் ஜெயங்கொள்பவர்களிடத்தில் போகப்போக வெளிப்படுத்தப்படும் மகிமையைத் தற்காலத்திற்கப்பால் நோக்கக் கற்றுக்கொள்கின்றோம். கடுமையான சோதனைகளில் உதவிக்காகவும், ஆறுதலுக்காகவும் கர்த்தரிடத்தில் கடந்துசென்று, இப்படியாக ஆசீர்வதிக்கப்பட்டு, நெறிமுறைப்படுத்தப்பட்ட தேவனுடைய பிள்ளை, உலகத்திற்கு மரிப்பது பற்றியும் அவருடைய அன்பு, ஈவு மற்றும் கிருபை குறித்த கூர்மையான புரிந்துக்கொள்ளுதலுடன் கூடத் தேவனுக்கென்று ஜீவிப்பது பற்றியும் உணர்ந்துக்கொள்ள ஆரம்பிக்கின்றார். மேலும், இப்படியாக உலகத்திடமிருந்து பிரிக்கப்பட்டு, மிக உறுதியாக கர்த்தரிடத்தில் இணைந்துள்ள இருதயத்தின் வார்த்தைகள், "இப்போதும் ஆண்டவரே, நான் எதற்கு எதிர்ப்பார்த்திருக்கிறேன்? நீரே என் நம்பிக்கை" என்ற வார்த்தைகளாகவே இருக்கும் (சங்கீதம் 39:7).

இதுவே சோதனை மற்றும் ஏமாற்றமான சூழ்நிலைகளில் நாவுக்குக் கடிவாளம் இட்டுக்கொண்டு, நமது அனைத்துக் கவலைகளையும், கர்த்தரிடம் ஜெபத்தில் தாழ்மையுடன் எடுத்துச் சென்றதற்கான பாக்கியமான விளைவாகும். இந்த விளைவின் காரணமாக நாம் பேசும்போது, நம்முடைய பேச்சு, கிருபையினாலும், உப்பினால் சாரமேற்றப்பட்டதாகவும் காணப்படுகின்றது மற்றும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் நாம் தேவனுடைய வாக்கியங்களையே பேசுகின்றவர்களாகவும் இருப்போம்.

"பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்" என்ற கர்த்தருடைய வார்த்தைகளையும், மற்றும் தற்காலமே (சபையாகிய) நம்முடைய நியாயத்தீர்ப்பு நாள் என்ற உண்மையையும் குறித்து நாம் சிந்திக்கும்போது, நம்முடைய வார்த்தைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் இருப்பதை நாம் பார்க்கின்றோம். நம்முடைய அனைத்து வார்த்தைகளும், நம்முடைய இருதயத்தினுடைய அட்டவணையாகக் கர்த்தரால் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. ஒருவேளை நம்முடைய வார்த்தைகள் இரக்கமற்றதாக, நன்றியற்றதாக, பரிசுத்தமற்றதாக (அ) தூய்மையற்றதாக (அ) மரியாதையற்றதாக (அ) விளையாட்டுத்தனமாக/அற்பத்தனமாக (அ) நேர்மையற்றதாக (அ) கலகத்திற்குரியதாய் இருக்குமானால், "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்ற கொள்கையின் அடிப்படையிலேயே இருதயம் நியாயம் தீர்க்கப்படுகின்றது. இப்படியாக, நம்முடைய அன்றாட ஜீவியத்தில் பல்வேறு விதமான சூழ்நிலைகளில் பேசப்படும் நம்முடைய வார்த்தைகள், அச்சூழ்நிலைகளில், நம்முடைய இருதயத்தின் நிலைமையைக் குறித்துத் தொடர்ந்து தேவனுக்கு முன்பு சாட்சி பகர்ந்து கொண்டிருக்கின்றது. இவைகளுக்கு இசைவாகத்தான் பின்வரும் வசனம் இடம்பெறுகின்றது. "தேவன் முன்னிலையில் சிந்தித்துப் பாராமல் எதையும் பேசாதே, மனம்பதறி எண்ணிப்பாராமல் வாக்குக் கொடாதே இரு (மற்றும் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய அவருடைய கண்களுக்கு முன்பாக சகலமும் நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது என்பதை ஞாபகத்தில் கொண்டிரு). ஏனெனில், (நம்முடைய நியாயாதிபதியாகிய) தேவன் (சிங்காசனத்தில்) வானத்திலிருக்கிறார். நீ (தேவனுடைய கூண்டிற்கு முன்பு விசாரணையின் கீழ்) பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக" (பிரசங்கி 5:2; எபிரெயர் 4:13 திருவிவிலியம்). ஆகையால், தேவன் முன்னிலையில், சிந்தித்து வார்த்தைகள் பேசப்பட வேண்டுமே ஒழிய, துணிகரமாகவோ, எண்ணிப் பார்க்காமலோ, சிந்திக்காமலோ பேசக் கூடாது.

இன்னுமாக நம்முடைய வார்த்தைகளுக்குரிய பொறுப்புத் தொடர்பாக கர்த்தர் பேசின வார்த்தைகளுக்கு நீதிமொழிகள் 13:3-ஆம் வசனமும் இசைவாக இருக்கின்றது; "தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்." தேவனுக்கு அவமதிப்பாய் இருக்கும் அளவுக்குக் கூடப் பொல்லாத விதத்தில் கேலி அல்லது மரியாதையற்ற விதத்தில் கேலி செய்யக் கூடிய நாவுக்கு, எவ்வளவு பயப்படக் கூடிய பொறுப்பு இருக்கின்றது! மேலும் 1 பேதுரு 4:7-ஆம் வசனத்தில் இடம்பெறுகிறபடி, "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" என்ற அப்போஸ்தலர் பேதுருவின் கட்டளைகளும் எத்துணை அவசியமானவைகள் (1 பேதுரு 1:13; 5:8).

இந்த ஒரு பொறுப்பை உணர்கின்றவர்கள் அனைவருடைய உதடுகளிலும், சங்கீதக்காரன், பின்வரும் இந்த ஜெபத்தின் வார்த்தைகளை வைக்கின்றார். "கர்த்தாவே, என் வாய்க்குக்காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும். அக்கிரமஞ்செய்கிற மனுஷரோடே ஆகாமியக் கிரியைகளை நடப்பிக்கும்படி என் இருதயத்தைத் துன்மார்க்கத்திற்கு இணங்கவொட்டாதேயும்." "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக." "உம்முடைய பிரமாணங்களை நீர் எனக்குப் போதிக்கும்போது, என் உதடுகள் உமது துதியைப் பிரஸ்தாபப்படுத்தும். உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்; ஆதலால், என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச்சொல்லும். நான் உம்முடைய கட்டளைகளைத் தெரிந்துக்கொண்டபடியால், உமது கரம் எனக்குத் துணையாயிருப்பதாக. கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்பின்மேல் ஆவலாயிருக்கிறேன்; உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி" (சங்கீதம் 141:3-4; 19:14; 119:171-174).

நாம் பூரணமற்ற ஜீவிகளாக இருக்கின்றபடியினால், நாம் வார்த்தையிலும், கிரியையிலும் எப்பொழுதும் பூரணமாய் இருப்பது முடியாத காரியமாகும். நம்மால் முடிந்த சிறந்த பிரயாசங்களை எடுத்தாலுங்கூட, சில சமயம் நாம் வார்த்தையிலும், கிரியையிலும் தவறு செய்துவிடுகின்றோம். எனினும் பூரணமான வெற்றியை நம்முடைய வார்த்தைகளிலும், வழிகளிலும் அடைவதற்குக் கடுமையான, உண்மையான, விடாமுயற்சியுடன் கூடிய முயற்சியின் மூலம் நாடப்பட வேண்டும், எனினும் ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும், இந்த நம்முடைய நியாயத்தீர்ப்பின் நாளில் நாம் கணக்குக் கொடுக்க வேண்டியுள்ளது. ஒருவேளை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குரிய கடமையின்படி, நாம் நம்முடைய வழிகளைத் தினந்தோறும் ஆராய்ந்து பார்க்கையில், ஏதோ குறிப்பிட்ட நம்முடைய வார்த்தைகள் கர்த்தரைக் கனவீனப்படுத்துகின்றதாக நாம் கண்டுபிடிப்போமானால், "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துப் பேசுகிறவராயிருக்கிறார்" என்ற வசனத்தின் வார்த்தைகளை நாம் நினைவுகூர்ந்து, நமக்குப் பரிந்துப்

பேசுபவருடைய நாமத்தினால் கிருபையின் சிங்காசனத்தை நாம் அணுகி, நாம் தவறை உணர்ந்துக் கொண்டதையும், பரிசுத்தமான நடக்கை மற்றும் சம்பாஷணையின் மூலம் அவருடைய நாமத்தையும், அவருடைய நோக்கத்தைக் கனப்படுத்தவதற்கு நாம் தவறிப் போனதினிமித்தம் நாம் துக்கம் கொள்வதையும் நமது பரம பிதாவினிடத்தில் விவரித்து, நம்முடைய கணக்கில் பாவம் சேர்த்து வைக்கப்படாமல், அவருடைய கிருபையான ஏற்பாடாகிய கிறிஸ்து மூலமான நம்முடைய சுத்திகரிக்கப்படுதலின் மூலம், பாவம் அகற்றப்படும்படிக்குத் தாழ்மையாக விண்ணப்பிக்க வேண்டும்; மற்றும் கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தமே தங்களுடைய நம்பிக்கையாக இருக்கின்றது எனவும் தாழ்மையுடன் தெரிவிக்க வேண்டும் (1 யோவான் 2:1).

இவ்விதமாக, ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நாம் நம்முடைய கணக்கை ஒப்புவிக்க வேண்டும்; மற்றும் மனவருத்தத்தைத் தெரிவிக்கும் நம்முடைய வார்த்தைகளினாலும், விசுவாசத்தின் மூலமாய்க் கொடுக்கப்படும் கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் பலனினாலும் நாம் குற்றவாளி நிலையினின்று விடுவிக்கப்படுகின்றோம். இல்லையேல் கர்த்தரைக் கனவீனப்படுத்துகின்ற நம்முடைய வீணான வார்த்தைகள் நமக்கு எதிராய்க் காணப்பட்டு, நம்மைக் குற்றவாளியாக தீர்க்கும்; மற்றும் நாமும் பின்விளைவுகளை அனுபவித்தாக வேண்டிய நிலையிலும் காணப்படுவோம். முதலாம் பின்விளைவு சுயபாதிப்பாகும். ஏனெனில், இடம்கொடுக்கப்படும் ஒவ்வொரு தீமையான எண்ணம் (அ) வார்த்தை குணலட்சணத்தைக் கடினப்படுத்தி விடுகின்றது மற்றும் அநீதியானவைகளிடத்திற்கு நேராக இன்னமும் நடத்திவிடுகின்றது. இரண்டாம் பின்விளைவு மற்றவர்களுக்கு மோசமான மாதிரியாக இருந்து, மற்றவர்களுக்குள் பொல்லாங்கைத் தூண்டி விடுவதாகும். "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்" (நீதிமொழிகள் 15:1). இப்படியாக ஞானமற்ற (அ) அன்பற்ற வார்த்தைகளின் விளைவாக நாம் நமக்கு பிரச்சனைகளைத் தூண்டிவிடுவோம்; இந்தப் பிரச்சனைகள்/கஷ்டங்கள்/இடர்பாடுகளானது சுயகட்டுப்பாடு பற்றியும், மற்றவருடைய உணர்வுகளையும், கருத்துக்களையும் கவனத்தில் எடுத்துக்கொள்வது பற்றியுமான படிப்பினைகளை நமக்குப் போதிக்கும், தவறுக்கான தண்டனை அளிக்கும் நியாயத்தினுடைய பிரதிநிதிகளாக மாறிவிடுகின்றன. நம்முடைய சொந்த தவறுகளினால் இயல்பாக வரும் விளைவுகளானது, பெரும்பாலும் கர்த்தரால் அல்லது சாத்தானால் அனுப்பப்படுகின்ற சோதனைகள்/பிரச்சனைகள் என்று குற்றம் சாட்டப்படுகின்றன. பிரச்சனைக்கான வேர் தங்களிடத்தில்தான் இருக்கின்றது எனக் கண்டுபிடிக்கத் தவறுகின்றவர்கள், கடுமையான சுய நெறிமுறைப்படுத்துதலினாலும் மற்றும் வசனங்களுக்குக் கீழ்ப்படிவதினாலும் தங்களாலேயே அப்புறப்படுத்த முடிகின்றவைகளை, அற்புதகரமான விதத்தில் கர்த்தர் எடுத்து மாற்றும்படிக்கு வீணாக ஜெபம் ஏறெடுக்கின்றவர்களாக இருக்கின்றனர். "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் (மற்றும் சரிச்செய்து கொண்டால்) நாம் நியாயந்தீர்க்கப்படோம்; நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே (நம்முடைய தவறுகள் நம்மைக் கொண்டு செல்லும் அனுபவத்தினால் பெரும்பாலும்) சிட்சிக்கப்படுகிறோம்" (1 கொரிந்தியர் 11:31-32). இடர்பாடுகள்/கஷ்டங்கள்/பிரச்சனைகள் நேரடியாக தேவனாலோ, அல்லது சாத்தானாலோ உண்டாக்கப்படவில்லை, "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்" (யாக் 1:14). ஆனால், மற்ற ஒருவர் மேல் குற்றத்தைப் போட்டு விடுவதும், நாம் பொறுமையை இழந்ததற்கும், நாம் யோசிக்காமல் வார்த்தை பேசினது அல்லது கிரியை செய்தது இன்னொருவருடைய தவறினால் என்று எண்ணிக்கொள்வதும் இயல்பாகக் காணப்படுகின்றது. நம்மில் எத்தனை பேர், பின்வரும் எண்ணங்களினால் நம்மையே ஊக்குவித்துக் கொண்டு, நம்மையே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோம்..........அதாவது "அனைவருமே நியாயமாகவும், நல்லவர்களாயும் நடந்துக்கொள்வார்களானால், பூமி சௌர்க்கம் போல் காணப்படுமே" என்பதேயாகும். அன்பானவர்களே, நாம் ஒருவேளை சத்தமாக உச்சரித்துப் பேசாவிட்டாலும், நம்முடைய இருதயங்களுக்குள் நாம் கொண்டிருக்கும் சுய பாராட்டுதல் மற்றும் சுயதிருப்தியின் வார்த்தைகள், நம்மைக் குற்றவாளியாக்கி விடாதபடிக்கு, நாம் நம்மையே ஆராய்ந்து பார்ப்போமாக, மிகவும் தாழ்மையாகவும் இருப்போமாக. "உங்களுக்கு நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன?" (லூக்கா 6:33-38). "அநியாயமாய்ப் பாடுபட்டு, உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகிக்கிறவர்களாய்" நாம் காணப்பட்டால் மாத்திரமே, நம்முடைய பாடுகள் தேவன் அங்கீகரிக்கத்தக்கதாக இருக்கும், மற்றும் சுகந்த வாசனையுள்ள பலியாகவும் காணப்படும். "நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்" (1பேதுரு 2:19-21).

அன்பிற்குரியவர்களே நாம் நீதியினிமித்தமாக மாத்திரம் நம்முடைய பாடுகள் காணப்படத்தக்கதாகப் பார்த்துக்கொள்ளக்கடவோம் மற்றும், நாம் சுதந்தரித்துக் கொண்ட அல்லது வளர்த்து, விருத்திச் செய்த தவறுகளுக்கு நாம் இடம்கொடுத்தக் காரணத்தினால் உண்டாகும் உபத்திரவங்களுக்கான பழியைத் தேவன் மீது (அ) நம்முடைய அயலார் மீது சுமத்தாமல் இருப்போமாக.

"நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்" (யாக்கோபு 3:2). ஆனால், இப்படிப்பட்ட மனுஷன் எவனும் இல்லை. ஒவ்வொரு எண்ணங்களைக் கிறிஸ்துவின் சித்தத்தின் கீழ்ச் சிறைப்படுத்துவதற்கும், கர்த்தருக்குரிய பயபக்தியில் பூரண பரிசுத்தத்திற்குக் கொண்டு வருவதற்கும் நாம் அன்றாடம் முயற்சிக்கையில், நாம் நமக்குப் பரிந்துபேசுபவராகிய, நம்முடைய மீட்பருடைய புண்ணியத்தின் பலனுக்காக நாம் அனைவரும் தொடர்ந்து வேண்டி கொண்டிருப்பவர்களாகவும் காணப்பட வேண்டும்.

இந்தக் கண்ணோட்டத்தின்படி, நாம் அனைவரும் இப்பொழுது நியாயத்தீர்ப்பின் கூண்டிற்கு முன்பு காணப்படுகின்றோம் என்பதை அதிகமதிகமாய் உணர்ந்துக்கொள்ள கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் முயற்சிக்கின்றனர் என நாம் நம்புகின்றோம். அப்போஸ்தலர் பேதுரு, "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்" என்ற கேள்வியை நாமும் கேட்கின்றோம் (2 பேதுரு 3:11). பாதகமான வதந்திகள்/வீண்பேச்சு, கெட்ட (அ) பரிசுத்தமற்ற சம்பாஷணைகள், நேர்மையற்ற (அ) எதிர்ப்பின் வார்த்தைகள் அடங்கிய பேச்சுகள் எதுவும், தேவபக்திக்குள் நிச்சயமாக அடங்காது. கிறிஸ்துவின் நாமத்தை உண்மையாகவும், நேர்மையாகவும் தரித்துள்ளவர்கள், மேற்கூறியவைகளை அகற்றிவிடுவார்களாக. கர்த்தருடனான நம்முடைய கணக்குகளை நாம் தினந்தோறும் சரிச்செய்து முடித்துவிட வேண்டும் என்றும், எந்த வீண் வார்த்தைகளும் மனவருந்தப்படாமல், மன்னிப்புப் பெற்றுக்கொள்ளப்படாமல் சேர்த்து வைத்து, நமக்கு எதிராய்க் குற்றப்படுத்தும் நிலையில் கணக்குகளை வைத்துக் கொள்ளக்கூடாது என்றும் நாம் நினைவில்கொள்வோமாக. "எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்." "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்" (பிலிப்பியர் 1:27; 4:8). இவ்விதமாக இருதயமாகிய நல்லப் பொக்கிஷத்திலிருந்து, நம்மால் சத்திய வார்த்தைகளைப் பேசமுடியும்; மற்றும் தேவபக்தியான நடத்தை மற்றும் சம்பாஷணை மூலம் நமது கர்த்தரைக் கனப்படுத்த முடியும்; மற்றும் நம்முடைய விழுந்துபோன சுபாவத்தின் பொல்லாத தன்மைகளைக் கீழ்ப்படுத்தவும் முடியும்; மற்றும் "புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" (1 பேதுரு 2:12) என்ற வசனத்தின்படியும் காணப்பட முடியும்.

ஒருவேளை தினந்தோறும் தேவனிடத்தில் நம்முடைய கணக்குகளை நாம் ஒப்புவித்து, ஒவ்வொரு நாளும், அதிகமான ஜெயங்கொள்ளுவதற்குரிய வல்லமைக்கான அவரது கிருபையை நாடுவோமானால், நாம் குற்றமற்றவர்களாகத் தீர்க்கப்பட்டு, கிறிஸ்து மூலம் தேவனால் அங்கீகரிக்கப்படும் நிலையில் நிற்க முடியும், மற்றும் நாம் அவருக்கு அங்கீகரிக்கத்தக்கதாகவும், பிரியமாகவும் இருக்கின்றோம் என்பதை நம்முடைய ஆவியுடன் அவருடைய ஆவி கொடுக்கும் சாட்சியை உடையவர்களாகவும் இருப்போம்.

**ஆமென்!**

# நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதல்

புறமத மண்டலத்தார் மற்றும் ஆச்சாரமான பெயரளவிலான கிறிஸ்தவ மண்டலத்தாருடையவைகளிடமிருந்து வேறுபடுத்திப்பார்க்கையில், உண்மை சபையினுடைய நினைவுகூருதல்களானது சொற்பமானதாகவும், எளிமையானதாகவும் காணப்படுகின்றன. அநேக உபவாசம் மற்றும் பண்டிகை நாட்களையும், வாரங்களையும் பெற்றிருப்பதற்குப்பதிலாக, நாம் மூன்று நினைவுகூருதல்களை மாத்திரம் பெற்றிருக்கின்றோம்; அவை:

(1) ஞானஸ்நானம்; இது ஏற்கெனவே நீதிமானாக்கப்பட்ட மனுஷீக சித்தத்தை, கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய சித்தத்திற்குள் மரிக்கப்பண்ணுவதற்கும், அடக்கம் பண்ணுவதற்குமான அடையாளமாகும்.

(2) நினைவுகூருதல் இராப்போஜனம்; இது நமது கர்த்தருடைய சரீரமானது சொல்லர்த்தமாகவே பிட்கப்பட்டதையும், அவரது இரத்தம் சிந்தப்பட்டதையும் (கல்வாரியில், "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவென" அவரது மரணத்தையும்) மற்றும் நாம் அவரோடேகூடப் பிழைத்திருக்கத்தக்கதாக, "அவரோடேகூட மரிக்கத்தக்கதாகவும்", நாம் அவரோடேகூட மகிமையடையத்தக்கதாக, "அவரோடேகூடப் பாடுகளைச் சகிக்கத்தக்கதாகவுமான" நம்முடைய உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொள்வதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

(3) இன்று ஞாயிறு என்று பொதுவாய் அழைக்கப்படுகின்றதான வாரத்தினுடைய முதல்நாளானது, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான நினைவுகூருதலாகும்.

நமது கர்த்தர் இந்த மூன்று அருமையான, ஆனால் எளிமையான நினைவுகூருதல்கள் அனைத்தையும் நிறுவினார். அவரது ஞானஸ்நானமானது, யூதர்களுக்கென்று மாத்திரம் பிரசங்கிக்கப்பட்டதான "மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானமாகிய" யோவானின் ஞானஸ்நானத்திலிருந்து வேறுபட்டதாயிருக்கின்றது; ஏனெனில் நமது கர்த்தர் மனந்திரும்புவதற்கு எந்தப் பாவங்களையும் பெற்றிருக்கவில்லை. அவரது ஞானஸ்நானமானது புதிய ஒழுங்கின்படியான முதல் ஞானஸ்நானமாய்க் காணப்படுகின்றது; மற்றும் இது ஏற்கெனவே பிதாவினால் அங்கீகரிக்கப்படும் நிலையாகிய நீதிமானாக்கப்பட்ட மனுஷீகத்தின் சித்தத்தினுடைய மரணத்தையும், தேவனுடைய சித்தத்திற்கு முழுமையான ஒப்புக்கொடுத்தலையும், முழுமையான கீழ்ப்படிதலையும், முழுமையான அர்ப்பணிப்பையும்* அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. [* "ஞானஸ்நானமும், அதன் அர்த்தமும்" எனும் ரீபிரிண்ட்ஸ் 1539 பார்க்கவும்]. இது யோவானுடைய ஞானஸ்நானத்தின் இடத்தை எடுத்துக்கொண்டது (அப்போஸ்தலர் 19:3-5).

நினைவுகூருதல் இராப்போஜனத்தையும், ஞானஸ்நானத்தையும், எந்த விதத்தில் நமது கர்த்தர் நிறுவினாரோ, அதைப்போலவே வாரத்தினுடைய முதல் நாளின் காரியத்தையும் நமது கர்த்தர் நிறுவினார்; அதாவது கட்டளையின் மூலமாய் அல்ல, மாறாக மாதிரியின் மூலம் நிறுவினார். அவர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், உடனே வாரத்தினுடைய முதல்நாளில் சீஷர்களைச் சந்தித்தார்; கல்லறை அருகே மரியாளையும், சீமோன் பேதுருவையும், எம்மாவூருக்குப்போன இருவரையும், மேல்வீட்டறையில் பத்துச் சீஷர்களையும் சந்தித்தார் (யோவான் 20:1, 14, 19; லூக்கா 24:13-31, 34, 36). பின்னர் ஒரு வாரம் காத்திருந்து, மீண்டுமாக எட்டாம்நாளில்அவர்களுக்குத் தோன்றினார்; இந்த எட்டாம்நாள் என்பது அநேகமாக ஏழாம்நாளைப் பின்தொடரும் நாளாகும், அதாவது வாரத்தினுடைய முதல்நாளாகும் (யோவான் 20:26). இப்படியான நிகழ்விற்கான எதிர்ப்பார்ப்புகளைச் சீஷர்கள் கொண்டிருந்திருக்கின்றனர் மற்றும் ஒன்றுகூடி இருக்கின்றனர் மற்றும் அவரை அறிந்துகொள்ளத்தக்கதாகத் தங்களுடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டதையும், அதுவும் "அப்பம் பிட்குதல்" தொடர்புடையதாய் இருந்தது என்பதையும் அவர்கள் நினைவுகூர்ந்தவர்களாக, பின்னர் முதல் நாள்தோறும் அவர்கள் கூடிக்கொண்டது மாத்திரமல்லாமல், "அப்பம் பிட்குதல்" என்று அழைக்கப்படுகின்றதான எளிமையான உணவை ஒன்றுகூடிப் புசிக்கவும் செய்தனர். இந்த "அப்பம் பிட்குதலை" நம்முடைய நாட்களில், சிலர் கடைசி இராப்போஜனத்தினுடைய நினைவுகூருதலின் ஆசரிப்பு என்று தவறாய்ப் புரிந்துகொண்டுள்ளனர். இரண்டுமே முற்றிலும் வேறானவைகளாகும்; ஒன்று மரணத்திற்கான நினைவுகூருதலாகவும், மற்றொன்று சந்தோஷத்தோடு உயிர்த்தெழுதலைக் கொண்டாடுதலுமாகும். வாரத்தினுடைய முதல்நாளானது, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான மற்றும் வெளிப்படுத்துதலுக்கான,

ஐக்கியத்திற்கான நினைவுகூரும்நாளாக மாத்திரம் மதிக்கப்படாமல், மீண்டுமாக பெந்தெகொஸ்தே நாளின் தெய்வீகத் தயவானது அதே நாளில் பாராட்டப்பட்டபடியால், அந்நாள் பரிசுத்த ஆவி பொழியப்பட்டதற்கும் நினைவுகூருதலானது. (அப்போஸ்தலர் 2:1; 20:7; 1 கொரிந்தியர் 16:2)

யூதருடைய பஸ்கா இராப்போஜனத்தின் இடத்தில் இடம்பெறத்தக்கதாக, நமது கர்த்தர் நினைவுகூருதல் இராப்போஜனத்தை நிறுவினார். இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள், எகிப்தின்மீதுவந்த கடைசி வாதையினின்று விடுவிக்கப்பட்டதற்கும் மற்றும் பின்னர் முழு இஸ்ரயேல் ஜாதியும் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டதற்கும் நினைவுகூருதலாக ஒவ்வொரு யூதருடைய வருடந்தோறும், முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்று, பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அடிக்கப்படுதலானது செய்யப்பட வேண்டும். நமது கர்த்தர்தாமே, ஆட்டுக்குட்டியினுடைய நிஜமாவார். அவரது சபை, தப்புவிக்கப்பட்ட இஸ்ரயேலின் முதற்பேறானவர்களுக்கு நிஜமாவார்கள்; மேலும் தேவனை அன்புகூருகின்றவர்கள் அனைவரும் சாத்தான் கீழுள்ள பாவம் மற்றும் மரணம் எனும் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படப்போகின்றதான, வரவிருக்கும் "திரும்பக்கொடுத்தலானது," இஸ்ரயேல் ஜாதியாருடைய விடுதலைக்கான நிஜமாகும்.

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதும், அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதுமான பலியைசெலுத்தின தேவ ஆட்டுக்குட்டியின் மாம்சத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றதான புளிப்பில்லா அப்பம் மற்றும் திராட்சரசமுள்ள நினைவுகூருதல் இராப்போஜனமானது, முதற்பேறான சபையானவளின் நினைவில் அவள் வாங்கப்படுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விலையினை எப்போதும் ஞாபகம் வைப்பதற்கும், கிறிஸ்துவினுடைய பாடுகளில் ஐக்கியம் கொள்வதற்கு தன்னை அவள் ஒப்புக்கொடுப்பதற்கு உறுதியளிப்பதற்கும் நோக்கம் கொண்டுள்ளதாய்க் காணப்படுகின்றது (1 கொரிந்தியர் 10:16, 17; 11:26). ஆகையால் இது நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இரவில், (எபிரெய நாளானது மாலை 6 மணி முதற்கொண்டு, அடுத்த மாலை 6 மணி என்று கணக்கிடப்படுவதால்) அவர் சிலுவையில் அறையப்பட்டதான அதே நாளில் நிறுவப்பட்டது.

நீசான் 15-ஆம் தேதி துவங்குகின்றதும், ஒரு வாரம் நீடிக்கின்றதுமான பஸ்கா பண்டிகையினைக் கொண்டாடுவது நமது கர்த்தருடைய நோக்கமாயிராமல், மாறாக நீசான் மாதம் 14-ஆம் தேதியன்று தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதல் ஒன்றை நமக்குக் கொடுப்பதே அவரது நோக்கமாய் இருந்தது. (நினைவுகூருதல்) அது ஆதித் திருச்சபையாருக்குக் களிகூருதலுடைய பண்டிகையாக இருப்பதற்குப்பதிலாக, துக்கமும், திகைப்புமுள்ள தருணமாய்க் காணப்பட்டது. இயேசுதாமே "ஆழ் துயரம் கொண்டிருந்தார்" (மத்தேயு 26:38; திருவிவிலியம்)

இந்த நினைவுகூருதலானது, பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதற்கான நிஜத்தினை நினைவுகூரும் ஆசரிப்பு என்று காண்கையில், இது இதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிக்கப்படுவதே ஏற்றதாயிருக்கும் என்று நம்மால் காணமுடிகின்றது; இது மாதந்தோறும், காலாண்டுதோறும், வாரந்தோறும் (அ) நாள்தோறும் ஆசரிக்கப்படாமல், வருடந்தோறும் ஆசரிக்கப்படவேண்டும் என்றும், அதுவும் வருடத்தினுடைய எந்த ஒரு காலப்பகுதியில் நமது கர்த்தர் மரித்தாரோ மற்றும் எப்போது அவர் நினைவுகூருதலை நிறுவினாரோ, அதே காலப்பகுதியில் ஆசரிப்பது ஏற்றது என்றும் நம்மால் காணமுடிகின்றது. இதுவே ஆதித் திருச்சபையாருடைய வழக்கமாய் இருந்தது; இவர்கள் இதற்கான தேதியை, யூத காலக்கணக்கீட்டு முறைமையின்படி கவனித்தவர்களாய் இருந்தார்கள். இதிலிருந்து முதலாவதாக திசைமாறியது, உரோம கண்காணியினுடைய தலைமையின் கீழுள்ள சபைகள் ஆகும்; மற்றும் நீசான் மாதம் 14-ஆம் தேதியானது (வாரத்தின்) ஏதோ ஒருநாளாக இருக்க, இவர்கள் இதற்குப்பதிலாக, அதற்கு அருகாமையிலுள்ள வெள்ளியை, இதற்கு என்று ஏற்படுத்தி, நியமித்து, ஆசரித்தனர். இதுவே "புனித வெள்ளிக்கான" ஆரம்பமாகும் மற்றும் இதனைத் தொடர்ந்துவரும் மூன்றாம் நாளானது பஸ்கா ஞாயிறு என்று அழைக்கப்பட்டது மற்றும் பிற்பாடு இது "ஈஸ்டர் ஞாயிறு" என்று அழைக்கப்பட்டது. பின்னர் (கி.பி. 325-இல்) நைஸ் மாநாட்டின் கட்டளையினாலும் மற்றும் பிற்காலத்தில் போப் கிரிகோரி XIII அவர்களால் ஆண்டுக்குறிப்பேட்டில் (calendar) பண்ணப்பட்ட திருத்தத்தினாலும், கத்தோலிக்க திருச்சபைகள் என்று அழைக்கப்படுகின்றதானது, ஒப்பந்தத்திற்குள் வந்து, "புனித வெள்ளிக்கும்," "ஈஸ்டர் ஞாயிறுக்குமான" தேதிகளை வருடந்தோறும் நிர்ணயிக்கிறவர்களானார்கள்.

"பூர்வப் பாதைகளை" கடந்த 20 வருடங்களாக நாடி தேடிக்கொண்டிருக்கின்ற நாம் நினைவுகூருதல் இராப்போஜனத்தை, நமது கர்த்தரினாலும், அப்போஸ்தலர்களினாலும் அங்கீகரிக்கப்பட்டதான எபிரெய காலக்கணக்கிடுதலின்படி கணக்கிடப்படும், அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரித்து வந்துள்ளோம் (எரேமியா 6:16). எபிரெய காலக்கணக்கிடுதல் முறைமையானது எளிமையான மற்றும் சுலபமான ஒன்றாகும். அவர்கள் தங்கள் வருடத்தினுடைய துவக்கத்தினை (தங்கள் முதலாம் மாதமாகிய நீசான் மாதத்தின் துவக்கத்தினை) இளவேனிற் சம

இரவு பகல் நாளின்/Spring Equinox அமாவாசையன்று பெற்றிருக்கின்றனர் மற்றும் 14-ஆம் தேதி இரவு, 6 மணிக்கு (6 pm) அவர்களது பஸ்கா பண்டிகையினுடைய முதல்நாளாகிய 15-ஆம் தேதியானது துவங்குகின்றது (யாத்திராகமம் 12:2).

இந்த வருடம் சம இரவு பகல் நாளின் அமாவாசையானது (அ) நீசான் மாதமானது மார்ச் 15-ஆம் தேதி ஆரம்பமாகின்றது; ஆகையால் இதன் 15-ஆம் நாள் (அ) எபிரெயர்களுடைய பஸ்கா வாரத்தினுடைய துவக்கமானது 29-ஆம் தேதியாக இருக்கின்றது. பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதும், "தேவ ஆட்டுக்குட்டியாகிய" நமது கர்த்தருடைய மரணத்தின் ஆண்டு நிறைவு நாளுமாகிய நீசான் 14-ஆம் தேதியானது மார்ச் 28-ஆம் தேதியாகக் காணப்பட்டு, எபிரெய கணக்கிடுதலின்படி 27-ஆம் தேதி சூரிய அஸ்தமனத்துடன் ஆரம்பமாகின்றதாய் இருக்கின்றது. நமது கர்த்தர் நினைவுகூருதலை முந்தின மாலையில் நிறுவினதால், நாமும் அவ்வாறே ஆசரிக்கின்றோம்.

இந்த வழக்கத்தின் பிரகாரமாக, அலிகெனியிலுள்ள (Allegheny) சபையார், மார்ச் 27-ஆம் தேதி, மாலை 8 மணிக்கு, மனுக்குலம் அறிந்துள்ள மாபெரும் நிகழ்வினை நினைவுகூர்ந்து ஆசரிப்பதற்கென ஒன்றுகூடிக்கொள்வார்கள். நம்முடைய ஆராதனையைப் பொறுத்தமட்டில் அது மிக எளிமையானதாகக் காணப்படும் மற்றும் அதில் துதி சாற்றுதல், ஜெபம், ஆசரிக்கப்படும் அடையாளங்களின் மற்றும் நிஜங்களின் அர்த்தங்களை மீண்டுமாகச் சிந்தித்துப்பார்த்தல், மற்றும் பஸ்கா - அப்பமும் (புளிப்பில்லாத அப்பம்), திராட்சப்பழரசமுமாகிய (fruit of the vine) அடையாளங்களில் பங்கெடுத்தல் நடைபெறும். [திராட்சப்பழரசத்தின் விஷயத்தில் (fruit of the vine), நாம் wine/திராட்சரசத்திற்குப்பதிலாக புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றை (grape juice) அல்லது உலர் திராட்சரசத்தைத் தேர்ந்தெடுக்கின்றோம்; ஏனெனில் முந்தய காலங்களில் மது பழக்கம் உள்ளவர்களுக்கு, நாம் இது சோதனையாய் அமையாதபடிக்குத் தவிர்த்திட வேண்டும்; (wine) "திராட்சரசம்தான்", திராட்சப்பழரசமாக இருக்குமே ஒழிய (fruit of the vine), வேறு எதுவுமல்ல என்று கருதுகிறவர்களுக்கு ஒரு கரண்டியளவு திராட்சரசம் (wine) சேர்த்துக்கொள்ளலாம். புளிப்பற்ற அப்பமானது எபிரெய குடும்பங்களிடமிருந்து எளிதாய்ப் பெற்றுக்கொள்ளப்படலாம்; இப்படிப் பெற்றுக்கொள்ள முடியவில்லையெனில் புளிப்பற்ற அப்பமாகிய சோடா ரொட்டி (அ) மாவு மற்றும் தண்ணீர்கொண்டு செய்த சாதாரணமான ரொட்டியைப் (soda crackers or water crackers) பயன்படுத்திக்கொள்ளலாம்].

இந்த ஒரு தருணத்தினுடைய விசேஷ அம்சமானது, தேவனுடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதான அடையாளங்களினுடைய அர்த்தத்தினை உணர்ந்து, புரிந்துகொள்ளுதலின் மூலமாகக் கர்த்தரோடுகூட உள்ள இருதய ஐக்கியமாகும். அந்த அடையாளங்களானது நமது மீட்பருடைய பலியை அடையாளப்படுத்துகின்றது என்று மாத்திரமல்லாமல், அவரது சரீரத்தின், சபையின் அங்கத்தினர்களென, நீதியினிமித்தமான பாடுகளில் அவரோடுகூட ஐக்கியம் கொண்டிருப்பதற்கான நம்முடைய சிலாக்கியத்தையும், அதாவது அதிலுள்ள நம்முடைய தனிப்பட்ட பங்கெடுப்பையும் அடையாளப்படுத்துகின்றது என்றும் உணர்ந்து, புரிந்துகொள்ளப்பட வேண்டும். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?" (1 கொரிந்தியர் 10:16, 17). பொருத்தமான ஸ்தோத்திரபாட்டுடன் முடிவுசெய்து, சம்பாஷணைகளைத் தவிர்ப்பதற்கும், இவ்விதமாய் நினைவுகூரப்பட்டதான மாபெரும் நிகழ்வு தொடர்புடைய எண்ணங்களினால், "ஐக்கியத்தினை" தொடர்ந்து நீடிப்பதற்கும், நமது கர்த்தரை கெத்செமனேக்கும், அடுத்தநாளில் கல்வாரிக்கும் சிந்தனையில் தொடர்வதற்கும் நாம் நாடுகின்றோம் மற்றும் இதற்கிடையில் அவருக்கு நம்முடைய அன்பைக் காட்டுவதற்கு எவ்வளவு கொஞ்சமே நம்மால் முடிகின்றது என்று யோசித்துப்பார்த்து, அவரது ஊழியத்தில் ஒவ்வொரு மணி நேரத்தையும் ஒவ்வொரு சிறுசிறு செல்வாக்குகளையும் பயன்படுத்திடும் விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருப்பதற்கு மிகவும் வைராக்கியமாய்க் காணப்படுவோம் என்று உறுதி எடுக்க நாடுகின்றோம்.

"விலையேறப்பெற்ற இரத்தத்தில்" விசுவாசமுள்ள நண்பர்கள் எவரும், எங்களோடு கூடிடுவதற்கு உள்ளன்போடு வரவேற்கப்படுவார்கள். எனினும் சகோதர சகோதரிகள் அதிக எண்ணிக்கையிலுள்ள கூட்டத்தாருடன் ஒன்றுகூடும் சிலாக்கியங்களை அனுபவிக்கத்தக்கதாக, தங்கள் சொந்த ஊர்களிலுள்ள சிறிய எண்ணிக்கையிலான கூட்டத்தாரை முடிந்தமட்டும் விட்டுச்செல்ல வேண்டாமென்று நாம் அறிவுரைக் கூறுகின்றோம். இரண்டு (அ) மூன்றுபேர் கர்த்தருடைய நாமத்தில் கூடிக்கொள்ளும்போது, அவர் அவர்களை ஆசீர்வதிக்கின்றார். கிறிஸ்துவினுடைய சரீரத்திலுள்ள சகல அங்கத்தினனுடைய நலனுக்காக ஒவ்வொருவனும் தன் சொந்த விருப்பங்களைத் தியாகம் செய்திடுவதற்கு முழுக்க விருப்பமுள்ளவனாக இருப்பானாக.

மேலே குறிப்பிட்டுள்ள வசனத்தின்படி மற்றவர்களுக்காகப் பிட்கப்படும்போது, பலன்கள் எப்போதும் ஆசீர்வாதமாய் இருக்கும்.

கர்த்தருடைய அன்புக்குரிய மந்தையிலுள்ள அனைவரும், அலிகெனியிலுள்ள (Allegheny) எங்களையும் மறந்துபோகாமல், உங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுங்கள் மற்றும் நாங்களும் உங்கள் அனைவரையும் நினைத்துக்கொள்வோம்.

நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்.

பிசாசின் தந்திரங்களுக்கு எதிராக ஒவ்வொருவனும் ஜாக்கிரதையாய் இருப்பானாக. நமது கர்த்தருடைய பாடுகளுக்கான ஆண்டு நிறைவு நாளை மாத்திரமல்லாமல், யூதாசினுடைய துரோகத்திற்கும், போலி முத்தத்திற்கும், "நானோ?" என்ற கேள்விக்குமான ஆண்டு நிறைவு நாளினையும் நாம் நெருங்கிக்கொண்டிருக்கின்றோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கர்த்தரோடும், அவருடையவர்களாய் உண்மையில் காணப்படுவோர்களோடும் ஐக்கியம் கொண்டிருக்கத்தக்கதாக, ஒவ்வொருவனும் தனது இருதயமானது, கர்த்தரிடத்திலும் "அவரது சரீரத்தின்" ஒவ்வொரு அங்கத்தினர்களிடத்திலும் அன்பும், ஈடுபாடுமுள்ள மனப்பான்மையில் காணப்படுகின்றதா என்று ஆராய்ந்துப்பார்ப்பானாக. வேறே மனப்பான்மை காணப்படுமாயின், சாத்தான் "உட்புகும்" அபாயம் காணப்படுகின்றது (லூக்கா 22:3). அப்படியான "அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாய் இருக்கும்" (மத்தேயு 12:45; லூக்கா 11:26).

*****

R 1951

# "இடுக்கமான வாசல்வழிாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுகள்"

## லூக்கா 13:22-30

"ஆண்டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர்தானோ?" என்று கேட்கப்பட்டக் கேள்விக்குக் கர்த்தர் நேரடியாக பதில் அளிக்கவில்லை. இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிப்பதற்கும், இதில் பிரவேசிப்பதற்கென, கேட்கக் காதுள்ளவர்களை வரவேற்பதற்குமான வேளை வந்துள்ளது. இந்தக் காலத்திற்கான அழைப்பானது, ஆயிர வருட இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்கள் ஆகுவதற்கான பரம அழைப்பாய் இருந்தது; அன்று முதல், இன்று வரை இந்த அழைப்பானது தொடர்ந்துக் கொண்டிருக்கின்றது. இந்த யுகத்தில் ஒரேயொரு அழைப்புதான் உள்ளது. "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள்" (எபேசியர் 4:4). ஆயிர வருட யுகத்தின் போது, இன்னொரு வகுப்பாருக்கு, இன்னொரு அழைப்பைக் கொடுக்க தேவன் சித்தம் கொண்டுள்ளக் காரியமானது, இப்பொழுது நமக்கு மகிழ்ச்சியையும், ஆறுதலையும் தருகின்றது, மற்றும் இன்னுமாக தெய்வீகக்குணலட்சணம் மற்றும் ஏற்பாடுகளில் காணப்படும் இசைவையும், சீரான தன்மையையும் நாம் காண உதவுகின்றது; ஆனால் அடுத்த யுகத்தில் இன்னொரு அழைப்பு இருக்கின்றது என்ற காரியமானது, இப்போதுள்ள அழைப்பையும், நம்பிக்கையையும் எவரும் புறக்கணித்துப் போடத்தக்கதாக ஏவக்கூடாது. அப்போஸ்தலர் கூறுவது போன்று, "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால், தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்?"

நமது கர்த்தர் தம்முடைய வேலையைக் குறித்தும், தம்முடைய இராஜ்யத்தைக் குறித்தும், இராஜ்யத்தின் நோக்கத்தைக் குறித்தும் அநேகக் காரியங்களை அப்போஸ்தலர்களுக்குக் கற்றுக்கொடுத்துள்ளார்; இன்னுமாக அவர், "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை(படிப்படியாக) நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்று கூறினார் (யோவான் 16:12, 13). அப்போஸ்தலர்களுடைய கேள்விகளுக்குக் கர்த்தர் முழுமையாய்ப் பதிலளிப்பது என்பது இன்னும் அநேக கேள்விகளுக்கு, அதாவது அவர்களால் ஜீரணிப்பதற்கு ஆயத்தமாய் இல்லாத பதில்களை உடைய அநேகம் கேள்விகளுக்கு வழிநடத்துவதாக இருந்திருக்கும்; ஆகவேதான் நமது கர்த்தர் ஞானமாய் அவர்களுடைய கேள்விகளைத் தவிர்த்து, அவர்களுக்கான கடமை மற்றும் சரியான போக்கு/பாதைக் குறித்ததானவைகளைக் குறித்து மாத்திரமே பதிலளித்தார். "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள் (கடுமையாய் முயற்சியுங்கள்), வீட்டெஜமான் எழுந்து கதவைப் பூட்டினபின்பு அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும், அவர்களாலே கூடாமற்போகும்" என்று கூறினார்.

இந்த உதாரணமானது, பத்துக் கன்னிகைகள் பற்றின உவமையில் காணப்படும் கிழக்கத்திய கலாச்சாரத்தின்படியான திருமணத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது. அழைக்கப்பட்டவர்கள் மணவாளனுடன் உள்ளே பிரவேசிக்கத்தக்கதாக, மணவாளன் வருவதற்கு முன்னதாகவே ஆயத்தமாய் இருப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். மணவாளனும், அவருடையவர்களும், கூடே வரும் நண்பர்களும் உள்ளே பிரவேசித்த பின், கதவு பூட்டப்படுகின்றது; கதவுக்கு வெளியே நிற்பவர்கள் அனைவரும் அந்நியர்கள் போலவும், அறியப்படாதவர்கள் போலவும் இத்தருணத்தில் நடத்தப்படுவார்கள். மேலும் (கதவு அடைக்கப்பட்ட பின்) இவர்கள் இல்லாமலேயே, விழா உள்ளே நடைப்பெற்றுக் கொண்டிருக்கும்.

கர்த்தருடைய உவமைகள் அனைத்திலும், அவருடைய பின்னடியார்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள இராஜ்யமானது, யுகத்தின் முடிவில் கிடைக்கும்; அதாவது பிரபுவானவன், தூரதேசமாகிய பரலோகத்திலிருந்து, தமது இராஜ்யத்தை உரிமையாக்கிக் கொள்வதற்கும் மற்றும் தாம் (பூமியில்) இல்லாதிருந்த காலத்தில் தமக்கு உண்மையாய் இருந்தவர்களோடு, அந்த இராஜ்யத்தின் கனங்களைப் பங்கிட்டுக்கொள்வதற்கும் எனத் திரும்பி வரும்போது இராஜ்யம் கிடைக்கப்பெறும் என்று விவரிக்கப்பட்டுள்ளது (லூக்கா 19:12-27). இன்னும் தம்முடைய

உண்மையுள்ள, காத்திருக்கும், நிச்சயிக்கப்பட்ட கன்னிகையை உரிமை கோருவதற்கும், வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்குமாக வரும் மணவாளன் என வேறு உருவகங்களிலும் தம்மை அடையாளப்படுத்திக் காண்பிக்கின்றார். ஆகவே தங்களுடைய ஆண்டவர் இன்னவேளையில் வருவார் என்பதை அறியாத காரணத்தினால் அவர்கள் அனைவரும் தொடர்ந்து விழித்திருக்க வேண்டும் என்பதற்காக, தாம் இன்னவேளையில் வருவார் என்று அவர்களுக்கு அவர் திட்டவட்டமான எந்தத் தகவலையும் கொடுக்கவில்லை; எனினும் காத்திருந்து ஆயத்தமாயும், விழிப்பாயும் இருக்கும் அனைவருக்கும், ஏற்றவேளையில் குரல் கொடுக்கப்பட்டு, அவர்கள் திருமணத்திற்குள் பிரவேசிக்கப்பண்ணப்படுவார்கள் என்ற நிச்சயத்தைக் கொடுத்துள்ளார்.

ஆகவே மணவாளனுடைய வருகையும், ஏற்ற நேரத்தில் கதவு அடைக்கப்படுவதும், அழைக்கப்பட்டு, தெரிந்துக்கொள்ளப்பட்டு, உண்மையுள்ளவர்கள் என்று கண்டுகொள்ளப்படும் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபைக்கான முன்தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கை நிறைவடையும் தருணமாகிய, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய நிறைவும் தொடர்புடையதாய் இருக்கின்றது. அப்போது கிறிஸ்துவுடன் அவருடைய இராஜ்யத்தில் உடன்சுதந்திரராகிய மணவாட்டியின் அங்கம் ஆகுவதற்கான வாய்ப்பு (அ) கதவு என்றென்றும் மூடப்பட்டுவிடும். முன்தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமானவர்களும் இருப்பதில்லை, எண்ணிக்கையை விட குறைவானவர்களும் இருப்பதில்லை.

நாம் இந்த யுகத்தினுடைய முடிவில் இப்பொழுது காணப்படுகின்றோம்; மணவாளன் . . . இராஜா வந்துள்ளார்; புத்தியுள்ள கன்னிகைகள் தங்கள் விளக்குகளைச் சீராக்கி, வேதவாக்கியங்களின் சாட்சியங்களை ஆராய்ந்து, அவருடைய வந்திருத்தலை ஒத்துக்கொண்டவர்களாக முன்னேறி, உறுதியுடன் திருமணத்திற்குப் போய்க்கொண்டிருக்கின்றனர். இந்த வகுப்பாரில் கடைசி அங்கம் உள்ளே சென்ற உடன், கதவு பூட்டப்படும். பிற்பாடு புத்தியில்லாத கன்னிகைகள், அதாவது அரைத்தூக்கம் தூங்கிக்கொண்டிருப்பவர்களாய், கவலைகளின் சுமைகளைச் சுமப்பவர்களாய், வைராக்கியத்தில் குறைவுப்பட்டவர்களாய், ஆனால் கன்னிகைகளாய் இருக்கும் புத்தியில்லாத கன்னிகைகள், தங்களைச் சுறுசுறுப்பாக்கிக்கொள்ள ஆரம்பிப்பார்கள்; இவர்கள் அனுபவம் எனும் விற்கிற இடத்திலிருந்து எண்ணையை வாங்கிக்கொள்வார்கள்; இவர்கள் யுகத்தின் முடிவு வந்துள்ளது என்பதையும், மணவாளன் வந்துள்ளார் என்பதையும், இராஜ்யத்தின் விருந்து ஆரம்பிக்கவிருக்கின்றது என்பதையும் உணர ஆரம்பிப்பார்கள். மப்பும், மந்தாரமும் உண்டாகுவதை கண்டு, திருமணத்திற்குப் போக இவர்கள் துரிதப்படுவார்கள்; ஆனால் இவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கப்படுவார்கள். பிற்பாடு கிறிஸ்துவுடன் உடன்சுதந்திரம் எனும் பரிசை அடைவதற்காக ஓடுவதன் மூலம், தங்களுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, இவர்கள் தாங்கள் தவறிவிட்டதை உணர்ந்துக்கொள்வார்கள்.

"புலம்பலும், அழுகையும், பற்கடிப்பும் அப்பொழுது உண்டாயிருக்கும்;" முன்வைக்கப்பட்டதும், நாடப்பட்டதுமான பரிசானது, அலட்சியமான நாடுகையினால் இழந்துப்போகப்பட்டுவிட்டது என்ற ஏமாற்றம் மாத்திரம் காணப்படாமல், வேறு காரணத்திற்காகவும், சில அழுகையும், வேதனையும் காணப்படும்; இவர்கள் (புத்தியில்லாத கன்னிகைகள்) யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஒரு மகா உபத்திரவக் காலத்தின் மத்தியில், தாங்கள் திடீரெனக் காணப்படுவதை உணர்வார்கள் (தானியேல் 12:1); அது உலகளாவிய ஓர் உபத்திரவமாகக் காணப்படும்; இந்த உபத்திரவத்திலிருந்து, கதவு பூட்டப்படுவதற்கு முன்பாக உள்ளே பிரவேசித்தவர்கள் தவிர, மற்றப்படி எவருக்கும் தப்புவதற்கான வாய்ப்பு இல்லை. லூக்கா 21:36-ஆம் வசனத்தில் இடம்பெறும் வார்த்தைகள் கதவு பூட்டப்படுவதற்கு முன்னதாக உள்ளே பிரவேசித்தவர்களைக் குறித்துப் பேசப்படுகின்றது; "...இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு...விழித்திருங்கள் என்றார்."

தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையானவர்கள் முழுமையாய் முத்திரைப் பண்ணப்பட்டு, தங்களுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வது வரையிலும் தூதர்கள் நான்கு திசை "காற்றுகளைப்" பிடித்துவைத்துள்ளனர்; இவர்களின் எண்ணிக்கை நிறைவுபெறும்போது, உலகத்தின் மீதான உபத்திரவம், சூறாவெளியெனச் சடுதியாய் வரும் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம்.

ஆனால் விசுவாச வீட்டாருக்குள் காணப்பட்டும், ஜெயங்கொள்ளாதவர்களாகவும், சோம்பலானவர்களாகவும் காணப்படும் புத்தியில்லாத கன்னிகைகள் எனும் வகுப்பார் மாத்திரம் இராஜ்யத்தின் கதவை அடைக்கப் பெற்றிருப்பவர்களாக இருப்பதில்லை. யூதர்களானாலும், புறஜாதியாரானாலும், இவர்களில் காணப்பட்ட அக்கிரமத்தின் ஊழியக்காரர்கள் அனைவரும் தேவனுடைய இராஜ்யத்தில் (உடன்சுதந்திரர்) பங்கிலிருந்து புறம்பாக்கப்படுவார்கள்.

இந்தச் சொற்பொழிவில், நமது கர்த்தர், பரலேக மணவாளன், தம்முடைய மணவாட்டியுடன் இணைவதைத் தொடரும் மாபெரும் ஆசீர்வாதங்களைக் குறித்துப் பேசவில்லை; எனினும் மற்ற வேதவாக்கியங்கள், இந்த இணைதலைத் தொடர்ந்து சீக்கிரமாய் முழு உலகமும் ஆசீர்வதிக்கப்படும் என்று தெரிவிக்கின்றது, ஏனெனில், வெளிப்படுத்தல் 22:17-ஆம் வசனத்தின்படி, "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள் கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" என்று உள்ளது. புத்தியில்லாத கன்னிகைகளுக்கு என்ன சம்பவிக்கும் என்று இந்த உவமை கூறுவதுமில்லை, ஆனாலும் இவர்கள் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோல, இரட்சிக்கப்படுவார்கள் என்று மற்றொரு வேதவாக்கியம் தெரிவிக்கின்றது (1 கொரிந்தியர் 3:15).

**ஆமென்!**

---

R 1956

# கைகளை வைத்தல்

## *மேற்கு வெர்ஜீனியா*

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

நவம்பர் 15, 95-இன் டவர் வெளியீட்டில், "சபையினுடைய ஒழுங்கு" எனும் பாடம் தொடர்பான உங்களது மனமும், ஆராய்ச்சியும், எங்களுடையதற்கு மிகவும் துல்லியமாய் ஒத்திருப்பதைக் கண்டு நான் மனநிறைவடைந்தேன். அவ்விஷயம் தொடர்பான உங்கள் கருத்து எதையும் பார்ப்பதற்கு முன்னதாகவே, இங்குள்ள சபையானது, அதிக ஒழுங்கிற்கான அவசியத்தை உணர்ந்துகொண்டிருந்தார்கள் மற்றும் நீங்கள் கொடுத்திருந்தான முழுப்பாடத்தையும் ஆராய்வதற்கு நிர்பந்தத்திற்குள்ளானார்கள்.

எனினும் நீங்கள் கவனிக்கத்தவறினதாகத் தெரிகிற அல்லது ஆராய்வதற்கு அவசியமற்றது என எண்ணினதாகத் தெரிகிற ஒரு காரியம் இருக்கின்றது; அது தொடர்பான உங்கள் கருத்தினை அறிந்திடுவதற்கு நான் பெரிதும் விரும்புகின்றேன்; அதாவது "கைகளை வைத்தல்" வழக்கம் தொடர்பாக ஆகும்.

முடிந்தமட்டும் மாதிரியைப் பின்பற்றிடும் விஷயத்திற்கு நானும் உங்களோடுகூட இருதயப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன் மற்றும் அப்படியாகச் செய்கையில், தேவனுடைய வரங்களுக்கான அங்கீகாரமானது, மூப்பராகிய சங்கத்தார் கைகளை வைப்பதாகிய பயபக்தியான முறைவாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றது என்ற எனது ஆராய்ச்சியின் முடிவினை என்னால் கண்டுகொள்ளாமல் விடமுடிகிறதில்லை. இப்பொழுதும் என்னுடைய ஆராய்ச்சி முடிவானது தவறாக இருக்குமானால், தயவாய் எனக்கு உதவிடுங்கள். ஒருவேளை உங்கள் புரிந்துகொள்ளுதலின்படி என்னுடைய ஆராய்ச்சி முடிவு தவறாய் இருக்குமானால் தயவாய் அப்போஸ்தலர் 6:6; 1 தீமோத்தேயு 4:14; 5:22-ஆகிய வசனங்களை விளக்கவும். "கண்காணி" மற்றும் "மூப்பர்" என்ற வார்த்தைகள் ஒரே அர்த்தமுள்ள வார்த்தைகளா?

இந்த ஓர் ஏற்படுத்துதலின் விஷயத்தில், ஆதிசபையார் எந்த விசேஷித்த வல்லமையை அருளிடவில்லை, தங்கள் மீது யாரையும் அதிகாரியாக அல்லது எஜமானாக ஏற்படுத்திடவில்லை என்பதை நான் அறிவேன்; எனினும் "மூப்பரை" அல்லது "கண்காணியை," இவர்கள் மேல் கைகளை வைக்கிறவர்களுக்கான பிரதிநிதியாக அல்லது ஊழியக்காரர்களாக, இந்த ஒரு முறையானது ஆக்குகின்றதல்லவா? நாங்கள் பெரிதும் மதிக்கின்றதான உங்கள் கருத்தானது இக்கேள்வியின் விஷயத்தில் எங்களைத் தெளிவுப்படுத்திடுமென நாங்கள் நம்புகின்றோம்.

நாங்கள் மூன்று "மூப்பர்களை" நியமித்திருக்கின்றோம் - அதில் ஒருவர் இவ்விடத்திலுள்ள வேலைகளை மேற்பார்வையிடுவார் மற்றும் மீதி இருவரும் அருகாமையிலுள்ள இடங்களின் வேலைகளைப் பார்த்துக்கொள்கின்றனர்; அந்த இருவரில் நானும் ஒருவராவேன். நியமிக்கப்பட்டிருக்கின்றோம் என்றுதான் நான் குறிப்பிடுகின்றேன்; எங்கள்மேல் கைகள் ஏதும் வைக்கப்படவில்லை; ஆனால் இக்கேள்வியானது சகோதரர்களினால் இப்பொழுது விவாதிக்கப்பட்டு வருகின்றது மற்றும் சீக்கிரத்தில் இறுதி தீர்வுக்குள் வருமெனத் தோன்றுகின்றது.

உங்களுக்கான சகோதர அன்பில் தங்கள்,
சி. ஏ. மக்கிலங்

[**பதில்:-** வேதவாக்கிய வார்த்தைப் பயன்பாட்டின்படி "Presbytery" எனும் வார்த்தையானது "மூப்பர்கள் சங்கத்தினைக்" குறிக்கின்றதாய் இருக்கின்றது; "வயதான மனுஷன்" எனும் அர்த்தமுள்ள கிரேக்க வார்த்தையிலிருந்து, இவ்வார்த்தை வருகின்றதாய் இருக்கின்றது. "Bishop" எனும் வார்த்தை "கண்காணியைக்" குறிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் அப்போஸ்தலர் 20:28-ஆம் வசனத்தில் மூப்பர்களைக் குறிக்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது மற்றும் நிச்சயமாகவே பிலிப்பியர் 1:1-ஆம் வசனத்தில் மூப்பர்களுக்கான மற்றொரு பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1 தீமோத்தேயு 5:22-ஆம்

வசனமானது, கைகளை வைத்தலின் மூலம் ஏற்படுத்துதலைக் குறிக்கின்றதாக இருக்கலாம்; ஆனால் உறுதியாய்ச் சொல்ல முடியாது.

மூப்பராகிய சங்கத்தார் [மூப்பத்துவத்தினை] தீமோத்தேயுவின்மேல் கைகளை வைத்தல் தொடர்பாகப் பார்க்கையில், இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடப்படும் மூப்பர்கள் என்பவர்கள் அப்போது இன்னும் ஜீவித்துக்கொண்டிருந்ததான அப்போஸ்தலர்களாய்க் காணப்பட்டனர். பவுல் தன்னால் துவங்கப்பட்ட ஊழியத்தினை, தனக்குப் பின் தொடரும்படிக்குத் தீமோத்தேயுவைத் தெரிந்துகொண்டார் மற்றும் அப்போஸ்தலர்கள் அனைவரும் இதை அங்கீகரித்திட வேண்டுமெனப் பவுல் விரும்பினது நிச்சயமே. அல்லாமலும் விசுவாசம் வைத்தவர்கள் யாவர்மேலும் கைகளை வைப்பதும் மற்றும் இப்படியாக ஆவியின் வரங்களைப் பகிர்ந்து கொடுப்பதும் அந்நாட்களில் அப்போஸ்தலர்களுடைய வழக்கமாய் இருந்தது. இப்படியாக வரத்தினைத் தீமோத்தேயு பெற்றிருப்பதை, அவருக்குப் பவுல் நினைப்பூட்டினார். அப்போஸ்தலர்களால் மாத்திரமே இவ்வரங்களை அளித்திட முடியும் என்பதற்கு ஆதாரமாக - மாயவித்தைக்காரனாகிய சீமோன் என்பவன் தான் யார்மேலும் கைகளை வைக்கையில், அவர்கள் ஆவியின் வரங்களைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, தான் இவ்வல்லமையைப் பெற்றுக்கொள்ளும் படிக்கு அப்போஸ்தலர்களுக்குப் பணம்கொடுக்க முற்பட்ட சம்பவத்தை நினைப்பூட்டுகின்றோம். அப்போஸ்தலர் 19:6-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சம்பவத்தையும் நாம் நினைவு கூருகின்றோம்; இன்னுமாக அப்போஸ்தலர் 8:13-19-வரையிலான வசனங்களில், (சுவிசேஷகராகிய) பிலிப்பு சமாரியர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்திருந்த போதிலும் மற்றும் அவர்களும் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றிருந்தபோதிலும், இவர்கள்மேல் பிலிப்பு கைகளை வைக்கவுமில்லை, பரிசுத்த ஆவியினைப் பகிர்ந்துகொடுக்கவுமில்லை; மாறாக அப்போஸ்தலர்களாகிய பேதுருவுக்கும், யோவானுக்கும் செய்தி அனுப்பிவைக்கப்படுகின்றது மற்றும் இவர்கள் வந்து, அவர்களோடுகூட ஜெபம் பண்ணி, ஆவியின் வரங்களை அவர்களுக்குப் பகிர்ந்துகொடுத்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவைகள் அனைத்துமே, அப்போஸ்தலர்கள் மாத்திரமே ஆவியின் இந்த வரங்களைப் பகிர்ந்துகொடுப்பதற்கான வல்லமையைப் பெற்றிருந்தார்கள் என்பதைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; அப்போஸ்தலர்கள் மூப்பர்கள் அல்லது மூப்பராகிய சங்கத்தார் என்று அழைக்கப்படுவது சரியே மற்றும் அவர்கள் தங்களை இப்படியாகவே தெரிவித்தும் கொண்டார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் உயிரோடிராததால், கைகளை வைத்தலின் மூலம் ஆவியின் வரங்களைப் பகிர்ந்துகொடுக்க முடிகின்றவர்கள் எவரும் இல்லை.

மேலும் ஆதி சபையில் கைகளை வைக்குதலானது, ஒப்புதலைச் சுட்டிக்காட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டது என்பதைக் கவனியுங்கள்; இதற்கு உதாரணமாக, அந்தியோகியாவிலுள்ள சபையானது, தங்கள் ஊழியக்காரர்களாகவும், சுவிசேஷ வேலையின் பிரதிநிதிகளாகவும் இருப்பதற்குப் பவுலையும், பர்னபாவையும் தெரிந்தெடுத்த சம்பவம் காணப்படுகின்றது. இந்தச் சபையார் உபவாசம் இருந்து, ஜெபித்து, தங்கள் கைகளைப் பவுல் மற்றும் பர்னபாவின் மீது வைத்து, அவர்களை அனுப்பி வைத்தார்கள். இந்த ஒரு சந்தர்ப்பத்தில் கைகளை வைத்தலானது, எந்த வரத்தையாகிலும் பகிர்ந்துகொடுப்பதைக் குறிக்கிறதாக இராமல், மாறாக பிரதிநிதித்துவத்தினை மாத்திரம் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; அதாவது முற்காலத்து ஆசாரியர்களின் விஷயத்தில், மிருகம் அடிக்கப்படுவதற்கு முன்னதாக, பலிச்செலுத்துபவர், மிருகத்தின் மீது தனது கையை வைக்கையில், அது - கைகள் எந்த மிருகம் அல்லது நபர் மீது வைக்கப்படுகின்றதோ, அந்த மிருகம் அல்லது நபர் அதன் அல்லது அவன் மீது கைகளை வைத்த நபருக்குப் பிரதிநிதியாக அங்கீகரிக்கப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது போன்றதாகும். இப்படியாக அந்தியோகியாவிலுள்ள சபையார், அவர்கள் இருவரையும் தங்கள் மத்தியிலிருந்து, வேலைக்கான தங்களது பிரதிநிதிகளென அனுப்பிவைத்தார்கள். அவர்களுடைய பிரயாணத்திற்கென இவர்கள் பணமும் கொடுத்தார்கள் என்பதிலும் மற்றும் பவுலும், பர்னபாவும் தங்களது பிரயாணத்தினை மேற்கொண்ட பிற்பாடு, அந்தியோகியா சபைக்குத் திரும்பி, இவர்களது பிரதிநிதிகளெனவும், கர்த்தருடைய பிரதிநிதிகளெனவும் தாங்கள் பண்ணின ஊழியத்தைக் குறித்த அறிக்கையையும் சபையாருக்குக் கொடுத்தார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. அப்போஸ்தலர் 14:26-27; 15:3-ஆகிய வசனங்களைப் பார்க்கவும்.

இவைகளைத் தற்காலத்திற்குப் பொருத்தி, நாம் கூறுகிறதாவது: ஐரோப்பியாவிலும், அமெரிக்காவிலும் பிரதிநிதித்துவத்தினைச் சுட்டிக்காட்டுவதற்குரிய கைகளை வைத்தல் வழக்கமானது இப்பொழுது நடைமுறையில் இல்லை - அதாவது எப்படிப் புருஷர்கள் மத்தியில் முத்தம் கொடுக்கும் வழக்கம் இப்பொழுது நடைமுறையில் இல்லாமல் இருப்பது போன்றதாகும். ஆனால் இவ்விரு வழக்கங்களும் இன்றளவும் கிழக்குத் தொலைவில் நடைமுறையில்

இருக்கின்றது. ஆகையால் உள்ளூர் பொறுப்புகள் பார்க்கும் அல்லது பிரயாணம்பண்ணும் மூப்பர்களைச் சபையார் அங்கீகரித்தல் தொடர்புடைய விஷயத்தில் தேர்ந்தெடுத்தலும், உபவாசித்தலும், ஜெபித்தலும் நம்முடைய கணிப்பின்படி, தகுதியான செயல்களாகவே இருக்கின்றன; ஆனால் ஆவியின் வரங்களைப் பகிர்ந்து கொடுக்காததும், நம் நாட்டு வழக்கத்தில் பிரதிநிதித்துவத்தினைச் சுட்டிக் காட்டாத வழக்கமுமான கைகளை வைத்தலானது இனி மேலும் பொருத்தமானதாய் இராது. இது முறையற்றது என்று, பொதுவாய் நிலவும் வழக்கங்கள் மற்றும் பழக்கங்களின் கண்ணோட்டத்தின்படி கருதுகின்றோம்; ஏனெனில் அது தவறாய்ப் புரிந்துகொள்ளப் படலாம் மற்றும் அதைச் செய்கின்றவர்கள் தவறான கூற்றினை ஆதரிக்கின்றார்கள் என்ற எண்ணத்தை உருவாக்குகின்றதாய் இருக்கும் - அதாவது உரோமன் கத்தோலிக்கர்கள், கிரேக்க கத்தோலிக்கர்கள், எபிஸ்கோப்பலியர்கள், மார்மன்ஸ் மற்றும் சிறிய அளவில் கிட்டத்தட்ட மற்றச் சபை பிரிவினர்கள் யாவராலும் செய்யப்பட்டுவருவது போன்று, அங்கீகாரம் வழங்கிடுவதற்கும், பொறுப்பு ஒப்படைப்பதற்கும் மற்றும் கைகள் யார்மேல் வைக்கப்படுகின்றதோ, அந்நபருக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமைகளைக் கொடுப்பதற்குமான வல்லமையோடுகூட, அப்போஸ்தல வாரிசு உரிமையானது தொடர்ந்து காணப்படுகின்றது என்ற அநேகருடைய கூற்றினை, அதைச் செய்கின்றவர்களும் ஆதரிக்கின்றார்கள் என்ற எண்ணத்தை உருவாக்குகின்றதாய் இருக்கும்.]

---

# கிறிஸ்து இயேசு சிலுவையில் அறையப்பட்டார்

## லூக்கா 23:33-46

இந்நாட்களில் தங்களைத் தாங்களாகவே உயர்வாய் எண்ணிக்கொள்ளும் விமர்சகர்களுடைய கோட்பாடுகளும், பரிணாமத்தின் வாயிலாக இரட்சிப்பு என்ற கோட்பாடுகளை ஆதரிப்பவர்களும் பல்வேறு திசைகளில் முன்னேற்றம் அடைந்துகொண்டிருக்க, "கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்" என்ற ஆதார வசனத்தின் அடிப்படையிலான நம்முடைய இந்தப் பாடம் போன்றதான பாடங்கள் மீது "உலகளாவிய பாடங்கள்" (International Lessons) அடிக்கடி வேதத்தின் மீது ஆர்வமுள்ள மாணவர்களின் கவனத்தைத் திருப்புகின்றதைப் பார்ப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

மேற்கொள்ளப்பட்டவைகளிலேயே மிகப் பெரியதான நடவடிக்கையானது, அதாவது பாவம் எனும் மாபெரும் விசாரணைக்காரனிடமிருந்து (50 பில்லியனுக்கும் மேலான) அடிமைகளை வாங்கிக்கொண்டதான நடவடிக்கையானது, இது நடந்த நாட்களிலும் உணர்ந்து கொள்ளப்படவில்லை மற்றும் இதுவரையிலும்கூட உணர்ந்துகொள்ளப்படவில்லை; வெகு சொற்பமானவர்களாகிய "சிறுமந்தையினராலேயே" உணர்ந்துகொள்ளப்பட்டிருக்கின்றது. நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட நாட்களில் காணப்பட்டதான ஜனங்கள் என்ன செய்தார்களோ, அதுபோலவே இன்று வரையிலும் மனுக்குலத்தின் ஜனங்கள் செய்துகொண்டு வருகின்றனர். சிலர் நோக்கிப்பார்த்தனர், கொஞ்சம் அனுதாபம் கொண்டனர், ஆனால் எதையும் உணர்ந்துகொள்ளவில்லை; வேறு சிலர் ஏளனம் செய்து, தூஷித்தனர்; சிலர் களிக்கண்டனர் மற்றும் சிலர் அவரது வஸ்திரத்தின் மீது கேலியாகச் சூதாடினார்கள். அவர்கள் அவர் யார் என்று அறியவில்லை; அவர்களுக்காக அவர் நிறைவேற்றியுள்ளதான வேலையினுடைய முக்கியத்துவத்தை அவர்கள் அறியவில்லை. அவரது ஜீவியம் குறித்து ஏதோ கொஞ்சம், அதுவும் மிகவும் அரைகுறையாகவே அறிந்திருந்தார்கள், ஆனால் அவரது மரணத்தினுடைய முக்கியத்துவம் குறித்தோ, அவர்களால் எதுவும் காண முடியவில்லை. இப்பிரபஞ்சத்தினுடைய தேவனானவன் அவர்களுடைய மனங்களைக் குருடாக்கியுள்ளபடியால் அவர்களால் காண முடியவில்லை என்று கூறி, அவர்களது நிலைமையைக் குறித்துத் தேவ ஏவுதலின் பேரில், அப்போஸ்தலன் அவர்களது கவனத்திற்குக் கொண்டு வந்தார். அன்று முதல் இன்று வரையிலுங்கூடத் தவறான கொள்கைகள், தவறான எதிர்பார்ப்புகள், தவறான மன விவாதங்கள் மற்றும் கர்த்தருக்கான உண்மையான அர்ப்பணம் இல்லாமை என்பவைகள் அநேகருடைய கண்களை, அதாவது உலகத்தாருடையது மாத்திரமில்லாமல், இன்னுமாக கிறிஸ்துவின் சீஷர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப்பண்ணிக் கொள்கின்றவர்களுடைய கண்களையும்கூடக் குருடாக்கியுள்ளது.

ஆனால் கல்வாரியில் "நிறைவேற்றப்பட்டதான" ஈடுபலியினுடைய உண்மையான மதிப்பை/முக்கியத்துவத்தைக் காண்கின்றவர்கள் அனைவருக்கும் மற்றும் அந்த மாபெரும் நடவடிக்கையின் விளைவாக இறுதியில் கடந்து வரப்போகின்றதான அருமையான பலன்களைக் காணத்தக்கதாக, கண்கள் திறக்கப்பெற்ற அனைவருக்கும் – இவர்கள் அனைவருக்கும் "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 13:16, 17) என்பதான போதகருடைய வார்த்தைகளானது, அழுத்தத்துடன் பொருந்துகின்றதாய் இருக்கிறது. தெய்வீகத் திட்டம் முழுவதையும் புரியும்படி தெளிவாக்கின இந்த "மாபெரும் வெளிச்சத்தை" பார்க்கிறவர்களுக்கு, நன்றியுடன் இருப்பதற்கு மாபெரும் காரணங்கள் இருக்கின்றது; ஏனெனில் இப்படியானவர்கள் இருளினின்று, ஆச்சரியமான ஒளியினிடத்திற்குக் கொண்டுவரப்பட்டவர்களாய் இருக்கின்றனர். சிலுவையினுடைய வெளிச்சத்தில் பார்க்கையில், அவரது மாபெரும் பலியில் உண்மையாய் விசுவாசம் கொண்டிருக்கின்றதான அவரது சபையாகிய நமக்கு வந்துள்ளதான ஆசீர்வாதங்களுக்காக மாத்திரம் அல்லாமல், விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமான மீட்பு பற்றின இந்தக் கிருபையான செய்தியானது "ஏற்ற வேளையில்" அனைவருக்கும் தெரியப்படுத்தப்படும் என்றும், செவிடான காதுகள் அனைத்துமே திறக்கும் என்றுமுள்ள வாக்குத்தத்தத்திற்காகவும் நாம் தேவனுக்கு நன்றி

ஏறெடுக்கின்றோம். அனைவருக்குமாக ஒரே தரம் கொடுக்கப்பட்டதான மகா பாவநிவாரண பலியினுடைய உண்மையான முக்கியத்துவத்தையும், அதன் மதிப்பையும்/நன்மையையும் ஏற்ற வேளையில் அனைவரும் காண்பார்கள்; ஏனெனில் ஆசீர்வாதமான ஆயிர வருட நாளைக் குறித்துப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது; "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்" (ஏசாயா 35:5); "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசாயா 11:9).

அழுதுக்கொண்டிருந்த சீஷர்களைத் தவிர, மனம் வருந்தின கள்வன் மாத்திரமே, கர்த்தருடைய நீதியைக் குறித்து உணர்ந்துகொண்டவனாக இக்காட்சியில் காணப்படுகின்றான். அப்போதிருந்தது போலவே, அனைத்துக் காலப்பகுதிகளிலும் காணப்பட்டுள்ளது; பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களில் அநேகர் உணர்ந்துகொள்ளுதலோ அல்லது அனுதாபமோ இல்லாமல், சத்தியத்தைச் சிலுவையில் அறைந்துபோட்டிருக்கின்றனர்; ஆதரவு கொடுப்பவர்களாகக் காணப்படும் (ஒரே) கூட்டத்தாரிலும், மிகவும் சீரழிந்து போனவர்களிலிருந்து வந்த சிலரே பெரும்பாலும் காணப்படுகின்றனர்.

ஒரு வேளை மனித இருதயங்களானது, இந்த மாபெரும் நடவடிக்கைக் குறித்து உணர்ந்துகொள்ளாமலும், அனுதாபம் கொள்ளாமலும் காணப்பட்டாலும்கூட, இயற்கையானது அப்படியாகக் காணப்படவில்லை; இந்த அருமையானதொரு காட்சிக்குச் சாட்சியாகக் காணப்பட்ட இயற்கையானவள், தனது முகத்தினை இருளினால் முக்காடிட்டுக் கொண்டாள் மற்றும் நடுங்கிப் போனாள். பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் நடுவில் காணப்பட்டதான திரைச்சீலை கிழிந்ததானது, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்வதற்கான வழி திறக்கப்பட்டுள்ளதை அடையாளமாய்க் கற்பிக்கின்றதாய் இருக்கின்றது. இதற்கு அப்போஸ்தலன் இவ்விதமாக எபிரெயர் 10: 19-22 வரையிலான வசனங்களில் அர்த்தம் கொடுக்கின்றார்.

இறுதி வரையிலும் உண்மையாயும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும் நமது கர்த்தர் இயேசு காணப்பட்டு, தம்முடைய ஆவியை, மரிக்கும் தருவாயில் பரம பிதாவிடம் ஒப்படைத்தார்; பிதாவின் வாக்குத்தத்தங்களானது, அவரது ஜீவியம் முழுவதிலும் அவரைத் தாங்கினது/ஆதரித்தது மற்றும் அவைகள் இப்பொழுது, அவரது மரணத் தருவாயில் அவருக்குப் பெலனாகவும் இருந்தது. எனினும் மற்றொரு பதிவில் பார்க்கும்போது, கடைசி தருணத்தில் பரம பிதா, நமது கர்த்தருக்கான இந்த ஆதரவை, அவரிடமிருந்து எடுத்துவிட்டு, அநேகமாக அவரை ஒரு கணம் தனிமையில் விட்டுவிட்டதாக நாம் பார்க்கின்றோம்; மேலும் இந்த அவருடைய கடைசி அனுபவமானது, அவருக்கு முற்றும் முழுமையான தனிமையாகவும், பிதாவிடமிருந்து முற்றிலுமான பிரிவாகவும் காணப்பட்டது. இது பிதாவினுடைய வெறுப்பின் காரணமாய் அல்ல என்பதை நாம் அறிவோம்; ஏனெனில் தாம் அனைத்துக் காரியங்களிலும் மற்றும் எப்போதும் பிதாவைப் பிரியப்படுத்தியுள்ளார் என்ற வாக்குறுதியை இயேசு பெற்றிருந்தார் மற்றும் இதை அப்போஸ்தலனாகிய பேதுரு அப்போஸ்தலர் 17:31-ஆம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளதுபோன்று, மரணத்திலிருந்து இயேசுவை உயிர்த்தெழுப்பினதின் மூலம் பிதா பின்னர் உறுதிப்படுத்தினார். இயேசு பாவியினுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டபடியால், அந்த அனுபவம் அவசியமாய் இருந்தது. பாவியாகிய ஆதாம் மற்றும் அவருக்குள் நாம் அனைவரும் ஜீவனுக்கான நமது உரிமையை மாத்திரமல்லாமல், இன்னுமாகப் பிதாவுடனான ஐக்கியத்தையும் இழந்து போயுள்ளோம்; மேலும் நமக்கான மீட்கும்பொருளாக வேண்டுமானால், நமது மீட்பர், நமக்காக மரிப்பது மாத்திரம் அல்லாமல் இன்னுமாக அவர் பாவியைப்போன்று மரிக்க வேண்டியது அவசியமாகின்றது. அதாவது மரணத்தீர்ப்பின் கீழாகக் காணப்படும் குற்றவாளி போன்று மரிக்க வேண்டியது அவசியமாய் உள்ளது; இன்னுமாக பாவி பிதாவினுடைய தயவு மற்றும் ஐக்கியத்திலிருந்து முற்றிலுமாய்த் துண்டிக்கப்பட்டுக் காணப்படும் அனுபவத்தையும் அவர் ருசிக்க வேண்டும். நமது அருமை மீட்பர் கடந்து சென்ற அனுபவங்களிலேயே, இந்தக் கடைசி அனுபவமே மிகவும் கடுமையான அனுபவமாக இருந்திருக்க வேண்டும். இத்தருணத்தில்தான், அவரது ஆன்மாவானது வியாகுலத்தோடே, "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னை கைவிட்டீர்?" என்று கதறினது.

*****

R 2018/187

# இயேசு என்ன செய்திடுவார்?

அடிவானம் தன்னை விடியல் தூரிகைக்கொண்டே (தூரிகை - ஓவியர்கள் வண்ணம் பூசுவதற்குப் பயன்படுத்தும் குச்சியாலான கருவி)
ஒளிவண்ணம் பூசிடும் போதினிலே,
புள்ளினங்கள் தங்கள் பாடல்களைப் புதுப்பித்துக்கொள்ளும் போதினிலே,
ஆழ்ந்த நித்திரையினின்றே நான் விழித்தெழும் காலையிலே,
இயேசு என்ன செய்திடுவார் என்றே கேட்டிடும போதினிலே,
எண்ணிமுடியா இரக்கங்கள் ஆசீர்வாதமாகவே பரலோகத்தினின்றே
ஒவ்வொரு நாள் பொழுதினிலும் வாறிவழங்கியே வழியெங்கினும் சிதறி விழுகுதே,
தம் அன்பினாலே ஆசீர்வாதம் செய்திடலே போதுமானதன்றோ,
தந்தையே, இயேசு என்ன செய்திடுவார்?

தினந்தோறும் நான் செய்யும் என்னுடைய வேலையினூடே,
கடும் உழைப்பு பின்தொடர்ந்து வந்திடும் போதினிலே,
என்னுடைய இதயம் தன்னை நான் திரும்பக் கேட்கின்றேன்,
இயேசு என்ன செய்திடுவார்?
எதிரி என் இருதயத்தை பராக்குக்காட்டி ஏமாற்றி
என் செவிகளுக்குள் பொய்யான வார்த்தைகளை உச்சரிக்கும் நொடியினிலே,
அவன் நுட்பமான சூதினுக்கே நான் பதிலுரைத்திடுவேன்,
இப்போதென் இயேசு என்ன செய்திடுவார்?
துன்பத்தின் மேகங்கள் களியாட்டுக்களையும் இசைகளையும்
என் பார்வையினின்றே மறைத்திடும்போதினிலே,
இயேசு என்ன செய்திடுவார் என்றே தீர எண்ணிப்பார்க்கும் பக்கம் இறுகப்பற்றிக்கொள்ள வேண்டுமே,
உமதன்பு ஒன்றுமட்டுமே ஓ தேவனே, என் ஆவியை முழுவதுமாய் ஊடுருவி நிரப்பிட வேண்டுமே, என் இரட்சகர் பயணித்த பாதைதனிலே நானும் பயணிக்க வேண்டுமே,
இயேசு என்ன செய்திடுவார் என்றே என் சுவாசம் மாற வேண்டுமே!

# சாலொமோனுடைய பாவம்
# Solomon Sin

**[1 இராஜாக்கள்11:4-13]**

"தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்"-**1 கொரிந்தியர் 10:12**

சாலொமோன் எந்த அளவுக்கு ஞானியாக இருந்தாரோ, அந்த அளவுக்கு மிகுந்த முட்டாளாகவும் இருந்துவிட்டார். காரணம், அவருக்க அநேக வாய்ப்புகள் இருந்தும், அநேகம் இழப்புகளை அடைந்தார். மேலும் அவருக்கு மிகுந்த அறிவு இருந்தும், அதை தவறாய் கையாண்டு மிகுந்த பாவத்தையும் செய்தார்.

**மேக்லாரன் என்பவர் சலொமோனைக் குறித்து எழுதினவைகள்:-**

"மேதைகளாகவும், ஆர்வமிக்கவர்களாகவும் இருந்து, அதிகம் வாக்குகள் உரைத்து, பாதியளவே செய்து முடித்து பின்னர் உருத்தெரியாமலேயே சிதறி போனவர்களின் வாழ்க்கை சம்பவங்கள் அநேகம் வரலாற்றில் காணப்படுகின்றது. என்றாலும், இஸ்ரயேலின் ஞானமுள்ள இராஜா தாலந்துகளை வீணடித்தது போலவும், சரியான விதத்தில் கனிகொடுக்காதது போலவுமான மாபெரும் சோகம் போன்று வேறு எங்கும் காணப்படவில்லை. இவர் பின்நாட்களில் மூடனானார். அருமையான ஒரு பாத்திரம்/கப்பல் நொறுங்கி போயிற்று. மகிமையிலும், அவமானத்தின் மத்தியிலும் கடந்து சென்ற அவருடைய ஜீவியம் பிரசங்கி புஸ்தகத்தின் மாபெரும் பாடமாகிய, "காரியத்தின் கடைத்தொகையை" அவருடைய நாவில் வைத்தது, அதாவது, "தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே" என்பதாகும்.

(**1 இராஜாக்கள் 11:4-6**) "சாலொமோன் வயது சென்றபோது" நாம் சாலொமோனுக்கு 40-வயது இருக்கும்போது, கடைசியாக அவரைப் பார்த்தோம். அப்போது அவர் தமது ஞானத்தைக் கொண்டு, சேபா நாட்டு ராஜஸ்திரீயை பிரமிக்க வைத்துக் கொண்டிருந்தார். அக்காலத்தில் சாலொமோன் முடிவு எடுக்க வேண்டிய தருணத்தில் இருக்கின்றார் எனவும், நீதியான அல்லது தவறான ஜீவிய பாதையில் ஒன்றை, அதாவது ஞானம் அல்லது முட்டாள்தனம் இவைகளில் ஒன்றை சாலொமோன் தெரிந்து கொள்ள வேண்டும் என்று இரண்டாம் முறையாக கர்த்தர் தோன்றி அறிவுறுத்தினார் என்பது கவனிக்கப்படத்தக்கது. சாலொமோன் தவறான பாதையை தெரிந்து கொண்டார். சாலொமோன் தன்னை திருப்திபடுத்துவதற்காகவும், தன்னுடைய இருதயத்தின் விருப்பங்களுக்கும் தன்னை ஒப்புக் கொடுத்துவிட்டார். இதன் விளைவாக அவர் சீக்கிரமாகவே முதியவராகிவிட்டார். காரணம், அவர் 59-ம் வயதில் மரித்து விடுகின்றார். வசனம் 4, சாலொமோனின் 50-வது வயது முதல் அவரை வயது சென்றவராக கூறுகின்றது என்று நாங்கள் அனுமானிக்கின்றோம். ஒருவேளை சாலொமோன் ஞானத்தின் வழிகளில் நடந்திருந்தால் இவ்வயது (50) அவருடைய ஜீவியத்தின் மிக முக்கியமான காலப்பகுதியாக இருந்திருக்கும்.

உபாகமம் 17:17-ம் வசனத்தின் தெய்வீக பிரமாணத்திற்கு எதிராக, சாலொமோன் 700 மனைவிகள் வரும் வரை, மனைவிகளை பெருக்கிக் கொண்டார் (வசனம்-3). இந்த இராஜஸ்திரீகளில் சிலர் சுற்றியுள்ள தேசங்களில் உள்ள மிக முக்கியமான குடும்ப அந்தஸ்தில் இருக்கும் ஸ்திரீகளாகவும், ஒருத்தி பார்வோனின் குமாரத்தியாகவும் இருந்தார்கள். சாலொமோனின் ஞானத்தினிமித்தம் சுற்றியுள்ள தேசத்தார் இவரை கனப்படுத்தினார்கள். மேலும் இவர் அவர்களின் தனித்தன்மையின் காரணம் மாத்திரமல்லாமல், அவர்களோடு ஏற்படுத்தப்பட்டுள்ள உறவுகளினிமித்தமும் அவர்களை கனப்படுத்தினார். தேவனுக்குள் கீழ்ப்படியும்

பாதையிலிருந்தும், இருதயத்தின் உண்மையிலிருந்தும் வழிவிலகினபடியால் விக்கிரகங்கள் விஷயத்தில் ஆதரவு தெரிவிக்க தனது இளம் மனைவிகளின் செல்வாக்கின்/ஆதிக்கத்தின் கீழ் உடனடியாக விழுந்து போனார். சாலொமோன் உண்மையான தேவனை நம்புவதை விட்டு, புறஜாதியரின் தெய்வங்களையும், விக்கிரகங்களையும் நம்ப ஆரம்பித்துவிட்டார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக தனது வெவ்வேறு மனைவிகளை பிரியப்படுத்தும் எண்ணம்/விருப்பம் அவருக்குள் படிப்படியாக வந்துவிட்டதே காரியமாகும். இக்கருத்து 6-ம் வசனத்தில் வெளிப்படுகின்றது. அதாவது, சாலொமோன் கர்த்தரை முழுவதுமாக விட்டுவிடவில்லை. மாறாக, அவர் கர்த்தரை பூரணமாக பின்பற்றவில்லை என்று வாசிக்கின்றோம்.

**(1 இராஜாக்கள் 11:7, 8)** எல்லா பாவங்களுக்கும் ஆரம்பம் இருப்பது போன்று, இதற்கும் ஆரம்பம் இருந்தது - சாலொமோன் தனது மோவாபிய மனைவிகளைத் திருப்திப்படுத்துவதற்கு, காமோசுக்கு மேடைகளைக் கட்டின போது, அதாவது ஒரு விக்கிரகம் அறிமுகப்படுத்தப்படட் போது, 8-ம் வசனத்தில் பாாக்கிறபடி அவருடைய மற்ற புறஜாதி மனைவிகளும் அதே மாதிரியான உரிமைகளை, வாய்ப்புகளை பலபீடங்களைக் கேட்டார்கள். இந்த மனைவிகளும், பணிப்பெண்களும், வேலையாட்களும் மற்றும் பல்வேறு தேசங்களிலிருந்து வரும் பிரதிநிதிகளும் தங்களுடைய பலிபீடங்களையும், தங்கள் தெய்வங்களின் ஆலயங்களையும் சாலொமோனின் தேசத்தில் பார்க்கும்போது, சாலொமோனை புகழ்வார்கள் என்பதே சாலொமோனின் மனதில் இருந்தது என்பதில் ஐயமில்லை. இந்த புகழ்ச்சிகள் கர்த்தரிடமிருந்து வரும் புகழ்ச்சியிலிருந்தும், சேபா நாட்டு இராஜஸ்திரீயின் நாட்களில் தேவன் மீது காணப்பட்ட அவனுடைய உண்மையின் நிமித்தமும், மெய் ஞானத்தின் நிமித்தமும் புகழ்ச்சி தெரிவித்ததிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டதாகும்.

**(1 இராஜாக்கள் 11:9, 10)** சாலொமோன் மேல் கர்த்தருக்கு ஏற்பட்ட கோபம் ஆவேசமோ அல்லது பழிவாங்கும் கோபமோ அல்ல. இது பாவத்திற்கு எதிரான சரியான கோபமேயாகும். இவ்வகையான கோபம் மாத்திரமே தேவனுடைய பண்புகளில் ஒன்றாகும். தேவனுடைய பிள்ளைகளும் இம்மாதிரியான கோபத்தை மாத்திரமே விருத்தி செய்ய வேண்டும் அல்லது காட்ட வேண்டும். தேவனுடைய அன்பான குமாரனுக்கு ஒத்த சாயலை அடைய விரும்புவோர் பகை, கசப்பு, பொறாமை, சண்டை வடிவில் உள்ள கோபத்தைக் களைந்து போட வேண்டியவர்களாக இருக்க, அவர்கள் பல்வேறு உருவங்களில் வரும் பாவம் மற்றும் தீய செய்கைக்கு எதிராக நீதியான கோபம் மாத்திரமே கொள்ள வேண்டும். இந்த நீதியான கோபம் மிகுந்த தன்னடக்கத்தோடும் அன்போடும் கையாளப்பட வேண்டும். சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நீதியான கோபம் கொள்ளாமலும், அதை காட்டாமலும் இருந்து விடுவது கூட தவறாகிவிடும்.

**(1 இராஜாக்கள் 11:11, 12)** சாலொமோனின் குமாரனாகிய ரெகோபெயாமிடமிருந்து இராஜ்யபாரம் பிடுங்கப்படுவது, சாலொமோனின் பாவங்களுக்குரிய தண்டனையின் ஒரு பகுதியாகும். இது இயல்பான காரணங்களினால் இயல்பாகவே சம்பவித்தது. சுயத்தை திருப்திப்படுத்தும் விஷயங்களில் ஆரம்பம் கொண்ட தீய வாழ்க்கை மனைவிகளைப் பெருக்கினதில் வெளிப்பட்டது. மேலும் தவறான மதங்கள் விஷயங்களில் உள்ள அவர்களின் விருப்பங்களைத் திருப்தி செய்யும் காரியங்கள் இத்தோடு நின்றுவிடாமல் சாலொமோனின் காரியங்களிலும், இராஜ்யங்களிலும் பல்வேறு திசைகளில் பரவினது. சாலொமோன் அவருடைய நாட்களில் வாழ்ந்த மற்ற இராஜாக்களைப் போல் அதிகமதிகமாய் நடந்து, தனக்குரிய ஆதாயத்தையே சுயநலமாய் நாடி, கர்த்தருடைய ஜனங்களின் நலத்தை/நன்மையை கருத்தில் கொள்ளாமல், தனது சொந்த விருப்பங்களுக்காகவும் தன்னுடைய அநேக குடும்பங்களின் விருப்பங்களுக்காகவும் வேலைகள் செய்தார். சாலொமோன் கர்த்தருடைய ஜனங்களின் சந்தோஷத்திற்காகவும் நன்மைக்காகவும் தனக்கு கர்த்தரால் அருளப்பட்ட தாலந்துகளாகிய ஞானம், செல்வம் மற்றும் ஐசுவரியத்தைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் இதற்கு நேர்மாறாக ஜனங்களின் மேல் மிகுந்த பாரங்களைச் சுமத்தினார் என்று 1 இராஜாக்கள் 12:4, 11-ம் வசனங்களில் பார்க்கின்றோம்.

யூத ஜனங்கள் தங்களுடைய சுயாதீனத்தை வைராக்கியமாக பாதுகாக்கிற ஜனங்களாக இருந்தார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தெய்வீக சத்தியத்தின் விளைவாகவே அவர்களிடம் சுயாதீனத்தின் ஆவி/சிந்தை காணப்பட்டது. அதாவது, அரியணையில் வீற்றிருக்கும் இராஜா, வயலில் வேலை செய்யும் விவசாயி போலவே சகலருக்கும் நியாயாதிபதியாய் இருக்கின்ற தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார்கள். இஸ்ரயேலரை சுற்றியிருந்த தேசத்தார்கள் தங்களின் இராஜாக்களை பாதி கடவுள்களாக பாவித்து, இராஜாவின் ஒவ்வொரு விருப்பத்தையும் பிரமாணமாகக் கருதினது போன்று இஸ்ரயேலர்கள் கருதவில்லை. சாலொமோன் கர்த்தரைவிட்டு பின்வாங்கினதற்கோ, பொய் தேவர்களை வழிப்பட பலபீடங்களை அவர் கட்டினதற்கு எதிராகவோ ஜனங்கள் போராடவில்லை. ஆனால் தங்களின் தனிப்பட்ட உரிமைகள் மற்றும் சுயாதீனத்தில் சாலொமோன் தலையிட்டபோது, ஜனங்கள் தங்களின் சீற்றத்தை வெளிக்காட்ட முற்பட்டார்கள் என்று நாம் பார்க்கின்றோம். சாலொமோன் முழு தேசத்தையும் பன்னிரண்டு மாவட்டங்களாக பிரித்து, ஒவ்வொரு மாவட்டமும், இராஜ அரண்மனை மற்றும் பிரகாரத்தின் ஆடம்பர தேவைகளுக்காக நன்கொடை கொடுப்பதற்கு வற்புறுத்தப்பட்டார்கள். சாலைகள், அரண்மனைகள், பெரிய தோட்டங்கள், கோட்டைகள், களஞ்சியங்கள் முதலியவைகளைக் கட்டுவதற்கு கட்டாயமாக வேலை செய்யும் முறைமையை ஏற்படுத்தினார். இப்படியாக கட்டிடங்கள் கட்டுவது சரியான காரியமாக இருப்பினும் இஸ்ரயேலர்கள் தாங்கள் வேலை வாங்கப்படும் விதத்தையே குறிப்பாக வெறுத்தார்கள். இஸ்ரயேலர்கள் எகிப்தில் அடிமைகளாக வேலை வாங்கப்பட்டதை நினைவு கூர்ந்தார்கள். லீபனோனின் மலைகளில் சென்று மரங்களை வெட்டுவதற்கும், எருசலேமில் கற்களை வெட்டியெடுப்பதற்கும் 30,000 புருஷர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு 10,000 எண்ணிக்கை உள்ள ஜனக்கூட்டமும், வருஷத்தின் மூன்றில் ஒரு பங்கு காலம் வேலை செய்தார்கள். 70,000 புருஷர்கள் சுமக்கும் வேலைகளுக்காகவும், பொதுவான வேலைகளுக்காகவும் நியமிக்கப்பட்டார்கள். 80,000 புருஷர்கள் தச்சர்களாகவும், கல் சிற்பிகளாகவும் நியமிக்கப்பட்டார்கள். இந்த வேலையாட்களுக்கு 32,000 மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இன்றைய காலங்களில் இயந்திரங்களால் செய்யப்படுகின்ற பாரமான வேலைகள் அனைத்தும் அன்றைய நாட்களில் சரீர பலத்தினாலேயே செய்யப்பட்டது. இந்த அனைத்து வேலைகளிலும் சாலொமோன் அவருடைய நாட்களில் இருந்தவர்கள் போன்று திரளான ஜனங்களை ஆளுகை செய்கிறவர்களுக்கு அடிமைகளாகவே நடத்தினார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளைத் தவிர மற்ற அநேக ஜனங்கள் இராஜாவின் சேனைகளுக்குரிய பணிவிடைகளுக்கும், பொதுவான பணிகளுக்கும் நியமிக்கப்பட்டனர். தேவன், சாமுயேல் தீர்க்கதரிசி வாயிலாக இஸ்ரயேலர்களை எச்சரித்த விஷயங்களையே தங்களுடைய ஞானமுள்ள மாபெரும் இராஜாவின் கீழ் இஸ்ரயேலர்கள் கற்றுக் கொண்டிருந்தார்கள். 1 சாமுயேல் 8:18-ம் வசனம் பார்க்கவும்.

**(1 இராஜாக்கள் 11:13)** இவ்வசனம் சாலொமோனின் ஊழியக்காரனாகிய யெரோபெயாம் மூலம் நிறைவேறினது. கொஞ்சம் அனுதாபத்தின் காரணமாகவும், மிகுதியான பேராசையின் காரணமாகவும் இவர் ஜனங்களின் இருதயங்களை சாலொமோனிடமிருந்து திருட முயற்சித்து சாலொமோனின் நாட்களில் கலகம் செய்ய முற்பட்டு கர்த்தருடைய திட்டத்திற்கு மாறாக செயல்பட்டார். (1 இராஜாக்கள் 11:31) சாலொமோனின் மரணத்திற்குப் பின்னரே, யெரோபெயாம், இஸ்ரயேலின் பத்து கோத்திரங்களோடு ஒன்று சேர்ந்து, சாலொமோன் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவராய் இருந்தபடியால் அவர் அந்த கோத்திரத்திற்கே பிரதான ஆதரவு அளித்துள்ளார் என்று சுட்டிக்காட்டி, விரோதத்தை உண்டு பண்ணினார். யெரோபெயாம் பத்து கோத்திரத்தாரின் பிரதான மனுஷர்களோடு சேர்ந்து, ரெகோபெயாம், தனது தகப்பன் துன்பப்படுத்தினது போன்று தான் செய்வதில்லை என்று வாக்களிக்கவில்லை எனில், கலகம் செய்வோம் என்று அரைக்கூவல் விட்டார்கள். ரெகோபெயாம் மாற்றம் செய்ய மறுத்தபோது, அவர்கள் கலகம் செய்தார்கள். இராஜ்யம் பிரிந்தது. இந்த பிரிவு, பாபிலோனின் இராஜாவினால் சிறைபிடிக்கப்பட்டு செல்லும்வரை காணப்பட்டது. பாபிலோன் இராஜா முதலாவது பத்து கோத்திரங்களையும் பின்னர் யூதேயா என்று

அழைக்கப்பட்ட இரண்டு கோத்திரங்களையும் சிறைபிடித்துக் கொண்டு போனார். சிறைபிடிப்பிலிருந்து திரும்பின பின்பு, இஸ்ரயேல், யூதேயா என்ற வேற்றுமை, பிரிவு காணப்படவில்லை. கர்த்தரும், அப்போஸ்தலர்களும் அவர்ளைக் குறித்து பேசுகையிலும், தீர்க்கதரிசனங்களைப் பொறுத்தி பேசுகையிலும் அவர்களை, "பன்னிரண்டு கோத்திரத்தார்," "இஸ்ரயேல் வீட்டார்," "சிறைபிடிக்கப்பட்ட பன்னிரண்டு கோத்திரத்தார்" என்றே அழைக்கின்றனர். "சிறைபிடிக்கப்பட்ட பன்னிரண்டு கோத்திரத்தார்" என்று சொல்லும்போது, பத்து கோத்திரத்தார் புறஜாதிகள் மத்தியில் சிதறடிக்கப்பட்டார்கள் என்றும், இரண்டு கோத்திரத்தார் மாத்திரமே சொந்த தேசத்தில் இருந்தார்கள் என்று அர்த்தம் கொள்ளாமல், மாறாக, பன்னிரண்டு கோத்திரத்தாரில் ஒரு பகுதியினர் கானான் தேசத்தில் இருந்தார்கள் (பிரதான யூதேயா) என்றும், பன்னிரண்டு கோத்திரத்தாரில் மீதியானவர்கள் சிதறடிக்கப்பட்டு பலவேறு புறஜாதியாரின் பட்டணங்களில் வாழ்ந்தார்கள் என்றே புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக, எபேசு, பிலிப்பி, கொரிந்து, தெசலோனிக்கேயா போன்ற பட்டணங்களில் காணப்பட்டார்கள். இவர்களிடமே அப்போஸ்தலர்கள் முதலாவதாக சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் - **அப்போஸ்தலர் 16:13; 17:2, 10; 18:8, 19.**

சாலொமோனின் குமாரனுக்கு ஒரு கோத்திரம் கொடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. சிலசமயம் இரண்டு கோத்திரம் என்று அழைக்கப்படுகின்றது. ஆனால் பென்யமின் கோத்திரத்தாரின் மீதியானவர்களும் (இதன் அழிவிற்கு பின்னர்) யூதேயா என்று அழைக்கப்படும் கோத்திரத்திற்குள் ஒன்றாகிவிட்டார்கள்.

சாலொமோனின் கவலைக்கிடமான வீழ்ச்சியில், நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்னவெனில், நாம் தேவனுக்கு இசைவாக, ஞானத்தோடு, ஜீவியத்தை ஆரம்பிப்பது மாத்திரம் முக்கியமல்ல, அதில் நிலைத்திருந்து, அதை தொடர்ந்து, முடிவுவரையிலும் அப்படியாகவே காணப்பட வேண்டும். வாழ்க்கையின் பரீட்சைகள் மற்றும் சோதனைகள் இளமையான பிராயத்தில் இருப்பவர்களுக்கு மாத்திரம் வராமல், நாம் ஜீவியத்தில் வளர்ச்சியடையும் போது, கடுமையான சோதனைகள் வரும் என்கின்ற பாடத்தையும் நாம் கற்றுக் கொள்கின்றோம். மேலும் இந்த சோதனைகளை சமாளிப்பதற்கு நாம் ஆயத்தம் பண்ண ஆரம்பித்த குணலட்சணங்கள், விருத்தியடைய வேண்டும், வளர வேண்டும், மற்றும் அனுபவங்களினாலும் சகித்துப் போராடுவதினாலும் வலுவடையவும் வேண்டும்.

மற்றொரு பாடம், திருமணத்தின் முக்கியத்துவம் பற்றியதாகும். இப்பாடம், திருமணம் கனமுடையது என்றும், அது கர்த்தருக்குள் மாத்திரம் இருக்க வேண்டும் என்ற அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளுக்கு முழு இசைவுடன் காணப்படுகின்றது. யாரொருவர் இந்த ஆலோசனையை ஏற்க மறுக்கின்றார்களோ, அவர்கள் செய்த அல்லது மறுத்ததற்காக வருந்த வேண்டும். இல்லையெனில், தன்னுடைய பின் வாங்குதலை உணர்ந்து கொள்ள முடியாத நிலைக்கு போய்விடுவார். ஒவ்வொரு கிறிஸ்தவனும், தானே வெளி சோதனைகளுக்குள் போய் சிக்கிக் கொள்ளாமல் இருந்தாலும், தேவையான ஒவ்வொரு நேரங்களிலும் கிருபை கிடைக்கும் என்று கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணின விஷயங்களைக் கொண்டிருந்தாலும் அவர் எதிர்த்து போராடுவதற்கு அவனுக்குள்ளாகவே போதுமான அளவு கீழான தன்மைகள் இருக்கின்றன. ஒருவேளை கர்த்தருடைய போதனைகளைப் புறக்கணித்து கர்த்தருக்குள் இல்லாத கணவனையோ, மனைவியையோ திருமணம் பண்ணி, அதாவது தேவனுடைய இராஜ்யத்தை பிரதானமாகத் தேடாமல், பரத்திற்குரிய விஷயங்களை நாடாமல், பூமிக்குரிய விஷயங்களை நாடும் கணவனையோ, மனைவியையோ திருமணம் பண்ணி, தன்னிடத்தில் காணப்படும் பலவீனங்களோடுகூட இன்னும் சில பிரச்சனைகளை எடுத்துக் கொள்ளும்போது, அது அவனுக்கு மிகுந்த சாதகமற்ற தன்மைகளை ஏற்படுத்திவிடும். சாலொமோன் தெய்வீக வாக்குத்தத்தங்கள், ஆசீர்வாதங்கள் மற்றும் சொந்த இனத்தாருக்கு அந்நியர்களாக இருக்கும் ஸ்திரீகளை விவாகம் பண்ணினது போல் ஆகிவிடும்.

ஞானம், ஐசுவரியம், கல்வி, செல்வாக்கு மற்றும் பெரிய வாய்ப்புகளை நாம் பயன்படுத்த பரத்திலிருந்து வரும் ஞானத்தினால் தொடர்ந்து வழிநடத்தப்படவில்லையெனில், அவைகள்

கண்ணிகளாகவும், ஆபத்தானவைகளாகவும் மாறும் என்பதே பாடமாகும். எந்த அளவிற்கு இந்த தாலந்துகளை நாம் பெற்றிருக்கின்றோமோ, அந்த அளவிற்கு நமது கர்த்தர் இயேசு மூலம் மாத்திரம் அருளப்படும் தெய்வீகக் கிருபை நமக்கு அவசியப்படும்; மேலும் அந்த அளவிற்கு தேவனுடைய வார்தைகளில் கூறப்பட்டுள்ள தாழ்மை மற்றும் தேவபக்தியை கற்று, தியானித்து, செயல்முறைப்படுத்துவதும் அவசியப்படும். மேலும் நம்முடைய ஆசீர்வாதத்திற்காகவும், உதவிக்காகவும் நமக்களிக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றையும் முழுமையாக பயன்படுத்துவதும் அவசியமாகும். "ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்."

ஆமென்!!

----------------------------------

# பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள் – எண். 2

### யோவான் 4:23

### *சகதூதுவர்களைத் தொழுதுகொள்ளுதல்*

தேவனுடைய ஜனங்கள் ஒருவரையொருவர் அன்புகூர வேண்டும் மற்றும் மேன்மையாய் எண்ணிட வேண்டும். அதுவும் ஒருவரிலொருவர் தேவனுடைய ஆவியை, கிறிஸ்துவின் ஆவியை, பரிசுத்தத்தின் மற்றும் சத்தியத்திற்கும், நீதிக்குமான அர்ப்பணிப்பின் ஆவியை அடையாளம் கண்டுகொள்வதற்கேற்ப இப்படியாகச் செயல்பட வேண்டும்; அதாவது உண்மையுள்ளவர்கள் "அவர்களுடைய கிரியையினிமித்தம், மிகவும் உயர்வாகக் கருதப்பட வேண்டும்" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்றதாகும் (1 தெசலோனிக்கேயர் 5:13; திருவிவிலியம்); "கனம் பண்ணப்பட வேண்டியவர்களைக் கனம் பண்ணிடுவதற்குச்" சிலர் தவறிப்போய்விடுவதற்கான அபாயம் இருப்பினும் (உரோமர் 13:7), சத்தியத்திற்கடுத்த ஊழியங்கள் தொடர்புடைய விஷயங்களில் தேவன் பயன்படுத்துவதற்குப் பிரியப்படுகின்றதான மனித கருவிகளுக்கு மிகவும் அதிகமான கனத்தைச் சிலர் சாற்றிடுவதற்கான அபாயமும் காணப்படும் என்பதில் ஐயமில்லை. ஆகையால் முந்தைய தருணங்களின்போது கவனத்திற்குக் கொண்டுவந்ததுபோல, இங்கும் மனிதனை தொழுதுகொள்ளும் அபாயம் குறித்துக் கவனத்திற்குக் கொண்டுவருவது ஏற்றதாயிருக்கும். இது மிகவும் ஆற்றல்மிக்க விதத்தில், வெளிப்படுத்தல் 22:9-ஆம் வசனத்தில், நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தின் யோவான் - சுவிசேஷ யுகம் முழுவதும் ஜீவித்துக்கொண்டிருக்கும் பரிசுத்தவான்களுக்கு அடையாளமான யோவான், தெய்வீகத் திட்டத்தினுடைய பல்வேறு அம்சங்கள் திறக்கப்படுவதைப் பார்க்கச் சிலாக்கியம் பெற்றவர், இறுதியில் இவ்விஷயங்களைத் தனக்குக் காண்பித்த தூதனைத் தொழுதுகொள்ளும்படிக்குப் பணிந்துகொள்கின்றார். ஆகையால் பழையதும், புதியதுமானவைகளைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களென அவ்வப்போது பயன்படுத்தப்பட்ட தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு அல்லது மனமாற்றத்திற்குக் காரணமாயிருந்த அல்லது வேறேதேனும் ஆவிக்குரிய பிரயோஜனத்திற்குக் காரணமாயிருந்த ஏதோ ஒரு குறிப்பிட்ட சகோதரனுக்கு அல்லது சகோதரிக்கு, அதிகப்படியான அன்பையும், மரியாதையையும் மற்றும் கனத்தையும் கொடுத்துவிடுவது, அநேகருடைய மனோநிலையாக இருந்துள்ளது மற்றும் இருந்தும் வருகின்றது. இந்த மனப்பான்மையானது ஆதி திருச்சபையில் காணப்பட்டது; சிலர் ஏதோ ஓர் அப்போஸ்தலனை மேன்மையாய் வைத்திருந்தனர் மற்றும் சிலர் இன்னும் வேறொருவரை தங்களுக்குப் பிரதானமானவராகவும், போதகராகவும் வைத்திருந்து, அந்நபருடைய சீஷர் எனத் தங்களை அழைத்துக்கொண்டனர்; "நான் பவுலைச் சார்ந்தவன்" அல்லது "நான் அப்பொல்லோவைச் சார்ந்தவன்" அல்லது "நான் பேதுருவைச் சார்ந்தவன்" என்பது போன்றெல்லாம் கூறினார்கள். இம்மனப்பான்மையானது, மாம்ச சிந்தையை ஓரளவுக்கு சுட்டிக்காட்டுகின்றது என்று அவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் உறுதிப்படுத்தினார் மற்றும் பவுல், அப்பல்லோ மற்றும் பேதுரு என்பவர்கள் யார் என்று வினவி, அவர்கள் உங்களைச் சத்தியத்தினால் ஆசீர்வதிப்பதற்குத் தேவன் அனுப்பிடுவதற்குப் பிரியப்பட்ட ஊழியக்காரர்கள் அல்லது பிரதிநிதிகள் மாத்திரம்தான் என்று கூறினார். "நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்." இப்படியாக ஆசீர்வாதங்களானது கடந்து வருகின்றதான பாத்திரங்களையல்ல, மாறாகக் கர்த்தரை - தங்கள் ஆசீர்வாதங்களுக்கான காரணரைத் தேவனுடைய ஜனங்கள் அங்கீகரித்திட வேண்டும் மற்றும் அவர்களுக்காக மரித்து, அவர்களை மீட்டுக்கொண்டவருடைய நாமத்தையே உண்மையாய்த் தரித்துக்கொள்ள வேண்டுமேயொழிய, வேறு நாமத்தையல்ல என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்.

இதுபோலவே சபையானது, இருண்ட யுகங்களினுடைய காரிருளை, சீர்த்திருத்தவாதிகளாகிய லூத்தர், கல்வீன், சுவிங்கிலி மற்றும் இன்னும் பலருடைய உதவி மற்றும் அறிவுரையின் கீழ் அப்புறப்படுத்துவதற்குத் துவங்கினபோது, சீர்த்திருத்துதல் பணியில் கருவிகளாக இருப்பதற்குத் தேவனால் கனப்படுத்தப்பட்ட கருவிகள் மீது சபைக்கு, இயல்பாகவும், முறையாகவும் மிகுந்த மதிப்புக் காணப்பட்டது. ஆனால் மீண்டுமாக தெய்வீக

ஆசிரியரைத் தொழுதுகொள்ளுவதற்குப் பதிலாக, மனித பிரதிநிதிகளை, தூது கொடுப்பவர்களைத் "தொழுதுகொள்ளும்" மனப்பான்மை வெளிப்பட்டது மற்றும் இன்று பல்லாயிரக்கணக்கானோர் தங்களை லூத்தர், கல்வின், வெஸ்லி, கேப்பெல், இன்னும் பலரின் நாமங்களில் அழைத்துக்கொண்டு, தேவனுடைய வார்த்தைகளைக் காட்டிலும், இவர்களுடைய போதனைகளுக்கும், எழுத்துக்களுக்கும் அதிக மதிப்புக்கொடுப்பவராகிவிட்டனர் மற்றும் இதற்கேற்ப தங்களுக்குப் பாதகத்தையும் ஏற்படுத்திக்கொண்டனர்.

இதுபோலவே இன்றும், அதாவது முன்பு ஒருபோதும் இல்லாதளவுக்கு மிகவும் தெளிவாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதான தற்கால சத்தியத்தின் வெளிச்சத்திலும்கூடப் பார்க்கையில், கடந்த காலங்களில் மிகவும் தீங்கான தாக்கத்தினைக் கொண்டிருந்ததான மாம்ச ரீதியிலான இந்த மனப்பான்மைக்கு எதிராக, இன்றும் ஜாக்கிரதையாய் இருப்பது அவசியம் என்பதில் ஐயமில்லை.

தெய்வீகத் திட்டத்தினுடைய வியக்கத்தக்க் காரியங்களைத் தனக்குக் காண்பித்திட்டதான தேவதூதனைத் தொழுதுகொள்ளும்படிக்கு யோவான் பாதத்தில் விழுந்தபோது, மரியாதையினை ஏற்றுக்கொள்வதற்குத் தேவதூதன் மறுத்தக் காரியமானது, தேவனுடைய ஊழியக்காரர்கள் (வேலைக்காரர்கள் - செய்தியாளர்கள்) யாவருக்கும் ஒரு படிப்பினையாகக் காணப்பட வேண்டும். "நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; (உன் கர்த்தரும், ஆண்டவருமானவருடன்கூட அல்ல, மாறாக) உனக்கும், தீர்க்கத்தரிசிகளாகிய உன் சகோதரருக்கும், இந்தப் புத்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்கள் யாவருக்கும் நான் உடன் ஊழியக்காரனே; (இந்த ஆசீர்வாதங்கள் மற்றும் இந்த வெளிச்சம் யாவும் கடந்துவரும் ஆதாரமாகிய) தேவனைத் தொழுதுகொள்" என்று தேவதூதன் சொன்னார். தேவனுடைய ஊழியக்காரர்கள் அனைவரும், அவர்களது ஊழியத்தின் அளவு அல்லது காலப்பகுதி என்னவாக இருப்பினும், அவர்கள் உடன் ஊழியக்காரர்களே ஆவார்கள் (வெளிப்படுத்தல் 22:9).

கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் மனிதனைத் தொழுதுகொள்ளும் இம்மனப்பான்மையினை, "மாயமான தாழ்மையிலும், (செய்தியாளர்களுக்கு) தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்" என்று கூறி அப்போஸ்தலன் கவனத்திற்குக் கொண்டுவருகின்றார் (கொலோசெயர் 2:18,19). இச்சோதனையானது வணங்கிடுங்கள் என்ற வெளிப்படையான/நாணமற்ற கோரிக்கையின் விதத்தில் வராமல், மாறாக இரகசியமான, தந்திரமான விதத்தில் வருகிறதாக இருக்கும் என்று சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான பக்தி அல்லது தொழுதுகொள்ளுதல்களே, பெயர்ச்சபை ஊழியங்களில் பொதுவாய்க் காணப்படுகின்றதாய் இருக்கின்றது. மிகவும் சாந்தமானவர்களாகவும், தங்களை வணங்கிடும்படிக்கு அல்லது தொழுதுகொள்ளும்படிக்கு கேட்கவேண்டுமென்று எண்ணிடாதவர்களுமான ஊழியக்காரர்கள் அநேகர், தங்கள் மந்தையினர் மனமார அளிக்கும் ரெவரண்ட்/Reverend என்னும் பட்டத்தினை ஏற்றுக்கொள்கின்றவர்களாய் இருக்கின்றனர்; மற்றும் அப்படித் தங்களை அழைப்பதையும் ஊக்குவிக்கின்றனர் மற்றும் இவ்வகையான வணக்கமோ அல்லது தொழுதுகொள்ளுதலோ தங்களுக்குச் செலுத்தப்படவில்லையெனில், இதனால் சினமும் அடைகின்றனர். ஆவிக்குரிய விஷயங்களில், ஊழியக்காரனுடைய வார்த்தை மற்றும் கணிப்பின்மீது அதிகப்படியான நம்பிக்கை வைப்பது என்பது விசுவாச வீட்டாருக்குப் பாதகமான தாக்கத்தினையே ஏற்படுத்தியுள்ளது மற்றும் ஏற்படுத்தியும் வருகின்றது; இதனால் அநேகர் தேவனுடைய வார்த்தைகளின் அடிப்படையில் தங்கள் விசுவாசத்தினை உறுதிப்படுத்திடுவதற்கும் மற்றும் அதன் நம்பகத்தன்மையை முழுமையாய் நம்பிடுவதற்கும் தவறிவிடுகின்றனர்.

ரெவரண்ட்/Reverend எனும் பட்டத்தினைப் பயன்படுத்திடாதவர்கள் மத்தியிலும்கூட ஓர் அபாயம் காணப்படுகின்றது. (நவம்பர், 15, 95-ஆம் வருடத்தினுடைய நம்முடைய வெளியீட்டில் ஏற்கெனவே சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது போன்று) அதிகாரம் சபையாரிடத்திலேயே காணப்படுகின்றதே ஒழிய, கொஞ்சம் பேருக்கோ அல்லது பல்லாயிரம் பேருக்கோ ஊழியம் புரிவதற்கெனத் தங்களைத் தாங்களே வழிநடத்துபவர்களாக நியமித்துக் கொள்பவர்களிடத்தில் இல்லை என்பது எப்போதும் நினைவில்கொள்ளப்பட வேண்டும். கிறிஸ்துவினுடைய சபைகள், தங்கள் தலையானவரின் வழிநடத்துதலை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் மற்றும் தங்களை வழிநடத்துபவர்கள், அவருடைய விருப்பத்தின்படியானவர்களே என்று அறிவார்கள் (எபிரெயர் 13:7, 17, 24-ஆம் வசனங்களைப் பார்க்கவும்); எனினும் சபையாருடைய விசேஷித்த வேண்டுகோள் இல்லாமல், வழிநடத்துபவர்களின் ஸ்தானத்தை எடுத்துக்கொள்வதன் மூலம், சபையாருடைய உரிமைகளைத் தகாத வழியில் கைப்பற்றிடுவதற்கான அல்லது அந்த

உரிமைகளைப் புறக்கணித்திடுவதற்கான மனநிலையை உடைய யார் குறித்தும் சபையார் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்; கர்த்தருடைய விருப்பம் அறிவது தொடர்புடைய விஷயத்தில் சபையாருக்காக, பகுத்தறிவதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வழிநடத்துபவரே ஆற்றல் மிக்கவராய் இருக்கின்றார் என்று சபையார் எண்ணிக்கொள்ளத்தக்கதாக, அவர்கள் ஏமாற்றப்படுகையில், பகுத்தறிவில் சாந்தமுள்ளவர்களாகக் காணப்படும் அனைவரும் தம்முடைய சபையாக - "தம்முடைய சரீரமாக" இருப்பதினால், அவர்களை வழிநடத்திடுவதற்கு விருப்பமும், வல்லமையும் உள்ளவராகிய உண்மையான ஒரே போதகரெனத் தலையானவரைப் (கிறிஸ்துவை) பற்றிக்கொள்வதற்குத் தவறப்படுகின்றது.

ஒரே மேய்ப்பனிடமிருந்து, ஒரு சக ஆட்டினிடத்திற்கு மந்தையினுடைய கவனத்தை இப்படியாக திசைத்திருப்புவது என்பது எப்போதும் "விழிநடத்துபவர்களின்" தவறாக மாத்திரம் காணப்படுவதில்லை; உண்மையான, தாழ்மையான ஆட்டினுடைய சுபாவம் உடைய அனைவருக்கும், ஒருவரையொருவர் பின்பற்றிடுவதற்கான தன்மை பொதுவாகவே காணப்படுகின்றது. ஆகையால் பிரதான மேய்ப்பன் (கிறிஸ்து) மற்றும் உடன் மேய்ப்பர்களின் (அப்போஸ்தலர்களின்) ஆவிக்கும், சத்தத்திற்கும் முழு இசைவுடன் காணப்படுபவர்களை மாத்திரம் ஒவ்வொரு ஆடுகளும், வழிநடத்துபவர்களாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்றும், மேய்ப்பனால் கட்டளையிட்டப்படியான "சுத்தமான தண்ணீரை" மாத்திரம்தான் மற்றும் "சுத்தமான உணவினை" மாத்திரந்தான் புசிக்கிறானா என்று ஒவ்வொரு ஆடும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றுமுள்ள படிப்பினைகள், அனைவரும் கற்க வேண்டியவைகளாகும் (எசேக்கியேல் 34:17-19-ஆம் வசனங்களைப் பார்க்கவும்); இது உபதேசம் மற்றும் நடைமுறை விஷயங்களில் கிறிஸ்துவினுடைய மந்தையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும், தன்தன் மனச்சாட்சியினைச் செயல்படுத்திட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது மற்றும் இது ஒவ்வொரு ஆட்டையும் குறித்து அறிந்தவராகவும் மற்றும் "தம்முடைய ஆடுகளைப் பேர்ச்சொல்லிக் கூப்பிடுகிறவராகவுமுள்ள" மேய்ப்பனுடன், ஒவ்வொருவனும் நெருக்கமும், ஐக்கியமும் கொண்டிருக்கச் செய்திடும். கர்த்தருடன் தனித்தனி கிறிஸ்தவனுக்கான இதே நெருக்கமான உறவானது, தலை மற்றும் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகிய சபை உள்ளடங்கும் கிறிஸ்து எனும் உருவகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 12:12-27; எபேசியர் 4:15, 16).

சுவிசேஷத்தின் ஊழியத்தில், தேவனுடைய கிருபையினால் நாங்கள் கொஞ்சம் பயன்படுத்தப்பட்டுள்ளப்படியால், நாம் தனிப்பட்ட விதத்தில் அடிக்கடி கூறிவந்தவைகளையும் மற்றும் இதே இதழின் கடந்தகால வெளியீடுகளில் கூறிவந்தவைகளையும், இங்குக் குறிப்பிடுவது ஏற்புடையதாகவே இருக்கும் - அதாவது நாங்கள் (சகோ. ரசல்) சக ஊழியக்காரர்களுடைய மற்றும் முழு விசுவாச வீட்டாருடைய அன்பையும், அனுதாபத்தையும், நம்பிக்கையையும் மற்றும் ஐக்கியத்தையும் மதித்திட்டாலும், எங்களுக்கோ அல்லது எங்கள் எழுத்துக்களுக்கோ பாராட்டும், வணங்குதலும் வேண்டாம்; ரெவரண்ட்/Reverend அல்லது ரபி என்று அழைக்கப்படுவதற்கும் நாங்கள் விரும்பவில்லை. எங்களுடைய பெயரினால் யாரேனும் தங்களை அழைத்துக்கொள்வதையும் நாங்கள் விரும்பவில்லை. அனைவருக்குமாக மரித்தவரின் நாமம் - கிறிஸ்தவன் எனும் பெயர் - தேவனுடைய ஆவிக்குரிய புத்திரர்களை, கிறிஸ்துவினுடைய உண்மையான சகோதர சகோதரிகளை அழைத்திடுவதற்குப் போதுமானதாய் இருக்கின்றது; மற்றும் இதற்கு மிஞ்சினது/அப்பாற்பட்ட எதுவும் பொல்லாப்பினால், மாம்சத்தினால் வருகிறதாகவும் காணப்படும் மற்றும் இவைகளுக்கு ஏதுவானதாகவே காணப்படும்.

எங்களுடைய (சகோ. ரசல்) எழுத்துகள்/படைப்புகள் தலை வணங்கப்படுவதற்கோ அல்லது பிழையற்றவை என்று கருதப்படுவதற்கோ அல்லது பரிசுத்த வேதவாக்கியங்களுக்குச் சரிசமமாகப் பார்க்கப்படுவதற்கோ நாங்கள் விரும்பிடவில்லை. எங்களுடைய போதனைகள் என்று எங்களால் வலியுறுத்தப்படுபவைகள் அல்லது வலியுறுத்தப்பட்டவைகள் தெய்வீக வார்த்தைகளுக்குரிய முரண்பாடற்ற மற்றும் சத்தியத்தின் ஆவிக்கு இசைவாயுள்ள விளக்கங்களேயாகும். முன்புபோல், இன்னமும் நாங்கள் வலியுறுத்துவதாவது - வேதவாக்கியங்களின் வெளிச்சத்தில் ஒவ்வொரு வாசகனும், நாங்கள் வைக்கின்றதான பாடங்களை ஆராய்ந்துபார்த்து, அனைத்தையும் வேதவாக்கியங்களினால் சோதித்தறிந்து, நலமானதைப் பற்றிக்கொண்டு, மற்றவைகளை மறுத்துவிடுவானாக. வேதத்தின் மாணவனானவன், பாடத்தினைத் தெய்வீக ஏவுதலின் பேரிலான வேதாகம பதிவில் அடையாளம் கண்டுபிடிக்கத்தக்கதாக, விசுவாசம் கட்டியெழுப்பப்பட வேண்டியதான அந்த வேதவாக்கியங்களுடைய மேற்கோள்களையும் மற்றும் மேற்கோள்காட்டுதல்களையும் தாராளமாய் அளித்துள்ளோம்.

# "உலகத்திற்கான உப்பும், உலகத்திற்கான வெளிச்சம்"

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்……. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்." (மத்தேயு 5:13-14)

உப்பும், வெளிச்சமும், மனுக்குலத்திற்கு மிகவும் அவசியமானவைகள் ஆகும். மேலும், இவ்விரண்டும் இயற்கை வாயிலாகவும் அதிகமாகக்கிடைக்கின்றது. மிருகங்கள் மற்றும் தாவரங்களினுடைய உட்பொருளுக்குள், உப்பானது பெருமளவில் பிரவேசிக்கின்றது. மேலும், உணவை ருசியுள்ளதாக்குவதற்கென பயன்படுத்தப்படும் இந்த உப்பானது மனிதனுக்கும், மிருகங்களுக்கும் ஏறக்குறைய அவசியமாகவே உள்ளது. மனிதனுடைய வளர்ச்சிப் பாதையின் ஆரம்பக்கட்டத்தில், உப்பு வர்த்தக விஷயங்களிலும் முக்கியமான பங்கு வகித்துள்ளது. இன்னுமாக, இந்த மிகவும் பயனுள்ள உப்பாகிய வியாபாரப் பொருளுக்காகவே, ஆரம்ப காலத்திலுள்ள வாணிப பாதைகள்/சாலைகள் அமைக்கப்பட்டன என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது. உள்நாட்டு ஜனங்கள் மத்தியில் உப்புச்சுனை என்பது, தேவர்களிடமிருந்துவந்த விஷேசமான ஆசீர்வாதமாகக் கருதப்பட்டது. ஆகையால், உப்பிற்கு மத ரீதியில் மிகுந்த முக்கியத்துவம் காணப்பட்டபடியால், தேவர்களுக்குச் செலுத்தப்பட்ட பலிகளில், உப்பு விலையேறப்பெற்ற பொருளாகச் சேர்க்கப்பட்டது. **ஹோமர்** என்பவர் உப்பை தெய்வீகமானது என்றும், **பிளாட்டோ** என்பவர் "உப்பு தேவர்களுக்கு அருமையானது" என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

உப்பினுடைய பயன் மற்றும் முக்கியத்துவத்தினிமித்தமாக நியாயப்பிரமாணத்தின் பழைய யுகத்திலும் மற்றும் கிருபையின் புதிய யுகத்திலும் முக்கியமான படிப்பினைகளைப் புகட்டுவதற்கென உப்பு என்ற வார்த்தை அடையாள வார்த்தையாகப் பயன்படுத்தப்பட்டது. உணவிற்குச் சுவையூட்டும் பொருளாகிய உப்பு விருந்தோம்பலை அடையாளப்படுத்துகின்றது. மேலும், உப்பு கிருமி நாசினியாக இருக்கின்றபடியால், அது தூய்மைக்கும், நேர்மைக்கும், அழியாத்தன்மைக்கும் கூட அடையாளமாக இருக்கின்றது. "உப்பு உடன்படிக்கை" என்ற வார்த்தை வேதாகமத்தில் இடம்பெறுகின்றது (எண்ணாகமம் 18:19 திருவிவிலியம்). உப்பை முக்கியமானப் பொருளாகக் கொண்டுள்ள பலிகள் மூலமாகவே உடன்படிக்கைகள் பொதுவாக ஏற்படுத்தப்படுகின்றது. "நீ படைக்கிற எந்தப் போஜனபலியும் உப்பினால் சாரமாக்கப்படுவதாக உன் தேவனுடைய உடன்படிக்கையின் உப்பை உன் போஜன பலியிலே குறையவிடாமல், நீ படைப்பது எல்லாவற்றோடும் உப்பையும் படைப்பாயாக" (லேவியராகமம் 2:13). உப்பினுடைய பதப்படுத்துகின்ற தன்மையானது, பொறுமையுடன் சகித்துக்கொள்வதற்கான ஒப்பந்தத்திற்குப் பொருத்தமான அடையாளமாகக்கூடக் காணப்படுகின்றது. உப்பினுடைய சுத்தகரிக்கும் தன்மையானது, எலிசா தண்ணீரை ஆரோக்கியமாக்குவதற்கென உப்பைப் பயன்படுத்தின சம்பவத்தில் வெளிப்படுகின்றது (2 இராஜாக்கள் 2:20-22).

"நீங்கள் உலகத்துக்கு உப்பாயிருக்கின்றீர்கள்." அதாவது, உண்மையான கிறிஸ்தவன் ஒருவனிடமிருந்து, உலகத்தின்மீது செலுத்தப்படும் செல்வாக்கானது, சொஸ்தப்படுத்தக்கூடியதும், சுத்திகரிக்கக்கூடியதுமான செல்வாக்காகக் காணப்படும் என்றும், நல்லவைகள் புளித்துப்போகாமலும், அழுகிப்போகாமலும் எப்போதும் பதப்படுத்தி, பத்திரப்படுத்தும் செல்வாக்காகக் காணப்படும் என்றுமுள்ள அர்த்தத்திலேயே, நமது கர்த்தர் இங்கு உப்பு எனும் அடையாள வார்த்தையைப் பயன்படுத்துகின்றார். எவ்வளவு அருமையான ஒப்புமை!

மேலும், கர்த்தருடைய இந்த வார்த்தைகள் உலகத்தின் மீது, கிறிஸ்தவர்கள் தங்கள் சார்பில் பெற்றிருக்கும் ஒரு பொறுப்பைப் பொதுவாகச் சுட்டிக்காட்டுகின்றதாகவும் இருக்கின்றது. கிறிஸ்து உலகத்தான் அல்லாதது போன்று, இவர்களும் உலகத்தார் அல்லாதவர்களாகவும், உலகத்தினின்று பிரிக்கப்பட்டவர்களாகவும், தேவனுடைய சொந்த ஜனமாகவும், அவரால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகவும் இருந்தாலுங்கூட, இவர்கள் உலகத்தினின்று பிரிக்கப்பட்டதும் தேவனுடன் ஐக்கியம், உறவு மற்றும் அவருடன் ஒத்துழைக்கும் நிலைக்கு உயர்த்தப்பட்டதும், இவர்கள் தங்களுக்குள் பெருமையை வளர்த்துக்கொள்வதற்காய் இராமல் மாறாக, "உலகத்தை ஆசீர்வதிப்பதற்கே" என இவர்கள் மறந்துவிடக்கூடாது. ஏனெனில், தேவன் உலகத்தை மிகவும் அன்புகூர்ந்தபடியால், அவர்களை மீட்கும்படியாக தம்முடைய ஒரேபேறான குமாரனை

ஒப்புக்கொடுத்துள்ளார். மேலும், தேவனைப்போன்று கிறிஸ்துவும் உலகத்தை அன்புகூர்ந்தபடியால், உலகத்தின் இரட்சிப்பிற்காக அவர்தாமே தேவனுடைய கருவியாகும்படிக்கு தம்மை ஒப்புக்கொடுத்துள்ளார். (யோவான் 17:16; 3:16; 6:51; 10:18; எபிரெயர் 2:9; ரோமர் 5:18-19).

"நீங்கள் பூமிக்கு உப்பாக இருக்கின்றீர்கள், வெளிச்சமாக இருக்கின்றீர்கள்" என்ற இந்த வாக்கியங்கள் நிகழ்கால அமைப்பில் இருப்பதையும் நாம் கவனிக்கின்றோம். அதாவது, மகிமையடைந்த கிறிஸ்துவின் மூலம் பூமியின் குடிகள் அனைத்தின் மீதும் பொதுவான ஆசீர்வாதம் வருவதற்கு முன்னதாக, இப்பொழுதும் நீங்கள் பூமிக்கு உப்பாகவும், வெளிச்சமாகவும் இருக்கின்றீர்கள் என்பதாகும். "புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக" என்ற அப்போஸ்தலனாகிய பவுலினுடைய புத்திமதியை நாம் நினைவுக்குக் கொண்டுவருவோமாக (கொலோசெயர் 4:5,6 ).

உலகத்தாரிடமான கிறிஸ்தவனுடைய மனப்பான்மையானது, பெருமையாகவும், விருப்பு வெறுப்பு அற்ற நிலையிலும் இராமல் மாறாக, உலத்தினுடைய ஆவி, பரிசுத்தமற்ற இலட்சியங்கள், பேராசைகள் மற்றும் செய்கைகளிலிருந்து விலகின நிலையிலும், அதேசமயம் ஆசீர்வதிப்பதற்கு எப்போதும் ஆயத்தமாகக் காணப்படுவதற்கு ஏதுவாய்ப் பெருந்தன்மையுடனும், இரக்கத்துடனும், அன்புடனும் காணப்பட வேண்டும். மேலும், இவர்களது முன்மாதிரியின் மூலமாகவும், கொள்கைகளின் மூலமாகவும் ஜீவனுக்கான மற்றும் பரிசுத்தத்திற்கான வழியைச் சுட்டிக்காண்பிக்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும். "நான் உன்னைக்காட்டிலும் பரிசுத்தமானவன்" என்று பெருமையுடன் சொல்லும் மனப்பான்மை சரியானதல்ல. மாறாக, "தெய்வீகக் கிருபையினுடைய செல்வாக்கு என்மேல் இல்லையெனில், நான் உங்களைவிட மிகக் கீழான நிலையில்தான் இருந்திருப்பேன். இந்தத் தெய்வீகக் கிருபையை ஏற்றுக்கொள்கிறவர்கள் அனைவருக்கும், அது இலவசமாக வழங்கப்படும். கிருபையினால்தான் இவ்வளவாகக் காணப்படுகின்றேன் என்றபோதிலும், என்னிடம் காணப்படும் குறைவுகளுக்கு, எனக்குப்போதுமான பரிந்து பேசுபவராகக் காணப்படுபவரின் புண்ணியம் தேவைப்படுகின்றது" என்று சொல்லுகிற மனப்பான்மையே சரியானதாகும். வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஏனெனில் செய்கைகள் என்பது, வார்த்தைகள், சொற்களைக்காட்டிலும் அதிக ஆற்றல் உடையதாய் இருக்கின்றது. மேலும், இவர்களுடைய சாட்சியானது, மிகவும் ஆற்றல் உள்ளதாய்க் காணப்படும் பரிசுத்தமான நடத்தை மற்றும் சம்பாஷணையினுடைய சாட்சியானது தேவனுக்கு மகிமை சேர்ப்பதில் தவறுவதில்லை; நீதியினுடைய விவேகத்திற்கும், சிறப்பிற்கும் மகிமை சேர்ப்பதில் தவறுவதுமில்லை; இன்னுமாக, அநீதியைக் கடிந்துகொள்வதிலும் தவறுவதுமில்லை; வரவிருக்கின்ற நியாயத்தீர்ப்பில் நீதி நிச்சயமாய் ஜெயங்கொள்ளும் என்ற உண்மையை அறிவிப்பதில் தவறுவதுமில்லை. (யோவான் 16:8; அப்போஸ்தலர் 24:25).

"உப்பு நல்லதுதான்" என்ற இயேசுவின் வார்த்தைகள், உப்பின் தூய்மையை, நீதித்தன்மையை அடையாளப்படுத்துவதையும், அதன் சுத்திகரிப்பதற்கும், ஆரோக்கியத்திற்கும், பதப்படுத்துமான ஆற்றலை அடையாளப்படுத்துவதையும் குறிக்கின்றது. "உங்களுக்குள்ளே (தூய்மை, நீதி எனும்) உப்புடையவர்களாயிருங்கள்" (மாற்கு 9:50). ஒருவேளை நம்மிடத்திலேயே உப்பு இல்லாதிருந்தால், நம்மால் எப்படிப் பூமிக்கு உப்பாக இருக்க முடியும்? ஒருவேளை நாமே நீதியில் உண்மையுள்ளவர்களாய் இல்லாமல் இருப்போமானால், மற்றவர்கள் மீது சுத்திகரிக்கும், ஆரோக்கியப்படுத்தும் செல்வாக்கை நம்மால் எப்படிச் செலுத்த முடியும்? நீதியுடையவர்களாய் இருக்கின்றோம் என வெளித்தோற்றமாக மாத்திரமே சொல்லிக்கொள்வது என்பது உண்மையான பரிசுத்தம் ஆகாது. வெளித்தோற்றமாக மாத்திரமே சொல்லிக்கொள்ளும் நீதியிடம், ஆரோக்கியமளிக்கும் தன்மைகள் இருப்பதில்லை; மற்றும் உலகத்தாரிடத்திலான நம்முடைய பொறுப்பை ஒருபோதும் நிறைவேற்றவும் செய்யாது. ஆகவே, தேவனுக்குத் துதி ஏறெடுக்கப்படத்தக்கதாக, மனுஷர்கள் நம்மில் கண்டு, உணரத்தக்கதாக, உண்மையான பரிசுத்தம் எனும் உப்பை நாம் பெற்றிருப்போமாக.

இந்த அடையாள வார்த்தையாகிய உப்பைக்குறித்து, நமது கர்த்தர் பேசும்போதுதான், ஓர் எச்சரிப்பின் வார்த்தையையும் கூட சேர்த்துப் பேசுகின்றார். "உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது" (மத்தேயு 5:13). ஆகவே, நீதி என்னும் உப்பை ஒரு

காலகட்டத்தில் பெற்றிருந்த கிறிஸ்தவன் ஒருவன், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளுவதற்கெனத் திரும்புவதுபோன்று திரும்பி, விரும்பி, வேண்டுமென்றே/துணிகரத்துடனே நீதியினின்று, தவறுவானாகில், அவன் "ஒன்றுக்கும் உதவாதவனாகி விடுவான்" (எபிரெயர் 6:4-8; 10:26-31, 38, 39). உப்பை நமக்குள் பெற்றிருப்பது மாத்திரமல்லாமல், அதன் ஆரோக்கியப்படுத்தும் தன்மைகளை நாம் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வதும் எவ்வளவு முக்கியமாய் உள்ளது.

இந்த வகுப்பாரை இயேசு, "உலகத்திற்கு வெளிச்சம்" என்றும் குறிப்பிடுகின்றார். இவர்கள் முழுஉலகமும் வெளிச்சமடையத்தக்கதாக, தேவனுடைய இராஜ்யத்தில் சூரியனைப்போன்று பிரகாசிக்கின்ற காலம் வரவில்லை என்றாலும் கூட, இப்பொழுதும் இவர்கள் ஒளி வீசுகின்றவர்களாகவே இருக்கின்றார்கள். மேலும், இவர்களிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கென, இவர்களுடைய ஒளியானது, சிறிய வட்டத்திற்குள்ளாகவே பிரகாசிக்கின்றது. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் மீதும், இருளிலுள்ள உலகத்தாரின் மீதுமான கர்த்தருடைய அக்கறையானது, பரிசுத்தவான்களுடைய ஒளி எப்படி இருக்க வேண்டுமென அவர்களுக்கு அவர் கொடுக்கும் புத்திமதியில் வெளிப்படுகின்றது அதாவது, "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்தேயு 5:16). இன்னுமாக இந்த உலகத்தினுடைய இருளைக் கூடுமானமட்டும் விரட்டுவதற்கு ஏதுவாக நாம் நமது ஒளியை வைக்க வேண்டிய இடம் குறித்தும் கர்த்தர் ஆலோசனை வழங்குகின்றார். ஆகவே, நாம் நமது ஒளியை/விளக்கை மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத்தண்டின்மேல் வைக்க வேண்டும். இந்தக் கடமை மற்றும் சிலாக்கியத்தின் விஷயத்தில், நாம் கர்த்தருக்காகக்கொண்டுள்ள பக்தி வைராக்கியத்திற்கு, இன்னும் அதிகமான புத்திமதி அவசியப்படாது. ஏனெனில், கர்த்தரைப் போன்றே ஆவியைக்கொண்டிருப்பவர்கள், இந்தக் கடமை மற்றும் சிலாக்கியத்தில் தங்களுக்கான போஜனத்தையும், பானத்தையும் அடைவார்கள். இவர்கள் தங்களுடைய இருளை மாற்றிப்போட்ட ஒளியை, அதாவது தேவனுடைய சத்தியத்தின் மற்றும் அவருடைய பரிசுத்த ஆவியின் ஒளியை, தங்கள் மூலமாக, மற்றவர்களுடைய இருளின்மேல் பிரகாசிக்கச்செய்வதில் மகிழ்ச்சிக்கொள்வார்கள்.

இவ்விதமாக பார்க்கும்போது, உலத்திற்குரிய ஆசீர்வாதக்காலத்திற்கு முன்னதாகவே தேவனுடைய ஜனங்களுடைய உப்பு மற்றும் வெளிச்சத்தின் வாயிலாக, உலகத்தார் மீது ஓரளவுக்கு ஆசீர்வாதம் வரவே செய்கின்றது. மேலும், இந்த யுகத்தினுடைய முடிவிலோ, நமது உப்பு மற்றும் வெளிச்சத்தினால் உண்டான பலனைப்பார்க்க முடியும். "சமுதாயப் பண்பாட்டு உயர்வு" (Civilization) என்ற வார்த்தைக்குள் அடங்கும் பூமிக்குரிய வளர்ச்சிக்கான சகல ஆசீர்வாதங்கள், இந்தச் சுவிசேஷ யுகத்தில், பூமியின் உப்பாகவும், உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருந்துள்ள சொற்பமான ஜனங்களுடைய நேரடியான மற்றும் மறைமுகமான செல்வாக்கின் காரணமாகவே வந்தவை என்று நாம் கொஞ்சம் கவனித்துப்பார்ப்பதின் மூலம் அறிந்துக்கொள்ளலாம். தற்காலம் வரையிலும் உலகத்தில் இருந்த உப்பு மற்றும் வெளிச்சத்தினுடைய மறைமுகமான செல்வாக்கினுடைய விளைவே/பலனே "சமுதாயப் பண்பாட்டு உயர்வாகும் (Civilization)." தேவனுடைய உண்மையான ஜனங்கள், தெய்வீகச் சத்தியத்தினுடைய வெளிச்சத்தை எவ்வளவுக்கு தங்களால் முடியுமோ, அவ்வளவாய் முதன்மையானதாக உயர்த்திப் பிடித்துள்ளனர். இதன் வாயிலாக இவர்கள் நீதியையும், வரவிருக்கின்ற நியாயத்தீர்ப்பையும் குறித்து முன்வைத்துள்ளனர். மேலும், இவர்கள் தங்களுடைய குணலட்சணங்கள் வெளிப்படுத்தின நீதியின் கொள்கைகள் பற்றின அறிவினாலும், அக்கொள்கைகளை ஏற்றுக்கொண்டு பின்பற்றுமாறு வலியுறுத்தினதாலும், தங்களால் முடிந்தமட்டும் மனிதர்களுடைய மனதில் உப்பிடுவதற்கு முயற்சித்துள்ளனர். மேலும், எந்தளவுக்கு இந்தக்கொள்கைகள் உலகத்தால் செயல்முறைப்படுத்தப்பட்டதோ, அவ்வளவாய்ப் பலனையும் அடைந்தது.

ஆதிமுதல், முடிவுவரை முன்னறிந்துள்ள கர்த்தர், தம்முடைய ஜனங்கள் தம்மோடுகூட வல்லமையிலும், மகா மகிமையிலும் உயர்த்தப்படுவதற்கான நியமிக்கப்பட்ட வேளைவருவதற்கு முன்புவரையிலும், தங்களிடத்திலுள்ள அனைத்து உப்பையும், ஒளியையும் கொண்டு, இப்பொழுது உலகத்திற்குச் செய்திருப்பதைக்காட்டிலும் அதிகம் செய்யமுடியாது என்று அறிவார். ஆனால், "சமுதாயப் பண்பாட்டு உயர்வாகிய" இந்த வேலைகூட, சீர்த்திருத்தலுக்குரிய எதிர்கால வேலைக்கான ஆயத்தம்பண்ணுதல் எனும் விதத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், தேவனுக்கு முன்பாக இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் காணப்படுவதற்கும், இயேசு கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர் ஆகுவதற்குமென, கர்த்தருக்கென்று ஆயத்தமாய் இருக்கும்

ஜனங்களைத் தெரிந்தெடுக்கும் இச்சுவிசேஷ யுகத்தின் விசேஷமான வேலைக்கு உதவியாகவும் காணப்படுகின்றது.

ஆகவே, தேவனுடைய வாக்குத்தத்தத்தங்களைச் சுதந்தரிக்கப் போகின்றவர்களே, இராஜ்யத்தைக் கொடுப்பதற்கெனப் பிதா பிரியப்படுகின்றவர்களே, "உங்களுக்குள் உப்புடையவர்களாய் இருங்கள்." நீங்கள் உப்பிடப்பட்டவர்களாய் இருக்கின்றபடியால், நீங்கள் பூமிக்கு உப்பாக இருக்கின்றீர்கள் என்பதையும், உங்கள் நடத்தை, அக்கிரமத்தைக் கண்டிக்கின்றது என்பதையும், நீங்கள் உப்புத் தன்மையில் தொடர்ந்து காணப்படுவது என்பது பரிசுத்தத்திற்கும், தெய்வீகக் கிருபையினுடைய வல்லமைக்கும் ஜீவனுள்ள சாட்சியாக உள்ளது என்பதையும் மறந்து விடவேண்டாம். செவிச்சாய்ப்பவர்களுக்கு ஆசீர்வாதமாகவும், செவிச்சாய்க்காதவர்களுக்கு எச்சரிப்பாகவும், சகல ஒளிக்கும் மகா மையமாக இருக்கும் தேவனுக்கு துதி உண்டாகவும் தக்கதாக ஒளி பரவிச்செல்லும் விதமாக தெய்வீகச் சத்தியம் மற்றும் அதன் பரிசுத்த ஆவியினுடைய ஒளியை, நம்முடைய சிட்சிக்கப்பட்டதும், திருத்தம்பண்ணப்பட்டதும், தூய்மையானதுமான குணலட்சணங்களில் பிரகாசிக்கின்ற ஒளிக்குவிமையத்திலிருந்து செலுத்த நாம் பிரயாசப்படுவோமாக.

**ஆமென்!**

---

# நினைவுகூருதல் இராப்போஜனம்

நமது கர்த்தரினால் நிறுவப்பட்டதும், அப்போஸ்தலர்களாலும், ஆதித் திருச்சபையாராலும் தொடரப்பட்டதுமான நினைவுகூருதல் இராப்போஜனமானது, பஸ்கா இராப்போஜனத்திற்குப்பதிலாக யூதருடைய முதல் மாதமாகிய நீசான் 14-ஆம் தேதியன்று இடம் பெற்றதாய் இருக்கின்றது. ஆதித் திருச்சபையாருடைய இந்த வழக்கமானது இன்றும் ஆங்கில, உரோம, கிரேக்க, அர்மேனிய மற்றும் மற்ற "கத்தோலிக்க" திருச்சபைகளினாலும், லூதரன் திருச்சபைகளாலும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் அப்போஸ்தலர்களுடைய மரணத்திற்குப் பின்னர் உடனடியாகச் சடங்கு, ஆச்சாரங்களானது படிப்படியாக உட்புகுந்து, மிகவும் பெரியளவில் உண்மையான, எளிமையான நினைவுகூருதல் ஆசரிப்பை வேறுமாதிரியாக்கிவிட்டது. பின்னர் பூசைபலி எனும் கருத்துக்கூட மலர்ந்தது; அதாவது குறிப்பிட்ட பாவங்களுக்கான மன்னிப்பிற்காகக் கிறிஸ்துவை மீண்டும், மீண்டுமாகப் பலிச்செலுத்தும் திருப்பலி/பூசைபலி எனும் கருத்துக்கூட மலர்ந்தது. பூசைபலி என்பது கல்வாரியில் நடைபெற்றதான மாபெரும் பலியினுடைய நினைவுகூருதல்கள் இல்லை மற்றும் அடையாளமான விதத்திலான பலிகளும் இல்லை, மாறாக அது புதிதாயும் மற்றும் உண்மையாயும் பலி செலுத்துதலைக் குறிக்கின்றதாகும். பூசைபலியானது எந்தக் குறிப்பிட்ட பாவங்களுக்காக ஏறெடுக்கப்படுகின்றதோ, அந்தப் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, கிறிஸ்துவைக் குருவானவர் புதிதாய்ப் பலியிடத்தக்கதாக, சாதாரணமான அப்பத்தையும், திராட்சரசத்தையும் கிறிஸ்துவின் நிஜமான சரீரமாகவும், இரத்தமாகவும் மாற்றிடுவதற்குக் குருவானவர் விசேஷமாய்ப் பணியமர்த்தப்பட்டிருக்கின்றார். இந்தப் பூசைபலியானது — எந்த ஒரு நாளினுடைய (அ) இரவினுடைய எந்த ஒரு வேளையிலும் அனுசரிக்கப்படலாம் என்ற காரியம் தவிர, மற்றப்படி — அநேக விதங்களில் நினைவுகூருதலின் இராப்போஜனத்தை நிறுவினப்போது, கர்த்தர் அப்பத்தையும், திராட்சரசத்தையும் பிட்டு, ஆசீர்வதித்ததையே விவரிப்பதுபோன்று தோன்றுகின்றதாய் இருக்கின்றது.

இது தொடர்புடைய விஷயத்தில் சுமார் ஆயிரம் வருடங்களாகக் காணப்பட்டதான தவறானப் போதனைகள் மற்றும் தவறான அனுசரிப்புகளுக்குப் பிற்பாடு புராட்டஸ்டண்டினர்கள் விழித்தெழுந்து, "பூர்வ பாதைகளைக்" கண்டுபிடிப்பதற்கென நாடினபோது, அவர்கள் இந்த விஷயத்திலும், மற்ற விஷயங்களிலும் போப்மார்க்கத்தின் தப்பறைகள் அனைத்தையும் கண்டுபிடிக்கத் தவறினதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இவர்கள் பாவங்களுக்கான கூடுதல் பலிகள் என்ற (பாழாக்கும் அருவருப்பு என்று வேதவாக்கியங்களில் அழைக்கப்படுகின்றதான) போப்மார்க்கத்தின் பூசைபலியினை விலக்கிவிட்டாலும் மற்றும் "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் (கிறிஸ்து) என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" என்று நம்பினாலும் மற்றும் கற்பித்தாலும், இவர்கள் திருவிருந்து என்று அழைக்கின்ற ஆசரிப்பின் விஷயத்தில் அடிக்கடி ஆசரிக்கும் காரியமானது, பூசை பலி அடிக்கடி ஆசரிப்பதுபோன்றது என்கிறதும், நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாளே, அதன் நினைவுகூருதலை ஆசரிப்பதற்கான ஏற்ற ஒரேவேளை மற்றும் நியமிக்கப்பட்ட ஒரேவேளை என்கிறதுமான உண்மைகளைக் காணத்தவறினவர்களாகக் காணப்படுகின்றனர். (எபிரெயர் 10:14)

ஆகையால் சிலர் இதை வருடத்திற்கு மூன்றுமுறை என்றும், சிலர் நான்குமுறை என்றும், சிலர் வாரந்தோறும் என்றும் ஆசரிக்கின்றனர். "அடிக்கடி ஆசரிப்பதே சிறந்தது" என்ற வாதம் சரியானதாய் இருக்குமானால், ஏன் தினந்தோறும் அதை அவர்கள் ஆசரிக்கக்கூடாது? ஏதேனும் வேளையில் அது உண்மையாய்ச் செய்யப்படும்போது, அது பூசைபலிபோன்று பாவமான அருவருப்பு என்று நம்மால்சொல்லமுடியாது என்றாலும், இன்றைய நாட்களின் மனிதர்கள் நமது கர்த்தரையும், சபையின் தேவ ஏவுதலின் பேரிலான போதகர்களாகிய அப்போஸ்தலர்களைக் காட்டிலும் ஞானவான்கள் இல்லை என்பதிலும், ஆதி நிறுவுதலின் காரியங்களிலிருந்து எதிலாகிலும் மாறுவது என்பது பாதகமானதாகவே இருக்கும் என்பதிலும் நமக்கு நிச்சயமே. நினைவுகூரப்படும் காரியத்திற்குச் சம்பந்தமில்லாமல் திரும்பத்திரும்ப ஆசரிக்கப்படுவதின் காரணமாக இந்நிகழ்வானது, அதன் முக்கியத்துவத்தையும், அதன் தாக்கத்தினையும் இழந்துபோகின்றது. தேசம் சார்ந்த நினைவுகூருதல்களானது, வருடத்திற்கு மூன்று முதல் ஐம்பது முறைகள் திரும்பத்திரும்பக் கொண்டாடப்பட்டால், அவைகள் எந்த முக்கியத்துவத்தை மனதில் பதியத்தக்கதாக கொடுக்கப்பட்டதோ, அந்த முக்கியத்துவத்தை எவ்வளவாய் இழந்துபோகின்றதாய் இருக்கும்! உதாரணத்திற்கு ஜூலை 4-ஆம் தேதியானது, ஐக்கிய நாடுகளினுடைய அரசாங்கம் நிறுவப்பட்டதாகிய மாபெரும் நிகழ்வின் தேதியாகும் மற்றும் இது பொதுவாய்க் கொண்டாடப்படுகின்றது. ஒருவேளை இது வாரந்தோறும் (அ) காலாண்டுதோறும் கொண்டாடப்பட்டால், இப்படிச் செய்வதென்பது இதன் முக்கியத்துவத்தையும், தாக்கத்தினையும்

இழக்கச்செய்கிறதாய் இருக்குமல்லவா? நிச்சயமாகவே ஆகும்; இப்படியாகவே நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலின் விஷயத்திலாகும்; இதன் ஆண்டு நிறைவு நாளே, இது ஆசரிக்கப்படுவதற்கு ஏற்ற ஒன்றாகவும், நியமிக்கப்பட்ட ஒன்றாகவும் காணப்படுகின்றது. ஆதியில் நிறுவப்பட்ட விதம் கவனிக்கத்தவறப்பட்டபோது, பரவலாய்க் கவனமின்மையும், அலட்சியத்தன்மையும் ஏற்பட்டது; இதனால் இது எப்போதும் வேதவாக்கியங்களில் "இராப்போஜனம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும், இது இப்பொழுது பொதுவாய் மதியவேளையில் ஆசரிக்கப்படுகின்றது மற்றும் ஒருபோதும் இதன் மாதிரிபடி இராப்போஜனமாக (அ) மாலை உணவாகப் புசிக்கப்படுவதில்லை.

"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26) என்ற வார்த்தைகளானது, "இதை உங்கள் விருப்பத்திற்கேற்ப அடிக்கடி செய்யுங்கள்" என்ற அர்த்தத்தைக் கொடுப்பதாக அநேகரால் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுகின்றது. ஆனால் "இதை" என்ற வார்த்தைக்கே கவனம் கொடுக்கப்பட வேண்டும்; நமது கர்த்தரினால் நிறுவப்பட்டதான இந்த வருடாந்தர நினைவுகூருதலை, நீங்கள் ஆசரிக்கும்போதெல்லாம், நீங்கள் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் மற்றும் இப்படியாக அவரது இரண்டாம் வருகைவரையிலும், அதாவது நினைவுகூருதலில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதான அனைத்தும் முடிவடைகின்ற (அ) நிறைவேறி தீருகின்றதான காலப்பகுதியாகிய, அவரது இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, நீங்கள் மகிமையடையும் காலம்வரை செய்யவேண்டும்.

தேவனுடைய ஜனங்களானவர்கள் "பூர்வ பாதைகளை" நாடுகின்றபடியால் (எரேமியா 6:16), தற்காலத்தினுடைய சத்தியத்தின் வெளிச்சமானது பரவுகையில், மீட்பின் மைய உண்மையை (மாபெரும் பாவநிவாரண பலியை) அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பவர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துவருகின்றது; அநேகமாக 5-ஆம் நூற்றாண்டிலிருந்து இதுவரைக்கும் காணப்பட்டதிலும், அதிகமான எண்ணிக்கையில், இந்த வருடம், தேவனுடைய ஜனங்கள் தங்கள் மீட்பரை நினைவுகூரும் வகையில் அவரது மரணத்தினுடைய ஆண்டு நிறைவு நாளில் "இதைச் செய்வார்கள்."

ஆண்டு நிறைவு நாளை கணக்கிடும் முறைமையை "கத்தோலிக்க" திருச்சபைகள் கொஞ்சம் மாற்றிக்கொண்டதால் அவர்கள் எப்போதுமே ஒரு வெள்ளிக்கிழமையை, நம்முடைய கர்த்தருடைய மரணத்திற்கென்றும் (புனித வெள்ளி என்றும்), தொடந்துவரும் ஞாயிற்றுக்கிழமையை, அவரது உயிர்த்தெழுதலுக்கென்றும் (ஈஸ்டர் ஞாயிறு என்றும்) ஆசரிக்கின்றனர். வராத்தினுடைய குறிப்பிட்ட சில நாட்கள் என்று கவனம்கொடுக்காமல், ஆதித்திருச்சபையினர் யூதருடைய கணக்கிடுதல் முறைமையையே பின்பற்றினார்கள் மற்றும் நாமும் அப்படியாகவே செய்கின்றோம். சிலரால் பின்வருமாறு கூறப்படுகின்றது: அதாவது இளவேனிற் சம இரவு பகல் நாளில் (அ) இதற்குப் பின்னர் உள்ள அமாவாசையுடன், ஒவ்வொரு வசந்த/இளவேனிற் காலத்திலும், யூதர்கள் மாதங்களினுடைய ஆரம்பத்தினைச் சடுதியாய்/திடீரென்று பெற்றிருப்பதினால், பொதுவாகவே ஓய்வுநாளாகவும், ஒரு சுற்றினுடைய புதிய ஆரம்பமுமான பஸ்காவின் துவக்கத்துடன், வாரத்திற்கான துவக்கம் திடீரென்று துவங்குகின்றது; எப்படியாக இருப்பினும், அவர்களது பஸ்கா வாரமானது எப்போதும் தெய்வீகக் கட்டளையின்பேரில் நீசான் 15-ஆம் தேதியன்றே ஆரம்பமானது (யாத்திராகமம் 12; எண்ணாகமம் 28:16, 17).

கிறிஸ்தவர்களாகிய நாமோ, பஸ்கா வாரத்தினை ஆசரிப்பதில்லை. பஸ்கா வாரத்திற்கான நிஜமானது, இராஜ்யத்தின் மகிமை எதிர்க்காலத்தில் அனுபவிக்கப்படும்போது நிறைவேறுகின்றதாய் இருக்கும். யூதர்கள் அவ்வளவுக்குக் கவனம் செலுத்தாத (அ) கவனமே செலுத்தாத நீசான் 14-ஆம் தேதியையே நாம் ஆசரிக்கின்றோம். நீசான் 14-ஆம் தேதியானது பொதுவாய் ஆசரிக்கப்பட்டு வந்ததாய்த் தோன்றுகின்றது; ஆனால் யூதர்கள் நேரத்தின் விஷயத்தில் அதிருப்திக்கொண்டு, தொழிலில் ஈடுபடுவதற்கு ஒருநாளை கூடப்பெற்றுக்கொள்ளத்தக்கதாக, இராப்போஜனத்தையும் 15-ஆம் தேதியுடன்கூடத் திணித்துக்கொண்டார்கள். 14-ஆம் தேதியில் பஸ்கா ஆட்டுக்குட்டியினை அடிப்பதும், புசிப்பதும் இரண்டும் செய்யப்படுவது சரியே; ஏனெனில் இப்படியே நமது கர்த்தரும், பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் செய்தார்கள் மற்றும் அதே நாளில்தானே நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார்; இதனை மாலை 6 மணியோடு ஒவ்வொரு நாளையும் துவக்கும் யூதருடைய கால ஏற்பாடானது சாத்தியமாக்கிற்று (லேவியராகமம் 23:5, 6).

யூதருடைய கணக்கீட்டுமுறைமையின்படி கணக்கிடும்போது, நீசான் 14-ஆம் தேதியானது, இந்த வருடம் ஏப்ரல் 15-ஆம் தேதி, வியாழன் அன்று, மாலை 6 மணிக்குத் துவங்குகின்றது. இரவு 8 மணிக்கு, அலிகெனியிலுள்ள (Allegheny) சிறு கூட்டத்தாரையும் உள்ளடக்கின நிலையில், உலகமெங்கும் காணப்படுகின்றதான உண்மையுள்ள கிறிஸ்தவர்களாகிய கொஞ்சம்பேர், நம்மை அன்புகூர்ந்தவரும், நமக்காகத் தம்மையே கொடுத்தவருமானவரை நன்றியோடு நினைவுகூரும்

வகையிலும், இந்தத் தற்காலத்தின் பாடுகளிலும், சோதனைகளிலும், அவரோடும், அவருடையவர்கள் அனைவரோடும்கூட ஐக்கியப்படுவதற்கு உறுதிகொடுக்கும் வகையிலும், எதிர்க்காலத்தில் அவரது மகிமையில் ஐக்கியப்படுவதற்கான நமது நம்பிக்கைகளைத் தெரியப்படுத்தும் வகையிலும் நினைவுகூருதலின் அப்பத்தைப்பிட்டு, நினைவுகூருதலின் திராட்சப்பழ ரசத்தைச் சுவைப்பார்கள். வாசகனே, நீ அந்த வேளையில் எங்களோடு கலந்துகொள்ள மாட்டாயா? தனிமையில் ஆசரித்தாலும் சரி, சிறுசிறு கூட்டத்தினராய் ஆசரித்தாலும் சரி, பல நூறு மைல்கள் தொலைதூரத்தில் ஆசரித்தாலும் சரி, நாம் நிச்சயமாய் விசேஷித்த ஆசீர்வாதத்ததைப் பெற்றுக்கொள்வோம்; மற்றும் இதை நாம் நாடுவோமானால், சந்தேகத்திற்கிடமின்றி நாம் நமது பரலோக மணவாளனுக்கு விசேஷமாய் அருகாமையில் வரவேற்கப்படுவோம் மற்றும் அவரது சிலுவையைச் சுமப்பதற்கும், பிசாசின் தந்திரங்களை எதிர்த்து நிற்பதற்கும் விசேஷமாய்ப் பலப்படுத்தப்படுவோம்.

இரண்டு விசேஷித்த காரணங்களினிமித்தமாக முன் காலத்தில் செய்ததுபோன்று பொதுவான கூடுகை கூடுவதற்கு இத்தருணத்தில் நாம் அழைப்புவிடுப்பதில்லை; அந்தக் காரணங்கள் பின்வருமாறு: (1) முன்புபோல் வருபவர்களை உபசரிக்க முடியாத சூழ்நிலையில் நாங்கள் காணப்படுகின்றோம்; மற்றும் (2) இந்த ஒரு தருணத்தின்போது ஒவ்வொரு சிறுசிறு கூட்டத்தாரும் கூடிக்கொள்வது நன்மை பயக்கின்றதாய் இருக்கின்றது என்று நாங்கள் நம்புகின்றோம். ஒவ்வொரு குடும்பமும் ஒன்றுகூட வேண்டுமென்பதே யூதருக்கான பிரமாணமாய் இருந்தது; மற்றும் இதுவே நமக்கும் ஏற்றதாகவும், நன்மை பயக்கின்றதாகவும் இருக்கும்.

இதற்குமுன் நாம் சுட்டிக்காண்பித்துள்ளதுபோன்று கர்த்தருடைய ஜனங்களில் எவர் வேண்டுமானாலும், கூட்டத்தாரின் விருப்பப்படி, நமது ஆண்டவருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்குமான அடையாளங்களைப் பரிமாறலாம். "குருமார் வகுப்பார்" மற்றும் "சாதாரண ஜனங்கள் வகுப்பார்" என்ற வித்தியாசங்கள் எல்லாம் தேவனால் உண்டானவையல்ல. மாறாக மனிதனால் தவறாய் எடுத்துக்கொள்ளப்பட்டவையாகும். அடையாளங்களை எடுப்பதற்கும், புசிப்பதற்கும், பானம்பண்ணுவதற்கும், பரிமாறுவதற்கும், உண்மையான "சீஷர்கள்" அனைவரும் வரவேற்கப்படுகின்றனர். கத்தோலிக்க பாதிரிமார்கள் தாங்கள் செய்வதாகக் கூறிக்கொள்வதுபோன்று, எந்த ஒரு மனிதனுக்கும் அப்பத்திலிருந்தும், திராட்சரசத்திலிருந்தும் தேவனை சிருஷ்டிக்க வேண்டுமானால் அதிக அளவிலான அதிகாரமும், நியமனமும் அவசியமாயிருக்கும்; ஆனால் இந்த அருமையான நினைவுகூருதல் தொடர்புடையதாக நமது கர்த்தர் கொடுத்த கட்டளை எதையும் மற்றும் அனைத்தையும் முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள, தாழ்மையுள்ள விசுவாசி மாத்திரமே செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றான். ஆகையால் அவருடையவர்களும், அவரது ஏற்பாட்டினுடைய அருமையைக் காண்கின்றவர்களுமாகிய நாம் அனைவரும் கீழ்ப்படிந்து, அவரை நினைவுகூரும்படியாக "இதைச் செய்வோமாக." புளிப்பு அடையாளப்படுத்துகின்றதான பாவத்திலிருந்து கர்த்தர் விலகினவர் என்பதற்கும், அவரது தூய்மைக்கும் அடையாளமாகப் புளிப்பற்ற அப்பத்தைப் பயன்படுத்துவது சிறந்தது. திராட்சப்பழரசம் (fruit of the vine) என்பது திராட்சரசமாகும் (wine) அல்லது (ஏற்றது என்று நாம் எண்ணுவது என்னவெனில்) புளிப்பற்ற திராட்சப்பழச்சாறு (அ) நீருடன் வேகவைக்கப்பட்ட உலர்த்திராட்சச்சாறாகும்; "திராட்சப்பழரசம்" (fruit of the vine) என்பது விரிவான அர்த்தம் கொண்ட வார்த்தையாகும்.

## உரிய ஆயத்தங்களைப் பண்ணுங்கள்

நிழலில் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்கள் மாத்திரமே பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். இதன் நிஜம் இருதய விருத்தசேதனம் ஆகும்; அதாவது அப்போஸ்தலன் விவரிப்பது, சுட்டிக்காட்டுவது போன்று கர்த்தருக்கான முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் பாவத்திலிருந்தும், மாம்சத்திலிருந்தும் விலகியிருத்தலும் ஆகும். அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கும், அவரது பாடுகளின் பாத்திரத்திலும், சுயத்தை வெறுத்தலிலும் பங்கடைவதற்கும் என்று அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மாத்திரமே உண்மையாய்ச் "சீஷர்களாய்" இருக்கின்றார்கள் என்றும், "இதைச் செய்வதற்கு" அழைக்கப்படுகின்றார்கள் என்றும் நாம் கவனிப்போமாக. மத்தேயு 20:22, 23-ஆம் வசனங்களைப்பார்க்கவும்.

விருத்தசேதனம் பண்ணியுள்ளவர்கள்கூடத் தங்கள் குடியிருப்புகளைச் சுத்திகரிக்க வேண்டும் மற்றும் புளிப்பினால் அடையாளப்படுத்தப்படும் பாவத்தை நீக்கிப்போட வேண்டும் என்பதையும் கவனியுங்கள். இரத்தமானது அவர்களது வீடுகளின் வாசல்களில் தெளிக்கப்படுவதாவது, இரத்தத்தின் மீதான விசுவாசம் வெளியரங்கமாய் அறிக்கைப்பண்ணப்படுவதை அடையாளப்படுத்தப்படுகின்றதாய் இருக்கின்றது. இவைகள் அனைத்தும் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் அடையாளப்படுத்தப்படுகின்றது. புசிக்கிறவர்கள், பரமதேசத்தை நாடுகிற "பரதேசிகளாக" காணப்பட வேண்டும்; நம்முடைய "கசப்பான கீரைகளானது," கர்த்தருக்கான நமது உண்மையினிமித்தமாய் வரும் சோதனைகள், துன்பங்கள் மற்றும் வைதல்கள் மற்றும் ஏமாற்றங்களாக இருக்கின்றது; இவை மாத்திரமே, நமக்காக அடிக்கப்பட்டதான நமது பஸ்காவாகிய கிறிஸ்து எனும் நமது ஆட்டுக்குட்டியின்மீதான நமது பசியினை/ஆவலை அதிகரிக்கப்பண்ணுகின்றதாய் இருக்கின்றது (யாத்திராகமம் 12:8, 11, 12; 1 கொரிந்தியர் 5:7). நியாயப்பிரமாணத்தின்படி, ஆட்டுக்குட்டியினுடைய எந்தப் பாகமும், அடுத்தநாள் புசிக்கத்தக்கதாக மீதிவைக்கப்படக்கூடாது என்கிற காரியமானது, கர்த்தருடைய பலியில் பங்கெடுப்பதற்கான சிலாக்கியத்தை — புசித்தலானது குறிக்கின்றது என்பதையும், பாடுகளில் இந்தப் பங்கெடுத்தல் (அ) ஐக்கியங்கொள்ளுதலானது — இந்தச் சுவிசேஷ யுகத்திற்கு மாத்திரமே உரியது என்பதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இது அப்போஸ்தலனாலும்கூடத் தெரிவிக்கப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 10:16, 17).

கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் தங்களது இருதயங்களானது விருத்தசேதனம் பண்ணப்பட்டுள்ளதா என்றும், மாம்சத்தினுடைய சித்தத்தின்று விலகி முழுக்க கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளதா என்றும் பார்த்துக்கொள்ளத்தக்கதாகத் தங்களைப் பரிசோதனைப் பண்ணிக்கொள்வார்களாக. நாம் பொல்லாப்பு, துர்க்குணம் மற்றும் விரோதம் எனும் பழைய புளித்த மாவைப் புறம்பே களைந்து போடத்தக்கதாகவும், நம்முடைய இருதயங்களின் எண்ணங்களும், நோக்கங்களும் தூய்மையானதாகவும், பரிசுத்தமானதாகவும், இனிமையானதாகவும் காணப்படத்தக்கதாகவும், தவிர்க்க இயலாத பெலவீனங்களானது, விலையேறப்பெற்ற இரத்தத்தின்கீழ் மூடப்பட்டுக் காணப்படத்தக்கதாகவும் பார்த்துக்கொள்வோமாக. அநேகர் "லெந்து கால வழக்கத்தினை ஆசரிப்பதுபோன்று, 40 நாட்கள் உபவாசம் இருக்க வேண்டுமென்று கர்த்தரினாலும், அப்போஸ்தலர்களாலும் எந்தக் கட்டளையும் கொடுக்கப்படாமல் இருந்தாலும், மனிதனுடைய இத்தகைய ஆச்சாரமான கட்டளைகளை நாம் நிராகரித்தாலும், ஆயத்தமாகும் வண்ணமாக தானாய் விரும்பி, கொஞ்சம் உபவாசத்தையும், ஜெபத்தையும் யார் ஏறெடுக்கின்றார்களோ, அவர்கள் அவர்களது விசுவாசம், அன்பு மற்றும் பக்திக்கு ஏற்ப ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

*****

# உன் நாவைப் பொல்லாப்புக்கு விலக்கிக் காத்துக்கொள்

### யாக்கோபு 3:1-13

*“உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.” (சங்கீதம் 34:13)*

“என் சகோதரரே, அதிகமாக நியாயந்தீர்க்கப்படுவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக” (யாக்கோபு 3:1; ரிவைஸ்ட் மொழியாக்கம்). இப்படியாக நாவினுடைய மிகுந்த செல்வாக்குக் குறித்துத் தன்னால் சொல்லப்படப்போகிறவைகள், விசுவாசிகள் மத்தியில் போதகர்கள் ஆகுவதற்கு முற்படுகிறவர்களுக்கு, அதாவது ஒருவேளை போதகர்களாக இல்லாமல் இருக்கையில் பெற்றிருக்கக்கூடிய பொறுப்பினைக்காட்டிலும், போதகர்கள் ஆனதினிமித்தம் மிகுந்த பொறுப்பினை உடையவர்களாக இருப்பவர்களுக்குப் பெரிதும் பொருந்தக்கூடியதாய் இருக்குமென அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். போதிப்பதற்கான திறமை, வரம் இருப்பவர்களைத் தடைப்பண்ணுவது அப்போஸ்தலனுடைய விருப்பமாய் இராமல், மாறாக இப்படியான ஸ்தானத்தை எடுத்துக்கொள்பவர்கள் அனைவருக்குமான பொறுப்புக் குறித்து, அவர்களுக்கு எச்சரிக்கைப் பண்ணிடுவதே அவருடைய விருப்பமாய்க் காணப்படுகின்றது. ஒருவேளை அவர்கள் பேச்சாற்றல் உடையவர்களாய் இருப்பார்களானால் அவர்கள் நாவானது மாபெரும் ஆசீர்வாதத்திற்கு ஏதுவாக அநேகரை கர்த்தரிடத்திற்கும், சத்தியத்தினிடத்திற்கும் மற்றும் நீதியின் பாதையினிடத்திற்கும் திருப்புவதற்கான கால்வாயாகக் காணப்படலாம்; அல்லது ஒருவேளை தப்பறையினால் மாசுபட்டிருக்கும் பட்சத்தில், அந்நாவானது சொல்லமுடியாத அளவுக்கான பாதகங்களை - விசுவாசத்திற்கு, ஒழுக்கத்திற்கு, நற்கிரியைகளுக்குப் பாதகங்களை ஏற்படுத்திடக்கூடும். போதகம்பண்ணுவதற்கான வரத்தைப் பிரயோகிப்பவன் எவனும், தேவனுக்கும், மனுஷனுக்கும் முன்னிலையில் தன்னை அதிகப்படியான பொறுப்பிற்குள்ளாக்குகின்றவனாய் இருப்பான். மத்தேயு 5:19; உரோமர் 2:20, 21; 1 பேதுரு 5:3; தீத்து 1:11; 1 தீமோத்தேயு 1:7; 2 தீமோத்தேயு 4:3; 2 பேதுரு 2:1-ஆம் வசனங்களைப் பார்க்கவும்.

இப்பாடத்தினுடைய எச்சரிப்பானது, நாவிற்கு எதிராக மாத்திரம் காணப்படாமல், நம்முடைய நாவைக்கொண்டு, நாம் மற்றவர்கள் மீது செலுத்திடும் ஆற்றலுக்கு/தாக்கத்திற்கு எதிராகவும் காணப்படுகின்றது. அனுபவம் பெற்றுள்ள ஒவ்வொருவரும், நாவானது சரீரத்தினுடைய மற்ற எந்த அவயவங்களைக்காட்டிலும் நன்மைக்கு அல்லது தீமைக்கு ஏதுவான அதன் ஆதிக்கத்தில் ஆற்றல்மிக்கது என்ற கூற்றினை முழுமையாக ஒத்துக்கொள்வார்கள். நாவைக்காட்டிலும், வேறெந்த அவயமும் கட்டுப்படுத்தப்படுவதற்கு எளிது என்று அனுபவம் கற்றுத் தந்துமுள்ளது. நாவு எனும் இந்த ஊழியக்காரன் மிகவும் திறமிக்கது என்பதினால், விழுந்துபோன சுபாவத்தினுடைய ஒவ்வொரு பேராசையும், விருப்பமும் மற்றும் உணர்வுகளும், இவ்வவயத்தைத் தீமைக்கான ஊழியக்காரனாய் அல்லது கால்வாயாகப் பயன்படுத்திடுவதற்கு நாடுகின்றது. ஆகையால் கிறிஸ்தவனானவன் தனது சரீரத்திலுள்ள இந்த அவயமானது தனக்கோ அல்லது மற்றவர்களுக்கோ இடையூறாகக் காணப்படாமல், இடுக்கமான வழியில் உதவிகரமாகக் காணப்படத்தக்கதாக, இதனை ஆண்டிடுவதற்கும், இது கிறிஸ்துவுக்குள்ளான புதிய மனதின் கீழ், கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படுவதற்கும் அதிகளவிலான விழிப்பும், ஞானமும் மற்றும் கவனமும் அவசியப்படுகின்றது. குதிரையினுடைய வாயிலுள்ள கடிவாளமானது, அதன் பலத்தினை இயக்குகிறதையும், கட்டுப்படுத்துகிறதையும் போன்று, கப்பலினுடைய சிறிய சுக்கானானது, அதன் திசையினைத் திருப்பிடுவது அல்லது வழிநடத்திடுவது போன்று, நாவும் அதன் பிரதிநிதியாகிய பேனாவும், நன்மைக்கு அல்லது தீமைக்கு நேராக, திரளான ஜனங்கள் மீது ஆதிக்கம் கொண்டு, திசைத்திருப்பிவிடுகிறதாக இருக்கும். ஆகையால் நாவானது எத்துணை முக்கியத்துவம் உடையதாய்க் காணப்படுகின்றது மற்றும் நன்மைக்கான பிரதிநிதியாய் இருப்பதற்குப் பதிலாக தீமைக்கான பிரதிநிதியாகவும், விசுவாசத்தினைக் கட்டி எழுப்புவதற்குப் பதிலாக, விசுவாசத்தினை இல்லாமலாக்கிப் போடுகிறதாகவும், நீதியையும், சமாதானத்தையும் உண்டுபண்ணுகிறதற்குப் பதிலாகச் சண்டைச்

சச்சரவுகளின் விதைகளை விதைக்கிறதாகவும் நாவானது காணப்படுவதை எத்தனைதரம் நாம் கண்டிருக்கின்றோம்! இப்படியான நிலைமை உலகத்தாரின் மத்தியில் உண்மையாக இருப்பினும், தேவனுடைய ஜனங்கள் மத்தியிலும்கூட நிலைமை கொஞ்சம் இப்படியாகவே காணப்படுகின்றது மற்றும் ஒவ்வொருவனும் தான் ஏதோ ஒருவிதத்தில் போதகனாய் இருக்கின்றான் என்பதையும், தினந்தோறும் சத்தியம், நீதி மற்றும் சமாதானத்திற்கடுத்த நோக்கங்களை ஒன்றில் முன்னேறச் செய்கின்றான் அல்லது தடைப்பண்ணுகின்றான் என்பதையும் நினைவில்கொள்ள வேண்டும்.

சீர்ப்பொருந்திடாத உலகத்தாரின் விஷயத்தில், நாவானது உண்மையில் நெருப்பாகக் காணப்பட்டு, முழுச்சரீரத்தையும் கறைப்படுத்துகின்றதும், விழுந்துபோன உணர்வுகளையும், ஆசைகளையும் தூண்டிவிடுகிறதுமான அனைத்தையும், பொறாமையையும், பகைமையையும், வாக்குவாதங்களையும், கோபத்தையும் கொளுத்திவிடுகின்றதாய் இருக்கின்றது. நாவானது கெஹன்னா அக்கினியினால் - இரண்டாம் மரணத்தினால் - கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது என்று அப்போஸ்தலன் அடையாள வார்த்தைகளில் குறிப்பிட்டதிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அது கொழுந்துவிட்டு எரிகிற காரியமானது, நாவின் எஜமானை மாத்திரமல்லாமல், மற்றவர்களையும் அழிவுக்கு நேராய் வழிநடத்திடும்.

"அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்" என்ற வார்த்தைகளை, அப்போஸ்தலன் தானும், சபையாரும் தங்கள் நாவுகளை இத்தகைய பரிசுத்தமற்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டிருப்பதைத் தெரிவிப்பதற்காகக் குறிப்பிட்டுள்ளதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது, மாறாக முழு உலகத்தைக் குறித்துப் பேசுகையில், சிலர் நாவைத் தேவனைத் துதிப்பதற்கும் மற்றும் சிலர் அவரது பரிசுத்த நாமத்தைத் தூஷிப்பதற்கும் மற்றும் தங்கள் சக சிருஷ்டிகளைச் சபிப்பதற்கும் அதைப் பயன்படுத்துகின்றனர் என்று தெரிவித்துள்ளார். நாவானது எத்திசையில் வழிகாட்டப்படுகின்றதோ, அதற்கு இணங்கிட விருப்பமுள்ள ஊழியக்காரனாய்க் காணப்படுகின்றது; ஆகையால்தான் இவ்வளவு முக்கியமான ஊழியக்காரன், அதாவது அவயம் சரியாய் வழிகாட்டப்படுவது முக்கியமாய் உள்ளது. சபையிலும்கூடச் சிலர் ஒரே வாயினால் தேவனைத் துதிக்கவும் செய்கின்றனர் மற்றும் சக சிருஷ்டிகளைச் சபிக்கவும் செய்கின்றனர் - சபித்தல் எனும் வார்த்தைக்கான சாதாரண அர்த்தத்தின்படி எப்போதும் சபிக்கவில்லை என்றாலும், நாசகரமான அல்லது சபிக்கப்பட்ட அல்லது தீமையான நிலைமைக்கு வழிநடத்துகின்றதான பாதகமான வார்த்தைகளைப் பேசும் விதத்தில் விநோதமாகச் சபிக்கின்றனர்; ஏனெனில் ஒவ்வொரு தவறான போதித்தலும், அதைப் பெற்றுக்கொள்பவருக்குச் சாபமாகக் காணப்படுகின்றது. இப்படியான விதத்தில் அநேகர் ஒரே வாயினின்று நன்மைக்கு ஏதுவான மற்றும் தீமைக்கு ஏதுவான ஆதிக்கங்களைக் கொணர்கின்றவர்களாய் இருக்கின்றனர். இது தவறான நிலைமையாகும்; மற்றும் இதுவே "என் சகோதரரே, அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" எனும் எச்சரிப்பினை முக்கியமானதாக்கிற்று. யாரொருவர் திவ்விய வார்த்தைகள் கடந்துவருகின்றதான நீரூற்றாய்க் காணப்படுகின்றாரோ, ஆசீர்வாதத்தை, புத்துணர்வை மற்றும் பலத்தைச் சுமந்து செல்கின்றாரோ, அவர் போதிக்கும் கால்வாயாகிய தன்னில் சபித்தலாக, பாதகமாகக் காணப்படும் - அதாவது தேவனைக் கனவீனப்படுத்துகிறதும் மற்றும் அவரது வார்த்தைகளைத் தவறாய்ப் பொருள்கொள்ள செய்கின்றதுமான - கசப்பான தண்ணீர்கள், தவறான உபதேசங்கள் காணப்படாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கூட்டங்களுக்கு வழிநடத்துபவர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில், மேலே சொல்லப்பட்டுள்ளதுபோன்று "நாவு/சொல்வன்மை" எனும் தகுதியானது பார்க்கத் தவறப்படக்கூடாது. நெருப்புத்தனமான/கொந்தளிக்கும் நாவுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது; மாறாக சாந்தமுள்ளவர்களும், நிதானம் உள்ளவர்களும், தங்கள் நாவுகளுக்குக் கடிவாளம் இடுபவர்களும், "தேவனுடைய வாக்கியங்களின்படி மாத்திரம் போதிக்கத்தக்கதாக, கவனமாய்ப் பிரயாசம் எடுப்பவர்களும்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இத்தகைய நாவுகளே கட்டுப்பாட்டில் காணப்படுகின்றன; ஆனால் மற்றவைகளோ அடிக்கடி காயப்படுத்தி எதிர்க்கின்றது. கர்த்தருடைய வார்த்தையானது, ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், கருக்கானதாயும் காணப்பட்டு, காரியத்தினை நடைமுறைப்படுத்துவதற்கெனக் கசப்பான மற்றும் கடுமையான/எரிச்சலான மற்றும் அன்பற்ற மனித சொற்களின் அவசியமில்லாமலேயே, இருதயத்தினை உருவக்குத்துகிறதாயும் இருக்கின்றது. ஆகையால்தான் நமக்கு "அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ள" வேண்டும் என்ற தெய்வீக அறிவுரை காணப்படுகின்றது.

சபையில் போதகர்களுக்குரிய (ஞானத்திலும், அறிவிலும்) தகுதியுடையவர்கள், அவற்றை வார்த்தையினாலும், போதித்தல்களினாலும் மாத்திரம் காண்பித்திடாமல், இன்னுமாக தேவபக்திக்குரிய ஜீவியங்கள் மூலமாகவும், ஞானம் தரும் பணிவினாலும்/சாந்தத்தினாலும், நன்னடத்தையாலும் அவற்றைக் காண்பிக்கக்கடவன் என்ற புத்திமதியுடன், பாடம் நிறைவடைகின்றது (யாக்கோபு 3:13; திருவிவிலியம்).

இந்தப் பாடமானது விசேஷமாக "போதகர்களுக்குச்" சுட்டிக்காட்டப்படுகிறதாக இருப்பினும், இது அனைவராலும் கவனிக்கப்பட வேண்டிய பாடமாய் இருக்கின்றது. "அன்பான வார்த்தைகள் என்றுமே அழியமுடியாது" என்னும் பழமொழி உண்டு மற்றும் "அன்பற்ற வார்த்தைகள் என்றுமே அழிவதில்லை" என்று சொல்வதும்கூட உண்மையானதாகவே இருக்கும். உண்மையில் அன்பற்ற வார்த்தைகளானது, பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் - விசேஷமாய் உலகப்பிரகாரமானவர்களின் இருதயங்களில் நீண்டகாலம் நீடிக்கின்றதாய் இருக்கின்றது. நாம் எப்போதும் ஆசீர்வதிக்கிறவர்களாகவும் மற்றும் "கேட்கிறவர்களுக்கு பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தைகளைப் பேசுகிறவர்களாகவும்" காணப்படத்தக்கதாக, நாம் ஒவ்வொருவரும் மற்றும் நாம் அனைவருமே நம்முடைய நாவுகளைக் கீழ்ப்படுத்தும் விஷயத்தில் நமது ஆற்றல்களை இரண்டு மடங்காக்கி, பிரயோகிப்போமாக (எபேசியர் 4:29-ஆம் வசனத்தை வாசிக்கவும்).

---

## ராஜரீக ஆசாரியர்களின் மன விருப்பங்கள்:

நீர் கொடுத்தக் கொடைகளினின்றே கொடுத்திடவே கிருபைதாரும்,

நீர் வாழ்ந்துகொண்டு இருப்பதனாலே என்னையும் வாழவைத்தருளும்,

இருள்மிகுந்த இடங்களிலே என்னை ஒளிரச்செய்ய வேண்டுமே,

உம் ஒளி என்னுடையதானதாலே.

நான் உமது சத்தியத்திற்கும் உமக்கும் ஓர் உண்மையுள்ள சாட்சியாகவே வாழ்ந்திட வேண்டுமே,

வேதாகமத்திற்கு நான் உண்மையுள்ளவனாய் எனைக் காட்டிடவே கிருபை வரம் வேண்டுமே,

வலிமையிலிருந்து வலிமைக்கு, மகிமையிலிருந்து மகிமைக்கு

நான் உயர்ந்திடவே எனக்கு வரம் தந்திட வேண்டும்,

மகிழ்வுடனே என்னைப்பாட அனுமதியும், நீர் எந்தனது இராஜாவாக இருப்பதினால்.

உந்தன் அன்பினுக்காய், என் வாழ்நாள் முழுவதும் உந்தன்

விசுவாசத்திற்காய் நான் புகழ்ந்து பாட அனுமதியும்.

# பரிசுத்த பவுலினுடைய இருதயம் வெளியானது

## அப்போஸ்தலர் 20:22-35

*"வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டும்." (அப்போஸ்தலர் 20:35)*

எபேசுவிலுள்ள சபையின் மூப்பர்களிடத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் பேசியுள்ள வார்த்தைகளைக் காட்டிலும், அநேகமாக வேறெந்த வார்த்தைகளும், அப்போஸ்தலனுடைய இருதயத்தை நாம் தெளிவாய் அறிந்துகொள்ள உதவுகிறதில்லை. அவ்வார்த்தைகளானது அவரது விறுவிறுப்பான வாழ்க்கைக்கான, இயக்கும் தூண்டுதல்களாய்க் காணப்பட்டவைகளை, நமக்குக் காண்பித்துத் தருகின்றதாய் இருக்கின்றது. அவர் சௌகரியத்தையோ அல்லது புகழையோ அல்லது உலகப்பிரகாரமான இன்பங்களையோ நாடிடவில்லை. பூமிக்குரிய பலன்களை எதிர்ப்பார்க்காமல் மற்றும் துன்புறுத்துதல்களையும், அவமானங்களையும், தூற்றுதல்களையும், தவறாய் எண்ணப்படுவதையும் பொருட்படுத்தாமல், தேவனைக் கனப்படுத்துவதிலும், அனைவருக்கும் நன்மை செய்வதிலும் பிரியப்பட்டதான தனது போதகருடைய பரிசுத்த ஆவியினை அப்போஸ்தலன் முழுமையாய்ப் பெற்றிருந்தார்.

ஆகஸ்ட் 29-ஆம் தேதியின் போதான நம்முடைய பாடத்தில், அப்போஸ்தலன் மக்கெதோனியாவிற்குப் புறப்பட இருக்கையில், எபேசுவில் அவர் எப்படி "உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தார்" என்பதைப் பார்த்தோம். அவர் சுமார் பத்து மாதக் காலங்கள் மக்கெதோனியாவிலும், கிரேக்கிலும் காணப்பட்டு, பிலிப்பி, தெசலோனிக்கேயா, பெரோயா மற்றும் கொரிந்து பட்டணங்களின் சபைகளைப் போய்ச் சந்தித்தார் மற்றும் இவைகளுக்கிடையில் இதற்கு முன்பு, தான் போய்ச் சந்திக்காததும், ஆனால் மற்றவர்களால் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் விழித்தெழப் பண்ணப்பட்டதுமான வடக்கிலுள்ள மற்றப் பட்டணங்களுக்கும் ஊழியம் புரிந்திட்டார். சுற்றி சந்தித்தப் பிற்பாடு அவர் மக்கெதோனியா மற்றும் கொரிந்து சபைகளினுடைய காணிக்கைகளுடன் எருசலேமுக்குப் போய்க்கொண்டிருந்தார். எருசலேமில் பஸ்காவின் காலத்தில் சென்றடைய வேண்டுமென்பதால், அவருக்குக் காலம் குறைவாகக் காணப்பட்டது மற்றும் தரைவழியாய்ப் பிரயாணம்பண்ணி, ஆசியா மைனரிலுள்ள (Asia-Minor) சபைகளைப் போய்ச் சந்திப்பதற்குப் பதிலாக, கடல்வழி பிரயாணம் மேற்கொண்டவராய், தன்னை வந்து சந்திக்கும்படிக்கு எபேசு சபை மூப்பர்களுக்கு, மிலேத்துத் துறைமுகத்திலிருந்து, எபேசுவுக்குத் தூது அனுப்பினார் மற்றும் அவர்களுக்கு அவர் கொடுத்திட்டதான செய்தி குறித்த லூக்கா அவர்களின் பதிவு பற்றியே நம்முடைய பாடம் காணப்படுகின்றது.

தனக்கு எருசலேமில் ஏதோ ஒன்று விசேஷமாய்ச் சம்பவிக்கவிருக்கின்றது என்றும், இதன் காரணமாகத் தனக்கு மாம்சத்தில் இந்த அருமையான சகோதரர்களை இனிமேல் மீண்டும் சந்திக்கும் சிலாக்கியம் கிடைக்காது என்றும் தேவன் அப்போஸ்தலனுக்குத் தெரியப்பண்ணியிருந்தார். இக்காரியம் சபையினுடைய மூப்பர்கள் அல்லது பிரதிநிதிகளுடனான இந்தச் சந்திப்பை, விசேஷமாய் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாக்கியது மற்றும் அவரது சம்பாஷணையின் முடிவில், அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் கண்ணீருடன் காணப்பட்டனர்.

எபேசுவிலுள்ள கர்த்தருடைய ஜனங்களிலேயே மிகவும் மனப்பூர்வமாகவும், வைராக்கியமாகவும் காணப்படுபவர்களில் உள்ளடங்குபவர்களெனக் கருதப்படுவதற்கு ஏதுவான அச்சபையின் மூப்பர்களென அல்லது விசேஷித்த ஊழியக்காரர்களெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதான இந்த அருமையான சகோதரர்களை ஊக்குவிக்க விரும்பினவராக, அப்போஸ்தலன் வெகு சுருக்கமாய், அவர்கள் ஏற்கெனவே அறிந்திருந்த காரியங்களை - அதாவது கிறிஸ்துவின் ஊழியக்காரரெனத் தன்னுடைய வழிமுறைகளையும், செயல்முறைகளையும் பற்றின காரியங்களை, அவர்களது மனங்களுக்கு நினைப்பூட்டினார். அவர் தனது அர்ப்பணிப்பின் ஆவியினை, போதகருடைய ஆவியினைக்குறித்து - அவர்கள் கர்த்தர் மற்றும் அவரது ஜனங்களுக்கான ஊழியக்காரர்களாய் அதிக உண்மையுடன் காணப்படுவதற்கு ஏதுவாய்ச் சொல்லிக்கொடுக்க விரும்பிட்டார். சபைக்கு ஊழியம் புரிந்த போதுள்ள தனது சொந்த மனத்தாழ்மைக் குறித்தும், பெருமை ஏதுமற்று அவர்களுக்கு

நினைப்பூட்டினார்; இன்னுமாக எப்படி அவர்களுக்குப் பிரயோஜனமாய்க் காணப்பட்ட எதையும் தான் அவர்களுக்கு மறைத்துவைக்காமல், தான் அறிந்திட்டதான தெய்வீகக் குணலட்சணம் மற்றும் திட்டம் குறித்த காரியங்கள் அனைத்தையும் அவர்களுக்குத் தெரிவித்திட நாடினார் என்றும், சான்று இல்லாத மேதாவித்தனமான கருத்துகளைத் தான் சொல்லவில்லை என்றும் அவர்களுக்கு நினைப்பூட்டினார். அப்போஸ்தலன் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், அதுமுதற்கொண்டு தங்களுக்கு அதிகப்படியான பொறுப்புக் காணப்படுகின்றது என்றும், பரலோகத்திலிருந்து வழிகாட்டப்படும் அதே பாதையில் பின்தொடருவதற்குத் தாங்கள் நாடிட வேண்டும் என்றும் உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

தனக்கான சோதனைகள் இன்னும் முடிவடையவில்லை என்றும், நிச்சயமாகவே இன்னும் பாதகமான காரியங்களே தனக்குக் காத்திருக்கின்றது என்றும் அவர்களிடத்தில் கூறுகையில், அவர் தைரியத்துடன், "ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" (அப்போஸ்தலர் 20:24) என்றார்.

பிரயோஜனமான எதையும் தான் மறைத்து வைக்கவில்லை எனும் விஷயத்திலுள்ள தன்னுடைய உண்மைத் தன்மையைக்குறித்து அவர்களது கவனத்திற்குக் கொண்டுவந்த பிற்பாடு மற்றும் வீழ்ந்துபோகிறவர்கள் எவர் விஷயத்திலும் தான் பொறுப்பாளியல்ல என்று இப்படியாக உறுதிப்படுத்திக்கொண்டு, தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் பின்வரும் விஷயங்களில் எச்சரிக்கையாய் இருக்கும்படிக்கு, கவனமாய் இருக்கும்படிக்குப் புத்திமதிக் கூறினார்: (1) அவர்கள் தங்களைக்குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்; அதாவது அவர்கள் தங்கள் சொந்த அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், அவர்கள் ஆண்டவரால் அங்கீகரிக்கப்படத்தக்கவர்களாய்க் காணப்படத்தக்கதாக, ஆண்டவருடைய அடிச்சுவடுகளில் இப்படியாய் நடந்துகொள்வதற்கும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். மேலும் (2) அவர்கள் ஊழியக்காரர்கள் என்ற விசேஷித்த நியமனத்தை ஏற்றுக்கொண்டுள்ளப்படியால், கர்த்தருடைய மந்தை சார்பில் கூடுதலான பொறுப்பினைப் பெற்றவர்களாய் இருக்கின்றனர் என்றும் நினைவில்கொண்டிட வேண்டும். ஓ! கர்த்தருடைய காரணங்களுக்கான ஊழியக்காரர்கள் யாவரும் இந்தப் புத்திமதியினை இருதயத்திற்குள் எடுத்துக்கொண்டு, பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம்புரியும் அனைவர் மீதான பொறுப்பினை உணர்ந்துகொள்வார்களாக. (இது இன்னும் விரிவான விதத்திலும் பொருத்தப்படலாம்; ஏனெனில் ஒவ்வொரு சகோதரனும் மற்றும் ஒவ்வொரு சகோதரியும் சில விதத்தில் தன் சகோதரன் மற்றும் சகோதரிக்குக் காவலாளியாகக் காணப்படுகின்றார் மற்றும் கர்த்தருடைய மந்தையைப் பார்த்துக்கொள்வதற்குப் பொறுப்புடையவராகக் காணப்படுகின்றார்). பரிசுத்தமானவைகளில் தங்கள் ஊழியக்காரர்களாய் இருந்திடுவதற்கென, மூப்பர்களைத் தேர்ந்தெடுத்ததான சபை பற்றினதாக மாத்திரம், மூப்பர்களுடைய பொறுப்பானது காணப்படாமல், மூப்பர்கள் பரிசுத்த ஆவியினுடைய பிரதிநிதிகளாகியுள்ளனர் என்பதினால், இவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதான பொறுப்பினைச் சாதாரணமாய் எண்ணிவிடக்கூடாது என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அடங்கிய முழுச்சபையும், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர் மற்றும் இதனால் தெய்வீக வழிகாட்டுதலுக்கேற்ப தங்களுக்கான மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதிலுள்ள கடமை உணர்ச்சியுடன்கூடிய இவர்களது செயல்பாடானது, பரிசுத்த ஆவியினுடைய செயல் மற்றும் தேர்ந்தெடுத்தலாகக் கருதப்பட வேண்டும்.

இந்த மூப்பர்கள் நியமிக்கப்படுவதற்கான நோக்கமானது, அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றது போன்று கிறிஸ்துவின் சபையைப் போஷிப்பதற்கும், திவ்விய சத்தியமாகிய அமர்ந்த தண்ணீர்களையும், பசுமையான புல்வெளிகளையும் மந்தையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கும் ஆகும். ஆடுகளை மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பிரிவுகளுக்குள் சேர்த்து அடைத்துவிடுவதற்கும் மற்றும் இப்படியாகக் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளதானவைகளிடத்தில் மேய்வதிலிருந்து ஆடுகள் தடைப்பண்ணப்படுவதற்கும் இந்த மூப்பர்கள் பொறுப்பினைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆடுகள் நன்கு கொழுத்திருப்பதினால் தாங்களே ஆடுகளைப் புசித்திடலாம் என்றும், ஆடுகளின் பொன்னான மயிரினையும் தங்கள் சொந்த ஆதாயத்திற்கென்று, கத்தரித்துக்கொள்ளலாம் என்றும் இவர்கள் எண்ணிவிடக்கூடாது; மாறாக சபை தங்களுடையதாய் இராமல், விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கிக்கொண்ட தேவனுக்குரியது என்று இவர்கள் நினைவில்கொள்ள வேண்டும். ஆகையால் இவர்கள்

கர்த்தருடைய மந்தைக்கு ஊழியக்காரர்களென (அ) வேலைக்காரர்களென நடந்துகொள்ள வேண்டுமே ஒழிய, மந்தையினுடைய அதிகாரிகளாகவும், ஆண்டவன்மார்களாகவும் நடந்துகொள்ளக்கூடாது.

மந்தைக்குள் பேராசைமிக்க ஓநாய்கள் நுழைந்துவிடும் என்றும், இவர்கள் முழுக்கச் சுயநலமுடையவர்களாய் இருப்பதினால், மந்தையின் நலனுக்கடுத்த விஷயங்களில் அக்கறையற்றவர்களாகவும், தங்களது சொந்த நலன்கள் குறித்து மாத்திரம் கவனம் கொண்டவர்களாகவும் காணப்படுவார்கள் என்ற காரியங்கள் குறித்து, தான் அறிந்திருப்பவைகளை அப்போஸ்தலன் தீர்க்கத்தரிசனமாய்ப் பேசினார். இந்த "ஓநாய்களானது," "ஆட்டுத்தோல் போர்த்திக்கொண்டு" தங்களை வஞ்சகமாய் முன் வைக்கின்றது; ஏனெனில் மந்தைகள் ஓநாய்கள் குறித்து விழிப்புள்ளவர்களாய்க் காணப்படுகின்றனர். இதனிலும் கொடிதானவைகளை அப்போஸ்தலன் தீர்க்கத்தரிசனமாய்ப் பின்வருமாறு குறிப்பிட்டார்: மந்தைகள் மத்தியிலிருந்து சில "இறுமாப்புள்ளவர்கள்" எழும்புவார்கள்; பெயர், புகழுக்காக ஆசைக்கொள்ளும் இவர்கள் "சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி" தப்பறைகளைப் பிரசங்கம் பண்ணிடுவார்கள். அந்தோ! இந்தத் தீர்க்கத்தரிசனமானது எபேசுவிலுள்ள சபைக்கு மாத்திரம் உண்மையாய் இராமல், அன்று முதல் இன்று வரையிலும் சபைக்கு உண்மையாய் இருந்துள்ளது! தங்களைக்குறித்துப் பிரசங்கிக்காமல், கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கம் பண்ணுவதற்கும், (தங்களுடைய அல்லது மற்ற மனிதர்களுடைய) மனித தத்துவங்களைக்குறித்துப் பிரசங்கிக்காமல், கிறிஸ்துவினுடைய சிலுவையையும், தேவனுடைய வல்லமையையும், விசுவாசிக்கிற யாவருக்குமான தேவ ஞானத்தையும் குறித்துப் பிரசங்கம்பண்ணுவதற்கும் அப்போஸ்தலன் விரும்பினதுபோன்று விரும்புபவர்கள் எத்தனை சொற்பமானவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்விஷயங்களிலெல்லாம் அவர்களையும் மற்றும் முழுச்சபையையும் மூன்று வருஷகாலமாய், தான் பாதுகாத்துவந்ததாய் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்.

இவர்கள் மாறுபாடானவைகளைப் பேசிடுவார்கள் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார்; அதாவது இவர்கள் பெற்றிருக்கின்றதான மற்றும் மற்றவர்களிடம் பதிய வைக்க இவர்கள் விரும்புகின்றதான ஏதோ சில கருத்துகளுடன் சத்தியத்தினை இசைவாக்கிடத்தக்கதாக, சத்தியத்தைத் திரித்துக்கூறி, புதிய வெளிச்சத்தைக் கண்டுபிடித்தவர்களெனத் தங்களையே உயர்த்திக்கொள்வார்கள். இதற்கு முன்பும், பின்பும் எபேசு சபையில் எழும்பிட்டதான இப்படிப்பட்ட ஐந்து தவறான போதகர்கள் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்டுள்ள அப்போஸ்தலனின் நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர் -- இவர்கள் இமெனேயும், அலெக்சந்தரும், பிகெல்லும், எர்மொகெனேயும், பிலேத்தும் ஆவர் (1 தீமோத்தேயு 1:20; 2 தீமோத்தேயு 1:15; 2:17).

அவர்கள் மீது வரவிருக்கின்றதானவைகளை உணர்ந்தவராகவும் மற்றும் அவைகளை அவர்களிடம் தன்னால் பகிர்ந்துகொள்ள முடியாது என்கிறபோது, சபையின் பிரதிநிதிகளாகிய அவர்களுக்கு அப்போஸ்தலன் என்ன பரிந்துரைத்தார்? "இப்போதும் நான் உங்களைக் கடவுளிடம் ஒப்படைக்கிறேன்: அவரது அருள் வார்த்தைக்கும் கட்டுப்படுவீர்களாக! அவ்வார்த்தை வளர்ச்சியையும் தூயோர் அனைவருக்குமுரிய உரிமைப்பேற்றையும் உங்களுக்குத் தரவல்லது" (அப்போஸ்தலர் 20:32 திருவிவிலியம்) எனும் இந்த வார்த்தைகள் மூலம் பிரமாண்டமான ஆலோசனையை அவர்களுக்கு வழங்கினார். ஆ! ஆம், திவ்விய வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்றும், தங்களைத் தாங்களே குருடாக்கிக்கொண்டு, எதிராளியானவனால் இன்னும் அதிகமாய் இருளுக்குள் வழிநடத்தப்படுவதற்கு ஆயத்தமாகிக்கொள்வதற்கு ஏதுவாய் வேதவாக்கியங்களைத் தாங்கள் புரட்டிடாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்றுமுள்ள பரிந்துரையைப்பார்க்கிலும், வேறு எதுவும் சிறந்த பரிந்துரையாய் இருக்க முடியாது. இப்படியாய் அவர்கள் பரலோகச் சுதந்தரத்திற்கு இன்னும் ஆயத்தமாகவில்லை என்றும், அவர்கள் முதலாவதாகப் பரிசுத்தமாக்கப்படுதலில் வளர்ச்சியடைய வேண்டும் என்றும், அவர்களுக்குள் காணப்படும் கர்த்தருடைய வார்த்தைகளின் ஆவியானது, இருதயம் மற்றும் ஜீவியத்தின் பரிசுத்தமாகுதலை அதிகமதிகமாய் உண்டுபண்ணுகிறதாயிருக்க வேண்டும் என்றும் அப்போஸ்தலன் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார்.

"ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை" (அப்போஸ்தலர் 20:33) என்று எத்தகைய சிறந்ததொரு சாட்சியினைப் பவுலடிகள் தேவனுடைய கிருபையினால் கொடுக்க முடிந்துள்ளது! கூடாரம் செய்யும் தனது தொழிலை, அவர் தன்னுடைய தேவைகள் சந்திக்கப்படுவதற்காக மாத்திரமல்லாமல், தன்னோடுகூடச் சுவிசேஷ பணியில் இணைந்துள்ளவர்களுக்குப் பொருளாதார ரீதியில்

உதவிடுவதற்கும் பயன்படுத்தினார். அர்ப்பணிப்பின் விஷயத்தில் இத்தனை சிறந்ததொரு முன்மாதிரிக்காகத் தேவனைத் துதிப்போமாக! அப்போஸ்தலன் தனது மீட்பர் போன்று சகிக்க முடியாது மற்றும் அவரைக்காட்டிலும் அதிகம் சகிக்கவில்லை மற்றும் அவரைப்போன்று சகிக்கவுமில்லை என்றாலும், அவர் மேலான முன்மாதிரி என்று கருதப்பட முடியாது என்றாலும், முழுமையான அர்ப்பணிப்பிற்கு அவரது வாழ்க்கையானது அளிக்கும் உதாரணமானது, நமக்கு மிகுந்த நன்மைக்கேதுவாய்க் காணப்படுகின்றது; ஏனெனில் நமது கர்த்தர் பூரணமானவர் - பரிசுத்தர், மாசற்றவர், பாவிகளுக்கு விலகினவர் என்று நாம் நினைவுகூருகின்றோம் - ஆனால் அப்போஸ்தலனோ: அவர் "நம்மைப் போன்று பாடுள்ள மனுஷனாக" இருக்கின்றார் என்றும், தான் பூரணமற்றவர் என்றும், தனது புதிய மனதிற்கு, கிறிஸ்துவுக்குள்ளான தேவ சித்தத்திற்கு, தனது சரீரத்தை, தான் கீழ்ப்படுத்திட கடமைப்பட்டிருக்கின்றார் என்றும் கூறுகின்றார்.

இப்பொழுதே இச்சம்பாஷணையின் பின்வரும் முக்கியமான வார்த்தைகளுக்கு நாம் வந்திருக்கின்றோம்: "இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்கு (நடப்பித்து) காண்பித்தேன்" (அப்போஸ்தலர் 20:35). இந்த வார்த்தைகள் நம் அனைவருடைய ஞாபகங்களிலும் ஆழமாய்ப் பொறிக்கப்பட்டிருப்பதாக. பலவான்களுக்கு ஆதரவுக்கொடுத்து (அ) பலவான்களைத் தாங்குவதும், பலவீனர்கள் நமக்கு ஆதரவு அளிக்கத்தக்கதாகக் கூடிவர வேண்டும் என்றும், நம்மை ஆதரிக்க வேண்டும் என்றும் எதிர்ப்பார்ப்பதும், உலகத்தின் நியதியாகவும், விழுந்துபோன சுபாவத்தினுடைய பொதுவான மனப்பான்மையாகவும் காணப்படுகின்றது. இது சுயத்தைத் திருப்திப்படுத்தும் விஷயமாகும் - விழுந்துபோன சுபாவத்தினுடைய வழிமுறையாகும்; ஆனால் இதற்கு நேர்மாறானது "புதுச்சிருஷ்டிகளுடைய" வழிமுறையாகும் - புதுச்சிருஷ்டிகள் மற்றவர்களுடைய, அதிலும் விசேஷமாகத் தங்கள் சொந்த குடும்பங்களிலுள்ளவர்களுடைய நலனுக்கடுத்தவைகளை, ஆறுதலுக்கடுத்தவைகளைக் கவனிப்பதில் விழிப்பாய் இருக்க வேண்டும் மற்றும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைச் சபைக்குப் பொருத்துகையில், அது "விசுவாச வீட்டாரிலுள்ள" பலவீனமான அங்கத்தினர்களுக்கு உதவிசெய்வதற்கு விழித்திருக்க வேண்டும் எனும் கருத்தினை மனதில் பதியவைக்கின்றதாய் இருக்கின்றது. பலவான்கள் ஒவ்வொருவரும் பலவீனர்களுக்கும், குறைவாய்க் கற்றிருப்பவர்களுக்கும் உதவி செய்திடுவதிலும், அனைவரையும் கிறிஸ்துவில் பூரண புருஷனுக்குரிய நிலைக்கு முடிந்தமட்டும் கொண்டுவருவதிலும் மகிழ்ச்சியுடன்கூடிய விருப்பம் கொண்டிருத்தல் வேண்டும்.

அப்போஸ்தலன் இங்குக் கர்த்தரின் ஊழியக்காரனெனத் தான் தலைச் சிறந்திருப்பதற்கான இரகசியத்தைச் சுட்டிக்காட்டுகின்றார் மற்றும் தன் ஜீவியத்தை மாதிரியாக அவரால் சுட்டிக்காட்ட முடிந்ததற்கான காரணம், மாபெரும் போதகரின் வார்த்தைகளை அவர் நினைவுகூர்ந்து, நடைமுறைப்படுத்தியதேயாகும். தன்னையே கொடுப்பது என்பது சந்தோஷமான கிறிஸ்தவ ஜீவியத்திற்கான இரகசியங்களில் ஒன்றாய் இருக்கின்றது. அவர் முதலாவது தனது சித்தத்தைக் கர்த்தருக்குக் கொடுத்தார்; அடுத்து தனது நேரத்தையும், தனது பலத்தையும்/ஆற்றலையும், தனது தாலந்துகளையும் கர்த்தர் மற்றும் அவரது ஜனங்களுக்கான ஊழியத்திற்கென்று கொடுத்தார். மற்றவர்கள் அறிகிறார்களோ இல்லையோ மற்றும் உணர்ந்துகொள்கின்றார்களோ இல்லையோ, அவர் கொடுப்பதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் விருப்பங்கொண்டிருந்தார்; விரைவில் வாங்கிக்கொள்வதற்கான அவரது காலமும் - கொடுத்திடுவதற்கான கர்த்தருடைய காலமும் வரும். இப்படியானவர்களுக்கு கர்த்தர் நித்தியமான ஜீவனையும், நித்தியமான மகிமையையும், தம்முடைய இராஜ்யத்தில் தம்மோடுகூடப் பங்கையும் கொடுத்திடுவார்.

---

# ஏதோ புதுமையென்று திகையாமல்

*“பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.”* (1 பேதுரு 4:12, 13)

இப்போது இருப்பதுபோல, அறுவடை வேலையின் மீதான மாபெரும் எதிராளியானவனின் தாக்குதலானது இவ்வளவுக்கு ஆற்றல்மிக்கதாக வேறு எப்போதும் இருந்ததாக நாங்கள் அறியவில்லை. ஒவ்வொரு திசையிலுமிருந்து - பற்றியெரிகிற அக்கினிகளும், மறைவான ஆபத்துக்களும், துன்புறுத்தல்களும் தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தினைப் பின்பற்றினவர்களுக்கும் மற்றும் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருக்கத்தக்கதாக தீர்மானத்தோடு காணப்படுகிறவர்களுமானவர்களுக்கு எதிராக செயல்படுத்தப்படுகின்றன அல்லது ஆயத்தப்படுத்தப்படுகின்றன என்று தகவல் எங்களுக்கு வருகின்றது. எங்களுக்கு வரும் கடிதங்கள் அனைத்தையும் நாங்கள் வெளியிடுவது நலமானதாய் இருக்காது; ஏனெனில் அநேகமானவைகள் ஊக்கமிழக்கச் செய்கிறதாக இருப்பினும், அநேகமானவைகள் ஊக்கமூட்டவும் செய்கின்றதாக இருக்கின்றது; இப்படி ஈடுசெய்கிறதற்காகக் கர்த்தரை ஸ்தோத்திரிக்கின்றோம். எனினும் சிலவற்றை அனைவரும் பொதுவான விதத்தில் இரண்டு காரணங்களுக்காக அறிந்திருக்க வேண்டுமென நாம் விரும்புகின்றோம்; அவை: (1) இது அவர்களுக்கு இம்மாதிரியான தருணங்கள் வருகையில், அதை எதிர்க்கொள்ளத்தக்கதாக, அவர்களை வலிமைப்படுத்திடும் மற்றும் (2) இது அவர்களில் அனுதாப அன்பினை வளர்த்திடும்; ஏனெனில் சரீரத்தில் ஓர் அவயவம் பாடுபட்டால், அதோடுகூடப் பாடுபடுகிறதன் வாயிலாக அவயவங்கள் அனைத்திற்கும் பிரயோஜனம் உண்டாகிறது.

இங்கு ஒரு விவகாரத்தை நாம் குறிப்பிடுகின்றோம், காரணம் அதன் காரியங்களானது, சிலருக்குப் படிப்பினையைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். சகோதரர் Bahret-இன் கடிதமானது பிரச்சனையைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது --

## நியூயார்க்

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:--

எங்களது அனுபவங்களைக்குறித்து நான் உங்களிடம் சொல்லிட வேண்டும். கடந்த ஜூன் மாதம் சகோதரர் W. de Ronden Pos அவர்கள் நியூயார்க் பட்டணத்திலிருந்து இங்கு வந்து, மாலையில் கூட்டம் ஒன்றினை நடத்தி, அதில் உரோமர் 8-ஆம் அதிகாரத்தின் அடிப்படையில் உரையாற்றினார் மற்றும் அது மிகவும் நல்ல மற்றும் ஆசீர்வாதமான கூட்டமாகவே இருந்தது என்று நான் சொல்லிடுவேன். அப்போது அவர் தனது பெயர்ச்சபையை தான் விட்டுவிலகிடவும், வேறு ஏதேனும் தொழிலில் ஈடுபடவும் நோக்கம்கொண்டிருப்பவராகவும் மற்றும் ஒருவேளை சாத்தியமாகும் பட்சத்தில், அவர் இங்குக் குடிப்பெயர்வார் என்பதாகவும் கூறினார். அவரை எங்கள் மத்தியில் பெற்றிருக்க நாங்கள் மகிழ்ச்சியாய் இருப்போம் என்ற எங்கள் விருப்பத்தினை நாங்களும் தெரியப்படுத்தினோம்; ஆனால் இதற்கப்பால் எதுவும் செய்யப்படவில்லை. பின்னர் மீண்டுமாக அவர் எங்கள் பட்டணத்தில் ஒருவாரக்காலம் வருகைதந்து, ஒரு சில கூட்டங்களை நடத்தினார்; ஆனால் சகோதரனே, நான் ஜெர்மனியில் அப்போது காணப்பட்டப்படியால், நான் இங்குக் காணப்படவில்லை மற்றும் நாங்கள் திரும்பிவருவது வரையிலும், என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டதென்று அறியாமல் இருந்தோம். அவர் இங்கு வருவதற்கும், தனக்குக் கிடைக்கும் எந்த ஒரு தொழிலிலும் ஈடுபடலாம் என்று, உதாரணத்திற்கு agency-இல் வேலை பார்க்கலாம் என்று அல்லது பிழைப்பிற்காகக் காய்கறிகள் மற்றும் கோழிகளை வளர்க்கத்தக்கதாகப் பட்டணத்தினுடைய புறநகர் பகுதிகளில் இடம் ஒன்றைக்கொள்ளலாம் என்று முடிவெடுத்துள்ளார் என்பதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

அவர் கொஞ்சம் வசதியுள்ளவர் என்றும், இதனால் முழுமையாக அவர் தனது தொழிலைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை என்றும் நான் அறிந்துகொண்டேன். அவர் அதிகம் முன்னின்று நடத்துவார் என்றும், மற்றபடி எங்களது கூட்டங்களானது முன்பு போலவே தொடரும் என்று எண்ணினோம்; எங்களால் முடிந்தமட்டும் பூலோகத்திற்கடுத்தவைகளில் அவருக்கு உதவிட விரும்பினோம் மற்றும் நான் ஐரோப்பியாவிலிருந்து திரும்பின கொஞ்சக்காலத்திற்குள்ளாகவே, அவரும் இங்கு வந்து சேர்ந்தார். அவருக்கு மாதத்திற்கு 15 டாலர் நாம் கொடுக்கலாம் என்று நான் கூறினேன் மற்றும் எங்களது பொருளாளரிடம், பற்றாக்குறையினை நான் சந்திப்பேன் என்று தெரிவித்தேன்.

அவர் வந்த பிற்பாடு நல்ல சில கூட்டங்களைப் பெற்றிருந்தோம். புதன் இரவு கூட்டங்கள் ஒன்றில், நாம் (ஊழியர் தேர்ந்தெடுத்தல் நடத்த) ஒழுங்குமுறைக்குள் வரவேண்டும் என்று முன் வைத்தார். நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு முன்னதாக நாம் அனைத்தையும் நன்கு கருதிப் பார்க்கலாம் எனும் யோசனையை நான் முன்வைத்தேன்; ஆனால் அவர் ஒழுங்குமுறைக்குட்படுத்துதலுக்கு ஆதரவளிப்பவர்கள் அனைவரும் எழுந்துநிற்பதன் மூலம் அதைத் தெரிவித்திட வேண்டும் என்று சொல்லி வாக்கெடுக்க கடந்துபோனார் மற்றும் அனைவருமே எழும்பி நின்றார்கள்; நானும் தயக்கத்தோடே எழும்பி நின்றேன்; மறுப்புத் தெரிவிப்பதற்கு எந்தத் திட்டவட்டமான காரியங்களை நான் பெற்றிராத போதிலும், எனக்கு வாக்களிக்க விருப்பமில்லாமல்தான் இருந்தது. எனினும் ஒழுங்குமுறை ஏற்படுத்துவதற்குரிய நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக இன்னொரு கூட்டம் நடத்திட வேண்டும் என்று நான் கூறினேன்.

நாங்கள் சகோதரர்கள், கூட்டம் ஒன்றினை நடத்தினோம் மற்றும் அவரும் காணப்பட்டார்; ஆனால் முழு நேரமும் ஞானஸ்நானம் குறித்துப் பேசினதிலேயே செலவழிந்துபோனது; ஞானஸ்நானத்தினைக் கட்டாயமாக்கிட வேண்டும் என்று அவர் எண்ணம்கொண்டிருந்தார்; ஆனால் தேவனுடைய பிள்ளையாகவும், இயேசு கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவராகவும் காணப்படும் யாரேனும், தண்ணீர் ஞானஸ்நானத்தைக்குறித்து நாம் காணுகின்றது போன்று காணமுடியாததன் காரணமாக, அவர்களை வற்புறுத்தவோ அல்லது தள்ளிவைக்கவோ கூடாது என்று நாங்கள் வலியுறுத்தினோம். இவ்விஷயத்தில் அவர் எங்களுடன் இணங்கினார் என்று நாங்கள் எண்ணினோம் மற்றும் டிசம்பர் 15-ஆம் தேதியன்று மாலையில் நாங்கள் கூட்டம் ஒன்றினைப் பெற்றிருந்தோம் மற்றும் அவர் சில வார்த்தைகளைப் பேசின பிற்பாடு, அவரால் வடிவமைக்கப்பட்ட "அறிக்கை" ஒன்றினை வாசித்து, அதில் நாங்கள் கையெழுத்திட்டோம்; நான்தான் முதலாவதாகக் கையெழுத்திட்டேன்; ஏனெனில் அதற்குக் கையெழுத்திட என்னால் எப்போதும்கூடும். நாங்கள் கையெழுத்திட்டதான "அறிக்கையானது" மிகவும் எளிமையானதாகவும், பரமபிதாவையும், நமது இரட்சகரும், ஆண்டவருமான அவரது குமாரனான இயேசுவையும் அங்கீகரித்ததாகவும் இருந்தது. அந்த இரவில் 22 பேர் அதில் கையெழுத்திட்டார்கள் என்று எண்ணுகின்றேன்; இதில் சிலரை நாங்கள் பார்த்ததேயில்லை; அவர்கள் எங்களை விட்டுப் பிரிந்துபோய், எங்களுக்கு உலகத்தார் போன்று காணப்படுபவர்களாய் இருந்தவர்கள் ஆவர். அவர் நீண்ட நேரம் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பேசி, ஞானஸ்நானம் எடுக்காதவர்கள் எவரையும் அவர் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுக்க அனுமதிப்பதில்லை என்றும், அது தனது சொந்த தாயாராகவும் காணப்பட்டாலுங்கூட, இப்படி அனுமதியாதது, அவள் இருதயத்தினை நொறுக்கிப்போடும் என்றாலும் தான் அனுமதிப்பதில்லை என்றும் கூறினார். எங்களில் சிலர் தங்கள் பெயர்களைப் பட்டியலிலிருந்து அழிக்கும்படிக்குக் கேட்டுக்கொண்டனர்; சிலர் மறுப்புத் தெரிவித்தனர் மற்றும் பிரச்சனைத் துவங்கினது.

அதே கூட்டத்தில்தான் அவர் - தானும் மற்ற அங்கத்தினர்கள் போன்றுதான் என்றும், எப்போதேனும் தான் "ஏதோவாக" ஆக வேண்டுமென எண்ணங்கள் தனக்குள் உதித்திருந்தாலும், தான் அதை முற்றிலுமாய்க் கைவிட்டுவிட்டார் என்றும், எந்தச் சகோதரனும் தனக்கு இணையாகவே காணப்படுகின்றார் என்றும்; இதனால் அங்கத்தினர்கள் பட்டியலில் தனது பெயரை முதலாவதாக, தான் எழுதிடாமல், கடைசியில்தான் கையெழுத்திடுவார் என்றும் கூறியிருந்தார். ஆகையால் அதேகூட்டத்தில், ஞானஸ்நானம் எடுக்காதவர்களைக்குறித்து மற்றவர்கள் வேறே கருத்தில் காணப்படுகின்றனர் என்று அவர் அறிந்திருந்தபோதிலும், அவர் ஞானஸ்நானம் எடுக்காதவர்களை, கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்க அனுமதிப்பதில்லை என்று கூறினதானது சிலருக்கு விநோதமாய் இருந்தது.

அடுத்து நடந்தது என்ன என்று விவரமளிப்பதற்கு முன்னதாக, வேறொரு விவரத்தையும் நான் கொடுக்க வேண்டியுள்ளது; இதற்கு முந்தின ஞாயிற்றுக்கிழமையன்று, அவர் "கர்த்தருடைய இராப்போஜனமானது" வாரந்தோறும் ஆசரிக்கப்பட வேண்டும் என்ற தனது கருத்தைக் கூட்டத்தில் முன்வைத்தார். இது விஷயத்தில் சிலர் அவருக்கு இணங்கினார்கள் மற்றும் மற்றவர்கள் இணங்கிடவில்லை.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை நாங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரித்தோம் மற்றும் சகோதரர் Pos அவர்கள் உரோமர் 14-ஆம் அதிகாரத்தை வாசித்து, ஞானஸ்நானம் எடுக்காதவர்கள் விஷயத்தில் என்ன செய்திட வேண்டும் என்று கர்த்தர் தனக்குக் காண்பித்துக் கொடுத்ததாகக் கூறினார் (நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்ததுபோல, கையெழுத்துப் போட்டிருந்தவர்களில் சிலர் யார் என்று எங்களுக்குத் தெரியாது, காரணம் அவர்கள் முந்தின கூட்டங்களில் சிலமுறைகள் கலந்து கொண்டவர்களாகவும், சிலர் கூட்டங்களில் ஒருபோதும் கலந்துகொள்ளாதவர்களாகவும் காணப்பட்டனர்; அவர்கள் "டிசைப்பில்ஸ்/சீஷர்கள்/Disciples" எனும் சபை பிரிவைச் சேர்ந்தவர்களாவர்; அவர்கள் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டவர்கள், எனினும் எங்கள் அனைவருக்குமே பெயர்ச்சபையினராகவே தோற்றமளித்தனர்); இந்த விதியை நடைமுறைப்படுத்துவதற்கு, ஞானஸ்நானம் எடுத்தும், உலகத்தாராய் இருக்கும் சில ஜனங்களை உள்ளே அனுமதிப்பதாகவும், நம்மோடு இசைவான நிலையில் காணப்படும் மற்றவர்கள் தள்ளிவைக்கப்படுவார்கள் என்பதாகவும் தெரிவித்தார் மற்றும் இப்படியாக இவர்களை மறுபடியுமாக உள்ளே அனுமதித்து, மற்றவர்களை அப்போது புறக்கணித்தார்; மற்றும் பிற்பாடு அவர்களையும் மறுபடியுமாக உள்ளே அனுமதித்தார் மற்றும் இவர்களே அவரது பிரதான ஆதரவாளர்களாக இப்பொழுது காணப்படுகின்றனர். இப்படியாகக் காரியங்கள் ஜனவரி மாதம், முதலாம் வாரம்வரை நடந்துகொண்டிருந்தது; அப்போது நாங்கள் சில ஒழுங்கினைப் பெற்றிருப்பதன் அவசியத்தைக் கண்டுகொண்டோம் மற்றும் சில மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று முன்வைக்கப்பட்டது; இது வேதவாக்கியங்களின் அடிப்படையில் காணப்படுகின்றது என்றும், நவம்பர் 15, '95 வாட்ச் டவர் வெளியீட்டிலும் உங்களது அறிவுரையும் இப்படியாகக் காணப்பட்டது என்றும் நாங்கள் கண்டுகொண்டோம். இதற்கிடையில் அவர் பிரசங்கம்பண்ணிடுவதற்குத் திறமைமிக்க ஒருவராய் இருக்கின்றார் என்று நான் கருதினதையும், அதை அவரால் முழுமையாகப் பிரயோஜனப்படுத்த முடியாததற்காகப் பரிதாபம் கொள்கின்றேன் என்பதையும், அவரை நீங்கள் வாட்ச் டவர் பைபிள் டிராக்ட் சொசைட்டியினால் வேலையில் அமர்த்திடும் திட்டம் ஒன்றினை உங்களுக்கு யோசனையாகக் கூறியும் கடிதம் உங்களுக்கு எழுதியனுப்பியிருந்தேன். நீங்கள் அவருடன் தொடர்ச்சியாய்த் தொடர்பில் காணப்படுவதாக நான் எண்ணிக்கொண்டிருந்தபடியால், சமீபக்காலமாக, அவரிடமிருந்து எந்தத் தொடர்பும் உங்களுக்கில்லை என்று உங்களிடம் தகவலறிந்தபோது, அது எனக்கு விநோதமாகவே இருந்தது; எனினும் நான் உங்களுக்குக் கடிதம் எழுதியுள்ளதைக்குறித்தும், அதை நீங்கள் நன்றாய் வரவேற்றது குறித்தும், ஆயினும் அவர் வாயிலாகவே நீங்கள் கேட்க விரும்பினது குறித்தும் அவர் அறிந்திட வேண்டும் என்றும் நான் எண்ணினேன். ஒரு ஞாயிற்றுக்கிழமை மதியமன்று, கூட்டத்திற்குப் பிற்பாடு, அவரிடம் பேசிட வேண்டுமென்றிருந்தேன்; மற்றும் அவர் மற்றவர்களுடன் பேசிமுடித்துவருவதற்கு நான் காத்துக்கொண்டு நின்றேன்; திடீரென அவர் மில்லேனியேல் டாணின் (volume) உபதேசங்களானது பாதாளத்திலிருந்து வந்ததென வெளிப்படையாய்த் தாக்கிப்பேசத் துவங்கினார் மற்றும் கர்த்தர் வந்துள்ளதாகச் சொல்லிடும் ஜனங்களைக் கர்த்தர் மன்னிப்பாராக என்று கூறினார். நான் உடனே: "சகோதரனே நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள் என்பதைக்குறித்து ஜாக்கிரதையாய் இருங்கள்; ஒரு விஷயம் பிசாசிடமிருந்து வருகின்றது என அவசரப்பட்டுக் கூறிவிடாதீர்கள்" என்று கூறினேன். அதற்கு அவர்: "அது பிசாசிடமிருந்துதான் வந்துள்ளது மற்றும் அதன் உபதேசங்களினால் அநேகர் இடறிபோய் விட்டனர்" என்றார் மற்றும் அவற்றை மிகுதியாய்த் தாக்கிப் பேசினார்.

நாங்கள் அனைவரும் அதிர்ச்சியடைந்துவிட்டோம்; நான் அதிர்ச்சியடைந்து போனேன்; அப்போது இவைகளைக்குறித்து உங்களுக்கு எழுதிட எனக்கு மனதில்லாமல் இருந்தது; ஏனெனில் இவைக்குறித்து அவரிடம் பேசுவதற்கும், விவரித்திடுவதற்கும், அவரது தவறை அவர் கண்டுகொள்வதற்கும் வாய்ப்புக் கிடைக்குமென நான் எண்ணினேன். ஆனால் காரியங்கள் மிகவும் மோசமானது.

இரண்டு வாரங்களுக்கு முன்னதாக, மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கென ஒரு கூட்டமானது எங்களுக்கு நடைப்பெற்றது. அது சகோதரர்களுக்கான கூட்டமாக மாத்திரம்

காணப்பட்டது; ஏனெனில் சபையினை நிர்வகித்தல் விஷயத்தில், பவுலினுடைய போதித்தல்கள்படி ஸ்திரீயானவள் அமைதியாகக் காணப்பட வேண்டும் என்று அவர் கூறினார் மற்றும் இதில் நாங்கள் அவருக்குப் பகுதியளவு இணங்கினோம். மேலும் ஸ்திரீகள் மிக எளிமையாக வஞ்சிக்கப்படுகிறவர்களானபடியால், அவர்களை வாக்களிக்க அனுமதிப்பது பாதுகாப்பாய் இராது; ஏனெனில் தகுதிகளின் அடிப்படையில் இல்லாமல், தனிப்பட்ட விருப்பங்களின் அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுப்பவர்களாய்க் காணப்படுகின்றனர் என்று அவர் கூறினார். பின்னர் மூப்பர்கள் அல்லது கண்காணிகள் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்? என்ற கேள்வி எழும்பினது. தீமோத்தேயு மற்றும் தீத்துவுக்கு எழுதப்பட்டுள்ள நிருபங்களை வாசிக்கையில், அங்கு அவர்களுக்கான தகுதிகளானது தெளிவாய்க் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், பின்னர் ஒவ்வொருவரும் தனது பகுத்தறிவின் அடிப்படையில் தேர்ந்தெடுப்பானாக என்றும் நான் முன்வைத்தேன். அவர் இதற்கு மறுப்புத் தெரிவித்து, தன்னோடு நன்கு ஒத்துழைப்புக்கொடுத்து வேலை பார்ப்பவரென, தான் கருதுபவரைத் தேர்ந்தெடுப்பதற்கு அல்லது முன்மொழிந்திடுவதற்கு, மேய்ப்பனாகிய/பாஸ்டராகிய தனக்கு உரிமை காணப்படுவதாக, தான் எண்ணுவதாகத் தெரிவித்தார்; நாங்கள் அவர் தேர்ந்தெடுத்தவரை அங்கீகரித்திடலாம் அல்லது அங்கீகரிக்கவில்லையெனில் வேறொருவரை, தான் தேர்ந்தெடுப்பதாகக் கூறினார். இதுவரையும் அவர் பாஸ்டராக எங்களால் கருதப்படவில்லை என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

சரி, நமக்கு இதுவரை பாஸ்டர் யாரும் இல்லையெனில் மற்றும் இதுவரையிலும் நான் தற்காலிகமான பாஸ்டராகத்தான் இருந்துள்ளேனானால், நாம் செய்ய வேண்டிய முதல் காரியம், ஒரு பாஸ்டரைத் தேர்ந்தெடுப்பதுதான்; மேலும் நான் உங்களது பாஸ்டர் இல்லையெனில், நான் இனிமேல் கூட்டத்தினைத் தலைமைத் தாங்கி நடத்திடமாட்டேன் என்று அவர் கூறினார். நாங்களோ: நாங்கள் செய்யும்படிக்கு வேதாகமம் அங்கீகரிப்பவைகளை மாத்திரமே நாங்கள் செய்ய விரும்புகின்றோம்; இந்த விதத்தில் ஒரு மேய்ப்பனைத் தேர்ந்தெடுக்க வேதாகமம் எங்களுக்கு அங்கீகாரம் அளிக்கின்றதானால், அதை நாங்கள் செய்வோம்; ஆனால் முதலாவதாக இது விஷயத்தில் நாங்கள் அறிய வேண்டிய காரியங்கள் இருக்கின்றன என்று கூறினோம்.

அதுவரையிலும் முன்புபோல் கூட்டத்தினை நடத்திடும்படியாக அவரிடம் கேட்டுக்கொண்டோம். அதைச் செய்ய ஒப்புக்கொண்டார்; ஆனாலும் மேய்ப்பனுக்கான தேர்ந்தெடுத்தலானது வேறுபட்ட ஒன்று என்றும், இதில் சகோதரர்கள் போன்றும் சகோதரிகளும் கருத்துத் தெரிவித்திடலாம், காரணம் அவர்கள் இதில் மிகவும் ஆர்வம் கொண்டிருக்கின்றனர் என்றும் தெரிவித்தார். வேதாகமம் போதிப்பது எதையும் நாங்கள் செய்திடுவோம், ஆனாலும் இந்த இரவில் எதையும் செய்திட நாங்கள் ஆயத்தமாக இல்லை என்றும் தெரிவித்தோம். அவரோ: நீங்கள் சொல்வது எதிலும் சகோதரிகள் திருப்தியடைந்துவிடுவார்கள் என்று நான் அறிவேன்; ஆனாலும் நீங்கள் பாஸ்டர் ஒருவரைப் பெற்றிருந்தீர்கள் என்றும், இப்பொழுது பாஸ்டர் இல்லாதவர்களாக இருக்கின்றீர்கள் என்றும் அறிந்தால் ஜனங்கள் (பொதுமக்கள்) உங்களைக்குறித்து என்ன சொல்லுவார்கள் என்று சொன்னார். நாங்களோ: உலகம் என்ன சொல்லும் என்று நாங்கள் கவலைப்படப்போவதில்லை என்றோம். பின்னர் நாங்கள் அந்த இரவில் எதுவும் செய்யப் போவதில்லை என்று அவர் கண்டு, அவர் கூறினதாவது: "நான் பரிசுத்த ஆவியினால் இங்கு வந்தேன்; சபையை ஒழுங்குப்படுத்தினேன்; மந்தையைக் கூட்டிச் சேர்த்தேன் மற்றும் இனிமேல் நான்தான் மேய்ப்பனாய்க் (பாஸ்டராய்) காணப்படுவேன் மற்றும் நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், நான் என்னையே மேய்ப்பனாக அறிவித்துக்கொள்கின்றேன்" என்றார்.

இது வேதவாக்கியங்களின்படியானது என்றால், இதை நாங்கள் ஏற்றுக்கொள்வோம்; அப்படி இல்லையேல் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தெரிவித்தோம். நேரமாகிக்கொண்டிருந்தபடியால் கூட்டமானது ஒருவாரம் தாண்டி திங்கள் கிழமைக்கெனத் தள்ளிவைக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமையன்று அவர் நெகேமியாவைக்குறித்த பாடம் ஒன்றினைப் பிரசங்கித்தார்; (நெகேமியாவின் இடத்தில் தன்னை நிறுத்திப் பிரசங்கித்தார்) மற்றும் நெகேமியாவின் வேலையை அழித்துப்போட மற்றவர்கள் அனைத்து வழிகளிலும் முயற்சித்தார்கள் என்றும், அவரின் சார்பில் கர்த்தர் காணப்பட்டபடியால், அவர் இறுதியில் ஜெயித்தார் என்றும் சுட்டிக்காட்டினார்.

திங்கட்கிழமையன்று அவர் "சீஷர்களின்/Disciples" பிரிவினரின் மாநாட்டிற்குச் சென்றார்; அங்கு அவர் புதன் மதியம் வரைக் காணப்பட்டார். திங்கள் இரவன்று கூட்டம்

நடத்தப்பட்டு, இரண்டு மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; சகோ. Knauss மற்றும் நானும் தேர்ந்தெடுக்கப்பட்டோம்; மேலும் நம்மத்தியில் போதிப்பதற்கும், கூட்டங்களை நடத்திடுவதற்கும் திறமிக்கவர்கள் காணப்படுவதாக நாங்கள் எண்ணுவதினால், உதவி ஊழியராக அல்லது உதவிக்காரராக (Deacon) ஒருவர் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று நாங்கள் முன்வைத்தோம் மற்றும் சகோதரர் W.de Ronden Pos அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். எங்களது கூட்டத்தின் முடிவுகளைக் குறித்து சகோதரர் Pos அவர்களிடம் தெரிவிக்கும்படிக்கு ஒரு குழுவானது நியமிக்கப்பட்டது. சகோதரர் Knauss, சகோதரர் Doughty மற்றும் நானும் நியமிக்கப்பட்டிருந்தோம் மற்றும் நாங்கள் அவர் இல்லத்திற்குச் சென்று, அவருக்கு விவரத்தைக் கூறினோம். அவரோ: "என்னால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது. நான் நியமிக்கப்பட்ட மூப்பனாகவும், சுவிசேஷகனாகவும் இங்கு வந்தேன் மற்றும் நான்தான் உங்களது முதல் மூப்பன் மற்றும் சபையைக் கூடிவரும்படிச் செய்து, அனைவருக்கும் இதைத் தெரிவித்திடுவேன்; அவர்கள் எனக்கு ஆதரவாக இருக்கின்றார்களா அல்லது இல்லையா என்று தெரிவித்திடலாம். அதுவுமல்லாமல் "Disciples/சீஷர்கள்" பிரிவிலிருந்து ஒரு சகோதரன் ஒன்றிரெண்டு வாரங்களில் இங்கு வந்திடுவார் மற்றும் இப்பட்டணத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் உட்காரும் மரத்தினாலான கட்டிடத்தை அமைக்கப்போகின்றோம் மற்றும் நீங்கள் எனக்கு ஆதரவு வழங்கவில்லையெனில், முன்புபோல் நீங்கள் உங்கள் கூட்டங்களை நடத்திடலாம்" என்றார்.

அன்று மாலையில் கூட்டத்தினை நடத்திடுவதற்கான சிலாக்கியத்தினை நான் கேட்டுக் கொண்டேன். தற்போதுள்ள இந்த அறுவடையின் காலத்தின்போதுள்ள நமது கடமைக்குறித்தும், அறுவடைப்பண்ணுவதா அல்லது விதைகளை மேலுமாக விதைப்பதா, எது நம்முடைய பிரதான கடமையாயிருக்கிறது என்பது குறித்தும் பேசிட வேண்டுமென்றிருந்தேன். சில விஷயங்களைத் தெளிவு பண்ணிட வேண்டும் என்று எண்ணி எதிர்ப்பார்த்திருந்தேன்; ஆனால் அவரோ: "நான் சில விஷயங்களை முதலாவது ஜனங்களிடம் பேசிட வேண்டும் மற்றும் அவர்கள் பிற்பாடு நீங்கள் பேசுவதைக் கேட்க விரும்பினால், நீங்கள் பேசிடலாம்" என்றார். கூட்டத்தில் அவர் முதலாவதாக . . . தான் இதுவரையிலும் தற்காலிகமான பாஸ்டராகத்தான் இருந்துள்ளதாக சிலர் எண்ணுவதாகவும் மற்றும் தன்னுடைய ஸ்தானம் என்ன என்பதை தான் அறிய விரும்புகின்றார் என்பதாகவும், இச்சபைக்குப் பாஸ்டர் இருக்கிறாரா அல்லது இல்லையா என்று அறிய தான் விரும்புகின்றார் என்பதாகவும் கூறி, இதினிமித்தம் சபையானது தன்னுடைய நிலைப்பாட்டினைத் தெரிவிப்பதே இந்த ஞாயிற்றுக்கிழமை மதியவேளையில் முதலாம் காரியமாயிருக்கின்றது என்று கூறினார்.

அவர் பேசி முடிந்தபிற்பாடு, நான் சில வார்த்தைகளைப் பேச வேண்டும் என்றேன்; ஆனால் அவரோ: இது அலுவல் கூட்டமல்ல, நாம் பக்திவிருத்தியடைவதற்காக ஒன்றுகூடி வந்திருக்கின்றோம் என்று கூறி, வேதவாக்கியங்களிலிருந்து வாசிக்கத் துவங்கி, எனக்கு அனுமதி வழங்காமல் இருந்தார். கூட்டம் முடிவது வரையிலும் நான் காத்திருப்பேன் என்றும், விளக்கமளிக்கும் சில வார்த்தைகளைக் கேட்க விரும்புபவர்கள் அங்குக் காத்திருக்கலாம் என்றும் கூறினேன். கூட்டம் முடிந்தவுடன், அனைவரும் நேராக வீடுகளுக்குச் சென்று ஜெபிக்கும்படியாக, தான் அறிவுறுத்துவதாகக் கூறினார். தன்னைப் பிரியப்படுத்த வேண்டும் என்று விரும்பினால் மற்றும் மற்றவர்களுடையதைக் காட்டிலும் தன்னுடைய பகுத்துணர்வே மேலானது என்று அவர்கள் கருதினால் அவர்கள் வீட்டிற்குச் சென்றிட வேண்டும் என்றார். நானோ ஒரு விஷயத்தினுடைய ஒரு பக்கத்தின் விவரத்தில் மாத்திரம் திருப்தியடைந்திருப்பவர்கள் அனைவரும் வீட்டிற்குச் சென்றிடலாம் என்றும், மற்றவர்கள் காத்திருக்கும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள் என்றும் கூறினேன். சிலர் வீட்டிற்குத் திரும்பியும், சிலர் காத்தும் இருந்தனர். இது நடைபெறுவதற்கு முன்னதாக இந்த விஷயமானது ஞாயிற்றுக்கிழமைக்குக் கொண்டுவரப்படாமல், வேறொரு நாளில் நடக்க வேண்டும் என்று சகோதரர் Knauss அவர்கள் யோசனை தெரிவித்தார்கள்; ஆனால் சகோ. Pos அவர்கள் ஞாயிற்றுக்கிழமையன்று நடக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்; மற்றவர்கள் அச்சமடையத்தக்கதாக, பெரிய கூட்டத்தார் முன்னிலையில் இது நடைப்பெற வேண்டும் என்பதே அவரது நோக்கம் என்று நான் கண்டுகொண்டேன். ஆனால் அது அவருக்குச் சாதகமற்றதாகவே போனது. முடிந்தமட்டும் பிரச்சனையைத் தவிர்த்துக்கொள்ளத்தக்கதாக, எங்களை ஒரு சபை பிரிவோடு இணைப்பது அவரது திட்டமாக இருப்பதினாலும், சிலருடைய பெயர்களை ஒப்புதல் இல்லாமலேயே செய்தித் தாள்களில் அவர் வெளியிட்டுள்ளபடியாலும், நாங்கள் ஒரு சபை பிரிவோடு இணைந்திட விரும்பவில்லை என்று சுருக்கமான வார்த்தைகளில் அவருக்கு எழுதினோம். கையெழுத்திடப்பட்ட காகிதங்களைச் சனிக்கிழமை இரவன்று நான் அவரிடம் கொடுத்து, காரியங்களை எளிமையாக்கிடவே நாங்கள் இப்படிச் செய்ததாகவும்,

ஞாயிற்றுக்கிழமையன்று வேதாகம ஆராய்ச்சி ஒன்றையும், ஜெபக்கூட்டத்தையும் மாத்திரமே கொண்டிருக்க சகோதரர்கள் விரும்புவதாகவும் அவருக்குத் தெரிவித்தோம். அவரோ: தனது நண்பர்கள் அனைவரும் அங்கு வருவதினால் அவர் முதலாவது காரியத்தை முன்வைப்பதாகவும், பிற்பாடு எங்கள் பக்கக் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு எனக்குப் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் கொடுப்பதாகவும்; பின்னர் அவர் பிரசங்கம்பண்ணிடுவார் என்றும், அதற்குப் பிறகு எங்கள் விருப்பப்படி நாங்கள் செய்திடலாம் என்றும் கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை மதியமும் வந்தது மற்றும் சில புதியவர்கள் வந்திருந்தார்கள். மற்றவர்களுடன் அவர் அமர்ந்திருந்தார் மற்றும் நேரம் வந்தபோது கூட்டத் தலைவர் இல்லாததினால், கூட்டத் தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம் என்றார். நானோ: சபையின் நியமிக்கப்பட்ட மூப்பராய் நான் காணப்படுவதினால், நான் அப்பொறுப்பை எடுத்துக்கொள்ளுகிறேன் என்று கூறினேன் மற்றும் கூட்டத் தலைவராகச் செயல்பட்டேன். கீர்த்தனை ஒன்றைப் பாடி, ஜெபம் ஏறெடுத்தோம்; பின்னர் என்னால் முடிந்தமட்டும் விவரங்களை அளித்துவிட்டு, அவ்வாரத்திற்கான கூட்டங்களைக்குறித்து அறிவிப்புக் கொடுத்தேன்; பின்னர் பிரசங்கம்பண்ணிடுவதற்குச் சகோதரர் Pos அவர்கள் கூறியிருந்தார்கள் மற்றம் அதற்கு நாம் அவருக்கு வாய்ப்பளிக்கின்றோம் அல்லது அவர் ஏதேனும் சொல்ல விரும்பினால், அவர் சொல்லிடலாம் என்றேன்.

அவரோ: இச்சூழ்நிலையில் தன்னால் பிரசங்கம்பண்ணிட முடியாது என்றும், உங்களை வேறொரு சபை பிரிவோடு இணைக்கப்பண்ண நான் விரும்புவதாகச் சொல்லப்படுவது உண்மை இல்லை என்றும், மாறாக நம்மைப் போன்று ஒரே அஸ்திபாரத்தின் மீது காணப்படும் சகோதரர்களோடு நாம் ஐக்கியம் வைத்துக்கொள்வோமா என்பதுதான் கேள்வி என்றார்.

இப்பொழுது சகோதரர் Draper அவர்கள் இங்கு வருவது தொடர்பாகச் சொல்ல வேண்டுமெனில், அவர் இங்கு எப்போது வேண்டுமானாலும் வருகைத் தருவதைக்குறித்து நாங்கள் மகிழ்ச்சித்தான் கொள்வோம்; ஆனால் அவரால் இங்கு நடந்தவைகளை மாற்றமுடியுமா என்பது ஐயம்தான், எனினும் இங்கு மீதியிருப்பவர்களைப் பலப்படுத்திட மாத்திரமே முடியும். அவரது முந்தின வருகையினால் நாங்கள் மிகவும் உதவப்பட்டோம் மற்றும் அது இந்த எரிகிற அக்கினியில் நிலைநிற்பதற்கான தைரியத்தினைக் கொடுத்தது என்று நான் உறுதியாய்ச் சொல்கின்றேன்.

கிறிஸ்தவ அன்பில் உங்கள்,
C. F. BAHRET.

* * * * * * *

இந்த வேதனையின்போது நிலைநின்ற அருமையான நண்பர்களை நாம் பாராட்டுகின்றோம். கிறிஸ்து உண்டாக்கின சுயாதீனத்தை இவர்கள் மிகவும் விரும்பியுள்ளப்படியால், இவர்கள் தங்களிடத்தில் ஆரம்பத்தில் தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தினைச் சுமந்துவந்த தூதுவனாகக் காணப்பட்டும், பிற்பாடு தன்னைத்தான் பாஸ்டராக அல்லது மேய்ப்பனாக நியமித்துக்கொண்ட ஒருவரினால் பாபிலோனின் அடிமைத்தனத்திற்குள்ளும், இருளுக்குள்ளும் மறுபடியுமாக வழிநடத்தப்படுகிறதில் விருப்பப்படவில்லை!

இந்த அருமையான நண்பர்களானவர்கள், நவம்பர் 15, '95-ஆம் வாட்ச் டவர் கட்டுரையில் முன்வைத்திட்டதான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான அறிவுரைகளுக்குச் சீக்கரமாய்க் கவனம் செலுத்தியிருந்திருப்பார்களானால், இச்சோதனைகள் சிலவற்றிலிருந்து தப்பியிருந்திருப்பார்கள்; அக்கட்டுரையில் "தேவனுடைய சுதந்தரத்தின்மீது இறுமாப்பாய் ஆளுகிறவர்களிடமிருந்தும்", சபையாருடைய தேர்ந்தெடுத்தலுக்கு மேலாக தங்களையே மேய்ப்பர்களாக நியமித்துக்கொள்ள முற்படுபவர்களிடமிருந்தும் மற்றும் தங்கள் சொந்தக் கண்ணோட்டங்களை நிலைநிறுத்த முற்படுகிறவர்களிடமிருந்தும், கர்த்தருடைய இராப்போஜனம் முதலான காரியங்களில் யார் பங்கெடுக்கலாம், யார் பங்கெடுக்கக்கூடாது என்று தீர்மானம் செய்ய முற்படுகிறவர்களிடமிருந்தும், கிறிஸ்துவினால் உண்டான தங்கள் சுயாதீனத்தைக் காத்துக்கொள்வதற்கான சரியான வழிமுறைக் குறித்த - சபையின் ஒழுங்குக்குறித்த காரியங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றை இந்த நண்பர்கள் கவனிக்கத் தவறிப்போனபடியால், இவர்களது சுயாதீனங்கள் தாக்கப்பட்டபோது, இவர்கள் குழப்பத்திற்குள்ளானார்கள். எனினும்,

நாம் அவர்களைப் பாராட்டவே செய்கின்றோம் மற்றும் அவர்களை விடுவித்ததற்காகக் கர்த்தரைத் துதிக்கின்றோம்.

இந்த நண்பர்கள் மேய்ப்பன் என்பவர் உதவிக்காரர் என்று அனுமானித்துக்கொண்டதில் தவறிழைத்துள்ளனர். மூப்பர்கள் மேய்ப்பர்களாக அல்லது மேற்பார்வையாளர்களாகக் காணப்பட்டு, சபையினுடைய ஆவிக்குரிய நலனுக்கடுத்தவைகளைப் பார்த்துக்கொண்டிருக்க, சபையினுடைய ஆவிக்குரியவையல்லாத காரியங்களைக் கவனித்துக்கொள்வதற்காக ஆதிசபையில் உதவிக்காரர்கள் என்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒருவர் மேய்ப்பனாகவும், பிரதானமானவராகவும், மற்றவர்கள் அவருக்கான துணையாளர்களாகவும் மற்றும் உதவுபவர்களாகவும் மற்றும் ஆலோசகர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டால், இது வேதாகமத்தின் எந்தக் கட்டளைக்கும் முரணாய் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் ஸ்தானத்தைக் கைப்பற்றிக்கொள்வதற்கும் மற்றும் கர்த்தருடைய சபையை அச்சுறுத்துவதற்கும் மற்றும் மிதித்துப்போடுவதற்கும் நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ நாடும் ஒருவரைத் தாங்கள் தேர்ந்தெடுப்பதைத் தேவன் விரும்பமாட்டார் என்று எண்ணினதிலும், அப்படித் தேர்ந்தெடுக்காமல் இருந்ததிலும் நண்பர்கள் சரியாகவே செயல்பட்டுள்ளனர்.

"பக்திவிருத்தியடைவதற்கெனச்" சபைகூட்டங்கள் எனும் உண்மையான கருத்தானது, பாபிலோனுக்கு ஒத்திருக்க வேண்டுமென்ற ஆவியின் காரணமாகப் பிரசங்கிப்பதற்கான பிரபலமான விருப்பத்தின் கீழ்த் தொலைந்து போய்விட்டது. பொதுப்பேச்சாளருக்கான திறமையானது ஒருபோதும் இழிவாகக் கருதப்படக்கூடாது அல்லது புறக்கணிக்கப்படக்கூடாது; ஆனாலும் அது பக்திவிருத்தி உண்டாவதற்கேதுவாக மாத்திரமே நாடப்பட வேண்டும் மற்றும் மதிக்கப்பட வேண்டும். அதிகமான பிரசங்கித்தல்கள், அதுவும் தவறான அடிப்படையில் காணப்படுகையில், அது பாதகமானதேயாகும்.

காரியங்களானது கையாளப்பட்டதான சாந்தத்தையும் நாம் பாராட்டுகின்றோம் - ஆனாலும் மிக அதிகமான சாந்தம் காணப்பட்டுள்ளது. இவர்கள் "கர்த்தருடைய இராப்போஜனம்" தொடர்புடைய பாடத்தில் தவறாய் வழிநடத்தப்பட்டுள்ளனர். வேதவாக்கியங்களில் எங்குக் காலை மற்றும் மதிய உணவுகளானது "இராப்போஜனம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அல்லது எப்படி இராப்போஜனம் எனும் வார்த்தைக்கு இப்படித் திரித்த அர்த்தம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று இவர்கள் கேட்டிருக்க வேண்டும். அவ்வார்த்தைக்கான கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "மாலை நேர போஜனமே" ஒழிய, வேறு எதுவுமில்லை. நமது கர்த்தர் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதை ஆசரிக்கும் ஒரு விசேஷித்த நாளாய்க் காணப்படும் ஒரு நாளில் (ஞாயிற்றுக்கிழமையில்), அவரது மரணத்திற்கான நினைவுகூருதலை ஆசரித்தல் தொடர்பாக இவர்கள் ஏன் கேள்வி கேட்கவில்லை? ஆதி சபையினரால் கைக்கொள்ளப்பட்டு வந்ததான "அப்பம் பிட்குதலானது," கர்த்தருடைய மரணத்தை நினைவுகூருவதற்காக ஆசரிக்கப்படும் "கர்த்தருடைய இராப்போஜனமாய்" இராமல், எம்மாவூரில் நடந்த அப்பம் பிட்குதல் போன்றதேயாகும் என்று இவர்கள் ஏன் சுட்டிக்காண்பிக்கவில்லை? (லூக்கா 24:30; மத்தேயு 14:19). "அப்பம் பிட்குதலானது" கடைசி இராப்போஜனத்தின் நினைவுகூருதலாய் இருக்குமானால், நமது கர்த்தருடைய சிந்தப்பட்ட இரத்தத்திற்கு அடையாளமான திராட்சரசத்தின் "பாத்திரத்திற்குக்" கடைசி இராப்போஜனம் பற்றின 1 கொரிந்தியர்11:23, 24-ஆம் வசனங்களின் பதிவில் முழு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்க, "அப்பம் பிட்குதல்" தொடர்பான பதிவுகளில் அது குறிப்பிடப்படாதது ஏன் என்று இவர்கள் கேள்வி கேட்டிருக்க வேண்டும்.

சகோதரிகள் இல்லாமல் சகோதரர்கள் மாத்திரம் மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதும் தவறாகும்; "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்." பொது இடங்களில் பேசுதல் தொடர்பான அவர்களுக்குரிய வரையறைகளானது, மிகைப்படுத்தப்படக்கூடாது. இது விஷயமான வேதவாக்கியங்கள் குறித்த எங்களது கண்ணோட்டமானது வாட்ச் டவரின் ஜூலை, 1893-ஆம் வருடத்தின் கட்டுரையில் இடம்பெறுகின்றது. Election/தேர்ந்தெடுத்தல் மீண்டுமாக நடத்தப்பட வேண்டும்; உங்களோடுகூட வழக்கமாகக் கூடுகிற யாவரும், ஈடுபலியில் விசுவாசம் வைத்து, கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளதாக அறிக்கைப்பண்ணுகிறவர்கள், தேர்ந்தெடுத்தலின்போது தங்களுடைய தெரிந்துகொள்ளுதலைத் தெரியப்படுத்துவதற்காக இல்லாமல், மாறாக வேதவாக்கியங்கள் முன்வைப்பவைகளுக்கு இசைவாயுள்ள கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலின்படியானவர்கள் என்ற தங்களது பகுத்துணர்தலைத் தெரியப்படுத்துவதற்கு அழைக்கப்பட வேண்டும்.

ஐக்கியத்திற்குத் தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பரீட்சையாக்கிடுவதற்குச் சகோதரர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளதாலும் மற்றும் நமது கர்த்தரை அன்புகூருகிறவர்கள், சேவிக்கிறவர்கள் யாவருடனும் அவர்களது அறிவின் நீளத்தையும், ஆழத்தையும் பொருட்படுத்தாமல், ஐக்கியம் வைத்துக்கொள்ள தாங்கள் விரும்புவதை முழுமையாய் அறிக்கையிட்டதாலும் நாம் சந்தோஷப்படுகின்றோம்; ஏனெனில் கர்த்தரை அன்புகூருகிறவர்கள், அவரது வார்த்தைகளின் வாயிலாக அவரை அதிகமதிகமாய் அறிந்துகொள்ள நாடிடுவார்கள்.

"சீஷர்கள் சபை பிரிவினரின்" அறிக்கைக்கும், வேதாகம கிறிஸ்தவர்களாகிய நம்முடைய நிலைப்பாட்டிற்கும் இடையிலான வித்தியாசம் என்ன என்று கேட்கப்படலாம்; ஆகையால் இங்கு வித்தியாசங்களைச் சுருக்கமாய்த் தெரிவிக்கின்றோம்:

(1) ஒருவேளை "சீஷர்கள்" பிரிவினர் தாங்கள் அறிக்கைப்பண்ணுகிறதற்கேற்ப ஜீவிப்பார்களானால், அவர்கள் நம்மோடுகூட ஜீவித்திருந்திருப்பார்கள். அவர்கள் அறிக்கைப் பண்ணுபவைகள் முற்றிலும் சரியே - அவர்களது அறிக்கையானது, வேதாகமமே - ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம் மற்றும் ஒரே ஞானஸ்நானம் தொடர்பானவைகளுக்கான மற்றும் தேவனுக்கும், மனிதனுக்குமான நமது கடமை தொடர்பானவைகளுக்கான ஒரே விதியும், வழிகாட்டியாகும்; மற்றும் மதகுரு பற்றிலிருந்து முழுமையான விடுதலையுடையதாகும்.

இவை அனைத்தையும் நாம் ஒப்புக்கொள்கின்றோம் மற்றும் இதன்படி ஜீவிக்கின்றோம்; ஆனால் "சீஷர்கள்" பிரிவினர் இப்படிக் காணப்படுகின்றார்களா? நிச்சயமாக இல்லை! அவர்கள் மத்தியில் சென்று, தற்கால சத்தியத்தின் அறுவடை செய்தியினை முன்வைக்க முயன்று பாருங்கள்; எழுதப்படாத எத்தனை விசுவாசப்பிரமாணங்களை அவர்கள் பெற்றிருக்கின்றனர் என்றும், அது அவர்களை எவ்வளவு இறுக்கிக் கட்டிவைத்துள்ளது என்றும் பார்ப்பீர்கள். பாபிலோனின் பிரிவுகளிலேயே மிகுந்த சுயாதீனமுடையவர்களாய்த் தாங்கள் காணப்படுவதாக அவர்கள் வார்த்தையில் அறிக்கைப்பண்ணிக் கொண்டாலும், அவர்கள் (அவர்களையும் அறியாமல்) மிகவும் குறுகின நோக்கமுடையவர்களாகவும், மிகவும் தடைவிதிக்கிறவர்களாகவும் காணப்படுகின்றனர். இதை எங்களது இரண்டாம் கருத்தில் நிரூபித்திடுவோம்.

(2) இவர்கள் தண்ணீர் ஞானஸ்நானத்தினைப் பரீட்சையாக்குகின்றனர்; மற்றும் இது பாவங்களுக்கான மன்னிப்பிற்காகவும் என்று கூறுவதன் மூலம், குறிப்பிட்ட சில வார்த்தைகள்கூறி தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளாத Presbyterians, Methodists, Episcopalians, Protestant, Lutherans, Reformed மற்றும் United Presbyterians, Protestant, Methodists மற்றும் மற்ற அனைவரும், பாவிகள் - தேவனுக்கு அந்நியர்களாகவும், கிறிஸ்துவுக்குள்ளான அவரது கிருபைக்கும், சத்தியத்திற்கும் அஞ்ஞானிகளாய் இருக்கின்றனர் என்ற கூற்றிற்கு இவர்கள் ஒப்புதல் அளிக்கின்றனர். இதைவிட குறுகின நோக்கமுள்ள ஏதேனும் விசுவாசம் காணப்பட முடியுமா? ஒருவேளை இருக்கின்றதானால், எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்! ஆம், இவர்களைப் போன்று குறுகின நோக்கமுடைய Christadelphians எங்கள் ஞாபகத்திற்கு வருகின்றனர். Christadelphians பிரிவினர் பாவிகள் அழிக்கப்படுவார்கள் என்றும், "சீஷர்கள்" பிரிவினர் பாவிகள் நம்பிக்கையற்ற நித்திய சித்திரவதைக்குள் அனுப்பப்படுவார்கள் என்றும் சொல்கின்றனர் மற்றும் இக்கண்ணோட்டத்தின் தவற்றினை வேதாகமத்திலிருந்து காண்பித்துக்கொடுப்பதற்கான வாய்ப்பையும் இவர்கள் கொடுக்கிறதில்லை. ஒருவேளை வாய்ப்புக்கொடுப்பதில்லை என்று நாம் சொன்னது தவறென்றால், வாய்ப்பிற்கான அதிகாரப்பூர்வமான அறிவிப்பைப் பெற்றுக்கொள்வதில் நாம் சந்தோஷப்படுவோம் மற்றும் சத்தியம் அவர்களுக்கு உடனே முன்வைக்கப்படத்தக்கதாக பார்த்துக் கொள்ளப்படும்.

## இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்

Rev. de Ronden Pos அவர்களை நாங்கள் முதலாவது கலிபோர்னியாவில் வைத்து அறிந்து கொண்டோம்; அதாவது பிப்ரவரி 1. '92-ஆம் வருடத்தின் நம்முடைய வெளியீட்டில் நாம் வெளியிட்டதான அவரது கடிதத்தை, அவர் எங்களுக்கு எழுதினபோதே, அவர் எங்களுக்கு அறிமுகமானார்.

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:- Los Angeles-இல் உள்ள ஒரு புத்தகக் கடையில் நான் பார்த்திட்ட மில்லேனியேல் டாணின் மூன்றாம் தொகுதியில் எவ்வளவு அதிகமாய்க் கவரப்பட்டேன் என்பதை நான் உங்களுக்கு எழுதியாக வேண்டும். நான்

இக்கடிதத்தோடு ஐம்பது cents பணத்தினை அனுப்பிவைக்கிறேன்; அதைக்கொண்டு நீங்கள் உடனடியாகவே முதலாம் மற்றும் இரண்டாம் தொகுதிகளை எனக்கு அனுப்பித்தர விரும்புகின்றேன்; உங்களது Zion's Watch Tower-இன் ஒன்று அல்லது இரண்டு வெளியீட்டுகளையும் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்; டாண் தொகுதி-3 போல் ஒருவேளை நான் எதிர்ப்பார்க்கிறவைகளின்படி (ரீபிரிண்ட்ஸ்) அவ்வெளியீடானது காணப்படுமானால், நான் உடனே சந்தாதாரராகிடுவேன். தொகுதி-3 ஏற்கெனவே என் நண்பர்கள் மத்தியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கிறிஸ்துவின் இராஜ்யத்திற்காகக் காத்திருக்கும் உங்கள்,
W. DE RONDEN POS,
Pastor First Baptist Church.

அடுத்ததாக Kentucky-இலிருந்தும், பிற்பாடு Washington, D. C-இலிருந்தும், அவரிடமிருந்து கடிதங்கள் எங்களுக்கு வந்தன; பிற்பாடு Canada-விலுள்ள Montreal-இலிருந்து அவர் அங்குள்ள Episcopal சபையில் பாஸ்டராக இருப்பதாக எங்களுக்குக் கடிதம் எழுதியிருந்தார் மற்றும் பிற்பாடு Baltimore, Md-யிலுள்ள Reformed Episcopal சபையில் பாஸ்டராகப் பொறுப்பேற்றுள்ளாரெனத் தெரிவித்திருந்தார். சபை பிரிவுணர்ச்சியிலிருந்தும், அதன் அடிமைத்தனத்திலிருந்தும் கிறிஸ்துவினால் உண்டான சுயாதீனத்தில் நம்மோடுகூடச் சுதந்தரமாய் நிலைநிற்க அவர் இறுதியில் முடிவெடுத்துள்ளதைக் கேட்டு நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம். இவர் நண்பர்களுடன் கொண்டிருக்கும் ஐக்கியத்தின் நிமித்தம் மிகுந்த பிரயோஜனம் உண்டாகும் என்று அதிகம் எதிர்ப்பார்த்திட்டோம்; எனினும் பாபிலோனுக்கும், அதன் தானிய களஞ்சியத்திற்குமான மகா பெலவீனத்தை வருடக்கணக்காக வெளிப்படுத்தியுள்ள ஒருவரிடமிருந்து அருமை நண்பர்கள் அதிகமாய் எதிர்ப்பார்ப்பதைக்குறித்தும் அஞ்சினோம்; எனினும் எங்களது அச்சங்கள் குறித்த துப்பு எதையும், எவருக்குமே நாம் கொடுக்கவுமில்லை.

இவரது கடந்தகாலத் தொடர்புகளைக்குறித்து நாங்கள் அறிந்திருக்கும் நிலையில், ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளாத எவரையும் கர்த்தருடைய பந்திக்கு அனுமதிப்பதில்லை என்ற இவரது வீராந்த (Heroic) தீர்மானம் குறித்து நாங்கள் வாசிக்கையில், சிரிப்பே ஏற்பட்டது. இவர் Episcopalian மற்றும் Reformed Episcopalian ஆடுகளுக்குப் போதித்தும், மேய்த்தும், அவர்களது குழந்தைகளுக்குத் தண்ணீரைத் தெளித்தும், அவர்களுக்குச் சம்பிரதாயமாகவும், ஆச்சாரமாகவும் சடங்குகளை நடத்தியும் வந்த வருடங்களில் எங்கே போனது இவரது தைரியம் என்று எண்ணுகின்றோம். இவரது தற்போதைய "விசுவாசத்தின்படி," அந்த "ஆடுகள்," "ஆடுகளல்ல," மாறாக தங்கள் பாவங்களிலேயே காணப்படுபவர்கள் - காரணம் அவர்கள் பாவமன்னிப்புண்டாகத்தக்கதாக ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளவில்லை. இவர் அவர்களுடைய டாலர்களைத் தவறாமல் பெற்றுக் கொண்டு வந்தார் என்று நாம் எண்ணுகின்றோம்; ஏனெனில் Episcoplians பிரிவினர்கள் நன்கு சம்பளம் கொடுப்பவர்களாகக் கருதப்படுகின்றனர்; ஆனால் அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இவர் இருந்துள்ளாரா? மற்றும் தனது விசுவாசத்தின்படி அவர்கள் அனைவரும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுள்ள பாவிகளாக இருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளாரா? தண்ணீர்தான் நித்திய ஜீவனுக்கான வழியென்று அவர்களுக்குச் சுட்டிக்காண்பித்துள்ளாரா? அல்லது அவர்களை வஞ்சித்து, போலியாய் நடத்தி, அவர்களது பணத்தினைப் பெற்றுக்கொண்டாரா? ஆம் நம்மால் இப்படிக் கூற முடியாது! இத்தகைய ஜனங்களின் இருதயங்களை நம்மால் நியாயந்தீர்க்க முடியாது! அநேகமாக இவரது மனசாட்சியானது அத்தனை வருடங்களாக உறங்கிக்கொண்டிருந்திருக்க வேண்டும் அல்லது அநேகமாக இவருக்கு மனசாட்சி இல்லாமல் இருந்திருக்கும்!

எனினும் சத்தியத்திற்கு ஒரு விலையேறப்பெற்ற இழப்பு ஏற்பட்டுள்ளது என்று நாம் நம்புகின்றோம். இத்தகைய ஜனங்கள் எதிர்த்திடுவார்கள் என்று நாம் எதிர்ப்பார்க்கின்றோம் மற்றும் அவர்களது வஞ்சகமான, அப்பட்டமான வெற்றுரைகளைவிட, அவர்களின் எதிர்ப்பே மேல். Parousia உள்பட்ட தேவனுடைய ஆழமான காரியங்கள் குறித்த அறிவானது இத்தகையவர்களுக்காகவேயாகும் என்று நம்பிடுவதற்கு எந்தக் காரணங்களும் இல்லை. தேவன் உலகத்தில் மூடர்களாகவும், பலவீனர்களாகவும் மற்றும் உலகத்தை ஜெயங்கொள்ளும் முக்கியத்துவமற்ற நேர்மையானவர்களாகவும் இருப்பவர்களைத் தம்முடைய

உடன்சுதந்தரர்களாக இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கின்றார் மற்றும் "கவர்ச்சிகரமானவர்களை," "மனிதர்களைப் பிரியப்படுத்துபவர்களை," உலகப்பொருட்களைத் தொழுதுகொள்பவர்களையும் விட்டு விலகிப் போகின்றார். "ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது" (மத்தேயு 11:26). பிரியமான சக செம்மறியாடுகளே - எத்திசையிலிருந்தும் வரும் எதிராளியானவனின் அத்துமீறுதல்களையும், கவர்ச்சிகளையும், தந்திரங்களையும் மற்றும் தாக்குதல்களையும் எதிர்த்து நிற்பவர்கள், இதனால் பலமடைவார்கள் என்று நாம் நினைவில் கொள்வோமாக மற்றும் அன்பிலும், பரிவிலும் ஒன்றாய் மிக நெருக்கமாய்க் கட்டப்பட்டிருப்போமாக மற்றும் "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தின்" ஆவியிலும், எழுத்திலும் மிக உறுதியாய் ஸ்திரப்பட்டிருப்போமாக.

**யேசுவின் பாதம் சேரும் நேரம் என்னே ஆனந்தம்? ஏன்னே பேரின்பம்?**

யேசுவின் பாதம் சேரும் நேரம் என்னே ஆனந்தம்? ஏன்னே பேரின்பம்?
ஆச்சர்யமான அவர் பேரன்பு அவரை பரத்திலிருந்தே மனிதனாகவே
நம்மிடம் கொணர்ந்தே சேர்த்ததுவே,
பாவமும் சாபமும் நிறைந்த இவ்வுலகினில் வாழும் வாழ்வின் வழியை நாமறிய வேண்டுமென
மணப்பெண் அணியும் கச்சையை நெய்ய விசுவாசத்தாலே நெய்திடல் வேண்டுமே,
வாழ்க்கைக்கு அப்பால் நமக்குவைத்திருக்கும் மகிமைதான் என்ன?
யார்தான் அறிவார்? எவரும் சொல்லார்,
நாம் வசிக்கப்போகும் வாழிடமேன்மை எவ்வளவு மேன்மை?
தேவனுடன் இணைந்திடும் நமக்குக் கிடைக்கும்,
வருந்தி உழைத்து, வருத்தமடை ந்து, சிலுவை சுமந்து, துன்பம் சகித்து,
கிறிஸ்துவுக்காய் இருப்பது ஆதாயம் என்றே அறிந்தவர்க்கே அவ்வாழ்வுகிட்டும்,
அறிந்திடுவாயோ? புரிந்துகொண்டாயோ?
அவரது அரசின் மாட்சிமை, மேன்மை விளங்கும்,
இரத்தினமாகவே ஜொலிக்கும், பிரகாசிக்கும்,
நித்தியமாகவே இளைப்பாற வழிகாட்டி அழைத்துச்செல்லும்,
அந்த மணிநேரம் எத்தனை இன்பம், எத்தனை ஆசீர்?
நம்பிக்கை இழந்து பரந்து விரிந்தநம் கண்களுக்கே எத்தனை இன்பம்?
மணப்பெண் அணியும் ஆடைகள் அணிந்தே அழகழகாக, ஆசாரியராக, அரசர்களாக
இயேசுவின் வலதுபாரிசம் அமரும் அந்தநேரமே, எத்துனை ஆனந்தம்? எனனே பேரின்பம்?
தேவதூதர்கள் அனைவரும் ஒன்றாய் உன்னதத்தில் தேவனுக்கே மகிமை எனக்கூறி
இயேசுவின்முன்பாய் விழுந்துவணங்கும் தருணம்தானே எத்தனை ஆனந்தம்?
என்னேபேரின்பம்?

# வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம்

**"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." 1 கொரிந்தியர் 11:24, 25**

நம்முடைய பாவங்களுக்கான, அதாவது நம்முடையதற்காக மாத்திரமல்லாமல் சர்வலோகத்தினுடைய பாவங்களுக்கான நமது கர்த்தருடைய மாபெரும் பலிக்கான நினைவுகூருதலாக, அவரால் நிறுவப்பட்டதான இராப்போஜனமானது, அதன் எளிமையிலும், அதன் சிறப்பிலும் கவனத்தை ஈர்க்கின்ற ஒன்றாய்க் காணப்படுகின்றது. உலகத்தின் மாமனிதர்கள் தங்களைப்பற்றின நினைவுகளை நீடித்திருக்கப்பண்ணுவதற்கென மிக வித்தியாசமான வழிவகைகளை எப்போதும் நாடினதுண்டு. இவர்கள் தங்கள் மகத்துவங்களையும், தங்கள் சிறப்புகளையும், தங்கள் பின்னடியார்களுக்கு நினைப்பூட்ட முயன்றிட்டாலும், நிச்சயமாய் தங்கள் மரணத்திற்கான - அதிலும் விசேஷமாக நமது கர்த்தருடைய விஷயத்தில் காணப்படுகின்றதுபோல, அவமானமான, நிந்தனையுள்ள, குற்றவாளியாக மரிக்கும் மரணத்தைப்போன்றதொரு மரணத்திற்கான நினைவுகூருதலையும், ஞாபகார்த்தத்தையும் ஏற்படுத்திடவேமாட்டார்கள். இயேசுவின் இடத்தில் இன்னொருவன் காணப்பட்டால், அநேகமாக தனது பராக்கிரமிக்கச் செயல்களுக்கான ஞாபகார்த்தமாகப் பதக்கங்களை ஏற்படுத்திடுவதற்கே அறிவுரை வழங்கியிருப்பான்; உதாரணத்திற்கு லாசருவை உயிர்த்தெழப்பண்ணினதற்கு (அ) சீறும் கடலை அமைதிப்படுத்தினதற்கு (அ) ஜனங்கள் குருத்தோலைகளுடன், இராஜாவுக்கு ஓசன்னா என்று சத்தமிட, எருசலேமுக்கு அவர் மேற்கொண்ட வெற்றி பிரவேசத்திற்கு ஞாபகார்த்தமான பதக்கங்களை ஏற்படுத்திடுவதற்கே அறிவுரை வழங்கியிருப்பான்.

ஆனால் நமது கர்த்தரோ, அவருடைய கணிப்பிலும், தேவனுடைய கணிப்பிலும், அவரது மகத்துவமான வேலையாகக் காணப்பட்ட காரியத்தையே, அதாவது நம் சார்பிலான அவரது பாவநிவாரண பலியையே, தமது பணியிலுள்ள மற்ற அனைத்து அம்சங்களைக் காட்டிலும் அதிகமாய், அவரது உண்மையான பின்னடியார்களால் மற்றும் அவர்களால் மாத்திரமே உணர்ந்துகொள்ளப்படப்போகின்ற காரியத்தையே, தமக்கு நினைவுகூருதலாகத் தெரிந்துகொண்டார். அவரது பின்னடியார்கள் அவரது ஆச்சரியமான வார்த்தைகள் அல்லது கிரியைகளுக்கு ஏதோ ஒன்றினை நினைவுகூருதலாக மதித்திருக்க முடியும் என்பது உண்மைதான்; ஆனால் உலகத்தாரால்கூட இவைகளை உணர்ந்துகொள்ளவும் முடியும். ஆனால் நம்முடைய ஒப்புரவாகுதலுக்கும், பாவநிவிர்த்திக்கும் அடிப்படையாகக் காணப்படும் நமக்கான ஈடுபலியென, அவரது மரணத்திற்கு இருக்கும் மதிப்பின் விஷயம் அப்படியல்ல. இது அர்ப்பணம் பண்ணினவர்களாகிய சிறுமந்தையினரை — தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் தவிர, வேறு எவராலும் இதுவரையிலும் முழுமையாய்ப் புரிந்துகொள்ளப்படவில்லை. மேலும் இவர்களுக்காகவே நினைவுகூரும் சின்னங்களானது ஏற்பாடுபண்ணப்பட்டு, நிறுவப்பட்டது. யூதாஸ் அங்குக் காணப்பட்டாலும், அவனுக்குத் துணிக்கையானது கொடுக்கப்பட்டது மற்றும் போஜனம் நிறைவுபெறுவதற்கு முன்னதாக, அவன் மற்றவர்களை விட்டுவிட்டு வெளியேறினான்; இது இந்த யுகத்தின் முடிவில் சிறுமந்தையினர் தங்கள் கர்த்தரோடுகூட, அவரது பாடுகளில் பங்கெடுப்பதற்கான தங்களது பங்கினை நிறைவேற்றிடுவதற்கு முன்னதாக, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியினால் நிறைவேற்றப்பட்டதான ஈடுபலியினைச் சரியாய் மதிப்பிடாதவர்களும், உணர்ந்துகொள்ளாதவர்களுமாகிய அனைவரும், உண்மையுள்ளவர்களின் கூட்டத்திலிருந்தும், ஐக்கியத்திலிருந்தும் வெளியேற்றப்படுமளவுக்குச் சத்தியம் எனும் துணிக்கையானது மிகவும் பலமிக்கதாகியிருக்கும் என்பதைக் குறிக்கின்றது என்பதில் ஐயமில்லை (1 யோவான் 2:19).

## பஸ்கா இராப்போஜனத்தின் தியதி

எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்ததான தங்களது விடுதலையையும், அக்காலத்தில் தங்களது முதற்பேறானவர்கள் தப்புவிக்கப்பட்டதையும், நினைவுகூரும் வண்ணமாக யூதர்கள் ஆட்டுக்குட்டியைப் புசிக்கின்றதான பஸ்கா இராப்போஜனத்தினுடைய தியதியானது, யூதர்களுடைய காலக்கணக்கீட்டு முறைமையின்படியே, அதாவது சந்திர காலக்கணக்கீட்டு முறைமையின்படியே கணக்கிடப்படுகின்றது (யாத்திரயாகமம் 12:2-14). நாம் மாதங்களைப் பிரிப்பதுபோல் பிரிப்பதற்குப்பதிலாக, அவர்கள் அமாவாசையை, புதிய மாதத்திற்கான ஆரம்பத்தினைக் குறிப்பதற்கு அனுமதித்தனர்; சூரிய காலத்திற்கும், சந்திர காலத்திற்கும் இடையிலான வித்தியாசமானது,

எப்போதும் வசந்த கால/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடரும் அமாவாசையுடன் புதிய வருடத்தை ஆரம்பிப்பதன் மூலம் சரிப்பண்ணப்படுகின்றது. தங்கள் மதம் சார்ந்த விழாக்களை ஆசரிக்கும் விஷயத்தில், யூதர்கள் இன்னமும் இந்தக் கணக்கீட்டு முறைமையையே கைக்கொள்ளுகின்றனர். மேலும் நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் ஆதித் திருச்சபையினரும் இதே ஒரு விதியை, நமது கர்த்தருடைய இறுதி இராப்போஜனத்திற்குரிய வருடாந்தர ஆசரிப்பிற்கான தியதியினை நிர்ணயிக்கும் விஷயத்திற்கும் பயன்படுத்தினதால், நாமும் அதையே பின்பற்றுகின்றோம்.

வசந்த கால/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடரும் முதல் அமாவாசையானது, இந்த வருடத்தில் (1913), ஏப்ரல் 8-ஆம் தேதியில் நிகழ்வதாக எபிரெய ஆண்டு குறிப்பேட்டில் (almanacs/calendar) கணக்கிடப்பட்டுள்ளது . . . அநேகமாக இது எருசலேமின் ஆய்வு கருத்து அறிவிப்பாகும். மாலை 6 மணிக்கு, யூதருடைய புனிதமான வருடத்தினுடைய முதலாம் மாதமாகிய, நீசான் மாதத்தின் முதல் நாள் ஆரம்பமாகுகின்றது. நீசான் முதலாந்தேதி துவங்கி 10-ஆம் தேதியில் பஸ்கா ஆட்டுக்குட்டியானது, மந்தையிலிருந்து தெரிந்தெடுக்கப்படுகின்றது. 14-ஆம் நாளில் (பௌர்ணமி அன்று*) "சாயங்காலங்களுக்கு நடுவில்" (நீசான் 13-ஆம் தேதி மாலை 6 மணி முதல், நீசான் 14-ஆம் தேதி மாலை 6 மணிக்குள் ஏதேனும் ஒரு நேரத்தில்) ஆட்டுக்குட்டியானது அடித்து, புசிக்கப்பட வேண்டும். பதினைந்தாம் தேதி அவர்களது பஸ்கா பண்டிகையானது ஆரம்பித்து, ஏழு நாட்கள் நீடிக்கின்றது; இதன் முதலாம் மற்றும் ஏழாம் நாட்களானது விசேஷித்த விதமாய்ப் பரிசுத்தமானவைகளாக, ஓய்வுநாட்களாக (அ) "பிரதான" நாட்களாக ஆசரிக்கப்படுகின்றன (யாத்திராகமம் 12:16). பதினாறாம் தேதியில் வாற்கோதுமை அறுவடையின் முதற்பலன்கள், ஓமர் அளவு கர்த்தருக்குச் செலுத்தப்பட்டன மற்றும் 50 நாட்கள் கழிந்து (பெந்தெகொஸ்தே நாளில்) அவர்கள் கர்த்தருக்கு இரண்டு அப்பங்களை அசைவாட்டும் காணிக்கைகளாக்கினார்கள் (லேவியராகமம் 23:17). [* சூரியன் கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கான அடையாளமாய்க் காணப்படுவதினால், சந்திரனும் இஸ்ரயேல் ஜாதிக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றது. (வெளிப்படுத்தல் 12:1) பன்னிரண்டு மற்றும் சிலசமயம் இடம்பெறும் பதிமூன்று சந்திர மாதங்களானது, அந்த ஜாதியின் கோத்திரங்களை அடையாளப்படுத்துகின்றது. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது, சந்திரனானது பௌர்ணமி நிலையில் காணப்பட்டது. பின்னர் உடனடியாக தேய்வுற ஆரம்பித்தது மற்றும் பௌர்ணமிக்கு முன்பு சந்திரன் வளர்வதற்குரிய காலத்தைப்போலவே தேய்வதற்கும் காலம் எடுத்துக்கொண்டது. ஆகையால் கிறிஸ்துவின் மரணமானது இஸ்ரயேல் சரித்திரத்தினுடைய இரண்டு சரிசமமான பாகங்களுக்கிடையிலான திருப்புமுனையாகக் காணப்பட்டது. தொகுதி-2, ஆங்கிலத்தில் பக்கம் - 218, தமிழில் பக்கம் - 235 பார்க்கவும்.

அசுசியடைந்த யூதர்கள், இதன் காரணமாக பஸ்காவினை அதற்குரிய காலத்தில் கைக்கொள்ள முடியாமல் போவதால், அப்படியானவர்கள் இரண்டாம் மாதத்தின் 14-ஆம் தேதியில் (அடுத்த பௌர்ணமியில் - எண்ணாகமம் 9:8-13) அதைக் கைக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்; இதன் படிப்பினை என்னவெனில் – (அறியாமையின் காரணமாக) மேசியா தங்களுக்கு முன்வைக்கபட்டபோது, அவரைத் தங்கள் மீட்பர் என்று ஏற்றுக்கொள்வதற்குத் தடைப்பண்ணப்பட்டவர்கள், அனைத்தும் திரும்பிக்கொடுக்கப்படும் காலங்களில், தங்கள் ஜாதியானது (சந்திரன்) மீண்டும் முழுமையான ஆசீர்வாத நிலையில், பின் அறுவடையில் வரும்போது, மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்புப் பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள் என்பதேயாகும்.]

யூதர்களால் ஒவ்வொரு வருடமும் செய்யப்பட்டுவந்ததான இவைகள், நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி, மாபெரும் மற்றும் பிரம்மாண்டமான நிகழ்வுகளுக்கு நிழலாய் இருக்கின்றன. பத்தாம் தேதியில் ஆட்டுக்குட்டியானது தெரிந்துகொள்ளப்படுவது என்பது, இஸ்ரயேலானது நிஜமான கடந்துபோகுதலிலுள்ள முதற்பேறானவர்களுடைய சபையென ஆசீர்வதிக்கப்படவும், அங்கீகரிக்கப்படவும் வேண்டுமெனில், அவர்கள் எவ்வாறு பஸ்கா பண்டிகைக்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக, இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னதாக இயேசுவை ஏற்றிருக்க வேண்டும் என்பதை அடையாளப்படுத்திக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. அந்த நாளில்தான் கர்த்தர் அவர்களது இராஜாவென, கழுதையின்மேல் ஏறி, பட்டணத்திற்குள் வந்தபோது, இறுதியாக அந்த ஜாதியாருக்கு தம்மை முன்வைத்தார் (யோவான் 12:12-16 ஒப்பிட்டுப்பார்க்கவும்). ஆனால் தேவ ஆட்டுக்குட்டியை ஏற்றுக்கொள்வதை அலட்சியப்படுத்தினவர்கள், உடனடியாக மறுக்கப்பட்டனர் மற்றும் அவர்கள் நிழலான முதற்பிறப்புகளாக இருப்பதிலிருந்து ஓயப்பண்ணப்பட்டார்கள்.

(இந்த வருடத்தில் [1913] ஏப்ரல் 20-ஆம் தேதி ஞாயிறு அன்று மாலை ஆறு மணிக்கு ஆரம்பித்து, 21-ஆம் தேதி, மாலை ஆறு மணிவரை நீடிக்கின்றதான) 14-ஆம் தேதியில்தான் பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட வேண்டும் மற்றும் புசிக்கப்பட வேண்டும். (அநேகமாக இந்த ஒரு நோக்கத்திற்கான தெய்வீக ஏற்பாட்டின் காரணமாகவே) எபிரெய காலக்கணக்கிடுதலானது, "கடைசி இராப்போஜனத்தினுடைய" புசித்தலானது, கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டதான அதே நாளில் நிகழ்வதற்கு அனுமதித்ததாய் இருக்கின்றது. (சிலுவையில் அறையப்படுவது வரையிலும் முடிவடையாத, நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும் விதமாக ஆசரிக்கப்பட்டதான)

ஆட்டுக்குட்டியும், கசப்பான கீரைகளும், புளிப்பில்லாத அப்பமும் உள்ள பஸ்கா இராப்போஜனமானது, மாலை ஆறு மணிக்குமேல் புசிக்கப்பட்டது. பின்னர்த் தொடர்ந்து நிஜமான ஆட்டுக்குட்டியினுடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றதான அப்பமும், திராட்சரசமும் உள்ள நினைவுகூருதலின் இராப்போஜனத்தினுடைய நிறுவுதல் நடந்தது. ஆகையால் இதுவே வருடந்தோறும், அந்தத் தருணம் வருகையில், அவரது பின்னடியார்களால், சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்குப்பதிலாக, நிஜமான ஆட்டுக்குட்டிக்கும், நிஜமான முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலுக்கும் — அவரது இரத்தத்தின் பயனான மாபெரும் கடந்துபோகுதலுக்கும் நினைவுகூருதலாக ஆசரிக்கப்பட வேண்டும்.

(ஓய்வு நாளுக்கு மறுநாளாகிய அல்லது 15-ஆம் தேதியின் பஸ்கா பண்டிகைக்கு மறுநாளாகிய) நீசான் 16-ஆம் தேதியில் முதல் பலன்களாகிய வாற்கோதுமையினுடைய கதிர்கட்டை அசைவாட்டுதலானது, "நித்திரையடைந்தவர்களில் முதற்பலனாக" நமது கர்த்தராகிய கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (லேவியராகமம் 23: 5, 6, 11, 15-17; 1 கொரிந்தியர் 15:20).

ஐம்பதாம் நாளாகிய பெந்தெகொஸ்தே நாளில் இரண்டு அப்பங்கள் அசைவாட்டுக் காணிக்கையாக்கப்படுவது என்பது, சபையைத் தேவனுக்கு முன்னாக நிறுத்துவதையும், சபை மாபெரும் பிரதான ஆசாரியனுடைய புண்ணியத்தின் வாயிலாக ஏற்றுக்கொள்ளப்படுவதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இந்த ஏற்றுக்கொள்ளுதலானது பெந்தெகொஸ்தே நாளில் நிகழ்ந்த பரிசுத்த ஆவியினாலான அபிஷேகிக்கப்படுதலால் சுட்டிக்காட்டப்படுகின்றது. சபை உண்மையில் "ஒரே அப்பமாகக்" காணப்படுகின்றனர் (1 கொரிந்தியர் 10:17); இரண்டு அப்பங்களானது, பாவநிவாரண நாளில் இடம்பெறும் இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களினால் அடையாளப்படுத்தப்படுகின்ற அதே காரியங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இது முன்னிறுத்தப்படும் அனைவரும், கிறிஸ்து இயேசுவின் மூலமாகத் தேவனுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுபவர்களாய் இருந்தாலும், முன்னிறுத்தப்படும் அனைவரும் முடிவுவரையிலும் உண்மையாய்க் காணப்படும் நிலைக்கு வரமாட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இரண்டு அப்பங்களானது, அர்ப்பணிக்கப்பட்டவர்களிலுள்ள இரண்டு வகுப்பாரை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; அதாவது ஜெயங்கொள்ளுகிற சிறுமந்தையையும் மற்றும் உலகத்தை ஜெயங்கொள்வதின் மூலம், "பரம அழைப்பினை" உறுதிப்படுத்திக்கொள்ளாதவர்களாகிய திரள் கூட்டத்தினர் எனும் அர்ப்பணிக்கப்பட்ட தேவனுடைய பணிவிடைக்காரர்களையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

புனித வெள்ளிக்கும், ஈஸ்டர் ஞாயிறுக்குமான தேதிகளைக் கணக்கிடுவதற்கென எபிஸ்கோப்பலியன்ஸ் (Episcopalians) மற்றும் உரோமன் கத்தோலிக்கர்கள் மத்தியில் நடைமுறையில் காணப்படுகின்ற கணக்கிடும் முறைமையானது, முன்பிருந்த முறைமையிலிருந்து வேறுபடுகின்றது. இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பின்வரும் முதல் பௌர்ணமியைத் தொடர்ந்துவரும் முதல் ஞாயிறை, இவர்கள் ஈஸ்டர் ஞாயிறு என்றும், இதற்கு முன்வரும் வெள்ளியை, புனித வெள்ளி என்றும் கொண்டாடுகின்றனர். இப்படியான கணக்கீட்டுமுறைமையானது, நாம் அங்கீகரிக்கின்றதான யூத முறைமைக்குப்பதிலாக கி. பி. 325-இல், நைஸ் ஆலோசனைக்குழுவினால் நிறுவப்பட்டது. ஆனால் "பஸ்கா" என்ற பெயரானது (ஈஸ்டர்* ஞாயிறு என்றில்லாமல்) நீண்ட காலம் பயன்படுத்தப்பட்டு வந்தது; போப்மார்க்கமானது அரசியல் செல்வாக்கில் உறுதியடைந்தப்பிற்பாடு, அறியாமையிலுள்ள புறமதத்தார், அரசினுடைய சலுகையினை அனுபவித்துக் கொண்டிருந்ததான இந்த அமைப்பிற்குள் குவிய ஆரம்பித்தப்பிற்பாடே "பஸ்கா" என்ற பெயருக்குப்பதிலாக, "ஈஸ்டர்" என்ற பெயர் நிறுவப்பட்டது; ஏனெனில் பஸ்கா ஆசரிக்கப்படுகின்றதான அதே காலப்பகுதியில், புறமதத்தினரும், இளவேனிற் தேவதையாகிய ஈஸ்டெரா (Estera), ஜெர்மனியில் ஒய்ஸ்ட்ரா (Ostara) என்று அழைக்கப்படும், அதாவது தங்கள் ஈஸ்டர் தேவதைக்குப் பண்டிகை கொண்டாடும் வழக்கத்தில் காணப்பட்டனர். இதுவும் அதிக எண்ணிக்கையிலான ஜனங்களைக் கூட்டுவதற்கும், செல்வாக்கினை அதிகரிப்பதற்கும் என்று, பேராசை மிக்க "குருமார் வகுப்பினர்" (clergy) கையாண்ட அநேக முறைமைகளில் ஒன்றாகும். [* அப்போஸ்தலர் 12:4-ஆம் வசனத்தில் இடம்பெறும் ஈஸ்டர் எனும் வார்த்தையானது, தவறான மொழிப்பெயர்ப்பாகும்; அது பஸ்கா என்றே மொழிப்பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். (Revised) ரிவைஸ்ட் மொழியாக்கம் பார்க்கவும்.]

சிலசமயம் யூத கணக்கிடுதல் முறைமையும், உரோம கணக்கிடுதல் முறைமையும், ஒரே நாட்களைச் சுட்டிக்காட்டுகின்றது; ஆனால் எப்போதும் இப்படியாகக் காணப்படுவதில்லை; சிலசமயங்களில் இவைகளின் கணக்கிடுதலானது கிட்டத்தட்ட ஒரு சந்திர (அ) மாத அளவு வித்தியாசப்படுகின்றது.

யூதர்கள் பஸ்கா வாரத்தினை, நீசான் 15-ஆம் தேதியாகிய ஏப்ரல் 22-ஆம் தேதியில் (அதாவது ஏப்ரல் 21-ஆம் தேதி மாலை ஆறு மணிக்கு) ஆரம்பமாகும் "பண்டிகையாக" கொண்டாடுகின்றனர். நினைவுகூருதலினுடைய இராப்போஜனத்தில் நாம் பண்டிகை வாரத்தினை ஆசரியாமல், மாறாக பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டதற்கும், புசிக்கப்பட்டதற்குமான நாளுக்கான ஆண்டுநிறைவு நாளாகிய, அதாவது முதற்பேறானவர்களின் சபையானது மரணத்திலிருந்து முதலாம் உயிர்த்தெழுதலில் முழுமைப்பெறுகின்றதான ஜீவனுக்குள்ளாகக் கடந்துபோவதற்குக் காரணமாய் இருந்த பலியை ஏறெடுத்த தேவனுடைய உண்மையான ஆட்டுக்குட்டியாகிய, நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்தின் ஆண்டுநிறைவு நாளும், நீசான் 15-ஆம் தேதிக்கு முந்தின நாளும், 1913-ஆம் வருஷத்தில் ஏப்ரல் 20-ஆம் தேதி மாலை ஆரம்பமாகும் நீசான் 14-ஆம் நாளையே நாம் ஆசரிக்கின்றோம். பஸ்கா பண்டிகை வாரத்தினுடைய நிஜமானது, உண்மையான இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் அனைவருடைய இருதயத்தின் சந்தோஷத்தில் காணப்படுகின்றது; ஏழு நாட்கள் என்பது சந்தோஷம் மற்றும் இரட்சிப்பினுடைய பூரணத்தை (அ) முழுமையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

கணக்கிடுதல் தொடர்புடையதான அநேகம் கேள்விகளுக்கு நாம் பொதுவான பதிலாக, விவரங்களைக் கொடுத்துவிட்டோம்; இதற்குக் காரணம் இதற்கு ஏதேனும் மிகுந்த முக்கியத்துவம் இருப்பதினாலோ அல்லது துல்லியமான ஆண்டுநிறைவு நாள் ஆசரிப்பில் காணப்படும் அடிமைப்படுத்துதலோ அல்ல. கிறிஸ்துவினால் விடுதலைப் பண்ணப்பட்டவர்கள்மீது இப்படியாக எந்த ஓர் அடிமைத்தனமும் இல்லையென்று நாம் அடையாளம் கண்டுள்ளோம். "என்னை நினைவுகூரும்படி இதைச் (இந்த வருடாந்தர நினைவுகூருதலை நீங்கள் ஆசரிக்கும் ஒவ்வொரு முறையும்) செய்யுங்கள்" என்று நமது கர்த்தர் கூறுகையில், அவர் நோக்கம் கொண்டுள்ளதுபோன்று, நினைவுகூருதலின் இராப்போஜனத்தை அதன் சரியான ஆண்டுநிறைவு நாளில் ஆசரிப்பதற்கு விருப்பங்கொண்டவர்களாக நாம் இருப்பினும், இதை நாங்கள் கடமையாகப் பார்ப்பதைவிட சிலாக்கியமாகவே பார்க்கின்றோம்; ஒருவேளை அறியாமை (அ) தவறானப் புரிந்துகொள்ளுதலின் காரணமாக நாளைத் தெரிந்துகொள்ளும் விஷயத்தில் நாம் தவறு இழைத்தாலும், கர்த்தர் நம் நல் நோக்கங்களை ஏற்றுக்கொள்வார் என்றும், தவறை மன்னிப்பார் என்றும், தமது ஆசீர்வாதத்தை அருளுவார் என்றும் நாம் நம்புகின்றோம். தவறானப் போதனைகள் மற்றும் மனித பாரம்பரியங்களின் காரணமாக, அவரது மரணத்திற்கான இந்த நினைவுகூருதலை ஆசரிப்பதற்கென, அவர் நியமித்துள்ளதான அதன் ஆண்டுநிறைவு நாளை தெரிவு செய்வதற்குப்பதிலாக வேறு காலங்களையும், நேரங்களையும் தெரிவுசெய்யும் அவரது பிள்ளைகளாகிய அநேகருடைய நல் நோக்கங்களைக் கர்த்தர் ஏற்றுக்கொள்கின்றார் என்றும் நாம் நம்புகின்றோம். இதுபோலவே ஐக்கிய நாடுகள் சுதந்திரமடைந்தத் தேதியை மறந்தவராக (அ) ஜூலை 4-ஆம் தேதியே இந்நிகழ்வினுடைய ஆண்டுநிறைவு நாள் என்றும், இந்தத் தியதியே, இதைக் கொண்டாடுவதற்கென நியமிக்கப்பட்டுள்ளதான பொருத்தமான தேதி என்றுமுள்ள உண்மைகளை அறியாதவராக வருடத்திற்கு மூன்று, நான்கு (அ) ஐம்பது முறைகள் சுதந்திரத்தைக் கொண்டாடிடும் ஒரு மனிதனுடைய தேசப்பற்று நோக்கங்களை நாம் ஒத்துக்கொள்கின்றோம்.

மற்றச் சத்தியங்களைப்போலவே, இருண்ட யுகங்களையுடைய குப்பைகளின் கீழ் நீண்டகாலமாய்ப் புதைக்கப்பட்டுக் கிடந்த இதையும் இப்பொழுது தேவன் தம்முடைய ஜனங்களுக்குத் தெளிவுப்படுத்துகின்றார். அவரது ஜனங்களாக உண்மையில் காணப்படுபவர்கள் அனைவரும் சத்தியத்திற்காக ஆவலாய்க் காணப்படுகின்றனர் மற்றும் மற்றப் பாடங்களைப்போலவே இப்பாடத்திலுமுள்ள சத்தியங்களானது, தேவவார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:23-26).

கர்த்தருடைய மரணம் என்ற வார்த்தை எதைக்குறிக்கின்றது மற்றும் எதைக் குறிக்கவில்லை என்பதை நேர்மையான மனமுடையவர்களிடத்தில் விவாதித்திடுவதற்கு எந்த அவசியமும்

இருப்பதில்லை. ஈடுபலிபற்றின உபதேசத்தினின்று அல்லது ஈடுபலி உபதேசத்துடன் சம்பந்தப்பட்டதான நியாயமான ஊகங்களின்று தங்களை விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆவலில் சிலர் வேதவாக்கியங்களுக்கு முரணாக, நமது கர்த்தருக்கு இரண்டு மரணங்கள் சம்பவித்தன என்றும், ஒன்று அவர் உலகத்திற்கு வந்தபோது நிகழ்ந்தது என்றும், மற்றொன்று கல்வாரியில் நிகழ்ந்தது என்றும், முதல் மரணத்திற்கு முன்னதாக, கல்வாரியில் "எல்லோரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவினுடைய" மரணமானது அவ்வளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்றும் வலியுறுத்திக் கூறுகின்றனர். இவர்கள் "அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்" என்று வேதவாக்கியம் தெரிவிக்கும் உண்மையினையும், நமது கர்த்தரினாலோ (அ) அவரது அப்போஸ்தலர்களாலோ குறிப்பிடப்பட்டுள்ளதான ஒரே மரணம், கல்வாரியில் நிகழ்ந்த மரணமே ஆகும் என்ற உண்மையினையும் வேண்டுமென்றே அறியாதவர்களாய்க் காணப்படுகின்றனர்.

எருசலேமில் தாம் அடையப்போகின்றதான மரணத்தைக்குறித்து அவர் பேசினதாக அப்போஸ்தலர்கள் தெரிவிக்கின்றனர். நம்முடைய மீட்பருடைய இந்த ஒரே ஒரு மரணம் மாத்திரமே, இந்த நினைவுகூரும் அடையாளங்களினால் அடையாளப்படுத்தப்படுகின்றது; அவரது சரீரம், அவரது மாம்சம் நமக்காகப் பிட்கப்பட்டுள்ளது மற்றும் நித்திய ஜீவன் அடைய வேண்டுமெனில் இதன் புண்ணியத்திலும், ஜீவனிலும் அனைவரும் பங்கெடுக்க வேண்டும். இந்த முக்கியமான கேள்வி தொடர்புடைய விஷயத்தில், நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்.

எப்படித் தண்ணீர் ஞானஸ்நானமானது, முக்கியமான ஞானஸ்நானமாகக் காணப்படாமல், உண்மையான ஞானஸ்நானத்தை அடையாளப்படுத்தும் அடையாளமாக மாத்திரம் காணப்படுகின்றதோ, அதுபோலவே அடையாளங்களாகிய அப்பத்திலும், திராட்சரசத்திலும் பங்கெடுத்தல் என்பது மிக முக்கியமான விருந்திற்கு/காரியத்திற்கு அடையாளமாக மாத்திரமே காணப்படுகின்றது; அதாவது அவரது பிட்கப்பட்ட சரீரத்தின் மற்றும் சிந்தப்பட்ட இரத்தத்தின் வாயிலாக நமக்கு நித்திய ஜீவனை உறுதிப்படுத்துகின்றதான கிறிஸ்துவினுடைய புண்ணியத்தை நம்முடையதாக்கிக்கொள்ளும் காரியத்திற்கு அடையாளமாக மாத்திரமே காணப்படுகின்றது. அவரால் நிறைவேற்றப்பட்டதான பலியை விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டு, அதே விசுவாசத்தினால், அவரால் போதிக்கப்பட்டுள்ளபடி மனிதனாகிய கிறிஸ்து இயேசு பெற்றிருந்ததும், நமக்காக மரணத்தில் கையளிக்கப்பட்டதுமான புண்ணியங்கள், பரிபூரணங்கள் மற்றும் உரிமைகள் அனைத்தையும் நமதாக்கிக்கொள்வதன் மூலமாக நமது இருதயங்களானது உண்மையில் நித்திய ஜீவனுக்கான அப்பத்தை, பரலோகத்திலிருந்து தேவன் நமக்கு அனுப்பிவைத்ததான அப்பத்தைப் புசிக்கின்றதாய் இருக்கின்றது. இதுதான் உண்மையான அப்பம் மற்றும் இதைப் புசிப்பது என்பது நித்தியமான ஜீவனைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இதுவே சொல்லர்த்தமான அப்பமானது அடையாளப்படுத்துகின்றதான அடிப்படையான அர்த்தமாய் இருக்கின்றது மற்றும் இப்படியான அர்த்தத்திலேயே அதில் சரியாயும், புரிந்த நிலையிலும் பங்கெடுக்கும் அனைவருக்கும் காணப்படுகின்றது. அது பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து ஆதாமையும், அவரது குடும்பத்தையும் மீட்ட ஈடுபலிக்கான நினைவுகூருதலாகும்.

## அப்பம் மற்றும் பாத்திரம்

மற்றுமொரு கருத்து: பயன்படுத்தப்பட்ட அப்பமானது, புளிப்பற்றதாகும். புளிப்பு என்பது கெடுக்கிற ஒன்றாக, சீரழிக்கும் ஒன்றாக இருப்பதினால், பாவத்திற்கான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் பாவம் மனுக்குலத்தில் கொண்டுவந்ததான சீரழிவையும், மரணத்தையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இந்த அடையாளமானது, நமது கர்த்தர் இயேசு பாவம் இல்லாதவராக இருந்தார் என்பதை, கறைதிறையற்ற ஆட்டுக்குட்டி என்பதை, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாய்" இருந்தார் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் ஆதாமின் சந்ததியில் வந்தவராய் இருந்திருப்பாரானால், வழக்கம்போல் ஏதோ ஒரு பூமிக்குரிய தந்தை வாயிலாக தமது ஜீவனைப் பெற்றவராக இருந்திருப்பாரானால், அவரும்கூட மற்ற மனிதர்களைப்போலவே ஆதாமின் பாவத்தினால், புளிப்பானவராய் இருந்திருப்பார்; ஆனால் அவருடைய ஜீவனானது கறைதிறை இல்லாமல், உயர்ந்த பரலோக நிலையிலிருந்து, பூமிக்குரிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலைமையில் வந்ததாய் இருந்தது; ஆகவே அவர் "வானத்திலிருந்து வந்த அப்பம்" என்று அழைக்கப்பட்டார் (யோவான் 6:41). ஆகவே தேவன் அருளியுள்ளதான தூய்மையான, புளிப்பற்ற, மாசற்ற அப்பத்தினைக்குறித்து உணர்ந்துகொள்வோமாக மற்றும் அவரைப் புசிப்போமாக; அதாவது சத்தியத்தைப் புசித்து, ஜீரணிப்பதன் வாயிலாக அவரை நாம் புசிப்போமாக; அதிலும் விசேஷமாக . . . விசுவாசத்தின் வாயிலாக அவரது நீதியை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுதல் எனும் சத்தியத்தைப் புசிப்போமாக; மேலும் அவரை வழியாகவும், ஜீவனாகவும் அடையாளம் கண்டுகொள்வோமாக.

இந்த நினைவுகூருதல் அடையாளங்கள் தொடர்புடையதான இன்னும் ஆழமான ஓர் அர்த்தத்தை, அப்போஸ்தலன் தெய்வீக வெளிப்படுத்துதலின் வாயிலாக தெரிவித்துள்ளார். அப்பமானது நமது கர்த்தர் இயேசுவை மாத்திரம் அடையாளப்படுத்துகின்றதாயிராமல், நாம் அவரைப் புசித்தப்பிற்பாடு (அவரது நீதியை நமக்குரியதாக்கிக்கொள்வதன் வாயிலாக நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு) நாம் அர்ப்பணத்தின் வாயிலாக, உலகத்திற்கான உணவாகிய அந்தப் பிட்கப்பட்ட ஒரே அப்பத்தின் பாகமாக, நாம் அவரோடு இணைந்தவர்களானோம் என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். (1 கொரிந்தியர் 10:16). இது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளாகிய நாம், எதிர்கால மகிமைகளில் அவரோடுகூட உடன் சுதந்தரர்களாகுவதற்கும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதும், பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஜீவன் வழங்குவதுமான மாபெரும் வேலையில் பங்காளிகளாகுவதற்குமுரிய நிபந்தனையாய்க் காணப்படுகின்ற கிறிஸ்துவின் பாடுகளிலும், மரணத்திலும் இப்பொழுது பங்கடைவதற்கான சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றோம் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இதே கருத்தானது, அப்போஸ்தலனால் மீண்டும் மீண்டுமாகவும், பல்வேறு அடையாளங்களினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அவை அனைத்தைக்காட்டிலும், இவ்வடையாளமே ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகின்றது; அதாவது தங்கள் தலையோடுகூட (கிறிஸ்துவின் சரீரமாகிய — கொலோசெயர் 1:24 பார்க்கவும்) சபையே இப்பொழுது பிட்கப்படுகின்றதான "ஒரே அப்பமாக" இருக்கின்றனர். இது நமது தலையானவருடனான நமது ஐக்கியத்திற்கும், உறவிற்கும் குறிப்பிடத்தக்கதான விவரிப்பாய்க் காணப்படுகின்றது.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;" "அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 – KJV ; திருவிவிலியம்.)

"'திராட்சப்பழரசமானது' (fruit of the vine) நமது கர்த்தரினால் பலிச்செலுத்தப்பட்ட ஜீவனை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மரணத்தில் கையளிக்கப்பட்ட ஜீவனுக்கான அடையாளம்)" (மத்தேயு 26:27, 28).

பாவத்தின் காரணமாக ஆதாமின் சந்ததி இழந்துபோனதான ஜீவனுக்கான மீட்கும்பொருளாகக் கர்த்தர் தமது ஜீவனைக் கொடுப்பதன் மூலமே, புதிய உடன்படிக்கையின் கீழ் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் வாயிலாக மனிதர்களுக்கு ஜீவனுக்கான உரிமை கடந்துவர முடியும். (உரோமர் 5:18, 19). சிந்தப்பட்ட இரத்தமானது, "அனைவருக்குமான மீட்கும் பொருளாக" (விலையாகக்) காணப்பட்டது; இது அனைவருக்காகவும், நமது மீட்பரினாலே கொடுக்கப்பட்டதாய் இருந்தது; ஆனால் அவர் பாத்திரத்தைச் சீஷர்களிடத்தில் கொடுத்து, அதைப் பருகும்படிக்கு அவர்களிடம் கூறினதாவது, தம்முடைய பாடுகளில் அவர்கள் பங்காளிகளாகுவதற்கான அல்லது பவுல் குறிப்பிட்டுள்ளதுபோன்று "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதற்கான" அழைப்பாய்க் காணப்பட்டது (கொலோசெயர் 1:24). விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, நாமாய் முன்வந்து கிறிஸ்துவின் காரணங்களை/நோக்கங்களை ஆதரிப்பதின் வாயிலாக, அவரது பாடுகளில் பங்குகொள்வோமானால், நாம் தேவனால் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும் மற்றும் இயேசுவின் பாடுகளில் பங்கடைபவர்களாகவும் கருதப்படுவோம் என்பதே நம்முன் வைக்கப்பட்ட காரியமாகும். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (சிந்தப்பட்ட இரத்தம் — மரணம்) பங்குகொள்ளுதல் அல்லவா?" (1 கொரிந்தியர் 10:16 திருவிவிலியம்) "பாத்திரத்தினுடைய" மதிப்பினை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாக, கிறிஸ்துவோடுகூட, அவரது பாடுகள் மற்றும் அவமானத்தின் "பாத்திரத்தில்" பங்குகொள்வதற்கான வாய்ப்பிற்காக, தேவனை ஸ்தோத்திரிப்போமாக; இப்படியானவர்கள் அனைவரும், அவரோடுகூட மகிமைப்படுத்தப்படுவர் என்ற நிச்சயமும் கொண்டிருக்கலாம். (உரோமர் 8:17)

பாத்திரமானது அவரது அவமானத்தில் நமது பங்குகொள்ளுதலையும், அவரது பலியில் நமது பங்குகொள்ளுதலையும், அதாவது நமது மனுஷீகத்தின் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில், நமது கர்த்தரும், பாத்திரத்திற்கு இந்த அர்த்தத்தைச் சாற்றினவராய் இருந்தார். உதாரணத்திற்கு அவரது சிங்காசனத்திலுள்ள எதிர்கால

மகிமைக்குறித்த வாக்குறுதியை அவரது சீஷர்களில் இருவர், அவரிடத்தில் கேட்டபோது, அவரோ: "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கக்கூடுமோ? என்றார். அவர்களது இருதயப்பூர்வமான உறுதிமொழியின் நிமித்தமாக, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்" என்றார். திராட்சப்பழரசமானது, இரத்தம்/ரசம் வெளியே வருமளவுக்குத் திராட்சையைப் பிழிவதுமாத்திரம் குறிக்காமல், பிற்பாடு கடந்துவரும் புத்துணர்வையும்கூடக்குறிக்கின்றதாய் இருக்கின்றது; ஆகையால் "கிறிஸ்துவின் பாடுகளில்" இப்பொழுது பங்குகொள்ளும் நாம், அவரது மகிமைகளிலும், கனங்களிலும் மற்றும் அழியாமையிலும் சீக்கிரத்தில் பங்குகொள்வோம் — அதாவது இராஜ்யத்தில் அவரோடுகூடப் புதிய திராட்சரசத்தைப் பருகும்போது ஆகும்.

## கர்த்தர் வருமளவும்

இவ்வார்த்தைகளினுடைய முழுமையான அர்த்தம் என்ன?

நினைவுகூருதலுக்கான இராப்போஜனத்தை நிறுவின நமது கர்த்தர், அதன் ஆசரிப்பு விஷயத்தில் எவ்விதமான எல்லைகளை வைக்காததினால், நமக்கான ஈடுபலியாக நமது கர்த்தர் இயேசுவினுடைய மரணத்திற்கும், அவரோடுகூடப் பலிச்செலுத்திடுவதற்கான நமது அர்ப்பணிப்பிற்குமான நினைவுகூருதலை — ஒரு குறிப்பிட்டக் காலளவில் ஆசரிப்பது ஏற்றதாய் இருக்கும் என்று அப்போஸ்தலன் கால அளவை எல்லைக்குட்படுத்துவதாக நாம் புரிந்துகொள்ளக் கூடாது. மாறாக அது கால வரம்பிற்குட்பட்ட, அதாவது கொஞ்சம் வருடங்களுக்குரிய ஏற்பாடு என்று கருதப்படாமல், கர்த்தருடைய இரண்டாம் வருகை வரையிலும் தொடர்ந்து ஆசரிக்கப்பட வேண்டும் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையைக்குறித்துப் பேசுகையில், உலகத்தை ஆளுகைச்செய்து, ஆசீர்வதிக்கப்போகின்றதான கிறிஸ்துவின் இராஜ்யம் (அ) சபையினுடைய கூட்டிச் சேர்க்குதலையும், உயர்த்தப்படுதலையும் உள்ளடக்கின விதத்திலேயே, அப்போஸ்தலனுடைய வார்த்தைகள் காணப்படுகின்றன. ஒன்றோடொன்று தொடர்புடைய விஷயங்களை, ஒன்றுக்கொன்று ஒத்திருக்கும் விஷயங்களை இப்படியாய்ப் பேசுவது இன்றும் பொதுவான மற்றும் பொருத்தமான வழக்கமாய் இருக்கின்றது. கிறிஸ்துவாகிய தலையும், சரீரமும் வல்லமையிலும், மகா மகிமையிலும் உலகத்தை ஆளுவதற்கு வந்துகொண்டிருக்கின்றனர். கர்த்தர் (அ) தலையினுடைய பிரசன்னம் முதலாவது அவசியமாகும்; அடுத்து அவரது சரீரத்திலுள்ள நித்திரையடைந்த அங்கத்தினர்களின் மறுரூபமடைதலும், உயிரோடிருக்கும் அங்கத்தினர்களின் சலித்தெடுத்தலும், அவர்கள் படிப்படியாக அவரோடு கூட்டிச்சேர்க்கப்படுதலும் சம்பவிக்கும்.

இராஜா தம்முடைய மாபெரும் வல்லமையை 1878-ஆம் வருடத்தில் செயல்படுத்தத் துவங்கின காலத்திலிருந்து இராஜ்யம் ஆரம்பித்துவிட்டது என்று கருதப்படுகின்றதாய் இருப்பினும் (வெளிப்படுத்தல் 11:17), இராஜ்யத்தினுடைய கடைசி அங்கத்தினன் மறுரூபமடைவது (அ) மகிமைப்படுத்தப்படுவது வரையில், அப்பமாகிய கிறிஸ்து எனும் தலை மற்றும் சரீரத்தினுடைய பிட்கப்படுதல் நிறைவடைவது வரையில், அது முழுமையாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்காது. ஓர் அங்கம் பாடுபடுகையில், சரீரம் பாடுபடுகின்றது; ஓர் அங்கத்தினன் மகிமையடையாமல் இருக்கையில், இராஜ்யமானது வல்லமையிலும், ஆளுகையிலும் முழுமையாய் வரவில்லை என்பதாகும்.

"ஆகையால் நீங்கள் இந்த (பஸ்காவில்) அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும், அவருடைய மரணத்தைத் (உங்கள் நம்பிக்கை மற்றும் உறுதி என்று) தெரிவிக்கின்றீர்கள்" என்று அப்போஸ்தலன் கூறுகையில், கிறிஸ்துவினுடைய சபை (அ) இராஜ்யத்தினுடைய முழுமையான உயர்த்தப்படுதலை உள்ளடக்கின கிறிஸ்துவின் வருகையையே குறிப்பிட்டார் என்பதில் உறுதியே. இராஜ்யத்தின் மகிமையே, அடையாளத்தினுடைய முடிவு என்ற இதே கருத்தானது, நினைவுகூருதலை நிறுவினப்போதான நமது கர்த்தருடைய பின்வரும் வார்த்தைகளிலிருந்தும் எடுத்துக்கொள்ளப்படலாம்: "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 26:29).

நமது கர்த்தருடைய மரணமானது ஈடுபலி விலைக்கிரயமாக இருந்தது என்று நம்புகிறவர்கள் அதை அறிக்கைப்பண்ணுவது, அதைத் தங்கள் நம்பிக்கைகள் அனைத்திற்குமான அடிப்படை என்று தெரியப்படுத்துவது ஏற்றக்காரியமாகவும், நலமளிக்கிற காரியமாகவும் இருக்கும். இதற்கான ஏற்றக்காலமானது, இக்காலத்திலேயே, அதாவது தேவ வார்த்தையினுடைய இந்த அடிப்படையான உபதேசமானது, திரித்துக் கூறப்படுவதும், தவறாய் விவரமளிக்கப்படுகிறதுமான இக்காலத்திலேயே ஆகும்.

## சிலாக்கியத்தினை உணர்ந்துகொள்ளுதல்

எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும், எவரும் இந்த வருடாந்திர சிலாக்கியத்தினைப் புறக்கணித்திட வேண்டாமென்று நாம் வலியுறுத்துகிறோம். இதை ஆசரிக்கும் விஷயத்தில் விசேஷித்த ஆசீர்வாதம் உள்ளது. நீங்கள் சோர்வடைந்திருக்கிறீர்களானால், போய்ப் பிட்கப்பட்ட அப்பத்தில் பங்கெடுத்து, உங்கள் நீதிமானாக்கப்படுதலைக்குறித்தப் புதிதான உணர்ந்துகொள்ளுதலையும், ஒரே அப்பத்தின் - அவரது சபையின், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென அவரோடுகூடப் பிட்கப்படுவதற்கான (பலிச்செலுத்தப்படுவதற்கான) உங்களது அர்ப்பணிப்பைக்குறித்த புதிதான உணர்ந்துகொள்ளுதலையும் கர்த்தரிடத்தில் கேளுங்கள்.

இப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, உணர்ந்துகொள்ளப்படவில்லையெனில், நினைவுகூருதலானது அர்த்தமற்றதாக (அ) பாதகமானதாகக் காணப்படும் என்பதை நாம் மறக்காமல் இருப்போமாக. ஆனால் பாவங்களோ, அனலற்றத் தன்மைகளோ, அபாத்திரன் என்ற உணர்வுகளோ, நம்மைத் தடைச் செய்யாதிருப்பதாக. கர்த்தரிடத்தில்போய் உங்கள் குறைவுகள் அனைத்தையும் மறைக்காமல் கூறிவிடுங்கள். உங்கள் சகோதர சகோதரிகளிடத்தில் (அ) நீங்கள் யாருக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தீர்களோ, அவர்களிடத்தில்போய், அவர்கள் உங்களிடத்தில் தவறுகளை ஒப்புக்கொள்கிறார்களோ, இல்லையோ, நீங்கள் முழுமையாய் ஒப்புக்கொண்டுவிடுங்கள். உங்கள் கர்த்தருடன் ஒப்புரவாகிக்கொள்ளுங்கள் மற்றும் கூடுமானமட்டும் அனைத்து மனிதர்களுடனும் ஒப்புரவாகிக்கொண்டு வந்து புசியுங்கள் — ஆம் இப்பொழுது (அ) பின்னர் “ஏற்றக்காலத்தில்” ஏற்றுக்கொள்பவர் அனைவருக்குமான கர்த்தருடைய ஐசவரியமான ஏற்பாட்டில் பங்கெடுங்கள்.

இப்படியானதொரு இருதய ஆராய்தலும், சுத்திகரித்தலும், யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டதான பஸ்கா நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளதை நாம் நினைவுகூருகிறோம். தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்கெனக் கூடிடுவதற்கு முன்னதாக, புளிப்பான அல்லது அழுகிப்போனதான ஏதாகிலும் பொருட்கள், எலும்புகள், ரொட்டித் துண்டுகள் காணப்படுகின்றதா என்று தங்களது குடியிருப்புகளில் எல்லாம் அவர்கள் தேடினார்கள். இவைகளெல்லாம் எரிக்கப்பட்டன - அழிக்கப்பட்டன. ஆகையால் நாமும் நிஜத்தை நிறைவேற்றி, கோபம், பகைமை, சண்டை, துர்க்குணம் எனும் “பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போட” வேண்டும் (1 கொரிந்தியர் 5:7, 8).

இவ்வகை பாவம் எனும் புளிப்பானது, எரிக்கப்படாமல், முற்றிலுமாகப் புறம்பே கழித்துப்போடப்பட முடியாது என்பதையும், அன்பு — பரம அன்பு, தேவ அன்பு மாத்திரமே இதை எரித்துப்போட முடியும் என்பதையும் நினைவில் கொண்டிருக்க வேண்டும். இந்த அன்பானது, நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருந்தால், இது எதிர்ப் பண்புடைய அனைத்தையும், அதாவது பொறாமை, பகைமை, புறங்கூறுதல் முதலானவைகள் அனைத்தையும் பட்சித்துப் போட்டுவிடும். இவைகளையெல்லாம் புறம்பே கழித்துப் போட்டு, கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, அவரது ஆவியில் நிரம்பிடுவதற்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். மனம் தளர்ந்துபோக வேண்டாம். பாடத்தைக் கற்றுக்கொண்டு, புதிய தீர்மானங்களுடனும், ஆண்டவருடைய உதவியில்லாமல், நீங்கள் நீங்களாகவே பரிசை ஒருபோதும் அடையமுடியாது என்ற உண்மையினைப்பற்றின அதிகமானப் புரிந்துகொள்ளுதலுடனும், மீண்டுமாகத் தொடருங்கள். மேற்கூறிய உண்மையினை நம்மைவிட அவர் நன்றாய் அறிவார் மற்றும் “என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ்செய்யக் கூடாது” என்று கூறுகின்றார். நமக்கான தேவையின் காரணமாகவே, பிதா நமக்கு இப்படியாக ஏற்பாடு பண்ணியுள்ளார். “தைரியங்கொண்டிருங்கள்!” என்பதே “ஜெயங்கொள்ளுகிற” வகுப்பாரில் அடங்குவதற்கு நாடுகிற மற்றும் ஏங்குகிற அனைவருக்குமான ஆண்டவருடைய வார்த்தைகளாக இருக்கின்றது.

## உங்கள் எதிராளியான பிசாசு

வருஷத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் சோதனைகளானது, விசேஷமாய் அனுமதிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. எப்போதும் “கசப்பான வேர்களானது முளைத்தெழும்பி,” வளர்வது வழக்கமாகும்; ஆனால் இந்த ஒரு காலப்பகுதியிலோ பத்து மடங்கு வலிமையோடு வளர்கின்றது. நம்முடைய சீஷத்துவத்திற்கான இறுதிப் பரீட்சையானது, அறிவின் விஷயத்தில் இல்லாமல் அன்பின் விஷயத்தில்தான் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. “நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள் என்கிற புதிதானக் கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.” அப்போஸ்தலர்கள் ஒருவரிலொருவர் போதுமானளவுக்கு அன்புக்கொண்டிராததாலேயே, இராஜ்யத்தில் யார் பெரியவராய் இருப்பார் என்று வாக்குவாதம்

பண்ணினவர்களாகக் காணப்பட்டனர் மற்றும் அன்புக்கொண்டிராததாலேயே ஒருவருக்கொருவர் தாழ்த்திக்கொள்ளமாட்டோம் என்று மிகவும் தீர்மானமாய்க் காணப்பட்டு, இதனால் ஆண்டவருடைய பாதங்களையும் கழுவும் காரியத்தினைப் புறக்கணித்தவர்களாக, கனம் குறைந்த வேலையிலும், அவரே அனைவருக்கும் பணிவிடைக்காரராக இருக்கத்தக்கதாக, அவருக்கு வாய்ப்பளித்தவர்களாகக் காணப்பட்டனர். இந்தத் தவறான சிந்தையே, அதாவது கர்த்தருடைய சிந்தை இல்லாமையே, அவர்கள் எதிராளியானவனுடைய வல்லமையினால் தாக்கப்படுவதற்கு ஏதுவாயிற்று மற்றும் யூதாசைக் காட்டிக்கொடுப்பதற்கு ஏதுவாய் வழிநடத்திற்று மற்றும் பேதுரு தனது அபிஷேகிக்கப்பட்ட கர்த்தரை மறுதலிப்பதற்கு ஏதுவாயிற்று.

ஆகையால் நாம் சோதனைக்குள் விழுந்துவிடாதபடிக்கு நம்மைக்குறித்து நாம் எச்சரிக்கையாயிருப்போமாக; விழித்திருந்து ஜெபம்பண்ணுவோமாக; மிகுந்த தாழ்மையுடனும், மிகுந்த அன்புடனும் காணப்படுவோமாக. இயேசுவினுடைய பின்னடியார்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதற்கும் (அ) அவர்களைச் சிக்கவைப்பதற்கும் (அ) அவர்களை இடறப்பண்ணுவதற்கும் நமது மாபெரும் எதிராளியானவன் அன்றுமுதல் இன்றுவரையிலும் அதிக உற்சாகத்துடன் காணப்படுகின்றான்.

நம்முடைய பாவங்களை நிவிர்த்திச் (திருப்தி) செய்கிற கிருபாதார பலியாய், அதாவது நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாய், அவரது விலையேறப்பெற்ற இரத்தம் காணப்படுகின்றது என்ற விசுவாசத்தின் நம்பிக்கையை உடையவர்கள் அனைவரும், இந்த உண்மையை அறிக்கைச் செய்வதில் முன்பில்லாதளவுக்கு அதிக வைராக்கியத்துடனும், ஊக்கத்துடனும் காணப்படுவார்களாக; "ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய (பலியாகிய) கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." பெயரளவிலான எந்த முதற்பிறப்புகளும் கடந்து போகப்படுவதுமில்லை, மகிமையிலுள்ள முதற்பேறானவர்களின் சபையினுடைய அங்கத்தினர்களும் ஆகுவதில்லை; அந்த இரவில், நிழலில் நடந்ததுபோலவே இரத்தத்தின் கீழ்க் காணப்படாதவர்களும், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியினுடைய புண்ணியங்களில் பங்கெடுக்காதவர்களுமானவர்கள் எவரும் முதற்பேறானவர்களின் சபையினுடைய அங்கத்தினர்கள் ஆகுவதில்லை.

## யார் பங்குகொள்ளலாம்

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது, உலகத்துக்குரியதாயும், பெயரளவிலான விசுவாசிகளுக்குரியதாயும் இராமல், (1) கிறிஸ்துவை தங்களுடைய மீட்பராகவும், தங்களுடைய பாவத்தைச் சுமந்தவராகவும், ஏற்றுக்கொண்டவர்களும் மற்றும் (2) அவருக்கும், அவருடைய ஊழியத்திற்கும் எனத் தங்களை அர்ப்பணம் பண்ணினவர்களுமாய் இருப்பவர்களுக்கு மாத்திரம் உரியதாகும். ஆனால், இதில் யார் பங்குகொள்ளலாம் அல்லது பங்குகொள்ளக்கூடாது என்று தீர்மானம் பண்ணுவது நமக்குரிய அல்லது எந்த மனுஷனுக்குரிய அல்லது ஒரு கூட்டத்தாருக்குரிய வேலையல்ல. "அப்பத்திலும்," "பாத்திரத்திலும்" பங்குகொள்வதற்கான சரியான தகுதிகள் என்ன என்பதை கர்த்தருடைய வார்த்தையிலிருந்து சுட்டிக்காண்பிப்பதும், "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்" என்று அப்போஸ்தலன்போன்று கூறுவதும் நமக்குரிய கடமையாகும் (1 கொரிந்தியர் 11:28).

இப்பொழுது தேவனுடைய ஜனங்கள் இருண்ட யுகங்களினுடைய தவறான உபதேசங்களிலிருந்து வெளிவந்துகொண்டிருப்பதினாலும், இப்பொழுது இந்த நினைவுகூருதலின் விஷயங்கள் இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளப்படுவதினாலும், ஒருவர் தன்னைச் சுய பரிசோதனைப் பண்ணிக்கொள்ளும் அல்லது நிதானித்துக்கொள்ளும் காரியம்கூட முன்பைக்காட்டிலும் இப்பொழுது மிக முழுமையாகக் காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் பின் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களைத் தன்னிடத்திலேயே கேட்டுக்கொள்ளவார்களாக :

(1) மனித குடும்பத்தில் நான் ஓர் அங்கமாக இருக்கின்றபடியால், ஆதிப்பாவத்தின் காரணமாக எல்லார்மேலும் கடந்துவந்த மரணத்திற்கு ஏதுவான அந்த ஆக்கினைத் தீர்ப்பின் கீழ், நானும் காணப்பட்டேன் என்று வேதவாக்கியங்கள் போதிக்கும் காரியங்களை நான் நம்புகின்றேனா?

(2) இந்தப் பாவம் மற்றும் மரணத் தண்டனையினின்று நான் தப்பித்துக்கொள்வதற்கு எனக்கு இருக்கும் ஒரேவழி, என்னுடைய கர்த்தராகிய மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவினால் கொடுக்கப்பட்ட ஈடுபலியின் வழியாகவே உள்ளது என்று நான் நம்புகின்றேனா?

(3) அவர் நம் பொருட்டு தம்மையே அதாவது, அவருடைய மாம்சத்தையும், இரத்தத்தையும், மனுஷீகத்தையும் ஈடுபலிக்கான கிரயமாகக் கொடுத்தார் என்றும், அவர் தமது ஆத்துமாவை

மரணத்தில் ஊற்றி, தம்முடைய ஆத்துமாவை பாவத்திற்கான பலியாகக் கொடுத்தார் என்றும் நான் நம்புகின்றேனா? (ஏசாயா 53:10-12)

(4) அவர் யோர்தானில் ஞானஸ்நானம் எடுத்தப்போது ஆரம்பமான, மரணம் வரையிலான அவருடைய அர்ப்பணமானது, மனுக்குலத்திற்காக அவர் தம்மையே பலிசெலுத்தினது மூலம், சிலுவையில் அவர் மரித்தபோது, நிறைவேறி முடிந்தது என்று நான் நம்புகின்றேனா?

(5) நியாயப்பிரமாணத்திற்கு அவர் கீழ்ப்படிந்ததின் காரணமாக அவர் சுதந்தரித்துக்கொண்ட (நித்தியஜீவன் மற்றும் உலகத்தின்மீது ஆளுகை எனும்) உரிமைகளை அவர் இப்படியாக, பலியானதின் மூலம் — இறுதியில் புதிய உடன்படிக்கையின் கீழ் ஆசீர்வாதங்களை ஏற்றுக்கொள்ளுகின்ற அனைவருக்கும் — விழுந்துபோன மற்றும் மரித்துக்கொண்டிருக்கும் மனுக்குலத்திற்கு — கொடுத்துவிட்டார் என்பதை நான் புரிந்துள்ளேனா?

(6) இவ்விதமாக பலிச் செலுத்தப்பட்ட அவருடைய மாம்சமும், இரத்தமும் இவைகள் விலைக்கிரயமாகக் கொடுக்கப்பட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட அந்த ஆசீர்வாதங்களுக்கும், கிருபைகளுக்கும் அடையாளமாக இருக்கின்றது என்பதை நான் புரிந்துள்ளேனா?

(7) அவருடைய மாம்சத்திற்கும், அவருடைய இரத்தத்திற்கும் அடையாளச் சின்னங்களாக இருக்கும் அப்பம் மற்றும் திராட்சரசத்தில் பங்குகொள்ளும் காரியமானது, என்னுடைய கர்த்தரின் மாம்சம் மற்றும் இரத்தம் எனக்காகவும், அனைவருக்காகவும் பெற்றுத்தந்த அந்த ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும் நான் ஏற்றுக்கொள்வதைச் சுட்டிக்காட்டுகின்றது என்பதை நான் புரிந்துள்ளேனா?

(8) ஒருவேளை இவ்விதமாய் நினைவுகூரப்பட்டதான ஈடுபலியை நான் இருதயப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு இருப்பேனாகில், இந்த ஈடுபலியின் மீதான விசுவாசத்தின் காரணமாக நீதிமானாக்கப்பட்ட என்னை — என்னுடைய மாம்சத்தையும், இரத்தத்தையும் கர்த்தரோடுகூடப் பிட்கப்படும்படிக்கும், அவரோடுகூடப் பாடுபடும்படிக்கும், அவரோடுகூட மரிப்பதற்கும் கர்த்தருக்கென்று முழுமையாய் நான் அர்ப்பணம் பண்ணியுள்ளேனா?

ஒருவேளை இக்கேள்விகளுக்கு நம்மால் தீர்க்கமான பதில் கொடுக்க முடியுமெனில், நாம் கர்த்தருடைய சரீரத்தைக்குறித்து முழுத் தெளிவுடனும், மற்றும் அவருடைய பலிக்கு மரியாதைக் கொடுக்கிறவர்களாகவும் காணப்படுகின்றோம். மேலும், நாம் அதைப் புசிக்கலாம் — கண்டிப்பாய்ப் புசிக்க வேண்டும் — "நீங்கள் எல்லாரும் இதிலே புசியுங்கள்."

பாவத்திற்கும், பாவிகளுக்கும் ஓர் ஈடுபலி அவசியம் எனும் காரியத்தை *மறுப்பவர்களும்,* கிறிஸ்துவின் புண்ணியத்தில் பங்கடைவது தங்களுக்குத் தேவையில்லை என்றும் *எண்ணுபவர்களும்,* ஒருவருடைய புண்ணியம், மற்றவருக்குத் தரிப்பிக்க முடியும் எனும் காரியத்தை *மறுப்பவர்களும்,* கிறிஸ்துவின் நீதியினால் கிடைத்திட்ட கலியாண வஸ்திரத்தைக் *களைந்து போட்டவர்களும்,* தங்களுடைய சொந்த நீதியாகிய அழுக்கான கந்தைகளை அணிவதில் "சந்தோஷத்துடனும்," "சுதந்திர உணர்வுடனும்" *காணப்படுபவர்களும்,* தங்களைப் பரிசுத்தம்பண்ணின விலையேறப்பெற்ற இரத்தத்தை இப்பொழுது பரிசுத்தமற்றது அல்லது சாதாரணமான ஒன்றாக *எண்ணுபவர்களும்* — தாங்கள் விசுவாசிக்க இனி மறுப்புத் தெரிவிக்கின்ற இந்த நினைவுகூரும் காரியத்திலிருந்து விலகிக்கொள்ளும்படிக்கு நாம் அறிவுரை கூறுகின்றோம். ஏனெனில், ஒருவேளை அவர்கள் பங்குகொள்வது அவர்களது, விசுவாசமற்ற நிலையில் இன்னும் மாய்மாலத்தைக்கூட்டி வழங்கிவிடுவதாகிவிடும். இப்படிப்பட்டவர்கள் பங்குகொள்வது என்பது, தங்கள்மீதும், ஈடுபலி இல்லை என்ற தங்களுடைய கோட்பாடுகளின்மீதும் கண்டனம் சுமத்திக்கொள்வதற்கு ஏதுவாகிவிடும்.

## தேவனுடைய வார்த்தையாகிய சத்தியம்

மாபெரும் எதிராளியானவனுடைய பல்வேறு வழிகள் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட தவறான வாதங்கள் மூலமாக, இந்தத் தப்பறைகளுக்குள் சிக்கினவர்களாக மாத்திரம் காணப்படும் அனைவருக்கும் நாம் அறிவுரை கூறுவது என்னவெனில்: வீணான அனைத்து மனித தத்துவ ஞானங்களை/கோட்பாடுகளை உதறித்தள்ளி, மீண்டுமாக எளிமையான தேவ வார்த்தைகளையும், அதினால் முன்வைக்கப்படும் சத்தியங்களையும் ஏற்றுக்கொள்வதுமாகும்; தேவ வார்த்தைகளினால் முன்வைக்கப்படும் சத்தியங்கள் என்னவெனில்: அனைவரும் விழுந்துள்ளனர் என்பதும், தெய்வீகப் பிரமாணத்திற்கும், தீர்ப்பிற்கும் இசைவாக நம்முடைய ஒப்புரவாகுதலுக்கும், சீர்த்தூக்கப்படுதலுக்குமான ஒரே வழி நம்முடைய பாவங்களுக்கான ஈடுபலியை (அ) முழுமையான மற்றும் துல்லியமான சரிநிகர்சமான விலையைக் கொடுப்பதேயாகும் என்பதும், இதுதவிர வேறெந்த வழியிலும் அவரால் நீதியுள்ளவராகவும், பாவிகளை நீதிமானாக்குகிறவருமாயும் காணப்பட முடியாது என்பதும் ஆகும். மேற்கூறப்பட்டவர்கள் நமது கர்த்தர் இயேசு தேவ ஆட்டுக்குட்டியென, நம்முடைய

பாவங்களுக்கான முழுத் தண்டனையை அவர் மரத்தில், தம்முடைய சரீரத்தில் சுமந்தார் என்றும், அனைவருக்குமான முழுமையான ஈடுபலியை அவர் கொடுத்தார் என்றுமுள்ள உண்மைகளை அடையாளம் கண்டுகொள்வார்களாக.

கொள்கை மிகவும் எளிமையானதாகும்; ஆனால் ஒருவேளை அதைச் சிலரால் கிரகித்துக்கொள்ள முடியவில்லையெனில், இப்படியானவர்கள் தேவன் இப்படியாய்த் தெரிவித்துள்ளார் என்ற உண்மையையாகிலும் கிரகித்துக்கொள்வார்களாக மற்றும் கர்த்தரிடத்தில் திரும்புவார்களாக மற்றும் அவரும் திரளாய் மன்னிப்பார். இப்படியானவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான நமது தேவனுடைய கிருபை அனைத்திற்குமான இந்த அஸ்திபாரத்தை இன்னதென்று சகல பரிசுத்தவான்களோடுங்கூட உணர்ந்துகொள்ளத்தக்கதாகப் பரிசுத்த ஆவியினுடைய வழிகாட்டுதலையும், கண்களின் அபிஷேகிக்கப்படுதலையும் கேட்பார்களாக. இப்படியாகப் பிட்கப்பட்ட அப்பத்தையும், சிந்தப்பட்ட இரத்தத்தையும் உண்மையாய் ஏற்றுக்கொண்டு, அதாவது தங்கள் பாவங்களுக்காகவே பலிச்செலுத்தப்பட்டுள்ளது என்றும், சிந்தப்பட்ட இரத்தமானது (கொடுக்கப்பட்ட ஜீவனானது) அனைவருக்குமான மன்னிப்பை உறுதிப்படுத்துகின்றது என்றும் உணர்ந்து, இப்படிப்பட்டவர்கள் சரித்திரத்தின் மாபெரும் நிகழ்வை, அதாவது நம்முடைய பாவங்களுக்காக தேவனுடைய நேசக்குமாரனின் விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்பட்டதையும், அவரது விலையேறப்பெற்ற ஜீவன் பலிச்செலுத்தப்பட்டதையும் நினைவுகூர்ந்து ஆசரிப்பார்களாக. "தெளிக்கப்பட்ட இரத்தத்தின்" கீழிலிருந்து அறிந்தும், மனப்பூர்வமாகவும் வெளியேறுகிறவர்களை, இந்த வார்த்தைகளும் சரி (அ) வேறெந்த வார்த்தைகளும் சரி — வழியினிடத்திற்கும்/சத்தியத்தினிடத்திற்கும், ஜீவனிடத்திற்கும் திருப்புவது என்பது கூடாதகாரியம் என்று தேவனுடைய வார்த்தைகளிலிருந்து நாம் அறிகின்றோம். அப்படியானவர்களுக்கு எந்தக் கடந்துபோகுதலும் கிடையாது. "மனந்திரும்புவதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" (எபிரெயர் 6:4-10; 10:26-30). நம்மிடமிருந்து வரும் இந்த அன்புடன்கூடிய புத்திமதியும், வேதவாக்கியங்களை உண்மையாய்ச் சுட்டிக்காட்டுதலுங்கூடக் கர்த்தருக்கும் மற்றும் சத்தியத்திற்கும் மற்றும் பகுத்தறிவில்லாமல் இடறுகிற சகோதரர்கள் (அ) சகோதரிகளுக்கும் ஊழியம் புரிந்திடுவதற்கான வாஞ்சை எனும் உண்மையான நம்முடைய நோக்கத்தின் காரணமாய்க் கொடுக்கப்படுகிறது என்று பார்க்கப்படுவதற்குப் பதிலாக, (நம்முடைய) பகைமை, துர்க்குணம், பொறாமை மற்றும் அனைத்து விதமான பொல்லாப்புகளினால் உண்டானது என்று கருதப்படும் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

ஈடுபலியினுடைய கொள்கையினை முழுமையாய் உணர்ந்துகொள்ளாத நிலையில், ஆனால் நமது மீட்பருடைய மரணமானது, நம்மை நம்முடைய குற்றங்களிலிருந்து நிவிர்த்திபண்ணி, குற்றத்திற்கான தண்டனையினின்று நம்மை விடுவித்தது என்ற உண்மைக்குறித்த பயபக்தியுடன்கூடிய உணர்ந்துகொள்ளுதலுடன் கடந்தகாலங்களில் அநேகர் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்தும் அடையாளங்களில் பங்கெடுத்துள்ளனர். இப்படியானவர்கள் நினைவுகூருதலின் உண்மையான அர்த்தத்தினை உய்த்துணர்ந்துள்ளனர்; எனினும் சத்தியத்துடன்கூடக் காணப்படும் மிகுதியான தப்பறைகளின் காரணமாக, இவர்களால், நாம் இப்பொழுது உணர்ந்துள்ளதான அதன் எளிமையான கொள்கையினை உணர்ந்துகொள்ள முடியவில்லை.

## ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டவர்கள் மாத்திரம்

சில பேப்டிஸ்ட் (Baptist) சகோதரர் பின்வருமாறு குறிப்பிடலாம்: நினைவுகூருதல் இராப்போஜனத்தில் பங்கெடுப்பதற்கு, ஞானஸ்நானம் அவசியமான தகுதியாய் இருக்கின்றது என்பதைக் குறிப்பிடுவதற்கு நீங்கள் மறந்துவிட்டீர்கள்.

இல்லை, நாங்கள் ஞானஸ்நானத்தை மறந்துபோகவில்லை. ஞானஸ்நானம் என்பது அவசியம் என்றும், நினைவுகூருதல் இராப்போஜனமானது சபைக்கு மாத்திரமே உரியது என்றும், சபையாகுவதற்கு முன்னதாகவே, ஒருவருக்கு ஞானஸ்நானம் அவசியம் என்றும், நாங்கள் உங்களோடுகூட ஒத்துக்கொள்கின்றோம். ஆனால் சபை என்றால் என்ன என்பது தொடர்புடைய விஷயத்தில், நாங்கள் உங்களிடமிருந்து வேறுபடுகின்றோம். பேப்டிஸ்ட் சபையானது (Baptist Church) சபையல்ல என்று நாங்கள் எண்ணுகின்றோம். மற்றெல்லா சபைகளானது விழுந்துபோன மனிதர்களினால் ஏற்படுத்தப்பட்டு, நடத்தப்படுவதுபோலவே, பேப்டிஸ்ட் சபையும் "கோதுமைகளையும்", "களைகளையும்" கொண்டிருக்கின்றது; ஆனால் சபையானது, கோதுமையை மாத்திரமே பெற்றிருக்கும். கிறிஸ்தவ மண்டலத்தினுடைய எந்த ஒரு பிரிவும், அதினிடத்தில் எந்தக் "களைகளும்" இல்லாமல், அனைத்துமே "கோதுமைகளாக" இருக்கின்றது என்று கூறமுடியாது.

பரலோகத்தில் பெயர்கள் எழுதப்பட்டுள்ளதான சபையானது "கோதுமைகள்" அனைத்தையும் கொண்டிருக்கின்றது மற்றும் "களைகளை" அதன் பட்டியலில் பெற்றிருப்பதில்லை. இந்த ஒரு சபையையே, நமது கர்த்தர் ஸ்தாபித்தார் மற்றும் இதில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அனைவரும் — கடந்துபோகப்பட்டவர்களாகிய சபை — "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபையே" — அங்கத்தினர்களாய் இருப்பார்கள் (எபிரெயர் 12:23).

இதுபோலவே ஞானஸ்நானத்தைக்குறித்த உங்களது வலியுறுத்தலும் எங்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. வேதவாக்கியங்களுடைய கண்ணோட்டமானது, உங்களுடையதைக்காட்டிலும் மிகவும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. "முதற்பேறானவர்களின் சபையினுடைய" அங்கத்தினர்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியாதவர்களை எல்லாம், உங்கள் பேப்டிஸ்ட் சபையில் நீங்கள் அங்கத்தினர்களாகப் பெற்றிருக்கின்றீர்கள். அப்படியானவர்கள் தண்ணீர் ஞானஸ்நானம் என்ற உங்களது பரீட்சையினைக் கடந்துவிட்டனர்; ஆனால் அவர்கள் பரலோகத்தில் தங்கள் பெயர்களை எழுதப்பெற்றவர்களாகிய சபையினுடைய அங்கத்தினர்கள் அனைவருக்கும் அவசியமான மாபெரும் ஞானஸ்நானம் எனும் பரீட்சையினைக் கடக்காதவர்களாகக் காணப்படுகின்றனர். உண்மையான ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளான முழுகுதலின் மூலமும், அவரது சாயலிலான உயிர்த்தெழுதலின் மூலமும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக, சபைக்குள்ளான ஞானஸ்நானமாகும். தண்ணீர் ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளான மனித சித்தத்தினுடைய உண்மையான முழுகுதலுக்கு அருமையான அடையாளமாய் இருக்கின்றது மற்றும் மரணம்வரையிலுமான பலிச்செலுத்துதலுக்கு அருமையான விளக்கமாகவும் காணப்படுகின்றது; எனினும் எப்படி இராப்போஜனத்தில் நாம் புசிக்கின்றதான அப்பமும், திராட்சரசமும், நமது கர்த்தருடைய பலியின் உண்மையான ஜீவன் கொடுக்கும் அம்சங்களாக இல்லாமல், மாறாக அவைகளின் அடையாளங்களாக மாத்திரம் காணப்படுவதுபோன்று, தண்ணீர் ஞானஸ்நானமும் வெறும் அடையாளமேயாகும்.

ஆகையால் சபையாகிய, முழுகப்பட்டவர்கள் மாத்திரமே இராப்போஜனத்தில் பங்கெடுக்க வேண்டும் என்பதை நாம் ஒத்துக்கொள்கின்றோம்; இன்னுமாக உண்மையில் முழுகினவர்கள் என்பவர்கள் தங்கள் சித்தங்களை மரிக்கப் பண்ணினவர்களாகவும், கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளாக அடக்கம் பண்ணினவர்களாகவும், அவருக்குள் புதிய சிருஷ்டிகளெனப் புதிதான ஜீவன் உள்ளவர்களாய் நடந்துக்கொள்ளும்படிக்கு எழுந்தவர்களாகவும், தங்களது ஓட்டமானது சொல்லர்த்தமான மரணத்தில் நிறைவுபெறுவதற்கும், முதலாம் உயிர்த்தெழுதலில் உண்மையான புதிய ஜீவன்களாக விழித்தெழுவதற்கும் காத்திருப்பவர்களாகவும் இருப்பவர்கள் என்று நாம் அடையாளம் கண்டுகொள்கின்றோம். இப்படியானவர்கள் அனைவரும் யாராக இருந்தாலும் சரி, எங்குக் காணப்பட்டாலும் சரி, இவர்கள் ஞானஸ்நான அடையாளத்தைப் பண்ணியிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இவர்களே கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையின் உண்மையான அங்கத்தினர்கள் ஆவர். ஆம் இப்படியான அர்ப்பணிக்கப்பட்டவர்கள், தங்கள் சொந்த சித்தத்திற்கு மரித்து, கிறிஸ்துவின் சித்தத்திற்கு மாத்திரமாக ஜீவனுடையவர்களாய் இருப்பவர்கள், நமது கர்த்தருடைய அறிவுரையானது தண்ணீர் ஞானஸ்நானத்தையும் (அ) அடக்கம்பண்ணுதலையும், மற்றும் தங்கள் சித்தங்களை அடக்கம் பண்ணுவதையும் உள்ளடக்குவதைக் காண்கையில், தங்கள் தலையும், கர்த்தருமானவரை அனைத்து விஷயங்களிலும் பின்பற்றிடுவதற்கும், அவருக்குக் கீழ்ப்படிந்திடுவதற்கும் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள்; அதிலும் விசேஷமாகத் தாங்கள் குழந்தைகளாக இருந்தபோது, தாங்கள் "விசுவாசிகளாய்" இருக்கவில்லை" என்பதையும், தண்ணீர் துளிகள் தெளிக்கப்படுவது என்பது எந்த விதத்திலும் அடக்கத்தையும், உயிர்த்தெழுதலையும் அடையாளப்படுத்தாது என்பதையும் இப்பொழுது இவர்கள் உணர்ந்திருக்கையில் கர்த்தரை அனைத்து விஷயங்களிலும் பின்பற்றிடுவதற்கும், அவருக்குக் கீழ்ப்படிந்திடுவதற்கும் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். இவர்கள் நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் பங்கெடுப்பதற்கு முன்னதாக (நமது கர்த்தரினாலும், அப்போஸ்தலர்களினாலும் நமக்குச் சுட்டிக்காட்டப்பட்டதுபோல) கூடுமானால் தண்ணீரிலும் அடக்கம் பண்ணப்பட வேண்டுமென்று தேவனுடைய வார்த்தைகளில் இடம் பெறுகின்றதான இந்தக் கட்டளையின் மதிப்பையும், அருமையையும் கண்டுகொள்வார்கள். வேதாகமப் பாடங்களினுடைய ஆராய்ச்சியின் தொகுதி-VI-இல் (Volume-6), அத்தியாயம் 10-இல், இடம்பெறும் "புதுச் சிருஷ்டியினுடைய ஞானஸ்நானம்" எனும் பாடத்தைப்பார்க்கவும்.

உண்மையான "கோதுமை" மாத்திரமே கர்த்தருடைய பந்தியில் காணப்படுவார்கள் என்று நாம் எதிர்ப்பார்த்திட முடியாது; எப்படி யூதாஸ் முதல் கூடுகையில் கலந்துகொண்டானோ அப்படியே சில "களைகள்" கூட வருவார்கள் என்றே நாம் எதிர்ப்பார்க்கலாம். ஆனால் நம்மால் இருதயத்தைக் கணிக்கமுடியாது என்பதினாலும், "களைகளினின்று," "கோதுமையை" நம்மால் பிரிக்க முடியாது என்பதினாலும், இந்தப் பாடம் தொடர்புடையதாகத் தேவனுடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டதான "தேவனுடைய ஆலோசனைகள் அனைத்தையும் அறிவிப்பதன்" மூலமாக எங்கள் கடமைகள் அனைத்தையும் முடித்துவிட்டு, ஒப்புரவாகுதலின் இரத்தத்தின் மீதான தனது

விசுவாசத்தைக்குறித்தும், மீட்பரிடத்திலான தனது அர்ப்பணிப்புக்குறித்தும் அறிக்கைப் பண்ணிக்கொள்கின்றதான ஒவ்வொருவனும் தான் பங்கெடுக்கலாமா அல்லது வேண்டாமா என்கிறதை முடிவுபண்ணும் விஷயத்தினை அவனவனிடத்திலேயே விட்டுவிடுகின்றோம்.

## எப்படிப் பங்கெடுப்பது?

உங்களைத்தவிர, உங்கள் அயலகத்தார் மத்தியில் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் எவரேனும் இருப்பார்களானால், அதை நீங்கள் அறிவீர்கள். அவர்களுக்காகவும், சத்தியத்திற்காகவுமான உங்களது உண்மையான அன்பானது, நீங்கள் சத்தியத்தைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, அவர்களைச் சத்தியத்தினால் ஆசீர்வதிக்கத்தக்கதாக நீங்கள் நாடிடுவதற்கு உங்களை வழிநடத்தியிருந்திருக்கும். நீங்கள் ஐக்கியமும், உறவும் கொண்டிருக்கும் அப்படியானவர்கள், உங்களோடுகூட நினைவுகூருதலில் கலந்துகொள்வதற்கு நீங்கள் அழைத்திடலாம்; ஆனால் அவர்கள் ஈடுபலியை மறுக்கிறவர்கள் என்று நீங்கள் அறிவீர்களானால், அத்தகையவர்கள்மீது கூடுதல் ஆக்கினைத் தீர்ப்பு வருவதற்கு நீங்கள் உதவுகிறவர்களாக இராதபடிக்கு, அவர்களை அழைக்க வேண்டாம்.

சூழ்நிலைகளுக்கேற்ப கொஞ்சமானவர்களோடு அல்லது அநேகருடன் கூடிக்கொள்ளுங்கள்; ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான உறவின் மற்றும் ஐக்கியத்தின் ஆவி இல்லாத கும்பலோடு கூடிக்கொள்வதற்குப்பதிலாக, உங்களோடுகூட நினைவுகூருதலின் சிந்தையில் காணப்படுபவர்களாகிய கொஞ்சம் பேருடன் கூடிக்கொள்வது சாலச்சிறந்தது.

இந்த ஒரு தருணத்திற்குக் கர்த்தர் பயன்படுத்தினது போன்றதும், இப்பொழுது எபிரெயர்களால் பயன்படுத்தப்படுகின்றதுமான புளிப்பில்லாத அப்பத்தை (ரொட்டி-crackers) ஏற்பாடு பண்ணிக்கொள்ளலாம்; ஏனெனில் தூய்மையான/இனிப்பான, புளிப்பற்ற அப்பமானது (புளிப்பு அடையாளப்படுத்தும்) பாவம் அறியாதவரும், பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான, தேவ ஆட்டுக்குட்டியினுடைய பாவமற்ற மாம்சத்தினை நன்கு அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளதுபோன்று "திராட்சப்பழரச" பானத்தை ஏற்பாடு பண்ணிக்கொள்ளுங்கள். சந்தேகத்திற்கிடமின்றி கர்த்தரும், சீஷரும் லைட் வைன்சை (Light Wines: 12.5%-க்கு குறைவான மதுசாரம் கொண்ட திராட்சரசம்) பயன்படுத்தினார்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி திராட்சரசமானது (wine) மிகப் பொருத்தமான அடையாளம் என்று கருதுகின்றோம். ஆனால் நமது கர்த்தர் திராட்சரசத்தை (wine) நிபந்தனை விதியாமல் திராட்சப்பழரசம் (fruit of the vine) என்று குறிப்பிடுவதால், திராட்சப்பழங்களை உலர வைப்பதன்மூலம் கிடைக்கும் உலர் திராட்சைகளைக் கொதிக்க வைத்து, வடிக்கட்டி எடுக்கும் இரசத்தினைப் பயன்படுத்துவதற்கு, மறுப்புத் தெரிவிப்பதற்கு நம்மிடத்தில் ஒன்றுமில்லை. நிச்சயமாய் இதுவும் (புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசம் (wine) போன்று, திராட்சப்பழரசமே (fruit of the vine) ஆகும்.

(புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசத்தை (wine) பயன்படுத்திடுவதனைக் கடமை உணர்வின் காரணமாக விரும்புகிறவர்களிடத்தில், இந்த உலர் திராட்சப்பானத்தை (Raisin-liquor) நாம் வற்புறுத்துவதில்லை; ஆதித் திருச்சபையினரிடமிருந்து நம்முடைய சூழ்நிலைகள், பழக்கங்கள், தட்பவெட்ப நிலைகள் முதலானவைகள் மிகவும் வேறுபடுகின்றது என்பதை அனைவருக்கும் நாம் நினைப்பூட்டுவதற்கு மாத்திரம் விரும்புகின்றோம்; மற்றும் பரிசுத்தவான்களில் சிலர் மாம்சத்தின் சுதந்தரிக்கப்பட்ட பெலவீனங்களை உடையவர்களாய் இருக்கின்றனர் என்றும், ஒருமுறை சுவைத்தல் என்பது மாபெரும் சோதனைக்கு ஏதுவாய் மீண்டும் தூண்டிவிடுகிறதாய் அமையும் என்றும் விசேஷமாய் அறிந்த நிலையில், நம்முடைய நாட்களிலுள்ள அநேக வெறியூட்டும் திராட்சரசங்களைக் (wines) கர்த்தருடைய இரத்தத்திற்கு அடையாளமாய் நாம் பயன்படுத்திடுவதற்கு அவர் சித்தமாய் இருப்பாரோ என்று நாம் ஐயப்படலாமோ. "ஒவ்வொருவரும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலை போடலாகாது என்று தீர்மானித்துக்கொள்ளுங்கள்" (உரோமர் 14:13). ஒருவேளை (புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசமானது மனமாற விரும்பப்படுகிறதெனில், லைட் வைனை (Light Wines: 12.5%-க்கு குறைவான மதுசாரம் கொண்ட திராட்சரசம்) தெரிவு செய்யுங்கள் அல்லது உலர் திராட்சரசத்துடன் சிறிதளவு திராட்ச ரசத்தை (wine) கலந்துகொள்ளுங்கள்.

நினைவுகூருதலின் ஆராதனையானது, மிகவும் எளிமையாய்க் காணப்பட வேண்டும்; அது பிரதானமாய் ஐக்கியத்திற்கான காலப்பகுதியாகும். அப்பம் மற்றும் திராட்சரசத்திற்கென்று சபையார் நடுவில் ஒரு மேஜையை ஏற்பாடு பண்ணிடுங்கள். ஒரு துதிப்பாடலைப் பாடின பிற்பாடு, சகோதரரில் ஒருவர் ஆராதனையின் நோக்கத்தினை, குறிப்பிட்ட சில வார்த்தைகளில் கூறிவிட்டு, இக்காரியம் தொடர்புடையதாக வேதவாக்கியங்களிலிருந்து சில வசனங்களை வாசித்திட வேண்டும். இன்னொருவர் நமது கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரமாகிய ஜீவ அப்பத்திற்காக ஸ்தோத்திரித்திட வேண்டும்; இதன் பின்னர்ப் புளிப்பில்லாத அப்பமானது (அல்லது வசதியாக இருக்குமானால் சோடா

ரொட்டியானது - soda biscuits) கலந்துகொள்ள வந்திருக்கும் அனைவரிடத்திலும் கொடுக்கப்படுவதாக. ஜீவ அப்பத்தைக்குறித்துக் கருத்துக்கள் குறிப்பிடுவதற்கு (அ) வேதாகம பாடங்களின் ஆராய்ச்சியில், தொகுதி-VI-இல் (Volume-VI), XI-ஆம் அத்தியாயத்தின் சாராம்சம் சொல்லப்படுவதற்கான வாய்ப்பு இப்பொழுது வழங்கப்படலாம். அடுத்ததாக "பாத்திரத்திற்காகவும்," அது அடையாளப்படுத்தும் விலையேறப்பெற்றதான இரத்தத்திற்காகவும் ஸ்தோத்திரத்துடன்கூடிய ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். "திராட்சப்பழரசமுள்ள" பாத்திரமானது பரிமாறப்படுவதாக. இப்பொழுது விலையேறப்பெற்ற இரத்தம்பற்றின கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்படலாம். ஆனால் இந்தக் கூடுகையில், கலந்தாய்வுகளானது தவிர்க்கப்படுவதாக. விசுவாசத்திற்காக உண்மையாய்ப் போராடுவது மற்றத் தருணங்களிலெல்லாம் எவ்வளவுதான் ஏற்றதாய்க் காணப்பட்டாலும், இது அப்படியான ஒரு தருணமல்ல. இது கர்த்தரும், நம்முடைய மீட்பரும், வந்திருக்கும் இராஜாவுமானவரிடத்தில் ஐக்கியம் மற்றும் உறவுக்/அந்நியோனியம் கொள்வதற்கானத் தருணமாகும். எவனாகிலும் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால், அவன் பேசட்டும்; மற்றவர்களோ நம்முடைய ஆசீர்வாதத்திற்கென ஆண்டவர் நியமித்த அவருடனான விசேஷித்த ஐக்கியத்திற்கான பரிசுத்தமான தருணங்களானது கெடாதபடிக்கு விவாதத்திலிருந்து விலகிக்கொள்வார்களாக.

நினைவுகூருதலை உண்மையான, வஞ்சகமற்ற இருதயங்களுடன் ஆசரிப்பவர்கள், மாபெரும் மற்றும் புத்துயிர் அளிக்கின்றதான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் இதற்காகவே ஆராதனையின் நடுவில், யாருமே சத்தமாய்ப் பேசாதபோது, அமைதியான தருணங்களைப் பெற்றிருப்பது நலமாயிருக்கும்; அதாவது ஐக்கியத்தினாலும் கடந்தகாலங்களிலும், தற்போதுமுள்ள அவரது அன்பினை உணர்ந்துகொள்ளுதலினாலும், மரணம்வரையிலுமாக அவரது உண்மையான பின்னடியார்களாக இருப்பதற்கெனப் பண்ணப்பட்டதான வாக்குறுதியினைப் புதுப்பித்துக்கொள்ளுதலினாலும், கடந்த வருடத்தில் எவ்வாறு அந்த வாக்குறுதியானது காப்பாற்றப்பட்டது (அ) மீறப்பட்டது என்று சிந்திப்பதினாலும், நமது கர்த்தரோடுகூட உடன்சுதந்திரர்களெனப் பரிசினைப் பெற்றுக்கொள்வதற்கென நாம் அழைக்கப்பட்டதான ஓட்டத்தில் பொறுமையோடுகூட ஓடிடுவதற்கு மீண்டும் தீர்மானிப்பதினாலும், அனைவருடைய இருதயங்களானது ஆண்டவருடன் மிகவும் நெருங்கிவர முடிகிற அமைதியான தருணங்களைப் பெற்றிருப்பது நலமாயிருக்கும்.

நம்முடைய பாடல் புஸ்தகத்திலுள்ள, 276-ஆம் துதிப்பாடலானது, நினைவுகூருதலை நிறைவு செய்வதற்கு அருமையாய்ப் பொருந்துகின்ற துதிப்பாடலாய்க் காணப்படுகின்றது. நமக்கொத்த விசுவாசத்தில் உலகமெங்கும் காணப்படும் சிலர் இதே மாபெரும் பலியை நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றனர் என்றும், அதே கிருபையான கர்த்தரை நினைவுகூருகின்றனர் என்றும், அதே மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களினால் தேற்றப்படுகின்றனர், ஊக்குவிக்கப்படுகின்றனர் என்றும், அதே கிருபையான இராஜாவினுடைய கிருபையினால், மாபெரும் பணிவிடைகள் புரிந்திடுவதற்கும், அவரது ஊழியத்திலும், அவரது ஜனங்களுக்கான ஊழியத்திலும் மாபெரும் பலிகளை ஏறெடுத்திடுவதற்கும் தீர்மானம் எடுக்கின்றனர் என்றும், அதே துதி, ஆராதனை பாடலினால் நிறைவு செய்கின்றனர் என்றும் நாம் உணர்கையிலும், நமது சந்தோஷம் பெருகுகின்றது.

"சிலுவை முன்தனிலே நாம் செலவழித்த
ஆசீர்வாதம் நிறைந்த தருணங்கள் இனிமையானதே;
பாவிகளுக்காக உயிர்த்தெழுந்த நண்பனிடமிருந்தே
ஜீவனையும், ஆரோக்கியத்தினையும், சமாதானத்தையும் பெற்றிருக்கின்றோமே."

"அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, புறப்பட்டுப்போனார்கள்" என்று முதலாம் இராப்போஜனம் குறித்து எழுதப்பட்டுள்ளது. நாமும் அவ்வாறே செய்வோமாக. ஒவ்வொருவனும் நிறைவான இருதயத்துடன் தனது வீடு திரும்புவானாக. பொதுவாய், வழக்கமாய்க் கூடுகைகளுக்குப்பின் சொல்லப்படும், அதாவது சொல்வது ஏற்றதாய்க் காணப்படுகின்றதான வாழ்த்துதல்களையும், வழக்கமாய் இடம்பெறும் அனைத்து விதமான கருத்துத் தெரிவித்தல்களையும், அபிப்பிராயம் தெரிவித்தல்களையும் இந்தத் தருணங்கள்போது தவிர்த்து விடுங்கள் என்று நாம் யோசனைக் கூறுகின்றோம். இப்படியாக ஆண்டவருடனான நமது ஐக்கியத்தினையும், அந்நியோன்யத்தையும்/உறவையும் நீட்டித்துக்கொள்ளலாம். அடுத்தநாள் முழுவதும் அவரைப் பின்தொடர்ந்துப் பார்த்துக்கொண்டிருங்கள். வஞ்சனையற்றவருக்கு எதிராக ஜனங்களுடைய கூச்சலைக் கவனியுங்கள். ஜனங்கள் எருசலேமின் குருமார் வகுப்பினரால் தூண்டப்படுவதைக் கவனியுங்கள். ஏரோதுக்கு முன்னிலையிலும், அவனது போர்ச்சேவகர்களின் முன்னிலையிலும் அவர் நிற்பதைப் பாருங்கள். அவர் கேலியாய் இராஜ வஸ்திரம் தரிப்பிக்கப்படுவதையும், முள்ளினாலான கிரீடம் தரிப்பிக்கப்படுவதையும், குட்டப்படுவதையும், உமிழப்படுவதையும் பாருங்கள்.

அவர் குற்றவாளியெனச் சிலுவையில் அறையப்படுவதையும், அவர் செய்திட்டதான மிகவும் கிருபையான கிரியைகளினாலேயே, அவர் பழித்துரைக்கப்படுவதையும், அதாவது "மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" என்று கூறிப் பழித்துரைக்கப்படுவதையும் பாருங்கள். அவரால் தம்மை இரட்சித்துக்கொண்டிருக்க முடியும் என்றும், அவர் வேண்டிக்கொண்டிருந்திருப்பாரானால், தம்மை விடுவிப்பதற்கும், தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கும், "பன்னிரண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதரை" பெற்றுக்கொண்டிருக்க முடியும் என்றும், தம்முடைய சத்துருக்களுக்காக, தம்மை பழித் தூற்றுபவர்களாகக் காணப்படுபவர்களுக்காக மரிப்பதற்குப்பதிலாக, அவர்களை அவரால் அழித்துப்போட்டிருக்க முடியும் என்றும், நமக்கான ஈடுபலி கிரயமென அவர் தம்மை மனமுவந்து கொடுத்தக் காரியத்திலேயே உயிர்த்தெழுதல் மற்றும் நித்திய ஜீவனுக்கான நமது நம்பிக்கை சார்ந்துள்ளது என்றும் நினைவுகூருவோமாக. நமக்காகவும், அனைவருக்காகவுமான அவரது அன்பை எண்ணிப்பார்க்கையில், அது சிலுவையின் நல்ல போர்ச் சேவகர்களென அதிகமதிகமாய்ச் சகித்துக்கொள்வதற்கு, அவரது பின்னடியார்களாகிய நம்மை நிச்சயமாய்ப் பலப்படுத்துகின்றதாய் இருக்கும். உண்மையாய்ச் சகிக்கப்படும் பட்சத்தில், மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகின்றதும், நமக்கான சோதனையாக மற்றும் சிட்சையாகக் காணப்படுவதற்கு இப்பொழுது அனுமதிக்கப்பட்டிருக்கின்றதுமான இலேசான உபத்திரவங்களின் கீழ், நாம் இளைப்புள்ளவர்களாய் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே, எப்பொழுதும் நினைத்துகொள்வோமாக.

## புரூக்லினில் நினைவுகூருதல் ஆசரிப்பு

வழக்கம்போல புரூக்லினிலுள்ள சபையார், "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" என்கிறதை ஆசரிப்பார்கள். எப்படி ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் சரி, எந்தச் சபைப் பிரிவில் அவர்கள் காணப்பட்டாலும் சரி அல்லது அனைத்திலிருந்து சுதந்திரமாய்க் காணப்பட்டாலும் சரி, இயேசுவின் மாபெரும் - பாவநிவாரண பலியில் விசுவாசமுள்ள பக்தியுள்ள விசுவாசிகள் அனைவரும் நம்மோடுகூடக் கூடிடுவதற்கும், இந்த நினைவுகூருதலில் பங்கெடுப்பதற்கும் அன்போடு அழைக்கப்படுகின்றனர். கர்த்தருடைய பந்தியானது, அவருடையவர்களாய்க் காணப்படும் அனைவருக்குமானதாகும்.

வியாதிப்பட்டிருக்கின்ற அல்லது முடமான நிலையிலுள்ள சகோதர, சகோதரிகள் புரூக்லின் டேபர்நேக்கலுக்கு (Brooklyn Tabernacle) அஞ்சல் அட்டை மூலம் விண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொண்டு, அடையாளச் சின்னங்களை அவர்களது வீடுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

*****

# நாட்கள் பொல்லாதவைகளானதால்...

*"ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்." (எபேசியர் 5:15, 16)*

இவ்வசனத்தில் இடம்பெறும் "கவனமாய்" என்ற வார்த்தைக்கான ஆங்கில வார்த்தை "Circumspect, Circum" என்ற வார்த்தையிலிருந்து வருகின்றது; இதன் அர்த்தமாவது விழிப்பாய் இருப்பதாகும். உண்மை கிறிஸ்தவனுடைய பாதை மிக நெருக்கமானதாகும்; அது சோதனைகளினாலும், படுகுழிகளினாலும், பொல்லாங்கனின் சூழ்ச்சிகளினாலும் வெகுவாய் நிறைந்துள்ளபடியினால், நமக்கு அசம்பாவிதங்கள் நடைபெறுவதற்கான மாபெரும் ஆபத்து உள்ளது. நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிகளையும் கவனமாய்ப் பார்ப்பதோடு மாத்திரமல்லாமல், நாம் ஞானமுள்ளவர்களாயும் இருக்க வேண்டும்; அதாவது பூமியிலுள்ள நமது சக சிருஷ்டிப்புக்களைக் காட்டிலும் ஞானமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்; அதாவது பரத்திலிருந்து வருகிற பரிசுத்தமும், சமாதானமும், அன்புள்ளதுமான ஞானமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; எனினும் முதலாவதாக நாம் கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைக்கும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் கடந்து சென்று கொண்டிருக்கும் பாடுகள், சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் குறித்து, கடிதங்கள் எங்களுக்கு வருவதால், முந்தைய காலங்களைக் காட்டிலும் அவர்களுடைய சோதனைகள் அநேகமாகவும், கடுமையாகவும் இருப்பதை நாம் உணர்கின்றோம். "கவனமாய் நடக்க" ஆவலுள்ள சோதனைக்குட்பட்டவர்களிடமிருந்து, ஜெப விண்ணப்பங்களும், கர்த்தருடைய வழி குறித்ததான ஆலோசனை வேண்டி கடிதங்களும் வருகின்றன. நம்மால் முடிந்தமட்டும் கர்த்தரோடு நடக்கத்தக்கதாக வழிகாட்டும் விதமாக அமையும் வேதவாக்கியங்களைச் சுட்டிக்காட்டி, மகிழ்ச்சியோடு இவர்களுக்குப் பதிலளிக்கின்றோம்.

"நாட்கள் பொல்லாதவைகளானதால்" நமது எதிராளியானவன் விசேஷமாகக் கிரியை செய்வதால், தற்காலத்தில் நினைவுகூரப்படுவதற்கும், கடைபிடிக்கப்படுவதற்கும் அவசியமானதும், எல்லாக் காலக்கட்டங்களிலும் அவசியமானதும், கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்திற்கும் பொருந்தக்கூடியதுமான சில பொதுவான கோட்பாடுகளை நாம் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம். யூத யுக அறுவடையின் போது காணப்பட்டது போன்று, சுவிசேஷ யுக அறுவடையின் போதும் காணப்பட்டது; மேலும் எதிர்ப்புகள் ஜெப ஆலயங்களிலும், வேதபாரகர் மற்றும் பரிசேயரிடமிருந்து வந்ததுமல்லாமல், வீட்டிற்குள்ளாகவும் எதிர்ப்புகள் காணப்பட்டது . . . பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலும், கணவன் மனைவிக்கு இடையிலும் . . . கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலும் ஏற்பட்டது. எதிராளியானவன் எந்த அளவுக்குப் பிரச்சனைகளை ஏற்படுத்த நாடுகின்றானோ, அவ்வளவாய் அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொருவரும் வார்த்தையிலோ, கிரியையிலோ தவறு செய்யாதபடிக்கு மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கக்கடவர்கள். நாட்கள் பொல்லாதவைகளானதால் . . . விசேஷித்த சோதனை மற்றும் பரீட்சையின் நாட்களாய் இருக்கிறபடியால் . . . கவனமாய் நடவுங்கள்.

## நம்முடைய அன்றாட ஜீவியத்திற்கான சில உதவிபுரியும் கோட்பாடுகள்

நாம் பரிந்துரைக்கும் கோட்பாடுகள் பின்வருமாறு:-

1. ஒவ்வொருவனும் தன்தன் காரியத்தைக் கவனிப்பதாக மனதில் முடிவெடுப்பானாக.

நாம் மற்றவருடைய காரியங்களில் தலையிடக்கூடாது என்று வேதவாக்கியங்கள் நமக்கு எச்சரிப்பூட்டுகின்றது. ஒவ்வொருவரும் வாழ்க்கையின் அனுபவங்கள் வாயிலாக இந்த அருமையான கோட்பாட்டைக் கற்றுக்கொண்டிருந்தாலும், வெகுசிலரே இக்கோட்பாட்டின்படி

கவனமாய் நடக்கின்றார்கள். நம்முடைய கரங்களையும், நேரங்களையும், வாயையும் ஆக்கிரமித்துக் கொள்ளத்தக்கதாக நம்மிடத்தில் போதுமான அளவு நம் சொந்த காரியங்களும், கர்த்தருடைய ஊழியங்களும் இல்லையெனில், நம்மில் ஏதோ தவறு உள்ளது; மேலும் அது சரி செய்து கொள்ளப்படத்தக்கதாகக் கவனமாய் ஜெபிக்கவும், கவனமாய்த் தெய்வீக வார்த்தைகளால் கற்றுக்கொள்ளப்படவும் வேண்டும்.

நமது பராமரிப்பின் கீழ் இருப்பவர்களின் நலனுக்கடுத்த விஷயங்களில் கவனமற்றவர்களாகவோ அல்லது நாம் பொறுப்பேற்றுள்ளவர்களின் விஷயத்தில் கவனமற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் இக்கோட்பாடு இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நமது பொறுப்பின் கீழ் உள்ளவர்களுக்கு நாம் சில காரியங்களைச் செய்யும்போது கூட, நாம் அவர்களின் உரிமைகளையும் மற்றும் மற்றவர்களின் உரிமைகளையும் கருத்தில் கொண்டவர்களாகவும், அதிலும் விசேஷமாக நமது உரிமைகளை நாம் மேலோங்க செய்யவிடாமல் கவனமாய் இருக்க வேண்டும். நம்முடைய சொந்த விஷயங்களில் நமக்கு முழுமையான நீதி கிடைக்காவிட்டாலும், மற்றவரின் விஷயத்தில் நம்முடைய கையாளுதல் நீதியாய்க் காணப்பட வேண்டும், இரக்கம் காட்டப்பட வேண்டும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிட வேண்டாம்.

2. நாம் நம்மிடத்திலும், நம்முடைய பெலவீனத்திலும் பொறுமையாய் இருப்பதைக்காட்டிலும், மற்றவரிடத்திலும், அவர்களுடைய குற்றங்குறைகளைக் காணும்போதும் மிகுந்த பொறுமையுடன் காணப்பட வேண்டும்.

விழுகையின் காரணமாக முழு உலகமும் சரீர பிரகாரமாகவும், ஒழுக்கரீதியிலும், மனரீதியிலும் ஆரோக்கியமற்றவர்கள் என்பதை நாம் நினைவுகூருகையில், அவர்களுடைய பெலவீனங்களுக்காக நாம் அனுதாபம் கொள்ளவேண்டும். கர்த்தர் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தின் புண்ணியத்தினால் நமது கறைகளை, கிருபையுடன் மறைக்கச் சித்தமுள்ளவராய் இருக்கையில், நம்மைக் காட்டிலும் மற்றவர்களுடைய பெலவீனங்கள் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தாலும் நாம் அவர்களிடத்தில் அனுதாபமும், உருக்கமான இரக்கமுமே கொள்ளவேண்டும். இக்கோட்பாடு விசேஷமாக உங்கள் குழந்தைகளுக்குப் பொருந்தும். உங்கள் பிள்ளைகளிடத்தில் காணப்படும் பெலவீனங்கள், உங்களிடத்திலிருந்து அல்லது உங்கள் வாயிலாகவே அவர்களுக்குக் கொஞ்சம் வந்துள்ளதால், அவர்களுடைய தப்பிதங்களை கையாளும்போது, நீங்கள் உங்கள் சொந்த தவறுகளை எவ்வாறு கையாளுவீர்களோ, அப்படியே அவர்களிடத்திலும் நீதியாய்க் கையாள வேண்டும், . . . அவர்களை நீதியின்படி சரிசெய்ய உண்மையுடனும், கண்டிப்புடனும் கையாள வேண்டும், அதேசமயம் இதை அனுதாபத்துடனும், இரக்கத்துடனும், அன்புடனும் செய்யவேண்டும்.

3. முன்கோபியாகவும், எளிதில் சினம்கொள்கிறவர்களாயும் இராதேயுங்கள்.

மற்றவர்களுடைய வார்த்தைகளையும், செயல்பாடுகளையும் இரக்கத்துடனும், பரந்த மனப்பான்மையுடனும் கண்ணோக்கம் கொள்ளுங்கள். அற்ப விஷயங்கள் அல்லது சிறு எதிர்த்தாக்குதல்கள் கண்டுகொள்ளப்படாமல் விடப்படலாம், அதாவது அன்பு மற்றும் பெருந்தன்மையின் சால்வையினால் மறைத்து மூடப்படலாம். கடுமையான குற்றங்கள் கூட, வேண்டுமென்றே செய்யப்படாததுபோல் கருதப்பட்டு, கோபத்தைத் தூண்டாதவாறு அன்பான வார்த்தைகளினால் விசாரிக்கப்பட வேண்டும், அதாவது கிருபை பொருந்தின வார்த்தைகளினால் விசாரிக்கப்பட வேண்டும். இப்படியாகக் குற்றமாகக் கருதப்பட்ட அநேக சந்தர்ப்பங்களில், குற்றம் இல்லை என்றும் நிரூபிக்கப்பட்டும் உள்ளது.

இக்கோட்பாடு, "கெட்ட சம்சயங்களில்" ஈடுபட வேண்டாம் என்ற வேதவாக்கியங்களில் அடங்குகின்றது . . . மற்றவர்களுடைய வார்த்தைகள் மற்றும் கிரியைகளுக்குப் பின்னாக தவறான/பொல்லாத நோக்கங்கள் இருப்பதாக நாம் கற்பனை செய்யக்கூடாது. கெட்ட சம்சயங்கள் என்பது நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு எதிரானதாகவும், தேவபக்திக்கு எதிரானதாகவும் இருக்கின்றது என அப்போஸ்தலர் பட்டியலிடுகின்றார். கெட்ட சம்சயங்கள் என்பது பொறாமை மற்றும் சண்டையின் ஆவிக்கு ஒத்ததாக இருக்கின்றது. இது மாம்சம் மற்றும் பிசாசின் கிரியையாய் இருக்கின்றது. (1 தீமோத்தேயு 6:3-5; கலாத்தியர் 5:19-21).

## ஆவியின் பிரமாணமாகிய அன்பு

இதற்கு எதிர்மறையான விஷயங்களையும் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளார், அதாவது தேவனுடைய ஜனங்களை ஜெநிப்பித்துள்ள அன்பின் ஆவியினுடைய அம்சங்கள் குறித்தும் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளார். இந்த அன்பின் ஆவியைக் கர்த்தருடைய ஜனங்கள் நாள்தோறும் விருத்திச் செய்ய வேண்டும். இவைகள் அவர்களுக்குள் வளருமாயின், இது அவர்கள் ஜெயம்கொள்கிறவர்களாய் இருப்பதற்கான பிரதான நிரூபணங்களாகும். "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன். இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது." (1 கொரிந்தியர் 13)

இத்தகைய அன்பின் மனப்பான்மையினைப் பெற்றிருப்பவர்கள் மீது, தீமையானவர்கள் ஆதிக்கம் செலுத்திடுவார்களே என்று வலியுறுத்தப்படலாம். இந்த அன்பின் ஆவியைப் பெற்றிருப்பவர்கள் மென்மையானவர்களாகவோ அல்லது மழுங்கினவர்களாகவோ இருக்க மாட்டார்கள் என்று நாம் பதில் அளிக்கின்றோம்; இந்த அளவிலான அன்பை வளர்ப்பதில் அவர்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களானது, அவர்களை வளர்த்திற்று, மேலும் "கர்த்தருக்குப் பயப்படுதலில் அவருக்கு உகந்த வாசனை உடையவர்களாக்கிற்று". அன்புடையவர்கள் - மறுக்கமுடியாத சான்றுகளினால் வலுக்கட்டாயமாக தீமை ஒருவரிடத்தில் இருக்கின்றது என்று ஒப்புக்கொள்ளவேண்டிய நிலையில் காணப்படும்போது தவிர, மற்றபடி குற்றத்தைச் சாற்றுவதை இவர்கள் தவிர்க்கின்றபோதிலும், தீமை தலைத்தூக்குவதைக் கண்ட மாத்திரத்திலேயே ஜாக்கிரதையாய் இருப்பார்கள்.

ஆனால் நாம் நம்மையும் தெரியாமல் ஒரு குற்றமற்ற நபர் மீது குற்றம் சுமத்தாதபடிக்குப் பெரும்பாலும் (பொறுமையாய்ச் சகித்து) சில சிறு (நற்பெயர் கெடுதல் போன்றதான) இழப்புகளை அனுபவிப்பதும், துணிந்து சில இழப்புகளையும் நீங்கள் ஏற்றுக்கொள்வதும் நலமாயிருக்கும். மேலும், இந்தக் கர்த்தருடைய ஆலோசனையின்படி செயல்பட்டவர்களுக்கு உண்டான எவ்விதமான இழப்புகளையும் ஈடுசெய்ய கர்த்தர் மிகுந்த வல்லமையுள்ளவராக இருக்கின்றார்.

தம்மை அன்புகூருபவர்களுக்கு இந்த அனைத்து அனுபவங்களையும் நன்மைக்கு ஏதுவாக மாற்ற அவர் வல்லமை கொண்டவராகவும், சித்தமுள்ளவராகவும் இருக்கின்றார். "நான் கட்டளையிட்டதை நீங்கள் செய்வீர்களானால், என் சீஷர்களாய் இருப்பீர்கள்" என்று அவர் கூறுவதின் மூலம் தம்முடைய ஏற்பாட்டில் பலிக்கு முன் கீழ்ப்படிதலை வைக்கின்றார்.

ஒருவன் மற்ற விஷயங்களில் எவ்வளவுதான் கவனமுள்ளவனாய்க் காணப்பட்டாலும், "தீமை பேசுதலைக்" குறித்த கர்த்தருடைய இந்தக் கட்டளையை அசட்டை பண்ணுவானானால், அவன் தானே சிக்கிக்கொள்வதற்கு ஏதுவாக தனக்கு வலையைப் பின்னுகிறவனாக இருக்கின்றான்; ஏனெனில் எந்த இருதயம் உடன்சிருஷ்டியின் மீது சந்தேகம் மற்றும் குற்றப்பார்வை கொண்டுள்ளதோ, அந்த இருயதம் தேவனையே சந்தேகிக்கும் அளவு கொஞ்சம் தயாராகியுள்ளது. கசப்பின் ஆவி என்பது கர்த்தருடைய ஆவிக்கும், அவருடைய அன்பின்

ஆவிக்கும் எதிராக யுத்தம் பண்ணுகிறதாய் உள்ளது. இரண்டில் ஏதோ ஒன்று ஜெயம்கொள்ளும். தவறான ஆவி வெளியேற்றப்பட வேண்டும், இல்லையேல் அது புதுச்சிருஷ்டியைத் தீட்டுப்படுத்தி அவனை "புறம்பாக்கப்பட்டவனாக்கி விடும்." மாறாக ஒருவேளை புதுச்சிருஷ்டி ஜெயம்கொண்டால், அதாவது தீமைபேசுதல் ஜெயம்கொள்ளப்பட்டால் தற்கால போராட்டங்கள், குழப்பங்கள், இடர்பாடுகளுக்கு எதிரான யுத்தத்தில், பாதி யுத்தம் முடிவு பெற்றதாகிவிடும். அனுமானங்கள் இருதயத்திலிருந்து எழும்புகின்றது, அது ஒன்றில் நன்மையான வார்த்தைகள், கிரியைகளுக்கு அல்லது தீமையான வார்த்தைகள், கிரியைகளுக்கு நேராக வழிநடத்துகின்றது.

4. நீங்கள் தீமையாய்ப் பேசப்பட்டால், உங்களைக் குற்றமற்றவர்களாகக் காண்பித்துக்கொள்ளத்தக்கதாக வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ நீங்கள் விளக்கலாம், ஆனால் இதற்கு மேலாக செய்வதைத் தவிர்த்துவிடுங்கள்.

ஒருவேளை நீங்களும் பதிலுக்குத் தீமைபேசினால் தவறுசெய்கிறவர்களாகிவிடுவீர்கள். எந்த மனுஷனும் தீமைக்குத் தீமை செய்யாதிருக்கக்கடவன் . . . ஒருவேளை உங்கள் அயலார் பேசினது தவறானதாய் இருந்து, நீங்கள் பேசப்போவது உண்மையாய் இருந்தாலும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். இதை, உங்கள்மேல் சுமத்தப்பட்டக் குற்றத்திற்கு எதிராக விளக்கம் கொடுக்கும்போது நினைவில் கொள்ளுங்கள், அதாவது உங்களை குற்றம் சாட்டுபவர் மீது எதிர்குற்றச்சாட்டுகளைச் சுமத்த முற்படாதீர்கள்; ஏனெனில் நீங்கள் அப்படிச் செய்வீர்களானால், நீங்களும் தீமை பேசுகிறவராகிவிடுவீர்கள்.

## பொன்னான சட்டம்

இது வேதவாக்கியங்களின் அடிப்படையிலான சட்டமாகும். மற்றவர்கள் நமக்குச் செய்ததுபோல் அல்ல, மாறாக மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என நாம் விரும்புகின்றோமோ/கருதுகின்றோமோ, அதைத்தான் நாமும் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும். நமக்குச் செய்யப்பட்ட தவறுகளானது, நாம் செய்யும் தப்பிதங்களை ஒருபோதும் நியாயப்படுத்தப் போவதில்லை. "நன்மை வரும்படி தீமை செய்யுங்கள்" என்பது போன்றதான சாத்தானின் வஞ்சனைகளுக்குத் தேவனுடைய உண்மையான பிள்ளைகள் இடம் கொடுக்கக்கூடாது. தூஷிக்கிறவர்களின் பொய்யான மற்றும் தவறான குற்றச்சாட்டுகள் தவறு என்று நாம் விவரித்துக் காட்ட எவ்வித வேதவாக்கியங்களும் தடைவிதிக்கவில்லை என்றாலும் . . . ஒருவேளை ஒவ்வொரு எதிரிடையான பொல்லாத குற்றச்சாட்டுகளுக்கும் எதிராக போராடுவதில் நாம் சாத்தானையும், வஞ்சிக்கப்பட்ட அவனுடைய அநீதியான ஊழியர்களையும் பின்பற்றுகிறவர்களாக இருக்கும் பட்சத்தில், நாம் இவ்வேலையில் அதிகம் மும்மூரமாய் (busy) இருக்கும் சூழ்நிலைகள் ஏற்பட்டிருப்பதை அனுபவங்கள் நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கும். ஒருவேளை நாம் இவ்வேலையைச் செய்ய விருப்பமுள்ளவர்களாய் இருப்பதைச் சாத்தான் கண்டானானால், மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் நற்செய்தியை நாம் அறிவிப்பதற்கு, நமக்குப் போதுமான நேரம் இல்லாமல் போகத்தக்கதாக, ஒவ்வொரு குற்றச்சாட்டுகளுக்கு எதிராக போராடுவதில் நம்மை அதிகம் மும்மூரம் அடைய செய்திடுவான், பின்னர்ச் சாத்தான் ஜெயம்கொண்டவனாகவும், நாம் தோற்றவர்களாகவும் ஆகிவிடுவோம்.

மாறாக நம்முடைய பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக ஓடும் ஓட்டத்திற்கான அழைப்பிற்கு இசைவாக, நாம் கீழ்ப்படிதலுடன் அவருடைய பாதங்களில் சகலவற்றையும் சமர்ப்பித்த பலியின் ஒரு பாகமாக, நம்முடைய நற்பெயரையும் கர்த்தரிடத்தில் சமர்ப்பிப்போமாக. நம்முடைய காரியங்களுக்காகப் போராடுவதின் மூலம், இராஜாவின் வேலையைப் புறக்கணிக்க மாட்டோம் என்று நாம் தீர்மானித்ததின் காரணமாக, நாம் சில நற்பெயர்களை இழந்தோமானால், நாம் கிறிஸ்துவுக்காக பாடுகள் சகித்தவர்களாகக் கருதப்படுவோம்; மேலும் இப்படிச் செய்யும் பட்சத்தில், பரலோகத்தில் நம்முடைய பலன் மிகுதியாகவும் இருக்கும். யுத்தம் முடிவடையும்போது, ஜெயம்கொண்டவர்கள் முடிசூட்டப்படுவார்கள்.

ஒவ்வொரு கர்த்தருடைய ஜனங்களும் தாங்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் முடிந்தமட்டும் கவனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். வெளிச்சத்தைப் பிரகாசிப்பதில் எந்த அளவு உண்மையும், வைராக்கியமும் காணப்படுகின்றதோ, அவ்வளவாய் நம்முடைய ஒவ்வொரு வார்த்தையும், கிரியையும் தீயதாய்க் காண்பிக்கத்தக்கதாக திரித்துக் காட்ட நாடுபவனாகிய நம்முடைய மாபெரும் எதிராளியானவனின் தூஷணமான எதிர்ப்புகள் காணப்படும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அவன் திரித்துப் பேசுவதற்கான காரணம், சகோதரரைக்

குற்றம்சாட்டுகிறவனாகிய அவனால் உண்மையான எவ்வித குற்றச்சாட்டுகளையும் காண முடியாததாலேயே ஆகும். மேலும் அவன் பிரதான ஊழியக்காரனாகிய நமது கர்த்தருக்கு விரோதமாக வெறி கொண்டது போல, சத்தியத்தின் எளிமையான ஊழியர்களுக்கும் எதிராக வெறி கொண்டுள்ளான். நமது கர்த்தர் நியாயப்பிரமாணத்தை மீறினார் என்று சிலுவையில் அறையப்பட்டதையும், இவைகள் ஆலயத்தின் பிரதான வகுப்பார்முன்பு நடந்தது என்பதையும், அவருடைய சொந்த சீஷர்களுள், ஒருவரால் காட்டிக் கொடுக்கப்பட்டார் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

எதிராளியானவனால் தாக்கப்படும்போது . . . அவனுடைய பிரதிநிதிகள் யாராயினும், அவர்களுடைய ஏவுகணைகள் எதுவாயிருந்தாலும், அத்தருணங்களில், "நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" (எபிரெயர் 12:3). ஒருவேளை நாம் உண்மையாய்ச் சகித்தோமானால் . . . அவனால் (சாத்தான்) தீங்கு செய்ய முடியாது, மாறாக கர்த்தருடைய பார்வையில் நம்முடைய நற்பெயர் பெருக மாத்திரமே செய்கின்றது மற்றும் தேவன் தமது நோக்கம் கருதி நன்மைக்கு ஏதுவாக மாற்ற முடியாத அளவு அவன் எவ்வித வெளித்தோற்றமான தீங்கையும் கூடச்செய்ய முடியாது . . . சிலசமயம் கோதுமையிலிருந்து களையையும், பதரையும் சலித்தெடுப்பதுக்கூட அந்த நன்மையாக இருக்கும்.

5. தீமை பேசுதல், தூஷணங்கள் மற்றும் பழிப்பேச்சுகள், தேவனுடைய ஜனங்களிடம் காணப்படக்கூடாது என்று கண்டிப்பாக தடைப்பண்ணப்பட்டுள்ளது.

ஒருவேளை தீமைபேச்சுகள் உண்மையாக இருப்பினும், இவைகள் அன்பின் ஆவிக்கு முற்றிலும் எதிர்மாறானதாகும். பழிப்பேச்சுகள் பேசும் தன்மையைத் தடுக்கும்விதமாக வேதவாக்கியங்களானது, மத்தேயு 18:15-17-ஆம் வசனங்களில் மனஸ்தாபங்களைச் சரிப்படுத்திக் கொள்வதற்கான ஒரே வழிமுறையினைச் மிகக் கவனமாகச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களும்கூட இந்தத் தெய்வீகக் கோட்பாட்டைக் குறித்து அறியாமையிலேயே காணப்படுகின்றார்கள், ஆகவே கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப்பண்ணிக் கொள்கின்றவர்கள் பெரும்பாலும் (சதா பழித்தூற்றுகிறவராக) புரளி பரப்புபவராகக் காணப்படுகின்றனர். இக்கோட்பாடானது, நமது கர்த்தரால் கொடுக்கப்பட்ட சில விசேஷித்த கட்டளைகளில் ஒன்றாகும் மற்றும் இக்கோட்பாடானது "நான் கட்டளையிடும் யாவற்றையும் செய்வீர்களானால், நீங்கள் என் சீஷர்களாய் இருப்பீர்கள்" என்ற வாக்கியத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கையில், இது மீறப்படும் காரியமானது, அநேகர் இன்னமும் சீஷத்துவத்தில் முன்னேறவில்லை என்பதை நிரூபித்துக் காட்டுகின்றது.

## கர்த்தருடைய வழியைப் பின்பற்றுங்கள்

இக்கோட்பாட்டைக் கொஞ்சம் கவனமாகப் பார்ப்போம். ஒருவேளை இக்கோட்பாடு பின்பற்றப்பட்டால், தீமை பேச்சுகள், பழிப்பேச்சுகள், வதந்திகள்/வீண்பேச்சுகள் தவிர்க்கப்படலாம்.

முதலாவதாகச் சம்பந்தப்பட்டவர்கள் மாத்திரம் கூடிப்பேச வேண்டும், அதாவது தான் பாதிக்கப்பட்டுள்ளதாக எண்ணி குற்றம் சாட்டுகிறவனுடைய வெளிப்படையான பேச்சு வார்த்தையாகும்; இந்த நபரை நாம் "A" என்ற பெயரில் அழைப்போம். குற்றம் சாட்டுபவர்மேல் தனக்குத் தீமையான எண்ணம் இல்லை என்று எண்ணுபவரை "B" என்ற பெயரில் அழைப்போம். இவர்கள் இருவரும் தங்கள், தங்கள் நடத்தைச் சரியாக இருக்கின்றது என்று எண்ணி, காரியத்தைக் குறித்து விவாதம் பண்ணி, இருவரும் ஒரே கண்ணோட்டத்தில் வரக்கூடுமோ என்று பார்ப்பதற்கென்று சகோதரர்களாகக் கூடிவந்துள்ளனர். ஒருவேளை அவர்கள் ஒன்றுபட்டால், எல்லாம் நலமாய் முடியும்; பிரச்சனையும் முடிவுக்கு வந்துவிடும்; சமாதானம் நிலவும்; அச்சுறுத்தும் பிரிவினை தடுக்கப்பட்டுவிடும்; மேலும் ஒருவரும் ஞானி என்று சொல்வதற்கில்லை.

ஒருவேளை இருவரும் உடன்பாட்டிற்குள் வரவில்லையெனில், "A" தனது கூற்றை வெளியே கூறி, பழித்தூற்ற ஆரம்பிக்கக் கூடாது. தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான

நண்பர்களிடம் கூடச் சொல்லக் கூடாது. ஒருவேளை அவன் காரியத்தை வெளியே கூறி, பின்பு "எதுவும் வெளியே சொல்ல வேண்டாம்; விசேஷமாக நான் உன்னிடம் கூறினேன் என்று சொல்ல வேண்டாம்" என்று கூறலாமா? . . . இல்லை, கூடாது . . . காரியம் இன்னமும் "உனக்கும் அவனுக்கும் (A மற்றும் B) இடையில்தான்" உள்ளது. ஒருவேளை "A" இவ்விஷயத்தை முக்கியம் என்று கருதி, இன்னும் பிரயாசங்கள் எடுக்க விரும்பினால், அவனுக்கு ஒரு வழி உள்ளது . . . அதாவது, தன்னோடு கூட "B"-ஐ சந்திக்க இரண்டு அல்லது மூன்று நபரைக் கூட்டிக்கொண்டு சென்று, அவர்கள் இரண்டு பக்கத்தின் காரியங்களையும் கேட்டு, சரி மற்றும் தவறு என்ன என்பது பற்றின தங்களுடைய பகுத்தறிதலைத் தெரிவிப்பதேயாகும். இந்த இரண்டு அல்லது மூன்று பேர் எப்படிப்பட்டவர்கள் மத்தியில் இருந்து தெரிந்துகொள்ளப்பட வேண்டுமெனில் . . .

(1) சாட்சியாளர்கள் ஒருவேளை தற்செயலாக "B"-க்கு ஆதரவாக தீர்வு கொடுத்தாலும், சாட்சியாளர்களின் கிறிஸ்தவ குணலட்சணங்கள் மற்றும் அறிவுநுட்பம் மற்றும் தெளிந்த புத்தியின் ஆவி மீது "A"-கு நம்பிக்கை இருக்க வேண்டும்; (2) சாட்சியாளர்கள் ஒருவேளை தற்செயலாக "A"-கு ஆதரவாக தீர்வு கொடுத்தாலும், சாட்சியாளர்களின் கிறிஸ்தவ குணலட்சணங்கள் மற்றும் அறிவுநுட்பம் மற்றும் தெளிந்த புத்தியின் ஆவி மீது "B" -கு நம்பிக்கை இருக்க வேண்டும்.

தான் தெரிந்துகொள்ள விரும்பும் இரண்டு அல்லது மூன்று சாட்சியாளர்கள் உள்ளடங்கியுள்ள நண்பர்களிடம் "A" காரியங்களைச் சற்று அதிகமாகவே கலந்துபேசுவது, அதாவது அவர்கள் (மறுபக்கம் செவிசாய்க்காமல்) தனக்கே ஆதரவு அளிக்கத்தக்கதாகவும், சாட்சியாளர்கள் தவறான அபிப்பிராயத்துடனும், "B"-கு எதிராக ஏற்கனவே மனதில் நிர்ணயம் பண்ணிக்கொண்டு, பேச்சுவார்த்தைக்குச் செல்லத்தக்கதாகவும் "A" பேசுவது என்பது போதகரின் கட்டளையினுடைய ஆவிக்கும், நீதியின் ஆவிக்கும் முற்றிலும் எதிர்மாறானதாகும். இரண்டு பேர் நடுவில் உள்ள பிரச்சனைகளை, அவர்கள் இருவரின் முன்னிலையிலேயே கேட்பதற்கு, இரண்டு அல்லது மூன்று சாட்சியாளர்கள் உள்ளே கொண்டுவரப்படுவது வரையிலும், காரியம் A மற்றும் B இடையில் மாத்திரமே இருக்க வேண்டும்.

## உதவுவதற்கே ஒழிய காயப்படுத்துவதற்கல்ல

"சகோதரருடைய" தீர்ப்பு "B"-க்கு எதிராக இருக்குமாயின், அவர்களுக்கு "B" செவிசாய்க்க வேண்டும், மேலும் "B"-இன் மனஉணர்வு ஒத்துப்போக முடியாத அளவு (அவர்களின் தீர்ப்பில்) ஏதேனும் கோட்பாடுகள் காணப்பட்டால் தவிர, மற்றபடி "B" சாட்சியாளர்களின் கண்ணோட்டத்தை நீதியானதாகவும், நியாயமானதாகவும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒருவேளை "சகோதரர்கள்", "B"-இன் கண்ணோட்டத்திலிருந்து பார்ப்பார்களானால், "A" தான் தவறு செய்ததை ஒப்புக்கொள்ள வேண்டும்; மேலும், மனசாட்சி தடைபண்ணினால் தவிர மற்றபடி, சூழ்நிலையை ஏற்றுக்கொண்டு, "B"-இடமும் மற்றும் சகோதரர்களிடமும், தன்னுடைய குறைவான மதிப்பீட்டினால் உண்டுபண்ணின தொல்லைக்காக மன்னிப்பைத் தெரிவிக்க வேண்டும். ஆனால் இப்பேச்சுவார்த்தையில் இடம்பெற்ற எவரும், "வெளிவராத" விதத்திலும்கூட மற்றவர்களிடம் காரியங்களைக் கூறி பழித்தூற்றுகிறவனாக மாறக்கூடாது.

ஒருவேளை தீர்ப்பானது "A"-கு எதிராக வழங்கப்பட்டால், ஒருவேளை அவர் இதினிமித்தம் காயமடைந்ததாகவும், சரியில்லாத சாட்சியாளர்கள் தெரிந்து கொள்ளப்பட்டக் காரணத்தின் நிமித்தம் தனக்கு நீதி கிடைக்கவில்லை என்பதாகவும் எண்ணினார் என்றால், "A" (நமது கர்த்தருடைய இக்கட்டளைக்கு மீறாத விதத்தில்) வேறு (சாட்சியாளர்களை) ஆலோசகர்களை அழைத்து, முன்பு செய்த பிரகாரம் செயல்படுத்தலாம். இவர்களுடைய தீர்ப்பும் ஒருவேளை "A"-கு எதிராகவே காணப்பட்டால் அல்லது எல்லோரும் "B"-கு ஆதரவு கொடுத்துவிடுவார்கள் என்ற அச்சத்தில் "A" யாருடைய தீர்ப்பின் மீதும் நம்பிக்கை வைக்க முடியாத நிலையில் காணப்பட்டாரானால், "A" தன்னிடத்தில் இருக்கும் பிரச்சனை இறுமாப்பு என்று உணர்ந்து, உபவாசித்து, ஜெபம் பண்ணி, நீதியின் கோட்பாடுகள் குறித்துக் கவனமாய்க் கற்க வேண்டும். ஆனால் காரியங்களை வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ, சபைக்கோ அல்லது வேறு எவரிடமோ கூறுவதற்கு இப்பொழுதும் "A"-கு அதிகாரம் இல்லை. அப்படி ஒருவேளை "A" செயல்பட்டால், அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியாததையும், சத்தியம்

மற்றும் அன்பின் ஆவிக்கு விரோதமான தீயதும், மாம்சீகமானதுமான ஆவி அவரிடம் இருப்பதையும் இச்செயல்பாடு சுட்டிக்காட்டுகின்றது.

ஒருவேளை சாட்சியாளர்கள் "B"-கு எதிராக கொஞ்சம் விஷயத்தில் எதிர்ப்பும், "A"-கு கொஞ்சம் விஷயத்தில் ஆதரவும் தெரிவித்தார்களானால், சகோதரராகிய "A" மற்றும் "B"-யும்கூடக் காரியங்களை அவ்விதத்திலேயே பார்த்து, சமாதானத்துடன் காரியங்களை ஒழுங்குபடுத்த நாடவேண்டும். இப்படியான சூழ்நிலைகளில் மற்றவருடைய காரியங்களை வெளியே சொல்வதற்கு இடம் இருக்காது.

ஒருவேளை சாட்சியாளர்கள் முற்றிலும் "B"-கு எதிராகவும், "A"-கு முற்றிலும் சாதகமாகவும் தீர்மானித்தும், அவர்களுக்கு "B" செவிசாய்க்காமலோ அல்லது தவறைச் சரிசெய்து கொள்ளாமலோ அல்லது "A"-கு காயம் விளைவிப்பதை நிறுத்தாமலோ காணப்பட்டாலும்கூட "A"-கு "B"-ஐ குறித்து வெளியே பழித்தூற்ற அதிகாரம் இல்லை, மேலும் சாட்சியாளர்களாகிய சகோதரர்களுக்குக்கூட "B"-ஐ குறித்துப் பழிதூற்ற அதிகாரமில்லை. "A" இன்னும் பிரயாசம் எடுக்க விரும்பினால், அவருக்கு ஒரே ஒரு வழி மாத்திரம் உள்ளது . . . "A"-யும், குழுவினரும் சேர்ந்து காரியத்தை சபைக்கு முன்வைப்பதே அவ்வழியாகும். சபையார், இருவரின் சார்பில் உள்ள விஷயங்களைக் கேட்க வேண்டும் . . . பின்னர் "A" அல்லது "B" இவர்களில் யாரேனும் சபையாரின் ஆலோசனையை ஏற்க மறுப்பாரானால், சபையார் அனைவராலும் அச்சகோதரன் புறம்பாக்கப்பட்டவனாக - சபையார் அல்லாதவனாகக் கருதப்பட வேண்டும்; ஐக்கியம் அவனிடம் வைத்துக்கொள்ளாமல் இருக்க வேண்டும்; அச்சகோதரன் மனம்வருந்தி, சீர்ப்பொருந்தும் வரை மரித்துப் போனவனாகக் கருதப்பட வேண்டும்.

ஓர் அங்கத்தினுடைய பொறுப்புகள் மற்றவரால் செய்ய முடியாது . . . ஒவ்வொருவரும் கர்த்தருடைய கட்டளையின்படி தனக்கானவைகளைச் செய்துகொள்ள வேண்டும். ஒருவேளை கர்த்தருடைய கட்டளை மீறப்பட்டு, பழித்தூற்றும் காரியங்கள் நடந்தேறி, சபையாரை உபத்திரவத்திற்குள்ளாக்கி, சபை முழுவதையும் அவமானப்படுத்துகிறதாய் இருக்கும் பட்சத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி, அப்பிரச்சனையைக் கையாள வேண்டும். இவர்கள் பிரச்சனைகள் என்ன என்று விசாரிப்பதோடல்லாமல், அவதூற்றைப் பரப்பின உண்மையான கிளர்ச்சியாளர்களும் யாரென்று விசாரித்து, அவர்களைக் கடிந்து கொள்ளவும் வேண்டும்.

ஆனால், அனைவரும் ஏதோ விஷயங்களில் பூரணமற்றவர்கள் என்பதை நினைவுகூர்ந்து, அன்புடன் சகல கடிந்துகொள்ளுதலும் காணப்பட வேண்டும். எல்லா விஷயங்களிலும் நோக்கம், திருத்தம் செய்வதாக இருக்க வேண்டுமே ஒழிய, தண்டனை வழங்க வேண்டும் என்பதாக இருக்கக்கூடாது. தண்டனை வழங்குவதற்கான அதிகாரம் கர்த்தருக்கு மாத்திரம் உரியதாகும். மனம் திருந்தாத அந்தச் சகோதரனோடு ஒரு குறிப்பிட்ட காலம்வரைச் சபையார் ஐக்கியம் கொள்ளக்கூடாது மற்றும் மனம்திரும்புதல் பிரத்தியட்சம் ஆகும்போது, மீண்டும் சபையார் ஐக்கியம் கொள்வதைத் தொடர வேண்டும். நாம் அன்பு காண்பிப்பதையும், சந்தோஷம் மற்றும் சமாதானம் ஏற்படுத்துவதையுமே கர்த்தர் விரும்புகின்றார். மேலும் இவற்றை நாமும் அவருடைய சீஷர்களாக இருந்து செய்ய வேண்டும். வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டால் நிச்சயமாக பாதிப்பு ஏற்படும்.

இவ்விதமாக முதலில் மறைமுகமாகப் பழித்தூற்றும் பாவமாகக் காணப்பட்டு, பின்னர் மாம்சம் மற்றும் பிசாசின் கீழ்த்தரமான கிரியையாக மாறி சத்தியத்திற்குள்ளான வளர்ச்சியையும், அன்பின் ஆவியையும் தடுத்துப்போடுகிறதான காரியங்களிலிருந்து கர்த்தர் தமது உண்மையான சீஷர்களைப் பாதுகாக்கின்றார். மேலும் யாரொருவர் பழிப்பேசுபவர்களின் பேச்சுவார்த்தைகளைக் கேட்டு, பழித்தூற்றுபவர்களின் தவறான போக்கை உற்சாகமூட்டுகின்றாரோ, அவரும் அவர்களின் பொல்லாத செயல்பாடுகளுக்குப் பங்காளியாவார் என்பதையும்கூட நாம் தெரிவிக்கின்றோம்; மேலும் கர்த்தருடைய கட்டளையை மீறின காரியத்திலும் அவர்களோடு உடன்பங்காளியாவார் என்பதையும் தெரிவிக்கின்றோம். தேவனுடைய உண்மையான ஜனங்கள் பழித்தூற்றுபவர்களின் பழிப்பேச்சைக் கேட்க மறுத்து, அவர்களுக்குக் கர்த்தருடைய வார்த்தையையும், வேதம் அங்கீகரிக்கும் ஒரே வழிமுறையையும் சுட்டிக்காண்பிக்க வேண்டும். "தேவனைப் பார்க்கிலும் நாம் ஞானவான்களோ?" . . . நாம் நம்முடைய சொந்த கணிப்புகளை நம்ப முடியாது என்றும், உடனே மேய்ப்பனின் சத்தத்தை நம்பிக்கையுடன் பின்தொடர்வதே பாதுகாப்பானது என்றும் அனுபவங்கள் நமக்குக் கற்பித்துத் தந்துள்ளது.

## அன்புடன் கடிந்துகொள்ளுங்கள்

ஒரு சகோதரனோ, சகோதரியோ மற்றவர்களைக் குறித்து உங்களிடம் பழித்தூற்ற ஆரம்பித்தால், அவரை உடனடியாகத் தடுத்துவிடுங்கள் . . . இதை அன்புடனும், அதே சமயம் உறுதியுடனும் செய்யுங்கள். "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்" (எபேசியர் 5:11). சபையில் மாபெரும் தொல்லையை ஏற்படுத்தக் கூடிய, நமது கர்த்தருடைய கட்டளைக்கு எதிரான இந்த மீறுதலில் பங்குகொள்ளும் எவ்விதமான காரியங்களையும் மறுத்துவிடுங்கள். ஒருவேளை குறைகூறும் சகோதரனோ, சகோதரியோ, ஆவிக்குரிய காரியங்களில் குழந்தையாக இருப்பார்களானால், அவர்களின் கவனத்துக்கு, இவ்விஷயத்தைக் குறித்ததான கர்த்தருடைய கட்டளையைக் கொண்டுபோங்கள். (அதாவது மத்தேயு 18:15; 1 தீமோத்தேயு 5:19 எடுத்துக்கூறுங்கள்). ஒருவேளை மற்றவரைக் குறித்த பழிப்பேச்சுகள் உங்களிடத்தில் நேரடியாகப் பேசப்படாமல், மற்றவரிடம் பேசிக்கொண்டிருக்கும் சூழ்நிலைகளில்/கூட்டங்களில், நீங்கள் நிற்க, உங்கள் செவியில் விழுமாயின் உங்கள் நிராகரிப்பை உடனடியாக தெரிவிக்கும் விதத்தில் (கூட்டத்தை விட்டு) பின்வாங்கிவிடுங்கள்.

ஒருவேளை பழித்தூற்றும் விஷயத்தைக் குறித்ததான கர்த்தருடைய கட்டளை, பழித்தூற்றுபவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும், பழித்தூற்றும் சகோதரன் இன்னமும் தீமைபேசுதலையும், பழிப்பேச்சையும், தூஷணங்களையும் தொடர்வாரானால், உங்களிடம் தொடர்ந்து தனது பழிப்பேச்சுகளைத் தொடர்வாரானால், அவரைத் திட்டவட்டமாகக் கடிந்துகொள்ளும் வண்ணமாக, "நீங்கள் இப்படிப் பேசுவதை என்னால் கேட்டுக் கொண்டிருக்க முடியாது, நான் கேட்கவும் கூடாது; ஒருவேளை நான் கேட்டுக்கொண்டிருந்தால், நீங்கள் கர்த்தருடைய கட்டளையை மீறி குற்றவாளியாக (criminal) இருப்பது போல நானும் (criminal) குற்றவாளியாகிவிடுவேன். ஒருவேளை நான் உங்களின் இக்கதையைக் கேட்க வேண்டியதாய் இருப்பினும், என்னால் அதை நம்ப முடியாது, ஏனெனில் எந்தக் கிறிஸ்தவன் கர்த்தருடைய வசனத்தை மதியாமல், தவறுகளைச் சரிசெய்து கொள்வதற்கான அவருடைய திட்டத்தைப் பின்பற்றாமல் இருக்கிறானோ, அவனிடம் கர்த்தருடைய ஆவி இல்லாதபடியால், அவனுடைய வார்த்தைகளும் நம்புவதற்கு ஏதுவல்லாததாகும்" என்று கூறி கடந்துபோக வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளைத் தட்டிக்கழிக்கிறவனும், புரட்டுகிறவனும், உடன் சீஷர்களின் வார்த்தைகளையும், கிரியைகளையும் குறித்துப் புரட்ட தயங்கமாட்டான். நீங்கள் இத்தகைய தூஷண பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்தாலோ அல்லது அப்பேச்சுக்களுக்கோ, அப்பேச்சைப் பேசுகிற வதந்தியாளர்களுக்கோ, பழித்தூற்றுபவர்களுக்கோ ஆதரவு தெரிவித்தாலோ, நீங்களும் அந்தப் பாவத்திற்கும் அதன் சகல பின்விளைவுகளுக்கும் பங்காளிகள் ஆவீர்கள்; ஒருவேளை இதினிமித்தம் "கசப்பான வேர்" முளைத்து விட்டால், இதனால் தீட்டுப்பட்டவர்களில், நீங்களும் ஒருவராக இருப்பீர்கள் (எபிரெயர் 12:15).

## அவதூறு பண்ணுகிறவர்கள் திருடர்கள் ஆவார்கள்

உலகத்தின் நிலைப்பாட்டைப் பொறுத்தமட்டில் அவதூறு பண்ணுகிறவர்கள் திருடர்கள் ஆவார்கள். ஷேக்ஸ்பியர் இப்படியாக எழுதுகின்றார்:

"என்னுடைய பணப்பையைத் திருடுகின்றவன், பயனற்றதையே திருடுகின்றான்;
ஆனால் என்னுடைய நற்பெயரை என்னிடத்திலிருந்து அபகரிப்பவனை
அது பணக்காரனாக்காது; உண்மையில் என்னைத்தான் அது ஏழ்மையாக்குகின்றது."

கிறிஸ்தவ நிலைபாட்டின்படியும், மாபெரும் போதகரின் கருத்துபடியும், அவதூறு பண்ணுகிறவர்கள் கொலைக்காரர்கள் ஆவார்கள். (மத்தேயு 5:22; 1 யோவான் 3:15 பார்க்கவும்). ஆகவே அவதூறு சொல்வதற்கான சிந்தனையானது, பிசாசின் ஆவி என்பது போல விலக்கப்பட வேண்டும்.

6. மிகப் பாதகமான வாதைகளிடமிருந்து ஒதுங்கியிருப்பதுபோல், தேவனுடைய ஜனங்கள் பெருமையைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

இக்கோட்பாடானது மிக நல்ல கோட்பாடாகும்; இது வேதவாக்கியங்கள் அளிக்கும் கோட்பாடாகும், மேலும் இது தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் இரட்டிப்பாக அவசியப்படும் கோட்பாடாகும். இப்படிக் கூறுவது விநோதமாய் தோன்றலாம் . . . தேவனுடைய குணலட்சணங்கள் மற்றும் திட்டம் குறித்ததான மாபெரும் வெளிச்சம் கொடுக்கப்படும் காரணத்தினிமித்தம் அவருடைய ஜனங்கள் தங்களை மிகவும் தாழ்த்தியும், தெய்வீக ஈவுகளின் மீது அதிகம் சார்ந்தவர்களாகவும், தேவன் மீது அதிகம் நம்பிக்கை கொண்டவர்களாகவும், தங்களின் மீது நம்பிக்கை வைக்காதவர்களாகவும் தானே காணப்படுவார்கள்? என்று நீங்கள் யோசிக்கலாம். தேவனுடைய ஜனங்கள் இப்பண்புடையவர்களாகத்தான் என்றென்றும், எப்போதும் காணப்பட வேண்டும், ஆனால் அந்தோ! . . . அநேகர் இப்படியாக இருப்பதில்லை.

அநேகர் யுகங்களைப் பற்றின திட்டத்தின் அறிவைப் பெற்றுக்கொண்ட மாத்திரத்தில் தங்களை விசேஷித்த ஞானிகள் அல்லது பெரியவர்கள் அல்லது நல்லவர்கள் என்று எண்ணிவிடுகின்றனர்; இவர்களோ தேவன் ஞானிகளுக்கும், பெரியவர்களுக்கும், சத்தியத்தை மறைத்துவிடுவார் என்பதையும், அவருக்கு முன்பாக எந்த மாம்சமானவைகளும் (தன்னைத்தான்) புகழ்ந்திடக்கூடாது என்பதையும் மறந்துவிட்டார்கள். ஆதாயம் கருதி, வியாபாரிகள் தங்கள் வாணிகச் சரக்குகளை விரும்புவது போன்று, இவர்களும் சத்தியத்தைச் சுயநலத்துடன் விரும்புகின்றனர். ஒருவேளை சத்தியத்தைக் கொடுத்து/விற்று இவர்கள் ஆஸ்திகளை எதிர்பார்க்காவிட்டாலும், கொஞ்சம் விளம்பரத்தை எதிர்பார்க்கின்றார்கள்; அதாவது மற்றவர்களைக் காட்டிலும் ஞானமுள்ளவர்கள் என்று காட்டிக்கொள்வதற்கு, அதாவது சத்தியத்தை சிறிது சிறிதாக எடுத்துக்கூறி, அதன்மூலம் தாங்கள் ஞானமுள்ளவர்கள் என்று தங்களைக் குறித்து விளம்பரப்படுத்தித் தங்களை பெருமைப்படுத்திக் கொள்ள நாடுகின்றனர்.

## தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை

இப்படிப்பட்டவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்; ஏனெனில் இவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ளாத பட்சத்தில் சீக்கிரத்திலோ அல்லது கொஞ்சம் காலம் கழிந்தோ முற்றிலும் வழி விலகி, உதவி செய்வதற்குப் பதிலாக, பாதிப்புகளை உண்டாக்கிவிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய நோக்கத்திற்காக ஊழியம் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புவதில்லை. மேலும் அவர்களுக்கு எவ்வளவுதான் திறமைகள் இருந்தாலும், அவர்களுடைய தற்பெருமையினாலே அவர்கள் இடறிப்போகும்படியாக நிச்சயமாக அனுமதித்துவிடுவார். உண்மையிலேயே திறமை உள்ளவர்கள் அல்லது திறமை தங்களுக்கு இருப்பது போன்று கற்பனை செய்து கொள்பவர்களே பெருமையின் ஆவியினால் உண்மையில் இன்னலுக்குள்ளாக அகப்படுகின்றார்கள். தேவன் பெருமை உள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கின்றார், ஆனால் தாழ்மையுள்ளவர்களுக்கோ தமது கிருபையை அளிக்கின்றார். இந்த வெளியீட்டுகளின் இதழாசிரியர் தனது ஞானத்தையோ அல்லது ஆற்றலையோ குறித்து வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ தற்பெருமை அடித்துக்கொள்ளவில்லை என்பதற்கு நமது வெளியீடுகளின் வாசகர்கள் சாட்சிகளாக இருக்கின்றனர். நாங்கள் சத்தியத்தைக் குறித்துப் பெருமை பாராட்டியிருக்கின்றோம், இன்னும் அதைக் குறித்து பெருமை பாராட்டுவோம், அதாவது சத்தியத்தினுடைய பிரகாசமான மின்சாரம் போன்ற கதிருக்கு முன்பாக எந்த மனித தத்துவங்களும் ஒரு மெழுகுத்திரியின் வெளிச்சத்தைக் கூடக் காட்ட முடியவில்லை என்று பெருமை பாராட்டுகிறோமே ஒழிய, அச்சத்தியத்தை வெளிக்கொண்டுவந்தவர் நானே என்று ஒருபோதும் பெருமை பாராட்டிக்கொள்ளவில்லை. காரணம் என்னவெனில், அச்சத்தியங்களை நாங்கள் உருவாக்கவில்லை, மாறாக தேவன்தாமே "ஏற்றவேளையில்" "ஏற்றகாலத்தின் உணவாக/சத்தியமாக" வெளிப்படுத்தியுள்ளார். மேலும் நாங்களோ அல்லது வேறு எந்த மனுஷர்களோ உருவாக்கும் உபதேசங்களைக்காட்டிலும் இச்சத்தியங்கள் மிகவும் அருமையானவைகளாக இருப்பதினால், இச்சத்தியத்திற்குத் தேவனே ஆசிரியர் என்றும், அதனை வெளிப்படுத்தினவர் என்றும் நாங்கள் நம்பகின்றோம்.

ஒருவேளை தேவனுடைய கிருபையினால், தற்கால அறுவடை சத்தியத்தை மற்றவருக்கு வெளிப்படுத்தும் வேலையில் நாங்கள் எந்தெந்த விதங்களில் பயன்படுத்தப்பட்டாலும், அவ்வேலையின் நிமித்தம் நாங்கள் களிகூருகின்றோம்; மேலும் எங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள உக்கிராணத்துவத்தில் உண்மையாய் இருக்க தொடருவோம், ஆனாலும் இவ்விஷத்தில் தற்பெருமை கொள்வதற்கு எங்களிடத்தில் இடமோ, அவசியமோ, காரணமோ இல்லை. இவ்வேலைக்குப் பாத்திரமானவர்களையும், பொருத்தமானவர்களையும், திறமை

மிக்கவர்களையும் நமது எஜமான் உடனே கண்டுபிடிக்க வல்லவர் என்பது நம் அனைவருக்கும் தெரிந்த காரியமாய் உள்ளது. ஆனால், 1 கொரிந்தியர் 1:27-29 "ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்" என்பதே நமக்கான விளக்கமாகும்.

ஆகவே தேவனுடைய கிருபையினாலே இருளிலிருந்து தேவனுடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்குக் கொண்டுவரப்பட்டவர்களாகிய அனைவரும் கர்த்தருக்கு முன்பாக அதிக தாழ்மையுள்ளவர்களாக இருக்கும்படி எச்சரிப்பூட்டுகின்றோம். ஏனெனில், ஒருவேளை பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிச்சமானது இருளாகிப் போகுமானால், அவ்விருள் எவ்வளவு பெரியதாக இருக்கும் . . . எத்துணை நம்பிக்கையற்ற நிலைமையாகக் காணப்படும்! அப்படிப்பட்டவர்களைக் குறித்துக் கூறுகையில், அப்போஸ்தலர் குறிப்பிட்டது போல, அவர்கள் ஜீவனுக்குரிய பாதையை அறியாமல் இருந்திருந்தால் அது அவர்களுக்கு நலமாய் இருந்திருக்கும். உப்பு சாரமற்றுப் போனால் அது ஒன்றிற்கும் உதவாது, சொல்லப்போனால் மண்ணைப் போன்றாகிவிடும்.

## இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

7. சுத்தமுள்ளவர்களாய் இருங்கள்.

தேவனிடத்திலும், மனுஷரிடத்திலும் குற்றமனசாட்சியற்ற நிலையைக் காத்துக்கொள்கிறவர்களாய் இருங்கள். இருதயத்தில், அதாவது எண்ணங்களில் சுத்தமுள்ளவர்களாய் இருங்கள்; பொல்லாப்பான எவ்வித எண்ணங்களுக்கும் இருதயத்தில் இடம் கொடாதிருங்கள். தீமையான எண்ணங்கள் குடிகொள்ளாதபடிக்கு கிறிஸ்து இயேசுவை உங்கள் மனதிற்கு முன்பாக மாதிரியாக நிறுத்திக்கொள்ளுங்கள். தீமையான எண்ணங்கள் வெளியிலிருந்தோ அல்லது உங்களுக்குள்ளிருந்தோ உங்களிடத்தில் அழையாமல் நுழைகிறது என்றால், தேவையான எல்லாச் சூழ்நிலைகளிலும் உதவி அளிக்கப்படும் என்று வாக்களித்தவரிடம் கிருபைக்காக உங்கள் இருதயங்களை ஜெபத்தில் உயர்த்துங்கள். "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக" (சங்கீதம் 19:14) என்ற ஜெபமும், சிந்தையும் உங்களிடத்தில் எப்பொழுதும் காணப்படுவதாக.

8. வேதவாக்கியங்களின் பல்வேறு விசேஷித்தக் கட்டளைகளை மதிப்புடன் கருதி, அவைகளைக் கைக்கொள்ள நாடுகையில், அந்தத் தெய்வீகப் பிரமாணத்தின் அடிப்படையான கொள்கைகளை அதிகமதிகமாய்ப் புரிந்துகொள்வதற்கும், அதற்கு இசைவாக நடக்கவும் நாட வேண்டும்.

இப்படிச்செய்வோமேயானால் கர்த்தருடைய வார்த்தைகளில் குறிப்பாக ஒருவேளை சுட்டிக்காட்டப்படாத நம்முடைய வார்த்தைகள், சிந்தனைகள் மற்றும் கிரியைகளில் காணப்படும் தவறுகளையும், சரியானவைகளையும் நம்மால் கண்டுபிடிக்க முடியும். நாம் எவ்வளவாக தெய்வீக பிரமாணத்தின் அடிப்படை கோட்பாடுகளைப் புரிந்துகொண்டு, அதற்கு இசைவாய்ச் செயல்படுகின்றோமோ, அவ்வளவாய் தெய்வீக வார்த்தையின் ஆவியைப் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருப்போம். சங்கீதம் 119:97-105 பார்க்கவும்.

9. கிறிஸ்துவின் குணலட்சணத்திற்கு அல்லது சிந்தனைக்கு எதிரான, குற்றம் கண்டுபிடிக்கும் மற்றும் சண்டையிடுகின்ற குணலட்சணங்களை விலக்கி/தவிர்த்துவிடுங்கள், அதாவது அன்பிற்கு எதிர்மாறான இவைகளைத் தவிர்த்துவிடுங்கள்.

உலகம், மாம்சம் மற்றும் பிசாசையும், இவர்களின் பல்வேறு கண்ணிகளையும் எதிர்த்து மேற்கொள்வதற்குக் கொஞ்சம் எதிர்த்துப்போராடுகிற மனப்பான்மையுடன் கூடிய தைரியம்

தேவையாய் உள்ளது. இந்தப் போராடுகின்ற மனப்பான்மையானது ஒருவேளை ஞானமாகவும், சரியான விதத்திலும் கையாளப்பட்டால், அதாவது பாவத்திற்கு எதிராக முதலாவது நம்மிடத்திலும், இரண்டாவதாக மற்றவரிடத்திலும் கையாளப்பட்டால், இந்தப் போராடுகின்ற மனப்பான்மை கர்த்தருடைய நோக்கத்திற்கும், நமக்கும் மிக விலையேறப்பெற்றச் சகாயமாக விளங்கும். ஒருவேளை இப்போராடும் மனப்பான்மையானது கர்த்தருக்காவும், அவருடைய ஜனங்களுக்காகவும், சாத்தானுடைய இருளின் வல்லமைகள் மற்றும் மூடநம்பிக்கைக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டால் இப்போராடும் மனப்பான்மையானது நமக்கு விலையேறப்பெற்றச் சகாயமாக விளங்கும். இதுவே வேதவாக்கியங்களில், "நல்ல போராட்டத்தைப் போராடுதல்" என்று அழைக்கப்படுகின்றது; மேலும் நீதி மற்றும் சத்தியத்திற்கான இந்த யுத்தத்தில், நமது தலைவரின் கனத்தையும், அவருடைய ஜனங்களின் சுயாதீனங்களையும் காப்பாற்றுவதற்கென யுத்தம் பண்ணும் தைரியமான போர் வீரர்களாக நாம் அனைவரும் காணப்பட வேண்டும்.

## நல்ல போராட்டத்தைப் போராடுங்கள்

ஆனால் எதிர்த்துப்போராடும் மனப்பான்மையை இப்படியாக நல்ல விதத்தில் பயன்படுத்துவது என்பது இவ்வுலகத்தின் அதிபதியானவனுக்குப் பிரியமாய் இராது, ஆகையால் அவனால் நேரடியாகப் பயன்படுத்த முடியாத இம்மனப்பான்மையைத் தவறான வழியில் திருப்ப நாடி முயற்சிப்பான். இதன் விளைவாக அவன் (சாத்தான்) சிலரிடத்தில் இப்போராடும் மனப்பான்மையைப் பிரதானமான கடமை என்று எண்ணிக்கொள்ளத்தக்கதாக முயற்சி செய்வான். மேலும் சாத்தான் - அவர்கள் எல்லாவற்றோடும், அனைவரோடும் போராடும்படி அவர்களை ஊக்கமூட்ட முயற்சிப்பான், அதாவது இருளின் அதிகாரத்தைக் காட்டிலும் சகோதர சகோதரிகளையும், பெயரளவிலான கிறிஸ்தவர்களைக் குருடாக்கி வைத்துள்ள தப்பறைகளுக்கும், அறியாமைக்கும் எதிராக போராடுவதைக்காட்டிலும் பெயர்க்கிறிஸ்தவ மனிதர்களையும் எதிர்த்துப்போராட அவர்களைச் சாத்தான் ஊக்குவிப்பான். "தேவனுக்கு எதிராக போராடும்" நிலைக்கு நம்மைக் கொண்டு வந்து நிறுத்துவதே உண்மையில் சாத்தானுடைய விருப்பமாக உள்ளது.

இவ்விஷயத்தில் கவனமுள்ளவர்களாய் இருக்கக்கடவோம். நாம் மற்றவரின் முன்பு தடுக்கலின் கல்லைப் போட்டுவிடாதபடிக்கு, முதலில் நாம் அனைவரும் நம்மை நாமே நிதானித்தறிவோமாக. அற்பவிஷயங்களை மலை அளவு பெரிதாக்கவும், சின்னஞ்சிறிய விஷயங்களையும், ஒன்றிற்கும் உதவாத விஷயங்களையும் குறித்துப் போராடுகிற மற்றும் குற்றம் காணும் (குறைகூறும்) இயல்புடையவர்களாகவும் நம்மை ஆக்கக்கூடிய தவறான ஆவிகளுக்கு எதிராக நம்முடைய சொந்த இருதயங்களில் நாம் போராடுவோமாக. "பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தம் மனதை அடக்குகிறவன் உத்தமன்" (நீதிமொழிகள் 16:32). சத்தியத்தின் மீதான அன்பினாலும், கர்த்தரின் மீதான அன்பினாலும், அவருடைய ஜனங்களாகிய சகோதர சகோதரிகளின் மீதான அன்பினாலும்தான் நாம் சத்தியத்திற்காக போராடுகிறோமே ஒழிய, சுயமகிமை தேடும் நோக்கங்களுக்காக நம்முடைய போராடுதல் காணப்படக்கூடாது என்பதில் நாம் நம்மைக்காக்க வேண்டியவர்களாக இருப்போமாக. நம்முடைய நோக்கம் அல்லது ஆவி ஒருவேளை அன்பின் அடிப்படையில் இருக்கும் பட்சத்தில், இவ்வன்பானது உடன் ஊழியர்களாகிய சகோதர சகோதரிகளிடத்திலான நம்முடைய பிரயாசங்கள் அன்பிலும், சாந்தத்திலும், பொறுமையிலும், தாழ்மையிலும் சாரம் ஏறினதாக வெளிப்படும். "எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவர்களாய்" நாம் இருக்கக்கடவோம் (2 தீமோத்தேயு 2:24). துரிதமும், ஆற்றலும் உள்ள "ஆவியின் பட்டயமாகிய" தேவனுடைய வார்த்தையே, துண்டித்துப் போடுகிற வேலை அனைத்தையும் செய்ய அனுமதிப்போமாக.

10. துர்க்குணம், பொறாமை, விரோதம், பகை ஆகியவைகளோடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய சகல எண்ணங்களையும், உணர்வுகளையும் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.

கணநேரம்கூட இவைகளுக்கு உங்களுடைய இருதயங்களில் எவ்வித இடத்தையும் கொடாதிருங்கள்; ஏனெனில் இவைகள் மற்றவருக்குப் பாதிப்பை ஏற்படுத்துவது ஒருபக்கமாக இருப்பினும் உங்களுக்கே நிச்சயமாக அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாய் இருக்கும்.

உங்கள் இருதயம், உங்கள் சித்தம், உங்கள் நோக்கங்கள் மற்றும் விருப்பங்கள், தேவன் மீதான அன்பிலும், அவருடைய சகல சிருஷ்டிகள் மீதான அன்பிலும் நிரம்பி இருக்கட்டும் . . . தேவன்பால் அதிக அன்பும் மற்றும் இதற்கேற்ப அவருடைய ஆவியைப் பெற்றவர்களாக, அவர் காட்டும் வழியில் நடக்கின்ற யாவரோடும் அன்பும் காட்ட வேண்டும்.

11. உங்கள் மனசாட்சியை நம்பாதிருங்கள்.

மனசாட்சியின் மீது நம்பிக்கை வைக்காதீர்கள். ஒருவேளை மனசாட்சியானது உங்களுக்குப் போதுமான வழிகாட்டியாக இருக்குமாயின், உங்களுக்கு வேதவாக்கியங்களின் தேவை அவசியமாயிராதே. பெரும்பான்மையான ஜனங்களுக்கு, கொஞ்சமும் மனசாட்சி என்பதே கிடையாது, காரணம் மனசாட்சிக்கு வழிகாட்டியாக இருக்கும்படிக்கு தேவன் கொடுத்துள்ள நியாயப்பிரமாணங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் ஜனங்கள் குருடர்களாய் இருக்கின்றனர். இவர்களைக் காட்டிலும் அவல நிலையில் இருப்பவர்களைத்தான் 1 தீமோத்தேயு 4:2-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கவனமாய்ச் செவிசாய்த்து, அது கொடுக்கும் வெளிச்சத்திற்கு ஏற்ப கவனமாய் நடப்பது தவிர்க்க முடியாத அவசியமாய் இருக்கின்றது.

12. நீதிக்கும் மற்றும் சத்தியத்திற்கும் தவிர மற்றபடி தைரியம் உள்ளவர்களாய் இருக்காதீர்கள்.

பாவத்தைக் குறித்தும், எஜமானுக்கு சினமூட்டுவதைக் குறித்தும், "நம்முடைய பரம அழைப்பிற்கான பந்தய பொருளாகிய" மாபெரும் பரிசை இழந்துபோக நேரிடும் நிலை குறித்ததுமான பயபக்தியுடன் கூடிய பயம் உங்களுக்கு இருப்பது நலமாயிருக்கும். "இடறி விழுந்துபோகிறவர்கள்" அனைவரிலும் பெரும்பாலானோர் முதலாவது சகல பயத்தையும் இழந்து, தன்னம்பிக்கை உள்ளவர்களாக ஆகிவிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் "... இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிடுவதில்லை" என்பதை மறந்து விடுகின்றார்கள். "ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம். மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" என்பதற்கு இவர்கள் இந்தத் தகுதியான பயத்தை இழந்துபோனதே ஒரு காரணமாக இருக்கின்றது. (எபிரெயர் 6:6; 2 பேதுரு 1:5-10; எபிரெயர் 4:1)

---

# பாதம் கழுவுதல்

யோவான் 13:4-17 வரையிலான வசனங்களில் இடம் பெறுகின்றதான பாதம் கழுவுதலானது, நினைவுகூருதல் இராப்போஜனம் போன்று முக்கியமானதென்று சிலர் எண்ணுகின்றனர்; ஆகையால் இதைச் சுவிசேஷகர்களில் ஒருவரே குறிப்பிடுவதற்கு ஞாபகம் கொண்டிருந்தபோதிலும், இப்பாடத்தினை நாம் இங்குப் பார்க்கலாம்.

கிழக்கத்திய நாடுகளில் பாதரட்சைகள் பயன்படுத்தப்படுவதினால், பாதங்கள் மண்ணும், புழுதியும் ஒட்டிக்கொள்ளும் விதத்தில் காணப்படுகின்ற காரணமாக, பாதங்கள் கழுவப்படுதல் என்பது வழக்கமாகச் செய்யப்படும் பழக்கமாகவும், தேவையாகவும் காணப்பட்டது. இந்தப் பணிவிடையானது மிகவும் கனமற்ற பணிவிடையாகக் கருதப்பட்டது மற்றும் குடும்பத்திற்காகவும், விருந்தினர்களுக்காகவும் இப்பணிவிடையானது கீழான பணிவிடைக்காரர்களினால் (அ) அடிமைகளினால் செய்யப்படுகின்றது.

இயேசு தம்முடைய சீஷர்கள் மத்தியில் சுயநலத்தின் ஆவி இருப்பதைக் கவனித்தார்; தம்மோடுகூட அவர்கள் பங்கடைவார்கள் என்பதாக தாம் வாக்களித்துள்ளதான இராஜ்யத்தில், தங்களில் யார் ஸ்தானத்திலும், அதிகாரத்திலும் பெரியவர்களாய் இருக்க வேண்டும் என்று அவர்கள் பண்ணின வாக்குவாதத்தின் வார்த்தைகளானது, அவரது காதுகளில் விழுந்தது. இந்த ஆவியானது எந்தளவுக்கு வளர்ந்து, பலப்படுத்தப்படுகின்றதோ, அந்த அளவுக்கு, அது அவர்களுக்கு அபாயமானது என்பதை இயேசு முன்னறிந்தவராக, இந்த ஆவியினைக் கடிந்துகொண்டார். இந்த ஆவியானது 4 முதல் 6-ஆம் நூற்றாண்டுகளின் காலங்களில் போப் மார்க்க அமைப்பில் பூ பூத்து, அதன் கசப்பான கனியைக் கொணர்ந்தது மற்றும் இந்த அசுத்தமான ஊற்றினின்று இன்னமும் பொல்லாப்புகளும், தப்பறைகளும் பாய்ந்துகொண்டே இருக்கின்றது. அவர் ஒரு சிறுபிள்ளையை எடுத்து, சீஷர்களின் நடுவில் நிறுத்தி, "நீங்கள் பிள்ளைகளைப் போல் (சூழ்ச்சியற்றவர்களாக, எளிமையானவர்களாக) ஆகாவிட்டால், நான் உங்களை அழைத்துக்கொண்டிருக்கின்றதான இராஜ்யத்திற்குப் பாத்திரமானவர்களாய் இருக்கமாட்டீர்கள்" என்றார். "அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்" (மாற்கு 10:42); "கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்;" "உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்" (மாற்கு 10:43). "உங்களில் யார் அதிகமாய்ப் பணிவிடைப் புரிகின்றார்களோ, அவரே பெரியவராய் உங்களால் அடையாளங்கண்டுகொள்ளப்பட வேண்டும். நானும் கூடப் பிரதான பணிவிடைக்காரனாய் இருக்கின்றேன், ஏனெனில் மனுஷகுமாரன் ஊழியம் கொள்ளவும் மற்றும் இவ்விதமாய்க் கனம் அடையவும் வராமல், மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். ஆகையால் நான் உங்களுக்காகச் செய்யும் பெரிய ஊழியத்தின் நிமித்தமாக, நான் உங்களுக்கு முதன்மையானவராய் இருக்கின்றேன் மற்றும் இப்படியாகவே உங்கள் மத்தியிலும் காணப்படுவதாக. எந்தளவுக்கு நீங்கள் ஒருவரிலொருவர் சுயநலமற்ற பலியுடன்கூடிய அன்பையும், ஊழியத்தையும் காண்கின்றீர்களோ, அவ்வளவாய் ஒருவரையொருவர் உயர்வாய் எண்ணிக்கொண்டு, கனப்படுத்துங்கள்.இப்படியானவர்களை அவர்களது கிரியையின் நிமித்தம் மிகவும் உயர்வாய் எண்ணிக்கொள்ளுங்கள்" எனும் விதத்தில் இயேசு கூறினார். (1 தெசலோனிக்கேயர் 5:13)

ஆனால் இவைகளுக்கும் பிற்பாடு, போதகருடனும் அவரது மாதிரியின் கீழிலும் அவர்கள் மூன்றரை வருடங்கள் செலவழித்திட்ட பிற்பாடும்கூட, பெருமையின் ஆவியும், மற்றவர்கள் மீது எஜமானாய்க் காணப்படுவதற்கும், முதன்மையானவர்கள் என்று தாங்கள் கனப்படுத்தப்பட/பாராட்டப்பட வேண்டும் என்பதற்குமான ஆசையும் இன்னமும் காணப்பட்டது; மேலும் தாம் அவர்களை விட்டுக் கடந்துபோக இருக்கையில், அவர்களோடு உள்ள கடைசி மாலை வேளையில், இந்த ஒரு பாடத்தினை அவர்களது இருதயங்களில் நிரந்தரமாய்க் காணப்படுமளவுக்குப் பதிய வைத்திட இயேசு நாடினார். ஆகையால் பஸ்கா இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, அவர் பந்தியை விட்டு எழுந்து, தம்முடைய சீஷர்களின் பாதங்களைக் கழுவுவதன் மூலமாக, மிகவும்

கனமற்ற பணிவிடையை, அவர்களுக்குச் செய்தார். அவர்கள் அவருக்கோ (அ) ஒருவருக்கொருவரோ இத்தகைய பணிவிடையைச் செய்திடுவதற்கு அநேகமாக எண்ணிக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள் மற்றும் இவ்வளவு தாழ்மையில், அவர் தங்களுக்குப் பணிவிடைப் புரிவதை மறுக்க முடிந்தவர்களாயும் காணப்பட்டனர்.

இயேசு முடித்த பிற்பாடு அவர்களை நோக்கி: "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்றார் (யோவான் 13:12-17). "நான் உங்களுக்குக் கொடுத்துள்ளதான படிப்பினையை நீங்கள் புரிந்துகொள்வீர்களானால் மற்றும் உணர்ந்துகொள்வீர்களானால் மற்றும் அதைக் கைக்கொள்வீர்களானால், அதனால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள் மற்றும் என் ஊழியங்களில் உதவிப் பெற்றுக்கொள்வீர்கள் மற்றும் உங்களுக்கு ஒரு பங்கு உண்டு என்று நான் வாக்களித்துள்ளதான இராஜ்யத்திற்கு ஆயத்தமாக்கப்படுவீர்கள்" என்ற விதத்தில் கூறினார்.

அப்போஸ்தலர்கள் அநேகருடைய வாழ்க்கையை நாம் பார்க்கையிலும் மற்றும் எத்தகைய சுயத்தை வெறுத்தலுடன், தாங்கள் சக அங்கத்தினர்களாகக் காணப்படும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு, தலையாகவும், அனைவருக்கும் முதன்மையானவராகவும் இருந்தவரின் மாதிரியைப் பின்பற்றி ஊழியம் புரிந்திருக்கின்றனர் என்று பார்க்கையிலும், இப்படிப்பினையானது அதற்கே உரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதில் நமக்கு ஐயமில்லை.

"நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13:15) என்று கர்த்தர் கூறினபோது, அவர் என்ன அர்த்தத்தில் கூறினார் என்ற கேள்வி எழும்புகின்றது. கொள்கையிலும், ஒருவருக்கொருவர் ஊழியம் புரிவது தொடர்புடையதான படிப்பினையிலும் மாதிரி காணப்படுகின்றதா? அல்லது பாதங்களைக் கழுவும் சடங்கென்ற ஊழிய முறைமையில் மாதிரி காணப்படுகின்றதா? இரண்டாம் கருத்துச் சரியானது என்று யூகிப்பது என்பது, சடங்காச்சாரத்தின் கீழ், உண்மையான படிப்பினையை மறைத்துப் போடுவதாய் இருக்கும். ஒருவேளை சடங்கில்தான் மாதிரி காணப்படுகின்றதென்றால், பின்னர்ச் சடங்கினுடைய அனைத்து அம்சங்களும் கைக்கொள்ளப்பட வேண்டும்; மேல் வீட்டறை ஒன்று காணப்படவேண்டும் – இராப்போஜனம் காணப்படவேண்டும் – பாதரட்சைகள் அணியப்பட வேண்டும் – அதே விதமான வஸ்திரங்கள் அணியப்பட வேண்டும் – சீலை அரையிலே கட்டிக்கொள்ளப்பட வேண்டும். இல்லை; போதகரினால் தாழ்மையுடன் சீஷர்களுக்குப் பண்ணப்பட்ட விஷயத்திலேயே மாதிரி காணப்படுகின்றது; சடங்கில் அல்ல. உடன் அங்கத்தினர்களுக்கு மிகவும் கனமற்ற பணிவிடையைக்கூட அவர் புரிந்ததிலுள்ள மாதிரியையே நாம் பின்பற்றிட வேண்டும் மற்றும் இதை நாம் எந்தளவுக்குப் பின்பற்றுகின்றோமோ, அவ்வளவாய் ஆசீர்வதிக்கப்பட்டிருப்போம் மற்றும் அவ்வளவாய் நாம் நித்தியமான இராஜ்யத்திற்கும், தேவனுக்கு ஊழியம் புரிவதற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருப்போம்.

பாதரட்சைகள் இன்னமும் அணியப்படுகின்றதான கிழக்கத்திய நாடுகளில் இன்று வாழ்பவர்களுக்கு வேறுவிதங்களிலும், போதகரினால் பயன்படுத்தப்பட்ட விதத்திலும் மாதிரியைப் பின்பற்றிடுவதற்கான வாய்ப்பு இருக்கலாம்; மற்றும் முற்றிலும் வேறான சூழ்நிலைகளில் காணப்படுபவர்கள் "மாதிரியை" பல்லாயிரம் விதங்களில் பின்பற்றிடலாம். உடன் சீஷர்களில் சிலர் உங்கள் பட்டணத்திலும், என்னுடைய பட்டணத்திலும் வாழ்கின்றனர். அவர்களுக்கு நாம் எவ்வாறு ஊழியம் புரிந்திடலாம்? அவர்களை நாம் எப்படிப் புத்துணர்வு அடையப்பண்ணலாம்? கர்த்தருடைய "மாதிரிக்கேற்ப" நாம் அவர்களிடத்தில் எப்படி நம்முடைய அன்பையும், பரிவையும் காண்பிக்கலாம்? இந்தத் தட்பவெட்ப நிலையில் அவர்களது பாதங்களைக் கழுவுதல் ஏற்புடையதாய் இராது; இப்படிச் செய்வது என்பது அசௌகரியமாகவும், இன்பமற்றதாகவும் மற்றும் "மாதிரிக்கு" எதிரான பணிவிடையாகவும் காணப்படும். ஆனால் மற்ற விதங்களில் நம்மால் "சரீரத்திற்கு" ஊழியம் புரிந்திடலாம் மற்றும் இப்படியாய் மாதிரியை உண்மையாய்ப் பின்பற்றிடலாம். பூமிக்குரிய விஷயத்திலும், ஆவிக்குரிய விஷயத்திலும் அவர்களுக்கு ஊழியம் புரிவதற்கான நமக்கான பல்வேறு வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். நாம் வாய்ப்பிற்காகப் பார்த்துக்கொண்டிருக்க

வேண்டும் மற்றும் துக்கத்தையோ, சோர்வையோ காணுகையில், நம்முடைய சகோதரனுடைய பாரங்களைத் தூக்கிவிடுவதற்கு (அ) நமது சகோதரிகளுடைய துக்கத்தைத் தேற்றுவதற்கு, நம்முடைய உதவிகரத்தினை நாம் நீட்டிடலாம்; அவர்களுக்கு ஊழியம் புரிந்திடுவதற்கான, அதாவது அடையாளப் பேச்சில் அவர்களது பாதங்களைக் கழுவிடுவதற்கான நம்முடைய வாஞ்சையை, நம்முடைய கிரியைகள் மற்றும் வார்த்தைகள் மூலம் அவர்கள் காணும்படி செய்திடலாம்.

உங்கள் உதவியை அவர்கள் கேட்பது வரையிலும் காத்துக்கொண்டிருக்காதீர்கள்; ஏனெனில் அவர்கள் எந்தளவுக்கு வளர்ந்துள்ள சீஷர்களாய்க் காணப்படுகின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் உங்கள் உதவியினைக் கெஞ்சி கேட்காதவர்களாய்க் காணப்படுவார்கள். அவர்கள் தங்கள் பாரங்களையும், சோதனைகளையும் உங்களிடத்தில் சொல்வது வரையிலும் காத்துக்கொண்டிருக்காதீர்கள், மாறாக முன்னேற்பாடுடன் பார்த்துக்கொண்டிருங்கள்; ஏனெனில் அவர்கள் எந்தளவுக்குப் போதகருடைய ஆவியைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் முறையிடாதவர்களாகக் காணப்படுவார்கள் மற்றும் "எப்போதும் சந்தோஷமாய்" - உபத்திரவத்திலும்கூடச் சந்தோஷமாய் ஜீவிப்பவர்களாய் இருப்பார்கள்.

"சரீரத்திற்கான" இத்தகைய ஊழியங்களை வெட்கப்படாமல் நாடி, சந்தோஷங்கொள்ளுங்கள் - சரீரத்திற்கான ஊழியங்கள் என்பது கர்த்தர் இயேசுவுக்கே புரியப்பட்டதாகும். பூமிக்குரிய தேவைகள் சார்ந்த ஊழியங்களைக் காட்டிலும், புதிய சிருஷ்டிகளென நாம் ஒருவருக்கொருவர் புரியும் ஊழியங்களே மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. சரீரத்தைச் சத்தியத்தினால் கழுவுதலானது - சரீரத்தை வார்த்தையினால் பரிசுத்தம் ஆக்குவதும், சுத்திகரிப்பதும் இப்பொழுது நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது. (எபேசியர் 5:26, 27) உங்கள் சக அங்கத்தினர்களுடைய விசுவாசத்தையும், ஜீவியங்களையும் சுத்திகரிக்கும் மற்றும் தூய்மைப்படுத்தும் விஷயத்தில் நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் சத்தியத்துடன், தாழ்மையாயும், அவர்களுக்கு ஊழியம் புரிய வேண்டும், அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும், ஆறுதல்படுத்த வேண்டும் மற்றும் புத்துணர்வடையச் செய்ய வேண்டும் என்ற உண்மையான வாஞ்சைகொண்டவர்களாயும் அவர்களை அணுகுகின்றீர்களா? இப்படிச் செய்கின்றீர்களானால், தொடருங்கள்; உங்கள் ஊழியத்தைச் செய்யுங்கள்; போதகரும் இப்படியாகவே செய்துள்ளார்; இதுவே அவரது மாதிரியாகும்; தொடர்ந்து செய்யுங்கள். எவ்வளவுக்கு அதிகமாய் இப்படிச் செய்கின்றீர்களோ மற்றும் அதிக நேரம் செலவழித்து, பிரயாசம் எடுத்து, சௌகரியத்தைப் பார்க்காமல், சுயத்தை வெறுத்தலுடன் செய்கின்றீர்களோ, நீங்கள் போதகருடைய பார்வையில் பெரியவர்களாகவும் மற்றும் கர்த்தர் உங்களது அன்பையும், அந்த அன்பின் ஊழியத்தையும் காண்கின்றது மற்றும் அறிந்திருக்கிறது போன்று, சரீரத்தின் அங்கத்தினர்களும் உங்களைக் காணும்போது, அறியும்போது நீங்கள் சரீரத்தில் மிகவும் கனப்படுத்தப்பட்டவர்களாகவும், பிரியத்திற்குரியவர்களாகவும் காணப்படுவீர்கள்.

இயேசுவினுடைய தலைச்சிறந்த "மாதிரியை" தொடர்ந்து பின்பற்றுங்கள்; "உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் சுத்தமாகத்தக்கதாக," கழுவுங்கள் மற்றும் ஒருவர் ஒருவரால் கழுவப்பட்டிருங்கள், மற்றும் உலகத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் தினந்தோறும் தொடர்புக்குள் வருகின்றதான அசுசிகளைச் சுத்திகரித்து, களைந்துபோடுங்கள். அனைவருக்குமான பிரதான ஊழியக்காரனும், கர்த்தருமானவர் அனைவருக்காகவும் கொடுத்திட்டதான விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியத்தினால், நீங்கள் ஏற்கெனவே அனைத்திலுமிருந்து நீதிமானாக்கப்பட்டு, சுத்தமானவர்களாகவும், பரிசுத்தமானவர்களாகவும் கருதப்படுகின்றபடியால், பழைய புளித்த மாவாகிய மாய்மாலம், பொறாமை மற்றும் சுயத்தை உயர்த்துதல் ஆகியவற்றைக் கழித்துப்போடுங்கள்.

*****

# நினைவுகூருதல் இராப்போஜனம்

ஜியோர்ஜியாவில் (Georgia) சத்தியத்தில் காணப்படும் நண்பர்கள் சிலர், தாங்கள் பாபிலோனிலிருந்து வெளியே வந்ததுமுதல் நினைவுகூருதலை ஆசரிக்கவில்லை என்றும் எழுதி, இதற்கான தங்கள் காரணத்தையும் பின்வருமாறு கொடுக்கின்றனர்: "எங்கள் மனங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, ஆனால் எங்களுடைய மாம்சம் இப்படியாக இல்லை மற்றும் சுற்றியிருக்கும் சூழ்நிலைகளின்கீழ் முடியவும் செய்யாது என்று நாங்கள் எண்ணுகின்றோம். நாங்கள் ஏழைகளாக இருக்கின்றோம் மற்றும் எங்களைச் சார்ந்திருக்கும் பெரிய குடும்பங்களையும் பெற்றிருக்கின்றோம் மற்றும் அவர்களை எங்களால் கைவிட்டுவிடவும் முடியாது. ஆகையால் பெரிதும் விரும்பப்படும் இந்த ஆசீர்வாதத்திடமிருந்து நாங்கள் விலகியிருக்கின்றோம்."

சகோதரர்கள் சில தவறான புரிந்துகொள்ளுதலில் காணப்படுகின்றனர் என்று நாம் புரிந்துகொள்கின்றோம். நமது மாம்சம் பூரணப்படுவதுவரைக்கும் ஒருவேளை காத்திருப்போமானால், நம்மில் எவராலும் நினைவுகூருதல் இராப்போஜனத்தில் பங்கெடுக்க முடியாது; ஏனெனில் இந்த யுகத்தில் சபை, மாம்சத்தில் பூரணத்தினை எதிர்ப்பார்த்திடக்கூடாது; நமது பூரணமானது, நாம் உண்மையுள்ளவர்களாய் இருப்போமானால், முதலாம் உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய ஜீவிகள் என்றதிலேயே காணப்படும். இப்பொழுது புதிய சுபாவம், புதிய மனம் (அ) சித்தம் எனும் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கின்றோம்; இந்த மண்பாண்டங்களானது ஏறக்குறைய பாவத்தினால் கெடுக்கப்பட்டு, கறைபடுத்தப்பட்டே காணப்படுகின்றது. ஆனால் உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின்கீழ், (நமது சிறந்த பிரயாசங்களுடன்கூட உள்ள) நமது பூரணமான சித்தங்களை, தேவன் நமது முழுமையான பூரணமென்று ஏற்றுக்கொள்வதற்கு ஒப்புக்கொண்டுள்ளார். இப்படியானவர்கள் அனைவரும் அப்போஸ்தலனோடுகூட "நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறுகின்றது" - நாம் "மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கின்றோம்", முடிந்தமட்டும் நடக்கின்றோம் என்று கூறிடமுடியும்.

அர்ப்பணிப்பு என்பது நமது குடும்பங்களைப் புறக்கணிப்பதையோ, விட்டுவிடுவதையோ குறிப்பதாகாது; தேவனுடைய மற்றும் நம்முடைய எதிராளிகளானவர்கள், நம்மைக் கொல்லுவதற்கோ, சிறைப்பிடித்துச் செல்லுவதற்கோ, சிறையில் அடைப்பதற்கோ, தேவனுடைய வழிநடத்துதலில் அனுமதிக்கப்பட்டு, இப்படியாக வலுக்கட்டாயமாக (குடும்பத்திற்கான) நமது பராமரிப்பினைத் தடுக்கவோ அல்லது நம்மைப் (குடும்பத்திடமிருந்து) பிரிக்கவோ முற்பட்டாலொழிய, மற்றபடி, இதற்கு வாய்ப்பில்லை; ஆனால் இப்படியாகவே இருண்ட யுகங்களில் காரியங்கள் காணப்பட்டன. மற்றபடி நமது குடும்பங்களுக்கு நியாயமான பராமரிப்பினைக் கொடுப்பதே, தேவனுடைய சித்தம் என்றும், நமக்கான கடமை என்றும் தேவன் நமக்குக் கற்பித்துள்ளார்.

கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பு என்பது தேவனுடைய சித்தத்திற்குள், நம்முடைய சித்தத்தை முழுமையாய் ஒப்புக்கொடுத்துவிடுவதையும், நம்முடைய சரீரங்களைப் புதிய சித்தத்திற்குள் முழுமையாய் ஒப்புக்கொடுத்துவிடுவதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இது கர்த்தரின் வார்த்தையினுடைய வழிகாட்டுதலின் கீழ் நம்மால் முடிந்தமட்டும், பாவங்களைக் களைந்துபோடுதலையும், தினந்தோறும் மற்றும் மணிநேரந்தோறும் பரிசுத்த ஆவியினை அதன் கனிகள், மலர்களாகிய சாந்தம், நற்குணம், பரிசுத்தம், இரக்கம் - அன்பு ஆகியவற்றுடன் வளர்த்தி, விருத்தியாக்குதலையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

ஆகையால் அருமை சகோதரர்களே விசுவாசத்தில் தேவ ஆட்டுக்குட்டியானது நம்முடைய பாவங்களுக்காக அடிக்கப்பட்டுள்ளது என்பதையும், அவரது பலியினுடைய புண்ணியமானது, தேவனுடைய பார்வையில் நம்மைப் பாவங்களினின்று மூடுகின்றது மற்றும் சுத்திகரிக்கப்பட்டதாகக் கருதப்படச்செய்கின்றது என்பதையும்உணர்ந்துகொள்ளுங்கள்; இப்படியாக விசுவாசித்து, இருதயங்களும், சித்தங்களும் கர்த்தருக்கு முழுமையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நிலையில், அவரது பந்தியினிடத்திற்கு வந்து, சாந்தத்துடனும், திடமனதுடனும் அவரது அடையாளங்களில் பங்கெடுங்கள்.

* * *

நீசான் 14-ஆம் தேதி தொடர்புடையதாக, பல்வேறு கேள்விகள் நம்மிடம் கேட்கப்படுகின்றது; இக்கேள்விகள் அனைத்துமே யூதர்களால் பஸ்கா என்று புரிந்துகொள்ளப்பட்டிருப்பது, பஸ்கா பண்டிகையையே ஒழிய, நாம் ஆசரிக்கின்றதும், 14-ஆம் தேதியில் இடம்பெறுகின்றதுமான ஆட்டுக்குட்டியின் அடிக்கப்படுதல் இல்லை என்பதை அடையாளம் கண்டுகொள்ளுதலில்

தவறுவதினாலேயே எழும்புகின்றது. யூதனைப் பொறுத்தவரையில் 14-ஆம் தேதி என்பது, பஸ்காவிற்கான ஆயத்தநாள் மாத்திரமேயாகும் மற்றும் ஆட்டுக்குட்டி புசிக்கப்படுவதும், விசேஷமாக அதன் அடிக்கப்படுதலும், அந்த ஆயத்தத்தின் ஒரு பகுதி மாத்திரமேயாகும். நியாயப்பிரமாணத்தின்படி ஆட்டுக்குட்டியானது நீசான் 14-ஆம் தேதியன்று, மாலையில் - அல்லது சொல்லர்த்தமாகவே சொல்ல வேண்டுமெனில் சாயங்காலங்களுக்கு நடுவில் அடிக்கப்பட வேண்டும். ஆகவே நியாயப்பிரமாணத்தின்படி ஆட்டுக்குட்டியானது 14-ஆம் தேதி, அதாவது 13-ஆம் தேதி மாலை ஆறு மணிக்குமேல் எந்த ஒருவேளையிலாவது அடிக்கப்பட்டு, புசிக்கப்படுகின்றது.

பஸ்காவைப் புசிப்பதற்கு ஆயத்தமாக, பாவமாகிய - புளிப்பு - யாவற்றையும் களைந்துபோடுவதற்கு நம்மில் யாவரும் மறவாமல் இருப்போமாக. "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசீயும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்." (2 கொரிந்தியர் 7:1; 1 யோவான் 1:7) இப்படியாக மீதி ஜீவிதம் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையாக இருக்கும்.

புளிப்பானது போலியான உபதேசத்தை மாத்திரமே அடையாளப்படுத்துகின்றது என்று மிகவும் தவறாய் எண்ணிவிடாதிருங்கள் (மத்தேயு 16:6-12); புளிப்பானது பொல்லாப்பான தன்மைகளைக்குறிக்கின்றது என்று அப்போஸ்தலன் அர்த்தம் கொடுப்பதை நினைவில்கொள்ளுங்கள். பொல்லாத தன்மைகள் என்பது (மிகவும் கொடிதான பொல்லாப்பாகிய) திருட்டு, பொய் மற்றும் கொலைப்பாதகம் எனும் பொல்லாப்பை மாத்திரமல்லாமல், பேரளவில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கின்றதானவர்களைக் கூடத் தாக்குவதற்கு இடம்தருகின்றதான பொல்லாப்புகளாகிய "துர்க்குணம், பகைமை உண்டுபண்ணுதல், பொறாமைகள், வாக்குவாதங்கள், புறங்கூறுதல்கள், தீமை பேசுதல்கள் மற்றும் மாம்சம், பிசாசின் கிரியைகளையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. அன்பின் ஆவியானது நம்முடைய இருதயங்களுக்குள்ளாகக் கடந்துவந்து, துர்க்குணம் எனும் புளித்தமாவைக் களைந்துபோடுவதாக. 1 கொரிந்தியர் 5:6-8; எபேசியர் 4:31; கொலோசெயர் 3:8; தீத்து 3:3 ஆகிய வசனங்களைப்பார்க்கவும்.

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்." (1 கொரிந்தியர் 11:28) ஒவ்வொருவனும் தனது சொந்த ஆவிக்குரிய நலனைக் கருதி, இந்தத் தருணத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ள நாடிட வேண்டும். ஒவ்வொருவனும் மீண்டுமாக இரத்தத்தினால் சுத்திகரிப்பைப் பெற்றுக்கொண்டு, மரணம்வரையிலும் ஆண்டவருக்கு உண்மையாய்க் காணப்படுவதற்கான தனது அர்ப்பணிப்பைப் புதுப்பித்துக்கொள்வானாக. "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து, ஜெபம்பண்ணுங்கள்" எனும் ஆண்டவருடைய வார்த்தைகளையும்கூட நினைவில்கொள்வோமாக.

"சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்." (1 தெசலோனிக்கேயர் 5:25)

*****

# நினைவுகூருதலின் ஆசரிப்பு

அலிகெனியில் (Allegheny) சமீபத்தில் ஆசரிக்கப்பட்டதான நினைவுகூருதலானது நாங்கள் இதுவரை அனுபவித்திராத அளவுக்கு மிகவும் தாக்கம் நிறைந்ததாகவும், பயபக்தியாயும் காணப்பட்டது. கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகவே காணப்பட்டது; இந்த ஒரு தேதிகளில் 1892-ஆம் வருடம் முதல் பொது மாநாடு நடத்துவதைத் தவிர்த்தது முதற்கொண்டு, இவ்வருஷமே அதிகமான எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டனர். சுமார் 200 பேர்கள் கலந்துகொண்டனர்; இந்த ஒரு தருணத்தில் ஈடுபலியில் விசுவாசம்கொண்டிருந்து, கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பை அறிக்கைப்பண்ணின விசுவாசிகளுக்குத் தவிர வேறு எவருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. அநேக சகோதரர்களால் அதிகப்படியான வேலை நேரத்தின் காரணமாகவும், தங்கள் விடுப்புக் காலத்தின்போது பணியில் யாரையாவது அமர்த்துவதற்கு ஆட்கள் கிடைக்காத காரணமாகவும், அலிகெனியில் வந்து கலந்துகொள்ள முடியாமல்போயிற்று. மாலை 7:30 மணிக்கு நாங்கள் கூடினோம்; எனினும் இந்த நேரத்திற்கு வரமுடியாதவர்களுக்காக 8 மணிவரைக்கும் ஆராதனையை நாங்கள் தாமதித்தோம். இதற்கிடையில் சபையார் அனைவரும் சங்கீதங்களும், ஸ்தோத்திரப் பாடல்களும், ஆவிக்குரிய பாடல்களும் பாடி கர்த்தரைத் தொழுதுகொண்டிருந்தோம் மற்றும் நம்மை அன்புகூர்ந்து, நம்மை தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கினவருக்காக எங்கள் இருதயங்களில் இசை இசைத்துக்கொண்டிருந்தோம்.

நாங்கள் துதிபாடலின், 15-ஆம் பாடலைப் பாடினோம்.

பின்னர் கூடியிருக்கிற எங்களுக்காகவும், இதே நோக்கத்திற்காக எங்கும் கூடியிருக்கும் கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்காகவும் தெய்வீக ஆசீர்வாதங்களுக்கு வேண்டி, நாங்கள் ஜெபம் ஏறெடுத்தோம்; தனிமையில் ஆசரிப்பவர்களையும் நாங்கள் ஜெபத்தில் மறந்துவிடவில்லை; எங்களுக்கு முன்பாகக் காணப்படும் "இராப்போஜனத்தினால்" அடையாளப்படுத்தப்படும் உண்மைகளை உணர்ந்துகொள்ளத்தக்கதாக தெய்வீக ஆசீர்வாதத்திற்காகவும், ஞானத்திற்காகவும், கிருபைக்காகவும் வேண்டிக்கொண்டோம். பின்னர் எங்கள் இருதயங்களும், குரல்களும் ஒன்றுசேர துதிப்பாடலின் 290-ஆம் பாடலைப் பாடினோம்.

இதைத் தொடர்ந்து துதிப்பாடலின், 123-ஆம் பாடலைப் பாடினோம்.

பின்னர் பழைய மற்றும் பரிட்சயமான, பக்திக்குரிய, இருதயத்தை உற்சாகப்படுத்துகிற துதிப்பாடலின், 276-ஆம் பாடலைப் பாடினோம்.

எட்டு மணிக்கு நமது கர்த்தர் தம்மை ஜீவ அப்பமாக விவரிக்கும், அவரது வார்த்தைகளை – யோவான் 6:48-58 வரையிலான வசனங்களை வாசித்தோம்.

"ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். அப்பொழுது யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள். அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக்கடைசி நாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் (தொடர்ந்து) புசித்து, என் இரத்தத்தைப் (தொடர்ந்து) பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் (தொடர்ந்து) புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்." (யோவான் 6:48-58)

இதைக் குறித்து விவரமாய்ப் பார்க்கையில், வனாந்தரத்தின் மன்னாவானது, நித்திய ஜீவனை அடையத்தக்கதாக நாம் புசிக்க வேண்டிய நம்முடைய ஆத்துமாக்களுக்கான உண்மையான மன்னாவாகிய நமது கர்த்தர் இயேசுவைச் சித்தரிப்பதற்கான நிழலாக மாத்திரமே காணப்பட்டது என்பதை நாங்கள் பார்த்தோம். நாம் யூதர்களுக்காக அனுதாபம் கொண்டோம் மற்றும் அவர்களால்

அவர்களது மாம்சமான நிலையிலும், அப்போது அருளப்படாத பரிசுத்த ஆவியினுடைய வெளிச்சமூட்டுதலில்லாமலும், நமது எஜமானுடைய வார்த்தைகளில் காணப்பட்டதான தேவனுடைய ஆழமான காரியங்களின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் காணப்பட்டிருப்பார்கள் என்று உணர்ந்துகொள்ள முடிகின்றது. பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள்கூட இன்று அவரது வார்த்தைகளினுடைய அர்த்தத்தை தெளிவற்றே புரிந்துகொண்டிருக்கின்றனர். நமது கர்த்தருடைய மாம்சம் எப்படி, அதைப் புசிக்கின்றவர்களுக்கு ஜீவ அப்பமாக இருக்கின்றது என்று நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். "அப்பமே ஜீவிதத்திற்கான ஆதாரமாக" மனுக்குலம் அனைத்திற்கும் காணப்படுகின்றது மற்றும் இந்தத் தற்கால ஜீவியம் இதன்மேலேயே முக்கியமாய்ச் சார்ந்துள்ளது; ஆகையால் நமது கர்த்தரையும் அவருக்குள்ளான கிருபைகளையும், சத்துவங்களையும் புதிய ஜீவனுக்கான ஆதாரமாய்க் காணப்படும் அப்பத்திற்கு ஒப்பிடும் அடையாளமான வார்த்தைப் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது என்பதை நாங்கள் பார்த்தோம்.

நமது கர்த்தருடைய மாம்சத்திற்கான முக்கியத்துவத்தையும், அது பாவமில்லாதது என்றும் — அவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமானவர்" என்றும் நாங்கள் கவனித்தோம்.

இது அவசியம் என்றும், காரணம் நமது தகப்பனாகிய ஆதாம் இதேபோன்று பாவமில்லா மாம்ச நிலையில் சிருஷ்டிக்கப்பட்டவராய்க் காணப்பட்டதினாலும், தெய்வீகப் பிரமாணத்தை மீறின காரணத்தினால், பாவியானார் மற்றும் அவரது மாம்சம் மரணம் எனும் தெய்வீகத் தீர்ப்பின்கீழ் ஒழுக்க ரீதியிலும், சரீர ரீதியிலும் சீர்க்கெட்டுப்போய்விட்டது என்றும் நாங்கள் பார்த்தோம். மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் அவசியத்தையும் நாங்கள் பார்த்தோம்; இவரது பாவமில்லா மாம்சமே பாவத்தின் காரணமாக அசுசிப்பட்ட ஆதாம் மற்றும் அவரது மாம்சத்திற்குப்பதிலாக சரிநிகர் சமான விலையாக, ஈடுபலி விலைக்கிரயமென ஏற்றுக்கொள்ளப்பட முடியும். இந்த நோக்கத்திற்காகவே நமது கர்த்தர் இயேசு உயர் சுபாவத்தின் மற்றும் நிலையின் கனங்களையும், மகிமைகளையும் துறந்து, "தேவனுடைய கிருபையால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்க்கும்படிக்கு . . . அவர் மாம்சமாக்கப்பட்டார்" என்ற வேதவாக்கியத்தினுடைய விளக்கத்தினை நாங்கள் பார்த்தோம்.

நம்முடைய மீட்பருடைய வார்த்தைகளையே நாங்கள் கவனித்தோம்; அதென்னவெனில்: "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே." (யோவான் 6:51) தகப்பனாகிய ஆதாமின் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதான மாம்சத்திற்காக, நமது கர்த்தருடைய கறைதிறையற்ற மாம்சம் சரிநிகர்சமான விலையாகக் கொடுக்கப்பட்டதானது, தகப்பனாகிய ஆதாமின் மீட்பிற்காக மாத்திரமல்லாமல், அவருடைய மீறுதலின்போது அவருடைய அரைக்குள்ளாகக் காணப்பட்டதான அவரது சந்ததியார் அனைவரின் மீட்பிற்காகக் கொடுக்கப்பட்ட விலையாகக் காணப்படுகின்றது. நமது மீட்பருடைய கறைதிறையற்ற மாம்சத்திற்காக நாம் தேவனை ஸ்தோத்திரித்தோம் மற்றும் அவரது மாம்சமானது அனைவருக்காகவும் பிட்கப்பட்டுள்ளபோதிலும், அந்தப் பிட்கப்பட்ட சரீரம் மற்றும் சிந்தப்பட்ட இரத்தம் நிறைவேற்றிட்டதான மாபெரும் பாவநிவாரண வேலையில் ஒவ்வொருவனும் தனக்கான பங்கினை தனக்காய் ஏற்றுக்கொள்வது, ஒவ்வொருவனிடமும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது என்ற உண்மையையும் நாங்கள் கவனித்தோம். இந்தப் பிட்கப்பட்ட சரீரத்தில் பங்கெடுக்காமல் எவனும் நித்தியமான ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை நாங்கள் பார்த்தோம். இது பல்வேறு வலியுறுத்தல்களுக்கு முற்றிலும் எதிர்மாறான கருத்தை நமக்குக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது கிறிஸ்துவைப்பற்றியும், பாவங்களுக்கான அவரது பலிப் பற்றியுமான அறிவு, இரட்சிப்பிற்கு அவசியமற்றது என்ற கருத்திற்கு நேர் எதிரான நிலையை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; இது கர்த்தருடைய மாம்சத்தைப் புசிப்பது மற்றும் அவரது இரத்தத்தில் பங்கெடுப்பது மூலம் மாத்திரமே எவர் ஒருவராலும் நித்திய ஜீவனை அடையமுடியும் எனும் கருத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது.

மாம்சத்தைப் புசிப்பது என்பதன் அர்த்தமென்ன என்பதைப்பற்றி நாங்கள் பார்த்தோம்; சொல்லர்த்தமான அப்பத்தைப் புசித்தல் என்பது இரத்தத்தின் மூலம் உறுப்புகளுக்குள் அவை ஒன்றிப்போய் விடுவதையும், எடுத்துக்கொள்ளப்படுவதையும் குறிப்பதாய் இருப்பதுபோல, நாம் கிறிஸ்துவினுடைய மாம்சத்தைப் புசிப்பது என்பது (1) அவர் பாவமில்லாதவர் மற்றும் நமக்கான பொருத்தமான பலியாக இருக்கின்றார் என்ற உண்மையினைக் குறித்த நம்முடைய உணர்ந்துகொள்ளுதலைக் குறிக்கின்றது; மற்றும் (2) அவர் தம்மையே அனைவருக்குமான ஈடுபலியாக ஒப்புக்கொடுத்தார் என்ற உண்மையின் மீதான நமது விசுவாசத்தைக் குறிக்கின்றது; மற்றும் (3) இந்த அவருடைய பலியானது, பரமபிதா அங்கீகரிக்கத்தக்கதாகக் காணப்பட்டதற்கு ஆதாரம் — மரித்தோரிலிருந்தான நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலிலும், அவர் வாயிலாக விசுவாசிகளைப் பிதா ஏற்றுக்கொள்ளுதலிலும், பெந்தெகொஸ்தே நாள் துவங்கி, இன்றுவரையிலுமாக தொடர்ந்துகொண்டிருக்கும் புத்திர சுவிகாரத்தின் பரிசுத்த ஆவியைப் பிதா அருளினதிலும் விளங்குகின்றது என்ற நம்முடைய நம்பிக்கையையும் குறிக்கின்றது; மற்றும் (4) நித்திய ஜீவனுக்கான நம்முடைய வாஞ்சையையும், கிறிஸ்துவுக்குள்ளாகக் காணப்பட்டதான

தூய்மைக்கான நமது வாஞ்சையையும் குறிக்கின்றது; இன்னுமாகப் பாவத்திலிருந்து நம்முடைய விலகுதலையும், முதலாம் ஆதாமுடனான நம்முடைய உறவைத் துறத்தலையும், உலகத்தின் ஜீவனுக்காகக் கொடுக்கப்பட்டதான இரண்டாம் ஆதாமினுடைய மாம்சத்தின் — அவரது பலியின் — அடிப்படையில் இரண்டாம் ஆதாம் மூலமான ஜீவனுக்கான நம்பிக்கையை நாம் ஏற்றுக்கொள்வதையும் குறிக்கின்றது.

அடுத்ததாக நாங்கள் 1 கொரிந்தியர் 11:23-26 வரையிலான வசனங்கள் குறித்துப் பார்த்திட்டோம். மேலும் கர்த்தருடைய நினைவுகூருதல் இராப்போஜனமானது, பஸ்கா இராப்போஜனத்திற்குப் பின் நடந்தது மற்றும் நினைவுகூருதல் இராப்போஜனமானது புதியதும், பஸ்காவின் இடத்தில் இடம்பெறுவதற்கெனத் திட்டமிடப்பட்டதுமானதாய் இருக்கின்றது என்ற உண்மைகளையும் நாங்கள் கவனித்தோம். எகிப்தின் அடிமைத்தனத்தினின்றுள்ள மாம்சீக இஸ்ரயேலர்களின் விடுதலையையும், அவர்கள் எகிப்தை விட்டுப்புறப்படுவதற்கு முந்தின இரவில் சம்பவித்த, அவர்களது முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலையும் நாங்கள் பார்த்து, அவைகளின் நிஜங்களைக் கவனித்தோம்; அதாவது எகிப்து உலகத்திற்கான நிழலாய்க் காணப்படுகின்றது என்றும், அதன் இராஜாவாகிய பார்வோன், இவ்வுலகத்தின் அதிபதிக்கு நிழலாய் இருக்கின்றார் என்றும், எகிப்தின் அடிமைத்தனமானது, பாவத்தினுடைய அடிமைத்தனத்திற்கான நிழலாக இருக்கின்றது என்றும், மோசேயின் தலைமையின் கீழான அனைவருடைய விடுதலையானது, அடுத்த யுகத்தில் தேவனை அன்புகூருகின்ற அனைவருக்கும், அவருக்குப் பலி ஏறெடுக்க விரும்புகின்றவர்களுக்கும், நிஜமான மோசேயின் (கிறிஸ்துவின்) தலைமையின் கீழான இறுதி விடுதலைக்கான நிழலாய் இருக்கின்றது என்றும், சாத்தான் மற்றும் அவனது பின்னடியார்களின் இறுதி வீழ்ச்சிக்கு, பார்வோன் மற்றும் அவனது சேனைகளின் அழிவானது நிழலாய் இருக்கின்றது என்றும் பார்த்தோம்.

இக்கருத்துக்கள் அனைத்திற்கும் இசைவாகவும் மற்றும் இக்கருத்துக்களின் ஒரு பாகமாகவும் ஜனங்கள் அனைவரும் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்படுவதற்கு முந்தின இரவில் நிகழ்ந்ததான இஸ்ரயேலருடைய முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலானது (அ) விடுதலையானது, (நீதியை அன்புகூர்ந்து, அதை நாடுகின்ற அனைவரின் விடுதலைக்காக ஆயிரவருட யுகம் மற்றும் அவரது இராஜ்யத்தின் முழுமையான அறிமுகத்திற்கு முந்தின "இரவில்") இப்பொழுது தேவன் எப்படி ஒரு குறிப்பிட்ட வகுப்பாரைத் தப்புவிக்கப்பண்ணுகின்றார், கடந்துபோகப்பண்ணுகின்றார், ஜீவன் அளிக்கின்றார் என்பதற்கு நிழலாக இருக்கின்றது என்று நாங்கள் பார்த்தோம். தேவனுடைய ஜனங்கள் இவ்வுலகத்திலும், இவ்வுலகத்தினுடைய அதிபதியின் பொல்லாத செல்வாக்கின்கீழும் இன்னமும் காணப்படுகையில், இந்த இரவில் தப்புவிக்கப்படுகின்ற, விடுவிக்கப்படுகின்ற, கடந்துபோகப்படுகின்றதான வகுப்பார் முதற்பேறானவர்களாக – சபையாக மாத்திரமே காணப்படுகின்றனர்; "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையாக" மாத்திரமே காணப்படுகின்றனர். (எபிரெயர் 12:23)

முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலுக்கான நிழலில், பழுதற்ற ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதும், அதன் இரத்தம் அவர்களுடைய வீட்டின் நிலைக்கால்களில் தெளிக்கப்படுவதும், அதன் மாம்சம், கசப்பான கீரைகளுடன் புசிக்கப்படுவதும் அவசியமாய் இருந்ததை நாங்கள் கவனித்தோம். இந்தப் பஸ்கா ஆட்டுக்குட்டியானது "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டிக்கான" நிழலாய் இருக்கின்றது என்றும், நிழலான இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் நிழலான ஆட்டுக்குட்டியைப் புசித்ததுபோன்று, நிஜமான முதற்பேறானவர்களாகிய தெரிந்தெடுக்கப்பட்ட சபையும் நம்முடைய ஆட்டுக்குட்டியினுடைய மாம்சத்தைப் புசிக்க வேண்டும் என்றும் நாங்கள் பார்த்தோம். நம்முடைய இருதயங்களும் துர்மனசாட்சி அனைத்திடமிருந்தும், பாவத்துடனான தவறான தொடர்பு அனைத்திடமிருந்தும் நீங்க, விலையேறப்பெற்ற இரத்தத்தினால் தெளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், "கசப்பான கீரைகள்" என்பது உலகத்தின் ஜீவனுக்காகக் கொடுக்கப்பட்டதான நமது கர்த்தருடைய மாம்சத்தை நாம் புசிப்பதற்கு அவசியமான சோதனைகளை, எதிர்ப்புகளை, துன்புறுத்தல்களை, சிரமங்களை, மனித சித்தத்தின் சிலுவைகளைக் குறிக்கின்றதென்றும் நாங்கள் பார்த்தோம்.

தம்முடைய மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும் அடையாளமாக அப்பத்தையும், திராட்சப்பழரசத்தையும் கொடுத்துள்ள விஷயத்தில், நாம் இரண்டு காரியங்களை அடையாளங்கண்டுகொள்ள நமது கர்த்தர் விரும்பியுள்ளார் என்று நாங்கள் பார்த்தோம்; அவை: (1) தாம்தான் நிஜமான ஆட்டுக்குட்டி மற்றும் சுவிசேஷ யுக சபையைக் கடந்துபோகுதலும் (அ) தப்புவிக்கப்படுதலும் மற்றும் அவள் மரணத்திலிருந்து கிறிஸ்துவுக்குள்ளான புதிய ஜீவனுக்குள் கொண்டுவரப்படுதலும், அவள் அவரோடுகூட முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைதலுமானவைகள் நிஜமான பஸ்காவாய் இருக்கின்றது. (2) புளிப்பில்லாத அப்பமும், திராட்சப்பழரசமும் உண்மையான ஆட்டுக்குட்டியினுடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றதாகவும், நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய இடத்தை எடுத்துக்கொள்கின்றதாகவும் இருக்கின்றது. அப்பமும்,

திராட்சப்பழரசமும் ஆட்டுக்குட்டியின் நிஜமாக இராமல், மாறாக நிஜமான ஆட்டுக்குட்டிக்கான அடையாளங்களாகவே காணப்படுகின்றது. ஆகையால் நமது கர்த்தரை விசுவாசத்தினால் நாம் புசிக்கும், நாம் பங்கெடுக்கும் காரியத்தோடும் மற்றும் இதன் அர்த்தத்தோடும், நாம் (சொல்லர்த்தமான) புளிப்பில்லாத அப்பத்திலும், திராட்சப்பழரசத்திலும் பங்கெடுக்கும் காரியத்தினை ஒப்பிடுகையில், அப்பம் மற்றும் திராட்சப்பழ ரசத்தில் பங்கெடுக்கும் காரியமானது குறைவான முக்கியத்துவம் உடைய காரியமாகவே காணப்படுகின்றது என்று நாங்கள் பார்த்தோம்; கர்த்தர் கிருபையுள்ளவர் என்று ருசித்துப்பார்த்திடாத அநேகர், இந்த அடையாளச் சின்னங்களில் பங்கெடுத்துள்ளனர் என்றும், கர்த்தர் கிருபையுள்ளவர் என்றும் ருசிப்பார்த்துள்ள அநேகர், தங்கள் சிலாக்கியத்தினைக் காணாதவர்களாகவும், அவரது பிட்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்கும் அடையாளமான சின்னங்களில் பங்கெடுக்கும் வாய்ப்பினைப் பெற்றிராதவர்களாகவும் காணப்படுகின்றனர் என்று நாங்கள் பார்த்தோம். எங்களுடைய இருதயங்களில் உண்மையான விருந்தையும் மற்றும் நாம் பயன்படுத்தும்படிக்குக் கர்த்தர் நமக்குக் கற்பித்ததும், அருளியுள்ளதுமான அடையாளச் சின்னங்களின் விருந்தையும் – இரண்டையும் பெற்றிருப்பதற்கான நம்முடைய சிலாக்கியத்தின் நிமித்தம் நாங்கள் களிகூர்ந்தோம்.

அப்பம் புளிப்பில்லாததாய் இருந்தது என்றும், புளிப்பானது நிழலில் பாவத்தைக் குறிக்கின்றது என்றும் நாங்கள் பார்த்தோம். அப்பமானது நாம் விசுவாசத்தினால் புசிக்கின்றதான நமது கர்த்தருடைய மாம்சத்தை மாத்திரம் அடையாளப்படுத்தாமல், அதை நாம் புசித்தவர்களாக, அவருடைய ஆவியைப் பெற்றவர்களாக, முதற்பேறானவர்களின் அவரது சபையென நாம் புளிப்பில்லாத ஒரே அப்பத்தில் ஒன்றாய் அங்கத்தினர்களெனக் கருதப்படுகின்றோம் என்ற அப்போஸ்தலனுடைய விளக்கத்தையும் நாங்கள் கவனித்தோம். ஆகையால் எப்படி ஒரு சிறு புளிப்பானது, முழு மாவையும் புளிக்க வைத்திடுகின்றதோ, அப்படியே ஒரு சிறு பாவமும்கூட நம் மத்தியில், மாபெரும் புளிப்புகளை உண்டாக்கிவிடும் என்று நாம் நினைவில் கொள்ளும்படிக்கு அப்போஸ்தலன் நமக்குப் புத்திமதி கூறுகின்றார். ஆகையால் "நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே (மிக மோசமான துன்மார்க்கத்தோடே) அல்ல, (துன்மார்க்கமாயும், இரகசியமாயும் இருக்கிறதுமான) துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்று அப்போஸ்தலன் புத்திமதி கூறுகின்றார். (1 கொரிந்தியர் 5:6-8)

இந்தக் கருத்தைத் தொடர்ந்து, வளர்ச்சியடைந்துள்ள கிறிஸ்தவர்களைப் (தங்கள் இருதயங்களிலிருந்து பாவங்கள் சுத்தகரிக்கப்பட்டு, தங்களை முழுமையாய்க் கர்த்தருக்கு அர்ப்பணித்தவர்களை) புளிப்பில்லாத ஓர் அப்பத்தோடு ஒப்பிட்டவராக, அப்போஸ்தலன், இவர்கள் அனைவரும் (கிறிஸ்துவுடன்) ஓர் அப்பத்தில் அங்கத்தினர்களாக (அ) பாகங்களாக – மற்றவர்களுக்கு ஜீவனளிக்கும் வல்லமையாகவும், ஆற்றலாகவும் தாங்கள் ஆகத்தக்கதாக, பிட்கும்படிக்கு உறுதி பூண்டிருப்பவர்களாக இருக்கின்றனர் என்று தெரிவிக்கின்றார்; "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா (சொல்லர்த்தமான) அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். (1 கொரிந்தியர் 10:16, 17; திருவிவிலியம்) இப்படியாக இரட்டைக் காரியங்களைக் காண்கின்றோம்; அவை: (1) நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கின்றார்; ஆதலால் பாவத்தை விட்டொழிக்க நாடி மற்றும் நமது மீட்பருடைய புண்ணியத்தினைப் புசித்துப் பண்டிகையை ஆசரிக்கின்றோம். (2) அவருடனான நம்முடைய ஐக்கியம் மற்றும் எதிர்க்காலத்தில் வரும் மகிமையில் பங்கடையத்தக்கதாக, இந்தத் தற்காலத்தின் பாடுகளில் பங்கெடுப்பதற்கான அர்ப்பணிப்புமாகும். கிறிஸ்துவினுடைய சரீரத்தில் இந்த ஒரு வளர்ச்சி நிலையை எட்டியுள்ளவர்கள் அனைவரும், மற்றவருடைய நலனுக்காக, அவரோடுகூடத் தாங்கள் பிட்கப்படும்படிக்கு உறுதிபூண்டவர்களாகக் காணப்படுவார்கள் என்று நாம் பார்க்கின்றோம்.

இப்படியானவர்கள் அனைவரும் தங்களுடைய ஆண்டவருடைய ஆவியினால் – பிதாவினிடத்திலும், பிதாவின் சாயலை உடையவர்களிடத்திலும் மற்றும் அனைவரிடத்திலும் அன்பு பாராட்டும் ஆவியினால் இயக்கப்படுபவர்களாய் இருப்பார்கள். இவர்களிடத்திலேயே அப்போஸ்தலன்: "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" என்று கூறுகின்றார். (1 யோவான் 3:16) மற்றவர்களுடைய நலனுக்காகப் பிட்கப்படுவதற்கான இந்த விருப்பமும், வாஞ்சையும், நமது கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரத்தை நாம் முதலாவது புசித்து, அவரது

சிந்தையை/ஆவியை, மனதை, பண்பை, அன்பைப் பெற்றுக்கொண்டதன் விளைவாக உண்டானதேயாகும். இப்படிப்பட்டவர்களே, "நாம் அவரோடுகூடப் பாடுபட்டால், அவரோடுகூட ஆளுகையும் செய்வோம்" என்றும், "அவரோடுகூட மரித்தோமானால், அவரோடுகூடப் பிழைத்தும் இருப்போம்" என்றுமுள்ள வாக்குத்தத்தங்களைப் பெற்றிருக்கின்றனர்.

இப்படியாக அப்பத்தினுடைய அர்த்தத்தைப்பார்த்து, அதை எங்கள் இருதயத்தில் புசித்தவர்களாக இருந்து மற்றும் மற்றவர்களைப் போஷிப்பதற்காகவும், ஆசீர்வதிப்பதற்காகவும் கர்த்தரோடுகூடப் பிட்கப்படும்படிக்கு மீண்டுமாக உறுதிபூண்டவர்களாக இருந்து, வேதவாக்கியத்தினுடைய மாதிரியைப் பின்பற்றினவர்களாக, நித்திய ஜீவனளிக்கும் அப்பத்திற்காக தேவனை ஸ்தோத்திரித்தோம். இதைத் தொடர்ந்து கொஞ்சம் நேரம் அமைதி காக்கப்பட்டது; இவ்வேளையில் அப்பமானது பங்கெடுப்பவர்களிடத்தில் எடுத்துச் செல்லப்பட்டது.

அடுத்து நாங்கள் திராட்சப்பழரசத்தைக் குறித்துப் பார்த்தோம் மற்றும் அது மரணத்தை அடையாளப்படுத்துகின்றது என்று பார்த்தோம்; அதில் மரணம் மாத்திரமல்லாமல், பாடுகளும் ஏறக்குறைய சம்பந்தப்பட்டு இருக்கின்றது. திராட்சப்பழங்களானது நசுக்கப்படுகின்றது, மிதிக்கப்படுகின்றது, வெகுவாய்ப் பிழியப்படுகின்றது, இல்லையேல் திராட்சப்பழரசம் கிடைக்காது என்று நாங்கள் பார்த்தோம். திராட்சப்பழச்சாறானது, கிறிஸ்துவினுடைய இரத்தத்திற்கு, அவரது அர்ப்பணிக்கப்பட்ட ஜீவனுக்கு அடையாளமாகவும், அவரோடுகூட உடன் பலிச் செலுத்துபவர்கள் அனைவருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜீவயங்களுக்கான அடையாளமாகவும் காணப்படுவதை நாங்கள் பார்த்தப்போது, அது மிகவும் அருமையான மற்றும் பொருத்தமான அடையாளமாய்க் காணப்படுவதை நாங்கள் கண்டோம். நமது கர்த்தர்தாமே தம்மைத் திராட்சச்செடிக்கும், அவரது பின்னடியார்களைக் கொடிகளுக்கும் ஒப்பிட்டு, நாம் அதிகக் கனிகள் கொணர்வது அவரது விருப்பமாய் இருக்கின்றது என்று தெரிவித்தார்; மேலும் நாம் பயன்படுத்துகின்றதான திராட்சப்பழச்சாறானது, கிறிஸ்துவாகிய திராட்சச்செடியின் *கனிகளுக்கும்*, அவரது சரீரத்தின் அங்கத்தினர்களென உண்மையுள்ளவர்களாய்க் காணப்படும் அனைவரின் – தங்களைப் பலியாக்கிடுவதற்கென்றும், தேவனுக்குச் சொந்தமான தங்கள் சரீரங்களிலும், தங்கள் ஆவிகளிலும் தேவனை மகிமைப்படுத்தத்தக்கதாகக் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்தொடர நாடும் அனைவரின் - *பாடுகளுக்கும்* பொருத்தமான அடையாளமாய்க் காணப்படுகின்றது.

கர்த்தருடைய சிங்காசனத்தில் தாங்களும் உட்காரத்தக்கதாக, அவரிடம் வேண்டிக்கொண்டதான ஆதிக்காலத்து அந்த இரண்டு சீஷர்களுடைய வார்த்தைகளை நாங்கள் நினைவுகூர்ந்தோம் மற்றும் அவர்கள் வேண்டிக்கொண்டதானது, சுயத்தை வெறுத்தலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதை அவர்கள் முழுமையாய்ப் புரியாதிருந்தார்கள் என்னும் விதமான நமது கர்த்தருடைய பின்வரும் பதிலையும் நாங்கள் நினைவுகூர்ந்தோம்; "நான் குடிக்கும் (அவமானம் மற்றும் பாடுகளின்) பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை (மரணத்தை) நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார்." (மத்தேயு 20:22) அப்போஸ்தலர்களால் இவ்விஷயம் குறித்து முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும், அர்ப்பணம் பண்ணுவதிலும், கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, சிலுவையைச் சகிக்க தாங்கள் விரும்புவதாகக் கூறுவதிலுமுள்ள அவர்களது ஆயத்தத்தில் நமது கர்த்தர் மகிழ்ச்சியடைந்தார் மற்றும் இதுவே அவர்களது இருதயத்தின் வாஞ்சையாக இருக்கின்றபடியால், இப்படியாகவே அவர்கள் செய்வார்கள் – கிறிஸ்துவோடுகூடப் பாடுபடுவதற்கான விருப்பம் அவர்களிடத்தில் காணப்படுகின்றதால் (காணப்படும்வரை), அவர்கள் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், இந்த வாய்ப்பின் மூலமாகவும், அதற்கான உண்மையின் மூலமாகவும், அவர்கள் அவரது இராஜ்யத்தில் பங்கடைவார்கள் என்றும், அதுவும் அவர்களுள் யார்யாருக்கு எந்த இடம் என்று தம்மால் நிர்ணயிக்க முடியாதபோதிலும், மற்றும் இது பிதாவின் கரங்களில் காணப்படுகின்ற போதிலும், அவர்கள் அவருடைய இராஜ்யத்தில் பங்கடைவார்கள் என்றும் அவர்களுக்கு உறுதியளித்தார். இது நாம் எவ்வளவுதான் பெலவீனர்களாகவும், முக்கியத்துவமற்றவர்களாகவும் காணப்பட்டாலுங்கூட, நம்மை வழிநடத்திடுவதற்குக் கர்த்தர் தம்முடைய கிருபையினால் விருப்பமும், வல்லமையும் கொண்டவராய் இருக்கின்றார் என்றும், நாம் அவருக்கும், பலிச்செலுத்தும் அவரது ஆவிக்கும் உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருந்தால், அவர் நம்மை ஜெயங்கொண்டவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் வெளிக்கொண்டுவருவார் என்றுமுள்ள உற்சாகமூட்டும் எண்ணங்களை எங்களுக்குக் கொடுத்ததாய் இருந்தது.

பின்னர்ப் பாத்திரத்திற்காக – நம்முடைய மீட்பின் காரணமாக, நம் சார்பிலான கிறிஸ்துவின் பாடுகளுக்காகவும் மற்றும் அவரது பாத்திரத்தில், அவரது பாடுகளில், அவரது அவமானங்களில் – பங்கடைவதற்கான நமக்கான சிலாக்கியத்திற்காகவும் நாங்கள் கர்த்தரை ஸ்தோத்திரித்தோம்; அவரை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகளில் நாம் பங்கடைவோமாக; "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்" என்ற

திவ்விய வாக்குத்தத்தம் அனைத்தும் நித்திய கனமகிமையை உண்டுபண்ணும் என்று அறிந்து களிகூருவோமாக. (மத்தேயு 5:11, 12) "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்." என் பாடுகளில் ஐக்கியம் கொள்ளுங்கள் என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகள் நினைவுகூரப்பட்டு, பாத்திரமானது பரிமாறப்பட்டது.

எங்கள் அனைவரின் ஜெபமாகவும், கர்த்தருக்கான எங்களது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதியளிக்கும் விதமாகவும் காணப்படும் வார்த்தைகள் அடங்கிய துதிப்பாடலின் 259-ஆம் பாடலைப் பாடி, ஆராதனையை நிறைவு செய்தோம்.

*****

**ச**மீபத்தில் நாங்கள் பெற்றுக்கொண்ட ஒரு கடிதத்தில், சகோதரர் டி.பி.ஜாக்சன் அவர்கள், நான்குபேர் தன்னுடைய இல்லத்தில் கூடிவந்து, நினைவுகூருதலில் பங்கெடுத்ததைத் தெரிவித்தப் பிற்பாடு, பின்வருபவைகளையும் எழுதியுள்ளார்:

இங்குள்ள எங்களது சிறு ஐக்கியத்தினுடைய கவனத்திற்குச் சமீபமாக வந்துள்ள சில காரியங்களை உங்கள் கவனத்திற்குள் கொண்டுவந்திட நான் விரும்புகின்றேன், அது பின்வருமாறு:

இங்குள்ள சகோதரரில் ஒருவர், M ------- என்ற இடத்திலுள்ள சபைக்கு, ஏப்ரல் 5-ஆம் தேதி போய், கர்த்தருடைய இராப்போஜனத்தினை ஆசரித்திட உதவும்படிக்கு வேண்டுகோள் விடப்பட்டது. இது B ----- என்ற இடத்திலுள்ள தனது சொந்த கூடுகையில் தான் கலந்துகொள்ள முடியாமல் செய்திடும் என்பதினால், அதுவும் இங்கு இரண்டு குடும்பத்தார் மாத்திரமே காணப்படுகின்றார்கள் என்பதினால், அச்சகோதரன் மறுப்புத் தெரிவித்துவிட்டார். Y----- என்ற இடத்திலுள்ள ‘A’ என்ற சகோதரன், வேண்டுகோளுக்கு இணங்கி, M---- என்ற இடத்திலுள்ள சபையாரிடத்திற்குச் சென்று, அவர்களுக்கு நினைவுகூருதல் இராப்போஜனத்தை ஆசரித்திட உதவும்படிக்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றார் மற்றும் இதைப்போன்ற காரியத்திற்காகச் சகோதரர் ‘M’ -அவர்கள் N ----- என்ற இடத்திலுள்ள சபையாரிடத்திற்குச் செல்கின்றார்.

M ----- என்ற இடத்திலுள்ள சபையாரிடத்திற்கு வரும்படியான வேண்டுகோளுக்கு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் நிமித்தம் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது; ஆனால் மேலும் சிந்தித்துப் பார்த்ததில், சபையின் அங்கத்தினர்கள், நினைவுகூருதல் ஆசரிப்பிற்காய் உதவிடும்படிக்கு மற்றச் சபையாருடைய வழிநடத்துபவர்களையும், முதன்மையான அங்கத்தினர்களையும் அழைக்கும் பழக்கத்தை வைத்துக்கொள்வது பின்வரும் காரணங்களினிமித்தம் ஞானமாய் இராது என்று எங்களுக்குத் தோன்றியது; காரணங்கள் பின்வருமாறு:

(1) பஸ்கா என்பது குடும்ப ஆசரிப்பாகும். இது கர்த்தருடைய இராப்போஜனமானது விசேஷித்த ஆடம்பரமாய்க் காண்பித்துக்கொள்ளும் தருணமாக்கப்படக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

(2) அப்போஸ்தலர் காலங்களில், தங்களுக்கு நினைவுகூருதல் ஆராதனையை நடத்தித் தருவதற்காய், மூப்பர் ஒருவர் வந்து ஊழியம்புரியும்படிக்கு, ஒரு சபையார் இன்னொரு சபையாரிடம் வேண்டிக்கொள்ளும் வழக்கம் காணப்பட்டதாக நமக்கு எந்தப் பதிவுகளுமில்லை.

(3) விசுவாச துரோகம் நடந்திட்டதான சபைகள் யாவற்றிலும் கர்த்தருடைய இராப்போஜனத்தை மையமாகக் கொண்டுதான் குருமார் வகுப்பினர், மோசமான அநேகம் குருமார் சார்ந்த கொள்கைகளை ஏற்படுத்தினார்கள். இதை இன்றைய நாட்களில் காணப்படும் புரோட்டஸ்டண்ட் குருமார் வகுப்பினர், சாதாரணமான வகுப்பார் மீதான குருமார் வகுப்பாரின் முக்கியத்துவத்தினைப் பெரிதும் மிகைப்படுத்திடுவதற்கான வழிவகையாகப் பெற்றிருக்கின்றனர். கடந்த பனிகாலத்தின்போது, Kentucky-யிலுள்ள Louisville-யின் Presbytery சபையானது, பாதிரி - "நியமிக்கப்பட்ட ஊழியக்காரன்" இல்லாமலேயே சபையின் சாதாரண அங்கத்தினர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிப்பது சரியே என்று போதித்ததற்காக ஊழியக்காரர் ஒருவரைச் சபை நீக்கம் செய்துள்ளது.

(4) கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்க வந்து, உதவும்படிக்கு ஒரு சபை இன்னொரு சபையாரிடத்தில் "வழிநடத்துபவரை," "மூப்பரை" அல்லது முதன்மை வகிக்கும் அங்கத்தினனை அனுப்பும்படிக்கு வேண்டிக்கொள்ளும் பழக்கமானது, ஆதிசபையின் சீர்க்குலைவுக்குக் காரணமாய்க் காணப்பட்டதான கிறிஸ்தவ குருமார்கள் மீதான பற்று ஆர்வத்தின் மற்றும் குருமார் உரிமை கோட்பாட்டின் - அதே ஆவியின் நுணுக்கமான துவக்கமாய் இருக்குமல்லவா? இவ்வழக்கமானது - இந்த ஆசரிப்பை ஆசரிப்பதற்கெனத் தொலைவில் உள்ள சபைக்குச் சென்று உதவும்படிக்கு அழைப்பு விடுக்கப்பட்ட வழிநடத்துனனின் மனதை பெரு மகிழ்வுணர்ச்சிக்கொள்ள செய்வதற்கு ஏதுவானதல்லவா? மற்றும் ஆசரிப்பை நடத்திடுவதற்கு "வழிநடத்துபவர்களை" மற்றும் "மூப்பர்களைப்" பெற்றிருப்பது அவசியம் அல்லது பயனள்ளதும், முக்கியமுமானது என்ற எண்ணத்தினை அங்கத்தினர்கள் மனதில் உருவாக்கிடுவதற்கு மாத்திரமல்லாமல், தங்கள் சபையின் சொந்த மூப்பரானவர், தொலைவிலுள்ள சபையிலிருந்துவரும் ஒருவரால், இந்த முக்கியமான கடமையின் விஷயத்தில் வலுவூட்டப்படுவதற்கு வெளியிலிருந்துவரும் வழிநடத்துனனின் பங்கு மிகவும்

அவசியமாய் இருக்கின்றது என்றுமுள்ள எண்ணத்தினை, அங்கத்தினர்கள் மனதில் உருவாக்கிடுவதற்கு ஏதுவானதல்லவா? தங்களுக்குப் பழக்கப்பட்டிருக்கும் அயலானைக்காட்டிலும், தொலைவிலிருந்து வரும் ஒரு மனுஷனை "பெரிய" மனுஷனாக கருதிடுவது, மனுஷீக சுபாவத்தினுடைய பெலவீனமாய் இருக்கின்றது.

(5) சபையில் நற்கருணை ஆராதனையை நடத்திடுவதற்குப் பாஸ்டருக்கு உதவியாக இருக்கும்படிக்கு சமீபமாகக் காணப்படும் சபையிலிருந்து பாதிரி ஒருவரை அழைத்துக்கொள்ளும் வழக்கமானது பிரஸ்பைடீரியன் சபைகளில் சகஜமான ஒரு காரியமாகும் மற்றும் இது ஆசரிப்பின்போது பாதிரி காணப்படுவதின் முக்கியத்துவத்தை உயர்வாய்க் காண்பிக்கும் பொருட்டுச் செய்யப்படுவதாகத் தெரிகின்றது மற்றும் இவ்வழக்கம் அறுவடைகாலத்தின்போதான கர்த்தருடைய தாழ்மையுள்ள பின்னடியார்களினால் கைக்கொள்ளப்படுவதைப் பார்க்கிலும், தடைப்பண்ணப்படுவதே கனத்திற்குரியதாய் இருக்குமல்லவா?

கிறிஸ்தவ மதகுருப் பற்று ஆர்வம் மற்றும் பிரிவினை வெறி மற்றும் குறுகிய நோக்கத்திற்கான சோதனைகளானது, நமக்கான சோதனைகளிலேயே மிகவும் சாதுரியமான, "பிசாசின் தந்திரங்களிலேயே" மிகவும் வஞ்சகமான சோதனைகளாகக் காணப்படுகின்றது என்று நான் எண்ணுகின்றேன். வரும்படி அழைப்பு விடுத்தவர்களும், அழைப்பினை ஏற்றுக்கொண்டவர்களுமான இந்தச் சகோதரர்களானவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி நல்நோக்கத்திலேயே இதைச் செய்துள்ளனர் மற்றும் இந்த நடைமுறையில் அபாயம் ஏதேனும் காணப்படுமோ என்று கொஞ்சமும் எண்ணிப் பார்க்காதவர்களுமாய்க் காணப்பட்டுள்ளனர் மற்றும் என்னுடைய முதலாம் அபிப்பிராயத்தின்படிதான் நான் இவற்றை உறுதிப்படுத்தியுள்ளேன் மற்றும் இந்தப் பழக்கத்தில் அபாயம் காணப்படுகின்றது என்றும், "சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல - தீங்கற்றதாய்த் தோற்றமளிக்கின்றதும் மற்றும் பக்திவிருத்திக்கு ஏதுவான நடைமுறையாகத் தோற்றமளிக்கிறதுமான இந்தப் பழக்கத்தினால் - மனமானது கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்றும், எளிமையினின்றும் விலகும்படி கெடுக்கப்படுமோவென்றும்" பயந்திருக்கிறேன். இதைக்குறித்து நீங்கள் ஆழ்ந்து, ஜெபத்துடன் சிந்திப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

இன்னுமாக இவ்வழக்கமானது பரவலாகிக் கொண்டிருக்கின்றதா என்றும் நான் அறியவிரும்புகின்றேன். இந்தப் பக்கத்திலுள்ள கிட்டத்தட்ட அனைத்துச் சபைகளிலும் இது நடந்துள்ளதாகத் தெரிகின்றது. இப்படித்தான் மற்ற அநேக இடங்களிலும் காணப்படுகின்றதா அல்லது இங்குள்ள இடத்தில் மாத்திரம் இப்படிக் காணப்படுகின்றதா என்பதை அறிந்துகொள்வதும் சுவாரசியமாய் இருக்கும். ஒருவேளை அநேகம் சபைகளில் நடந்துள்ளதெனில், இது சீர்த்திருத்தப்பட்ட சபைகளில் "அக்கிரமத்தின் இரகசியத்தினுடைய" முளைகளைச் சத்துரு நடுவதற்கான பொருத்தமான தருணமாய் இருக்கும்; ஏனெனில் ஒருவேளை இப்பழக்கம் பரவலாகிடும்போது, அதிகம் ஒதுங்கிக் காணப்படும் மற்றும் குறைவான தாலந்துள்ள அங்கத்தினர்கள் தங்களைக் காட்டிலும் இந்த "வழிநடத்துபவர்களே" நினைவுகூருதல் ஆசரித்தல் தொடர்புடைய விஷயத்தில் அதிகம் பங்காற்ற வேண்டியவர்களாய் இருக்கின்றனர் என்று நிச்சயமாய் எண்ணிடுவார்கள் மற்றும் காலப்போக்கில் மூப்பர்கள் மற்றும் அங்கத்தினர்களுக்கு இடையிலான வேறுபாடானது, இறுதியில் குருக்கள் வகுப்பார் என்பவர்கள் தனித்துத் தெரியும் அளவுக்கு, விரிவடைந்துவரும்.

தங்கள் உண்மையுள்ள,<br>டேவிட் பி. ஜாக்சன்.

* * * * * * *

மேலே கடிதத்தில் இடம்பெறும் இந்த நண்பர்கள் எவரும், "குருக்கள்/பாதிரிகள் கோட்பாட்டினை" ஊக்குவிப்பதற்குக் கொஞ்சமேனும் எண்ணம் கொண்டிருக்கவில்லை என்று நாம் ஊகிக்கின்றோம். அழைப்பு விடுத்ததான சபைகளானது, இந்த வருடத்தில் முதல்முறையாக நினைவுகூருதலை ஆசரித்துள்ளார்கள் என்று நாம் எண்ணுகின்றோம் மற்றும் அதிக அனுபவமிக்க யாரேனும் அவற்றைத் துவங்கிவைப்பது சரியே. இது தவிர கடிதத்தில் குறிப்பிடப்படும் அந்தச் சிறுசிறு கூடுகைகளானது Y ----- என்ற இடத்திலுள்ள சகோதரர்களின் பிரயாசத்தினால் கூட்டிச் சேர்க்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர்; Y ----- என்ற இடத்திலுள்ள சகோதரர்கள்தான் சுவிசேஷகர்களாக, யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தினை அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தவர்களாகவும் இருக்கின்றனர். ஆகையால் இவர்கள் தாங்கள்

சத்தியத்தினை ஏற்கெனவே யாருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்களோ, அவர்களோடுகூடி, அவர்களுக்கு நினைவுகூருதல் இராப்போஜனத்தின் ஆசரிப்பை அறிமுகப்படுத்துவது முற்றிலும் சரியானதேயாகும்.

எனினும் திருச்சபையினுடைய குருமாருடைய பிளவுள்ள குழப்பங்களுக்கு எதிராகவும், கர்த்தருடைய ஜனங்களைப் பிரித்திடும் அல்லது நமது அருமை மீட்பரினால் பரஸ்பரமான முறையில் நமக்கு அருளப்பட்டதான சுயாதீனங்களை அடக்க முற்படும் எல்லாவற்றிற்கு எதிராகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியதன் அவசியம் தொடர்புடைய விஷயத்தில் நாம் சகோதரர் ஜாக்சன் அவர்களோடு முற்றிலுமாய் ஒப்புக்கொள்கின்றோம். இந்த ஓர் ஆசரிப்பின் விஷயத்திலும் அல்லது மற்றத் தருணங்களிலும், யார் கர்த்தருடைய ஜனங்களுக்காக ஊழியம் புரிந்திடலாம் என்பதற்குத் தகுதியின் அடிப்படையில் முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது - அதாவது மன, ஒழுக்க, சரீர அல்லது ஆவிக்குரிய தகுதியாகும். இக்கடிதத்தினை நாம் வெளியிடுவதற்கான காரணம், அதன் அநேகம் கருத்துகள் நன்றாய் உள்ளது. பஸ்கா என்பது ஒரு குடும்பக்காரியமாகும் மற்றும் இதனிடத்தில் பிற்பாடு இடம்பெறும் நினைவுகூருதல் இராப்போஜனமும்கூட ஒரு குடும்பக் காரியமாகும்; ஆனால் அது பூமிக்குரிய குடும்பம் சம்பந்தப்பட்டதாக இல்லாமல், கர்த்தருடைய குடும்பமாகிய, "விசுவாச வீட்டார்" சம்பந்தப்பட்டதாய் இருக்கின்றது.

---

# நமது ராஜா ராஜரீகம் செய்கின்றார்

புற ஜாதியாரே, புறஜாதியாரே, உங்களுக்கான காலம் முடியுதே,
உங்களரசர் அனைவர்க்குமான நாட்கள் கூட விரைந்து முடியுதே,
பாவமும் சாபமும் உலகை விட்டே நிரந்தரமாகவே சென்று மறையுதே,
யூதாகோத்திர சிங்கம்வந்து நிரந்தரமாகவே ராஜ்ஜியப்பொறுப்பினில் அமர்ந்துவிட்டாரே,
பூமிமுழுவதும அவரது நியாயத்தீர்ப்புகள் நடப்பதை நானும் காண்கின்றேனே,
இரண்டாம் பிறப்பினுக்கான உறுதிகள் உரைத்தவண்ணமே அடையாளங்களும்
துன்பஒலிகளும் ஒலிக்கலாகுதே,
பூமியின் அரியணைமீதினில் அவரது தீர்ப்புகள் சூழ்ந்துகொண்டனவே,
நமது ராஜா ராஜரீகம் செய்கின்றார்,
தோல்வியறியா நமதுராஜா ஏழாம் எக்காளம் தொனிக்க வருகிறார்,
அவரது நியாயத்தீர்ப்பின் அரியணைமுன்பே
மாந்தர்தம்மின் இதயம்தன்னை சலித்துப்பார்ப்பார்,
என் ஆத்துமமே, என் பாதங்களே, அவரை நோக்கியே விரைந்திடுவாயே,அக்களிப்புடனே
வரவேற்பாய், நமது ராஜா பவனி வருகிறார்.

# பிலாத்துவின் முன்னிலையில் இயேசு--"அவரை நினைத்துக்கொள்ளுங்கள்"

## மத்தேயு 27:11-26

*"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்." 1 தீமோத்தேயு 1:15*

கெத்செமனே தோட்டத்தில் கர்த்தர் கைதுச் செய்யப்பட்ட பிற்பாடு, விசாரணைப் பண்ணப்படத்தக்கதாக அவர் பிரதான ஆசாரியர்கள், அன்னா மற்றும் காய்பாவின் முன்னிலையில் கொண்டுவரப்பட்டார் மற்றும் மத்தேயு 26:59-66 வரையிலான வசனங்களில் இடம் பெறுகின்றதான விசாரணை நடைப்பெறுவதற்கு முன்னதாக, பிரதான ஆசாரியனுடைய இந்த வீட்டில்தானே அநேகமாக யூதருடைய ஆலோசனை சங்கத்தினர் கூடி, விசாரணை நடத்தப்பட்டது. காலையில் சுமார் 1-மணி அளவுக்கு, அநேகமாக நமது கர்த்தர் உள்ளே கைதியாகக் கொண்டுவரப்பட்டார் மற்றும் கிட்டத்தட்ட காலை 5:30 மணிவரை விசாரணை நீடித்ததாகக் கருதப்படுகின்றது; அநேகமாக அதே நாளில் 6 முதல் 8 மணிக்குள், அவர் உரோம அரசாங்கத்தினுடைய பிரதிநிதியாகிய பிலாத்துவின் முன்னிலையில் கொண்டுவரப்பட்டார். நமது கர்த்தரைக் கைது செய்வதற்கென்று பிரதான ஆசாரியர்களும், ஆலோசனை சங்கத்தினுடைய முன்னிலை வகிக்கும் யூதர்களும் சில காலமாகவே ஆவலுடன் காணப்பட்டார்கள் மற்றும் யூதர்கள் அவரைக் கொன்றுபோடுவதற்கு நாடினபடியால், அவர் (யூதேயா மாகாணத்திலுள்ள) யூதர்கள் மத்தியில் சஞ்சரிக்காமல், கலிலேயாவில் சஞ்சரித்துவந்தார். "ஆகிலும் ஜனங்களுக்குள்ளே கலகமுண்டாகாதபடிக்குப் பண்டிகையிலே அப்படிச் செய்யலாகாது" (மத்தேயு 26:5) என்று அவர்கள் தங்களுக்குள்ளாக யோசித்துக் கொண்டார்கள்; ஆனால் நமது கர்த்தரோ அவர்களிடமிருந்து நழுவிச் சென்றுவிட்டார் மற்றும் பஸ்கா பண்டிகையினுடைய காலத்தில், "தாம் இவ்வுலகத்தை விட்டுப்போகும்படியான தம்முடைய வேளை வந்தது" என்றும், பஸ்கா காலத்தின்போதே நியாயப்பிரமாணத்தினுடைய நிழல்களையும் மற்றும் தீர்க்கத்தரிசனங்களையும் நிறைவேற்றிட வேண்டும் என்றும் இயேசு அறிந்தவராக, பஸ்கா பண்டிகையினுடைய காலத்தில்தானே திரும்பிவந்தார். இறுதியில் இயேசு கழுதையின்மேல் ஏறி எருசலேமுக்கு வந்ததினாலும், அவர் ஆலயத்திலிருந்து காசுக்காரர்களைத் துரத்தினபடியாலும், அவர்கள் கோபம் அடைந்தவர்களாக, ஜனங்கள் அனைவரும் வீட்டில் காணப்படுகின்றதான இரவு வேளையில், இயேசுவைக் காட்டிக்கொடுப்பதாக முன்வந்த யூதாசினுடைய திட்டத்தைப் பற்றிக்கொண்டார்கள்; அவரது விசாரணையைக் காலந்தவறி, இரவில் நடத்தினார்கள்; அவர் யூதருடைய ஆலோசனை சங்கத்தினால் குற்றவாளியெனத் தீர்க்கப்பட்டார் மற்றும் மரணத்தீர்ப்பிற்கு அவசியமான பிலாத்துவின் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளதக்கதாக, காரியத்தை அவசரமாய்ச் செயல்படுத்தினார்கள்.

யூதர்களுடைய பிரதான நீதிமன்றமும், எழுபது முக்கியமான மனிதர்களைக் கொண்டதுமாக ஆலோசனை சங்கத்தார் முன்னிலையிலான விசாரணையில், நீதியானது பின்பற்றப்படுவது, அதாவது நீதியின் தோற்றமாகிலும் காணப்படுவது அவசியமாகும்; ஆகையால் நமது கர்த்தர் மரணத்திற்குப் பாத்திரமானவர் என்று காண்பிக்கத்தக்கதாக, அவருக்கு எதிராக எதையாகிலும் நிரூபிக்கத்தக்கதாக, சாட்சிகள் கொண்டுவரப்படுவதற்குத் தேடல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இப்படியான சாட்சிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதால் இறுதியில் பொய்ச்சாட்சிச் சொல்ல விரும்பும் இருவரைப் பெற்றுக்கொண்டார்கள்; இந்தச் சாட்சிகளானவர்கள் நமது கர்த்தருடைய வார்த்தைகளைக் கொஞ்சம் தவறாய்ப் பொருட்படும் விதத்தில் பேசி பொய்ச்சாட்சிச் சொன்னார்கள்; இவர்கள் நமது கர்த்தருடைய வார்த்தைகளைத் திரித்த கண்ணோட்டங்களில் கூறுவதன் வாயிலாக, இயேசுவுக்கு எதிராக சாட்சி பகரவும் மற்றும் பிரதான ஆசாரியர்களுடைய தயவைப் பெற்றுக்கொள்வதற்கும் விரும்பினவர்கள் ஆவார்கள்.

உரோம தேசாதிபதியுடைய சம்மதம் இல்லாமல் மரணத்தண்டனையை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் ஆலோசனை சங்கத்தாரிடத்தில் இல்லாதிருந்ததாலேயே, அவர்கள் இயேசுவைப் பிலாத்துவுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள் மற்றும் அவர் மோசமான பண்புகள் உடையவர் என்றும், அவர் குற்றவாளியென முறைபடிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என்றும், மரணத் தண்டனைக்கான தங்களது உத்தரவிற்கும், தீர்ப்பிற்கும் சம்மதம் தெரிவிப்பது

மாத்திரமே பிலாத்துச் செய்ய வேண்டிய முறையான காரியம் என்றுமுள்ளவைகளைச் சுட்டிக்காட்டும் வகையில், இயேசுவைக் கட்டப்பட்ட நிலையில் பிலாத்துவுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்.

ஆலோசனை சங்கத்தாரின் முன்னிலையில் நடைபெற்றதான விசாரணையில், இராஜத்துரோகம் (அ) கலகம் பற்றின எந்தக் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படவில்லை, ஏனெனில் இப்படியான குற்றச்சாட்டுகளை வைப்பது என்பது முறையானதாய் இருக்காது; காரணம் உரோமின் நுகத்தடியிலிருந்து விடுதலைக்கான தங்களது உரிமையை யூதர்கள் பற்றிக்கொண்டிருப்பவர்களாய் இருப்பதினால், உரோமிற்கு எதிரான துரோகம் என்பது யூதமார்க்கத்திற்கு உண்மையாய் இருப்பதாய் இருக்கும்; இன்னுமாக இதற்காகவே, அதாவது ஓர் இரட்சகருக்காகவே, ஒரு மாபெரியவருக்காகவே அவர்கள் நூற்றாண்டுகள் காலமாய்க் காத்திருக்கின்றனர்; ஆகையால் ஆலோசனை சங்கத்தார் முன்னிலையில், தேவதூஷணம் எனும் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. ஆனால் யேகோவா தேவனிலும், யூத மதம் மற்றும் வழக்கங்களிலும் நம்பிக்கையற்றவராக அநேகமாய்க் காணப்பட்டதான பிலாத்துவின் முன்னிலையில், தேவதூஷணம் எனும் குற்றச்சாட்டிற்கு எவ்விதமான மதிப்பும் இருக்காது. ஆகையால் இராயனுக்குத் துரோகம் புரிந்தார் எனும் குற்றச்சாட்டானது பிலாத்துவுக்கு முன்வைக்கப்பட்டது; உரோம அதிகாரத்தை உண்மையாய்ப் பாதுகாப்பவர்கள் எனும் ஸ்தானத்தைப் பிரதான ஆசாரியர்களும், ஆலோசனை சங்கத்தினர்களும் மாய்மாலமாய் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் பிலாத்துவோ அவர்களது தந்திரத்தை அடையாளங்கண்டுகொண்டார். தனக்கு முன்பாக நிற்கும் கைதி, ஒரு குறிப்பிடத்தக்க மனிதன் மாத்திரமல்லாமல், அவர் (உரோம) சாம்ராஜ்யத்திற்கு அபாயகரமான சத்துரு இல்லை என்றும் பிலாத்து, மனித சுபாவம் குறித்து அறிந்துகொண்டிருந்த அனுபவத்தின் காரணமாக, ஒரு பார்வையிலேயே கண்டுகொண்டுவிட்டார்.

"நீர் யூதருடைய இராஜாவா?" என்று பிலாத்து நமது கர்த்தரிடத்தில் கேட்ட கேள்வியானது, பலத்தரப்பட்ட அர்த்தம் நிறைந்த, ஆர்வமிக்க ஒரு கேள்வியாகும். ஒருவேளை பிலாத்து (இயேசுவிடமிருந்து) அதிகாரம் மற்றும் ஆளுகை மற்றும் வல்லமை மற்றும் மகத்துவம் குறித்து உரத்தச் சத்தத்தினாலான (அ) அதிகாரப்பூர்வமான விதத்திலான ஏதேனும் வலியுறுத்துதலையாகிலும் எதிர்ப்பார்த்திருப்பாரானால் (அ) (பிலாத்துவாகிய) தன்னுடைய அனுதாபத்திற்கான (அ) கருணைக்கான ஏதேனும் வேண்டுகோளை (இயேசுவிடமிருந்து) எதிர்ப்பார்த்திருப்பாரானால் (அ) (இயேசு தமது) பயத்தை வெளிப்படுத்துவாரென எதிர்ப்பார்த்து இருந்திருப்பாரானால், இயேசுவின் பதிலானது பிலாத்துவுக்கு ஏமாற்றத்தையே கொடுத்திருக்க வேண்டும். போதகர் எளிமையான மற்றும் சுருக்கமான வார்த்தைகளில், "நீர் சொல்லுகிறபடிதான்" என்று மாத்திரம் பதிலளித்தார்.

யூத மூப்பர்களும், ஆசாரியர்களும் இயேசுவின் மீது குவித்திட்டதான பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கும், பழிகளுக்கும் இயேசு எந்தப் பதிலும் கொடுக்கவில்லை – "ஒரு வார்த்தைக்கூடக் கூறவில்லை."

தம்முடைய வேளை வந்துள்ளது என்பதை இயேசு அறிந்திருந்தார்; அடிமண்டி வரையிலுமாக தாம் பானம்பண்ணுகிறதான கசப்பும், அவமானமும் நிறைந்த பாத்திரமானது, பிதாவால் அனுமதிக்கப்பட்டவை என்று இயேசு அறிந்திருந்தார்; அவருடைய சித்தமானது, முழுமையாய்ப் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதாய் இருந்தது; தம்மைக் குற்றப்பழியினின்று விடுவித்துக்கொள்வதற்கோ, பிரதான ஆசாரியர்களால் விரும்பப்பட்டதான மரணத்தீர்ப்பை எதிர்ப்பதற்கோ (அ) தவிர்த்துக்கொள்வதற்கோ அவருக்கு எந்த விருப்பமுமில்லை. தன்னுடைய சொந்த ஜீவனைத் தக்கவைத்துக்கொள்ளும் விஷயத்தில் ஒருவர் இந்தளவுக்குப் புறக்கணிப்பது, பிலாத்துவுக்கு வியப்பாய் இருந்தது; தமது சத்துருக்களை எதிர்ப்பதற்கும் மற்றும் தமது ஜீவனைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் எந்த முயற்சியையும் எடுத்துக்கொள்ளாத நமது கர்த்தரைக் கண்டு பிலாத்து ஆச்சரியமடைந்தாலும், (அவர்மேல் வைக்கப்பட்ட) குற்றச்சாட்டுகளானது அற்பத்தனமான கட்டுக்கதைகள் என்றும், கருத்தில் எடுத்துக்கொள்வதற்குப் பாத்திரமற்றவைகள் என்றும் கூடப் பிலாத்துத் தெளிவாய்க் கண்டுகொண்டார்; ஆகையால்தான் வழக்கமாய் ஒரு கைதியை விடுதலைப்பண்ணுகிற காலக்கட்டமாய், அக்காலம் இருந்தபடியால், இயேசு நீதியாய்க் குற்றஞ்சாட்டப்பட்டார் என்றும், நீதியாய்த் தீர்ப்புக்குள்ளாக்கப்பட்டார் என்றும் குற்றஞ்சாட்டுகிறவர்கள் நினைத்துகொள்ளலாம், மற்றும் அதற்குப் பின்னர் இயேசு விடுவிக்கப்படுவார் என்று பிலாத்துக் கூறினார். ஆனால் தங்களது திட்டங்களானது தோல்வியடையப்போகின்றது என்ற எண்ணத்தினால் குற்றஞ்சாட்டினவர்கள் கோபமடைந்தார்கள் மற்றும் தங்கள் கைதி, தங்களிடமிருந்து தப்பித்துவிடுவாரோ என்று அவர்கள் அச்சமடைந்து, அக்கட்டளைக்கு எதிராகக் கூக்குரலிட்டு, ஜனங்களைத் தூண்டி விட்டார்கள்.

உரோம தேசாதிபதியாகிய பிலாத்துவின் நாட்களில் காணப்பட்ட மற்றவர்களைப் போன்றும் மற்றும் இன்றுவரையிலுமாகக் காணப்படுகின்றவர்களைப் போன்றும், உரோம தேசாதிபதியான பிலாத்துவும் எளிதில் பயத்தினால் தாக்கத்திற்குள்ளாகுபவராகக் காணப்பட்டார்; அதிலும் விசேஷமாகச் சொப்பனங்களினால் ஒருவேளை ஏற்படும் பயத்தினால் தாக்கத்திற்குள்ளாகுபவராகக் காணப்பட்டார்; பிலாத்து இயேசுவுக்கு எதிராக செயல்படாதபடிக்கு அவரை எச்சரிக்கைப் பண்ணி, இயேசுவின் நிமித்தமாக, தான் சொப்பனத்தில் வாதிக்கப்பட்டதாகவும், பிலாத்துவின் மனைவியிடமிருந்து வந்த செய்தியின் நிமித்தமாக, இயேசுவை விடுவிக்க வேண்டும் என்று பிலாத்துத் தீர்மானித்தார். இதற்கேற்ப ஜனங்களுக்காக விடுவிக்கப்படப்போகின்றவர், ஒன்றில் இயேசுவாக இருப்பார் அல்லது நன்கு தெரிந்த கள்வனாகிய பரபாசாக இருப்பார் என்ற தனது தீர்மானத்தைப் பிலாத்துத் தெரிவித்தார். இயேசு அல்லது பரபாஸ் என்று முன்வைத்ததினால், பரபாஸ் என்பவன் விடுதலைப் பண்ணப்படுவதற்கு ஜனங்களால் விரும்பப்படாதவனானபடியால், இரண்டு பேரில் பரபாசுக்குப் பதிலாக இயேசுவை விடுவிக்கலாம் என்று யூதர்கள் இறுதியில் முடிவிற்கு வந்துவிடுவார்கள் என்று பிலாத்து நிச்சயமாய் எண்ணி இருந்திருக்க வேண்டும். ஆனால் பிலாத்துத் தவறாய் எண்ணி இருந்திருக்கின்றார்; மத வெறியர்களால் ஏவப்பட்டதான பகைமையானது, ஆழமானதாகவும், பொல்லாததாகவும் மற்றும் மிகுந்த அளவில் மனசாட்சியற்றதாகவும் காணப்பட்டது மற்றும் உடனடியாக பரபாஸ் தெரிவு செய்யப்பட்டார்; இதினிமித்தம் பிலாத்துப் பொறுப்பாளியாகிவிட்டார் மற்றும் இயேசுவும் தீர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டார்.

தேசாதிபதியோ இன்னும் சிக்கலுக்குள்ளானார். சிக்கலான சூழ்நிலையிலிருந்து வெளிவர முயற்சித்தபோது, அவர் திட்டமிடாமலேயே, தன்னை மிகவும் தர்மசங்கடமான நிலைக்கு ஆளாக்கினவராக, இயேசுவை என்ன செய்ய விரும்புகின்றார்கள் என்று விசாரித்தார். "அவரைச் சிலுவையில் அறையும்" என்ற இரத்தத்தை உறையப் பண்ணுகிறதான அவர்களது கூக்குரலானது, பிலாத்துவை ஆச்சரியப்படப்பண்ணினது மற்றும் அவர், "(இல்லை!) ஏன் என்ன பொல்லாப்புச் செய்தார்?" என்று கேட்டார். ஆனால் இந்த வழக்கு உறுதியற்றுப்போவதைக் கண்ட இரத்த பிரியராயிருந்த குற்றஞ்சாட்டுபவர்கள், "அவரைச் சிலுவையில் அறையும், அவரைச் சிலுவையில் அறையும்" என்று மிகவும் சீற்றத்துடன்/தீவிரமாய்க் கத்தி, ஒரு கலகத்தை உருவாக்கினார்கள் மற்றும் தாங்கள் கேட்டுக்கொண்டது நிறைவேற்றப்படவில்லையெனில், கலகம் பரவலாய் வெடிப்பதற்கான அபாயத்திற்குரிய வாய்ப்புள்ளது என்பதைப் பிலாத்துவின் மனதில் பதியவைத்திட இப்படியாக முயற்சித்தார்கள்.

பரிதாபத்திற்குரிய பிலாத்து! அவர் உரோம சாம்ராஜ்யத்திற்கான பிரதிநிதியாகவும், அதன் சார்பில் பேசுகிறவராகவும் காணப்பட்டார் மற்றும் எவ்விதத்திலாகிலும், ஒழுங்கை தக்கவைக்க வேண்டியவராகவும் காணப்பட்டார். கோரிக்கைகளுக்குப் பிலாத்து இணங்கினார், எனினும் அவர்கள் முன்னிலையில், அவர் தனது கைகளை அடையாளமாய்க் கழுவிக் கொண்டதன் மூலமும், "இந்த நீதிமானுடைய இரத்தபழிக்கு நான் குற்றமற்றவன், (என்னைப்போன்று இரத்தப்பழிக்கு நீங்கள் நீங்கலாகத்தக்கதாக) நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறினதன் மூலமும், வழங்கப்பட்டுள்ளதான தீர்ப்பிலிருந்து தான் வேறுபட்டிருப்பதைப் பிலாத்துச் சுட்டிக்காட்டினார். இப்படியாகப் பொறுப்பை அவர்கள் மீது வைத்தபோது, அவர்களுடைய மனம் மாறும் என்று அவர் கண்டிப்பாய் எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். அநேகமாக இதே ஓர் எண்ணத்தை மனதில் கொண்டுதான் (அ) அநேகமாகச் சிலுவையில் ஒருவர் அறையப்படுவதற்கு முன்னதாக, அந்நபர் முதலாவதாக வாரினால் அடிக்கப்பட வேண்டும் என்று சட்டம் காணப்பட்டப்படியால்தான், நமது அருமை மீட்பர், சிலுவையில் அறையப்படுவதற்கென ஒப்புக்கொடுக்கப்படுதற்கு முன்னதாக, வாரினால் அடிக்கப்பட்டார்.

எதிர்ப்புக் குரலில், "இவர் இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்ற அவர்களது கூக்குரலானது, பிலாத்துவின் அரமனை முழுவதுமாக ஒலித்தது மற்றுமாக பரலோக வாசஸ்தலத்திலும் எதிரொலித்தது மற்றுமாக அவர்களுக்கு எதிரான தெய்வீக நியாயத்தீர்ப்புக் குறித்தத் தீர்க்கத்தரிசனமாகப் பதிவு செய்யப்பட்டது. அந்தோ! பரிதாபத்திற்குரிய யூதர்கள்; என்ன நியாயந்தீர்த்தீர்களோ, அதினாலேயே நீங்கள் நியாயந்தீர்க்கப்பட்டீர்கள். நசரேயனுடைய உண்மையான பின்னடியார்கள் உங்களை ஒருபோதும் தாக்கவில்லை என்றாலும், அவரது பெயரளவிலான நண்பர்களோ, பிலாத்துவினுடைய வாரிசுகளுடைய கரங்களின் வாயிலாக உங்களை அடிக்கடி பழிக்குப்பழி வாங்கியிருக்கின்றனர். "இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லை" என்று நீங்கள் கூக்குரலிட்டீர்கள் மற்றும் உங்களது வார்த்தைகளைச் சர்வவல்லமையுள்ளவர் கருத்தில் எடுத்துக்கொண்டார். ஓ! பரிதாபத்திற்குரிய யூதர்களே,

விசுவாசிக்கின்ற அனைவரையும் (தேவனுக்கு முன்பாக) பரிசுத்தமுள்ளவர்களாக்குகின்றதும், மனுக்குலத்தைப் போல உங்களுக்கும் பாவநிவாரண இரத்தமாக, இரத்தபலியாக இலவசமாய் அருளப்பட்டதுமான, அவரது இரத்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வதைத் தவிர, மற்றப்படி அவருடைய இரத்தப்பழி குறித்து நீங்களே உங்களுக்குக் கூறிக்கொண்டதான சாபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வழியில்லை. அது புது உடன்படிக்கையின் (முத்திரையாகும்) இரத்தமாகும்.

நம் நிமித்தமாக மிகவும் பொறுமையுடன் நமது அருமை மீட்பர் சகித்திட்டதான அவமானம் குறித்ததான விவரங்களானது மிகவும் உருக்கமானதாய்க் காணப்படுகின்றது மற்றும் வேறெந்த காரியத்தைக் காட்டிலும் இதை வாசிக்கையில்தான் அநேக இருதயங்கள் மனந்திரும்பியுள்ளது. இது நமது கர்த்தரையும், அவரது இரத்தமானது சாத்தியமாக்கின மீட்பையும் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டவர்களிடத்திலும், அதன் ஆற்றலை இன்னமும் இழந்து போகவில்லை; பாவிகளால் தமக்கு விரோதமாகச் செய்யப்பட்டதான இவ்விதமான மா விபரீதங்களைச் சகித்த அவரை நாம் ஒவ்வொரு முறையும் நோக்கிப்பார்க்கையிலும் மற்றுமாக இவைகளெல்லாம் (அவர் அனுபவிப்பதற்கு) அவருக்குப் பாத்திரமானவைகளல்ல, ஆனாலும் இவை நம் நிமித்தமான அவரது பலியினுடைய ஒரு பாகம் என்பதை நாம் நினைவுகூருகையிலும், இவைகள் நமது இருதயங்களைப் பக்குவப்படுத்துகின்றது. நாம் அவரது அடிச்சுவடுகளில் நடக்க நாடுகையில், கர்த்தரோடு ஒப்பிடும்போது, இலேசானதாயுள்ள உபத்திரவங்களைச் சகிக்கையில், நாம் மனதில் சோர்ந்து (அ) தளர்ந்து போகாதபடிக்கு, கிறிஸ்துவினுடைய சாந்தத்தையும், பொறுமையையும் மற்றும் பாடுகளையும், அதுவும் மிகவும் அநியாயமாய் அவரால் சகிக்கப்பட்ட பாடுகளையும், கர்த்தருடைய பின்னடியார்கள் அனைவரும் நோக்கிப்பார்க்க வேண்டும் என்று அப்போஸ்தலன் வலியுறுத்தி, இக்காரியம் தொடர்புடையதான மிகவும் அழுத்தமிக்க படிப்பினைகளில் ஒன்றைச் சுட்டிக்காண்பிக்கின்றார் (எபிரெயர் 12:3). இன்னுமாக அதே காரியத்தைக் கிறிஸ்துவினுடைய மற்றப் பாடுகள் தொடர்புடையதாகக் குறிப்பிடும் வகையில் அப்போஸ்தலன், நாம் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, நம் நிமித்தம் அவர் தரித்திரரானார் என்றும், நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாடுபட்டார் என்றும், நமக்காக அவர் தம்முடைய ஜீவனை விரும்பி வந்து, பலியாக ஒப்புக்கொடுத்தார் என்றும், "நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம் என்றும் குறிப்பிடுகின்றார்.

*****

# சிலுவையில் அறையப்பட்டவர் மீது ஒரு பார்வை

## மத்தேயு 27:35-50

*"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்."*

**1 கொரிந்தியர் 15:3**

நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட விவரமானது, வேதவாக்கியங்களினால் மிகவும் எளிமையான விதத்திலும், கலைத்திறன் இல்லாவிதத்திலும் மற்றும் சோகமான தாக்கம் ஏற்படுத்துவதற்காக, விவரங்களை மெருகேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படாத விதத்திலும் வழங்கப்பட்டிருந்தாலும், இந்த எளிமையான விவரத்தில்தான், சரித்திரத்திலேயே மிகவும் நெஞ்சைத்தொடும் சம்பவத்தின் விவரம் காணப்படுகின்றது. மிகவும் முக்கியமான ஒரு வாழ்க்கையைக் குறித்து (வேதாகமம் போன்று) எந்த ஒரு காவியமும் முன்வைக்க முடியாதது போன்று, எந்த ஒரு காவியமும், சர்வ வல்லமையுள்ள தேவனால் தேவதூதர்களுக்கும், மனுஷர்களுக்குமெனத் தமது நீதியையும், அன்பையும் இணைத்து வெளிப்படுத்தத்தக்கதாக அரங்கேற்றப்பட்ட, இந்த மாபெரும் நிஜமான நாடகம் மிகவும் சோகமுடையதாய் நிறைவடைவது போன்றும் நிறைவடைவதில்லை. நமது கர்த்தருடைய அநேக அற்புதகரமான கிரியைகளையும், எதையும் எதிர்க்காமல் அவர் நம்முடைய பாவங்களுக்காகப் பலியானதையும் கல்நெஞ்சத்துடன், உணர்வற்ற நிலையில் கண்டுகொண்டிருந்தவர்களில் எவ்வளவாய் விழுந்துபோன மனித சுபாவத்தினுடைய சீர்க்கேடு வெளிப்படுகின்றது. இந்தக் காரியத்தினை, நமது கர்த்தருடைய வஸ்திரங்களைப் பங்குபோட்டுக்கொண்ட விஷயத்தைக் காட்டிலும் அவரது நெய்யப்பட்ட அங்கியானது யாருக்குக் கிடைக்கும் என்பதற்காக சீட்டுப்போட்டுக்கொண்ட விஷயத்தைக் காட்டிலும், வேறு எவ்விஷயமும் நன்கு விளக்கிட முடியாது; நெய்யப்பட்டிருந்த வஸ்திரமானது, நமது கர்த்தருடைய தனிப்பட்ட பூரணத்தை அடையாளப்படுத்துகின்றதாக இருந்தது மற்றும் இது அநேகமாக அவருடைய நண்பர்கள் என்று லூக்கா 8:3-ஆம் வசனத்தில் குறிப்பிடப்படுபவர்களாகிய, ஐசுவரியமுள்ள ஸ்திரீகளில் ஒருவர் கர்த்தருக்குக் கொடுத்திட்ட அன்பளிப்பாக இருக்க வேண்டும். வஸ்திரங்களைப் பங்குபோட்டப் பிற்பாடு, அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள், அவரது பாடுகளையும், மரணத்தையும் இரக்கமற்றுக் கண்ணோக்கும் வண்ணமாக, "அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்.(கவனித்தார்கள்);" பின்னரே உச்சக்கட்டம் வந்தது.

கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் செல்வாக்கானது, மனுக்குலத்தினுடைய உலகத்தின்மீது பெரிதான தாக்கம்கொண்டிருந்து, சமுதாயப் பண்பாட்டை உயர்த்தியுள்ள காரியமானது, கடந்த காலத்தினுடைய அதிகபடியான முரட்டுத்தனமான மற்றும் கொடூரமான நிலைமைகளையும் அதிகம் மேற்கொண்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் நாம் காணப்பட்டாலும், உலகப்பிரகாரமான நாகரிகம் மற்றும் மரியாதையான பண்புகள் எனும் மாயத்தோற்றத்தின் கீழ், இன்னமும் இயல்பான இருதயத்தில் அதிகப்படியான சீரழிந்த பண்புகள் இருப்பதை நம்மால் உடனடியாகக் கண்டுகொள்ள முடிகின்றது. இன்றும்கூட, கர்த்தரைப் பற்றின அறிவிற்கு வந்த பிற்பாடும், அதாவது அன்றுள்ள உரோம சேவகர்கள் அறிந்திருந்ததைக் காட்டிலும் அதிகப்படியான மற்றும் தெளிவான அறிவிற்குள் வந்த பிற்பாடும், கிறிஸ்துவினுடைய அற்புதமான கிரியைகளைக் குறித்தும், பாடுகள் குறித்தும் அறிந்துகொண்ட பிற்பாடும், அவர் நம் நிமித்தமாகப் பாடுபட்டார் என்பதை அறிந்துகொண்ட பிற்பாடும், அநேகர் அவர் பாதத்தில் விழுந்து, "என் கர்த்தரே, என் மீட்பரே" என்று கூறுவதற்குப் பதிலாக, நேர்மாறாக உரோம சேவகர்கள் பண்ணினது போன்று, "உட்கார்ந்து அவரைக் கவனித்துக்கொண்டிருக்கின்றார்கள்" அல்லவா? இவர்களுடைய இருதயங்களானது, இரக்கத்தினால் அசைக்கப்படவில்லை (அ) தங்களது சித்தங்கள் மற்றும் நடக்கைகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் அளவுக்குரிய, அனுதாபங்கூடக் கொண்டிருக்கவில்லை; இவர்கள் "கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராகவே" தொடர்ந்து காணப்பட்டுக் கொண்டிருக்கின்றனர், ஏனெனில் "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்" என்று கர்த்தர் கூறியுள்ளார் (மத்தேயு 12:30; பிலிப்பியர் 3:18).

அநேகமாக பிலாத்து வேறு உள்நோக்கத்துடன்தான் "இயேசு யூதருடைய இராஜா" என்று எழுதின மேல்விலாசத்தை, சிலுவையில் நமது கர்த்தருடைய தலைக்கு மேலாக போடுவித்தார். போதகரான இயேசு பெற்றிருந்த செல்வாக்கின் மீதான பொறாமையின் காரணமாகவே, யூதருடைய

அதிகாரிகள், இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தனர் என்று பிலாத்து அறிந்திருந்தார்; மேலும் "இராயனேயல்லாமல் தங்களுக்கு வேறே இராஜா இல்லை" என்று கூறி இயேசு, தம்மைத்தாமே இராஜாவாக்கிக் கொண்டுள்ளார் என்ற குற்றச்சாட்டை இயேசுவுக்கு எதிராக, அவர்கள் பிலாத்துவிடம் கொண்டு வந்தபடியாலும், இன்னுமாக இப்படி மாய்மாலம் பண்ணி, இராயனுடைய அரியணை பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமானது என்று கூறி, இயேசுவைச் சிலுவையில் அறைந்துபோடும்படிக்கு அவர்கள் பிலாத்துவைக் கட்டாயப்படுத்தினபடியாலும், பிலாத்து இப்பொழுது அவர்களைப் பழிவாங்கி, அவர்களது ஆயுதத்தை அவர்களுக்கு எதிராகவே பயன்படுத்தினார். ஆனால் அவர்கள் கொன்றுபோட்ட ஆச்சரியமான மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் உண்மையான பெயரைத்தான் மேல்விலாசத்தில், தான் எழுதிப்போட்டுள்ளார் என்பதை நிச்சயமாக பிலாத்து எண்ணிப்பார்த்திருந்திருக்கவே மாட்டார். வேறொரு சுவிசேஷகர், இப்படி மேல்விலாசத்தில் எழுதியிருப்பதை முன்னிலை வகுத்த யூதர்கள் வன்மையாய் எதிர்த்தார்கள் என்றும், ஆனால் எழுதப்பட்டதை, மாற்றி எழுதுவதற்குப் பிலாத்து மறுத்துவிட்டார் என்றும் நமக்குத் தெரிவிக்கின்றார்.

நமது அருமை மீட்பர் சகித்திட்ட அவமானங்களின் ஒரு பாகமாகவும், கூடுமானால் நீங்கட்டும் எனக் கர்த்தர் விரும்பிட்ட பாத்திரத்தின் ஒரு பாகமாகவுந்தான், அவர் பொல்லாங்கன் போன்று, இரண்டு கள்வர்கள் மத்தியிலே சிலுவையில் அறையப்பட்டார். இதை நாம் – அவர் பாவிகளால் தமக்குச் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்தார் என்ற கண்ணோட்டத்தில் நினைத்துக்கொள்ள வேண்டும் என்றும், இப்படியாக நாம் நினைத்துக்கொள்ளும்போது, அவருக்கு வந்ததுபோன்றதும், ஆனாலும் இலேசான எதிர்ப்புகளாகவும், உபத்திரவங்களாகவும், தவறாய்க் கருதப்படுவதாகவும் உள்ளவைகளைச் சகிப்பதில் நாம் பலப்படுத்தப்படுவோம் (சொல்லர்த்தமான பட்டயங்கள் (அ) ஆயுதங்கள் கொண்டு யுத்தம் பண்ணுவதற்குப் பலப்படுத்தாமல், மாறாக சகிப்பதற்குப் பலப்படுத்தப்படுவோம்) என்றும் அப்போஸ்தலர் நமக்குக் கருத்துத் தெரிவிக்கின்றார்.

"என்னால் இப்பொழுது புரிந்துகொள்ளப்படுகிறதைக் காட்டிலும்
அதிகமாய் எனக்காய்ப் பாடுபட்டுள்ளாரே!
கடுமையான வியாகுலத்துடனே பருகிட்டாரே துக்கத்தின் பாத்திரத்திலிருந்தே.
அனைத்தையும் அவர் எனக்காய்ச் சகித்திட்டாரே, எனக்காய்ச் சகித்திட்டாரே!
உமக்காய் நான் என்ன சகித்திருக்கின்றேன், சகித்திருக்கின்றேன்?"

நமது கர்த்தரினால் சகிக்கப்பட்ட வலியோ, துயரமோ நமக்கான ஈடுபலி விலையாக இராமல், மாறாக அவரது மரணமே நமக்கான ஈடுபலி விலையாகக் கொடுக்கப்பட்டது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். இயேசு கொடூரமான விதத்தில் இல்லாமல், அவமானமான விதத்தில் இல்லாமல் மரித்திருந்தாலும்கூட, இது நமக்கான ஈடுபலி விலைக்கிரயம் கொடுக்கப்பட்டதாகவே இருந்திருக்கும்; ஆனால் நமது கர்த்தரினால் சகிக்கப்பட்ட சோதனைகளும், பாடுகளும், எதிர்ப்புகளும், நமக்கான ஈடுபலியின் பாகமாக இல்லையென்றாலும், இவைகள் பிதாவின் கணிப்பில், இயேசுவுக்கான பரீட்சையின் பாகமாக இருப்பது நலமாய் இருந்தது. இவைகளை இயேசு பொறுமையாய்ச் சகித்திட்டக் காரியமானது, பிதாவுக்கும், நீதிக்குமான அவரது உண்மையை முழு அளவில் நிரூபித்துக் காட்டியதாய்க் காணப்பட்டது; மேலும் இவ்வாறாக இயேசுவுக்கான பலனாக பிதா ஆயத்தம் பண்ணி வைத்திருந்த, உன்னத நிலைக்கு உயர்த்தப்படும் காரியத்திற்கு, தாம் பாத்திரவானாக இருப்பதை இயேசு நிரூபித்துக்காட்டினார். ஆகவே அவர் மனித சாயலுக்குத் தாழ்த்தப்பட்டதினிமித்தமும், நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்ததின் நிமித்தமும் மாத்திரமல்லாமல், இன்னுமாக அவர் பருகின நிந்தனை மற்றும் அவமானத்தின் பாத்திரத்தினிமித்தமாகவும், அவரைக் குறித்து இவ்வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளது: "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப்பியர் 2:9,10, 11).

விழுந்துபோன நிலைமையிலும், கர்த்தருடைய வார்த்தைகள் மற்றும் கணிப்பினுடைய தெளிந்த கொள்கைகளினால் வழிகாட்டப்படாத நிலைமையிலுமுள்ள மனமானது எவ்வளவாய் ஓர் எல்லையிலிருந்து, மறு எல்லைக்குத் தடுமாறிவிடுகின்றது. இது சிலுவையில் அறையப்பட்டிருந்த கர்த்தரை நோக்கி, தங்களது தலைகளைத் துலுக்கி, தூஷித்து, அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறின விஷயத்தையும், தமது சரீரமாகிய ஆலயத்தைக்குறித்து அவர் பேசின விஷயத்தையும் பழித்துரைத்தவர்களில் அநேகர், இயேசுவின் 3½ வருட ஊழிய காலத்தின்போது, அவரால் பேசப்பட்டவைகளைக் கேட்டவர்கள் மத்தியில் காணப்பட்டவர்களாகவே இருந்தனர்

என்னும் உண்மையில் விளங்குகின்றது. இவர்களில் சிலர் அவர் செய்திட்ட அற்புதங்களைக் கண்டிருந்தவர்களாகவும் இருந்தனர்; இன்னுமாக இவர்களில் சிலர், "அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" என்று குறிப்பிடப்பட்டவர்கள் மத்தியில் காணப்பட்டனர்; இன்னுமாக "மேசியா வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப் பார்க்கிலும் அதிகம் செய்வாரோ" என்று கூறினவர்களிலும் சிலர், இவர்களில் காணப்பட்டனர் (யோவான் 7:31; லூக்கா 4:22).

எனினும் சூழ்நிலைகள் இயேசுவுக்கு எதிராக மாறுவதை, இவர்கள் கண்டபோதோ, அதிலும் விசேஷமாக இவர்களது செல்வாக்குமிக்க மதப் போதகர்கள் இயேசுவை எதிர்த்தபோதோ, இவர்கள் எளிதில் தடுமாற்றமடைந்தனர். இங்கு வெளியாகியுள்ள நமது விழுந்துபோன இனத்திற்கான பலவீனத்தினிமித்தம் நாம் வெட்கம் அடைகின்றோம். எனினும் அதே காரியங்கள் இன்றும் காணப்படுகின்றது. தெய்வீகச் சத்தியம் எவ்வளவுதான் தூய்மையானதாகவும், வெளிச்சமுடையதாகவும் காணப்பட்டாலும்கூட, ஒருவேளை கிறிஸ்தவ மண்டலத்தாரின் பிரதான ஆசாரியர்களும், பரிசேயர்களும், வேதபாரகர்களும் தெய்வீகச் சத்தியங்களைக் கண்டனம் பண்ணினார்கள் என்றால், இதினிமித்தம் ஜனங்களும் தடுமாறிவிடுகின்றனர்; கர்த்தருடைய ஊழியக்காரருடைய ஜீவியங்கள் எவ்வளவுதான் தூய்மையானதாகவும், உண்மையாகவும், நேர்மையாகவும் காணப்பட்டாலும்கூட, சாத்தானால் இன்னமும் இவர்களைப் பழிப்புரைப்பதற்கும், நிந்திப்பதற்குமெனப் பொய்ச்சாட்சியாளர்களையும், கனமிக்க ஊழியர்களையும் கைக்கூலிக் கொடுத்து, தூண்டிவிட்டு ஏற்படுத்த முடியும். இப்படிச் சம்பவிக்கும் என்றே நாம் எதிர்பார்க்கின்றவர்களாய் இருக்கவேண்டும். "சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும். வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?" (மத்தேயு 10:25) என்று நமது எஜமான் தாமே கூறியுள்ளார் அல்லவா? "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத்தேயு 5:11. 12) என்று நமது எஜமான் நமக்குக் கூறி உறுதியளித்துள்ளார் அல்லவா? இப்படியாகவே, "உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது" என்று தீர்க்கத்தரிசிகள் உரைத்தவைகள் நம்மில் நிறைவேறுகின்றது (சங்கீதம் 69:9).

வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களுடைய நிந்திப்புகள்தான் மிகவும் காயம் ஏற்படுத்துகின்றதாய்க் காணப்பட்டது. இயேசு தம்மை இராஜா என்று உரிமைப் பாராட்டிக்கொண்ட காரியத்தையும், அவரது வல்லமையையும், பரம பிதாவின் மீதுள்ள அவரது விசுவாசத்தையும், பிதாவுடனான தம்முடைய உறவைக் குறித்து இயேசு உரிமைப்பாராட்டிக்கொண்ட காரியத்தையும் இவர்கள் ஏளனம் பண்ணிக்கொண்டிருக்கையில், இயேசு தம்முடைய அந்த வல்லமையை வெளிப்படுத்தி, சிலுவையிலிருந்து தாழ இறங்கிவரும்படிக்குக் கூறி, அவரை நகைத்தனர். ஓ! மனுஷ குமாரன் தமக்கான மகிமைக்குள் பிரவேசிப்பதற்கு, இப்படியாக பாடுபட வேண்டும் என்பதை இவர்கள் அறியாதிருந்தார்கள். மேசியா முதலாவதாக தமது ஜீவனை, நமக்கான ஈடுபலி விலைக்கிரயமாக ஒப்புக்கொடுக்காதது வரையிலும், அவரால் சாத்தான் மற்றும் மரணத்தின் பிடியிலிருந்து இஸ்ரயேலையும், உலகத்தையும் விடுவிக்கிறதற்கான வல்லமையைக் கொண்டிருக்க முடியாது எனும் தெய்வீகத் திட்டத்தை இவர்கள் புரியாமல் காணப்பட்டனர். நமது அருமை மீட்பர் சீற்றத்தினாலும், பழிவாங்கும் எண்ணத்தினாலும் ஆட்கொள்ளப்படாமல், மாறாக பிதாவினுடைய சித்தம் மற்றும் வார்த்தைகளுக்கு ஏற்ப, சாந்தமாய்த் தம்மைச் சித்திரவதைப்படுத்துபவர்களின் பழிதூற்றல்களைச் சகித்து, தமது சித்தத்தைப் பரம பிதாவுடைய சித்தம் மற்றும் திட்டத்திற்கெனத் தாழ்த்திவிட்டபடியால் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும்.

இதுபோலவே கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஜீவனுள்ள அங்கத்தினர்களும், எவ்வளவாய் உலகத்தாரினால் மாத்திரமல்லாமல், இன்றுமுள்ள முன்னிலை வகிக்கும் பரிசேயர்களாலும் விசேஷமாய்த் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுகின்றனர்; ஏனெனில் "அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" (1 யோவான் 4:17). நமது எஜமானுடைய பாடுகளையும், சோதனைகளையும் உலகம் புரிந்துகொள்ளாதது போலும், அவரது பலிக்கான அவசியத்தைக் கண்டுகொள்ள முடியாதது போலும், இன்னுமாக அவருடைய பாடுகளானது, "அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்" என்று எழுதப்பட்டிருக்கின்ற பிரகாரம், தெய்வீக அதிருப்திக்கான அடையாளங்கள் என்று எண்ணிக்கொண்டது போலும், சபையினுடைய விஷயத்திலும் காணப்படும்; தேவனுக்கென்று அர்ப்பணம் பண்ணப்பட்ட ஜனங்கள் அவரது கிருபையை ஆவிக்குரியவற்றிலேயே பெற்றிருந்து, பூமிக்குரிய ஆசீர்வாதங்களில்

பெற்றிராமல் இருப்பதாகிய உண்மையானது, உலகத்தாரால் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுகின்றது. பூமிக்குரிய தயவுகளைப் பலிச்செலுத்துவதன் மூலமாய் நாம் அடைய நாடும் ஆவிக்குரிய தயவுகள் மற்றும் ஆவிக்குரிய சுபாவத்தின் ஆசீர்வாதத்தை உலகத்தார் காண்பதில்லை. இப்படியாகப் பலிச்செலுத்தும் வகுப்பாரிலுள்ள அனைவரும் மற்றும் பரம அழைப்பிற்கான பந்தய பொருளுக்காக ஓட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் அனைவரும், தற்காலத்தின் பாடுகளில் களிக்கூர்ந்து, கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்வதற்கும், அவருக்குள் அதாவது மகிமையடைந்த கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்கள் ஆகுவதற்குமென அனைத்தையும் குப்பையும், நஷ்டமுமாகவும் கருதுவார்கள்.

நமது மீட்பருடன், இரு பக்கங்களிலும் சிலுவையில் அறையப்பட்டிருந்த இரண்டு குற்றவாளிகளும் சேர்ந்து கிறிஸ்துவை வைததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்தக் கள்வர்களில் ஒருவன்தான் பின்னர், அனுதாபத்தின் சில வார்த்தைகளைப் பேசினவனாகக் காணப்பட்டான்.

நமது கர்த்தர் ஆறாம் மணி வேளையில், காலை 9 மணி அளவு சிலுவையில் அறையப்பட்டார்; நிழலில் காணப்பட்ட கால வேளைக்குப் பொருத்தமாகவே காரியங்கள் சம்பவித்தது; ஏனெனில் இந்த வேளைதான் அன்றாட காலை பலிச்செலுத்துவதற்கான வேளையாக இருந்தது. ஆறு மணி நேரங்கள் பிற்பாடே, பிற்பகல் 3 மணியளவு, அதாவது யூதர்கள் வழக்கத்தின்படியான ஒன்பதாம் மணிவேளையில் கர்த்தர் மரித்தார்; இதுவும் நிழலிலுள்ள வேளைக்குப் பொருத்தமானதாக இருந்தது, ஏனெனில் இந்த ஒன்பதாம் மணிவேளைதான் அன்றாட மாலை பலிச்செலுத்துவதற்கான வேளையாக இருந்தது. இப்படியான ஒரு காட்சிக்கு முன்னதாக, இயற்கையும் தனது மகிமைகளைத் திரையிடுவதும், இருள் காணப்படுவதும்கூடப் பொருத்தமானதாய் இருந்தது. அது அடர்த்தியான இருளாக இருந்ததென நாம் அனுமானிக்க வேண்டியதில்லை, மாறாக பதிவு செய்யப்பட்டிருப்பது போன்று, இருள் காணப்பட்டது என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். எனினும் அது இயற்கைக்கு அப்பாற்பட்ட இருளாகவே இருந்திருக்க வேண்டும், ஏனெனில் அன்று பௌர்ணமியாக இருந்தபடியால், கொஞ்சம் நேரம் சூரிய கிரகணம் காணப்பட்டிருக்க வேண்டும்.

அப்போதுதான் "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்ற வியாகுலம் நிறைந்த வார்த்தைகளை நமது கர்த்தர் கூறினார். தமக்கு விரோதமாகப் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதத்தையும், பேதுருவின் மறுதலிப்பையும், தம்முடைய சீஷர்கள் அனைவரும் தம்மைவிட்டு ஓடிவிட்டனர் என்ற உண்மையையும், தமது கடைசி மணி நேரங்கள் தமது சத்துருக்களுடைய இகழ்ச்சிகளின் மத்தியில் செலவிடப்பட வேண்டும் எனும் உண்மையையும் வியக்கத்தக்கச் சகிப்புத்தன்மையுடன் சகித்துவிட்டார்; ஆனால் தம்மிடமிருந்து, பிதா ஆவியின் ஐக்கியத்தைத் துண்டிப்பதற்கான வேளை வந்தபோதோ, இதைக் கர்த்தரினால் சகித்துக்கொள்ள முடியவில்லை; அவர் சொல்லர்த்தமாகவே இருதயம் வெடித்து மரித்ததாகக் கூறப்படுகின்றது; மேலும் இதன் காரணமாகவே, அவர் மரித்தக் கொஞ்சம் நேரத்திற்குள்ளாக ஈட்டியினால் குத்தப்பட்டபோது, இரத்தமும், தண்ணீரும் வந்தது என்று பார்க்கின்றோம்.

இது ஒருவேளை உண்மையிலேயே பிதாவிடத்திலான ஐக்கியம் மற்றும் தயவின் துண்டிக்கப்படுதலாய் இராமல், மாறாக நமது கர்த்தருடைய விசுவாசக் குறைச்சலாக மாத்திரமாக இருக்குமா அல்லது இல்லையா என்று சிலர் கேட்கலாம். இது விசுவாசக் குறைச்சல் இல்லை. இப்படியாக ஐக்கியம் துண்டிக்கப்படுகின்ற காரியமானது, பாவம் சுமப்பவராகிய நமது கர்த்தருடைய பாடுகளில் அவசியமான ஒரு பாகமாக உள்ளது என்றே நாம் நம்புகின்றோம். ஆதாமுடைய மீறுதலுக்கான தண்டனை என்பது, மரணமாக மாத்திரம் இராமல், இன்னுமாக தெய்வீகத் தயவு மற்றும் ஐக்கியத்திலிருந்து தனிமைப்படுத்தலையும் உள்ளடக்கினதாய் இருந்தது; ஆகையால் நம்மைத் தேவனிடத்திற்கு, தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கத்தக்கதாக, நமது கர்த்தர் ஆதாமின் ஸ்தானத்தை எடுத்து, ஆதாமுக்குப் பதிலாக அதாவது அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் பாடுபட்டபோது, அவர் நம் நிமித்தமாக மரிப்பது மாத்திரம் அவசியமாய் இராமல், ஆதாமினுடைய மீறுதலுக்கான தண்டனையின் பாகமாக, பிதாவிடமிருந்து முழுமையாய்த் துண்டிக்கப்படுதல் மற்றும் தனிமைப்படுத்தப்படுதல் எனும் அனுபவத்தையும் அனுபவிக்க வேண்டியது அவசியமாய் இருந்தது. இயேசு தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்துக்கொண்டு வந்த 3½ வருட காலபகுதியில், பிதாவிடமிருந்து பாவியெனத் துண்டிக்கப்படவில்லை (அ) தனிமைப்படுத்தப்படவில்லை; இயேசு அந்த மூன்றரை வருட காலபகுதியில் முழுத்தண்டனையையும் அனுபவிக்கவில்லை; மாறாக சிலுவையில்தான் கவலைக்கிடமான தருணம் வந்தது; அவர் கொஞ்ச நேரமாகிலும் பிதாவின் ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப்பட வேண்டும் மற்றும் இப்படியாக ஒரு பாவியாக, நம்முடைய பாவங்களுக்காக மரிக்க வேண்டும்; "மனுஷனால் மரணம் உண்டானபடியால்,

மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாகத்தக்கதாக" இயேசு இங்ஙனம் மரிக்க வேண்டியிருந்தது (1 கொரிந்தியர் 15:21).

நமது அருமை எஜமானுடைய அனுபவங்களைக் கருத்தில் எடுத்துக்கொண்டாலும், மரிக்கிற அனைவருடைய இறுதி வார்த்தைகளையும் வைத்து, நாம் அவரவருடைய ஆவிக்குரிய நிலைமையைக் குறித்துக் கணிப்பதில்லை. தவறான கொள்கைகளானது, சிலரில் தவறான நம்பிக்கைகளை உண்டுபண்ணி, தாங்கள் உண்மையில் மரணம் எனும் மாபெரும் சிறைச்சாலையின் வாயிலுக்குள் போய்க்கொண்டிருக்கையில், தாங்கள் புதிய எருசலேமின் வாயிலுக்குள்ளாகப் போவதாக நம்பிக்கொள்ளத்தக்கதாக வழிநடத்திவிடுகின்றது. பதிவுகளைப் பொறுத்தமட்டில் கர்த்தரினாலோ (அ) அவரது ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்களாலோ மரிக்கும் தருணத்தின் மிதமிஞ்சின வார்த்தைகள் எதுவும் பேசப்படவில்லை. கர்த்தரும், அப்போஸ்தலர்களும் நல்ல நம்பிக்கையும், உறுதியான நம்பிக்கையும், வேதவாக்கியங்களின் அடிப்படையிலான நம்பிக்கையையும், கொண்டிருந்தார்கள்; வாழ்க்கையின் போராட்டங்களில் தங்களைப் பெலப்படுத்துகின்றதும், வாழ்க்கையின் இறுதிவரை தேவனுக்கும், அவரது வார்த்தைகளுக்கும் உண்மையாய்க் காணப்பட உதவினதுமான ஒரு நம்பிக்கையைக் கொண்டிருந்தார்கள்; ஆனால் நம்பிக்கைக் குறித்த மிதமிஞ்சின வார்த்தைகளைக்கூறி மரிப்பவர்கள் பெரும்பாலானவர்கள், கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும், அவருடைய ஊழியத்திற்கான தங்களின் அர்ப்பணிப்பு விஷயத்திற்கும் உண்மையற்றவர்களாகவே காணப்படுகின்றனர். நமது விசுவாசமும், நம்பிக்கையும், களிகூருதலும் நமது எஜமான் மற்றும் அப்போஸ்தலர்களுடையது போன்று காணப்படுவதாக; தேவனுடைய வார்த்தைகளுக்கும் மற்றும் அதன் சாட்சிகளுக்கும் இசைவாகக் காணப்படுவதாக – "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (2 பேதுரு 1:19).

நமது கர்த்தர் மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டபோது கூறின வார்த்தைகளை மத்தேயு அவர்கள் பதிவு செய்யவில்லை, ஆனால் அவைகளை லூக்கா அவர்களும், யோவான் அவர்களும் பதிவு செய்துள்ளனர்; "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்" (லூக்கா 23:46); "இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்" (யோவான் 19:30).

எதுவும் முடியவில்லை என்று அநேக கள்ளப்போதகர்கள் நம்மிடத்தில் கூறி, பாவங்களுக்காக எந்தப் பலியும் தேவையில்லை என்றும், எதுவும் கொடுக்கப்படவுமில்லை என்றும் அறிவிக்கின்றார்கள்; ஆனால் இது தொடர்புடைய விஷயத்தில், வேதவாக்கியங்களுடைய சாட்சி மிகவும் தெளிவாய்க் காணப்படுகின்றது; பலிச்செலுத்தப்படாமல் அதாவது, "இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவங்களுக்கான மன்னிப்பு உண்டாகாது" என்று கூறப்பட்டுள்ளது (எபிரெயர் 9:22). நமது கர்த்தர் பூரண புருஷனுக்குரிய 30-ஆம் வயதை அடைந்து, உடனடியாக யோர்தானில் காணப்பட்ட யோவானிடத்திற்கு வந்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, இப்படியாகப் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத்தக்கதாக, மரணம் வரையிலான தமது அர்ப்பணிப்பை வெளிப்புறமான அடையாளத்தின் மூலம் தெரிவித்தபோது, நமது கர்த்தருடைய பலி ஆரம்பமானது. இங்கு ஆரம்பமான பலி, அவருடைய கடைசித் தருணம்வரை உண்மையாய்த் தொடர்ந்து முடிந்தது. அவர் அனைத்து நிந்தனைகளையும், அனைத்து அவமானங்களையும் கடைசிவரை சகித்துக்கொண்டு, பின்னர் இறுதியில் பிதாவுடனான ஐக்கியத்தில் துண்டிக்கப்பட்டபோது, இதுவே கடைசி காரியமாயிருந்தது மற்றும் இதை நமது கர்த்தர் "முடிந்தது!" என்ற வார்த்தைகள் மூலம் சுட்டிக்காட்டினார். அவருடைய வேலை முடிந்தது; மீட்பிற்கான விலை கொடுக்கப்பட்டு முடிந்தது; பாடுகள் முடிவடைந்துவிட்டன; அவர் நிறைவேற்றும்படிக்கு, பிதா அவமானம் மற்றும் நிந்தனைகளாகிய அம்சங்கள் தொடர்புடையதாகக் கொடுத்திருந்த வேலையின் பாகத்தை அவர் நிறைவேற்றிவிட்டார். அவருடைய வேலையின் மற்றொரு பாகம் உள்ளது மற்றும் அது இன்னும் முடிவடையவில்லை; பூமியின் குடும்பங்கள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதும், பாவங்களுக்கான தம்முடைய பலியின் மூலமாய்ச் சம்பாதிக்கப்பட்ட நித்திய ஜீவனுக்கான வாய்ப்புகளையும், இரக்கமான கிருபைகளையும் மனுக்குலத்திற்கு அருளுவதுந்தான் அந்த வேலையின் முடிவடையாத பாகமாகும்.

அவர் தமது ஆவியை விட்டார். எந்த ஆவியை விட்டார்? அவர் தமது ஆவிக்குரிய சரீரத்தை மரிக்க ஒப்புக்கொடுக்கவில்லை; ஏனெனில் அச்சமயத்தில் அவருக்கு ஆவிக்குரிய சரீரம் இல்லாதிருந்தது. 34- வருடங்களுக்கு முன்னதாக, அவர் தமது தாயாகிய மரியாள் மூலமாய் மனுஷீக

சுபாவத்தில் பங்குகொள்ளத்தக்கதாக, தமது ஆவிக்குரிய நிலைமையையும், சுபாவத்தையும் துறந்து வந்திட்டார் – பரலோகத்தில் அவருக்குச் சொந்தமாய்க் காணப்பட்டதான ஜீவனின் ஆவியானது, மனித நிலைக்கு மாற்றப்பட்டது. தமது மனுஷீக சரீரத்தை, உயிரூட்டின இந்த ஜீவனின் ஆவியை அவர் 33½ வருடங்களாக அனுபவித்து, பயன்படுத்தி வந்தார்; இப்பொழுது அதை மரணத்திற்கு அவர் ஒப்புக்கொடுக்கின்றார். சிலுவையில் அறையப்பட்ட மாம்சமானது, இனி ஒருபோதும் அவருடையதல்ல, ஏனெனில் அப்போஸ்தலர் கூறியுள்ள பிரகாரம், அவர் மரிக்க வேண்டும் என்பதற்காகவே அடிமையின் ரூபம் எடுத்தாரே ஒழிய, அந்த அடிமையின் ரூபத்தை என்றென்றுமாய்த் தக்கவைத்துக்கொள்ள அல்ல. குமாரன் தம்மோடுகூட மகிமைப்படுத்தப்படுவார் என்றும், அதுவும் உலகம் உண்டாகுவதற்கு முன்னதாக, குமாரன் பிதாவோடு இருந்தபோது கொண்டிருந்த மகிமையைக் காட்டிலும் உயர்வான ஒரு மகிமையில் மகிமைப்படுத்தப்படுவார் என்றும், அது மனுஷீக நிலையிலான மகிமையாய் இராமல், மாறாக ஆவிக்குரிய நிலையிலான மகிமைப்படுத்தலாய் இருக்கும் என்றுமாக பிதாவின் வாக்குத்தத்தம் காணப்பட்டது. "அவர் மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினபோது" அவர் தமது ஆவிக்குரிய நிலையை விட்டுவந்தவராய் இருந்தார்; தம்மிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள வேலையை தாம் நிறைவேற்றின பிற்பாடு, தாம் மீண்டுமாக மகிமைக்குள், அதாவது ஆவிக்குரிய நிலைமைக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவாரெனப் பிதாவின் மீது குமாரன் நம்பிக்கைக் கொண்டிருந்தார். ஆகவேதான், "மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?" என்று இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் கூறினார் (யோவான் 6:62).

இயேசு தம்முடைய ஆவியைப் பிதாவின் பராமரிப்பில் ஒப்படைத்தக் காரியமானது, அவர் மரணம் என்றால் என்ன என்பதை, அதாவது மரணம் என்பது ஜீவன் நின்றுபோகும் நிலைமை என்பதை முழுமையாய் அறிந்திருந்தார் என்பதையும், எனினும் தாம் என்றென்றும் மரணத்தில் இருக்கும்படிக்கு அனுமதிக்கப்படாமல், இப்பொழுதும் பிதாவின் சித்தத்திற்கு இசைவாக தம்மால் ஒப்படைக்கப்பட்ட ஜீவனின் ஆவியானது, உயிர்த்தெழுதலின் மூலம் தமக்கு மீண்டும் அருளப்படும் என்று பிதாவின் மீது குமாரன் நம்பிக்கைக் கொண்டிருந்தார் என்பதையும் மறைமுகமாகக் குறிப்பிடுகின்றது. தாம் மரணத்திலிருந்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுப்பப்படுவார் என்று இயேசு அறிந்திருந்து, அதைத் தம்முடைய சீஷர்களுக்கு முன்னறிவித்திருந்தார். தமது ஜீவனின் ஆவியானது, தமது ஜீவனானது பிதாவிடமிருந்து வந்தது என்றும், அந்த ஜீவனானது பிதாவின் வல்லமைக்கும், பராமரிப்பிற்கும் கீழ்ப்பட்டது என்றும் இயேசு அறிந்திருந்தார்; தாம் மீண்டும் ஜீவன் பெற்றுக்கொள்வதாக, பிதா தமக்கு வாக்களித்துள்ளதை அறிந்திருந்த இயேசு, அந்த வாக்குத்தத்தத்தின் மீதான தமது நம்பிக்கையை மாத்திரமே வெளிப்படுத்தினவராகக் காணப்பட்டார். இயேசுவினுடைய நம்பிக்கை நிறைவேறினது; தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுந்திருக்கப்பண்ணி, மனித சுபாவத்திற்கும் மேலாக மாத்திரமல்லாமல், தேவதூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாக உயர்வாக, ஆவிக்குரிய சுபாவத்தின் தளத்திலேயே, மிகவும் உயர்வான தளமாகிய திவ்விய சுபாவத்திற்கு உயர்த்தினார்.

இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய சபையானது, தங்களுடைய எஜமானின் பாடுகளில் பங்கடைவதற்கும், இறுதியில் அவரோடுகூட மகிமையில் பங்கடைவதற்கும் மற்றும் பூரணமான மனுக்குலத்தின் சுபாவத்திலும் கொஞ்சம் மேலானதாய்க் காணப்படும் தேவதூதர்களின் சுபாவம் மற்றும் கனத்திலும் மிக உயர்வானதாய்க் காணப்படும் திவ்விய சுபாவம் மற்றும் அதன் மகிமை, கனம் மற்றும் அழியாமையில் பங்கடைவதற்குமென, அதே அழைப்பினால் அழைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கக் காரியமாகும் (2 பேதுரு 1:4; ரோமர் 2:7; சங்கீதம் 8:5). இவை அனைத்தையும் மனதில் வைத்துக்கொண்டு, நாம் "மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபிரெயர் 12:1) என்ற வார்த்தைகளை ஒருவருக்கொருவர் புத்திமதியாய்க் கூறுவோமாக.

*****

# எசேக்கியாவின் மாபெரும் பஸ்கா

## 2 நாளாகமம் 30:1-13

**"நீங்கள் கர்த்தருக்கு உடன்பட்டு, அவருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு வாருங்கள்." (வசனம் 8)**

ஏசாயாவின் தரிசனமும், இஸ்ரயேலின் வீழ்ச்சியைக் குறித்து அறிவிப்பதற்கான அவரது பணியும், "இராஜாவாகிய உசியா" மரணமடைந்த வருஷத்திலாகும் (ஏசாயா 6:1). உசியா இராஜாவிற்குப் பின்பு துன்மார்க்கமான இராஜாவாகிய ஆகாஸ் யூதாவின் அரியணையில் வந்து, 16-வருடங்களாகத் தேவனையும், அவரது பிரமாணங்களையும் புறக்கணித்தவனாய்த் துன்மார்க்கமாய் ஆளுகைச் செய்துவந்தான். ஆனால் இவருக்கு ஒரு சிறந்த மனைவி காணப்பட்டாள் மற்றும் அபியாளாகிய இவளது கவனமுள்ள பராமரிப்பின்கீழ், இவர்களது குமாரனாகிய எசேக்கியா இராஜ்யபராத்திற்கென ஆயத்தப்படுத்தப்பட்டு வந்தார் மற்றும் எசேக்கியா அநேக விதத்தில் முன்மாதிரியான ஓர் இராஜாவாகவும், தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரனுமானார். இராஜ குடும்பத்துடன் ஏசாயா தீர்க்கத்தரிசி தொடர்புகொண்டவராய்க் காணப்பட்டப்படியால், இவர் எசேக்கியாவிற்கு ஆசிரியராக இருந்திருப்பார் என்றும், சரியாய்ச் சிந்திப்பதற்கும், செய்வதற்கும் எசேக்கியாவை வழிநடத்துவதற்கு உதவியிருந்திருப்பார் என்றும் அனுமானங்கள் காணப்படுகின்றன. இத்தனைப் பொல்லாத ஒரு தகப்பனிடத்திலிருந்து, இப்படி ஒரு நல்ல குமாரன் வந்துள்ளதான உண்மையானது, தெய்வீக ஏற்பாட்டின்கீழ், நாம் நமது மூதாதையர்களின் பொல்லாப்பான தன்மைகள் அனைத்தையும் சுதந்தரித்துக்கொள்வோம் என்பதாய் இருப்பதில்லை என்பதற்கு நமக்குச் சான்று பகர்கின்றது. இவைகளை நாம் முழுமையாய் ஜெயங்கொள்ள முடியாதென்றாலும், தனிப்பட்ட பிரயாசங்கள் மற்றும் பயிற்றுவிக்கப்படுதல்களின் விளைவாக ஆதாமின் சந்ததியிலுள்ள எவரேனும் பூரணத்தைத் திரும்ப அடையப்பெறுவதற்கு எதிர்ப்பார்க்க முடியாது என்றாலும், சாதகமானச் சூழ்நிலைமைகள், மத ரீதியான பேணிவளர்த்தல் முதலானவைகள், இவைகளினால் சரியாய் இயக்கப்படுபவர்களைப் பெரியளவிலான சீர்த்திருந்துதலுக்கு நேராக வழிநடத்துகின்றது என்று நாம் காண்கின்றோம்.

இங்கு ஆயிரவருட காலத்தின்போது உலகம் — ஆசீர்வதிக்கப்படுவதற்கும், தூக்கிவிடப்படுவதற்கும் கர்த்தரால் பயன்படுத்தப்படும் வழிமுறைகள் குறித்த குறிப்பை நாம் பெற்றுக்கொள்கின்றோம். மனித குடும்பமானது, அது காணப்படுகின்றதான சீரழிந்த நிலைமையினின்று அதனையே தூக்கியெடுப்பதற்குக் கூடாததாய் உள்ளது; ஏனெனில் குறுகிய ஜீவியக்காலமும், தீமை மிகுதியாய்ப் பரவியுள்ளதாய்க் காணப்படுவதுமாகும்; ஆகையால் மனுக்குலத்தைத் தூக்கிவிடுகின்றதான வல்லமையானது, விழுகையினால் அசுசிப்படாததும், வெளியிலிருந்து வருகிறதுமான வல்லமையாகக் காணப்பட வேண்டும். இன்னுமாக மனிதன் ஆக்கினைத்தீர்ப்பிலிருந்தும், பெலவீனத்திலிருந்தும் முழுமையாய் விடுவிக்கப்படுவதற்கு முன்னதாக, தெய்வீகத் தீர்ப்பினுடைய நிபந்தனைகளின்கீழ், மனிதனுடைய பாவத்திற்கான தண்டனை ரத்துச் செய்யப்பட வேண்டும்; அவனது தண்டனையானது, அவனுக்காகச் சந்திக்கப்பட வேண்டும். இந்த மீட்பானது (அ) விலைக்கொடுத்து வாங்குதலானது, மனுக்குலத்திற்காக ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளது; பாவத்திலிருந்தும், மனதிலும், ஒழுக்கத்திலும், சரீரத்திலுமான சீரழிவுகளாகிய அதன் பின்விளைவுகளிலிருந்தும் மனுக்குலமானது விடுவிக்கப்படுவது என்பது, எதிர்க்கால வேலையாகும் மற்றும் இது கிறிஸ்துவின் மாபெரும் பலியினால் சாத்தியமாக்கப்படும். மனுக்குலத்தை மீட்டுக்கொண்டவரும் மற்றும் வல்லமைக்கும், மகா மகிமைக்கும்உயர்வாய் உயர்த்தப்பட்டவரும், மனுக்குலத்தின் குடும்பத்தில், தமது கிருபையை ஏற்றுக்கொள்பவர்கள் எவரையும் நீதியினிடத்திற்கும், பரிபூரணத்தினிடத்திற்கும் தூக்கிவிடுவதற்கென்று சீக்கிரத்தில் தமது இந்த வல்லமையை மனிதன் சார்பில் பயன்படுத்தப்போகின்றார் என்ற கருத்து கிருபை நிறைந்ததாயுள்ளது. தூக்கிவிடும் பணியானது, போதித்தல், சிட்சித்தல், நீதியில் சரிப்படுத்துதலின் அடிப்படையில் காணப்படும் மற்றும் இவைகள் விஷயத்தில் ஒவ்வொருவனும் "உலகத்தோற்றமுதல் பரிசுத்தத் தீர்க்கத்தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் தேவன் உரைத்திட்டதான அனைத்திலும் சீர்ப்பொருந்தப்படுதலை" அடையத்தக்கதாக, ஒத்துழைப்புக் கொடுப்பதற்குக் கடமைப்பட்டிருப்பான் (அப்போஸ்தலர் 3:19-21).

எசேக்கியா ஏற்கெனவே நன்கு போதிக்கப்பட்டிருந்தார் என்பதும், அவரது தகப்பனாருடைய மரணத்தின்போதும் மற்றும் அவர் இராஜ பதவியில் பிரவேசிக்கும் போதும் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணினவராய் இருந்தார் என்பதும் அவர் தனது ஆளுகையை ஆரம்பித்தவுடனே —

தனது இராஜ்யபாரத்தினுடைய முதலாம் மாதத்தில், இப்பாடத்தில் நாம் பார்க்கிற சீர்த்திருத்தங்களை, அதாவது தெய்வீக நியமித்தலின்படியே யேகோவா தேவனுக்கான தொழுதுகொள்ளுதலை மீண்டும் கொண்டுவந்தார் என்பதில் உறுதியாகுகின்றது. ஒருவேளை அவர் கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணாதவராய்க் காணப்படுவாரானால் மற்றும் சரியான இருதய நிலைமையில் காணப்படாமல் இருந்திருப்பாரானால், அவர் அதிகாரத்திற்கு உயர்ந்த காரியமானது, நேர் எதிர்மாறானவைகளைச் செய்திடுவதற்கு அவரை இயக்கியிருந்திருக்கும் மற்றும் சுயத்தைத் திருப்திப்படுத்துவதற்கும், இறுமாப்புக்கொள்வதற்கும் அவரை வழிநடத்தியிருந்திருக்கும்.

வருஷக் கணக்காகத் திறக்கப்படாமலும், செப்பனிடப்படாமலும், அதிக அளவிலான குப்பைகள் குவியுமளவுக்கு விடப்பட்டிருந்த நிலையிலுமான ஆலயத்தினைத் திறப்பதும், ஆயத்தப்படுத்துவதும் அவரது முதலாம் வெளியரங்கமானப் பணியாய் இருந்தது. இராஜா இந்த வேலையில் தனக்கு உதவிச் செய்திடுவதற்குரிய சரியான உதவியாளர்களை, அதாவது தேவனால் நியமிக்கப்பட்டிருந்ததான லேவிக் கோத்திரத்தாரை அழைத்தார். ஆலயத்தின் சுத்தீகரிப்பானது, மோசேயினுடைய பிரமாணத்திற்கு ஏற்ப நடைப்பெற்றது மற்றும் நிறைவேறி முடிந்தபோதோ, முதலாவதாகச் செய்ய வேண்டியிருந்தது மகா பெரும் பாவநிவாரண பலிச்செலுத்துதலாகும். இராஜாவாகிய எசேக்கியா பரந்த மனப்பான்மையுடையவராக இருந்து, பலியானது யூதேயாவின் ஜனங்களாகிய இரண்டு கோத்திரத்தாரின் சார்பாக மாத்திரமல்லாமல், தங்களைவிட்டுப் பிரிந்துபோனதான சகோதரராகிய "இஸ்ரயேலர்கள் அனைவரின்" சார்பாகவும் செலுத்தப்படுவதற்கு விசேஷித்தக் கட்டளைகளிட்டார்.

சில விதங்களில், அதாவது தெய்வீக வாக்குத்தத்தங்களானது ஆபிரகாமின் சந்ததியார் அனைவருக்குமாகப் பண்ணப்பட்டுள்ளது எனும் விதத்தில் [10 இஸ்ரயேலரும், 2 யூத கோத்திரத்தாரும்] இஸ்ரயேல் ஜாதியார் ஒன்றாகத்தான் உள்ளதாக, எசேக்கியா சரியாய் அடையாளம் கண்டுகொண்டிருந்தார்; ஆகையால் கர்த்தராகிய ஆண்டவரை தேவன் என்று அங்கீகரித்தும், அவரது முகத்தினை நாடும் நிலையிலுமான (12) அனைத்துக் கோத்ததிரத்திலுமுள்ள எவரும் சக இஸ்ரயேல் சகோதரனாகக் கருதப்பட வேண்டும்.

எகிப்திலிருந்துள்ள இஸ்ரயேலுக்கான கர்த்தருடைய விடுதலையின் நினைவுகூருதலுக்குரிய பஸ்கா பண்டிகையின் காலமாய் அப்போதிருந்தது; பஸ்கா பண்டிகையானது, பாவம் மற்றும் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து ஆவிக்குரிய இஸ்ரயேலனுக்கான விடுதலைக்கு நிழலாய்க் காணப்படுகின்றது; இன்னுமாக நீதியை விரும்பி, கர்த்தருக்கு ஊழியம்புரிய விரும்புகிறவர்கள், ஆயிரவருடக் காலத்தின்போது, சாத்தானுடைய முழுமையான கவிழ்க்கப்படுதலின் வாயிலாக, அவனது அடிமைத்தனத்திலிருந்து இறுதியில் விடுவிக்கப்படுகிறதற்கும்கூட நிழலாய்க் காணப்படுகின்றது. இந்தப் பஸ்கா பண்டிகையானது, அந்த வருஷத்தில் முறையாய் ஆசரிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது; ஏனெனில் பதிவை வைத்துப்பார்க்கும்போது, பஸ்கா பண்டிகையானது சில இஸ்ரயேலர்களால் கைக்கொள்ளப்பட்டு வரப்பட்டிருந்தப்போதிலும், மத சம்பந்தமான விஷயத்தில் பரவலாய் ஒழுங்கீனம் நிலவியிருந்தபடியால், பஸ்காவானது அந்த ஜனங்களினால் கைக்கொள்ளவும் படவில்லை மற்றும் கைக்கொள்ளப்பட்டவர்களால் அதில் நியமித்து வழங்கப்பட்டதான அம்சங்கள் அனைத்துடன் கைக்கொள்ளவும் படவில்லை. இம்முறை அதன் முறையான ஆசரிப்பு மீண்டுமாகத் தொடங்கப்பட வேண்டும் என்றும், ஆசரிப்பதற்கு முன்னதாக ஜனங்களுடைய சுத்தீகரிப்புத் தொடர்பாகவும், ஜனங்கள் தங்கள் வீடுகளிலிருந்து பாவத்திற்கு அடையாளமான புளிப்பைப் புறம்பாக்கிப்போடுவது தொடர்பாகவுமுள்ள நியாயப்பிரமாணத்தின் காரியங்கள் அனைத்தையும் முறைப்படிச் செய்ய வேண்டும் என்றும் இராஜா தீர்மானம்பண்ணினார் (யாத்திராகமம் 12:15-20); இப்படியாக அடையாள விதத்திலாகிலும், ஜனங்கள் பண்டிகையை ஆசரிக்கத்தக்கதாகப் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாய்க் காணப்படுவார்கள். ஆனால் இவைகள் அனைத்திற்கும் காலம் தேவைப்பட்டது; அதாவது கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதற்கும், ஜனங்களுடைய பக்திவைராக்கியம் தூண்டிவிடப்படுவதற்கும் மற்றும் பாவத்திலிருந்து விலகுதல், கர்த்தருக்குப் பரிசுத்தமாய் இருத்தல் என்பவைகளை அடையாளப்படுத்துகின்றதான இவ்வேலைகளை ஜனங்கள் செய்திடுவதற்குத் தூண்டிடப்படுவதற்கும் காலம் தேவைப்பட்டது. ஜனங்கள் அவ்வளவுக்கு அசுசியுடன் இருந்தபடியாலும், முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியாகிய நியமிக்கப்பட்ட நாளில்தானே பஸ்காவை ஆசரிக்கத்தக்கதாக ஆயத்தமாகுவதற்குக் காலம் மிகவும் குறைவாய் இருந்தபடியாலும், கர்த்தருடைய அனுமதியின்பேரில் பஸ்காவானது இரண்டாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியன்று ஆசரிக்கப்பட்டது (எண்ணாகமம் 9:10, 11).

அனைத்து இஸ்ரயேலர்களின் சார்பாகப் பாவநிவாரண பலிச்செலுத்தப்பட வேண்டுமென்று எசேக்கியாவின் அறிவுறுத்தலில் வெளிப்பட்டதான அதே மனம் மற்றும் இருதய நிலைமையானது, இன்னும் அவரை இயக்கினதாய்க் காணப்பட்டு, "யூதேயாவில்" மாத்திரம் சீர்த்திருந்துதலை விரும்பாமல், தங்களிடமிருந்து பிரிந்து காணப்படுகின்ற சகோதரராகிய "இஸ்ரயேலிலும்"

சீர்த்திருந்துதலை விரும்பிடுவதற்கு அவரை வழிநடத்தினதாய் இருந்தது. இதனால் விசேஷமான தூதுவர்கள், ஒவ்வொரு கோத்திரத்திலுள்ள அனைத்து இஸ்ரயேலர்களையும் யேகோவா தேவனைத் தொழுதுகொள்வதற்குத் திரும்பிடுவதற்கும் மற்றும் இந்தப் பண்டிகைக்கு விசேஷமாய் வந்திடுவதற்கும் உரிய அழைப்பினை விடுப்பதற்கு இஸ்ரயேல் தேசத்தினுடைய தெற்கு ஓரத்தில் இருக்கும் பட்டணமாகிய பெயெர்செபாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டனர். இன்றைய நாட்களிலுள்ள அஞ்சல் (post) முறைமையானது அப்போது நடைமுறையில் இல்லை; ஆகையால் இந்தக் கடிதங்களை எடுத்துச்செல்வதற்கு அப்போது விசேஷமான அஞ்சல் ஏற்பாடு பண்ணப்பட்டது.

இத்தகைய ஓர் அழைப்பு விடுக்கப்பட்டதான காலம் மிகவும் ஏற்றக்காலமாகும், ஏனெனில் இஸ்ரயேல் சிறையிருப்பிற்குள் கொண்டுபோகப்படுதல் குறித்ததான ஏசாயாவின் தீர்க்கத்தரிசனமானது ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டிருந்தது; இக்காலக்கட்டத்தில் பத்துக் கோத்திரங்களும் அசீரியாவிற்குக் கப்பம் கட்டிக்கொண்டிருந்தனர் மற்றும் அநேக ஜனங்கள் (சிறைப்பிடித்து) கொண்டுபோகப்படுதலானது, உண்மையில் ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது. ஆகையால் "உத்தம இஸ்ரயேலர்களாய்க்" காணப்படும் எல்லோருக்கும், அவர்கள் சிறைப்பட்டுப் போவதானது, அவர்கள் கர்த்தரைப் புறக்கணித்ததற்கான தண்டனை என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவருகின்றதாகவும், கொஞ்சமேனும் விசுவாசமும், பக்திவைராக்கியமும் கொண்டிருப்பவர்களை, கர்த்தரைத் தொழுதுகொள்வதற்கெனத் திரும்பிடுவதற்குத் தூண்டிவிடுகின்றதாகவும் கர்த்தருடைய இந்த (எசேக்கியாவின் கடிதம் மூலமான) ஏற்பாடு காணப்பட்டது. இராஜாவாகிய எசேக்கியாவின் கடிதமானது, கழிந்ததை நினைவுகூருவதற்கும், யேகோவா தேவனிடத்திற்குத் திரும்பிடுவதற்குமான சுருக்கமான புத்திமதியாகவே காணப்பட்டது. "தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்குத் துரோகம்பண்ணின உங்கள் பிதாக்களைப்போலவும் உங்கள் சகோதரரைப்போலவும் இராதேயுங்கள்; அதற்காக, நீங்கள் காண்கிறபடியே, அவர்கள் பாழாய்ப்போகிறதற்கு ஒப்புக்கொடுத்தாரே;" "நீங்கள் கர்த்தருக்கு உடன்பட்டு, அவர் சதாகாலத்துக்கும் பரிசுத்தம்பண்ணின அவருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு வந்து . . . அப்பொழுது அவருடைய உக்கிரமான கோபம் உங்களைவிட்டுத் திரும்பும்" (2 நாளாகமம் 30:7, 8).

இந்தப் புத்திமதியானது, தற்போதைய விடுதலையை மாத்திரம் குறிப்பிடாமல், ஏற்கெனவே நாடு கடத்தப்பட்டுள்ள அவர்களது சகோதரருடைய திரும்பிவருதலையுங்கூடக் குறிப்பிட்டதாய் இருந்தது. ஆனால் இந்தச் செய்தியைச் சுமந்துவந்ததான தூதர்கள் வடக்குப்புறமான இராஜ்யத்தில் பரியாசம் பண்ணப்பட்டார்கள். எந்தளவுக்கு ஜனங்கள் கர்த்தரிடமிருந்து விலகி இருந்தார்களோ, அந்தளவுக்கு அவர்கள் பெருமையும், இறுமாப்பும் உடையவர்களாய் இருந்தனர் மற்றும் இப்படியாகவே எப்போதும் இருந்துவந்துள்ளது; மற்றும் இவர்களது அதிகளவிலான பெருமையே, இவர்கள் ஒரு தேசமாக அழிவிற்குள் செல்வதற்கு வழிநடத்தினதாய் இருந்தது. கர்த்தரோடு இசைவிற்குள் காணப்படுகின்றதான அனைவரும் தாழ்மையான மனமுடையவர்களாய் இருப்பார்கள் மற்றும் இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே மதிப்புடன் (அ) அன்புடன் கர்த்தருடைய கிருபை நிறைந்த செய்தியினை ஏற்றுக்கொள்வார்கள் மற்றும் செய்திகளைச் சுமந்துவந்த ஊழியக்காரர்களையும் நன்றாய் நடத்துவார்கள். (இஸ்ரயேலில்) இம்மாதிரியான சூழ்நிலைகளின் மத்தியில் கீழ்ப்படிபவர்கள் அதிகளவிலான விசுவாசமும், யேகோவா தேவனுக்கு அன்பும் கொண்டிருந்திருக்க வேண்டும்; ஏனெனில் இவர்களுங்கூட, இவர்களை அழைத்ததான தூதுவர்களுடனே, விசுவாசமற்ற ஜனங்களுடைய கேலிக்கும், ஏளனத்திற்கும் ஆளாகியிருந்திருப்பார்கள். அநேகர் இல்லையென்றாலும், கொஞ்சம்பேர் தங்களைத் தாழ்த்திக்கொண்டார்கள் என்றும், இவர்கள் ஆசேர், மனாசே மற்றும் செபுலோன் கோத்திரங்களிலிருந்து வந்தார்கள் என்றும் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது; இவர்களும் தங்களைத் தாழ்த்துகிறவர்களுக்கும், கீழ்ப்படிகிறவர்களுக்கும் தேவன் எப்போதும் அருளுகின்றதான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள். வசனம் 11-இல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளோடுகூட, 18-ஆம் வசனத்தில் எப்பிராயீம், மனாசே, இசக்கார், செபுலோன் கோத்திரங்களிலிருந்து "ஏராளமான அநேகம்" ஜனங்கள் வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் பார்க்கின்றோம். இப்படியாக பத்துக் கோத்திரத்திரங்களில், ஐந்து கோத்திரங்களிலிருந்து ஏறக்குறைய கொஞ்சம் ஜனங்கள் வந்தார்கள் மற்றும் ரூபன், காத் எனும் இரண்டு கோத்திரங்கள் ஏற்கெனவே சிறைப்பட்டுப் போயிருந்தனர். இஸ்ரயேலாகிய தங்கள் சொந்த தேசத்தில் பரவிக்கிடந்த விக்கிரக ஆராதனையின் காரணமாகவும், யூதேயாவில் பக்தியான ஜீவியத்திற்கான சிறந்த வாய்ப்புகள் காணப்பட்டதன் காரணமாகவும், பத்துக் கோத்திரங்களிலுள்ள சில மனுஷர்கள் ஏற்கெனவே தங்களை யூதேயாவின் இராஜ்யத்துடன் இணைத்துக்கொண்டார்கள் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும் (2 நாளாகமம் 15:9).

யூதேயா முழுவதும், பஸ்கா பண்டிகைக்குக் கலந்துகொள்வதற்கான அழைப்பானது, மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது; "யூதேயாவிலும் கர்த்தருடைய வார்த்தையின்படியே, இராஜாவும், பிரபுக்களும் கட்டளையிட்டபிரகாரம் செய்கிறதற்கு, தேவனுடைய கரம் அவர்களை

ஒருமனப்படுத்திற்று." (2 நாளாகமம் 30:12) இதன் விளைவாக, அந்த வருஷத்தில், எருசலேமில் வழக்கத்திற்கு மாறாக திரளான அளவில் ஜனங்கள் கூடிவந்திருந்தார்கள். சாலொமோனின் நாட்கள் முதற்கொண்டு, அதாவது 250 வருடங்களாக இப்படியானதொரு பஸ்கா ஆசரிக்கப்பட்டதில்லை என்பதாக பதிவுகள் காணப்படுகின்றன. பண்டிகையானது, மகா சந்தோஷத்துடனும், ஆனந்தத்துடனும், கர்த்தரை துதித்தும், பாடியும் ஆசரிக்கப்பட்டது; பக்தி பரவசத்தினால் ஜனங்கள் மிகவும் ஆட்கொள்ளப்பட்டுக் காணப்பட்டபடியால், அவர்களது யோசனையின் பேரிலேயே துதித்தலுக்கும், பரிசுத்தமானவைகளிடத்தில் பரிசுத்தமான உணர்வுகளைக் கொண்டிருத்தலுக்குமான பஸ்கா வாரத்தினை, இன்னும் ஒரு வாரம் நீட்டி ஆசரித்தார்கள் (வசனம் 21-26).

உண்மையான கபடற்ற இஸ்ரயேலர்கள், பத்துக் கோத்திரங்களினுடைய இராஜ்யத்தினின்று, அந்தநாளில் இரண்டு கோத்திரங்களினுடைய இராஜ்யத்தினிடத்திற்குச் சேர்க்கப்பட்டனர் என்ற உண்மையை இங்கு நாம் சற்று நிறுத்தி, கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். யூதாவின் பிந்தைய சிறைப்பிடிப்பிற்குப் பிற்பாடு, இஸ்ரயேலில் இருந்த பிரிவுகளானது, அடையாளம் தெரியாமலாகிவிட்டது. சிறையிருப்பிலிருந்து திரும்பிடுவதற்கான அனுமதியின் கோரேசினுடைய கட்டளையானது, எந்தக் கோத்திர பிரிவினருக்கென்று குறிப்பிடாமல், இஸ்ரயேல் அனைவருக்கும் என்று பிறப்பிக்கப்பட்டது; மற்றும் திரும்பி வந்தவர்களான அனைத்துக் கோத்திரங்களிலுமுள்ள உண்மையுள்ளவர்கள் ஒன்று சேர இஸ்ரயேல் என்று அடையாளம் கண்டுகொள்ளப்பட்டனர் மற்றும் பிற்பாடு இப்படியாகவே வேதத்தில் குறிப்பிடவும்பட்டுள்ளனர். [concordence] கன்கார்டன்ஸ் புஸ்தகத்தைப் பயன்படுத்தி, புதிய ஏற்பாட்டில் 'இஸ்ரயேல்' என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களைக் கவனியுங்கள். யூதர்கள் மாத்திரம் என்றில்லாமல் இஸ்ரயேலில் மீதியானவர்களும்தான் சுவிசேஷ யுகத்தில் கூட்டிச் சேர்க்கப்பட்டனர் மற்றும் மீதியானவர்களோ, சுவிசேஷ யுகத்தில், "தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய," ஆவிக்குரிய இஸ்ரயேல் தெரிந்தெடுக்கப்படுவது வரையிலும், "கடினப்பட்டிருப்பார்கள்," உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களிலிருந்து முறித்துப்போடப்பட்டவர்களாக இருப்பார்கள். (உரோமர் 11:7, 25-32 பார்க்கவும்)

எசேக்கியாவினால் கொண்டுவரப்பட்டதான உண்மையான பக்தியின் விஷயத்திலான மறுமலர்ச்சியானது, அந்தப் பஸ்காவோடு முடிவடைந்து போகவில்லை. இது கர்த்தரை உண்மையாய்த் தொழுதுகொள்வதற்கும், ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களைத் தாங்கிடவும், பலிக்கடுத்தவைகளைப் பராமரிக்கவும் வேண்டி தாராளமாய்க் கொடுப்பதற்குமான பக்திவைராக்கியத்தினால் ஜனங்களை நிரப்பினதோடுகூட, யூதேயா தேசம் முழுவதிலும், இன்னுமாக பத்துக் கோத்திரங்களுடைய தேசத்திலும், அனைத்து விதமான விக்கிரக ஆராதனைக்கு எதிராக மிகுந்த கிளர்ச்சி உருவாகுவதற்கு நேராக வழிநடத்தினதாய் இருந்தது; இதன் காரணமாக தேசத்தில் விக்கிரகங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன, பாகாலுக்கான கட்டுப்பாடற்ற வழிபாட்டிற்கெனப் பயன்பட்டுவந்ததான அருவருப்பான மேடைகள் அழிக்கப்பட்டன. இப்படி ஜனங்கள் கர்த்தருக்கு நேராய்த் திரும்பினதன் காரணமாக, அந்த ஜாதியாருடன் பண்ணப்பட்டிருந்ததான தேவனுடைய உடன்படிக்கைக்கு இசைவாக அவர்கள்மீதும், அவர்களுடைய இராஜாவின்மீதும் மாபெரும் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் கடந்துவந்தன. இராஜா மிகவும் ஐசுவரியவானானார் மற்றும் ஜனங்களும் இப்படியானதால், கர்த்தருக்கான அவர்களது காணிக்கைகளும், தசமபாகங்களும், லேவியர்களுக்கும், ஆசாரியர்களுக்கும் கொடுப்பதற்குப் போதுமானதாய் மாத்திரம் காணப்படாமல், மிகவும் திரளாய்க் காணப்பட்டதினால், அவைகளை வைப்பதற்குப் பண்டகசாலைகள் கட்டப்பட்டன.

இவைகளில் ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கான ஒப்புமைகளுக்காக நோக்குகையில், அநேகவற்றை நாம் காண்கின்றோம்: (1) உண்மையான தேவபக்தி அனைத்துமே ஒழுங்கு மற்றும் (சுத்திகரித்தலுடன்) துப்புரவுடன் முழுவதும் ஒத்துவருகின்றதாய் இருக்கின்றது; அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதுபோன்று, ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார் மற்றும் யாரொருவன் தேவனுடைய ஆலயத்தைச் சுத்திகரிப்பதற்கும், தெய்வீக ஒழுங்கு முறைக்கு இசைவாய்க் கொண்டுவருவதற்கும் முயல்வானோ அவன் — எசேக்கியாவும், அவரது இராஜ்யமும் ஆசீர்வதிக்கப்பட்டதுபோலவே, இப்பொழுது ஆசீர்வதிக்கப்படுவான் என்று சொல்லலாம்; ஆனாலும் ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள பலன்களானது, பூமிக்குரிய ஆசீர்வாதங்களாயிராமல், ஆவிக்குரியவைகளாக இருக்கின்றன என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். (இன்னமும் நிறைவடையாத) ஜெயங்கொள்ளும் சபையே உண்மையான ஆலயமாகக் காணப்பட்டாலும், இப்பாடத்தில் இதுவரையிலும் பார்த்து வந்துள்ளவைகளில் தற்காலத்திலுள்ள கர்த்தருடைய சபையாரே, அவரது ஆலயமாகப் பெயரளவில் கருதப்படலாம். எனினும் இந்தப் படிப்பினையை நாம் நமது சொந்த இருதயங்களுக்குக்கூடப் பொருத்திப்பார்த்திடலாம்; ஏனெனில் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றதுபோல, ஒவ்வொரு

கிறிஸ்தவனும் பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாக இருக்கின்றான் மற்றும் சபையுங்கூட மொத்தத்தில், அதன் தற்போதைய அபரிபூரணமான நிலைமையிலுங்கூட கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட, சமர்ப்பிக்கப்பட்ட, பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாகக் கருதப்படலாம். ஆகையால் நமது பிரதான ஆசாரியனுடைய மாபெரும் பாவநிவாரணத்தின் காரணமாக நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஆவிக்குரியவைகளில் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், அவன் சகல உலகப்பிரகாரமான அசுசியிலிருந்து தன்னையும் (தன்னால் முடிந்த மட்டும், தன்னோடுகூட உள்ளவர்களும், இதே சிந்தையுள்ளவர்களுமாகிய மற்றவர்களையும்) நீங்கப்பெற்ற நிலையில் காத்துக்கொள்வதற்கு நாடிட வேண்டும். கடந்த காலங்களிலுள்ளவைகள் மாத்திரமல்லாமல், உலகத்தில் எப்போதும் காணப்படும் உலகப்பிரகாரமான அசுசிகளிலிருந்தும் சுத்திகரிக்கப்படுவதற்கான அவசியத்தினைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் நினைவில்கொள்ள வேண்டும். "பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" (2 கொரிந்தியர் 7:1) என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நாம் நினைவுகூருகின்றோம்.

வெறுமனே சுத்திகரிப்புச் செய்யப்படக்கூடாது, மாறாக தெய்வீக ஒழுங்குமுறைக்கு இசைவாய்ச் செய்யப்பட வேண்டும். எசேக்கியாவும், ஆசாரியர்களும், லேவியர்களும், இஸ்ரயேலினுடைய உடன்படிக்கைக்கான மத்தியஸ்தராகிய "மோசேயினுடைய நியாயப்பிரமாணத்திற்கு" ஏற்ப சுத்திகரித்து, பரிசுத்தம் பண்ணினதுபோல், புத்திரர்கள் வீட்டாராகிய நாமும் "புதிய உடன்படிக்கையின்" மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு ஏற்ப, அதாவது "பிரியமானவருக்குள்" நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டதான பிரமாணத்திற்கு ஏற்ப சுத்திகரிக்கப்படுவதற்கும், பரிசுத்தம் பண்ணப்படுவதற்கும் நாட வேண்டும். நியாயப்பிரமாணத்தின் கீழ் ஒரு விதமான விதிமுறைகளின்படி சடங்குகள் ஆசரிக்கப்பட வேண்டியிருந்ததுபோன்று, சுவிசேஷத்தின் கீழிலும் ஒருவிதமான விசுவாசமும், ஒரு விதமான நல் வார்த்தைகளும், ஒரு விதமான கீழ்ப்படிதலும் கடைப்பிடிக்கப்பட வேண்டியிருந்தது. நமது சுத்திகரித்தலானது, காளை மற்றும் ஆட்டினுடைய இரத்தத்தினால் உண்டாகாமல், மாறாக கிறிஸ்துவினுடைய மிகுந்த விலையேறப்பெற்றதான இரத்தத்தின் புண்ணியத்தினாலேயே உண்டாகின்றது; கிறிஸ்துவினுடைய இரத்தமானது, அவரது மரணத்தின் காரணமாக நம்மிடத்தில் பழிவாங்குதலைப் பேசாமல், பிதாவினிடத்தில் அவர் மூலமாய்க் கடந்துவருபவர்கள் அனைவருக்கும் இரக்கத்தையும், மன்னிப்பையும், கிருபையையும் பேசுகின்றதாய் இருக்கின்றது.

(2) கர்த்தரைத் தொழுதுகொள்ளும் விஷயத்தில் இணைந்துகொள்வதற்கு விரும்புகின்ற இஸ்ரயேலர்கள் அனைவரையும், சகோதரர்களெனக் கருதுவதும், தொழுதுகொள்ளுவதற்கென அவர்களை வரவேற்பதுமாகிய எசேக்கியாவின் பரந்த மனப்பான்மையுடனான கருத்திலுங்கூட நமக்கு ஒரு படிப்பினை உள்ளது. இது தொடர்புடைய விஷயத்தில் அவர் பரந்து, விரிந்த, வேதவாக்கியங்களின் அடிப்படையிலான கருத்தைக்கொண்டிருந்தது மாத்திரம் போதாது; கர்த்தருடைய ஜனங்கள் நடுவில் எவ்விதமான பிரிவினையின் வேலிகள் இல்லாமல் பார்த்துக்கொள்வதும், கர்த்தருடைய வீடாகிய ஆலயத்தில், கர்த்தரைத் தொழுதுகொள்வதற்கு ஏற்பாடுபண்ணுவதும் அவரது கடமையாகவும், சிலாக்கியமாகவும் இருந்தது. இப்படியாகவே ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மத்தியிலும், "உத்தம இஸ்ரயேலர்கள்" அனைவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கின்றார்கள் என்ற உணர்ந்துகொள்ளுதல் காணப்பட வேண்டும் மற்றும் அனைவரையும் கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினை மாபெரும் பாவநிவாரணம் என்று நம்புகின்ற உத்தம இஸ்ரயேலர்களாகவும், கர்த்தருடைய ஊழியத்திற்கென அர்ப்பணித்துள்ள உத்தம இஸ்ரயேலர்களாகவும் எண்ணி, நடத்திட வேண்டும். இப்படியாய் அடையாளம் கண்டு கொள்கின்றதான கிறிஸ்தவ பண்பானது, கடந்த நூற்றாண்டினுடைய பாதி முதற்கொண்டு அதிகளவில் பெருகிவருகின்றது என்று நம்புவதில் நாம் மகிழ்ச்சிக்கொள்கின்றோம்; இன்னும் செய்யப்பட வேண்டியவைகள் அநேகம் உள்ளன: கிறிஸ்தவ பிரிவுகள் எனும் வேலிகள் அனைத்தும் தகர்க்கப்பட வேண்டும் மற்றும் பிரிவுகளின் பெயர்களும், விசுவாசப் பிரமாணங்களும் ஒழித்துக் கட்டப்பட வேண்டும்; இன்னுமாக (விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசித்து, கர்த்தருக்கும் மற்றும் தங்களால் புரிந்துகொள்ள முடிகிற அளவுக்கு அவரது வார்த்தைகளிலுள்ள அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிவதற்கும் முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள அனைவராகிய) உண்மை கிறிஸ்தவர்கள் ஒருங்கிணைந்துக் காணப்பட வேண்டும் மற்றும் சிலர் மற்றவர்களைக்காட்டிலும் அதிகப்படியான அறிவையும், பரிசுத்தமாக்குதலையும் அடைந்திருக்கலாமே ஒழிய, மற்றப்படி எந்த வேறுபாடுகள் இன்றி, ஒரே ஜனங்களாகக் காணப்பட்டு, "கிறிஸ்து இயேசுவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகுவதற்கு" நாட வேண்டும்.

(3) உண்மையான இஸ்ரயேலிடத்திலும், அனைவருக்குமான தேவ வாக்குத்தத்தத்திலும் உண்மையான ஐக்கியங்கொள்வதற்கும், அதுவும் அனைத்து விசுவாசப் பிரமாணங்களையும், பிரிவுகளையும் உதறி உண்மையான ஐக்கியம் கொள்வதற்குமுரிய செய்திக்கு/தூதிற்கு, அன்றும் அநேகர் ஆதரவு வழங்காதது போன்று இன்றும், ஆதரவு வழங்கப்படுவதில்லை. அன்றுபோல் இன்றும் பெரும்பாலானவர்கள் நகைப்பதற்கும் மற்றும் வேதவாக்கியங்களில் கற்பிக்கப்பட்டிருக்கின்றதும், ஆதி திருச்சபையில் கடைபிடிக்கப்பட்டதுமான கிறிஸ்து இயேசுவிலான எளிமையினை ஆதரிப்பவர்களைக் கற்பனையுலகில் சஞ்சரிப்பவர்களாக முத்திரை குறிப்பதற்கும் வழிநடத்தப்படுகின்றனர். எனினும் அன்றுபோல் இன்றும், சிலர் தங்களால் சரியான தூதென/செய்தியென அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றதான சத்தியத்தினால் ஈர்க்கப்படுகின்றனர். இஸ்ரயேலில் காணப்பட்டதுபோலவே இன்றும் கேட்ட செய்திக்கேற்ப செயல்படுவதற்குப்போதுமான தைரியம் இல்லாத நிலையில், செய்தியினைக் கேட்ட அநேகர் காணப்படுகின்றனர். அனைத்துக் கிறிஸ்தவ பிரிவுகளிலிருந்தும், வெவ்வேறான விசுவாச பிரமாணங்களைக் கொண்டிருப்பவர்கள் மத்தியிலிருந்தும் வெகு சொற்பமானவர்களே ஈர்க்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர்; இப்படிப்பட்டவர்கள் சாந்தமானவர்களாகவும், தங்களைத் தாழ்த்திடுவதற்கு ஆயத்தத்துடனும், விருப்பத்துடனும் காணப்படுபவர்களாகவும் இருப்பவர்கள் ஆவர். பெருமையுள்ளவர்களோ சபை பிரிவுணர்ச்சிக்காகவும், கனங்களுக்காகவும், மதிப்பிற்கும் போராடுகிறவர்களாய்க் காணப்பட்டு, தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தவறிவிடுவார்கள்; "சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்."

(4) தேவன் விஷயத்திலும் மற்றும் பரிசுத்த அலங்காரத்துடனும், அவரது வார்த்தை கூறுபவைகளுக்கு இசைவுடனும் தொழுதுகொள்ளும் விஷயத்திலும், பயபக்தியின் உணர்வுகளில் உண்மையான எழுப்புதல் என்பது எசேக்கியாவின் நாட்களிலும், இன்றும் மொத்தத்தில் விக்கிரகங்களை உடைப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும். ஓ! வைராக்கியத்துடன் கவிழ்த்துப்போடுவதற்குக் கர்த்தருடைய ஜனங்களுக்கு எத்தனை விக்கிரகங்கள் காணப்படுகின்றன. அவைகள் அநேகமான தோற்றங்களிலும், வடிவங்களிலும் காணப்படுகின்றன, எனினும் அவற்றின் பொதுவான தன்மை ஒன்றே. இந்த விக்கிரகங்களில் ஒன்றும், ஆயிரமாயிரம் பேர்கள் புழுதி மட்டும் விழுந்து வணங்குகின்றதுமான ஒரு விக்கிரகம் சபை பிரிவுணர்ச்சியாகும்; இன்னொரு விக்கிரகம் பணமாகும்; இன்னொன்று இச்சை; இன்னொன்று சுயநலமான குறிக்கோள்; இன்னொன்று பெருமை; இன்னொன்று சுகபோகம் ஆகும்; இவையனைத்தும் சுயநலம் எனும் ஒரே குடும்பப் பெயருடைய லேகியோன் ஆகும். கிறிஸ்து இயேசுவுக்குள்ளான மீட்பின் வாயிலாக, கர்த்தருக்கான முழுமையான அர்ப்பணித்தலுக்குள் கடந்துவந்துள்ளவன், மற்றும் கர்த்தரைப் பரிசுத்த அலங்காரத்துடன் தொழுதுகொள்ளும் நிலைக்குள் கடந்துவந்துள்ளவன் எவனும், பாவத்தின் வாயிலாக மாபெரும் எதிராளியானவன் தன்னைத் தூண்டி, தன்னை வணங்கச் செய்ததும், தொழுதுகொள்ளச் செய்ததுமான இந்த விக்கிரகங்களிலுள்ள அருவருப்பான தன்மையை உடனடியாக உணர்ந்துகொள்வான். எந்தளவுக்கு கர்த்தருக்கான நமது பக்திவைராக்கியம் காணப்படுகின்றதோ மற்றும் எந்தளவுக்கு அவரது ஆவி நம்முடைய இருதயங்களில் காணப்படுகின்றதோ, அந்தளவுக்கு நாம் இந்த விக்கிரகங்களைத் தகர்ப்பதற்கும் மற்றும் நம்முடைய வாயின் வார்த்தைகளையும், ஜீவியத்தின் கிரியைகளையும் மாத்திரமல்லாமல், நமது எண்ணங்கள் அனைத்தையும் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்துவதற்கும் வைராக்கியம் உடையவர்களாக இருப்போம் (2 கொரிந்தியர் 10:5).

*****

**R 2408**

# "ஒவ்வொரு மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி"

## யோவான் 1:1-14

"அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது."- யோவான் 1:4

ஆதியாகமம் புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பூமியின் சிருஷ்டிப்பினுடைய காலக்கட்டத்தில் லோகோஸ் எனும் வார்த்தை, தேவனோடு இருந்தார் என்பதை நாம் அறிவோம். மனிதனாக பிறப்பதற்கு முன்னதாக இருந்த நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு "வார்த்தை" என்ற பெயர் மிகவும் பொருத்தமானதாகும். "வார்த்தை" என்பது கிரேக்க வார்த்தையாகிய லோகோஸின் மொழிப்பெயர்ப்பாகும். இதற்கு "வெளிப்படுத்தல்" என்னும் துல்லியமான வார்த்தையும் வழங்கபடலாம். ஏனெனில், உலகங்கள் உண்டாவதற்கு முன்பு காணப்பட்ட பரம பிதாவின் துணைவரான இவர் (லோகோஸ்), தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாக இருக்கின்றார். மேலும் இவர் தெய்வீகச் சித்தம், மனது, நோக்கம் மற்றும் குணங்களின் முற்றும் முழுமையான வெளிப்பாடாகவும் இருக்கின்றார். இந்த முதற்பேறானவரைக் குறித்து, "இவர் தேவனுடைய ரூபமாயிருக்கிறார்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (பிலிப்பியர் 2:6). மேலும், இவர் தேவனுக்குச் சமமாய் இருக்க விரும்பாமல், தேவனுக்கு அடிமையாக இருக்கவே விரும்பினார் என்றும் கூறுகின்றார். மேலும், லோகோஸ் மாம்சமாகி, மனுஷனாகிய கிறிஸ்துவாக வந்தக் காரியமானது, அவருடைய கீழ்ப்படிதலுக்கும், தாழ்மைக்கும், அடிமையாய் இருக்க விரும்பும் நிலைமைக்கும் ஆதாரமாய் விளங்குகின்றது. மேலும், இதே தாழ்மை மற்றும் கீழ்ப்படிதலின் காரணமாக, மரணம் வரையிலும் அதாவது, சிலுவையின் மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராகவே பிதாவுக்குக் காணப்பட்டார். மேலும், இதன் காரணமாகவே, பிதாவாகிய தேவன் உயிர்த்தெழுதலில் அவருக்கு திவ்வியச் சுபாவத்தை அளித்து, தமக்கு அடுத்த ஸ்தானத்தைக் கொடுத்து, தம்முடைய சிங்காசனத்திலும், தம்முடைய மகிமையிலும், தம்முடைய வல்லமையிலும், தம்முடைய சுபாவத்திலும் அவரை பங்காளியாக வைத்து, எல்லா தூதர்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள், நாமங்களுக்கு மேலாக அவரை உயர்த்தினார். இயேசு மனிதனாக பிறப்பதற்கு முன்பு இருந்த நிலையைக் காட்டிலும் மேலாக அவரை உயர்த்தினார்.

தேவனுடைய ஒரே பேறான குமாரன், பூமியில் இருந்தபோதும், லோகோஸாக இருந்த போதும், இவர் பிதாவாகிய தேவனுக்கு நிகரானவர் என்று வேத வாக்கியங்கள் எங்காகிலும் தெரிவிக்கப்படவில்லை என்றாலும், இவர் இப்பொழுது உயர்த்தப்பட்ட நிலையில் இருக்கிறார் என்றும், தெய்வீகச் சுபாவத்தில், மகிமையில் மற்றும் பூமியிலும், வானத்திலும் உள்ள சகல அதிகாரங்களின் பங்காளியாக இருக்கின்றார் என்றும் வேதவாக்கியங்கள் கூறுகின்றது. மேலும், "பிதாவை கனம் பண்ணுகிறதுபோல, எல்லாரும் குமாரனையும் கனம் பண்ண வேண்டும்" என்று நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம் (யோவான் 5:23). நம்முடைய மீட்பர், மாம்சத்தில் வருவதற்கு முன்பு ஆவிக்குரிய ஜீவியாக, தூதர்களுக்கு மேலானவராக (பிரதானமானவராக) இருந்தது பற்றிய விஷயங்களே நம்முடைய பாடமாக இன்று உள்ளது. மேலும், இவராலேயே அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்டது என்பதையும் இப்பாடம் நமக்கு உறுதிப்படுத்துகின்றது... "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது." ஆகவே, பிதாவாகிய தேவனின் சிருஷ்டிப்பு வேலையில் உள்ள ஒவ்வொரு தளத்திலும் லோகோஸ் "எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி" இவருக்கு பங்களிக்கப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம் (கொலோசெயர் 1:18).

வேதத்தை ஆராயும் அநேக மாணவர்கள், யோவான் எழுதின சுவிசேஷத்தின் முதலாவது வசனத்தைத் தவறாகப் புரிந்துக்கொண்டு, தவறான கருத்துக்குள் இடறிவிழுந்து விடுகின்றனர். அதாவது, இவ்வசனம் லோகோஸ் தேவனுக்கு முழுமையாகச் சமமானவர் என்ற கருத்தை தெரிவிப்பதாகக் கருதிவிடுகின்றனர். அதாவது, வார்த்தையை/வெளிப்பாட்டை/செய்தியை அனுப்பினவருக்கு (பிதா), வார்த்தையானவர் (இயேசு) முற்றும் சமமானவர் என்று கருதிவிடுகின்றனர். இது நியாயமான கருத்தல்ல, மேலும் இது, "நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல்,

என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது"; "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என்ற நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் சாட்சிக்கும் எதிர்மாறாக இருக்கின்றது (யோவான் 5:30, 14:28).

பழைய ஏற்பாட்டில் தேவன் என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, யேகோவா தேவனுக்கு நிகரான வார்த்தை இல்லை என்று வேத பண்டிதர்கள் ஒத்துக்கொள்கின்றனர். அதன் அர்த்தம் "வல்லமையுள்ளவர்" ஆகும். சர்வ வல்லமையுள்ள யேகோவா தேவன் தவிர மற்றவர்களாகிய தேவதூதர்களுக்கும், மாபெரும் மனுஷர்களுக்கும், பொய்த் தேவர்களுக்கும், "வல்லமையுள்ளவர்" என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. யேகோவா என்ற நாமம் சர்வவல்லவருக்கு மாத்திரம் உரியதாகும். மேலும், இவருக்கு மற்ற அனைத்து ஏலோகீம்களும் (தேவர்கள் - வல்லமையுள்ளவர்கள்) கீழ்ப்பட்டவர்களே ஆவர். புதிய ஏற்பாட்டில் வல்லமையுள்ளவர் என்று அர்த்தம்கொள்ளும் **theos** (தியோஸ்) என்ற வார்த்தை ஏலோகீமுக்கு (elohim) நிகரான வார்த்தையாகும். புதிய ஏற்பாட்டில், இவ்வார்த்தையாகிய **theos** (தியோஸ்) யேகோவா தேவனைக் குறிக்க அடிக்கடிப் பயன்படுத்தப்பட்டாலும், சிலசமயம் மனுஷனைக் குறிக்கவும், சில சமயம் பொய்த் தேவர்களைக் குறிக்கவும், நமது கர்த்தர் இயேசுவை அநேகந்தரம் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. யோவான் எழுதின சுவிஷேசத்தின் முதல் வசனத்தில், யேகோவா தேவனின் லோகோஸாகிய, அவருடைய ஒரே பேறானவரை, அதாவது தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாய் இருப்பவரைக் குறிப்பிடுவதற்கு **theos** என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. (வெளிப்படுத்தல் 3:14). இந்த இரண்டு தேவன்களுக்கும் வித்தியாசம் கிரேக்கில் கண்டுபிடிப்பது எளிது. எப்படியெனில் theos என்ற வார்த்தை யேகோவாவைக் குறிக்கும் இடத்தில் அதற்கு முன்பு கிரேக்க சுட்டிடைச்சொல் வரும். மேலும் theos, லோகோஸ்/இயேசுவைக் குறிக்கும் இடத்தில் அதற்கு முன்பு கிரேக்க சுட்டிடைச்சொல் வராது.

(எ. கா.) "In the beginning was the Logos, and the Logos was with the God (யேகோவா தேவன்), and the Logos was a God (இயேசு). The same was in the beginning with the God (யேகோவா தேவன்)." – Emphatic Diaglott.

இது மிகச் சரியான மொழிப்பெயர்ப்பாகும். "நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்" என்று இயேசு கூறியுள்ளார் (யோவான் 8:42). குமாரன் தகப்பனாக இருக்க முடியாது. மேலும், குமாரனுக்கு ஆரம்பம் இல்லை என்று சொல்ல முடியாது, ஏனெனில், குமாரன் என்கிறபோது, தகப்பனிடமிருந்து வந்த ஒரு ஜீவியாகும். வேதவாக்கியங்களை இவ்வாறு நிதானித்துப் பார்க்கும்போது, அவைகள் இசைவான கருத்தைத் கொடுக்கின்றது. ஆனால், வேதவாக்கியங்கள் தவறான கண்ணோட்டங்களில், தவறான உபதேசங்களின் அடிப்படையில் பார்க்கப்படும்போது, சத்திய வெளிச்சம் இருளாகவே காணப்படும். மேலும், அனைத்தும் தேவனுடைய இரகசியமாய் காணப்படாமல், அக்கிரமத்தின், இருளின், தப்பறையின் இரகசியமாகவே காணப்படும்.

"அவருக்குள் ஜீவன் இருந்தது." மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவுக்குள்ளேயே ஜீவன் இருந்ததே ஒழிய, மற்ற எவரிடமும் ஜீவன் இல்லாத காரியம், மனுக்குலமிடமிருந்து நமது கர்த்தர் கொண்டிருக்கும் வேறுபட்ட நிலையைக் காட்டுகின்றது. இயேசுவைத் தவிர மீதமான முழு மனுக்குலமிடம், மரணம் கிரியை செய்து கொண்டிருந்தது. ஆதாம் கீழ்ப்படியாமைக்குள் கடந்துபோய், தனக்குள் இருந்த ஜீவனை இழந்தது முதல் அவருடைய சந்ததி முழுவதின் மேலும் மரணம் ஆண்டு கொண்டது. ஆகவே, ஆதாமினால், தனக்குப் பின்வரும் சந்ததிக்கு மரிக்கும் நிலையையே பகிர்ந்து அளிக்க முடிந்தது. கிறிஸ்து பாவிகளுக்கு விலகினவராகவும், பரிசுத்தமுடையவராகவும், குற்றமற்றவராகவும், மாசில்லாதவராகவும் இருந்தபடியால், இவருக்குள் இருந்த ஜீவன் இவரை இரட்சகராக்கிற்று. இவரை பிதா, நம்முடைய இனத்திற்கு நம்பிக்கையின் ஒளியாக அனுப்பினார். இயேசு, மனிதனாக வருவதற்கு முன்போ அல்லது மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவாக வந்தபோதோ, ஏதோ ஒருவிதத்தில் தம்முடைய ஜீவனுக்குரிய உரிமையை இழந்திருப்பாரானால், நம்முடைய நம்பிக்கையின் ஒளி அழிந்து போயிருக்கும். ஆனால், அவர் ஜீவனுக்குரிய உரிமையைப் பெற்றிருந்தபடியால், இயேசு, பிதாவின் திட்டத்தின்படி தம்முடைய ஜீவனை நம்பொருட்டாக ஒப்புக்கொடுத்தார். அதாவது, பாவத்தினால் ஆதாம் இழந்த ஜீவனுக்கு சரிநிகர் பலியாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார். அதாவது, ஆதாமின் மரணத் தீர்ப்பில் பங்கடைந்த அனைவருக்கும் சரிநிகர் பலியாக/விலைக்கிரயமாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக்கொண்ட அவர் இப்பொழுது மனுக்குலம் முழுவதற்கும் ஒளிக்கொடுப்பவராகவும், நம்பிக்கை கொடுப்பவராகவும், ஜீவன் கொடுப்பவராகவும் மாறிவிட்டார். மரித்துக் கொண்டிருக்கின்ற இந்த உலகத்திற்கு அளிக்கப்பட்ட இந்த மாபெரும் ஒளி மற்றும் ஜீவனுக்காக, தேவனை ஸ்தோத்தரிப்போம். இந்த ஒளி/வெளிச்சம் மனுஷர்களின் இருளின் மத்தியில் பிரகாசித்து மனுஷர்களால் புரிந்துக்கொள்ளப்படாமலும், ஏற்றுக்கொள்ளப்படாமலும் இருந்தாலும், இதுவே "உலகத்தில் வந்து, ஒவ்வொரு மனிதனையும் பிரகாசிப்பிக்கிற" உண்மையான, மெய்யான ஒளியாக இருக்கின்றது. ஆகவே இயேசு மாம்சத்தில் இருந்தபோது, அவரோடுகூட இருந்த யூதர்கள், இந்த ஒளியைப் புரிந்துக்கொள்ளமலும், ஏற்றுக்கொள்ளாமலும் இருந்ததும், இன்றளவும் உலகம் இந்த ஒளியைப் புரிந்துக்கொள்ளாமல் இருப்பதும் ஒரு பொருட்டல்ல. எப்படி இருப்பினும், இவரே மெய்யான ஒளியாக இருக்கின்றார். மேலும், பிதாவுடைய ஏற்றக் காலங்களில், அவருடைய மாபெரும் திட்டத்தை நிறைவேற்றி முடிப்பார். இந்தத் திட்டத்திற்கு இயேசுவே மையமாகவும், வெளிப்பாடாகவும், வார்த்தையாகவும் இருக்கின்றார். உலகத்தில் வந்து பிறந்த ஒவ்வொரு மனுஷனையும் இயேசு வெளிச்சமூட்டுவார். ஒருவரும் போதிய அறிவு இல்லாத காரணத்தினால் நித்தியஜீவனை இழந்துவிடாதபடிக்கும், ஒருவரும் இருளிலேயே வலுவிழந்து போகாதபடிக்கும், ஏற்றக் காலத்தில் அனைத்துக் குருடாக்கப்பட்ட கண்களும் திறக்கப்படும்; மேலும், அனைத்துச் செவிடான காதுகளும் திறக்கப்படும்; மேலும், குருடாய் இருந்தவன், அப்பொழுது தேவன் ஏற்படுத்தின பிரபுவும், இரட்சகருமான அந்த மாபெரும் ஒளியைத் தெளிவாகக் காண்பான். இயேசுவின் மூலமே ஒருவன் பிதாவிடம் சேர முடியும் (ஏசாயா 35:5; யோவான் 8:12, 14:6).

"இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடியிருப்பதினால்" சிறுபான்மையானவர்களே இதுவரையிலும், இந்த ஒளியைப் பார்த்துள்ளனர் (ஏசாயா 60:2). இயேசுவின் உண்மையுள்ளவர்கள், பொக்கிஷமானவர்கள், தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள், இந்த இருளான காலக்கட்டத்தில் மெருகூட்டப்பட்டு, அவரோடுகூட மகிமையடைந்து, மனுக்குலத்தை வெளிச்சமூட்டும் மாபெரும் வேலையில் அவரோடுகூட உடன்பங்காளிகள் ஆகும்போது, மகிமையான ஆயிரம் வருஷம் அரசாட்சியின் நாளில், இந்த மாபெரும் ஒளி தேவனுடைய இராஜ்யத்தில் சூரியனைப் போல் பிரகாசிக்கும் என நாம் காத்திருக்கின்றோம். மேலும், இயேசுவும், சபையும், ஆபிரகாமின் வித்தாக இருந்து, மனுக்குலத்தை வெளிச்சமூட்டுவதின் மூலமாகவும், நித்திய ஜீவன் பெற்றுக்கெள்ளத்தக்கதாக தேவனிடம் கிட்டிச் சேர்வதற்குமான வாய்ப்புகளின் மூலமாகவும், பூமியன் குடிகளை ஆசீர்வதிக்கும்போது, இந்த மாபெரும் ஒளி, தேவனுடைய இராஜ்யத்தில் சூரியனைப் போல் பிரகாசிக்கும் என நாம் காத்திருக்கின்றோம் (மத்தேயு 13:43; ரோமர் 8:17; கலாத்தியர் 3:16, 29; ஆதியாகமம் 22:17, 18).

தற்காலத்தில் இந்த மாபெரும் ஒளியின் சிறு வெளிச்சத்தையாகிலும் கண்டவர்கள் எவ்வித சாக்குப்போக்கையும் அளிக்க முடியாது. யார் யாருடைய கண்கள் காண்கின்றதோ, காதுகள் கேட்கின்றதோ அவர்கள் பாக்கியவான்கள். மேலும், இத்தகையவர்களுக்கு அதிக பொறுப்புகளும் உண்டு. மேலும், இவர்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சத்திற்கு இசைவாக இவர்கள் நடக்கவில்லையெனில் அதிக "அடிகளும்" இவர்களுக்கு உண்டு (லூக்கா 12:47, 48).

அப்போஸ்தலன் இங்கு ஒளியையும், ஒளியின் செய்தி தூதுவனையும் கவனமாக வேறுபடுத்திக் காட்டுகின்றார். யோவான் ஸ்நானனைக் குறித்து நமது கர்த்தர், "அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருக்கிறான்" என்று கூறுகின்றார் (யோவான் 5:35). ஆங்கில மொழிப்பெயர்ப்பில் Shining Lamp (விளக்கு) என்பதற்குப் பதிலாக Shining Light என்று தவறாக மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது (தமிழ் மொழிப்பெயர்ப்பு சரியாக உள்ளது). நமது கர்த்தர் வெளிச்சம்/ஒளி என்று பேசப்படும் இடங்களில் முற்றிலும் வேறுப்பட்ட கிரேக்க வார்த்தையான **"phos"** பயன்படுத்தப்படுகின்றது. பரிசுத்த ஆவியில் கர்த்தரோடு பங்குக்கொள்கின்ற கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் குறித்துப் பேசப்படும்போது, இதே கிரேக்க வார்த்தை **"phos"** பயன்படுத்தப்படுகின்றது. இந்தத் தமது சரீரத்தின் அங்கங்களை, சபையின் அங்கங்களைக் குறித்துக் கர்த்தர் பேசுகையில், "நீங்கள் உலகத்திற்கு ஒளியாக இருக்கின்றீர்கள்" என்றார். இங்கும் இதே கிரேக்க வார்த்தையே பயன்படுத்தப்படுகின்றது. இதே கிரேக்க வார்த்தையான **"phos"** பயன்படுத்தப்பட்டுள்ள வேதவாக்கியங்கள் பின்வருமாறு: மத்தேயு 6:23; லூக்கா 16:8; 2 கொரிந்தியர் 6:14; ரோமர் 13:12; எபேசியர் 5:8; 1 பேதுரு 2:9; 1 யோவான் 1:7. கிறிஸ்துவுக்கும், யோவானுக்கும் இன்னும் ஒரு வித்தியாசம் உள்ளது. என்னவெனில், நமது கர்த்தர் லோகோஸாக,

வார்த்தையாக இருக்கின்றார். ஆனால், யோவான் ஸ்நானனோ வார்த்தையாக இருக்காமல், "வனாந்தரத்தின் கூக்குரலாக" மாத்திரமாகவே இருக்கின்றார்.

லோகோஸ் மாம்சமானபோது, மனுஷனாகிய கிறிஸ்து இயேசு ஆனார். அவர் தமக்குள் இருந்த பிதாவாகிய தேவனின் வல்லமையினால் தாம் சிருஷ்டித்த உலகத்திற்குள் வந்தபோது, உலகம் அவரை அறிந்துக்கொள்ளவில்லை; மேலும், தமது சொந்த ஜனங்களுக்கு அவர் தம்மை விசேஷமாக வெளிப்படுத்தினபோது, அவர்களும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படியாக இருந்தபோதிலும் சிலர் அவரை ஏற்றுக்கொண்டார்கள். இப்படியாக அவரை ஏற்றுக்கொண்டவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்; அதாவது, தேவனுடைய புத்திரராகும் சிலாக்கியத்தினாலும், வல்லமையினாலும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இக்காலத்திற்கு முன்புவரை தேவனுடைய ஊழியர்கள்/வேலைக்காரர்கள் மற்றும் நண்பர்கள் ஸ்தானமே மிக உயரிய ஸ்தானமாகக் காணப்பட்டது. இங்கு நாம் யூத யுகத்திலிருந்து, கிறிஸ்தவ யுகத்திற்கு மாறும் யுக மாற்றத்தைக் காணலாம். மேலும், இந்த மாற்றத்தை நம்முடைய கர்த்தரே செய்தார். நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய தீர்ப்பின் கீழ் இருந்தவர்களை மீட்கவும், ஆதாமின் கீழ்ப்படியாமையினிமித்தம் எல்லார் மேலும் வந்த மரணத் தீர்ப்பின் கீழ்க் காணப்படும் மனுக்குலம் முழுவதையும் மீட்கவும் இயேசு வந்தார்.

இந்த ஈடுபலியானது, தெய்வீக நீதிக்கு செலுத்தப்படாத வரையிலும் குற்றவாளிகளால், தகப்பன் ஆதாமினால் ஆதியில் அனுபவிக்கப்பட்ட புத்திரர் ஸ்தானத்திற்கு வர முடியாது. ஆதாம் பாவியானபோது, அவரும், அவருடைய சந்ததியும் இந்த ஸ்தானத்தை இழந்து போனார்கள். உலகத்திற்கு அனுப்பப்பட்ட மாபெரும் ஒளியின் வேலையானது, மனுஷனுடைய ஜீவனை மீட்பதோடு அல்லாமல், மனுஷனை வெளிச்சமூட்டுவதாகவும், புத்திரராக விருப்பமுள்ள யாவரையும், அந்த ஸ்தானத்திற்கு மீட்க வேண்டியதாகவும் இருந்தது. ஆனால், இந்த வேலை இன்னும் நிறைவடையவில்லை. இவ்வேலை சிறிதளவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது; ஏனெனில், அவருடைய சொந்த ஜனத்தாரில் ஒரு சிறு கூட்டமே உண்மையான ஒளியை ஏற்றுக்கொண்டுள்ளனர். மேலும், எல்லா பாஷைக்காரரிலும், எல்லா ஜாதியாரிலும், ஒரு சிறுமந்தை மாத்திரமே அவரையும், அவருடைய ஆசீர்வாதத்தையும் (புத்திரர் ஆகும் ஸ்தானத்தையும்) ஏற்றுக்கொண்டுள்ளனர். மீதியான பெருங்கூட்டம், சாத்தானினால் குருடாக்கப்பட்டபடியினால், 2 கொரிந்தியர் 4:4-ஆம் வசனத்தில் அப்போஸ்தலர், விளக்குவதுபோல் மெய்யான ஒளியைப் பார்க்கக்கூடாத வண்ணம் தடுக்கப்பட்டுள்ளனர்.

ஜனங்களைக் காரிருள் மூடியிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் அழைக்கப்பட்டவர்கள், பரம அழைப்புக்குள்ளாக அழைக்கப்பட்டுள்ளனர். பரம அழைப்பைப் பெற்றவர்கள், மனித சுபாவத்தைத் திரும்பப் பெறுவதற்கோ, பாவத்தினால் இழந்த ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களைத் திரும்பப் பெறுவதற்கோ அல்லாமல், லோகோஸோடு ஒரு ஐக்கியம்/உறவு கொள்வதற்கு, அதாவது, அவருடைய ஒளியில் பங்காளிகளாகவும், மனுக்குலத்தை ஆசீர்வதித்து வெளிச்சமூட்டும் எதிர்க்கால வேலையில் அவரோடு பங்காளிகளாகவும் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தேவனுடைய புத்திரர்கள், விஷேசமான புத்திரர்கள் ஆவார்கள். பாவம் செய்வதற்கு முன்பு ஆதாம் இருந்த புத்திர ஸ்தானத்தைக் காட்டிலும், இவர்கள் வேறுபட்ட புத்திரர் ஆவர். (லூக்கா 3:38). இவர்கள் தேவதூதர்களாகிய புத்திரர்கள் இருக்கும் தளத்திற்கு மேலான தளத்தில், தேவனுடைய புத்திரர்களாக இருக்கும்படிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அதாவது, தேவனுடைய சுதந்திரர்களாக, லோகோஸின் உடன் சுதந்தரர்களாக, லோகோசுடன் தெய்வீகச் சுபாவத்தில் பங்காளிகளாக இருக்கும்படிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அதாவது, தூதர் சுபாவத்திற்கும் மற்ற அனைத்துச் சுபாவத்திற்கும் மேலான திவ்வியச் சுபாவத்திற்குப் பங்காளிகளாக அழைக்கப்பட்டுள்ளனர் (2 பேதுரு 1:4, ரோமர் 8:17).

தேவனுடைய புத்திரர்களாகும் இந்த அதிகாரம், பாவிகளுக்கு அருளப்படாமல், நீதிமான்கள் ஆக்கப்பட்டவர்களுக்கு, அதாவது, அவருடைய நாமத்தை விசுவாசித்து, விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கு அருளப்பட்டுள்ளது. இவர்கள் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்; ஆனாலும், இவர்கள் மாம்சத்தின் பிள்ளைகள் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையில் ஜெநிப்பிக்கப்படவில்லை; அதாவது இரத்தத்தினாலும் ஜெநிப்பிக்கப்படவில்லை; எவ்விதமான மாம்ச சித்தத்தினாலும் இவர்கள் ஜெநிப்பிக்கப்படவில்லை. சத்தியத்தின் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட இவர்களுக்குச் சத்தியமானது, மாம்சீக கருவிகள் மூலம் வழங்கப்பட்டாலும் மனிதனுடைய சித்தத்தினால், இவர்களுடைய ஜெநிப்பிக்கப்படுதல் நடக்க முடியாது; மாறாக, எந்த அளவிற்கு

மாம்ச சித்தம் இவர்களால் புறக்கணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, அதற்குப் பதிலாக, தேவனுடைய சித்தம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ, அந்த அளவின்படியே ஜெனிப்பித்தல் நடக்கும். "அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெனிப்பித்தார்" (யாக்கோபு 1:18). கிறிஸ்து இயேசுவுக்குள்ளான இந்தப் புதுச் சிருஷ்டிகள் (தேவனுடைய புத்திரர்கள், கிறிஸ்துவின் உடன்சுதந்திரர்கள்) பிதாவின் நோக்கத்திற்கும், சத்தியத்திற்கும் பாடுகள் சகிக்க விரும்பத்தக்கதாகவும், லோகோஸ் போன்று சகோதரர்களுக்காக தங்களுடைய ஜீவனையே ஒப்புக்கொடுக்கும்படி விரும்பத்தக்கதாகவும் (அவருடைய வார்த்தை மற்றும் கிருபையின் மூலம்) தேவனுடைய ஆவியை முழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். மேலும் இவர்கள் இந்த யுகத்திற்கான தெய்வீக ஏற்பாடுகளுக்கு இசைவாக கிறிஸ்து மூலம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான பரிசுத்தமான, ஜீவப்பலிகளாக தங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமெனவும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இவ்வாறாக இவர்கள் கிறிஸ்துவுடன் பாடுப்படும்போது, இவர்கள் இறுதியில் இயேசுவோடு இராஜ்யத்தில் உடன் சுதந்திரர்களாகவும், பிதா அவருக்கு வாக்களித்த வல்லமையிலும், மகிமையிலும், இராஜ்யத்திலும் அவரோடு உடன்சுதந்திரர்களாக இருப்பார்கள் (ரோமர் 8:17, யோவான் 1:11-12).

யோவான் 1:14-ஆம் வசனமும், 5-ஆம் வசனத்தின் அதே கருத்தையும் மற்றுமொரு கோணத்தில் கொடுக்கப்படுகின்றது. "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்." சிலர் இவ்வசனத்தை தவறாகப் புரிந்துக்கொண்டுள்ளனர், அதாவது, பிதாவாகிய தேவனுடைய ஒரே பேறான குமாரன் ஆவியின் ஜீவியாக உலகத்தில் வந்து, ஒரு மாம்ச சரீரத்திற்குள் குறிப்பிட்ட காலம் குடியிருந்து, அந்தச் சரீரம் சிலுவையில் அறையப்பட்ட பின்னர், ஆவி சரீரத்திலிருந்து போய்விட்டது என்கின்றனர். இக்கருத்து அநேக வேதவாக்கியங்களை அவமாக்குகின்றது. இக்கண்ணோட்டத்தில் பார்த்து, அநேகர் நமது கர்த்தர் ஆவிக்குரிய ஜீவியாக மாத்திரம் இருந்துள்ளார் என்றும், ஒருபோதும் அவர் மனுஷனாகவில்லை என்றும், மனிதனைப் போன்று காட்சியளித்தாரே ஒழிய, உண்மையான மனிதனாக அவர் இருக்கவில்லை என்றும் கருதுகின்றனர். இக்கண்ணோட்டத்தில் பார்க்கையில் நமது கர்த்தர், பிதாவிடம் ஏறெடுத்த ஜெபங்கள், அவருடைய வனாந்தர சோதனைகள், அவருடைய கண்ணீர்கள், மரணத்தின்போது அவர் கூக்குரலிட்டது அனைத்தும் போலி/நடிப்பு எனக் காட்டிவிடுகின்றது. மேலும், இக்கண்ணோட்டத்தின்படி அவர் மனித நிலைக்கு அப்பாற்பட்ட ஆவியின் ஜீவியாக இருப்பதினால் அவரால் பாடுபடவும் முடியாது, பரீட்சிக்கப்படவோ, சோதிக்கப்படவோ முடியாது. மேலும் இக்கண்ணோட்டத்தை வைத்து பார்க்கும்போது, அவர் உண்மையில் மரிக்காமல், மரித்ததுபோல் காட்சியளித்தார் என்றாகிவிடும். மேலும், அவர் குடியிருந்த மாம்சம் சிலுவையில் அறையப்பட ஆரம்பிக்கப்பட்ட மாத்திரத்தில், ஆவியின் ஜீவியாக இருந்த லோகோஸ், சரீரத்திலிருந்து வெளியேறி, கண்களுக்குப் புலப்படாமல், கல்வாரியில் நடந்திட்ட சோகக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவராகிவிடும்.

காளை மற்றும் ஆட்டின் பலிகளின் மூலம் 16 நூற்றாண்டுகளுக்கு மேலாக தேவன், பாவங்களுக்கான போலித்தனமான பலியையும், நாடகமான மரணத்தையும் நிழலாய்க் காட்டவில்லை. ஆதாமின் மரணத் தீர்ப்பு என்பது நிஜமான தீர்ப்பாகும். உண்மையான தண்டனையாகும், மேலும் பாவங்களிலிருந்து விடுவிக்கும்படி, மனிதனாகிய இயேசு கிறிஸ்துவினால் நம்பொருட்டுக் கொடுக்கப்பட்ட பலியும், அதாவது, ஈடுபலியும் நிஜமானதேயாகும் (1 தீமோத்தேயு 2:5-6). ஐஸ்வரியனாக இருந்த அவர், நம் பொருட்டுத் தரித்திரர் ஆனார் என்று நமக்கு அப்போஸ்தலர் உறுதியளிக்கின்றார். அவர் தாழ்வான சுபாவத்தின் போர்வையைப் போர்த்திக் கொண்டு, தரித்திரர் போன்று நடிக்கவில்லை. அவர் உண்மையில் தரித்திரர் ஆனார். அவர் தமது மேலான சுபாவத்தின் கனத்தையும், மகிமையையும் விட்டு, தம்மை முழுமையாகத் தாழ்த்தி, மாம்ச சுபாவம் எடுத்தார். அவர் விழுந்துபோன மாம்ச சுபாவத்தையோ, பாவ சரீரத்தையோ எடுக்காமல், பாவம், மரணம் மற்றும் வீழ்ச்சியற்ற மனுஷ சுபாவத்தை எடுத்தார்.

இக்கருத்து 14-ஆம் வசனத்திற்கு இசைவாய் உள்ளது. "அவர் மாம்சமாகி" என்பது, சொல்லர்த்தமாக அவர் மாம்சத்தில் வந்ததை/மாம்சமானதை காட்டுகின்றது. இப்படியாக, அவர் தம்மைத் தாழ்த்தினபடியால்தான், அவர் நம் மீட்பராக முடிந்தது, மேலும், மனிதனின் மீறுதலுக்காக தம்மை ஈடுபலியாக தேவனுக்குக் கொடுக்கவும் அவரைத் தகுதியாக்கிற்று. ஒரு மனுஷனாலே பாவம் வந்ததுபோல, ஒரு மனுஷனாலே உயிர்த்தெழுதலும் வந்தது." மனிதன் மரணத் தீர்ப்பிற்குள் சென்றபடியால், ஒரு தேவதூதனுடைய ஜீவனோ அல்லது பிரதான தூதனுடைய ஜீவனோ அல்லது

மற்ற எந்த ஜீவனோ, மனுஷனுடைய ஜீவனுக்கு சரிநிகர் பலியாக முடியாது. வேறு எந்த ஜீவனும் ஆதாமையும், அவருடைய சந்ததியையும், மரணத் தீர்ப்பிலிருந்து விடுவிக்க முடியாது. மிருகங்கள் பாவத்திற்கு விலகினவைகளாக இருப்பினும், பாவ மனுஷனுக்குச் சரிசமமான சுபாவத்தில் இராததினால், மனுஷனுக்குரிய ஈடுபலியாக தெய்வீக நீதியினால் ஏற்றுக்கொள்ள முடியாது. லோகோஸ் ஆவியின் சுபாவத்திலிருந்து, மனுஷ சுபாவத்திற்கு மாற்றப்படும்போது மரிக்கவில்லை, மாறாக, "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக" இருக்கும் போதுதான் மரித்தார், அவர் தம்முடைய ஜீவன் முழுவதையும், எழுதியிருக்கிறபடியே ஒப்புக்கொடுத்தார். அவர் தமக்கென்று எதையும் பிடித்து வைத்துக் கொள்ளவில்லை.

"அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" (மத்தேயு 13:44, 46). "கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்"( ஏசாயா 53:10). "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" (வெளிப்படுத்தல் 1:18). "மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம் மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை" (ரோமர் 6:9).

"அவருடைய மகிமையைக் கண்டோம்" (யோவான் 1:14). யாருடைய கண்கள் இவ்வுலகத்தின் அதிபதியினால் குருடாக்கப்படவில்லையோ, அவர்கள் அவருடைய பூரணத்தையும், சிறப்பையும், அவருடைய பண்புகளையும் கண்டார்கள். மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின் இந்த மகிமைகள், அவர் ஆதாமின் பாவ சந்ததியில் உள்ளவர் அல்ல என்பதையும், சகல மனுக்குலத்திற்கும், பாவத்திற்கும் அப்பாற்பட்டவர் என்பதையும் காட்டிற்று. மேலும், அவர் பிதாவினால் ஜெநிப்பிக்கப்பட்டவர் என்றும், கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவர் என்பதையும் காட்டிற்று. அவர் உலகத்தில் இருந்ததுபோல, நாமும் உலகத்தில் இருக்கின்றோம் என்கிறார் அப்போஸ்தலர். நாம் சுபாவத்தில் பாவிகளைப் போன்றும், கோபாக்கினையின் பிள்ளைகள் போன்று இருப்பினும், கிருபையினால், நாம் ஒரு புதிய சுபாவத்திற்குள் மீண்டுமாக ஜெநிப்பிக்கப்பட்டுள்ளோம். நம்முடைய இருதயங்களில் கிரியை செய்து, நம்மை வெளிச்சமூட்டி, சுத்திகரித்து, பரிசுத்தமாக்கும் இந்தக் கிருபையானது, நம்மைப் படிப்படியாக "மகிமையிலிருந்து மகிமைக்கு" மாற்றி, தேவனுடைய ஒரே பேறான குமாரனும், நம்முடைய மீட்பரும், கர்த்தருமாய் இருப்பவரின் சாயலுக்கு அதிகமதிகமாக ஒப்பாக்குகின்றது. "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதுமான மாபெரும் இரட்சிப்பிற்காக தேவனுக்கும், ஆண்டவருக்கும் இப்போதும், சதாகாலங்களிலும் துதி உண்டாவதாக" (எபிரெயர் 2:3).

**ஆமென்!**

---

R 2417 [Poem]

# முன்பொரு காலத்தில்

Now his will is mine

ஒருகாலத்தில் நான் ஆசீர்வாதம் தேடியே அலைந்தேன்
இப்போதோ என் ஆண்டவரை நான்
கண்டுகொண்டேன் ஒரு காலத்தில் நான் உணர்ச்சிகளைத்
தேடிக்கொண்டிருந்தேன் இப்போதோ அவர்
வார்த்தைகளை நான்
கண்டுகொண்டேன்
ஒருகாலத்தில் நான் மாம்சத்தில் சுகம்பெற வேண்டினேன்
இப்போதோ அவரையே நான் தேடிக்கொண்டேன்
ஒருகாலத்தில் நான் அன்பளிப்பை வேண்டிநின்றேன்
இப்போதோ அவர் என்ன கொடுக்கின்றாரோ
அதுபோதும் என்றேன்
ஒருகாலத்தில் அது என் வேலையாயிருந்தது
இப்போதோ அது அவர் வேலையாகிவிட்டது
ஒருகாலத்தில் நான் ஆற்றல்வேண்டியே பிடிவாதமாய்
கேட்டுவந்தேன்
இப்போதோ வல்லமையானவர் எனக்குள் வந்தார்
ஒருகாலத்தில் நான் எனக்காக மட்டுமே
வேலைகள் செய்தேன்
இப்போதோ இயேசுகிறிஸ்துவுக்காக மட்டுமே
ஒருகாலத்தில் என் முயற்சிகள் எல்லாம் வலிகளாயின
இப்போதோவென்றால் அவை ஓய்வாகி
நம்பிக்கை பெற்றன
ஒருகாலத்தில் நான் பாதி மட்டுமே மீட்படைந்திருந்தேன்
இப்போதோ நான் முழுவதும் மீட்கப்பட்டுவிட்டேன்
ஒருகாலத்தில் விடாமல் பற்றிக்கொண்டிருந்தேன்
இப்போதோ அவர்தான் என்னை இறுகப்பற்றிக்
கொண்டுள்ளார்
ஒருகாலத்தில் நான் பாதை மாறி சென்றுவந்தேன்
இப்போதோ என் மீட்பர் அவர் பாதையில்
என்னை நடத்துகிறார்
ஒருகாலத்தில் நான் தீவிரமாய் திட்டமிட்டேன்
இப்போதோ அவற்றை விசுவாச ஜெபமாக
மாற்றிவிட்டேன் ஒருகாலத்தில் நான் என்னை மிகவும்
விரும்பி கவனித்துக்கொண்டேன் இப்போதோ அவர் தான்
என்னை கவனித்துக்கொள்கிறார்
ஒருகாலத்தில் நான் விரும்பியதுமட்டுமே கிடைக்க
ஆசித்தேன்
இப்போதோ, இயேசு என்ன விரும்புகிறாரோ,
அதுமட்டுமே ஒருகாலத்தில் நான் ஓயாமல்
கேட்டுக்கொண்டிருந்தேன் இப்போதோ, நான் முடிவின்றி
புகழுகிறேன் ஒருகாலத்தில் நான் இயேசுவை மட்டுமே
நம்பினேன் இப்போதோ அவரையே என்னுடையவராக்கி
விட்டேன் ஒருகாலத்தில் என் விளக்கு
அணைந்துகொண்டிருந்தது இப்போதோ பிரகாசமாய்
ஜொலிஜொலிக்கிறது ஒரு காலத்தில் நான் மரணத்திற்காய்
காத்திருந்தேன் இப்போதோஅவர் பிரசன்னமாக்குதலை
புகழ்கிறேன் ஒருகாலத்தில் நான் நம்பிக்கையற்றே
இருந்துவந்தேன் இப்போதோ நான் திரைக்குள்ளே
வந்துவிட்டேன்.

----------------------------

--481--

R 2418

**சீசரின் நண்பரா – கிறிஸ்துவின் நண்பரா ?**

சீஷரின் நண்பரா – இல்லை கிறிஸ்துவின் நண்பரா ?
இன்றைக்கு பிரதான கேள்வி இதுதானே
சீசரின் நண்பர் – கிறிஸ்துவின் நண்பர்!
யார் பக்கம் சேர்வீர் ? விரைந்து முடிவெடுப்பீர்!
மனித தயவுக்காய் தாமதம்செய்தால்,
சீசரின் நண்பராய் இருப்பாய் அன்பரே!
தேவனின் தயவே போதுமென்றிருந்தால்,
முட்களும் முயற்சியும் கடினமாய்த் தோன்றும்,
சீசரிலிருந்து பிரிந்துவந்திடு, இயேசுவின் நண்பராய்
சேர்ந்து வந்திடு, கிறிஸ்துவின் கையில் சேர்ந்துபோரிடு
தைரியமுடனே வெளியே வந்திடு,
பயத்தின் அறிகுறி தேவையே இல்லை,
அன்பு, கடுமையாய் முயற்சிசெய்தால் அதிகமாகும்,
தைரியம் கொள்வாய், தேவனுன் அண்டையில்
இன்னும்கூட முன்னேறிச்செல்வாய்,
அவரது நாமம் அறிக்கை செய்வாய்,
அதனாலே உன் கிரீடத்தை நெய்வாய்,
அவர் புருவத்தில் இரக்கம்,
அவர் கரங்கள் அனைத்தும்
ஆசீர்வாதம் செய்வதை ஒன்றே அறியும்
உந்தன் வெற்றிக்காகவே உழைத்துக்கொண்டிருக்கும்

R 2424

# விசுவாசத்திற்கான பலன் அளிக்கப்பட்டது - உன் குமாரன் பிழைத்திருக்கிறான்
# யோவான் 4:43-54

"உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று இயேசு தன்னுடனே சொன்ன மணிநேரம் அதுவே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள்." யோவான் 4:53.

இராஜாவினுடைய மனுஷனின் குமாரன் சொஸ்தமாக்கப்படும் முன்பு இயேசுவுக்கு, சமாரியா ஸ்திரீக்குப் பிரசங்கிப்பதிலும், கலிலேயாவுக்கு நேரான தமது பிரயாணத்தை முடிப்பதிலும் இரண்டு நாள் செலவாயிற்று. முற்காலத்தில் இஸ்ரயேலினுடைய பத்துக் கோத்திரத்திற்கு உரிய நிலப்பரப்பில், கலிலேயா ஒரு பாகமாக விளங்கினது; மேலும் சமாரியா, கலிலேயா மற்றும் யூதேயாவுக்கு நடுவில் காணப்பட்ட கோட்டமாக/மாவட்டமாக இருந்தது. நமது கர்த்தர் இங்கும் அங்கும் பிரயாணிக்கையில், அவர் 12 கோத்திரத்தார் குடியிருந்த நிலப்பரப்பிற்கு வெளியே ஒருபோதும் கடந்துபோகவில்லை என்பதும் கவனிக்கப்படலாம். இயேசு, யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறந்தார் என்றும், இவ்விடம் எருசலேமிலிருந்து வெகு தொலைவில் இல்லை என்றும் இயேசுவின் பிறப்புச் சம்பவித்த கொஞ்சம் காலத்திலேயே, பெத்லகேமில் உள்ள குழந்தைகள் கொல்லப்படுவதற்கு முன்பு, தேவனுடைய வழிநடத்துதலினால் அவருடைய பெற்றோர்கள் எகிப்துக்குத் தப்பி ஓடினார்கள் என்பதும் நினைவில்கொள்ளப்பட வேண்டும்; பின்னர் எகிப்திலிருந்து திரும்பியபோது பெத்லகேமுக்குச் செல்வதற்குப் பதிலாக, அவர் நசரேயன் என்று அழைக்கப்படத்தக்கதாக, அவருடைய பெற்றோர்கள், கலிலேயாவிலுள்ள நாசரேத்துக்குக் குடிப்பெயர்ந்தார்கள்; இவ்விதமாக கபடற்ற உத்தம இஸ்ரயேலர்கள் மாத்திரம் உண்மையான வார்த்தையைக் கேட்டு, சொஸ்தமாக்கப்பட்டு, கிருபையின் உடன்படிக்கையின் கீழ், தேவனுடைய புத்திரர்களாக ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக, முன்பும் சரி, இதுவரையிலும் சரி ஒரு மனுஷனும் பேசியிராததும், அவருடைய வாயிலிருந்து புறப்பட்டதுமான கிருபையான வார்த்தைகள் மற்றும் அவருடைய ஆச்சரியமான தனித்துவத்தில் கூட நசரேயன் என்று அவர் அழைக்கப்பட்டது, விசித்திரம் மற்றும் வெறுப்பின் முத்திரை அச்சாகவும் கூட இருந்தது.

நமது கர்த்தரும், அவருடைய சீஷர்களும் "கலிலேயர்கள்" என்று அழைக்கப்பட்டனர் என்பது நினைவில்கொள்ளப்பட வேண்டும். "ஒரு தீர்க்கத்தரிசிக்கு, தன் சொந்த ஊரிலே கனமில்லை" என்ற பழமொழியின் உண்மையை உணர்ந்துக்கொண்டவராக, நமது கர்த்தர் கலிலேயாவில் அல்லாமல், யூதேயாவில் தமது ஊழியத்தை ஆரம்பித்தார். கானாவூரில் நடந்த முதல் அற்புதத்திற்குப் பின்னர், அநேகமாக அவர் தம்முடைய சீஷர்களுடன் யூதேயாவுக்குச் சென்றிருக்க வேண்டும்; மேலும் பஸ்கா பண்டிகையின் போதும் அவர் அங்கு இருந்திருக்க வேண்டும்; மேலும் அச்சமயம் அநேக பிரபலமான அற்புதங்களையும் அவர் அங்கே செய்திருக்க வேண்டும்; மேலும் இதன் காரணமாக அவருடைய கீர்த்திப் பரவிச் சென்றது; யூதேயா முழுவதிலும் மாத்திரமல்ல, தமது சொந்த ஊராகிய கலிலேயாவிலும் அவர் கீர்த்திப் பரவிச் சென்றது, காரணம் ஒவ்வொரு வருடமும் பஸ்கா பண்டிகை அனுசரிப்பதற்காக திரளான பக்தியுள்ள யூதர்கள் எருசலேமுக்குச் செல்வது வழக்கமாயிருந்ததினால், அப்போது கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் போனவர்கள், தங்கள் ஊருக்குத் திரும்பியபோது, தங்களது ஊரைச்சார்ந்தவரின் கிரியையையும், கீர்த்தியையும் குறித்த செய்திகளைக் கலிலேயாவில் பரப்பினார்கள். இப்படியாக, மாபெரும் தீர்க்கத்தரிசியாக முதன்முதலாக பிரபலமடைந்தவராக நமது கர்த்தர் தமது சொந்த ஊருக்கு இப்பொழுது திரும்பி வந்தார்.

நமது கர்த்தருடைய இந்த அனுபவமும் புதிதல்ல, இது பொதுவானதேயாகும். நாம் மிகவும் நெருங்கி பழகின ஒன்றை/ஒருவரைக் குறித்துப் பெரிதாகப் பொருட்படுத்தாத விஷயமானது, மனித சுபாவத்தின் பண்பாய் உள்ளது.

ஒருவர் ஒரு மலையைத் தொலைவில் நின்று பார்க்கையில், எல்லைக்கோடுகள் (outlines) சீரான அமைப்புடையதாகவும், கெம்பீரத்துடனும் காணப்படும், ஆனால் அவர் மலைக்கு அருகாமையில் வந்து பார்க்கையில், அவர் கணித்திருந்த அதன் அழகும், பிரமாண்டமும் நிச்சயமாக ஒன்றுமில்லாமல் போய்விடும், ஏனெனில் அவர் கண்கள் அம்மலையின் உடைந்த பாகங்கள், வண்டல்கள் (சேற்றுப்படிவங்களையும்) மண்கள், (குவிந்துக் கிடக்கும்) களைகள் மீதும்தான், தன் பார்வையைச் செலுத்துகின்றார். எனினும் தொலைத்தூரத்திலிருந்து பார்க்கப்படுகிறவைகளும்,

கணிக்கப்படுகிறவைகளும் உண்மையானவைகளாக இருக்கின்றன. இப்படியாகவே, இன்றும் மிக உயர்வாகக் கருதப்படும் சில பூமிக்குரிய நபர்கள், அன்றாடம் (இத்தகைய நபர்களுடன்) மிக நெருங்கிப் பழகுகிறவர்களால் மிக உயர்வாகக் கருதப்படுவதில்லை, இதற்கான காரணம், தற்கால கண்ணோட்டங்கள் தவறானவைகள் என்பதினால் அல்லாமல், அவர்களுடன் நெருக்கமாய் இருப்பவர்களும், அன்றாட ஜீவியத்தில் அவர்களோடு புழங்குகிறவர்களும், அவர்களைச் சரிவர புரிந்துக்கொள்ளாததாலேயே ஆகும். இது பிரபலமான உலகத்தாரின், வீட்டார் மற்றும் உறவினர்களின் விஷயத்தில் உண்மையாய்க் காணப்படுகின்றன. தொலைத் தூரத்திலிருந்து மாத்திரமே பார்க்க முடிகிறதான வாழ்க்கையின் பெரிய சிறப்பம்சங்களை (சாதனைகளை) விட, வாழ்க்கையின் பக்கத்திலுள்ள சிறு சிறு விஷயங்கள் பார்க்கப்பட்டு, அவைகளின் அடிப்படையில் குணங்கள் மதிப்பிடப்படுகின்றன. உதாரணத்திற்கு, ஜூலியஸ் சீசர் என்பவர் உலகத்தால் மகாபெரும் மனிதனாகக் கருதப்பட்டார், ஆனால் அதேசமயம் அவருடைய நெருங்கிய நண்பனும், ஊழியனுமாகிய (Cassius) கேசியசின் பார்வையில் குறைவாகவே கருதப்பட்டார்; இந்த அவருடைய நண்பன், ஜூலியஸ் தண்ணீரில் மூழ்கிவிடாதபடிக்கு அவரைக் காப்பாற்றினான், மேலும் ஜூலியஸ் வியாதியடைந்தபோது, அவரோடுகூடே இருந்தவனானபடியினாலும், இச்சம்பவங்கள் மற்றும் இன்னும் பல சம்பவங்களில் அவரிடம் பார்த்த அவருடைய (சரீர) பெலவீனங்களின் அடிப்படையிலேயே அவரை மதிப்பிட்டானே ஒழிய, மற்றத் தருணங்களில் ஜூலியஸிடம் வெளிப்பட்ட மகத்துவங்களை அவன் கருத்தில் கொள்ளவில்லை. அவரிடம் அவன் கொண்டிருந்த நெருக்கமானது, நெருக்கமற்ற மற்றவர்களால் காணமுடிந்த அவருடைய மகத்துவத்தை அவன் பார்க்கமுடியாத அளவு தடைபண்ணினது.

இயேசுவின் விஷயத்திலும் இப்படியாகவே இருந்தது. "அவருடைய சகோதரரும் அவரை விசுவாசிக்கவில்லை" (யோவான் 7:5). (பண்டைய காலங்களில் சகோதரர் என்ற வார்த்தையானது உறவினர்களைக் குறிக்கின்றது, இதில் பெற்றோரின் உடன் பிறந்தோருடைய புத்திரர்களும், சொந்த சகோதரரும் உள்ளடங்குகின்றனர்). ஊரார் அவருடைய தாயாகிய மரியாளையும், அவருடைய சகோதரர்களையும், மரியாளுடைய கணவனாகிய யோசேப்பையும் அறிந்திருந்தனர்; மேலும் இயேசு யோசேப்பினுடைய குமாரன் அல்ல என்றும், யோசேப்பு, மரியாளை மனைவியாக ஏற்றுக்கொண்டு திருமணம் புரிவதற்கு முன்னதாகவே மரியாள் கருவுற்றிருந்தாள் என்றும் அவர்கள் அறிந்திருந்ததும் வெளிப்படையாகத் தெரிகின்றது, எப்படியெனில், அவர்கள் விவாதம் பண்ணுகையில், "நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல" என்று இழிவான வார்த்தைகளைக் கூறுவதிலிருந்து இதன் உட்கருத்து விளங்குகின்றது (மத்தேயு 1:18, யோவான் 8:41). அவருடைய இளமை பிராயத்தில் இருந்து அவரை அறிந்திருந்தார்கள், அநேகமாக பல வருடங்களாக அவர்கள் மத்தியில் அவர் தச்சனாக வேலை செய்திருக்க வேண்டும். அவருடைய சொந்த ஊராகிய நாசரேத் ஒருபோதும் செல்வத்திற்கோ, கல்வி அறிவிற்கோ பெயர்ப்பெற்றது அல்ல, மேலும் நாசரேத்தூரில் உள்ள புத்திர செல்வங்கள், யூதர்களின் புத்திசாலிகள் வரிசையில் ஒருவராக இருந்ததுமில்லை. ஆகவே தாங்கள் நன்கு அறிந்திருந்த இயேசுவை, மோசே மற்றும் தீர்க்கத்தரிசிகளால் கூறப்பட்டதும், எழுதப்பட்டதுமான மகாபெரியவர் என்று ஏற்றுக்கொள்வதில் அவர்களுக்குச் சிரமமாக இருந்தது.

ஆகவேதான் அவருடைய சொந்த ஊரில், அவரைக் குறித்து, "இவனுக்கு இந்த ஞானமும், பலத்த செய்கைகளும் எப்படி வந்தது?" என்று அவர்கள் ஆச்சரியம் அடைந்து கூறியபோதிலும், "இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு, யோசே, சீமோன் மற்றும் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா? இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது? என்று சொல்லி, அவரைக்குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கத்தரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார். அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை" என்றும் கூறினதை நாம் வாசிக்கின்றோம் (மத்தேயு 18: 54-58).

இப்பொழுது நாம் நமது பாடத்திற்குத் திரும்புகையில், கலிலேயாவின் மாபெரும் தீர்க்கத்தரிசியும், வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குகிறவருமாகிய அவர் தமது சொந்த ஊருக்கு வந்திருக்கின்றார் என்ற செய்தியானது, கானாவூருக்கு 20 மைல் தொலைத் தூரத்தில் காணப்பட்ட கப்பர்நகூமுக்குச் சென்றடைந்தது; சமுதாயத்திலும், அரசியலிலும் நல்ல மதிப்பிற்குரிய நிலையில் காணப்பட்ட அப்பட்டணத்தைச் சார்ந்த ஒருவனே விசுவாசத்தை வெளிக்காட்டுபவர்களில் முதல் நபராகவும், அதற்குப்பதிலாக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறவனாகவும் இருந்தான், ஏனெனில் யூதேயாவிலிருந்து திரும்பிவந்த பிற்பாடு, இம்மனுஷனுடைய குமாரன் சொஸ்தமாக்கப்பட்டதே நமது கர்த்தரால் செய்யப்பட்ட "இரண்டாம் அற்புதம்" என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது.

இம்மனுஷனுடைய விசுவாசத்தைப் பரீட்சிக்கும் நோக்கத்திற்காகவே, அவனுடைய விண்ணப்பத்தை நமது கர்த்தர் மறுத்தார் என்பதில் ஐயமில்லை. "நான் மேசியா என்று நீ என்னை விசுவாசிக்கவில்லை, என்னுடைய அற்புதம் மற்றும் அடையாளத்தின் மீதே நீ கவரப்பட்டிருக்கின்றாய்" என்ற விதத்தில் நமது கர்த்தருடைய வார்த்தைகள் காணப்பட்டது. துக்கத்துடன் காணப்பட்ட, அந்தப் பாசமிக்க தகப்பன், ஓர் அற்புதத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வமும், ஆசையும் தனக்கிராமல், கிறிஸ்துவின் வல்லமையின் மீது தனக்கு உண்மையான விசுவாசம் இருக்கின்றது எனவும், இதனால்தான் தன்னுடைய குமாரனை மரணத்திலிருந்து இயேசு விடுவிக்க முடியுமா? என்று, கேள்வி கேட்காமல், "ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வரவேண்டும்" என்று கூறுகின்றான் (வசனம்-49). அவனுடைய உண்மையான விசுவாசத்திற்குப் பலன் கொடுக்கப்பட்டது, எனினும் பல மணி நேரங்கள் அவனுக்குச் சொஸ்தமாக்கப்பட்டதைக் குறித்த எவ்வித நிரூபணம் இல்லாமல் இருந்தபோதிலும், அவன் இன்னும் விசுவாசம் கொண்டிருக்க வேண்டும் என்றும், தனது விண்ணப்பம் பதிலளிக்கப்பட்டது என அவன் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் அவனிடத்தில் எதிர்ப்பார்க்கப்பட்டது. அவன் விசுவாசம், பரீட்சையில் மீண்டும் உறுதியாய்க் காணப்பட்டது. அவன் வீட்டிற்குப் போகையில், அவர் தனது விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்து அருளின அத்தருணத்தில் குழந்தை பிழைத்து, சொஸ்தமானது என்று அறிந்தும் கொள்கின்றான். அவனுடைய குமாரன் சரீரப் பிரகாரமாக சொஸ்தமாக்கப்பட்டதைப் பார்க்கிலும் இன்னும் மேலான ஆசீர்வாதத்தை அவனுடைய விசுவாசம் அவனுக்கு அளித்தது, எப்படியெனில், இவ்வற்புதம் காரணமாக அவனும், அவனுடைய வீட்டாரும் மேசியாவின் மேல் விசுவாசிகளாகி, யோவான் 1:12-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உடன்சுதந்திரர் மற்றும் புத்திரராகும் மாபெரும் சிலாக்கியம் அடையும் வாய்ப்பிற்குள் அவர்களைக் கொண்டு வந்தது.

சொஸ்தப்படுத்தும் இவ்வற்புதத்திலும், மற்ற அற்புதங்களிலும் நமது கர்த்தருடைய நோக்கமானது வலியிலிருந்து, வியாதியிலிருந்து வியாதியஸ்தர்களைச் சுகப்படுத்த வேண்டும் என்பதாக இல்லை. இது அவருடைய நோக்கமாக இருந்திருக்குமாயின் ஒரே மூச்சில் சகல வியாதியஸ்தர்களும் சொஸ்தமடையத்தக்கதாக அவர் கட்டளையிட்டிருந்திருப்பார், இதற்கும் மேலாக வியாதிகளை உண்டுபண்ணும் தீமையான சூழ்நிலைகளை அவர் சரிப்படுத்தியிருந்திருப்பார். உதாரணத்திற்கு இராஜாவினுடைய மனுஷனின் குமாரனுக்குக் காய்ச்சல் இருந்தது; அநேகமாக கப்பர்நகூமில் உள்ள அநேகர் இதைப் போன்று காய்ச்சலில் இருந்திருக்க வேண்டும், ஏனெனில் கப்பர்நகூம் பட்டணமானது தாழ்வான இடங்களில், சகதியான நிலப்பரப்பினால் கட்டப்பட்டிருப்பதினால், இது மலேரியாவிற்குரிய இடமாகவும், சுகாதாரமற்ற இடமாகவும் இருந்ததாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தர் பொதுவாக எல்லாருக்கும் சுகமளிக்கும் வேலையைப் பண்ணவில்லை, இப்படி அவர் செய்யாதது, அவரிடத்தில் அனுதாபம்/இரக்கம் இல்லாமைக்கான ஆதாரம் ஆகாது; அதேசமயம் கப்பர்நகூமையும், பூமியின் மற்றப் பகுதிகளையும் சுகாதாரமாக/ஆரோக்கியமாக வைப்பதற்கு எது அவசியப்படும் என்பதைக்குறித்த அறிவு/உணர்வு அவரிடத்தில் இல்லாமைக்கான ஆதாரமும் ஆகாது; மேலுமாக பல ஆயிரம் வருடங்களாக முழு உலகத்திலும் வியாதி, பெலவீனங்களை விளைவித்துக் கொண்டிருக்கும் மலேரியா மற்றும் மற்ற விதமான தீமையான சூழ்நிலைகளை அனுமதித்திருக்கும் தேவனானவர், அவர் சார்பில் மனுக்குலத்தின் மீது கவனமற்றவராக இருக்கின்றார் என்பதற்கான ஆதாரமும் ஆகாது. மாறாக தேவன் வியாதிகளைக்குறித்து முன்னமே அறிந்தவராகவும், பாவியான மனுஷனுக்கு எதிரான (மரண) தீர்ப்புக்குத் துணையாகவும், உதவியாகவும், உடன் இணைந்து வரத்தக்கதாகவும், தீமையான சூழ்நிலைகளை அனுமதித்தவராகவும் இருக்கின்றார்.

மனுக்குலத்தை மீட்டுக்கொண்டவரும், சபிக்கப்பட்ட பூமியிலிருந்து அவருக்குச் சொந்தமானவைகளை மீட்டுக்கொண்டவருமான அவர், அதினின்று சகல தீமையான, நச்சுத்தனமான தாக்கங்களைச் சுத்திகரிக்கும் காலம் வரும் (எபேசியர் 1:14 - "Who is the pledge of our inheritance, unto the redemption of the acquired possession, to the praise of his glory" (Recovery Version); "Which is the earnest of our inheritance, until the redemption of the purchased possession, unto the praise of his glory" (KJV); "Who is a deposit guaranteeing our inheritance until the redemption of those who are God's possession . . . to the praise of his glory" (NIV). "கிரயமாகக்கொள்ளப்பட்ட தேவனுடைய சொத்து (மனுக்குலம் அவர்களுடைய உரிமை, ஜீவன், பூமி, இயற்கை) அவருடைய மகிமையின் புகழ்ச்சிக்காக விடுவிக்கப்படும் வரையிலும், ஆவியானது நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கின்றது" (சரியான மொழிப்பெயர்ப்பு); அப்படியாக சுத்திகரிக்கப்படும் காலம் வரும்போது பிற்பாடு மரணமோ, வலியோ, வியாதியோ, அலறுதலோ இருப்பதில்லை, ஏனெனில் முந்தினவைகள் எல்லாம் ஒழிந்திடும், எல்லாம் புதிதாய் ஆக்கப்படும். மனுக்குலத்தின் பயன்பாட்டிற்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் திட்டமிடப்பட்டதான பூமியும்,

மனுக்குலம் புதுப்பிக்கப்படும் காலமானது வேதவாக்கியங்களில் சீர்திருத்தலின் காலங்கள் என அழைக்கப்படுகின்றது; "ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக்குணப்படுங்கள். உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும். மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கத்தரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றான்" (அப்போஸ்தலர் 3:19-23).

முதலாம் வருகையின்போது, நமது கர்த்தரின் ஊழியம் விசேஷமாக தம்மை உலகத்திற்கு ஈடுபலியாக ஒப்புக்கொடுப்பதேயாகும்; மேலும் தம்மீதும், தமது போதனைகளின்மீதும், தம்முடைய எதிர்கால வேலையின்மீதும் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் விசுவாசம் வைத்துக்கொள்ளத்தக்கதாக, அஸ்திபாரமாக விளங்கும்படி ஆதாரங்களைக் கொடுப்பதும் அவரது இரண்டாம் பட்ச வேலையாக இருந்தது; அதாவது, தற்கால யுகத்தின் இத்தகைய விசுவாசிகள் பிதாவினிடத்திற்கு வரவும், புத்திரசுவிகாரம் மற்றும் வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், விசுவாசம், கீழ்ப்படிதல் மற்றும் சுயத்தைப் பலிச்செலுத்துவதின் மூலம் மாபெரும் எதிர்காலத்திற்குரிய சீர்திருத்த வேலையில், அதாவது பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிக்கும் வேலையில், மேசியாவுடன் உடன் சுதந்திரர்களாக்கத்தக்கதாக விசுவாசம் வைப்பதற்கான அஸ்திபாரமாக விளங்கும்படி ஆதாரங்களைக் கொடுப்பதும் அவரது இரண்டாம் பட்ச வேலையாக இருந்தது.

இராஜாவினுடைய அந்த மனுஷன் விசுவாசத்தின் மூலம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டவனானான், அவனுடைய நடத்தை அவன் விசுவாசத்தைக் காட்டுகின்றது. இப்படியாகவே தேவனால் அங்கீகரிக்கப்படும் சகலரும் காணப்பட வேண்டும்; நமக்கு முன்பாக சுவிசேஷத்தில் வைக்கப்பட்டுள்ள மாபெரும் பரிசை வெல்லப் போகும் யாவரும் இப்படியாகவே காணப்பட வேண்டும், "இதுவே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாய் இருக்கின்றது." ஆனால், "விசுவாசமில்லாத கிரியை செத்தக் கிரியையாயிருக்கின்றது." விசுவாசம் வெளியரங்கமாகாவிட்டால் விசுவாசம் இல்லை என்பதாகிவிடும். அவருடைய வாக்குத்தத்தங்களின்படி, கர்த்தருக்கான நமது சகல ஊழியங்களும் நமது விசுவாசத்திற்கான நிரூபணங்களாக விசேஷமாக/பிரதானமாக மதிப்பிடப்படுகின்றது (1 யோவான் 5:4; யாக்கோபு 2:26; எபிரெயர் 11:6).

நெப்போலியனின் படையில், ஒரு சாதாரண தனிப்பட்ட வீரன் அவருடைய வார்த்தையை எப்படி விசுவாசித்தான் என்றும், அதன் விளைவாக அவன் எவ்வாறு தலைமை பதவிக்கு உயர்த்தப்பட்டான் என்றுமுள்ள ஒரு கதை கூறப்படுகின்றது. பாரீஸ் பட்டணத்திலுள்ள தனது படையை நெப்போலியன் பார்வையிட்டுக் கொண்டிருக்கையில், அவர் கையிலிருந்த கடிவாளம் கீழே விழ, குதிரையானது பாய்ந்து ஓட ஆரம்பித்தது, ஒரு வீரன் அணிவரிசையிலிருந்து பாய்ந்து குதிரையையும் பிடித்து, கடிவாளத்தையும் நெப்போலியனிடம் எடுத்துக்கொடுத்தான். "தளபதியே உமக்கு மிகுந்த நன்றி" என்று சக்கரவர்த்திக் கூறினான். அதற்கு அவன் உடனடியாக "எப்படைப் பிரிவிற்கு ஆண்டவனே" என்று கேட்டான். அவனுடைய நம்பிக்கை மற்றும் புரிந்துக்கொள்ளும் தன்மையில் பிரியம் அடைந்த சக்கரவர்த்தி, "மெய்காவலர் படையினருக்கு நீ தளபதி" என்று பதிலளித்தார். அந்த வீரனுடைய வஸ்திரங்கள் சாதாரணமான தனிப்பட்ட வீரனுக்குரிய வஸ்திரமாயிருப்பினும், தன்னுடைய நம்பிக்கை மற்றவருக்குப் பரிகாசமாக இருக்கும் என்ற உண்மை தெரிந்தும், அவைகளைக் கண்டுகொள்ளாமல், அவன் உடனடியாக, தலைமை அலுவலர்கள் மத்தியில்போய் (தலைவன் போல்) நின்றுவிட்டான். அவன் சக்கரவர்த்தியின் வார்த்தைகளை நம்பினான், அந்த நம்பிக்கையின்படி நடந்துகொண்டான், தளபதியுமானான். இப்படியாகவே, "நாம் தெய்வீகச் சுபாவத்தில் பங்கடையத்தக்கதாக, மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களை நமது கர்த்தர் நமக்கு அருளியுள்ளார்." மேலும் தம்மை அன்பு கூருபவர்களுக்குத் தேவன் ஏற்பாடு பண்ணி வைத்துள்ள மகா மேன்மையும், அருமையுமானவைகளை அடைகின்றவர்கள் மாத்திரமே, அவருடைய வார்த்தைகளை அப்படியே நம்புகிறவர்களாகவும் இருந்து, "வெளிச்சத்தின் பிள்ளைகளாகவும் ஒளியில் நடக்கிறவர்களாகவும்" ஆவார்கள். இத்தகையவர்களே, பாவம், தீமை, மூடநம்பிக்கையின் இருளை அகற்றி, உலகத்தை ஆசீர்வதிக்கவும், புத்துணர்வு அடையச்செய்யவும்தக்கதாக, தனது செட்டைகளில் குணமாக்கும் வல்லமையுடன் எழும்பும் மாபெரும் நீதியின் சூரியனின் அங்கங்களாக இறுதியில் ஆவார்கள்.

"அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (மத்தேயு 13:43).

ஆனால் தங்கள் மீதே மாபெரும் விசுவாசம் வைத்துக்கொண்டு, இவ்விசுவாசமே தாங்கள் "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களில்" ஒருவராக இருப்பதற்கான ஆதாரம் என்று எண்ணிக்கொள்கின்ற தப்பறைகளிலிருந்து, நாம் நம்மைக் காத்துக்கொள்வோமாக. நெப்போலியனுக்கு ஊழியம் செய்து, அதே சமயம் அவரை நம்பின வீரனே பலனைப் பெற்றுக் கொண்டான். ஆகவே ஒவ்வொருவனும் தன்னிடத்தில் கேட்டுப் பார்க்க வேண்டிய கேள்வி என்னவெனில், மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் எனக்கு உரியவைகளாக இருக்கின்றதா? அந்த வாக்குத்தத்தங்களோடு நிபந்தனைகள் உள்ளனவா? ஒருவேளை இருக்குமாயின் என்னுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலும் உறுதிபண்ணப்படத்தக்கதாக நான் அந்த நிபந்தனைகளுக்கு இசைவாக வாழ்கின்றேனா?

"விசுவாசத்தில் பூரண நிச்சயம்" அடையத்தக்கதாக, ஒருவனுக்கு இக்கேள்விகளுக்குப் பதில் வேண்டுமெனில், அவன் வாக்குத்தத்தங்களைத் தேடி/ஆராய வேண்டும்; அவைகளின் முக்கியத்துவம் மற்றும் அதனோடு கூட வரும் நிபந்தனைகளை ஆராய்ந்து, பரிசை அவன் வெல்ல வேண்டுமெனில், அவைகளின்படி நடக்கவும் வேண்டும்; அதேசமயம் நமது கர்த்தருடைய வார்த்தைகளையும் அவன் நினைவுகூர வேண்டும், அது என்னவெனில், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத்தேயு 7:21).

**ஆமென்!**

---

# நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கான தியதி

நம்முடைய கடந்த வெளியீட்டில், இந்த வருடத்தின் எபிரெய ஆண்டுக்குறிப்பேடானது (calander) ஆதிக் கணக்கீடுமுறைமைக்கு இசைவாய் இல்லை என்று நாம் குறிப்பிட்டிருந்தோம் (மற்றும் நாங்கள் இதுபோன்ற சிக்கல்களை முன்பும் எதிர்க்கொண்டிருந்திருக்கின்றோம்). ஆகையால் இவ்விஷயம் குறித்து ரபி மேயர் (Rabbi Mayer) அவர்களைச் சந்தித்துப் பேசினோம். அவர் கொடுத்த விளக்கம் என்னவெனில், பஸ்காவிற்கு வேறுபாடற்ற தேதியைப் பெற்றுக்கொள்வதில் யூதர்கள் பெரும் சிரமமடைகின்றனர்; காரணம் ஜாமக்காரர்கள் அமாவாசையைக் கண்ட பிற்பாடு, அக்காரியமானது மலை உச்சியிலிருந்து தீச்சுடர் மூலம் சைகைக்காட்டப்பட வேண்டும் மற்றும் தூதுவர்கள் மூலம் பல்வேறு இஸ்ரயேல் இனத்தார்களிடம் செய்தி அனுப்பி வைக்கப்பட வேண்டும். இதன் காரணமாக 1500 ஆண்டுகளுக்கு முன்னதாக, நான்காம் நூற்றாண்டில் ஹில்லல்ஸ் ஆண்டுக்குறிப்பேடானது (Hillel's Calander) ஏற்றுக்கொள்ளப்பட்டது மற்றும் இதுவே அதுமுதல் பின்பற்றப்பட்டு வருகின்றது.

பஸ்கா தேதி தொடர்புடைய விஷயத்தில் நாம் இரண்டு முக்கியமான காரியங்களை மனதில் கொண்டிருக்க வேண்டும்; அவை (1) "கிறிஸ்து" மரித்தவர்களில் முதற்பலனானார்" எனும் காரியத்திற்கான நிழலாக அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்கட்டுக்கொண்டுவரப்படுகிற காரியமானது, நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் நாளாகிய நீசான் 16-ஆம் தேதியில் நிகழத்தக்கதாக பஸ்காவானது இளவேனிற் சம இரவு பகல் நாளுக்குப் பிற்பாடு (எனினும் மிகவும் பிற்பாடல்ல) காணப்பட வேண்டும். (2) ஆட்டுக்குட்டியானது பௌர்ணமியன்று அடிக்கப்பட வேண்டும்; இந்தக் காரியமானது யூதர்களுக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழான நிறைவுள்ள தேவ தயவானது அங்கு முடிவுற்றதையும், பின்னர் அந்த ஜாதியார்: "இவர் இரத்தம் எங்கள் மீதும், எங்கள் பிள்ளைகள் மீதும் இருப்பதாக" என்று வேண்டிக்கொண்டதற்கேற்ப, அவர்கள் புறக்கணிக்கப்பட்டதையும் மற்றும் நலிவுற்றதையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

எந்த மாதம், முதலாம் மாதம் என்று கணக்கிடும் விஷயத்தில் தீர்மானம் எடுக்கும் காரியமானது, இஸ்ரயேலுடைய மூப்பர்கள் வசத்தில், மேற்கூறப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்டுவிடப்படுகின்றது; மேலும் இவர்கள் நீசானைக் கணக்கிடுவதற்கென்று இளவேனிற் சம இரவு பகல் நாள் வருவது வரையிலும் மற்றும் அடுத்ததாக அமாவாசை வருவது வரையிலுமாக எப்போதும் காத்திருப்பதில்லை. (இப்படியாக செய்திருப்பார்களானால், இந்த வருடம் நீசான் மாதமானது ஏப்ரல் 11-ஆம் தேதி அன்று மிகவும் தாமதமாகி துவங்கியிருந்திருக்கும்). மாறாக எப்போது சமஇரவு பகல் நாளை எதிர்ப்பார்த்திடலாம் என்பதை இவர்கள் அறிந்திருந்தபடியால், அறுவடையின்போதும், சம இரவு பகல் நாளுக்குப் பிற்பாடும் தோன்றும் பௌர்ணமிக்கு முந்தின அமாவாசையின் நிகழ்வினை இவர்கள் இந்த முதலாம் மாதத்தினுடைய துவக்கமாகவும், தங்களது வருடத்தினுடைய துவக்கமாகவும் ஏற்றுக்கொள்கின்றனர். நிச்சயமாகவே இதுவே நாமும் பின்பற்ற வேண்டிய கோட்பாடாகும்.

இந்தக் கோட்பாடைப் பின்பற்றுகையில், இந்த வருடம் சம இரவு பகல் நாளைத் தொடரும் பௌர்ணமியானது மார்ச் 27-ஆம் தேதியிலாகும்; மற்றும் இதுவே நீசான் 14-ஆம் தேதியும், நமது கர்த்தருடைய மரணத்தின் ஆண்டு நிறைவு நாளுமாகும்; யூதருடைய கணக்கிடுதலின்படி 14-ஆம் தேதியானது மார்ச் 26-ஆம் தேதி, ஞாயிற்றுக் கிழமையன்று, மாலை 6 மணிக்குத் துவங்குகின்றது; அதாவது கடைசி இராப்போஜனத்தினுடைய ஆண்டு நிறைவு நாளாகும். இதை வைத்துப்பார்க்கையில், நமது கடந்த வெளியீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த தேதியும், யூத தேதியும் தவறாகும் மற்றும்இத்தனை சீக்கிரமாய் இதைத் திருத்தம் செய்வதற்கான வாய்ப்பிற்காக நாங்கள் மகிழ்கின்றோம்.

ஆண்டுக்குறிப்பேடானது (Almanac), அமாவாசைக்கான தேதியினை மார்ச் 11-ஆம் தேதி என்று கொடுத்திருப்பதைச் சிலர் கவனித்திருப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் இந்தத் தேதியிலிருந்து 14-நாட்கள் எண்ணப்பட்டால், அந்நாளானது பௌர்ணமிக்கான நாளாய் இருப்பதில்லை. ஆகையால் இருண்ட நிலவை (dark moon), அமாவாசை (New Moon) என்று எடுத்துக்கொள்வதற்குப்பதிலாக, யூதர்கள் நிலவு சிறிதளவு கண்களுக்குத் தெரியும்வரை காத்திருந்து, அதிலிருந்து தேதியைக் கணக்கிட்டார்கள் என்று நாம் கருதுகின்றோம். ஆகையால் இப்பொழுது கணக்கிட்டுப் பார்க்கும்போது, அமாவசையானது (New Moon) மார்ச் 13-ஆம் தேதியின் இரவும், மார்ச் 14-ஆம் தேதியின் காலையுமான வேளையில், கண்களுக்குச் சிறிது தெரியும் நிலாவாகக் காணப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படலாம்; அன்றே நீசான் 1 –ஆம் தேதி ஆகும்.

*****

# “இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகள்”
## யோவான் 5:17-27

“அவர் மெய்யாய் கிறிஸ்துவாகிய உலக ரட்சகர்.” யோவான் 4:42.

இயேசு மீண்டும் யூதேயாவில் வந்தார், அநேகமாக அவருடைய வழக்கத்தின்படி அவர் பஸ்கா பண்டிகையில் கலந்துகொள்ளும்படிக்கு வந்திருக்க வேண்டும். பரிசுத்த நகரத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலும், நாடுகளிலுமுள்ள பக்தியுள்ள யூதர்களைச் சந்திப்பதற்கான மிகச் சிறந்த வாய்ப்பை இந்தப் பண்டிகைக்கான கூடுகைகள் வழங்கின.

நமது கர்த்தர் எருசலேமில், ஓய்வுநாளின் நிமித்தம் அமைதியாக நடந்து கொண்டிருந்த போது, பெதஸ்தா குளத்தின் அருகே வந்தார்; இக்குளமானது அதன் சுகமளிக்கும் தன்மையின் நிமித்தம் ஆச்சரியமான கீர்த்திப் பெற்றிருந்தபடியால், குளத்தைச் சுற்றியுள்ள மண்டபங்களில் பல்வேறு வியாதிகளினால் அவஸ்தை பட்டுக்கொண்டிருந்த திரளான ஜனக்கூட்டமானது, குளத்தின் அற்புதமான செயல்பாடுகளிலிருந்து நன்மையைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக காத்துக் கொண்டிருந்த நிலையில் குவிந்துக் காணப்பட்டார்கள். அன்றைய நாட்களில் பெதஸ்தா குளம் என்று அழைக்கப்பட்ட இக்குளமானது இன்று விர்ஜின் குளம் (Pool of Virgin) என்று அழைக்கப்பட்டு வருகின்றது, மேலும் விர்ஜின் குளத்தின் தண்ணீரில் ஏற்படும் விநோதமான அசைவுகள் நன்கு அறியப்பட்டவைகளாகவே காணப்படுகின்றது. ஐந்து நிமிடங்களுக்குள் இந்த ஊற்றானது 12, அங்குலம் (inch) அளவுக்கு உயர்ந்து, பின்னர் உடனடியாக தணிந்து விடுகின்றது என்று பார்த்ததாக, நம்பிக்கைக்குப் பாத்திரமான சில பயணிகள் கூறியுள்ளனர். இதே மாதிரியான விநோதமான அசைவுகள் கொண்ட வேறு நீரூற்றுகளும் உள்ளன. அவைகளில் ஒன்று ஜெர்மனியில் உள்ள கிஸ்ஸிங்கென் (Kisingen) ஆகும். இவ்வூற்றில் கூட வாயுகளும் வெளியேறுகின்றது; மேலும் தண்ணீர் சலசலப்புகளினால் கலங்கும்போது, அத்தண்ணீருக்கு மருத்துவ பண்புகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றது என்ற கீர்த்தி நிலவுகின்றது, அநேகமாக தண்ணீரின் மருத்துவ பண்புகளுக்கு, வெளியேறும் வாயுகளே காரணமாய் இருக்க வேண்டும்.

பெதஸ்தா குளத்தில் தண்ணீரானது அவ்வப்போது கலங்கும் காரியமானது யோவான் 5:3, 7-ஆம் வசனங்களில் இடம்பெறுகின்றது. ஆனால் தூதன் வந்து தண்ணீரைக் கலக்குகின்றார் என்பது குறித்த காரியங்கள் பற்றின யோவான் 5:4-ஆம் வசனத்தின் பதிவுகள் பழைய கிரேக்க மூலப் பிரதிகளில் தவிர்க்கப்பட்டுள்ளது. இக்குளத்தில் அற்புதம் எதுவும் இல்லை, மாறாக தண்ணீர் கலங்குவதற்கான காரணம் வாயுகள் அல்லது குளத்திற்கான நீர்த்தேக்கங்களில் விநோதமான கால்வாய் அமைப்பின் நிமித்தம், தண்ணீர் ஓரிடத்திலிருந்து, அவ்வப்போது வேறு தளத்தில் செல்வதினால் கூட இருக்கலாம். இக்குளத்தின் தண்ணீர் மனதையே சொஸ்தப்படுத்தினது, அதாவது மனம் சொஸ்தமடையும் போது, சரீரத்திற்கு நன்மை ஏற்படுகின்றது.

சொஸ்தமடைவதற்கெனத் தண்ணீர் கலங்கும் தருணத்திற்காகக் காத்துக்கொண்டிருந்த ஜனக்கூட்டம் அனைவரையும் கர்த்தர் சொஸ்தப்படுத்தினாரா என்பதை நாம் அறியோம்; இன்னுமாக 38 வருடங்களாக, வியாதி முற்றிப்போன நிலையில், குணமடைய வாய்ப்பில்லாமலும், அங்கிருந்தவர்களைக் காட்டிலும் மிகவும் உதவியற்ற, பரிதாபத்திற்குரிய நிலையில் காணப்பட்டவர் என்று நம்முடைய பாடத்தில் குறிப்பிடப்படும் இம்மனுஷனைத் தவிர வேறு எவரையாகிலும் கர்த்தர் சொஸ்தப்படுத்தினாரா என்பதையும் நாம் அறியோம். குளத்தில் கலக்கப்படும் தண்ணீர் மூலமும் சொஸ்தப்படுவதற்கு இம்மனுஷனுக்கு வாய்ப்புகள் இல்லாதிருந்தது, இதைக்குறித்து அம்மனுஷனே விவரித்தார்; அதாவது தண்ணீர் கலங்கும்போது, தான் குளத்தில் இறங்குவதற்கு முன்பு வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்று அம்மனுஷன் விவரித்துக் கூறினான். இந்த உதவியற்ற, நம்பிக்கையெல்லாம் முடிந்துபோன, நலிந்துபோன, மனம் உடைந்துபோன மனுஷனிடத்தில், “சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?” என்று கர்த்தர் கேட்டார். அம்மனுஷனோ தான் சொஸ்தப்பட விரும்புகின்றேன் என உடனடியாகத் தெரிவித்தான்; சொஸ்தப்படுவதற்கு முன்னதாக அம்மனுஷன் இயேசுவின் வல்லமையின் மீது விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று கூட நமது கர்த்தர் காத்திராமல், மாறாக அம்மனுஷன் தன்னுடைய கீழ்ப்படிதல் மூலம் அம்மனுஷனுடைய விசுவாசம் வெளிப்படும்படிக்குக் கர்த்தர் அனுமதித்தார். மேலும் அம்மனுஷனோ விசுவாசத்தைச் செயல்படுத்தினவனாக, தன்னைச் சொஸ்தப்படுத்தினவர்

யார் என்று அறிந்துக்கொள்ளாமலேயே அதிர்ச்சிக்கும், திகைப்புக்கும் உள்ளானவனாக, தனது படுக்கையை எடுத்து நடப்பதின் மூலம் அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தான்.

இப்படியாகவே, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலும் நமது கர்த்தரால் நிகழ்த்தப்பட்ட பெரிய அற்புதங்களும் காணப்படுகின்றது. விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் காரணமாகப் பெலவீனர்களில் சிலரும், நன்மை பெற்றுக்கொள்வதற்கு முற்றிலும் திராணியற்றவர்களாய் இருந்த சிலரும், முற்றிலும் நம்பிக்கை தொய்ந்துப் போனவர்களாய் இருந்த சிலரும், ஒழுக்க ரீதியில் சொஸ்தப்படுத்தப்பட்டு, பலப்படுத்தப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, மறுரூபமாக்கப்பட்டுள்ளனர். ஆனால் இப்படியாகச் சொஸ்தமடைந்தவர்கள், இவர்களைப் போலவே பாவத்தினால் ஏறக்குறைய வியாதிக்குள்ளானவர்களாய்க் காணப்படும் மனுக்குலத்தின் உலகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சொற்பமானவர்களாகவே இருக்கின்றார்கள். மனுக்குலமானது இறுதியில் (ஆயிரம் வருஷம் அரசாட்சியின் போது) மாபெரும் வைத்தியனிடம் அறிமுகப்படுத்தப்படுவார்கள்.

இந்த அற்புதமானது, இயேசுவின் மீது, பரிசேயருடைய எதிர்ப்பைக்கொண்டு வந்தது; பரிசேயர்கள் தவறான இருதய மனப்பான்மையைக் கொண்டிருந்தபடியால், ஓய்வுநாளின் உண்மையான நோக்கத்தைத் தவறாய்ப் புரிந்துக்கொண்டு, தெய்வீகக் கட்டளைகளுக்குள், முன்னோர்களின் பாரம்பரியத்தைப் புகுத்தி, ஓய்வுநாளை வெறும் ஆச்சாரமாக அனுசரித்து, அதன் உண்மையான அர்த்தத்தை மறைத்துப் போட்டவர்களாய்க் காணப்பட்டார்கள். மற்ற நாட்களை விட, ஓய்வு நாளிலேயே நமது கர்த்தர் அநேக அற்புதங்களைச் செய்த காரியமானது, ஓய்வுநாளை அவமதிப்பதற்கென்றோ அல்லது பரிசேயர்களைச் சினமூட்டுவதற்கென்றோ, அவரால் செய்யப்பட்டதென நாம் கருதிவிடக் கூடாது. மாறாக ஓய்வுநாளில் அவர் செய்த இந்தக் குறிப்பிடத்தக்க அற்புதங்கள் மாபெரும் ஏழாம் நாளை, மாபெரும் ஓய்வு நாளை, ஆயிரம் வருஷம் அரசாட்சியை, பூமியின் வரலாற்றில் ஏழாவது ஆயிர வருடத்தின் காலப்பகுதியை, அதாவது மனுக்குலத்தின் மீது வரும் நிஜமான மற்றும் மகா பெரிய அற்புதங்கள் வரும் காலப்பகுதியைச் சுட்டிக்காட்டுவதற்கே நிகழ்த்தப்பட்டன. "இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" (யோவான் 2:11).

கர்த்தர் எவ்விதமான தவறையும் செய்யாமல் இருந்து, அதிகமான நன்மையை மாத்திரம் செய்தபடியாலும், மற்றும் அவர் வித்தியாசமாக நியாயப்பிரமாணத்திற்கான விளக்கத்தை அளித்தபடியாலும், "முன்னோர்களின் பாரம்பரியத்தை" அவர் புறக்கணித்தப்படியாலும், அவரைக் கொன்றுபோடும்படிக்கு நாடின யூதர்களின் செயல்பாடானது, தற்கால பெயர்க் கிறிஸ்தவர்களால் இன்றும் சிலசமயம் வெளிப்படுத்தப்படும் எதிர்ப்புக்கு இணையாக உள்ளது. பெயர்க் கிறிஸ்தவர்கள், தங்களுடைய கோட்பாடுகள் மற்றும் பாரம்பரியங்களை எதிர்க்கும் ஒருவரைச் சொல்லர்த்தமாகக் கொன்றுபோட நாடாவிட்டாலும், இவர்கள் தங்களுடைய அமைப்புகளின் தவறுகள் வெளிப்படாமல் மறைக்கப்படுவதற்கென, உண்மை கிறிஸ்தவனுடைய குணலட்சணத்தைக் (பெயரை) கொன்றுப் போடுவதில் கொஞ்சமும் தயக்கம் காண்பிப்பதில்லை.

நமது கர்த்தர், தம்முடைய அதிகாரம் குறித்துக் கூறின பதிலானது, அவர்களை இன்னும் அதிகமாகச் சினமூட்டியது; அநேகர் எண்ணுவது போன்று, இயேசு இங்குத் தம்மைப் பிதா என்று கூறினதற்காக இராமல், மாறாக இயேசு தம்மைப் பிதாவினுடைய குமாரன் என்றும், தாம் செய்யும்படிக்குப் பிதா தமக்கு ஒரு வேலை கொடுத்துள்ளார் என்றும் அறிவித்தப்படியாலே அவர்கள் சினம் கொண்டார்கள். இங்கு இயேசு தம்மைப் பிதா என்று கூறினதாக, யூதர்களும் தவறாகத் புரிந்துக்கொள்ளவில்லை; இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறும்போது, அவர் பரிசேயர்களைக் காட்டிலும், மிகவும் உயர்ந்த கனமும், ஸ்தானமும் தமக்கு உள்ளது என்றும், பிதாவுடைய சுபாவத்தில், அவருடன் நெருக்கமான உறவுகொள்ளும் ஸ்தானத்தில் தாம் இருப்பதாகக் கர்த்தர் கூறினார் என்றும் அவர்கள் புரிந்துக்கொண்டபடியாலே, அவர் மேல் சினம் கொண்டார்கள்; இப்படியாகக் கூறுவது என்பதைத் தேவதூஷணமாக அவர்கள் கருதினார்கள். நம்முடைய நாட்களில் காணப்படும் பரிசேயர்கள் நமது கர்த்தர் உரிமை பாராட்டின விஷயங்களையும் தாண்டி, அவர் தமக்கென ஒருபோதும் உரிமை பாராட்டிக்கொள்ளாதவைகளை, அவருக்கென உரிமை பாராட்டிக் கொண்டிருக்கின்றனர், அதாவது அவர்தான் பிதா என்றும், அவர் எப்போதும் பிதாவாகவும், குமாரனாகவும் இருக்கின்றார் என்றும், அவர்கள் இருவரும் ஒருவர் என்றும், அவர்கள் ஒரே நோக்கம், மனம், சித்தம், உணர்வுடைய இருவராயிராமல் ஒருவர் என்றும், கர்த்தருக்காக உரிமை பாராட்டிக் கொண்டிருக்கின்றனர். இப்படியாக கர்த்தருக்கு உரிமைப் பாராட்டிக் கொண்டிருப்பவர்கள், இன்றைய நாட்களில் வேதவாக்கியங்களின் அடிப்படையில் தேவனுடைய குமாரர்கள் என்று உரிமை பாராட்டிக்கொண்டிருக்கும் கர்த்தருடைய சகோதர சகோதரிகளுக்கு

எதிராக மிகவும் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்றனர். 2 பேதுரு 1:4-ஆம் வசனத்தை மையமாகக் கொண்டு, டான் வெளியீட்டில் வந்த சபைக்கான, "பரம அழைப்பு" தொடர்பான கட்டுரைக்கு, ஓகியோவிலுள்ள முக்கியமான இறையியல் கல்லூரியைச் சேர்ந்த முக்கியமான பேராசிரியரும், டாக்டர் ஆப் டிவைனிட்டியுமானவர் (Doctor of Divinity) கீழ்த்தரமான விதத்தில் விமர்சனம் வெளியிட்டுள்ளதை நாம் அனைவரும் அறிவோம்.

"மகன் தாமாக எதையும் செய்ய இயலாது" (யோவான் 5:19; திருவிவிலியம்) என்று கர்த்தர் கூறின வார்த்தைகள், குமாரன்தான் பிதா என்ற திருத்துவ கொள்கைவாதிகளுடைய பொதுவான கருத்துக்கு எதிர்மாறாய் உள்ளது; இன்னுமாக பிதாவும், குமாரனும் வல்லமை மற்றும் மகிமையின் விஷயத்தில் ஒன்றாய்/சரிசமமாய் இருக்கின்றார்கள் என்ற கேட்டிசம் (Catechism; வினா விடையாக கற்பிக்கப்படும் பாடம்) கூற்றிற்கும் கூட, இந்தக் கர்த்தருடைய வார்த்தைகள் முற்றிலும் எதிர்மாறாகவே உள்ளது. "பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருக்கின்றார்" (வசனம் 20). மேலும் பிதா, குமாரன் மீது கொண்ட அன்பின் காரணமாக பெரிய வியப்பிற்குரியவைகளையும்/கிரியைகளையும், பெரிய ஆச்சரியங்களையும் பிதா, குமாரனுக்குக் காட்டியுள்ளார், காட்டிக்கொண்டிருக்கின்றார், இன்னமும் காட்டுவார். சுவிசேஷ யுகத்தின் புத்திரர்களின் மூத்த சகோதரனாகிய நமது கர்த்தர் இயேசுவுக்குப் பிதா எவைகளையெல்லாம் வெளிப்படுத்துகின்றாரோ, அவற்றையெல்லாம், நமக்கு கர்த்தர் இயேசு வெளிப்படுத்துவார் என்று கர்த்தர் இயேசு நமக்கு வாக்களித்துள்ளார். இவ்விஷயம் குறித்து, வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் மிகத் தெளிவாக நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" (யோவான் 15:15). "சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்" (வெளிப்படுத்தல் 1:1). இன்னும் ஏற்றகாலத்தில், நமது கர்த்தரால், அவருடைய முதலாம் வருகையின்போது நிகழ்த்தப்பட்டவைகளைக் காட்டிலும் மாபெரும் கிரியைகளை அவர் செய்யும்போது, நாமும் அவரோடு கூட அதில் பங்குப்பெறுவோம் என்று நமது மூத்த சகோதரனும், நமது மணவாளனும், நமது அதிபதியுமானவர் வாக்களித்துள்ளார். "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" (யோவான் 14:12).

கர்த்தர் குறிப்பிட்ட மாபெரும் கிரியைகளில் ஒன்று மரித்தோரின் உயிர்ப்பிக்குதல் ஆகும்; மரித்தோரை உயிரோடு எழுப்புவதற்கான வல்லமை பிதாவுக்கு இருந்தது போன்று, இந்த வல்லமை குமாரனுக்கும் அருளப்பட்டுள்ளது. இவ்வார்த்தைகளை நமது கர்த்தர் பேசும்போது, அவர் லாசரு, யவீருவின் மகள் மற்றும் நாயீன் ஊர் விதவையின் மகன் ஆகியவர்களை உயிரோடு எழுப்பப்பட்டது தொடர்பாகவே கூறினார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. இவர்கள் உயிரோடு மாத்திரமே எழுப்பப்பட்டார்கள் (awakenings); இவர்களின் விஷயத்தில் உயிர்த்தெழுதல் (Resurrection) நடக்கவில்லை; இவர்கள் மரணத்திலிருந்து முற்றிலுமாகப் பூரணமான ஜீவனுக்குள் கொண்டுவரப்படவில்லை. நமது கர்த்தர் எதிர்க்காலத்தின் சம்பவங்களை நினைவில் கொண்டவராக, சபையானது மகிமை, கனம் மற்றும் அழியாமைக்குள் உயிர்த்தெழுப்பப்படுவதையும், பின்னர் ஆயிரம் வருஷம் யுகத்தில் உலகம் (நியாயத்தீர்ப்பிற்காக) உயிர்த்தெழுப்பப்பட போவதையும் கருத்தில் கொண்டவராக இதைக் கூறினார்.

மேற்கூறப்பட்ட இக்கருத்துக்கள் யோவான் 5:22-ஆம் வசனத்தில் வெளிப்படுகின்றது; அதாவது, "பிதாவானவர், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" என்று கர்த்தர் கூறினார். நியாயத்தீர்ப்பில் வெற்றிகரமாக தேறுபவர்களுக்கே உயிர்த்தெழுதலின் ஜீவன், பலனாகக் கொடுக்கப்படுகின்றது. பரம அழைப்பு மற்றும் மகிமை, கனம், அழியாமைக்குரிய இவ்வழைப்புக்கான இடுக்கமான வழியின் நிபந்தனைகளின் கீழ், இந்தச் சுவிசேஷ யுகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பரீட்சையில், "ஜெயங்கொண்டவர்களாக" வெளிப்படுபவர்களுக்கான பலனாக முதலாம் உயிர்த்தெழுதல் சம்பவிக்கின்றது. இந்தச் சுவிசேஷ யுகத்தில், இப்பொழுது சபையானது, இந்தப் பரம அழைப்பிற்கான நிபந்தனைகளின் கீழ் நியாயத்தீர்ப்பில், பரீட்சையில் உள்ளது. கர்த்தர் தம்முடைய சொந்த பலியினால் மீட்டுக்கொண்ட உலகத்தின் மனுக்குலத்தையும் கூட ஆயிரம் வருஷம் யுகத்தின் போது

நியாயந்தீர்ப்பார்; மேலும் உலகம் நியாயம் தீர்க்கப்படும் விஷயத்தில், இப்பொழுது நியாயத்தீர்ப்பு நடந்தேறிக் கொண்டிருக்கும் மணவாட்டி வகுப்பாரும் கர்த்தரோடு இணைந்து செயல்படுவார்கள் எனக் கர்த்தர் வாக்களித்துள்ளார். "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?" (1 கொரிந்தியர் 6:2). ஆயிரம் வருஷம் யுகத்தில் மனுக்குலம் எழுப்பப்பட்டு, (awaken) நியாயத்தீர்ப்பின் பரீட்சையின் கீழ் விடப்படுகின்றனர், மேலும் இவர்களில் யார் யார் நீதிக்கு இசைவான குணலட்சணங்களை வளர்த்தி, நியாயாதிபதியின் அங்கீகரிப்புக்குப் பாத்திரமாய் இருக்கின்றார்களோ, அவர்களே முழுமையான உயிர்த்தெழுதலை (Resurrection) அடைந்து, ஆயிரம் வருஷம் யுகத்தின் முடிவின்போது, நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பார்கள்; மேலும் நியாயத்தீர்ப்பின் நாளினுடைய முடிவின்போது, மீதமானவர்கள் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுப் போவார்கள்.

உலகத்திற்கான நியாயத்தீர்ப்பு நமது கர்த்தருடைய முதலாம் வருகையின்போது ஆரம்பிக்கவில்லை என்பதற்கான சாட்சியாக யோவான் 12:47-ஆம் வசனம் விளங்குகின்றது. "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்;" "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" (யோவான் 12:48; அப்போஸ்தலர் 17:31; 1 கொரிந்தியர் 6:2).

இதற்கு இசைவாகவே யோவான் 5:17 மற்றும் எபிரெயர் 4:4, 10-ஆம் வசனங்களும் காணப்படுகின்றன. மனிதன் மீறுகிறவனான போது, தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் வேலையிலிருந்து ஓய்ந்தார்; இன்னும் அவ்வேலையைத் தொடர்வதற்குப் பதிலாக, அதை அவர் விட்டுவிட்டு, அதன்மேல் சாபத்தை வைத்தார், அதாவது தம்முடைய பிரதானமான கையின் கிரியையின் மீது மரணம் எனும் தண்டனையை வைத்தார். ஒரு கண்ணோடத்தில்/விதத்தில் அவ்வேலையைத் தேவன் விட்டுவிட்டாலும், இன்னொரு விதத்தில் பார்க்கையில் அதன் மீது உள்ள அவருடைய நோக்கத்தை அவர் விட்டுவிடவில்லை; இறுதியில் தீமையானவனை நசுக்கிப் போட்டு, மனுக்குலத்தை அவனுடைய வல்லமையினின்று விடுவிப்பதற்கான ஸ்திரீயின் வித்தை எழுப்பும் நோக்கத்தைத் தேவன் கொண்டிருந்தார், அதை முன்னறிவிக்கவும் செய்தார்; அதாவது மரணத் தண்டனையை ரத்து செய்து, உயிர்த்தெழுதல் அளிக்கப்படுவதை முன்னறிவித்தார். நமது கர்த்தர் இயேசு வாக்களிக்கப்பட்ட ஸ்திரீயின் வித்தாவார்; ஆனால் நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிற வண்ணமாக, தெய்வீகத் திட்டத்தின்படி சபையாகிய, அவருடைய சரீரத்தின் அங்கங்களும் ஸ்திரீயின் வித்தில் அடங்குகின்றனர். கிறிஸ்துவின் தலை மற்றும் சரிரத்தினுடைய பாடுகள் குறித்து, சர்ப்பம் குதிங்காலைக் காயப்படுத்தும் என்று ஏதேனில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சுவிசேஷ யுகம் முழுவதும் நடந்து கொண்டு வருகின்றது; இயேசு, தீமையின் சக்திகளினால்/அதிகாரங்களினால் சிலுவையில் அறையப்பட்டார்; அவரும் தம்மைப் பாவத்திற்கான பலியாக ஒப்புக்கொடுத்துவிட்டார்; அவருடைய சரீரத்தினுடைய அங்கங்களும் அவரோடு கூடப் பாடுபட்டு, கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள் (கொலோசெயர் 1:24).

இந்த மாபெரும் வித்தாகிய கிறிஸ்து முழுமையாய் மகிமை அடைவதற்கும், அனைத்து அங்கங்களும் தலையினுடைய மகிமையில் பங்கடைவதற்கும் உரிய வேளை சீக்கிரத்தில் வரவிருக்கின்றது; அப்போது "சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள் நிறைவேறும் (ரோமர் 16:20). தம்முடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால் உலகத்தை மீட்டுக்கொண்ட கர்த்தரும், தலையுமானவரும், மாபெரும் இரட்சகருமானவருந்தான், ஆயிரம் வருஷம் யுகத்தில், சாத்தான் கட்டப்பட்டுக் காணப்படும்போது, பரீட்சையின் கீழ்க் காணப்படும் மீட்கப்பட்ட மனுக்குலத்திற்கு நியாயாதிபதியாக, பிதாவினால் நியமிக்கப்பட்டுள்ளார். அனைத்துத் தீமையும் கீழ்ப்படுத்தும் வரையிலும், குமாரனுடைய வேலை நிறைவடைவதில்லை; தீமை அனைத்தும் கீழ்ப்படுத்துவது ஆயிரம் வருஷம் யுகத்தின் இறுதியின் போதே நிறைவடையும். விருப்பமுள்ள அனைவருக்கும் கர்த்தர் சத்திய அறிவையும், சிட்சைகளையும் கொடுத்து, நீதிக்குரிய விஷயங்களில் ஜனங்களைச் சீர்திருத்தவும் பண்ணுவார்; மீதமானவர்கள் அனைவரும் ஜனங்கள் மத்தியிலிருந்து அறுப்புண்டுப் போகப்படுவார்கள் (அப்போஸ்தலர் 3:23). கர்த்தர் இப்படியாக அனைத்து எதிர்ப்பின் அதிகாரங்களையும், ஆளுகைகளையும், வல்லமைகளையும் கீழ்ப்படுத்தின பிற்பாடு, தேவனிடத்தில் இராஜ்யத்தை ஒப்படைப்பார் என்று அப்போஸ்தலர் தெரிவித்துள்ளார். இவ்விதமாய் மனிதனுடைய வீழ்ச்சிக்கு முன்னதாகப் பிதாவானவர் கிரியை புரிந்தார், பின்னர் மனுஷனை ஒப்புரவாக்கும் வேலையையும், மனுக்குலத்தை நியாயந்தீர்க்கும் வேலையையும் பிதா, குமாரனிடத்தில்

ஒப்படைந்திருந்தார்; பின்னர் தம்முடைய பிரதிநிதியாக குமாரன் செயல்பட்டு, அனைத்தையும் புதிதாக்கின பிற்பாடு அனைத்தையும் பிதா திரும்ப ஏற்றுக்கொள்வார் (1 கொரிந்தியர் 15:24; வெளிப்படுத்தல் 21:5).

ஆகவே சிலர் சொல்லுவது போன்று, "பிதாவைப் போன்று இயேசு நம்முடைய நியாயாதிபதி" என்று கூறுவது மாபெரும் தவறாகும், ஏனெனில் பிதா ஒருவனையும் நியாயம் தீர்ப்பதில்லை என்றும், நியாயம் தீர்க்கும் காரியத்தை பிதா, குமாரனிடத்தில் ஒப்புவித்துள்ளார் என்றும் நமது கர்த்தர் தாமே கூறியுள்ளார். இந்தச் சுவிசேஷ யுகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சபைக்கான நியாயத்தீர்ப்பானது, யோவான் 5:24-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது; இப்பொழுது கேட்டு, விசுவாசித்து, தங்களால் முடிந்தமட்டும் கீழ்ப்படிகிறவர்கள், வெற்றிகரமாக தற்போதைய நியாயத்தீர்ப்பில் கடந்து செல்வதின் காரணமாக நித்தியத்திற்குரிய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். இவர்கள் (சபை) ஆயிரம் வருஷம் யுகத்தின்போது, உலகத்திற்கு நடைபெறும் பொதுவான நியாயத்தீர்ப்பின் கீழ் வர வேண்டியதில்லை, ஏனெனில் இவர்கள் இந்த யுகத்தில் நடந்து கொண்டிருக்கும் நியாயத்தீர்ப்பின் முடிவாக மரணத்திலிருந்து, ஜீவனுக்குள் பிரவேசிப்பவர்களாய் இருப்பார்கள்.

மனுக்குலத்திற்கான பொதுவான நியாயத்தீர்ப்புக் குறித்து யோவான் 5:25-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது; அதாவது மரித்தவர்கள் அனைவரும் தேவனுடைய குமாரனுடைய சத்தத்தைக் கேட்கும்போது, அவர்கள் சத்தியத்தின் அறிவிற்குள் கொண்டுவரப்படும்போது அதைக் கேட்டு, அந்தச் சத்திய அறிவிற்குக் கீழ்ப்படிகின்றவர்கள் பிழைப்பார்கள்; அவர்கள் பிரேத குழிகளிலிருந்து மாத்திரம் விடுவிக்கப்படாமல், பாவத்தின் காரணமாக வந்த சரீர பிரகாரமான, மன ரீதியிலான மற்றும் ஒழுக்க ரீதியிலான பூரணமற்ற தன்மைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, பூரணமான ஜீவனுக்கும் கொண்டு வரப்படுவார்கள். "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோத்தேயு 2:4). இந்த நியாயந்தீர்க்கப்படும் வேலையானது, இந்தச் சுவிசேஷ யுகத்திலேயே சிறுமந்தையிடம் ஆரம்பமாகும் உண்மையானது, "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்" என்ற வசனத்தில் விளங்குகின்றது (யோவான் 5:25). தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி பார்க்கும்போது முழு உலகமும் மரித்தவர்களாகப் பேசப்படுகின்றது. ஏனெனில் உலகத்தின் பத்தில் ஒன்பது சதவிகிதம் ஏற்கெனவே மரித்துவிட்டது, மேலும் முழுமையான மரணத் தண்டனையின் கீழும் உள்ளது. இதன் காரணமாகவே "மரித்தோர், தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்" என்று நமது கர்த்தர் ஒருவனிடம் கூறினார்.

ஒரு மனுஷனாக தம்மால் இத்தகைய மாபெரும் வேலையைச் செய்வதற்குரிய வாய்ப்பைப் பற்றி, தாம் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களால் புரிந்துக்கொள்ள முடியாது என்பதை உணர்ந்துக்கொண்ட நமது கர்த்தர், இன்னும் விளக்கினார்; அதாவது, "பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராய் இருக்கிறதுபோல (அழியாமை), குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராய் இருக்கும்படி (அழியாமை) அருள்செய்திருக்கிறார் (வாக்களித்துள்ளார்) என்றும், தீர்க்கத்தரிசிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட இவ்வேலையை, அதாவது நியாயந்தீர்க்கும் வேலையை அதாவது, தெய்வீகச் சித்தத்தை மனுஷகுமாரனாகிய தாம் செய்ய வேண்டும் என்று பிதா கட்டளைக் (அதிகாரம்) கொடுத்துள்ளார் என்றும் கர்த்தர் இயேசு விளக்கினார். "பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார். அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்" (யோவான் 5:20, 27). மேலும் மனுஷகுமாரனிடத்தில் பிதாவினால் ஒப்புவிக்கப்பட்டுள்ள இந்த உன்னதமான கனத்தின் காரணமாகவே, "அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" என்று கூறினார் (யோவான் 5:22). மாபெரும் வேலையை நிறைவேற்றும்படிக்கு குமாரன், பிதாவினால் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதி என்பதே குமாரனுக்குரிய கனமாக இருக்கின்றபடியாலேயே, "குமாரனை கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்" என்று தொடர்ந்து கர்த்தர் விளக்கிக் காட்டினார் (யோவான் 5:23).

**ஆமென்!**

---

# நினைவுகூருதல் இராப்போஜனம்

நமது கர்த்தருடைய மரணத்தின் ஆண்டுநிறைவு நாளில் நினைவுகூரப்படும் நினைவுகள் எவ்வளவு புனிதமானதாய்க் காணப்படுகின்றது! அது இரட்சிப்பினுடைய முழுத்திட்டத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதான பிதாவின் அன்பினை மனதிற்குக் கொண்டுவருகின்றது; இந்த இரட்சிப்பின் திட்டத்தினுடைய மையமாக, அவர் தம்முடைய குமாரனை நம்முடைய மீட்பராகக் கொடுத்த காரியம் காணப்படுகின்றது. அது தம்மையே அனைவருக்குமான மீட்கும்பொருளாக (அ) சரிநிகர்சமான பலியாக ஒப்புக்கொடுத்தவரைப்பற்றி விசேஷமாய் நம்முடைய நினைவுகளுக்குக் கொண்டு வருகின்றது. "அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராய்ப் பாடுபட்டவருடன்" விசுவாசமானது மிகவும் நெருங்குகின்றது மற்றும் நன்றி நிறைந்த, பொங்குகிற இருதயங்களுடனும், கண்களில் கண்ணீருடனும் நாம், "என் இரட்சகர்! என் மீட்பர்! என் கர்த்தர் மற்றும் ஆண்டவர்! அவர் என்னை அன்புகூர்ந்து, தம்மையே எனக்காகத் தந்தார்" என்று மெல்லிய குரலில் கூறுகின்றவர்களாகுகின்றோம். ஆ! ஆம்!

"சிலுவையின் அடிவாரத்தில் செலவிடும் தருணங்களானது
இனிமையான தருணங்களாகவும்,
ஆசீர்வாதத்தில் ஐசுவரியமுள்ளதாகவும் இருக்கின்றன:
ஜீவனும், சந்தோஷமும், சமாதானமும்
என் சிறந்த மற்றும் உண்மை நண்பனிடமிருந்து வருகின்றதே."

"தேவதூதர் அனைவரிலும் பெரியவராகவும்," எல்லா நாமத்துக்கும் மேலானவராகவும், பிதாவுக்கு அடுத்திருப்பவராகவும் அவர் இருக்க மற்றும் நாம் அவருடன் நட்புறவுகொண்டிருக்க மிகவும் முக்கியமற்றவர்களாகவும், மிகவும் அபூரணராகவும், மிகவும் அபாத்திரராகவும் இருக்க, நாம் அவரை நினைக்க வேண்டும் என்பதிலும், நாம் அவரை நம்முடையவர் என்று அழைப்பதிலும் அக்கறையுடன் காணப்படுகின்றார் என்ற கருத்தானது எத்துணை பாக்கியமானதாகும். இன்னுமாக "நம்மைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை என்பதையும், நாம் அவரது மரணத்தினை நினைவுகூருவதில் அவர் பிரியப்படுகின்றார் என்பதையும், தம்முடைய பிட்கப்பட்ட மாம்சத்தை அடையாளப்படுத்துவதற்கென்று அப்பத்தையும், தமது சிந்தப்பட்ட இரத்தத்தை அடையாளப்படுத்துவதற்கென்று திராட்சரசத்தையும் கொடுத்துள்ளார் என்பதையும், அதாவது அனைவருக்குமாக விலைக்கொடுத்து வாங்கப்பட்டதும், அனைவராலும் பங்கெடுக்கப்படப்போகின்றதுமான மனித உரிமைகளையும், சிலாக்கியங்களையும் ஒன்று அடையாளப்படுத்தும் வண்ணமாகவும், மற்றொன்று ஏற்றுக்கொள்ளுகின்ற அனைவருக்கும் நித்திய ஜீவனை உறுதிப்படுத்தும் வண்ணமாக அவர் கொடுத்த ஜீவனை அடையாளப்படுத்தும் வண்ணமாகவும் அவர் கொடுத்துள்ளார் என்பதையும் நினைத்துப்பார்க்கும்போது பாக்கியமானதாய் இருக்கின்றது!

மனமகிழ்ச்சியுடன் அவரும், யூதர்களும் அந்த நாளையும், நாழிகையையும் எண்ணினதுபோன்று நாமும் எண்ணுகின்றோம்; இறுதியில் "வேளை வந்தபோது" நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தைக் கொண்டாடுவதற்கும், எகிப்தின்மீது வந்த மாபெரும் சங்காரத்தினின்று, இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் விடுவிக்கப்பட்டதை நினைத்துப்பார்ப்பதற்கும், பிற்பாடு இந்த முதற்பேறானவர்களின் வாயிலாக உண்டான தேவனுடைய நிழலான இஸ்ரயேல் அனைத்திற்குமான விடுதலையை நினைத்துப்பார்ப்பதற்கும் என்றும் இயேசு, தம்முடைய சீஷர்களோடு பந்தியிருந்தார்.

நிழலினை ஆசரித்து முடித்தப் பிற்பாடு, ஆண்டவர் புதிய அடையாளச் சின்னங்களைக் கையில் எடுத்து, "(இதுமுதல்) என்னை நினைவுகூரும்படி இதைச் (பஸ்காவை ஆசரிப்பதை) செய்யுங்கள்" என்று கூறுவதைக் கேட்பதும் எத்துணை விலையேறப்பெற்றதாய் இருக்கின்றது! ஆ, ஆம்! சிலுவையில் அறையப்பட்டவரில் நம்மால் இப்பொழுது, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை" காணமுடிகின்றது; "நம்முடைய (ஆட்டுக்குட்டி) பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்;" "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்;" (1 கொரிந்தியர் 11:26) அவரது இராஜ்யம் வரும்போது, நாம் அவரோடுகூட இராஜ்யத்தில் புதிய திராட்சரசத்தை (புதிய ஜீவனையும்,

சந்தோஷத்தையும்) பானம் பண்ணிடுவதற்கு அனுமதிக்கப்படுவோம். (மத்தேயு 26:29; 1 கொரிந்தியர் 5:7, 8; 11:26)

(விசுவாசத்தின் வாயிலாக மீட்கப்பட்டவர்களெனக் கர்த்தரின் பலியின் புண்ணியத்திலும் மற்றும் இதன் விளைவான நன்மைகளிலும், அதாவது நீதிமானாக்கப்படுதலிலும், திரும்பக்கொடுத்தலின் உரிமைகளிலும், சிலாக்கியங்களிலும் பங்கெடுப்பதன் மூலமாக) நமது கர்த்தருடைய பலியினாலான தயவுகளை அனுபவிப்பதற்குரிய சிலாக்கியம் மாத்திரம் நம்முடையதாய் இராமல், இதனை காட்டிலும் மேலானதாகவே உள்ளது; நாம் நமது ஆண்டவரோடுகூடப் பலியிலும், அதன் மகிமையான பலன்களிலும் பங்கடைவதற்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். அவர் நம்மிடம் கூறுவதாவது: "எவன் ஒருவன் என்னுடைய வேலையின்மீதும், அதன் விளைவுகள்மீதும் உடன்பாடுள்ளவனாய் இருக்கின்றானோ, எவன் ஒருவன் என்னுடைய இராஜ்யத்தில் பங்கடைந்து, உலகத்தை ஆசீர்வதிக்கும் அதன் வேலையில் இணைந்துகொள்ள விரும்புகின்றானோ, அவனும் என்னோடுகூடப் பிட்கப்படட்டும் மற்றும் மரணம் வரையிலுமான சுயத்தை வெறுத்தல் எனும் பாத்திரத்தில் என்னோடுகூடப் பானம்பண்ணட்டும்" என்பதாகும். இப்படியானவர்கள் அனைவரிடமும் அவர் கூறுவதாவது: "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்பதாகும். இதே கருத்தை அப்போஸ்தலனும் உறுதிப்படுத்தும் வண்ணமாக, "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகின்றோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் (மரணத்தில்) பங்குகொள்ளுதல் அல்லவா? (ஐக்கியமாயிருக்கிறதல்லவா?) அப்பத்தைப் பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா? (ஐக்கியமாயிருக்கிறதல்லவா?) அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் (கிறிஸ்துவினுடைய சரீரத்தில் அங்கத்தினர்களாயினும்) ஒரே உடலாய் இருக்கின்றோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்" என்று கூறுகின்றார். (1 கொரிந்தியர் 10:16, 17)

அருமை கர்த்தரே எங்களுக்காக, அதாவது நாங்கள் நீதிமானாக்கப்படத்தக்கதாகப் பலிசெலுத்தப்பட்ட உம்முடைய தூய்மையான மனுஷீக சுபாவத்தின் புண்ணியத்தினை, நாங்கள் மகிழ்ச்சியுடன் புசிக்கின்றோம் (எங்களுடைய தேவைக்கென்று சொந்தமாக்கிக்கொள்கின்றோம்). ஏற்றக்காலத்தில் உம்மோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாக, உம்மோடுகூடப் பாடுபடுவது என்பதும், நித்தியமான எதிர்க்காலத்தில் நாங்கள் உம்மோடுகூட ஜீவிக்கத்தக்கதாகவும், உம்மைப்போன்று காணப்படத்தக்கதாகவும், உமது மணவாட்டியென உமது அன்பிலும், உமது மகிமையிலும் பங்கடையத்தக்கதாகவும், உம்மோடுகூட மரிப்பது என்பதும் பாக்கியமான சிலாக்கியம் என்று நாங்கள் உணர்ந்து, பாடுகளின் பாத்திரத்தில் உம்மோடுகூட நாங்கள் மகிழ்ச்சியுடன் பங்கெடுக்கின்றோம். ஓ! அடையாளத்தை ஆசரிப்பதில் மாத்திரமல்லாமல், உண்மை ஜீவியத்திலும் நாம் உண்மையாய் இருக்க வேண்டும். ஸ்தோத்திரத்திற்குரிய கர்த்தாவே நீர், "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்" என்று கூறும் உம்முடைய வார்த்தைகளை நாங்கள் கேட்கின்றோம். கர்த்தாவே நாங்கள் நாங்களாகவே இப்படிப் பலிசெலுத்திட முடியாது; ஆனால் உம்முடைய கிருபை எங்களுக்குப் போதும்; ஏனெனில் நாங்கள் இப்பொழுதும், எப்பொழுதும் முற்றும் முழுமையாய் உம்முடையவர்களாய் இருக்கின்றோம்.

அவரது பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கும், நமது கர்த்தரோடுகூட, அவரது சரீரமெனப் பிட்கப்படுவதற்குமான தற்கால சிலாக்கியத்தில் நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தோமானால், நாம் சீக்கிரத்தில் அவரோடுகூடப் "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையாகுவோம்;" மற்றும் இவர்களே இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாராய் இருந்து, நமது மாபெரும் பிரதான ஆசாரியன் கீழிருந்து, ஓய்வுநாளுக்கு ஆண்டவராய் இருப்பவருடைய செவிகளுக்கு எட்டின ஜெபங்களையும், பெருமூச்சுகளையும் ஏறெடுத்த பாவத்தின் அடிமைகள் யாவரையும் எகிப்திய சிறைவாசத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் வெளிநடத்துவார்கள்; ஓ! இது எத்துணை அருமையானதொரு சிந்தனையாய் இருக்கின்றது.

இதுபோன்ற சில கருத்துகளே, உலகமெங்கும் காணப்படும் கர்த்தருடைய ஜனங்களை, சிறுசிறு கூட்டத்தாராய் (சிலசமயம் இயேசுவோடு தனிமையிலும்) மார்ச் 26-ஆம் தேதியன்று மாலை, 6 மணிக்குப் பிற்பாடு, தேவனுடைய அண்டசராசரத்தினுடைய வரலாற்றிலேயே மிகக் குறிப்பிடத்தக்க நிகழ்வினை, அதன் ஆண்டுநிறைவு நாளில் ஆசரிக்கும் வண்ணமாகக் கூடிடுவதற்கு நெருக்கி ஏவுகின்றது. (இந்த நினைவுகூருதலின் ஆண்டுநிறைவு நாளுக்கான துல்லியமான, சரியான தேதியினை முடிந்தமட்டும் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் விரும்புகின்றோம்; நாம் துல்லியமான தேதியைப் பெற்றுக்கொள்ளவில்லையெனில், அது கவலைக்கிடமான காரியமாய் இருக்கும் என்பதாக நாம் புரிந்துகொள்ளவில்லை; நாளை ஆசரியாமல், நிகழ்வையே நாம் நினைவுகூர்ந்து ஆசரிக்கின்றோம். எனினும் வேறுபாடற்ற/ஒன்றுபோல் தேதியைப் பெற்றுக்கொள்வதற்கே விரும்புகின்றோம்).

"பிரியமானவர்களே, புசியுங்கள், குடியுங்கள்" என்று மணவாளன், தனது மணவாட்டியினிடத்தில் கூறுகின்றார். (உன்னதப்பாட்டு 5:1) நமது மீட்பருடைய அன்பையும்,

பலியையும் நாம் ஒவ்வொருவரும் எண்ணி, அவரோடுகூட மரிப்பதற்கென நாம் மீண்டுமாக உறுதியளிக்கையில், நாம் பயபக்தியோடும், பக்தியோடும், கருத்தோடும், ஜெபத்தோடும் புசித்து, பானம்பண்ணுவோமாக. அவரைத் தங்கள் மீட்கும் பொருள் என்று, அடையாளங்கண்டுகொண்டுள்ளவர்களும், அவரை நினைவுகூரும்படியாக 'இதைச்' செய்ய விரும்புகின்றவர்களுமானவர்கள் யாரொருவரோடும் கூடிக்கொள்ளுங்கள் (அ) தனிமையில் இதை ஆசரியுங்கள்.

நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படுவதற்கே தவிர மற்றப்படி ஆச்சாரங்களையும், சம்பிரதாயங்களையும் பொதுவாய் மறந்து, உங்கள் இருதயங்கள் நிஜமான நிலையில் காணப்படுவதாக. முன்கூட்டியே ஏதாகிலும் ஒருவகை திராட்சப்பழ ரசத்தை (fruit of the vine) ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். நாம் வேகவைக்கப்பட்டு எடுக்கப்படும் உலர்த் திராட்சரசத்தை (அ) புளிப்பேற்றப்படாத திராட்சப்பழச்சாற்றைப் பரிந்துரைக்கின்றோம்; அப்பத்திற்கு ஒன்றில் யூதருடைய புளிப்பில்லாத அப்பத்தை (அ) water crackers எனும் சாதாரணமான ரொட்டியைப் (இதிலும் மாவு, தண்ணீர் மற்றும் உப்பு எனும் ஒரே கலவை இடம்பெறுகின்றது மற்றும் புளிப்பில்லாததாய் இருக்கின்றது) பரிந்துரைக்கின்றோம். புளிப்பு, பாவத்திற்கு (அ) சீர்க்கேட்டிற்கு அடையாளமாய் இருப்பதினால், புளிப்பு/காடிச்சத்து (yeast) சேர்த்துப்பண்ணும் அப்பமானது, "மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான" நமது கர்த்தருக்குப் பொருத்தமான அடையாளமாகக் காணப்படுவதில்லை.

*****

# புதிய சிருஷ்டியின் மன விருப்பங்கள்

பரிசுத்தமாகவே இருககவிரும்பினேன்,
பார்வைக்கழகாய்தோற்றம் வேண்டினேன்,
இளம் மொட்டுக்கள் மலர்வதைப்போன்றே
பனித்துளிரோடு மலர்ந்திட வேண்டினேன்,
இரட்சகர் கொடுத்த மீட்பின் வெண் வஸ்திரம்
இருக்கையில் எனக்கு ஏன் அழுக்கு வஸ்திரம்?
மலைகளைப்போன்றே உயரமாகவே,
விண்ணை முட்டியே மேகங்கள்மத்தியில்
உறுதியாகவே கம்பீரமாகவே நிற்க விரும்பினேன்,
என் எஜமான் கொடுத்த பலத்தின்மிகுதியால்,
எனக்குள் இருந்த பலவீனம் மறைந்தது,
மாபெரும் தடாகத்தின் நீரினைப்போன்றே அமைதியாகவே எந்தன் வாழ்க்கை(தடாகம்-ஏரி)
அசைவற்றிருக்க வேண்டி விரும்பினேன்,
காற்றடித்தாலும் கடலே உடைந்து கடும் புயல் வீசினாலும்,
அசைக்க முடியாத வாழ்க்கை விரும்பினேன்,
தேவனே எந்தன் ஆசைகள், என் இதய விருப்பங்கள் உலக முடிவிலே நிறைவு எய்துமே,
நிலைத்த பார்வையால் வெறித்து நோக்கையில் பரிபூரணம் நிறைவுறும்,
மாட்சிமிகு திட்டத்திற்கே,
ஆஹா., என் தேவனே,நான் உம்மைப்போலல்லவா மாறி இருந்திருக்க வேண்டும்?.
என் இதயம்தானே உம் வாசம் வீசும் தோட்டமாகவே மாறிட வேண்டும்,
என் ஜெபங்கள் உம் மலைமேலே ஏறிவர வேண்டும்,
அளப்பறியா அமைதியாக என் மகிழ்ச்சி அமைய வேண்டும்,
உமக்கெனவே பரிசுத்த அக்கினியாய் ஜீவபலி உயர வேண்டும்,
அந்த அக்கினியே என்னுடைய பாவங்களை சுத்தம் செய்ய வேண்டும்,
ஏற்கப்பட்ட சுகந்த பலியாக எந்தன்பலி உமது நாசி வரை உயர்ந்து வாசம் வீச வேண்டும்.

**R 2437**

# "கூடாரப்பண்டிகையின் போது"

## யோவான் 7:14, 28-37

"ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்" (வசனம்-37)

நம்முடைய கடந்த பாடத்தில் நாம் பார்த்துள்ளபடி, ஐயாயிரம் பேருக்குக் கர்த்தர் அற்புதகரமாகப் போஷித்தப் பிற்பாடு, ஜனக்கூட்டத்தார், நமது கர்த்தரை ஒரு மாபெரும் தீர்க்கத்தரிசியெனப் பிரகடனம் பண்ணிக்கொண்டு, அவரை வலுக்கட்டாயமாக இராஜாவாக்கிட முடிவு செய்தனர். எனினும் இது பிதாவினுடைய திட்டமல்லவென்று அவர் நன்கு அறிந்திருந்தார்; மரணத்திற்குக்கொண்டுச் செல்லும், பாவிகளால் ஏற்படும் விபரீதத்திற்கு தாம் ஆளாக வேண்டும் என்றும், இப்படியாகத்தான் தாம் சுதந்தரிக்கப் போகிற இராஜ்யத்தை அடையமுடியும் என்றும், தமக்கு வாக்களிக்கப்பட்ட இராஜ்யமானது, உலகத்திற்குரியதாகவும், தற்கால ஒழுங்குகள் மற்றும் ஏற்பாடுகளுக்குரியதாகவும் இருப்பதாயிராமல், மாறாக புதிய யுகத்திற்குரியதாக இருக்கும் என்றும் அவர் அறிந்திருந்தார். ஆகவே நமது கர்த்தர் தமது சீஷர்களைப் படகில் அனுப்பிவிட்டு, மலைக்குத் தனியே போய்விட்டார்; பிற்பாடு தண்ணீர் மீது நடந்து போய் தமது சீஷர்களை அடைந்தார்.

தம்மை இராஜாவாக்கிக்கொள்வதற்கென, தமது அற்புதத்தின் மூலம் அடைந்திட்ட பிரபலத்தைப் பயன்படுத்தும் எந்தப் பிரயாசமும் எடுக்கப்படாமல், இயேசு ஆறு மாதங்களுக்கு மேலாக கலிலேயாவில் பிரசங்கித்தும், போதித்தும் வந்ததுமான காரியம், அவருடைய சொந்த சகோதரர்களுடைய நம்பிக்கையைத் தளர்த்த ஆரம்பித்தது; காரணம் அதுவரையிலும் காணப்பட்ட அவர்களது அக்கறை விசுவாசத்தின் அடிப்படையை விட, பெருமையின் அடிப்படையிலேயே காணப்பட்டது. இப்பொழுதும் எருசலேமுக்குச் சென்று, கூடாரப்பண்டிகை அனுசரிக்க வேண்டிய வேளை வந்திருக்க, அதில் பங்குக்கொள்வதற்கென இயேசு எந்த விசேஷித்த ஆயத்தங்களையும் பண்ணாமல் இருப்பதை, அவருடைய சொந்த சகோதரர்கள் கவனித்தனர். அவருடைய வல்லமை பரீட்சிக்கப்பட வேண்டும் என்பதில் அவர்கள் ஆவலாய் இருந்தனர். "ஒன்றில் எதையாகிலும் செய்து, முழு உலகத்தினுடைய பார்வைக்கு முன்னதாக உம்மை பெரியவராக்கிக்கொள்ளும் (அ) எல்லாவற்றையும் விட்டுவிட்டு, நீர் உம்மை மேசியா என்று கூறிக்கொண்டது ஏமாற்றுத்தனம் என ஒப்புக்கொள்ளும்" என்பதே அவர்களது மனநிலையாக இருந்தது. ஆகவேதான் அவர்கள், "நீர் பண்டிகைக்குப் போகவில்லையா? உம்மைப் போன்று பேசுகிறவர்கள் எவராயினும் அவர்கள், இக்காரியங்களையெல்லாம் அந்தரங்கத்தில் செய்யக்கூடாது, மாறாக பிரபலமடைவதற்குரிய பெரிய வாய்ப்புகளையே நாட வேண்டும். உம்மிடத்தில் நித்தியஜீவன் இருக்கின்றது என்றும், அதை மற்றவர்களுக்கு உம்மால் கொடுக்கமுடியும் என்றும் நீர் எங்களிடத்தில் கூறுகின்றீர், ஆனால் உம்முடைய ஜீவனை அபாயத்திற்குள் ஆக்குவதற்கு நீர் பயப்படுவது போன்று தோன்றுகின்றது" என்ற விதத்தில் பேசினார்கள். "அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள்" (யோவான் 7:5).

அவர்களுடைய சூழ்நிலையிலிருந்து, தம்முடைய சூழ்நிலை மிகவும் வேறுபட்டதாய் இருக்கின்றது, அதாவது அவர்களால் எந்த நேரத்திலும் செல்லக்கூடும், ஆனால் தாம் குறிப்பிட்ட கட்டுப்பாட்டுக்குள் காணப்படுகின்றார் என்பதைச் சுட்டிக்காட்டும் வண்ணமாக நமது கர்த்தருடைய பதில் காணப்பட்டது. அவர்கள் தங்களுக்கு எதிராக, அந்தத் தேசத்தின் மிகுந்த செல்வாக்குள்ள மற்றும் வல்லமையுள்ள வகுப்பாரின் கொலை பாதகமான விரோதத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தாம் அதைப் பெற்றுக்கொண்டுள்ளார்; அதாவது தாம் சத்தியத்திற்கென ஊழியம்புரியும்படிக்கு உலகத்திற்கு வந்து, அச்சத்தியத்திற்கு உண்மையாய் இருந்ததின் காரணமாக தாம் மற்றவர்களுடைய விரோதத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். "யூதர்கள் இயேசுவைக் கொலை செய்ய வகை தேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்சரித்து" வந்த காரியம் உண்மையாக இருப்பினும், அவர் மரண பயத்தினிமித்தம் இப்படிச் செய்யாமல், மாறாக "தம்முடைய வேளை இன்னும் வரவில்லை" என்பதை உணர்ந்துக்கொண்ட காரணத்தினாலேயே ஆகும். ஆகவே பிதாவின் திட்டம் தொடர்புடையதாக, தாம்

அறிந்திருந்தவைகளுக்குத் தம்மால் முடிந்தமட்டும் ஒத்துழைப்புக் கொடுப்பது தம்முடைய கடமை என்றும், தெய்வீகத் திட்டம் தடுக்கப்படாதபடிக்கு (தாம் யூதேயாவுக்குச் செல்லும் பட்சத்தில்) தம்மைக் காப்பாற்றும்படிக்கு, ஒரு விசேஷித்த அற்புதம் செய்ய அவசியம் ஏற்படுத்தும் வண்ணமாக, திட்டத்தை அலட்சியப்படுத்தாமல் இருப்பதும் தம்முடைய கடமை என்றும் அவர் உணர்ந்திருந்தார்.

## ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கு நாடும் அனைவருக்கும் இங்குப் படிப்பினைகள் உள்ளன:-

(1) ஒருவேளை நமக்கு உலகத்திலிருந்து எதிர்ப்பு வரவில்லையெனில், அதற்குக் காரணம் நாம் நமது பிதாவின் வார்த்தைகளுக்கும், அவ்வார்த்தைத் தொடர்பாக நமக்கு நியமிக்கப்பட்டுள்ள பிதாவிற்கு அடுத்த ஊழியத்திற்கும் நாம் உண்மையற்றவர்களாகக் காணப்படுவதேயாகும்; காரணம் ஆண்டவருக்கு எப்படியோ, அப்படியே தம்முடைய பின்னடியார்களுக்கும் காணப்படும் என்று நமது ஆண்டவர் கூறியுள்ளார்; அதாவது நாம் உலகத்தாரல்லாததினால், நம்மை உலகம் பகைக்கும் என்றும், நமக்கு எதிராகப் பலவிதமான தீமைகளை உலகம் தவறாய்ப் பேசும் என்றும், நம்மைத் துன்பப்படுத்துபவர்கள், தாங்கள் தேவனுக்குத் தொண்டு செய்வதாக எண்ணிக்கொள்வார்கள் என்றும் நமது ஆண்டவர் கூறியுள்ளார். "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோத்தேயு 3:12). நாம் இன்னமும் இந்தத் துன்ப காலத்தில்தான் காணப்படுகின்றோம்; மாபெரும் எதிராளியானவன் இன்னமும் (முழுமையாய்) கட்டப்படவில்லை. மேலும் இப்படிப்பட்ட எதிர்ப்புகள் எதுவும் இல்லாமல் நாம் காணப்படுவோமானால், அது நாம் தேவபக்தியாய் வாழவில்லை என்பதற்கு உறுதியான ஆதாரமாக இருக்கின்றது, அதாவது எதிராளியானவன் மற்றும் அவனுடைய குருடாக்கப்பட்டுள்ள ஊழியர்களின் விரோதத்தைத் தூண்டும் அளவுக்கு, நாம் இன்னதும் போதுமானளவுக்கு இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவில்லை என்பதற்கான உறுதியான ஆதாரமாக இருக்கின்றது.

(2) நமது ஆண்டவருக்கு விசேஷித்த எதிராளிகளாக இருந்தவர்கள் அவிசுவாசியான உலகத்தாராய் இராமல், மாறாக பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்கின்றார்கள் என்றும், தெய்வீகப் பிரமாணங்களில் முழுமையான ஈடுபாடு உள்ளவர்கள் என்றும் அறிக்கைப் பண்ணிக்கொண்டிருக்கும் உண்மையற்ற அவிசுவாசிகளே ஆவர்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நமக்கும் இப்படியாகவே காணப்படும்; பெயரளவிலான கிறிஸ்தவர், சபைக்குப் புறம்பாக அல்லாமல் உள்ளுக்குள்ளாகவே நாம் நமக்கான விசேஷித்த எதிராளிகளையும், துன்பப்படுத்துபவர்களையும், அவதூறு பேசுகிறவர்களையும் பெற்றிருப்போம்.

(3) தேவையற்ற விதத்திலும், ஞானமற்ற விதத்ததிலும், நாம் நம்மை அபாயத்திற்குள் ஆக்கிக்கொண்டு, நம்மைப் பாதுகாக்கும்படிக்கு அற்புதமாய்க் கர்த்தர் இடைப்படுவார் என்று எதிர்ப்பார்க்கக்கூடாது எனும் பாடத்தை நமது கர்த்தருடைய மாதிரியிலிருந்து நாம் பெற்றுக்கொள்கின்றோம். நாம் சத்தியத்தை மறுதலித்து விடலாமெனச் சிந்திக்கவும் கூடாது, அதேசமயம் நம்முடைய ஜீவன்களைப் பாதுகாப்பதற்கான கடமையையும் நாம் கைவிட்டுவிடலாம் எனக் கருதவும் கூடாது; அதாவது கர்த்தரைப் போன்று காணப்பட வேண்டும் .சரியான மற்றும் ஏற்றவேளை வந்தபோது, நமது கர்த்தர் பண்டிகைக்குப் போனார் என்றும், பயமில்லாமலும், தைரியத்துடனும் பேசினார் என்றும் நாம் பார்க்கின்றோம். ஆகவே ஜீவனைப் பாதுகாப்பதில் எச்சரிக்கையாய் நாம் இருப்பது என்பது, பயத்தின் விளைவினாலோ, தெய்வீக வழிநடத்துதலின் மீது நம்பிக்கையின்மையினாலோ, நமது கடமையை நிறைவேற்றுவதில் தைரியமின்மையினாலோ இராமல், மாறாக முடிந்தமட்டும் தெய்வீகச் சித்தத்துடன் ஒத்துழைக்க விரும்பும் எச்சரிக்கையாகவும், கவனமாகவும் மாத்திரமே காணப்படுகின்றது.

தம்மைக் கொன்று போடும்படியான பரிசேயரின் மனநிலையை நமது கர்த்தர் அறிந்திருந்தார். இந்தப் பண்டிகையின் காலங்களில் எருசலேம், விருந்தாளிகளால் குவிந்துக் காணப்படும்போதும், அதுவும் பல ஆயிரங்கள் கலிலேயர்களாக இருக்கும் போதும் மற்றும் கர்த்தருடைய நண்பர்களும், தம்முடைய சீஷர்களாகிய கலிலேயர்களின் நண்பர்களும் காணப்படும் போதும், தமக்கு விரோதமாகச் செயல்படும் விஷயத்தில், பரிசேயர்கள் அதிகமாய்த் தயங்குவார்கள் என்றும் கர்த்தர் அறிந்திருந்தார். பண்டிகையின் ஆரம்ப நாட்களில், புனித பயணம் மேற்கொண்டவர்களுடைய வருகையின் காரணமாக நிகழும் சச்சரவுகளின் வேளையில் தம்மைக் கைதுச்செய்வதற்கும், அதிகாரிகள் மத்தியில் சில ஏற்பாடுகள் போய்க் கொண்டிருப்பதையும் அவர் அறிந்திருக்கக் கூடும். கர்த்தர் சூழ்நிலைக் குறித்த தம்முடைய மேம்பட்ட அறிவின்படி, ஜனங்கள் அனைவரும்

எருசலேமுக்குப் போவது வரையிலும் தாம் செல்லாமல் இருந்து, பின்னர் போதனை, அற்புதங்கள் முதலியவைகள் எதையும் செய்யாமல், அமைதியாகப் பண்டிகைக்குப் போனார்.

பண்டிகை வாரத்தின் நடுவில், அவர் ஆலயத்தில் ஜனங்களுக்குப் போதிப்பவராகக் காணப்பட்டார். பண்டிகையின் ஆரம்ப நாட்களில், அவருடைய சத்துருக்கள் அவரைத் தேடியும் அவர் வழக்கம்போல் வராமல் இருப்பதைக் குறித்து ஆச்சரியமடைந்தனர்; ஆனால் இப்பொழுது அவர் வெளியரங்கமாகவும், தைரியமாகவும், போதிப்பதையும் கண்டார்கள்; ஆனால் அவர்மேல் கைப்போடாமல் இருந்தனர், காரணம் அவர்கள் ஜனங்களினிமித்தம் பயந்திருந்தனர்; அவர் தங்களைப் போல் உறுதியற்ற நிலையில் இல்லாமல், உறுதியுடன், "அதிகாரமுடையவராய் ஜனங்களுக்குப்" போதிப்பதை ஜனங்கள் அநேகம் பேர் உணர்ந்தவர்களாக, அவருடைய போதனைக்கு ஆதரவு கொடுக்கின்றனர் என்பதால் பரிசேயர்கள் அஞ்சினர். ஜனங்களில் அநேகர் கவரப்பட்டுள்ளனர் என்பதும், இயேசு செய்துள்ளதைக் காட்டிலும், மேசியா வரும்போது மாபெரும் அற்புதங்கள் செய்யப்படுமோ என ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டதும், இயேசு வெளியரங்கமாய்ப் பேசிக்கொண்டிருப்பதும், அதிகாரிகள் அவரைக் குறுக்கிடாததுமான காரியங்கள், "இவர் கிறிஸ்துதான் என்று அதிகாரிகள் நிச்சயமாக அறிந்திருக்கிறார்களோ?" என்று கேட்பதற்குச் சிலரை வழிநடத்தினது.

தங்களது துணிவின்மையானது உண்மையில், தாங்கள் பகைக்கும் இயேசுவை அபிவிருத்திச் செய்வதைக் கண்டு, அதிகாரிகள் அவரைப் பிடித்துக் கொண்டுவரும்படிக்குச் சேவகரை அனுப்பிவைத்தார்கள்; இந்தச் சேவகர்களோ, அவருடைய உதடுகளிலிருந்து தேவதூஷணமான (அ) குழப்பம் ஏற்படுத்துவதற்கு ஏதுவான (அ) கலகத்திற்கு ஏதுவான ஏதாகிலும் வார்த்தைகள் வருவதைக் கேட்க வேண்டும் என்று எண்ணினார்கள், இல்லையேல் அவரைக் கைதுச்செய்யும் விஷயத்தில் சேவகர்கள் ஜனங்களுடைய கண்களுக்கு முன்னதாக குற்றம் புரிந்தவர்களாய்க் காணப்பட்டு விடுவார்கள்; ஆகவே அவரைக் கவனிக்கும்படிக்குக் காத்திருந்தனர். "அவருடைய வாயினின்று புறப்பட்டு வந்த கிருபையான வார்த்தைகளினால்" சேவகர்கள் கவரப்பட்டவர்கள். ஆதலால் இயேசுவைக் கைதுச்செய்யாமல், அதிகாரிகளிடத்திற்குத் திரும்பிப்போய், "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்று கூறினார்கள். இயேசு மேசியாவோ என்ற சந்தேகம் கொண்டிருப்பினும், அவர் தேவனால் அனுப்பப்பட்ட போதகர் என்று இருதயத்தில் நம்பிக்கைக்கொண்டிருந்த நிக்கொதேமு, ஆலோசனைச் சங்கத்தாரில் ஒருவராக இருந்தப்படியினால், தனது சத்தத்தை உயர்த்தி, அதிகாரிகளுடன் நட்பு முறையில் வாதிடத்தக்கதாக, அவர்களை நோக்கி: ஒரு மனுஷன் சொல்லுவதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா என்றான் (யோவான் 7:51). நீதிக்கான இந்த வேண்டுதலுக்கும் கூட, "நீரும் கலிலேயனோ?" என்ற ஏளனப் பேச்சுப் பேசப்பட்டது. அவர்களுடைய கொலை பாதக முயற்சியில் அவர்கள் தோற்றதன் காரணமாகக் கோபத்துடன் கலைந்துப் போனார்கள்.

இது கர்த்தருடைய அடிச்சுவட்டைப் பின்தொடரும் அடியார்கள் அனைவரின் விஷயத்திலும் முடிந்தமட்டும் காணப்பட வேண்டும்; அவர்களுடைய வார்த்தைகள் கிருபை பொருந்தினதாகவும், தன்னடக்கமுடையதாகவும், சத்தியத்தின் மீதும், அதனை விரும்பி நாடும் அனைவர் மீதுமான அன்பினால் நிரம்பின இருதயத்தின் வழிந்தோடுதலாகவும் காணப்பட வேண்டும். அவர்களுடைய வார்த்தைகள் எப்பொழுதும் நீதி மற்றும் நியாயத்தின் வரம்புகளுக்கு உட்பட்டதாகவும், கண்டிப்பாக கர்த்தருடைய வார்த்தைகளுக்கு ஒத்துப்போவதாகவும் காணப்பட வேண்டும். இப்படியாகவே ஜீவனுள்ள நிருபங்களாகிய அவர்களுடைய பழக்கவழக்கங்களும், அவர்களுடைய நடத்தைகளும் காணப்பட வேண்டும்; இதனிமித்தமாக அவர்களுடைய சத்துருக்களும் ஆச்சரியமடைந்து, அவர்கள் இயேசுவுடன் இருந்தவர்கள் என்றும், அவர்கள் இயேசுவினால் போதிக்கப்பட்டவர்கள் என்றும் அறிந்துக்கொள்வார்கள்.

தமது சத்துருக்களுடைய கொலைபாதக திட்டங்களைக் குறித்து மனதில் கொண்டவராகவும், மற்றும் இந்தத் திட்டங்களானது மனுஷகுமாரன் பாடுபட்டு, மரணத்திலிருந்து எழுந்திருப்பார் என்பதை அவருக்கு நினைப்பூட்டுவதாகவும், தம்முடைய ஓட்டத்தின் முடிவு வருவதற்குக் கிட்டத்தட்ட ஆறு மாதங்களே இருக்கின்றது என்பதை அறிந்தவராகவும், நமது கர்த்தர், "இன்னும் கொஞ்சம் காலம் நான் உங்களுடனே இருந்து, பின்பு என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்" என்றார். இஸ்ரயேல் மேல் கடந்து வரும் எனத் தம்முடைய அப்போஸ்தலர்களிடம் அவர் பிற்பாடு மத்தேயு 24-ஆம் அதிகாரத்தில் முன்னுரைக்கும் உபத்திரவங்களையும், அவர் தம்முடைய இரண்டாம் வருகையில் தம்மை இஸ்ரயேலர்களுக்கு

மீண்டும் மேசியாவாக வெளிப்படுத்துவதற்கு முன்பு வரையிலும், இஸ்ரயேலர்கள் அநேக கஷ்டங்களைச் சகிக்க வேண்டும் என்பதையும் மனதில் கொண்டவராக, "நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்" என்று கூறினார். அக்காலம் தொடங்கி, உபத்திரவத்துடன் கடந்து வந்த 18 நூற்றாண்டுகளாக, யூதர்கள் மேசியாவைத் தேடிக்கொண்டிருந்தனர். காரணம் அப்போஸ்தலர் சொல்லுகிறது போன்று, "அவருடைய முதலாம் வருகையின் போது, அதாவது அவர்களுடைய சந்திப்பின் நாளில் கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்கள் தவிர, மற்றவர்கள் கடினப்பட்டு இருக்கின்றனர்." ஆகவேதான், நமது கர்த்தர், "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுங்காலம் வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள்" என்றும் கூறினார் (லூக்கா 13:35). "நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது. சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் உங்கள்நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்; தெரிந்துக்கொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே. ஆதலால், நீங்கள் முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம்பெற்றிருக்கிறதுபோல, அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும், பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள். எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார்" (ரோமர் 11:27-32).

தாம் போகிற இடத்திற்கு அவர்களால் வரமுடியாது என்று நமது கர்த்தர் கூறினபோது, அவர் ஏற்கெனவே இஸ்ரயேலின் கீழ்மட்ட வகுப்பார்களாகிய ஆயக்காரர்களுக்கும், பாவிகளுக்கும் பிரசங்கம் பண்ணிவருவது போல, அவர் இப்பொழுது பாலஸ்தீனியாவை நிரந்தரமாக விட்டுவிட்டு, கிரேக்கர்களாகிய புறஜாதிகள் மத்தியில் சிதறியிருக்கிறவர்களிடத்திற்குப் போய் உபதேசம் பண்ணப் போகின்றாரோ என்னவோ, அதாவது பாலஸ்தீனியாவில் உள்ள யூதர்களுடைய மொழியாகிய சிரியன் மொழியில் அல்லாமல், கிரேக்க மொழியில் உபதேசிக்கப் போகின்றாரோ என்னவோ என ஜனங்கள் யூகிக்க முயற்சித்தனர். இங்குத் "தொலைந்து" போனவர்கள் குறித்து, ஆங்கிலேய இஸ்ரயோர்கள் கொண்டிருக்கும் கோட்பாட்டின் தவறை நம்மால் பார்க்க முடியும். சிதறிக் காணப்பட்டிருந்த யூதர்கள், நமது கர்த்தருடைய நாட்களில் தொலைந்துப் போனவர்களாகக் கருதப்படவில்லை என்பது நிச்சயமே; மேலும் ஜனங்களுடைய இந்த வார்த்தைகள், "சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்கள்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்கு முழு இசைவுடனே காணப்படுகின்றது. இந்தக் கோத்திரங்கள் முற்றிலுமாக ஒன்றுபட்டு, கலந்துவிட்டபடியால், இவர்களது கோத்திரங்களின் வித்தியாசங்கள் தொலைந்துப் போய்விட்டது எனும் அர்த்தத்தில்தான் இந்தக் கோத்திரங்கள் தொலைந்துப் போய்விட்டனர்; இன்றும் உலகில் மிகச் சொற்பமான யூதர்கள் மாத்திரமே, தங்களது மூதாதையர் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்று அறிந்து வைத்துள்ளனர்.

"நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங்கூடாது" என்ற நமது கர்த்தருடைய வார்த்தையானது, வேறு ஒரு கண்ணோட்டத்தில் கவனிக்கப்படத்தக்கதொன்றாகும். அவர் ஓர் இராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகின்றார் என்றும், அந்த இராஜ்யத்திற்குள் அவர்களால் வரக்கூடாது என்றுமுள்ள அர்த்தத்தில் அவர் பேசவில்லை, மாறாக தாம் பரலோகம் செல்வதாகவும், பரலோகத்திற்கு அவர்களால் வரக்கூடாது எனும் அர்த்தத்தில்தான் பேசினார். இது அவர் பிற்பாடு யோவான் 8:21-29 வரையிலான வசனங்களில் பேசியுள்ள காரியங்களில் உறுதிபடுகின்றது.

ஆனால் அவிசுவாசமான யூதர்கள் மாத்திரம், பரலோகம் போக முடியாதவர்கள் அல்ல. ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு மற்றும் பரிசுத்த தீர்க்கத்தரிசிகள் அனைவரும் பரலோகம் செல்லவில்லை என்று வேதவாக்கியங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன (அப்போஸ்தலர் 2:34; எபிரெயர் 11:39, 40-ஆம் வசனங்களைப் பார்க்கவும்). மேலும் இதே வார்த்தைகள் நமது ஆண்டவரினால், தம்முடைய விசுவாசிகளாகிய பின்னடியார்களிடம் கூறப்படுகின்றது, "பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்" (யோவான் 13:33). கடந்த காலத்திலும் , தற்போதைய காலத்திலும் உள்ள விசுவாசிகளால் நமது கர்த்தரிடத்திற்குச் செல்ல முடியாத காரணத்தினால், கர்த்தருடைய வார்த்தையின் மூலமாக சரியாகப் போதிக்கப்பட்டிருக்கும் அனைவரும், அவருடைய திரும்பி வருதலுக்காக, அவருடைய இரண்டாம் வருகைக்காக, மகிமையிலும், இராஜ்யத்தின் வல்லமையிலும் உள்ள அவருடைய வருகைக்காக, யோவான் 14:3-ஆம்

வசனத்தின் வாக்குத்தத்தத்திற்கு ஏற்ப உண்மையில் எதிர்ப்பார்க்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர்.

நமக்கு முன்பாக சுவிசேஷத்தில் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையை, அநேகர் பார்க்கத் தவறிப்போய், இதற்குப் பதிலாக மாம்சீக இஸ்ரயேலர்களுடைய தவறான நம்பிக்கைகளாகிய, "முன்னோர்களின் பாரம்பரியத்தைத்" தவிர, இன்னமும் அஸ்திபாரமற்ற நம்பிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளனர்; அதாவது தாங்கள் மரிக்கும்போது தாங்கள் மரிக்காமல், அதுவரையில்லாத அளவுக்கு ஜீவனோடு இருப்பார்கள் என்ற நம்பிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர்; அதாவது தேவனுடைய வார்த்தைகள் ஒன்றுகூட ஆதரிக்காததும், தேவனுடைய வார்த்தைகளில் உள்ள நியாயமான விஷயங்களுக்கு எதிர்மாறாய்க் காணப்படும் நம்பிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர். "(கர்த்தர் தம்முடைய சம்பத்தைச் சேர்த்துக்கொள்வதற்கும், தம்முடைய உண்மையுள்ளவர்களை ஏற்றுக்கொள்வதற்கும் இரண்டாம் வருகையில் வருவார் என்ற) இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" (1 யோவான் 3:3). உண்மை சுவிசேஷத்தின் இந்த நம்பிக்கையைக் காட்டிலும், உண்மையுள்ளவர்களாய்க் காணப்படுவதற்குத் தூண்டும், மாபெரும் தூண்டுதல் எதுவும் இல்லை.

கூடாரப்பண்டிகையின் கடைசிநாள், எட்டாம் நாளாக இருக்கின்றது. பண்டிகையின் ஏழு நாட்களும், பலிச் செலுத்துதலுக்கென ஒதுக்கப்படுகின்றது; எழுபது காளைகள், பலிப்பீடத்தில் தகனிக்கப்படுகின்றன, மேலும் இது முழு உலகத்தின் சார்பாகப் பலிச்செலுத்தப்படுகின்றது எனப் புரிந்துக்கொள்ளப்படுகின்றது, ஆனால் எட்டாம் நாள், விசேஷமாக யூதர்களுக்குரிய நாளாக இருக்கின்றது; மேலும் இந்த எட்டாம் நாளானது, இந்த மகிழ்ச்சிகரமான நன்றி செலுத்துவதற்குரிய பண்டிகையிலேயே மிகவும் மகிழ்ச்சியான நாளாக இருக்கின்றது. இதைக் குறித்து **கெய்கீ** அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்...

"அந்த முழு வாரமும், முழுப்பரபரப்புடன் காணப்படுகின்றது; மாபெரும் பலிப்பீடமானது வழக்கமாக உள்ள காலை மற்றும் மாலைக்குரிய பலிகள், ஓய்வுநாளின் பலிகளோடு கூடக் காளை, ஆட்டுக்கடா மற்றும் ஆட்டுக்குட்டிகளின் தகன பலிகளுடன், சகல வகையான எண்ணற்ற தனிப்பட்ட பலிகளுடன் கூடப் புகை எழுப்பிக்கொண்டு காட்சியளிக்கும். எருசலேமுக்குள் காணப்படும் ஒவ்வொரு பகுதியும், பள்ளங்களும், சரிவான நிலப் பகுதிகளும், மரங்களின் கிளைகளினாலும், பேரீச்சின் ஓலைகளினாலும், பின்னப்பட்ட கூடாரங்களினால் நிரம்பிக் காட்சியளிக்கும்."

ஆனால் பிரதானமான நாள் என்று அழைக்கப்படும் பண்டிகையின் கடைசிநாளாகிய, விசேஷமான சந்தோஷத்திற்குரிய அந்நாளுக்கு விசேஷமான அம்சம் ஒன்று இருந்தது; அது தண்ணீர் வார்த்தல் பலியாகும்; மேலும் இந்த நாளில்தான், இந்தத் தண்ணீர் ஊற்றப்படுதல் தொடர்புடையதாக, நமது கர்த்தர் சத்தமிட்டு, "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்" என்று கூறினார். சமாரியா ஸ்திரீயுடன் கர்த்தர் பண்ணின தனிப்பட்ட உரையாடலில் சொன்னது போலவே, இங்கு ஜீவத்தண்ணீரைக் கொடுப்பவராகத் தம்மை முன்வைத்தார். அவரை ஏற்றுக்கொள்கின்ற அனைவருக்கும் அவர் ஜீவ ஊற்றாகவும், சத்தியத்தின் ஊற்றாகவும், புத்துணர்வின் ஊற்றாகவும் காணப்படுகின்றார். ஒவ்வொரு மனித இருதயத்திலும் தாகங்கள், ஏக்கத்துடன் கூடிய வாஞ்சைகள் காணப்படுகின்றன; மேலும் இன்பம் (அ) பிரபலம் (அ) ஐசுவரியம் எனும் பூமிக்குரிய ஊற்றுகளிலிருந்து, இந்த ஏக்கங்களைத் தணிக்க நாடியுள்ள அனைவரும், இந்தப் பூமிக்குரிய ஊற்றுகள் தங்களைத் திருப்திப்படுத்தவில்லை என்று உணர்ந்துள்ளனர்; ஆனால் ஜீவத்தண்ணீரை, சத்தியத்தை, கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொண்டுள்ளவர்கள் மாத்திரமே, உண்மையில் திருப்திப்பண்ணும் பங்கைப் பெற்றிருக்கின்றனர். கர்த்தாவே, இந்தத் தண்ணீரை எங்களுக்கு எப்பொழுதும் தருவீராக!

கூடாரபண்டிகையின் கடைசி நாளாகிய, பிரதானமான நாளைக் குறித்த ஒரு சுவாரசியமான பதிவை, திறமிக்க எழுத்தாளர் **எடல்செய்ம்** அவர்கள் பதிவு செய்துள்ளார்:-

"வழிபாட்டில் பங்குக்கொள்வதற்கென, விடியும் நேரத்தில் தங்களது "கூடாரங்களை" விட்டு, பண்டிகையின் கடைசி நாளாகிய, பிரதானமான நாளில் புறப்படும் எண்ணற்ற ஜனங்களில், ஒருவராக நாமும் காணப்படுகின்றோம் என வைத்துக்கொள்வோம். பிரயாணிகள் அனைவரும் விழா

வரிசையில் காணப்பட்டனர். ஒவ்வொருவனும் தனது வலது கரத்தில் ஆற்றலரிகளையும், பேரீச்சத்தின் ஓலைகளையும் தூக்கிச் செல்கின்றான். "முதல் நாளிலே அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும், பேரீச்சின் ஓலைகளையும், தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருங்கள்" (லேவி 23:40). ஒவ்வொருவனும் இடது கையில் எலுமிச்சை வகையைச் சேர்ந்த பாரடைஸ் ஆப்பிள் என இன்று அழைக்கப்படும் கனிகளைத் தூக்கிச் செல்கின்றான். இப்படியாகக் கைகளில் வைத்திருக்கும் விழா கூட்ட ஜனங்கள், மூன்று கூட்டமாகப் பிரிவர். இந்த மூன்றில், ஒரு கூட்டத்தார், இசையின் சத்தம் ஒலிக்கும்போது, ஆலயத்திலிருந்து ஊர்வலமாய்ப் புறப்படுகின்றனர். இவர்களுக்குப் பின்னாக மூன்று (log/pint) பின்ட் தண்ணீர் கொள்ளும் பொன்னினால் ஆன பெரிய பானையைச் சுமந்தவராக ஓர் ஆசாரியன் போவார். இவர்கள் ஆலயத்திற்குத் தெற்கேயுள்ள பள்ளத்தாக்கிலுள்ள சீலோவாம் குளத்திற்குப் போவார்கள். இந்தக் குளத்திலிருந்து ஆசாரியன் பொன்னினாலான பானையில் தண்ணீரை நிரப்பிக்கொண்டு, அதை ஜனங்களின் ஆரவார குரல்கள் மற்றும் பூரிகைகள் மற்றும் கைத்தாளங்களின் ஒலியின் மத்தியில் ஆலயத்திலுள்ள பிரகாரத்திற்குக்கொண்டு வருவார். இப்பண்டிகையில் களிகூருதல் மிகவும் பெரியதாகக் காணப்படுவதினால், இந்தப் பண்டிகைக்கும், இதிலிருந்து வேறுபட்ட மற்றப் பண்டிகைகளிலும் ஒருபோதும் கலந்துக்கொள்ளாதவர்களுக்கு, களிகூருதல் என்றால் என்ன என்பது தெரியாது என ரபிக்கள் கூறுவதுண்டு. அன்றாட காலை பலிச் செய்யும் பொருட்டு, தகன பலிச் செலுத்தப்படுவதற்கான துண்டுப்பாகங்கள் மாபெரும் பலிபீடத்தில் வைக்கையில், தண்ணீரண்டைக்குப் போன கூட்டம் திரும்பத்தக்கதாக, நேரம் சரியாய்க் கையாளப்படுகின்றது. பொன்னினாலான பானையிலுள்ள தண்ணீர், பலிப்பீடத்தின் மீது ஊற்றப்படுகின்றது. உடனடியாக சங்கீதம் 113 முதல் 118 அடங்கிய மாபெரும் (Hallel) வாழ்த்திப் புகழுதல், இசையுடன் கூட, மென்மையான குரலில் பாடப்படுகின்றது. இந்த விழாவின் காலை வழிபாடு முடியும்போது, அந்நாளுக்குரிய விசேஷமான பலிகளை ஆசாரியர்கள் ஆயத்தப்படுத்துகையில், வழிபாடுகளுக்கு கொஞ்சம் ஓய்வு கொடுக்கப்படுகின்றது. இந்தத் தருணத்தில் ஆலயம் முழுவதும் கேட்குமளவுக்குச் சத்தமாக இயேசுவின் குரல் தொனித்தது. அவர் அங்கு நடந்த வழிபாடுகளைக் குறுக்கிடவில்லை, காரணம் வழிபாடுகள் அப்பொழுதுதான் முடிந்தது; அவ்வழிபாட்டிற்கான அர்த்தத்தையே அவர் விளக்கினார்; அவர் அவ்வழிபாட்டினை நிறைவேற்றினார்.

**ஆமென்!**

---

# “மெய்யாகவே விடுதலையாவீர்கள்”

## யோவான் 8:12, 31-36

“ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்”
- யோவான் 8:36.

இப்பாடத்தில் நாம் பார்க்கப்போகிற கர்த்தருடைய சம்பாஷணையானது, கூடாரப்பண்டிகையின் பிரதான நாள் (அ) எட்டாம் நாளைத் தொடர்ந்த அடுத்த நாளில் நடந்தது என்று கருத்திற்கொள்ளப்படுகின்றது; இந்த ஒரு கருத்தானது, 8-ஆம் அதிகாரத்தின் 1, 2 - வசனங்கள் மற்றும் 7-ஆம் அதிகாரத்தின் கடைசி வசனத்தின் அடிப்படையிலும் கொடுக்கப்படுகின்றது. கூடாரப்பண்டிகையின் கடைசி நாளாக, எட்டாம் நாள் காணப்பட்ட போதிலும், பண்டிகையின் சந்தோஷம் நிறைவடைவதை ஜனங்கள் விரும்பாததினால், அடுத்த நாளிலும் சில விஷயங்கள் அனுசரிக்கப்படுகின்றது. இந்தச் சம்பாஷணையானது, எட்டாம் நாளினுடைய சம்பாஷணையில் ஒரு பாகம்தான் எனவும் ஒரு கண்ணோட்டம் காணப்படுகின்றது.

இந்தப் பண்டிகையின்போது, ஆலயத்தினுடைய பிரகாரத்தில் காணப்பட்ட இரண்டு மாபெரும் விளக்குகளின் அருகில்தான் இயேசு இவைகளைப் பேசினார் என்று கூறப்படுகின்றது (court of the women - ஸ்தீரிகளுக்கான பிரகாரம் - ஸ்தீரிகளுக்கும், புருஷர்களுக்கும் திறந்து வைக்கப்பட்டுள்ள ஆலயத்தின் பாகம்). இந்த விளக்குகள் அல்லது கொத்து விளக்குகள் அலங்கரிக்கப்பட்டதாயும், தங்கத்தினால் மெருகிடப்பட்டதாயும், 75 அடி உயரம் கொண்டதாயும் இருக்கின்றபடியினால், அவைகள் பண்டிகை வேளையில் மிகுந்த வெளிச்சத்தைப் பட்டணம் முழுவதிலும் வீசியது. இதுதான் இயேசுவை உலகத்தின் ஒளியாய், தாம் இருப்பதைப் பற்றிக்கொடுத்த சொற்பொழிவுக்கு ஆதாரமாக இருந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகின்றது; யூதர்களுடைய குறிப்பிட்ட ஒரு பண்டிகையின் போதுள்ள அனுசரிப்பைப் பார்த்தும், இயேசு இந்தச் சம்பாஷணைப் பண்ணியிருக்க வாய்ப்பு இருக்கின்றது. அந்த அனுசரிப்பு பற்றி **பக்ஸ்டோர்ப்** அவர்களால் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:-

“கூடாரப்பண்டிகையின் கடைசி நாளுக்கு, அடுத்த நாளாகிய ஒன்பதாம் நாள், அனுசரிப்புகள் நிறைந்த நாளாக, “நியாயப்பிரமாணத்திற்கான சந்தோஷப் பண்டிகை” என்று அழைக்கப்படுகின்றது; ஏனெனில், இந்த நாளில்தான் நியாயப்பிரமாணத்தின் கடைசி பாகம் வாசிக்கப்படுகின்றது; கடைசிக்கு முன்புள்ள பிரமாணத்தின் பாகங்களோ முன்பு வந்த ஓய்வு நாட்களில் வாசித்து முடித்திருக்க, கடைசி பாகம் ஒன்பதாம் நாளில் வாசிக்கப்படுகின்றது. இந்த ஒன்பதாம் நாளில், அறையிலிருந்து நியாயப்பிரமாணத்தின் புத்தகங்கள் அனைத்தும் வெளியே எடுக்கப்பட்டு, நீதிமொழிகள் 6:23-ஆம் வசனத்திலுள்ள, அதிலும் குறிப்பாக சங்கீதம் 119:105-ஆம் வசனத்திலுள்ள காரியங்களைத் தெரிவிக்கும் வண்ணமாக, புத்தகங்களினுடைய இடத்தில் மெழுகுத் திரிகளை வைப்பது யூதர்களுடைய வழக்கமாகும் **- Synag. Jud; c.xxii.**”

இச்செய்கை அடையாளப்படுத்துவது என்னவென்று பார்க்கும்போது, முதலாவது நியாயப்பிரமாணம் வெளிச்சமாக இருந்தது, மற்றும் இரண்டாவதாக, யூதருடைய நியாயப்பிரமாணத்தினுடைய இடத்தில், கடைசியில் மெய்யான ஒளியாகிய, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையின் சுவிசேஷமானது வரும் என்பதாகும். ஒன்றில் நியாயப்பிரமாண புத்தகங்களின் இடத்தில் வைக்கப்பட்ட மெழுகுத்திரிகள் அல்லது பிரகாரத்தில் வைக்கப்பட்ட இரண்டு மாபெரும் விளக்குகள், இல்லையேல் இரண்டுமே, நமது கர்த்தர் மனதில் பதியப்பண்ணும்படிக்குத் திட்டமிட்ட பாடத்திற்கு ஏற்றதும், போதுமானதுமான உதாரணங்களுமாய் இருக்கின்றது. முதல் அடையாளத்தின் கருத்து உலகம் இருளில் இருக்கின்றது; மற்றும் ஜீவனுக்கான ஒளி அவசியம் மற்றும் ஒளியில் நடப்பவன் இடறிவிழுவதில்லை என்பதாகும். மற்றொரு அடையாளத்தின் கருத்து, இறுதியில் அறியாமையின் திரை அகற்றப்படும் மற்றும் சத்தியத்தின் ஆவி உய்த்துணரப்படும் மற்றும் இப்படியாக மெய்யான ஒளியாகிய இயேசு, தெய்வீகக் குணம் மற்றும் பிரமாணம் மற்றும் நித்திய ஜீவனை அனுபவிப்பதற்குரிய நிபந்தனைகள் தொடர்புடைய காரியங்களில் உலகத்திலுள்ள ஒவ்வொரு மனுஷனையும் பிரகாசிப்பிக்கின்ற ஒளியாக இருப்பார் என்பதாகும்.

இன்னுமொரு கருத்து என்னவெனில், இந்தக் கூடாரப்பண்டிகையானது, கானானை நோக்கின இஸ்ரயேலின் வனாந்தர பிரயாணத்தின் காலத்தைக்குறிப்பதாய் இருக்க, இப்பண்டிகையின் மாபெரும் விளக்கானது/ஒளியானது, இஸ்ரயேலர்களை வனாந்தர பிரயாணத்தில் மாபெரும் ஒளியாக வழிநடத்தினதும், அவர்களை விரட்டின சத்துருக்களுக்கு மாபெரும் இருளின் மேகமாக காணப்பட்டதுமான அக்கினி மற்றும் மேகஸ்தம்பத்தை அநேகமாய்க் குறிக்கின்றதாய் இருக்கும். இக்கருத்து மற்றக் கருத்துக்களுக்கு முழு இசைவுடன் காணப்படுகின்றது; காரணம், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் பரம கானானை நோக்கி, சீன் வனாந்தரத்தின் வழியாகப் பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்றும், நமது கர்த்தரும், அவருடைய போதனைகளும் அவருடைய ஜனங்களுக்கு, அதாவது முழு விசுவாச வீட்டாருக்கும், அதிலும் விசேஷமாக பரம ஆலோசனைக்குக் கவனித்திருப்பவர்களாகவும், விழிப்புள்ளவர்களாகவும் இருப்பவர்களுக்கு வெளிச்சமாகவும், வழிகாட்டியாகவும் இருக்கின்றது என்றும் நாம் காண்கின்றோம்.

நம்முடைய அர்ப்பணிப்பு முதல் தொடங்கப்பெற்ற கிறிஸ்துவுடனான இந்த உறவானது, (அவர் உபதேசத்தில் நாம் நிலைத்திராவிட்டால்) நின்றுபோகிறதற்குக்கூட வாய்ப்புண்டு என்பது 31, 32-ஆம் வசனங்களின் வார்த்தைகளில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. தம்மை இரட்சகர் என்றும், தம் மூலமாக மாத்திரம் கிடைக்கக்கூடிய ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களையும் ஏற்றுக்கொள்பவர்கள் மாத்திரமே சீஷத்துவத்திற்குள் பிரவேசித்திருக்கின்றார்கள் என்றும் கர்த்தர் முன் வைக்கின்றார். இன்னுமாகச் சீஷத்துவம் என்பது, ஆதிக்கத்தைக்குறிப்பதில்லை; மாறாக ஒருவர் சீஷனாக மாறுவது என்பது, பூரணம் அடைவது வரையிலும், ஆண்டவருடைய அறிவுரைகளின் கீழ் ஒழுக்க ரீதியிலும், அறிவின் ரீதியிலும், கிறிஸ்துவுக்குள் பூரண புருஷருக்குரிய வளர்ச்சியை அடைவதற்கெனச் சீஷனாக ஆகியுள்ள கற்றுக்குட்டியாக இருப்பதைக்குறிக்கின்றது. இவ்விஷயத்தில் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்கள் அனைவரிடத்திலும், பூரணத்தை எதிர்ப்பார்க்கும் உலக ஜனங்களினாலும் மற்றும் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம் பண்ணும்போது, உடனடியாகவே தங்களுக்குள் பூரணம் ஏற்பட வேண்டுமென்று, வீணாய்க் கற்பனைப் பண்ணிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களினாலும் ஒரு மாபெரும் தவறு செய்யப்படுகின்றது; அதாவது, சில கிறிஸ்தவர்கள் தங்களிடத்தில் பாவம் இல்லையென்று வீணாய்க் கூறி பாவம் செய்கின்றனர், மேலும் இப்படிக் கூறுவதன் மூலம் தங்களுக்கு ஓர் இரட்சகர், ஒரு கிறிஸ்து தேவை இல்லையென்றும், தாங்கள் கடமைகளைச் செய்யத் தவறியதினாலும் ஏற்படும் கறைகளை மூடுவதற்கு அவருடைய புண்ணியத்தினுடைய பலன் தேவையில்லையென்றுமுள்ள அனுமானத்தைக் கொடுக்கின்றவர்களாக இருக்கின்றனர்.

நமது கர்த்தருடைய வார்த்தைகளில் முன்வைக்கப்பட்டுள்ள சரியான கருத்து என்னவெனில், பாவிகள் சீஷத்துவத்திற்கு அழைக்கப்படவில்லை, மாறாக மனம் திரும்புவதற்கும், தங்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக (நீதிமானாக்கப்படுவதற்காக) மீட்பரிடத்தில் விசுவாசம் வைப்பதற்கும்தான் அழைக்கப்படுகின்றனர்; ஆனால் இவை அனைத்தும் நீதிமான்களாக்கப்பட்ட மனுஷர்களாக இவர்கள் தங்களை, கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணிப்புப் பண்ணுவதன் மூலமாக, அவருடைய சீஷர்களாக ஆகுவதற்கே, அதாவது கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் ஆகுவதற்கே ஆகும்.

நாம் ஏன் இந்தப் பள்ளிக்கூடத்திற்குள் பிரவேசிக்கின்றோம்? அங்கு என்ன பாடங்களை நாம் கற்க இருக்கின்றோம்? என்ன காரணங்களுக்காக நாம் இந்தப் பாடங்களைக் கற்பதற்கும், இவைகளைக் கற்பதற்கென நம்மையே அர்ப்பணம் பண்ணுவதற்கு நாடுகின்றவர்களாக இருக்கின்றோம்?

கிறிஸ்து எனும் புதியதும், ஜீவனுக்குரியதுமான வழியில், பிதாவினுடைய கிருபையின் சிங்காசனத்தை அணுகும் நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகளுக்கான, பரம பிதாவின் அழைப்பே கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திற்குள் பிரவேசிப்பதற்கான தூண்டுதலாக அமைகின்றது; இப்படிப்பட்டவர்களுக்கு, "தேவனுடைய புத்திரர்களாகும்படிக்கான "பரம அழைப்பை" பிதா கொடுக்கின்றார்; "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோமர் 8:17).

இந்தக் கிறிஸ்துவின் பள்ளிக்கூடமானது, அன்பினால் இயக்கப்பட்டதும், பக்தியினால் தக்கவைக்கப்படுகிறதுமான சுயத்தைப் பலிச் செலுத்துதலுக்கான, சுயத்தை வெறுத்தலுக்கான பள்ளிக்கூடமாக இருக்கின்றது. கர்த்தருடைய சகோதரர்களென, கர்த்தரால்

ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்குப் போதிக்கும்படிக்குப் பிதாவினால் இப்பள்ளிக்கூடத்தில் நியமிக்கப்பட்டுள்ள மாபெரும் போதகராய் இருக்கும் கர்த்தர் கூட, இதே பள்ளியில், பிதாவின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ்க் கற்றுக்கொண்டவராய்க் காணப்படுகின்றார். "அவர் குமாரனாய் இருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானப் பின்பு (அவர் அழைக்கப்பட்ட மேன்மையான நிலையாகிய, திவ்விய சுபாவத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பின்பு) தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமானார்" (எபிரெயர் 5:8, 9).

நாம் அனைத்து விஷயங்களிலும் சோதித்துப் பார்க்கப்படுவது போன்று, "கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் இருக்கும் பிதாவின் ஒரே பேறானவரும்" அனைத்துக் கட்டங்களிலும் சோதித்துப் பார்க்கப்படுவதும் அவசியமாய் இருந்தது; அதாவது எதை இழந்தும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும் விஷயத்தில் அவருடைய கீழ்ப்படிதலும், மற்றும் மனுக்குலத்தினை மீட்பதற்கும், தூக்கிவிடுவதற்கும் பிதாவின் ஏற்பாட்டின்படி அனுப்பி வைக்கப்பட்ட கர்த்தர், இந்த மனுக்குலமாகிய தம்முடைய அயலானிடத்தில் கொண்டிருக்கும் அவரது அன்பும், முழுமையாய்ச் சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்படுவது அவசியமாய் இருந்தது. விழுந்துபோய், மீட்கப்பட்ட சந்ததியாரைச் சேர்ந்தவர்களும், அவருடன் உடன்சுதந்தரத்திற்கு அழைக்கப்பட்டுள்ளவர்களுமாகிய நாம், பிதாவினுடைய புத்திரர்களாகும்படிக்கு, அதாவது திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும்படிக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களுக்கென, பிதாவினால் ஏற்பாடு பண்ணப்பட்ட இப்பள்ளிக்கூடத்தில், பிதாவின் முழுமையான அங்கீகரிப்பிற்கு ஏற்ற கிறிஸ்துவின் சிந்தையை முழுமையாய்த் தரித்துக் கொள்ளும் நோக்கத்திற்காக போதிப்பையும், பயிற்சியையும் அடைவதும் எவ்வளவு அவசியமாய் இருக்கின்றது. நாம் பிதாவினுடைய குமாரனின் சாயலை அடைவதற்கும், இவ்வாறாக இராஜ்யத்தில் உடன் சுதந்தரர்களாக, "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில்" பங்கடைவதற்குமென, தேவனுடைய முன்தீர்மானத்தின்படி நாம் அனைவரும் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இதிலிருந்து, நாம் காண்கிறதென்னவெனில், விசுவாசத்தின் மூலமும், அர்ப்பணிப்பின் மூலமும் நாம் கர்த்தருடன் இணைந்துக்கொள்ளும்போது, நாம் தேர்ச்சியடைந்துவிட்டோம், சுதந்தரர்கள் ஆகிவிட்டோம் என்று நம்மைக் குறித்து அறிவிக்கின்றவர்களாய் இராமல், மாறாக, "தேவனை அன்புகூருகிறவர்களுக்கென்று அவர் வைத்துள்ளவைகளைச்" சுதந்தரித்துக்கொள்ள ஆயத்தப்படுவதற்கு விரும்புகின்ற மாணாக்கர்களாக, சீஷர்களாக இருப்பதாக நாம் நம்மைக் குறித்துப் பிரகடனப்படுத்துகின்றவர்களாகவே இருக்கின்றோம். இவ்விஷயம் தொடர்பான கருத்தைத் தெய்வீகப் போதனை என நாம் மனதில் வைத்துக்கொள்வோமானால், இது நாம் விரும்பாததைச் செய்கின்றவர்களாகவும், நாம் செய்ய வேண்டியதை நாம் செய்யாமல் விட்டுவிடுகிறவர்களாகவும், நம்முடைய மாம்சத்தில் பூரணம் இல்லை என்பதையும் நாம் காண்கையில், நமக்கு ஏற்பட வாய்ப்புள்ள சோர்வைத் தடுக்க உதவியாய் இருக்கும் (1 கொரிந்தியர் 2:9; ரோமர் 7:25).

இன்னுமாக மாம்சம், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திற்குள் பிரவேசிக்கவில்லை என்றும், மாம்சம், இராஜ்யத்திற்குரிய அவருடைய அறிவுரைகள் மற்றும் ஆயத்தப்படுதலின் கீழ் இல்லையென்றும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்; ஏனெனில் மாம்சமும், இரத்தமும், தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது (1 கொரிந்தியர் 15:50). ஆவிக்குரிய சுபாவத்தைப் பெற்றுக்கொள்வதற்குரிய தெய்வீக அழைப்பை நாம் ஏற்றுக்கொள்வது என்பது, எல்லா விதத்திலும் பூமிக்குரிய சுபாவத்தைத் துறந்துவிடுவதையும், "தேவனுடைய புத்திரர்களாக," புதிய சிருஷ்டிகளாக நாம் ஜெநிப்பிக்கப்படுவதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. "புதிய சிருஷ்டியே," புதிய மனமே, புதிய சித்தமே, கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் காணப்படுகின்றது, மேலும் இதுவே பூரணப்படுத்த வேண்டியுள்ளது, அதாவது தெய்வீகச் சித்தத்திற்கு முழு இசைவுடன் கொண்டுவரப்பட வேண்டியுள்ளது, அதாவது கர்த்தருடைய சாயலுக்கு ஒப்பாகக் கொண்டுவரப்பட வேண்டியுள்ளது. தெய்வீகப் பிரமாணத்துடன் முழுமையான இசைவான நிலைக்குள், நம்முடைய மாம்சத்தை ஒருபோதும் நம்மால் கொண்டுவர முடியாது, காரணம் அதன் சுதந்தரிக்கப்பட்டுள்ள அபூரணத் தன்மைகள் ஆகும். யார் ஒருவர் தன்னுடைய மாம்சத்தில் பூரணத்தை எதிர்ப்பார்க்கின்றாரோ மற்றும் மாம்சத்தில் பூரணம் வரும் என்று விசுவாசிக்கின்றாரோ, அவர் கிறிஸ்துவின் சாயலை என்றாவது அடைவதற்கும், முன் குறிக்கப்பட்ட வகுப்பாராகிய, "அவருடைய குமாரனுடைய சாயலை" அடையும் வகுப்பாரில் ஒருவராக ஆகுவதற்கு, குறைவாகவே வாய்ப்புக் காணப்படுகின்றது (ரோமர் 8:29).

புதிய மனமானது எந்தளவுக்குக் கிறிஸ்துவினுடைய மனதிற்கு ஒப்பாக வளர்ச்சியடைகின்றதோ, அவ்வளவாய் சரீரத்தை, அதன் பாவத் தூண்டுதல்களுடன் கட்டுப்படுத்துவதில், அதாவது மாம்சத்தின் சித்தத்தை மரித்த நிலையிலேயே வைத்துக்கொள்வதில் அதன் முயற்சியைத் தளர்த்தாது என்பதை நாம் சுட்டிக்காட்டி விளக்குவதற்கு அவசியமிராது. நிச்சயமாக தேவனுடைய ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரன் யாராலும், தன்னுடைய அழியக்கூடிய சரீரத்தில் பாவம் ஆளுகை செய்யத்தக்கதாக அனுமதிக்க முடியாது; ஒருவேளை ஏதேனும் அளவில் பாவம் அவனைக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்குமானால், அது துணிகரமாய் இருக்காது; மாறாக கண நேரமே இருக்கும்; அதாவது புதிய மனமானது/சிருஷ்டியானது, உயிரடைந்து எழும்பும் மாம்சத்தைக் கண்டு, அதைப் பரலோகக் கிருபையின் களஞ்சியமாகிய கிறிஸ்துவிடமிருந்து, தேவையானபொழுதெல்லாம் கிடைக்கும் என வாக்களிக்கப்பட்டுள்ள கிருபையையும், உதவியையும் அடைந்து, வெற்றியடைவது வரையிலும்தான் அப்பாவம் காணப்படும்.

இந்தக் கருத்தானது சரியான விதத்தில் புரிந்துக்கொள்ளப்படுமாயின், இது உண்மையான சீஷர்களுக்கு, தங்களுடைய நிலையைப் புரிந்துக்கொள்வதற்கும், தங்களுடைய இருதயங்களானது, பாவத்திற்கும், அநீதிக்கும் இசைவாய் இராமல், மாறாக நம்முடைய போதகருடைய போதனைகளுக்கும், கொள்கைகளுக்கும் முழு இசைவுடன் இருக்கின்றது என்றும், அவருடைய பார்வையில் பிரியமாயும், ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகவும் இருக்க தங்கள் இருதயங்கள் வாஞ்சிக்கின்றது என்றும் அவர்களால் உணரமுடிகிறது வரையிலும், ஒருவேளை அவர்கள் மாம்சத்தின் தவறில் விழுந்தாலும் முற்றிலுமாகச் சோர்ந்துபோகாமல் இருப்பதற்கும் உதவப்படுவார்கள். மேலும் இந்தச் சரியானக் கருத்தானது, உண்மையான சீஷர்கள் அனைவரும், தங்கள் மத்தியில் அதாவது, தங்களைப் போல இந்தப் பள்ளிக்கூடத்தில் சீஷர்களாக, மாணவர்களாக, மாம்சத்தில் அல்லாமல், தங்களது மனதினுடைய ஆவியில் புதிய சிருஷ்டிகளாக இருக்கும், "சகோதரர்களிடத்தில்" அன்பைக் காட்டுவதற்கும் உதவிடும். ஆகவே ஒவ்வொருவரும், உடன் சகோதரனுடைய மாம்சத்தில் அவனால் வெறுக்கப்பட்டு, எதிர்த்துப் போராடப்படுகின்ற குறைவுகளை நாம் பார்க்கும்போது, அதுவும் அச்சகோதரன், அவனுடைய இருதயமும், சித்தமும் கர்த்தருக்கும், அவருடைய அன்பின் பிரமாணத்திற்கும் இசைவாக இருக்கின்றது என்ற நிச்சயத்தையும், மற்றும் இந்தக் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொடுக்கப்படும் பாடங்களை அன்றாடம், அவன் கற்றுக்கொள்ள நாடுகின்றதாகவும், மாம்சத்தின் பெலவீனங்களுக்கு எதிராக, அவன் நல்லதொரு போராட்டம் போராட நாடுகின்றதாகவும் உள்ள நிச்சயத்தையும் நமக்குக் கொடுக்கும் பட்சத்தில், நாம் (அச்சகோதரனிடத்தில்) காணும் அத்தீமையானது, அச்சகோதரனுடைய சத்துருவே ஒழிய, அச்சகோதரனாகிய புதிய சிருஷ்டியினுடைய தீமைகள் அல்ல என்பதை நாம் ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

இது வேதவாக்கியங்களின் வெளிச்சத்தில் நடப்பதாகவும், இருளில் இடறிப்போகாத நிலையாகவும் கூறப்படுகின்றது, அதாவது புரிந்துக்கொண்டு, தெய்வீக ஏற்பாடுகளுக்கு இசைவாகச் செயல்படுவதாகும், அதாவது தேவன் காரியங்களைப் பார்க்கிற விதத்திலும், தம்முடைய கிருபையான வார்த்தைகளில் தெளிவாக முன்குறித்து வைத்துள்ள விதத்திலும், காரியங்களை நாம் பார்ப்பதாகும். எனினும் அன்பின், பொறுமையின், நீடிய பொறுமையின், சகோதர சிநேகத்தின் வெளிச்சத்தில், உலகப்பிரகாரமானவர்கள் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களைப் பார்க்க விரும்புவார்கள் (அ) பார்க்க முடியும் என்று நாம் எதிர்ப்பார்க்க வேண்டாம். மாறாக நம்முடைய எதிராளியானவன், "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்" உலகப்பிரகாரமானவர்களிடம், சுயநலம், தீய எண்ணம் முதலியவைகளுக்கான போர்வையாகக் கிறிஸ்துவின் நாமத்தையும், அன்பின் பிரமாணத்தையும் பயன்படுத்துகின்ற மாய்மாலக்காரர்களையே காண்பிக்கின்றார். மேலும் இந்த எதிராளியானவன் உலகத்தாருக்கும், மாய்மாலமான கிறிஸ்தவர்களுக்கும் மாத்திரமல்லாமல், விசேஷமாக உண்மையான சீஷர்களுக்கும், கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்திற்கான நிபந்தனைகளைத் தவறாய்க் காட்டுவதற்குத் தொடர்ந்து நாடுகின்றான். கர்த்தருடைய வார்த்தைக்கு நேர்மாறாக, சீஷர்கள் மாம்சத்தின்படியே நியாயந்தீர்க்கப்படுகின்றார்களே ஒழிய, ஆவியின்படி, புதிய மனதின்படியல்ல என்று உண்மையான சீஷர்களை நம்ப வைத்து, அவர்களைச் சோர்வடையப்பண்ணி, சரியானப் பாதையிலிருந்து விலகிப்போகத்தக்கதாகத் தொடர்ந்து நாடுகின்றான்.

"உத்தம சீஷர்களே," இந்த கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் தங்கள் ஓட்டத்தை முடித்து, தேர்ச்சிப் பெற்று, தங்களுடைய கர்த்தருடன் உடன்சுதந்தரர்களாகி, இறுதியில் பூமியின் குடிகள் அனைவருக்கும் போதிப்பதற்கும், ஆசீர்வாதம் வழங்குவதற்கும் அவரோடு உடன் துணையாளர்களாகக் காணப்படுபவர்களாக இருப்பார்கள்; ஆனால் பள்ளியில்

சேர்ந்துக்கொள்ளுவது என்பது, இந்தப் பலன்கள் அனைத்தையும் கொண்டுவருவதில்லை; நமது கர்த்தர் குறிப்பிட்டிருப்பதுபோல, பள்ளியில் நிலைத்திருப்பதினால் மாத்திரமே, அதாவது அவருடைய வழிநடத்துதலின் கீழ், அவருடைய சத்திய வார்த்தையினுடைய வழிநடத்துதலின் கீழ் உண்மையாயும், விடாமுயற்சியுடனும் நிலைத்திருப்பதினால் மாத்திரமே, இப்பள்ளியினுடைய பிரமாண்டமான நோக்கம் அடையப்பெறும். பிரயாணத்தின் போது, நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும், நாம் முன்னேறுகின்றோம் என்பதையும், நாம் அதிகமதிகமாய்ச் சத்தியத்தை அறிய வருகின்றோம் என்பதையும், சத்தியம் நம்மை அதிகமதிகமாய் விடுவிக்கின்றது என்பதையும், நாம் காண்பது/உணர்வது நமக்கான சிலாக்கியமாய் இருக்கின்றது. உடனடியாக அறிவு வரும் என்றோ, உடனடியாக விடுதலை வரும் என்றோ நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது.

சத்தியத்தின் வெளிச்சம், அதாவது தேவனுடைய வார்த்தையாகிய விளக்கினுடைய பொதுவான பலனானது, மூட நம்பிக்கையாகிய விலங்குகளைத் தகர்த்து, ஜனங்களைச் சுதந்தரம் ஆக்குவதாகும். ஆனால் கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்தில் சீஷர்களாய் இராதவர்களுக்கு, சத்தியத்தின் வெளிச்சம் உண்டுபண்ணும் பலனானது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இன்னும் வேறு சிலருக்குச் சுதந்தரமும், அறிவின் வெளிச்சமும், நாசத்தைக்கொண்டு வருவதாகவும் இருக்கின்றது, இன்னுமாக இறுமாப்பு அடைவதற்கும், இரக்கமற்றவர்களாய் இருப்பதற்கும், தற்பெருமை அடித்துக்கொள்வதற்கும், கர்வம்கொள்வதற்கும், சண்டைப்பண்ணுவதற்கும், அதிருப்திக்கொள்வதற்கும், சந்தோஷம் இல்லாமல் இருப்பதற்கும் நேராக வழி நடத்துகின்றது. இந்தப் பொல்லாப்பான விளைவுகளானது, சில விஷயங்களில் விடுதலை பெற்று, மற்றெல்லா விஷயங்களிலும் கட்டப்பட்டவர்களாகக் காணப்படுபவர்களிடத்திலேயே காணப்படுகின்றது; மேலும் இதுவே இன்றைய நாகரிக உலகிலும், பெயர்ச்சபையில் பெரும்பான்மையானவைகளிடத்திலும் வளர்ந்துக்கொண்டு வருகிறதும், பரவலாய்க் காணப்படுகிறதுமான நிலமையாக இருக்கின்றது.

ஆனால் மாபெரும் போதகருடைய வார்த்தைகளுக்குச் செவிசாய்த்து, அவருடைய மாணவர்களாகக் காணப்படத்தக்கதாக அனைத்து விஷயங்களிலும் தொடர்ந்து நிலைத்திருக்கும் உண்மையான சீஷர்கள், அறியாமை மற்றும் மூடநம்பிக்கையிலிருந்து மாத்திரம் விடுவிக்கப்படாமல், பாவத்திற்கு ஊழியம் செய்வதிலிருந்தும் விடுதலை அடைந்துள்ளனர்; மற்றும் அவர்களுடைய சுதந்தரிக்கப்பட்டுள்ள சொந்த பெலவீனங்கள், குறைகள் குறித்தும், தெய்வீக மனம் குறித்துமுள்ள சரியான உணர்ந்துக்கொள்ளுதலையும், அதாவது சத்தியத்தையும் பெற்றுள்ளனர். இதன் காரணமாக இவர்களுடைய சுதந்தரம் என்பது, இவர்களைப் பாதிப்பிற்குள்ளாக்குவதற்குப் பதிலாக ஆசீர்வதிக்கவே செய்கின்றதாய் இருக்கின்றது; பெருமை மற்றும் தற்பெருமை அடித்துக்கொள்ளும் தன்மைக்குப் பதிலாகத் தாழ்மையைக்கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது; கோபத்திற்குப் பதிலாகப் பொறுமையைக்கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது; சுயநலம் மற்றும் பகைக்குப் பதிலாக, பெருந்தன்மையையும், இரக்கத்தையும்கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது; கசப்பின் ஆவி மற்றும் அதிருப்திக்குப் பதிலாக சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது. உண்மைதான், குமாரனால் மாத்திரமே நம்மை மெய்யாக விடுவிக்க முடியும்.

எனினும் நம்முடைய விடுதலை என்பது, மாம்சத்தின் விடுதலையாய் இராமல், மாறாக இருதயத்தின், மனதின், சித்தத்தின், புதிய சுபாவத்தின் விடுதலையாக இருக்கின்றது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் நாம் இந்தப் பொக்கிஷங்களை மண்பாண்டங்களில் பெற்றிருப்பது வரையிலும், புதிய சிருஷ்டியானது மாம்சமாகிய பூரணமற்ற சரீரத்தை அதன் கருவியாகப் பயன்படுத்த வேண்டியது வரையிலும், இந்தச் சுதந்தரம் நிறைவானதாய்/முழுமையானதாய் இருப்பதில்லை. கிறிஸ்துவின் இந்தச் "சகோதரர்கள்," "உன்னதமானவரின் குமாரர்கள்," முதலாம் உயிர்த்தெழுதலில் தங்களது பங்கை அடையும்போதுதான் உண்மையில் விடுதலையடைந்தவர்களாய் இருப்பார்கள். "நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்" (சங்கீதம் 17:15).

பாவம் செய்கின்றவர்கள், பாவத்தின் ஊழியக்காரர்கள் என்றும், அவர்கள் விடுவிக்கப்படவில்லை என்றும் நமது கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம், சத்தியம் நமக்குள் இராது" (1 யோவான் 3:8; 1:8). மேற்கூறப்பட்ட ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பது போல் தோன்றும் வேதவாக்கியங்களை எப்படி நாம் இசைவாக்கிக்கொண்டு, ரோமர் 6:18-ஆம் வசனத்தின் வார்த்தைகளைப் புரிந்துக்கொள்ளலாம்?

நம்முடைய பதில் என்னவெனில், வேதவாக்கியங்கள் புதிய மனதின் பாவங்கள் என்றும் சுட்டிக்காட்டுவதில்லை மற்றும் நம்முடைய விழுந்துபோன மாம்சத்திற்கு, நீதியில் பூரணம் உண்டு என்றும் சொல்லவில்லை; இந்த இரண்டு உண்மைகளையும், இப்பாடத்தைப் படிக்கையில் நினைவில் கொள்ளப்பட வேண்டும். தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சிருஷ்டியை (இதன் மாம்சம் மரித்துவிட்டதாகக் கருதப்படுகின்றது) அடையாளப்படுத்தும் புதிய மனம் பாவம் செய்யாது, காரணம் அதனிடத்தில் பாவத்திற்கு எதிரான சத்தியத்தின் ஆவி, சத்தியம் எனும் விதை நடப்பட்டுள்ளது (யாக்கோபு 1:18). இந்தப் புதிய சிருஷ்டியானது, நீதிக்கு மிக இசைவுடன் காணப்பட்டுக் கர்த்தருடைய ஆவியினால், பரிசுத்தத்தின் ஆவியினால் மிகவும் ஊக்குவிக்கப்படுகின்றபடியால், புதிய சிருஷ்டி பரிசுத்தத்தில்தான் பிரியங்கொள்கின்றதே ஒழிய, பாவத்தில் அல்ல; மேலும் இவைகளெல்லாம் ஜெநிப்பிக்கப்பட்ட (அ) பரிசுத்த ஆவியின் ஜெநிப்பிக்கப்பட்ட நிலைமைகள் தொடர்ந்துக் காணப்படுவது வரையிலும்தான் காணப்படுகின்றது. "தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள எவனும் பாவஞ்செய்யான் (துணிகரமாய்ச் செய்யான், அதாவது பாவத்தை அங்கீகரிக்கமாட்டான் அல்லது பாவத்தில் சந்தோஷமும் அடையமாட்டான்), ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது." அதாவது அவனை ஜெநிப்பித்துள்ள சத்தியத்தின் ஆவி, சத்தியத்தின் பரிசுத்தமான வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; "பொல்லாங்கன் அவனைத் தொடான்" (1 யோவான் 3:9; 5:18).

எதுவரையிலும் இருதயமானது (மனமானது, சித்தமானது) பரிசுத்தமாகவும், தேவனுக்கும், நீதிக்கும் இசைவானதாகவும் இருக்கின்றதோ, அதாவது நம்மை ஜெநிப்பித்த வித்தாகிய, சத்தியத்தின் ஆவி, பரிசுத்தத்தின் ஆவியானது நம்மில் தொடர்ந்துத் தரித்திருப்பது வரையிலும், புதிய மனதினால் பாவத்தை அங்கீகரிக்க முடியாது மற்றும் அதை எதிர்க்க வேண்டும், மற்றும் அதை எதிர்க்கவும் செய்யும். நம்முடைய சொந்த விழுந்துபோன மாம்சத்தின் அங்கங்களுடனும், பெலவீனமான மனித சுபாவத்துடனும், அதன் ஏக்கங்கள் மற்றும் ஆசைகளுடனும் அநேக யுத்தங்கள் பண்ணப்பட்டாலும், மாம்சத்திலிருந்து வேறுபட்டது "புதிய சிருஷ்டி" ஆகும்; மற்றும் மாம்சத்தின் பூரணமற்ற தன்மைகளும், பெலவீனங்களும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய சிருஷ்டிக்குத் தரிக்கப்படாமல், மாறாக நமது கர்த்தருடைய மீட்பின் பலியினுடைய புண்ணியங்களின் கீழ் மூடி, மறைத்து வைக்கப்பட்டதாகவே கருதப்படுகின்றது.

விழுகையின் காரணமான பெலவீனங்களினாலும், தீமையின் நெருக்கடியினாலும், நாம் மாம்சத்தைக் கீழ்ப்படுத்துவதற்கு எவ்வளவுதான் பிரயாசங்கள் எடுத்துக்கொண்டாலும், நம்முடைய மாம்சமானது ஒருபோதும் தெய்வீகப் பிரமாணத்திற்குரிய அளவுகோலுக்கு/நியமத்திற்கு ஒப்ப வரமுடியாது; எனினும், "புதிய சிருஷ்டிகளாகிய" நமக்கு வேதவாக்கியத்தின் நிச்சயம் பின்வருமாறு காணப்படுகின்றது அதாவது, "மாம்சத்தின்படி நடவாமல் (நம்மால் முடிந்தமட்டும் தெய்வீக உதவியை நாடி, மாம்சத்தின் கவர்ச்சிகரமான செல்வாக்குகளை நாளுக்குநாள் எதிர்த்து) ஆவியின்படி நடக்கிற (நாம் அநேகமாக ஆவிக்கேற்ப முற்றிலுமாக நடக்கவில்லை என்றாலும் இறுதியில், பரம பிதாவினுடைய அன்பான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பான சாயல் என்று பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக, "புதிய சிருஷ்டிகளுக்குரிய" குணலட்சணத்தின் மகிமையான நிலைக்கு நம்முடைய மாபெரும் போதகருடைய கிருபையினாலும், உதவியினாலும் வரத்தக்கதாக நாம் ஆவியில் நடப்பதை நாளுக்கு நாள் தொடரும்) நம்மிடத்தில் (புதிய சிருஷ்டிகளிடத்தில்) நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்" (ரோமர் 8:4).

மாறாக ஒருவேளை இப்படியாக, "புதிய சிருஷ்டிகளாக" மாறியுள்ளவர்களில் எவரேனும் பாவத்தில் துணிகரமாகவும், விரும்பியும் ஈடுபட்டு, மாம்சத்திற்கு ஏற்றபடி வாழ்வாரானால் இது, அவரை ஜெநிப்பித்த சத்தியத்தின் விதையானது, அவருக்குள் அழிந்துப் போய்விட்டதற்கான உறுதியான அடையாளமாகும்; ஏனெனில் இந்த விதை அவருக்குள் எதுவரையிலும் தரித்திருக்கின்றதோ, அதுவரையிலும் அவரால் துணிகரமாய்ப் பாவம் செய்ய முடியாது (1 யோவான் 3:9).

பாவத்திற்கு அடிமைகளாக இருந்து, உண்மையில் விடுதலை அடையாமல், புத்திரத்துவத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் தற்கால சூழ்நிலைகளின் கீழ், ஒரு குறிப்பிட்ட வேளைவரையிலும் யுகத்திற்கடுத்த திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில் தெய்வீகத் திட்டத்தினுடைய ஊழியக்காரர்களாகப் பயன்படுத்தப்படுகின்றனர்; உதாரணத்திற்குச் சிலசமயம் தேவன், மனுதனுடைய கோபத்தையும், சாத்தானுடைய எதிர்ப்பையும் நன்மைக்கு ஏதுவாக மாற்றிப் பயன்படுத்துகின்றார்; ஆனால் பாவம் நித்திய காலமும் நிலைத்திருப்பதற்கும், அதற்கு அடிமைகளாக

இருப்பவர்கள் அப்படியே காணப்படுவதற்கும் தேவன் எந்த ஏற்பாடும் செய்யவில்லை. தேவனுடைய புத்திரர்கள் மாத்திரமே, ஜீவிப்பதற்குரிய சிலாக்கியத்தை இறுதியில் பெற்றிருப்பார்கள். இரண்டு யுகங்களில் புத்திரர்கள் இருப்பதை நாம் நினைவில்கொண்டு, மேற்கூறிய புத்திரர்களைக் குறித்துத் தவறாய்ப் புரிந்துக்கொள்ளாமல் இருப்போமாக. இரண்டு யுகங்களின் புத்திரர்கள் பின்வருமாறு:-

(1) இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய புத்திரர்கள், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் அவருடைய, "சகோதரர்களென" உடன் சுதந்தரத்துவத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் ஆவர்; இவர்கள் முதற்பேறானவருடைய மணவாட்டிகள் என்றும் அழைக்கப்படுகின்றனர்; இவர்கள் அனைத்தையும் சுதந்தரிக்கப் போகின்றனர். "இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்" (1 யோவான் 3:2). ஆவிக்குரிய சுபாவத்திற்குள் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளவர்களாகிய இந்தப் புத்திரர் வீட்டார், சீக்கிரத்தில் நிறைவடையப் போகின்றார்கள்; இவர்கள் நிறைவடைந்த பிற்பாடு, யாரும் இவ்வகுப்பாருக்குள் சேர்க்கப்பட முடியாது."

(2) சீக்கிரத்தில் இன்னொரு புத்திரர் வீட்டார் ஆரம்பிக்க இருக்கின்றனர். ஆயிரவருட யுகத்தின்போது, புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குக் கீழ்த் தேவனுடைய ஈவை ஏற்றுக்கொள்பவர்களாகிய உலகத்திற்கு நமது கர்த்தர் இயேசு பிதாவாக, ஜீவன் கொடுப்பவராக இருப்பார் என்று கூறப்பட்டுள்ளது. சபை முதலாம் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாக, முதல் பலன்களாக இருக்க, உலகம் பின்வரும் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாக இருப்பார்கள். ஆயிரவருட யுகத்தின்போது உயிர்ப்பிக்கப்பட்டு, யுகத்தின் முடிவில் புத்திரத்துவத்திற்குள் கொண்டுவரப்படும் இந்தக் கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய உலகத்தாரைக் குறித்து அப்போஸ்தலர் கூறுகையில், "சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று (மரணத்தினின்று) தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும்," அதாவது பாவம், மரணம், துக்கம், அழுகை, வலி முதலானவற்றிலிருந்து விடுதலை என்று குறிப்பிடுகின்றார். இவர்கள், தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்குமான பொதுவான சிலாக்கியங்கள் அனைத்தையும் சுதந்தரித்துக்கொள்வார்கள், மற்றும் இதோடுகூட மாபெரும் பாவநிவாரண பலி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட, பூமிக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்வார்கள் (ரோமர் 8:20-23).

இப்படியாக பூமியின் சீர்ப்பொருந்தப்பட்ட வகுப்பார், கிறிஸ்துவின் பிள்ளைகளாக இருப்பார்கள்; கிறிஸ்துவே இவர்களுடைய ஜீவனை விலைக்கொடுத்து வாங்கி, இவர்கள் ஆதாமுக்குள் இழந்துபோனதும், தம்முடைய சொந்த ஜீவனைக்கொடுத்து மீட்டுக்கொண்டதுமானதை இவர்களுக்குத் திரும்பக் கொடுத்திடுவார். ஆனால் அதற்கென்று இவர்கள் இறுதியில், யேகோவா தேவனைத் தங்கள் பிதாவாகவும், பிதா இவர்களை தமது பிள்ளைகளாகவும் கொண்டிருக்கமாட்டார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. இக்காரியம் தொடர்பான இஸ்ரயேலிலுள்ள நிழலான வழக்கமானது, காரியத்தைத் தெளிவுப்படுத்துகின்றது. உதாரணத்திற்கு அனைத்து இஸ்ரயேலர்களும் ஆபிரகாமின் பிள்ளைகள் என்றும், இஸ்ரயேலின் பிள்ளைகள் என்றும், யாக்கோபின் பிள்ளைகள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

ஆனால் நாம் பதிய வைக்க விரும்பும் மையக்கருத்து என்னவெனில், எக்காலக் கட்டத்திலும் தேவனால், தம்முடைய பிள்ளைகளென ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள் தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய மத்தியஸ்தர் மூலமாக மாத்திரமே பாவத்தின் கொடுமையினின்று விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும்; இப்படிப்பட்டவர்களே மெய்யாகவே விடுவிக்கப்படுகின்றனர் என்பதே ஆகும்.

**ஆமென்!**

---

R 2441

# "நல்ல மேய்ப்பன் - கிறிஸ்து"

## யோவான் 10:1-16

"நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்."- யோவான் 10:11

கிறிஸ்து உலகத்திற்கான ஒளியாக இருக்கத்தக்கதாக, "தேவனுடைய சிருஷ்டியின் ஆதியாக இருந்த அவர், "மாம்சமாக்கப்பட்டார்" என்ற விஷயத்தைச் சுவிசேஷகராகிய யோவான் நம்முடைய கவனத்திற்கு முதலாவதாகக்கொண்டு வருகின்றார்; அடுத்ததாக அவரைப் பசியுள்ளவர்களுக்கு ஆகாரம் வழங்குபவராக நமக்குக் காட்டுகின்றார்; அடுத்ததாக தாகமுள்ளவர்களுக்கு, ஜீவத்தண்ணீரை வழங்குபவராக, அவரை நமக்குக் காட்டுகின்றார்; அடுத்ததாக மனிதனுக்குரிய வேதனைகளைச் சொஸ்தப்படுத்துகிறவராகவும், மனிதனுடைய ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய தேவைகளை அளிப்பவராகவும் அவரை நமக்குக் காட்டுகின்றார்; அடுத்ததாக நமது புரிந்துக்கொள்ளுதலின் கண்களைத் திறப்பவராக அவரை நமக்குக் காட்டுகின்றார். இந்தப் பாடத்திலோ, சுவிசேஷகனாகிய யோவான், கிறிஸ்துவினுடைய பணியை இன்னொரு கோணத்தில், அதாவது அவரை நல்ல மேய்ப்பனாக, இப்பொழுது நமக்கு முன்வைக்கின்றார்.

கண்கள் திறக்கப்பட்ட மனுஷன், இயேசுவே தனக்குத் தெய்வீகத் தயவைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகையாக இருந்தார் என்று அறிக்கைப்பண்ணினதினிமித்தம், நியாயசாஸ்திரிகள் ஆத்திரமடைந்து, அம்மனுஷனை ஜெப ஆலயத்திலிருந்து புறம்பாக்கிப் போட்டப் பிற்பாடு, இந்த உவமை பேசப்படுகின்றது. நமது கர்த்தரால் பேசப்பட்ட இந்த உவமையானது, தவறாய் மேய்ப்பவர்களுக்குக் கடிந்துக்கொள்ளுதலாய் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. உண்மையான மேய்ப்பனை அடையாளம் கண்டுகொள்வதற்கும், அவரிடத்தில் வருவதற்கும், நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டுள்ள இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வதற்கும், பாவமான சிதறடிக்கப்பட்ட ஆடுகளாகிய இஸ்ரயேலுக்கு உதவி புரிய வேண்டியவர்களோ, மேய்ப்பனைக் கர்த்தருடைய ஆடுகள் அடையாளம் கண்டுகொள்வதைத் தவிர்ப்பதற்கு முயற்சிக்கின்றனர்; அதாவது தாங்களும் பிரவேசியாமல், மனுஷர்களையும் இராஜ்யத்தில் பிரவேசிக்கவிடாமல் தடைபண்ணுவதற்கு நாடுகின்றவர்களாய் இருக்கின்றனர் (மத்தேயு 23:13).

கர்த்தரை, மேய்ப்பன் என்றும், அவருடைய ஜனங்களை ஆடுகள் என்றும், கூறும் உதாரணமானது, வேதவாக்கியங்களில் பொதுவான/சகஜமான காரியமாக இருக்கின்றது; மேலும் இந்த உதாரணமானது, அவர்களுக்கிடையே காணப்படும் நம்பிக்கைக்குரிய நெருக்கமான உறவிற்குச் சரியாக பொருந்தவும் செய்கின்றது; ஆனால் இந்த அடையாளமானது, உலகத்தின் ஆவிக்கு, முற்றிலும் எதிர்மாறானதாக இருக்கின்றது. இந்த ஓர் அடையாளத்தில், சுபாவத்தின்படியான மனுஷனைக் கவருகின்ற எதுவும் இல்லை; சுபாவத்தின்படியான மனுஷன் தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகையில், அவன் தன்னை மற்றவர்கள் நரி போலும், சிங்கம் போலும், புலி போலும் அல்லது தீண்டினால் பட்சித்துப்போடும் வேறு ஏதாவது கடுமையான மிருகம் போலும் கருத விரும்புகின்றான். இவ்விஷயத்தை, மேலங்கியிலுள்ள மரபுரிமை சின்னங்களில் நாம் பார்க்கலாம்; மகா வல்லவர்களின் கேடகங்களில் பட்சிக்கும் பறவைகளின், பட்சிக்கும் மிருகங்களின் சித்திரங்கள் இருப்பதையும் பார்க்கலாம்; இந்த மிருகங்கள் அச்சுறுத்தலையும், மூர்க்கத்தனத்தையும் சுட்டிக்காட்டுபவைகளாகும். ஆனால் தேவன், தம்முடைய இராஜரிக குடும்பத்திற்கான சின்னத்தை வெளிப்படுத்துகையில், அவருடைய ஒரே பேறான குமாரன், தேவனுடைய ஆட்டுக்குட்டி என்றும், அவருடைய ஜனங்கள் அனைவரும் அவருடைய ஆடுகள் என்றும் அழைக்கின்றார்; இது சாந்தத்திற்கும், ஆபத்தற்ற தன்மைக்கும், கனிவிற்கும் சின்னங்களாய் இருக்கின்றது. "கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கின்றார்" என்பது அவருடைய ஜனங்களுக்கான சரியான உணர்வாகும் (சங்கீதம் 23:1).

பாலஸ்தீனியாவில் ஆடுகள் வளர்ப்பது என்பது, பெரிதளவில் காணப்பட்டது; எனினும் ஐரோப்பியா மற்றும் அமெரிக்காவிலுள்ள தற்கால முறைமைகளிலிருந்து, முற்றிலும் வேறுபட்டதான முறைகளிலேயே பாலஸ்தீனியாவில் ஆடுகள் வளர்க்கப்பட்டன. மந்தையினுடைய சொந்தக்காரர் அல்லது அவருடைய குமாரனே பொதுவாக மேய்க்கும் வேலையைச் செய்வார் (அ) சிலசமயம்

மந்தையை பெருக்குவதில் அக்கறை காட்டும் நபர் வேலையில் அமர்த்தப்படுகின்றார்; உதாரணத்திற்கு யாக்கோபும் இப்படியாகவே தன்னுடைய மாமனாகிய லாபானுடன் மேய்ப்பனாக இருந்தார். அக்காலங்களில், இன்றைய காலங்களைக் காட்டிலும் ஆடுகளுக்கும், அவைகளின் மேய்ப்பனுக்கும் இடையே இருந்த உறவு மிக வித்தியாசமாக, மிகவும் நம்பகரமாக இருந்தது. மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளுடன் நன்கு பழக்கம் ஏற்படுத்திக்கொண்டவனாக இருக்கின்றான்; இன்னும் அவைகளை அன்புச் செய்கின்றான்; அவைகளை ஆஸ்தியாகவும், லாபம் தருபவைகளாக மாத்திரம் அன்பு செய்யாமல், அவைகளை நண்பர்கள், துணைவர்கள் போன்று கருதி அன்புச் செய்கின்றான்; அவைகளுடனே அவன் பேசுகின்றான், அவைகளுக்கான நன்மைக்கடுத்த காரியங்களில் பராமரிப்புச் செலுத்துகின்றான். இந்த உவமையில் குறிப்பிடப்பட்ட விசேஷித்த அம்சங்கள், இன்று வரையிலும், கிழக்கத்திய நாடுகளிலுள்ள மந்தைகளில் பார்க்கலாம் என்று சுற்றுப் பிரயாணிகள் நமக்குத் தெரிவிக்கின்றனர்; அதாவது தன்னுடைய மந்தையிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட ஆடுகளின் பெயர்களையும் மேய்ப்பன் அறிவான் என்றும், ஒவ்வொரு ஆட்டிற்கும் பெயர் வைத்திருக்கின்றான் என்றும், ஆடுகள் தங்களுடைய மேய்ப்பனை அறிந்திருக்கும் என்றும், மேய்ப்பனுடைய சத்தத்தை உடனடியாக ஆடுகள் அடையாளம் கண்டுகொள்ளும் என்றும், அவைகளை ஏமாற்ற முடியாது என்றும் சுற்றுப் பிரயாணிகள் நமக்குத் தெரிவித்தனர். உவமையின் இந்த விநோதமான வார்த்தைகளைச் சிலர் எப்படிப் பரீட்சித்துப்பார்த்து, நிரூபித்துக்கொண்டார்கள் என்றும் நமக்குத் தெரிவித்தனர்: ஒரு குறிப்பிட்ட ஆட்டின் பெயரைச் சொல்லி ஆட்டை அழைக்கும்படி ஒருவர், மேய்ப்பனிடம் கேட்டுக்கொண்டார்; அதாவது ஆடு, மேய்ப்பனிடம் வருகின்றதா (அ) இல்லையா என்பதைப் பார்க்க, இப்படி மேய்ப்பன் ஆட்டின் பெயரை அழைக்கச் சொன்னார்; தொலைத்தூரத்தில் இருக்கும் ஓர் ஆட்டை மேய்ப்பன் அழைத்தான்; உடனடியாக அந்தக் குறிப்பிட்ட ஆடு, அது நின்ற இடத்தில், அதன் தலையை உயர்த்தி, மேய்ப்பனை நோக்கிப் பார்த்தது; பெயர் மீண்டுமாக அழைக்கப்பட்ட போதோ, அந்த ஆடு மந்தையின் ஊடே நடந்து முன்னேறி, அவனுடைய பாதங்களின் அருகே வந்து நின்றது; அது கீழ்ப்படிந்ததின் காரணமாக, அதன் தலை மெல்ல அன்பாய்த் தட்டிக்கொடுக்கப்பட்டது. இப்படியாக ஆடு ஒருமுறைதான் செய்யுமோ என்ற எண்ணத்தில், இப்பரீட்சை மீண்டும் மீண்டுமாக நடத்தப்பட்டது; ஆடு மீண்டும் மீண்டுமாக அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து மேய்ப்பனிடம் வந்தது. இன்னொரு பயணி, மேய்ப்பனுடைய குரலைக் கொடுத்து, ஆட்டைப் பெயர்ச் சொல்லி அழைத்தார்; ஆனால் ஆடு செவி சாய்க்கவேயில்லை. மேய்ப்பனுடைய வஸ்திரத்தில், தான் காணப்படாததினால்தான் தன்னுடைய சத்தத்திற்கு ஆடு செவிக்கொடுக்கவில்லை என்று அந்தப் பயணி எண்ணி, பயணியும், மேய்ப்பனும் ஒருவருக்கொருவர் உடையை மாற்றிக்கொண்டனர்; ஆனாலும் அந்நியனுடைய குரலுக்கு ஆடு செவிசாய்க்கவில்லை; பின்னர் மேய்ப்பன் ஆடுகளுக்குச் செவிகொடுத்தப் போதோ, அவன் அந்நியனுடைய உடைகளில் இருந்தபோதிலும், ஆடுகள் மேய்ப்பனுடைய சத்தத்தை அறிந்திருந்தபடியால், உடனடியாகச் செவிசாய்த்தன.

நமது கர்த்தர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு, நன்கு பரிச்சயமாய் இருந்த இந்த உண்மைகளைப் பயன்படுத்தி, கர்த்தருடைய ஜனங்களுடன், மாபெரும் மேய்ப்பனின் குமாரனாகிய, அவர்களின் மேய்ப்பனாகிய தமக்கு இருக்கும் உறவை விவரித்தார்; இன்னுமாக அவருடைய மந்தையாய் உண்மையில் இருப்பவர்கள் அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்பார்கள் என்றும், எதிராளியானவன் கூடுமானால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கத்தக்கதாக, ஒளியினுடைய தூதனுடைய வேஷத்தைத் தரித்து வந்தாலும் ஏமாற்றம் அடையார்கள் என்றும் சுட்டிக் காண்பிக்கின்றார். நாம் கர்த்தருடைய மந்தையின் உண்மையான அங்கத்தினராக வேண்டும் என்பதும், அவருடன் நெருக்கமாய்ப் பழக்கம் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதும், அவருடைய வார்த்தைகளை, அவருடைய சத்தத்தை அறிந்திருக்க வேண்டும் என்பதும், உத்தம சீஷர்களாய்க் காணப்பட வேண்டும் என்பதும்தான் முக்கியமான காரியமாய் இருக்கின்றது. இப்படியாகக் காணப்படுபவர்களையே, தம்முடைய தற்கால மந்தைக்காக கர்த்தர் நாடுகின்றார். தற்போதைய காலத்தில் அவருக்கு இரண்டு மந்தைகள் இருக்கவில்லை; அதாவது ஒரு மந்தை, அவருடைய சத்தத்தைக் கேட்டு, கீழ்ப்படிகின்றதாகவும், மற்றொரு மந்தை அவருடைய சத்தத்திற்குச் செவிச்சாய்க்காத மந்தைகளாகவும் அவருக்கு இல்லை. "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது." நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது (வசனம் 27) என்று கர்த்தர் கூறுகின்றார். வார்த்தையிலும், மாதிரியிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள கர்த்தருடையச் சத்தத்திற்குக் கீழ்ப்படிதலுடன், அவரைப் பின்பற்றாதவர்கள் அவருடைய மந்தையல்ல; இப்படிப்பட்டவர்கள் தற்கால சத்தியம் என்னும் புல்வெளிகளினிடத்திற்கும், அமர்ந்த தண்ணீரினிடத்திற்கும் வழி நடத்தப்படுகிறதில்லை; இவர்களுடைய சத்துருக்களுக்கு முன்பாக இவர்களுக்குப் பந்தி ஆயத்தப்படுத்தப்படவில்லை;

இவர்கள் கர்த்தருடைய வீட்டில் நீடித்து நிலைத்திருப்பதற்கு ஏதுவான தெய்வீக நன்மை மற்றும் கிருபை ஏற்படுத்தியுள்ள பாதையிலும் இல்லை (சங்கீதம் 23).

பிதாவாகிய தேவன் ஒரு நிழலான இராஜ்யத்தை அல்லது ஆட்டுத்தொழுவத்தை ஸ்தாபித்து, இஸ்ரயேல் தேசத்தை, தம்முடைய ஆடுகளாக ஏற்றுக்கொண்டார்; ஆனால் இவர்கள் தேசமாக வழிவிலகிப் போன ஆடுகளாகி, அவரை அறியாமல் போய்விட்டனர். இவர்களை நியாயப்பிரமாண உடன்படிக்கையினால் வேலியடைத்தார். இவர்கள் ஓர் இராஜா, ஓர் ஆளுநர் வேண்டும் என்று விரும்பினர்; தேவனும் இவர்களுடைய விருப்பத்தை அருளினார்; ஆனால் இந்த இராஜாக்களில் எவரும் உண்மையான மேய்ப்பனுமல்ல; இன்னுமாக இவர்களில் எவரும் ஆடுகளைத் தகுந்த பிரியமான நிலைக்கும் கொண்டு வரவில்லை. இவர்களெல்லோரும் (இராஜாக்களெல்லாம்) போன பிற்பாடு, அநேகர் வந்து தங்களை மேசியாவென அறிவித்துக்கொண்டு, இஸ்ரயேலை வழிநடத்துவதற்கான உரிமையைத் தவறாய்ச் சொந்தம் கொண்டாடினார்கள். இவர்கள் பொய் மேசியாக்களாக காணப்பட்டனர். ஆடுகளினுடைய நன்மைக்காக அல்லாமல், சுயநலமான நோக்கத்தினாலும், தன்னைத்தான் உயர்த்திக்கொள்ளும் நோக்கத்தினாலும், செல்வம் திரட்டும் நோக்கத்தினாலும், ஆடுகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நாடின இவர்களை நமது கர்த்தர் கள்வர்களும், திருடர்களும் என்கிறார். இவர்கள் வாசல் வழியாக அல்லாமல், வேறு வழிகளின் மூலமாய் ஏறி உள்ளே குதித்துக் கர்த்தருடைய ஆடுகளை வெளியே கொண்டுவருவதற்கு முயன்றனர்; இவர்கள் நியாயப்பிரமாணம் எனும் வேலியின் மேலேறி உள்ளே குதிப்பதன் மூலம் அல்லது மண்ணைத் தோண்டி உள்ளுக்குள்ளாக வந்து ஆடுகளிடம் நெருங்கி, வழிநடத்துவதற்கு முயன்றனர்; இப்படியாக இஸ்ரயேலில் பெரும் பகுதியானவர்கள் தொழுவத்திலிருந்து, வழித்தவறிப் போய்விட்டனர். சிலர் விக்கிரகங்களுக்கு நேராகவும், வேறு சிலர் வெறுமனே வனாந்தரத்தில் சுற்றித்திரிவதற்குமென வழிநடத்தப்பட்டனர்.

இதுவே நமது கர்த்தருடைய முதலாம் வருகையின்போது இருந்த சூழ்நிலைகள் ஆகும்; இஸ்ரயேலுடனான தேவனுடைய உடன்படிக்கையானது, தேசத்தைச் சுற்றிலும் மதில் சுவராக நின்றுகொண்டிருந்தது; ஆனால் வாசலோ, மோசேயின் நியாயப்பிரமாணமாகிய இஸ்ரயேலின் உடன்படிக்கையில் அடையாளப்படுத்தப்படும் நீதியினால் பூட்டப்பட்டிருந்தது. உள்செல்லுவதோ (அ) வெளியேறுதலோ இல்லாதிருந்தது; அனைவரும் நியாயப்பிரமாணத்தின் கைதிகளாய்க் காணப்பட்டனர்; ஜீவனுக்கான வழி அல்லது வாசலாகிய கிறிஸ்து பிற்பாடு வெளிப்படுத்தப்படுவார் என்ற நம்பிக்கையில் பூட்டப்பட்டிருந்தது; இதற்கிடையில் வாசலானது பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்களால், வைராக்கியமாய்ப் பாதுகாக்கப்பட்டு வந்தபொழுதிலும், ஆட்டுத்தொழுவத்தைச் சூறையாடும் வேலையை, சாத்தானின் ஊழியக்காரர்களாகிய கள்வர்களும், திருடர்களும் செய்துகொண்டு வருகின்றனர் என்ற உண்மையானது, முற்றிலுமாய் மறக்கப்பட்டுவிட்டது. (யோவான் 10:1, 2, 7, 9; கலாத்தியர் 3:24; யோவான் 14:6; சகரியா 9:9-12).

நமது கர்த்தர் இயேசுவுங்கூட தம்முடைய ஜீவனை இழக்காமல், தொழுவத்தைத் திறப்பதற்கும், ஆடுகளைப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கும் சட்டப்படி முடியாது. இதுவே மாபெரும் மேய்ப்பனாகிய, பிதாவின் நோக்கமாய் இருக்கின்றது; மேலும் இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில்தான், கிறிஸ்து தம்முடைய ஜனங்களுக்குக் கொடுக்கும் விடுதலையை ஆடுகள் அடைவதற்கு முன்பாக, ஆடுகள், நியாயப்பிரமாணத்தினுடைய ஆதிக்கத்தின் கீழினின்று, தம்முடைய (நியமிக்கப்பட்ட மேய்ப்பனாகிய) குமாரன் மூலம் மீட்கப்படுவதற்காக, ஆடுகளை நியாயப்பிரமாணத்தின் கீழ் அடைத்து வைத்தார். இதுவே நல்ல மேய்ப்பனால், ஆடுகளுக்காக செய்த முதல் வேலையாகும்; அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த காரியமானது, அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில், அதாவது மரணம் வரையிலும் தம்மை முழுமையாய் அர்ப்பணித்தக் காரியத்தை, ஞானஸ்நானம் எடுத்ததன் மூலம் அடையாளப்படுத்திக் காட்டினது முதலே ஆரம்பித்துவிட்டது. இப்படியாக ஆரம்பிக்கப்பட்டதும், தொடர்ந்து நிறைவேற்றப்பட்டதும், கல்வாரியில் பிற்பாடு நிறைவேற்றப்படப் போகின்றதுமான இந்தப் பலியைக் கருத்தில் கொண்டவராகவே, நமது மீட்பர், தம்மை ஆடுகளுக்காக தம்முடைய ஜீவனைக்கொடுக்கும் நல்ல மேய்ப்பனாக அறிவித்தார்.

நமது கர்த்தருடைய மரணமானது, இஸ்ரயேலை, நியாயப்பிரமாணத்தின் கீழான சாபத்தினின்று (தீர்ப்பினின்று) விடுவித்தது என்று அப்போஸ்தலர் கூறுகின்றார்; வாசலைக் காக்கும் காவல்காரன், ஆட்டுத்தொழுவத்தைத் திறந்துவிடத்தக்கதாக மாத்திரமல்லாமல், உண்மையான மேய்ப்பன் ஆடுகளைப் புல்வெளிக்கு நடத்துவதற்கும், ஆடுகள், அவருடைய ஆடுகளாக, அவரைப் பின்சென்று, முழுமையான சுதந்தரத்துடன் உள்ளும், புறம்பேயும் செல்வதற்கும் ஏதுவாக,

உண்மையான மேய்ப்பன் ஆடுகளின் மீது அதிகாரத்தையும், ஆடுகளைத் தமக்குச் சொந்தமாக அடையத்தக்கதாகவும், அவரது மரணமானது நியாயப்பிரமாணத்தைத் திருப்திப்படுத்திற்று. எனினும் அநேக உண்மை ஆடுகள் தொழுவத்திலிருந்து வெளியேறி, பாவம் எனும் வனாந்தரத்தில் தொலைந்துப் போய்விட்டன என்று நமது கர்த்தர் சாட்சிப் பகர்ந்தார். இப்படிப்பட்டவர்களையும் மற்றும் தொழுவத்தில் இருக்கும் மீதியானவர்களையும் அழைப்பதே அவருடைய ஊழியமாக இருந்தது; அதாவது ஆயக்காரர்களையும், பாவிகளையும் மற்றும் தேவனை நெருங்கி வாழ்வதற்கு முயன்றுகொண்டிருப்பவர்களையும் (தொழுவத்தில் இருக்கும் மீதியானவர்களை) அழைப்பதே அவருடைய ஊழியமாக இருந்தது.

இவ்வாறாக உண்மையான மேய்ப்பன், தம்முடைய உண்மையான ஆடுகளின் மீது தமது அக்கறையைக் காண்பித்தார்; ஊனமுள்ளதும், பெலவீனமானதும், வாடி வதங்கி நலிந்துப் போனதுமான ஆடுகளாகிய தம்முடைய உண்மையான ஆடுகளின் மீது, தமது கவனத்தைச் செலுத்தினார். அவர் பாவிகளை மனந்திரும்பும்படி அழைத்தார்; மேலும் உண்மையான ஆடுகள், நியாப்பிரமாணத்தின் கீழ்த் தங்களுக்கிருந்த இயலாமைகளை உணர்ந்து, அவருக்குச் செவிச்சாய்த்து, மேய்ப்பனாகவும், தங்களின் ஆத்துமாக்களுக்குக் கண்காணியாகவும் இருந்த அவரிடத்திற்கு வந்தனர். ஆனால் மந்தையிலுள்ள அநேகம் ஆடுகள், உண்மையான ஆட்டிற்கான நிலையிலிருந்து மிகவும் தொலைவில் கடந்துப் போய்விட்டபடியினால், அவருடைய மந்தைக்கான நியமிக்கப்பட்ட எண்ணிக்கையை நிறைவு செய்யத்தக்கதாக, அவருடைய சத்தத்தைக் கேட்டவர்கள் போதுமானவர்களாக இல்லாததினால், இந்த நல்ல மேய்ப்பன், இந்தச் சுவிசேஷ யுகத்தில், தம்முடைய குரலை உயர்த்தி (தம்முடைய சரீரத்தின் அங்கங்கள் வாயிலாக பேசுவதன் மூலம்) புறஜாதிகள் மத்தியிலிருந்து, ஆடுகளை அழைத்துள்ளார்; முன்தீர்மானிக்கப்பட்ட அந்த எண்ணிக்கைக்குப் போதுமானவர்கள் செவிக்கொடுப்பார்கள்.

இந்தத் தற்காலத்தில் அழைக்கப்படும் அழைப்பானது, பொதுவான ஒன்றாய் இராமல் மாறாக, "அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்ச் சொல்லிக் கூப்பிடுகிறான்" என்று வேதவாக்கியங்களில் காணப்படுகிறபடி, அது ஒரு விசேஷமான அழைப்பாய் இருக்கின்றது. "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்." ஆடுகள் அவருடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து, அவருக்குப் பின்செல்லுவதன் மூலமாக, ஆடுகள் அவருடைய மந்தைகளாக தங்களுக்கு இருக்கும் உறவை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இப்பொழுது அழைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறதும், இறுதியில் தங்கள் அழைப்பையும் தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகிறதுமான மந்தை மாத்திரமே, "சிறுமந்தையினராக" இருப்பார்கள் என்றும், இவர்களுக்கு அருளும் தொழுவமானது விசேஷமானது என்றும், அது இராஜ்யம் என்றும் வேதவாக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன. "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார் (லூக்கா 12:32).

இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலும், கர்த்தர் இந்த வகுப்பாரைப் பராமரித்துக்கொண்டு வருகின்றார்; இவர்கள் மற்றவர்களின் பார்வையில் கடுமையான சோதனைகள், சிட்சைகள், பாடுகளுக்குள் கடந்துப்போனவர்களாகக் காணப்பட்டாலும், இவர்களைக் கர்த்தர் விசேஷமாய் வழிநடத்தியுள்ளார், போஷித்துள்ளார் மற்றும் ஆசீர்வதித்துள்ளார். ஆம் நம்முடைய மேய்ப்பன் அறிவித்துள்ள பிரகாரம், தேவபக்தியாய் நடக்கின்றவர்கள் அனைவரும் துன்புறுத்தப்படுவார்கள். ஆனால் இது விசேஷமாய்த் தெரிந்துக்கொள்ளப்பட்டுள்ள மந்தைக்கு, விசேஷமான சோதனை காலம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்தத் தொழுவத்தில் அல்லாத வேறே ஆடுகள், அதாவது இராஜ்யத்திற்கான அழைப்புப் பெறாத வேறே ஆடுகளும் தமக்கு இருக்கின்றது என்று மேய்ப்பன் கூறியுள்ளதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வேறே ஆடுகள் இன்னமும், பாவம் எனும் வனாந்தரத்தில் அலைந்துக்கொண்டுதான் இருக்கின்றன; ஆனால் ஆயிர வருட இராஜ்யம் சமீபித்து இருக்கின்றது; அப்பொழுது கர்த்தர் தம்முடைய சிதறடிக்கப்பட்ட ஆடுகளை ஒன்று கூட்டுவார்; அதாவது அனைவரும், தமக்கு இசைவாக, தம்முடைய மந்தையாகக்கொண்டுவரப்படத்தக்கதாக, சாதகமான சூழ்நிலைகளின் கீழ் நீதியையும், தேவனுடன் ஒப்புரவாகுதலையும் விரும்பி, நாடும் அனைவரையும் கர்த்தர் ஒன்றுகூட்டுவார். இந்த யுகத்திலுள்ள, "சிறுமந்தையினருக்கு," அதாவது, "இராஜ்யத்தின் சுதந்தரர்களுக்கு" மாத்திரமல்லாமல், தம்முடைய ஆடுகள் அனைத்திற்குமாக, நல்ல மேய்ப்பன் தம்முடைய ஜீவனை ஈடுபலியாகக் கொடுத்திட்டார். இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடே, கர்த்தருடைய பெரிய மந்தை கூட்டிச்சேர்க்கப்படும் (மத்தேயு 25:31, 32).

தெய்வீகத் திட்டத்தினுடைய மற்ற அநேக அம்சங்ளுக்குரிய திறவுகோலாகக் காணப்படும் இந்த உவமையினுடைய திறவுகோலுக்கான ஒரு பாகமானது, இராஜ்யத்தின் உடன்சுதந்தரராகும் பொருட்டு இப்பொழுது அழைக்கப்பட்டு, தெரிந்தெடுக்கப்படும் "சிறுமந்தையினர்" பலியாகிட வேண்டும் எனும் உண்மையில் அடங்கியுள்ளது; இராஜாவின் மகனாகிய மேய்ப்பன் தம்மைத் தேவனுடைய ஆட்டுக்குட்டியாகப் பலிச்செலுத்தினார்; மற்றும் அவர் நியாயப்பிரமாணத்தின் கீழ் அடைக்கப்பட்டவர்களுக்காக வாசலைத் திறந்துவிட்டதுமல்லாமல், அதே பலியினால், இனிமேல் அவர் கூட்டிச்சேர்க்கப் போகின்ற மற்ற ஆடுகளையுடைய ஒட்டுமொத்த மனுக்குலத்தையும் அவர் மீட்டுள்ளார்; இதுபோலவே இப்பொழுது அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கும், "சிறுமந்தையின்" ஆடுகளாகிய அனைவரும் தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவுடன் பாடுபட வேண்டும் மற்றும் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக புத்தியுள்ள ஆராதனையாக தங்களை, அனைவரும் ஒப்புக்கொடுக்க வேண்டும். "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம் நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (ரோமர் 12:1; 1 யோவான் 3:16).

இக்கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது நமது கர்த்தர் பிதாவின் ஆட்டுக்குட்டியாகவும், உலகத்திற்கான பாவநிவாரணபலியாகவும் இருப்பதினால், இயேசுவின் மந்தையினராகிய நாம், கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, நிறைவேற்றுபவர்களாய் இருப்போம் என்பது பார்க்கப்படலாம். "இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (கொலோசெயர் 1:24). இன்னுமாக இம்மந்தையில் உள்ளவர்கள், "மரணம் வரையிலும்" மேய்ப்பனைப் பின் தொடரும் விஷயத்தில் உண்மையுள்ளவர்களாய் இருந்தால், அவர்கள் மேய்ப்பனுடைய சரீரத்தின் அங்கங்களாகக் கருதப்படுவார்கள் என்று வேறு வேதவாக்கியங்கள் நமக்குக் காண்பிக்கின்றன. இவ்வாறாக முழுச் சுவிசேஷ யுகமும், கிறிஸ்துவுடன் பாடுபடுவதற்கும், அன்றாடம் மரிப்பதற்கும், சகோதர சகோதரிகளுக்காக ஜீவனை ஒப்புக்கொடுப்பதற்குமான காலமாகக் காணப்படுகின்றது; மேலும் இந்தப் பலியானது, இந்த யுகத்தின் முடிவில் நிறைவடையாத வரையிலும், புதிய உடன்படிக்கையானது மனுக்குலத்தின் முன்பாக வைக்கப்படவும் முடியாது, மாபெரும் மேய்ப்பனும், அதாவது தலை மற்றும் சரீரம் முழுமையடைந்திருக்காது. பின்னர் ஆவியும், மணவாட்டியும், "வா என்பார்கள்;" ஆனால் இப்பொழுது ஒருவனைப் பிதா இழுத்துக்கொள்ளாதது வரையிலும், அவன் "சிறுமந்தைக்குள்" வரமாட்டான்.

இராஜ்யத்தில் அவருடன் இணைந்திருக்கும்படிக்கு இப்பொழுது அழைக்கப்படும் அனைவரிடத்திலும், மந்தையின் மாபெரும் பிரதான மேய்ப்பனுடைய ஆவிக் காணப்பட வேண்டும். நல்ல மேய்ப்பன் தம்முடைய ஜீவனை மந்தைக்காகக் கொடுத்தது போன்று, இவர்கள் அனைவரும் கூடச் சத்தியத்திற்கான ஊழியத்தில், தங்களது ஜீவன்களைக் கொடுப்பார்கள். நல்ல மேய்ப்பன், தமக்கும், ஆடுகளினால் தமக்கும் எவ்வளவு ஆதாயம் கிடைக்கும் என்பதையும் பொருட்படுத்தாமல், ஆடுகளின் தேவைகளை நிறைவேற்றுவது போலவே, அவருடைய ஆவியையுடைய அனைவரின் விஷயத்திலும் காணப்படும்; இவர்கள் இழிவான ஆதாயத்திற்காகவோ, மனுஷர் மத்தியிலான கனத்திற்காகவோ, பூமிக்குரிய ஆதாயத்திற்காகவோ எவ்விதத்திலும், கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஊழியம் செய்யாமல், மாறாக தேவன் மீதான அன்பினாலும், சத்தியத்தின் மீதான அன்பினாலும், மந்தையாகிய சகோதர சகோதரிகளின் மீதான அன்பினாலுந்தான் ஊழியம் புரிகின்றனர்.

**ஆமென்!**

---

# தேவனைத் துதித்தலும், மனுஷனைச் சபித்தலும்

*"நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம்நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது." (யாக்கோபு 3:8-10)*

அப்போஸ்தலன் இருவகை ஞானம் இருப்பதாக, பரலோக வகையான ஞானமும், பூமிக்குரிய வகையான ஞானமும் இருக்கின்றது என்றும், இதைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் வேறுபாடறிந்து கொள்ள வேண்டும் என்றும் மற்றும் தாங்கள் பரலோக வகையான ஞானத்தினைப் பெற்றிருக்கத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். தங்களையே சபையாகக் கருதிக்கொள்கின்றவர்களும், உலக ஞானத்தின் அடிப்படையிலான நோக்கங்களினால் தங்களைச் சபையோடு இணைத்துக்கொண்டவர்களும், தாங்கள் விரும்புகின்றதும், தங்களுக்குச் சாதகமாக ஒருவேளை தங்களால் மாற்றிட முடிகின்றதுமான சில ஞானமும், நியாயமும் வேதவாக்கியங்களுடைய போதனைகளில் காணப்படுகின்றதென அடையாளம் கண்டுகொண்டவர்களுமான சிலர் சபையில் காணப்படுவார்கள் என்றே அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். இவர்கள் இறுமாப்படைவார்கள் என்றும், தங்கள் ஞானத்தைப் பகட்டாகக் காண்பித்துக்கொள்வார்கள் என்றும், அதினால் பெருமைக்கொள்வார்கள் என்றும், இவர்கள் சகோதர சிநேகம், தயவு, சாந்தம், பொறுமை, அன்பு ஆகிய கிறிஸ்தவ குணலட்சணங்களானது ஏற்புடையது என்று வெளிப்புறத்தில் ஒப்புக்கொண்டாலும், இவர்கள் தங்கள் இருதயங்களில் கசப்பான பொறாமைகளையும், போராட்டங்களையும் - அதாவது பெயரும், புகழும் பெற்றிடுவதற்கான போராட்டத்தினை - இவைகளை அதிகமாய்ப் பெற்றிருப்பவர்களாகக் காணப்படுவோரின் மீது பொறாமையினைக் கொண்டிருப்பார்கள் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

இத்தகையவர்கள் சகோதரரைச் சபிப்பதைத் (தீமை பேசுவதை, காயப்படுத்துவதை) தவிர்ப்பதற்குச் சிரமப்படுபவர்களாக, தவிர்ப்பதற்கு முடியாதவர்களாகக் காணப்படுவார்கள் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். இவை இவர்களுக்கு மிகவும் இயல்பான தன்மைகளாக இருப்பதினால், இதை இவர்களால் தவிர்க்க முடியாது; காரணம் இவர்கள் சுத்தமான இருதயங்களைப் பெற்றிருப்பதில்லை - மறுபடியும் புதுப்பிக்கப்பட்ட இருதயங்களை இவர்கள் பெற்றிருப்பதில்லை. இவர்களது இருதயங்களானது, மறுபடியும் புதுப்பிக்கப்பட்டிருப்பினும், நாய் தான் கக்கினதைத் தின்னவும், பன்றி சேற்றிலே புரளவும் திரும்பிடுவது போன்று திரும்பினவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். தங்கள் இருதயங்களில் பொறாமையான மற்றும் கசப்பான உணர்வுகளைப் பெற்றிருப்பவர்களுக்கான அப்போஸ்தலனுடைய அறிவுரையானது:- இவர்கள் பெருமையடித்துக்கொள்வதற்கோ அல்லது மகிமைப் பாராட்டிக்கொள்வதற்கோ எந்தக் காரணமும் இல்லை; மாறாக இவர்கள் இருதயத்தில் இத்தகைய தீமையான நிலைமையினைக் கொண்டிருப்பதால், தாங்கள் கிறிஸ்தவர்களே அல்ல என்று ஒப்புக்கொள்ள வேண்டும்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்ப் பேசுதலை நிறுத்திக்கொள்ள வேண்டும்; மாய்மாலமாய், போலியாய் நடிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும்; புதுப்பிக்கப்பட்ட இருதயங்களை உடையவர்கள் என்றும், கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் என்றும் தொடர்ந்து உரிமை பாராட்டுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

இவர்களது ஞானமானது, இவர்களது அறிவானது தேவனிடமிருந்து, பரிசுத்த ஆவியிடமிருந்து வருபவை அல்ல என்று அவர் தெளிவாய்க் கூறுகின்றார். "இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியம் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு" (யாக்கோபு 3:15, 16).

அப்போஸ்தலனுடைய கண்டனமானது, உத்தம இஸ்ரயேலனாகத் தன்னை அறிக்கைப்பண்ணிக் கொள்ளும் யாருக்கும் பொருந்துகின்றதாய் இருப்பினும், அவர் விசேஷமாய்ச் சபையில் போதகர்களாக, போதுமான ஞானம் இருப்பதாக அறிக்கைப்பண்ணுகிறவர்களுக்கு தனது வார்த்தைகளைக் குறிப்பாய்ப் பேசுகின்றார். இவரது வார்த்தைகளானது, சபைக்குப் பகிர்ந்துகொடுக்கப்பட்டதான பல்வேறு வரங்களைக் குறித்துப் பேசுகையில், அதிகமான அறிவுடையவர்களுக்குரிய அபாயங்களைச் சுட்டிக்காட்டும்

அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளையும் நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது மற்றும் யாக்கோபு அடிகளார் முன்வைத்ததான இந்தக் கொள்கையைச் சித்தரிக்கும் வண்ணமாக பவுலடிகளார் கூறுவதாவது:-

"நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கத்தரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கத்தரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்" (1 கொரிந்தியர் 13:1-8).

அறிவும், நாவன்மையும் மிகவும் முக்கியமான பரீட்சைகளாக இருப்பதில்லை என்றும், இதயத்தில் ஊடுருவி, ஜீவியத்தின் போக்கனைத்திலும் கடந்துவந்து, நம்முடைய அழிந்துபோகும் சரீரங்களை இயக்கி, செயல்படுத்தும் அன்பே, உண்மையான பரீட்சையாக - நம்முடைய திவ்விய உறவிற்கான மெய்யான நிரூபணமாக இருக்கின்றது என்றும் அப்போஸ்தலன் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றார். தேவனுடைய வரங்களைப் பெற்றிருப்பவர்கள் அன்பை ஒருவேளை இழந்திருந்தால், கிறிஸ்துவின் ஆவியினை ஒருவேளை இழந்திருந்தால் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருந்து "ஒன்றுமில்லாதவர்களாகிவிடுவார்கள்" என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார்; காரணம், "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (உரோமர் 8:9).

அப்போஸ்தலர்களிலேயே பிரதானமான இரண்டு பேரிடமிருந்து வரும் இந்தத் திவ்விய அறிவுரைகளைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் குறிப்பாய்க் கவனிப்பார்களானால் நலமாயிருக்கும் மற்றும் நாவன்மையோ, அறிவோ விலையேறப்பெற்றவைகளாய் இருப்பினும், இவை சகோதரர்கள் சரியான வழியில் காணப்படுகின்றார்கள் என்பதற்கோ, இவர்களது செல்வாக்கானது தீங்கு விளைவிக்கிறதாயிராமல், உதவிகரமாயிருக்கும் என்பதற்கோ நிரூபணங்களாய் இருக்குமெனக் கருதப்படக்கூடாது என்பதைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் நினைவில்கொள்வதும் நலமாயிருக்கும். சபைக்கான ஊழியக்காரர்களாக, பரிசுத்த காரியங்களில் ஊழியம் புரிபவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள் அனைவரிடத்திலும், முதலாவதாக அன்பின் ஆவியானது இயக்கும் அம்சமாய்க் காணப்படுகின்றதா என்று பார்க்கப்பட வேண்டும். அறிவும், திறமையும் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாம் சொல்லவரவில்லை, மாறாக இவைகள் இரண்டாம் நிலையிலேயே கருதப்பட வேண்டுமே ஒழிய, (பிரதான முக்கியத்துவமுடையதாய்க் கருதப்படும் வழக்கத்தின்படியாக இல்லாமல்) பிரதான முக்கியத்துவமுடையதாய்க் கருதப்படக்கூடாது. கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின பல்வேறு கூட்டத்தாருடைய ஆவிக்குரிய நலனுக்கடுத்த காரியங்களைப் பொறுப்பேற்கத்தக்கதாக, உங்கள் மத்தியிலுள்ள பரிசுத்த மனுஷர்களை, பரிசுத்த ஆவியினால் முழுமையாய் நிரம்பிக் காணப்படுபவர்களை நாடிடுங்கள். சபையின் ஊழியக்காரர்களிடத்தில் எதிர்ப்பார்க்க வேண்டிய பண்புகள் தொடர்பான திவ்விய விளக்கத்திற்காக 1 கொரிந்தியர் 13:4-8; 1 பேதுரு 1:22, 23; 2 பேதுரு 1:1-13-ஆகிய வசனப்பகுதிகளைப் பார்க்கவும். வேறு பண்புகளை உடையவர்களும், பெருமையையும், தேவனுடைய சுதந்தரமான சபையை இறுமாப்பாய் ஆளுவதற்குமுரிய விருப்பத்தையும் வெளிப்படுத்துபவர்களும் அல்லது பொறாமை, சண்டைச் சச்சரவு, கசப்பு, தீமை பேசுதலை வெளிப்படுத்துபவர்களுமானவர்கள் அனைவரும், பரத்திலிருந்து வராததும், லௌகீக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறதுமான தவறான ஆவிக்கான சாட்சி பகருகின்றவர்களாக - இவர்களது சொந்த நன்மைக்காகவும், சபையினுடைய நன்மைக்காகவும் தேர்ந்தெடுக்கப்படாமல், கடந்துபோகப்பட வேண்டும். இவர்கள் பாதுகாப்பற்ற போதகர்களாவார்கள் மற்றும் இவர்கள் என்னதான் அறிவைப் பெற்றவர்களாய் இருப்பினும், நன்மைக்குப் பதிலாக, தீமையையே அதிகம் செய்பவர்களாய் இருப்பார்கள்.

---

# விலையேறப்பெற்ற நளததைலமுள்ள வெள்ளைக்கல் பரணி

## யோவான் 12:1-11

***"இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்." மாற்கு 14:8***

பூமிக்குரிய ஊழியத்தில் நம்முடைய ஆண்டவரின் கடைசி வாரம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. பஸ்கா பண்டிகை வர ஆறு நாளைக்கு முன்னே, யூதர்களின் ஓய்வுநாளாய் இருந்தது; அந்த ஓய்வுநாள் ஆறு மணியளவில் முடிவடைந்தது; அநேகமாக அப்போதுதான் நம்முடைய ஆண்டவரும் அவருடைய சீஷர்களும், "குஷ்டரோகியான சீமோன் வீட்டில்" மார்த்தாள் மற்றும் மரியாளால் உபசரிக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தச் சீமோன் அவர்களுடைய தந்தையாக இருந்திருக்கக்கூடும். அவர்களின் சகோதரனாகிய லாசருவும் அங்குப் பந்தியிருந்தவர்களில் ஒருவராக இருந்தார்.

தமது மரணம் வெகுவாய்ச் சமீபித்திருப்பதை ஆண்டவர் அறிந்திருந்ததினால், நேசிக்கப்பட்ட தம்முடைய சீஷர்களுக்கு அதைக்குறித்துச் சில தகவல்களைக் கொடுத்தார். பொதுவாக, சீஷர்களின் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்ட சில அற்புதமான விஷயங்களை எப்பொழுதும் இயேசு பேசுவதினால், அவர்கள் சமீபமாய் இருக்கும் கல்வாரியில் நிகழப்போகிற பயங்கரமான சோக நிகழ்ச்சியைக்குறித்து உணர்ந்துகொள்ள தவறினார்கள். இவைகள் நமக்கு ஆச்சரியமாக இருப்பதற்கு அவசியமில்லை. ஏனெனில், நமது கர்த்தர் உவமைகளாகவே பேசினார் என்று வேதவாக்கியங்கள் காணப்படுகின்றது; "இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்; உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை." உதாரணமாக: "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்." "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான் நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (யோவான் 2:19; 6:51, 53) இப்படியான உவமை பாஷைகளில் கர்த்தர் பேசியிருந்ததை நாம் மனதில்கொண்டு நிதானிக்கும்போது, அவருடைய மரணத்தை முன்னறிவித்த நமது கர்த்தருடைய வார்த்தைகளான, "மனுஷகுமாரன் உயர்த்தப்படுவார்" மற்றும் இதுபோன்ற மற்ற வாக்கியங்களினுடைய சரியான அர்த்தத்தை அப்போஸ்தலர்களால் புரிந்திருந்திருக்க முடியாது என்று நாம் உணர்கின்றோம்.

ஓய்வுநாள் மாலையில் இயேசு அபிஷேகிக்கப்பட்டதைக்குறித்தும், அங்குப் பெத்தானியாவில் நடந்த இராவிருந்தைக்குறித்தும் பார்ப்பதற்கு முன், மரியாள் நளததைலத்தினால் அபிஷேகம் பண்ணின காரியமானது தமது அடக்கத்திற்கு ஏதுவாக பண்ணினாள் என்று நமது கர்த்தர் அறிவித்த காரியங்களைபுரிந்துகொள்ளத்தக்கதாக, அந்நாளுக்குப் பிறகு தொடரும் நாட்களில் நடக்கும் சம்பவங்களை நம் மனதில் கொண்டுவரலாம். மறுநாள் காலையில் (வாரத்தின் முதல் நாள் — பொதுவாக இன்று ஞாயிற்றுக்கிழமை என்று அழைக்கப்படுகிறது). கழுதைக் குட்டியை அழைத்துவரும்படிக்குக் கூறி, பின்னர் அதின்மேல் ஏறி எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணினார். லாசரு உயிர்த்து எழுப்பப்பட்ட அந்த அற்புதத்தை ஜனங்கள் கண்டிருந்ததினால் கும்பல் கும்பலாகக் கூட்டங்கூடி, சகரியாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறும் வண்ணமாக அவரை மேசியா என்றும், தாவீதின் குமாரன் என்றும் வந்தனம் செய்து, வழியில் வஸ்திரங்களையும், மரக்கிளைகளையும் பரப்பினார்கள். (ஆகவே, பொதுவாக இது குருத்தோலை ஞாயிறு என்று அழைக்கப்படுகிறது). இத்தருணத்தில்தான், நம்முடைய ஆண்டவர் எருசலேமை நோக்கி கண்ணீர்விட்டு, "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" (மத்தேயு 23:38) என்று அறிவித்தார்.

இரண்டாவது நாளாகிய திங்கட்கிழமை அன்று, காசுக்காரர்களை ஆலயத்திலிருந்து துரத்தியிருக்க வேண்டுமென்றும், அங்குள்ள ஜனங்களுக்கு அவர் போதித்தார் என்றும், கருதப்படுகிறது. மேலும், அந்த நாளின் பகல் வேளையில் அவர் பிரயாணம் பண்ணிக்கொண்டு இருக்கும்போதுதான் கனியற்ற யூத தேசத்திற்கு அடையாளமாய் இருந்த கனியற்ற அத்திமரத்தைச் சபித்துப் புறக்கணித்தார் என்றும் பதிவுகளிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். மூன்றாம் நாளாகிய செவ்வாய்கிழமை அன்று, மீண்டும் ஆலயத்தில் பிரசங்கிப்பதிலும், கேள்விகளுக்குப் பதில் கொடுப்பதிலும் அவர் நேரத்தைச் செலவிட்டார். மேலும், அன்று மாலையில் அவர்கள் பெத்தானியாவுக்குத் திரும்பியபோது, அண்மையில் சம்பவிக்கப்போகும் மாபெரும் சம்பவங்கள் தொடர்பான காரியங்களை அவர் தம் சீஷர்களோடு சம்பாஷித்துக்கொண்டிருந்தார். நான்காம் நாளாகிய புதன்கிழமையோ, பெத்தானியாவில் அமைதலாக கழிந்தது. ஐந்தாம் நாளாகிய வியாழன் அன்று, அவருடைய சீஷர்கள் பஸ்கா இராப்போஜனத்தை ஆயத்தம்பண்ண துவங்கினார்கள். மாலை ஆறு மணிக்குமேல் அது புசிக்கப்பட்டது; அந்த மாலை, ஆறாம் நாளாகிய வெள்ளிக்கிழமையின் துவக்கமாய் இருந்தது. யூதர்களின் முறைமையின்படி அது நீசான் 14-ஆம் தேதியாய் இருந்தது. அன்றைய இரவு கெத்செமனே அனுபவங்கள் தொடர்ந்தது. மறுநாள் காலை பிலாத்துவுக்கு முன் விசாரணை செய்யப்பட்டு சிலமணி நேரங்களுக்குப் பிற்பாடு சிலுவையில் அறையப்பட்டு, மரித்துப்போனார்.

நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்கு ஆறு நாட்களுக்கு முன், குஷ்டரோகியான சீமோனின் வீட்டில், அதாவது மார்த்தாள், மரியாள், லாசருவின் வீட்டில் அவருக்கு அளிக்கப்பட்ட விருந்தோம்பல் குறித்த சம்பவத்திற்கு இப்பொழுது வரலாம். "இவைகளுக்குப்பின்பு, யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்சரித்துவந்தார்" (யோவான் 7:1); நமது கர்த்தர் இங்கு ஒரு விருந்தாளியைப்போல் மாத்திரம் போய் வந்துக்கொண்டிருந்தார் என்றும், அவருடைய பெரும்பான்மையான நேரத்தைக் கலிலேயாவில்தான் செலவழித்துக்கொண்டிருந்தார் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். இயேசுவையும், மேசியாவுக்கு உயிருள்ள சாட்சியாக வாழ்ந்துகொண்டிருந்த லாசருவையும் கொலை செய்ய வேண்டும் என்று சில முன்னிலை வகிக்கும் யூதர்கள் வகைதேடி கொண்டிருந்தது அறியப்பட்ட காரியமாய் இருந்தும், தாம் பலி செலுத்தப்படவேண்டிய நேரம் இப்பொழுது வந்துள்ளபடியினால் கர்த்தர் தம் சத்துருக்கள் மத்தியில் வந்தார்.

இது ஒரு சராசரியான விருந்தாக இருக்கவில்லை, மாறாக, நம்முடைய ஆண்டவரைக் கனப்படுத்தும்படியாக ஒரு விசேஷித்த விருந்தாய் இருந்தது. எனினும், இந்த விருந்தோடு தொடர்புள்ள ஒரு சம்பவம் அவ்விருந்தின் மற்ற அனைத்து அம்சங்களைக் காட்டிலும் பிரமாண்டமாய் இருந்தபடியினால், சுவிசேஷத்தைப் பதிவு செய்தவர் அக்காரியத்தை மாத்திரம், அதாவது விலையேறப்பெற்ற நளததைலத்தினால் நமது கர்த்தர் அபிஷேகம்பண்ணப்படும் காரியத்தை மாத்திரம் குறிப்பிடுகின்றார். "இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மாற்கு 14:9) என்று ஆண்டவர் தாமே கூறினார். ஆகவே, ஆண்டவரால் மிக உயர்வாகக் கருதப்படும் இப்பணிவிடையின் விவரங்களை நாம் மிக ஆழமாக ஆராய்ந்து பார்ப்பது மிகவும் ஏற்றதாயிருக்கின்றது.

பேராசிரியர் ஷாப் அவர்கள்: "இங்குத் தைலம் என்று கூறப்படுவது சாதாரணமான தைலமாக இராமல் நறுமண திரவமாக இருக்கின்றது" என்று கூறுகின்றார். அந்தத் தைலத்தைக்கொண்டிருந்த வெள்ளைக்கல் பரணியானது, குடுவை (அ) ஜாடி (அ) கழுத்துப்பகுதி குறுகலாக உள்ள புட்டியின் வடிவம் கொண்டு காணப்பட்டது. மேலும், பரணி உடைக்கப்பட்ட காரியமானது, நறுமணதைலத்தை மூடியிருந்த ஜாடியின் முத்திரை உடைக்கப்படுகின்றதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. யூதாசின் அதிருப்தியான வார்த்தைகள் அந்தத் தைலத்தின் மதிப்பை வெளிப்படுத்துகிறது. ஏனெனில், "அதை 300 தினாரிக்கு விற்றிருக்கலாமே" என்று கூறினான். தினாரி என்ற வார்த்தை பணம் என்று 5-ஆம் வசனத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் ஒரு பணம் (தினாரி) ஒருநாளின் கூலியாக இருந்தது (மத்தேயு 20:2). இதன் மதிப்பை இக்காலத்துப் பணத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் ஒரு நாளுக்கு 50 செண்ட் (டாலரில் 100-இல் ஒரு பங்கு) கூலி கொடுக்கப்படுகிறது. இப்படியிருக்க 300 தினாரியானது, 150 டாலர் மதிப்புள்ளதாய் இருக்கிறது. ஆகவே, அந்த நளதம் என்னும் தைலம் உண்மையில் மிக விலையுயர்ந்ததாக இருந்தது. அது

உரோம பவுண்ட் அளவின்படி 12 அவுன்சுகளாகும். இந்த நளதம் என்னும் தைலம் விலையுயர்ந்தது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இந்நாளிலுங்கூட கிழக்கத்திய தேசத்தில் மிகச் சிறந்த ரோஜா பூக்களினால் தயாரிக்கப்படுகிற (ரோஜா) தைலமானது மிகவும் விலையுயர்ந்ததாய்க் காணப்படுகின்றது; நாலு இலட்சம் (4,00,000) முழுமையாக வளர்ச்சியடைந்த ரோஜாக்கள், ஓர் அவுன்ஸ் (ரோஜா) தைலத்தைத் தயாரிக்கத் தேவைப்படுகிறது; இதன் தூய்மைக்கு ஏற்றவாறு மதிப்பு உயரக்கூடியதாய் இருக்கிறது; ஓர் அவுன்ஸ் (ரோஜா) தைலம் 100 டாலர் விலை கொண்டிருக்கும்போது, கர்த்தரை அபிஷேகம் பண்ணுவதற்கு மரியாள் பயன்படுத்தின அளவுள்ள (ரோஜா) தைலத்தின் விலையோ 1200 டாலர் விலையுள்ளதாய் இருக்க வேண்டும். நீரோ என்ற சக்கரவர்த்திதான், முதன்முதலில் இப்படிப்பட்ட விலையுயர்ந்த நறுமணம் வீசும் தைலங்களைப் பயன்படுத்தினார் என்று கூறப்படுகிறது. ஆனால், இப்படிப்பட்ட இனிமையான நறுமணதைலம் கொண்டு அபிஷேகம் பண்ணப்படுவதற்கும், பெருமைபடுத்தப்படுவதற்கும் மிகவும் பாத்திரமாய் இருந்தவர், "பூமியின் இராஜாக்களுக்கெல்லாம் பிரபுவாய் காணப்பட்டவரே" ஆவார்; இவரை அபிஷேகம் பண்ணும் கனம் மரியாளுக்குக் கிடைத்தது.

இது ஒரு வீணான காரியம் என்று யூதாசே முதலில் தடை விதித்தான் — அவனுக்குப் பிரச்சனை என்னவெனில், அவன் கர்த்தரைக் கொஞ்சமாக நேசித்தும் மற்றும் பணத்தை மிக அதிகமாய் நேசித்தும் இருந்ததேயாகும். மற்றவருக்காக நமது அன்பு செலவிட விரும்பும் தொகையின் அளவானது, ஒருவிதத்தில் நம்முடைய அன்பின் அளவையே எடுத்துக்காட்டுகின்றதாய் இருக்கிறது. மற்றச் சீஷர்களும் யூதாசின் வார்த்தைகளைக் கருத்தில்கொண்டு, அச்சம்பவத்தை யூதாஸ் கண்ணோக்கின விதத்தில் கண்ணோக்கி, மரியாளின் கிரியைகளுக்கு மறுப்புத் தெரிவித்தார்கள் என்று வேறொரு சுவிசேஷகர் குறிப்பிடுகின்றார். ஆயினும், யூதாசின் குணலட்சணத்தைச் சற்று வெளிச்சத்திற்குக் கொண்டுவரும்படியாக அப்போஸ்தலனாகிய யோவான் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தினார்; "அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்" என்று யோவான் கூறுகின்றார் (யோவான் 12:6).

"அவளை விட்டு விடுங்கள்" என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள், அன்பைக்காட்டிலும் பணத்தை அதிகமாக மதிப்பிட்ட சீஷர்களுக்குக் கடுமையான ஒரு கண்டிப்பாயிருந்தது. ஆம், உண்மையில் தரித்திரர்கள் அநேகர் இருந்தார்கள், இன்னமும் அதிக தரித்திரர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு ஊழியம் செய்வதற்குப் பல வாய்ப்புகள் இருந்தது. ஆயினும், நம்முடைய ஆண்டவரை விசேஷித்தவிதமாய்க் கனப்படுத்துவதற்கும், மரியாளுடைய அன்பையும், பக்தியையும் அருமையாய்ச் சித்தரித்துக்காட்டும் நறுமணதைலங்களை அவர்மேல் ஊற்றுவதற்கும் உரிய வாய்ப்புகள் அதிக நாட்கள் காணப்படுவதில்லை. ஆகவே, இப்படி மிகவும் விலையுள்ள செலவுகளைச் செய்வது நியாயம் என்று நமது கர்த்தர் அங்கு அறிவித்தார். பணத்தோடு அன்பின் உணர்வுகளை சமமாக்கும் கருத்துக்களை தாம் ஆதரிப்பதில்லை என்பதை கர்த்தர் வெளிப்படுத்தினவரானார். ஆயினும், யூதாசைப்போன்று பணமானது தரித்திரருக்குச் செலவழிக்கப்பட வேண்டும் என்று கவலைப்படக்கூடிய நபர்கள், அநேகத் தருணங்களில் தங்களுக்குக் கிடைக்கிற பணத்தில் மிகவும் சிறிய அளவுகளையே தரித்திரர்களுக்குக் கொடுக்கின்றார்கள் என்றே நாம் கருதுகின்றோம்.

மாறாக, மரியாளிடத்தில் காணப்பட்ட ஆழமான, உண்மையான, அன்புள்ள இருதயங்கள் விலையுயர்ந்த பலிகளைச் செலுத்துவதிலே பிரியப்படுகின்றது, அதேசமயம் சரீரப்பிரகாரமாகத் தரித்திரராய் இருப்பவர்களுக்கு உதவியாகவும், ஆழ்ந்த இரக்கத்துடனும் காணப்படுகின்றது. மற்றவர்களுக்கு நாம் ஊழியம் புரியும் விஷயத்தில், அவர்களுக்குப் பணத்தேவை மாத்திரமே இருப்பதில்லை என்பதையும், பணம் தேவைப்படாதவர்களுக்கு அன்பும், அனுதாபமும் தேவைப்படும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நம்முடைய ஆண்டவர் இப்படிப்பட்டவர்களில் ஒருவராய் இருந்தார்; அவருடைய இருதயம் அன்பினால் முழுமையாக நிரப்பப்பட்டிருப்பினும், அப்போஸ்தலர்களில் அடையாளப்படுத்தப்படும் விழுந்துபோன இனத்திலேயே உயர்குணமுள்ளவர்களினுடைய ஏறக்குறைய நலிந்துபோன மனங்களில்கூட அவரால் சிறு தோழமையையே அடைய முடிந்தது. மரியாளிடத்திலோ அவருக்குச் சுகந்த

வாசனையாக, புத்துணர்வாக, மற்றும் வலுவூட்டுதலாகக் காணப்படும் சத்து மருந்தாகவும், வாசனையாகவும் இருக்கும் ஆழமான அன்பையும், பக்தியையும் காணமுடிந்தது. மற்ற அனைவரைக்காட்டிலும் மரியாள் ஆண்டவரின் குணநலன்களின் ஆழங்களையும், அகலங்களையும், உயரங்களையும், நீளங்களையும் நன்கு அறிந்திருந்தாள். எனவே, அவள் ஆண்டவரின் பாதத்தருகே அமர்ந்து கற்றுக்கொள்வதில் சந்தோஷமடைந்ததும் அல்லாமல், இப்பொழுது தன்னுடைய பக்தி மற்றும் தன்னுடைய அன்பைக்குறித்து அவருக்குக் கொஞ்சம் வெளிப்படுத்தத்தக்கதாக, மிகுந்த விலைக்கொடுத்து செலவழிப்பதிலும் மகிழ்ச்சி அடைந்தாள்.

பொதுவான வழக்கத்தின்படி, மரியாள் முதலில் தைலத்தை ஆண்டவரின் சிரசில் ஊற்றினாள். (மாற்கு 14:3) அதற்குப் பின் மீதியிருக்கும் தைலத்தை அவர் பாதத்தில் ஊற்றினாள். ஆனால், இந்தச் சம்பவத்தைப் பதிவு செய்த அப்போஸ்தலனாகிய யோவான், ஆண்டவரின் தலையில் தைலம் ஊற்றினதை முழுமையாக மறந்துபோய், பாதங்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட காரியத்திலும், அவள் தனது தலைமயிரினால் அவர் பாதங்களைத் துடைத்த காரியத்திலும், மிகவும் அதிகமாய் வெளிப்பட்ட பக்தியில், மிகவும் ஆழமாக ஆட்கொள்ளப்பட்டுவிட்டார் என்பது தெரிகின்றது. உண்மையில் இது ஓர் அன்பின் வெளிப்பாடு மற்றும் நினைவுகூருவதற்குப் பாத்திரமான ஒரு பக்தியாகும்.

மரியாளைக் குறித்து ஒருவர் அளித்த விமர்சனம்: "அவள், ஸ்திரீகளுக்குரிய பிரதான 'ஆபரணத்தை' எடுத்து அதைப் பிரயாணத்தின் மூலம் தூசிகள் படிந்திருந்த தன்னுடைய போதகரின் பாதங்களைத் துடைப்பதற்கு அர்ப்பணித்தாள். போதகருக்குத் தன்னிடத்திலிருந்த சிறப்பான ஒன்றைக் கனம் குறைந்த பணிவிடைக்குக்கூட அர்ப்பணம் பண்ணினாள். அச்செய்கையானது அவளது பக்தி மற்றும் அன்பின் கூடுமான அளவு உச்சக்கட்ட வெளிப்பாடாய் இருந்தது. அவளது சிறந்த பொக்கிஷத்தை மிக பக்தியான முறையில் அர்ப்பணித்தாள். அவள் இருதயத்தில் பெற்றிருந்த ஆழமான உணர்வுகளை வார்த்தையினால் பேசாமல், இவ்விதமான கிரியைகளினால் வெளிப்படுத்தினாள்."

அந்தத் தைலத்தின் நறுமணம் வீடு முழுவதும் நிரம்பியதைக்குறித்து நாம் ஆச்சரியபட வேண்டியதில்லை. மேலும், சந்தேகத்திற்கிடமின்றி அந்த வாசனை அந்த வீட்டில் நீண்ட நேரம் தங்கியிருந்திருக்க வேண்டும். ஆனால், அதைக்காட்டிலும் விலையேறப் பெற்ற மரியாளின் இருதயத்தில் நிரம்பியிருந்த அன்பு ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது மற்றும் என்றும் மறக்கப்படுவதில்லை. மேலும், அவளுடைய பக்தியின் நறுமணமானது நூற்றாண்டுகள் கடந்து நம்மிடத்தில் வந்து அவளுடைய பணியைக் கனப்படுத்தவும், அவளுடைய நடத்தையைப் பின்பற்றுவதற்கு விருப்பமும் கொண்டுள்ள அனைத்து உண்மையான இருதயங்களுக்கு ஆசீர்வாதத்தையும் கொண்டு வந்துள்ளது.

நம்முடைய அன்பான மீட்பரோடு நாம் தனிப்பட்ட (நேரடியான) விதத்தில் தொடர்புகொள்வதற்கான சிலாக்கியம் (இக்காலத்தில்) நமக்கு இல்லை. ஆயினும், மரியாளின் கிரியைகளுக்கு ஒத்தக் கிரியைகளைச் செய்வதற்கான, அநேக வாய்ப்புகளை (இக்காலத்தில்) நாமும் பெற்றிருக்கிறோம்; அதாவது நம்முடைய கர்த்தரின் "சகோதர சகோதரிகளை" அன்பு, இரக்கம், மகிழ்ச்சி மற்றும் சமாதானமாகிய நறுமண தைலத்தினால் அபிஷேகம் பண்ணுவதற்கான சிலாக்கியம் நமக்குரியதாய் இருக்கின்றது; இவைகள் அதிகமாய்ச் சுயத்தை வெறுத்துச் செய்யப்படும்போது, இவைகள் நமது மூத்தச் சகோதரனுடைய கணிப்பில் மிகுந்த விலையேறப்பெற்றதாகக் காணப்படும்; அதாவது நமது மூத்தச் சகோதரனுடைய (கர்த்தர் இயேசுவினுடைய) சகோதர சகோதரிகளுக்கு எதை நாம் செய்கின்றோமோ அல்லது செய்யாமல் இருக்கின்றோமோ, அவைகளை நாம் அவருக்கே செய்தோம் அல்லது செய்யவில்லை என்பதாகக் கருதப்படும் என்று கூறினவருடைய கணிப்பில் மிகுந்த விலையேறப்பெற்றதாகக் காணப்படும் (மத்தேயு 25:40, 45). இன்னுமாக, "கர்த்தருடைய சரீர அங்கங்கள்" என்று அடையாளப்படுத்தப்படும் இந்தச் "சகோதர சகோதரிகளுக்கும்கூட" கர்த்தர் அடையாளமாகவும் இருக்கின்றார். மேலும், இக்கண்ணோட்டத்தை வைத்து நாம் பார்க்கையில், இப்பொழுது தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும், மற்றும் அருளப்பட்டிருக்கிற சகல நாமங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டு, பிதாவுக்கு அடுத்த நிலையில் காணப்படும் சரீரத்தின் தலையாயிருக்கிறவருடைய சிரசின்மேல் நறுமணதைலம் ஊற்றுவது நமக்கான சிலாக்கியமாய் இராவிட்டாலும், இந்தச் சுவிசேஷ யுகத்தில் அவருடைய

சபையாக ஜீவித்துக்கொண்டிருக்கும் கடைசி அங்கங்களாகிய கிறிஸ்துவின் பாதங்கள் மீது நறுமணதைலம் ஊற்றுவதற்கான சிலாக்கியம் நமக்குரியதாய் இருக்கிறது.

இந்தச் சுவிசேஷ யுகத்தின் நிறைவு வருடங்கள், நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய நிறைவு நாட்களுக்கு எந்தெந்த விதங்களிளெல்லாம் ஒப்பாகக் காணப்படும் என்பதை நாம் அறியோம். அதுபோல, சரீரத்தினுடைய தலையின் அனுபவங்களுக்கு, கிறிஸ்துவின் சரீரத்தினுடைய பாதங்களின் அனுபவங்கள் எந்தளவுக்கு ஒப்பாகக் காணப்படும் என்பதையும் நாம் அறியோம். எனினும் நாம் ஒருவரையொருவர் ஆறுதல்படுத்துவதும், ஒருவரையொருவர் உற்சாகமூட்டுவதும், சோதனைகளில் ஒருவரையொருவர் நிலைநிற்க உதவுவதும், "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதும்" நமக்கு அளிக்கப்பட்ட ஆசீர்வாதமான சிலாக்கியங்கள் என்பதை நாம் அறிவோம் (கொலோசெயர் 1:24). கிடைக்கக்கூடிய வாய்ப்புகளைப் பயன்படுத்திடுவதற்கு, முதலாவதாக மரியாளைப்போல நாமும் (இவ்வாய்ப்புகளைக்குறித்து) அதைக் குறித்து உணர்ந்துகொள்ள வேண்டும்.

"மாம்சத்தின்படி" நம்முடைய குடும்பத்தின் அங்கங்களை நாம் புறக்கணித்துவிட வேண்டும் என்று எந்த ஆலோசனையும் இங்கு நமக்குக் கொடுக்கப்படவில்லை; இவர்களுக்கென்று கவனம் செலுத்தப்படுவது சரியான விஷயம்தான்; மேலும் இவர்களுக்கடுத்த விஷயங்களில் கவனம் செலுத்தப்படவேண்டிய காரியங்களைக்குறித்துக் கர்த்தருடைய ஜனங்கள் அவருடைய அன்பின் ஆவியை, அதாவது இரக்கம், பொறுமை, சாந்தம், நீடிய பொறுமை ஆகியவைகளை முழுமையாகவும், இலவசமாகவும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ப அதிகமதிகமாய் உணர்ந்துகொள்வார்கள். நம்முடைய விசேஷித்த முயற்சிகளும் பாடுகளும் மாம்ச குடும்பத்தோடு நின்றுவிடாமல், மாறாக விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று வசனங்கள் வலியுறுத்தும் காரியத்தையே நாமும் வலியுறுத்துகிறோம் (கலாத்தியர் 6:10). வருங்காலத்தில் பொதுவான மனுக்குலத்திற்கு நன்மை செய்வதற்கான வாய்ப்புகளும் கிடைக்கும். ஆனால், கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஊழியம் செய்யக்கூடிய வாய்ப்பு இக்காலத்திற்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.

மற்றவர்களுக்கு நன்மை செய்தல் தொடர்பாகவும் — நம்முடைய குடும்பத்தினரிடத்திலும், கிறிஸ்துவின் அங்கத்தினர்களிடத்திலும் நம்முடைய வார்த்தைகளினாலும், நடத்தையினாலும் அன்பை வெளிப்படுத்துவது தொடர்பாகவும் ஒருவர் குறிப்பிட்டிருக்கும் வார்த்தைகளை மேற்கோளிடுகின்றோம்: "வீட்டிலிருக்கும் அங்கங்கள் ஒருவருக்கொருவர் செய்யும் அன்பின் அடிப்படையிலான கிரியைகளிலிருந்தே சுகந்த வாசனை உண்டாகின்றது. நம்முடைய வீட்டின் இனிமையான நறுமணங்கள் விலைமதிப்புள்ள வீட்டுப்பொருட்களினாலும், தொங்குதிரைகளினாலும், ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்ட சித்திரங்களினாலும், மென்மையான தரை விரிப்புகளினாலும் உண்டாகுவதில்லை. பல வீடுகளில் இவைகள் காணப்பட்டாலும், அந்த வீட்டின் சூழ்நிலை ருசியற்ற, மணமற்ற மெழுகு பூக்கள்போல் இருக்கிறது."

மற்றொருவர் கூறும்போது: "ஒருவேளை என்னுடைய நண்பர்கள் என்னுடைய சரீரத்தின்மேல் ஊற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் அனுதாபமும், பாசமுமாகிய நறுமணதைலங்களினால் நிரப்பப்பட்ட வெள்ளைக்கல் பரணிகளை எங்கோ மூலையில் வைத்திருப்பார்களானால், எனக்கு அவைகள் தேவைப்படும்போது, நான் அவைகளினால் புத்துணர்வும், மகிழ்ச்சியும் அடையத்தக்கதாக அவர்கள் அதை என்னுடைய சோர்ந்துபோன மற்றும் உபத்திரவமான நேரங்களில் என்னிடத்தில் கொண்டுவந்து, அவைகளைத் திறக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அன்பு மற்றும் அனுதாபத்தின் இனிமைகள் எதுவும் என் மீது யாரும் வீசிடாத ஒரு ஜீவியத்தை ஜீவிப்பதைப் பார்க்கிலும், பூக்குவியல்கள் இல்லாத எளிமையான சவப்பெட்டியைப் பெற்றுக்கொள்வதிலும், புகழுரை இல்லாத அடக்க ஆராதனையைப் பெற்றுக்கொள்வதிலும் நான் திருப்தியாய் இருப்பேன் . . . சவப்பெட்டியின் மீதுள்ள பூக்களினால் என்னுடைய கடந்தகால சோர்வின் மத்தியிலான வாழ்க்கைக்கு நறுமணம் வீச முடியாது."

*****

கர்த்தருடைய பின்னடியார்களாக உண்மையாய்க் காணப்படும் அனைவரும் சாந்தம் மற்றும் தாழ்மை மற்றும் அவருடைய சரீர அங்கங்களுக்கு ஊழியம் புரிதல் எனும் போதகரின் ஆவிக்கான உண்மையான மாதிரிக்குக் கவனமாய்க் கவனித்து, அப்படியே பின்பற்றுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். இக்காரியங்கள் அனைத்தும், "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்ற வார்த்தைகளுக்குள் அடங்குகின்றது (யோவான் 13: 16, 17).

தாலந்துகளோ அல்லது திறமைகளோ உடையவர்களும் அல்லது வாழ்க்கையில் கனம் வாய்ந்த ஸ்தானங்கள் வகிப்பவர்களும் மற்றும் சபையில் செல்வாக்கு நிறைந்த ஸ்தானங்களில் விசேஷமாகக் காணப்படுகிறவர்களுமாகிய கர்த்தருடைய ஜனங்களில் அநேகர், விசேஷமாக போட்டி மனப்பான்மை, வாக்குவாதம் பண்ணும் மனப்பான்மை, வீண் செருக்குக்கொள்ளும் தன்மை முதலியவைகளினால் ஆட்கொள்ளப்பட வாய்ப்புகள் உள்ளன. ஆகவே மாம்சத்தின் இந்த விஷயங்களுக்கு எதிராக விசேஷ வண்ணமாக ஜாக்கிரதையுடன் காணப்பட வேண்டும் என்றபோதிலும், "பொறாமையுடன் ஏறெடுத்துப் பார்க்கச் செய்யும் ஒரு பெருமை உண்டு மற்றும் ஏளனத்துடன் கீழாய்ப் பார்க்கச் செய்யும் ஒரு பெருமையும் உண்டு" என்ற வாசகமானது மறக்கப்படக் கூடாது. எவ்விஷயத்தைக் குறித்தாகிலும் பெருமை காணப்படுமாகில் அது தேவனுடைய பார்வையில் குற்றத்திற்குரியதாகவும், அவருக்குப் பிரியமற்றதாகவும் காணப்படும். "பெருமையுள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கின்றார், தாழ்மையுள்ளவர்களுக்கோ அவர் கிருபையளிக்கின்றார்." ஆகவே, கர்த்தருடைய அன்பில் நிலைத்திருக்கிறவர்கள் தாழ்மையாய் இருக்கும் விஷயத்தில் மிகவும் கவனமாயிருக்க வேண்டும். அதாவது, மிகவும் தாழ்மையாக, நடத்தையில் மிகவும் தாழ்மையாக, எளிமையாக, குறிப்பாக மனதில் தாழ்மையாக இருப்பதில் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும் (யாக்கோபு 4:6; 1 பேதுரு 5:5).

# நான் உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்

## யோவான் 13:1-17

நமது கர்த்தருடைய ஊழியம் நிறைவேறப்போகின்ற தருணம் வந்தது. அவர் தம்முடைய பன்னிரண்டு தெரிந்துகொள்ளப்பட்ட சீஷர்களோடு பஸ்கா போஜனத்தைப் புசித்தார். மேலும் "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" என்ற வார்த்தைகளையும் அவர்களுக்குத் தெரிவித்தார் (லூக்கா 22:15). அவர்கள் புசித்த பஸ்கா ஆட்டுக்குட்டியானது, நமது கர்த்தருக்கே அடையாளமாய் இருந்தது. மேலும் சீஷர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியைப் புசித்த காரியமானது, சுவிசேஷ யுகம் முழுவதும் விசுவாசிகள் எப்படிக் கிறிஸ்துவைத் தங்கள் இருதயங்களில் போஷிப்பார்கள் என்பதையும், விசுவாசத்தின் மூலம் அவருடைய மரணத்தின் வழியாக வந்த ஆசீர்வாதங்களைத் தங்களுடையதாக்கிக்கொள்வார்கள் என்பதையும் அடையாளப்படுத்துகின்றது. "ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" (1 கொரிந்தியர் 5:7-8). ஆனால், இயேசு நிஜமான ஆட்டுக்குட்டியாக இருப்பதினால், நிழல் இனி நிறுத்தப்படுவது பொருத்தமான காரியமாகும். ஆகவேதான், இந்த நிழலான பஸ்கா போஜனத்தைப் புசித்த பிற்பாடு, நமது கர்த்தர் தமது பிட்கப்படும் சரீரமும் மற்றும் சிந்தப்படும் இரத்தமுமாகிய நிஜத்தை அடையாளப்படுத்தும் புளிப்பில்லா அப்பம் மற்றும் திராட்சரசம் அடங்கிய நினைவுகூருதலின் இராபோஜனத்தை நிறுவினார்.

யூதர்களின் முறைமையின்படி பஸ்கா போஜனமானது, குடும்பம் குடும்பமாக அநுசரிக்கப்பட்டது. நமது கர்த்தரால் விசேஷமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலர்கள், அவரைத் தங்களுடைய தலையாக விசுவாசித்து, தங்களை ஒப்புக்கொடுத்தப்படியால், இவர்கள் தேவனுடைய குடும்பத்தின் கருவாக இருந்தார்கள். இவர்களுடைய இருதயங்களும், நம்பிக்கைகளும், நோக்கங்களும் ஒன்றாயிருந்தது. மேலும், ஒன்றாயிருப்பதற்கான காரணம், இவர்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருப்பதினாலேயாகும் (எபேசியர் 4:4). நமது கர்த்தருக்கு யூதாஸ்தான் தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிறவன் என்று ஏற்கெனவே தெரிந்திருந்தாலும், யூதாஸ் தள்ளிவைக்கப்படவில்லை/தவிர்க்கப்படவில்லை. இது கிறிஸ்துவின் பின்னடியார்களாகிய நாம் ஒருவருக்கொருவர் மற்றவருடைய இருதயத்தைக்குறித்து நியாயந்தீர்க்கக்கூடாது அல்லது தீமையானவர்கள் என யூகிக்கக்கூடாது என்ற படிப்பினையை நமக்குக் கொடுக்கின்றது. இருதயத்தின் தீமை, வார்த்தையிலோ அல்லது கிரியையிலோ வெளியரங்கமாகும் சமயம்தான், கர்த்தருடைய நாமத்தை அறிக்கைப்பண்ணின நிலையிலும், நம்முடன் ஐக்கிய நிலையில் காணப்பட்டும், தங்கள் இருதயத்தில் தீமை கொண்டு, அதை வெளியரங்கமாய்க் காட்டியிருக்கும் அத்தகைய சகோதர சகோதரிகளிடமிருந்து, நாம் நம்மை விலக்கிக் கொள்வதற்கான ஏற்றச் சமயமாகும். தீமை வெளியரங்கமாகக் கிரியைகளில் வெளிப்படுத்துவதற்கு முன்பு இருதயத்தில்தான் தோன்றுகின்றது என்பது உண்மைதான். ஆயினும், (தீமையை இருதயத்தில் உதிக்கப்பெற்றிருக்கும்) சகோதர சகோதரிகள் அந்தத் தீமைக்கு எதிராக ஜெயங்கொள்வார்கள் என்றே நாம் எப்போதும்எதிர்பார்க்கின்றவர்களாகக் காணப்பட வேண்டும். மேலும், எவ்விதத்திலும் அவர்களுக்கு இடறலாயிருக்கின்ற யாதொன்றையும் நாம் செய்ய நாடக்கூடாது. மாறாக, எதிராளியானவனின் தாக்கங்களையும், அவர்களுடைய சொந்த மாம்சத்திற்குரிய பெலவீனங்களையும் அவர்கள் ஜெயங்கொள்ளவே, நாம் எல்லாவிதத்திலும் நாடி உதவ வேண்டும்.

யோவான் தன்னுடைய சுவிசேஷத்தில் பஸ்கா இராப்போஜனத்தைக்குறித்து விரிவாக விவரங்கள் கொடுக்காமலும், அதே வேளையில் மற்றச் சுவிசேஷகர்களால் குறிப்பிடாமல் விடப்பட்டதுமான சில விலையேறப்பெற்ற அம்சங்களையும், அதுதொடர்பான சில படிப்பினைகளையும், முன்வைக்கும் விதமாக பதிவு செய்துள்ளார். நமது கர்த்தர் தம்முடைய பூமிக்குரிய ஊழியம்/வேலை நிறைவுபெறும் தருணத்திற்கு வந்துவிட்டது என ஏற்கெனவே

அறிந்திருந்தார் என்றும், அந்தக் கடைசி மணி நேரங்களைத் தம்முடைய சிலருடன் அதாவது, தெரிந்துகொள்ளப்பட்ட நண்பர்களுடன், கூட்டாளிகளுடன் செலவழித்துச் சில நல்ல பாடங்களை அவர்கள் மனதில் ஆழப் பதியவைக்க விசேஷமான ஆர்வம் கொண்டிருந்தார் என்றும் யோவான் தெரிவிக்கின்றார். "அவர் முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்." அதாவது, முற்றும் முழுமையாக அன்பு வைத்தார் (யோவான் 13:1). அவருக்குத் தற்போது காணப்படும் மற்றும் வரப்போகும் கடுமையான சோதனைகளோ அவரது கவனத்தை முழுவதும் விழுங்கிப்போடவும் இல்லை; அவர்களை அன்பு செய்வதிலிருந்து அவரது கவனத்தைத் திசை திருப்பிப்போடவுமில்லை. அவர் இன்னமும் மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கு எண்ணிக்கொண்டும், முயற்சி செய்து கொண்டும் இருந்தார். அவர் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மீது காட்டின அன்பு அவர்களுக்கு மாத்திரமே விசேஷித்தவிதமாய் உரியது என நாம் எண்ண வேண்டாம். மாறாக, "இவர்களுடைய வார்த்தையினால் தம்மை விசுவாசிக்கப் போகிறவர்களுக்கு" இந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும் பிரதிநிதிகளாகவே கர்த்தர் பார்த்தார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இப்பார்வையை நமது மனதில் நிறுத்திப் பார்க்கையில் நமது கர்த்தர் அப்போஸ்தலர்களுக்குக் கூறினதும், செய்ததுமான காரியங்கள் அனைத்துமே அதுமுதல் அவருடைய சீஷர்களாக ஆகும் அனைவருக்கும் பொருந்தக்கூடியதாகவும், போதனைகளாகவும் இருக்கின்றது என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும் (யோவான் 17:20).

லூக்கா அவர்கள் பதிவு செய்த காரியங்களைப் பார்க்கையில், இத்தருணத்தின்போது அப்போஸ்தலர்கள் மத்தியில் தங்களுக்குள் யார் பெரியவன் என்ற வாக்குவாதம், பிரச்சனை போய்க்கொண்டிருந்ததைக் காணமுடிகின்றது (லூக்கா 22:24-31). இந்தப் பிரச்சனை முழுக்க முழுக்க சுயநலத்தின் அடிப்படையில் காணப்படாமல், போதகர் மீதான அன்பும்கூட இப்பிரச்சனைக்குப் பாதிக் காரணமாக இருந்தது. ஒருவேளை பந்தியில் அமரும்போதும், தங்களுக்கான வரிசை முறையிலும் இப்பிரச்சனை எழும்பியிருக்கலாம். ஏனெனில், நமது கர்த்தரின் அருகாமையில் அமருவதே அவர்கள் ஆசை கொண்ட இடமாகும். இராஜ்யத்தில் இயேசுவின் வலது, இடது பக்கத்தில் அமருவதற்கு எப்படி யாக்கோபும், யோவானும் வேண்டிக் கொண்டார்கள் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம். இச்சம்பவம் நடந்த தருணத்தில் யோவான் இயேசுவுக்கு அடுத்துக் காணப்பட்டு, அவருடைய மார்பிலே சாய்ந்தவராக இருந்தார் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம்.

யார் பெரியவன்? என்ற இந்தப் பிரச்சனை, மேல் வீட்டறையில் அவர்கள் விருந்தாளிகளாக அழைக்கப்படாமல், எல்லா வேலைகளையும் தாங்களாகவே செய்துகொள்ள வேண்டும் என்ற நிலையில் அவர்கள் காணப்பட்டதினிமித்தம் தோன்றியிருக்க வாய்ப்புகள் இருக்கலாம். அதாவது, இச்சம்பவத்தன்று மாடி அறை மாத்திரமே அவர்களுக்கு அளிக்கப்பட்டது. மேலும், அங்கு விருந்தளிப்பவர்கள் அவர்களுக்குள் இல்லாதபடியினால், பாதங்கள் கழுவப்படும் வழக்கத்திற்கு எவ்விதமான ஏற்பாடுகளும் அவர்களுக்கு அங்குக் காணப்படவில்லை. மேலும், அப்பணி செய்யப்படவில்லை. பாதரட்சைகளை அணியும் வழக்கமுடைய கிழக்கத்திய நாடுகளில் பாதங்கள் கழுவப்படும் காரியமானது, மரியாதைக் கொடுக்கும் விதமாக மாத்திரம் செய்யப்படாமல், அது அவசியமாய்ச் செய்யப்பட வேண்டிய காரியமாக உள்ளது. ஏனெனில், அந்த நாடுகளின் வெப்பநிலை நிமித்தம் மற்றும் பாதரட்சைகள் முழுவதும் பாதங்களை மூடியநிலையில் காணப்படாமல், திறந்தநிலையில் காணப்படுவதினிமித்தம் சாலைகளின் தூசிகள் பாதங்களில் படிந்துகொண்டிருப்பதினாலும், பிரயாணத்திலிருந்து வீடு திரும்பியவர்களின் பாதங்கள் கழுவப்படுவதன் மூலம், பாதங்களுக்கு ஆறுதல் அளிப்பது மிகவும் இன்றியமையாததாகவும் உள்ளது.

பன்னிரண்டு பேரில் யார் பெரியவன்? மற்றும் இவர்களில் யார் மற்றவர்களுடைய பாதங்களைக் கழுவும் மதிப்புக் குறைவான வேலையைச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குள் எழும்பின கேள்வியானது, அவர்களில் எவரும் பணிவிடைக்காரன் நிலையை எடுக்க விருப்பம் கொள்ளவில்லை என்ற உண்மையை வெளிப்படுத்துகின்றது.

நமது கர்த்தர் அவர்களுடைய பிரச்சனையைத் தீர்த்து வைக்காமல், அல்லது அவர்களுள் ஒருவனை இந்த மதிப்புக்குறைவான வேலையைச் செய்யும்படிக்கு நியமிக்காமல், இவ்விதமாய் அவர்கள் சண்டையிட்டுக்கொள்ள அனுமதித்துவிட்டார். அவர்களோ, அக்காரியத்தைக்குறித்துச் சிந்திக்கும்படி அனுமதித்தார். அதாவது, அக்காரியத்தை மீண்டும் சீர்த்தூக்கிப்பார்க்கவும்

மனங்களைத் தாழ்த்தவும், அவர்களுக்கு நேரம் விட்டுக் கொடுத்தார். அவர்களோ வழக்கத்திற்கு மாறாக கழுவப்படாத பாதங்களுடன் இராப்போஜனத்தைப் புசிக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

பின்னர் இயேசு எழுந்து நின்று தமது மேலங்கியைக் கழற்றிப்போட்டு, ஒரு சீலையை எடுத்து அரையில் கட்டிக்கொண்டு, ஒரு பாத்திரத்தையும், தண்ணீர் எடுக்க ஜாடியையும் எடுத்துக் கொண்டு, தண்ணீர் ஊற்றி தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவ ஆரம்பித்தார். பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றிவிட்ட பிற்பாடு பாதங்களைத் தண்ணீருக்குள் போட்டுக் கழுவுவது கிழக்குப் பகுதிகளில் உள்ள வழக்கமாக இராமல், கழுவப்பட வேண்டிய பாதங்கள் மீது தண்ணீர் ஊற்றப்படுவதே வழக்கமாயிருந்தது. இவ்விதமாக ஒவ்வொருவருக்கும் கழுவுவதற்குச் சுத்தமான தண்ணீர் காணப்படும். மேலும் தண்ணீரும் குறைவாகவே செலவழிகின்றது; ஏனெனில் நம் நாடுகளைக் காட்டிலும், கிழக்கே உள்ள நாடுகளில் தண்ணீர் மிகவும் தட்டுப்பாடு உடையதாகவும், விலையேறப்பெற்றதாகவும் கருதப்படுகின்றது. மேலும் நாம் பயன்படுத்தும் வழக்கத்தின்படியாக மேஜைகளும், இருக்கைகளும் அக்காலக்கட்டத்தில் கிழக்குப் பகுதிகளில் காணப்படுவதில்லை. அவர்களுடைய மேஜைகள் உயரம் குறைந்தவைகளாகவும், கிட்டத்தட்ட குதிரையின் பாதங்களில் அணியப்படும் லாடத்தினுடைய வடிவில் காணப்படும். மேலும் மேஜையில் இருப்பவர்கள் உண்மையில் மேஜையின் மீது பக்கவாட்டில் சாய்ந்து படுத்துக்கொள்வார்கள். அவர்களுடைய இடது முழங்கையானது, தலையணை அல்லது திவான் மீது வைக்கப்பட்டிருக்கும். அவர்களுடைய தலை குதிரை லாடம் போன்ற வடிவம் உடைய மேஜையின் உள்பக்கம் நோக்கியிருக்கும். இந்த உள்பக்கத்தில் உணவு வைப்பதற்கான இடமும், உள்ளே வந்து உணவை வைக்க பணியாளர்களுக்கு இடமும் காணப்படும். இவ்விதமாய் இருப்பதினால் பாதங்கள் வெளி நோக்கிக் காணப்படுவதினால், சாப்பிட்டுக்கொண்டிருக்கும் மற்றவருக்கு இடைஞ்சல் உண்டுபண்ணப்படாமலேயே பாதங்களை எளிதில் கழுவுவதற்குப் பாதங்கள் பக்கம் செல்லலாம்.

பேதுருவின் பாதங்கள் பக்கம் வருவதற்கு முன்னதாகவே, நமது கர்த்தர் சீஷர்களில் அநேகருடைய பாதங்களைக் கழுவி முடித்துவிட்டார் என்பது உறுதியே. ஒருவரும் அவர் தங்கள் பாதங்களைக் கழுவுவதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. எனினும் இவ்விஷயத்தைக்குறித்துத் தாங்கள் சண்டையிட்டுக் கொண்டதையும், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய தாங்கள் விருப்பமின்றி காணப்பட்டதையும், அவர்கள் எண்ணினதினிமித்தம் அவமானமும், குழப்பமும் அவர்கள் முகங்களைக் கவ்விக்கொண்டிருந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. ஆனால், பேதுருவின் தருணம் வந்தபோது, பேதுரு மறுப்புக் கூறினார். இப்படிப்பட்ட மதிப்புக் குறைவான வேலையை நமது கர்த்தர் செய்ய அனுமதிப்பதா? ஒருபோதும் இல்லை எனப் பேதுரு எண்ணினார். பேதுரு கர்த்தரை நோக்கி, "ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா?" என்று கேட்டார். ஆனால், நமது கர்த்தரோ பேதுருவைக் கடிந்துகொள்வதற்கெனக் கால் கழுவும் வேலையை நிறுத்தவில்லை. அதாவது, இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அவருடைய பின்னடியார்களில் சிலர் செய்ய நாடுவதுபோன்று பேதுருவுக்கு நன்கு திட்டு/வசவு கொடுப்பதற்கும், முழுமையாக எல்லாவற்றையும், விவரிப்பதற்கும் அவர் அவ்வேலையை நிறுத்தவில்லை. மாறாக, இவ்விஷயத்தைக்குறித்துப் பின்னர் விவரித்துக்கூறுவார் என்றும், ஒருவேளை தாம் பேதுருவின் கால்களைக் கழுவவில்லையென்றால் தம்மிடத்தில் பேதுருவுக்குப் பங்கில்லை என்றும் கூறி, மற்றவர்களுக்குச் செய்வதுபோன்று பேதுருவுக்குச் செய்வதைத் தொடர வேண்டும் என வற்புறுத்தினவராக மாத்திரம் காணப்பட்டார்.

பேதுருவின் நடவடிக்கைகளிலுள்ள அருமையான/பெருந்தன்மையான பண்புகளால் நாம் கவரப்பட்டாலும், கவரப்படுகின்ற அளவைப்போன்றே அவருடைய சில பெலவீனங்களையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம். மேலும் இதில் கர்த்தருடைய அனைத்துப் பின்னடியார்களையும் உற்சாகப்படுத்தும் படிப்பினையையும் நாம் பார்க்கின்றோம். அதென்னவெனில், நம்மிடத்தில் பெலவீனங்களும் பூரணமற்றத் தன்மைகளும் காணப்படும்போது, அதேசமயம், பேதுருவிடம் காணப்பட்டது போன்று, கர்த்தரிடத்தில் இருதயப் பூர்வமான உண்மையும் நம்மிடத்தில் காணப்படுமாயின், நாமும் பேதுரு போன்று திடன் கொண்டவர்களாக முன்னேறிச் செல்வதற்கு நாட வேண்டும். அதாவது, ஜெயத்தின்மேல் ஜெயம் கொள்ளவும், இறுதியில் உண்மையுள்ளவர்களுக்கான பலனாகிய பரிசைப் பெற்றுக்கொள்ளவும் முன்னேறிச் செல்வதற்கு நாட வேண்டும்.

பாதங்கள் கழுவப்படுவதினால் வெளியாகும் அன்பையும், உண்டாகும் சௌகரியத்தையும்விட மிக ஆழமான அர்த்தங்கள், பாதங்கள் கழுவின விஷயங்களில்

இருக்கின்றது எனவும், இவர்கள் மத்தியில் தாழ்மையின் ஆவி குறைவாய் இருப்பதைக் கடிந்துகொள்வதாக இருக்கின்றது எனவும், பேதுரு கற்றுக்கொண்டபோது, தன்னுடைய பாதங்கள் மாத்திரமல்லாமல், தனது கைகளும், தனது சிரசும் கழுவப்பட வேண்டுமென விரும்பினார். பெருந்தன்மையான பேதுரு! தளர்வில்லாத ஊக்கமுடைய பேதுரு! ஆர்வமிக்க பேதுரு! மனப்பூர்வமாய்க் காணப்படும் பேதுரு! "இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்" (யோவான் 13:10). பொதுவாக குளிக்கும் முறை, அன்று செயல்பாட்டில் காணப்பட்டது. ஒருவர் குளித்துக் கொண்டவராக இருந்தாலும், வீட்டிற்குத் திரும்பும்போது, பாதங்களைக் கழுவுவதன் மூலம் சுத்தம் செய்யும் காரியங்களை நிறைவடையச் செய்வது அன்றைய வழக்கமாய் இருந்தது. இதையே நமது கர்த்தர் குறிப்பிட்டார் என்று தோன்றுகின்றது. அப்போஸ்தலர்கள் இயேசுவுடன்கூடக் காணப்பட்டபடியாலும், மூன்று வருட காலமாக அவருடைய அன்பு, சாந்தம், நற்பண்பு, பொறுமை, தாழ்மையின் ஆவியினுடைய தாக்கத்தின் கீழ்க் காணப்பட்டபடியாலும், இவர்களிடத்தில் பேசப்பட்ட, "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிக்கப்பட்டதினிமித்தம்" மிகுதியாய் ஆசீர்வதிக்கப்பட்டார்கள் என்று பார்க்கின்றோம் (யோவான் 15:3; எபேசியர் 5:26).

சீஷர்கள் மத்தியில் வெளிப்பட்ட இதே பெருமையின் ஆவியானது, அவர்கள் மத்தியில் அவர்களுடைய பொருளாளராகிய யூதாஸ் மூலமாகவே கொஞ்சம் தூண்டப்பட்டது என்ற குறிப்புக் கர்த்தருடைய வார்த்தைகளுக்குள் காணப்படுகின்றது. அதாவது, "ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களை எப்பொழுதும் கெடுக்கிறவைகளாக" இருக்கின்றது (1 கொரிந்தியர் 15:33). சீஷர்களின் மாபெரும் போதகரிடமிருந்து வந்த இந்தக் கடைசி பாடமானது, படிப்பினைகளையும், கடிந்துகொள்ளுதல்களையும் ஏற்றுக்கொள்வதற்குரிய சரியான நிலையில் அநேகமாக இருந்த சீஷர்களிடம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தினதாக இருந்தது. ஆனால், யூதாசினுடைய பாதங்கள் கழுவப்பட்டிருந்தாலும், இப்பாடமானது அவனிடத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இராப்போஜனத்திற்கு முன்னதாக யூதாசுக்குள் புகுந்த தீமையின் ஆவியானது, அதாவது பணம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பமும், கர்த்தரைக் காட்டிக் கொடுப்பதன் மூலம் அப்பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானமும், அவனுக்குள் தொடர்ந்து காணப்பட்டுக் கொண்டிருந்தது. மேலும் நமது கர்த்தருடைய தாழ்மையும், பாதங்கள் கழுவின பணியும் யூதாசை நேராக திசைதிருப்புவதற்குப் பதிலாக இயேசுவை இன்னமும் குறைவானவராகக் கருதும் எதிர்மாறான திசைக்கே திருப்பிற்று. இப்படியே அனைத்துக் காலக்கட்டங்களிலும், பெயரளவில் கர்த்தருடைய நாமத்தை அறிக்கை பண்ணினவர்களின் விஷயங்களில் காணப்படுகின்றது. கர்த்தருடைய அந்தப் போதனைகள், மாதிரிகள் மற்றும் அனுபவங்கள் சிலருக்கு ஆசீர்வாதமாகவும், நன்மை கொடுக்கக்கூடியதாகக் காணப்பட்டாலும், சிலருக்குப் பாதிப்பாகவும் காணப்படுகின்றது. எல்லாவிதத்திலும் சுவிசேஷமானது, "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்துக்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும்" இருக்கின்றது (2 கொரிந்தியர் 2:16). தேவனுடைய இரக்கமும், நற்பண்புகளும் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினது போன்றே, இயேசுவினுடைய அன்பும், தாழ்மையும் யூதாசினுடைய இருதயத்தைக் கடினப்படுத்திற்று. மேலும், இதே காரியங்கள் இன்றும் நிலவுகின்றது. இவைகள், இன்றைய நாட்களில் சம்பவிக்கும் அறுவடையின் புடைத்தெடுத்தல்களில் பார்க்கப்படலாம் (யாத்திராகமம் 7:13).

அனைவருடைய பாதங்களைக் கழுவும் வேலையை முடித்த பிற்பாடு, இயேசு தமது மேலங்கியை உடுத்திக்கொண்டு இராப்போஜனத்திற்காக (இது பஸ்கா இராப்போஜனமாகும்; அப்பமும், திராட்சரசமுமுள்ள நினைவுகூருதல் இராப்போஜனமானது பிற்பாடு நிறுவப்பட்டது) மேஜையில் பக்கவாட்டில் சாய்ந்து, படுத்த நிலையில் இருந்தார். இப்பொழுது வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு நமது கர்த்தர், தாம் செய்த காரியத்தைக்குறித்து விவரித்தார். இப்படிப்பட்ட மதிப்புக் குறைவான வேலையைச் செய்ததினிமித்தம் தாம் போதகர் அல்லவென்றோ, கர்த்தர் அல்லவென்றோ குறிப்பதில்லை என்று சுட்டிக்காட்டினார். மாறாக கர்த்தரும், போதகருமாகிய தாம் பிதாவின் குடும்பத்திலுள்ள சிறிய அங்கங்களுக்கு ஊழியம் செய்வதிலும், அவர்கள் சௌகரியத்திற்கென/ஆறுதலுக்கென மிகுந்த மதிப்புக் குறைவான வேலையையும் செய்து கொடுப்பதிலும், தாம் விருப்பமற்ற நிலையில் காணப்படவில்லை என்பதே தமது செய்கையின் விளக்கம் என்றும், சீஷர்களாகிய அவர்களும் ஒருவருக்கொருவர் இப்படிப்பட்ட ஊழியங்களைச் செய்வதில் விருப்பமற்றவர்களாய் இராமல், மகிழ்ச்சியுடன் செய்பவர்களாக இருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

நமது கர்த்தர் முன்வைத்த இம்மாதிரியானது, சொல்லர்த்தமாக கால்களைக் கழுவி செய்ய வேண்டிய ஊழியமல்ல; இப்படியாக கால்களைக் கழுவும் வேலையைக் கர்த்தருடைய ஜனங்கள் வருடந்தோறும், வாரந்தோறும், மாதந்தோறும் அல்லது வேறு ஏதாவது சமயங்களில் சடங்காச்சாரம் போல் செய்யப்பட வேண்டும் என்ற விதத்தில் ஒரு காரியமும் இந்த மாதிரியில் தென்படவில்லை. மாறாக, இந்த மாதிரியின் பின்னணியில் காணப்படும் கொள்கையையே அனைத்து நேரங்களிலும் அவருடைய பின்னடியார்கள் மத்தியில் கைக்கொள்ளப்பட வேண்டும். அதாவது, அவர்கள் ஒருவரையொருவர் அன்புகூர வேண்டும், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்திட வேண்டும், மேலும் ஒருவருக்கொருவரின் நலன் மற்றும் சௌகரியம் கருதி செய்யப்படும் எந்த வேலையும் மிகவும் மதிப்புக் குறைந்த வேலை எனக் கருதப்படக்கூடாது என்பவைகளே அந்தக் கொள்கையாகும்.

நினைவுகூருதல் இராப்போஜனம் மற்றும் ஞானஸ்நானம் அநுசரிப்பது போன்று இச்சம்பவமும் சொல்லர்த்தமாகக் கடைபிடிக்கப்பட்டு, அநுசரிக்கப்பட வேண்டும் என்று அர்த்தம் காண்கிறவர்கள் தவறாய்ப் புரிந்துகொண்டுள்ளனர் என நாம் எண்ணுகின்றோம். இதில் எவ்விதமான சொல்லர்த்தமான காரியங்களுமில்லை; ஜீவியத்தின் ஒவ்வொரு விஷயத்திலும் காணப்படும் தாழ்மையெனும் கொள்கையைச் சித்தரிக்கும் உதாரணமாகவே இது காணப்படுகின்றது. ஒருவேளை, கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் எவருக்கேனும் கால்கள் கழுவப்படுவதற்கோ அல்லது மதிப்புக் குறைவான உதவிகளோ தேவைப்படுமாயின் அவர்களுடைய சகோதர சகோதரிகள் மகிழ்ச்சியுடனும், சந்தோஷத்துடனும் அவர்களுக்கு அவைகளைச் செய்ய வேண்டும். மேலும், கர்த்தருடைய ஆவியுடைய அனைவரும் இப்படிப்பட்ட பணிவிடைகளை/ஊழியங்களைக் கண்டிப்பாகச் செய்வார்கள். ஆனால், கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொருவரும் முதலாவது, சொல்லர்த்தமாக தங்கள் கால்களைக் கழுவி தங்களைச் சுத்தம் செய்து கொண்டு, பின்னர் ஒவ்வொருவரும் மற்றவருடைய கால்களைக் கழுவி சடங்காச்சாரமாக அநுசரிக்க வேண்டும் என்று கூறும் காரியமானது, நாம் பின்பற்றும்படி அவர் நமக்குப் போதித்துள்ள மாதிரிக்கு எதிர்மாறானதாய் காணப்படும். அவர் காட்டின மாதிரியானது, ஒரு பணிவிடையே தவிர, சடங்காச்சாரமான அநுசரிப்பும், அசௌகரியமும் அல்ல.

வருடத்திற்கு ஒருமுறை, "புனித வெள்ளிக்கு" முந்தினநாள் அன்று, வயதுமுதிர்ந்த தரித்திரர்களில் பன்னிரண்டு பேர் தெரு வீதிகளிலிருந்து கொண்டுவரப்பட்டு, போப்பினால் பாதங்கள் கழுவப்படுகின்றனர். ஆனால் இந்தத் தரித்திரர்கள் முதலில் தனிப்பட்ட விதத்தில் முன்னேற்பாடாக சுத்தம் பண்ணப்பட்டுக் கொண்டுவந்த பிற்பாடே போப்பினால் பாதங்கள் கழுவப்படுகின்றார்கள். போப்பின் இந்தச் சடங்காச்சாரமான கால்கள் கழுவும் அநுசரிப்பானது, அநேக கனத்திற்குரிய நபர்கள் முன்பாகவே நடக்கின்றது. இதேவிதமான அநுசரிப்பானது, ஆஸ்டிரோ-ஹங்கேரியைச் சார்ந்த யோசேப்பு என்னும் சக்கரவர்த்தியினாலும்கூட வருடந்தோறும் அநுசரிக்கப்படுகின்றது. இவர்கள் இருவரின் அநுசரிப்புமே நாம் கர்த்தரின் மாதிரியை புரிந்துகொண்ட விதத்தில் அம்மாதிரிக்கு இசைவாக வைத்துப் பார்க்கும்போதும், எதிர்மாறானவைகளாகவே தென்படுகின்றது. மேலும் கிறிஸ்தவர்களின் சில பிரிவினர் கைக்கொள்ளும் கழுவுதல் தொடர்பான சில அநுசரிப்புகளும்கூட எதிர்மாறானவைகளாகவே காணப்படுகின்றது.

கர்த்தருடைய பின்னடியார்களாக உண்மையாய்க் காணப்படும் அனைவரும் சாந்தம் மற்றும் தாழ்மை மற்றும் அவருடைய சரீர அங்கங்களுக்கு ஊழியம் புரிதல் எனும் போதகரின் ஆவிக்கான உண்மையான மாதிரிக்குக் கவனமாய்ச் செவிசாய்த்து, அப்படியே பின்பற்றுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். இக்காரியங்கள் அனைத்தும், "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்ற வார்த்தைகளுக்குள் அடங்குகின்றது (யோவான் 13: 16, 17).

தாலந்துகளோ அல்லது திறமைகளோ உடையவர்களும் அல்லது வாழ்க்கையில் கனம் வாய்ந்த ஸ்தானங்கள் வகிப்பவர்களும் மற்றும் சபையில் செல்வாக்கு நிறைந்த ஸ்தானங்களில் விசேஷமாகக் காணப்படுகிறவர்களுமாகிய கர்த்தருடைய ஜனங்களில் அநேகர், விசேஷமாக போட்டி மனப்பான்மை, வாக்குவாதம் பண்ணும் மனப்பான்மை, வீண் செருக்குக்கொள்ளும் தன்மை முதலியவைகளினால் ஆட்கொள்ளப்பட வாய்ப்புகள் உள்ளன. ஆகவே மாம்சத்தின் இந்த

விஷயங்களுக்கு எதிராக விசேஷ வண்ணமாக ஜாக்கிரதையுடன் காணப்பட வேண்டும். "பொறாமையுடன் ஏறெடுத்துப் பார்க்கச் செய்யும் ஒரு பெருமை உண்டு மற்றும் ஏளனத்துடன் கீழாய்ப் பார்க்கச் செய்யும் ஒரு பெருமையும் உண்டு" என்ற வாசகமானது மறக்கப்படக் கூடாது. எவ்விஷயத்தைக் குறித்தாகிலும் பெருமை காணப்படுமாகில் அது தேவனுடைய பார்வையில் குற்றத்திற்குரியதாகவும், அவருக்குப் பிரியமற்றதாகவும் காணப்படும். "பெருமையுள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கின்றார், தாழ்மையுள்ளவர்களுக்கோ அவர் கிருபையளிக்கின்றார்." ஆகவே, கர்த்தருடைய அன்பில் நிலைத்திருக்கிறவர்கள் தாழ்மையாய் இருக்கும் விஷயத்தில் மிகவும் கவனமாயிருக்க வேண்டும். அதாவது, மிகவும் தாழ்மையாக, நடத்தையில் மிகவும் தாழ்மையாக, எளிமையாக, குறிப்பாக மனதில் தாழ்மையாக இருப்பதில் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும் (யாக்கோபு 4:6; 1 பேதுரு 5:5).

*****

# நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்

## யோவான் 14:1-14

சீஷர்களுடைய பாதங்களை அவர் கழுவின பிற்பாடு, துணிக்கையானது யூதாசுக்குக் கொடுத்தப்பிற்பாடு, யூதாஸ் புறப்பட்டுப்போன பிற்பாடு, தம் நிமித்தம் அந்த இரவில் சீஷர்கள் அனைவரும் இடறலடைவார்கள் என்று சீஷர்களுக்குக் கூறின பிற்பாடு, சேவல் கூவுவதற்கு முன்னதாக பேதுரு தம்மை மூன்றுமுறை மறுதலிப்பார் என்று தெரிவித்த பிற்பாடு, பதினொரு பேரின் இருதயங்களும் பாரம் அடைந்ததாகவும், குழப்பம் அடைந்ததாகவும், நடக்கப்போகிறவைகள் குறித்த பயத்தினால் கலக்கமடைந்ததாகவும் இருந்திருக்கும் என்பதை நம்மால் அறியமுடிகிறது. ஆண்டவர் தம்மை மேசியா என்றும், இராஜ்யத்தின் சுதந்தரவாளி என்றும் மற்றும் தாங்கள் அவருடைய சிங்காசனத்தில் அவரோடு கூட இருப்பார்கள் என்றும் கூறியபோது, தாங்கள் அதைத் தவறாய்ப் புரிந்துக்கொண்டார்களா அல்லது தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்களா? எனச் சீஷர்கள் கலங்கினார்கள். ஐந்து நாட்களுக்கு முன்னர்தான் அவர் கழுதையின் மீது ஏறி வந்தபோது, இஸ்ரயேலின் இராஜாவாக, தேவனுடைய குமாரனாக, ஜனங்களால் ஓசன்னாக்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க, இப்பொழுது ஆண்டவர், "துக்கம் அடைவதையும்," காட்டிக்கொடுப்பது பற்றிக் கூறுவதும், சீஷர்களாகிய தாங்கள் சிதறடிக்கப்படுவது குறித்தும், தம்முடைய சொந்த மரணம் குறித்தும் கூறுவதை அவர்கள் எப்படித்தான் புரிந்துக்கொள்ள/எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கலங்கியிருந்தனர்.

இப்படியான அவர்களுடைய கலகத்தில் காணப்பட்ட எண்ணங்களுக்குத்தான், நமது கர்த்தர் யோவான் சுவிசேஷத்தின் 14, 15, 16 மற்றும் 17-ஆம் அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆறுதலும், தேறுதலுமான வார்த்தைகளை அவர்களிடம் கூறுகின்றார். இவ்வார்த்தைகளை அவர், "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்தில் விசுவாசமாயிருங்கள்" என்று கூறி ஆரம்பிக்கின்றார்.

அப்போஸ்தலர்கள் இயேசுவுடன் தொடர்புக்குள் வருவதற்கு முன்னதாகவே, அவர்கள் ஏற்கெனவே தேவனுடைய ஊழியக்காரர்கள் என, தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் ஏற்கெனவே தேவனில் நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டிருந்தனர். அவர்கள் கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாக இருந்தனர். இதை நமது கர்த்தருடைய ஜெபத்தின் வார்த்தைகள் உறுதிப்படுத்துகிறது. அதாவது, "அவர்கள் உம்முடையவர்களாக இருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர்" (யோவான் 17:6) என்ற வார்த்தைகள் உறுதிபடுத்துகின்றது. அவர்களுடைய இருதயத்தின் கலக்கமானது, அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளின் அஸ்திபாரம் சார்பானது அல்ல, ஏனெனில் இந்த அஸ்திபாரங்கள் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தேவனை அறிந்தவர்களாகவும், தேவனில் விசுவாசம் உள்ளவர்களாகவும் மாத்திரம் இராமல், இராஜ்யம் தொடர்பான தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், அந்த இராஜ்யத்தின் வாயிலாகப் பூமியின் குடிகள் அனைத்தின் மீது வரும் ஆசீர்வாதங்களையும் அறிந்திருந்தவர்களாகவும், விசுவாசித்திருந்தவர்களாகவும் காணப்பட்டனர். அவர்களுடைய மனங்களுக்கு முன்பாக எழும்பின கேள்வி, இயேசு தொடர்பானதேயாகும். அதாவது, இயேசு உண்மையில் மேசியாவா? அல்லது அவருடைய அற்புதமான வார்த்தைகள் மற்றும் கிரியைகளைக் கண்டு, தாங்கள்தான் தவறான சில எதிர்ப்பார்ப்புகளை வளர்த்துவிட்டார்களா? மூன்றரை வருட ஊழியத்திற்குப் பிற்பாடு, அவர் தாங்கள் கொண்டிருந்த எதிர்ப்பார்ப்பின்படி தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து, அனைத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்துவதற்குப் பதிலாக, அவர் தம்முடைய சத்துருக்களின் கரங்களில் மரிப்பதை, இப்பொழுது எப்படி எடுத்துக்கொள்ளவேண்டும்? அவர், தாம் போகப்போவதாகவும், அவர் போகவில்லையெனில், தங்களால் அங்குவரமுடியாது என்றும் கூறுகின்றார்; இதையெல்லாம் எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதே, அவர்களுடைய மனங்களுக்கு முன் எழும்பிநின்ற கேள்விகளாகும்.

"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்," "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" (யோவான் 3:3, 5) என்று கர்த்தர் தம்முடைய ஊழியத்தின் ஆரம்பக்கட்டத்தில், நிக்கொதேமுவிடம் பேசின வார்த்தைகளின் அர்த்தத்தை, இன்னமும் அப்போஸ்தலர்கள் கற்றறிந்துகொள்ளவில்லை.

இவைகள் ஆவிக்குரிய சத்தியங்களாய் இருப்பதால், பெந்தெகொஸ்தே நாளில் இவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டு, "சகலபரிசுத்தவான்களோடு கூடத் தெய்வீகத் திட்டத்தினுடைய அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்துக்கொள்வதற்கு" அனுமதிக்கப்படுவது வரையிலும் இவைகள் சீஷர்களால் புரிந்துக்கொள்ளப்படுவதில்லை. ஆனால் அவர்களுக்கு இப்பொழுது கொஞ்சம் ஆறுதல் தேவை. ஆகவே அவர்களால் புரிந்துக்கொள்ள முடியும் அளவுக்கு உள்ள சிறப்பானதும், பலமானதுமான ஆவிக்குரிய உணவை, அறிவுரையை அவர்களுக்குக் கொடுக்க முற்பட்டார். அவர்களிடத்தில் கூறுவதற்கு அவருக்கு அநேகம் காரியம் இருந்தது; ஆனால் அவைகளையெல்லாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகமானது, அவர்களுடைய இருதயங்களை ஆயத்தப்படுத்துவது வரையிலும், அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது மற்றும் புரிந்துக்கொள்ள முடியாது.

பிதாவிடத்திலும், அவருடைய திட்டத்திலுமுள்ள அவர்களது விசுவாசத்தை அவர்களுக்குள் புத்துயிரடையச் செய்யத்தக்கதாக, "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" என்று கூறி நமது கர்த்தர் ஆறுதல் படுத்துவதை ஆரம்பித்தார். அதாவது, "பிதாவினுடைய திட்டமனைத்தும் நிறைவேறும் என்ற உண்மையை உணர்ந்துக்கொள்ளுங்கள். மேலும் பிதாவுக்கு, வார்த்தையிலும், கிரியையிலும் நான் உண்மையாய் இருப்பதை நீங்கள் பார்த்துள்ளபடியினாலும், என்னிலுள்ள நற்கிரியைகளில் பிதாவினுடைய வல்லமை வெளிப்பட்டுள்ளதை நீங்கள் பார்த்துள்ளபடியினாலும், விசுவாசத்தினுடைய நங்கூரம் உறுதியாய் நிலைத்திருப்பதாக. என்னைத் தொடர்ந்து விசுவாசித்துக்கொண்டிருங்கள், தொடர்ந்து நம்பிக்கைக்கொண்டிருங்கள். இப்படியிருந்தால் உங்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். தெய்வீகத் திட்டத்தினுடைய விரிவாகுதலுக்காகக் காத்திருங்கள். அது நீங்கள் எதிர்ப்பார்த்த உச்சக்கட்ட எதிர்ப்பார்ப்பைக் காட்டிலும், திருப்தியை அளிக்கும். நான் போகிறேன் என்று சொன்னப்படியினால், அதாவது பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்று சொன்னப்படியினால் நீங்கள் குழம்பிப்போயிருக்கிறீர்கள். ஆனால், நான் உங்களுடைய நன்மைக்காகவே போகிறேன் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். அநேக வாசஸ்தலங்களுள்ள என்னுடைய பிதாவின் வீட்டில் உங்களுக்கென ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தும்படிக்குப் போகின்றேன். இதைச் செய்த பிற்பாடு, நான் நிச்சயமாய் மீண்டும் வந்து நாம் என்றென்றும் சேர்ந்துக் காணப்படத்தக்கதாக, உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்" என்ற விதத்தில் இயேசு கூறினார்.

இப்படியாகச் சொற்ப வார்த்தைகள் மூலம், ஆண்டவர் சுவிசேஷ யுகத்தின் வேலையை விவரித்து, தம்முடைய இரண்டாம் வருகையைக் குறித்தும், யுகத்தின் முடிவில் சபையின் மகிமையடைதலைக் குறித்தும் சுட்டிக்காட்டினார். அவர்கள் கண்டிப்பாகக் கடந்துச்செல்ல வேண்டிய பொறுமைக்கான மற்றும் விசுவாசத்திற்கான பரீட்சைகளைக் குறித்தும் இங்கு அவர் விவரமாய் விவரிக்கவில்லை. இவைகள் குறித்து வேறே தருணங்களில், எச்சரிப்புக் கொடுத்துள்ளார் (மத்தேயு 24-ஆம் அதிகாரம்). இப்பொழுது அவர்களுடைய இருதயங்கள் கலக்கமடைந்துள்ளது. அவர் கடந்துப்போவது அவசியம் என்றும், அவரது இரண்டாம் வருகை நிச்சயமாய்க் காணப்படுமென்றும், ஆயத்தம் பண்ணப்படும் வாசஸ்தலங்களில் நித்திய காலத்திற்குமான ஐக்கியத்திற்குள் அனைவரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பது நிச்சயமானது என்றும், உள்ள வாக்குத்தத்தங்களினால் அவர்களை அவர் ஆறுதல்படுத்த மாத்திரம் செய்பவராக இருந்தார்.

பிதாவின் வீடு என்பது, உண்மையில் அண்டசராசரமாகும்; மற்றும் அடையாள வார்த்தைகளில் பேசும்போது, வானம் அவருடைய சிங்காசனமாகவும், பூமி அவருடைய பாதப்படியாகவும் கூறப்படுகிறது. தேவனுடைய புத்திரர்கள் அனைவருக்குமான நித்திய காலத்திற்குரியதுமான ஆசீர்வாதங்களுக்குத் தெய்வீக விவேகமானது, மிகுதியான முன்னேற்பாடுகளைப் பண்ணியுள்ளது. தெய்வீக ஏற்பாடுகளில், மனிதனுடைய விழுகைக்கு முன்னதாக மனிதன் தேவனுடைய இசைவான நிலைமையில் காணப்பட்டபோது, அவனுக்கு ஓர் ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது. ஆனால் பாவத்தின் காரணமாக, நீதிமான்களுக்குரிய நித்தியமான வாசஸ்தலத்தை அடைவதற்கான மனிதனுடைய உரிமைகள் அனைத்தும், பறிமுதல் பண்ணப்பட்டது. மேலும் நமது அருமையான மீட்பர் மனிதனையும், அவனால் இழக்கப்பட்ட அனைத்து உரிமைகளையும், உடைமைகளையும் மீட்பதற்கென உலகத்தில் காணப்பட்டவராய் இருந்தார் (லூக்கா 19:10; எபேசியர் 1:14). அவர் பேசிக்கொண்டிருந்தபோது, (மனிதனால் இழக்கப்பட்டது அனைத்தையும்) அவர் இன்னமும் விலைகொடுத்து வாங்கவில்லை... இன்னும் சில மணிநேரங்களுக்குள்ளாகக் கல்வாரியில் அனைத்தையும் நிறைவேற்றிட நமது கர்த்தர் சித்தங்கொண்டிருந்தார். இதற்கென அவர் தம்மைப் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது. அதாவது ஒரு மனிதனாக, அவர் கிறிஸ்து இயேசுவாகிய மனிதனான, தம்மை முழுமையாக

ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்தது; மற்றும் இப்படியாகத் தம்மை ஒப்புக்கொடுத்த பிற்பாடு, மனிதர்கள் மத்தியில் அவரால் மனிதனாகக் காணப்பட முடியாது. தெய்வீகச் சித்தத்திற்கு அவர் கீழ்ப்படிந்து, மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாகிய தம்மை, பலிச் செலுத்துவதன் மூலமாக ஆதாமையும், ஆதாமுடைய சந்ததியையும் மீட்டுக்கொள்வது மாத்திரமல்லாமல், தாம் மரணத்திலிருந்து மேலான தளத்திலுள்ள புதிய சுபாவத்திற்கு, திவ்வியச் சுபாவத்திற்கு உயர்த்தப்படுவதும் அவருக்கான நம்பிக்கையுமாய் இருந்தது. ஆகவே, கிறிஸ்து இயேசு எனும் மனிதனாகிய அவர், அவர்களை விட்டுக் கடந்துப்போவதும், அவரை மனுஷனாக அவர்கள் இனிமேல் காணாமல் இருப்பதும் அவசியமாயிருந்தது. ஆனால் ஏற்றவேளையில், அவருடைய இரண்டாம் வருகையின்போது, அவர்களும் மனித நிலைமையிலிருந்து, ஆவிக்குரிய நிலைமைக்கு மாறி, "அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசித்து அவருக்கு ஒப்பாயிருப்பார்கள்" (1 யோவான் 3:2).

அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த பிற்பாடு, பிதாவிடம் ஏறிச்சென்று, மனுஷர் சார்பாகத் தம்முடைய பலியை, மனிதனுக்கான ஈடுபலியாக ஒப்படைப்பதும் அவசியமாய் இருந்தது. இதையும் அவர் செய்தார். பாவங்களுக்கான அந்தப் பலியானது, மனிதனின் சார்பாகப் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கும், இதன் காரணமாகவே, இயேசுவைத் தங்களுடைய மீட்பராக ஏற்றுக்கொள்ளும் அனைவரின் மேலும் ஆசீர்வாதம் கடந்துவருகின்றது என்பதற்கும், பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதங்கள் தெய்வீகச் சான்றாக/உறுதியாகக் காணப்படுகின்றது.

நம்முடைய கர்த்தருடைய மரணத்திற்கும், அவருடைய இரண்டாம் வருகையின் காலத்திற்கும் இடையிலான, இடைப்பட்ட காலமானது, எவருடைய விசுவாசக் கண்ணோட்டத்தின்படியும் நீண்ட காலம் அல்லவே. (1) இது தேவனுடைய கண்ணோட்டத்தில் நீண்ட காலப்பகுதியல்ல, ஏனெனில் அப்போஸ்தலர் பேதுரு, "கர்த்தருக்கு . . . ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும்" (2 பேதுரு 3:8) என்று கூறியுள்ளார். (2) இது உண்மையான விசுவாசிகளுடைய கண்ணோட்டத்திலும் நீண்டபகுதியல்ல, ஏனெனில் விசுவாசிகள் எவருடைய வாழ்நாட்களும், காத்திருக்கும் நாட்களும், ஐம்பது வருடங்களுக்கு மேலாக இருந்ததில்லை. இந்த இடைப்பட்ட காலப்பகுதியை, நாம் நீண்ட மற்றும் மிகவும் பொருத்தமற்றக் கண்ணோட்டத்தின் படிப் பார்க்கக்கூடாது. அதாவது, ஏதோ நாம் பதினெட்டு நூற்றாண்டுகளாக வாழ்ந்து, காத்துக்கொண்டிருப்பது போன்று பார்க்கக்கூடாது. "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்;" மணவாளன் வரும்போதும், ஒவ்வொருவனும் அவருடன் சேர்த்துக்கொள்ளப்படத்தக்கதாக, ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் பரீட்சைகளும், மெருகூட்டப்படுதல்களும், ஆயத்தப்படுத்தல்களும் போதுமானதாயிருக்கும். இப்படியாக ஆயத்தப்பட வேண்டியது ஒருவிதத்தில் ஒட்டுமொத்த சபையாக இருந்தாலும் கூட அது முக்கியமாக, கர்த்தருடைய பின்னடியார்களிலுள்ள ஒவ்வொருவரின், தனிப்பட்ட விதத்திலான ஆயத்தப்படுத்தலாகவும் இருக்கின்றது.

"நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள்" (யோவான் 14:4). மூன்று வருட காலமாக நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்கு தம்மைத் தெரியப்படுத்திக்கொண்டிருந்தார். இன்னுமாக அவர்களுக்குப் பிதாவின் குணலட்சணத்தைக் குறித்தும் தெரியப்படுத்திக்கொண்டிருந்தார். ஆகவே, இப்பொழுது தாம் பிதாவினிடத்திற்கு, வீட்டிற்குச் செல்வதாக அவர் தெரிவித்தப்போது, அவர்கள் பிதாவை முன்பில்லாத அளவுக்கு அறிந்துள்ளதையும், முன்பில்லாத அளவுக்கு பிதா அளிக்கும் நீதியின் மற்றும் உண்மையான சந்தோஷத்தின் வீட்டைக் குறித்து உணர்ந்துக்கொள்ள முடிகின்றதையும் உணர்த்திட வேண்டியவர்களாய் இருந்தார்கள். இன்னுமாகக் கர்த்தருடைய போதனைகள் மற்றும் வழிநடத்துதலின் கீழான அவர்களுடைய இந்த அனுபவமானது, தேவனுடைய வழியுடன் அவர்களைப் பழக்கிவைத்துள்ளது. அதாவது, அவ்வழியைத் தேவனுடைய வழி என்று அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளாதிருந்த போதிலும், அவ்வழிக்கு அவர்கள் பழக்கிவிக்கப்பட்டிருந்தனர். ஆகவேதான் நமது கர்த்தர், "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கின்றேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று கூறினார்.

நமது கர்த்தருடைய பலியின் மூலமாக, "ஈடுபலியின்" மூலமாக, அவருடைய பலியின் புண்ணியம் பாவிகளுக்குத் தரிக்கப்படுவதன் மூலமாக மாத்திரமே, சீஷர்கள் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் அல்லது மீண்டுமாகப் பிதாவினிடத்திலான ஐக்கியத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்ற விதத்தில் நமது கர்த்தர், "வழியாக" இருக்கின்றார். அவருடைய வார்த்தைகள், அவருடைய அறிவுரைகள், அவருடைய வழிகாட்டுதலின் வாயிலாக மாத்திரமே, சீஷர்கள் தேவனுடைய ஆவிக்கு, சத்தியத்தின் ஆவிக்கு இசைவுடன் வருவதற்குரிய நம்பிக்கைக்

காணப்படும் என்ற விதத்தில் நமது கர்த்தர், "சத்தியமாக" இருக்கின்றார். மனுக்குலம் முழுவதும் மரித்து, தெய்வீகத் தண்டனை தீர்ப்பின் கீழ்க் காணப்படுவதால், ஜீவனுக்கான உரிமைகள் அனைத்தையும் இழந்துள்ளபடியினால், எவரும் நமது கர்த்தர் மூலம் அல்லாமல், அதாவது நமக்காக அவர் கொடுத்திட்ட ஜீவன் மூலமாக வராத எவரும், ஜீவனுக்குரிய நிலமைக்குள் மீண்டுமாக வரமுடியாது என்றவிதத்தில் நமது கர்த்தர் "ஜீவனாக" இருக்கின்றார். இப்படியாக, அவர் நமக்கான ஈடுபலியாகவும் (அ) வழியாகவும், நீதியிலும், சத்தியத்திலும் நமக்கான போதகராகவும், நமக்கு ஜீவன் கொடுப்பவராகவும் இருக்கின்றார்..."அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை" (அப்போஸ்தலர் 4:12). "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்," அதாவது வேறெந்த வழி மூலமாகவும், வேறெந்த சத்தியம் மூலமாகவும், வேறெந்த ஜீவன் மூலமாகவும் பிதாவினுடைய வீட்டிலுள்ள வாசஸ்தலம் ஏதாகிலும் ஒன்றில் இடம்பெற்றுக்கொள்ளலாம் என்று, எந்த மனிதனும் எண்ணிக்கொள்ளாதிருப்பானாக என்ற விதத்தில் கர்த்தர் கூறுகின்றார் (யோவான் 14:6).

இப்படியாகவே, ஆயிரவருட யுகத்தின்போதும், கிறிஸ்துவானவர் வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும் இருப்பார். கர்த்தர் தம்முடைய பலியின் மூலமாக, சுவிசேஷ யுக சபையாகிய, தம்முடைய மணவாட்டிக்கு, தேவனுடைய வீட்டிலுள்ள பரலோகப்பகுதியில் ஒரு வசிப்பிடத்தைத் திறந்து வைத்ததுபோன்று, அதே பலியின் மூலமாக, பிதாவின் வீட்டிலுள்ள பூலோகப்பகுதியில், ஒரு வசிப்பிடத்தை (அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்களுக்கு—அப்போஸ்தலர் 3:21) மீட்டு, மனுக்குலத்திற்குத் திரும்பக் கொடுப்பார். அந்தப் பூமிக்குரிய வசிப்பிடமோ, தேவனுடைய பரதீசாகக் காணப்படும்.

அப்போஸ்தலர்கள் அதிகமாய் ஆண்டவரை மதித்தாலும், அவருடைய பூரணம் குறித்த கருத்தை,அதாவது அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனுடைய சாயலாய் இருக்கின்றார் என்ற கருத்தை, அவர்கள் கிரகித்துக்கொள்வதற்கு, அவர்களுக்குச் சிரமமாய் இருந்தது (1 தீமோத்தேயு 3:16). "தேவன் ஆவியாயிருக்கின்றார்," மாம்சத்தில் இல்லை; ஆகவே அவரைப் பார்க்க முடியாது என்பதாக அவர் கூறியுள்ளதையும் அப்போஸ்தலர்கள் கேட்டிருந்தனர்; மற்றும் இக்கருத்தை அவர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்தும் அறிந்திருந்தனர். "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" (யோவான் 1:18) என்பதை அவர் ஏற்கெனவே கூறியிருப்பதையும் அவர்கள் கேட்டிருக்கின்றனர். ஆனால், இயேசுவைத் தாங்கள் பார்க்கையில், தெய்வீகமானவரிடத்தில் காணப்படக்கூடிய அனைத்தையும் தாங்கள், அவரில் பார்க்கின்றார்கள்; அதாவது தெய்வீகமானவரின் பூரணச் சாயலை, மாம்சத்தில் பார்க்கின்றார்கள் என்ற விஷயத்தை, அவர்கள் அதுவரையிலும் கிரகித்துக்கொள்ளவில்லை. ஆகவேதான், "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்ற உண்மையினிடத்திற்கு அவர்களுடைய கவனத்தை அவர் திருப்ப வேண்டியிருந்தது. இவ்வார்த்தைகளை, தாம்தான் பிதா என்ற அர்த்தத்தில் அவர்களிடத்தில் அவர் கூறவில்லை. காரணம் பிதா தம்மிலும் பெரியவர் என்றும், தாம் செய்யும் கிரியைகள் பிதாவினுடைய வல்லமையினாலே செய்யப்படுகின்றது என்றும், அவர் அநேகம் தரம் தெளிவாய் அறிவித்திருக்கின்றார் (யோவான் 14:28, 10). மேலும் தேவன் கண்களுக்குப் புலப்படாதவர் போன்று இருப்பதுபோல, தம்மைப் பார்க்கும்போது, கண்களுக்குப் புலப்படாத ஜீவியைப் பார்ப்பதாக அவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டுமெனும் அர்த்தத்திலும் அவர் கூறவில்லை. அவர்கள் தம்முடைய குணங்களை, தம்முடைய நோக்கங்களை, தம்முடைய அன்பைப் பார்க்கும்போது, பிதாவை எல்லாவற்றிலும் உண்மையுடன் வெளிப்படுத்தும் மெய்யான தோற்றத்தின் ஒரு வெளிப்படுத்தலைக் காண்பதாகவே, அவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டுமெனும் அர்த்தத்தில் கூறினார். பிதாவுக்கும், தமக்கும் இடையே நிலவும் ஒற்றுமை குறித்தும், தம்முடைய சித்தமானது, பிதாவின் சித்தத்திற்குள் புதைக்கப்பட்டுள்ளது குறித்தும், தமக்கு வேறே சித்தமில்லை, "என் சித்தமல்ல, உம் சித்தமே ஆகக்கடவது" என்பதைக் குறித்தும் அவர்களைப் புரிந்துக்கொள்ள வைத்தார். இன்னுமாக, பிதா தம்முடைய வல்லமையின் மூலமாகவும், தம்முடைய ஆவியின் மூலமாகவும், தம்மில் வாசம் பண்ணினதால், தம்முடைய வார்த்தைகளும், கிரியைகளும் முற்றும் முழுமையாகப் பிதாவுடையதே என்றும் அவர்களுக்குப் புரியவைத்தார். தம்முடைய ஊழியத்தின் நாட்களில் அவர்களால் பார்க்கப்பட்ட கிரியைகள் அனைத்தும், தம் மீது உன்னதமானவரின் வல்லமை காணப்படுகின்றது என்பதற்கும், தம் மூலம் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதற்கும் சான்றாக இருக்கின்றது என்றும் அவர்களிடம் கூறினார். இவைகள் அப்போஸ்தலர்களை முழுமையாய்த் திருப்திப்படுத்தி, அவர்களுடைய இருதயங்களுக்குச் சமாதானத்தைக் கொண்டுவந்தது.

இன்னுமாக தாம் பிதாவினிடத்திற்குப் போக வேண்டியதன் அவசியம் பற்றி விவரிக்கும் வண்ணமாக, தாம் கடந்துப்போவதினால், தம்முடைய பின்னடியார்கள், தாம் செய்ததைக் காட்டிலும்

பெரிய கிரியைகள் செய்வார்கள் என்று நமது கர்த்தர் அறிவித்தார். இந்த "பெரிய கிரியைகளில்" சில, இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடுச் செய்யப்படும் என்று எண்ணுவது அநேகமாகச் சரியாகவும் இருக்கலாம். அதாவது மரணம் என்னும் நித்திரையினின்று மனுக்குலத்தின் உலகத்தை எழுப்பி, விருப்பமும் மற்றும் கீழ்ப்படிதலும் காட்டுகின்றவர்களை, மனுஷீக ஜீவனுக்குரிய முழுமையான பூரணத்திற்குத் திரும்பக் கொண்டுவருவதாகிய மாபெரும் கிரியை, இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு செய்யப்படும். இது உண்மையில் முதலாம் வருகையின் போது, நமது கர்த்தர் இயேசுவினால் செய்யப்பட்ட கிரியையைக் காட்டிலும், பெரிய கிரியைதான். காரணம், முதலாம் வருகையின் போது, கர்த்தர் இயேசு மரணத்தில் நித்திரை பண்ணிக்கொண்டிருந்த சிலரை, மனித சுபாவத்திற்குரிய முழுமையான பூரணத்திற்குக் கொண்டுவராமல் வெறுமனே எழும்பப்பண்ணினதே அவருடைய பெரிய கிரியையாக இருந்தது.

ஆனால் நம்முடைய அபிப்பிராயத்தின்படி, இவை மாத்திரமே கர்த்தருடைய பின்னடியார்கள், அவர்களுடைய ஆண்டவர் பண்ணின கிரியைக் காட்டிலும், செய்யும் பெரிய கிரியையல்ல. கர்த்தருடைய கிரியைகள் மாம்சீகத் தளத்திலேயே காணப்பட்டது. பரிசுத்த ஆவி அப்பொழுது அருளப்படவில்லை; அவர் ஈடுபலியைச் செலுத்தி, அதைப் பிதாவிடம் ஒப்படைத்து, அதைப்பிதா ஏற்றுக்கொள்ளாதது வரையிலும், பரிசுத்த ஆவி வருவதில்லை. இதன் காரணமாக, அவர் யாருக்கு ஊழியம் புரிந்திட்டாரோ, (அவருடைய சீஷர்கள் கூட ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை). அவர்களுக்கு அவரால் ஆவிக்குரிய கண்ணோட்டத்தின்படி போதிக்கமுடியவில்லை. அவர்களுடைய செவிகள், பூமிக்குரியது தொடர்பானவைகளினால் நிறைந்திருந்தது. பரலோகம் தொடர்புடைய காரியங்கள் பற்றி அவர்களால் புரிந்துக்கொள்ளப்பட முடியவில்லை. காரணம், "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்." "பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" (1 கொரிந்தியர் 2:10, 14; யோவான் 3:12).

இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கபடாமலும், புத்திரத்துவத்திற்குரிய சிலாக்கியம் இன்னமும் அருளப்படாத நிலமையிலுமுள்ள வேலைக்காரர் வீட்டாரின் மத்தியில், நமது கர்த்தரால் பூமிக்குரிய தளத்தின் அடிப்படையிலேயே அல்லாமல், மேலான தளத்தின் அடிப்படையில் எதையும் போதிக்கவும், செய்யவும் முடியவில்லை. அதாவது உவமைகளினாலும், மறைப்பொருள்களினாலுமே ஜனங்களிடம் போதித்தார். இவைகள் ஏற்றவேளையில் பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதல் கீழாக, சபை புரிந்துக்கொள்வார்கள். இதன் காரணமாகவே நம்முடைய கர்த்தருடைய அற்புதங்கள் அனைத்தும் சரீரப்பிரகாரமான நிலையிலும், எளிமையாய்ப் புரிந்துக்கொள்ளப்படும் அவரது போதனைகள் அனைத்தும், சுபாவத்தின்படியான மனிதனால் உணர்ந்துக்கொள்ளப்படும் நிலையிலும் காணப்பட்டது.

பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு, அதாவது பரிசுத்த ஆவி வந்திறங்கினப் பிற்பாடு கர்த்தரால் செய்யப்பட்டவைகளைக் காட்டிலும், கர்த்தருடைய ஜனங்கள் அவருடைய நாமத்தில், அவருடைய பிரதிநிதிகளாக இருந்து, பெரியதும், மிகவும் ஆச்சரியமானதுமான கிரியைகளைச் செய்தார்கள். கர்த்தர் குருடர்களின் கண்களைத் திறந்தார். ஆனால் அவருடைய பின்னடியார்கள் மனிதனுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களைத் திறப்பதற்குரிய சிலாக்கியத்தைப் பெற்றுக்கொண்டனர். கர்த்தர் சரீரத்தில் வியாதிப்பட்டவர்களைச் சொஸ்தப்படுத்தினார். ஆனால் அவருடைய சீஷர்கள் ஆவிக்குரிய நோயாளிகளைச் சொஸ்தப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டனர். கர்த்தர் சரீரப்பிரகாரமான குஷ்டரோகத்தைச் சொஸ்தப்படுத்தினார். ஆனால் ஆவிக்குரிய குஷ்டரோகமாகிய பாவத்தைச் சொஸ்தப்படுத்துவதற்குரிய சிலாக்கியம், அவருடைய பின்னடியார்களுக்கு உரியதாய் இருக்கின்றது. நம்முடைய கர்த்தர் மரித்தவர்களை உயிர்ப்பித்தார். ஆனால் அநேகரை மேன்மையான அர்த்தத்தில் மரணத்தை விட்டு நீக்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கப்பண்ணும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குரிய சிலாக்கியம், அவருடைய பின்னடியார்களுக்கு உரியதாய் இருக்கின்றது. இந்தப் பெரிய கிரியைகளுக்கான சிலாக்கியங்கள் கர்த்தருடைய ஜனங்களுக்குக் காணப்படுகின்றது. இந்தத் தங்களுடைய பெரிய ஆசீர்வாதங்களைப் புரிந்துக்கொண்டு, பிதாவின் வேலையில் ஊக்கத்துடனும், வைராக்கியத்துடனும் ஈடுபட்டிருப்பவர்கள் பாக்கியவான்களாக இருக்கின்றனர். ஆனால் கர்த்தருடைய தாலந்தைப் பெற்றுக்கொண்டு, அதை நிலத்தில், அதாவது வேலையின கீழ், இன்பத்தின் கீழ், சமுதாயத்தின் கீழ்ப் புதைத்துப் போடுபவர்கள், ஆண்டவருடைய இரண்டாம் வருகையின் போது, அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்றோ, அல்லது, "உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று அவர்களை நோக்கி கர்த்தர் கூறுவார் என்றோ எதிர்ப்பார்க்கக்கூடாது.

இன்னுமாக, சபை தொடர்புடைய அனைத்துக் காரியங்களிலும், தாம் தொடர்ந்து பிதாவினுடைய பிரதிநிதியாக இன்னமும் காணப்படுவதை, சுட்டிக்காட்டும் வண்ணமாக நமது கர்த்தர், யோவான் 14:13-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறி நமக்கு உறுதியளிக்கின்றார். அதாவது பிதா அனைத்தையும் குமாரனுடைய கரங்களில் ஒப்படைத்துள்ளார் என்றும், குமாரன் எல்லாவற்றிலும் பிதாவைக் கனப்படுத்தி, அவருடைய நாமத்திற்கு மகிமை சேர்ப்பார் என்றும், கூறி நமக்கு உறுதியளிக்கின்றார்.

*****

# வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்

## யோவான் 14:15-27

நமது கர்த்தர் தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலை நிறுவினப்பிற்பாடு, கலக்கமடைந்திருக்கும் தம்முடைய சீஷர்களுக்குத் தம்முடைய உரையைத் தொடர்ந்துகொண்டிருக்கையில், ஏற்றக்காலத்தில் அவர் திரும்பிவந்து அவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வதாக மாத்திரம் அவர் வாக்களிக்காமல், தாம் இல்லாத இடைப்பட்ட காலத்தில் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனையும் வாக்களித்தார். அவர் தம்முடைய மனித சுபாவத்தை ஒப்புக்கொடுக்கப்போகின்றபடியால், ஒப்புக்கொடுத்தப் பிற்பாடு அவர்களோடு அவரால் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாய் இருக்கமுடியாது. அவருடைய உயிர்த்தெழுதலில், அவர் பிதாவுக்கு ஒத்த தன்மையிலான ஆவிக்குரிய ஜீவியாக வரப்போகின்றபடியால், முழுச் சபையும் நிறைவடைந்து, அவரைப்போல் (மற்றும் பிதாவைப்போல்) ஆக்கப்பட்டு, அவரைக் கண்டு, அவரோடிருந்து, அவருடைய மகிமையில் பங்கடைவதற்குரிய காலம் வருவதுவரையிலும், பிதாவைச் சீஷர்களால் பார்க்க முடியாததுபோல, அவரையும் சீஷர்களால் பார்க்க இயலாது. உயிர்த்தெழுதலில் அவருக்கு ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக, அவர் ஒன்றில் சுவிசேஷ யுகம் முழுவதும், எவ்விதமான உதவியில்லாத நிலையில் சீஷர்களைத் தனியே விடுவதற்குரிய அல்லது வேறு ஏதாகிலும் விதத்தில் அவர்களுக்கு உதவியளிக்க ஏற்பாடு பண்ணுவதற்குரிய அவசியம் உண்டானது. நம்முடைய கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு, அவர் தம்முடைய சீஷர்களுக்கு முன்பாக சிறு கண நேரங்களில் சில முறைகள் தோன்றிக் காட்சியளித்தது என்பது, அவர் இன்னமும் மரித்த நிலைமையிலேயே இல்லையென்பதையும், அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்துவிட்டார் மற்றும் அவர் மனித சூழ்நிலைகளுடைய கட்டுப்பாட்டின் கீழ் இல்லை என்பதையும், சீஷர்களுக்கு உறுதிப்பண்ணும் நோக்கத்திற்காகக் கொடுக்கப்பட்ட அற்புதமான வெளிப்படுத்தல்களே ஆகும். அவர் தோன்றுவதற்கு எடுத்துக்கொண்ட மாம்ச சரீரங்களானது, அற்புதமாகத் தோன்றி, அற்புதமாக மறைந்தும் போனது. அவர் காற்றைப்போல் வந்து போய்விட்டார். (யோவான் 3:8; லூக்கா 24:26, 31; அப்போஸ்தலர் 1:3-4).

பரிசுத்த ஆவி என்பது வேறொரு தேற்றரவாளன், எனினும் தேற்றுதல் ஒரே வகையில்தான் காணப்படும். இங்கு இடம்பெறும் "தேற்றுதல்" (comfort) என்ற வார்த்தையானது, இவ்வசனத்தின் கருத்தாகிய பலப்படுத்தலை, தக்கவைத்தலைச் சரியாக வெளிப்படுத்துகிறதில்லை. "தேற்றுதல்" எனும் வார்த்தை கொடுக்கும் அர்த்தத்தின்படி பரிசுத்த ஆவி என்பது, வேதனைகளைத் தேற்றுகிறவராகவும், பயங்களைத் தணிக்கிறவராகவும் மாத்திரம் காணப்படாமல், பரிசுத்த ஆவியானது அவர்களது புரிந்துக்கொள்ளுதலை உயிர்ப்பிக்கின்றதாகவும், அவர்களது பக்தி வைராக்கியத்தைப் பலப்படுத்துகின்றதாகவும், அவர்களை நீதியில் சரிச்செய்யத்தக்கதாகவும், அவர்கள் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தை" சுதந்தரித்துக்கொள்ளத்தக்கதாகவும் எனத் தெய்வீக விவேகமானது அனுமதிப்பவைகளைச் செய்வதற்கும் மற்றும் சகிப்பதற்கும் அவர்களை உற்சாகப்படுத்துகின்றதாகவும் இருக்கின்றது.

சபையினிடத்திற்கு வந்து, சபையோடு யுகம் முழுவதும் தங்கி, உண்மையுள்ளவர்களின் நலனுக்கடுத்த விஷயங்களை மேற்பார்வையிட்டு வழிநடத்துகிறதாகிய பரிசுத்த ஆவி அல்லது பரிசுத்தமான செல்வாக்கு என்பது, பிதா மற்றும் குமாரன் இருவருடைய பிரதிநிதியாக இருக்கின்றது. சபையின் விஷயத்தில், கர்த்தர் இயேசுவின் பிரதிநிதியாக, பரிசுத்த ஆவி காணப்படுகின்றது என்ற கருத்தானது, அநேக இடங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சில சமயம் கர்த்தரும், அவருடைய ஆவியும்/செல்வாக்கும் மாறிமாறிப் பேசப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கின்றேன்" என்று சீஷர்களிடம் இயேசு கூறுகின்றார். இன்னுமாக, "நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன்; உங்களிடத்தில் (பரிசுத்த ஆவியின் மூலமாக) வருவேன்" (யோவான் 14:18). இன்னுமாக, "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும் (பரிசுத்த ஆவியின் மூலமாக) நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்... அவனுக்கு என்னை (பரிசுத்த ஆவியின் வாயிலாக) வெளிப்படுத்துவேன்...

நாங்கள் (பிதாவும், குமாரனும்) அவனிடத்தில் வந்து (பரிசுத்த ஆவியின் மூலமாக) அவனோடே வாசம் பண்ணுவோம்" (யோவான் 14:18, 20, 23).

பரிசுத்த ஆவியை, சத்தியத்தின் ஆவியை, அன்பின் ஆவியை, பிதாவின் ஆவியை, கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றிருப்பவர்கள், இயேசுவைப் பார்க்க உதவப்படுகின்றார்கள் மற்றும் தங்களுக்குள் புதிய ஜீவியத்தை ஆரம்பிக்கவும் பெற்றிருக்கின்றனர் (வசனம் - 19). இவர்கள் தங்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களினால் பார்க்கின்றனர் மற்றும் இருளில் நடப்பதுமில்லை. "இதுவே வழி, இதிலே நடவுங்கள்" என்று சொல்லும் கர்த்தருடைய சத்தத்தை இவர்கள் கேட்கின்றனர். தேவனுடைய நல்ல வார்த்தைகளை இவர்கள் ருசித்து, அவர் மிகவும் கிருபையுள்ளவராய் இருப்பதை உணர்ந்துக்கொள்கின்றனர். தங்களுடைய இருதயத்தில் தேவனுடைய அன்பு ஊற்றப்பட்டிருக்கிறதையும், அந்த அன்பு இவர்களுக்குள், சகோதரருக்கான அன்பை உண்டுபண்ணுவதையும், ஆவியின் அனைத்து நற்கனிகளை உண்டுபண்ணுகிறதையும் இவர்கள் உணருகின்றனர். அதாவது, சாந்தம், பொறுமை, நீடியபொறுமை, சகோதர சிநேகம் அன்பாகிய ஆவியின் கனிகளை உண்டுபண்ணுகிறதையும் இவர்கள் உணருகின்றனர். (ஏசாயா 30:21; 1 பேதுரு 2:3; ரோமர் 5:5; கொலோசெயர் 3:12-13)

எனினும் இந்த அனுபவங்கள் அனைத்தும், நிபந்தனைகளின் அடிப்படையிலேயே வாக்களிக்கப்பட்டுள்ளது. அதாவது இவைகள் தேவனுடைய கிருபையை ஒருபோதும் கேட்காதவர்களுக்கு வாக்களிக்கப்படாமல், மாறாக தேவனுடைய கிருபையைக் கேட்டவர்களுக்கே, "தேவனாகிய கர்த்தரினால் வரவழைக்கப்பட்டவர்களுக்கே" அவருடைய கட்டளைகளைக் கேட்டு, அவைகளைச் செய்யத்தக்கதாக அன்பினால் ஏவப்பட்டவர்களுக்கே வாக்களிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்டவர்களுக்கே பிதாவின் அன்பு காணப்படுகின்றது. இப்படிப்பட்டவர்களுக்கே குமாரனுடைய அன்பு காணப்படுகின்றது மற்றும் இப்படிப்பட்டவர்களுக்கே பரிசுத்த ஆவி எனும் கால்வாய் மூலம், பிதா மற்றும் குமாரன் இருவருடனும் உள்ள ஐக்கியம் காணப்படுகின்றது. இவைகள் குறித்து 15, 16-ஆம் வசனங்களும், இன்னுமாக 21, 23 மற்றும் 24-ஆம் வசனங்களிலும் தெரிவிக்கப்படுகின்றது. இருதயத்தில் விசுவாசமும், கீழ்ப்படிதலும் கொண்டிருத்தல் என்பது ஆவியில் ஜெநிப்பிக்கப்படும் நிலைமைக்குள் எவரும் வருவதற்கு முன்னதாக இருப்பது மாத்திரம் போதாது; மாறாக பரிசுத்தத்தின் ஆவியில் அல்லது பரிசுத்த ஆவியில் பிதாவுடனும், குமாரனுடனுமான ஐக்கியத்தின் ஆவியில் தொடர்ந்துக் காணப்படுவதற்கும், வளர்வதற்கும் என விசுவாசத்திலும், கீழ்ப்படிதலிலும் தொடர்வதும், வளர்வதும் அவசியமாய் இருக்கின்றது.

ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல் என்பது ஒரு காரியமாகவும், "ஆவியினாலே நிறைந்து" என்று அப்போஸ்தலரால் வலியுறுத்தப்படும் நிலைமையை அடைவது என்பது, வேறொரு காரியமாகவும் இருக்கின்றது (எபேசியர் 5:18). நாம் எந்தளவுக்குச் சுயசித்தத்தின் ஆவியில் காலியாகி, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் ஆவியினால் நிரப்பப்படுகின்றோமோ, அதனடிப்படையிலேயே நம்முடைய நிரப்பப்படுதல் காணப்படுகின்றது. கீழ்ப்படிதல் என்பது, அன்றாட ஜீவியத்தில் வெளிப்படுகின்றதாய் இருப்பினும், கர்த்தர் தம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களிடத்தில் மாம்சத்தின் கட்டுப்பாட்டை மாத்திரமல்லாமல், நோக்கத்தின், சித்தத்தின், இருதயத்தின் கீழ்ப்படிதலையே பொருட்படுத்துபவராக இருக்கின்றார். ஆகவேதான் கர்த்தருக்கு முழுமையாக உண்மையுடன் இருக்கும் சிலருடைய இருதயங்கள், கர்த்தருக்குப் பிரியமாய்க் காணப்படும். ஆனாலோ இவர்களுடன் தொடர்புக்குள் இருப்பவர்களில் சிலருக்கு, இவர்கள் மீது பிரியம் இருப்பதில்லை. இன்னும் சிலர் வெளித்தோற்றமான நன்நடத்தையின் காரணமாக, "மனுஷர் மத்தியில் மிகவும் உயர்வாக" மதிக்கப்படலாம்; ஆனாலோ இவர்களுடைய உண்மையற்ற இருதயத்தின் காரணமாக, இவர்கள் தேவனுடைய பார்வைக்கு முன்பு அருவருப்பாய்க் காணப்படுவார்கள் (லூக்கா 16:15). எனினும், புதிய நம்பிக்கையையும், புதிய ஆவியையும் தனக்குள் பெற்றிருப்பவன், தன்னுடைய சிந்தனைகளில் மாத்திரமல்லாமல் தன்னுடைய வார்த்தைகளிலும், கிரியைகளிலும் அனைத்துக் காரியங்களிலும், உள்ளேயும் வெளியேயும் தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ள நாடுபவனாக இருப்பான் (1 யோவான் 3:3).

மற்றக் கிருபைகளைப் போன்று பரிசுத்த ஆவியும் பிதாவினுடையதாக இருப்பினும், மற்ற அவருடைய வரங்கள் அனைத்தையும் போன்று பரிசுத்த ஆவியும், குமாரன் மூலமாகவே நமக்கு வருகின்றதே ஒழிய, இப்பரிசுத்த ஆவியானது பிதாவுக்கும் நமக்கும் இடையே எவ்விதமான நேரடித் தொடர்பினால்/உறவினால் அல்ல என்பதை நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. நாம் வேறே பாடங்களில் பார்த்திருக்கிறபடிப் பிதாவிடம் ஏறெடுக்கப்படும் நம்முடைய ஜெபங்கள், குமாரனினாலேயே பதிலளிக்கப்படுகின்றது. "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ,

குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்" (யோவான் 14:13). ஆகவே பிதாவுக்கும், நமக்கும் இடையிலான எவ்விதமான நேரடித் தொடர்பு/உறவு காரணமாக பரிசுத்த ஆவி நமக்கு வராமல், மாறாக நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் ஆலோசனையின்படியாக வருகின்றது. "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன்; அப்பொழுது தேற்றரவாளனை உங்களுக்குத் தந்தருளுவார்," அதாவது, "என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, என்னிமித்தமாக பிதா இதை உங்களுக்குச் செய்வார்" என்ற விதத்தில் இயேசு கூறுகின்றார் (யோவான் 14:16). இதே கருத்தானது, "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" என்று மீண்டுமாக தெரிவிக்கப்படுகின்றது (யோவான் 14:26).

இங்கு நமக்குள்ள பாடம் என்னவெனில், பிதாவின் முன்னிலையில், நமக்கிருக்கும் ஒரே அங்கீகரிப்பானது, இதுவரையிலும் கிறிஸ்துவுக்குள் அவருடைய சரீரத்தின் அங்கங்களாகக் **கருதப்படுகின்ற** நிலையிலுள்ள அங்கீகரிப்பாகத்தான் காணப்படுகின்றது. கர்த்தர் இயேசு நமக்குப் பிதாவை அடையாளப்படுத்துபவராக இருக்கின்றார்; மற்றும் பிதாவுக்கு நம்மை அடையாளப்படுத்துபவராக இருக்கின்றார் என்பதேயாகும். நமக்குக் கொடுக்கப்படும் பரிசுத்த ஆவியின் ஆறுதலும், பலமும் பிதாவினுடையதாகும். சத்தியத்தின் ஆவி, பிதாவிடமிருந்து ஊற்றெடுக்கின்றதாய் இருக்கின்றது. அதுவும் இது நமக்கு நேரடியாய் வராமல், மாறாக நம்முடைய கர்த்தரும் தலையுமானவராகிய இயேசுவின் மூலமாக மாத்திரமே நம்மிடம் வருகின்றது. சொல்லப்போனால், பிதாவுக்கு முன்பாக நமக்கு எந்த அங்கீகரிப்பும் இல்லை; மற்றும் அவருடைய கிருபையினால் நமது கர்த்தர் இயேசு மூலமாக நாம் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுக்குரிய சுதந்தரத்தை" அடையத்தக்கதாக ஆகி, முதலாம் உயிர்த்தெழுதலில் "மாற்றம்" அடைந்து, தெய்வீகச் சாயலாகிய அவருடைய சாயலில் பூரணமடைவது வரையிலும் நமக்கு எவ்விதமான அங்கீகரிப்பும்/ஏற்புடைமையும் இருப்பதில்லை. இதற்குப் பிற்பாடு நாம் பூரணமானவர்களாகக் கருதப்படாமல், உண்மையில் பூரணமாய் இருப்பதினால் நமக்குப் பிதாவின் முன்னதாகத் தனிப்பட்ட அங்கீகரிப்பும் காணப்படும். ஆனால் இதற்கு முன்னால் வரை இருப்பதில்லை.

ஆகவே, துணிகரமாய்ப் பாவம் செய்வதன் காரணமாக, பரிசுத்த ஆவியை இழப்பதன் மூலமாக அல்லது விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தை இழப்பதன் மூலமாக, ஒருவன் கிறிஸ்துவுடனான தன்னுடைய உறவை இழந்துப்போவானானால், அப்படிப்பட்டவன் இயேசுவினுடைய பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் மறைவிலிருந்து வெளியேறி, ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுகின்றவனாய் இருக்கின்றான். ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுவது என்பது, நடந்த உண்மைகள் மற்றும் கிரியைகள் அடிப்படையில் நியாயத்தீர்ப்பையும், பூரணமற்ற சிருஷ்டிகள் அனைத்திற்கும் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கும் (எபிரெயர் 10:31). நாம் அவரில் நிலைத்திருக்க வேண்டுமென்றும், தெளிக்கப்பட்ட இரத்தத்தின் கீழ்க் காணப்பட வேண்டுமென்றும், அவருடைய அன்பில் நிலைத்திருக்க வேண்டுமென்றும் வேதவாக்கியங்கள் புத்திமதிக் கூறுகின்றன. (யோவான் 15:4, 6, 10; 1 யோவான் 2:24-29)

தம்முடைய அறிவுரைகளைக் கைக்கொள்வதன் மூலமாக அவரைப் பிரியப்படுத்துவதற்கு நாடாதவன், தம்மிடத்தில் அவனுக்கு அன்பில்லை என்பதை வெளிப்படுத்துகின்றவனாக இருப்பான் என்பதை நமது கர்த்தர் குறிப்பாகத் தெரிவிக்கின்றார் (23-24-ஆம் வசனங்கள்). பயபக்தியைப் பரீட்சிப்பதைக் காட்டிலும், அன்பைப் பரீட்சிப்பதற்கு வேறு சிறந்த பரீட்சை நிச்சயமாய் இராது; மற்றும் கீழ்ப்படிதலைப் பரீட்சிப்பதைக் காட்டிலும், பயபக்தியைப் பரீட்சிப்பதற்குச் சிறந்த பரீட்சை நிச்சயமாய் இராது. ஒளியூட்டப்பட்டதான நம்முடைய மனசாட்சிகளானது, ஆண்டவருடைய வார்த்தைகளுக்கு இருதயபூர்வமான சம்மதத்தைக் கொடுக்கின்றது மற்றும் நாமும் அப்போஸ்தலருடன் கூட, "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால் எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கின்றவர்கள் (நீதிமான்களாக்கப்பட்டு, புதிதான ஜீவனுக்குள்ளாக ஜெநிப்பிக்கப்பட்டவர்கள்) இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தார் என்றும் நிதானிக்கிறோம்" என்று கூறுகிறவர்களாக இருப்போம் (2 கொரிந்தியர் 5:14-15).

ஆண்டவருடைய வசனங்களை நாம் கைக்கொள்கையில், நாம் அவரை மாத்திரம் பிரியப்படுத்துகின்றவர்களாகவும், அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்களாகவும் இராமல், இந்த அனைத்து விஷயங்களில் ஆண்டவர், பிதாவாகிய தேவனுடைய வாயாக/வாய்க் கருவியாக இருப்பதினால், நாம் ஆண்டவரைப் பிரியப்படுத்தி அவருக்குக் கீழ்ப்படிகையில், பிதாவையும் பிரியப்படுத்திப் பிதாவுக்குக் கீழ்ப்படிகின்றவர்களாகவும் இருக்கின்றோம் என்று தெளிவாக நமக்கு ஆண்டவர்

சுட்டிக்காண்பிக்கின்றார். ஆண்டவர் சீஷர்களோடு இருக்கையில், இவ்வளவு மாத்திரமே அவருக்குச் சொல்ல முடிந்தது. சீஷர்கள் அறிய வேண்டுமென ஆண்டவர் விரும்பினதும், அறிவது அவர்களுக்கு அவசியமாய் இருந்ததுமான அநேக காரியங்கள் சொல்வதற்கு அவருக்கு இருந்தது. ஆனால் அவற்றையெல்லாம் அவர்களால் தாங்க முடியாது. காரணம் பரிசுத்த ஆவி இன்னமும் அவர்கள்மேல் வராததினால், கல்வாரியில் ஈடுபலியைச் செலுத்தி, அவர் பரத்திற்கு ஏறி, அதை நமக்காக அவர் தேவனுக்கு முன்பாக ஒப்படைப்பது வரையிலும், பரிசுத்த ஆவி அவர்கள் மீது வருவது கூடாததினால் ஆகும் (யோவான் 7:39/எபிரெயர் 9:24).

நம்முடைய மீட்பரும், தலையுமான இயேசுவின் வேண்டுகோளுக்கு இணங்கி அனுப்பப்படும் இந்தத் தேற்றரவாளன் அல்லது பலப்படுத்துகிறவர், தேவனுடைய பரிசுத்த ஆவியானது நமக்குப் போதிப்பவராக இருக்கும். அதாவது நமக்கு அறிவுரைகளை/போதனைகளைக் கொண்டுவருவதற்கென, பல்வேறு கருவிகளைப் பரிசுத்த ஆவியானது பயன்படுத்தும் என்று நமது கர்த்தர் உறுதியளிக்கின்றார். தேவைக்கேற்ப அவ்வப்போது கர்த்தர் பரிசுத்த ஆவியின் மூலமாகத் தம்முடைய மந்தைக்கு அளிக்கும் சத்திய வார்த்தைகள், அப்போஸ்தலரின் நிரூபங்கள், பல்வேறு உதவிகள் மற்றும் பிரதிநிதிகளே, இந்தப் பல்வேறு கருவிகளாகும்.

வசனம் 27-இல் தெரிவிக்கப்பட்டிருக்கிறபடி, நம்முடைய அருமையான மீட்பரினால் நமக்கு விட்டுச்செல்லப்படும் சமாதானம் மற்றும் அன்பாகிய சொத்து எவ்வளவு அருமையாகவும், எவ்வளவு ஆறுதலாகவும், சீஷர்களுடைய கலங்கின இருதயங்களுக்கு இருந்தன மற்றும் நமக்கு எவ்வளவு புத்துணர்வு அளிக்கின்றதாய் இருக்கின்றது. "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27). மனித புத்திக்கு எட்டாத இந்தச் சமாதானமும், சந்தோஷமும் உலகத்திற்குக் கொடுக்கப்படவில்லை, பெயர்க்கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்படவில்லை, மரபு வழியை வலியுறுத்துபவர்களுக்கும், சமய சடங்குகளை வற்புறுத்துகிறவர்களுக்கும், இவர்கள் அனைவரும் எவ்வளவுதான் பக்தி வைராக்கியத்துடன் இருப்பினும், இவர்களுக்கும் கொடுக்கப்படவில்லை. இது பரிசுத்த ஆவியின் மூலமாகக் கிருபையின் ஐசுவரியங்களைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும், சத்தியம் மற்றும் அதன் ஆவிக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக அனைத்துக் காரியங்களிலும் தங்களுடைய ஜீவனுள்ள தலையாகிய கிறிஸ்துவுக்கு ஒப்ப வளருகின்றவர்களுக்கும்தான் கொடுக்கப்படுகின்றது, மற்றும் கொடுக்க சித்தமும் காணப்படுகின்றது. இப்படிப்பட்டவர்களிடத்தில் சமாதானம் ஆழமாய்க் காணப்படுகின்றது. மேலும் இவர்கள் எந்தளவுக்குத் தெய்வீகக் கிருபையின் ஐசுவரியங்களை, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலம் சகல பரிசுத்தவான்களோடு உணர்ந்து, தேவனுடைய அன்பின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரத்தை உணர்ந்துக்கொள்கின்றார்களோ, அந்தளவுக்கு இந்தச் சமாதானம் பெருகுகின்றதாகவும் இருக்கின்றது.

இது உலகத்தினுடைய சமாதானமல்ல, ஜாக்கிரதையற்றவர்கள் மற்றும் அலட்சியமானவர்களின் சமாதானமல்ல, சுயதிருப்திகொள்பவர்களின் சமாதானம் அல்ல, விதியை நம்புகிறவர்களின் சமாதானமல்ல மாறாக, இது கிறிஸ்துவின் சமாதானமாய் இருக்கின்றது. "என்னுடைய சமாதானம்" என்று ஆண்டவர் கூறுகின்றார். தேவனிடத்திலான இந்தச் சமாதானத்தை, எல்லா சூழ்நிலைகளிலும் ஆண்டவர் தக்கவைத்துக் கொண்டதை நாம் பார்க்கின்றோம். இந்தச் சமாதானமானது, தெய்வீக ஞானத்தை, அன்பை, நீதியை, வல்லமையை அப்படியே நம்புகின்ற சமாதானமாய் இருக்கின்றது; மற்றும் கர்த்தருடைய உண்மையுள்ளவர்களை எதுவும் பாதிப்பதில்லை என்றும், தேவனை அன்புகூருகின்றவர்களுக்கு அனைத்தும் நன்மைக்கு ஏதுவாக மாற்றப்படும் என்றும், கர்த்தருடைய உண்மையுள்ளவர்களுக்குப் பண்ணப்பட்ட கிருபையான வாக்குத்தத்தங்களை நினைவுகூருகின்ற சமாதானமாகவும் இருக்கின்றது. இந்தச் சமாதானத்தினால், தெய்வீக விவேகம் அனுமதிக்கும் எதையும் விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ள முடியும்; மற்றும் தற்கால சந்தோஷமும், சமாதானமும் முன் சுவைத்தலாக மாத்திரம் காணப்படும். கர்த்தரால் வாக்களிக்கப்பட்டுள்ள, முடிவில் வரும் ஆசீர்வாதங்களைக் கண்ணீர்கள் மத்தியில், மகிழ்ச்சியுடன் எதிர்ப்பார்த்திட இந்தச் சமாதானத்தினால் கூடும்.

*****